JL
M211, M92UC
M93
227615

"கற்றோர்கடாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

# விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். II. 1893ஸ்ரீ மேமீ. இலக்கம். 1.

## பதார்த்தங்கள் தம்முள் நிகழும் முக்கிய கருஷணங்கள்.

பூமியி னருகாமையி லுள்ள பொருள்கள் யாவும் பூமையக் கவர்ச்சியி னாட்சிக்குட்பட்டன வாகையால், அவை தரைநோக்கிச்செல்லாது தடுக்கப்படுங்கால் கனமுள்ளனவாய்த் தோன்றுகின்றனவென்றறிந்தோம்.* புலன்களாலுணரக்கூடிய பரிமாணமுள்ள பொருள்கள் எல்லாம் எண்ணிறந்த வியாகிருத அணுக்களின் சேர்க்கை ஆகையால் குறிப்பிட்ட நிறையுள்ள ஓர்பொருளினிடம் நிகழும் பூமைய ஆகர்ஷண சக்தியானது அப்பொருளிலடங்கிய அணுக்க ளொவ்வொன்றையுந் தனித்தனியே பூமைய நேராயிழுக்கும் கவர்ச்சிகளின் தொகுதியெனவிளங்கும். அதுபற்றியே ஒருபொருளின் நிறை யதிகமாக அதன்கனமும் அதிகமாகின்றது. சாதாரணவழக்கத்தில் நிறை கனமென்ற பதங்கள் தூக்கமென்ற ஓரேபொருளின் குறிப்பனவாக பிரயோகிக்கப் படுகின்றனவாகினும், ஜடதத்துவ சாஸ்திரிகளின்பரீக்ஷையில், அவைகள் வெவ்வேறு அர்த்தமுடையனவாயிருக்கின்றன. ஒருபொருளிலடங்கிய அணுக்களின் தொகுதிக்கு நிறையென்றும், அப்பொருளை பூமி தன் மையத்திற்கு ஆகர்ஷிக்கும் சத்தியின் வலிமைக்கு கனமென்றும் பெயர் கூறுவர். கனம் பலகாரணங்களால் மாறுபடத்தக்கது. ஆனால் நிறையோ, அங்ஙனம் பேதப்படுவதன்று. கனம் பூமையக்கவர்ச்சியின் பலாபலத்தால் தீர்மானிக்கப்படும் இலட்சணமாகையால், அது பொருள்களின் உபகுணங்களிலொன்று. நிறையோவெனில், சடபொருளின் பாவிகத்திற்கும் மனோபாவனைக்கும் இன்றி யமையாததாயிருக்கின்றது.

ஒருபொருள் பூமியின் தரைமீது விழாதிருக்க அது எல்லாவிடத்தும் தாங்கல் பெற அவசியமில்லை. ஊன்றி நடக்கும் கம்புகளை மத்தியில் ஓர் விரலிலேந்தி நிலை நிறுத்தலாமென்பது யாவருமறிந்தவிஷயம். * தட்டமுதலியவற்றை நடு மையத்தில் ஒரு விரலால் கீழே விழாமல் தாங்குவது கண்டிருக்கிறோம். ஒரு கட்டிலை கீழேவிழாது தூக்கிச்செல்லுங் கூலிக்காரன் அக்கட்டிலின் மையத்தில் தாங்கல் கொடுத்தன்றோ தூக்கிச் செல்லுவான். வேறெவ்விடத்திலாவது தலைகொடுத்துத்தூக்கினால், பூமியின் கவர்ச்சி பலம் பூராவாய்த்தடுக்கப்படாமல், கட்டிலின் ஒருபாக்கம் கீழே தாழ்ந்து தூக்குவோனுக்கு அதிக வருத்தங்கொடுக்கும். இங்ஙனம், கம்பு, தட்டம், கட்டில் முதலிய ஒழுங்கான வடிவமுள்ள பொருள்களில் மத்தியமானவோரிடம் தாங்கப்பெறின், அவைகளை கனமாகத்தோற்றுவிக்கும் பூமையக்கவர்ச்சியினாக்கந்தடுக்கப்படுகின்றது. அதுபோலவே, எவ்வடிவமுள்ளனவா யிருப்பினும், பொருள்கள் எல்லா

* சென்ற பிப்ரவரிமாசத்துச் சஞ்சிகையில் "மாங்கினிகனி கீழே விழுவதேன்?" என்னும் விஷ

* தட்டம்=தாலம், கிண்ணம்.

OFFICE MADRAS
227616
சென்னை-600 008
165411

...த்தியஸ்தலமொன்றை ஏந்திட, ... முழுவதும் தாங்க லடைந்துபலம் ...றுத் தரைமீதுவிழாதுநிற்கும். அங்ஙனம் ...யாதேனுமோரிடத்து ஆதாரம் பெற்று ஒரு புறமும் சரியாது சமநிலையாய்ப்பொருள்கள் நிற்கில், ஆதாரமடைந்த இடத்தைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் கனம் சரியாயிருக்க வேண்டும் ஆதலால், இவ்விடத்திற்கு *கனமத்தியமென்றுபெயர் சொல்லலாம். நானாவித வடிவங்களும் குணங்களுமுள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் கனமத்தியம் ஒன்றுண்டு. அது பொருள்களின் நடுமையத்திலேயே இருக்கவேண்டுமென்பதில்லை. ஒரு பொருளில் ஒருபாகத்தைவிட வேறொருபாகத்தில்நிறையுங் கனமும் அதிகமாயிருந்தால்,ஜாஸ்தி கனமுள்ள பக்கத்தினருகுதான் கனமத்தியம்இருக்கும். அதன்நேராய் யாதேனுமொருபொருள் தாங்கப்பெற்றால், அப்பொருள் நிலைபெற்றுதரையில் விழாது நிற்கும். கனமத்தியம் தாழ்ந்திருக்குமட்டும்,பொருள்களின்நிலையும் உறுதியாயிருக்கும். குன்றுங்குழியுமாயிருக்கும்பாதைகளில் அதிக உயரமில்லாத சக்கரங்கள் பூட்டிய கால்பண்டி அரைபண்டிகள் அபாயமின்றி சகஜமாய்ச் செல்ல, உயரமான ரோதாக்களுள்ள முழுபண்டிகள் ஒழுங்கான பாதைகளிலும் குடைபண்டிபோடுவனவாயிருக்குங்காரணமிதுதான். முழு பண்டிகளிலும், வைக்கோல்கட்டுகளேற்றிவரும் பண்டிகள், கல்லடிக்கும் பண்டிகளைவிட எவ்வளவோ அலையவும், வழி சறுக்கச் சமதளமின்றியிருந்தால் குடிமயக்கத்தில் கால்தரையில் பாவாது நடப்பவன்போல, தள்ளாடித்தடுமாறி விழவும் செய்வது நாம் பலமுறைகண்டிருக்கிறோம். கோபுரம் முதலிய உயர்ந்த கட்டடங்களில், அடியிற்கனமாகவும், உச்சியிற்போகப்போக கனங்குறைத்துங் கட்டுவதின்காரணம், கட்டடத்தின் கனமத்தியம் கூடியமட்டும் கீழே யிருப்பதற்காகத்தான். கனமில்லாத பதார்த்தங்களை அடியிலும் கனமுள்ளனவைகளை உச்சியிலும் வைத்தால் கட்டடம் எளிதில்இடிந்துவிழும். அடிக்கனமுள்ளன ஸ்திரநிலையும், தலைக்கனமுள்ளன *உறுதியில் நிலையும் பெறுகின்றன. தோணியில்போகுங்கால், பலமாய்க் காற்றடித்தால், தோணியிலிருப்பவர் தண்ணீரில் மூழ்க ஆசை கொண்டவராயிருந்தாலன்றி எழுந்து நிற்கமாட்டார்கள். தோணி கவிழாமலிருப்பதற்கு அவர்களெல்லாம் கீழே படுப்பதே நலம்.

பொருள்கள் ஸ்திரநிலையையடைய அவைகளின் கனமத்தியம் கூடியமட்டும் தாழ்ந்தேயிருக்கவேண்டுமென்று மேற்கூறிய திருட்டாந்தங்களாலறியலாம். இதன்றி ஸ்திரநிலைக்கு வேறொரு இலக்கணமுமுண்டு. சுவர், கோபுரம் முதலியன அடி... ...ராய் கட்டப்படினும், அவைகள் சரிந்திருந்தால், ஊனமுண்டென்கிறோமன்றோ? ஐரோப்பாகண்டத்தில் சில நகரங்களில் வெகுகாலத்திற்குமுன் கட்டப்பட்ட கோபுரங்கள் நெட்டக்குத்திலிருந்து 7 அல்லது 8 அடி விலகியிருப்பினும் சற்றுஞ் சூனின்றி ஸ்திரமாய் நிற்கின்றன. சாதாரணமாய் சாய்ந்திருக்குங் கட்டடங்கள் இலகுவாய் கீழேவிழக்கூடியனவாயிருக்க, இக்கோபுரங்கள் நெட்டக்குத்தாய்க் கட்டப்பட்டாற்போலும் நிலையாய் நிற்கின்றனவே; காரணம் யாதெனில், இக்கோபுரங்களுக்கு விஸ்தீரணமான அடிவாரங்களிருக்கின்றனவாகையால், இவைகளின் கனமத்தியம் இன்னும் அத்திவாரத்திற்குநேரே உயரத்தானிருக்கின்றது. இக்கட்டடங்களின் கனமத்தியத்திலிருந்து தரைக்குச் செங்குத்தாய் வரையப்படும் †அவலம்பரேகையானது அத்திவாரத்தினுள் விழுவதால், கனமத்தியத்திற்குநேராய்த்தாங்கல் கொண்டனவாக, இக்கோபுரங்கள் இன்னும் கீழேவிழாமல் நிற்கின்றன. பொருள்களின் அத்திவாரத்திற்கு நேராயுயரே கனமத்தியமிருக்குமட்டும், பொருள்களின் நிலையும் ஸ்திரமாகவேயிருக்கும்.

உயிரில் பொருள்களுக்கு மாத்திரமன்றி புள், விலங்கு மானிடராகிய உயிருள் பொருள்களுக்கும் கனமத்தியமுண்டு. ஆனால் உயிருள் பொருள்கள் அடிக்கடி தத்தம் நிலைகளை

* Centre of gravity.

* உறுதியில் = உறுதியில்லாத.

† Perpendicular.



மாற்றுவதால், கனமத்தியம் எப்பொழுதும் ஒரேயிடத்திலிருக்காமல், ஒவ்வொரு நிலைக்கும் அனுசரணையாய் இடம் மாறுகின்றது. நேராய் நிற்பவனொருவன்,ஒரு காலால் மாத்திரம் நிற்கக்கருதி வலதுகாலைத் தூக்கினால் அவன்தேகம் இடப்பக்கஞ்சரியவும், இடதுகாலைத்தூக்கினால் தேகம் வலதுபக்கம் சரியவும் செய்வது யாவருக்குமனுபவம். இருகாலுந் தரையில் நிற்கையில், நமது உடலின் கனமத்தியம் இடுப்பின் நடுவிலிருப்பதாய்க் கொள்வோம். ஒருகாலால் நிற்கும்வேளையிலும், அதேயிடத்தே கனமத்தியமிருக்குமானால், அது உடலைத்தாங்கிக்கொண்டிருக்கும் காலுக்கு நேராயில்லாததுநிமித்தம் நாம் கீழேதான் விழவேண்டும். கீழேவிழுவதைத் தடுப்பதற்காகவே, யாதேனு மொருகாலைத் தூக்குங்காலத்தில், நமதுடலை எதிர்ப்பக்கமாய்ச் சாய்த்து நமது கனமத்தியத்தினிருப்பை மாற்றுகின்றோம். ஒரு பாதத்தை யொரு சுவரோடு எட்டிவைத்து, மற்றப்பாதத்தைக் கிளப்பமுடியுமோவென்று பாருங்கள். சுவரிருக்குமிடத்தில் உடல்சரிவதற்கிடையில்லாததினால், நமது முயற்சி பழுதுபோகின்றது. முதுகில் மூட்டை ஏந்திய கூலிக்காரன் முன்னே கூனி நிற்பதும், வலதுகையில் தண்ணீர்க்குடந்தாங்கிச் செல்வோன் இடது பக்கத்திற் சாய்ந்து நடப்பதும் பார்த்திருக்கலாம். ஒரு மனிதன் யாதேனுமொரு பாரமேந்தி நிற்கும்பொழுது, அவனது கனமத்தியம் முன்னிருந்த இடத்தைவிட்டு மாறுவதால், அவன் தேகத்திற்கும் ஏந்தியபாரத்திற்கும் பொதுவாகிய கனமத்தியம் அவன் காலடிகளின் மத்தியிலுட்பட்ட தரைக்கு நேராயிருந்தாலன்றி அவன் கீழேவிழுவான்.

இதுகாறும் நாம்பேசிவந்த சர்வவியாபக ஆகர்ஷணசக்தியும் அதன் ஓர் அம்சமாகிய பூமையக் கவர்ச்சியும், பொருள்கள் தம்முள் அதிதூரத்திலும் நிகழக்கூடியன. இவையன்றி அதிக சமீபத்திலிருக்கும் நுட்பமான அணுக்களிடம் சில சூட்சும கருஷணங்கள் தோன்றுகின்றன. அவைகளைச்சற்று இங்கு விவரிப்போம். இரும்புக்கட்டி, கல்துண்டு முதலிய கடினமான பதார்த்தங்கள் சுளுவாய் நெகிழவோ உடையவோ வேறுவிதங்களில் சொரூபம் மாறவோ செய்யாது இறுக்கமாயிருப்பதின் காரணமென்ன? பொருள்கள் யாவும் நுண்ணியவணுக்களின் தொகுதியென நாமறிவோம். ஒரு பொருளின் ஒவ்வொரு அணுவும் தனித்தனியாயிராது, அளவற்ற அணுக்கள் சேர்ந்தேயிருப்பதால், அவ்வணுக்கள் தம்முள் சம்போகம்வருத்தும் சக்தியொன்றிருக்கவேண்டும். பூமியின் அருகாமையிலுள்ள பொருள்கள் யாவும், பூமையக் கவர்ச்சிக்குட்பட்டனவாகையால், கல் இரும்பு முதலிய கடின பதார்த்தங்களின் அணுக்களின் சேர்க்கைக்கேதுவாகும் கவர்ச்சியினூக்கம் பூமையக் கவர்ச்சியின்பலத்திற்கு மேற்பட்டதாகவேண்டும். மேலும், அதிக வருத்தத்துடனன்றி வைரமான பொருள்களின் தோற்றத்தைமாற்ற ஏலாததினால், இச்சக்தியின்பலம் அதிகமாகவேயிருக்கவேண்டும். இச்சக்தியில்லாவிடில்,பொருள்களெல்லாம் வடிவமொழிந்து அணுத்தூளாகிவிடும். இரண்டணுக்கள்கூடச் சேர்ந்ததாய் ஒரு பதார்த்தமுமிராது மலைகளெல்லாம் பொடியாய்விடவும், புற்பூண்டு, காய்கிழங்கு, விருட்சம், விலங்கு என்ற வேற்றுமையுடைய தோற்றங்களொன்றுமில்லாமலும் முடியும். மனிதரும் அவர்களது உடலுருப்புகள் யாவுமிழப்பார்கள். உலகெங்கு மலங்கரிக்கும் மனோரஞ்சிதக் காட்சிகளாகிய

“பொய்கையும் வாசப் பொழிலு மெழிலருவிச்
செய் குன்று மாறும்”

இலதாகி, அவையிருந்தவிடத்து, ஞானசித்தராகிய நாயனார் கூறியதற்கிணங்க,

“முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமா
யப்பாலும் பா ழென்று”.

சொல்லும்படி அணுத்தூள்நிறைந்த அடவிதான் காணலாம். ஒரே தன்மையான அணுக்களை ஒன்றோடொன்று இறுகச்சேர்த்து புலன்களாலறியும்படி வடிவமும் பரிமாணமும் பொருள்களுக்களிக்கும் சக்திக்கு *பிண்டகாகருஷணமெனப் பெயரளிக்கலாம்.

* Cohesion.

ஜடதத்துவ சாஸ்திரரீதியாய் பொருள்கள் நிலம்[1] நீர்[2] கால்[3] என மூன்று ஸ்திதிகளுடையன. பொன், வெள்ளி, இரும்பு, கல்லு முதலிய திண்மையான பொருள்கள் நிலஸ்திதியுடையன. தண்ணீர், எண்ணெய், பால், இரசம்போன்ற திரவ பதார்த்தங்கள் நீர் நிலையை உடையன. நீராவி, காற்று முதலியனவே கால் என்ற மூன்றாவது ஸ்திதிக்கு உதாரணங்கள். ஒரு பொருளே இம்மூன்று ஸ்திதிகளையும் உடைத்தாயிருப்பது கண்டிருக்கிறோம். திருஷ்டாந்தமாக, தண்ணீர் உறைந்தபனிக்கட்டி அல்லது ஆலாங்கட்டியாகவும், ஜலமாகவும், நீராவியாகவுமிருப்பது பார்த்ததில்லையா? மழைநாள்களில் தேங்காயெண்ணெய் உறைந்திருப்பதும், அதிவெக்கையுள்ள உலையிலிட்ட தங்கம், வெள்ளி, உருகியிருப்பதும் யாவருமறிவார்கள். சில வருடங்களுக்குமுன் ஐரோப்பாவில் சில வித்வான்கள் காற்றையும் குறுக்கிக், குறுக்கி உருக்குப்போன்ற ஒரு லோகமாக்கினார்கள். ஆகையால் சாதாரணமாய் ஒரு பொருள் எந்த ஸ்திதியிலிருப்பினும், தகுந்தபடி சிரமப்பட்டால் அதை மற்றிரு ஸ்திதியிலும் வருத்தலாம். மந்திரவாதிகள் தாங்களோட்டும் பிசாசுகளுக்கு முடியாவேலையொன்று கொடுக்கக்கருதி மணலைக் கயிறாய்த்திரித்துவர ஏவலிடுவதாய் கதைகள் சொல்வதுண்டு. அந்தோ! இக்காலத்து சிறுபள்ளிப்பிள்ளைகள்கூட அறிந்திருக்கும்*இரசாயனநூல் விஷயங்களை, இத்தேசத்தில் தொன்றுதொட்டு மாதர்களையும் ஆடவர்களையும் பிடித்துத் திரிவதாய்ச்சொல்லும் பிசாசுகளுமறிந்திலபோலும்! ஏனெனில், ஓட்டப்பட்ட பிசாசு கற்றுணர்ந்ததாயிருந்தால், மணலையுங் கயிறுகத்திரிப்பது அருமை யல்லவென்றறிந்து ஏவியதொழிலை முடித்துத் திரும்பும். நாம் உபயோகித்துவரும் கண்ணாடி சாமான்கள் மணலால் செய்யப்பட்டனவென்றும், கண்ணாடியையுருக்கி வெள்ளிக்கம்பி போன்ற நேர்மையான கம்பிகளாக இழுத்து, அக் கம்பிகளால் கயிறுதிரிக்கலாமென்றும் நீங்கள் ஒருவேளை கேட்டிருக்கலாம். மணலையும் உருக்கி, கம்பியாயிழுத்து, கயிறாய்த் திரிப்பதானால், நிலம், நீர், கால் என்ற ஸ்திதிகளில் யாதேனுமொரு ஸ்திதியிலிருக்கும்பொருளை மற்றிருஸ்திதிகளிலும் வருத்துவது ஏலாததன்று எனக் கொள்ளலாம். இஸ்திதிகளிலொவ்வொன்றின் இலக்கணம் யாதென்று ஒருவாறு ஊகிக்கக்கூடுமாகினும், கூடியமட்டும் வியக்தமாயறிவது நலமாகையால் ஒவ்வொன்றின் இலக்கணத்தையும் இங்கு எடுத்துக்கூறுவாம். உருண்டைவடிவமாகிய பிரங்கிக்குண்டின் உருவத்தையாவது பரிமாணத்தையாவது சற்றுமாற்றுவது மெத்த வருத்தமாயிருக்கிறது. தண்ணீரின் வடிவத்தை அதை வார்க்கும் பாத்திரத்தின் வடிவத்திற்கிணங்க இலகுவாய் மாற்றலாமாயினும், அதன் பரிமாணத்தை மாற்றுவது இலேசல்ல. ஒரு படிஜலத்தை முக்காலே மூன்றுவீசம்படி பிடிக்கும்பாத்திரத்தில் அடைப்பது சாத்தியமன்று. காற்று,ஜலத்தைப்போல அது அடங்கியிருக்கும் பாத்திரத்தின் வடிவத்தை இலகுவாய் வகித்துக்கொள்வதுடன், அப்பாத்திரத்தின் பரிமாணத்தையும் பெறும். காற்று சற்றும் வருத்தமன்றி பரிமாணத்தில் விரியவும் சுருங்கவும் செய்யும். ஆக, வடிவவேற்றுமை, பரிமாணவேற்றுமை இரண்டையும் எதிர்க்குங்குணமுள்ள பொருள்கள் நிலத்தன்மையுள்ளனவும், பரிமாண வேற்றுமையைமாத்திரம் தடுக்குங்குணமுள்ளன நீர்நிலையுள்ளனவும், இரு வேற்றுமைகளையும் எதிர்க்காத பொருள்கள் கால் ஸ்திதியுள்ளனவுமாகின்றன.

நிலஸ்திதியுள்ள பொருள்களில் பிண்டீகாகருஷணம் அதிகமாய்ப்புலப்படவும், பொருள்களுக்கு நெகிழ்ச்சிஅதிகமாக, பிண்டீகரகருஷணத்தின் வலிமைகுறையவும் செய்கின்றது. நீர்போன்ற திரவப்பதார்த்தங்கள் அதிகமாயிருந்தால், அவைகளின் அணுக்களைப் பிண்டமாகத்திரட்டும் சக்தி பூமையக்கவர்ச்சியின் வலிமையைத்தடுக்க பலமற்றதாயிருக்க அணுக்கள் சிதறிப்போகின்றன. அதுபற்றியேபேரளவுள்ள நீர்ப்பொருள் ஒன்றுக்கும்

(1) Solid. (2) Liquid. (3) Gas,
* Chemistry.



சொந்தவடிவமில்லை. ஆனால், நீர்ப்பொருள்களின் அணுக்கள் தம்முள் பிண்டீகரகருஷணம் சொல்பமுண்டென்பதற்கு திருஷ்டாந்தமாய், வாழையிலையில் அல்லது தாமரையிலையில் ஜலம் தெளித்தால், ஜலத்துளிகள் உருண்டு இலையெங்கும் சிதறியிருப்பதும், இரசத்தைக் கீழேவிட அது உடனே சிறிய உருண்டையின் துளிகளாய் ஓடுவதுங்காண்க. இச்சிறுதுளிகளின் அணுக்கள் பிண்டீகரகருஷண சக்தியால் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு சிதறாமலிருக்கின்றன. ஒரே தன்மையான அணுக்களை ஒன்றோடொன்று சேர்த்து பொருள்களுக்கு உருவளிக்கும் சக்திக்கு பிண்டீகரமென்றோம். இதன்றி வேற்றுமையான அணுக்கள் ஒன்றோடொன்று பற்றியிருப்பதுமுண்டு. ஒரு பொருள் வேறொரு பொருளுடன் ஒட்டும்படி செய்யும் சக்திக்கு *இசைவுஎனப் பெயர்சொல்லலாம். இச்சக்தியினாலேதான் கட்டடங்களில் செங்கலுடன் சாந்து ஒட்டுகின்றது. சேற்றுநிலத்தில் நடக்கையில் கீழேவைத்த காலை உயர்த்துவது எவ்வளவு வருத்தமென்பது உங்களுக்குத் தெரியுமே. தரையில் கொஞ்சந் தண்ணீர்தெளித்து அதன்மேல் போசனம் அருந்த இலையிட்டால், அவ்விலை தரையோடு ஒட்டுவது பார்த்ததில்லையா. வாழைக்குருத்துகளிரண்டை நீரில்அமுக்கிஒன்றோடொன்று ஒன்றவைத்தால் அவையெப்படிப்பொருந்துகின்றன பாருங்கள். ஒப்பமாய்த்தேய்த்த இரண்டு கண்ணாடித் தகடுகளை ஒன்றோடொன்று அழுத்தமாய் நெருக்கிப் பின்னர் தகடுகளை வேறாக்கினால் இசைவு சக்தியின் வலிமையை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். பொருள்களை ஒன்றோடொன்று ஒட்டுவதும், பொடிவைத்து விளக்குவதும் இசைவு சக்தியின் வலிமையினாலேதான். முகம்பார்க்கும் கண்ணாடிகளுக்கு இரசம் தேய்த்திருப்பது நீங்கள் கண்டிருப்பீர்களே. இசைவுசக்தியின் வலிமைபற்றியே இரசம் கீழேவிழாமல் கண்ணாடித் தகடின்மேல் ஒட்டிக்கொண்டிருக்கிறது. ஒரு ஓலையைத் தண்ணீரில் அமுக்கி வெளியிலெடுத்தால், அதன் நுனியில் ஜலத்துளியொன்றுதொங்குவது காணலாம். இத்துளி தன் கனத்தால் கீழே விழமுயல, அதைத் தடுத்து ஓலையின் நுனியிலொட்டிக்கொண்டிருக்கும்படி செய்யும் சக்தி இசைவு சக்திதான்.

பிண்டீகரமும், இசைவும் வியாகிருத அணுக்கள் தம்முள் நிகழும் சக்திகளாம். ஒவ்வொரு பொருளின் ஒவ்வொரு வியாகிருத அணுவும், பாகிக்கக்கூடாத அதிநுட்பமான அவ்வியாகிருத அணுக்களால் சேர்க்கப்படுகின்றது. வியாகிருத அணுக்களே கண்களாலும், *சிற்றுருவிளக்கும் பூதக்கண்ணாடிகளாலும், காண முடியாவெனின், அவைகளினும் நுட்பமாகிய அவ்வியாகிருதவணுக்கள் கண்களுக்குப் புலப்படாவென்று விசேஷமாய்ச் சொல்லவேண்டியதில்லை. மேற்கூறிய சூட்சும கருஷணங்களிரண்டும் அணுக்களின் கட்டை பேதிக்காமல், அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்திருக்க மாத்திரம் செய்கின்றன. இனி விசாரணைக்காக நிற்கும் † பௌதிககருஷணமானதுவெவ்வேறு சுபாவங்களுள்ள இருபொருள்களுக்கு சம்போசம் உண்டாக, அப்பொருள்களின் அணுக்கள் கட்டையழித்து, புதிதாய்த் திரட்டி விசேஷகுணங்களமைந்த நூதனமான பதார்த்தம் ஒன்றை நிர்மிக்கும். விளக்கு எரிவதிலும் இரும்புதுருவடைவதிலும் இச்சக்தி புலப்படுகின்றது. இதனிலக்கணங்களைப் பின்னால் விவரிப்போம். இப்பொழுது முன் கூறியவைகளைத் தொகுத்துச்சொல்லி தற்காலமெடுத்துக்கொண்ட விஷயத்தை நிறுத்துவாம்.

பதார்த்தங்கள் தம்முள் நிகழும் முக்கிய கருஷண சக்திகளாவன:

A. பொருள்கள் தம்முள் தூரத்திலும் நிகழக் கூடிய சக்திகள். இவை :—

1. சர்வவியாபக ஆகர்ஷணம்—இதுதான் பூமி, சுக்கிரன், புதன் முதலிய கிரகங்களை சூரியனைச் சுற்றிப்போகச்செய்வது.

2. பூமையக் கவர்ச்சி.

இதுவே பூமியின்கண்ணுள்ள பொருள்

* Adhesion

* Microscope.
† Chemical Affinity

களைக் கீழேயிழுப்பதும், அவைகளுக்கு கனம் கொடுப்பதும்.

B. அதிக சமீபத்தில் நிகழும் சக்திகள். இவை:—

3. பிண்டீகர கருஷணம்.

இதுதான் ஒருபொருளின் வியாகிருதவணுக்களைச் சிதறவொட்டாமலிழுத்து, அப்பொருளுக்கு உருவங்கொடுக்கின்றது. இது ஒரேபொருளின் அணுக்கள் தம்முள்நிகழும்.

4. இசைவு.

இது இருபொருள்களின் அணுக்களை ஒன்றோடொன்று ஒட்டச்செய்வது. இச்சக்தியில் சேர்க்கப்பட்ட இருபொருள்களும் தத்தமக்குரிய குணங்களை மாறாது வைத்துக் கொள்ளுகின்றன.

5. பௌதிக கருஷணம்.

இது வெவ்வேறு சுபாவங்களுள்ள இருபொருள்களின் அணுக்களை அவைகளின் கட்டழியச்சேர்த்து நூதனகுணங்களுள்ள புதியபொருளொன்றைக் கொடுக்கின்றது.

கே. ஜி. சேஷய்யர், பி. ஏ., பி. எல்.

## சீவராசிகளின் நாநாவிதவர்னங்கள்.

இப்பொழுது நாம் எழுதப்புகுந்த விஷயமானது உயிருள்ள ஜந்துக்களினுடைய பலவிதமானவர்னங்களாகும். அதாவது, இந்த பூலோகத்திலே நாம் பார்க்கிற ஒவ்வொரு பிராணியும் ஏதாவது ஒருவிதமான நிறத்தோடுகூடி விளங்குகின்றது; இந்த மாதிரியாகப் பிராணிகள் யாதேனும் ஒருவர்னத்தோடுகூடி விளங்குதல் ஏதாவது ஒரு பிரயோசனத்தை உத்தேசித்தா அல்லது ஒரு பயனுமில்லாமலா வென்பதுவே நாம் உபநியசிக்கத்தொடங்கின விஷயமாகின்றது.

ஆகவே யிந்தவிஷயமானது, 1. அழிவகற்றுவர்னம், 2. எச்சரிக்கைவர்னம், 3. பாலறிவர்னம், 4. சாதாரணவர்னம், என நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படும். இவற்றில் ஒவ்வொன்றையும்பற்றி வரிசைக்கிரமந் தப்பாமல் எழுதுவதற்குமுன்னரே பொதுப்படச் சில தொடர்மொழிகளை இவ்விஷயத்திற்கு முக்கியமாயிருத்தலின் விளக்கல்வேண்டியது நிரம்ப ஆவசியகமாகிறது. அவை தற்காப்பு நியமம், இயற்கைப்பிரிநிலை, தகுந்தவை தங்கிநிற்றல் என்பனவாம். தற்காப்பு நியமமாவது இவ்வுலகத்தில் ஒவ்வொரு பிராணியும் தன்னுடைய பிராணனுக்கு அழிவுவாராமல், காத்துக்கொள்ளுவதற்காக உபாயந் தேடுந்தன்மையை யியற்கையறிவாக (Instinct) உடையது என்றதேயாம். இயற்கைப் பிரிநிலையும், தகுந்தவை தங்கிநிற்றலும் ஒரே தாற்பரியத்தைத்தருந் தொடர்மொழிகளாகும். இம்மண்ணுலகிலே சுபாவகுணத்திற்சேற்க இன்னின்ன வஸ்துக்களிருக்கத் தகுதியானவையென்று கருதப்படுவனவெல்லாம், பிராணதாரணப்பிரயத்தினத்தில் (Struggle for existence), ஒழிந்துபோகாமல், தாமேதங்கிநிற்கும். இந்த நியமங்களெல்லாம் சகலப்பிராணிகளுக்கும் பொருந்தும். இவற்றினுண்மையை எங்கும் பரக்கக்காணலாம். இவைகட்கு முறையே பிரயோகிக்கப்பட்ட ஆங்கிலேயபதங்களைக் கூறினலெளிதில் விளங்கலாம். தற்காப்புநியமம் 'Law of Self-Preservation' என்றும், இயற்கைப்பிரிநிலை 'Natural Selection' என்றும், தகுந்தவை தங்கிநிற்றல் 'Survival of the fittest' என்றும் பெயர் பெறும்.

இதுகிடக்க.—மேலேசொன்ன நான்கு பிரிவுகளையும் முறைதவறாமல் விவகரிக்க ஆரம்பிப்போம்.

I. அழிவகற்றுவர்னம்:—பொதுப்பட எல்லாவர்னங்களும், இயற்கைப்பிரிநிலை அல்லது தகுந்தவை தங்கிநிற்றலென்ற சுபாவ நியமத்திற்கு இணங்கியே உற்பத்தியாயிருக்கின்றனவென்பது, தற்காலத்துச் சுபாவ தத்துவ சாஸ்திரிகளின்கொள்கை. சிலபிராணிகளுக்கு அழிவுவாராமல் தங்கள் தங்கள் நிறங்களே காப்பாற்றுகையினாலே இவ்விதவர்னத்திற்கு அப்பெயரிடப்பட்டது. இது ஆங்கிலேயத்தில் 'Protective colours' என்று சொல்லப்படும். மேலேசொல்லிய நியாயத்திற்குச்சில உதாரணங்களை யெடுத்துப்பார்ப்போம்.



பாயுந்தொழிலையுடைய புலிகளுக்குக் கண்கவரும் வர்னக்கோடுகளிருப்பதினாலே யென்ன பயனிருக்கிறது என்று சற்று ஆலோசிப்போமானால், இந்த மிருகஜாதிகளுக்கு மஞ்சட்கீற்றுக்களும், கருநிறக்கீற்றுக்களும் தன்னிறத்தோடு கலந்திருக்கிறதினாலே மூங்கிற்புதர் அல்லது நீண்ட கோரைப்புற்களுக்கு மத்தியில் அந்தப் புலியானது ஒளிந்து கொண்டிருக்கும்போது, அது அங்கு ஒளிந்திருக்கிறதாகக் கொஞ்சங்கூடத் தெரியாது. அப்படித் தெரியாததற்குக்காரணமென்னவென்றால் மூங்கில், கோரை யிவற்றின் நிறத்திற்கும் புலிநிறத்திற்கும் வித்தியாசம் பார்த்தவுடனே மனதிற்படாமையேயாம். இவ்வாறு இயற்கைப் பிரிநிலையென்னும் நியமத்தின்படி அப்புலியானது இவ்வர்னத்தைப் பெற்றிருக்கிறதினாலே, அதற்கு இரையாகத்தக்க மான் பசுமுதலாகிய பிராணிகளெல்லாம், புலியிருக்கிறது தெரியாமல், அச்சமின்றி உலாவித்திரிகையில், இது அவற்றின்மேற்பாய்ந்து கொன்று உணவெடுத்துக்கொள்ளுகிறது. இதைவிட்டு, வேறேதாவது நன்றாயெடுத்துக் காட்டக்கூடிய ஒரு வர்னத்தை அது பொருந்தியிருந்தால் அதன் இரைகளெல்லாம் பயந்து ஓடிப்போய்விடும். புலியுமிரையின்றி இறந்துவிடும். இதுபோலவே மான்களும் புலிமுதலியவற்றின்கையில் அகப்படாதிருக்குமாறு தன்னைச்சூழ்ந்துள்ள வஸ்துக்களின் நிறத்தையடைந்து ஏகதேசந்தப்பித்திரிகின்றன. மலைகளிலும், குகைகளிலும், வனங்களிலும் சஞ்சரிக்கும் பிராணிகளெல்லாம் இந்தப்பிரகாரம் சுற்றியிருப்பனவற்றின் நிறத்தையடைந்திருக்கின்றன. பாலைவனங்களிலே திரிகின்ற தீக்கோழிகளின் (Ostriches) இறகுகளெல்லாம் மணலின் நிறமாகவேயிருக்கிறதினாலேதான், அவைகள் மனிதர்களாலும், வேறுபிராணிகளாலும் உண்டாகுஞ்சேதத்திற்கு உயிர்தப்பி நீடித்திருக்கின்றன. பக்கப்பொருள்களின் நிறங்களை ஆங்கிலத்தில் 'Colours of the environment' என்பார்கள். இந்தமாதிரியாக, அநேகப்பிராணிகளுக்குத் தம்மைக்காத்துக் கொள்ளுமியற்கையறிவினாலே, பக்கப்பொருள்களின் நிறங்களாகிய அழிவகற்றத்தகுந்தவை, யியற்கைப்பிரிநிலையாகத் தங்கிநிற்கின்றன. வர்னங்களிற் பெரும்பான்மை யழிவகற்றலுக்கே உபயோகப்படுகின்றன.

II. எச்சரிக்கைவர்னம்:—இப்பொழுது நாம் வழக்கத்தில் "குளவிகள்" என்று சொல்லுகிற ஓர்விதத்தேனீக்கள் இடையில் சிவந்த மஞ்சட்கீற்றுள்ளனவாயிருக்கின்றன. இவ்வித மஞ்சட்கீற்றுக்கள் விசேஷமாய் விஷமுள்ள தேனீக்களிடத்தே தான் இருத்தலால், பார்ப்பவர்களுக்கு இவைகளெல்லாம் விஷமுள்ள ஜந்துக்களென்று அறிவிக்குங்குறியாக இருந்து அவர்களை எச்சரித்தலால், எச்சரிக்கை வர்னமென்றுபெயர்கூறப்பட்டது. இனி நாகசர்ப்பங்களினுடைய படத்திலே காணப்படும் புள்ளிகளும் அவை விஷமுள்ள ஜந்துக்களெனத் தெரிவிப்பதற்கேற்பட்ட எச்சரிக்கை வர்னக்குறிகளென்றே டார்வின் (Darwin), வாலேஸ் (Wallace) முதலிய பண்டிதர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இப்பொழுது நமக்குள்ளே சிவப்புக் கொடியெடுத்தால் ஏதோஓரபாயம் வரப்போகிறதென்று எதிர்பார்க்கிறோம். அதைப்போலச்சிலபிராணிகளுக்குள்ளுமிது காணப்படுகிறது. உதாரணமாக, முயல்கள்பயந்து ஓடும்போது தமது வெண்மைநிறமான வாலின் நுனியை உயர்த்துகின்றன. இந்த வெண்ணிறக்கொடியைக்கண்ட மற்றைப்பிராணிகள் ஏதோ அபாயம் நெருங்கியதென்று அறிந்துகொண்டு, தப்பிக்கொள்ளுமாறு மறைந்துவிடும். இது ஆங்கிலத்தில் 'Warning colours' என்று பெயர் பெறும்.

III. பாலறிவர்னம்:—அநேக பட்சிக்கூட்டங்களில், ஆணிது பெண்ணிது வென்று அறிவது அதிகதுர்லபம். இப்படி துர்லபமாயிருக்கப்பட்டவற்றுட் பெரும்பான்மை வர்னபேதங்களா லறியப்படுகின்றன. சிறுபான்மை, உதாரணமாகக் கருநிறக் காக்கை, மீன்கொத்தி, மரங்கொத்தி முதலியனவற்றிற் செய்குறியாலன்றி வேறெவ்விதத்தினாலும் ஆணிது பெண்ணிதுவென நிர்ணயிப்பது மகாகஷ்டம். ஆயினும் சேவலும் பேடும் வர்னபேதம் பொருந்தியிருக்கின்றன

சாதாரணமாகச் சிட்டுக்குருவிகளிற் பெண்குருவிகள் மங்கல் நிறமாயிருப்பது யாவர்க்குந்தெரிந்தவிஷயம். பச்சைக் கிளிகளிலே ஆண்கிளியானது அதிக அழகும், காம்பீரமும் உடையதாகிக் கழுத்திலே ஆரம்போன்ற பசிய மயிர்க்கற்றையைப் பொருந்தியிக்கின்றது. மயில் வர்க்கங்களிலோ பெண்மயில்கள் நீண்ட தோகைகளும், காந்தியும் வனப்புமில்லாதிருக்கின்றன. குக்குடங்களிலோ, சேவல், அழகும் பிரகாசமுமுடையதாயும், கோழிகள் மந்தவர்னத்தோடுகூடியனவாயும் விளங்குகின்றன. இந்தவிதமாக வித்தியாச மிருப்பதற்குக்காரணம், பேடுகள், அழகிய ஆண்களை யடையும்பொருட்டு இயற்கைப் பிரிநிலையாக ஏற்பட்டிருப்பதேயாம் என்று டார்வின் துரை சொல்லுகின்றனர். இது சரியான காரணமல்லவென்று மறுத்து வாலேஸ் துரை 'ஆண்பட்சியதிக காந்தியுமழகுமுடையதாயிருத்தல், ஆணின் உயர்ந்த தத்துவத்தினாலும் சுறுசுறுப்பினாலுமேயுண்டாகியதாய்த்தோன்றுகிறது' என்று எழுதுகிறார். இது பாலறிவர்னம் ('Sexual colours') ஆம்.

IV. **சாதாரணவர்னம்**:—வர்னத்தால் யாதொரு பயனுமில்லாமையா லிப்பெயரிடப்பட்டது. இதை ஆங்கிலேய பாஷையில் 'Normal colours' என்று கூறுகிறார்கள். வெகுநேர்த்தியோடுகூடிய பற்பலவர்னக்கோடுகளாலும் புள்ளிகளாலும் மீன்களிற் சில அலங்கரிக்கப்பட்டிருத்தலும், சில வெட்டுக்கிளிகள் பச்சைக்கோட்டினாலும் மஞ்சட்கோட்டினாலும் சித்திரிக்கப்பட்டிருத்தலும், வரிப்புலிபோற் கோவேறுகழுதைகளும் கோடுகளைப்பெற்றிருத்தலும் ஒருபயனுங்கருதியல்ல. ஆகையினாலேயிவற்றைப் **பயனில் வர்னம்** என்றும் சொல்லலாம்.

இனி, மேலே சொன்ன நான்குபிரிவுகளினின்றும் ஏகதேசம் வேறுபட்டனவற்றை யிரண்டுபிரிவாக வகுக்கலாம்.

1. **அறிதறிவர்னம்.** (colour as means of recognition) அதாவது வர்னவித்தியாசங்களினாலே பிராணிகள் தங்கள்தங்களினங்களை யறிந்துகொள்வதாம்.

2. **போலிவர்னம்.** (Mimicry) இது அழிவகற்றுவர்னத்தின் குணத்தையும், எச்சரிக்கைவர்னத்தின் குணத்தையும் பெற்றிருத்தலினாலே வேறுபிரித்துக்கூறப்பட்டது. உதாரணமாகச் சில விஷமில்லாத பாம்புகள், விஷமுள்ள நாகசர்ப்பங்கள் எச்சரிக்கைவர்னமுடையதுபோலப் போலிவர்னமுடையனவாயிருக்கின்றன. இப்போலிவர்னத்தின் பயனென்னவென்றால், இவற்றின் விரோதிகள் இவற்றையும் நாகசர்ப்பமென்று பயந்து, போய்விடுமாதலின் அழிவையு மகற்றுகின்றது. இனிப்பட்டான்களில் (Heliconidar) 'ஹெலிகோனிடார்' என்றொரு பிரிவுண்டு. இது உணவுக்கு மிகவும் அருவருக்கத்தக்க ருசியுள்ளது. பட்சிகளுக்கு ஆகாரத்திற்குத் தக்க ருசியுள்ள வேறுசில பட்டான்கள் இந்த (Heliconidar) 'ஹெலிகோனிடார்' என்பனவற்றைப்போலவே போலிவர்னம் பெற்றிருத்தலினாலே காப்பாற்றப் படுகின்றன. பற்பலகாரணச் செறிவினாற்சில ஆசிரியர்கள் இப்போலிவர்னத்தை எச்சரிக்கை வர்னத்திலடக்குகின்றார்கள்.

மேலே கூறிய பிரிவுகளிலெல்லாவற்றிலும், அழிவகற்றும் வர்னமே மிகப்பிரதானமானது. இதுவும், எச்சரிக்கை வர்னமுமே ஏராளமான அத்தாட்சிகளை யுடையனவாயிருக்கின்றன. ஆகவே அநேகமாய் வர்னங்களெல்லாம் ஏதாவது ஒரு பிரயோசனத்தை யுத்தேசித்தே யுற்பத்தியாயிருக்கின்றனவென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லையென்பது சாங்கோபாங்கமாய் விளங்கும்.

இனி யிதுகிடக்க-சில சாதியார்களுக்குள் தங்கத்தின் நிறமுடையவர்கள் அதிக அழகுடையவர்களென்றும், கரிய நிறமுடையவர்கள் திருடர்களென்றும், மிலேச்சர்களென்றும் எண்ணங்களுண்டு. இவையெல்லாம் நாகரீகாபிவிர்த்தி அதிகரிக்க அதிகரிக்க அசங்கதமென்றே காணப்படுகின்றன. மேற்கூறிய அழிவகற்றல் முதலிய பிரயோசனம் பகுத்தறிவுள்ள மனிதர்களுக்குள் கிடையாதென்பதே எமது துணிவு. சிலபிராணிகளுக்கு அவற்றினது இயற்கையறிவினாலுண்டாகித் தங்கிநின்ற வர்னங்களின் பயனை மனி



தர்களுக்கு அவர்களுடைய பகுத்தறிவே தந்துவிடுகின்றது. ஆதலினது தகுந்தவற்றுட்சேராது போனமையாலே தங்கி நில்லாது ஒழிந்தது.

ஆகவே ஜீவராசிகளின் நாநாவித வர்னங்களினாலே நமக்கும், நாமொழிந்த பிராணிகட்கும் அதிக பிரயோசனமிருக்கின்றதெனக் காட்டப்பட்டது.

**வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி. பி. ஏ.**

## *ஆலகசாலி என்னும் அராபிய மஹானுடைய தத்துவ ஞானக்கொள்கைகள்.

அவர் கி. பி. 1058-ம்வருஷம் பிறந்தவர். (அவர் ஞானம் அடைந்ததைப்பற்றி) அவரே கூறுவதை நாம் கேட்போமாக. அவர் குழந்தைப்பருவத்திலே தாம் கொண்டிருந்த அபிப்பிராயங்களைவிட்டு விலகுவதற்குச் செய்த முயற்சிகளைப்பற்றிப் பின்வருமாறு விவரித்துக்கூறுகிறார்:—

"நான் என்னுள்ளே சொல்லிக்கொண்டதாவது:—பொருள்களின் உண்மையறிவதே எனது நோக்கம்; ஆகையால், அறிவு இன்னதென்று நிச்சயிப்பது எனக்கு இன்றியமையாததாகவிருக்கிறது. தெரியவேண்டிய விஷயத்தைப்பற்றிச் சகல சந்தேகமும் பூரணமாக அற்றுப்போம்படி விவரித்து, அதனால் பின் எக்காலத்தும் அவ்விஷயத்தைப்பற்றி எவ்வித தப்பெண்ணமாயினும், மாறுபட்ட அபிப்பிராயமாயினும் உண்டாவது அசாத்தியமாம்படி செய்வதே நிச்சயஞானமென்பது தெளிவாயிற்று. நாம் அவ்வாறு அறியும் அறிவின் உறுதியானது, நமது உணருஞ்சத்திகளின் முயற்சி யாதொன்றுமின்றியே நமது மனத்தில் திறப்படுகின்றது. அன்றியும் தவறு வாராதுகாக்கும் முறைகளுக்கும் அறிவுக்கும் இயல்பாக உள்ள நெருங்கிய தொடர்பினால், அவ்வறிவு பொய்யானதென்று ரூபிக்கும்படி எளிதிற்புலப்படும் சாட்சியமேதாயினும் கொண்டுவரப்பட்டாலும், அது யாதொருசந்தேகத்தையும் உண்டாக்கமாட்டாது. ஏனெனில், அவ்வறிவு தப்பாயிருக்குமோ என்று யாதொரு சந்தேகமும் நிகழ்வது கூடாமையாயிருக்கிறது. பத்து மூன்றுக்கதிகமென்று நான் ஒத்துக்கொண்டிருக்கும்போது, 'அப்படியல்ல, மூன்றுபத்தினுமதிகம், நான் சொல்வதை ரூபிப்பதற்கு இதோ என் கையிலிருக்கும் கைத்தடியை பாம்பாக்குகிறேன்' என்று ஒருவன் சொல்லி அப்படியே மாற்றினாலும் அவனுடைய பிழையைப்பற்றிய என்னுடைய உறுதியான எண்ணம் சிறிதும் மாறுபடமாட்டாது. அவனுடைய சாமர்த்தியமானது அவனுடைய வல்லமையைப்பற்றியென்னுடையமனத்தில் ஆச்சரியத்தை விளைக்குமேயன்றி என்னுடைய அறிவைப்பற்றிச் சந்தேகங்கொள்ள இடமிராது.

"இவ்வித நிச்சயத்துடன் இல்லாத அறிவு என் மனத்தில் நம்பிக்கையும் உறுதிப்பாடும் உண்டாக்கத்தக்க சத்தியில்லாததென்றும், உறுதிப்பாடில்லாத அறிவு அறிவென்னும் பெயரை வகித்தற்கே தகுதியற்றதென்றும் நிச்சயங்கொண்டேன்.

"யானறிந்த அறிவுகளின் தன்மையைச் சோதித்ததில், புலன்கள் மூலமாக அறியும் ஞானத்தையும் (மூன்றிலும் பத்ததிகம்போன்ற) மறுக்கக்கூடாத மூலதத்துவங்களையும் தவிர, அவ்வறிவுகளெல்லாம்இப்போதுகூறிய (நிச்சயகரமான) குணங்களில்லாதவைகளென்று காணப்பட்டன. அப்பால் யான் என்னுள்ளே சொல்லிக்கொண்டதாவது: இந்த நம்பிக்கையின்மையில் அமிழ்ந்ததனால், மறுக்கக்கூடாத நிச்சயமான அறிவை யடைவதற்குப் புல உணர்ச்சியையும் விலக்கவொண்ணாத தப்பாத உண்மைகளையும் ஆதாரமாகத் தழுவுவதைத்தவிர வேறு நம்பிக்கையில்லை. அவைகளின் சாட்சியம் சந்தேகிக்கக்கூடாததென்று தோன்றியது. ஆயினும் புல உணர்ச்சியினாலும் யோசனையினாலும் அறியும்

* Translated from Draper's Intellectual Development of Europe.

விஷயங்களில் சந்தேகத்துக்கிடமிருக்கக்கூடுமோவென்று ஆராய ஆரம்பித்தேன். அப்போது சந்தேகங்கள் ஒன்றன்பின்னொன்றாய்த் திரண்டுவந்து என்னுடைய அநிச்சயத்தைப் பூரணமாக்கிவிட்டன. அப்படியானால் புலன்களின்வழியாக அறியும் விஷயங்களைப்பற்றியுண்டாகும் நம்பிக்கைக்குக் காரணமென்ன? (என்று ஆராயப்புகுந்தேன்.) நம்முடைய புலன்களெல்லாவற்றிலும் கட்புலன் விசேஷ சக்தியுள்ளது; ஆயினும் ஒரு நிழலைப்பார்த்து அது நிலையானதாகவும் அசைவற்றதாகவும் கண்டு, அசையுந்தன்மையில்லையென்று தீர்மானிக்கிறோம். அப்படித்தீர்மானித்தும், அந்நிழலிருந்த இடத்தை ஒருநாழிகை கழித்துவந்து பார்க்கும்போது, அது, சடுதியாக மறையாமல் படிப்படியாகவும் சிறிது சிறிதாகவும், எக்காலும் நிலைகொள்ளாதவண்ணமாகமறையும் இயல்புடையதாதலால், இருந்த இடத்தினின்றும் எடுபட்டுப்போகிறதென்று அனுபவத்தினாலறிகிறோம். நக்ஷத்திரங்களைப்பார்ப்போமானால், அவைகள் சிறு நாணயங்கள்போலத் தோன்றுகின்றன; ஆனால் கணிதசாஸ்திரம் அவைகள் பூமியிலும் பெரியவைகளென்று நமக்கு நிச்சயம்பிறக்கும்படி ரூபிக்கின்றது. இப்போது சொல்லியவைகளும் அவைபோன்ற மற்றவைகளும் புலன்களால் உண்மையானவைகளாக நிர்ணயிக்கப்பட்டாலும் அறிவினால் பொய்யானவைகளென்று நிராகரிக்கப்படுகின்றன. ஆகையால் புலன்கள் வெளியிடும் உண்மைகளில் வைத்த நம்பிக்கை ஸ்திரமில்லாமற்போனதைக்கண்டு அவைகளைக் கைவிட்டுவிட்டேன்.

"(இவ்வாறு யோசித்தபின்) என்னுள்ளே சொல்லிக்கொண்டதாவது: 'மூன்றினும் பத்ததிகம், ஒரேபொருள் சிருஷ்டிக்கப்பட்டதாகவும் என்றென்றும் (அனாதியாக) உள்ளதாகவும் இருத்தல்கூடாது, ஒருபொருள் ஏககாலத்தில் உள்ளதாகவும் இல்லாததாகவும் இருத்தல்கூடாமை என்பவைபோன்ற மூலதத்துவங்களாகிய அறிவின் கொள்கைகளையன்றி வேறு நிச்சயமானதொன்றுமில்லை' யென்பதே.

"இதன்மேல் புலன்கள் பின்வருமாறு மறுமொழிகூறின: 'அறிவின் விஷயத்தில் உனக்குள்ளநம்பிக்கை எங்கள்மேல் நீ வைத்திருந்த நம்பிக்கையைப்போன்றதல்லவென்பதற்கு உனக்கு என்ன ஆதாரமிருக்கிறது? நீ எங்களை நம்பியபோது, அறிவு உன்முன் வந்துதோன்றி எங்களைப் பொய்யராக்கியது; அறிவு தோன்றி இராவிட்டால், நீ எங்களை விடாது நம்பிக்கொண்டிருந்திருப்பாய். நல்லது, அறிவு எங்கள் சாட்சியத்தைக் கண்டித்தபடியே, (தான் வெளிப்பட்டு வந்தால்) அறிவின்தீர்மானங்களை மறுக்கக்கூடிய அறிவினுமுயர்ந்த சத்திமான் இருக்கலாகாதோ? அத்தகையுடையோன் வெளிப்படாமையே அவனில்லாமைக்கு அத்தாட்சியன்று'.

"இவ்வாட்சேபனையை மறுக்க வீணே முயன்றேன்; முயன்று நித்திரையைப்பற்றிச் சிந்தனைசெய்யப் புகுந்தபோது என்னுடைய மலைவுகளதிகரித்தன. அதன்மேல் யான் நினைத்ததாவது: நித்திரை நிகழும்போது நீ காணும்காட்சிகள் உண்மையும் பொருத்தமுமுள்ளவைகளாக நீ கருதி (அந்நித்திரை நிகழுமளவும்) அவைகளின் உண்மையன்மையைப்பற்றிச் சந்தேகப் படுகிறதில்லை. விழித்தபின், அக்காட்சிகள் வெறுந்தோற்றங்களேயன்றி வேறொன்றுமல்லவென்பது உனக்குத் தெரியவருகிறது. நீ விழித்திருக்கும்போது உணருகிறவைகளும் அறிகிறவைகளும் ஆகிய எல்லாம் உண்மையாகவே இருக்கின்றனவென்பதற்கு உனக்கு என்ன ஆதாரமிருக்கின்றது. (அவ்வுணர்தலும் அறிதலும் நிகழும்) தற்சமயத்தில் உள்ள சாக்கிராவத்தை சம்மந்தப்பட்டமட்டும் (அவை) எல்லாம் உண்மையே; ஆனால் சொப்பனாவத்தைக்குச் சாக்கிராவத்தை எப்படியிருக்கிறதோ, அப்படியே சாக்கிராவத்தைக்கு வேறொரு அவத்தை இருப்பது கூடியது. இந்த உயர்ந்த அவத்தையோடு ஒத்துப்பார்க்கில், சாக்கிராவத்தை சொற்பனாவத்தையேயென்று சொல்லும்படி ஆகிறது"



இவ்வாறு தத்துவவிசாரத்தில் உண்டாகும் சந்தேகங்களை இந்த அராபி கூறியிருக்கிறதிலும் தெளிவாக எந்த யூரோப்பியனாலும் கூறுவதைக் காண்பது கூடாமையானது. நிச்சயமாகவே, இந்த விவகாரத்தை இவர் கூறியதிலும் மனதில் அழுந்தும்படி கூறுவது அசாத்தியமே. அனேக தத்துவ சாஸ்திராசிரியர்கள் மயங்கக் கூறுவதை நோக்குமிடத்து இவருடைய விளங்கக்கூறல் ஆச்சரியமாயிருக்கிறது.

"என்னுடைய நிலைமையைப்பற்றிச் சிந்தனைசெய்தபோது, இந்த உலகத்தோடு பல்லாயிர பந்தங்களாற் பிடிக்கப்பட்டவனாகவும் எப்பக்கங்களினுமிருந்து செய்யப்படும் பல சோதனைகளுக்கும் உட்பட்டவனாகவும் நானிருப்பதாகத் தெரிந்தேன். அதன்மேல் என்னுடைய செயல்களை ஆராயப் புகுந்தேன். அவற்றுள் போதனையும் கல்வி கற்பித்தலும் சிறந்தவைகளாயிருந்தன. அவைகளும், மறுமைக்கு முற்றும் உபயோகமற்ற அப்பிரதானமான சாஸ்திரங்கள் விஷயத்தில் பிரயோகிக்கப்பட்டனவென்று தெரிந்தேன். கல்வி பயிற்றுவதில் எனக்குள்ள நோக்கத்தைப்பற்றி ஆலோசனை செய்தபோது, அது ஆண்டவன் கருத்துக்கேற்ற சுத்தமுடையதன்றென்றறிந்தேன். எனக்கு மகிமையைத் தேடிக்கொள்ளு நிமித்தமே என்னுடைய சகல யத்தனங்களும் பிரயோகிக்கப்பட்டனவென்றும் கண்டேன். ஆகையால் என்னுடைய சொத்துக்களைத்தானஞ்செய்துவிட்டு *பாக்தாது நகரத்தை நீங்கி †ஸிரியாவில் ஏகாந்தமாக ஒதுங்கிவாழ்ந்தேன். அங்கு, (ஆன்மவிசாரணை செய்யப் புகுந்து) தனிமையாக மனத்தோடு போராடி, ஆசைகளைவெல்லமுயன்று இருதயசுத்தி செய்வதிலும் மறுமையையடைதற்கு ஆயத்தம்பண்ணுவதிலும் இரண்டுவருடங் கழித்தேன்."

இது உண்மையும் சிரத்தையும் உடைய ஒருவருடைய மனப்போராட்டத்தை நன்கு விளக்குகின்றது.

இவ்வித எண்ணங்கள் தோன்றியவர் ஆலகசாலி யொருவர்தான் என்பதில்லை. ஆனால் தம் அனுபவத்தை மற்றயாவரிலும் நன்குதெரிவிக்கும் வார்த்தைகள் அவருக்குதவின. அவர் என்னமுடிவைக் கண்டுபிடிக்கிறாரென்றறிவோம். "முதலாவது குழந்தைப்பருவம் (கண்முதலிய புலன்களாலுணரக் கூடியவைகளையுணரும்) புலனுணர்ச்சியொன்றே நிகழும்பருவம்; ஏழாவது வயதில் ஆரம்பிக்கும் இரண்டாவது பருவம் (அப்புலனுணர்ச்சியாலறியப்பட்டவைகளைப்) பகுத்தறியும்பருவம்; மூன்றாவதுபருவம் இன்னது (பத்து மூன்றுக்கதிகமென்பதுபோல) விலக்கக்கூடாதது, இன்னது கூடியது, இன்னது மற்ற எதன் ஆதாரத்தையும்வேண்டாதது, என்று தெரிவதன்றி மனத்துக்கெட்டாத எல்லா உயர்ந்தவிஷயங்களையும் தெரியும்விவேகம் நிகழும் பருவம். பருவங்கள் இம்மட்டோடுநிற்கவில்லை. இப்பருவங்களுக்குப்பின் நான்காவது பருவமொன்றுள்ளது. அதில் (ஞானக்கண்ணாகிய) வேறொருகண் திறக்கப்பட்டு, அதனால் மனுஷன், பகுத்தறிவினாலுணர்ந்தவைகள் புலனறிவுக்கு விஷயமாகாதிருந்ததுபோலவும், விவேகத்தினாலறிந்தவைகள் பகுத்தறிவுக்குப் புலப்படாதிருந்ததுபோலவும், விவேகத்துக்கு அகோசரமானவைகளாய் (சாதாரணர்களாகிய) மற்றவர்களுக்கு மறைபட்டிருக்கிறவைகளாயுள்ள எதிர்காலத்து நிகழும் சகலவற்றையும் அறிகிறான். இதுவே தீர்க்க தரிசன சத்தி." இவ்வாறு, ஆலகசாலி (நம்முடைய ஆயுள்காலத்தில் அனுசரிக்கவேண்டிய) வாழ்க்கைநெறிகளுக்குத் தத்துவஸாஸ்திர ரீதியான ஆதாரம் கண்டுபிடித்து, மதத்தையும் தத்துவசாஸ்திரத்தையும் (ஒன்றுக்கொன்று சாதாரணமாகத் தோன்றுகிறபடி, விரோதமுள்ளவைகளல்லவென்றுகாட்டி) ஒற்றுமைப்படுத்துகிறார்.

வே. ப. சு.

---

## பொன்விளை நல்லூர்.

### 2-வது அதிகாரம்.

பணத்தின் பெருமை.

நூதனமான சில மனிதர்கள் வந்திருக்கிறார்களென்றும், அவர்கள் ஏதோ ஒரு அற்புதமான வஸ்

* Bagdad † Syria

துவை கொண்டுவந்திருக்கிறாரென்றும், அவர்கள் அதை வேண்டியபோதெல்லாம் வரவழைக்கத்தக்க மந்திரசக்தியுள்ளவர்களென்றும், அவர்கள் அன்றிரவு கூத்துக்கு வருவார்களென்றும் அவ்வூரெங்கும் ஓர் நொடிப்பொழுதில் செய்திபரவிவிட்டது. ஓரிவீட்டில் ஓரி, சாளி இவர்களுடன் நாராயணனும், சுப்பனும் உட்கார்ந்திருந்ததைப்பார்க்க அவ்வூர் சிறுவர்களும் சிறுமியர்களும் ஆவலுடன் ஓடிவந்து அச்சத்துடன் எட்டி எட்டிப் பார்த்துவிட்டு மறுபடி ஓடிக்கொண்டிருந்தார்கள். அவ்வூர் பெரியவர்களும் அப்படியே செய்திருப்பார்களென்பதற்கு சந்தேகமேயில்லை. ஆனால் கூத்துக்கு காலம் சமீபித்துவிட்டது. அதற்கு வேண்டிய வேஷங்களை தயார்செய்து கொள்ளுவதில் அவர்கள் அவசர ஜோலியாயிருந்துவிட்டார்கள்.

அன்றிரவு ஆனந்தமாய்க் கூத்துநடந்தது. அப்பொழுது திவ்யமான வசந்தகாலம். மரங்களெல்லாம் தங்களுடைய பழய இலைகளை உதிர்த்துவிட்டு சந்தனம் பூசியதுபோன்ற சரீரத்துடன் தாவள்யமான தளிர்களை யேந்திக்கொண்டு 'ஆகா நமக்குசமானம் நாம்தா'னென்று சந்தோஷத்தால் உடல் சிலிர்த்து இறுமாந்து சிறக்கம்பம் செய்துகொண்டு நின்றன.

புஷ்பங்கள் அதிவிநோதமான வர்ணங்களுடன் மலர்ந்து சமயம்பார்த்து சந்தடிசெய்யாமல் வஞ்சகமாய்வரும் தமது ஆசைநாயகனாகிய தென்றல்காற்றிற்கு தங்களுடைய இனிய இதழ்களை ஒன்றொன்றாய் திறந்து அற்புதமான பரிமளத்துடன் ஆனந்தத்தைக் கொடுத்துக்கொண்டு பிரகாசித்தன. சந்திரனோ, எங்கே பார்த்தாலும் ஏராளமாய் ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களுடன் போட்டிபோட்டு போர்செய்யும் பூமியிலுள்ள நக்ஷத்திரங்கள் என்று சொல்லும்படி வளர்ந்து விளங்கிய புஷ்பங்களின் வாசனையைக்காட்டிலும், அதிக மனோகரமாய் அமிர்தத்தையே பொழிந்து நின்று பிரகாசித்தது. இக்காட்சியை கண்களால்கண்ட நாராயணன் பாலியமுதல் மலைநாடுகளில் வசித்துவந்ததால், புஷ்பங்கள் விருக்ஷங்கள் இவைகளை நமக்கு சகோதரனென்று பாராட்டி பிரியம் செலுத்திவந்த நாம்கூட இந்த ராத்திரியைப்போல் இனிமையான இராத்திரியை இதுவரையில் கண்டதில்லையென்று எண்ணி மனமுருகி நம்மையும் நாகரீகமற்ற இக்காட்டு மனிதரையும் கடவுள் சமமாக கடாக்ஷிக்கிறார் என்பதற்கு வேறு என்ன அத்தாக்ஷி வேண்டியதிருக்கிறதென்று பலவாறு நினைத்து உற்சாகப் பட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில் ஓர் விசேஷம் அவன் கண்ணுக்கு எதிர்ப்பட்டது. அதென்னவெனில் கூத்துக்காக வந்து கூடிய பலருள் கூனிக்குனிந்துள்ள ஓர் கிழவன் சுப்பனைக்கண்டவுடன் பைசாசத்தைக் கண்டவன்போல் பதறி கைகால் நடுக்குற்று அசைவற்று நின்றுகொண்டு சுப்பனை அடிக்கடி உற்று உற்றுப்பார்த்தான். அதற்குள் வேறுயாரும் அந்த அவஸ்தையில் தன்னைக்கண்டுவிடக்கூடும் என்று அஞ்சினவன்போல் ஒதுங்கிச்சென்றான். சென்றும் அவன் கீழே குனிந்துகொண்டும் வேறு யாரையோ பார்ப்பதுபோலும் பாவனை பண்ணிக்கொண்டும் கடைக்கண்ணாலும் முழுக்கண்ணாலும் சுப்பனையே கவனித்துவந்ததைக் கண்ட நாராயணனுக்கு அது அதிக சந்தேகத்திற்கு இடமாயிற்று. சுப்பனுடைய உருவத்தையும் உடையையும் பார்க்கிலும் நாராயணனுடைய உருவமும் உடையும் அக்காட்டுமனிதற்கு அதிக ஆச்சரியத்தை உண்டுபண்ணக் கூடியதாயிருந்தாலும் அந்தக்கிழவன் நாராயணனை சற்றும் சட்டைசெய்யாது சுப்பனையே உற்றுப்பார்த்தது அவன் சந்தேகத்தை இரட்டித்தது. முன்னமேயே சுப்பனுடை நடத்தை நாராயணனுக்கு அதிக வியப்பை உண்டுபண்ணினதை நாம் பார்த்திருக்கிறோம். 'அவன் முகத்தையும், தன்னைத் துரத்திவந்த மூர்க்கத்தையும் அவன் உடையையும், அவன் காட்டுத்தமிழ், காட்டு மனிதருடைய கூத்து, உபசார முறைமை, முதலியவற்றை அறிந்திருப்பதையும், இப்போது இந்தக்கிழவன் அவனை உற்றுப்பார்ப்பதையும் கவனித்தால் அவன் காட்டு மனிதனோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது, பின்னும் பார்ப்போம்' என்று தனக்குள்ளே யோசித்துக்கொண்டிருக்கும்பொழுதே கூத்து ஆரம்பித்துவிட்டது. ஒவ்வொரு புருஷனும் ஒவ்வொரு ஸ்திரீயோடு கைகோர்த்துக்கொண்டு ஒரு வட்டமாய் நின்றார்கள். கிழவர்கள் ஒரு பெரிய கல்லின்மேல் உட்கார்ந்துகொண்டு வேடிக்கைபார்த்து மகிழ்ந்தார்கள். அந்த வட்டத்தின் மத்தியில் சிறு குழந்தைகள் நின்றுகொண்டன. நாராயணனும் சுப்பனும் தனியே நின்றார்கள். அப்பொழுது சாளி ஓடிவந்து சுப்பனை கையைப்பிடித்துக்கொண்டு ஆட அழைத்தாள். முன்னமே சாளி கையைப்பிடித்துக்கொண்டு ஒருவன் காத்திருந்தான். சுப்பன் நான் இங்கேயேயிருக்கிறேன் என்று என்ன சொன்னாலும் சாளி விடுவதாக இல்லை. ஆகவே அவனும் கூத்தில் சேர்ந்தான். சாளிக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு புருஷத்தோழர். பாவம்! நாராயணனை மட்டும் ஒருவரும் ஆட்டத்திற்காகத் தேடுவாரில்லை. அந்த ஆட்டத்தி னழகை இங்கு சொல்லவேண்டுவதில்லை. சுப்பன் ஒருவன்தான் உடுப்புதரித்தவன். மற்றவர்களெல்லாம் நிர்வாணமாகவே யிருந்தார்கள். ஆனால் அவர்கள் போட்டிருந்த வேஷம் வெகுவிசித்திரம். அவர்கள் பாட்டோ அதைவிட விசித்திரம். இவ்விதம் கூத்து வெகு நேரம் நடந்தது. நடந்தவுடன் சாளி பூசியிருந்த வில்லை வாசனையைப்பற்றி அவர்களுக்குள் கேள்விவந்தது. அதன் சரித்திரத்தையும் ஓரி சொல்ல அவர்களுக்கெல்லாம் தலைவனாகிய ஒருவன் சிறிதுதூரம் தள்ளி நின்றுகொண்டு கம்பீரமான பெருங்குரலோடு மற்றவர்களை அழைக்க சுப்பனை விட்டுவிட்டு அவர்கள் சென்றார்கள். அப்பொழுது அவர்கள் தலைவன்: 'இத்தனைநாள் நாம் இங்கிருந்தும் இதுவரையில் கேளாதபடி என்று நேரிட்டிருக்கிறது. இப்பொழுது நம்மிடம் வந்திருப்பவர்களை நாம் சாமான்னியமாக எண்ணக்கூடாது. நம்முடன் ஆடினவன் நமது பாஷையைப் பேசுகிறான். அவன் சாதாரண மனிதனானால் அவனுக்கு அது எவ்விதம் தெரிந்தது. இவர்கள் கொண்டுவந்திருக்கிற வஸ்துக்கள் அதிக ஆச்சரியமாயிருக்கின்றன. ஏதோ நாம் எல்லாவற்றிற்கும் நிதானித்து நடக்கவேண்டும். முக்கியமாய் அந்தச் சிவப்புமனிதனுக்கு (நாராயணனுக்கு) நாம் அதிக வணக்கமாயிருக்கவேண்டும். ஜாக்கிரதை, போங்கள்,' என்றான். எனவே எல்லாரும் 'உத்திரவு' என்று திரும்பிவிட்டார்கள். சுப்பனை முன்கூர்ந்துபார்த்தகிழவன்மட்டும் சற்று பின்தங்கி தலைசாய்த்து உதட்டில் கைவைத்து ஏதோ ஒன்றைப்பற்றி ஆழ்ந்த யோசனை செய்பவன்போல் காணப்பட்டான். பிறகு எல்லோரும் நாராயணனுக்கும் சுப்பனுக்கும் தங்கள் காதை கிள்ளி வணக்கம்செய்துவிட்டு அவர்களை முன்னே நடத்தி தாங்கள் பின்னேவந்தார்கள். நாராயணனுக்கு இவ்வணக்கத்திற்குக்காரணம் தெரியாவிட்டாலும் அதில் விசேஷ திருப்தியடைந்தவனாய் சுப்பனுடன் ஓரி வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.

மறுநாள் காலையில் அவன் ஓரியை தன்னிடம் அழைத்து சுப்பன்மூலமாக பற்பல நாணயங்களின் தாராதாரத்தையும் அததின் பெயரையும் சொல்லிக்கொடுத்து 'உனக்கு எப்பொழுது பணம்வேண்டுமோ அப்பொழுதுகேள், தருகிறேன்' என்று சொன்னான். பார்வைக்கு அழகாயிருக்கிற அந்தப்பணத்தின்பேரில் எல்லாருக்கும் ஆசையுண்டாயிற்று. அதை அடைய அவர்கள் பட்டபாடு ஆச்சரியம். ஒரு அணாருபாய் துண்டுக்காக ஒருவன் இரண்டு மானை ஓட்டிவருவான். மற்றொருவன் ஒரு யானையைக்கொண்டுவருவான். அந்தக்காட்டில் எந்தப்பொருள்கிடைக்குமோ அவைகளையெல்லாம் பணத்திற்கீடாக ஜனங்கள் கொண்டுவரத்தலைப்பட்டதுமன்றி ஒருவனிடம் வாங்கி மற்றவர்களுக்கு லாபத்திற்காக வியாபாரமும் செய்யத் தொடங்கினார்கள். தெய்வமே என்று இருந்தஇடம்விட்டுப்பெயராது யதேச்சையாக உண்டாகும் காய்கனிகளை உண்டு, அற்ப ஆசை, அற்பதிரவியம், அற்ப உழைப்பு, இவற்றுடன் கூடியிருந்த மனிதரை பணவாசைபடுத்திய பாட்டைப்பாருங்கள். பணம் வருவதற்கு முன்



வியாபாரம் வெகுசொற்பம். இப்பொழுதோ ஒவ்வொருநாளும் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு புதிய பொருளைக்கொண்டுவந்து விற்று பணம்பெறுவதற்காக முயலவே, வியாபாரம், காற்றடிக்க அலை உயர்வதுபோல், அம்மனிதர்களுடைய பண ஆசையின் அளவே உயர்ந்தது. இப்படி அதிகரிக்க, நாரயணனுடைய பணப்பை யௌவனக்கட்டை இழந்து சுருங்கி வளைந்து நெகிழ்ந்து செயலற்று சீக்கிரம் விருத்தாப்பியத்தை அடைய ஆரம்பிக்கவே, நாராயணனுக்கு நம்முடையபணம் போய்விட்டால் உயிர் போய்விடுமேயென்று கவலையுண்டாயிற்று.

இப்படியிருக்க ஒருநாள் நாராயணனை திடீரென்றுகாணுமல் ஊர் முழுவதும் ஆச்சரியத்தால் கொல் என்று இருந்தது. ஜனங்களெல்லோரும் அவனைப்பற்றி சுப்பனிடம் வணக்கமாய் விசாரிக்க, சுப்பனும் தனக்கு ஒன்றுந்தெரியாதென்று சாதிக்கவே ஊராருடைய ஆச்சரியம் முன்னிலும் அதிகரித்தது. அவர்களுக்குள் மூடபக்தி அதிகம். கடவுள் அவர்களுக்குமுன் பல உருவங்கொண்டு விளங்கி மறைந்துபோவதாய் ஓர்வித எண்ணம் குடிகொண்டிருந்ததால் தங்களால், சுலபத்தில் அறியக்கூடாதவிஷயங்கள் யாவும் கடவுள் செய்த திருவிளையாட்டென்றே அவர்கள் நினைப்பார்கள். சாமுண்டியென்ற தேவதைதான் அவர்களுடைய கடவுள். நாராயணன் திடீரென்று வந்து திடீரென்று மறையவே, அவர்கள் சாமுண்டிதான் தங்களைச் சோதிப்பதற்காக தங்களிடம் வந்திருந்தது என்று எண்ணி, எங்கேபார்த்தாலும் ஆடு கோழிகளைக்கொன்று இரத்தத்தைச்சிதறி சுவாமி கும்பிட்டு இரைச்சியை நாலு பக்கங்களிலும் வாரியெறிந்தார்கள்.

இங்கே யிப்படியிருக்க நாராயணனோ ஓரி வீட்டில் படுத்திருந்தபோது ஒரு பெரிய கனவு கண்டு அதன் மத்தியில் தன்னையறியாமல் எழுந்திருந்து வீட்டின் பின்புறத்தின் கதவைத்திறந்து ஒருவருக்குந்தெரியாமல் ஊருக்கு சமீபத்திலுள்ள ஓர் அடர்ந்த ஆலமரத்தின் அடியில் வந்து உட்கார்ந்திருந்தான். இப்படி கனவில் தன்னறிவில்லாமல் வழி நடந்துவந்த நீலகிரி சில்லரைவியாபாரியைத்தான் ஊர்முழுவதும் சாமுண்டியெனக் கொண்டாட்டமாடினார்கள். ஏழை நாராயணன் விழித்தவுடன் சுற்றுமுற்றும்பார்த்து தான் அவ்விடம் வந்த வழி அறியாமல் கவலைப்பட்டாலும், ஊருக்கு சமீபத்திலிருப்பதாகக்கண்டு மனந்தேறியிருந்தான். அவன் எப்பொழுதும் தன்மடியிலேவைத்திருக்கும் பணப்பையையும் அவனுடன் கூடவே யிருக்கக்கண்டான். அதைப்பார்த்தவுடன் பணம் குறைந்துவிட்டதைப்பற்றி அவனுக்கு மனக்கவலையுண்டாகி வருத்தத்துடன் அதையெடுத்து தலைகீழாயெறிய அதிலிரு

ந்து கனீரென்று சுவாமிகள் கொடுத்த கண்ணாடி கீழேவிழுந்தது. அதின் மகிமையை அறியாத நாராயணன் அதை கையில் எடுக்கவே, இந்தப்பண்டாரப்பயலல்லவோ நம்மை மோசஞ்செய்தானென்று அவனுக்கு நினைப்பு உண்டாகி அவன் வயிறு முழுவதும் குபீரென்றுபற்றி எரிந்தது. அப்படி வருத்தப்பட்டுக்கொண்டே அந்த கண்ணாடியை உற்றுப் பார்த்தான். அது பார்வைக்கு ஒழுங்கற்ற வரைகளுடன் மத்தியில் பற்பல கோடுகளால் கிறப்பட்டு தெளிவற்று ஒரு கெட்டி கண்ணாடித்தகடாயிருந்தது. அதை சற்றுநேரம் பார்த்துவிட்டு 'இதுவும் ஒரு மோசம்' என்று கீழே எரிந்து தன்னுடைய கவலையைப்பற்றி நினைக்க, அது அமாவாசை இருள் போல் தீவிரமாய்ப்பெருகிற்று. இவ்வாறு தலைகுனிந்து கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்போது இவன் கண்கள் அக்கண்ணாடிமேல்பட்டன. படவே திடீரென்று இதுவரையிலும் அவன்கண்டிராத ஓர் அற்புதக்காட்சிகண்டான்.

அதென்னவெனில் பூமிக்குள்ளாக வெகுதூரத்திற்கு பளீர் பளீர் என்று மின்னிக்கொண்டு ஏதோ ஒருவஸ்து காணப்பட்டது. ஆனால் இடைக்கிடையே ஒளிகுறைந்து கறுமையாயும் தோன்றிற்று. நாராயணன் வெகு ஆவலுடன் உற்றுப்பார்த்தான். அதென்னவென்று சற்றுநேரம்பார்க்க அப்பொருள் தங்கமாயிருக்கலாமென்றும், இடை இடையே கறுப்புக்குக் காரணம் அதை மூடிக்கொண்டிருக்கும் மண்ணாயிருக்கலாமென்றும் அவனுக்கு திடீரென்று ஒரு எண்ணம் உதயமாயிற்று. உடனே அவன் நிமிர்ந்து நாலுபக்கமும் சுற்றிப்பார்த்தான். தானிருக்கிற இடத்தை அந்த ஊர் ஜனங்கள் அறியக்கூடாதபடி ஒரு அடர்ந்தகாடு மறைத்துக்கொண்டிருப்பதைக்கண்டு திருப்தியடைந்து ஒரு மரக்கொம்பை எடுத்து நிலத்தைதோண்ட சமீபத்தில் ஒரு கட்டியொன்று கிடைத்தது. அதைக்கண்டவுடன் நாராயணனடைந்த சந்தோஷத்தை யென்னென்று சொல்லுவோம். அதையெடுத்து 'என்தங்கமே' என்று முத்தமிட்டுக்கொண்டான். கண்ணில் ஒற்றிக்கொண்டான். கையில்தூக்கித்தூக்கிப்பார்த்தான். பிறவிக்குருடனுக்கு திடீரென்று கண்தெரிந்தால்கூட இவ்வளவு சந்தோஷமிராது. ஆகா! அந்த மகாசித்த புருஷரல்லவோ நமக்கு பெரும்பொருளுதவியிடுகிறாரென்று ஆனந்தக்கண்ணீர்சொரிந்து, 'சுவாமி! நான் உம்மை அறியாது பலவாறுநிந்தித்து அபசாரப்பட்டேன்' என்று பலவாறாக துதித்துக்கொண்டு அந்த தங்கப்பாளத்தை மறுபடி கண்குளிரப்பார்த்துவிட்டு, 'இங்கேதானே இரு' என்றுசொல்லி குழியிலே பத்திரமாய் மூடிவிட்டு சிறிதுதூரம் சென்று அவ்விடம் தரையில் அந்த கண்ணாடியை வைத்துப்பார்த்தான். அவ்விடமும் சொர்ணமயமாயிருக்கக்கண்டு, பின்னும் சிறிதுசிறிது தூரமாக நெடுந்தூரம்சென்று பசிஞாபகம்கூட இல்லாமல் அஸ்தமிக்க 5 நாழிகை வரையில்எங்கும் கண்ணாடியின் உதவியால் பரிசோதித்து இவ்வளவு தங்கத்துக்கும் நாமல்லவோ அதிபதியென்று உள்ளங்குளிர்ந்து உடம்பு பூரித்து இறுமாந்து பரவசமானான். சிறிது நேரத்திற்கெல்லாம் ஊர்ஞாபகம் வந்து இந்த அதிசயத்தையெல்லாம் சுப்பனிடம் சொல்லுவோமென்று விரைந்து வீட்டைநோக்கிப் புறப்பட்டான். வரும்வழியில் தரைக்கு 2-அடிக்குள் அவ்வழிச் செல்பவர்கள் இங்கிருந்து இளைப்பாறுவோமென்று இச்சிக்கும்படி ஆசனத்துக்கு யோக்கியமாய் அமைந்திருந்த ஒருமரக்கிளையின்மீது சாளியை இரண்டு கைகளால் இருகத்தழுவிக்கொண்டு அவளுடைய காலின்மேல் தன்கால்களை போட்டுக்கொண்டு அவள் இடது தோள்மேல் தன்தலையை வைத்துக்கொண்டு வெகு இனிமையான குரலுடன் சுப்பன் உல்லாசமாய் பாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவர்களுக்கு பின்னால் ஏதோ ஒன்று கருப்பாய் நகர்ந்து செல்லுவதாக தூரத்தில்வந்த நாராயணனுக்கு தென்பட, அது கரடியென்று அஞ்சி ஓடிவந்தான். சமீபத்தில் வரும்போது அந்த உருவம் பலமுறை நாராயணனை உற்றுப்பார்த்த கூனியென்ற கிழவன் என்றும், அவன் சுப்பனை நோக்கி சற்றும் சந்தடிசெய்யாமல் பதுங்கிக்கொண்டு செல்வதையும் கண்ணுற்ற நாராயணன் ஏதோ சுப்பனுக்கு அபாயம் வருகிறதென்றஞ்சி யாரடா என்று கூவ, கூனி 'ஐயோ' என்று அலறிக்கொண்டு குபீரென்று பாய்ந்து ஓடினான். அவன் ஓடிய விரைவைக்கண்டு ஆச்சரியங்கொண்டு நாராயணன் அவனை நில்லென்று ஆக்கியாபிக்க, பாவம்! அக்கிழவன் கைகால் நடுக்கத்துடன் நெஞ்சும்,மார்பும் படபடவென்று அடிக்க நின்றான். நாராயணனுடைய சப்தத்தைக்கேட்டு பலர் ஓடிவந்தார்கள். வந்தவர்களெல்லாம் அவனை நோக்கி வெகுதாழ்வாய் வணக்கஞ்செய்தார்கள். அவர்கள் மத்தியில் நாராயணன் அக்கிழவனை விசாரிக்க, அவன் அச்சத்தால் வாயடைத்து நின்றான். அவன்மேல் ஏற்பட்ட சந்தேகம் மௌனத்தால் முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்து உடனே அவனை ஒரு அறையிலடைத்து வெளிப்படாதபடி காவல்செய்யவேண்டுமென்று நாராயணன் ஆக்கியாபிக்க, அவ்வாறே அவனை பின் கட்டு கட்டி சிலர் சரசரவென்று இழுத்துச் சென்றார்கள். அவன் மரணதண்டனைக்கு விதிக்கப்பட்டிருப்பான். ஆனால் அவன் கிழவனாயும் நிராயுதபாணியாகவும் இருந்ததால் அவன் சுப்பனைக்கொல்ல எத்தனித்ததாகத்தோன்றவில்லை. அவனைத்தண்டித்தவுடன் நாராயணன் திரும்பி சாளியைப்பார்த்தான். அவள்



திவ்யமான மெல்லியதோலை வஸ்திரமாகத்தரித்துக்கொண்டு, வரியையுடைய புலித்தோலை அதிக சன்னமாய் பதமிட்டு அதை தன் மார்பில் அலங்காரமாய் உத்தரீயமாகப் போட்டுக்கொண்டு, கன்னங்களில் குழிவிழ சிரித்துநிற்க, அவள் தரித்துநிற்கும் உடுப்பினால் அவள் அழகு முன்னிலும் எண்மடங்கு அதிகரித்திருப்பதைக்கண்டு ஆனந்தித்தான்.

சாளிமாத்திரமல்ல அந்த ஊரிலெல்லோருமே இப்பொழுது தோல் உடை உடுத்தத் துவங்கினார்கள். பணம் வந்தது முதல் அதை அடையவேண்டுமென்ற ஆசையால் தூண்டப்பட்டு காட்டுக்குப் போய்வேட்டையாடுவதே சிலருக்குத்தொழிலாயும் அவர்கள் கொண்டுவருகிற மிருகங்களின் தோலை உரித்து பதமிடுகிறதே சிலருக்குத் தொழிலாகவும், மாமிசத்தையெடுத்து பத்திரமாய் பக்குவப்படுத்தி விற்பதே சிலருக்குத் தொழிலாகவும், பணம் வாங்கிக்கொண்டு வீடுகட்டுதல், மரம் வெட்டுதல் நாற்காலி முதலியவைசெய்தலே சிலருக்குத் தொழிலாகவும், இரும்புக்கருவிகளைச் செய்வதே சிலருக்குத் தொழிலாகவும் காட்டில்சென்று நூதனமான புஷ்பங்களையும் பழங்களையும் கொண்டு வருவதே சிலருக்குத் தொழிலாகவும், இவ்வாறு இரண்டு மூன்று நாளைக்குள் ஒருநாள்செய்த தொழிலையே மறுநாளும் செய்தபழக்கத்தினால் இன்னாரின்னார் இன்ன இன்ன தொழிலாளிகள் என்று ஏற்படத் துவங்கியது. இப்படித் தொழில்பிரிவு * ஏற்பட்டதினால் வியாபாரம் சீக்கிரத்தில் விருத்தியடையுமென்று தோன்றிற்று. இப்படி பிரிவு ஏற்படாவிட்டால் ஒவ்வொருவரும் வஸ்திரம் உணவு வீடு இப்படிவேண்டிய எல்லாவற்றையும் தனக்குத் தானே செய்யவேண்டிவருமல்லவா. அப்படியிருந்தால் வியாபாரம் ஏது.

நாராயணன் ஊருக்குச் செல்லும்போது எவ்விடத்துமிருந்த வியாபார சுறுசுறுப்பையும், தொழில் பிரிவையும், நாகரீகத்தையும் கண்டு 'முன்னில்லாத நூதன வஸ்துக்களில் இவ்வூராருக்கு ஆசையுண்டாக்கி அவர்களுக்கு நாகரீகத்தையும் உண்டுபண்ணியது என்னுடைய சில்லரைப்பையல்லவா? சாளியினுடைய இப்பொழுதிய அழகுக்கு யானல்லவோ காரணம்' என்று நினைத்து, "பணத்தின்மகிமையே மகிமை" என்றுசொல்லிக்கொண்டு நடந்தான்.

(இன்னும் வரும்.)

ஆர். செல்வப்பிள்ளை பி. ஏ.

* Division of Labour.

## ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள்சரித்திரம்.

### 3-வது அதிகாரம்.

அன்றுபகலில் கிருஷ்ணய்யரும் அவர் சம்பந்தியாகிய இராமசுவாமி சாஸ்திரிகளும் பேசிக்கொண்டபடியே, இராத்திரி மீனாக்ஷி அம்மன் கோயிலுக்குச்சென்று புஷ்பம் வைத்துப்பார்க்க, வெள்ளைப் புஷ்பம் அகப்பட்டதுந்தவிர, அம்மன் சந்நிதியில் மூலக்கிரகத் தருகில் ஏற்றிவைத்திருந்த திருவிளக்கிலிருந்தும் பொறிகள் கலகலவென்று புஷ்பங்கள் போல் உதிர்ந்தன. இதைக்கண்ட இருவரும் அடங்காத அனந்தத்துடன் வீட்டுக்குவந்து, எப்பொழுது விடியுமென்று இரவெல்லாம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்து, விடிந்தவுடன் காலை அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, சிறுகுளம் முத்துஸ்வாமி அய்யருக்குக் கடிதம் எழுதுவதற்காக உட்கார்ந்தார்கள். அப்பொழுது தபால்காரன் கிருஷ்ணையருடைய மேல்விலாசத்திற்கு ஒருகடிதம் கொண்டு வந்தான். அது சிறுகுளம் என்று மேல்முத்திரையிடப்பட்டிருந்ததால் அதை ஆவலுடன் உடைத்து வாசித்துப்பார்க்க அதில் அடியில் வருமாறு வரையப்பட்டிருந்தது:—

சிறுகுளம்,
பங்குனிமீ 19௳

ஸ்ரீமது மகா-ள-ள-ஸ்ரீ மாமா அவர்களுடைய திவ்யஸ்ரீ பாதபத்மங்களிலே பாலன் முத்துஸ்வாமி சாஷ்டாங்க பூர்வீகமாக நமஸ்கரித்தவிஞ்ஞாபனம். இவ்விடத்தில் அனைவரும் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமாதிசயங்களுக்கு அடிக்கடி எழுதும்படி ஆஞ்ஞாபிக்கக்கோருகிறேன்.

"தங்களுடைய ஆசீர்வாத அநுக்கிரஹம் பூரணமாயுள்ள எனக்கு என்னகுறை? ஜலமிருக்கப் பயிர் வாடுவதேன்? சி-ஸ்ரீநிவாசனுடைய ஜாதகமும் சௌ-லெட்சுமி (கல்யாணியின் மறுபெயர்) ஜாதகமும் எல்லாவிதப் பொருத்தங்களிலும் பொருந்துகின்றன. ஸ்ரீநிவாசனும் லெட்சுமியும்கலந்துவாழ மனுஷயத்தனமும் வேண்டுமோ? இனிமேல் நடக்கவேண்டிய காரியமனைத்தும் தங்களதே. காற்றில்லாமல் மரத்திலைகள் தாங்களே ஆடுவதுமுண்டோ?

தங்களுடைய சம்பந்தி ம-ள-ள-ஸ்ரீ மாமா இராமசுவாமி சாஸ்திரிகளவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்ததின்பேரில் அவர்களுக்கே நேரேஎழுதுகிறேன். அம்மான்சேய் ஆயுசுமுழுவதும் *அம்மா

* பயித்தியக்காரன் என்ற அர்த்தத்தில்.

ன்சேயாகவே இருக்கவேண்டியதைப் பற்றி விசனப்படாமல் நான் தேற்றினேன் என்று சொல்லவும்.

வேணும்
அனேகநமஸ்காரம்.
முத்துஸ்வாமி.

இக்கடிதத்தைப் படித்தவுடன் கிருஷ்ணையர் "முத்துஸ்வாமி நிரம்பப்படித்தவன். காகிதம் எழுதுகிறமாதிரியைப் பாருங்கள். சுருக்கமாய்உபமான உபமேயங்களோடு, தான் ஒன்றும் மேலே போட்டுக்கொள்ளக்கூடாதாம்."—என, சாஸ்திரிகளும் சந்தோஷத்தால் முகமலர்ந்து 'நன்றாயிருக்கிறது' என்றார். பிறகு சிறிதுநேரம் பேசிவிட்டு இருவருமாய் சிறுகுளத்திற்கு அன்று பகலிலேயே போய் முகூர்த்தம் வைத்துக்கொண்டு வருவதாய்த் தீர்மானம்செய்தார்கள்.

* * * * *

மறுநாள்காலையில் சிறுகுளம் என்ற கிராமத்தில் ஆற்றங்கரையில் சிலஸ்திரீகள் புடவை தோய்த்துக்கொண்டும் ஸ்நானம் செய்துகொண்டும் இருந்தார்கள். அவர்களுள் ஒருத்தி "ஆமாம், எல்லாம் காரியமாகிறவரையில் கழுதையையுங் காலைப்பிடி" தான். இப்பொழுது எட்டாவது பிள்ளைப் பெற்றவளுக்கு ஆசார உபசாரமாய்க் கிடக்கிறது. இதற்குமுன்னே நடந்ததெல்லாம் நேற்றுக்குழந்தைக்குக்கூடத் தெரியும். தலைச்சன்பிள்ளை பெற்றிருந்தேன். வேளாவேளைக்கு மருந்துகிடையாது, சாப்பாடுகிடையாது. தாயாரும் பெண்ணுமாக கூடிக்கூடிக் குடியைக்கெடுக்கிறபேச்சு பேசிக்கொண்டிருந்தது தெரியாதா. அப்பொழுது ஒருநாள் விளாச்சேரியிலிருந்து பலாப்பழம் வந்தது. அன்றைக்கு மாதப்பிறப்பு, சேப்பங்கிழங்கு போட்டு மோர்க்குழம்பு, தேங்காய், கோசமல்லி, பலாக்காய்க்கறி, கத்திரிக்காய்போட்டு பொரித்தகூட்டு, சக்கரவள்ளிக்கிழங்குக்கறி; வேறு புருஷர்கூட ஊரிலில்லை. மாறுமதுரைக்குப் போயிருந்தார் மருமகனகத்துக்கு. அப்பொழுது எல்லாவற்றையும் பண்ணி எடுத்துக்கொண்டு, பலாப்பழத்திலேகூட எனக்கு ஒருசுளை கிடையாது, 'பசுவன்' போல கொட்டிக்கொண்டு என்காதிலே படவேண்டுமாம்: 'அடவாகக் கறிகாய்கூடக் கிடையாது' என்று சொல்லிக்கொண்டு, பருப்புத் துவையலும் சாதமுமாக, நல்லநாள் திங்கள்நாள்கூடப் பாராமல் போட்டாளே. அதெல்லாம் மறந்துபோவேன் என்று நினைக்கிறாயோ? அதுவும் ஒருபக்கத்தில் இருக்கும்" என்று சொல்லிக்கொண்டு நிமிர அப்பொழுது பொன்னம்மாள் என்ற ஒரு ஸ்திரீ குடமும் கையுமாக எதிர்ப்பட்டாள்.

அவள் முத்துசுவாமிஅய்யருடைய தம்பி சுப்பிரமணியய்யருடைய மனைவி. தஞ்சாவூர்ப்பெண். இந்தப்பூமண்டலத்திற்குள் அவளுக்கு ஒருவரும் நிகரில்லை. யாரையும் லட்சியமில்லாமல் எடுத்தெறிந்து பேசுவாள். பாவம்! சுப்பிரமணிய அய்யரைப் பம்பரமாய் ஆட்டிவைப்பாள். இந்த பதிவிரதா சிரோமணியிடம்அவர் யதார்த்தத்தில் அதிகபயந்தவராயிருந்தாலும், வெளிக்கு தான் மனைவிசொல் கேட்பதில்லையென்றுஅடிக்கடி பெருமை பேசிக்கொள்வார். ஆனாலும் அந்த அம்மாள் படுத்துகிறபாட்டிற்கு அவர் சாகமாட்டாமல் அவஸ்தைப்படுகிறார் என்ற சங்கதி சிறுகுள முழுவதும் தெரியும். அவருக்கு ரோஸம்பிறக்க அவரை வையவேண்டுமானால், 'பெண்டாட்டி ஆத்தாள் பெரிய ஆத்தாள்' என்று சொல்லிவிட்டால்போதும். அவர்முகம் சிவந்து கண்களில் இரத்தம் சுரந்துவிடும்.

பொன்னம்மாள் வெகு அலங்காரப்பிரியை; அவள் நடக்கும்போதே உலகம் முழுவதும் தன்னழகையே இமைகொட்டாமல் சித்திரம்போல பார்த்து பிரமித்து நிற்பதாக அவள் ஞாபகம். போய்க்கொண்டிருக்கும்போதே நாம் அன்னநடை நடக்கிறோம் என்று சில சமயங்களில் திடீரென்று அவளுக்கு எண்ணம் உண்டாய்விடும். உடனே அவளுக்கு கர்வமும் லச்சையும் ஏககாலத்தில் உண்டாகி, கால் தீப்பொறியின்மேல் மிதித்தாற்போல கீழே பாவாமல், விகாரநடையுடன் அவள் ஏதாவது சாக்குவைத்து நின்று நின்றாவது, அல்லது மெதுவாய் ஒடியாவது வீட்டுக்குப்போவதைப் பலர் பார்த்திருக்கிறார்கள்.

இந்தப் பரதேவதை தண்ணீரில் இறங்கினவுடனே மேலேசொன்னபடி அங்கே பிரசங்கம்செய்துகொண்டிருந்த ஸ்திரீ அவளைப்பார்த்து: "பொன்னம்மாள், ஏது இத்தனைநாழிகை? கல்யாண அமர்க்களமோ? அதாரடி உன் மைத்துனனகத்துத்திண்ணையில் ஜோடியாக இரண்டு கிழவர்கள் உட்கார்ந்திருக்கிறார்களே? அவர்கள் யார்?" என்று கேட்க,

பொன்னம்மாள் வெகு சலிப்புடன், "யாரோ! கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன்?" உலகத்தில் அவரவர்கள் பாட்டை அவரவர் கவனித்தால் போதாதா!" என்று வெகு இலக்கணமாய் மறுமொழி சொன்னாள்.

பொன்னம்மாள் யதார்த்தத்தில் கமலாம்பாள் படித்ததில் பாதிகூடப் படித்திராவிட்டாலும் தன்னிடத்துள்ள சொற்பசரக்குகளை வைத்துக்கொண்டு எல்லாம் படித்துவிட்டதாக பாவனை செய்வாள் கமலாம்பாள் அதிக அழகாய்ப் பேசுகிறாள் என்பதைப்பற்றி அவளுக்குஅடங்காப்பொறாமை. "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானு மதுவாகப் பாவித்துத் தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற்போல" கமலாம்பாளைப் பார்த்து தானும் நிரம்ப இலக்கணமாகப்பேச ஆரம்பிப்பாள்



பிராமணர்கள் தாங்கள் பேசும் பாஷையில் சமஸ்கிருதபதங்களை இடைஇடையே, மரத்தில் இலைமத்தியில் புஷ்பங்கள் சேர்ந்தாற்போல், சேர்த்துப் பேசுவதைக்கண்ட ஓர்ஆட்டிடையன் தானும் அவர்களைப்போல் பேச எண்ணி வீட்டுக்குப்போய் தாயாரை அழைத்து 'அம்மா, ஆஷ்டுக் குஷ்டிவந்து வேஷ்டியைத் தின்கிறது ஒஷ்டு ஒஷ்டு' என்று சொன்னதாக ஒரு கதையுண்டு. அதுபோல் பொன்னம்மாள் பேசுகிற இலக்கணத்தமிழ் சிற்சில சமயங்களில் அதிக இலக்கணமாய்விடும். ஆனாலும் கற்றறிவில்லாத அவ்வூர்ப்பெண்டிர்க்கு கமலாம்பாளைக்காட்டிலும் அவள் அதிகமாகப் படித்திருப்பதாக எண்ணம்.

அவள் மறுமொழியைக்கேட்ட சுப்புஎன்ற ஸ்திரீ, "உனக்குத் தெரியாதா? சொல்லாமல்போனால் வைத்துக்கொள்ளேன். அடா இழவே தன்னால் அகத்துக்குப்போனால் தெரிகிறது," என்று கோபத்துடன் சொன்னாள்.

பொன்னம்மாள் 'என்னங்காணும் அவர்கள் கல்யாணத்துக்காகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் நீர் என்ன இழவு என்கிறீரே' என்று விஷயமாய்ச் சொல்ல,

சுப்பு 'நான் இழவு என்றா சொன்னேன்? நன்றாயிருக்கிறது! அப்பா! கலகம்பண்ணி விடுவாய்போலிருக்கிறதே!' என்ன,

உடனே பொன்னம்மாள் 'என்ன தங்களுக்கு இவ்வளவுகோபம். நான் பொழுதுபோக்காக பரிகாசமாகச் சொன்னேன். அவர்கள் வீட்டில் கல்யாணம் என்று உமக்கு ஜோஷ்யம் (ஜோதிஷம்) அறிவீரா. அவர்கள் ஏதோ மதுரைப் பட்டணமாம். மைத்துனர்பெண்ணை *நிச்சயஸ்ராத்தம்பண்ண வந்திருக்கிறார்களாம்' என்றாள்.

சுப்புவுக்கு அவர்கள் இன்னார் என்று தெரியும். இருந்தாலும் பொன்னம்மாளைத்தூண்டினால் கமலாம்பாளுக்கும் அவளுக்கும் கலகம் உண்டுபண்ணி வேடிக்கைபார்க்கலாம் என்று எண்ணிக்கொண்டு மறுபடியும் அவள் 'ஒஹோ! உங்கள் புக்கஹத்துமாமா வரப்போகிறார் என்றார்களே, அவர் வந்திருக்கிறாரோ? நான் செவ்வையாய்ப்பார்க்கவில்லை. நான் என்ன! அவர்கள் வீட்டிற்கெல்லாம் போகிறேனா வருகிறேனா?' என, பொன்னம்மாள் "அவர்கள்தான்போலிருக்கிறது" என்று நீட்டிச்சொல்லி மெதுவாய் சூன் கொட்டிவிட்டு மௌனமாயிருந்தாள்.

* 'நிச்சயதார்த்தம்' என்பது சரியானவார்த்தை. பொன்னம்மாள் சமஸ்கிருதம் பேசுகிற பெருமையில் வார்த்தைகளின் வித்தியாசம் தெரியாமல் ஒன்றை ஒன்றாக மாற்றிவிட்டாள்.

சுப்பு இதுதான் சமயம் என்று கண்டு "என்ன! 'போலிருக்கிறது' என்கிறாய்; உன்புக்கஹத்துமாமா உன் அஹத்துக்கு வரவில்லையோ? உனக்கென்ன அவரைத்தெரியாதோ? நிரம்பநல்லவர் பிராமணன்" என,

பொன்னம்மாள், "எங்களஹத்துக்கு வரவேண்டும் என்று எந்தசாஸ்திரம் முறையிடுகிறது? உலகத்தில் நல்லவர்களுக்கென்ன பஞ்சமா. அதுவும் இப்பொழுது வரமாட்டார்: வந்தாலும் அதிகமாக முன்போல பேசமாட்டார். மனிதர்க்குள்ள நல்லபுத்தி இல்லாவிட்டாலும் அவர்களுக்குள்ள அச்சம் சுலபத்தில் போகிறேன் என்கிறதா?" என்றாள்.

சுப்பு "அதென்ன? அப்படிஎன்னவந்துவிட்டது! ஓஹோ! அவர்தானோ லட்சுமியை மதுரையிலே கொடுக்கக்காரணம்.—என்னடி! இப்படித்தான் செய்யலாமோ? நீயும் உன் ஓர்ப்படியாளும் இருக்கிற நேசத்திற்கு சிவனே என்று உன் தம்பிபிள்ளைக்குக் கொடுத்துவிடலாம். அவர்களுக்கென்ன, ஸ்திதியில்லையா, மதியில்லையா," என,

பொன்னம்மாள் "அவர்களுக்கேது ஸ்திதியும் மதியும், இவர்கள் வீட்டு வாசலிலேதான் இராப்பகலாகச்சோற்றுக்குக் காத்திருக்கிறார்கள். அவர்கள் வீடுகளிலெல்லாம் இவர்கள் ஏற்றிவைத்த விளக்குத்தான் பிரகாசம் என்று வடக்கேயெல்லாம் பிரஸ்தாபம். நான் ஒருத்தி இங்கேவந்து அகப்பட்டுக்கொண்டது போதாதா? இந்தப்பட்டிக் காட்டில் சம்பந்தம் செய்யாவிட்டால் ஊர்களில் அவர்களுக்கும் பெண்கள் கிடையாது; பாவம்! குழந்தை, பெண்ணும் சிவப்பில் ஊர்வசி!" என்று சொல்ல, இதுவரையில் நடந்த சம்பாஷணையை எல்லாம் காது கொடுத்து கவனித்துக் கேட்டிருந்த நாகு என்ற ஒரு ஸ்திரீ: "பணமாம் பணம். இந்தஊருக்குத்தான் அதிசயம். ஆலையில்லாவூரில் இலுப்பைப்பூச்சர்க்கரை. பொன்னம்மாள் மருமகனுக்குக்கொடுத்தால் என்ன! அடா, இல்லை; வைத்துக்கொள்ளட்டுமே. (பொன்னம்மாளைப்பார்த்து) நீதான் எழுதிவிடேன் இவ்விடத்து சம்பந்தம் வேண்டாமென்று உன் உடன்பிறந்தானுக்கு." என்றாள்.

அதற்குப் பொன்னம்மாள்: "சூ, இத்தனைநாள் தாமதமா? அன்றைக்கே டெலகிராப், அடித்துவிட்டேனல்லவா" என,

சுப்பு (தன்மனதுக்குள்) "அல்லவா என்ன, அள்ளவா, கூடையிலே அள்ளவா, எத்தனைசெருக்கு: தலை கழுத்திலேநிற்கவில்லை".—என்று சொல்லிக்கொண்டு, "முத்துஸ்வாமி உங்கள்பேரில் வைத்திருக்கிற அபிமானத்துக்கு ஜாதகம் பொருத்தமில்லையாம். இல்லாவிடில் உன்மருமகனுக்கே பெண்ணைக் கொடுப்பான்" என,

நாகு: "ஆமாம். ஜாதகம் ஒருசாக்கு, சகுனத்தைப் பார்த்துஎத்தனை இடங்களில் நடக்கவில்லை; என்னமோ 'வைத்தியன் பெண்டாட்டி சாகிறதில்லை, வாத்தியார்பெண் அறுக்கிறதில்லை' என்ற சம்பந்தமாய் இருக்கிறது. மனம்கொண்டது மங்கிலியம். மனப்பொருத்தம் இருந்தால் எல்லாப்பொருத்தமும் இருக்கும். நேற்று மீனாட்சிசுந்தரம் பெண்ணை சங்கரம் பிள்ளைக்குக் கொடுத்தது, என்ன ஜாதகத்தைப்பார்த்தார்கள். ஓஹோ என்று கல்யாணம் நடக்கவில்லையோ? அவர்களுக்கு என்ன குறைவு! 'நொண்டிக் கழுதைக்கு சருக்கினது சாக்கு'' என்றாள்.

பொன்னம்மாள் 'ஆங்கிலேவர்களுக்குள் (அங்கிலேயர் என்பதற்கு) ஜாதகந்தான் பார்க்கிறார்களோ' என,

சுப்பு "யார் ஆங்கிலேயர்?" என, பொன்னம்மாள் சிரித்துக்கொண்டு "ஆங்கிலேவர் என்றால் வெள்ளைக்காரர்" "அவர்களுக்குள் என்ன ஜாதகம் பார்க்கிறார்கள்?" என்றாள்.

சுப்புவும் நாகுவும் "ஆ! அவர்களும் ஜாதகம் பார்க்கத்தான் பார்ப்பார்கள்." என,

பொன்னம்மாள் இவர்களுடைய மூடத்தனத்தைக்கண்டு சிரித்துக்கொண்டு 'அவர்கள் ஜோஷ்யத்தையே நம்புவதில்லை' என,

நாகு 'ஸோஸியம் அவர்களுக்குத்தெரியாதா?' என்றுகேட்டாள்.

பொன்னம்மாள் 'ஸோஸியமா!' என்று இடி இடி என்று சிரித்துவிட்டு 'ஜோஷ்யம் (ஜோஸ்யம் அல்லது ஜோதிஷம் என்பது சரியானபதம்) என்று சொல்லுவார்கள். நீங்கள் பேசுவது சூத்திரவசனமாயிருக்கிறதே' என,

நாகு கொஞ்சம்வருத்தத்துடன் 'நாங்கள் படியாதவர்கள், எதோடு கூட்டு' என்றாள். உடனே சுப்பு பொன்னம்மாளைப்பார்த்து:

'அது கிடக்கட்டும். இப்பொழுது நான் என்ன, ஒரு சகுனத்தைப்பார்த்து உன் மருமகனுக்கே கட்டிவிடலாமே' என,

பொன்னம்மாள் "ஊரிலுள்ள தெய்வங்களுக்கு எல்லாம் நமஸ்காரம். இனி சர்வதேவ, வேண்டாம். ஆயிரம்பொன்கொடுத்துப் பெண்ணைக்கட்டினாலும், வேண்டாம். அப்படி மானம்கெட்டவர்களல்ல நாங்கள்." என்றாள்.

சுப்பு "உன் அகமுடையானிடம்சொல்லி ஏற்பாடுசெய்தால் செய்யலாம்" என,

பொன்னம்மாள் 'ஆ, எவ்வளவடா என்றாளாம். கேட்கிறதெல்லாம் அவர் சொல்தான். இவர்கள் யாரோ, அவர்கள்யாரோ', என்றாள்.

நாகு 'அதென்ன அப்படி சொல்லுகிறாய். முத்துஸ்வாமி அப்படி நினைப்பவனல்ல. உன்பிள்ளை சுந்தரத்தை கண்ணுக்குக்கண்ணாய் வளர்க்கிறானே; காற்றடிக்க சஹிக்கிறதில்லையே' என,

பொன்னம்மாள் " அதற்கென்ன, பிள்ளை வேண்டியிருக்கிறது, சுவாமி கண்விழித்துப்பார்க்கவில்லையே; அதற்கு யாரிடம் முட்டிக்கொள்வது. என்பிள்ளையைக்கூட செல்லம் கொடுத்து தாய்க்குப்பிள்ளையாகாமல் 'கைம்பெண்வளர்த்த கழிசிறை' எனக் குட்டிச்சுவரிலும் கேடுகெட்டவனாய்ச் செய்தாயிற்று." என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு அவ்வார்த்தையாய் 'புருஷர் கைம்பெண்' (கைம்பெண்=விதவை) என்றாள். எனவே சுப்புவுக்கு வந்த சந்தோஷத்திற்கு அளவு இல்லை. 'இப்படிப்பட்டவார்த்தைக்காகத்தான் இவ்வளவுநேரம் காத்தேன்' என்று எண்ணிக்கொண்டு துணிமூட்டைகளைக் கட்டிச் சுருட்டிக்கொண்டு வீட்டிற்குப்புறப்பட்டாள்.

வீட்டில் குடத்தை இறக்கினதுதான் தாமதம். சாப்புடவையுடனேயே ஒரு எருமுட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு கமலாம்பாள் வீட்டை நோக்கி அடுப்பு நெருப்புக்காகப்புறப்பட்டாள். எதார்த்தத்தில் தன்வீட்டிலேயே நெருப்பு இருந்தது. ஆனால் பொன்னம்மாள் சொன்னவார்த்தைகளைக் கமலாம்பாளிடம் ஒன்றுக்குப்பத்தாய்ச் சொல்லவேண்டியது அதியாவசியகமாயிருந்தது.

சுப்பு அப்படி அதிக கெட்டவள் அல்ல. நல்ல சுகைக்குணமுள்ளவள். மனிதர்மேல் அபிமானமுள்ளவள். மற்ற நாட்டுப்பெண்கள் தங்கள் மாமிமாருடன் சண்டை செய்வதைக்காட்டிலும் இவள் தன் மாமியாருடன் அதிகமாகச் சண்டை செய்வதில்லை. சுக்கிரவாரம், வருஷப்பிறப்பு முதலிய நாட்களில் தன்மாமியார் என்னசொன்னாலும் அவளுடன் சண்டைசெய்யமாட்டாள். ஆனால் மறுநாள் வட்டியும் முதலுமாய் யுத்தம்நடக்கும். சில ஸ்திரீகளைப்போல் குடும்ப யுத்தங்களில் அவள் இருபது வருஷத்திய குற்றக்கணக்கை யெடுத்துக் கூறுவதில்லை. பதினைந்து வருஷத்திற்குமுன் ஒருதினத்தைச்சொல்லி அன்று உனக்கும் உன்மாமியாருக்கும் என்ன நடந்தது என்றால் அவள் திட்டமாய்ச் சொல்ல முடியாது. ஆனால் பதினைந்து வருஷத்திற்கு உள்ளாக இருந்தால் சகலசங்கதிகளுக்கும் அவள்மனதில் பதிவு ஏற்பட்டிருக்கும். ஆகையால் பதினாலுவருஷத்திற்குமுன் அவள்மாமியார் அவளை 'முட்டாள்' என்று வைத அன்றைக்கு நடந்த சரித்திரத்தைச் சொல்லச்சொன்னால், அன்றைக்கு இன்னகறி, இன்ன கூட்டு, மோர்புளித்ததா, புளிக்கவில்லையா, இன்ன துவையல், யார் சமையல், அதில் இன்னகுற்றம், என்பதை நிர்ணயமாய், அப்பீலுக்கிடமி



ல்லாமல், சொல்லக்கூடிய திறமை அவளுக்குண்டு. இங்கிலீஷ் படிப்பவர்களுக்கு சுப்பம்மாளுடைய ஞாபக சக்தியில் பத்தில் ஒரு பங்கு இருந்தால் எம். ஏ., எம். எல். பரீட்சைகளில் நிச்சயமாய் தேறிவிடலாம். சுப்பம்மாளுக்கு யார்வீட்டிலாவது கலகம் நடந்தால் போதும்: தனக்கு சாப்பாடுகூட வேண்டாம்.

பகல் பன்னிரண்டுமணிக்கு, அவள்வீட்டில் ஒரு காங்கிரெஸ் மகாசபை கூடும். அது சாயந்திரம் 6-மணிக்கு ஓய்ந்து மறுபடி இரவு 8-மணிக்குக்கூடும். அதற்கு விடுமுறைநாளே கிடையாது. அம்மகாசபைக்கு சுப்பம்மாள்தான் கனம்பொருந்திய அக்கிராசனாதிபதி அவர்கள். அவளுக்கு அந்த கவுரவ பட்டத்தை பகிரங்கமாகக் கொடுக்காவிட்டாலும் அப்பட்டத்திற்குரிய அதிகாரத்தை அவள் அனுபவிப்பதுமன்றி அதற்குரிய மரியாதையையும் எல்லாரும் முறுமுறுக்காமல் அவளுக்குச்செலுத்திவந்தார்கள். அந்தமகாசபைக்கு ஏதாவது சமாசாரப்பத்திரிகை உண்டோ என்று சிலர் ஆவலுடன் வினவலாம். ஆனால் அச்சிலடங்காத அனேகசங்கதிகளும் அச்சில்போடக்கூடாத அனேக ரஹஸியங்களுமே அந்த சபையில் முக்கியமாய் நடந்தேறி வந்தபடியால் அதற்கு சமாசாரப்பத்திரிகை ஒன்றும் கிடையாது. அதற்குபதிலாக சமாசாரஸ்திரீகள் என்று சிலர் உண்டு. அவர்களுடைய வேலை என்னவென்றால் பொழுது விடிந்ததுமுதல் அஸ்தமிக்கிறவரையில் ஊரைச்சுற்றி குறைந்தது மூன்றுதடவை சந்துபொந்துகள் பாக்கிவிடாமல் காற்றைப்போல் நுழைந்து கிராமப் பிரதட்சணம் செய்து, யாராவது புதிதாய் அந்த ஊருக்கு வந்தாலும் சரி, யாரஹத்திலாவது இரைச்சல் கேட்டாலும் சரி, யார் இரஹஸியம்பேசினாலும்சரி, யாராவது சிரித்தாலும் சரி, அழுதாலும் சரி, எங்கே என்ன நடக்கிறது என்று ஜாக்கிரதையாய் கவனித்து, தேனீக்கள் பற்பல இடங்களிலும் திரிந்து தேன்திரட்டி எல்லாம் ஒருமித்து உண்பது போல் தங்களுடைய சமாசாரச் சரக்கு மூட்டைகளை, அந்த வம்பர் மகாசபையில், அச்சபையின் அபிப்பிராயத்திற்கு அவிழ்த்து ஆஜர் செய்யவேண்டியதே. இந்த உத்தியோகஸ்தர்களுடைய சாமர்த்தியம் அதியற்புதமாயிருக்கும். முன்னொரு காலத்தில் ஸ்பானியா முதலிய கிருஸ்தவதேசங்களில் ஓர் மத சம்மந்தமான கச்சேரி இருந்தது. அதன் உத்தியோகஸ்தர்களுடைய தொழில், சாமானியமாய் உத்தியோக சின்னங்கள் ஒன்றுமில்லாமல் ஒருமனிதனிடத்து சஹஜமாய்ப் பேசுவதுபோல பேசி, சர்க்கார் மதத்துக்கு அணுவளவேனும் விரோதமாய் அவன் பேசினாலும் சரி, நினைப்பதாகக் காணப்பட்டாலும் சரி, அவனை கச்சேரிக்கு இழுத்துவிடுவதே. தந்திர சக்தியில் அந்தப் பிரபலமான உத்தியோகஸ்தர்கள் கூட இந்த வம்பர் மகாசபையின் சமாசார ஸ்திரீகளுடைய பாததூளியின் விலைபெற மாட்டார்கள். சாம (சமாதானம்), பேதம் (விரோதம்), தானம், தண்டம் (தண்டித்தல்) என்ற நான்கு உபாயங்கள் தான் சாஸ்திரம் சொல்லுகின்றது. இவர்களுக்கோ அவ்வுபாயங்களை தனித்தனி உபயோகிப்பதன்றி சாமபேதம், சாமதானம் என இரண்டிரண்டாயும், சாமபேததானம், சாமபேததண்டம் என மும்மூன்றாயும் ஆக 20 விதமாக, உபயோகிக்கக்கூடிய சக்தி உண்டு. இராஜ்ஜியமாளும் மந்திரிகள்கூட, இவர்களிடத்து இரண்டொருமாதம் சிட்சைபெற்றுக்கொண்டால் நலமாயிருக்கும். அவர்கள் அறியாத பழமொழி இனி ஒளவையாருக்கும் தெரியாது. எவ்வித தந்திரமுள்ள மீனாலும் தூண்டில், வலை இவைகளால் அவைகளை எப்படிப் பிடிக்கிறார்களோ அப்படி ஸ்திரீயோ, புருஷனோ, யாவராயினும்சரி, அவர்கள் எவ்வளவு தந்திரிகளானாலும் சரி, அவர்களிடத்துள்ள சங்கதி எவ்வளவு ரஹஸியமானாலும்சரி, அதை இந்த உத்தியோகஸ்தர்கள் கிரஹிப்பது திண்ணம்.

இவ்வாறு கிரஹிக்கிறசக்தி மட்டுந்தான் அவர்களுக்குண்டென்று நினைக்கவேண்டாம். கற்பனாசக்தி குறைந்த நமது தமிழ் வித்வான்கள்போல ஒருவர் சொன்னதையே சொல்வதில் அவர்களுக்குச்சற்றேனும் திருப்தியில்லை. பொய்யை நிஜமாக்குவதிலும் நிஜத்தைப் பொய்யாக்குவதிலும், நரியைப் பரியாகவும் (பரி=குதிரை) பரியை நரியாகவும் மாற்றிய பரமசிவனைக்காட்டிலும் சமர்த்தர். கண்ணாபின்னா என்னாமல் கல்லும்புல்லும் உருகப்பேசுவர். ராமாயணத்தை ஒன்றுக்குப்பத்தாய்ச் சொன்ன கம்பரினும் கற்பனாசக்தியில்சிரேஷ்டர் இவ்வம்பர். வியாசருஷி செய்த புராணம் பதினெட்டே. இவர்களோ வீடுதோறும் ஒரு ஸ்தலபுராணம் சிருஷ்டிப்பர். அன்பு, புத்தி, சித்தம் இவற்றை மாறுபடச் செய்வதில் 'நடுவேனிற்கனவு' என்ற நாடகத்தின் 'பக்' என்ற குட்டிப்பேயிலும் சிறந்தவர்கள். இச்சமர்த்தர்கள் தங்களைத் தாங்களே உத்தியோகஸ்தராக நியமித்துக்கொள்ளுவார்கள். இவர்கள் தாம் அம்மகாசபையின் மகா அங்கத்தினர்.

இவ்வம்பர் மகாசபையின் அக்கிராசனாதிபதியாகிய சுப்பம்மாளை கமலாம்பாள்வீட்டிற்கு நெருப்பு வாங்க வந்தவிடத்தில் இவ்வளவுகாலம் கௌரவக் குறைவாய் நிறுத்திவைத்த குற்றத்தை இதைப்படிப்பவர்கள் தயவுசெய்து மன்னிக்கவும். எங்கே சுப்பம்மாளை சாதாரண சுப்பம்மாள் ஆக நினைத்து விடுகிறார்களோ என்றுபயந்து அவளுடைய அந்தஸ்தையும் அதிகாரத்தையும் விஸ்தரித்து எழுதலானேன். சுப்பம்மாள் திண்ணையில் உட்கார்ந்திருந்த கிருஷ்

ணையர், ராமசுவாமி சாஸ்திரிகள் இவர்களைக்கண்டு நாணினவள்போல், ஓரமாக ஒதுங்கி மேற்புடைவையை இழுத்துப் போர்த்திக்கொண்டு, வெகு மரியாதையாய் தலைகுனிந்து உள்ளேசென்று சமலாம்பாளைநோக்கி ஏதோ இரஹஸியம்சொல்பவள்போல் மெதுவாய் "உங்கள் மாமாவும் அவர் சம்பந்தியுமோ?" என, கமலாம்பாள் "வாருங்கள்," என்று சொல்லி, "அவர்கள்தான். இன்றுதான் வந்தார்கள்" என்றாள். (இன்னும் வரும்.)

**பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர். பி. ஏ.**

## *பிராசீன கானம்.

(நமது பார்வைக்கு வந்த புஸ்தகம்.)

இளைப்பாற்றும் விநோதங்களிற் சங்கீதம் மிகவும் மனத்திற்கடுத்தது. இம்மண்ணுலகத்திற்கும் விண்ணுலகத்திற்கும் ஆதாரமாயிருப்பதும், நன்னடக்கைக்குரிய உணர்ச்சியைப்பயிற்சிசெய்யத்தக்கதும், இவ்வுலகத்தை மறந்து மறுஉலகத்தை யெண்ணச்செய்வதும், நம்முடைய நினைவுகளை மனத்தை விட்டுப் பறக்கச்செய்து விண்ணுலகவாசிகளாகிய அழிவின்மையோர்களுடன் கைபிடித்து உலாவச்செய்வதும், இன்னும் பிரியம், அன்பு, நேசம் இவற்றினையெல்லாம் அதிகரிக்கச்செய்யும் கருவியும் இச்சங்கீதமேயாம்.

2. ஆங்கிலத்தில் டிரைடன் (Dryden) என்னுங் கவிஞரியற்றிய 'அலக்ஸாண்டர்ஸீஸ்ட்' (Alexander's Feast) என்னும்பாட்டில் இச்சங்கீதத்தின் சக்தி நன்றாய்விளங்கும். இப்பாட்டில் எங்கெந்த ரசங்கள் பிரதானமோ அந்தந்த ரசங்களுக்குத் தகுந்தபடி அலக்ஸாண்டர் மனதுவேறுபடும். வீரரச சமயத்தில் தான்யுத்தம் செய்வதாய்ப் பாவனைசெய்வான். சோகரச சமயத்திற் கண்ணீர்சொரிவான். சிருங்காரரச சமயத்தில் தன் மனைவிஸ்தனங்களில் விழுவான். இப்படிமனத்தை உருக்கச்செய்யும் சங்கீதம் ஆதிகாலமுதல் ஜனங்களுக்குப் பிரியகரமாக வேயிருந்துவருகிறது. ஜுபல் (Jubal)† என்பவன் சங்கத்தை கோஷிக்கச்செய்தபொழுது கேட்டிருந்த ஜனங்கள் தெய்வலோகத்து சப்தமோவென்று நினைத்து அச்சப்தத்தை ஆராதிக்கத் தொடங்கினார்களென்றும், ஸிஸிலியா (Cecilia) என்பவள் தன் வாத்தியத்தை வாசிக்கத்தொடங்கினபோது கேட்டிருந்த தேவதூதனொருவன் மண்ணுலகத்தை விண்ணுலகமென்றெண்ணி யிறங்கினனென்றும், ஆர்பியஸ் (Orphans) என்பவன் தன் வாத்தியத்தை முழக்கினபொழுது மரமட்டைகளெல்லாம் அச்சுககரமான சப்தத்தைப் பின்பற்றிப் போயினவென்றும், ஐரோப்பியநாடுகளிலும்; அதிக சுரோ மனதுள்ள விசுவாமித்திர மஹாருஷியின் நேத்திரத்தைத் திறக்கச்செய்ததும் இவ்வானந்தகரமான சப்தமே என்றும், கைலாசகிரியைப் பெயர்த்தபோது சிவபெருமான் பாதத்தால் நசுக்குண்டு அவஸ்தைப்பட்ட ராவணனும் விடுதியடைந்ததற்குக் காரணமும் இக்கானந்தானென்றும் நமதேசங்களிலும் கூறுவர்.

3. கொஞ்சகாலமாக இச்சங்கீதம் துர்விஷயங்களிற் பிரயோகிக்கப்பட்டுச் சங்கீதத்தின்பேரில் ஒருவிதமான அருசியை ஜனங்களுக்கு ஏற்பட்டுவிட்டது. சங்கீதப்பயிற்சியும், துர்நடக்கையும் அநேகமாய்த் தங்கை தமக்கைபோலக் கூடிவாழுகின்றன. இச்சங்கீதத்தையும், துர்நடக்கையையும் வேறுபடுத்தினவரும், சங்கீதத்திற்கு கனத்தையும் மஹத்துவத்தையும் கொடுத்தவரும், நமக்குத்தெரிய சங்கீத சாகரத்தை ஆராய்ந்து பார்த்துவருமாயிருந்த மஹாநுபாவர் ஒருவரோ. அவர் பிரமஸ்ரீ **மஹாவைத்தியநாதையரவர்க**ளல்லவோ? ஜனங்களே! நாமெல்லோரும் மஹாவைத்தியநாதையரவர்கள் பாதையிற்செல்வோமாக! சங்கீதத்திற்கு இப்பொழுது இருக்கிற மஹத்துவக்குறைவைப்போக்கி, அதைக் கனப்படுத்தி, சற்பாத்திர விஷயங்களிற் பிரயோகித்து, மேன்மேலும் விருத்திக்குக் கொண்டு வருவோமாக! சங்கீதசாகரத்திற் பிரயாணம் செய்ய வழிதெரியாத ஜனங்களுக்குப் **பிராசீன கானம்** (Oriental Music) என்னும் கப்பலைச்செய்த மகா-ா-ா-ஸ்ரீ **ஏ. எம். சின்னசாமிமுதலியார், எம். ஏ.** அவர்களுக்கு வந்தனத்தைச் செலுத்தி அக்கப்பல்மூலமாகப்பிரயாணம் செய்து சங்கீதசாகரத்தை ஆராய்ந்துப்பார்த்துத், தியாகராஜையர், தீக்ஷிதர், சாமாசாஸ்திரியார், பட்டினம் சுப்பிரமணியையர், **இராட்டைப்பல்லவிச் சக்கரதான ஜகழக கனநய தேசிகவுநக்கிக் துன்றக்குடிக் கிருஷ்ணையர்** முதலான மஹான்களா லிறைக்கப்பட்ட மாணிப்பிரவாளங்களாகிய பாடல்களைப்பொறுக்கிச் சரியானபடி உபயோகப்படுத்துவோமாக! மகா-ா-ா-ஸ்ரீ சின்னசாமி முதலியாரவர்கள் செய்திருக்கிற ஏற்பாடு மிகவும் மெச்சிக்கொள்ளத்தக்கதேயாம். சத்சங்கீதமின்மையாகிய பஞ்சகாலத்திற் பிராசீனகானம் (Oriental Music) என்னும் விருந்தை அளித்தால் பசியுள்ள ஜனங்கள் விடுவார்களோ? விலாப்புடைக்கத்தின்று களிப்பார்களன்றோ?

4. இனியிதுகிடக்க, ஆதி, ரூபகம், திரிபுடை, ஜம்பைமுதலிய தாளங்களிற் பாடியபாட்டுக்களை ஏற்பாடின்றிக் குவிக்காமல், ஆதிதாளத்திலுள்ள பாட்டுக்களை வரிசையாகவும், ரூபகதாளத்திலுள்ள பாட்டுக்களை மற்றொருவரிசையாகவும், அப்படியே அந்தந்தத் தாளங்களிலுள்ள பாட்டுக்களை அந்தந்தப்படி வரிசையாசப் பிரசுரித்தாற் படிப்போர்களுக்குத்தாளம் நன்றாய்ப்பிடிபடும். சில கீர்த்தனைகளில் சிட்டாஸ்வரங்கள் இணிக்கப்பட்டிருக்கின்றன. இச்சுவரங்கள் கவிதாவினாற்செய்யப்படாமல் அவருக்குப்பின் வாழ்ந்தயாரோ ஒருவரினாற் செய்யப்பட்டுளவென்று சொல்லிக்கொள்வதுண்டு. அப்படிச் சொல்வதைப் பலபேர்கள் பலதினுசாய்ப்பாடுகிற விஷயமொன்றே நிசப்படுத்தும். உதாரணமாக "மரியாதகாதுரா" என்னும் கீர்த்தனையில் "பமபகாம" என்னும் ஸ்வரமுளது. இச்சுவரத்திற்கும், சில பேர்கள் பாடுவதற்கும் பேதமிருக்கிறபடியாலிது கவிதாவினாற் செய்யப்பட்டதன்றென்று நிதானிக்க இடமுண்டு. பிராசீனகானம் (Oriental Music) என்னும் புஸ்தகத்திலிருக்கும் ஸ்வரம் பின்வருவதாகும்:—

பமபகாம - ரிகமகாரிஸநிஸத - நீஸாநீபாதநிஸ-நிஸரி - நிஸரிகம - பதநிஸாரிஸகரி - மகரிஸநி - தநி-ஸரிஸாநிதபா-மகரிஸா-ரிகம. **வேறுவிதம்:**— பமபகாம-ரிகமகாரிஸநிதநிஸ - ஸரிகஸநிஸரிகஸா - ரிகம - பதநிஸ - ரிகமகாமகரிஸநிதநிஸ - பபாமகரி-ஸநிஸ - ரீகம.

ஸ்வரவிஷயத்தில் அவரவர்கள் மனோதர்மத்தின் வண்ணம் பாடுவார்கள். தியாகராஜையர் போட்ட ஸ்வரமானால் அதைமாற்றிப் பாடுவது உசிதமன்று. வேற்றுமனிதனாற்போடப்பட்டதானால் அதை இப்புஸ்தகத்திற் பதிப்பிப்பது நியாயமன்று. ஐரோப்பியக்குறிப்புடன் (European Notation) ஸ்வராக்ஷரத்தையும் அந்தந்த ஸ்தானங்களிற் குறித்துவிட்டால் மிகவும் இலேசாகக் கற்றுக்கொள்ளப்படும். நன்னடக்கை, நற்குணம், நன்றியறிவு, பயபக்தி இத்தன்மையான குணங்களைப்போதிக்கும் சத்கீர்த்தனைகளையே ராகதாளத்துடன் பதிப்பிக்கவேண்டியதேயொழிய "மிஞ்சி மிஞ்சி நடைநடக்கும்," "ஏண்டிகுட்டிதங்கமே" என்பனமுதலான வேஷாக் பாட்டுகளுக்கு இத்தங்கமான புஸ்தகத்திலிடங்கொடுக்கக்கூடாதென்பது எமது துணிவு.

5. ஜனங்களுடைய மனத்தைத்தியாகராஜையர் முதலானவர்கள்செய்த கீர்த்தனைகளினது ஆகருஷண சக்தியாலிழுக்கச்செய்த கருவியாகிய பிராசீன கானத்தைப்பற்றி யாவரும் நிரம்ப ஆனந்தமடைதல் வேண்டியதாவசியகம். இனி மற்ற பாகங்களும் (issues) நிர்விக்கினமாய்ப் பிரசுரம் செய்யப்பட்டுக், கொண்டகருத்து நிறைவேறும்படி சர்வஞ்ஞராகிய கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

**ம. சு. இராமசுவாமி ஐயர்.**

* Oriental Music in European notation, a monthly periodical by A. M. Chinnaswami Mudalier, M. A, with words in English, Telugu & Tamil characters, Nos 1 to 6 (8 pages of demy folio a number) Price Rs. 3.

* மாதமொருமுறை ஏ. எம். சின்னசாமி முதலியார் எம் ஏ அவர்களால் இங்கிலீஷ், தெலுங்கு, தமிழ் இப்பாஷாக்ஷரங்களில் ஐரோப்பியக் குறிப்புடன் பிரசுரிக்கப்படும் "பிராசீனகானம்" (நெ 1-6) விலை ரூ 3.

† The father of such as handle the harp and organ. Genisis. IV. 21.



## புருஷன் மனைவி சம்வாதம்.

(மார்ச்சுமாசத்துச் சஞ்சிகையில் வந்ததின் தொடர்ச்சி.)

புருஷன்.—பெரியோர்களைப்பற்றிக் குறைவாகநான் ஏதாகிலும் சொல்லுவது தர்மமல்ல. அவர்கள் அறியாமையினால் பட்டதுன்பம் அதிகம். அவர்கள் பட்டஅடியும் கேட்டசொல்லும் நீ ஒரு நாள்கூட சகிக்கமாட்டாய். மனுஷ்யர்களுடைய நீதியும், முன்பின் ஆகவேண்டிய காரியங்களும்தெரியாமல் தாங்களும் வருந்தினார்கள்; அயலாரையும் அவசியமின்றி வருத்தினார்கள். படித்திருக்கும் பட்சத்தில், குடித்தனம் இன்னும் செழிப்பாயும் ஒற்றுமையாயும் இருக்கும்.

மனைவி.—மனுஷியாளுடைய குணந் தெரியாமல் என்ன மோசம் போய்விட்டார்கள்.

புருஷன்.—உன்னை இவர்கள் வீணில் படுத்தி இருக்கிறார்களென்று நீயேஎனக்குப் பலதடவை கண்ணும் கண்ணீருமாய்ச் சொல்லியிருக்கிறாய். அப்படி அவர்கள் படுத்தியது, வேணுமென்று அல்ல. ஞானக்குறைவின் நிமித்தம். சிறுவர்களுடைய குணத்தை அறிந்திருப்பார்களாயின், உன்குற்றங்களைப் பாராட்டாமல் உன்னைச் சுகமாய் நடத்தியிருப்பார்கள்.

மனைவி.—லோகம் என்றால் நாலும் இருக்கிறதுதான். ஒருவர் எப்போதும் ஒரேமாதிரியாய் இருப்பார்களோ.

புருஷன்.—நாலும் நல்லதாய் இருந்தால் ஆகாதா. வீண்செலவுசெய்து, வீண்பேச்சுகள் சொல்லி விரோதம் விளைவித்துக்கொண்டு இருவர் மனதும் புண்பட்டு சுகத்தைக் கொன்றுகொண்டு இருப்பதைவிட்டு, யுக்தி புத்தியோடும் ஈவு இரக்கத்தோடும், வினயத்தோடும் இதுவரையில் வாழ்ந்திருந்தால் நம்முடைய வாழ்க்கை எவ்வளவு பெருமையாயும், சந்தோஷமாயுமிருக்கும். நீ எந்தாயின்பேரில் குற்றம்சொல்வ

தும், அவள்உன்பேரில் பழிபோடுகிறதும்: ஒருபுரம் பெற்றதாய்; மறுபுரம் கொண்ட பெண்டாட்டி; இப்படியாக பாக்குவெட்டியின் நடுவில் அகப்பட்ட பாக்குப்போல நான் கஷ்டப்பட்டுஅடைந்த மனக்கவலையை அளவிட முடியாது. உரலுக்கு ஒருபுறம் அடி, மத்தளத்துக்கு இருபுறமும் அடி. நீ படித்து புருஷர்கள் வெளியில் சம்பாதிக்கும் வழியில் அடையும் கஷ்ட நிஷ்டூரங்களை அறிந்திருந்தால், உன்னால் எனக்குக் கவலை நேரிட்டிருக்காது. என்னைச் சேர்ந்தவர்களை மனஸ்தாபமின்றி கொண்டு போயிருப்பாய்.

மனைவி.—என்னைக் கலியாணஞ்செய்துநீங்கள் படுகிற துன்பம்ரொம்பத்தான். மாமியாரும்நாட்டுப்பெண்ணும் மல்லுக்கு நிற்கிறோம். இதைவிட இன்னம் பொறுமையாய் பூமியில் மனுஷாள் இருக்கமுடியுமோ.

புருஷன்.—மல்லுக்கு இன்னம் கச்சைகட்டிக்கொண்டு வெளியிலே வரவில்லை; அது ஒன்றுதான் பாக்கி, மற்றப்படி எல்லாம் ஆய்விட்டது.

மனைவி.—இன்னும் எப்படி அடங்கியிருக்கிறது—எனக்குத்தான் தெரியவில்லை. உள்ளதைச்சொன்னால் யாருக்கும்கோபம். எது எக்கேடுகெட்டால் எனக்கென்ன என்று சும்மா இருந்தால் நல்லவள். எடுத்துக்காட்டினால் எல்லாருக்கும் பொல்லாதவள். இனிமேல் யார்கொட்டினாலும், எவாள் அழித்தாலும் நான் ஏனென்று கேட்கிறதில்லை.

புருஷன்.—நீயோ, மாமியாரும் பாட்டியும் வீணாய் வாரி விடுகிறார்களென்று ஜாடைமாடையாய் அவர்கள்பேரில் குற்றஞ்சொல்லுகிறாய். அவர்களோ, உனக்கு என் ஜனங்களைக்கண்டால் ஆகிறதில்லை: உன்னைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு தின்று அழித்தாலும் சரியாயிருக்கு, கணக்குத் தெரிகிறதில்லை என்கிறார்கள்.

மனைவி.—எங்கள் பிறந்தவூர்க் காக்கைகூட இங்கே எட்டிப்பார்க்கிறதில்லை. தங்கை ஸம்பூரணம் புக்ககம்போய்விட்டாள். ஆத்தில் அம்மாளுக்கு துணை ஒருவருமில்லை. மூன்றுகட்டு வீடு. மூன்றும்கட்டிலிருந்து கூப்பிட்டால் முதல் கட்டில் காதுகேளாது. திருடன்வந்து மென்னைப்பிடித்தாலும் கேள்விமுறையில்லை. பிரமராக்ஷஸிமாதிரி அம்மாள் தனியே இருக்கவேண்டியிருக்கிறது. ஒருமாஸத்துக்கு அழைத்துக்கொண்டுவந்து வைத்துக்கொள்ள ஆசையாயிருக்கிறது. எட்டுஅடி உங்காத்தில்வைத்து ஒன்பது வருஷமாச்சுது. முன்னே வந்தபோது உங்களுடைய அத்தை 'துடிகேடி வந்துவிட்டாள்' என்று சொன்னாளாம். அதுமுதல் இந்த திக்கு எட்டிப்பார்த்தவளல்ல.

புருஷன்.—என்னுடைய தாயாகிலும், பாட்டியாகிலும் சொன்னார்களா. வழியில் போகிறவர்கள் ஏதோ ஓர்வார்த்தை சொன்னார்களென்று என்னிடத்தில் விரோதப்படலாமா. வாராமல் இருக்கலாமா. இரண்டொருமாஸகாலம் வந்திருப்பதற்கு என்ன ஆட்சேபனை.

மனைவி.—அத்தை தானே சொன்னாளோ! சொல்லச்சொன்ன பிறகுதான் சொல்லியிருப்பள். என் சனங்கள்வந்துகூடி வீட்டை அழிக்கிறதென்று உங்களம்மா சொல்லும்பொழுது மானவெட்கமுள்ளவர்கள் உள்ளே நுழைவார்களோ. எங்கள் அந்தஸ்து அவ்வளவு உங்களுக்குத் தாழ்ந்துபோகவில்லை.

புருஷன்.—வேறே சிலபேர்களைப்பற்றிச் சொல்லிய வார்த்தையே அன்றி உன்தாயாரைப்பற்றிச் சொல்லியதல்ல.

மனைவி.—என் கூடப்பிறந்த ஜனங்களை எல்லாம் இல்லை என்று முழுகிவிட்டு இருக்கிறேன். 'வந்தையா, வா' என்று நான் ஒருவரைஅழைக்கிறதில்லை. இங்கே நுழைகிறதற்கு யார்தான் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தனை நாளைக்காக இந்தவாசற்படி கிழக்கோ மேற்கோ என் தமக்கைக்குத் தெரியாது. தீபாவளிக்குவந்து உங்கள் மைத்துனன் அவன் ஸம்சாரம் குழந்தைகளுடனே புஷ்யத்துக்கு ஊருக்குப் போனபொழுது, அவனிடத்தில் சொல்லியனுப்பிவித்தேன். 'சங்கராந்தி உத்சவம், தேரும் திருநாளுமாயிருக்கு, பத்துநாளைக்குத் தமக்கையை அனுப்பும்படி அத்திம்பேரை உத்திரவு கேளு' என்று சொல்லி யனுப்பினேன். அவர் என்னைப்போல் ஓர் அசடு. நாலுகுழந்தை. மூத்தது பெண்; 13 நிரம்பி 14-வயது ஆய்விட்டது. ஆளவயதுக்கு அடையாளத்தைக் காணோம். பேயோ பிசாசோ பிடித்து உடம்பை உருக்குகிறது. வீட்டில் உரல்கட்டைபோல நாத்தனார் ஒருத்தி இருக்கிறாள். ஒதிபெருத்தால் உத்திரத்துக்குஉதவுமோ. அடுப்பங்கரைக்குப்போனால், உடம்புக்கு ஆகிறதில்லையாம். அவளிடத்தில் குழந்தைகளை எப்படி விட்டு வருகிறது. சோற்றுக்குத் திண்டாடுமே. நாளை எது எது எங்கே போகுமோ! அதுகளுக்குத்தான் யார் இருக்கிறார்கள். அதுகளையும் அழைத்துக்கொண்டுவா, பத்துநாளைக்கு வேடிக்கைபார்த்துவிட்டுப்போகலாம்.—என்று சொல்லி யனுப்புவித்தேன்.



ஸங்கராந்திக்கு எட்டுநாள் முன்னேவந்தாள். வந்தவேளை என்னவேளையோ ஒன்று இல்லாவிட்டால் ஒன்று படுத்துகிறது. போகச்சரிப்படவில்லை. வியாதி படுத்துவதைவிட மனுஷியாள் அதிகமாய்ப் பிடுங்கிவிடுகிறார்கள்.

புருஷன்.—ஏன்சரிப்படவில்லை. யாருக்கு என்ன வியாதி.

மனைவி.—உத்சவம் ஆனவுடனே ஊருக்குப்போகவேணுமென்று ஒருகாலால் நின்றாள். ஆம்படையான் கோபித்துக்கொள்ளுவர், போகவேணுமென்று மூட்டையெல்லாம் கட்டினாள். போனால் எப்போ மறுபடியும் வரப்போகிறாய், வந்ததுதான் வந்தாய். இன்னும் பத்துநாளிருந்து குப்பிச்சிக்கு மந்திரம் பார்த்துக்கொண்டுபோ என்றேன். நம்மூர் சாமிகுருக்கள் ரொம்பகெட்டிக்காரன். கோடியாத்து அனந்தலட்சுமி இப்படிதான் தேய்ந்து துரும்பாகிக்கொண்டு வந்தாள். குருக்கள் ரக்ஷைகட்டினபிறகு இரண்டுதிரட்சியாகி வருகிறமாஸம் ஸீமந்தம்.—சரிதான்என்று மந்திரம்பார்த்தாள்.

புருஷன்.—எத்தனைநாள் குருக்கள் பார்த்தார். செலவுக்கு என்னசெய்தாள். என்னபிசாசு பிடித்திருக்கிறதாம்.

மனைவி.—மூன்று பிசாசு பிடித்திருக்கிறதாம், ஒன்றுபோனால் ஒன்று போகமாட்டேனென்கிறதாம். தினமும் சாயங்காலம் "மொக்கு" போட்டு ஒரு மண்டலம் பார்த்தான். செலவு ஒன்றுமில்லை. சொஸ்தம் பண்ணினபிறகு சேர்த்து வாங்கிக்கொள்ளுவன். அவனால் வஞ்சனையில்லை. ஆனமட்டும்தான் பார்க்கிறான். குப்பிச்சி உடம்புமாத்திரம் முன்னைக்கு இப்போ இளைத்துப்போயிருக்கிறது.

புருஷன்.—"மொக்கு"ப் போடுகிறதற்கு செலவு ஏதாகிலும் உண்டோ.

மனைவி.—விசேஷமாய் ஒன்றுமில்லை. மூன்று பிசாசுக்கு தினமும், மூன்றுபடிஅரிசி, ஆறுதேங்காய், 12 பழம், வெற்றிலைபாக்கு, சாம்பிராணி, கற்பூரம், அகண்டதீபத்துக்கு நெய். அரிசி, தேங்காய், பழம், நெய், நாலும் வீட்டிலேயே இருக்கிறது. மற்றைய சாமான்களுக்கு ஒரு அரைக்கால்ரூபாய், தட்சணைக்கு ஒரு அரைக்கால். தினமும் இரண்டு அரைக்கால்தான் செலவு.

புருஷன்.—அரிசி, தேங்காய் முதலியவை யாரைச் சேர்ந்தது.

மனைவி.—பிசாசுக்குப்பலிகொடுத்தது நமக்கென்னத்துக்கு. அவன்தான் கொண்டுபோகிறான். கையில் பணங்கொண்டுவந்தாள். உங்கள் பணத்தை எடுத்துக்கொடுத்துவிட்டேனென்று பயப்படவேண்டாம். அவ்வளவு சூடுசொரணை கெட்டுப்போகவில்லை. எங்களம்மா, எங்களுக்கு சோறுபோட்டு வளர்த்தாளேயொழிய, வைக்கோலைப்போட்டு வளர்க்கவில்லை. என்னைவிட என் தமக்கை ரோஸக்காரி; கொடுத்தாலும் விரலால் தொடமாட்டாள்.

புருஷன்.—குருக்கள் என்னசொன்னார் கடைசியில்.

மனைவி.—தாழ்த்து ஒன்று ஜபித்துக் கட்டவேணும், பிறகுதான் தெளியும் என்றான். தட்டான் வேலாயுதபத்தனிடத்தில் பொன் கொடுத்து ஒரு மாஸமாச்சுது. இன்றைக்குத் தருகிறேன் நாளைக்குத்தருகிறேன் என்று சால்ஜாப்பு சொல்லுகிறான். மற்றையவேளையில் போனால் வீட்டிலிருக்கிறதில்லை. தினமும் தமக்கை இருபது நாழிகைக்கு வெயிலில் அவன் கடைக்கு அலைந்துகொண்டிருக்கிறாள். அந்தப்பாவி கொடுத்த பாட்டைக்காணோம்.

புருஷன்.—தாழ்த்துக்குப் பொன் ஏது. தட்டானிடத்தில் எவ்வளவு கொடுத்து இருக்கிறாள். எத்தனை மாற்றுப்பொன்.

மனைவி.—நீங்கள் செய்துபோட்ட நகையில் திருடி, என்னக்காளுக்குக் கொடுத்துவிடவில்லை. சின்னக்குழந்தை அம்பிகைக்கு அவள் பாட்டி செய்துபோட்ட கைக்காப்பும், அரசிலையும் உள்ளேகிடந்தது. அதை அழித்துத் தாழ்த்து செய்யச் சொன்னேன். வந்தவுடனே குருக்கள் ஜபித்துக் கட்டிவிடுவான்.

புருஷன்.—எவ்வளவு மாற்று, எவ்வளவு பொன், தெரியுமா? அதைச்சொல்லு.

மனைவி.—எனக்குத்தெரியாது, தடைகட்டிக் கொடுத்திருக்கிறான். அதை அக்காள் பத்திரமாய் வைத்திருக்கிறாள்.

புருஷன்.—சந்தோஷம். தாழ்த்தை எவ்வளவுநாள் ஜபத்தில் வைக்கவேண்டும்.

மனைவி.—ஒரு பருவம் பூஜையோடுகூட வைத்தால் போதுமாம். காரியத்தை ஆரம்பித்து நடுவில் அரைகுறையாய் விடுவதில் பிரயோஜனம்? தமக்கைக்கு இங்கே இருப்புக்கொள்ளவில்லை. போகவேணுமென்று பறக்கிறாள். முள்ளின்பேரில் நிற்கிறாப்போல் இருக்கிறாள்; ஆம்படையா

ன் இதற்குள் பத்துத்தடவை சொல்லி யனுப்பிவிட்டாராம். ரக்ஷையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் ஊருக்குப்போகிறேன் என்று நேற்றையதினம் புறப்பட்டாள். மறுபடியும் நான் தான் வேண்டாம், புருஷனுக்கு கோபத்தோடு கோபமாயிருக்கட்டும், இருந்து பார்த்துக்கொண்டுபோ என்று சொன்னேன்.

புருஷன்.—முன்னமேயே இதெல்லாம் என்னிடத்தில் சொல்லப்படாதா? மந்திரத்தினால் என்ன பிரயோஜனம்? வைத்தியம் பார்த்தாலும் ஏதாகிலும் குணமுண்டாகலாம்.

மனைவி.—வைத்தியத்திலும் குணத்தைக்காணோம். தமக்கைவந்த இரண்டுமூன்றுநாளைக்கெல்லாம், வைத்திய வீரப்பனிடத்தில் காட்டினேன். வீரப்பா இந்தப்பெண் ஏன் இப்படி ஒட்டி உலர்ந்துபோகிறது; கையைப்பார்த்து உடம்பிலிருக்கிறதைச் சொல்லென்று கேட்டேன். மூலத்தில் அழல்கண்டு, கணைச்சூடு மாதிரியாய் ரத்தத்தில் கொதிப்பு இருக்கிறது, பிடித்து அரைமண்டலம் காலமே லேகியமும், சிந்தூரமும், சாயங்காலம் அடை கஷாயமும் சாப்பிட்டால் பிறகு குணந்தெரியுமென்று சொன்னான்.

புருஷன்.—அந்தப்படி ஏதாகிலும் செய்தாயா.

மனைவி.—சிந்தூரத்துக்கு இரண்டுரூபாய், லேகியத்துக்காக மூன்றுரூபாய், தலைக்குத்தயிலத்துக்கு ஆடின எண்ணெயில் இரண்டுவீசையும் இரண்டுரூபாயும் கொடுத்தேன். பத்துநாளைக்கெல்லாம்கொடுத்துவிட்டான். எட்டுநாள்விடாமல் பத்தியமிருந்து ஒன்றுவிட்டு ஒருநாள் தயிலந் தேய்த்து ஸ்நானம்பண்ணிக்கொண்டு மருந்தும் சாப்பிட்டுக்கொண்டு வந்தாள். அதற்குள் ஊரிலெல்லாரும் யந்திரம் பார் என்று சொன்னார்கள். பாக்கிமருந்து அப்புறம் சாப்பிடலாமென்று மந்திரம்பார்த்தது.

புருஷன்.—மருந்துக்குப் பணம் கொடுத்தது யார்?

மனைவி.—ஊருக்குப்போனவுடனே அக்காள் அனுப்பிவிடுகிறேன் என்றுசொன்னாள். நான் பக்கத்துவீட்டில் கடனாக வாங்கிக்கொடுத்தேன்.

புருஷன்.—அயலாரிடத்தில் கடன் வாங்குவானேன். என்னைக்கேட்டால் கொடுக்கமாட்டேனா. அயலார் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்.

மனைவி.—பணம் இருக்குமோ இருக்காதோ. நேரே கொடுத்தால் பிறகு வரமாட்டாது. கடன்வாங்கிக் கொடுத்தால் வந்துவிடுமென்று செய்தேன்.

புருஷன்.—நீ படித்தவளாயிருந்தால் இப்படியெல்லாம் புருஷனோடு சொல்லாமலும் கேட்காமலும் செய்வது பிசகு என்று தெரியும். நீ ஒரு பெரிய முட்டாள். காரியாகாரியம் கணக்குவழக்குத்தெரிகிறதில்லை. என்முன் நில்லாதே போ.

மனைவி.—உங்களுக்கு நான் எவ்வளவோ பயந்து நடக்கிறேன். நான் செய்கிற காரியமெல்லாம் விழலுக்கு நீர் இறைக்கிறாப்போல் முடிகிறது. நான் ஏன் சோற்றுக்குக்கேடாய் பூமிக்குப்பாரமாய் உயிரோடு இருக்கிறேன். பாழும் தெய்வம் நல்லவாளையெல்லாம் கொண்டுபோகிறது. என்னைக் கொண்டுபோகமாட்டேனென்கிறது. (அழுதுகொண்டுபோய்விட்டாள்.)

புருஷன்.—(தனிமையாக.) "குடும்பம் மிகவும் திறமாயிருக்கிறது. மனையாளுடைய தம்பி, அவன் ஸம்ஸாரம், இரண்டு குழந்தைகளும், ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மூன்றுமாசம் இருந்தார்கள். பிறகு தைமாசமுதல் அவள் தமக்கையும், அவளுடைய நான்கு குழந்தைகளும் ஸ்திரமாயிருக்கிறார்கள். வந்து மூன்றுமாசம் ஆயிற்று. இன்னும் இரண்டுமாசத்துக்கு அசைவதாய்த் தோன்றவில்லை. அரிசியில் இரண்டுமூட்டை, தேங்காயில் 300, பழத்தில் ஆயிரம், அகண்டதீபத்துக்கு 3 வீசை நெய், 5 வீசை பாக்கு, எல்லாமாக, குருக்கள்பற்று ஆய்விட்டது. விலைபோட்டால் ரூ 30-க்குமேல் ஆகிறது. எட்டுமாசத்துக்கு நாலுபேருக்கு ரூ 100-க்குக்குறையாமல் ஆகும். அம்மாவோ, தமக்கைகுழந்தைகளுக்கு, வெண்ணெயும், நெய்யும், தின்பண்டமும், தாராளமாய்ப்போடுகிறாள் என்று சொல்லுகிறாள். கணக்குப்பார்த்தால் இந்த எட்டுமாசத்துக்குள் ரூ 150-க்குமேல் ஆகிறது. என் தமையனார் பெண் வந்திருந்தபோது, வீண்செலவு ஆகிறதென்றுவிடாமல்முறையிட்டாள். அவள் தம்பி தமக்கை வகையார்கூடி அழிக்கிறது மனதில் படவில்லை. பந்துக்கள் பரிபாலனம் பண்ண வேண்டியதுதான். இந்த ஸ்திரீகள் யோகக்ஷேம சிரமத்தைச்சிறிதேனும் அறிகிறதில்லை. அசட்டுச் சாமர்த்தியத்தைத்தவிர வேறொன்றையும் காணோம். என் தகப்பன் தாயைச்சேர்ந்த பந்துக்களினால் இவ்வளவு செலவைக்காணோம். அவர்கள் என்கட்டுக்கு பயந்து ஒருவாறு நடந்தார்கள். என் மனைவியைச்சேர்ந்தவர்களோ எனக்குத்தெரியாமல் அனேக வியாபாரம் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். சொல்லப்போனால் ஜென்மவிரோதம் வரும்



போலிருக்கிறது. படிப்பில்லாத ஸ்திரீகள், பக்குவாபக்குவம் தெரிகிறதில்லை. சொன்னால் கூட அறிகிறதில்லை. நான் என்னசெய்யலாம். வீட்டுசுகம் வேணுமென்றால் வாயைத்திறவாமலிருக்க வேண்டியிருக்கிறது. அதிகமாய்ப் பேசினால் அனர்த்தம் விளைகிறது."

**ஆர். சக்கிரவர்த்தி அய்யங்கார், பி. ஏ**

## குடித்தனம் பண்ணுகிற மூன்று விதங்கள்.

3-வது வருமபடிக்கு மேலான செலவுசெய்தல்.

இப்படிச் சிலகாலம் சென்றபின்பு தர்மசீலன் வெகு நேர்த்தியான ஒரு பெரியவீட்டை கிரயத்துக்கு வாங்கினான். அது தன்னுடைய முக்கியசிநேகிதனாகிய செல்வக்குமாரன் வீட்டுக்கு அடுத்தவீடு. தர்மசீலனும் சத்தியவதியும் அந்த வீட்டுக்கு குடிப்போனவுடனே நம்மைப்பார்த்து எத்தனைபெயர் பொறாமைப்படுவார்கள் என்று நினைத்துக்கொண்டார்கள். செல்வக்குமாரன் பெண்சாதி ஒருநாள் வெகு பிரியத்துடனே தங்கள் இருவர் வீட்டுக்கும் நடுவேயிருந்த சுவற்றை கொஞ்சம் இடித்துவிட்டு ஒருகதவு வைத்துவிட்டால் விருந்துகள் செய்யும்போது இரண்டுவீட்டையும் ஒன்றாக செய்துபோடலாம் என்று சொன்னாள். அப்படியே தர்மசீலனும் கதவு வைத்துவிடவே தன் வீட்டையும் செல்வக்குமாரன் வீட்டைப்போலவே அலங்கரிக்கவேண்டியதாயிற்று. ஒருநாள் மாமா இவர்களைப் பார்க்கவந்தபொழுது "ஓ! ஓ!! இதென்ன ஒரு அரண்மனையைப்போலிருக்கிறதே" என்றார்.

சத்தியவதி.—குழந்தைகள் பெரியவர்களாகிவிட்டபடியால் முன்னிருந்தவீடு இடம்போதாதென்று நினைத்து இங்கு வந்துவிட்டோம்.

மாமா.—உன் குழந்தைகள் வெகு பெரியவர்களாகிவிட்டார்கள்போல் இருக்கிறது. முன்னிருந்தவீடு போதாதோ?

சத்தியவதி.—அது மிகவும் அசௌக்கியமாக இருந்தது. மேலும் வாடகையும் அதிகமாயிருந்தபடியால் வேறுவீடு வாங்கலாமென்றுநினைத்தோம். வாங்கியபிறகு தகுந்தபடி அலங்கரிக்கவேண்டியதாயிற்று.

மாமா.—வீட்டின்கிரயம் கொடுத்துவிட்டீர்களா ?

சத்தியவதி.—கிரயமா? என்? அதாவது—

மாமா.—சரி. அப்படியானால் சந்தோஷம்.

சத்தியவதி.—சற்றுநேரம் வெட்கத்துடனே மௌனமாகவிருந்துவிட்டு சொல்லுகிறாள்:—

"என் புருஷன் வியாபாரங்களில் சிலகாலமாய் அதிக லாபம் சம்பாதித்து வருகிறானென்று தங்களுக்குத் தெரியாதோ மாமா? வைத்தியம் செய்வதினால் வரும் வரும்படியினால் ஜீவிக்கிறோமென்று நினைக்காதேயுங்கள். தன் பெண்சாதிபிள்ளைகளை நம்மயலோர்களுக்குச் சமானமான ஸ்திதியில்வைத்து ரட்சிக்கவேண்டியது நம்முடைய கடமையென்று என் புருஷன் நினைத்துக்கொண்டிருக்கிறார்.

மாமா.—"அயலோர்களுக்குச் சமானமான ஸ்திதியாவதென்ன?—பிறர்களைப்போல் நாமும் டம்பமாயிருப்பதா? அவர்களைப்போல காலத்தை வீணில் கழிப்பதா? விலையுயர்ந்த வீடுகளில் வசித்து, இவ்வுலகத்தைத்தவிர வேறுலகம் இருக்கிறதென்பதை மறந்துவிடுவதா?" என்று சொல்லிவிட்டு வெகு அவசரமாய்ச் செலவுபெற்றுக்கொண்டு போய்விட்டார்.

மாமா சென்றபிறகு சத்தியவதி மனங்கலங்கி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள். தர்மசீலன் வீட்டுக்குவந்தவுடனே அவள் வருத்தமுற்றிருந்ததைக் கண்டு ஏனென்று விசாரிக்க சத்தியவதியும் சொன்னவுடனே, "ஏது, கிழவர் வரவர எதைப்பற்றியாகிலும் முறுமுறுத்துக்கொண்டே இருக்கிறார்" என்றான். ஆனால் சத்தியவதிக்கு இதனால் மனது சமாதானமாகவில்லை. மாமாவை வீட்டுக்குக் கொண்டுபோகும்படி வண்டியை அனுப்பாமல் போனோமே; அல்லது அவரை இங்கேயேயிருந்து சாப்பிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கலாமே. இருந்தபோதிலும் நான் எது செய்யக்கூடுமோ அதைச் செய்துவிட்டேன் என்று நினைத்துக்கொண்டாள்.

அன்றையதினம் இரவில் தர்மசீலனும் சத்தியவதியும் தங்களுடைய சிநேகிதர் வீட்டில் நடந்த விருந்துக்குப் போயிருந்தார்கள். திரும்பி வந்தவுடனே மாமா வெகு அசௌக்கியமாய் இருப்பதாகவும் இவர்களை உடனே அழைத்துவரும்படி சமாசாரம் அனுப்பியிருக்கிறாரென்றும் ஒரு வேலைக்காரி சொன்னாள். சத்தியவதிக்கு ஒரு திகிலுண்டாயிற்று. "அவ்வளவுதூரம் நடந்துபோனதினால் மாமாவுக்குத் தீங்குநேரிட்ட" தென்றாள்.

தர்மசீலன்:—(கெடிகாரத்தை எடுத்துப்பார்த்து) "ஒன்றரைமணியாகிறது. நான் போகத்தான் வேண்டுமோ" என்று சத்தியவதியைக் கேட்டான்.

சத்தியவதி:—"சந்தேகமென்ன நானும்வருகிறேன். போவோம் வாருங்கள்."

தர்மசீலன்:—"ஆடை ஆபரணங்களோடா வரப் போகிறாய், இதென்னபைத்தியம்" என்றான்.

ஆனால் சத்தியவதி போகத் தீர்மானித்துவிட்டபடியால் தர்மசீலன் ஆக்ஷேபிப்பதில் பிரயோஜனமில்லையென்று விட்டுவிட்டான். மாமா வீட்டுக்குச்சென்றுக் கதவைத்தட்டினவுடனே ஒரு ஸ்திரீ வந்து கதவைத்திறந்தாள். திறந்தவுடனே சத்தியவதி "மாமா எப்படியிருக்கிறார்" என்றுகேட்டாள். "இறந்துபோய்விட்டா" ரென்று அந்தஸ்திரீ சொன்னவுடனே உள்ளே ஓடினாள். கிழவர்முற்றிலும் மலசவற்றுத் தூங்குவதுபோல் படுத்திருந்தார். அதைப்பார்த்தவுடனே சத்தியவதிக்கு எப்படி மனம்துடித்தது! "என்னை தகப்பனைப்பார்க்கிலுமதிக பிரியம்வைத்து வளர்த்தமாமாவே" என்றுசொல்லியழுதுவிட்டுப் பிறகு அன்று சாயந்திரம் நடந்தசங்கதியை நினைத்துக்கொண்டு தன்னுடைய அஜாக்கிரதையினால்தான் இறந்துபோனாரென்று நினைத்து "எப்படி நேரிட்டதென்று சொல். வீட்டுக்கு வருகிறவரைக்கு முயிரோடிருந்தாரா" என்று வேலைக்காரியைக்கேட்டாள், பிறகு 'ஓ மாமா தங்களைக் கொஞ்சங்கூட நன்றியறிவும் விஸ்வாசமுமில்லாமல் நடந்துபோகும்படி செய்தேனே. இனி நேற்றைசாயந்திரம் திரும்பிவரவேணுமென்றால் வருமோ' வென்று கதறினாள்.

தர்மசீலன் அவளுடைய விசனத்தைத்தணிக்க முயன்றான். ஆனால் அவள் தன்னுடைய ஒரு வார்த்தையினால் அவர் நடந்துபோனதைத் தடுத்திருக்கலாமே யென்று அடிக்கடிநினைத்து துக்கப்பட்டாள். வேலைக்காரியை விசாரித்தபொழுது மாமா திடீரென்றெழுந்துவிட்டதாகவும், வீட்டுக்குத் திரும்பிவந்தபிறகு சாயந்திரமெல்லாம் சரியாயிருந்தவர் இரவில் ஒன்பதுமணிக்கு மாரில் கொஞ்சம் வலிக்கிறதென்றும் தர்மசீலனை யழைத்துவரவேண்டுமென்றும் சொன்னதாகத் தெரிந்தது. ஆனால் அந்தசமாசாரம் தர்மசீலனுக்குத் தெரிவதற்குமுன் அவர் இறந்துபோய்விட்டாரென்றும் தெரிந்தது. உடனே தர்மசீலன் "பார்த்தாயா சத்தியவதி, இந்தசமாசாரம் வரும்பொழுது நான் வீட்டிலிருந்தபோதிலும் பிரயோஜனமில்லாமல்தான் போயிருக்கும்" என்றான்.

மாமாவுடைய உயிலையெடுத்துப் பார்த்தபொழுது அவருடைய சிறியசொத்தை சத்தியவதியின் பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டதாக எழுதியிருந்ததுந் தவிர பின்னும் "இப்பொழுது என் மருமகனுக்கு என் சொத்தில் கொஞ்சங்கூட வேண்டியது அவசியமில்லையென்று நினைக்கிறேன். ஆனால் காலவசத்தால் அவனுடைய நிலைமை வேறுபட்டால் அவன் என்சொத்தில் வருகிறவரும்படி முற்றிலுமுயிருள்ளமட்டும் அனுபவித்துக்கொள்ளட்டும்" என்றும் எழுதியிருந்தது. மேலும் தன்னுடைய முக்கிய சிநேகிதனாகிய கைத்தொழிலாளி மருதமுத்துவை அந்த உயிலை நிறைவேற்றும்படி நியமித்திருந்தார்.

தர்மசீலன்:—(பரிகாசம்பண்ணுமாதிரியாக சத்தியவதியைப்பார்த்து) "நீயும் பணக்காரியாவாயென்று எனக்கிதுவரையில் தெரியாமல்போச்சுதே."

சத்தியவதி:—"என் பிரியமுள்ளமாமா தன்னிடத்திலிருந்ததையெல்லாம் எனக்குக் கொடுத்துவிட்டாரென்பது வாஸ்தவந்தான். ஆனால் நானவ்வளவு பாக்கியம்பெற பாத்திரனல்லள்."

தர்மசீலன்:—"அடிக்கடி இப்படிச்சொல்லிக்கொண்டு வருத்தப்படுவதில் பிரயோஜனமென்ன. நீ செய்யவேண்டியதில் எதைச்செய்யாமல் விட்டுவிட்டாய். நம்மோடுகூடவே வசிக்கவேண்டுமென்றுகூட அவரைக் கேட்டுக்கொண்டிருக்கிறாயல்லவா."

சத்தியவதி:—"ஆம், இருந்தபோதிலும் என்னோடுகூடவே வைத்துக்கொண்டு அவருக்குத் தகுந்த பணிவிடைகள் செய்துவந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். எப்பொழுதாவது ஒரு தடவையிலழைத்து விருந்து செய்வதில் பிரயோஜனமென்ன. நானிப்படிக்கெல்லாம் அலக்ஷியமாயிருந்துவிட்டதை அவரறியவில்லையென்று நம்புகிறேன்."

இப்படிக்கு பிசகுசெய்துவிட்டோமென்று நினைத்து சத்தியவதி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள். ஆகையால் அவளுக்கு ஒருவர் ஆறுதல் சொல்லவேண்டியதாயிருந்தது. ஆனால் தர்மசீலன் அடிக்கடி கடுகடுத்துக் கொண்டு "மாமாவினுயிலைப்பார்த்தாயா அதில் கைத்தொழிலாளியை நியமித்திருப்பது அவருடைய அபிப்பிராயத்தை நன்றாய் வெளிப்படுத்துகிறது. என் பிள்ளைகளுக்கு வரவேண்டிய ஆஸ்தியை கைத்தொழிலாளிகளிடமா ஒப்புவிக்கவேண்டும்" என்று சொன்னான்.

சத்தியவதி:—"அவன் வெகு யோக்கியனென்றும் எதார்த்தவாதியென்றும் அவர் அடிக்கடி சொல்லுவார்."

தர்மசீலன்:—"ஆம், அவர் அதேமாதிரியாகச்சொல்லக்கேட்டிருக்கிறேன். இருந்தபோதிலும் சுவாமியின் கருணையினால் அவனுடைய சம்பந்தம் எனக்கு வேண்டியதில்லை, சொத்தை என்பிள்ளைகளுக்கு சார்டியனாகிய என் வசத்தில் ஒப்பிவைத்திருந்தால் அவர்கள் பெரியவர்களாவதற்குள்ளாக சொத்தை அதிக விருத்திசெய்வேன். ஆனால் அவர் செய்துவைத்திருக்கிற ஏற்பாட்டில் இந்த சொத்து கொஞ்சங்கூட விருத்தியடையாது" என்றான்.



இப்படியிருக்க மாமா இறந்துபோய் ஒருவருஷம் ஆயிற்று. தர்மசீலனும் சத்தியவதியும் எப்பொழுதும் பணக்காரர்களோடே கூடிக் குலாவிக்கொண்டு இருவரும் தங்களிஷ்டப்படி தாராளமாய்ச் செலவுசெய்துவந்தார்கள். தர்மசீலன் சிலகாலமாய் வரவுசெலவு விஷயத்தைப்பற்றி சத்தியவதிக்கு ஒன்றுஞ்சொல்லுகிறதில்லை. ஆகையால் அவள் தன் புருஷனுக்கு வருகிற வரும்படிக்கு எவ்வளவு செலவு செய்தபோதிலும் பாதகமில்லையென்று நினைத்துச் செலவிட்டு வந்தாள். தருமத்திற்காக சத்தியவதி யோஜனையில்லாமல் அதிகமாய்ச்செலவழித்தால் தருமசீலன் கோபிப்பான். அதற்கவள் "அதிகப்பணம் வரவர செட்டாயிருக்கிறது எனக்குப் பிடிக்கவில்லை" யென்பாள். இப்படியிருக்க, ஒருநாள் சத்தியவதி கீழே தன் பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு உயர தருமசீலன் அறையின் கதவுக்கிட்டப்போகையில் சிலர் இரைந்து பேசும் சத்தம் காதில்கேட்டது. என்னமோ ஏதோவென்று சத்தியவதி தயங்கிநின்றாள். அப்பொழுது தருமசீலன் கடுமையாய் "இது என்ன ஒரு அற்பகஷ்டம், கொஞ்சநாள் பொறு எல்லாம் சரியாய்விடும்" என்று சொல்லுவதும், "எனக்கு உன்னைவிட அதிகமாய்த் தெரியும், நான் இனிமேல் பொறுக்கமாட்டேன்" என்ற அபத்தொனியும் சத்தியவதி காதில் பட்டது. சத்தியவதிக்கு ஏதோ அபாயம் என்று அச்சம் உண்டாக, தன் புருஷனுடனிருந்தவர்கள் போகும்வரை படியில் காத்துக்கொண்டிருந்து அவர்கள் வெளியில் வந்ததும் உள்ளேபோனாள். தருமசீலன் அதிகபதட்டத்துடன் என்ன வேண்டுமென்று கடுமையாய்க் கேட்டான்.

சத்தியவதி:—தோடு வாங்கியாய்விட்டதா என்று பார்க்கவந்தேன்.

தருமசீலன்:—தோடுமாச்சு, ஓடிமாச்சு, என் பிராணனை வாங்காதே.

சத்தியவதி:—உங்களுக்குஏன் இவ்வளவு வருத்தம். இப்பொழுது வந்துவிட்டுப்போனவர்கள்யார்.

தருமசீலன்:—அது என் காரியம்.

சத்தியவதி சற்று மௌனமாயிருந்துவிட்டு "ஏது இப்படிச்சொல்லுகிறீர்கள். உங்கள் காரியம் என் காரியம் இல்லையோ, உங்கள் துக்கம் என் துக்கமில்லையோ," என்று ஆதரவாய்ச்சொல்ல தருமசீலன் தான் கடுமையாய்ப்பேசினதற்காக வெட்கப்பட்டு "சத்தியவதி, ஏதாவது நல்லசெய்தி உண்டானால் உனக்குச்சொல்வதைவிட எனக்கு வேறு சந்தோஷமுண்டோ? உனக்கு வருத்தம் தரவேண்டாமென்றே நான் சொல்லவில்லை."

சத்தியவதி:—ஆனால் வருத்தமான சமாசாரம் தானோ?

தருமசீலன்:—ஆமாம். பொறு, பிறகுசொல்லுகிறேன். இந்தா தோடு.

சத்தியவதி:—மூடிவைக்காதேயுங்கள், எனக்குச் சகிக்கவில்லை.

தருமசீலன்:—சத்தியவதி நாம் பாபராய்விட்டோம். சொல்லத்தான் வேண்டுமென்றாய், சொல்லிவிட்டேன்.

சத்தியவதிக்கு துக்கம் இவ்வளவு அவ்வளவென்று சொல்லிமுடியாது. ஆயினும் பிறரறியாவிதம் மறைத்து வந்தாள். தருமசீலன் வர்த்தகத்தில் கப்பல்மூழ்கி நஷ்டநேரிட்டிருந்தாலும் பாபம் ஏதோ தெய்வச்செயலென்றிருப்பான். அப்படி இல்லாமல், எல்லாம் குதிரையிலும் வண்டியிலும் நாய்களிலும் படங்களிலும் இறைத்தது மன்னியில் சத்தியவதியின் ஆடம்பரத்தை அடக்காததினாலும் கெட்டு அழிந்தது என்று எண்ணியெண்ணி மனமுருகினான்.

தருமசீலனின் பணக்கார சிநேகிதர்கள் இந்த சமாசாரம் வெளிவந்தவுடனே "ஆம், ஆம், அது அப்பொழுதே தெரிந்ததுதானே. சத்தியவதியின் ஆடம்பரமெல்லாம் இப்படியாகத்தான்" என்றார்களேதவிர ஒருவராவது ஒத்தாசைசெய்ய முயலவில்லை. இருந்தாலும் தருமசீலனுக்கும் ஒரு துணைவன் அகப்பட்டான்.—அவன் கூலிவேலைசெய்பவனென்று தருமசீலனிகழ்ந்த மருதமுத்து.

இவன் தன்னாலியன்றமட்டும் தருமசீலனுக்கு உதவிசெய்து அவன் வேறு சீமைக்குப்போய் திரும்பி வரும்வரை அவனுடைய பெண்டுபிள்ளைகளைக் காப்பாற்றிவந்தான்.

சத்தியவதிக்கு "எவ்வளவு வரும்படி வந்தாலும் வரும்படிக்குட்பட செலவுசெய்யாவிடில் துன்பமே நேரிடும்."— என்றபுத்தி வந்தது.

(முற்றும்.)

கே. ஜெயராமய்யர், பி. ஏ.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## சரீரத்தை சௌக்கியமாய் வைத்துக்கொள்வதெப்படி?

எனது சின்னஞ்சிறு நேசர்களே,

சரீரத்தை சௌக்கியமாய் வைத்துக்கொள்ள முயல்வது நமது முதன்மையான கடமைகளில் ஒன்றாம். நமக்குரிய கடமைகளைத் தீரச்செய்யவும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சிறந்தபொருள்களை தக்கபடி உபயோகிக்கவும் அநுபவிக்கவும் வேண்டும். நாம் பிறர்க்குச்சுமையாயிராமல் நம்மாலியன்ற மட்டும் சௌக்கியமாய் வாழ்ந்திருக்க முயலவேண்டும். நோயினால் வருந்துகிறவர்கள் தாங்களும் சுகமடையார்கள்: பிறர்க்கும் பயன்படார்கள். பெரும்பாலும் நோய்கள் நம்மாலேதான் உண்டாகின்றன. வியாதிகள் வந்தபிறகு மருந்துகளைக்கொடுத்து மாற்றுவதைப் பார்க்கிலும் வராமல் காப்பது நலம். ஆனதுபற்றியே "நோயற்ற வாழ்வே வாழ்வு"என்னும் பழமொழி வழங்குகின்றது.

இவ்வுலகத்தில் பிறந்தவர்கள் யாவரும் ஏதாவது ஒரு தொழில் செய்தே ஜீவிக்கவேண்டும். ஒருவரும் சோம்பலாயிருக்கக்கூடாது. சிலர் சரீரத்தாலும் சிலர் புத்தியாலும் உழைத்துப் பிழைக்கவேண்டியிருக்கிறது. ஆகையினாலேதான் அச்சரீரமும் புத்தியும் சுகித்திராவிட்டால் எந்தக்காரியமும் சித்தி பெறாது. நாம் உயிரோடு இருப்பதற்கு உணவும் காற்றும் ஆகிய இரண்டுபொருள்களும் இன்றியமையாதவை. மேலும் நோயற்றிருப்பதற்கு அந்த உணவு நல்ல உணவாயும், காற்று நல்காற்றாயும் இருக்கவேண்டும். அன்றி, ஜலமும் அவசியமானதாகலின் அதுவும் நல்ல ஜலமாயிருக்கவேண்டும்.

இப்படி நமக்கு உணவுவேண்டுவதற்கும் அது இல்லாவிடின் நாம் இளைத்து மெலிந்துபோவதற்கும் காரணம் யாதெனின், அடுப்பிலிடும் விறகு நெருப்பெரிய உபயோகப்படுவதுபோல உயிருள்ள தேகத்தின் ஒவ்வொரு உறுப்பும் அவ்வுயிரைக் காப்பாற்றும்பொருட்டு உபயோகமாகி செலவழிந்து போவதுதான். நெருப்பு எரிய எரிய அதற்கு ஆதாரமான விறகு குறைந்துபோவதுபோல உடலிலுள்ள உதிரம் சதைமுதலிய சத்துக்கள் உயிரைக்காப்பாற்றும் தொழிலில் உபயோகப்பட்டு கரைந்து போகின்றன.

நாம் ஆகாரம் ஏற்றுக்கொள்ளாவிடின் தேகம் வாடி வதங்கி வரவர உயிரும் திடனற்று கடைசியில் புதிய ஆகாரமில்லாத குறைவுபற்றி முற்றும் அழிந்துபோய்விடும். ஆகவே நெருப்புக்குக் கரியும் கட்டையும் எப்படியோ அப்படியே உயிரோடு கூடிய உடலுக்கு அன்னபானாதி உணவுகள் ஆதாரமாகின்றன. நமது மார்பின்பக்கமாய் கைவைத்துப்பார்த்தால் மார்பு துடிப்பது தெரியும். மணிக்கட்டில் விரல்வைத்துப்பார்த்தால், நரம்பின்வழியாய் இரத்தம் ஓடி நாடி அடித்துக்கொள்வது தெரியும். மற்ற உறுப்புகளின் அசைவும் மிகவும் இலேசாயிருப்பதால் கண்டறிவது கடினமாயிருக்கும். ஆயினும் நமது உடலிலே ஒருபகுதியாவது ஓய்ந்து ஸ்திரமாயிருப்பதில்லை. நாம் நடக்கும்பொழுதும், நித்திரை செய்யும்பொழுதும் நமது தேகத்தின் உட்புறத்தில் எப்பொழுதும் அசைதலும் மாறுதலும் நடந்துகொண்டேயிருக்கும். ஆதலின் நமது உடல் தங்கிய உயிரைக் காக்க தினந்தோறும் போதுமான உணவை உட்கொள்ளவேண்டும். நமது தேகத்தினின்று எவ்வளவு உணவு உருமாறிக்கழிந்துபோகின்றதோ அவ்வளவுக்கு சரியாய் அளவிட்டு ஆகாரமுட்கொண்டால்தான் அது உயிருக்குப்போதுமான போஷணையாகின்றது. அப்படி ஆகாரம் குறைந்தால், அப்பொழுது தகுந்தபோஷணையில்லாமல் நமது சுகம் கெட்டு தேகபலம் குறைந்துபோகும். அன்றியும், நாம் பரிசுத்தமாயும், 'அளவுக்குமிஞ்சினால் அமுதமும் விஷ'மாதலால் நமது சாப்பாடுகளில் மிதமுள்ளவர்களாயும் இருப்பது அவசியம். பகலில் திரிந்து பாடுபடவேண்டும்: இரவில் நன்றாய் நித்திரை செய்யவேண்டும்.

சுவாசம் அல்லது மூச்சுக்காற்றானது நமது தேகத்தின் உட்புறத்திலிருந்து வாய் மூக்குகளின் வழியாய் வெளியே வருகிறது. அந்த சுவாசம் ஒருபங்கு ஜலமும் ஒருபங்கு கெட்டகாற்றுமாய் கலந்திருக்கின்றது. நமது சுவாசத்திலுள்ள நீர் முதலில் நமது சரீரத்திற்குள் இருக்கின்ற சூடுபட்டு நீராவியாகி வெளியேவந்தவுடன் மறுபடியும் குளிர்ந்த காற்றுப்பட்டு நீராய் மாறுகின்றது. ஆனது பற்றி நமது சுவாஸம் எதின்மேல்பட்டாலும் ஈரமாய்ப்போகின்றது. எழுதும் கற்பலகை அல்லது கண்ணாடியில் மூச்சுவிட்டுப்பார்த்தால் அது நன்றாகத்தெரியும். சுவாஸத்தில் கலந்திருக்கும் கெட்ட காற்று நமது கண்ணுக்குத்தெரியமாட்டாதாயினும் ஒரு சிற்றறையில் பலபேரை அடைத்து கெட்ட காற்றை வெளியேபோகவும் பரிசுத்தமான காற்று உள்ளே வரவும் சிறிதும் துவாரமில்லாமல் கதவு



களையும் கவாக்ஷங்களையும் மூடி வைத்தால் அப்போது நன்றாய்த்தெரியுமே. அம்மாதிரியான அறைகளில் அடைக்கப்பட்டவர்களுக்கு உடனே உடம்பில் பொறுக்கக்கூடாத இறுக்கமும் ஆயாசமும் உண்டாகும். ஏனெனில் அவர்கள் உட்கொள்ள நல்ல காற்று இல்லை. தாங்கள் உட்கொண்டு வெளியே விட்டுவிட்ட கெட்டகாற்றையும் அதனுடன் வெளியேவந்த அசுத்தமான பொருள்களையுமே திரும்பத் திரும்ப சுவாஸமூலமாய் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. மேலும் இன்னமொரு நிதர்சனம் கொடுக்கிறேன். ஒருவன் ஒரு பக்ஷியை ஒரு கண்ணாடி ஜாடியில் (Glass Jar) அடைத்து அதை ஒரு பலகையின்பேரில் கவிழ்த்துவைத்து பிறகு அதிலுள்ள காற்றை சாமர்த்தியமாகச்செய்யப்பட்ட ஒரு யந்திரத்தின் மூலமாய் எடுத்துவிட்டான். இப்படி எடுத்தவுடன் அந்தப்பக்ஷி மூர்ச்சையடைந்தது. அதைக் கண்டவுடனே ஜாடியைத் திறந்து காற்றை உள்ளேவிட்டான். அது மூர்ச்சைதெளிந்து எழுந்து வெளியே பறந்துவிட்டது. ஆகையால் காற்று பிராணாதாரத்திற்கு அவசியமானது. மேலும் ஒருவனை ஒரு பெரும்பெட்டிக்குள் அடைத்துப் பூட்டி வைத்தால் அவன் சில நிமிஷங்களுக்குள்ளே இறந்துபோவான். ஏனென்றால் அந்தப் பெட்டிநிரம்ப அவன் மூச்சுவிடுகிற விஷக்காற்றே நிறைந்துபோய் அதனோடு கலக்க பிராணாதாரமான நல்லகாற்று சிறிதுமில்லாமல், அந்த விஷக்காற்றை அவன் மேன்மேலும் உட்கொள்ளும்படியாகிறது. நாம் வாசஞ்செய்யும் வீடுகளாயினும் ஜனங்கள் அடர்ந்து நெடுநேரம் மூச்சுவிட்டுக்கொண்டிருக்கும் அறையானது அப்போதைக்கப்போது உள்ளேயிருக்கிற கெட்டகாற்று அப்புறம்போகவும் நல்லகாற்று உள்ளேவரவும் கதவு முதலியவைகளை திறந்துவிட்டால்தான் அங்கிருப்பவர்களுக்கு சுகமுண்டாகும். நல்ல காற்றுள்ளவிடங்களில் வசிப்பது நமக்கு மிகவும் சௌக்கியமானதென்பதற்கு இதுவே முக்கியகாரணம். இதனாலேதான் நாலு சுவற்றுக்குள்ளிருந்து வேலைசெய்கிறவர்களைப்பார்க்கிலும் வெளியேபோய்த் திரிந்து வேலை செய்கிறவர்கள் மிகவும் சௌக்கியமாயிருக்கிறார்கள்.

நமது இரத்தாசயம் மார்பின் மத்தியில் கொஞ்ச இடதுபுறமாய் ஒதுங்கியிருக்கிறது. அதிலிருந்து புறப்படும் பெரும் இரத்தநாடியிலிருந்து கிளைகள் பிரிந்து தேகமெங்கும் பாவி, போகப்போக சிறுத்து கடைசியில் கண்களுக்குத்தெரியாத அவ்வளவு சிறியவையாகி வலைபோல் பின்னிக்கொண்டு முடிகின்றன. நமது புறங்கையைக் குறிப்பாய்ப்பார்த்தால் நரம்புகளுடைய கிளைகள் அகப்படும். நாம் உட்கொள்ளும் போஜன பதார்த்தங்கள் தெளிவான திரவரூபமாகமாறி சிறிய நரம்புகளில் சுலபமாய் ஓடுகிற விதம் இன்னதென்று நாம் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். நமது சரீரத்தின் உட்புறத்தைப் பார்ப்போமாயின் அத்தொழிலைச்செய்கிற கருவியையும் கண்ணாரப்பார்க்கலாம். நாம் எப்போதும் சுறுசுறுப்பாய்உழைத்து வேலைசெய்யப் படைக்கப்பட்டிருக்கிறோமே யன்றி சும்மா அசைவற்று சித்திரப்பிரதிமைபோ லிருப்பதற்கன்று. நாம் அங்குமிங்கும் ஓடியாடித்திரிவதானது, இருதயம், ஈரல் முதலிய உறுப்புகளை துரிதமாய் தொழிற்படுத்துவதனாலேதான் நமக்கு அவ்வளவு நன்மையாகின்றது. நாள் முழுவதும் வீட்டுக்குள்ளேயேயிருந்து எங்கும் அசையாமலிருப்பவர்கள் வியாதியினாலும் அசௌக்கியத்தினாலும் வருந்துகிறார்கள். நமது சரீரத்திலுள்ள தாதுக்கள் எப்பொழுதும் சேதமாகிக்கொண்டிருக்கிறபடியால் அந்தச் சேதத்துக்கு தக்கபடி புசித்து போஷித்து வரவேண்டும். சரீரத்தில் எந்தவிடத்திலும் ரத்தமுண்டென்று உங்களுக்குத்தெரியும். ஆகிலும் அந்த ரத்தத்தில் நாம் காலையில் உண்ட பாயசம் பலகாரங்களின் சத்தும் மாலையில் உண்ட சாதம் கறிகாய் கிழங்குகளின் சத்தும் இவ்விதமாயிருக்கின்றனவென்பது அவ்வளவாய் தெரிந்திராது. நாம் புசித்த பதார்த்தங்கள் நம்மைப்போஷணைசெய்வதற்குமுன் ரத்தமாகவேண்டுவது அவசியம். அந்த ரத்தம் சிறியகுழல்போன்ற நரம்புகளின் மூலமாய் தேகம் முழுவதும் வியாபித்துத் தாதுக்களை போஷித்துக்கொண்டிருக்கின்றது. அந்த நரம்புகளுக்கு ரத்தநரம்புகளென்றுபேர். நாடிகள் நாளங்களென்று இரண்டுவிதமான ரத்தநரம்புகளுண்டு.

அது நிற்க, நாம் அசுசியாயிருப்பதினாலும் நாற்றம் அடிக்கும்படியான இடங்களுக்கு சமீபத்திலிருப்பதினாலும் பெரும்பாலும் நோய்விளையும். இந்த விஷயம் நம்முன்னோர்களுக்குத் தெரிந்தவிஷயமானதுபற்றி பரிசுத்தமாயிருப்பது நமது நித்தியகருமங்களுள் ஒன்றாய் விதித்திருக்கிறார்கள். அடிக்கடி நீராடவும், கைகால்களை சுத்திசெய்துகொள்ளவும் நாள்தோறும் உடைகளைமாற்றித் தேகத்தை பரிசுத்தமாக வைத்திருக்கவும் ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். மேலும் தினந்தோறும் தேவதாரார்தனம் செய்வதற்கு மேலேசொன்ன ஏற்பாடுகள் அவசியமான அங்கங்களென்று கூறியிருக்கின்றனர். அன்றியும் நமது ஜனங்கள் வீட்டையும், வீட்டுச்சாமான்களையும் நன்றாய் சுத்திசெய்து வைத்திருக்கவேண்டும். இன்னும் மற்றசங்கதிகளிலும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அபரிசுத்தமான ஜலத்தையும் சோற்றையும் விலக்கவேண்டும். முடிவில் இவ்விதிகளை மீறி நடப்பது பாபமெனவும், அவ்வாறுநடந்தால் அதற்குத்தக்க தண்டனை தப்பாமல் சம்பவிக்குமெனவும் நமது

பெரியோர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஒருவரும் அதன்விஷயத்தில் சவனமா யிருக்கமாட்டார்களென்ற சந்தேகத்தினாலேயே அவர்கள் இப்படி பரிசுத்தமாயிருப்பது வைதிககருமங்களில் ஒன்றாக விதித்திருக்கின்றனர். இதனால் நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில் இவ்விதிகள்யாவும் நம்முடையதேகசவுக்கியத்திற்கே ஏற்படுத்தப்பட்டன. இவைகள் என்னமோ பூர்வீகர்களுடைய பேதமையான கொள்கைகளென்று அசட்டை செய்யக்கூடாது. தேகத்துக்கு பரிசுத்தம்உண்டாக்குகின்றவை எல்லாம் தேகத்திற்கு நல்ல சவுக்கியத்தைத் தருகின்றவை. அப்படியிருந்தும் அனேகர் பரிசுத்தமாயிருப்பதற்கு வேண்டிய விதிகளை மறந்தவர்களாகி வீடு வாயில் வீதி முதலிய இடங்களில் குப்பைகூளங்கள் மிகுதியாய் சேரும்படிவிட்டு குடியிருப்பு வீடுகளை அசௌக்கியத்திற்கு இடமாக்கிக் கொள்ளுகிறார்கள். முக்கியமாய் இத்தேசத்து சிறியகிராமங்களில் இம்மாதிரியே நடக்கின்றது. அங்கே சுகாதார விதிகளை நெடுநாளாக உபேக்ஷை செய்துவருவதினாலும், வீடுகளில் கெட்ட பழக்கங்கள் அதிகரிப்பதாலும் அவ்விடங்கள்முழுமையும் அசுசியாகவே யிருக்கின்றன. நாடுநகரங்களிலும் சிலர் துர்க்கந்தங்கள் இன்னதென்று கவனியாமல், அவற்றை உட்கொண்டால் பிராணாபாயத்துக்கு இடமாகு மென்பதையும் அறியாமலிருக்கிறார்கள். எவ்விடத்திலும் சாதாரணமாய் உண்டாகிற விஷக்காற்று ஒன்றுண்டு. அது மன்னுயிர்களுக்கு மிகவும் அபாயகரமானது. வருஷந்தோறும் பலபேர் அதனால் இறந்துபோகிறார்கள். இதுதான் ஜலதாரைகளினின்றும் உண்டாகிற கெட்டகாற்று. இத்தேசத்தில் அங்கங்கே பெரியநகரங்களிலும் கிராமங்களிலும் சாக்கடைகளை சீர்திருத்தும்படி வேண்டிய முயற்சியும் செய்யப்பட்டுவருகின்றது. மிகவும் முக்கியமான இவ்விஷயத்திலே உபேக்ஷை நமக்குள்ளே அதிகமாயிருக்கிறதென்று இதன் ஆரம்பத்திலே சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி விசாரணையும் சரியாக நடப்பதில்லை. இது நமது நாகரீக விருத்திக்கு ஒருபெரிய இகழ்ச்சியாயிருக்கின்றது. இதற்குக் காரணம் சுகாதாரவிதிகளை செவ்வையாய்த் தெரிந்துகொள்ளாமையேயாம். பரிசுத்தமாயிருப்பதின் பெருமையையும் நல்ல காற்றினாலுண்டாகும் நன்மைகளையும் வீட்டில் துர்க்கந்தமுண்டாக்குகிற ஊத்தைகளெல்லாவற்றையும்வெளியேகொண்டுசேர்க்கத்தக்கவாட்டமானஜலதாரைகள் அவசியமாயிருப்பதையும் ஜனங்கள் நன்றாய்த் தெரிந்துகொள்ளவில்லை.

சிறுவர்களே! சிறுமிகளே! நீங்கள் பெரியோராகி இல்வாழ்க்கை நடத்தும்போதாவது உங்களால் இயன்றவரையில் பாடுபட்டு உங்கள் வீடுகளை சுத்தமாயும் அழகாயும் வைத்துக்கொள்ள முயல்வீர்களாக.

வீட்டு ஜலதாரைகள் சீர்தப்பிப்போயிருக்குமாயின் உடனே அவற்றைச் செப்பனிடவேண்டும். அவ்வீடு சொந்த வீடாயிருந்தபக்ஷத்தில் யாதொரு தடையில்லாமல் செய்யலாம். அப்படி யில்லாவிட்டால் தக்ஷணமே அவற்றைப் பழுதுபார்க்கும்படி வீட்டு யஜமானனுக்குத் தெரிவிக்கவேண்டும். அவற்றை சரிப்படுத்துவதற்கு ஏதேனும் சற்று தாமதப்படுமாயின் அவ்வீட்டைவிட்டு அப்புறப்படுவது உத்தமம்.

இவ்விஷயத்தை பட்டணங்களிலேதான் முக்கியமாய் கவனிக்கவேண்டும். ஏனெனில் அங்கேதான் சாக்கடைநாற்றம்கலந்து கெட்டுப்போனகாற்றை வழக்கமாய் உட்கொண்டு தலைநோய், குமட்டல், விஷபேதி, வைசூரி முதலிய வியாதிகள் உண்டாகின்றன. வீடுகளில் கெட்ட நாற்றமுண்டாவதுண்டு. அதுவீட்டுசொந்தக்காரனுடைய குற்றமல்ல. ஜலதாரைகளில் பிசகுயாதொன்று மிராதிருந்தும் குடித்தனம் இருக்கிறவர்கள் தங்களுடைய ஒழுக்க மின்மையினாலும் அசுத்தத்தினாலுமே அவ்வீடுகளை அசௌக்கியமாக்கிக்கொள்ள வழிபார்க்கின்றனர். அவை மிகுதியாய்மலமஷ்டுகள் நிறைந்து விகாரமாகின்றன. தெருவில் அவற்றின் பக்கமாய் மலஜலவிசர்ஜனம் செய்கின்றனர். அப்பொழுதுஅவ்வீடுகள் வெகுவாய் மழைக்காலங்களிலே அதிக ஆபாசமாகின்றன. வேறுசிலர் சாக்கடைகளினின்றும் கெட்டநாற்றம் கிளம்பும்படி நெடுநாள் விட்டுவைக்கின்றனர். அந்த நாற்றத்தைப் போக்கடிக்க இரண்டு மூன்று தோண்டி நல்லதண்ணீர் ஊற்றிக்கழுவினால் போதுமானது. இதுசெய்வதுகூட நமது ஜனங்களுக்குக் கஷ்டமாயிருக்கிறது. இவையெல்லாம் நகரத்தாருக்குத் தெரியவேண்டியவிஷயம். கிராமங்களிலும்கூட சாணிமுதலிய எருக்களைச் சிறிதுதூரத்துக்கப்பால் கொட்டும்படியாகவும், ஆடு மாடு குதிரை முதலியவைகளை வீட்டோரத்தில் கட்டாமல் தூரமாய்க் கட்டும்படியாகவும் சில ஏற்பாடுகள் செய்யவேண்டும். கிராமத்திற்குள்ளாயினும் கிராமத்தைச் சுற்றியாயினும் குழிகளில் தங்குகிற கெட்டதண்ணீரை அப்புறப்படுத்துவதோடுகூட ஆங்காங்குள்ள பள்ளங்களையும் தரைமட்டத்திற்கு தூர்த்து விடவேண்டும். நாடோறும் குப்பை கூளம் முதலியவற்றையும் வாரியெடுத்து பயிர்களுக்கு எருவாகும்படியாக பூமிக்குள்கொட்டிவிட்டால், நோய்களை உண்டாக்குகிற முக்கியகாரணங்களுள் ஒன்று ஒழிந்துபோகும். ஊரார்க்கு இழிவை உண்டாக்குவதற்கு முதற்காரணமாயிருப்பதும் ஒழிந்துபோகும். வீட்டுக்காரியங்களில் சுத்தமாயிராமல் உபேக்ஷைசெய்வதும் கெட்டநாற்றமுண்டாவதற்கு ஒரு காரணந்தான். துர்க்கந்தம் தேகசௌக்கியத்தைக்



கெடுக்கும் என்பதற்கு ஒரு நிதர்சனம் பாருங்கள். சுத்தியில்லாமல் மலமஷ்டுக்கள்நிறைந்த வீடுகளில் குழந்தைகள் நோயின்றிச் சௌக்கியமாயிருப்பது எவ்வளவு அருமையாயிருக்கின்றது. வீடுகள் சுத்தமாயிராவிடின் அங்குள்ளகாற்று ஒருபோதும் நல்லதாயிராது. சுவர்களையும் தரையையும் சுத்தமாய்வைத்திருக்கவேண்டும். அழுக்குஆடைகளையெல்லாம் தனிப்புறமான அறைகளில்போட்டுவைத்து கூடியசீக்கிரத்தில் தோய்த்துச் சுத்தப்படுத்தவேண்டும். ஸ்நானம்செய்ய உபயோகப்பட்ட தண்ணீரையும், மடைப்பள்ளி,ஸ்நானம்செய்யுமிடம், மலங்கழிக்குமிடம்,இவ்விடங்களில் கழித்த தண்ணீரையும் தாமதமின்றி வீட்டைவிட்டு அப்புறப்படுத்தவேண்டும். நல்லகாற்றைப்போலவே நல்லதண்ணீரையும் மிகுதியாக உபயோகிப்பதும் தேகசௌக்கியத்திற்கு மிகவும் அவசியமானதென்று முன்னமே சொல்லியிருக்கிறேன்.

நாள்முழுதும் வீட்டுக்குள்ளேயேயிருந்து எங்கும் அசையாமல் உட்கார்ந்திருப்பவர்கள் வியாதியும் அசௌக்கியமும் உடையவர்களாகி வெகுவாய்கஷ்டப்படுவார்கள். வெளிப்புறங்களில் மிகுதியாகநடந்து உலாவித்திரிகிறவர்களுக்குஅசௌக்கியம்ஒருபோதும்உண்டாகாது. பலசீமான்களும் சீமாட்டிகளும் சிறந்ததேகசவுக்கியம் இத்தன்மையதென்றே அறியார்கள். அதற்குக்காரணம் வண்டிமுதலிய வாகனங்கள் மீது ஏறிக்கொண்டு வெளியேசெல்வதையும் வீட்டுக்குள்ளே ஒருஅறைக்கு ஒருஅறை காலால் நடப்பதையுமே தேகப்பயிற்சியாகக் கொண்டிருப்பதுதான். ஆனதுபற்றி அவர்கள் உடம்பில் உதிரம் ஓடுகிற வேகம் மட்டிட்டுப்போகின்றது. அதனால் ஜீவாதார சக்திகளும் மந்தப்படுகின்றன. உணவு ஜீரணமாகாமல் பசிமந்தித்துப்போகின்றது. இரவில்செவ்வையாய் தூக்கம்வருவதில்லை. அதனால் அவர்களுக்கு பகலிலுங்கூட உடம்பு சுறுசுறுப்பாயிராமல் சோர்வுற்றேயிருக்கும். எளியமனிதர்கள் வயல்களில் வேலைசெய்தல், சாமான்கூடையும் தலையுமாய் நெடுந்தூரம் கடைத்தெருவுக்குச்செல்வது முதலானவகையில் வருந்தி உழைக்கின்றார்கள். அவர்கள் பசியில்லாமை, அஜீரணம், கைகால்பிடிப்புமுதலிய நோய்களால் ஒருபோதும்வருந்துவதில்லை. சிலவேளைகளில் அவர்கள் அளவுக்குஅதிகமாய் பாடுபடும்படி நேரிட்டபோதிலும்தனவான்களைப்பார்க்கிலும் இவர்களுக்கே நல்ல தேகசௌக்கியம் பெறுவதற்கு ஏதுக்கள் அதிகமாயிருக்கின்றன. ஏனெனில் தனவான்களுக்கு வெளியேசெல்லவேண்டிய அவசியமில்லையாதலின் அவர்கள்அதிகமாய் வெளியேநடந்துபோய் உடம்பைஅலட்டவேண்டியதில்லை. நமதுஉடம்புஉறுப்புகள் அசைந்தால் தேகத்திலுள்ளமாமிசம் தனக்குள்ளேயிருக்கிற உதிரநாம்புகளை அழுத்துகின்றது. அதனால் தோலினாற்செய்த தண்ணீர்க்குழாயை அழுத்தினால் தண்ணீர்எப்படி வேகமாய்ஓடுமோ அப்படி ரத்தமும் வேகமாய் உடம்புமுழுதும் பரவத்தலைப்படுகின்றது. இருதயகமலத்தைவிட்டு வெளியேசென்ற உதிரம் மறுபடியும் அதேவழியாக இருதயம்நோக்கி ஒருபோதும் செல்லாது. ஆதலினால் நாம்அசைந்தாலும் நடந்தாலும் ரத்தமானது பின்வாங்கிச்செல்ல வகையின்றி உதிரநாம்புகளில் நேர்முகமாய் ஓடும்படி அழுத்தப்படுகின்றது. உதிரம் வேகமாய் ஓடினால் அதுபற்றி மற்றயந்திரங்களும் வேகமாய் அசையத்தலைப்படுகின்றன: இருதயம்விரைவாய் அடித்துக்கொள்ள ஆரம்பிக்கின்றது. தன்னிடத்தில் உதிரம்வந்து சேரும்போதெல்லாம் அதைசுத்திசெய்யப் போதுமானகாற்றை வேகமாய் சுவாசாசயம்ஏற்றுக்கொள்ளத் துவங்குகிறது. சுத்தியானரத்தமானது துரிதமாய் தேகமெங்கும் பரவி கெட்டுப்போயிருக்கும் தாதுக்களை சுத்திசெய்து தான்செல்லுமிடமெல்லாம் வேகமாய் ஊட்டங்கொடுத்துக்கொண்டே போகிறது. இப்படி உதிரம் விரைவாய் ஓடுகிறதினால் உடம்பின் ஒவ்வொரு உறுப்பிற்கும் உறுதியும் உற்சாகமும் உண்டாகின்றன. இரைப்பை உணவைச்செவ்வையாய் ஜீரணமாக்குகிறது. குடல்கள் அன்னப்பாகினின்றும் அன்னசாரத்தை நன்றாய் வேறாகப்பிரிக்கின்றன. நன்றாய்வேர்வையுண்டாகிறது. இவ்வாறு முன் உட்கொண்ட உணவு சீக்கிரத்தில் நன்றாய் ஜரித்துப் போவதால் பசிதீபனமும் நன்றாயுண்டாகிறது. இதனாலேதான் வீட்டில் உட்கார்ந்திருப்பவர்களை விடப் பகற்பொழுதெல்லாம் வெளியில் உழைப்பவர்களுக்கு பசியும் தாகமும் அதிகமாய் எடுக்கின்றன.

சரீரப்பயிற்சி வெளியிடங்களில் செய்தால் உதிரம் நன்றாய் ஓடிப்பரவும். வீட்டுக்குள்ளேசெய்தால் அத்தனைநன்றாய்ப்பரவாது. ஏனெனில் வெளியே திரியும்போது நிர்மலமான வெளிக்காற்றிலுள்ள பிராணாதாரவாயு உதிரத்திலதிகமாய் வந்துகலக்கும். அதினால் ரத்தத்திற்கு உயிர்ப்பிக்கிற சக்தி அதிகமாயுண்டாகி அதுவெகுவிரைவாய் வியாபிக்க ஆரம்பிக்கின்றது. கஷ்டப்பட்டுஉழைப்பதும் பயிற்சிசெய்வதும் தேகத்தின் ஒவ்வொரு உறுப்பையும் வலிமைப்படுத்துகின்றன. அஃதெப்படியெனில் தேகத்தில்எந்தப்பாகம் அசைந்துவேலைசெய்கிறதோ அந்தப்பாகத்தில் உடனுக்குடனே புதிதாய் உதிரம் போய்ச் சேரும். சேர்ந்தவுடன் வரவர அவ்விடம் புஷ்டியாகும். இதற்கு சில உதாரணங்கள் சொல்லுகிறேன். கப்பலான்களைப்பாருங்கள். அவர்கள் எவ்வளவு புஷ்டியாயும் திடமாயும் வளர்ந்திருக்கின்றனர்! எல்லா உறுப்புகளையும் சமமாயுபயோகிக்கின்ற படையாள்களை நோக்குங்கள்! தையல்காரனுடைய கால்களைப்

பாருங்கள்! கருமானுடைய கைகளைப்பாருங்கள்! கருமான் சம்மட்டிபிடித்தடித்து இடைவிடாமல் வேலைசெய்வதால் அவன் கைகள் எவ்வளவு உறுதியாகிப் பருத்திருக்கின்றன! தையல்காரன் அவன் கால்களை அதிகமாய் உபயோகப்படுத்தாமல் நாள் முழுவதும் முடக்கிவைத்துக் கொண்டிருப்பதால் அவை எவ்வளவு மெலிந்து பலவீனப்பட்டிருக்கின்றன! ஆதலால் சரீரத்தின் ஒவ்வொருபாகமும் நன்றாய்ப் பிரயாசைப்படும்படி செய்யும் பயிற்சியே தேகத்திற்கு மிகவும் ஆரோக்கியமானது. நமக்கிஷ்டமானவையும் தேக சௌக்கியத்திற்குத் தகுந்தவையுமான ஜீவன வியாபாரங்களே நம்முள் பலருக்கு நினைத்தபடி கிடைப்பது கடினம். ஆகையால் நமது கடமையை நாம் கைவிடாமல் செய்தல் வேண்டும். மேலும் நாம் எங்கிருந்தாலும் எத்தொழில் செய்ய நேரிட்டாலும் "செய்வன திருந்தச் செய்" என்ற பழமொழிப்படி அதனை செம்மையாகச் செய்யவேண்டும். ஒரே இடத்திலேயே உட்கார்ந்து வேலைசெய்யும்படியாகப் பலருக்கு நேரிடுகின்றது. சிறுவர்களே! சிறுமிகளே! நீங்கள் பெரியோர்களானபின் இவ்விதமான தொழிலே உங்களுக்கு அமையுமாயின் உங்களாலியன்றமட்டும் நாள்தோறும் கொஞ்சகாலமாவது வெளியில் உலாவி வரமுயலவேண்டும்.

ம. சி. கி.

## விசேஷக் குறிப்புகள்.

**சட்ட நிருபண சபை எலெக்ஷன்.** சென்ற 2-மாசங்களாக எல்லாரும் கவனிக்கத்தக்க முக்கியமான விஷய மென்னவெனில் சென்னை சட்டநிருபண சபைக்கு நாம் முன்னால் இப்பத்திரிகையில் பிரசுரித்த விதிகளின்படி. மெம்பர்கள் தெரிந்தெடுத்து நியமிக்க அங்கங்கே முனிசிபாலிடியாரும் டிஸ்திரிக்ட் போர்டார்களும் செய்துவரும் முயற்சியே. செங்கற்பட்டுள்பட சென்னைக்கு வடபாகத்திலுள்ள ஜில்லாக்களை வடபிரிவாகவும், தென்னாற்காடுமுதல் சென்னைக்குத் தெற்கேயுள்ள ஜில்லாக்களை தென்பிரிவாகவும் பிரித்து, ஒவ்வொரு பிரிவிலுமுள்ள முனிசிபாலிடிகளெல்லாம் சேர்ந்து ஒருமெம்பரும் டிஸ்திரிக்டு போர்டுகளெல்லாம் சேர்ந்து ஒருமெம்பரும், ஆக 4-மெம்பர்கள் நியமிக்க அதிகாரங்கொடுத்திருக்கிறார்கள். சென்னையில், சென்னை முனிசிபாலிடியார் ஒருமெம்பரும், யூனிவர்ஸிடி செனெட்சபையார் ஒருமெம்பரும், ஐரோப்பியவர்த்தகசங்கத்தார் ஒருமெம்பரும் நியமிக்க சுதந்திரம்பெற்றிருக்கிறார்கள்.

**ஆசாரச் சீர்திருத்த சங்கம்.** சென்னையில் ஏற்பட்டிருக்கும்இச்சங்கத்தார் இந்தமீ இரண்டுபுதியஏற்பாடுகள் செய்தார்கள்-அவை இரண்டும் முக்கியமாய் கவனிக்கத்தக்கவை. முதலாவது சன்மார்க்கங்கெட்ட விலைமாதர்களை யழைத்து சதிர்கச்சேரி வைப்பது கூடாதென்று ஆக்ஷேபித்து அவ்வழக்கத்தைத்தடுக்கவேண்டுமென்று ஒரு பெரிய சபைகூடி சில தீர்மானங்கள் செய்தார்கள். 2-வது அச்சங்கத்தைச்சேர்ந்த மெம்பர்களின் குடும்பத்திலுள்ள மாதர்களை ஒன்று கூட்டி அவர்களுக்கு கற்றுத்தேறிய ஸ்திரீகளைக்கொண்டு மாசமாசம் ஒரு பிரசங்கம் செய்விக்க ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்வேற்பாட்டுப்படி கூடிய முதலாவது மாதர் கூட்டம் நாளதுமீ 13உ திருவல்லிக்கேணியில் கூடிற்று. அந்த சபைக்கு வந்திருந்தவர்க ளெல்லாரும் பெண்டுகளே. அச்சபையில் மிஸ் அன்னி ஷண்முகம் என்னும் மாது இங்கிலாந்துக்கு யாத்திரைபோவதைப்பற்றி ஓர் பிரசங்கம் செய்து அங்குள்ள விநோதகாக்ஷிகளின்பட்டங்களை ஜால விளக்கு வெளிச்சத்தில் பூதக்கண்ணாடியினால் விளங்கக் காட்டினாள். அச்சபையில் நடந்தவிர்த்தாந்தங்களை அங்கு சென்றிருந்த மாதர்களில்யாராவது நமது விவேகசிந்தாமணிக்கு எழுதுவார்களென்று நம்புகிறோம்.

**REFRESHMENT AND CONFECTIONARY OF THE BEST SORT CAN BE HAD OF**
H. RAMASWAMIAH
335, *Thambu Chetty Street.*
Black Town.

The above Refreshment Room was started last year to meet a long felt want in the locality and it has ever since obtained a very satisfactory opinion of the Public. It is situated near the New Law Courts. The Proprietor requests the public to encourage him by giving him their support and patronage.

விளம்பரம்.

**டப் அண்ட் கம்பெனி**
**மவுண்ட் ரோட்டு.**

இது நாட்பட்ட எச்சில் தழும்பு, மேகப்படை, ஸ்திரீகளுக்கு அரையில் உண்டாகிற இடுப்புக்கடி, மற்றும் தேகத்தில் உண்டாகிற பல சம்பந்தமான படைகளையும் நீக்கும். இரண்டொரு நாளிலேயே இதன் பிரயோசனத்தை அறியலாம். ஒரு டப்பியின் விலை ரூபா 1. பாக்கிங் சார்ஜ் அணா 2.

காச்சல் கட்டிச்சூரணம்.
சகலவிதமான விஷசுரம், மலைநாட்டுச்சுரம் இவைகளால் மெலிந்து வயிற்றில் காச்சற்கட்டிகண்டு வருத்தமடைகிறவர்கள் இச்சூரணத்தைக் காலைமாலை சாப்பிட்டு வரவும். புட்டி 1-க்கு ரூபா. 1-8-0.

கரப்பான் களுக்குக் களிம்பு.
தாய்தந்தையர்களுடைய மேக சம்பந்தத்தினால் சிறு குழந்தைகளுக்குக் கால், கை மேக முதலிய இடங்களில் காணும் சகலவிதமான கரப்பான்களுக்கும் காலைமாலைகளில் மேலுக்குப் போட்டு வரவும்; மருந்து போடுமுன் வெந்நீர் விட்டு அலம்பிவிடவேண்டும். கிரையம் ரூபா 1-0-0.

DUFF & CO.,
Chemists & Druggists,
MOUNT ROAD, MADRAS.

**Printed at the C, N, Press, Madras.**

"கற்றோராக டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகழ்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு"

# விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

த்தகம். II. 1893௵ ஜூன்மீ இலக்கம். 2.

## நாகரீகம்.

I.

அநேகஜனங்கள் இக்காலம் நாகரீக காலமென்று சொல்லக்கேட்டிருக்கிறேன். நாகரீக மென்றால் என்னவென்று அவர்களிடம் கேட்டதில் இக்காலத்தில் நகை புடவை, துணி மணி, பண்டம் பாத்திரம், கலியாண விமரிசை, வாத்தியகோஷம், நாருகு, விருந்தோத்தியா பணம், சீர் சிராட்டம் இவைகள் அதிகமாய் இருத்தல் தான் நாகரீக மென்றார்கள். வாசித்துப் பல வகைஉத்தியோகம் நடத்திவரப்பட்டவர்களும் தற்காலம் நாகரீகமென்று சொல்கிறார்கள். கற்றவர்களும் கல்வியற்றவர்களும் எந்த அர்த்தத்தில் நாகரீகமென்ற வாக்கு உபயோகப்படுத்துகிறார்களென்று நிச்சயப்படுத்துவோம்.

கூர்மையாய் யோசிக்குமிடத்து, டம்பம், தானம்கடந்த செலவு, அவிவேகம், ஸ்வயகாரியபுத்தி, பரகாரியஉபேக்ஷை, அற்பத்தனம், ப்ராசை, நாஸ்தீககுஷால், கோஷ்டி, ஆசாரவிருத்தம் (விரோதம்), பிறர்பால் மதிப்பின்மை, இவைகட்குத்தான் இப்போது ஜனங்கள் நாகரீக மென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். இதைத் திருஷ்டாந்தப்படுத்திக் காண்பித்தால் வெளியாகுமாகையால் அவ்வாறுசெய்கிறேன். ஆனால் விஸ்தாரமாக உதாரணங்கூறத்தொடங்கினால், அதுவே ஒரு புஸ்தகமாக முடியுமாகையால் ஒவ்வொன்றுக்கும் சில உதாரணங்கள் காட்டினாற் போதுமென்று நினைக்கிறேன்.

### தற்காலநாகரீகம்: டம்பம்.

எவ்வளவு கடனிருந்தாலும், கலியாணங்களில் கடன்வாங்கியாவது அபரிமிதமாய்ச் செலவுசெய்து ஒன்றிற்கதிகம் நாகசுர ஜதைகள் வருத்தி பாண்டு முதலிய வாத்தியகோஷங்கள் ஏற்படுத்தி, மாப்பிள்ளை, சம்பந்தி இவர்களை கலியாண கிரகத்திற்கழைப்பதில் பல்லக்குகள், வாணவித்தைகள், மத்தாப்புகள், நாட்டியங்கள், சாரட்டுகள் ஆவசியகமென்று அதி தோரணைகாட்டி, பந்தல்கள் வெகுசிங்காரமாக அலங்கரித்து, பக்ஷணங்கள், எண்ணெய் சர்க்கரை முதலிய பண்டங்கள் வண்டிகளில் ஊர்க்கெல்லாம் வழங்கி, சதிர்கூத்து, பட்டணப்பிரவேசம், பூரிசர்வாணி, இவைகள் நடத்தி, ஆடையாபரணச் செழிப்பாய், புஷ்பம் சந்தனம் வத்தி முதலிய சுகந்தாதிகள் பரிமளிக்க யாவர்க்கும் வழங்கி, பன்னீர் வருஷித்து, வந்தபேர்க்கெல்லாம் கோடியாடை கூசாமற்கொடுத்து அநேகபக்ஷணங்கள் பழவர்க்கங்கள் சகிதம் விருந்தளித்து, கலியாணசம்பந்தமாய் வந்த நெருங்கின பந்துக்களை ஆறுமாசம் ஒருவருஷம் வைத்திருந்து போகும்போது வஸ்திரங்கள் வழிச்செலவிற்கு ரூபாய்கள் கொடுத்து மூலைக்குமூலை பாத்திரங்களாகவும் பண்டங்களாகவும் சிதறிக்கிடந்து எண்ணெயும் நெய்யும் தண்ணீர் படும்பாடு பரிமாறி, ஸ்திரீகட்கு வேலை கொடுக்காமல் பரிஜாரகர்கள் ஏற்படுத்தி டம்பங் கொண்டாடுவது நாகரீகமென்றும் இல்லாவிட்டால் நாகரீகமில்லையென்றும் ஜனங்கள் நினைக்கிறார்கள். மேற்

கண்டபடி செலவுசெய்வது அனுவசியகமென்று நினைத்து ஒருவன் செலவைச் சுருக்கினால் அவன் என்னத்தைக்கண்டானென்றும் என்ன சீர் சிராட்டஞ் செய்து அனுபோகப்பட்டிருக்கிறானென்றும், லுத்தன் என்றும் ஜனங்கள் பழிக்கிறார்கள். பூர்வத்தில் வைதீகமாகவும் டம்பத்தில் யாதொரு செலவின்றியும் நடத்தி வந்த சம்ஸ்காரங்கள் சம்பந்தமாய் தற்காலத்தில் டம்பச் செலவு நாகரீகமென்று நினைத்து அனுவசியமாய் எவ்வளவோ செலவு செய்கிறார்கள். குழந்தைகட்கு அப்தபூர்த்தி, அன்னப் பிராசனம், அக்ஷராரம்பம் இவைகள் நடத்துவதில் 1000 ரூபாவரைச் செலவுசெய்து முடிவில் கெட்ட குடும்பங்கள் அநேகம். வீண்செலவு நாகரீகமென்ற பிரமையால் இனிமேல் குழந்தைகட்கு ஆமணக்கெண்ணெய்புகட்டி பேதிக்குப் போனாலும் அதற்கும் நாகரீகமாகப் பெருஞ் செலவு செய்வார்களென்று சில சமயங்களில் நினைப்புண்டாகிறது. இந்துதேசச் சரித்திரத்தில் 'மகம்மது டோக்ளாக்' என்பவன் தன் பற்களில் ஒன்று விழுந்ததற்காக விழுந்தபல்லை பல்லக்கிலேற்றி வாத்தியகோஷங்களோடும் பட்டாள விருதுகளோடும் பட்டணப்பிரவேசம் செய்வித்து முடிவில் ஒரு கோரிகட்டி அதை அடக்கஞ்செய்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பித்தன் செய்ததுபோல நம்முடைய ஜனங்களும் நாகரீகம் பெருகப்பெருக விசேஷச் செலவு செய்து பல்லை யடக்கஞ் செய்வார்களோ என்னவோ தெரியவில்லை. பிரசவித்த பெண் புக்ககம் போகும்போது அவ்வீட்டில் நேரே இறங்காமல் அந்நிய கிரகங்களில் இருந்துகொண்டு பக்ஷணங்கள் செய்து கொட்டு மேளத்துடன் பெண்ணைக்கொண்டு விடுவது நாகரீகமென்றெண்ணி அதற்குவேண்டிய அனுவசியச் செலவு செய்கிறார்கள். இவ்வாறு நாகரீகங்கொண்டாடுவதற்கும் டோக்ளாக்கென்பவன் நாகரீகமாகப் பல்லை யடக்கஞ் செய்ததற்கும் வித்தியாசம் ஒன்றுங்காணேன்.

### தற்கால நாகரீகம்: நிதானங்கடந்த செலவு.

ஒருவன் நெருங்கின பந்துக்களில் யாராவது வந்து நாலுமாசம் ஆறுமாசம் இருந்து திரும்பிப்போகும்போது அவர்க்கு அவன் கடன்பட்டாவது விலையுயர்ந்த வஸ்திரங்கள் ஆபரணங்கள் வாங்கிக்கொடுத்தால் நாகரீகமென்றும் இல்லாவிட்டால் நாகரீகமில்லையென்றும் மற்றெந்த விதத்திலும் அன்பாதரவு காண்பித்தாலும் பெருமையாக ஆடையாபரணங்கள் கொடுக்காவிட்டால் உபயோகமில்லையென்றும் நினைக்கிறார்கள். முன் நடந்துவந்த நிதானப்படியாவது அதற்குக் கொஞ்சம் மிகுதியாகவாவதுசெய்தாலும் அதில் திருப்திவாராமல் மனஸ்தாபம் ஜனித்து விரோதபாவம் கூட வருகிறது. பணமூலமாகவும் வஸ்திராபரண மூலமாகவும் அபிமானங் காண்பிக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் பராதீனமட்டிலாவது தன் சக்திக்குள்ளடங்கின மட்டிலாவது அபிமானங்காண்பித்தாலும் அது தற்காலத்தில் திருப்தியாகிறதில்லை. நிதானங்கடந்து பெண்கள்கேட்டுப் பதார்த்தங்கள், ஆபரணங்கள், வஸ்திரங்கள் வாங்கிக்கொடுக்காவிட்டால் அதுவும் அநாகரீகமென்று நினைக்கிறார்கள். மட்டிற்குமிஞ்சி சமையல்செய்வதிற்கூடக் கொட்டிச்சிந்தினாற்றான் நாகரீகமென்ற அபிப்பிராயம் வந்திருக்கிறது. குழந்தைகளின் தேகஸ்திதியைப்பார்த்து மந்தமானதும் ஜீரணத்திற்கு எளிதில் வரக்கூடாததும் ரோகங்களை விளைவிக்கக்கூடியதுமான பதார்த்தத்தை வாங்கிக் கொடுக்காதிருந்தால் அநாகரீகமென்றும் குழந்தைகள் சாப்பிட்டு வியாதிவந்தாலும் சாப்பிட முடியாமல் இருந்தாலும் வாங்கிப் போடவேண்டியது போடவேண்டியதுதானே, இந்த நாளையில் தேகசுகத்தை யார் பார்க்கிறார்களென்றும் சொல்கிறார்கள். பரிமாறுவதிற் கூட மட்டுக்கு மிஞ்சிப் போடுவது நாகரீகமென்று நினைக்கிறார்கள். விருதாதிகள் முடிப்பதிலும் வைதிக மெட்டாக ஆவசியகமான மட்டில் செலவுசெய்து நடத்தினால் அதுவும் அநாகரீகமாக பவிக்கிறது. தாங்கும்படியான ஆபரணங்கள் செய்தால் சிறிதென்றும் நாகரீகமில்லையென்றும் நகைக்கிறார்கள். உள்ளே கட்டை யடைத்து வெளியே தங்கத் தகடுகள் பொதிந்து நல்ல கட்டிபோற் செய்தாலும் முழுமையும் தங்கமில்லையென்ற கருத்தின்மேல் 'அதென்னமாயிருக்கும் எடுத்த கை இத்து(இற்று)ப்போக வேண்டாமோ. ஆய்! நன்றாய் இல்லை'யென்றும் நகைக்கிறார்கள். திருமங்கலியம் இப்போது நாலுவிரல் ஐந்துவிரல்



அகலம் இருந்தால் நாகரீகமென்று மட்டுக்கு மிஞ்சி முரம்போல் செய்து போட்டுக்கொள்கிறார்கள். தங்கக்கொடி செய்தாலும் பெருங்கொடியாய் இல்லாவிட்டால் அதுவும் அநாகரீகமே.

முன் சொன்ன திருஷ்டாந்தங்களால் ஏழை, பந்துக்கட்கு அன்னவஸ்திரங்களாலும் மற்ற திரவியங்களாலும் சக்திக்குட்பட்டு உதவி செய்யவேண்டாமென்று சொல்ல வரவில்லை. அவ்வாறு செய்யவேண்டியது ஆவசியகந்தான்.

### தற்காலநாகரீகம்: அவிவேகம்.

ஆகாரத்திற்கு ஆதாரமாயிருக்கப்பட்ட நிலங்களை விற்றாவது ஆபரணங்கள் செய்தணிந்து கொள்கிறார்கள். விலையுயர்ந்த வஸ்திரங்கள் வாங்குகிறார்கள். டம்பச்செலவு கொண்டாடுகிறார்கள். வட்டிக்குக் கடன்வாங்காமல் உடனே நிலங்களை விற்று மேற்கண்டபடி வீண் செலவு செய்தாலும் கொஞ்சம் லாபம் உண்டாகும். பாரம்பரியமாய் வந்த நிலங்களை முதலாவது விற்பதற்கு மனம்வாராமல் உயர்ந்தவட்டிக்குக் கடன்வாங்கி பிற்பாடு வட்டி மேன்மேலும் விஷம்போற் கூடிவர நிர்வாகமில்லாமல் அதிரடியாக விற்கிறார்கள். ஆடையாபரணப் பெருமையாலும் கலியாண விமரிசையாலும் நாகரீகம் கொண்டாடும் அறிவிலிகள் இப்போது தங்கட்குள்ள பூஸ்திதிகளையெல்லாம் இழந்து தெருவில் நிற்கின்றார்கள். இக்காலத்திலோ மேற்கண்ட காரணங்களால் பிராம்மணர் கைவசம் இருந்த அநேக தர்மாசனக் கிராமங்கள் வீண்செலவின் மூலம் நாகரீகம் கொண்டாடாத தாழ்ந்த ஜாதிக்காரருடைய கைவசம் வந்துவிட்டன. பெண்டாட்டி வழி நெருங்கின பந்துக்கட்கு உபசாரஞ் செய்வதும் மரியாதை செய்வதும் உபகாரஞ்செய்வதும் நாகரீகமென்றும், தற்கால நியாயமென்றும் நினைக்கும் சில மூடபுத்திகள் பெற்றோர் உடன்பிறந்தோர் மற்றுள்ள சுற்றத்தோர் இவர்களைக் காணவொட்டாமல் அடிக்கிறார்கள். இவர்கட்கு ஒருவேளை யன்னங்கூடப்போட மனமற்றுப் போகிறார்கள். தன் பொருளைத் தன் பிதாவுக்குக் கொடுத்தால் நூறுபங்கு பலனும் மாதாவுக்கானால் ஆயிரம்பங்கு பலனும் மகளுக்கானால் முடிவில்லாத பலனும் சகோதரிக்குக் கொடுத்தால் விசேஷபலனுமுண்டென்று வியாசராலும், தரித்திரர்களான சகோதரி, அம்மான், அத்தை முதலான தன் பந்துக்களுக்குக் கொடுத்தால் கோடிபங்கு அதிகமான பலன் கிடைக்குமென்று பவிஷ்யோத்தர புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. தன் குடும்பச் செலவுக்கு வேண்டிய பொருள்தவிர மற்ற திரவியங்களைமாத்திரம் கொடுக்கலாமென்று யாக்கியவல்கியர் கூறுகின்றார்.

பெண்கட்கு சீராகக் கொடுக்கப்படும் பாத்திரங்கள் உபயோகித்தால் புதுக்கருக்கு (கருக்கென்றால் நேர்த்தி) அழிந்துபோகுமென்று நினைத்து உபயோகிக்காமல் டை பாத்திரங்களைச்சீராக அடைந்த பெண்கட்குப் பெண்குழந்தைபிறந்து அக்குழந்தை பிராப்தியாகி அவட்குச் சீர்கொடுக்கும்வரை கொடுத்த மேனியாக வைத்திருப்பது நாகரீகமென்றும், எடுத்தாண்டு காவிப்பூச்சுமாறினால் அது அநாகரீகமென்றும், ஆவசியகம் நேரிட்டால் சீர்வந்திருக்கும் பாத்திரம்போல் விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும் சொல்கிறார்கள். இடத்திற்குக் கேடாய் வந்தபாத்திரங்களை ஆளாமல் வைத்திருப்பானேன்? புதுப்பாத்திரம் வாங்குவானேன்? என்று சீர்வந்த வீட்டில் பெரியோர் சொல்லி யெடுத் துபயோகித்தால் சண்டை விளைகிறது. ஸ்திரீகளின் வார்த்தையைக்கொண்டு புருஷர்கள்கூட அச்சண்டையிலும் அதை சம்பந்தித்த விவகாரத்திலும் தலை கொடுக்கிறார்கள். சீப்பு, சிடுக்குவாரி, சுண்ணாம்புக்கரண்டம், கொம்பு, சாந்துச்சிரட்டை, மைச்சிமிழ் இவைகள் வெள்ளியிலும் சுவர்ணத்திலும் செய்யவேண்டியது நாகரீகமென்றும் அவ்வாறு செய்யாவிட்டால் அநாகரீகமென்றும் நினைக்கிறார்கள். கலியாணசந்தர்ப்பங்களில் நிச்சயதாம்பூலத்திற்கும் விளையாடல்கட்கும் இயற்கையிலுள்ள தேங்காய் வாழைப்பழம் அநாகரீகமென்றெண்ணி வெள்ளியினாலும் தங்கத்தினாலும் அவைகளைச் செய்துவைத்து நாகரீகங் கொண்டாடுகிறார்கள். மகாவிகாரமான மரப்பாவைகட்கு ஸ்திரீகட்குக் குத்துவதுபோல் காது மூக்குக்குத்தி ஆபரணங்கள் இடுவது நாக

ரீகமென்றும் இல்லாவிட்டால் நாகரீகம் இல்லையென்றும் மரப்பாவைகட்கு வேண்டிய ஆபரணங்களில்பெரும்பணம் இழக்கிறார்கள். கொலுசாமான்களென்று யாதொரு உபயோகமில்லாத பதார்த்தங்களில் வீண்பணம் போடுகிறார்கள். முரம், படி, மரக்கால், அஞ்சறைப்பெட்டி இவைகள் கெடுதலானாலும் பித்தளையில்இருப்பது நாகரீகமென்று அனாவசியகமாய்ப்பணம் செலவு செய்கிறார்கள். முதலாவது கெர்ப்பமாயிருக்கும் பெண்கட்கு *மொட்டுச்சூட்டும் சுபசோபன முகூர்த்தத்தில் சாதாரணமாயுள்ள புஷ்ப மொட்டுகள் சூட்டுவது மேன்மையில்லையென்றும் பொன் வெள்ளியாற்செய்த மொட்டுச்சூட்டுவது நாகரீகமென்றும் நினைத்து அவ்வாறு பெருமுதல் அழிக்கிறார்கள். காலஞ்செல்லச்செல்ல, நாகரீகம் கூடக்கூடக், கலியாண சந்தர்ப்பங்களில் பெண்பிள்ளைகட்கு ஆகாரங்கூட பொன் வெள்ளியாற்செய்தளிப்பார்களென்று நினைக்கிறேன்.

தற்கால நாகரீகம்: சுவயகாரியபுத்தி.

நாகரீகமென்ற பேர்வைத்துக்கொண்டு நாளுக்குநாள் சுவயகாரியபுத்தி வர்த்தனையாகிறது. இவ்வகைச் சித்தவிருத்தியால் மனைவிகளின் சொற்கேட்டு மாதாபிதாக்கள், சகோதரர்கள், பெற்றோர்வழி யுற்றோர்கள் இவர்களை யண்டவொட்டாமல் அடித்து அவர்கட்கு எவ்வளவு கஷ்டநிஷ்டூரம் நேரிட்டாலும் அதிற்கொஞ்சம் கூட பச்சாதாபமும் அனுதாபமும் இல்லாமல் கேவலம் சுவர்போல் இருந்துவிடுகிறார்கள். ஒருத்தி குழந்தைகள் எவ்வளவு கதறியழுதாலும் தயங்கினாலும் அவளுடைய யாதாக்கள் (அதாவது ஓர்ப்படிகள், மைத்துனருடைய ஸ்திரீகள்) இந்த நாகரீககாலில் "ஒருத்தி குழந்தையை ஒருத்தி எவள் எடுக்கிறாள்? யாருக்கார்?" என்று உபேக்ஷையாயிருந்து விடுகிறார்கள். தத்தம்காரியமே பெரிதென்றும் நாகரீகமென்றும் நினைத்து,நிராதரவாய்விட்டுப்போயிருக்கும் தாயில்லாக்குழந்தைகளைக்கூட கவனித்துப்பார்க்காமல் ஈயும் எறும்பும் பிடுங்கும்படி கைவிடுகிறார்கள். கடும்புத்திரசோகப்பட்ட மாமனானாலும் மாமியானாலும் அவர்களுக்கிதமாக யாதொன்றும் செய்யாமல் ஆகாரங்கூடபரிமாறமனமற்று தத்தம் ஆகாரமுடிந்தவுடன் விசனமடைந்தவர்கள் எப்படியாவது எடுத்துவைத்து சாப்பிடட்டுமென்று அலக்ஷியமாகவும் கன்மனமாகவும் இருந்துவிடுகிறார்கள். பரஹிம்சையில் சற்றேனும் இரக்கங்காட்டாமல் தாமேன் என்று இருந்துவிடுகிறார்கள். வீடுகளில் பக்ஷணங்கள் பண்டங்கள் உண்டாக்கினாலும் பழவர்க்கங்கள் வருத்தினாலும் தாங்களும் தங்கள் ஸ்திரீ வழி மாமி மைத்துனன் மைத்துனி முதலியபேரும் அநுபவிக்கும்பொருட்டுப் பூட்டிவைத்து மறைவாகப்பெற்றோர் உற்றோர் சகோதரர்கள் காணாமல் அநுபவிக்கிறார்கள்.

தற்கால நாகரீகம்: பரகாரியஉபேக்ஷை.

ஆடையாபரண நாகரீகங்கொண்டாடும் தற்கால ஜனங்கள் அடுத்த வீட்டில் பிணங்கிடந்தாலும்,பிணத்தை யெடுப்பதற்கு ஆளில்லாமல் தவித்தாலும், ஓர்வித சகாயமும் செய்யாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு, பிரேதத்தை வண்டியில் ஏற்றி ஆடுமாடுகளைப் புதைக்கும் வண்ணம் புதைக்கும்படி பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அடுத்தவீட்டிற் கள்ளன்வந்து கொள்ளையிட்டாலும் ஏனென்று கேட்காமல் நமக்கென்னவென்றிருந்து விடுகிறார்கள்.

தற்கால நாகரீகம்: அற்பத்தனம்.

தாயில்லாக்குழந்தைகட்குக் கொஞ்சம் பால் கொடுத்து அன்னமிட்டால் பொருள் நஷ்டமென்றும் அதனால் ஆபரணஞ் செய்தணிவதற்கு சக்தி குறையுமென்றும் நினைத்து அக்குழந்தை விஷயத்தில் மகா வஞ்சனையாகவும் கடோரமாகவும் இருத்தல்; ஆபரணமணிந்து அழகு கொண்டாடுவதில் அதற்குத்தகுந்தபடி நிறம் செகப்பாய் இருக்கவேண்டுமென்று கருதி, வீட்டுபயோகத்திற்கு வேண்டி வாங்கப்பட்ட நெய் எண்ணெய் இவைகளை வைத்துப்பூட்டிக்கொண்டு எல்லாருடன் சாப்பிட்டால் தமக்கு நெய் குறைந்துவிடுமென்று தனியாயிருந்து சாப்பிடல்; பெற்றோர் உற்றோர் வந்திருக்குங் காலங்களில் பக்ஷணம் பண்டம்செய்தால் அவர்கட்கு கொடுக்கவேண்டிவருமென்று நினைத்து அக்காலங்களிற் செய்யாமல் அவர்கள் சென்றபின் செய்தல்; ஏழைபந்துக்கள் வந்தால் அவர்கள் காண நல்லபண்டங்கள்செய்தால்கண்படுமென்

* இதற்கு 'பூச்சூட்டல்' என்றும்சொல்கிறதுண்டு.



றும் கொடுக்கவேண்டுமென்றும் நினைத்து வெளியே போகச்சொல்லிக் கதவடைத்தல்; ஒருவேளை பண்டங்கள் அருந்திக்கொண்டிருக்கும் சமயத்தில் வந்துவிட்டால் அந்நியகிரகங்களிற் கிடைத்ததாகப் பொய் கூறல்; இவைகளெல்லாம் நாகரீகமாக மூடஜனங்கள் நினைக்கிறார்கள்.

தற்கால நாகரீகம்: அன்பின்மை.

ஆபரணம்செய்துபோட்டால்மாத்திரம் அன்புவைத்தல், இல்லாவிட்டால் உபேக்ஷை செய்தல், ஏழையை முகம்முறித்துப்பேசல், ஏழைகள் அன்னிய ஊரிலிருந்து வந்தாலும் வந்தாயா வென்று கேட்காதிருத்தல், முகம்கொடுத்துப் பேசாதிருத்தல், வரும்படி தாழ்ந்த எளியோரிடம் போக்குவரவில்லாமலிருத்தல், தாழ்ந்த நிலையிலுள்ள பால்ய சிநேகிதர்களை மறத்தல், இவைகளும் நாகரீகமாக நினைக்கப்படுகின்றன.

தற்காலநாகரீகம்: பேராசை.

இதற்கு உதாரணம் ஆவசியகமில்லை.

தற்காலநாகரீகம்: நாஸ்திகத்துவஷால்.

நமதுதேசத்தில் பைரங்கமான நாஸ்திகர்கள் கிடையார். ஆனால் நாஸ்திகன் எவ்வாறு நடப்பானோ அவ்வாறு நடக்கும் ஜனங்கள் முக்கியமாய் அங்கிலேயப்படிப்புள்ளவர்களிடம் காணலாம். இவர்கள் 'மனசே ராஜா' என்ற அவித்தையின் சித்தாந்தம் அனுசரித்து தெய்வபக்தி மூடத்தனமென மதித்து ஸ்நானம் வந்தனம் ஜெப தபம்இல்லாமல் விஷயாதுரராய் பிரபஞ்சசுகமேசுகமென்று கட் சரக்கு முதலிய லஹிரி பதார்த்தங்கள் நாகரீகசின்னமாகக் கைக்கொண்டு பூர்வாசாரங்களைநழுவவிட்டுநூதனமுறையெல்லாம் நுட்பமுறையாய் நம்பி ஈஸ்வரன் திருநாமம் எடுத்தால் சாதுத்வமென்றும் அநாகரீகமென்றும் நினைத்து விபூதிமுதலிய மதசின்னங்கள் அணிவது அகௌரவம் என்று தள்ளி சாந்துப்பொட் டணிந்து தர்மநிந்தையே பழய சினேகிதனாகப்பாவித்து பெரியோர் கைவிட்ட முறையெல்லாம் பத்தியமாகஅனுசரித்து தெய்வபக்தியுள்ளவர்களைபரிஹாசித்து அவர்கட்கிடுக்கண்வருத்தி நாகரீகம் கொண்டாடுகிறார்கள்.

தற்காலநாகரீகம்: கோஷ்டி.

ஜனங்கள் எப்படி நடக்கிறார்களோ அதற்கு விபரீதமாய் நடத்தல் நாகரீகமென்று நினைத்து உட்காரும் பாயிலும் படுக்கையிலும் எச்சிற் காளாஞ்சி (கோளாம்பை) வைத்துத் துப்புதல், பற்குத்தினால் கையலம்பா திருத்தல், நின்றுகொண்டு ஜலவிசர்ஜனம் செய்தல், பற்கொண்டு நகம் கடித்தெறிதல், எப்போதும் எச்சில் பண்ணுதல், ஸ்நானம்பண்ணாமல் ஆகாரம் அருந்தல், உண்ணும்போது ஜாக்கட்டு முதலிய அங்கியணிதல், சுருட்டுக்குடித்தல், சட்டைக்காரரைப்போல் டொப்பிவைத்தல், உண்டென்பதற்கு இல்லையென்றும் இல்லையென்பதற்கு உண்டென்றும் காரிய நியாயம் பாராமல் விதண்டாவாதஞ்செய்தல், தண்ணீர்சூப்பிக்குடித்தல் இவை முதலியவை நடத்துகிறார்கள். சில நாகரீகம் கொண்டாடும் அறிவிலிகள் ஒவ்வொரு நாளும் வஸ்திரம் மாறாமல் உடுத்தினவஸ்திரத்தையே அனேகநாள் உடுத்தி படுக்கைவஸ்திரமென்றும் வெளிவஸ்திரமென்றும் வித்தியாசம் கவனியாமல் தேவாலயங்கள், யாகசாலைகள் மற்றும் பரிசுத்தஸ்தலங்கள் இவைகளில்வந்தாலும் எல்லோரையும் அசுத்தப்படுத்தி ஓர்வித சிரத்தை பக்தியில்லாமல் கோஷ்டி காண்பிக்கிறார்கள்.

தற்காலநாகரீகம்:
இயற்கைவிடுத்த செயற்கைகுணம்.

வாக்குமனமும் ஒன்றுபடாதசெய்கை, மனம் ஒன்றுபடாதவார்த்தை, பாவமாறுபாடு இவைகளும் நாகரீகமாய் நினைக்கிறார்கள்.

தற்காலநாகரீகம்: துர்வழக்கு.

கோர்ட்டுகளிலும் வக்கீல்களிடத்திலும்போக்குவரவு வைத்துக்கொண்டு தைரியமாய்ப் பேசி உபசரிக்கப்படுவது நாகரீகமென்றுகருதி, வழக்கில்லாவிட்டாலும் அந்த அபிப்பிராயம் நிறைவேறும்பொருட்டு துஷ்தர்க்கம் உண்டாக்குதல், துரும்பைத் தூணாக்கல், விடாகண்டன் என்று பெயர் வாங்கும் பொருட்டு என்னசெலவுசெய்தாவது பெரியகோர்ட்டுவரை வழக்காடல், கக்ஷிகளை மோசப்படுத்தத் தந்திரஞ்செய்தல், வழக்கில் நிபுணன் என்று பேர்வாங்கும் பொருட்டு தோலங்கரித்தாற்போலபொய் ஜோ

டனைசெய்து நிர்மிதமாய் விவகாரப்படல், இப்பேர்ப்பட்ட பிரவிருத்திகளைச் செய்கிறார்கள்.

தற்காலநாகரீகம்: அகங்காரம்.

பெரியோர்முதியோரென்ற மதிப்பின்றிதாம் எல்லோரிலும மேன்மையென்றுநிதானித்து லக்ஷியமில்லாமல் இருத்தல், தான் என்றபிடிவாதம் எல்லாவற்றிலும் உசிதா உசிதம் பாராமல் நிலை காட்டி, தான் யாரையும் பணியாமல் தன்னை யெல்லோரும் பணியவேண்டு மென்று நாட்டம்வைத்தல, தன்னைப் பணியாதவரைக் கெடுக்கமுயல்தல், முற்காலத்து இருஷிகள் முனீஸ்வரர்கள் இவர்களைத் துடுக்காக எடுத்தெறிந்துபேசல், பிறரைப் புண்படுத்திப் பேசுதல் இவைகளெல்லாம் நாகரீகமாக சில அறிவிலிகள் எண்ணுகிறார்கள்.

தற்காலநாகரீகம்: அதர்மம்.

சமயம்போல் பொய்பேசி, அசத்தியஞ்செய்து,மீனுக்குத்தலையும் பாம்புக்கு வாலுங்காட்டி, பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிட்டுப், பாலுக்குக்காவலும் பூனைக்குத் தோழனுமாக இருந்து அகட விகட சாமர்த்தியங் காட்டி, தோஷித்தனம்,புறட்டுத்தனம் தாராளமாய் உபயோகித்து பொருள் சம்பாதித்தல் நாகரீகமென நினைக்கிறார்கள்.

மேற்கண்ட ஒருவகை அபிப்பிராயமும் நாகரீகத்தைச்சேர்ந்ததன்று; வாஸ்தவமான நாகரீகம் இன்னதென்று அடுத்த பத்திரிகையில்விவரிப்போம்.

எஸ். இராமசாமிஅய்யர் பி.ஏ., பி.எல்.

## * இராசாங்க வரிகள்.

சில தேசங்களில் கள்ளர்கள் எப்போதும் எங்கே கொள்ளையகப்படு மென்று தேடித்திரிகின்றார்கள். அதனால் அங்கே ஆயுதம்தரித்தும் சாக்கிரதையாயும் இருந்தாலொழிய ஒருவனும் திருடப்படாமல் தப்புதல் முடியாது. அங்கே பயிரிடுவோன் தன் புலங்களில் விதைவிதைக்கப்போம்போது விதைத்தானியத்தைத் திருடர் பறித்துக்கொண்டு போகாமற் காக்கும்படி வாள் முதலிய ஆயுதங்கள் தரித்தவனொருவனைத் துணையாகக் கூட்டிக்கொண்டு போவது வழக்கமென்று அத்தேசங்களுக்குப் போய் வந்த யாத்திரிகர் சொல்கிறார்கள். இந்த வழக்கத்தினால் அங்கே நிலத்தைப்பயிரிடும் செலவு அதிகமானதாயிருக்க வேண்டும்; எப்படியென்றால், ஒருவன் செய்யும் வேலையை இருவர் செய்ய வேண்டியவராகிறார்கள்; ஒருவன் வேலை செய்யும்போது மற்றொருவன் அவன் வேலைக்கு இடையூறு வாராமல் காத்தல்ஆவசியகமாயிருக்கிறது. இதனால் கிரமத்தில் ஒருவன் அடைய வேண்டிய (அநத நிலத்தின் விளைவாகிய)பலனை இருவர் பங்கிட வேண்டியதாகின்றது. இப்படியெல்லாம் வேண்டும்கால் செய்யப்பட்ட சொத்து பூரணமாகக்காக்கப்பட்டதாகவும் இல்லை. ஏனெனில், அடிக்கடி காப்பவர்களுடைய தொகைக்கதிகமான திருடர்கள் வந்து நெடுங்கால உழைப்பினால் விளைந்த விளைவெல்லாவற்றையும் கொள்ளை கொண்டுபோய் விடுகிறார்கள். ஆகவே, இந்தத்தேசங்களில் சொற்பநிலந்தான் பயிரிடப்படுகிறது. பெரும்பான்மையான நிலம் பயிரிடாமல் பழாகக்கிடக்கிறது. குடிகளும் சொற்பராகவே யிருக்கிறார்கள். அவர்கள் தொகை அங்குள்ள பயிரிடத்தக்க நிலமெல்லாம் பயிரானால் விளையும் விளைவினால் சீவனஞ் செய்யக்கூடிய ஜனங்களின் தொகையில் இருபதில் ஒரு பங்கும் இல்லை. அவ்வளவு சொற்பமான அவர்கள் மிகுந்த தரித்திரராகவும் இருக்கிறார்கள். இவ்வளவுக்கும் காரணம் சொத்துக்குத் தக்க பாதுகாப்பில்லாமையே. இப்போதுகூறிய நிலைமையிலேயே, ஜனங்கள் மிலேச்சராகவிருக்கும் சகல தேசங்களும் இருக்கின்றன. ஒரு மிலேச்சனுடைய காலத்திலும் வேலையிலும் கவனத்திலும் பெரும்பான்மையானபாகம் காத்துக்கொள்ளும் வகைகளைச் சவதரிப்பதிலேயே பிரயோகப்படுகின்றது. அவன் தன்னைக்காப்பதில் தானே எதிர்க்கக்கூடிய பகைவரை எதிர்க்க உபயோகமான ஆயுதங்களைச்சேகரிப்பதும் தனக்கு மிஞ்சிய பகைவர்கையினின்று தப்பும்படி மறைவிடந்தேடுவதும் அவன் முயற்சியாயிருக்கின்றன. ஒரு வருஷத்தில் ஆயிரம் பேரில் ஒருவர் ஐரோப்பாவில் கொல்லப்பட்டால்,அப்படிப்பட்ட மிலேச்சதேசங்களில் நூறுபேர் கொல்லப்படுகிறார்கள். அத்தேசங்களில், ஐ

* Translated from Whatley's Easy Lessons on Money Matters, with a few abridgements and adaptations.



ரோப்பாவில் எவ்வளவு சொத்து இழக்கப்படுகின்றதோ, அவ்வளவு சொத்து இழக்கப்படவில்லையென்பது உண்மையே. இதற்குக் காரணம் அத்தேசத்தார் இழக்கும்படியுள்ள சொத்து அதிசொற்பமாயிருப்பதேயன்றி வேறொன்றுமில்லை. அவர்களுடைய காலத்திலும் வேலையிலும் பாதிக்கு மேற்பட்டபாகம் சொத்தைப் பாதுகாப்பதற்கே உபயோகமாகின்றது. அந்தப் பாதுகாப்பும், அவர்கள் முயற்சியின்பலனை யிழக்காதிருப்போமென்று ஒரு காலத்திலும் உறுதியாயிருக்கத்தக்க பூரணமான பாதுகாப்பாகவில்லை.

இவ்விதமான அதி கேவலமான நிலைமையை நிவிர்த்திக்கத்தக்க பரிகாரம் ஒழுங்கான இராசாங்கமே. இராசாக்கத்தாருடைய தொழில் பாதுகாப்பதே. அவர்கள்குடிகளுடைய தேகத்தையும் சொத்தையும் பலாத்காரத்துக்கும் வஞ்சனைக்கும் உள்ளாகாதபடி காக்கக்கடமை பூண்டவர்கள். அவர்கள் இந்தக் கடமையை நிறைவேற்றுவதில், அயற்றேசத்துப் பகைவர்கள், கூட்டக்கொள்ளைக்காரர், கலகக்காரர் முதலியவர்களாற் கெடுதி நேராதபடி காக்க யுத்தக்கப்பல்களையும் சேனைகளையும் ஆயத்தப்படுத்திவைத்திருக்கிறார்கள்; குற்றஞ்செய்தோரைப் பிடிக்கும்படி "தலையாரியை" யுள்ளிட்ட கிராமக் காவல் வேலைக்காரரையும்,"கான்ஸ்டேபில்" முதலிய போலீசு உத்தியோகஸ்தர்களையும் குற்றவாளிகளை விசாரித்து நியாயத் தீர்ப்பு விதிக்கும்படி "மாஜிஸ்திரேட்டுகள்" "ஜில்லாஜட்ஜிகள்" முதலிய நியாய பரிபாலகர்களையும் நியமித்துக் கைதிகளைச் சிறைப்படுத்தும்படி சிறைச்சாலைகளும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்; சுருக்கமாகச் சொல்வோமானால், அவர்கள் பிரஜைகளுடைய சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் அவசியமான சகலவற்றையும் செய்திருக்கிறார்கள்.

போர்க்கப்பல்களைச் சேர்ந்த சேனைகளையும் மற்றச்சேனைகளையும் பற்றிய செலவுக்கும் இராசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற மற்ற ஏற்பாடுகளைப் பற்றிய செலவுக்கும் ஜனங்கள் பணங்கொடுக்கிறார்கள். மேற்கூறிய சகல ஏற்பாடுகளும் நம்முடைய நன்மையின் பொருட்டே செய்யப்பட்டவைகளாதலால் அவைகளைப் பற்றிய செலவை நாம் பொறுத்துக்கொள்ள வேண்டியது நியாயமே. அந்தச்செலவுகளுக்காக நாம் இராசாங்க வரிகள் செலுத்துகிறோம்; வரிகள், ஜனங்கள் ஆளுகை செய்யப்பெற்றுப் பாதுகாக்கப் படுவதற்குக் கொடுக்கும் சம்பளமே. அவைகள் மேற்கூறியபடி மிலேச்ச தேசத்தில் பயிரிடுவோன் கள்ளரால் கேடு நேரிடாதபடிகாக்க வாள்முதலிய ஆயுதத்துடன் காப்பவனுக்குக் கொடுக்கும் கூலியை ஒத்திருக்கின்றன.

சிலர்இந்தஉண்மையை அறிகின்றார்களில்லை; சிலர் அறிந்தும் மறந்துவிடுகின்றார்கள். அனேகர் வரிகளை மற்றச் செலவுகளைப்போலக் கருதாமல் அவற்றினின்றும் மிகவும் பேதமானதென்று நினைக்கிறார்கள்; அவ்வரிகளுக்குப் பதிலாகத் தாங்கள் யாதொரு பிரயோசனமும் அடைவதாக நினைக்கிறதில்லை. ஆனால், உண்மையில், மற்றச்செலவுகளால் எவ்வாறு பிரதிபலன் அடைகின்றோமோ அவ்வாறே வரிகள் செலுத்துவதனாலும் பிரதிபலனடைகின்றோம். தையற்காரனுக்கு அவன் நமக்கு உடை தைத்துக் கொடுப்பதற்காகவும், * கொத்தனுக்கு வீடுகட்டித் தருவதற்காகவும் நாம் கூலிகொடுப்பதுபோலவே, இந்திய சக்கரவர்த்தினி யாகிய மஹாராணிக்கும் "பார்லிமெந்து" மஹாலோசனைச் சபையாருக்கும் அவர்கள் "கவர்னர் ஜெனரல்" "கவானர்" முதலாயினோர் மூலமாக நம்மை ஆண்டு நாம் கொள்ளையிடப் படல், கொலையுண்ணல், வஞ்சிக்கப்படல் முதலிய தீங்குகளுக்கு உள்ளாகாமல் நம்முடைய உடலையும் பொருளையும் காப்பதற்காகப் பணங்கொடுக்கிறோம். துரைத்தனத்தாருடைய பாதுகாப்பில்லையானால், நாம் ஆகாரத்தையும் உடையையும் சவதரிப்பதற்கு நம்முடைய காலத்தில் பாதிக்காலமும் செலவிடச் சத்தியற்றவர்களாகிப் பாதிக்கு மேற்பட்ட காலத்தைத் திருடரால் மோசம் போகாமல் காக்கும் முயற்சியிலாவது நமக்காகக் காவல் செய்பவர்களுக்குக் கூலிகொடுக்கும்பொருட்டு வேலை செய்வதிலாவது செலவிட வேண்டியவர்களாவோம். இந்தச்செலவு வரிகள் கொடுப்பதாகிய செலவினும் மிகவும் அதிகமாயிருக்கும். ஆயினும்

* கொல்லத்துக்காரன்.

அப்படி யதிகமான செலவினால் நாம் அடையும் பாதுகாப்பானது, மிலேச்சர் அவ்வாறு செலவிட்டு அடையும் பாதுகாப்பைப் பிரத்தியக்ஷமாகப் பார்ப்பதனால், மிகவும் குறைபாடுடையதென்று தெளிவாக அறியலாம். இதுவரையிருந்த எந்தத் துரைத்தனமும் துரைத்தனமேயில்லாமையினும் மிகச் சிறந்ததும் செலவு குறைவானதுமாக விருந்திருக்கிறது. சில உரோமசக்கரவர்த்திகள் ஒரு தீங்குஞ்செய்யாத குடிகளெண்ணிறந்தவர்களைக் கொள்ளையிட்டுக்கொலைசெய்யும்கொடுங்கோலதிபதிகளாயிருந்திருக்கிறார்கள். அவர்கள் ஆளுகையில் அமைந்திருந்த குடிகளின் பெருந்தொகைக்குத் தக்கபடி அவர்களுள் பத்துவருஷத்தில் நடந்த கொள்ளை கொலையினும் அதிகமான கொள்ளையும் கொலையும் சில மிலேச்ச குடிகளுள் ஒரு வருடத்தில் நிகழ்கின்றன.

நமக்கு வேண்டும் எதையும் நாம் பணம்முதலிய ஈடுகொடுத்துப் பெற்றுக்கொள்வது போலவே, துரைத்தனத்தாரிடத்திருந்து நாம் பெறும் பாதுகாப்புக்குக்கூலி அல்லது கிரயமாக அவர்களுக்கு நாம் வரிகள் கொடுக்கிறோம். ஆனால் மற்றக்கிரயத்துக்கும் வரிகளாகிய கிரயத்துக்கும் ஒரு முக்கியமான பேதமிருக்கிறது. மற்றப்பொருள்களுக்கு இஷ்டமிருந்தால் கிரயங்கொடுத்து வாங்கலாம்; இல்லையானால் வாங்க வேண்டியதில்லை. அப்படியன்றி இராசாங்கத்தார் காத்தலை நாம்விரும்பவில்லையாயினும்அவர்கள் ஏற்படுத்தியவரிகளைக் கொடுக்காதிருக்கக் கூடாது. நாம்செம்மானிடத்திலிருந்து செருப்பு வாங்க விருப்பமில்லாமல்நாமேதைத்துக்கொள்ளக்கருதினால் நாம் அப்படியே செய்யச் சுதந்தரமுடையவர்களாக விருக்கிறோம். இதுபோலவே நாம் கிரயம்கொடுத்து வாங்கும் எந்தப் பொருள் விஷயத்திலும் சுவாதீனராயிருக்கிறோம். ஆனால் அவ்விதசுயாதீனம் இராசாங்க வரிகள் செலுத்தும் விஷயத்தில் இல்லை. எவனாயினும் ஒருவன் "நான் போர்ச்சேவகர், போலீசுச்சேவகர், 'ஜட்ஜி'கள் முதலியவர்களுடைய உதவி சிறிது மில்லாமல், என் தேகத்தையும் என் சொத்துக்களையும் நானே காத்துக்கொள்வது நலமென்று அப்படி செய்யத்தீர்மானித்திருக்கிறேன். ஆகையால் நான் வரிகள் செலுத்தமாட்டேன்" என்றால் அவனுக்குப் பின்வருவது மறுமொழியாகும்: "அப்படியானால், ஒரு இராசாங்கமும் வழங்காதவனங்களுக்குப் போய்த்தனியேவாழ்வாயாக; அல்லது எந்தமிலேச்சக்கூட்டத்தாரோடாயினும் சேர்ந்து அவர்களைப்போல் வாழ்வாயாக; ஒரு துரைத்தனத்தார் ஆளுகையில் அமைந்த இராச்சியத்திலே நீ எங்களோடு வாழுமளவும், நீ வேண்டாமென்றாலும் அந்தத்துரைத் தனத்தாருடைய பாதுகாப்பைப் பெறாதிருக்கக்கூடாது. அயற்றேசத்துப்பகைவர் கொள்ளையிடாதபடி நமது தேசத்தைக் காக்கும் போர்க்கப்பற் சேனையும் நிலத்துச் சேனையும் எங்களுக்குக் காப்பாயிருப்பது போலவே உனக்கும் காப்பாயிருக்கின்றன. கள்ளர்களாலும் கொலையாளிகளாலும் தீங்குநேராதபடி நியாயச்சட்டங்களாலும் நீதிபதிகளாலும் நாங்கள் காக்கப்படுவது போலவே நீயும் காக்கப்படுகின்றாய். அந்தச்சட்டங்களும் நியாயாதிபதிகளும் இல்லையானால், அந்தத்தீயர்கள் ஜனங்களை நாசஞ்செய்து விடுவார்களல்லவோ? இப்படியெல்லாமிருப்பதனால், துரைத்தனத்தாருக்கு உன்னைக்காக்க இஷ்டமிருந்தாலும் இல்லையானாலும் அவர்கள் பாதுகாப்பில் ஓர் பாகம் உன்னையடையா திருக்கக்கூடாது. ஆகவே துரைத்தனச்செலவில் உன்பாகத்தைச் செலுத்த நீ சம்மதித்தாலும் சம்மதிக்கவில்லையானாலும் உன்னைச் செலுத்தும்படி கட்டுப்படுத்துவது நியாயமாகவேயிருக்கிறது. நீ அந்தக்கட்டுப்பாட்டுக்குட்படச்சம்மதிக்காதவனானால், நீஇருக்கும் இராச்சியத்தைஆவசியகமாகவிட்டு நீங்கிப்போய் யாதாயினும் ஒரு வனத்தில் சஞ்சரிக்கவேண்டியதே விலக்கக் கூடாத முடிவு." ஆகையால் ஒருவன் ஒரு தேசத்தில் இருக்குமளவும் அதன் துரைத்தனத்தாருடைய ஆளுகைக்குள்ளடங்கி அவர்கள் ஏற்படுத்திய வரிகளைச்செலுத்தும்படி அவனைக்கட்டுப்படுத்துவது முற்றிலும் நியாயமே. ஒவ்வொருவனும் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பது இராசாங்கத்தாரால் தீர்மானிக்கப்படுகின்றது. ஏனெனில் இந்த வரிகளுக்கும் மற்றக் கிரயங்களுக்கும் வேறொரு முக்கிய பேத மிருக்கின்றது. அது இன்னதென்று தெரிவோம். நாம் ஒருவனை நமக்காக வேலை செய்யும்படி கூலிக்கமர்த்தும்போது இவ்வளவு கூலிக்கு இவ்வளவுவேலை செய்ய வேண்டுமென்று நாம் அவனோடு நமக்குச் சம்மதமானபடி உடன்படிக்கை செய்து கொள்கிறோம். கூலியின் அளவைப்பற்றி நாமும் அவனும் ஒற்றுமைப்படவில்லையானால், நாம் அவனுக்குப்பதிலாக வேறொருவனை நியமித்துக்கொள்வோம். அப்படியன்றி, எந்தத் தேசத்துத் துரைத்தனத்தாரும் (அத்துரைத்தனத்துக்கு முதன்மையுடையவர்கள் அரசன் அல்லது அரசியாகவாயினும் "பிரஸிடென்ட்" ஆகவாயினும் "பார்லிமெந்து" மகாசபையாராகவாயினும் வேறெந்த வகையாராகவாயினும் இருந்தாலும்) தங்கள் குடிகளைத்தங்களுக்கு அடங்கி நடக்கும்படி செய்யும் அதிகாரமுடையவர்களாயிருக்கவேண்டியது ஆவசியகம். அப்படியில்லாவிட்டால் அவர்கள் அக்குடிகளைக் காக்குங் கடமையை நிறைவேற்றுவது அசாத்தியமாகும். ஆகையால் ஒருவன் தன் பாதுகாப்பினிமித்தம் எவ்வளவு வரிகொடுக்கவேண்டுமென்பது அவனுடைய இஷ்டப்படி தீர்மானிக்கும்படி விடப்படவில்லை. துரைத்தனத்தாரே வரிகள் இவ்வளவென்று தீர்மானித்து அவ்வரிகளைக்குடிகள் செலுத்தும்படி கட்டுப்படுத்துகிறார்கள்.

அனேக துரைத்தனத்தார் இந்த அதிகாரத்தை அநியாயமாகப்பிரயோகித்துத் தங்கள் குடிகளைக்காத்து ஆள்வதற்கு நியாயமாகச் செல்லுஞ் செலவுக்கு மிக அதிகமான பணம்கொடுக்கும்படி அக்குடிகளை நிர்ப்பந்தித்து வரி தண்டியிருக்கிறார்கள். இங்கிலாந்து போன்ற சில தேசங்களில் ஜனங்கள் இந்தவிதமான அநியாயங்களுக்குள்ளாகாமல் தங்களை ஆள்வோரைத் தாங்களே நியமிக்கிறார்கள். அதெப்படியென்றால், அவர்கள் தங்கள் தேசத்து இராசாங்கத்தின் சகல அதிகாரங்களையும் வகித்த "பார்லிமெந்து" மஹாசபையின் "மெம்பர்"களைத்தாங்களே தெரிந்தெடுத்து நியமிக்கிறார்கள். அந்த மெம்பர்களில்லாமல் எந்த நியாயச்சட்டமாயினும் வரியாயினும் ஏற்படுத்தல் முடியாது. துரைத்தனத்தார், நம்மெல்லாருடையபொதுப் பணத்தை வீணாகச்செலவிடக்கூடாதென்பதும், ஆவசியகததுக்கதிகமாக நம்மிடம் வரிவாங்கக்கூடாதென்பதும் மிகவும்நியாயமே. ஆனால் அனேகர், ஒரு துரைத்தனத்தாரால் பாதுகாக்கப்பட்டு வாழ்வதில் அவர்கள் அனுபவிக்கும் நன்மையைக்கருதி எவ்வளவுநன்றியறிவுடையவர்களாக விருக்கவேண்டுமோ அவ்வளவு நன்றியறிவுடையவர்களாயிருக்கிறார்களில்லை; ஏனெனில் அவர்கள், யாதொருதுரைத்தனமுமில்லாமல் வாழ்பவர்களுடைய நிர்ப்பாக்கிய நிலைமையையறியாதவர்களாய், அல்லது அறிந்தும் சிந்தியாதவர்களாயிருக்கிறார்கள். நாம் கிரயம்கொடுத்து வாங்கும் சகலசரக்குகளிலும், துரைத்தனத்தாரிடத்திருந்து நாம் பெறும் பாதுகாப்பாகிய சரக்குமிகவும்விலைகுறைந்தது. அது எவ்வளவு விலைகுறைந்ததென்பது, அதைத் துரைத்தனத்தாருடைய உதவியின்றி, நாமேசவதரிக்கப்புகுந்தால்செல்லும் செலவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் விளங்கும். நாமெல்லாரும் நம்முடைய வஸ்திரங்களையும் செருப்புக்களையும் நெய்வோனிடத்திருந்தும் செம்மானிடத்திருந்தும் வாங்காமல் நாமே செய்து கொள்வோமானால், அவைகள் மிகவும் கேவலமானவைகளாகவும், அவைகளைச்செய்வதில் நமக்குச் செல்லும் காலத்தையும் சிரமத்தையும் கவனிக்குமிடத்து, நிரம்ப அதிகவிலையுள்ளவைகளாகவும் இருக்கும். நம்முள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தேகத்தையும் சொத்தையும்தாங்களே காக்கும்படி நேரிட்டால், அது உடையும்செருப்பும் நாமே செய்து கொள்வதிலும் மிகவும் அதிக கஷ்டமானதாயிருக்கும். அப்படிச் சவதரிக்கும் பாதுகாப்பு மிகுந்த செலவுடையதாயிருப்பதேயல்லாமல் அதி சொற்ப பிரயோசனமுடையதாகவும் இருக்கும்.

வே. ப. சு.

## ஆபத்துக்கிடமான அபவாதம்
அல்லது
## கமலாம்பாள் சரித்திரம்.

[20 - வது பக்கத் தொடர்ச்சி.]

சுப்பம்மாள் உள்ளேபோகும்பொழுது தலை குனிந்து சென்றாளே அவள் எவ்விதம் திண்ணையில் உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்திருக்கக்கூடும் என்று சிலர் சந்தேகிக்கலாம். 'மங்கையர்கண் பெருவிரலைப் பார்க்கும்போதே கடைக்கண் உலகெலாம் சுற்றும்' என்பது பழமொழி. அப்படியே சுப்புவும் ஆந்தையின் விழியையுடையவளானாலும் 'காதங்கள் கோடிகள் சென்றுகாணும்' கருடனிலும் அதி தீட்சண்மான கடைக்கண் பார்வையையுடையவள். இவ்வளவு விசேஷசக்தி உள்ளதுபற்றியல்லவோ அவள் வப்பர் மகாசபைக்கு அக்கிராசனாதிபதியானாள். அவளைப்பற்றியும் அவளுடைய சபையைப்பற்றியும் பின்னால் நாம் பலமுறை சொல்லவேண்டி வரும். சுப்பு

நமக்கு முக்கியதோழி. எப்படி கூனி சூர்ப்பநகை முதலியஉத்தமஸ்திரீகள்இல்லாவிடில் இராமாயணம் நடந்திருக்கமாட்டாதோ,அப்படியே நாம் எழுதிவருகிற அற்புத சரித்திரமும் சுப்பம்மாள் இல்லாவிட்டால் நடந்திருக்கமாட்டாது. ஆகையால் தேவர்கள் ரிஷிகள் முதலிய சாதுக்கள் எல்லாரும் கூனி சூர்ப்பநகை இவர்களுக்கு வந்தனமுள்ளவர்களா யிருப்பது போல் நாமும் சுப்பம்மாளிடத்தில் அதிக விசுவாசமாயிருப்போமாக.

கமலாம்பாள் 'வாரும்' என்றவுடன் சுப்பு அவளை நோக்கி 'மதுரையிலேதானே கலியாணம்? நல்லவேளை அம்மா! மனதிற்கு இப்பொழுதுதான் சமாதானப்பட்டது' என, கமலாம்பாள் 'ஏதோ தெய்வ சங்கல்பம்போலிருக்கின்றது, நாம் செய்கிறோம் நாம் போகிறோம் என்றுநினைப்பதேயல்லாமல் யதார்த்தத்தில் நாம்செய்கிறது ஒன்றுமில்லை' என்றாள்.

சுப்பு: 'அவ்வளவுதானே, அப்படித்தானே போகவேண்டும்; அதைவிட்டு வீண்வார்த்தைசெலவழிப்பதில் கலகத்தைத்தவிர வேறுலாபமுண்டோ?'என, கமலாம்பாள்'நாம்யாரையாவதுதவறிப்போய் ஏதாவதுசொல்லிவிட்டோமோ' என்று சந்தேகித்து 'வார்த்தையா?என்னவார்த்தை?எப்பொழுதுசொன்னேன்? என்றாள். சுப்பு'நீயா! நன்னாயிக்குது, தங்கக்குடம் இன்னால் உனக்கே தகும்' என்றுசொல்லிமுடிப்பதற்குமுன் கமலாம்பாள் 'இவள் யாரோசொன்னவார்த்தையை நம்மிடம்சொல்லவருகிறாள். இதற்கு இடம் கொடுக்கக்கூடாது' என்று எண்ணி சீக்கிரம் உள்ளே சென்று சுப்பம்மாளுக்கு நெருப்புக்கொண்டுவந்து கொடுத்துவிட்டு 'பலர் பலவிதம் சொல்லுவார்கள். ஊர்வாயைமூட நம்மாலாகுமோ? ஈரப்புடவையுடன் நிற்கிறீர்களே' என்றாள்.

சுப்பம்மாளுடைய தொழிலும் திறமையும் அவளுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் அவளைச்சீக்கிரம் வெளியே அனுப்பிவிட்டல் தான் க்ஷேமம் என்று எண்ணி ஜாடையாய் ஈரப்புடவையுடன் இருக்கிறீர்களே என்றாள். சுப்பு. அந்தக் குறிப்பை அறிந்தாலும் பொன்னம்மாளுக்கும் அவளுக்கும் கலகம் மூட்டுவது அதிக ஆவசியகமா யிருந்தபடியால் அவள் வெளியேபிடித்துத் தள்ளச்சொன்னாலும் போவதில்லை என்று தீர்மானம்செய்துகொண்டு அருகில் இருந்த ஒருமுட்டையை எடுத்து நெருப்பைமூட்டிக்கொண்டுஉட்கார்ந்தாள். சுப்பம்மாளுக்கும் அவள் சபையாருக்கும் கமலாம்பாளிடத்தில் அதிக வெறுப்பு உண்டு. ஏனெனில் அவள் வம்பர் மகாசபையைப்பற்றி கொஞ்சமும் கவனிப்பதேயில்லை. அதில் அரைநாழிகையாயினும் சேருவதில்லை. அதை சற்றும் லட்சியம்செய்யாதவள்போல் அவள் நடந்துவந்தாள். மேலும் கணிதசாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்ற வித்வான்களுக்கு கடினமான கணக்குகளைச் செய்வதில் விசேஷ திருப்தி: காமவிஷயத்தில் அழுந்தி கற்பழிப்பதில் கௌரவதா பட்டம் பெற்ற விடபுருஷர்களுக்கு அனுபவிப்பதற்குத்தயாராய் கைவசத்திலுள்ள சொந்த ஸ்திரீகளைக்காட்டிலும் குட்டிச்சுவரேறி குடுமி அறுபட்டு வருத்தத்துடன் அடையும் அன்னியஸ்திரீகளை அனுபவிப்பதில் அதிக திருப்தி. அதுபோல் சகலவித்தையிலும் கைதேர்ந்து நாரதருக்கும்மேல் என்று பிரசித்தி அடைந்த சுப்பம்மாளுக்கு சுலபத்தில் சண்டை செய்யும் சாமானிய ஜனங்களுக்குள் சண்டை மூட்டுவதைக்காட்டிலும் சண்டை என்பதையே அறியாத சாதுவாகிய கமலாம்பாளை கலகத்தில் இழுத்துவிடுவதில் அதிக திருப்தி. எப்பொழுது தனக்கு சமயம் கிடைக்குமென்று அதிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அவள் சாதாரண நெருப்பை மூட்டுவதோடுகூட கலக நெருப்பையும் அடியில் வருமாறு மூட்டத்தொடங்கினாள்:—

சுப்பு.—நான் ஆத்தங்கரையில் (சுப்புவுக்கு ரகரம்வாயில் நுழையாது, அதற்குபதில் அவள் யகரம் தான் சொல்லுவாள்.) பொடவே தோச்சுக்கிண்டியிந்தேன். அங்கே குலுக்கி மினிக்கிக்கிண்டு தஞ்சாவூராவந்தாள்: ஒன்ஓய்ப்படி. நான், என் வாயிலே சனி இயுந்தது, வெயுன்னே இயுக்காமல் அவளை பாத்து உங்க மச்சுனனாத்துத் திண்ணையிலே யாய் உக்காந்தியுக்கியா இன்னு ஒன்னைக் கேகல்யோ அதுபேலே கேட்டேன். அதுக்கு அவள் 'அதுயாயுக்குத்தெயும் எவுயுக்குத்தெயும் கெணத்துத்தப்பளைக்கு நாட்டுவளப்பமேன். ஊய் (ஊர்) எழவெல்லாம் நமக்கு என்னத்துக்கு.' அப்பிடி இன்னாள். நான் 'என்னடி—'

கமலாம்பாள்.—'அவள் கிடக்கிறாள் பயித்தியக்காரி. யார்சொல்லுகிறாள், அவள்தானே. இதை ஒரு வார்த்தையாக நீங்கள் சொல்லவேண்டுமோ.'

சுப்பு.—'ஆமா இந்த சாம்பியாஜ்யத்தைசொல்யத்துக்குத்தான் வாசல்விட்டுவாசல்வந்தேன்.சொல்யேன் முழுக்கக்கேளு. அப்புயம் நீயே சொல்லுவே. அவளாபயித்தியக்காயி? பல்லுக்குபாம்பிலே விஷம் (பாம்புக்குப் பல்லில்விஷம் என்பதற்குப்பதிலாக) அவளுக்கு ஓடம்பெல்லாம் விஷம். ஓனக்கும் முத்துசாமிக்கும் வெளுத்ததெல்லாம் பாலு. பாகமாயபோது அவள் நகையை கியுடினது கோட்டுக்கு (கச்சேரிக்கு) இயுத்துவிடத் தெயிஞ்சது, சியுபாடுவித்து வட்டிக்குப்போட்டுக்கிண்டு இயுக்கியது எல்லாம் மயந்து போச்சோ. என்னமோ அவள் சொன்னாப்லே இயுக்கு. தஞ்சாவூயா அவதான்பயித்தியக்காயி நம்பதான் கெட்டிக்காயிகள்.'



கமலாம்பாள்.—'அவள் புத்திசாலியா யிருப்பது நல்லது தானே. அதனால் நமக்கென்ன தோஷம். போனதெல்லாம் போகட்டும்: இப்பொழுது நாங்கள் இருவரும் இருப்பதுபோல் அவ்வளவு நேசமாய் உலகத்தில் யார் இருக்கிறார்கள்.'

சுப்பு.—'ஆ, என்னமோ சொன்னாப்ளே யிக்கு. யாஜா (ராஜா) பொண்ணெ கல்யாணம் பண்ணிக்கிண்ட சம்பந்தமாயிய்க்கு. நீ நல்லவதான்: ஒன்னெ சும்மா இயுக்கவிட்டாத்தானே,என்ன கய்வம்! என்ன செயுக்கு! தலே (தலை) கழுத்திலே நிக்கமாட்டேன்கியது. என்னமோ படிச்சு இயுக்கியாளாம் படிப்பு அதிசயபடிப்பு. என்ன கேலி,எங்களை—'

கமலாம்பாள்:—'என்ன அப்படி சொல்லுகிறீர்கள். நீர் சொல்வது புதிதாயிருக்கிறது எனக்கு. அப்படி எல்லாம் இருக்கமாட்டாளே.'

சுப்பு.—'நீ எண்ணிக்கிண்டுய்க்கே. அவ பேச்ய பேச்சைக்கேட்டா புழுத்தநாய் குயுக்கேபோகாது. நீ ஆயியம் பொன்குடுத்தாலும் உம்பொண் வேண்டாமாம். எத்தனைவக்கணை? பட்டிக்காட்டுக்குட்டியாம். அழகு இல்லையாம். மூக்கும் மூழியும் கயுப்பணசாமிபோலே இயுக்காம். கொயந்தைகள் கண்டா யாத்தியிலேவேளேலே பயந்துகிண்டுமோம். (இதெல்லாம் சுப்பம்மாளுடைய சொந்தகற்பனைகள்.)நம்பெல்லாம் பட்டிக்காட்டுக்கழுதைகளாம். முத்துசாமிக்கு ஏதடா தம்பியே என்ற விசுவாசம் கடையாதாம்: அவன் ஆயோ நாம் யாயோ இன்னு இயுக்கியானாம். இம்புட்டா? ஒனக்குஒயு நல்லபெய்ய (பெரிய) கொடை கொடுத்தியுக்கியா. அந்த வசவைக் காதிலே கேக்கப்பிடிக்காது. சொன்ன பாவத்திலே அந்தமுண்டெ பேயாள். கள்ளனுக்குத் தோனும் தியுட்டுபுத்தி. சுப்பியமணியன் புத்தியை செயுப்பாலடிக்கணும். வேண்டாம் வேண்டாம் இங்கயபோதே வடக்கேபோய் கல்யாணம் பண்ணிக்கிண்டு வந்தானே.'

கமலாம்பாள்.—'என்ன இப்படிவைகிறீர்களே. என்ன சொன்னாள் என்னை?'

சுப்பு.—எனக்கு வயத்தை எயியது(எரிகிறது.)முத்ச்சாமிகேட்டான்னா பியியைக்(பிரியை)கட்டி அவளை இழுத்துப்பிடுவேன்.அவள் புள்ளை (பிள்ளை) இயுக்கேயில்லேயோ, அதை செல்லங் குடுத்துக் குடுத்து கம்மண்டாட்டிவளத்தகழிசயையாக்கி விட்டெயாம். தாய்க்கும்பிள்ளைக்கும் ஆகவிட்டாமல் அடிக்கியயாம். அதுக்கு என்ன வசவு: நீ தட்டுவாணிக் கம்மண்டாட்டியாம். (இதுவும் சுப்பம்மாள் கற்பனை.) நன்னாயிக்கா வசவு? அப்டி சொன்ன முண்டையை நாக்கை அயுத்தா என்ன? கழுவிலேபோட்டுட்டால்என்ன. நீகல்யாணம்பண்ண ஆயம்பிக்கியது. ஒன்கடுகெத்தனை கொயந்தை கயுப்பணசாமி; உன்கல்யாணம்எழவு; நீஓளசாயி(அவிசாரி)க்கம்பண்டாட்டி; என்னமாயிய்க்குவாயத்தை? அந்தமுண்டை தலையிலே நெயுப்பை வைச்சுக்கொளுத்த.

கமலாம்பாள்.—(மதனி! அப்படி சொன்னாளா? என்னையா? நேரில் சொல்லுவீர்களா?

சுப்பு.—ஒன் புத்திக்கு அவள் அவ்வளவா சொல்லுவள். (கோபித்து) இன்னம் சொல்லுவள். நான் சொல்யதுதான்பொய். கூட நாகு இயுந்தா,அவளைக்கேள். எனக்கு என்னபயமா? எதிய (எதிர) வைச்சுக்கிண்டு சொல்யேன் (சொல்லுகிறேன்.) சத்தியம் வேண்ணாலும் பண்ணயேன்.

கமலாம்பாள்.—உங்களை நம்பலாமா? இப்படியுந்தான்சொல்லுவாளா ஒருத்தி? சிவ சிவா!

சுப்பு'—'மருமானுக்குப் பொண்ணைக்குடுக்கல்யாம் கொண்டே. ஜாதகம்பொருந்தாட்டா அதுக்கு யாய் என்னபண்ணுவா? நடு ஆத்தங்கரையிலே பப்ளிக் ஆக குடியானச்சிகள் கூட இப்டி வசு கொள்ளமாட்டாளே.முத்ச்சாமிகிட்டசொல்லி கண்டிக்கச்சொல்லி கண்டிக்கச்சொல்லு. இல்லியா நெடுக இப்படித்தான் பாத்துக்கோ.'என்று சொல்லிவிட்டு கமலாம்பாள் யாதும் பதில் சொல்லுமுன்னமே திடீரென்று வீட்டிற்குப் புறப்பட்டு விட்டாள்.

சுப்பம்மாளுடைய பிரசங்கத்தை நான் அப்படியப்படியே சொல்லவில்லை. அவளுடைய ராகமும் குரலும் பேசுகிற கம்பீரமும் எனக்கு வரவேவராது. மேலும் இடையிடையே முத்துமாலையில் வயிரக்கற்கள் பதித்தாற்போல அனேக பழமொழிகள் அவள் பிரயோகித்தாள். அவைகளைச்சற்றுநாணமுள்ள புருஷர்கள் உச்சரிக்கக்கூடப் பயப்படுவார்கள். அவற்றைஇங்கேஉள்ளபடிஎழுதினால் 'அசுண நன்மாச்செவிபறை யெடுத்தபோலும்' என்றபடி கானத்தில் பிரியமுள்ள அசுணம் என்ற பட்சிக்குத் தம்பட்ட ஓசை எப்படியோ அப்படி இலக்கண இலக்கிய ஆராய்ச்சியுள்ள ஸ்திரீபுருஷர்களுக்கு அப்பழமொழிகளும் பிசகுகளும் அருவருப்பை யுண்டாக்கு மாதலால் இங்கே அவற்றை எழுதாது விட்டேன்.

சுப்பு போனபிற்பாடு கமலாம்பாள் 'ஒரு பாவத்தையு மறியாத நம்மை இவள் ஏன் இந்தப்பாடுபடுத்துகிறாள். ஜாதகம் பொருந்தாவிட்டால் அதுவும் நம்முடையகுற்றமா?அடடா இதென்ன வசவு!' என்று பலமுறை நினைத்து நினைத்து வருத்தப்பட்டாள். இவ்வாறு உலகத்தில் இவ்வளவு கெட்டவர்களாக மனிதர் இருக்கவேண்டுமோ என்று வருத்தப்பட்டுக்

கொண்டே கலியாண நிமித்தமாக வந்த கிருஷ்ணய்யர் ராமசுவாமி சாஸ்திரிகள் ஆகிய இருவருக்கும் தக்கபடி உபசாரமுறைகளில் யாதொரு குறைவுமில்லாமல் 'பாயசம்' 'வடை' 'போளி' 'அப்பளம்' முதலிய சம்பிரமங்களுடன் விருந்து போட்டாள். போஜனமானவுடன் ஒரு தூக்கம்தூங்கி எழுந்த பிறகு கடைக்குப்போய் சாமான்கள் வாங்கிக்கொண்டு இன்று சாயந்திரமே நிச்சயதார்த்தம் செய்துவிடுவோம் என்று சொல்லிக்கொண்டு கிழவர்கள் இருவரும் திண்ணைக்கு ஒருவராய் நித்திரைசெய்யத் தொடங்கினார்கள்.

முத்துஸ்வாமி அய்யரோ உள்ளே கூடத்தில் கமலாம்பாள் சாப்பிடும் இடத்திற்கு எதிரே ஜமக்காளம் விரித்து ஒரு தூணில் திண்டுபோட்டு சாய்ந்துகொண்டு தனது அன்புள்ள மனைவியைநோக்கி உல்லாசமாய் 'எங்கள் மாமாதானே வந்திருக்கிறார். உங்கள் மாமா வந்திருக்கிறாரோ? என்னசெய்வாய்?' என்று சொல்ல, அம்மாதர் சிரோமணியும் 'ஹாய்! கண்சிமிட்டைப்பார்' என்று சொல்லிக்கொண்டு இருந்தவிடத்திலிருந்தே ஒருமுத்தம் கொடுத்துவிட்டு 'எங்கள் மாமா (அவர்கள்) ஊரிலிருக்கிறாரே. உங்கள் மாமா, அவர்கள் ஊரில் இல்லையே என்னசெய்வீர்கள்?' என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே குழந்தை சுந்தரம் ஓசைப்படாமல் பின்னே தாழ்ந்துகொண்டு வந்து முத்துஸ்வாமி அய்யரை ஒரு மாட்டுத் தும்பால் கழுத்தில் கட்டி தூணில் இழுத்து மாட்டிவிட்டான். முத்துஸ்வாமிஅய்யர் 'அடடா விட்டுவிடடா, நான் போரேன் விட்டுவிடடா' என, குழந்தை 'இல்லையப்பா' என்றான். முத்துஸ்வாமிஅய்யர் 'நான் இருக்கிறது என்கிறேன், நீ இல்லைஎன்கிறாயா? இதோ பாரடா தும்பு இருக்கிறதே யடா அவிழ்த்துவிடடா' என, கமலாம்பாள் 'அப்படித்தான், அப்படித்தான்' 'வேணும், நன்றாய்கட்டு,' (தலையை அசைத்துக்கொண்டு) 'அகப்பட்டுக்கொண்டாரோ விட்டலபட்டர் அகப்பட்டுக் கொண்டாரோ' என்று பல்லவிபாடத் தொடங்கினாள். அதற்குள் சுந்தரம் கொஞ்சம் தள்ளி நின்றுகொண்டு 'பை,' 'பை,' 'டுர்ர்ரி' 'டுர்ர்ரி' 'நின்று குத்திக்காளை, டுர்ர்ரீ' என்றான்.

மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களில் 'ஜெல்லிக்கட்டு' என்று ஒரு வேடிக்கை உண்டு. அது என்னவெனில், இருநூறு மாடுகளை ஒரு தொழுவில் அடையப்போட்டு அவற்றை ஒன்றொன்றாய் கழுத்தில் ஒரு உருமால் கட்டி வெளியில் விட்டுப் பிடிக்கிறதுதான். அதுபட்டிக்காட்டு ஜனங்களுக்கு ஒரு பெரிய திருவிழாவாகையால் ஆயிரக்கணக்காய் ஜனங்கள் வந்துகூடுவார்கள். ஜெல்லிக்கட்டு என்றுசொல்லிவிட்டால்போதும், அவர்களுக்குஉண்டாகும்உற்சாகத்திற்கு எதுவும் ஈடு இல்லை. என்ன வேலையிருந்தாலும் அதையெல்லாம்போட்டுவிட்டு சந்தனப்பூச்சென்ன, மருக்கொழுந்து மாலைகளென்ன, சிவப்பு உருமால்களென்ன, இவ்வித சம்பிரமங்களுடன் விரல்களில் எல்லாம் வெள்ளிமோதிரங்களைக் கணக்கில்லாமல் அணிந்துகொண்டு, கையில் 'சோட்டா' த்தடிகளுடன் திரள்திரளாய் அவர்கள் புறப்பட்டு வந்துவிடுவார்கள். புருஷர்களுக்குத்தான் இந்த உற்சவம் என்று நினைக்கவேண்டாம், ஸ்திரீகளும், கூர்மையான மூக்குள்ள மனிதர்களை கூப்பிடு தூரத்திற்கப்பால் தூரத்தக்க மஞ்சளெண்ணெய், வேப்பெண்ணெய் முதலிய வாசனைத்தைலங்களைத் தடவிக்கொண்டு வந்துவிடுவார்கள். சீவினகொம்புகளுடன் உடல் நிறைய புஷ்பமாலைகளை அணிந்து கழுத்தில் உருமாலும் கம்பீரமான நடையும் பயங்கரமான பார்வையும் கொண்டு கண்டோர் ரிஷபராஜர்கள் என்று சொல்லும்படியான உயர்ந்தஜாதி மாடுகள் தொழுவுக்குள் வருவதும், அங்கு நின்று உருமால்கொண்டு ஓடுவதும், மனிதர்கள் அவற்றின் மேல் பாய்ந்து அவற்றைப் பிடிப்பதும், பிடித்து உருமாலைக் கட்டிக்கொண்டு முடுக்குவதும், மனிதர்களை அவைகள் தூக்கிப்போட்டுவிட்டு ஓடுவதும், நாகரீகமற்ற அந்தமனிதர்களுக்கு கண்கொள்ளாத காட்சியாயிருக்கும். அம்மாடுகளில் எல்லாம் கட்டடத்தைக் கண்டு மருண்டு ஓடாமல் நின்று பாயும் மாட்டிற்கு 'நின்று குத்திக்காளை' என்று சொல்வது வழக்கம். விசேஷ சந்தோஷத்தை யுண்டுபண்ணக் கூடிய நின்றுகுத்திப்பாயும் மாடு ஒன்று வந்து விட்டால் மூலைக்கொருவராய் அதை 'டுர்ர்ரீ, டுர்ர்ரீ' என்றுகூவிகோபமூட்டுவார்கள்.

அதுபோலவே முத்துஸ்வாமிஅய்யர்கழுத்தில் தும்பைக்கட்டி கமலாம்பாள் 'பேஷ்; பேஷ்' என்று சிரிக்க, சுந்தரம் அவரை 'டுர்ர்ரீ' பழகினான். அவர் 'என்னசெய்கிறான் பார்ப்போம்' என்று தலை குனிந்து புன்சிரிப்பு சிரித்துக்கொண்டு சும்மாஇருக்க குழந்தை 'முட்டு அப்பாமுட்டு. நீதான்மாடாம், முட்டுவாயாம். என்று முற்றும் திருந்தாத மழலைச்சொல்லால் சொல்ல, பின்னும் அவர் சும்மா இருந்தார். அவர்மனைவி 'அந்தமாடு அப்படித்தான்இருக்கும், இந்தக்குச்சி எடுத்து குத்து' என்றுசொல்ல, சுந்தரம் தும்பை இழுத்துப்பிடித்துக்கொண்டு குச்சியை எடுத்து 'பை பை' என்றுஓட்டத்தொடங்கவே, அய்யர் 'இதேதடா இந்தப்பயல்' என்று சொல்லிக்கொண்டு சுந்தரத்தைப் பார்த்து 'நான் மாடில்லையாம், அம்மாள் தான் மாடாம், இந்த தும்பை அவள் கழுத்தில் கட்டு; நீயும் நானும் ஓட்டுவோம்' என்றுசொல்ல, சுந்தரம் 'ஆமாம் அப்பா' என்று சொல்லி அவர் தும்பை அவிழ்த்து சாப்பிட்டுக்கொண்டிருந்த கமலாம்பாள் கழுத்தில் கட்டி அவளை ஓட்ட ஆரம்பித்தான். கமலாம்பாள் 'நான் பெண்பெண்டாட்டி நான்தான் மாடா? அப்பாதான் மாடு, (அய்யரைப் பார்த்துக்கொண்டு) கொழுத்த



உருமால் கட்டிக்காளை, அவரை ஓட்டு' என, சுந்தரம் மாட்டு விளையாட்டை மறந்து 'இதோபாரு என்கம்பு பேஷான கம்பே' என்று அவளை அடித்து 'நீ அழு அம்மா அழு' என, அவள் 'ஆமடா அப்பா அழுகிறேன்' என, பின்னும் அவளை அடித்தான்.

சுந்தரத்தினிடத்திலிருந்த சாமான்களைப் பார்த்தால் வெகு விநோதமா யிருக்கும். ஒரு ஓட்டைக் கொட்டாங்கச்சி, ஒரு கயிறு, ஒரு மாக்கல், ஒரு 'பென்சில்,' ஒரு வெள்ளிக்கல், இது போன்ற பல வஸ்துக்கள் அவனிடத் திருந்தன. அவனுக்கு இவைகளே ஐசுவரியமாக விளங்கின. உத்தியோகஸ்தர்கள் அடிச்சட்டை மேல்சட்டை, கைகுட்டை, கால் 'தெஜார்', ஜோடு, குடை, தலைப்பாகை, கடிகாரம் முதலியவேஷங்களுடன் கச்சேரிக்குப்போவது போல, சுந்தரமும்மாட்டுத்தும்பு, பட்டுக்கயிறு முதலிய கௌரவசின்னங்களுடன் விளையாட்டுக்குப்போவான். முத்துஸ்வாமி அய்யரையும் அவர் மனைவியையும் கண்டுவிட்டால் அவனுக்கு வெகு உற்சாகம் வந்துவிடும். அவர்கள் அவனுக்கு முக்கியமான விளையாட்டுத்தோழர்கள். அவனுடன் 'கண்பொத்துதல்', 'மாதுமாது', 'கிட்டி அடித்தல்' முதலிய விளையாட்டுகளை அவர்கள் விளையாடும்போது வெகு வேடிக்கையாயிருக்கும். அவன் கமலாம்பாளை அடித்தவுடன் கமலாம்பாள் அழுததாக பாவனை செய்யவே அவன் அதிக திருப்தியடைந்தவனாய் முத்துஸ்வாமி அய்யரிடம் வந்து 'துட்டுகொடு அப்பா' என்று அவர் முதுகின்மேல் ஏறி குடுமியைப் பிய்க்க எத்தனிக்கும்போது கமலாம்பாள் சாப்பிட்டு எழுந்திருந்து கையலம்பிவிட்டு தன் பர்த்தாவின்மேல் வந்து சாய்ந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் திடீரென்று ஒரு பெருமூச்சு விட்டாள். அவளுடையமலர்ந்த முகம் மாறியதைக்கண்ட அய்யர் 'என் என்னசங்கதி' என்றுகேட்க, அவள் 'ஒன்றுமில்லை' என்றாள். அவர்மறுபடியும் அழுத்திக்கேட்க அவள் தன் மனவருத்தத்தை அவருக்கும் சொல்லி அவரையும் சஞ்சலப்படுத்துவானேன்என்ற எண்ணத்துடன் மறுபடியும் 'ஒன்றுமில்லை' என, அவர்அவளை 'சொல்லத்தான்வேண்டும்' என்றுகட்டாயம்செய்தார். அவள் 'என்னையறியாமல் எனக்கு வருத்தம் வருகிறது. இன்று பொழுது நன்றாய் விடிந்தது. நான் சுந்தரத்தை அவன்தாயினிடம்போகவேண்டாம் என்றுபோதிக்கிறேனாம். அவனை நான் கைம்பெண் வளர்த்த கழிசறை ஆக்கிவிட்டேனாம். நான் தட்டுவாணிக் கைம்பெண்டாட்டியாம்: எனக்குக் கிடைத்த மரியாதை' என, அவர்சுந்தரத்தைப்பார்த்து 'இரு' என்று சொல்லிவிட்டு 'அப்படி சொன்னது யார்?' என, அவள் 'யார் சொல்லுவார்கள். சொல்ல சுதந்தரமுள்ளவர்கள் தான்,' என்றாள்.

அய்யர் உடனேமுகம் சிவந்து 'ஆரம்பித்து விட்டாயா ஸ்தலபுராணம்? (பல்லைக்கடித்துக்கொண்டு) தெரியுமே உன்சங்கதி. கலகமே பிரதானம்.' என, அம்மாள் 'என்னைச் சொல்லா விட்டால் உங்களுக்குப்பொழுது போகாது' என்றாள்.

அதற்கு முத்துஸ்வாமி அய்யர் 'பெண்களுக்கே கலகம் தான் தொழில். சுத்த நாய்கள் அப்பா! அதிலும்நீ—' என்றுசொல்லிமுடிப்பதற்குள்அம்மாள் 'புருஷர்கள்தான்நல்லவர்கள்-பரமசாதுக்கள்' என அய்யர் அதிகரித்தகோபத்துடன் "ஆமாம் புருஷர்கள் இப்படித்தான் கோளும் புரளியும் சொல்லிக்கொண்டுதிரிகிறார்கள். அப்பா! இந்த பெண்பெண்டாட்டிகளுடன் சகவாசம் செய்வதைக்காட்டிலும் கழுதைகளைக்கட்டிமேய்க்கலாம். சீ! ஓயாமல் இதேதொழிலா, நமக்குநன்றாய்வந்துவாய்த்ததடா சனியன். எதுசமயம் என்றுபார்த்திருந்து கலகத்தை உண்டுபண்ணுகிறது. கொஞ்சமாவது அறிவிருக்கிறதாபார், கலகக்கழுதை' என்று பல்லைக்கடித்துக்கொண்டு பலவாறு வையத்தொடங்கினார்.

கமலாம்பாள் சஹிக்கமாட்டாமல் சற்று பதட்டத்துடன் 'எடுத்ததற்கு எல்லாம் கோபம் என்றால் அப்புறம் என்னசெய்கிறது' என,

அய்யர் 'வாயைமூடு, சனியனே! பண்ணுவதையெல்லாம்பண்ணிவிட்டு, எடுத்ததற்கெல்லாம்கோபித்துக்கொள்ளுகிறேனாம். என்னை பைத்தியம்பிடித்தவன் என்று எண்ணினாயோ? அப்படித்தான்ஞாபகம்போலிருக்கிறது, கழுதை, நாசமாகப்போகிற சனியன்,' என்று வாயில்வந்தபடிஎல்லாம் வைய,

அவர்மனைவி 'நான் நாசமாய்ப்போய் விடுகிறேன். நீங்கள் சுகமாயிருங்கள்' என, முன்கோபிஷ்டராகிய முத்துஸ்வாமிஅய்யர் 'ஆ! இதுதான்தெரியும்: போய் விட்டால் குடிகெட்டுப்போகும். பயமுறுத்துகிறாயோ? தொலைசனியனே' என்று ஒருஇடிஇடித்து அப்புறம்தள்ளினார். அவர் மனைவி 'இல்லாவிடில் நான் இப்படி வயிறு எரிந்துகொண்டுநெடுங்காலம் இந்தப் பூமியில் வாழப்போகிறேன்' என்றுசொல்லிக்கொண்டு 'கோ' என்று கண்ணீர் விட்டழத் தொடங்கினாள்.

முத்துஸ்வாமிஅய்யர் தன்மனைவிமேல் அதிகவாஞ்சையுள்ளவராயிருந்தும் அவளிடத்தில்ஒருஅற்பகுற்றத்தையும்சகிக்கமாட்டார். உலகத்திலுள்ளஸ்திரீகள் எல்லாரிலும் அவள்குணம் சிறந்ததாயிருக்க வேண்டுமென்பதேஅவருடையமுக்கியஆசை. அவ்விதஆசைக்கு விரோதமாக அவளிடத்தில் மற்றஸ்திரீகளிடத்திலுள்ள குறைவுபோல் ஏதாயினும் ஒரு சிறிய குறையாவது இருக்கிறதாக அவருக்குத் தென்பட்டால், அவருக்கு வெகு கோபம் வந்துவிடும். பெண்களே கெட்டவர்கள் என்பது அவர் அருமையாய்ப்பாராட்

டிவந்த அபிப்பிராயங்களில் ஒன்று. ஆதலால் தன் மனைவி மற்றஸ்திரீகள்போல அற்பத்தனமுள்ளவளாகவாவது கோட்சொல்வி என்றாவது அவருக்கு ஜாடையாய் தென்பட்டு விட்டால் போதும் அன்றைக்கு அனர்த்தம் தான். "அவர் முன்கோபத்தை அவர்மனைவி தவிர வேறொருவரும் அறியார். சில புருஷர்கள் மற்றவர்களிடத்தில் பழகும்போது சர்வசாந்தமுள்ளவர்களாயிருந்தும் தங்கள் மனைவியிடத்து தங்களுடையகோபத்தைக்காட்டுவதை நாம்அனுபவத்தில் கண்டறியலாம். முத்துஸ்வாமி அய்யர் அடிக்கடி தன் மனைவியைக்கோபித்துக் கொண்டாலும் அனேக சமயங்களில் அவள் அந்த கோபத்தை மாற்றிவிடுவாள். ஆனால் சிற்சில சமயங்களில் அவளும் மனவருத்தத்தைப் பாராட்டிவிட்டால் அவருடைய கோபம் அதிகரித்து 'ஐயோ நாம் வகைமோசமாய் கலியாணம் செய்து விட்டோமே'என்று அவருக்குத்தோன்றும். இது அவருடைய குணவிசேஷங்களுள் ஒன்று. ஆனால் அவர் கோபம் சீக்கிரம் அடங்கிப்போய்விடும்.. சற்று நேரத்திற் கெல்லாம் அவர் மனைவி தன் வருத்தத்தை மறந்து அவரிடம் வலிய சென்று அவரை குளிர்ந்த வார்த்தைகளால் சந்தோஷப்பிக்கும் பொழுது 'என் தங்கமே உனக்கு சமானம் நீ தான். இந்த உலகத்தில் என்னைப்போல் பாக்கியம் செய்தவர்கள் யார்? என்று அவர் அவளை இறுகத்தழுவிக்கொண்டு ஓயாமல் முத்தமிடுவோர்.

இவ்விதமாக இந்த உலகத்தில் நன்மைதீமை எப்படிசமமாகக்கலந்திருக்கிறதோ அப்படியே நமதுஅய்யருக்கு இன்பமும்துன்பமும்கலந்திருந்தது. கமலாம்பாள் தன் ஓர்ப்படிவைத வசவை இவருடன் சொல்ல வாயெடுக்கும்போதே அவள் ஏதோ கலகம்செய்ய எத்தனிப்பதாக இவர் புத்தியில்பட்டு இவருக்குக் கோபம் உண்டாயிற்று. அப்பொழுது அந்த அம்மாள் சமயமறிந்து சந்தோஷவார்த்தைகளால் இவர் கோபத்தை மாற்றாததால் அது இன்னும் அதிகரித்தது. அவள் அழத்தொடங்கவே அய்யர் பல்லைக்கடித்துக்கொண்டு 'சாகசம் கூடவா. செய்வதெல்லாம் செய்துவிட்டு அழவும் ஆரம்பிக்கிறாய். பெரிய தெப்பக்குளங்கள் மடைதிறந்து போய்விட்டன. அழு மூதேவிக்கழுதை.' என்று மறுபடியும் கையாலிடித்து அப்புறம் தள்ள'அவள் முன்னினும் அதிகமாக அழுதாள். அதைப்பார்த்துக் குழந்தை சுந்தரமும் பயத்தால் பதறி கயிற்றைக்கைநழுவவிட்டு தன் பெரியதாயாரைக்கட்டிக்கொண்டு தலைகுனிந்து கடைக்கண்களால் தனது பெரியப்பாவின் கோபத்தால்சிவந்த முகத்தைப்பார்த்துஅழத்துவங்கினான். இவ்வாறு சிறிதுநேரம்செல்லவே முத்துஸ்வாமி அய்யருடைய மனம் சற்றுக்கோபம் நீங்கி இளக ஆரம்பித்தது. அவர் தன் மனைவியை அணுகி 'ஏனடி அழுகிறாய்!' என்று இரண்டுதடவை அதட்டிக்கேட்டு விட்டு அவளைத்தன்மேல் சேர்த்தணைத்துக்கொண்டு 'உன்னை யார் இப்பொழுது என்ன சொல்லிப்போட்டார்கள், ஏன் அழுகிறாய்? நிஷ்காரணமாய் அழுகிறாயே;இது தான் எனக்குக்கோபம் வருகிறது: அழுகாதேயடி: இன்றைக்கு இவ்வளவு போதும்: நிறுத்து.' என்று அரைவெறுப்புடன்'இவ்வளவுதான்நமக்குப்பிராப்தி' என்று தன்மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டு 'வேண்டாமடி, கமலா, போதுமடி' என்று அவள் கண்களை தன் வஸ்திரங்களால் துடைத்தார். அவள் அழுகை சாகசமென்றே அவர் எண்ணம். ஆயினும் அவள் அழுதது அவருக்கு ஹிம்சையாயிருந்தபடியால் அவளை அவர் ஆற்றலானார். அந்த அம்மாள் 'என்ன பிழைப்பு முத்து! (அவரை அவள் முத்து என்றும் முத்தம்மாள் என்றும் செல்லமாய்க்கூப்பிடுகிறது வழக்கம். அவர்அவளை கமலா என்று அழைப்பார்.) இருந்தால் நன்றாயிருக்கவேண்டும். உங்கள் பிரியம் தவறிவிட்டால் அப்புறம் எனக்கு என்ன இருக்கிறது. என்மனவருத்தத்தை உங்களிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லி நான் ஆற்றிக்கொள்ளுவேன். எனக்கு உங்களை விட்டால் கதிஎன்ன? தாயார் தகப்பனார் எல்லாரையும் விட்டு நீங்களே பிதாவுக்குப்பிதா, மாதாவுக்கு மாதா, பர்த்தாவுக்கு பர்த்தா, என்று அந்தரங்கமாய் பக்திபாராட்டி என் வருத்தத்தைச் சொல்லவரும்போது நீங்கள் கோபித்துக்கொள்வது எரிகிற புண்ணில் நெருப்பை வைத்தது போலிருக்கிறது. வருத்தப்படாதே என்று ஆற்றவேண்டியிருக்க நீங்களே இப்படி உதறி எறிந்தால் அப்புறம் நான் என்னசெய்வேன். அவள் அப்படி வைதாள் என்று தானே சொன்னேன். இதில் குற்றமென்ன முத்தம்மாள், அதுபொய் நிஜமென்றுகூட விசாரிக்காமல் என்னை தண்டிக்க ஆரம்பித்தீர்களே'என்று, விம்மிவிம்மி அழ, முத்துஸ்வாமி அய்யர் மனம் உருகி 'கமலா! நான்பண்ணினது தப்பிதமடி, அதைமறந்து விடடி' என்று சொல்லி அவளை இறுகத்தழுவிக்கொண்டு செல்லமான சில வசவுகளை வைது வேடிக்கையான பேச்சுகளைச் சொல்லியும் அவள் விசனம் மாறாததுகண்டு தானும் கண்ணீர்விட்டு அழ ஆரம்பித்தார். அவர் அழுவதைப் பார்த்து சுந்தரம் முன்னினும் அதிகமாய் அழ,அவள் தன் அழுகையை நிறுத்திவிட்டு அவரை இறுக ஆலிங்கனம் செய்துகொண்டு 'என் முத்தே, என் பிராணனே, என் தங்கமே வேண்டாம்போ! அழுகாதே என் தங்கம்' என்று சொல்லி முத்தமிட்டு 'என்னைப் போல் யார் பாக்கியசாலி! நான் முன் எத்தனையோ ஜனனங்களில் பண்ணிய் புண்ணியமல்லவோ இந்த ஜனனத்தில் என் முத்தம்மாளாய் உருவெடுத்து வந்திருக்கிறது! வேண்டாமடா என்முத்தே'என்று தான்



அவருடைய அழுகையைநிறுத்த, அவர் தேறி செல்லமாய் "என் கமலா! உன்னோடு டூ விட்டேன்; என்னோடுபேசவேண்டாம்"என்று சொல்ல,அவர்மனைவி 'ஏனடாஅப்பா, என்னகோபம்' என்று முத்தமிட்டுக் கேட்க,அய்யர் குதூகலத்துடன் கைகால்களை அசைத்துக்கொண்டு 'உன்னை யார் என்ன சொன்னார்களென்பதை நீ தான் சொல்லமாட்டேனென்றாயே, போ, போ.' என்று மிருதுவானகுரலுடன் சொன்னார். அதற்குள் அவள் அழுதுகொண்டிருந்தசுந்தரத்தை மார்போடணைத்து 'வேண்டாம் போ, எவ்வளவு பிரியம், என் கட்டிமாம்பழம்' என்று சொல்லிக்கொண்டு கண்களைத்துடைத்து 'உன் அம்மாள் தான் உன்னை இங்கே வரக்கூடாதென்று சொல்லுகிறாள். என்னை கைம்பெண்டாட்டி யென்று அவள் வையலாமா?' என, சுந்தரம் 'உன்னையா வைதாள். நான் போய் அடித்துவிட்டு வந்துவிடுகிறேன்' என்று குபீரென்று கிளம்பினான். சுந்தரம் அவன் வயதுக்கு அதி புத்திசாலி, அவன் வெட்டினாலும் கமலாம்பாளை விட்டுப் பிரியமாட்டான். ஒரு நாளைக்கு ஒரு தடவைக்குமேல் தன்தாயாரிடம் அவள் பக்ஷணம் வைத்து வருந்தி யழைத்தாலும்அவன் போகமாட்டான். கமலாம்பாளை தன்தாயார் வைதாள் என்று கேட்டவுடனே அவன் திடீரென்றுவெளியிலேகம்பும் கையுமாக ஓடினான். அவனை 'இங்கேவா, இங்கேவா,' என்று கமலாம்பாள் வாசல் வரையில் பின்தொடர்ந்தாள். அவன் ஓடியே போய்விட்டான். ஏதாவது கலகம் அவனால் நேரிட்டாலும் நேரிடும் என்ற பயம் கமலாம்பாளுக்கிருந்தாலும் பொல்லாதவளாகியபொன்னம்மாள் முகத்தில் அவளுக்கு விழிக்க இஷ்டமில்லாததால் வாசலுக்கு அப்புறம் அவள் அவனை பின்தொடரவில்லை.

சுந்தரம் தன் வீடடுக்குள்ளே போனவுடன் ரவிக்கைதைத்துக்கொண்டிருந்த தன்தாயாரை 'அம்மாளை ஏனடிகைம்பெண்டாட்டி என்று வைதாய்முண்டை' என்று ஓங்கி கையில் வைத்திருந்த கம்பால் அடிக்க, அவள் அடியின் வலியினால் மூர்க்கத்தன்மையடைந்து 'காலாந்தகா? உனக்கு அந்த சிறுக்கிதான் அம்மாள். நீ வீட்டைவிட்டு வெளியேறு, காலைமுறித்துப் போடுகிறேன்.' என்று சொல்லிக்கொண்டு ரவிக்கையை கீழேபோட்டுவிட்டு அவனைப்பிடித்து அவன் கம்பைமுறித்தெறிந்து ஒருகயிறை எடுத்துத்தூணில் கட்டி தயிர்கடையும் மத்தால் கால்வீங்கும்படிஅடித்தாள். குழந்தை போட்ட கூக்குரலைக்கேட்டு உள்ளேபடுத்துத் தூங்கிக்கொண்டிருந்த சுப்பிரமணிய அய்யர் திடுக்கிட்டு எழுந்து 'என்னடி கொலைபாதகி' என்றுவர,அந்தராக்ஷஸி; 'இன்றிரவு அவர்கள்வீட்டு நித்திய ஸ்ரார்த்தத்துக்கு (நிச்சயதார்த்தம் என்பதற்கு போனீர்களோ பாருங்கள்.' 'நித்திய ஸ்ரார்த்தம்' என்று ஒரு பெரிய அதட்டாய் போட பிராமணர் பாபம்! கைகால் நடுங்கி வாய்குழறி தூரத்தில் நின்றுகொண்டு 'குழந்தையை ஏனடி அப்படிக்கட்டினாய்'என, 'போங்கள் உங்கள் பாட்டைப் பார்த்துக்கொண்டு.கைம்பெண்டாட்டி யென்று சொன்னேனும் நான். பொய்யும் புளுகும். குழந்தை கொள்ளிக்கட்டை கையில் தடியைக்கொடுத்து முண்டை என்று வைது அடித்துவிட்டு வரச்சொல்லியிருக்கிறாளே? சாமர்த்தியச்சிறுக்கி. அவளல்லவோ பெண்பெண்டாட்டி. இதுஜடம்! என்னை அடக்கவந்துவிட்டது. தூங்குபோ, ராத்திரி நிச்சயஸ்ரார்த்தத்துக்கு உன் அப்பனை போகக்கூடாது'என்று மரியாதையாய் புருஷனைப்பார்த்துச் சொல்லும்போதுஒரு ஸ்திரீ உள்ளே வந்தாள். அவள் பெயர் நாகு. வம்பர் மகாசபையின் அக்கிராசனாதிபதியான சுப்பம்மாள் தான் காலமே கமலாம்பாள் வீட்டில் மூட்டிய கலக நெருப்பு எவ்விதம் எரிகிறது என்று பார்த்து வரும்படி தன் உத்தியோகஸ்தர்களுள் ஒருத்தியாகிய நாகுவை பொன்னம்மாளிடம் ஒற்றாய் (வேவுபார்க்க) அனுப்பினாள். இவள் பிரசங்கத்தை நாம் காலமே ஆற்றங்கரையில் கேட்டோமல்லவா? பொன்னம்மாள் முத்துஸ்வாமி அய்யரை 'புருஷக்கைம்பெண்' என்று இகழ்ச்சியாய் வைதாள் என்றும் கமலாம்பாளை 'தட்டுவாணிக் கைம்பெண்டாட்டி' என்று வையவில்லை என்றும் ஆனால் சுப்பு பின் சொன்னவிதம் கமலாம்பாளிடம் சொல்லியிருக்கிறாள் என்றும் நாகுவுக்கு நன்றாய்த்தெரியும். அவள் உள்ளேவந்தவுடன் 'அடி பாவி' என்று கதறிக்கொண்டுகூச்சலிட்டழுதுகொண்டிருந்த குழந்தையின் கட்டை அவிழ்த்துவிட்டாள். பொன்னம்மாள் அவளை 'போடா உள்ளே' என்று வாசலில் போகாதவண்ணம் தடுத்துக்கொண்டு நாகு,என்னைகைம்பெண்டாட்டிஎன்று வைது அடித்துவிட்டுவா என்று இந்த கொள்ளிகட்டையை கம்பும் கையுமாய் அனுப்பியிருக்கிறாளே, ஒருபெண்பெண்டாட்டி. என்னதிண்ணக்கம்! நான் வைதேனும், என்னைவந்து இந்த சின்ன எமன் கேட்கிறது' 'என்றுசொல்ல, நாகு இரகசியம் சொல்லுபவள்போல் அவளுடைய காதில் மெதுவாய் 'நீ அவளுடன் இன்றைக்கா பழகுகிறாய். எனக்கு அவள் சமாசாரம் வெகுநாளாய்த்தெரியுமே' என்று இவ்விதம் இவர்கள் பேச்சை இவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இதற்குள் பாவம்! சுப்பிரமணிய அய்யர் ராத்திரி நடக்கும் நிச்சயதார்த்தத்திற்குப் போகாமல் எவ்விதம் தப்புகிறது. போனால் இந்த ராட்சஸியினுடைய விரோதம். போகாவிட்டாலோ தமையனுடைய விரோதம். அவர் என்னதான் செய்வார். அவர் நித்திரை இந்தவிசாரத்தில் சூரியனைக்கண்டபனிபோல்

பறந்துபோய்விட்டது. ஒருவேளை 'இவள் கிடக்கிருள். தமையன் பிதாவுக்குசமானம். அவர் என்மேல் வைத்திருக்கிற பிரியத்திற்கு நான் போகாமலிருக்கலாமா' என்று யோசிப்பார். அடுத்த நிமிஷத்தில் 'இவள் நம்மை உரந்து விடுவாளே, அப்புறம்வீட்டுப் பக்கம் நமக்குவேலையில்லே' என்றிப்படி அஸ்தமிக்க மூன்றுநாழிகை மட்டும் யோசனை செய்துவிட்டு 'ஓஹோ நிச்சயதார்த்தகாலம் சமீபித்துவிட்டதே தெய்வமே, என்னசெய்வேன், ஒரு உபாயமும் தோன்றவில்லையே' என்று தலையிலடித்துக்கொண்டு 'பொன்னம்மாளைக்கேட்போமென்ருள், ஜடம்,பயங்கொள்ளி, என்று வைது திட்டி அடிப்பாளே. இருக்கட்டும்' என்று தனக்குள் சம்பாஷணை செய்தபிறகு தன்மனைவியிடம் போய் 'நீயும் குழந்தையைக் கூட்டிக்கொண்டுஎங்கேயாகிலும்போய்விடு ; நானும்அண்ணுவீட்டுக்குப் போகவில்லை, என்னை உள்ளே விட்டுக்கதவைப் பூட்டிவிட்டுப்போய்விடு' என்ருர். அதற்கு பொன்னம்மாள்நான்இங்கேயேதானிருப்பேன். நீரும் (மரியாதையாய்) வீட்டை விட்டு வெளியேறினீரோ,காலைமுறித்துவிட்டேன்;பத்திரம்' என, சுப்பிரமணியய்யர் 'என்னடி,போடி விளையாடாதேயடி; அப்புறம் வீண் பொல்லாப்பு வரும். நீ கதவைச்சாத்திக்கொண்டுபோடி' என்ருர். அம்மாள், "என்ன 'ஞஞ்ஞ மிஞ்ஞ' சும்மா இங்கேதானே கிடந்துகழி என அய்யர் பல்லையிளித்துக்கொண்டு அவளை கெஞ்சாத வண்ணம் கெஞ்சி வெளியே கதவைப் பூட்டிப் போகச்சொன்ஞர். அவள் அப்பொழுதும் போயிருக்கமாட்டாள். ஆனல் சில விசேஷ சமாசாரங்கள் வம்பர் மகாசபையில் தெரியப்படுத்தவேண்டியதவசியமாயிருந்தது. ஆதலால் அவள் கதவை பூட்டிக்கொண்டு அப்படியே சபைக்குச்சென்ருள். அய்யர் கோட்டான்போல் விழித்துக்கொண்டு உள்ளே தனியாய் உட்கார்ந்திருந்தார்.

இது நிற்க, யெரியவீட்டுத் திண்ணையில் படுத்திருந்தகிழவர்கள் இருவரும்எழுந்திருந்து முத்துஸ்வாமி அய்யருடன்நிச்சயதார்த்தத்துக்கு வேண்டியவற்பாடுகளைச் செய்தார்கள். சிறுகுளத்திலுள்ள எல்லா ஜனங்களும் முத்துஸ்வாமி அய்யர்வீட்டுக் கூடத்தில் வந்து கூடிவிட்டார்கள். ஆனல் சுப்பிரமணியய்யரைமாத்திரம் காணேம். முத்துஸ்வாமி அய்யர் 'யாரடா *சுப்புளி, *சுப்பிரமணியனைப்பார்த்துக்கொண்டுவா. முட்டாள், சமயத்துக்கு எங்கேயோ போய் விடுகிருன்' என, சுப்புளி சுப்பிரமணியய்யரகத்தில் நுழைந்தான்.

வம்பர் மகாசபைக்குப் போயிருந்த பொன்னம்மாள் அன்று நடந்த புராண முழுவதையும் சவிஸ்தாரமாய் அரங்கேற்றிய பிற்பாடு சபையை விட்டு வீட்டுக்குவந்து தானும் தன் மைத்துனர் வீட்டிற்குப் போகாததற்கு உபாயம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் கதவைத்திறந்து சுப்பிரமணியய்யரை கையைப்பிடித்து சரசர என்று இழுத்து ஒருபாயின் மீது படுக்கச்செய்து நாலைந்து துப்பட்டிகளை அவர் மேலேபோர்த்தி, அவரிடம் 'யாராவது கூப்பிட வருவார்கள், அப்பொழுது உமக்கு ஒருதலைவலி என்று நான் சமாதானம்சொல்லியனுப்பிவிடுகிறேன். நாமிருவரும் போகவேண்டாம்.' என, சுப்பிரமணியய்யர் நமக்கு தெய்வம் தான் பொன்னம்மாளாய் வந்திருக்கிறது என்று மகிழ்ந்து மௌனமாயிருந்தார்.

சுப்புளி வருகிற காலடி அரவம் கேட்கவே சுப்பிரமணியய்யர் பலமாய் அலத்தத்தொடங்கிஞர். அவர் மனைவி அவர் தலையை கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு 'பொறுத்துக்கொள்ளுங்கள்; என்னசெய்வோம் படுவதெல்லாம் நாம் தானே படவேண்டும்' என்று சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தாள். சுப்புளி என்ற அதிசய நாமத்தையுடைய தூதன் உள்ளே வந்தபொழுது அய்யர் கோலத்தைக்கண்டு வருத்தமுற்று என்ன உடம்பு என்ருன். அய்யர் ஏதாவது தாறுமாருய் உளறிவிடுவார் என்று பயந்து பொன்னம்மாள் விரைவாய் 'இத்தனைநாழிகை வெளியிலே போய்விட்டு இப்பொழுதுதான் வந்தார். வந்ததுதான் தாமதம் திடீரென்று கீழே அலறிக்கொண்டு விழுந்தார். நான் துவையலரைத்துக் கொண்டிருந்தேன் ஓடிவந்துஎன்னவென்றேன் 'அப்பா ஒரு தலைவலி' என்று சொன்ன ஒருவார்த்தை தான். ஒரு நாழிகையாய் ஓயாமல் ஒழியாமல் இந்த அலத்தல் தான். ஏன் என்று கேட்பாரைக்காணேம். நான் தனியாயிருந்து போராடுகிறேன். நிச்சயதார்த்தம் என்ன கல்யாண முகூர்த்தமா? இன்றைக்கில்லாவிட்டால் நாளை வெள்ளிக்கிழமை ஆகாதா! அது கூட நாம் யார் சொல்வதற்கு. ஆனல் தம்பி வரவேண்டுமென்பது அவசியமா? நடக்கட்டும். நான்கூடவருவதற்கில்லையே என்று எனக்கிருக்கிற வருத்தம் எனக்குத்தெரியும். சம்பந்திகள் தான் கூப்பிடவரவில்லை. அண்ணுவாவது நினைத்துக்கொண்டாரே. வேம்பு, நீ நல்லபிள்ளையப்பா; அவர்கள் சொல்லாமல் கூட நீ கூப்பிடவருவாய்;உனக்குசமானமா?"என்றுசொல்ல, சுப்புளிக்கு 'தீச்சன் தலையில் புளியம் சாத்துக்கூடையை வைத்த'கதையாய், நம்மையல்லவோ இவ்வளவு புகழ்கிருள் என்றசந்தோஷம் உண்டாய் திக்கிக்கொண்டு 'உ உ உன் மை மை மைச்சனர் எ எ எங்கே யின்ஞர் நாஞ ஆ ஞ கூ கூ கூப்டவந்தேதேதேன்'என்று சவுக்கத்தில் பல்லவிசங்கதிகளுடன் மறுமொழி சொன்ஞன். இந்த திக்குவாய் பாண்டியன் மறுமொழி சொல்லிவிட்டு வீட்டிற்குப்போவதற்குள் அங்கே நிச்சயதார்த்தம் ஆய்விட்டது, வருகிற சித்திரைமீ" கஅவ திங்கட்கிழமை என்று கலியாணமுகூர்த்தமும் பார்த்து விட்டார்கள். ஆனல்முத்துஸ்வாமி அய்யருக்குமட்டும் ஒருவிசாரம். அதென்னவெனில்: 'நம்முடையதம்பி நிச்சயதார்த்தத்துக்கு ஒரு தலைவலியை சம்பாதித்துக்கொண்டான். கலியாணத்துக்கு என்னசாக்கு சம்பாதிப்பானே? ஒருவேளை சுரம்ஏதாவது வந்து விடுமோ!' என்பதே.

பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர், பி ஏ.

* (சப்புபிள்ளை என்பது சுப்புளி என மருவிவிட்டது. அவன் பெயர் வேம்பு.)



# கோல்பெர்ட் சரித்திரம்.

## துணிவியாப்பாரி கடையிலிருந்து முதல்மந்திரி ஸ்தானத்துக்கு வந்த ஒருவாலிபன் கதை,

### I

இப்பூலோகம் ஐந்துபெரியகண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்பது பள்ளிப் பிள்ளைகளெல்லாருக்கும் தெரிந்தவிஷயம். நாம்வசிக்கும்இந்த இந்தியாதேசம் இருக்கும் பாகத்திற்கு ஆசியாகண்டமென்றுபெயர். நம்மை ஆளும் வெள்ளைக்காரர்கள் ஸ்வதேசமிருக்குமிடத்திற்கு ஐரோப்பா கண்டமென்றுபெயர். நம்மையாளும் இங்கிலீஷ் காரர்கள் ஐரோப்பியராஞலும் அவர்கள் ஐரோப்பாகண்டத்தின் ஒருபாகத்தில் இருப்பவர்களல்ல. அவர்களுடைய தேசமாகிய 'பெரிய ப்ரிடன்' என்பது ஐரோப்பாகண்டத்துக்கருகில் நாலுபக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு சிறு தீவு. இந்த 'பெரிய ப்ரிடன்' என்னும் தீவு, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து' என்னும் இருநாடுகள்சேர்ந்துள்ளது. இவ்விருநாடுகளும் ஆதியில் தனித்தனி அரசர்களால் ஆளப்பட்டுவந்து பிற்பாடு ஒரு குடைக்கீழ்ப்பட்டு இதற்குப்பக்கத்திலுள்ள ஐர்லாந்துதீவும் சேர்ந்து 'பெரிய ப்ரிடனும் ஐர்லாந்துமாகிய ஐக்கிய ராஜ்ஜியம்' என்னும் பொருள்பட இங்கிலீஷில் ஒரு நீண்ட பேர் கொடுக்கப்பெற்றது. நாளது தேதிவரையில் அந்தப்பேர் இன்னம் வழங்கிவருகிறது.

இந்தியாவிலுள்ள வெள்ளைக்காரர்கள் இங்கிலீஷ் காரர்கள் மட்டு மன்று. இவர்களோடு ஆதியில்போட்டிபோட்டு இன்றைக்கும் இத்தேசத்தில் இரண்டொரு ஸ்தானங்களை அவர்கள் கைவசத்தில் வைத்து ஆண்டுவரும் இன்ஞெரு வெள்ளைக்கார ஜாதியாரிருக்கிருர்கள். இவர்கள்தான் அடுத்த புதுச்சேரி, காரைக்கால் இவற்றை யாண்டுவரும்'ப்ரெஞ்சுக்காரர்கள்.' இந்தப்ரெஞ்சுக்காரர்கள் சுதேசத்துக்கு'பிரான்ஸ்' என்று பெயர். இவர்கள் நம்மையாளும் இங்கிலீஷ்காரர்களுக்கு ஐரோப்பாவில் அடுத்த அயல் தேசத்தார். இவர்களுடைய பிரான்ஸ்தேசம் பெரிய ப்ரிட்டனுக்கு எதிர்த்தாப்போலிருக்கிறது. இவ்விரு தேசங்களுக்கும் நடுவில் ஒரு சிறிய கால்வாய்தானிருக்கிறது. இந்த பிரான்ஸ்தேசம் பெரிய ப்ரிட்டனைப்போல் நாலாபக்கமும் கடல்சூழ்ந்த தீவா யில்லாமல் ஐரோப்பாகண்டத்தில் அதன் ஒருபாகமாகவிருக்கிறது. இதன் தலைநகருக்குப்பேர் பாரிஸ். இது செல்வத்திலும் நாகரீகத்திலும் ராஜ்ஜியவல்லபத்திலும் இங்கிலாந்துக்கு மிகவும் குறைந்த தேசமல்ல. இந்தியாவில் இவர்களதிகாரம் வலுக்காமற்போனலும் ஐரோப்பாகண்டத்தில் இவர்கள் அதிகாரம் ஓங்கிவளர்ந்து தற்காலம் அங்கு மிக்க ஆதிக்கம்பெற்று விளங்கும் ஐந்து பெரிய தேசங்களில் இது முக்கியமான ஒன்ருக விளங்குகிறது. முற்காலத்தில் இத்தேசம் இப்பொழுதிலும் அதிக மகிமை பெற்றுக்கொஞ்சக்காலத்திற்கு விளங்கியது.



இப்படி மகிமைபெற்று விளங்கிய இந்த பிரான்ஸ் தேசத்தின் மாகாணங்கள் ஒன்றில் ரேம்மஸ் என்னும் புராதன பட்டணமொன்றுண்டு. அப்பட்டணத்தில் ஒரு துணிவியாபாரியிருந்தான். அவனுடைய கடையில் வியாபாரம் செய்ய வந்தவர்களுக்குத் துணிகளை யெடுத்துப்போட்டுக் காட்டுவதற்காகப் போடப்பட்டிருந்த மேஜையின் பின்பக்கத்தில் ஒல்லியான உடம்பும், அழகும் புத்தி விசாலமும் அமைந்த முகச்சாயல்களு முடையபையன் ஒருவன் நின்றுகொண்டு, கைபட்டுக்கரைந்துபோன பழய புஸ்தகமொன்றைக் கையிலேந்திப்பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பேர் பாப்டிஸ்ட் என்று சொல்வார்கள். அவன்முழுப்பேர் ஜீன் பாப்டிஸ்ட் கோல்பேர்ட்.

கடைக்குப் பின்புறத்தில் தோல் மஞ்சமிட்ட நாற்காலியில் முன்ஞல் ஒருமேஜை போட்டுக்கொண்டு அந்தக்கடைக்கு எஜமாஞன கிழ வியாபாரி உடல்மெலிந்து தோல்சுருங்கி 'வடாந்தூக்கவந்த சாக்கைபோல்'காசு சேர்ப்பதிலே கண்ணும் கருத்துமுடையவஞய் உட்கார்ந்திருந்தான். அவன் பேர் சாந்தாணி என்று சொல்லலாம்.

சாந்தாணி, பாப்டிஸ்ட் என்பவனைப் பார்த்து "இன்றைக்குத் தேதியென்ன ?" என்று கேட்டான்.

அந்த வாலிபன் திடுக்கிட்டுத்திரும்பி "இன்றைக்கு 1632ளு அக்டோபர்மீ" 30வ" என்று பதிலுரைத்தான்.

"அது முற்றும் சரியல்ல : நீ சொன்ன மாசமும் தேதியும் சரிதான்; வருஷம் தப்பு. இது 1634-வது வருஷம் அப்பேன்; இது தெரியவேண்டாமா? ஏன், உனக்கு வயது 18 ஆய்விட்டதே; சரியாகக் கணக்குப்பார்க்கத் தெரிந்திருக்கவேண்டாமா ?" என்று உரத்த சத்தத்தோடு அந்தக்கிழவியாபாரி வெடுவெடுப்பாய்க்கூறிஞன்.

"தெரிந்திருக்கவேண்டியதுதான், அய்யா; கணக்குப் பார்ப்பதில் எனக்கு மெத்தப் பிரியம்தான். ஆனல், என்மனசு சரித்திரவிஷயத்தில் கொஞ்சம் கவனமாயிருந்துவிட்டது; நீங்கள் கேட்டபொழுது நான்"——

"ஓ! சரி; வழக்கம்போல் வாசித்துக்கொண்டிருந்தாயாக்கும். ஏது! நீ உருப்பட்டு என்னத்திற்காவது உதவுவாய் என்று தோன்றவில்லை. அதுகிடக்கிறது. நீ என்ன புஸ்தகம் வாசித்துக்கொண்டிருந்தாய்? அதில் உனக்கு அவ்வளவு பிரியம் விளைப்பது என்ன?"

"அய்யா, நான் டியூக்ஆவ் மான்ட்மோரென்ஸி என்பவரின் விசாரணையைப்பற்றி வாசித்துவருகிறேன்."

"டியூக் ஆவ் மான்ட்மோரென்ஸியா! அவருக்கும் உனக்கும் என்னவந்தது? ஓ! ஓ! உங்கள் முன்னோர்களில் சிலர் காஸ்டேரில் பிரபுக்களாக விருந்தமையால் நீயும் ஒரு பெரிய பிரபு வென்று நினைத்துக்கொள்கிறாய்போல் தோன்றுகிறது."

"'காஸ்டெரில்' அல்ல அய்யா,'காஸில்ஹில்' என்பது சரியானபேர். காஸில்ஹில் பிரபுக்கள் ஸ்காட்லாந்திலும், பிரான்ஸிலு முள்ள கோல்பெர்ட் குலத்தினர்க்குப் பொதுவான மூதாதைகள். இருதாரத்தாரும் இன்றைக்கும் ஒரே விருது உடையவர்களாய் இருப்பது நான் மேலேசொல்லியதற்கு ஆதாரமாகும்."

"பூ! அதெல்லாம் எனக்காகவேண்டியதென்ன? உன் தாயாரும் என் தங்கையும் ஒன்றாகப் பள்ளிக்கூடத்தில் வாசித்த விசுவாசத்தைப் பாராட்டி உன் தாயார் உன்னுடையநாமகரண சடங்குநடக்குங்கால் என்னை யழைத்து உனக்குப் பெயரிடச்சொன்னபொழுது உங்கள் முன்னோர்கள்யாரென்று உங்கள் குலம் கோத்திரமெல்லாம் விசாரித்தேனென்று நினைக்கிறாயோ? அதெல்லாமில்லை. எங்கள் வர்த்தகக் கொடி. பறக்கும் இவ்விடத்தில் நாங்கள் அதையெல்லாம் கவனிக்கிறதில்லை. எங்கள் வேலையெல்லாம் துணி விற்கவேண்டியதுதான்."

"எனக்கு அது நன்றாய்த்தெரியும், ஐயா," என்று பாப்டிஸ்ட் பணிவோடு பதிலுரைத்து, "என்னாலானமட்டும் வியாபாரத்தில் வல்லவனாக முயற்சிப்பேன், இது உறுதி." என்று சொன்னான்.

"வரவர நீ கெட்டிக்காரனாவாய் என்று சொல்லத் துணிகிறேன். அதுகிடக்க, நீ டியூக் ஆவ் மான்ட்மோரென்ஸியைப் பற்றி வாசிக்கிறாயே, அவரை என்னத்திற்காக விசாரணைசெய்தார்கள்? சொல்லு, கேட்போம்" என்றான் கிழவியாபாரி.

அதற்கு அவ்வாலிபன் தடதடவென்று பின்வருமாறு பதிலுரைத்தான்: "ஐயா, 13-வது லூயி அரசன் 1629-ம் வருஷத்தில் பாரிஸ் நகரைவிட்டுப் புறப்பட்டு, பொறுக்கமுடியாத குளிராயிருந்தாலும் அதையும் பார்க்காமல் நேரில்சென்று டியூக் ஆவ் நிவேர்ஸ் அவர்களுக்கு ஒத்தாசைசெய்து, டியூக் ஆவ் ஸேவாய், 'மான்ட்ஸர்ராட்' என்னும் ஸ்தலத்தைப் பிடித்துக்கொள்ளச்செய்த யத்தனங்களையெதிர்த்து அவரை ஆதரிக்கச்சென்றபொழுது"——

அவன் சொல்லிமுடியுமுன் அந்தக்கிழவியாபாரி அவன் தங்குதடையின்றி தாராளமாய்ச் சரித்திர விஷயங்களை யெல்லாம் விவரித்துக்கூறிக்கொண்டு போவதைக்கண்டு அதிசயித்து, "ஏலப்பா, இவன் விஷயங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் தொடுத்துக்கொண்டுபோகிற அதிசயத்தைப்பார். இந்தப் பயல் பிறக்கும்போதே இராஜதந்திரியாகப் பிறந்திருக்கிறான் என்று நான் சொல்லுவேன்." என்று சொன்னான்.

பாப்டிஸ்ட் இப்படித் தன்வார்த்தையைத் தடுத்து வீண்வார்த்தைகள் பேசியதற்காக முகத்தில் கோபக்குறி விளங்கப் பின்னும் தொடர்ந்து சொல்லுகிறான்:—

"நல்லது,ஐயா,வாலிபதிசையிலுள்ள அவ்வரசன் 'சூஸ்' கணவாயைத் தன்பலாக்கிரமத்தால் கடந்துசென்று,'டியூக் ஆவ் ஸேவா'யினுடைய சைனியங்களைவென்று, 'காசால்' நாட்டு ஸ்பானியர்களைத்துரத்தியடித்து, 'பிக்நேரோல்' என்னும் ஸ்தலத்தைப்பிடித்துக்கொண்டு, 3 - வருஷங்களுக்குமுன் 'குவிராஸ்கியூ'வில்நடந்த சமாதானஉடன்படிக்கையிற்கண்டநிபந்தனைகளின்படி 'டியூக் ஆவ் நிவெர்ஸ்' வசம் 'மான்டுவா' மாகாணத்தை ஒப்புவித்துவிட்டு 'இத்தலிதேசத்தை ஆபத்தினின்றும் விடுவித்த ஆப்த்பாந்தவன்' என்று பட்டப்பேர் சூட்டிக்கொண்டு தன்தலைநகருக்குத் திரும்பிவருகையில் அங்கே அவருடைய சகோதரன் கலகம் செய்தெழும்ப அநேக பிரபுக்கள் அவன்வசம் சேர்ந்துகொண்டு தன்னதிகாரத்தை யெதிர்த்து நிற்பதைக் கண்டான். அப்பொழுது 'டியூக் ஆவ் மான்ட்மோரென்ஸி' என்பவர் அவர் கவர்னராயிருந்த மாகாணத்தை அரசனுக்கு விரோதமாகக் கிளப்பிவிட்டு அவரும் அரசன் சகோதரர்பக்ஷம் சேர்ந்துகொண்டார். ஆனால் அரசன் திரும்பிவந்தபின் 'காஸில்நாடரி' என்னுமிடத்தில் நடந்த சண்டையில் ஆயுதமும் கையுமாக அவர் பிடிபட்டுப்போனதால் 'டியூக் ஆவ் ரிச்லு' அவர்களின் உத்தரவுப்படி 'டோலூஸ்' என்னுமிடத்தில் அவர் 1632-ம் வருஷம் அக்டோபர்மீ 30உயில் சிரச்சேதம் செய்துவிடப்பட்டார்."



கிழவியாபாரி இதையெல்லாம்கேட்டிருந்து கடைசியில் "இதுகளெல்லாவற்றிலும் கார்டினல் ரிச்லூ* வினுடைய தந்திரோபாயங்கள் கொஞ்சம் கலந்திருக்கும்" என்று சொன்னார். இந்தவியாபாரி இராஜாங்க விஷயங்களைப் பேசுவதில் விருப்பமில்லாதவன்போல் காட்டினாலும் உண்மையில் அதுவிஷயத்தில் இவனுக்கு வெறுப்பில்லை யென்பது இதனால் விளங்கும்.

பாப்டிஸ்ட் உற்சாகம் மேற்கொண்டு,"மந்திரிகள் மகா கடுமையாகவும் கொடுங்கோன்மையாகவும் சுயேச்சைப்படிக்கும் நடந்து கொள்கிறவர்களாகவிருக்கிறார்கள்; நான் எப்போதாவது முதல்மந்திரியாக விருக்க நேர்ந்தால்"——

இந்த வார்த்தைகள் சொன்னவுடனே கடைக்குப்பின்னாலுட்கார்ந்திருந்த கிழவியாபாரியும், அங்கிருந்த மற்றக் கடைக்காரப்பையன்களும், வாசலிலே குப்பைகூட்டிக்கொண்டிருந்த கடையின் வேலைக்காரனுங்கூடச் சேர்ந்து கொண்டு எல்லாரும் 'கொல்' என்று சிரித்தார்கள். அவர்கள் சிரித்த சப்தம் இவனை மேல்பேசவிடாமல் தடுத்ததோடு அவர்கள் பரிகாசம்செய்தது பொறுக்காமல் இவனுக்கு முகம் சிவந்துபோய்விடும்படி செய்தது.

அந்தக்கடையில் மூட்டைதூக்கி மலையன் என்பவன் "இந்தகாலத்துக் குழந்தைகள் குழந்தைகளில்லை""காலம் மாறிவிட்டது" என்று சிரித்துக்கொண்டு இரண்டு மூன்று தரம் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

அந்தக்கடையின் எஜமானாகியகிழவியாபாரியோ "நீ–மு–தல்–மந்–தி–ரி–யா–க–வந்–தால்–" என்று ஒவ்வொரு வார்த்தையையும் அசை அசை யாகப் பிரித்து நீட்டிக்கொண்டு சொன்னான். "நீ–மு–தல்–மந்–தி–ரி–யா–க–வந்–தால்!" என்று நீட்டி விட்டு திடீரென்று தன்குரலை மாற்றிக்கொண்டு "ஓய், பெரியவரே! தயவுசெய்து தற்காலம் பிழைப்புக்கு வழியாகவிருக்கும் இந்தக்கடை வேலையை நன்றாகச்செய்ய முதல்முதல் கற்றுக்கொண்டு, இந்தமட்டும் நல்லஜீவனம்கிடைத்ததே யென்று வந்தனமுள்ளவனாயிரும்; அப்புறம் முதல்மந்திரியாகவரக் கோழிக்கனாக் காணலாம்" என்று துடுக்காகச் சொன்னான்.

"ஐயா, மன்னிக்கவேண்டும். ஏதோ அந்த சமயத்தில் மனதிலுதித்ததைப் பேசிவிட்டேன். நான் எப்படி எப்படி யிருக்கவேண்டிய தவசியமோ அப்படியெல்லாமிருந்து உம்மிடத்தில் சரியாக நடந்துகொள்ள முயற்சிப்பேன்" என்றான் பாப்டிஸ்ட்.

"சரி, சரி, நல்லது, அதைவிடு. உன்கையிலுள்ள புஸ்தகத்தை அப்பால் வைத்துவிட்டு நான்சொல்வதைக் காதுகொடுத்துக்கேள். இதோஒருகடிதமிருக்கிறது பார். பாரிஸிலுள்ள பெரிய பாங்கர்களான 'சின்னாணிஅண்டுமாஜராணி' என்னும் பணவியாபாரக்கம்பெனியைச்சேர்ந்த மான்ஷியர் சின்னாணிஎன்பவர்பேருக்கு அது எழுதப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டுபோய் அவரிடம் கொடுத்துவிட்டு அப்படியே இந்தத்துணிகளையும் அவருக்குக் கொண்டுபோய்க்காட்டிவா. இந்தவூருக்குப் பக்கத்தில் அவருக்கு நாட்டுப்புறவாசமாயிருக்க அவர் வாங்கியிருக்கும் பெங்களாவுக்கு படுதாக்கட்டத் துணிவேண்டுமென்று சொன்னார். இந்தா, இத்துணிகளின் விலைகளை நன்றாகக் கவனித்து மனதில் வைத்துக்கொள்: இந்த 1-ம் நெ. துணியின்விலை கெஜம் மூன்றுவராகனென்று குறிக்கப்பட்டிருக்கிறது. 2-ம் நெ. 6 - வராகன்; 3-ம் நெ. 8 - வராகன்; 4-ம் நெ. 15-வராகன். இந்தவிலை மிகக்கிராக்கிதான்; ஆனால், அது மிகவும் கோர்த்தியானசரக்கு. அந்தமாதிரி வேறே கிடைக்கமாட்டாது."

பாப்டிஸ்ட் மாதிரிக்காக துணிகளின் துண்டுகள் வெட்டி ஒட்டிய அட்டையொன்றைக் கையிலெடுத்துக்கொண்டு "நீங்கள் சொன்ன விலைக்கு ஏதாவது கொஞ்சம்குறைக்கச்சொன்னால்குறைக்கிறதா?" என்று கேட்டான்:

"குறைக்கிறதா! ஒருகாசுகூடக் குறைக்கக்கூடாது. சொன்னவிலைப்படி கைரொக்கம் போடவேண்டும். அதற்கு ஒருபைசா கம்மி பட்டாலும் கூடாது. ஞாபகமிருக்கட்டும்." என்றான் கிழவியாபாரி.

பாப்டிஸ்ட் சரிதானென்று சொல்லிவிட்டு, மூட்டைதூக்கி மலையன் துணிகளைத் தோளில் போட்டு தூக்கிக்கொண்டுவர கடையைவிட்டுப் புறப்பட்டு மான்ஷியர் சின்னாணி யென்னும் பணவியாபாரி இறங்கியிருந்த ஹோட்டலைநோக்கிக் கடுமையாக நடந்துசென்றான்.

வழியில் மலையன்:"பாப்டிஸ்ட் ஐயா,கடைக்கார ஐயா சொன்னது ஞாபகமிருக்குமா? முதல் நெ. 3-வராகன்; 2-நெ. 6-வராகன்; 3-வது நெ.8—வராகன்;

* கார்டினல் ரிச்லூ என்பவர் (1585-ல்பிறந்து 1642-ல் இறந்தார்) 13-வது லூயி அரசனுடைய முதல்மந்திரியாகவிருந்தார். இவர் குரூரமும் பழிவாங்கும் சுபாவமு முடையவரும் நன்னெறியைவிட்டு நடப்பவருமாயிருந்தாலும் பழய பிரான்ஸ் ராஜ்ஜியத்தின்பேர்போன ராஜதந்திரிகளில் இவரை ஒருவராய்மதித்து சரித்திரகர்த்தர்கள் எழுதியிருக்கிறார்கள். அவருக்குப்பின் முதல்மந்திரியாக வந்தவர்பேர் மாஜரின். அவருடையபேர் இந்தக் கதையில் வருகிறது.

4-வது நெ. 15-வராகன். அதுதான் நீர்சொல்லவேண்டிய கதை, தெரியுமா. ஏன், என்னசமாசாரம். கீழே பார்த்துக்கொண்டு என்னயோஜிக்கிறீர்? நீர் தரையில் குண்டூசி தேடுகிறவரைப்போல் காணப்படுகிறீரே."

"மலையா, உன்னிடத்தில் உண்மையைச் சொல்கிறேன். நமது கடைக்கார ஐயா என்மாதிரியை சரியாக அறிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நான் கடைக்காரனாக இருக்கவேண்டியது என் தலைவிதியாக இருந்தால் நல்ல வியாபாரியாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்; ஆனால் ஒருவன் அவன்வேலையைப் பாதிக்காதபொழுது ஒரு புஸ்தகத்தை வாசிப்பதில் சந்தோஷமெடுத்துக் கொண்டால் அதனால் அவன் கெட்டவியாபாரியாய் விடுவானென்று நான் நினைக்கவில்லை."

மலையன்: "பாப்டிஸ்ட், நீ நல்லபிள்ளை; நீ சொல்வது சரியாகவிருக்கலாம்.ஆனால் ஒன்று, உனக்குக் கொஞ்சம் மறதி அதிகந்தான். ஆனால் வரவர நீ நல்ல வியாபாரியாவாய் என்பதற்குச் சந்தேகமில்லை. வா, சந்தோஷமாயிரு; இதுதான் அவரிருக்கும் ஹோட்டல்."

அந்த ஹோட்டல்வாசலிலிருந்த ஒரு ஆளிடம் பாப்டிஸ்ட், "நான் மான்ஷியர் சின்னாணியைப்பார்க்க விரும்புகிறேன்" என்று சொன்னான்.

அந்த ஆள் "வலதுபுறத்திலுள்ள முதல் மாடிப்படி வழியாகச் சென்று 8, 10-ம் நெ. இட்ட கதவுகளை இடி." என்றான்.

மலையன் கூடவர, பாப்டிஸ்ட் மேலே சென்று கீழேயிருந்த ஆள்சொன்னபடி கதவையிடித்தான்.

உடனே ஒரு ஆள்வந்து பச்சைப்பட்டும் சிவப்புப்பட்டும் கலந்து பூப்போட்டமாதிரி உயர்ந்த ஆடைகள் தரித்திருந்த இளம்பிராயமுள்ள ஒரு கனவானிடம் அவனைக் கொண்டுபோய் விட்டான்.

அந்த கனவான்முன் வந்ததும் பாப்டிஸ்ட் அவருக்கு அஞ்சலிசெய்து "நான் மான்ஷியர் சாத்தாணியிடமிருந்து வருகிறேன்" என்று தெரிவித்துக் கொண்டான்.

உடனே மலையன் தன் தோளிலிருந்த துணியடுக்குகளை ஒரு மேஜைமேல் போட்டு "தங்கள் கனத்துக்கு வேண்டியதைப் பொறுக்கிக் கொள்ள இதோ அனேகம் துணிகள் இருக்கின்றன" என்று வணக்கமாய்ச் சொன்னான். அந்தப் பணவியாபாரி "பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டு மலையன் அதிக ஆவலோடு விரித்துக்காட்டிய துணிகளை அலக்ஷியமாகத் தன் நுனிவிரல்களால் தடவிப்பார்த்து கடைசியில் அவைகளை நன்றாய்ப் பார்க்காமலே ஒன்றை எடுத்துவைத்து "இதுதான் எனக்கு நன்றாய்ப் பிடித்திருக்கிறது; இதன் விலையென்ன ?" என்று கேட்டான். பாப்டிஸ்ட் "கஜம் 15-வராகன்" என்றான். அவன் சொல்லுகையிலேயே மலையன் வாயைக் கையால் மூடிக்கொண்டு ஒரு முகநெறிப்பு நெறித்தான். அதை விற்கிறவர் வாங்குகிறவர் இருவரும் பார்க்கவில்லை.

பாப்டிஸ்ட் விலை சொன்னதும் அந்தப் பணவியாபாரி "நல்லது; இது என்னுடைய நாட்டுப்புறவாசமாகிய பங்களாவில் நான் படிக்கும் அறைக்குப் படுதாக்கட்டுவதற்காக வேண்டும். இந்தத்துண்டில் எத்தனைகஜம் இருக்கிறது?" என்று கேட்டான்.

மலையன் அத்துண்டிலுள்ள அடையாளத்தைப் பார்த்து "30 கஜமிருக்கிறது சுவாமி, அளந்து காட்டச் சொன்னீர்களானால்,"——

"அதெல்லாம் வேண்டியதில்லை அப்பா, மான்ஷியர் சாத்தாணியை எனக்குத்தெரியும். அவரை நம்பலாம். கஜம் 15-வராகன் விகிதம் 30 கஜம் 450 வராகனாகிறது, இந்தா;" என்று சொல்லிவிட்டு அப்படியே அலக்ஷியமாகச் சென்று அங்கே திறந்து வைத்திருந்த மேஜையில் கையைவைத்து ஒரு கைநிறைய பணத்தை அள்ளி பாப்டிஸ்டிடம் கொடுத்தான். கொடுத்துவிட்டு "தம்பி, உனக்கு எழுதத்தெரியுமா" என்று கேட்டான்.

பாப்டிஸ்ட் இப்படி கேட்டகேள்வியினால் அதிக வருத்தப்பட்டவனாகி முகம் சிவக்க வெட்கப்பட்டுப் போய், "தெரியும், ஐயா" என்று பதில்சொன்னான்.

"நல்லது, ஒரு ரசீது எழுதிக்கொடு" என்று கேட்டான் அந்தப் பணவியாபாரி. பாப்டிஸ்ட் அப்படியே ரசீதுஎழுதிக் கொடுத்துவிட்டு பணத்தை எடுத்துக்கொண்டான்; மலையன் பாக்கித்துணிகளை எல்லாம் எடுத்து மூட்டைகட்டித் தோளில் வைத்துக் கொண்டான். இருவரும் பிறகு அப்பணவியாபாரிக்கு அஞ்சலிசெய்து விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்துவிட்டார்கள்.

வெளியே வந்தவர்கள் கடைக்குத் திரும்பிவருகையில் மலையன் சாதாரணமாய் இருப்பதைவிட அதிக உல்லாசமாயிருந்தான். பாப்டிஸ்ட் மனதில் வேறு எதையோ நினைத்துக்கொண்டு இருந்ததால் அவன் உல்லாசக்குதிப்பைக் கவனிக்கவில்லை. சாத்தாணி அவன் கடையின்வாசற்படியில் நின்றுகொண்டு பாப்டிஸ்டும், மலையனும் திரும்பிவருகிறதைத் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவர்கள் கிட்டவந்ததும் "சரியா ? சரிதானா ?" என்று கேட்டான்.



மலையன் கடைக்குள்வந்ததும், "கடைசியில் இங்கேவந்து சேர்ந்தமடா அப்பா," என்று சொல்லிக்கொண்டு தன் தோளின்மேலிருந்த துணிமூட்டையை கடையிலிருந்த மேஜைமேல் போட்டான்.

சாத்தாணி அதிகஆவலோடு அம்மூட்டையைத் திறந்துபார்த்தான். பார்க்கையிலேயே "யாதொரு பிசகும் செய்யவில்லையே" என்று கேட்டான். பாப்டிஸ்ட் அமரிக்கையாய் "நான் யாதொரு பிசகும் செய்யவில்லையென்று நினைக்கிறேன்" என்றான்.

மலையன் வந்தசிரிப்பை அடக்கிக்கொண்டு "நீ பிசகிப்போய்விட்டாய் என்று நான் நினைக்கிறேன்" என்றான்.

"மலையா,பிசகிப்போய்விட்டானா?—நிஜந்தானா?" என்று சொல்லிக்கொண்டே அந்தக் கிழ வியாபாரி துணிகளையெல்லாம் எடுத்துப்போட்டு அதில் கட்டியிருந்த சீட்டுகளை நுட்பமாய்ப் பார்வையிட்டான். பார்வையிட்டுவருகையிலேயே "எனக்குமுன்னாலே தெரியுமே! அந்தக் கள்ளப்பயலுக்கு பிசகுசெய்யாமல் வியாபாரம்செய்துவர முடியாது. பயலே நீ பிசகுசெய்திருப்பது வாஸ்தவமாயிருந்ததோ நீ மறுபடியும் மான்ஷியர் சின்னாணியிடம் ஓடி அதிகப்படி வரவேண்டிய தொகையை அவரைக்கேட்டு வாங்கி வரவேண்டும். அவர் கொடுக்கமாட்டேன் என்றால் உன் சம்பளத்திலிருந்து பிடித்து ஈடுகட்டிக் கொடுக்கவேண்டும். இதை நீ அறிவாய். 3-ம் நெ. இல்லை. 3-ம் நெம்பர் துணியின் விலையென்ன ? 6-வராகனா?; இல்லை, 8-வராகன்—எனக்கு மனம் தடுமாறிப்போகிறது." என்றான்.

பாப்டிஸ்ட் திடுக்கிட்டு "எட்டுவராகனா !—எட்டுவராகனா !" "அது நிச்சயந்தானா ஐயா ?" என்று கேட்டான்.

"திருட்டுப்பயலே, கடைசியில் நான்தான் பிசகு செய்துவிட்டேனென்று என்பேரில் குற்றம் கட்டிவிடப்பார்க்கிறாயோ. 3-ம் நெம்பரின் விலை 8 வராகனடா பயலே என்கிறேன். எனக்கு பயத்தினால் பாதிப் பிராணன் போய்விட்டது. இந்தப் பயல் அதை 6-வராகனுக்கு விற்றுவிட்டு வந்திருக்கிறானென்றா நான் பந்தயம் கட்டுவேன்." என்றான் அந்தக் கிழவியாபாரி.

பாப்டிஸ்ட்: "ஐயா, 8 வராகன் துணியை 6 வராகனுக்கு விற்று வந்து விட்டதாக நீர் சொல்ல, முட்டாளாகிய நான் அதை 15 வராகனுக்கு விற்று வந்திருக்கிறேன்; ஆனால்"——

அந்தக் கிழவியாபாரி அவன் 15 வராகனுக்கு விற்றதாகச்சொன்னவார்த்தையைக்கேட்டதும் சந்தோஷம் பொறுக்கமாட்டாமல்வந்ததை யடக்கிக்கொண்டு பாப்டிஸ்ட் முற்றும் பேசுமுன் "பதினைந்தா? பதினைந்தா ? நல்ல பையன் நீ; நேர்த்தியான பையன்; பாப்டிஸ்ட், ஒருநாள் நீ உன் குடும்பத்தாருக்கெல்லாம் கௌரவம் விளைப்பவனாயிருப்பாய். பதினைந்தா ! உனக்கு நாமகரண மிட்ட நான் உன் விஷயத்தில் மெத்தவும் பெருமை கொண்டாடுகிறேன். பதினைந்தா! அப்பா, சந்தோஷம் பொறுக்கப்படவில்லையே. 6 வராகன் பெருததுணிக்கு 15 வராகனா! நல்ல வியாபாரம். 30 கஜம் துணி 8 வராகனுக்குபதிலாக 15 வராகனுக்கு விலையாகியிருக்கிறதா ! 15-ல் 8-ம் போனால் பாக்கி 7 வராகன் லாப மிருக்கிறது. 30 கஜத்துக்கும் 210 வராகனாகிறது : எழுநூற்றி முப்பத்தி ஐந்துரூபாய் லாபம். மெத்த சந்தோஷம். நமக்கு நல்லநாள் இது." என்று ஆனந்தம் பொங்கப் பேசினான்.

இதை யெல்லாம் கேட்ட பாப்டிஸ்ட் முன் செல்ல இருந்தவன் பின்வாங்கின வண்ணமாய்: "ஐயா எப்படி சந்தோஷம்? இதுதான் சமயமென்று எல்லாவற்றையு மெடுத்துக்கொள்ள நினைக்கிறீரா?" என்று கேட்டான்.

அந்த நாணயங்கெட்ட வியாபாரி "ஓ! உனக்கும் பங்கு வேண்டுமோ, சரி, இந்த லாபத்தில் உனக்கு ஒரு பங்கு தருவதாக ஒப்புக்கொள்கிறேன்" என்றான்.

பாப்டிஸ்ட் தான் கடைக்குத் திரும்பியதும் கழட்டிவைத்த டொப்பியை மெதுவாய் கையிலெடுத்துக்கொண்டு "ஐயா, அப்படிப்பட்டகாரியம் எதற்கும் நான் உடன்படக்கூடாது" என்று சொல்லி மிகுதி வார்த்தைகளையும் பேசி முடிக்குமுன் பேராசைகொண்ட அந்த வியாபாரி "பலே! பலே! பையா, உனக்குப் பங்கு வேண்டாமானால் எல்லாவற்றையும் எனக்குக்கொடுத்துவிடு" என்று குறுக்கிட்டுச்சொன்னான்.

பாப்டிஸ்ட் தான் சொல்லிவந்ததைத்தொடர்ந்து: "நான் அவ்வளவு பெருந்தவறிழைத்த அந்த கனவானிடம் திரும்பியோடி என்னை மன்னிக்கும்படி அவரைக்கேட்டுக்கொண்டு, அவர் அதிகப்படி செலுத்திய பணத்தை அவரிடம் திரும்பிக்கொடுத்துவிட்டு வருவேன்." என்று சொல்லிவிட்டு, இவ்வார்த்தைகளைச் சொல்லுகையிலேயே வாசலோரமாகப் பின்னால் நகர்ந்துவந்துகொண்டிருந்தவன் கடைசி வார்த்தை வாயைவிட்டு விழுந்ததும் விழாததுமாகவிருக்கையிலே வாசற்படியை ஒருதாண்டலாகத்தாண்டி வெளியில் குதித்துப்பறந்தோடிப்போய்விட்டான்.

திருட்டுத்தனமுள்ள அந்தக் கிழவியாபாரி தான் எதிர்பாராத இந்த சம்பவத்தைக்கண்டு திகைப்பும் கோபமும் மேலிட்டுவர அசைவற்று நின்றான். அவனை அப்படியே நிற்கவிட்டு, நாம் வெளியே ஓடிய மனச்சாக்ஷிக்கொப்பிதமாய நடக்கும் அந்தப்பையனைத்தொடர்ந்து மான்ஷியர் சின்னணியென்பவர் ஹோட்டலுக்கு அவனோடுகூடச் சற்றுப்போய் வருவோம். (இன்னும்வரும்.)

C. V. S.

## ஹிந்து சிறுமிகள் புருஷர்வீட்டில் நடக்கவேண்டிய கிரமம்.

நமது சின்னஞ் சிறு அருமைச் சகோதரிகளே, நீங்கள் உங்கள் புருஷர்கள் வீட்டுக்குச்சென்றபின் அவ்விடத்தில் நடக்கவேண்டிய கிரமங்களைப்பற்றி நமது விவேக சிந்தாமணியில் இதுவரையில் ஒருவரும் எழுதாதது பற்றியும் அது உங்களுக்குத்தெரிய வேண்டியது அதிக அவசியமானபடியாலும் இவ்விஷயத்தைப்பற்றி எனக்குத் தெரிந்தமட்டும் சுருக்கமாய் எழுதலானேன். நீங்கள் உங்கள் கணவர்கள் வீட்டுக்குப்போன பிறகு அவ்விடத்தில் உங்களுடைய மாமி நாத்திசளிடத்தில் சண்டை சச்சரவு செய்யாமல் உங்களுடைய தாய் தமக்கையர்களைப் போலவே அவர்களையும் பாவித்து வரவேண்டும். நமது ஹிந்து குடும்பங்களில் சாதாரணமாய் மாமி மருமகளை ஹிம்ஸிப்பது வழக்கம். அப்படி செய்வது பெரும்பாவம். பெரும்பாலும் நம்மில் புக்ககம்வரும் பெண்கள் பத்து வயதிற்கு மேற்பட்டும் பதினைந்து வயதிற்குட்பட்டும் தங்களுடைய பெற்றோர்களையும் பந்துவர்க்கங்களையும் விட்டுவிட்டு புருஷர்களையே நம்பி வந்து விடுகிறார்கள். ஐயோ, பாவம்! புருஷர்கள் வீட்டிற்குச்சென்ற தங்கள் அருமைக்குழந்தைகளை உள்ளூரிலிருந்தால் நாள்கணக்கிலும் வெளியூரிலிருந்தால் மாசம் அல்லது வருஷக்கணக்கிலும் பார்க்கவேண்டுமென்று பெற்றோர் தம் மருமகன் வீட்டிற்குள் செல்லும்போது அவர்கள் பூனையின் உத்திரவுகூட பெற்றுக்கொண்டு தான் உள்ளே பிரவேசிக்கவேண்டும். அப்படி வீட்டுக்குள் போனாலும் தம்முடைய பெண்ணைக்கண்டு பேசி அதின் கஷ்டநிஷ்டூரங்களைக்கேட்போமென்றால் நரிபுலிகளாகிய மாமிமுதலியவர்கள் வந்துவிடுவார்கள். என்னபேசிவிடுவார்களோ, ஏதுசொல்லிவிடுவார்களோ என்று அங்குமிங்கும் திரிவதுபோல் ஒட்டுக்கேட்பார்கள். இவைகளைக்கண்டு வந்தவர்கள் ஒன்றும் பேசமுடியாமலும் தங்கள் குழந்தையின் துக்கமுகத்தைப் பார்க்கமாட்டாமலும் தாங்கள் வீட்டிலிருந்துவரும் பொழுது தங்கள் அருமைக்குழந்தையை எத்தனை சந்தோஷத்துடன் பார்க்கவேணுமென்று வந்தார்களோ அத்தனைக்கத்தனை மனவருத்தத்தோடு 'ஏண்டா வந்தோம், வாராமலிருந்தால் இந்த அவஸ்தைகள் எல்லாம் கண்ணில் படாமலிருக்குமே' என நொந்துக் கொண்டு போய்விடுவார்கள். இது நிற்க.

இத்தனை இலக்ஷணத்தோடு தாய்தகப்பனால் பார்க்கப்பட்டபெண்ணை அந்தக் கொடும்புலிகள் உன் தாய்தகப்பன்வந்தார்களே என்ன நிறைத்துவிட்டுப் போனார்கள்? அவர்களோடு குசுகுசுவென்று பேசினாயே, பிசுபிசுவென்று கண்ணில் நீரை வருவித்துக்கொண்டாயே, அவர்கள் உன்கஷ்டத்தைத் தீர்த்தார்களா? அப்படி கஷ்டமாயிருந்தால் அவர்கள் வீட்டிலேயே இருக்கிறதுதானே, எங்கள் பிள்ளைக்கு வேறு பெண்கிடைக்காதா? எங்கள்பிள்ளை என்ன, துரைபோலிருக்கிறான்; காசுக்கு ஒன்றும் கொசருக்கு இரண்டும்கிடைப்பாள். எங்கள்பேரில் தூஷணைகளைச்சொல்லிக்கொண்டும் நீ இங்கேயிருக்கவேண்டாம்'—என்று இப்படி பலவாறுவாயில் வந்தபடி சொல்லுவார்கள். அதைக்கேட்டு அந்தப்பேதைப் பெண் பயத்தோடும் விநயத்தோடும், 'நான் அப்படிக்கெல்லாம் அவர்களிடத்திலொன்றுஞ் சொல்லவில்லையே; அவர்களென்னைப்பார்த்து நாளாச்சுது, சவுக்கியமாயிருக்கிறாயாவென்றுகேட்டார்கள்; நன்றாயிருக்கிறேனென்று சொன்னேனேயொழிய உங்களுக்கு இத்தனைகோபம் வரும்படியான பேச்சு ஒன்றுஞ்சொல்லவில்லை அம்மா' என்று சொன்னவுடன், அவர்களுக்குக் கோபம் மேற்கொண்டு, 'என்னடி உனக்கு இத்தனைகொழுப்பு, நான் ஒன்றுசொன்னால் நீ பத்துசொல்லுகிறாய்? பெரியோரென்கிற மரியாதையில்லை. உன்புருஷன் கைவசமாயிருக்கிறானென்று இப்படிக்கெல்லாம் பேசுகிறாயோ? "கொண்டவன் பலமிருந்தால் குப்பையேறிச்சண்டைசெய்யலாம்" என்று பார்க்கிறாய்போலும். அவன் வீட்டுக்குவரட்டும் உன்னை என்னசெய்யப்போகிறோமோ பார்க்கப்போகிறாய்.'—என்று அந்தஅறியாப்பெண்ணை பயமுறுத்தி, மகன்வீட்டிற்கு வந்தவுடன் முக்காடிட்டுப்படுத்துக்கொண்டு, "அப்பா மகனே! உன்மனைவி தகல்பாஜியாயிருக்கிறாள். நீ வெளியே போயிருக்கிறவேளையில் உன்மாமியார்முதலானோர் வந்து அவளோடு ஜாமபரியந்திரம்பேசி ஏதேதோ சொல்லிக் கொடுத்துவிட்டுப்போனார்கள். பிறகு அவள் தை தை யென்று குதிப்பதை நான் என்னவென்று சொல்லுவேன் அப்பா," —என்கிறபொய்வார்த்தைகளைச்சொல்லி "தன்வினை தன்னைச்சுடும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும்" என்று பட்டணத்துப் பிள்ளையார்சொல்லியிருப்பதை சற்றுமறியாமல் அவ



னுக்கு கோபத்தைமூட்டுவார்கள். அவன் இதுகளையெல்லாம் மெய்யென்றெண்ணி தன்னையே தஞ்சமாக நம்பி வந்திருக்கிற மனைவியை தாம் தூமென்று அடிப்பதோ கண்டபடி திட்டுவதோ செய்வன். இதுகளெல்லாம்பெருத்த அக்கிரமமல்லவா?

புருஷனானவன் தன் மனைவி தன் வீட்டுக்குவந்த பிறகு அவளுடைய மேன்பார்வை விஷயத்தில் தானே பிரவேசித்து "இளங்கன்று பயமறியாது" என்பதையறிந்து தக்க புத்திமதிகளைச் சொல்லி வரவேண்டும். தன்னுடைய பிரீதியையும் அவள்பேரில் வைக்கவேண்டும். அவளும் தன்னிடத்தில் பயபக்தி விசுவாசத்தோடு இருக்கும்படி செய்யவேண்டும். அவளிடத்தில் ஏதாவது தப்பிதம்தோன்றினால் தானே தன்சுற்றத்தார், வீட்டு வேலைக்காரர்கள் முதலியவர் அறியாமல் சிக்ஷிக்கவேண்டும். ஏனெனில், "கொண்டவன் சீறினால் கண்டவனுக்கெல்லாம் இளக்காரம்" என்பார்கள். புருஷனே அவளை 'இளக்காரம்' செய்தால் அவன்சுற்றத்தார் பொசுக்கிவிடுவார்கள். தன்னுடைய பந்துக்கள் அவளிடத்தில் விசுவாஸத்தோடு இருக்கும்படியாகவும் அவளும் தன் சுற்றத்தாரிடத்தில் தகுந்த மரியாதையோடிருக்கும் படியாகவும் செய்யவேண்டும்.

என்னருமைச் சகோதரிகளே! இனி நீங்கள் செய்யவேண்டிய விஷயங்களைச்சொல்லுகிறேன். உங்கள் மாமி வீட்டார் எத்தனை துஷ்டர்களாயிருந்தபோதிலும் நீங்களொருநாளும் துஷ்டர்களாகக்கூடாது. நீங்களெப்பொழுதும் தாழ்ந்திருப்பது உங்களுடைய கடமையாகும். அவர்கள் மாத்திரமப்படி இருக்கிறார்களே என்றுகேட்கும் பக்ஷத்தில், அவர்களும் அப்படிசெய்யக்கூடாது தான். ஆனால் படிப்பில்லாமையாலும் புராதன மூடவழக்கத்தை அனுசரித்தும் மாமி மருமகளைக் கொடுமைப்படுத்திவருவது கட்டாயமாய் விட்டது. நீங்களும் அப்படியேநடப்பீர்களானால் உங்கள்படிப்பும் நாகரீகமும் பயனும்படாது, மேன்மையும் அடையாது. "தாழ்ந்து நிற்பவர் வாழ்ந்து நிற்பர்" என்பதுபோல இதைப்படிக்கும் சிறுமிகள் முக்கியமாய் கவனிக்கவேண்டியது "கீழ்ப்படிவது இன்றியமையாத நற்குணம்" என்பதாம். வெள்ளத்தில் வணங்கின புல் பிழைக்கும்; வணங்காமல் உயர்ந்துநிற்கும் மரமோவென்றால் சாய்ந்துவிடும். உங்கள் கணவர்களிடத்திலோவென்றால் இதனிலும் கீழ்ப்படியவேண்டியது முக்கியதருமமாம். அவர்களிடத்தில் பொய், புரளி, மோசம், வஞ்சனைமுதலியவைகளைச் செய்யாமல் விலக்குவதும் கடமையாகும். பொய்யை கனவிலும் நினைக்கக்கூடாது. நீங்கள் பொய்சொல்வதாக அவர்கள் அறிந்துவிட்டால் உங்களை ஒருபொழுதும் நம்பமாட்டார்கள். அவர்களுக்குத் தெரிந்தால் அல்லவோ அப்படி நேரிடுமென்று நீங்கள் நினைக்கலாம். "பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்" என்பதை நீங்கள் அறியீர்களா? "கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் வெளியாகும்" என்பது உண்மையான வசனம். எப்படியும் நீங்கள் அகப்படுவீர்கள். பிறகு மிரளமிரள கண்ணைவிழிக்கவேண்டிவரும். பொய் தற்காலத்தில் நிஜப்பட்டாலும் காலாவட்டத்தில் பயன்படாமல் தீங்கை விளைவிக்கும். பொய்யைச் சாதிப்பவர்கள் அணுவளவு உண்மையுடன் பலபொய்களைக்கலந்துவிடுவார்களென்பது நிச்சயம். பலவகையான பொய்களிலும் எள்ளளவு உண்மைகலந்தபொய்யே மிகப் பொல்லாத பொய்யாகும். முற்றும்பொய்யாயிருப்பதைக் கண்டுபிடித்து வெல்லலாம். பாதி மெய்கலந்த பொய்யை வெல்வது தான் வருத்தமானது. பொய் உரைப்பது தெய்வத்திற்குத் துணிந்து மானிடற்கு அஞ்சுவது போன்றது. ஏனெனில், பொய்யர்கள் தற்காலசுகத்தை நாடி மனிதனுடைய இஷ்டத்தைச்சம்பாதிக்க ஸகல வியாபியான பகவானுடைய கட்டளையை மறந்துவிடுகிறார்கள்.

நீங்கள் உங்கள் புருஷர்கள் இடத்தில் உண்மையோடுநடப்பதுமல்லாமல் பய பக்தி விசுவாஸத்தோடும்நடக்கவேண்டும். உங்கள் கணவர்கள் உங்களைப்பார்கிலும் வித்தையிலும் புத்தியிலும் வயதிலும் பலமடங்குபெரியவர்கள். அவர்களை அலக்ஷியம் செய்யக்கூடாது. உங்களுடைய சகலவித சுகமும் அவர்களாலேயாம். அவர்களுடைய சுகமும் உங்களாலேயே என்றாலும் அவர்களுடைய யோக்கியதை சிறந்தது. அவர்களுக்கு எதில் இஷ்டமோ அதையே நீங்களும் அபேக்ஷிக்கவேண்டும். அவர்களுக்கு எதில் இஷ்டமில்லையோ அதிலிருந்து உங்களுடைய இஷ்டத்தை மாற்றவேண்டும். ஏனென்பீர்களோ, அவர்களுக்கு மனமில்லாததில் உங்களுக்கு விருப்பமிருக்குமானால் நீங்கள் உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயல்வீர்கள். அதனால் உங்கள் கணவர்களுக்கு உங்களிடத்தில் வெறுப்புண்டாகும். ஆனதுபற்றி உங்கள் கணவர்களுக்கும் உங்களுக்கும் மனக்கலக்கமுண்டாய் வீட்டில் எப்போதும் சண்டை சச்சரவுநேரிடும். நீங்கள் உங்களுடைய அடுத்த வீட்டுக்காரியைப்போல 50 ரூபாயில் தினப்படி புடவையும், 5 ரூபாயில் ரவிக்கையும் வேணுமென்று ஆசைப்படாதீர்கள். உங்கள் புருஷர்களுடைய ஸ்திதிக்குத் தக்கபடி உங்கள் ஆடையாபரணங்களிருக்கவேண்டுமே யல்லாமல் அயல்வீட்டுக்காரிக்குச் சமமாயிருக்க விரும்புவது "புலியைப் பார்த்து பூனை சூடிக்கொண்டதுபோல்" ஆகும்.

ஊரிலுள்ள புத்தியில்லா ஸ்திரீகள், உங்கள் புருஷர்கள் நூற்றுக் கணக்காய்ச் சம்பாதிக்கிறார்களே, உங்களுக்கு ஒரு நகைகூட இல்லையே, ஸ்வல்ப சம்பளமுள்ளவன் மனைவிகூட அனேக நகைகள் செய்து அணிந்துகொண்டிருக்கிறாள், என்று சொல்லி, நீங்களும் உங்களுடைய கணவர்களிடத்தில் சண்டை செய்தாலல்லவோ செய்து கொடுப்பார்களென்று தூண்டிவிட்டு நிர்ப்பந்தித்தபோதிலும் நீங்கள் அறிவுள்ளவர்களாயிருந்தால் உங்களாலியன்றமட்டும் அவர்களுக்குச் சமாதானம் சொல்லி உங்களுடைய நிலைமையை நன்றாய் அறிந்து சமயத்துக்குத் தக்கபடி நடந்துகொள்ளல் வேண்டும.

அது நிற்க, புருஷர்கள் வெளியேபோய் வேலை செய்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் முகத்தைக் கடுத்துக்கொண்டு "வல்லடி வழக்கைச் சொல்லடி மாமி" என்று மல்லுக்கு நிற்பது தகுதியன்று. வருவதற்கு சற்று முன்பாகவே அவர்களுக்கு இஷ்டமுள்ள உணவுகளை நல்ல உருசியோடு செய்துவைத்து, வந்தவுடன் குளிர்ந்த முகத்தோடும் ஆதரவோடும் கைகால் சுத்திசெய்ய சுத்தமுள்ள ஜலத்தைக் கொடுத்து பிறகு சித்தப்படுத்தியிருக்கிற பலஹாரங்களை உண்ணச்செய்து, அவர்கள் இளைப்பாறிய பின் வீட்டுவிஷயங்கள் எது இருந்தாலும்சரி, மற்ற எதுவானாலும் சரி, சொல்வது உசிதமாகும். இவ்வுபசாரங்களுக்கும் இணங்காத துர்க்குண புருஷனாயிருந்தால் அவன்மனதை அறிந்து நடப்பது கடமை. சிலபுருஷர்கள் படித்திருந்தும் விவேக சூன்னியராய், சொல்வார் பேச்சையெல்லாம் காதுகொடுத்துக் கேட்டு தங்கள் அருமை மனைவிகளைக் கொடூரமாய் நடத்துவதோடும் சிறு குற்றங்களுக்கெல்லாம் அடிப்பதும் திட்டுவதும் செய்வார்கள். அப்படிச் செய்வது அவர்களுடைய படிப்பிற்கும் நாகரீகத்திற்கும் சற்றும் பொருந்தாமலிருக்கிறது. தங்கள் மனைவிகள் யாருக்கென்று பயப்படக்கூடும். ஒரு மனைவி தன் கணவன் ஒருவனுக்கு மாத்திரம் பய பக்தி விசுவாஸத்துடன் பணிவிடை செய்யக்கூடும். மற்ற கோட்சொல்வோர்க்கெல்லாம் பயப்படுவது அவசியமானது மல்ல, ஸாத்தியமானது மன்று. ஆனபற்றி சிறு குழந்தைகளே! மேலேசொன்னபடி உங்களுக்கு ஏதாவது நேரிடும்பக்ஷத்தில், ஸகிக்கமாட்டாமல் பொறுமையின்றி கணவர்களை நிஷ்டூரப்படுத்தி தெருவில் வந்து விழுந்து அவர்கள் மானத்தைவாங்காமல், வந்ததை ஸகித்து, "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தான், தன் தகுதியான் வென்றுவிடல்" என்னும் முதியோர் வசனங்களை மனதின்கண் வைத்து அவர்களை சண்டையால் ஜெயிக்க முயலாமல் பொறுமையால் வெல்வது கற்புடையமாதர்கட்கு அழகாகுமாதலால் இதை அனுஸரித்து நடவுங்கள். உண்மையாகவே உங்களிடத்தில் தப்பில்லாமலிருக்க அவர்கள் சினங்கொண்டால் அந்தசமயத்தில் சும்மா இருந்து, கோபம் சாந்தமானபொழுது உங்கள் நிஜமான கஷ்டத்தை நயத்தோடும் பயத்தோடும் தெரியப்படுத்தவேண்டும். 'நம்ம விதி இப்படியிருக்கிறது அவர்களிடத்தில் சொல்வானேன்' என்று இருந்தால் உங்கள் கஷ்டம் ஒருபொழுதும் விடியாது. பசியெடுக்கும் குழந்தை அழுது பால் அருந்துவதுபோல், சொல்லி குறைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

சில அறிவிலிகள் மருந்து மாயங்கள் செய்து கணவனை வசப்படுத்த துர்வழியில் பிரயத்தனப்படுவோர்கள். அப்பேர்ப்பட்ட கொடும்புலிகள் விஷம்போடவும் அஞ்சார்கள். அவர்கள் வசப்படுத்துவது எப்படியானாலும் அதை உட்கொண்ட ஆடவரில் சிலர் இறந்துவிடுவதாகவும் கேள்விப்படுகிறேன். சிலருக்குப் பைத்தியம் பிடிக்குமாம். [பைத்தியம் பிடிக்காதவர்களுக்கு உடம்பில் இம்மருந்துகளால் வியாதி வேரூன்றுவது நிச்சயம். வாஸ்தவத்தில் ஒருவரை ஒருவர் வசப்படுத்த யாதொரு மருந்துமில்லை. வசப்படுத்து மருந்து என்று சொல்லப்படுவதெல்லாம் சித்தப்பிரமை உண்டுபண்ணத்தக்கதும் புத்தியைக் கெடுக்கத்தக்கதுமான மருந்துகளே. இம்மருந்துகளெல்லாம் ஏறத்தாழ விஷங்கலந்தவையே. சீக்கிரத்தில் பலிக்கும்படியானதாகச்சொல்லும் சிலமருந்துகள் உயிர்வாங்கத்தக்க கொடிய விஷங்கலந்தவை. இவ்வித மருந்துகளை விற்போர் வாங்குவோர் இருவரும் அவர் வியாபாரம் வெளிக்குவந்தால் சர்க்கார் சட்டப்படி தண்டிக்கப்படத் தக்கவர்களாயிருக்கிறார்கள்.—வி. சி. ப.]

என் அருமைச்சகோதரிகளே, இப்படி புருஷத்துரோகி ஜனத்துரோகியாகாமல் அவர்களை வசப்படுத்த நல்வழியொன்றுண்டு: கவனமாய்க்கேளுங்கள். இதைச்சொல்வதற்குமுன் மேற்படி விஷயங்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது. மருந்தினால் இறந்து விடுவதாகச்சொன்னேன். அப்படி இறந்துவிடுவானேயானால் இவளுக்கு என்ன சுகமுண்டு? தங்கள் அருமைக் கொழுநனைச் சாகக்கொடுத்துவிட்டு வாழ்க்கை நலனையெல்லாமிழந்த பின்பு அவர்கள் இருந்தால்தானென்ன இறந்தால் தான் என்ன? இவ்வாறுசெய்வது அவர்கள் அறியாமைக்கு பான்மையேயாம். "குலமகளுக்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல்." உயர்ந்த குடியில் பிறந்த கற்புடையமனையாள் தன்காதலனை இழந்து விடும்படி நேரிடுமாயின் அவளுக்கு அதைப்பார்க்கிலும் கொடிய துன்பம் இவ்வுலகில் வேறுண்டோ? அவள் உயிரோடிருப்பினும் துன்பக்கடலில் ஆழ்ந்திருப்பாள். உங்கள் கணவர்களை வஞ்சிக்காமல் செய்யவேண்டிய மருந்து என்னவெனில், அவர்கள்போனவழியெல்லாம் நீங்களும்நடந்தால் உங்கள்வசமாவார்கள். அப்படியும் வயிரம்பற்றிய நெஞ்சராயிருப்பாரானால் நீங்கள் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. அவர்கள் துஷ்டர்கள் என்று அறிந்து நீங்கள் சத்தியத்தைக் கைவிடாமல் நடக்கவேண்டும். இல்வாழ்க்கையானது சத்தியம், சந்தோஷம், சுகம், கீர்த்தி இவைகளோடு சேர்ந்திருக்கவிருப்பமுண்டானால் வீட்டிற்கு 'எஜமானன்' 'எஜமானி' என்னப்பட்ட இருவரும் ஒத்திருக்கவேண்டும். இல்லாவிடின் மேன்மையான இல்வாழ்க்கைச்சுகம் கிடைக்காது.

அதுநிற்க, வீட்டுவேலைகள் நடக்கவேண்டியதைப் பற்றி சற்று விசாரிப்போம். நீங்கள் எத்தனை பணமுள்ளவர்களானாலும் வேலைக்குப் பின்வாங்கக்கூடாது. அதனால் தரித்திரம் வந்துவிடுமா? சில அறிவிலிகள் நமக்கித்தனை ஆஸ்தியிருக்க நாம் வேலைசெய்வது தகுதியல்லவென்றுஇறுமாப்படைந்து குடித்தனத்தைப் பாழாக்குவாரர்கள். பணமாவது இலக்ஷ்மியல்லவா? சோம்பலாகிய மூதேவி குடியிருக்குமிடத்தில் இலக்ஷ்மி எப்படியிருப்பாள்? துஷ்டர்கள் வாசம் செய்யுமிடத்தில் யோக்கியர் எச்சில் உமிழவும் யோசிப்பாரல்லவா? தனிகர் தங்கள் கையாரச் செய்யாவிடினும் வேலையாட்களைக்கொண்டு நேரிலிருந்து செய்விப்பதே போதுமானது. அப்படி வேலை செய்வதில் நடக்கவேண்டிய காரியங்களும் சரிவர நடக்கும், தேசப்பயிற்சியும் உண்டாகும். ஸ்திரீகள் பார்க்காத சமுஸாரம் சீர்கெட்டுப்போவதில் சந்தேகம் என்ன இருக்கிறது? "மனைத்தக்க மாண்புடையாளாகித் தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்று நம்முன்னோர் அறியாமலா பாடினார்கள்? தனமுதலுள்ள தாய்வீடாயும் ஏழ்மையுள்ள புருஷன்வீடாயுமிருந்தால், புருஷனையும் அவன் பந்துக்களையும் லக்ஷியம் செய்யாதவருமுண்டு. அந்தப் பிறவிச்செல்வியானவள் மாமிவீட்டில் 'எனக்கு வேலைசெய்யத்தெரியாது, செய்து வழக்கமில்லை;' என்று கௌரவமாய்ப் பேசுவது வழக்கம். இந்த வீண்டம்பத்தில் சௌரவம் வராது. பேர்போன சாவித்திரியம்மாள் ஸகலராஜ ஐசுவரியத்தையும்விட்டு புருஷனைதெய்வமாக எண்ணி காடே கதியென்று போனதையறியீர்களா? சீதாதேவியின் கதையைப்படிக்காதவரும் கேட்காதவருமுண்டா? அப்பேர்ப்பட்ட உத்தமிகளின் சரித்திரங்களை நம் சிறுமிகள் எல்லோரும் படித்து அதுபோல நடப்பார்களாக.



கணவன் ஏழ்மையாயிருக்க மனைவி தாய்வீட்டுப் பணச்செறுக்கால் ராஜாததிகைப்போலிருந்தால் பார்ப்பவர்க்கு நகைக்க இடம் தருமேயல்லது அவளுக்கு சிறப்புண்டாகாது. தங்களாலியன்றமட்டும் தாங்களே வேலைகளைச்செய்வது உத்தமம். தற்கால நிதர்சனமாக சீமையிலுள்ள நமது விக்டோரியா சக்கிரவர்த்தினியாரைப் பார்க்கிலும் அந்தஸ்தில் சிறந்தவராய் யாரிருக்கிறார்கள். அவர் தம்முடைய சொந்த வேலைகளில் எத்தனை தாமே செய்துகொள்கிறார் தெரியுமா? அத்தனையுமிங்கே எழுதப்புகின் உங்களுக்குச் சொல்லவேண்டிய மற்ற விஷயங்களுக்கு இடமிராது. தற்காலம் ஜெர்மனி சக்கிரவர்த்தியாய் அரசு செலுத்தி வருகிறவரின் தர்மபத்தினி சக்கிரவர்த்தினியாகவிருந்தாலும் அவருடைய ராஜகுடும்பகாரியங்களையெல்லாம் தாமேநேரில் மேன்பார்வையிட்டு நடத்திவரும் உத்தமி யென்பது ஐரோப்பாகண்டமுழுவதும் பிரசித்தி பெற்றவிஷயம். ஆகையால் வேலைசெய்வதில் குறைவு ஒன்றுமில்லை. எந்தப்பதவியிலிருந்தாலும் அவரவர் தம் வேலைகளைக் குறைவின்றிச்செய்வதிலே கௌரவமிருக்கிறது.

வேலை செய்வதிலும் ஒழுங்கு இருக்கவேண்டும். சாமான்களை இடம்விட்டு இடம்மாற்றுவதும், கண்டவிடமெல்லாம்பரப்புவதும், உப்பு இருப்பதில் பருப்புப் போடுவதும் பருப்பு இருப்பதில் புளிபோடுவதுமான ஒழுங்கீனங்களைச்செய்வது கண்ணுக்கும் அழகல்ல, தேக சவுக்கியத்திற்கும் குறைவு வருவிக்கும். இதுபோலவே ஒவ்வொரு வேலையையும் தகுந்த காலத்தில் செய்தல் அவசியமாகும். அப்படிசெய்யாவிடின் ஒருநாளில் எத்தனை வேலை செய்யவேண்டுமோ அத்தனையும் அன்றைக்கே செய்து முடியாமல் மறுநாளைக்கு பாக்கிவிழுந்து, மறுநாளை வேலையோடு இதுவும் சேர்ந்து செய்ய முடியாமல் தேகத்திற்கு இரட்டிப்பு கஷ்டத்தை விளைவிப்பதோடு காரியமும் சீரழிந்து கெட்டுப்போகும். அன்றியும், சில மணி காலம் படிப்புக்கென்றும் சிலமணிநேரம் சந்தோஷ வார்த்தைகள் இஷ்டர்களோடு பேசவென்றும் ஏற்படுத்துவது அதிக நன்மையைத்தருவதாம். ஒழிவுகாலமில்லாவிட்டால் தேகத்தில் சிரமமுண்டாவதோடு சரீரத்தில் சோம்பலும் குடிகொள்ளும். அலுப்பினால் சிடுசிடுப்பும் கோபமும்அதிகரிக்கும். ஒவ்வொன்றுக்கும் பிரத்தியேக காலங்களை ஏற்படுத்திவிடுவோமானால் ஒருவேலையில் சோம்பல் வருவதற்கு முன்னமே மற்றொரு வேலைக்குப்போய்விடுவோம். அதனால் எல்லாம் குறைவின்றி நடக்கும். பார்ப்பவர்க்கும் அதிக அழகாயிருக்கும். நமக்கும் சந்தோஷமும் சரீர சுகமும் தரும். நீங்கள்தையல்வே

லையில் கொஞ்சம் தேறியிருந்தால் குடும்பத்திற்கு உபயோகப்படும். சீக்கிரத்தில்வேண்டிய குழந்தை சொக்காய், கணவர்களுக்கு சாதாரண உள்சட்டை, உங்கள் சாதாரண ரவிக்கை, கிழிந்ததைத் தைத்தல் முதலியவைக்கு அதிகப் பிரயோஜனப்படும். மற்ற உயர்ந்த உடுப்புகளுக்கு'மெஷின்'†துணையிருக்கிறார்.

மேலே வீட்டுவேலையைப்பற்றிச் சொன்னபொழுது ஒழிவுகாலம் வேணுமென்று சொன்னேனல்லவா? அந்தக்காலத்தைக்கழிக்கும் கிரமத்தைப் பற்றி கொஞ்சம் சொல்லவேண்டியிருக்கிறது. அதைக்கேளுங்கள்.

ஒழிவுகாலத்தில் புத்தியில்லா ஸ்திரீகள் மிதமின்றி அதிக துரிதமாய் ஊர்வம்புகளைப் பேசத்தொடங்கி தங்கள் சொற் போக்குக்கு வசப்பட்டவர்களாகி வாயில்வந்ததைப் பேசிவிட்டு, பேசினவார்த்தைகள் முன்பின் பொருந்தும்படி விஷயதோரணை காட்ட உள்ளதை ஒளித்தும் இல்லதை வருவித்தும் பேசி, கடைசியில் தாங்கள் உண்மையைவிட்டு விலகி இத்தனைதூரம் ஓடிவந்தோமென்பதையும் உணர வல்லமையற்றவர்களாகின்றனர். முக்கியமாய் அயலாருடைய குடும்பரகசியங்களை அறியப்பிரயத்தனப்பட்டு, அவைகளைப் பொய்யாகவோ மெய்யாகவோ அறிந்துகொண்டு அவற்றுடன் இன்னம் அனேக பொய்களைக்கலந்து இதரருடன் தூஷியமாயும் நிஷ்டூரமாயும் பேசுவார்கள். இப்படி ஊரார் குடும்பங்களைப்பற்றி வாயில்வந்தபடி பிதற்றுவது கொடியதாகும். இவ்விஷயம் அற்பமானதன்று. ஒருதரம் இறைத்துவிட்டபேச்சை மீண்டும் பொறுக்கக்கூடுமோ? வாய்விட்டுப்பேசிய பேச்சு மறுபடியும் நமக்கு ஸ்வாதீனமாகாது. மேலும் பேசுகிறவர்களுக்கு பேச்சின்கொடுமையும் தெரிவதில்லை. கூறியவாள்போல் மனதை அறுக்கத்தக்க சொற்கள் அனேகமுண்டு. ஆயுள்உள்ளவரையிலும் ஒருவனுக்கு மாறாத மனவருத்தமுண்டாகும்படியான சொற்களு மனேகமுள. இதையறிந்தே "தீயினால் சுட்டபுண் ணுள்ளாறும், ஆறாதே நாவினால் சுட்டவடு."—என்றார் நமது திருவள்ளுவ நூலாசிரியர். பேச்சிலேயே பிரீதியுடையோர் பகையாளிகளாகின்றனர்; யோக்கியதையும் அயோக்கியதையாகின்றது. குடும்பங்களும் கலகப்பட்டுச் சின்னாபின்னமாகின்றன. ஆலோசனையின்றி வீணாகப்பிதற்றும் வம்பளப்புப் பேச்சுகளாலும் அவைகளால் விளையும் தீங்குமாத்திரம் மட்டானதன்று. ஆனதுபற்றியே இவ்விஷயத்தைப்பற்றி இவ்வளவு விஸ்தரித்துச் சொல்லப்புகுந்தேன்.

மேற்படி ஒழிவுகாலத்தை சாயங்காலம் 4-மணி முதற்கொண்டு 6-மணி வரையிலாவது 5-மணி முதற்கொண்டு 7-மணி வரையிலாவது வைத்துக்கொண்டு நல்ல காற்றுகொள்ள வெளிப்பிரதேசங்களுக்குப் போவதோ, நல்ல சிநேகர்வீட்டிற்குப் போவதோ, அல்லது நல்ல உறவினரோடு குலாவுவதோ, இவ்விதங்களில் எப்படியோ இன்பமாய்க் கொஞ்சகாலம் கழிப்பது நலமாயிருக்கும். சிநேகிதர் வீட்டிலிருந்தால் தகுந்ததும் மனதிற்கு இன்பம்தருவதுமான பேச்சுகளைப்பேசலாம். தாங்கள் படித்திருந்ததில் விசேஷமிருந்தால் அவர்களறியச் சொல்லலாம். கூடுமானால் ஒருபொதுவிடத்தில் தகுந்த ஸ்திரீகளெல்லாம் சேர்ந்து சற்றுநேரம் பேசலாம். ஆனால் பிரதிதினமும் தவறாமல் அப்படி சேருவதென்றால் சாத்தியமாகாது. சிலசமயம் கணவர்கள் இஷ்டப்படமாட்டார்கள்; இல்லையென்றால் அவசியமான வீட்டுவேலை தடைப்படும். இப்படி இன்னம் அனேக இடையூறுகள்நேரிடும். இதுகளுக்கெல்லாம் அனுகுணமாய் நடக்கவேண்டுமேயல்லது வேறில்லை. இந்தவிஷயத்தில் ஸ்திரீகள் கட்டாயப்படி நடக்கமுடியாது. வீட்டைவிட்டு வெளியில் சிநேகிதர் பந்துக்கள் முதலியவர் அகத்திற்குப்போனால் நெடுநேரம் அங்கேயே இருப்பதுயுக்தமல்ல. தீராப்பக்ஷமாய் அதிகநாழி இருக்கவேண்டியிருந்தால் நடுவில் வீட்டிற்கு வந்து போவது நலம். ஒருநாள், அரைநாள் அயல்வீட்டிலிருப்பது உயர்ந்த குடும்பஸ்திரீகளுக்கு மரியாதையாயிராது. எத்தனை ஆப்த சிநேகிதையாயிருந்தாலும் ஒருநாளைக்கு ஒருதடவைக்குமேல் போகக்கூடாது. ஒருமணி இரண்டுமணிக்குமேலிருப்பதும் அழகல்ல. தினமொரே வீட்டிற்குப் போவதைப்பார்க்கிலும் பொதுவிடத்தில் கூடுவது அதிகநலத்தைத் தருமென்று முன்னமே சொன்னேன். சிநேகிதரிடத்தில் பேசும்பொழுதும், நல்ல விஷயங்களைப் பேசுவது மாத்திரம் முக்கியமல்ல. அதிலும் முக்கியமானது மற்றொன்றுண்டு. அஃதென்னெனில், எதுவரையில் வெளியில்விட்டுப் பேசலாமோ அதுவரையிலுந்தான் பேசவேண்டும். உங்கள் மனதிலுள்ளவற்றை எல்லாம் வெளியிடக்கூடாது. அதனால் உங்களுக்கு சங்கடங்கள்நேரிடும். பல்லியைப்போல் சுவற்றில் ஒட்டிக்கொண்டு 'ஒட்டு' கேட்கும் துஷ்டர்கள் சிலருண்டு. அப்படிக்கேட்டு மனதில் வைத்திருந்து சமயம்வாய்த்தபோது சொல்லுதற்கரிதான தீமைகளைச்செய்வார்கள். ஆகையால் இந்தவிஷயத்தில் அதிக ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

† தைக்கும் யந்திரம்.



என்னருமை நேசிகளே, உங்களுக்கு இதுவரையிலும்வற்புறுத்திக் கூறிய விஷயங்களை மனதில் பதியவைத்து நடப்பீர்களானால் ஸ்வர்க்கசுகத்திலும் மேலான இல்வாழ்க்கை சுகம் கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

இப்படிக்கு
நல்வழி உரைப்போன்.

## மாதர் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் நமது விவேக சிந்தாமணியை வாசிக்கும் மாதர்கள் எழுதும் விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.]

### இந்து ஸ்திரீகள் வித்தியா காலக்ஷேபார்த்தம் கூடிய முதல்சபை.

என் சிநேகிதிகளே,

திருவல்லிக்கேணியில் விஜயநகரம் மகாராஜா அவர்கள் பெண்பிள்ளைகள் படிப்பதற்காக ஏற்படுத்தியிருக்கிற பள்ளிக்கூடத்தில் சென்ற மேமீ 13உ சனிக்கிழமையதினம் 4-மணிமுதல் 5-மணிவரையில் ஹிந்து ஸ்திரீகளின் வித்தியா காலக்ஷேபார்த்தம் ஒரு சபை கூடியது. அதற்கு நான் போகக் கிடைத்தது. அதற்கு வந்தவர்களில் நமது சுதேசப் பெண்களும், பெரியவர்களுமாக சுமார் 30-பேர்களிருந்தார்கள். தவிர, இங்கே பெண்பிள்ளைகள் பாடசாலைகளின் மேல்விசாரணைசெய்யும் மிஸ்ஸஸ் பிராண்டர் அம்மாளும், வீடுகளில் பெண்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கும் ஏற்பாட்டுக்கு மேல்விசாரணை கர்த்தாராகிய மிஸ். கார்டன் அம்மாளும் வந்திருந்தார்கள். மிஸ். அன்னி ஷண்முகம் அம்மாள் அன்று பிரசங்கம் செய்தார். பெண்பிள்ளைகள் கல்வி கற்றால் அவர்களுக்கே மிகவும் உபயோகமுண்டு, ஸாதாரணமாக உலகத்தில் சீர்திருத்தத்துக்கும் காரணமாக இருக்கும் என்ற நல்லெண்ணத்துடன் பெண்பிள்ளைகள் கல்வி யபிவிர்த்தியில் விருப்பமும் முயற்சியுமுடைய ஹிந்து ஜனசார சீர்திருத்த சங்கத்தார்களால் இந்த சபை கூட்டி வைக்கப்பட்டதாம். பலர் தனித்தனியே ஒரு சங்கதியை அறிந்துகொள்ள வேண்டுமானால் எவ்வளவு பிரயாசையோ அதைப்பார்க்கிலும் வெகு சுலபமாக பலர் ஒரேஇடத்தில் சேர்ந்து ஒரேசமயத்தில் ஒரு சங்கதியை அறிந்துகொண்டால் எவ்வளவு கால ஆதாயமும் தேக சிரம ஆதாயமும் உண்டு! இத்துடன் பலர் ஒரு இடத்தில்கூடி கொஞ்சம் கொஞ்சம் காலம் செலவுசெய்தால் எவ்வளவு சந்தோஷமும் குதூஹலமுமுண்டு; எவ்வளவு புத்திபிரயோஜனம்! அன்று சாயங்காலம் பிரசங்கம் வெகு நன்றாயிருந்தது. **அங்கிலேயர்தேசத்துக்கு ஒரு பிரயாணம்** என்ற விஷயமாய் பிரசங்கம். அங்கிலேயதேசத்துக்குப் போகிறதானால் என்னவிதமாய் போகிறதென்றும் போனால் அங்கே விநோதங்களாக பார்வையிடவேண்டிய இடங்கள் இன்னவைகளென்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த இடங்களின் விபரங்கள் வாக்குமூலமாய் தெரிவிக்கப்பட்டது மாத்திரமல்லாமல் ஒருவிதமான நிழல்படங்களாலும் காட்டப்பட்டது. ஒரு பெரிய வெள்ளைத்துணியை நாலுபக்கங்களிலும் நன்றாயிழுத்துக் கட்டியிருந்தார்கள். இதற்கு ஒருபக்கத்தில் நாங்கள் எல்லாரும் வரிசைவரிசையாக உட்கார்ந்திருந்தோம். இந்தப் படுதாவுக்கு அப்புறத்தில் ஒரு மேஜையின்பேரில் புதுமாதிரியான *ஜாலவிளக்கு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதன் வெளிச்சம் அதின்முன்னிருந்த ஒரு குழாயின்வழியாய் மேலே சொன்ன வெள்ளைப்படுதாவில் விழுந்தது. படுதாவில் பார்த்தால் இந்த வெளிச்சம் ஒரு பிரகாசமான வட்டம்போல் இருந்தது. இந்த வட்டமான இடத்தில்தான் படங்கள் தெரிந்தன. படங்கள் தெளிவாக தெரியும்பொருட்டு இந்தப்படுதாவை நனைத்துவிட்டார்கள்; வெகு பிரகாசமாக இருந்தது. வெளியிலிருந்து வெளிச்சம் உள்ளேபுகுந்தால் இந்த வெளிச்சம் தெரியாதென்று கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிவிட்டார்கள். இந்த ஏற்பாடுகளுக்குப் பின் பிரசங்கம் ஆரம்பிக்கப்பட்டது. மிஸ் அன்னி ஷண்முகம் அம்மாள் பிரசங்கம் செய்தது ரொம்ப நன்றாயிருந்தபோதிலும் அவர் சொன்னவைகளில் பெரும்பான்மையானவை இதுவரையில் நான் காணாததும் நம் ஊர்களிலே இதுவரையில் இல்லாததுமானதாகையால் எனக்கு நன்றாய் மனதில்பிடிபடவில்லை. மிகவும் வேகமாய்பேசினார். அன்று அவர் பேசினதுமட்டில் இருந்து, நிழல் படங்கள் காட்டப்படாமல்போனால் நான் அங்கு போனதிற் பிரயோசனம்ஜாஸ்தியாக இருந்திராது. ஆகிலும் அன்று இதுவரையிலும் நான் அநுபவியாத சந்தோஷத்தை அனுபவித்தேன். இந்தமாதிரி புத்திப் பிரயோஜனமுள்ள விஷயமாய் நமக்குள் பெண்பிள்ளைகள் எங்கே கூடுகிறார்கள்? சிநேகிதைகள் வீடுகளில் கலியாணங்கள் வந்தால் அப்போ போவோம். போனால் சாப்பிடச் சொல்லுவார்கள். சற்று பாடச்சொல்லுவார்கள். பிறகு சும்மா இருக்கும்போது என்னபேச்சு? ஒருவரை ஒருவர்பார்த்து நகைகளைக்குறித்தும், புடைவைகள் ரவிக்கைகளைக்குறித்தும், அவரவர்கள் புருஷர்கள் வேலை, சம்பளங்களைக்குறித்தும், ஆஸ்திபாஸ்திகளைகுறித்தும், இன்னம் இல்லையா? எத்தனையோ உபயோகமில்லாத சங்கதிகள், அவைகளைக் குறித்தும் பேசுகிறதுதான்மிச்சம். ஆனால் இந்தமாதிரி சபை கூடுகிறதில்ஒருவர்க்கொருவர் எவ்வளவு மரியாதை காட்டுகிறார்கள். அங்கிலேய ஸ்திரீகள் ஸாதாரண

* Magic Lantern.

மாக ரொம்ப அன்புள்ளவர்கள்போலிருக்கிறது. ஒரு காரியம் கைக்கொண்டால் மிகவும் அக்கறையுடன் மேல்போட்டுக்கொண்டு செய்கிருர்கள்; அன்று மிஸ்ஸஸ் பிராண்டர் அம்மாள் அரைமணி முன்னதாகவே வந்துவிட்டார்.

பிரசங்கம் இங்கிலீஷ்காரர்தேசத்து விசேஷங்களைக்குறித்தென்று சொன்னேன். அவர்கள் தேசம் இங்கிலாந்து; அதற்கு போகிறதானுல் கடல்மார்க்கமாய்ப் போகவேணும். புகைக்கப்பல்களில் போனுல் 18 அல்லது 19 நாட்களில் போய்விடலாம். புகைக்கப்பலின் உள் கட்டடத்தைக்குறித்து தெரிவிக்கப்பட்டது. அது அனேக அறைகளுள்ள ஒரு பெரிய வீடுபோலிருக்குமாம். வெகுநேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருக்குமாம். மனுஷியாளுக்குவேண்டிய எல்லா சௌகரியங்களும் அதிலிருந்தபடியே கிடைக்குமாம். ஆனுல் இந்த வீடு மரத்தினுல் கட்டப்பட்டிருக்குமாம். தண்ணீரில் மிதக்கிறதால் ஆடி அசைந்துகொண்டு இருக்குமாம். சில சமயங்களில், கடல்கொந்தளிக்கும் சமயங்களிலும் காத்து அதிகமாக இருக்கும் சமயங்களிலும் இந்த ஆட்டம் உள்ளே உட்கார்ந்திருப்பவர்கள் பித்தத்தைக் கிளப்பிவிடக்கூடியதாக அவ்வளவு அதிகமாயிருக்குமாய். வெகு வேகமாக தண்ணீரைக் கிழித்துகொண்டு போகும்போலிருக்கிறது. இல்லாவிட்டால் 18, 19 நாளில் 18, 19 ஆயிரம் மயில்கள் போய்விடுகிற தெப்படி? இதில் உள்ள சுககஷ்டங்கள் நாம் நேரேபோய்ப்பார்த்தால் தான் தெரியும்போலிருக்கிறது. இந்தமாதிரி இதில் பிரயாணமாகி இங்கிலாந்து சேர்ந்தால் அதின் பிரதான பட்டணமாகிய லண்டன் நகருக்கு போகலாம். இந்தபட்டணம் இவ்வுலகத்திலுள்ள பட்டணங்களெல்லாவற்றையும் பாக்க மஹாபெரியதாம். இந்தபட்டணத்தில் 40 - லக்ஷம் ஜனங்கள் வசிக்கிருர்களாம். 150-றயில்வேஸ்டேஷன்களிருக்கின்றனவாம். தினம் 750 - றயில்வண்டிகள் ஓடுமாம். தெருக்களெல்லாம் வண்டிகள் ஸதா நெறியுமாம். மனுஷர்போகிறதற்கு தெருக்கள் இருபக்கங்களிலும் கல் பாதைகள் கட்டப்பட்டிருக்கின்றனவாம். எல்லாரும் வெள்ளைகாரர்கள் தானும். அந்த தேசத்து கட்டடங்கள் சில காட்டப்பட்டன. முதலில் பார்லிமென்டு என்று சொல்லும் ஆலோசனைஸபை கூடுகிற இடம் காட்டப்பட்டது. இது ஒரு வெகு பெரிய கட்டடம். மாடியின்மேல் மாடியாய்கட்டியிருக்கிறது. அந்த தேசத்து சட்டங்களெல்லாம் இங்கேதான் சபைகூடி முடிவு பெறுகின்றனவாம். நம் தேசத்து ராஜாங்க விஷயங்களும் இங்கேதான் கூடிப்பேசி தீர்மானிக்கிருர்களாம். இந்த இடத்துக்கு மாக்ஷிமைதங்கிய மஹாராணியவர்கள் வருஷத்தில் ஒரு தடவை வருகிற வழக்கமாம். இந்த மஹாசபையில் நம் தேசவாசிகூட ஒருவர் மெம்பராய் வந்திருக்கிருரென்று என் வீட்டில் புருஷர்கள் சொல்லக் கேள்வி. இவர் பம்பாயிலிருந்த ஒருபார்ஸியாம். இவர்பேர் தாதாபாய் நௌரோஜி யென்று சொல்லக் கேட்டிருக்கிறேன்,

பிறகு மஹாராணியவர்கள் புருஷர் இறந்தபின் அவர் ஞாபகத்திற்காக கட்டப்பட்ட ஒரு பெரிய மாளிகை காட்டப்பட்டது. மஹாராணியவர்கள் புருஷரைப்பறிகொடுத்தவர். அவர் புருஷர்பேர் ஆல்பர்ட் இராஜகுமாரர். அவர் இருந்தபோது அவரால் ஜனங்களுக்கு அநேக விதங்களில் பிரயோஜனங்களுண்டானபடியால் அவர் இறந்தபின் ஜனங்கள் எல்லாரும் மஹாராணியவர்களுடன் ஒருமைப்பட்டு இறந்தவருக்கு மறியாதையாகவும் அவர் ஞாபகத்திற்காகவும் இந்த நேர்த்தியான கட்டடம் கட்டிவைத்தார்களாம்.

பிறகு சிலவருஷங்களுக்குமுன் வசித்துக்கொண்டிருந்த மேன்மைபொருந்திய சப்பல் போர்வீரராகிய நெல்ஸன் பிரபுவின் ஞாபகத்திற்காக கட்டப்பட்டிருக்கும் அவர் சிலையும் அதின் மேல்மண்டபமும் இருக்கிற ஒரு பெரிய சதுரவெளி காட்டப்பட்டது. இதுவெகுஅழகாயிருந்தது. ஒரு வெள்ளைக்காரவீடும் தெருவும் வீட்டின் உட்புறமும் தெரிகிறபடம் காட்டப்பட்டது. வீடு ரொம்ப சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருந்தது. அங்கிலேயர் தேசத்தில் குளிர் ஜாஸ்தியாகையால் ஒவ்வொரு வீட்டிலும் கணப்புப்போட்டு வைக்கிற வழக்கமாம். சாயங்காலவேளையில் இக்கணப்புகளைச்சுற்றி வீட்டிலுள்ள கிழவர்கள் சிறுவர்கள் எல்லோரும் ஆண்பெண் என்கிற வித்தியாசமின்றி உட்கார்ந்து வேடிக்கையான வார்த்தைகள் பேசுகிறதோ, புஸ்தகங்கள் படிக்கிறதோ, சம்பாஷணை செய்கிறதோ ஏதாவது உபயோகமான காரியங்கள் செய்துகொண்டு வெகு மனக்களிப்புடன் சிரிப்பும் சந்தோஷமுமாக இருக்கிறதைப்பார்க்க எவ்வளவு ஆனந்தமாகவிருக்கும்! நம் வீடுகளைப்போல அவர்கள் வீடுகள் இல்லை. அவர்கள் வீடுகள் பெரும்பாலும் வெகு விசாலமாக இருக்கின்றன. வெகுபிரகாசமாகவுமிருக்கின்றன. நம் வீடுகளில் இருட்டான பாகங்கள் இருக்கின்றன. அவர்கள் வீடுகள் எங்கும் வெளிச்சமாகவும் காற்றோட்டமுள்ளதாகவும் இருக்கின்றன.

மஹாராணியவர்கள்கோடைகாலத்தில் வஸிக்கிறதற்காக கட்டியிருக்கும் இங்கிலாந்துக்கருகாமையிலுள்ள ஒரு சிறுதீவிலுள்ள அரண்மனை காட்டப்பட்டது. அதற்கு 'ஆஸ்பர்ன் ஹௌஸ்' என்று பெயராம். ராஜாங்க நகைகளெல்லாம் வைத்திருக்கும் இடம் காட்டப்பட்டது. மஹாராணியவர்கள் மூன்ருவது குமாரர் படம் பார்த்தோம். கடைசியாக மாக்ஷிமைதங்கிய மஹாராணியவர்கள் படமும் பார்த்தோம். வெகு சந்தோஷமாக இருந்தது. இவர் 18 வயதில் பட்டத்துக்கு வந்தாராம். அவ்வளவு சிறுவயதில் ஒரு இராஜ்ஜியம் ஆளவேணுமானுல் எவ்வளவு அபாரமான புத்திசாலித்தனமும் திறமையும் வேணும்! இவர்களுடைய ஸந்ததி பாக்கியத்தையும், இவர்களுடைய உத்தமமான குண விசேஷங்களையும், இவர் ஸ்திதியையும் யோஜிக்க மனதுக்கு மிகவும் ஆனந்தம் தருகிறது.



இந்தப்பிரகாரம் அன்று மீட்டிங்கு வெகுசந்தோஷமாய் முடிந்தது. வந்திருந்தவர்கள் எல்லாருக்கும் புஷ்பம் வழங்கினுர்கள். மிஸ்ஸஸ் பிராண்டர் அம்மாள் வெகு அன்புடன் எல்லாரையும் ஒருதடவை தன் வீட்டுக்கு வரவேணும் என்று அழைத்தார். இன்னும் இந்தமாதிரி மீட்டிங்குகள் மாதம் மாதம் கூடும் என்று தெரிகிறது. இந்தமீட்டிங்குபோல் பல இன்னும் நடக்கவேணுமென்றும் இதற்கு வந்தது போல் இவர்களும் இன்னும் எல்லோரும் வந்து இதனுல் உண்டாகும் புத்தி பிரயோஜனங்களையும் மனக்களிப்பையும் அனுபவிக்கவேணுமென்பதும் என் விருப்பமாயிருக்கிறது. இப்படிக்கு,

**அச்சபைக்குப் போயிருந்த ஒருவள்.**

---

## சிறுவர்க்கான ஜாலவினோதங்கள்.

---

**சிறுவிந்தைகள்.**

(1) வலதுகைப் பெருவிரல் உள்முனையில் இரகசியமாய் கொஞ்சம் மெழுகைத் தடவிக்கொண்டு ஒருவனை உட்காரச்செய்து அவன் புருவமத்தியில் ஒருகாசைவைத்து பெருவிரல் முனையால் சுமார் 60 விநாடிநேரம் அழுத்தி திடீலென்று கையை எடுத்துவிட காசு கையில் ஒட்டிக்கொண்டு வந்துவிடும். இதை உட்கார்ந்திருப்பவனுக்குச் செப்பாது புருவமத்தியில் பொருந்தவைத்த நாணயத்தை நெளித்துத் தள்ளச்சொல்ல காசுபுருவத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதாகவே எண்ணிக்கொண்டு அவன் தன்னுல் கூடியவரைக்கும் நெளித்து நெளித்துத் தள்ள பிரயாசைப்படுவன். தன்முயறசி அவலமாய்விட்டதென்று அவன் சொன்னவுடன் அவனையே கையால் காசை எடுத்துவிடும்படி உத்திரவளிக்க அவன் தடவிப்பார்த்து நாணயமில்லாததைக் கண்டு அதிசயங்கொள்வான்.

(2) வானத்திலிருக்கும் நட்சத்திரங்களை பகற்காலத்தில் பார்க்கவேண்டுமானுல், நெருக்கமான கிணற்றினடியினின்று ஆகாயத்தை அண்ணூந்து பார்க்கத் தெரியும்.

(3) சுமார் ¼ அடி நிகளமும் ¼ அங்குலம் குழைத்துவாரமுமுள்ள ஒரு சிறு குழையை நிமிர்த்துப்பிடித்து, மேல்முனையில் ஒரு பட்டாணியை வைத்து, அடிமுனையை வாயில்வைத்தூத குழை மேற்புரத்துக்குச் சிறிது தூரத்தில் பட்டாணி அந்தரத்தில் சுழன்றுகொண்டே நிற்கும்.

(4) கைகடியாரங்களில் விநாடி மணி இவைகளைக் காண்பிக்கும் முள்ளுகளுக்கு யாதொருகெடுதியும் நேரிடாதபடி வைக்கப்பட்டிருக்கும் கண்ணுடி மேன்மூடியை (Watch Glass) சமமாகப் பிடித்து, அடிப்புறத்தில்மட்டும் ஜலம்தீண்டும்படி ஜலத்தில் தோய்த்தெடுக்க, ஒருதுளிஜலம் அடியிற் பொருந்தி நிற்கும். இப்பொழுது பள்ளபாகமான மேற்புரத்தில் 8,9, துளி ஈதர் (Ether) திராவகம்விட்டு வாயால் ஊத திராவகம் வெகுசீக்கிரம் ஆவியாய்ப்புறப்பட்டுப் போய்விடும். கண்ணுடியினடியினிற்கும் ஜலத்துளியோ உறைந்து பனிக்கட்டியாய் நிற்கும்.

(5) ஈக்களின் தொந்திரவு வீட்டில் அதிகமாயிருந்தால், ரேஸின் (Resin) 4 - பாகம் வெல்லம் 1-பாகம், லின்ஸீட் எண்ணை (Linseed oil) 1-பாகம் இந்த அளவாக எடுத்து ஒன்ருகக் கொதிக்கவைத்து ஒரு அகலகாகிதத்தில் தடவி அதை ஈக்களிருக்கும் இடத்தில் தொங்கவிட காகிதத்தின்மேல் வந்து உட்கார்ந்த ஈக்களெல்லாம் சாகும்.

(6) ஆக்ஸாலிக் (Oxalic acid) திராவகம் ஒரு பாகம், டார்டாரிக் (Tartaric acid) திராவகம் ஒரு பாகம் எடுத்து இவைகளை ஜலத்தில் கலக்கி அதில் ஒரு அணி துரியைத் தோய்த்து இங்கியால் எழுதப்பட்ட அக்ஷரங்களின்மேல் தடவ எழுத்துக்கள் உடனே மறைந்துவிடும்.

(7) ஒரு மெல்லிய * பிளாட்டினத் தகட்டில் சிறு நக்ஷத்திரம்போல் அறுகோணமாக வெட்டி மத்தியில் துளைசெய்து ஒரு மெல்லிய கம்பியில்மாட்டி, இருட்டுவீட்டில் ஒரு கோப்பையை வைத்து அதில் ஈதர் (Ether) திராவகம் நிரப்பி, அதற்கு சற்று மேலே அந் நக்ஷத்திரத்தைப் பிடிக்க அது வெகு பிரகாசமாய் ஜொலிக்கும்.

(8) கண்ணுக்கு முன்னுல் சுமார் இரண்டடி தூரத்தில் ஒரு கோலும் அதற்கப்பால் சற்றுதூரத்தில் இன்னெருகோலும் நேராக நிற்கவைத்து, கண்ணுக்கு முன்னிருக்கும் கோலை கவனமாய்ப் பார்க்க மற்ருெரு கோல் இரண்டாகத்தோன்றும். இரண்டாவது கோலைப்பார்த்தால், முதற்கோல் இரண்டாகத்தோன்றும். ஆனுல் ஒருகண்ணை மூடிக்கொண்டு பார்த்தால் இவ்வித தோற்றம் தோன்ருது.

(9) ஒருதம்பூரு குடத்தின் மேலாவது, பிடில் வாத்தியக்கருவியின் முதுகின்மேலாவது அல்லது இலேசான பலகைகளால் செய்யப்பட்டதும் உள்ளென்றுமடங்கியிராத ஒருசாதிக்காய்ப் பெட்டி மேலாவது ஒருவிசாலமான கண்ணுடிப்பில்லையை சாயவைத்து, அக்கண்ணுடியின்மேல் தோட்டங்களில் உலவும் நத்தையை எடுத்துவைக்க அதுபளிங்கின்மேனின்று இறங்கும்போதும் ஏறும் போழ்தும் சங்குத்தொனிபோல் ஓர்வித இனிய சப்தம் கேட்கும்.

(10) வண்டுமுதலான அநேக பூச்சிகள் சப்தம் செய்வது அவைகளுடைய வாயின் மூலமாயல்ல, அவைகளுடைய சிறகுகள் விரைவாய் ஆடுகின்றதினுலேயே உண்டாகிறது.

(இன்னும்வரும்.)

**மா. நடேசன்.**

---

* Platinum

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## நமது தாதா கடிதம்.

V

பிள்ளைகளே பெண்களே என்கண்ணின் கருமணிகளே,

வாருங்கள். அதோ அந்த ஆற்றங்கரைக்குப்போகலாம். "ஆறில்லா ஊருக் கழகு பாழ்" என்று நல்வழியில் படித்திருக்கிறீர்களல்லவா? அதன் கருத்தென்ன? ஆறானது குளிக்கவும் துணி தோய்த்துக்கொள்ளவும் பயிர்பச்சைக்குத் தண்ணீர்பாய்ச்சவும் உதவும். ஆற்றுநீரானது, பலதேச பூமிசாரம் ஏறியிருப்பதனாலும் நிலையாகநில்லாமல் ஓடிக்கொண்டே இருப்பதனாலும், குடிப்பதற்கு அதிக ஆரோக்கியமானது. ஆற்றில் அதிக தண்ணீர் இருந்தால் அதிக தூரத்திலிருக்கிற ஊர்களுக்கும் ஊர்களிலிருந்தும் அரிசி கட்டை உப்பு முதலான சரக்குகளைப் படகிலேற்றிக் கொண்டுபோகவும் கொண்டுவரவும் சுலபமாக இருக்கும். ஆற்றங்கரைக்குச் சமீபமாக இருக்கிற குடிசனங்களெல்லாம் அதிக சுத்தமான வாழ்க்கை உடையவர்களாய் இருப்பார்கள். ஆற்றில் வெள்ளம் வருகிறகாலத்தில் மாத்திரம் சிலசமயங்களில அதிக அபாயத்துக்கு ஏதுவுண்டு. அதற்காக ஜனங்கள் வீடுவாசல்களை மிகவும் மேட்டுப்பாங்கான இடங்களிலே கட்டிக்கொள்வார்கள். ஆறுகள் இன்னவிதமாக உற்பத்தியாகின்றன; இன்னின்னவழியாகப் பாய்கின்றன; இன்னஇடங்களில்போய்ச்சேர்கின்றன; என்னும் விஷயங்களை நீங்கள் பூகோளசாஸ்திரத்தில் படித்திருக்கிறதினாலே நான் அவைகளைப்பற்றி உங்களுக்கு அவ்வளவாய் ஒன்றுஞ் சொல்லவேண்டியதில்லை. ஆனாலும் நான் சிலநாள்களில் ஆற்றங்கரையில் எவரும் சமீபிக்காத ஒரு ஏகாந்தமான இடத்திலிருந்துகொண்டு ஆற்றைப்பார்த்த வண்ணமாய் அறிதுயிலமர்ந்திருப்பதுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் என்னுடைய மனதில் சில எண்ணங்கள் உதிப்பதுண்டு. அவற்றில் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள்:—

எங்கேயோ ஒரு மலையிலே ஒரு காட்டிலே பெய்கிற மழைநீரானது ஆற்றின்வழியே ஓடி சமுத்திரத்திலே விழுகிறது; அப்படி சமுத்திரத்திலே விழுவது அங்கிருந்து ஆவிமயமாக ஆகாயத்தில் கிளம்பி மேகமாக மாறி மறுபடியும் மழையாகப்பெய்கின்றது. இப்படியாக இந்தத் தண்ணீரானது நிலைமாறி உருமாறிப் போவதும் வருவதுமாக இருப்பது நம்முடைய உயிர்வாழ்க்கைக்குச் சமானமாகவே இருக்கிறதல்லவா. நாமும் பிறப்பதும் இறக்கிறதுமாகத்தானே இருக்கிறோம்.

"ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலு
இல்லையென மாட்டா ரிசைந்து."

என்கிறபாட்டு ஞாபகத்தில் வருகிறதுண்டு.

எனக்கு நிழலைக்கொடுக்கிற மரத்தை நிமிர்ந்து பார்க்கும்போது "இந்த மரத்திற்காக இங்கு எவர் விதை நட்டிருக்கப்போகிறார்கள். ஏதோ ஒரு பக்ஷி எச்சமிட்டவிரை முளைத்துமரமாயிற்றோ: அல்லது காட்டில் ஒரு மரத்தின்பழம் வெள்ளத்தில் அகப்பட்டுவந்து இங்கே ஒதுக்கப்பட்டு முளைத்திருக்கலாம். ஆனால் இந்தமரம் இங்கே இன்னும் நெடுநாளைக்கு இருக்கும்என்பது என்ன நிச்சயம். மனிதருடைய உடம்பைப்போலவே இதன்வாழ்க்கையும் பொய்வாழ்க்கையாக இருக்கின்றது. நேற்று அரசனாயிருந்தவன் இன்றைக்கு ஆண்டியாய்விடுகிறான். எப்படியும் பலமான ஒரு வெள்ளம்வந்தால் இந்த மரத்தின் வேரைக்கல்லி அடியோடே சாய்த்துவிடுமல்லவா என்று ஆலோசிக்கும்போது, "ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே" என்கிறபாட்டு நினைவில் வரும்.

இன்னும் நம்முடைய தமிழ் வித்துவான்கள் தாங்கள் பாடுகின்ற காவியங்களில் ஆற்றுப்படலமென்று தனியாகவே ஒருபடலம் ஏற்படுத்திக்கொண்டு வெகுவெகு விசித்திரமாக வர்ணித்துப்பாடுவார்கள். இது இருக்கட்டும் நாம் எல்லோரும் இந்த இறங்குதுறையில் கைகால்களைக் கழுவிக்கொண்டு அதோ பால்போல் வெண்மையாயிருக்கின்ற மணல் வெளியில்உட்காரலாம் வாருங்கள்.



என் தங்கையை என் தகப்பனார் மாசிமாசத்தில் ஹிந்துபாலிகா பாடசாலைக்கு அழைத்துகொண்டுபோனார். நானும் கூடப்போயிருந்தேன். அந்தப் பாடசாலையின் தலைமைஉவாத்தி தையனாயகியம்மாள் என்பவர்—ஔவையாருக்கு இரண்டாவதாக எண்ணப்படுகின்றவர். இருபதுபிராயத்திலே தம்முடைய புருஷனைப் பறிகொடுத்து அந்த ஆறாமையை ஒருவிதமாக ஆற்றித் தேற்றிக்கொண்டு தம்முடைய வாழ்நாளை வித்தியாவிநோதமாகவே கழிக்கவேண்டிஇந்தப் பாடசாலையில் தலைமைப் புலமை நடத்த ஏற்றுக்கொண்டு தம்முடைய காரியத்தைக் கண்ணுங்கருத்துமாக நடத்திவருபவர். இவர் எங்கள் தகப்பனாரைக் கண்டவுடனே எழுந்து மரியாதைசெய்து "ஏது தாங்கள் இவ்வளவுதூரம் தயைசெய்தது?" என்று கேட்டார். அதற்கு என் தகப்பனார் "இவள் என் மகள். இவளைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பிக்கும்படியாக வந்தேன்." என்று சொன்னார்.

அப்புறம் அந்த உவாத்தியார் என்தங்கையைப் பார்த்து "அம்மா, உன்பெயரென்ன?" என்றனர்.

என் தங்கை "என் பெயர் குமுதவல்லி. வீட்டில் என்னைச் சிந்தாமணி என்றழைக்கிறது வழக்கம்" என்றனள்.

உவாத்தியார்.—"உனக்கு இப்போது வயது எத்தனை யாகிறது?"

குமுதவல்லி.—"எட்டிருக்கும்."

உவாத்தி:—"உனக்குமாக்கோலமிடத்தெரியுமா?

குமுத:—"பலகையில் சுமாராகப்போடுவேன். மாவையெடுத்துக்கொண்டு தரையில் கோடுமாத்திரம் இழுப்பேன்."

உவாத்தி:—"உனக்கு நிலாச்சோறு சமைக்கத்தெரியுமா?" .

குமுத—"சோறு வடிப்பேன். சாறுகாச்சுவேன், இன்னும் வறையல் பொரியல் செய்யத்தெரியாது. வடைசுடத் தெரியும். சின்ன சின்ன தோசை சுடுவேன்."

உவாத்தி :—"பொம்மைக்கு பாவாடைதைப்பையா?"

குமுதவ:—இப்போதுதான் சிலநாளைக்கு முன் ஊசியை ஓட்டக் கற்றுக்கொண்டேன். துணியோடு துணியை இணைப்பேன். இன்னும் குச்சி பிடித்துத்தைக்கத் தெரியாது. கத்திரியைப்பிடித்துக் கத்திரிக்கவும் இன்னும் இசைவு தெரியவில்லை.

உவாத்தி:—"நல்லது, உன் தாய்தந்தையரிடத்தில் ஏதாகிலும் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டிருக்கிறாயா?

குமுத:— "ஏதாகிலும் சொன்னால் இரண்டுமூன்று தப்புக்கதிகப்படாமல் எழுதுவேன். எடுத்த புஸ்தகத்தைப் படிப்பேன். பாட்டாயிருந்தால் அதைப்படிக்கிற சந்தத்தைமாத்திரம் ஒருமுறை பாடிக் காட்டவேண்டும்."

உவாத்தி:—"நல்லதாக ஒரு பாட்டு சொல்லு, பார்க்கலாம்."

குமுத:-நான்படிக்கிறஎல்லா பாட்டுக்கும் எனக்கு அர்த்தந் தெரியாது. நல்வழி நன்னெறி வரையில் பதவுரை பொழிப்புரை கருத்துரை எழுவாய் பயனிலை சொல்லுவேன். இப்பொழுது ஆசாரக்கோவையில் என்தகப்பனார் எழுதிக்கொடுத்த ஒருபாட்டு நினைவிருக்கிறது. அதைச்சொல்லுகிறேன்.

'காட்டுக் களைந்து கலங்கழீஇ யில்லத்தை
யாப்பி நீரெங்குந் தெளித்துச் சிறுகாலை
நீர்க்கால் கரக நிறைய மலரணிந்
தில்லம் பொலிய வடுப்பினுட் டீப்பெய்க
நல்லதுறல் வேண்டுவார்.'

உவாத்தி—"பேஷ், நல்லபாட்டு. இதுபெண்கள் அவசியம் அறியவேண்டிய பாட்டு. இன்னும்பெண்கள் இலக்ஷணத்தைத் தெரிவிக்கிற பாட்டு ஏதாகிலும் தெரிந்தால் ஒன்று சொல்."

குமுதவல்லி:—

"அன்னைதயையும் அடியாள் பணியுமலர்
பொன்னினழகும் புவிப்பொறையும் வன்ன
வேசிதுயிலும் விறன்மந்திரி மதியும் [மூலை
பேசி லிவையுடையாள் பெண்."

உவாத்தி:—சரி இந்தநீதிவெண்பா நன்றாயிருக்கிறது. உனக்கு வரவுசெலவு கணக்கு பார்க்கத்தெரியுமா?"

குமுத:—"என்தாயார் கையில் வந்து செலவாகிற பணத்துக்கு நான்தான் கணக்கெழுதுகிறவழக்கம். எங்கள் பாட்டியார் பால் தயிர் வாங்கினால் கதவிலாகிலும் சுவரிலாகிலும் கோடிழுத்து வைக்கிறது வழக்கம். விளையாட்டுப்பிள்ளைகள் எவராகிலும் அந்தக்கோடுகளில் ஒன்றை அழித்துவிட்டாலும் இரண்டொன்றை அதிகமாகச சேர்த்துவிட்டாலும் அதற்காக அதிகோபங் கொள்வார்கள். நான் ஏற்பட்டபிறகு எங்கள் வீட்டுச் சுவருங் கதவும் சுத்தமாக இருக்கின்றன."

உவாத்தி:—"அப்படியா, மெத்த சந்தோஷம். நீ ஏதாகிலும் நல்ல கதைப்புஸ்தகம் படித்திருக்கிறாயா?

குமுத:—நான் பாலபோதம், அதிரசமஞ்சரி, சத்தியக்கலம்பகம், சுகுணசுந்தரி சரித்திரம், மாதர்நீதி என்பவைகளைப் படித்திருக்கிறேன்."

அப்புறம் உவாத்தியாராகிய தையனாயகியம்மாள் என் தகப்பனாரைப்பார்த்துச் சொல்லுகிறார்:—"தாங்கள் குமுதவல்லியின் விஷயத்தில் அதிக சிரமம் எடுத்துக்கொண்டு பெண்களுக்கேற்றபடியே அஸ்திவாரம் அழுத்தமாகப் போட்டிருக்கிறீர்கள். இனி இந்தப்பெண் எப்படியும் பள்ளிக்கூடத்தில் வெகு நன்றாய்ப் படிக்கும். இவளை ஐந்தாவதுவகுப்பில் எடுத்துக் கொள்ளுகிறேன். அந்தவகுப்பிற்குச் சம்பளம் முக்கால் ரூபா. அந்தவகுப்பின் பாடபுஸ்தகங்களை அந்தவகுப்பின் உவாத்தி உருக்குமணியம்மாள்எழுதிக்கொடுப்பார்."

என்தகப்பனார் "அம்மா இந்தப்பெண்ணுக்கு இன்னும் பூகோளம், சரித்திரம்தெரியாதே. ஐந்தாவதுவகுப்பில் நிர்வாகிக்குமா?" என்று கேட்டார்.

அதற்குத் தையனாயகியம்மாள் "சிலபாலிகாபாடசாலைகளில் கிறக்குமேற்குத் தெரியாத பச்சைப்பாலகர் கையில் பூகோளத்தையும் சரித்திரத்தையும் கொடுத்து வதைப்பதுண்டு. இங்கே அப்படிக்கில்லை. ஐந்தாவது வகுப்பில்தான் அந்தப் பாடங்கள் ஆரம்பமாகும். ஆனாலும் பிள்ளைகள் கையில் புஸ்தகம் ஒன்றும் கொடுப்பதில்லை. உவாத்தியாரே பூமிபடம்,பூகோளம் முதலிய கருவிகளை வைத்துக்கொண்டு விளையாட்டாகவே பூகோளசாஸ்திரத்தை எளிதில் கற்பிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். சரித்திரத்திலும் அப்படியே பிள்ளைகளை வருத்தாமல அவர்களுக்குக் கதாரூபமாய் சரித்திரத்தின் சிலமுக்கியமான அமிசங்களைக் கற்பிக்கும்படி திட்டஞ் செய்திருக்கிறது. ஆகையால் இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் அஞ்சவேண்டியதில்லை."

என்தகப்பனார்: "வெகு நல்லகாரியம். என்னுடைய அபிப்பிராயமும் இப்படித்தான் இருக்கிறது. இன்னும் ஏதாகிலும் விசேஷமுண்டோ"?

உவாத்தி.—தையல்கற்றுக்கொள்ள மாதம் ஒன்றுக்கு பிரத்தியேகமாய் இரண்டணா கொடுக்கவேணும். ஏனென்றால் அதற்கு வேண்டிய கருவிகளை நாங்களே சவுதாரித்துக்கொள்வது இங்கே வழக்கம். இன்னும் இங்கே சிலவிசேஷங்கள் உண்டு. அவைகளை அவசியமானபோது உங்களுக்குக் கடிதமூலமாய் அறிவிப்பேன்."

என்தகப்பனார் "இந்தப்பெண்ணைத் தங்கள்குழந்தையைப்போல் பாவித்துக்கொள்ள வேண்டும். இவள் ஏகபுத்திரி. எனக்கு நேரமாகிறது. செலவு கொடுக்கவேண்டும்". என்று விடைபெற்றுக்கொண்டு வந்துவிட்டார். எனக்கு வீட்டில் சில அவசரமான காரியங்களிருக்கின்றன. சீக்கிரம்போகவேண்டும். மற்றதை இன்னொருநாளைக்குச்சொல்லி முடிக்கிறேன். எழுந்திருங்கள் எல்லாரும் என்பின்னே வரிசையாக வாருங்கள்.

கிழவன்.

Printed at the C. N. Press, Madras.

"கற்றோர்கடாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழ்வில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

# விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். II. 1893வரு ஜூலைமீ. இலக்கம். 3.

## *பௌதிக கருஷணம்.

ஜாலவிநோதங்கள் காண மாயவித்தைகள் செய்யும் மாந்திரிகரைத் தேடிச்செல்வது நம்மவருள் வழக்கமாயிருக்கின்றது. ஆனால் அவர்கள் செய்யும் இந்திரசாலங்களை விட எவ்வளவோ விசித்திரமான தோற்றங்கள் பிரபஞ்சத்தில் எண்ணிறந்த மாயாசக்திகளால் எக்காலத்தும் அமைக்கப்படுகின்றன. இரவிலும் பகலிலும், [1]வருஷகாலத்திலும் வசந்தகாலத்திலும் இவ்விசித்திர சக்திகள் ஓயாது பிரவர்த்தி செய்தே வருகின்றனவாயினும் அவைகளை அறிந்துகொள்ள ஆசையுடையவராயிருந்தாலன்றி, அவைகளால் நேர்ந்திடும் ஜாலவிநோதங்களைச் சரியாய் மதிப்பது அருமை. காற்று உல்லாசமாயும் மும்முரமாயும் அடிப்பதும், மேகங்கள் ஒருக்கால் 'கலைமகளுருவென' வெண்மையாய் விளங்குவதும்; ஒருக்கால் [2]பனிவரையுயிர்த்த உமையவளுருவடைந்து உருக்குவதும், கண்கூசமின்னல்வீசுவதும், காதடைக்க இடிமுழங்குவதும், குழந்தைகளும் அறிவார்கள். ஆறுகளும் ஓடைகளும், களிப்புடன்சிரித்து கலகலவென்று ஓடுவதும், விருட்சங்கள் ஓங்கிவளர்ந்து பசுமையான இலைகளையும், மணமும் அழகும்பொருந்திய மலர்களையும்ஏந்தி, மதுரமானகனிகளை அளிப்பதும், புஷ்பங்கள் பகலில் இதழ்களைவிரித்து சுகந்தம்பரப்பி அந்தியில் மூடுவதும், நாம் யாவரும் கண்டதில்லையா? ஆயினும், இவைகளெல்லாம் அதிசயமென்று நினைப்பவர் நம்முள் அநேகருளரோ? நித்தியமனுபவமாகிய இவைகளில், புலப்படும் விசித்திரசக்திகள் எத்தனையென்று தெரியுமா? இத்தோற்றங்களில் அமைந்திருக்கும் தத்துவங்களை நன்காராய்ந்து அறிந்துகொள்ள அவாவுள்ளவராய் இருந்தாலன்றி, நமக்குக் கண்களிருந்தும், இவைகளின் விசித்திரம் புலப்படாதொழியும். ஒரு சிறு திருஷ்டாந்தம் எடுத்துக்கொள்வோம். "மாரியல்லது காரியமில்லை" என்றும், "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை" என்றும் ஔவை,காகனார் முதலிய ஆன்றோரால் எத்தப் பெற்றதாயும், அறம்பொருளின்பங்கள் நடத்தற்குஇன்றியமையாததாயும் இருக்கும், "கருவிமாமழை" யானது [3]இருவிசும்பிடைபடர்ந்த மேகங்களிலிருந்து பெய்வது நாமறிவோம். ஆனால் மழைபெய்வதில் விசேஷம் என்ன இருக்கிறதென்பீர்கள். நன்றாய்க்கொய்த பஞ்சுபோல் பரவியிருக்கும் மேகத்தில் சற்று குளிர்காற்றுவீச, அங்கு பதிபோட்டு

* Chemical affinity.

1 வருஷகாலம்=மழைகாலம்.

2 பனிமூடிய பர்வதராஜன் பெற்ற உமையவள் (=பார்வதி) உருவடைந்து, (அதாவது) கருநிறமடைந்து (உருக்குவதும்) மழைபொழிவதும்.

3 இருவிசும்பிடை=உயர்ந்த ஆகாயத்தினிடத்து.

நிற்கும் *பிண்டீகரமென்ற [4]அதிர்சியமான ஓர் சக்தி ஆவலுடன் மேகமாயிருந்த ஜலவணுக்களைப்பற்றி, ஒன்றோடொன்று ஒன்றச்செய்து உருண்டைவடிவமுள்ள தண்ணீர்த்துளிகளாக்குகின்றது. இத்துளிகள் பூமியைச் சுற்றியிருக்கும் வாயுசாகரத்தில் சற்றுமிதந்து, பின்பு வரவர அதிக அணுக்கள்சேருவதால், கனமதிகப்பட, பூமையக்கவர்ச்சியென்ற வேறொரு அதிர்சியமான சக்திக்குட்பட்டு தரைமீதுவிழுகின்றன. மழை விழுந்ததின்பின் †'இசைவு' என்ற நாமந்தரித்த மூன்றாவது ஓர்சக்தி மழைத்துளிகளை புல்களிலும், இலைகளிலும் முத்துபோல் விளங்கச்செய்கின்றது. இம்மோகனசக்திகள் கண்களுக்குப் புலப்படாவாயினும், அவைகள் எக்காலத்தும் பிரவர்த்திசெய்துக்கொண்டே இருக்கின்றன. மேலும் இச்சக்திகளில்லாவிடில் யாது சம்பவிக்குமென்பது முன்னர் கூறியிருக்கின்றோம். இங்ஙனம், எக்காலத்தும் நிலைத்திருப்பனவும், இன்றியமையாதனவுமாகிய இவைபோன்ற விசேஷசக்திகளின் குணங்களையும், செய்கைகளையும் உணர்ந்து, அவைகளுடன் அறிமுகமாயிருப்பது, யாவர்க்கும் எக்காலத்தும் நிரந்தரமான இன்பம் பயப்பதேயாகும். இச்சக்திகளில் ஒன்றாகிய பௌதிக கருஷணந்தான் நாம் இன்றுவிசாரணைக்காக எடுத்திருக்கும் விஷயம்.

நம்மைச் சுற்றியிருக்கும் பொருள்கள் பலவாறாக வேற்றுமையடைவது நாம் கண்டிருக்கிறோம். அனேக பதார்த்தங்கள் தீயால் அழிந்துபோவதும், அக்கினி சுவாலிக்கையில் வெக்கையுண்டாவதும் யாவருமறிவார்கள். அதுபோலவே, வெளியிலிட்ட இரும்பு துருவடைவதும் சகல ஜனங்களுக்கும் தெரியும். கருப்பஞ்சாறு ஆலையினின்று எடுத்தவுடன் அதிக மதுரமாயிருப்பினும், சற்று வைத்திருந்தால் புளித்துப்போகிறது. பழகப்பழக பாலும் புளிக்குமென்பது பார்த்திராவிடினும், சொல்லிக் கேட்டிருக்கலாம். வெடிமருந்தில் ஒரு தீப்பொறிவிழுந்தால், உடனே மின்னல்போன்ற ஓரொளியும், இடிமுழக்கம்போன்ற ஓர் தொனியும், இருண்ட புகையுமன்றி வெடி மருந்து மிஞ்சுகின்றதோ? அன்றியும், கல் இரும்பு முதலிய பதார்த்தங்கள் தீயிலிடப்பட்டால் சூடடைவதும், உலையினின்று நீக்கப்பட்டபின் முன்போலவே குளிர்ச்சியடைவதும் நாம் நன்றாயறிவோம். பழுக்கக்காச்சிய இரும்பு ஒளிவீசுவதும் கண்டிருக்கிறோம். பொருள்கள் ஒன்றோடொன்று தாக்கினால் சத்தமுண்டாகிறது. மழைநாள்களில் நெய், தேங்காயெண்ணெய்முதலியன உறையவும், சற்று சுடவைத்தவுடன் திரவபதார்த்தங்களாகவும் செய்கின்றன. தண்ணீர் * சீதோஷ்ண சம்பந்த நிலைமைக்குத்தக்கபடி †நிலம், நீர், கால் என்ற மூன்று ஸ்திதிகளாகவும் மாறுகின்றது.

மேலே திருஷ்டாந்தமாகக் கூறப்பட்ட வேற்றுமைகள் இரண்டுவகைகளாக பிரிக்கப்படத்தக்கனவென்று சற்றாலோசிக்கக் காணலாம். ஒரு பொருள் தீ பற்றி எரிகையில் முன்னிருந்த குணங்கள் யாவும்நீத்து வேறு பொருளாகின்றது. துருவுமிரும்பும் ஒரேபொருளல்ல. புளிப்பான கரும்புப்பால், ஆலையிலிருந்து வடியும்சாறன்று. கொளுத்தப்பட்ட வெடிமருந்து முன்னிருந்த சுபாவங்களெல்லாம் மாறி வேறுசில பொருள்களாகின்றது. ஆக இத்திருஷ்டாந்தங்களிலெல்லாம் முன்னிருந்த பொருள்களழிந்து நூதனப் பொருள்களாகின்றன. ஆனால் தீயிலிட்ட இரும்பும், பனியால் ஆலாங்கட்டியாக இறுகிய ஜலமும், வேறுபொருள்களாக மாறவில்லை. ஆகையால், பொருள்களடையும் வேற்றுமைகள் இருவகைப்படுமென்று தெரிகிறது. அவைகளாவன:—

(1) பொருள்கள் தத்தம் சேர்க்கையும், இயற்கைக்குணங்களும் மாறாமல் அடையும் வேற்றுமைகள், ஒருவகை. இவ்வேற்றுமைகளை *ஜடவேற்றுமைகளென்று கூறலாம்.

(2) பொருள்கள் தத்தம் கட்டழிந்து, இயற்கைசுபாவங்கள் யாவும்நீத்து, விசேஷகுணங்களமைந்த நூதனபதார்த்தங்களாக மாறுதல், வேறொருவகை. இவ்வேற்றுமைகள் † இரசாயனவேற்றுமைகளெனப்படும்.

ஜடவேற்றுமைகளைப்பற்றி விசாரணைசெய்யும் நூல் 'ஜடதத்துவ சாஸ்திரம்' எனப்படும். இந்நூலுக்கு "பிரகிருதி விஞ்ஞானம்," "யதார்த்தகுண விஞ்ஞானம்" என்பதுபோன்ற பலபெயர்கள் பொருத்தமுளதேயாயினும், இதில் விவரிக்கப்படுபவை நானாவித சக்திகளின் வலிமையேயாதலானும், ஈங்கு பிரகிருதி என்பது சக்தியையே குறிக்கின்றதாதலானும், இதை "சக்திநூல்" என்று தமிழிலழைத்தல் உசிதமென ‡"நூற்றொகை விளக்கம்" ஆக்கியோர் கூறுகின்றார். ஜடதத்துவநூலார் [1]கால [2]தேச [3]வஸ்துவாகிய மூன்று தத்துவங்களை [4]தனிஸ்தாபிதங்களாகக்கொண்டு, கணிதநூல்மார்க்கங்களை வேண்டுழி அனுஷ்டித்து, நிலம், நீர், காலென்ற [5]அவஸ்தாபேதங்களுடைய பொருள்களின் [6]சாங்க இயக்கத்தினையும், வெம்மை, தொனி, ஒளி, மின்மயம், காந்திகம்முதலானவற்றிற்குக் காரணமாகும் அணுவியக்கத்தையும், ஆராய்ந்து இக்குணங்களின் இயல்பையும் தொழிலையும், அத்தொழிலுக்குரிய விதிகளையும் ஒழுங்குபட விவரிப்பார்கள். இவர்கள் இரசாயன வேற்றுமைகளைப்பற்றி கவனிப்பதில்லை. காணும்படியான ஒவ்வொரு பொருளின் சேர்க்கையையும், அச்சேர்க்கையில் நிகழும் வேற்றுமைகளையும் பற்றி இரசாயன நூல் கூறும். பதார்த்தங்கள் ஒவ்வொன்றின் அணுக்களும் பிரிக்கக்கூடியனவாவென்றும், பிரிக்கக்கூடுமேல், யாதணுக்களாக பிரியுமென்றும், அவ்வணுக்கள் தம்முள் எவ்விதம் முயங்குமென்றும், ஒருவகையாலும் பிரிக்கமுடியாத அணுவினங்களுளவெனில் அவை எத்தனையென்றும், அவற்றின் தனி குணங்கள் என்னவென்றும், அவைகள் ஒன்றோடொன்று ஐக்கியப்பட்டு கலப்பனவாகும்போது என்ன குணங்களை அடையுமென்றும், இவைபோன்ற எண்ணிறந்த சங்கதிகளை இரசாயன நூல் நிச்சயிக்கின்றது.

இரசாயன வேற்றுமைகள் பல காரணங்களாலுண்டாகின்றன. நீங்கள் யாவரும் சர்க்கரையை பாகுசெய்வது கண்டிருப்பீர்கள். பாகு அதிகம் காய்ந்துவிட்டால் கருகின தோற்றமும் வாசனையும்வருவது பார்த்ததில்லையா? துப்புரவாய்த் துடைத்தவோர் சிறுகண்ணாடிக்குழலில் கொஞ்சம்சர்க்கரையைப் போட்டு அதை ஒருவிளக்கில் காயவைத்தால் யாது சம்பவிக்கின்றது என்று பாருங்கள். குழலின் உட்பக்கங்களில், சிறுசிறு ஜலத்துளிகளாலாக்கப்பட்ட முகில் படிந்திருப்பதும் குழலின் அடியில் கரிபோற்கருத்த பதார்த்தமொன்றிருப்பதும் காண்பீர்கள். அடியிலிருக்கும் பதார்த்தம் சர்க்கரையல்லவென்பதற்கு இலட்சியம் அதன் நிறமும் உருசியுந்தான். அன்றியும் சர்க்கரை இலகுவாய் தண்ணீரில் கரையக்கூடியதாயிருக்க, இக்கரிப்பதார்த்தம் ஜலத்தில் கரையமாட்டாது. இவ்விதமாய் சர்க்கரையை வெப்பத்தினால் ஜலமாகவும் கரியாகவும் மாற்றுதல், இரசாயன வேற்றுமைகள் சம்பவிக்கும் விதங்களிலொன்றிற்கு திருஷ்டாந்தமாகும். வெம்மையாலுண்டாகும் இரசாயன வேற்றுமைகளுக்கு வேறொரு உதாரணம் பார்ப்போம். நேர்மையான கந்தக மாவும், இரும்புப்பொடியும் ஓர் கண்ணாடிக் குழலிலிட்டு மெதுவாய்சுடவைத்தால், கந்தகம் உருகுகின்றது.

* Cohesion (from Sans. பிஷ்=to grind)

4. காணக்கூடாத (from Saus. திர்ச் to see.)

† Adhesion. (2-ம் புஸ்தகம் 1 நெ. 5-ம் பக்கம் பார்க்க.)

* Temperature.

† Solid, liquid, gas.



* Physical change.

† Chemical change.

‡ இந்நூல்-பி-சுந்தரம்பிள்ளை. எம்-ஏ. அவர்களாலியற்றப்பட்டு, சென்னையில், ஊ. புஷ்பரத செட்டியா ரச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டுளது. விலை அணா-8. இவ்விவேகசிந்தாமணி யாபீஸிலும், மதிராஸ் ரிப்பன் ப்ரெஸ்ஸிலும் விலைக்கப்படும். வேண்டுவோர் தபாற்கூலி ஒரு அணா சேர்த்தனுப்பல் வேண்டும்.

1 Time. 2 Space. 3 Matter.

4 Fundamental units. 5. அவஸ்தா=ஸ்திதி, State.

6. (சா=with, அங்கம்=body) இயக்கம்=motion.

இப்பொழுது குழலை சுடரிலிருந்து மாற்றினாலும், குழலில் சில விசேஷங்கள் நடப்பது காணலாம். சற்றுநேரத்துக்கெல்லாம் குழலிலிருந்த கலவை முழுவதும் சுவாலிக்கத்தொடங்கும். குழல் குளிர்ந்தபின் அதனுள்ளிருக்கும் பொருளைப்பார்த்தால், அங்கு கந்தகமும் இரும்பும் வெவ்வேறாய் இருந்ததுபோக, இப்பொழுது நூதனமான ஓர் கரும்பொருள் காணலாம். இப்பொருளின் குணங்கள் கந்தகம் இரும்பு இவைகளின் குணங்களிலிருந்து வேறாயிருக்கும். இங்ஙனம் பொருள்கள் தங்கள் கட்டழிய வேற்றுமைபட்டு நூதனகுணங்களமைந்தவேறுபொருளாதல், இரசாயனவேற்றுமையின் இலக்கணமாகும்.

வெம்மையினாலன்றி வேறுவிதங்களாலும், இரசாயனவேற்றுமை விளைவிக்கலாம். சில வேளைகளில் இருபொருள்கள் ஒன்றோடொன்று பரிசிக்க இரசாயனவேற்றுமை உண்டாகும். திருஷ்டாந்தமாக, எலுமிச்சஞ்சாற்றை காரைத்தரையில் கொஞ்சம்ஊற்றினால், உடனே அடுப்பில்வைத்த ஜலம் கொதிப்பதுபோல, ஒரு கொதிப்புண்டாகி சிறுகுமிழிகள் எழும்பி நுரைக்கும். அதுபோலவே,சிலர் வாயுப்பொருமலுக்கு உபயோகித்து வரும் 'ஸோடா' (Soda : Sodium Bicarbonate) என்ற மருந்தில் கொஞ்சம் ஓர் குழலிலெடுத்து அதில் எலுமிச்சஞ்சாற்றைக்கொஞ்சம் வார்த்தால், மேற்சொன்ன சோதனையில் சம்பவித்ததுபோல, கொதிப்புண்டாகி,ஓர்வாயு குமிழிகுமிழியாய் எழும்புவது காணலாம்.

வேறொரு உதாரணம். பள்ளிக்கூடங்களில் பலகையிலெழுத உபயோகிப்பதும், நமதுவீடுகளில் வைரமல்லது புஷ்பராக உருப்படிகள் துலக்க உபயோகிப்பதும் ஆகிய "சாக்" என்ற விளைசுண்ணும்பில் கொஞ்சம் ஓர் கண்ணாடிக்குழலிலெடுத்து அதன்மேல் இரண்டு மூன்றுசொட்டு கந்தட்காமிலம் (ஆங்கிலேயபாஷையில்'ஸல்பூரிக் ஆஸிட்'என்பார்கள்) விடுவீர்களானால், உடனே முன்சோதனைகளில் நடந்ததுபோலவே ஓர்வாயு குமிழிகளாய் எழும்புவது காணலாம். மேல்குறித்த சோதனைகளிலெல்லாம் குமிழி வரத் தொடங்கி அரை அல்லது ஒருநிமிஷமானபின் ஒரு நெருப்புக்குச்சியை ஏற்றி குழலில்சொருகினால், அது அணைந்துபோகின்றதன்றோ? சுவாலையையணைக்கும் குணமுள்ள ஓர்நூதனக்காற்று அக்குழலில் தோன்றியிருப்பதாக இதனால் விளங்குகின்றது. இக்காற்று நமக்கு சிறிதும் புதிதல்ல. நாம் சுவாசம் வெளியே விடும் வேளைகளிலெல்லாம் இவ்வாயுதான் வெளியேபோகின்றது. நாம் வெளியே சுவாசம்விடும் வாயு நாம் சுவாசம்வாங்குகையில் உள்ளேபோன காற்றல்லவென்பதை எளிதில் நிரூபிக்கலாம். ஒரு கண்ணாடி 'டம்பளர்' (லோட்டா)நிறைய ஜலமெடுத்து அதில்கொஞ்சம் சுண்ணும்பை நன்றாய்க்கரைத்து,அந்த ஜலத்தை வடிகட்டி எடுத்துக்கொண்டு, அதில் ஒரு குழல்வழியாய் நாலைந்து நிமிஷத்திற்கு மூச்சுவிட்டால், தெளிவாயிருந்த ஜலம் பால்போல் வெண்மைநிறமடையும். நாம் மூச்சுவிடுவதில் வெளியில் சென்றவாயு தண்ணீரில் கரைந்திருந்த சுண்ணும்புடன் சேர்ந்து, 'சாக்' அல்லது விளைசுண்ணும்பாகி தண்ணீரை கலக்கிறதாகையால், ஜலம் வெண்மைநிறமடைகிறது.

வேறொரு திருஷ்டாந்தமெடுத்துக்கொள்வோம். சுண்ணும்புநீற்றுவது யாவரும் கண்டிருக்கிறீர்கள். சுண்ணும்புக் கல்லின்மேல் ஜலத்தைவார்க்க உடனே பௌதிக கருஷணமென்ற விசேஷசக்தி திடீரென்றுதோன்றி அதிக கோபத்துடன் சீறி, இருபொருள்களையும் பற்றி, அவைகளின் கட்டழியச் சேர்த்து நூதனமான ஓர்பொருளைத் தருகின்றது. இந்நூதனப்பொருள் நம்மவர் வெற்றிலையில் தேய்க்க உபயோகப்படுத்தும் சுண்ணும்புதான். வெம்மையால் இரசாயன வேற்றுமையுண்டாவதுபோல, இரசாயனவேற்றுமை சம்பவிக்குங்காலத்தில் வெப்பமுண்டாகக்கூடியதென்று இச்சோதனையால் புலப்படும். இப்பொழுது விவரித்துவரும் சோதனைகளிலெல்லாம் இரண்டுபொருள்களின் ஸ்பரிசத்தாலேயே இரசாயனவேற்றுமை சம்பவிக்குமென்று ஸ்தாபிக்கப்படுகிறது. இதைக்காட்ட இன்னமோர் திருஷ்டாந்தமெடுத்துக்கொள்வோம். ஆங்கிலேய வைத்தியசாலைகளில் வாதவலிகளுக்கு, மேலேதடவ, 'அயோடீன்' (Iodine) என்ற ஓர் சிவந்த திராவகம் கொடுப்பதுண்டு. அத்திராவகத்தில் சிலசொட்டுகளை சோற்றினின்று வடித்த கஞ்சியில் விட்டால் உடனே ஒருவிசித்திரம்காணலாம். வெண்மையாகிய கஞ்சியும், சிவந்த 'அயோடீனு'ஞ்சேர, நீலவருணமான ஓர்பொருள் வருமென்று யாராலாவது முன்னமே சொல்லமுடியுமா? ஆனால் அவ்விசித்திரம் பௌதிக கருஷணம் விளைவிக்கின்றது. இன்னமோர் திருஷ்டாந்தம் சொல்லக்கேளுங்கள். நீங்களெங்கேயாவது தண்ணீரில் நெருப்பெரிவது காணவா கேட்கவா செய்ததுண்டா? பௌதிக கருஷணத்தின் உதவியால் அதுவும் நடக்கும். இந்துப்பிலும் வெடியுப்பிலும் வேறுபொருள்களுடன் மருவி 'பொட்டாஸியம்' என்றோர் பதார்த்தமுளது. இந்த "பொட்டாஸியத்தில்" ஒரு பயரளவு எடுத்து, ஜலத்திலிட்டால், அது எரிந்துகொண்டு, ஜலத்தில் அங்குமிங்குமோடி, சீறி மிதப்பது காணலாம். இதெல்லாம் தீர்ந்தபின் ஜலத்தைசோதித்தால், அது முன்னிருந்த தன்மைமாறி வேறு சில விசேஷகுணங்களுடையதாயிருக்கும். ஜலமானது இரண்டுகாற்றுகளின் *முயக்கத்தாலுண்டாகும் ஓர்பொருள். அவ்விரண்டு வாயுக்களிலொன்றாகிய [1] அனலன் என்ற வாயுவுடன் பொட்டாஸியம் அதிக ஆவலுடன் சேருந்தன்மையுடையது; ஆகையால் தண்ணீரும் பொட்டாஸியமும் ஸ்பரிசிக்கும்பொழுது, பௌதிக கருஷணத்தின் வலிமையால், அனலனுடன் தண்ணீரில்கூடியிருக்கும் [2] ஜலஜனக வாயுவில் பாதியை நீக்கிவிட்டு பொட்டாஸியம் அனலனோடு சேர்ந்துகொள்ளுகின்றது. ஆனாலிவ்விரண்டும் சேரும்தீபரத்தினால், விடுதலைசெய்யப்பட்ட ஜலஜனகவாயுவானது அதிக சூடடைந்து தனக்குத்துணையாக சாதாரணவாயுவிலிருக்கும் அனலனை ஆவலுடன் தேடிச்சேருவதால் ஓர் சுடருண்டாகின்றது. இவ்வாறு பௌதிக கருஷணத்தின் மகிமையால் ஜலத்திலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து ஜலமும் தோன்றுகின்றன.

மேற்கூறிய திருஷ்டாந்தங்களிலெல்லாம் யாதேனும் ஒருபொருள் நீர் நிலமையிலிருக்கிறது காணலாம். இரண்டு பதார்த்தங்களும் நிலஸ்திதியுடையனவாயிருந்தால், அவைகள் இலகுவாய் தம்முள் முயங்குவனவல்ல. அன்னபேதியையும் கடுக்காய்ப் பொடியையும் ஒன்றுசேர்த்தால், அவைகள் ஒரு வேற்றுமையுமடையாமல், அன்னபேதியும் கடுக்காயுமாகவேயிருக்கின்றன. ஆனால் அன்னபேதியை தண்ணீரில்கரைத்து அதில் கடுக்காய்த்துண்டை போடவாவது, அல்லது கடுக்காய்ஜலத்தில் அன்னபேதியைப் போடவாவது செய்தால், தக்ஷணமே கரிய மையுண்டாகும். அன்னபேதியையும் கடுக்காய்த்துண்டுகளையும் கலந்து அதன்மேல் தண்ணீரைவார்த்தால் அப்பொழுதும் மையுண்டாகும்.

இரசாயன வேற்றுமைக்குப் பல திருஷ்டாந்தங்கள் பார்த்தோம். இவைகளிலிருந்து நாமறியக்கூடியன யாவையென்றால், முதலாவது, வெம்மையால் இரசாயன வேற்றுமைகளுண்டாகின்றன என்பதும், இரண்டாவது சிலவேளைகளில் இருபொருள்கள் ஒன்றையொன்று பரிசிப்பதினாலேயே இரசாயன வேற்றுமைகள் சம்பவிக்கின்றனவென்பதும், மூன்றாவது, நீர்நிலையாய் பொருள்களிருந்தால், இவ்வேற்றுமைகள் இலகுவாய் நடக்கின்றன என்பதும்தான். இவையன்றி இரசாயன வேற்றுமைகளின் முக்கிய இலக்கணமொன்று இத்திருஷ்டாந்தங்களால் விளங்குகின்றது. வெவ்வேறு குணங்களுள்ள பொருள்களின் அணுக்கள் பௌதிககருஷணத்தால்சேர்க்கப்பட்டால், அவைகள் தத்தம் தனிசுபாவங்களை நீத்து நூதனகுணங்களுள்ள புதிய பதார்த்தங்களாக *ஆவிர்பவிக்கின்றன. அணுக்கள்



* சேர்க்கையால்.

1. (Oxygen.)
2. (Hydrogen.)

* (Sans. ஆவிர்பவ்=to become visible) புலப்படுகின்றன.

தங்கள் குணமெல்லாவற்றையும் ஒழித்து, இருபொருள்களாய் இருந்த தன்மையைவிட்டு புதிதான ஒரு பதார்த்தமாதலுக்கு * 'ஐக்கிய முயக்கம்' எனப் பெயர்கூறலாம்.

பூர்ண ஐக்கியத்திற்கு திருஷ்டாந்தமாக தாயுமானவர் கூறியிருக்கும் "உப்போடப்பை† மருவவிடுதல்" அங்ஙனமாகாதென்பது முன் சொன்னதனாலறியலாம். தண்ணீரில் உப்பையாவது சீனியையாவது கரைக்குங்கால், அவைகள் காணாவிடினும், நாவிற்கும் புலப்படாதொழியா. உப்புஞ் சர்க்கரையும் நிலைநிதி யழிகின்றனவேயன்றி, மற்றொரு குணமுமிழக்கவில்லை. ஐக்கியமுயக்கத்தால் வரும் பொருள்களைப்போல தனிகுணங்களெல்லாம் விடுத்து இரண்டறச்சேர்ந்து நூதன பதார்த்தமாகாததினால், உப்பும் சர்க்கரையும் கலப்பதும், மாவும் மணலுஞ் சேர்ப்பதும், உப்போடப்பு மருவுதலும் எல்லாம் ‡வெறுங்கலவைகளே யாகின்றன. அன்றியும் இவ்வளவு உப்பு இவ்வளவு ஜலத்துடன்தான் மருவுமென்று சொல்லமுடியாது. ஒரு குடம் ஜலத்தில் ஒரு உப்புக்கல்லையுங் கரைக்கலாம், ஒருபடி உப்பையுங் கரைக்கலாம். ஆனால் அணுக்களின் ஐக்கியமுயக்கத்தில் அங்ஙனமல்ல. திருஷ்டாந்தமாக, தண்ணீரானது அனலன், ஜலஜனகம் என்ற இரண்டு வாயுக்களின் ஐக்கியமுயக்கத்தாலான பொருளென்றோம். ஒரு ஜலவணுவில் தோன்றும் ஜலஜனகத்தின் கனம் 2-எனக்கொண்டால், அதிலிருக்கும் அனலவாயுவின் கனம் 16-ஆகும். கனத்தால் ஜலஜனகமிரண்டுடன் புணருவதற்கு, அனலன் 16-வேண்டியிருப்பதால், முன்னதில் 8-இருந்தால், அதுடன் ஐக்கியமுயக்கமாக பின்னதில் 64-தான் வேண்டும். அனலவாயுவின் கனம் 68-இருந்தால், அதில் நான்கு புணரவகையின்றி தனியாய் நிற்கும். அதுபோலவே ஜலஜனகத்தின் கனம் 5-ம், அனலவாயுவின் கனம் 35-மாக விருந்தால், முன்னது நாலுடன் பின்னது 32-ஐக்கியமானதுபோக மிஞ்சுகிற ஜலஜனகவாயுவும் அனலவாயுவும் முயங்காதுநிற்கும் இவ்வாறு சரிமுறையளவின்படி புணருதல் ஐக்கியமுயக்கத்தின்குணங்களிலொன்று. இந்நியமம் வெறுங்கலவைகளை பாதிப்பதல்ல. ஐங்கியமுயக்கத்தின் இலக்கணங்கள் பின்வரும் "நூற்றொகைவிளக்க" சூத்திரத்தில் தொகுத்துக்கூறியிருப்பன காண்க.

"நிறையொழி பண்பெலாம் பிறழ்திரச் சரிமுறை
யளவிற் பிறழா வாகி யணுவின
மிரண்டறக் கலத்த லைக்கிய முயக்கம்."

மேற்கூறிய ஐக்கிய முயக்கமானது பொருள்களுள் நிகழும் இரசாயன வேற்றுமைகளில் ஒருவிதம். இதற்கு அனலனும் ஜலஜனகமும் சேர்ந்து தண்ணீராவதும், இரும்பும் கந்தகமும் சேர்ந்து கரியவோர் பதார்த்தமாவதும், கஞ்சியும் 'அயோடீனுஞ்' சேர்ந்து ஓர் நீலப்பொருளாவதும் உதாரணமாகும். இதன்றி வேறிரண்டு விதங்களிலும் இரசாயன வேற்றுமையுண்டாகின்றது. அவற்றுள் ஒருவிதம், ஒரு பொருளை யதன் அங்கங்களாகிய அணுவினங்களாக பாகித்தல். இதற்கு சர்க்கரையை ஜலமாகவும் கரியாகவும் முன்னர் பிரித்தது நல்லதிருட்டாந்தமாகும். தண்ணீரை மின்மயசக்தியால் இரு வாயுக்களாக பிரித்தலுமிதற்கு உதாரணமாகும். இவ்வித இரசாயனவேற்றுமைக்கு *விபசனம் எனக்கூறலாம். இதன்றி இன்னமோர்வித இரசாயன வேற்றுமையுண்டு. சில வேளைகளில், இருபொருள்கள் ஒன்றோடொன்று முயங்குங்கால், வேறிரண்டு அல்லது அதிகம் பொருள்களுண்டாகின்றன. விளை சுண்ணும்பும் கந்தகாமிலமும் புணரும்பொழுது, ஒரு விஷக்காற்றும், ஜலமும், வேறொரு புதிய பதார்த்தமுமுண்டாகின்றன. இதுபோன்றவிடத்து, புணருமிருபொருள்களும் விபசிக்கப்படுகின்றனவாகையால், இவ் வேற்றுமைகளுக்கு * உபய விப்சனம் என்று பெயரேற்படுத்தலாம்.

* Chemical Combination.

† அப்பு=நீர்.

‡ Mechanical mixture and physical compound.

* Decomposition.



பௌதிக கருஷணமென்ற விசித்திரசக்தியின் குணவிசேடங்களையுந் தொழில்வேறுபாடுகளையும், அச்சக்தியால் விளையும் இரசாயன வேற்றுமைகளையும், அவைகள் சம்பவிக்கும் பலவிதங்களையும், அவைகளால் முடியுந் தோற்றங்களையும், ஒருவாறு சொன்னோம். இப்பொழுது இச்சக்தியில்லாவிட்டால் நடப்பது யாதெனப் பார்ப்போம். நாம் கண்டறியும் பொருள்கள் பெரும்பான்மையும் இல்லாமலொழியும். ஏனெனில் ஒவ்வொன்றும் அதன் அம்சங்களாகிய மூலவணு இனங்களாகப் பிரிந்து, ஜகமெங்கும் 60 அல்லது 70 †அணு இனங்கள் மாத்திரங் காணலாம். தண்ணீரென்ற பதார்த்தமு முளதோவென்று சேட்கவேண்டியதாயிருக்கும். ஏனென்றால், ஜலத்திற்குபதிலாக அனலன் ஜலஜனகமென்ற இரண்டு வாயுக்கள் தோன்றும். பூமியும் அதன் தரைமீது நிற்கும் மலைகளும் மரங்களும் செடிகளும் எல்லாம் இருந்தவிடந்தெரியாமலோடிவிடும். மேலும்

"ஊர்வ பதினொன்று மொன்பானு மானுடவர்
நீர்பறவை நாற்காலி நேர் பத்தாம்"

என்பதுபோன்ற பிராசீனவாக்கியங்கள் அருத்தமின்றி முடியும். ஏனெனில், ஜீவாசிகளொன்றுமிராமல், அவைகட்குப் பதிலாய் மூன்று அதிர்சியமான வாயுக்களும் கரியுந்தானிருக்கும். கனவிலுங் கண்டறியாத இவ்விநோதங்களைச் செய்யக்கூடிய சக்திகள் அநேகம் எங்குமிருக்க, அவைகளை சற்றுங் கவனியாது, மாந்திரிகர் வழிபடுவதாய்ச்சொல்லும் வஞ்சக தேவதைகளை நாடி யுபசரிக்கும் ஏழைகுணமுள்ளவராயன்றோ நம்மவரிருக்கின்றார்கள்! இளையபெருமாள் கூறிய அனுபவவனுசரணையான மொழிகளை,

"நில்லா வுலகின் நிலைநேர் மையினால்
வல்லாரு முணர்ந்திலர் மன்னுயிர் தாம்
பல்லாயிரங் கோடி பரந் துளவா
வில்லாதன வில்லை யிளங் குமரா"

என்று மறுமொழியளித்து மறுத்து சுவர்ணமானின்பின்சென்ற இராமபிரானுக்குற்ற பேரிடரை யாவரு மறிவோமாயினும், இருக்கக்கூடியனவெல்லாம் இருக்கின்றனவென்றே துணிந்து நடக்கும் சுபாவமுள்ளவராயிருக்கின்றோம். நம் நாட்டார் நினைப்பதுபோல ஏவல்பேய்கள் வாஸ்தவமாயிருப்பினும் இருக்க. ஆனால் பௌதிக கருஷணாதிசக்திகளின் வலிமையை யோசிக்குமிடத்து மந்திரவாதிகள் உபாசிக்கும் ஏவல் பேய்களின் வலிமை எம்மட்டென்று தோன்றும். இங்ஙனம் அளவற்ற வல்லமையுள்ள இயற்கைசக்திகளாம் மோகினிகளின் சுபாவங்களை நன்றாயறிந்து, அவைகளுடன் பழகி, வேண்டுழி அவைகளையேவி,. வேலைகள் முடிக்குந் திறமையடைதற்கு யார்தானிச்சைப்படமாட்டார்கள்!

கே. ஜி. சேஷய்யர். பி. ஏ., பி. எல்.

## எதார்த்த நாகரிகம்.

(38-வதுபக்கத்தொடர்ச்சி)

வாஸ்தவமான நாகரிகம் காயபலம், புத்திபலம், ஆத்மபலம் அதிகரித்தலிலும், சரீரசுகம் ஹிருதயசுகம் புத்திசுகம் அடைவதிலும், இவைகட்கு வேண்டிய புத்தி அபிவிருத்தியும் சாஸ்திர அபிவிருத்தியும் கைத்தொழில்களும் வியாபாரமுறைகளும் விஸ்தாரமாயுண்டாவதிலும், சமுதாய ஏற்பாடுகள் பரிஷ்காரப்பட்டு ஜனங்களுடைய முயற்சிகள் வீண்வழியிற்செல்லாமல் சுகம் விளைவிக்கத்தக்கதும், துக்கம் நிவிர்த்திக்கத்தக்கதுமான வழிகளிற் செல்வதிலும், ஜனங்களுடைய ஆவசியங்கட்கும் உபயோகங்கட்கும் அனுசரணையாய்ப் பிரகிருதியிலுள்ள பலவகை சக்திகளை வசப்படுத்துவதிலும், அவைகளை ஒருமுகப்படுத்தி பிரவிருத்திக்கும்பொருட்டு யந்திரங்கள் சிருஷ்டிப்பதிலும் அடங்கியிருக்கிறது ; அதாவது சுருக்கிச்சொல்லுமிடத்து வாஸ்தவமான நாகரிகமானது அதிகமான ஜனங்கட்கு அதிக க்ஷேமத்தை யுண்டுபண்ணுவதில் நிற்கிறது.

எதார்த்த நாகரிகம்—உத்தமசரீரம்பெறல், காயபலம் வளர்த்தல், சரீர சம்ரக்ஷணம் செய்தல், உத்தமசந்ததி ஜனிப்பித்தல்.

* Double decomposition.

† Elements.

சமுதாய நிலைமையடைந்த ஜனங்கள் நாகரிகமென்ற பெயர் பெறவேண்டுமானால் தத்தம் சரீரத்தை ஒழுக்க விசேஷத்தால் உத்தமமாகச் செய்துகொள்ளுமுறைகளும், காயபலம் வளர்க்கும் முறைகளும், கர்ப்பத்தில் ஒட்டிய வியாதிநிவிர்த்தித்து தானாய் வியாதிவாராமற்றடுத்து வந்த வியாதியைப் போக்கும்படியான முறைகளும், சரீரக்ஷயமும் துர்பலமும் பல்வகை உத்பாத அவலக்ஷணங்களும் இல்லாத சுவலக்ஷண சுகுணம்பொருந்திய சந்ததிகள் உண்டாகும் விவாக முறைகளும் சம்பந்தமுறைகளும் பரிஷ்காரமாய்த்தெரிந்திருக்கவேண்டும். அவைகட்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

ஹிந்துக்களின் க்ஷயகதிகளைப்பற்றி எழுதிய பத்திரிகைகளில் இப்பேர்ப்பட்ட முறைகள் எம்மட்டில் மங்கிப்போய் ஜனங்கள் கெட்டுப்போகிறார்களென்றும் அநாகரிக ஸ்திதிக்கு வருகிறார்களென்றும் காணலாம். தற்காலநாகரிகம் கொண்டாடும் ஜனங்கள் முற்காலத்தில் நமது ரிஷீசுவரர்கள், சித்தர்கள் எழுதி வைத்திருக்கும் வைத்திய கிரந்தங்களைக்காட்டிலும்புதிதாக என்ன புஸ்தகம் எழுதியிருக்கிறார்கள். ஆபரணங்கள் நாகரிகச் சின்னமாக மதித்துச், சென்ற 50 வருஷத்திற்குள் 300 கோடி ரூபா ஆபரணத்தில் அழித்திருக்கும் தற்கால நாகரிக மகான்கள் முன் கண்டுபிடித்திருக்கும்மூன்றுலக்ஷம் ஔஷதிகளைக்காட்டிலும் ஒரு மூலிகையாவது புதிதாய்க் கண்டு பிடித்திருக்கிறார்களா? மேற்கண்ட மூன்றுலக்ஷம் மூலிகைகள் இன்னவையென்றாவது அறிந்திருக்கிறார்களா? அங்கிலேயர்முதலிய வெள்ளைக்காரர் அபிவிருத்தியாகி வருவதாய்ச் சொல்லலாம். அதனால் ஹிந்துக்களாய நமக்கென்ன பிரயோஜனம்? பின்னலான வியாதிகட்கு அங்கிலேய வைத்தியம் தலைகுனிவதேயன்றி அவைகளை வெற்றிபெறக்காணோமே. கொல்லைகளிலும் வயல்களிலும் தோட்டங்களிலும் காடுகளிலும் உண்டாகும் புற்பூண்டுகளை செலவின்றி சம்பாதித்து எளிதில் எல்லோரும் தெரிந்துகொண்டு சுகமாய் நிவிர்த்தி செய்யும்படியான வழிகளை மறந்து கேவலம் செயற்கை முறையாகவும் அதிகச் செலவுள்ளதும் நமக்கு ஒத்துக்கொள்ளாததுமான அந்நியமுறைகளைக் கைக்கொள்வதால் நமக்கென்னலாபம்? வருஷாவருஷம் வாரிக்கொண்டுபோகும் வாந்திபேதி, ஜ்வரம், அம்மைமுதலிய கொள்ளைநோய்க்கு என்னமருந்து புதிதாகவும் உடன்கேட்கத் தக்கதாகவும் கண்டு பிடித்திருக்கிறார்கள்?

### எதார்த்தநாகரிகம்: புத்தியபிவிருத்தி.

தெரிவாக ஊர்வன பறப்பன நடப்பன செயற்கொண்டிருப்பனவாகிய ஜீவஜடங்களில் மனுஷ்யராசிக்கு விசேஷத்துவம் புத்தியினால்தான். அவ்வாறு ஜீவகோடிகளில் விசேஷத்துவத்திற்கு காரணமாகி யிருக்கிற புத்தி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாகரிகம் அதிகம். புத்தி அபிவிர்த்திக்குத் தகுந்தபடி பலதேசத்து பலவகை ஜனங்கள் பற்பல நாகரிகப்படியிலிருப்பார்கள். புத்திவிசாலத்தால் நாகரிகம் மதிக்கவேண்டுமே யல்லாமல், ஆபரணப் பெருக்கின்மேலாவது அவிவேக சமூகத்தாலாவது நாகரிகம் நிதானப்படுத்துவதாயிருந்தால், அமெரிக்கா ஆபிரிக்கா முதலிய கண்டங்களிலுள்ள காட்டு ஜனங்கள் எவ்வளவோ மேன்மையடைந்திருக்கும் வெள்ளைக்காரரைப் பார்க்கிலும் நாகரிகமுள்ளவர்களென்றே சொல்லவேண்டிவரும். வஸ்திரம் செய்ய அறிவில்லாமல் இலைகளையும் கிளைகளையும் தோல்களையும் அணிந்து, மீன்களையும்பக்ஷிகளையும் கொன்று, சுடாமல் தின்று, மரத்தடியில் தங்கி, கொங்காணிபோல் மாற்றக்கூடிய குடிசைகளில் பதுங்கி, மேலெல்லாம் எலும்பும் கல்லும் உலோகங்களும் அணிந்து, தலைகளில் இறகுகள் சொருகி, கிலுகிலுக்கும் மணிகள் சலங்கைகள் இடுப்பிலும் காலிலும் அணிந்து, உடலெல்லாம் சாயப்பூச்சுப் பூசி தீர்க்க விசாரமில்லாத காட்டு ஜனங்களை அங்கிலேயர் முதலிய வெள்ளைக்காரர், இந்துக்கள், இவர்களைப்பார்க்கிலும் எப்படி நாகரிக முள்ளவர்களென்று கூறுகிறது?

புத்தி விருத்தியடைய வேண்டுமானால் சாஸ்திரம் நாளுக்கு நாள் *சாகோபசாகையாய் விரிந்து மேலோங்கி ஆகாயமண்டலம்வரை முட்டவேண்டும். சாஸ்திரரூபம் புத்தி அபிவிர்த்தி புலப்படவேண்டுமேயல்லாமல் மற்றெவ்விதத்தில் புலப்பட்டாலும் குணகரமாகவும் தீர்க்ககாலம் நிற்கக்கூடிய தாகவும் இருக்காது. தர்க்கசாஸ்திரம், அங்ககணிதம், பீஜகணிதம், க்ஷேத்திரவிவகாரம் முதலிய கணிதசாஸ்திரங்கள்; பூகோள சாஸ்திரங்கள்; பிரகிருதிசாஸ்திரங்கள்; வானசாஸ்திரங்கள்; எந்திரசாஸ்திரங்கள்; அக்னி, ஜலம், வாய்வு, ஜோதிஸ் இவைகளின் சாஸ்திரங்கள்; தனிபதார்த்தங்கள் சேர்க்கைபதார்த்தங்களாகவும், சேர்க்கைபதார்த்தங்கள் தனிபதார்த்தங்களாகவும் செய்யக்கூடிய முறைகள் விளக்கும் ரசாயனசாஸ்திரங்கள்; சரீரசாஸ்திரங்கள்; வைத்திய சாஸ்திரங்கள்; ஸஸ்ய சாஸ்திரங்கள்; ஜீவசாஸ்திரங்கள்; தத்வசாஸ்திரங்கள்; தர்ம்மசாஸ்திரங்கள் நாளுக்குநாள் விஷயம் வெளிப்படும்போல் *சாகோபசாகையாய் விரிந்துவியாபகமாகவேண்டும். அதுபோலவே பல ஆவசியகங்கட்குத் தகுந்தபடி பலபூதாம்சங்களைக் கொண்டு நடத்தக் கூடிய பல எந்திரங்கள் நிர்மிக்கப்படவேண்டும்.

* (சாகை=branch of a tree=மரக்கிளை; உபசாகை=Sub-branch=உபகிளை) கொம்பும் கிளையுமாய்.



### எதார்த்த நாகரிகம்: ஆத்மபரிசுத்தி.

எவ்வகைப் பயிற்சியும் எவ்வகை உழைப்பும், மனோசுத்தியும் வாக்குசுத்தியும் கிரியாசுத்தியும் அடைவதற்காகையால், எவ்வகை நிர்ப்பந்தத்திலும் எவ்வகை கஷ்டத்திலும் மனோவாக்குக்காயங்களைச் சுத்தமாய் வைத்திருக்கும் திடச்சித்தமும் திடப்பிரவிருத்தியும் நிலைப்படவேண்டும். இவ்வாறு நிலைப்படுவதுதான் நாகரிகக் கொடுமுடி. கர்மபாசத்தில் அகப்பட்டு வாக்கு மனம் செய்கை இவைகள் வெவ்வேறாகப் போகவிட்டு ஆத்மரக்ஷைதேடாமல் ஆபரணாலங்கிருத முதலிய அற்ப சுகங்களை நாடி வாணாள் கழிப்பதைப்பார்க்கிலும் ஆத்மரக்ஷைதேடுவது பூஜிதமென்பதற்குச் சந்தேகமில்லை. பதவி வித்தியாசத்தால் கர்ம்மவித்தியாசம் புலப்படுவதால்தீர்க்ககாலத்தில்பலிதப்படக்கூடிய ஆத்மசுத்திதேடாமல்தீர்க்ககாலத்தில் துன்பம் விளைக்கக்கூடிய காரியங்களையும் அதர்மங்களையும் ஆபரணாலங்கிருத முதலிய அற்பமோக நிமித்தம் செய்வது கூடாது. வரப்போகிறகாலத்தின் அளவை உத்தேசித்து ஒரு ஜீவகாலம் ஒரு விநாடியாகக்கூட நினைப்பதற்கு யோக்கியதையில்லாதபடியால் இந்த அற்பகாலத்தைக் கருதி வருங்காலத்தை உபேக்ஷிப்பது கடுகைக்கருதி பிரம்மாண்டத்தை யிழப்பதொக்கும். ஆத்மசுத்தி ஆத்மரக்ஷை இவைகட்கு அனுசரணையாயுள்ள லௌகிகப்பிரவிருத்திகள் நடக்கவேண்டுமே யல்லாமல் விருத்தமான பிரவிருத்திகள் நடக்கக் கூடாவாம்.

### எதார்த்த நாகரிகம்: சரீரசுகம்.

பசியால் வருந்துவதற்கும் நாகரிகத்திற்கும் சம்பந்தமில்லை. ஆபரணம் நாகரிகமென்னும் மகா சித்தாந்தத்தை அனுசரித்து நாகரிகங்கொண்டாடும் நாம் முதலெல்லாம் ஆபரணத்திலிட்டு பசியால் கஷ்டப்படுவோமாகில் நம்மை யாராவது நாகரிகமாய்பட்டினி கிடக்கிறதாய்ச் சொல்லுவார்களோ? மேற்கண்ட சித்தாந்தப்படி நாகரிகமாய் க்ஷுத்பாதை யடைவதைப்பார்க்கிலும் அநாகரிகமாய்ப் பசியாற உண்பதல்லவா சுகம்? உள்ள முதலெல்லாம் ஆபரணத்திலிட்டு சுயங்கிருதானர்த்தம் வருத்திக்கொள்ளாமல் நிர்வாகமின்றி, எவ்வளவு பாடுபடத்தயாராக இருந்தாலும் வழியில்லாமல் கஷ்டப்படுபவர்களை அநாகரிகமுள்ளவரென்று சொல்லத்தகாது. நாகரிகமாக ஆபரணத்தில் முதலிட்டுவரும் நாம் யாதொரு கஷ்டப்படாமல் மூன்றுவேளையும் சாப்பிட்டு சுகமடையக்கூடிய வழிகளிருக்க, அவ்வழிகளில் முதலிட்டு சுகமடையாமல் அரைப்பட்டினி முக்காற்பட்டினியாகக் காலத்தைத் தள்ளுவோமானால் நம்மை எப்படி நாகரிகமுள்ளவரென்று சொல்லுகிறது.

நாகரிகம் மூன்றுவேளை பசியாற்றுவது மல்லாமல் சுகபோஜனமுமடைவதாம். நாகரீகமற்ற காட்டுஜனங்களைப்போல வெந்ததும் வேகாததுமாய் ஓரிரண்டு ரசத்தோடு சாப்பிடுவதைப் பார்க்கிலும், ஷட்ரசங்களோடு வாசனை திரவியங்கள் கலந்ததாக விதத்திற்கு விதஞ்செய்து சாப்பிடுவதே நாகரிகமாம். இம்மலையாளத்தில் உணவு பதார்த்தங்கள் எவ்வளவோ சுருக்கமாகவும் அவைகளைச் செய்யும்விதமும் எவ்வளவோ தாழ்ந்தபடியாகவுமிருக்கிறது. இவ்விடத்தில் பக்ஷணமாகச் செய்யவேண்டுமானால் தோசை, சேவை, முறுக்கு, தேங்குழல், சீடை, வடை இவைகள் செய்யத்தெரியுமே யல்லாமல் விசேஷமாக வொன்றும் தெரியாது. அடுத்தாற்போல மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களில் பக்ஷணங்கள் எவ்வளவோ வகை செய்கிறார்கள். இந்த மலையாளத்தை உத்தேசித்து மேற்படி ஜில்லாக்கள் வெகு நாகரிகமென்றே சொல்லவேண்டும். ஷட்ரசங்களிலும் புதிது புதிதாகவும் மனோகரமாகவும் எவ்வளவுக்கெவ்வளவு விதம்விதமாய்ச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாகரிகம் அதிகம். தற்காலத்தில் ஆபரண ஆசையால் போசன சுகம் கெட்டிருப்பதைப்பற்றியும் பக்குவமுறை கெட்டிருப்பதைப்பற்றியும் இவ்விடம் சூசிக்கலாமேயன்றி விஸ்தரிக்க அவகாசமில்லை. தற்காலத்தில் பக்ஷணவகைகள் புதிதாகச் செய்கிறோமென்ற பெருமை சில ஜில்லாக்களில் ஜனங்கள் அடைகிறார்கள். இது நூறுவருஷத்திற்குமுன் மகம்மதிய அரசாட்சியின் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு கொள்ளைக்காரருடைய பயத்தின்மேல் சமைத்துவைத்த அடிசிலைச் சாப்பிடலாமென்ற நிச்சயங்கூட இல்லாமல் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு கள்ளர் பயத்திற்காகச் சமைத்த ஆகாரத்தைப்பானையோடு பூமியிற்றோண்டிப் புதைத்து பந்தோபஸ்துசெய்து வந்தகாலத்தை உத்தேசித்து நாகரிகமென்று சொல்லலாம். ஆனால் தற்காலத்தில் புதிதாகச் செய்துவரும் பக்ஷணங்களெல்லாம் வெகுகாலத்திற்குமுன் ஏற்பட்ட நளபாகம், வீமபாகம் என்ற பக்குவசாஸ்திரங்களில் உட்பட்டிருக்கின்றன. அச்சாஸ்திரங்களிலுள்ள முறைகள் பூரணமாய் இன்னு மனுஷ்டானத்திற்கு வரவில்லை. அவைகளைக்கடந்து இதுவரை புதிதாக ஒன்றும் கண்டுபிடிக்கவுமில்லை. அம்முறைகட்படி நடக்கவேண்டுமானால் திரவியபுஷ்டி வேண்டும். காற்படி அரிசிக்குத் தகுந்த கேசரீபாத்செய்

யவேண்டுமானால் குறைந்தது ஐந்து ரூபாய் செல்லும். அப்படியிருக்க நளபாகம் பீமபாகம் என்னும் சாஸ்திரங்களேற்பட்ட நம்முன்னோர்கள் காலத்தை யுத்தேசித்து தற்காலம் அநாகரிகமென்றே சொல்லவேண்டும்.

நாகரிகம் சுகபோஜனம் அருந்துவதன்றிச் சுகந்தாதிகள் அனுபவிப்பதும் சரீரசுகமாகையால் அதுவும் ஓர்வகை நாகரிகம்தான். வராகசம்மிதையில் புஷ்ய ஸ்நானம் வாசனைத்திரவியம் இவைகளைப் பற்றிய அத்தியாயங்களைப் பார்த்தோமானால் நம்முடைய முன்னோர்கள் சுகந்தாதிமூலமாய் எவ்வளவு சரீர சுகமடைந்திருக்கிறார்களென்று விளங்கும். தற்காலத்தில் ஆபரணப்பெருமை யிருந்தாலும் புதிதாக ஓர் முறையாவது கண்டுபிடித்ததாக எவனாவது விரல் மடக்குவானா? மதுரைமுதலிய சில ஜில்லாக்களில் புஷ்பம் லேபனம் முதலிய சுகந்தாதி யனுபவங்கள் ஜனங்களடைவது வாஸ்தவமே. ஆனால் பசிப்பிணிக்குட்பட்டு சுகபோஜன மில்லாமல் நாக்குசெத்து சுகந்தாதிகள் அனுபவிப்பது நாகரிகமன்று.

நல்ல ஆடையுடுத்தல் சரீரசுகமாகையால் நல்ல ஆடைநெய்யக்கூடிய நெசவுதொழில்கள் பலமாய் ஏற்பட்டாலல்லாமல் நாகரிகமென்று சொல்லுவதற்கிடமில்லை. ஐம்பதுவருஷத்திற்கு முந்தி ஜனங்கள் உடுத்திவந்த வஸ்திரங்களைப்பார்க்கிலும் இப்போது ஜனங்கள் உடுத்திவரும் வஸ்திரங்கள்நாகரீகந்தான். ஆனால் முன்னோர்கள் செய்துவைத்த கருவிகளைக் கொண்டு தற்காலத்தில் யாதொன்றும் புதிதாய்க் கண்டுபிடிக்காமல், அங்கிலேயர் முதலிய அந்நியதேசத்தார் புதிதாய்க் கண்டுபிடித்த எந்திரங்கள் மூலம் நூற்றுவரும் சுகமான நூல்களை விலைக்குவாங்கி வஸ்திரங்கள் நெய்கிறோமேயல்லாமல் நாமாகச் செய்வதொன்றில்லை. ஆபரணத்தில் முதலிட்டு நாகரீகம் கொண்டாடும் நாம் அன்னியதேசத்தாரால் நம்முடைய நெசவுதொழில் கீழ்மாண்டுபோகும்படி வந்திருக்கும் நிர்ப்பந்தத்திற்கு பரிகாரமாக என்ன ஏற்பாடு செய்திருக்கிறோம்?

சுத்த ஆடை சரீரசுகமாகையால்அது நம்முடைய நெசவுகாரன் மூலங்கிடைத்தாலென்ன அன்னிய தேசத்தார் மூலங்கிடைத்தாலென்ன வென்று கேட்கக்கூடும். இது இந்துதேசம் உத்தேசித்து கேட்கக் கூடிய சரியான கேள்வியல்ல. வஸ்திரங்களுக்கு வேண்டிய பருத்திமுதலிய சரக்குகள் உற்பத்தியாகாததும் அப்படி உற்பத்தியாகப்பட்ட தேசங்களிலிருந்து விலைக்குவாங்கி நெசவுதொழில் நடத்துவதால் நஷ்டம்வரத்தக்கதுமான சீமைகளில் அன்னியதேசங்களிலிருந்து வஸ்திரங்கள் வருத்துவது அநாகரிகமன்று. ஆனால் நம்முடையதேசத்தவர்களுக்கு வேண்டிய முக்கியமான சரக்குகள்நம்முடைய தேசத்திலுற்பத்தியாகஅவையெல்லாம் அன்னியதேசத்திற்கனுப்பி அவர்களால் நெய்துவந்த வஸ்திரங்களைக் கிரகிப்பதாயிருந்தால், ஷட்ரசங்களோடு எல்லாவிதத்திலும் சுகபோஜனமடையக்கூடிய பதார்த்தங்கள் புஷ்டியாக வரும்படியிருந்தும் அவ்வாறு செய்து சாப்பிடச் சக்தியின்றிஅன்னியதேசங்களுக்கு பதார்த்தங்களை அனுப்பி பக்ஷணங்களாகச் செய்து வருத்தி சாப்பிடுவதற்கு சமமாகும். நம்முடைய தேசத்திலிருந்தும்,4000 மைலுக்கப்பாலிருக்கும் அமேரிக்கா கண்டத்திலிருந்தும் பஞ்சுவருத்தி எந்திரங்களால் நூலாகவும் வஸ்திரங்களாகவும் சரக்குசெய்து நம்முடைய இந்துதேசம் முழுமையும் பரப்பி திரவியஞ் சம்பாதிக்கும் அங்கிலேயர் நாகரிகமுள்ளவர்களா? நாம் நாகரீகமுள்ளவர்களா?

பூமியின் சுற்றளவு 25,000 மைல். இவ்வளவு சுற்றளவுள்ள பூமிமுழுவதும் மாஞ்சஸ்டர் பட்டணத்தில் ஒருநாள் நெசவாகிற வஸ்திரங் கொண்டு மூடிவிடலாமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு விஸ்தாரமாக ஒருநாளில் செய்துவருவது நாகரிகமா? அல்லது மூன்றுநாளைக்கு 18 முழம் நெய்யும் நம் சுதேசிகளின் முறை நாகரிகமா? பருத்திவிளைவில்லாத அங்கிலேயர் பருத்திவிளைவுள்ள நம்மை நெசவுத்தொழில் முயற்சியிலும் ஜெயித்திருப்பதை உத்தேசித்து நாம் அவமானமடைய வேண்டுமேயல்லாமல் நாகரிகமென்று பெருமையடைவதற் கிடமில்லை. அந்த அவமானத்தை நிவர்த்திக்கும் சக்தி நம்மிடத்திலிருக்கும்போது அவ்வாறு நிவர்த்தி தேடிக்கொள்ளாமல் முதலெல்லாம் ஆபரணத்திலிட்டு அவமானத்திலடங்கியிருப்பது அவமானத்திலும் அவமானம்.

### சங்கீதம் ஓர் சரீரசுகம்.

சங்கீதம் தற்காலத்தில் வெகுபேர் பழகிவந்தாலும் அதின் சுகம் நமக்கில்லாமல் போய்விட்டது. மனோபாவங்கள் அனுபோகரீதிக்குப் புஷ்டிவரும்படி சமயம் சந்தர்ப்பம் தாராதரம் இவைகட்குத்தகுந்தமாதிரியாய் வீண் ஆகோஷமும் கோணங்கித்தனமும் இல்லாமல் சாஸ்திரங்களில் லக்ஷணம் கூறிய வண்ணம் முற்காலத்தில் பாடிவந்தார்கள். அதில் சுகம் இருந்தது. தற்காலத்தில் வேகடைசுபாவம் அதிகரித்திருப்பதற் கொப்பாய் சங்கீதமும் வேகடைப்பட்டுப் போய்விட்டது. மலையாளத்தில் இராமாயணத்திற்குப் புதுமெட்டு அமைத்திருப்பதில் அநேகம் ஜாவளிமெட்டிலும் இந்துஸ்தானி டப்பா மெட்டிலும் இன்னும் வேகடையாயுள்ள நாடோடியாயிருக்கும் பலவகை மெட்டிலும் பாணி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஜாவளியென்பது விடாள் சுபரவத்தைக்குறிக்கவந்த மெட்டு. தர்மபாசத்தாற் கட்டுண்டு மாதாபிதா வாக்குபரிபாலனம்பண்ணும்பொருட்டு அரசு துறந்து சுகம்துறந்து நாடுதுறந்து மரவுரி உடுத்தி தவவேடத்துடன் காட்டில் 14 வருஷகாலம் தள்ளி, அரக்கர்மூலம் துன்பத்துக்குட்பட்டு போர்புரிந்து முடிவில் வெற்றியடைந்து மகாபுருஷத்துவமாக வாணாள்செலுத்திய ராமகதைக்கும் ஜாவளிக்கும் சம்மந்தம் இருக்காது. வினயம், துக்கம், பரிதாபம், வியாகுலம், யுத்தக்குழப்பம், அதின்பின்புள்ள சந்தோஷம், வைராக்கியம், பக்தி, சிரத்தை இவைகட்குத் தகுந்த மெட்டுக்கள்தான் இணக்கமாயிருக்கக்கூடியன. அப்படியிருக்க இந்துக்கள் சுபாவமே யல்லாமல் மகம்மதிய மெட்டுக்களால் இந்துக்கள் உணர்வை எங்ஙனம் விளக்குகிறது. ஒருவேளை இது சாத்தியமென்று வந்தாலும் ராகமெட்டு சமயோசிதமாயிருக்கவேண்டும். லக்ஷ்மணர் யுத்தத்தில் மூர்ச்சைபோட்டு விழுந்தவுடன் ஸ்ரீராமருக்கு விசனமுண்டாகி லக்ஷ்மணைமார்பில் சார்த்திபுலம்பும்போது 'முத்துமாராக்குலக்கு' என்னும் சக்கிலிச்சிப்பாட்டிற்பாடுவது சமயோசிதமா? அப்படியிருந்தும் அம்மெட்டிற்குள் புதுமெட்டமைந்திருக்கிறது. ரவையுதிர்த்துக் கொட்டவேண்டுமென்ற தப்பிதமான சித்தாந்தத்தின்மேல் ரம்பம்கொண்டு அறுத்துப் பொடிஉதிர்த்தாற்போல் கரகரவென்று சத்தம் எழுப்பிசன்னமானதொண்டையிலிருந்ததைத் திடீரென்று மலைபோல் தடித்த தொண்டையிலாக்கிக் கீச்சென்றிருந்தது திடீரென்று மடத்தவளை கூப்பிட்டாற்போல் விரிந்த தொண்டையில் ஆழச்செய்து மகாவிகாரமாகத் தற்காலத்திற் பாடுகிறார்கள். இவ்வாறு பாடுபவர்கள் முக்கியமாய் புது நாகரிகம் கொண்டாடப்பட்டவர்கள்தான். அதாவது வைரக்கடுக்கன் காதிலிட்டுமோதிரங்கள் அணிந்து, தங்க அரைஞாண்மாட்டி கமான் குடுமிவைத்துக்கொண்டு சிமிட்டாபிடுங்கின நெற்றி சகிதம் அருகுமீசை வைத்துக்கொண்டு மூலைத்தார்பாய்ச்சி வேஷ்டி யுடுத்தி சந்தனப்பொட்டின்மேல் குங்குமப்பொட்டும் அதற்குக்கீழ் விபூதி சாந்துப்பொட்டுமாகத் திரியும் வாலிபர்கள்தான். சரீரப் பிரயாசையின்றி பிரயாணஞ் செய்வது சரீரசுகமாகையால் ரெயில்வண்டி முதலியவை நிர்மாணிப்பது நாகரிகந்தான்.

### எதார்த்த நாகரிகம்: இருதயசுகம்.

இருதயசுகம் முக்கியமாய்க் கவிதையின் மூலந்தான் அடையவேண்டியது. தற்காலத்தில் ஆபரணாலங்காரங்கொண்டாடும் வாலிபர்கள் எந்தபாஷையில் கவிதா சுகமடைகிறார்கள்? எந்தபாஷையில் கவிதையென்று சொல்லும்படியான கவிதை யுண்டாக்கி இருக்கிறார்கள்? ஒருபாஷையிலுமில்லை. அருட்பாவென்னும் தேனை வாசித்துப் புகட்டும்படி நான் பலபேரிடம் சிரமப்பட்டும் பத்து பாடல்கள் க்ஷமையோடு கேட்கப்பட்டவர்கள் இல்லாமல் விசனப்பட்டிருக்கிறேன். வயிற்றுசுகத்தைப் பார்க்கிலும் இருதயசுகம் மேலானபதவியில் உள்ளதுதான். புத்திசுகம் ஹிருதயசுகத்தைக்காட்டிலும் மேலானது. அதுசாஸ்திரமூலந்தான் கிடைக்கக்கூடும். புத்திசுகத்தைக் காட்டிலும் ஹிருதயசுகம் தாழ்ந்தது. அதைப்பார்க்கிலும் விஷயசுகமாகிய சையோகசுகந் தாழ்ந்தது. இவ்வகை சுகானுபவங்கட்கு வேண்டிய சிரசு ஹிருதயம் வயிறு முதலிய கருவிகள் ஒன்றிற்கொன்று படிப்படியாய்த் தாழ்ந்தபடியிற்றானே அமைந்திருப்பதை யோஜிக்கும்போது பகவத்சங்கற்பமும் அவ்வாறென்றே நிச்சயிக்கவேண்டும்.

### நாகரிகம்:ஆத்மசுகம்.

இந்தசுகம் எல்லாவற்றிலும் மேலானசுகம் என்பதற்கு சந்தேகம் இல்லை. ஆத்மசுகத்தில் தாழ்ந்தபடியில் இருப்பதாயுள்ள தர்ம்மசுகம் சத்தியசுகம் எவ்வளவோ பெரிதென்று மகான்கள் கூறியிருக்கிறார்கள். பிரவிருத்திக்கு அதீதமாயுள்ள ஆத்மசுகம் வாய்மொழியால் மனஸிற்கெட்டாது. இவ்வகை சுகம் பகவத் கடாக்ஷத்தால் அடையவேண்டும். பகவத் கடாக்ஷம் பக்தி, தர்மம், தவம், யோகம் முதலியவற்றாற் பெறவேண்டும்.

**எஸ். இராமஸ்வாமி அய்யர், பி. ஏ., பி. எல்.**

# ஆபத்துக்கிடமான அபவாதம்

அல்லது

# கமலாம்பாள் சரித்திரம்.

## V

இப்பொழுது சிறுகுளத்தைவிட்டு மதுரைக்குப் போய்வருவோம். மதுரையில் நமக்குக் கொஞ்சம் காரியம் இருக்கிறது. அதைப் பார்த்துக்கொண்டு சிறுகுளத்தில் நடக்கப்போகிற பெரிய கலியாணத்துக்கு மாப்பிள்ளை, சம்பந்தி முதலானவர்கள் வரும்போதுஅவர்களுடன் கூடவே வந்துவிடுவோம். நமக்கு மதுரைக்குப் போகவேண்டி பல்லக்கு, குதிரை இவையொன்றும் தேவையில்லை. முற்காலத்து ரிஷிக

ளிடத்தில் கமனகுளிகை என்று ஒரு அருமையான வஸ்து இருந்ததாம். அதில் ஒன்று எடுத்து வாயில் போட்டுக்கொண்டால் எந்தஇடத்துக்கு வேண்டுமோ அந்த இடத்திற்குக் கொண்டுபோய்விடுமாம். நமக்கு அம்மாதிரி குளிகைகளின் உதவிகூடத் தேவையில்லை. நினைப்பின்மாத்திரத்தில் இடம் விட்டு இடம்போக சாமர்த்தியமுண்டல்லவா.

மதுரையில் 'ஜில்லாஸ்கூல்' என்று பெயர்வழங்கிய கவர்ண்மெண்டு காலேஜ் என்ற பள்ளிக்கூடத்தின் தாழ்வாரத்தில் ஒரு மூலையில் சில 'பென்சி'களும் அவற்றின் மத்தியில் ஒருநாற்காலியும் மேஜையும் போடப்பட்டிருந்தன. அந்தமேஜையின்மேல் சில மைக்கூடுகள் பரப்பப் பட்டிருந்தன. 'டிங் டாங்' என்று பத்தாவதுமணி அடித்தவுடன் அவ்விடத்தில் சுமார் இருபதுபையன்கள்வந்து கூடினார்கள். அவர்கள்வந்து ஐந்துநிமிஷத்திற்குள் அம்மைத்தழும்புகள் நிறைந்த முகத்தையும் நீண்டு கறுத்த உருவத்தையுமுடைய ஒரு மனிதர் அங்கேவந்தார். அவர் அந்தப்பள்ளிக்கூடத்துத் தமிழ்ப்பண்டிதர்.அவர்பெயர் அம்மயப்பபிள்ளை. அவருக்கு சுமார் ஐம்பதுவயதிருக்கலாம். அவர்பிறந்த ஊர் 'ஆடுசாபட்டி' என்று ஐந்தாறுவீடுகளும் ஒரு புளியமரமும் உள்ள ஒருபெரிய பட்டணம். அவர் அகாதசூரர். எமகம் திரிபு என்று இப்படிப் பாடஆரம்பிவித்தாரானால் குரங்குகள் அத்திப்பழத்தை உதிர்ப்பதுபோல் சடசடவென்று உதிர்த்துவிடுவார். யாராவது தமிழ்தெரிந்தவன் அவர்கையி லகப்பட்டுவிட்டால் ராமபாணம் போட்டாற்போல் மூச்சுவிடுமுன்னே முந்நூறு நானூறுக்கணக்காய் பாட்டுகளைவீசி அவன்காதை சல்லடைக்கண்களாகத்தொளைத்துவிடுவார்.—ஒருகாலத்தில் தமிழ்தெரியாத ஒரு பைராகிக்கும் ஒருசாஸ்திரியாருக்கும் சண்டை உண்டாய்விட்டது. பைராகி தன்வசவுகளில் காரே பூரே என்று அபரிமிதமாய் வைய சாஸ்திரியார்,முட்டாள்,போக்கிரி என்றிப்படித் தனக்குத்தெரிந்த வசவுகளையெல்லாம் வைது பார்த்தார். அவன் வாயொடுங்குகிற வழியாகவில்லை. அய்யா பழைய வசவுகளுக்கு இவன் கட்டுப்படமாட்டான் என்று நினைத்து, புதுமாதிரியாக 'அடா போடா,புஸ்தகமே,சிலேட்டே,கலப்பையே,மோர்க்குழம்பே, ஈயச்சொம்பே' என்று இப்படி வாயில் வந்தவார்த்தையை எல்லாம் வசவாக அடுக்கவே அந்த பைராகி புதுவசவுகள் அகப்படாமல் திண்டாடித்தத்தளித்துப்போனான்.—அதுபோல அம்மயப்பபிள்ளையுடன் ஏதாவது ஒருவிஷயத்தைக்குறித்துத் தர்க்கம்செய்ய ஆரம்பித்தால் ஆயிரக் கணக்காகப் பாட்டுகளைச்சொல்லி எதிராளியின்வாயை அடக்கிவிடுவார். அந்தப்பாட்டுகள் எடுத்தவிஷயத்திற்கு சம்பந்தமில்லாவிட்டால் என்ன. அதனால் என்ன குறைவு? பாட்டுகள் பாட்டுகள்தானே! அதுவும் அவர் பாட ஆரம்பித்தால் அவருக்கு சரியாக மகாவைத்திநாதையர் கூடப் பாடமுடியாது. ஒருநாள் மதுரை கட்டைசெட்டி மண்டபத்தில் நமதுபுலவர் கம்பராமாயணத்தில் சீதாகலியாணப் படலத்தை எடுத்துப்படித்துப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது தற்செயலாய் தெருவழியே போன ராமபக்தன் ஒருவன் ராமன் என்றபேரைக் கேட்டுவிட்டு'ராமகதைபோலிருக்கிறது. கேட்போம்' என்று உள்ளேவந்தான். அப்பொழுது, அம்மயப்பபிள்ளை வாயினின்றும் எச்சில் காதவழிக்குத் தெறிக்க கண்கள் சிவந்து வெகு உக்கிரமான முகத்துடனும் கடோரமான குரலுடனும் அதிக உற்சாகமாய்ப் பிரசங்கம்செய்ய, வந்த ராமபக்தன் 'ராம ராவணயுத்தம்போலிருக்கிறது,அதுதான் இவர் இவ்வளவுகோபாவேசமாயிருக்கிறார். நல்லபக்தர்போலும்' என்று இவரை மனதுக்குள் கொண்டாடிக்கொண்டிருக்கும்போதே புலவர் 'ராமன் சீதையைக் கலியாணம் பண்ணிக்கொண்டான். சீதையைக்கலியாணம் பண்ணிக்கொண்டான் ராமன்' என்று கைகளை வீசிக்கொண்டு கர்ச்சித்தார். அதைக்கேட்டு அந்த ராமபக்தன் திடுக்கிட்டு எழுந்து கண்களில் தீப்பறக்க 'ராமன் அப்படித்தான் சீதையைக் கலியாணம்செய்து கொள்வான். அதற்கு நீர் என்ன ஓய் கோபிக்கிறது' என்று அதட்டிக்கொண்டு அவரை ஓங்கி அடிக்கச்செல்லவே, சுற்றியிருந்தவர்கள் அந்த ராமபக்தனைக் கைபிடித்திழுக்க,அவன் 'விடுங்கள்,சீதையை மணம்செய்ததற்கு இவ்வளவுகோபம் கோபிக்கிற சண்டாளனைக் கொல்லுகிறேன்' என்று செல்ல, 'அது கோபமல்ல. உள்ள சாந்தமே அவ்வளவுதான் அவருக்கு' என்று சொல்லி அவனைச் சமாதானப் படுத்தினார்கள். பிள்ளை அவர்களோ நடுநடுங்கி பாதி கலியாணத்தில் நிறுத்திவிட்டு 'ராமன்பாடு, சீதைபாடு, அவர்கள் விஷயத்திற்கு நான்வரவில்லை. போதும்போதும்' என்று அன்றுமுதல் பொதுஸ்தலங்களில் கதாபிரசங்கம் செய்வதை நிறுத்திவிட்டார். இவ்விதம் சங்கீத ஞானம்,சாரீரசம்பத்து தமிழ்வித்வத்துவம் இவைகளில் இவர் சிறந்தவராயிருந்ததுமன்றி நல்லபுத்திமானாயும் இருந்தார். ஒருகாலத்தில் அவருக்கும் அம்மாபட்டிக் கவண்டயன்கோட்டைக்கவிராயருக்கும் 'அன்ன நடை என்று நடைக்கு விசேஷமாகக்கூறும் அன்னபட்சி உலகத்தில் தற்காலத்தில் உண்டா? இருக்குமானால் அது எது?' என்ற பெரிய விஷயத்தைப்பற்றி யுத்தம்நடந்தது. கவிராயர் அன்னம் என்பது காக்கையா யிருக்கவேண்டும்



ஏனெனில் காக்கையொன்றே பட்சிகளுக்குள் நடையிற்சிறந்ததாயிருக்கிறது! ஆனதுபற்றிக் காக்கையே அன்னப்புள்ளாதல்வேண்டும்' என்று அதற்கு ஆதாரங்கள்காட்டி சாதித்தார். அம்மயப்பபிள்ளை 'அல்ல, அல்ல. அன்னம் என்றால் சாதம். அன்னமும் வெள்ளை, சாதமும்வெள்ளை. சாதத்திற்கே அன்னமென ப்பெயருண்டு. மேலும் அன்னமும் பட்சி; சாதத்தையும்நாம் பட்சிக்கிறோம்.(சாப்பிடுகிறோம்.)ஆதலால் சாதத்தையே அன்னமென்று,-தட்டுபவனை தட்டான்என்று சொல்லியதுபோல்,-உருவகநவிர்ச்சி யலங்காரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது'என்று அதற்கு பிரமாதமாய் ஆயிரம்பாட்டுகளையெடுத்து ஆதாரம் காட்டி சண்டப்பிரசண்டமாய் ஆட்சேபித்தார்.முதலில் இந்த யுத்தம் கடித மூலமாகவே நடந்தது. பிறகுஇரண்டுவித்வான்களும் நேரிலே மதுரையிலேயே சந்தித்து பத்துநாள் இரவும்பகலும் அண்டைவீட்டுக்காரரைத் தூங்கவிடாமல் யுத்தம்பண்ணினார்கள். கடைசியில் ஒருநாள் ராத்திரி அம்மயப்பபிள்ளை கவண்டயன்கோட்டைக் கவிராயரை அன்னத்தைக் காக்கையென்று சொன்னதற்காக 'காக்கை' யென்று பரிகாசம்செய்தார். அவர் இவரை அன்னத்தை சாதம் என்று சொன்னதற்காக 'சாப்பாட்டு ராமர்'என்று மரியாதையாய்பரிகாசம்செய்யவே,இவர் அவரை 'கவிராயர், குரங்குராயர்' என்றார், (கவி என்றால் குரங்கு என்றும் அர்த்தம்.) அவர் இவருடைய அம்மைத்தழும்பு நிறைந்தமுகத்தை சுட்டிக்காட்டி 'அம்மையப்ப பிள்ளையென்றால் உமக்கேதகும்' எனவே,இவருக்குக் கோபமுண்டாய் அவரை அடிக்கச் சென்றார். கவிராயர் 'உமக்குநான் இளைத்தவனா' என்று அடிக்கவந்தார். இதற்குள் காவல்காக்கும் போலீஸ்காரர்கள் இவர்களுடைய நிலைமையைக்கண்டு, தமிழ்வித்வான்கள் தர்க்கம் இதில் நாம் பிரவேசிக்கக்கூடாது என்று அறியாமல்,அநியாயமாய் அவர்களைப்பிரித்து விட்டுவிட்டார்கள். மறுநாட் கா‍ப்பொழுது விடியுமுன்னமேயே கவிராயர் ஒருவ[illegible] அறியாமல் ஊர்போய்ச்சேர்ந்தார். அம்மயப்பபி[illegible] அவர் ஓடிப்போய் விட்டாரென்று செவ்வை[illegible]ய் விசாரித்துக்கொண்டு தான்அவரைவென்றுவிட்ட[illegible]கப் பெருமைபேசிக்கொண்டார். அம்மாபட்டியிலோ கவிராயர் அம்மயப்பபிள்ளையை ஜெயித்துவிட்டதாக பிரஸ்தாபம். அன்னப்பட்சியைப்பற்றிய தர்க்கம் இவ்வாறு முற்றிற்று.

இவ்வளவு பிரதாபத்தையுடைய அம்மயப்பபிள்ளையவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்தவுடன் சுற்றுமுற்றும் கம்பீரமாகக் கடாட்சித்துவிட்டு தமது ஆசனத்திலெழுந்தருளினார். அவரைச் சுற்றியிருந்த வகுப்பு மெட்றிகுலேஷன்வகுப்பு. அப்பொழுது நளவெண்பா பாடம். அதில் சுயம்வரகாண்டத்தில் 'கோதைமடவார்தங் கொங்கைமிசைத்திமிர்ந்த'என்ற பாட்டைப்படித்துவிட்டு, தான் படித்ததைக்கேட்டு எல்லோரும் மெச்சுகிறார்களாவென்று சுற்றுமுற்றும்பார்த்தார். அந்தவகுப்பில் இராமசாமி யென்ற ஒருபையன் உண்டு. அவன் வெகுவேடிக்கையாய் பேசுவதால் அவனைத் தென்னாலுராமன் என்று பையன்கள்கூப்பிடுவது வழக்கம். அந்தத் தென்னாலுராமன் வாத்தியார்குறிப்பையறிந்து'சுவாமீ, இன்னொருதரம் படிக்கவேணும் கேட்கக் கேட்க இன்பமாயிருக்கிறது. புஸ்தகமோ நளவெண்பா; படிப்பதோ இன்னாரென்று சொல்லவேண்டாம்' என, வாத்தியார் உள்ளங்குளிர்ந்தவராய்'படிக்கிறதுயார், ஆடுசாபட்டி அம்மயப்பபிள்ளைஎன்றுசொல்வேன்.' என, பையன் 'சுவாமீ தங்கள்பேர்முழுவதும் நன்றாய் சொல்லவேண்டும்'என,குரு'என்பெயரா,சொல்லுகிறேன் கேள். கடல்சூழ்ந்த இந்நிலவலயத்திற்கு ஓர்திலகம்போன்ற ஆடுசாபட்டி மகாவித்வான் அம்மயப்பபிள்ளை' என, தென்னாலுராமன் (மெதுவாய்) 'ஒருவண்டி காணுதுபோல் இருக்கிறதே' என்று சொல்லிவிட்டு, 'சுவாமி மூன்போல முழுவதும் சொல்லவில்லையே' என, வாத்தியார் 'நாழிகையாகிறது,மேலே சொல்வோம்' என, பையன் 'முழுவதும் சொன்னால்தான்' என்றான். உடனே வாத்தியார் 'கடல்சூழ்ந்த இந்நிலவலயத்திற்கு ஓர் திலகம் போன்ற ஆடுசாபட்டியில் அவதரித்த அண்டர்புகழும் அஷ்டாவதானம் மகாவித்வான் அம்மயப்பபிள்ளை. இப்பொழுது சரிதானா? 'என, எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். வாத்தியார் வாயில் கை பொத்திக்கொண்டு 'சிரியாதேயுங்கள். ஹெட்மாஸ்டார் வந்துவிடப் போகிறார்.'என்று சொல்லிவிட்டு, மறுபடி பாட்டைப்படித்து 'மாவிந்த நகரத்தில் ஸ்திரீகள் மார்பிலணிந்த சந்தனமானது, அவர்கள் ஸ்நானம் செய்யும்பொழுது சேறாகி தெருவெல்லாம் நிறைந்திருப்பதால் அந்நகரத்து வீதிகளில் செல்லும் யானைகள் அச்சேற்றில்வழுக்கிவிழுகின்றன. அவ்வளவு சந்தனம், அவ்வளவு சேறு. பேஷானபாட்டு, ஆஹா!' என்று பிரசங்கித்துவிட்டு மறுபடியும் அந்தப்பாட்டைப் படிக்கப்போகவே, தென்னாலுராமன் எழுந்து 'சுவாமிகளே ஒருசந்தேகம்' என, வாத்தியார் 'உனக்குத்தான் என்றைக்கும் சந்தேகம். கேள்.' என, தென்னாலு 'சுவாமீ, அந்த ஊரில் யானைகளே அந்தப்பாடுபட்டால், மனிதர்கள் நடப்பதெப்படி?' என்றான்.

வாத்தியார்.—அந்த ஊரில் மனிதர்கள் நடப்பார்களோ? பல்லக்கு சவாரி செய்வார்கள். இந்த தரித்திரப்பட்டணங்களைப்போலவோ?'

தென்னாலு.—'சுவாமீ எல்லாரும் பல்லக்கேறினால் சுமக்குகிறவர்கள்யார்? சுமக்குகிறவர்கள் என்னமாய் நடப்பார்கள்?'

வாத்தியார்.—பல்லக்கு என்றால் பல்லக்கா? 'சாரட்டுகளில்' சவாரி செய்வார்கள்.

தென்னாலு.—அப்படியானால் குதிரைகள் வழுக்கி விழாவோ?

வாத்தியார்.—இப்படியெல்லாம் கேட்டால் சரிப்படுமோ? பாட்டில் மூன்று சங்கதிகள் சொல்லியிருக்கிறார், புகழேந்தியின் சாமர்த்தியமே சாமர்த்தியம். என்ன? அவ்வூரில் சந்தனம் ஏராளமாய்ப் பூசிக்கொள்கிறார்கள். அது தெருவெல்லாம் சேறுகிறது. மூன்றாவது அந்த ஊரில் யானைகள் உண்டு' என,

இன்னொருபையன் எழுந்து 'சுவாமீ, இன்னும் இரண்டு சங்கதிகள் விட்டுவிட்டீர்கள். அந்த ஊரிலே கூடஸ்திரீகள் உண்டு; இரண்டாவது அவர்கள் கூடஸ்நானம் செய்வது உண்டு' என, வாத்தியார் 'கலிகாலத்துப்பிள்ளைகள் மகா அதிகப்பிரசங்கிகள்' என்றார். தென்னாலுராமன். 'யார் சுவாமீ அதிகப்பிரசங்கி? பேச்சு மிஞ்சுகிறாற்போல இருக்கிறது!' எனவே, வாத்தியார் 'அப்பா, நான்தான் அதிகப்பிரசங்கி, நீங்கள் எல்லாம் பெரியவர்கள்' எனக்கோபித்துக்கொண்டு பின்னுள்ளபாட்டுகளைவாசித்து அதிவேகமாய் அர்த்தம் சொல்லிக்கொண்டுபோகவே, பையன்கள் இவர் பிரசங்கத்தை சற்றும் கவனியாமல் சிலர் வம்புபேசினார்கள், சிலர் அடுத்தமணிப்பாடத்தைப் படித்தார்கள், சிலர் தூங்கினார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் வாத்தியாருக்கும் தூக்கம் வந்துவிட்டது.

"நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியகல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக்கொடுபோந்து
தங்கோவின் முன் வைத்தார் தாழ்ந்து."

என்ற பாட்டை படிக்கத்தொடங்கி 'நாடி மடவன்னத்தை நல்லமயிற்' என வாசித்தார். 'குழாம்' என்றவார்த்தை தூக்கத்தில் போய்விட்டது. வாத்தியார் தலை இரண்டுதடவை ஆடிற்று. பிறகு அவர் திடுக்கிட்டு தன் சிவந்த கண்களை விழித்துக்கொண்டு 'ஓடிவளைகின்றதொப்பவே நீடியகல்' என்று வாசித்தபிறகு ஐந்து நிமிஷம் மௌனம். பிறகு சற்றுக் கண்விழித்துக்கொண்டு ஈன ஸ்வரத்துடன், தூங்கவில்லை போலும் ஏதோவொன்றை யோசித்தவர்போலும்பாவனைபண்ணிக்கொண்டு, 'அப்படியா! இப்பொழுது சரியா யிருக்கிறது' எனச் சொல்லிக்கொண்டே 'பைங் கூந்தல் வல்லியர்கள் பற்றி' என்றுபடித்தார். அப்புறம் பேச்சுமூச்சைக்காணோம். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சில பையன்கள் வாத்தியார் தூங்கிப்போய்விட்டார் என்றசெய்தியை மற்றவர்களுக்கும் பரவச்செய்யவே கிருஷ்ணசுவாமி என்ற ஒரு பையன் 'பேசாமல் இருங்கள். வேடிக்கையைப் பாருங்கள்.' என்றுசொல்லிவிட்டு, கொஞ்சம் சீமைச் சுண்ணாம்பைப் பொடிபண்ணி சந்தடிசெய்யாமல் தன்சிரிப்பை யடக்கிக்கொண்டு மேஜையிலுள்ள மை நிறைந்த ஒரு மைக் கூட்டிற்குள் போட்டுவிட்டான். அந்த மை சற்றுநேரத்திற்கெல்லாம் டபீர் என வெடித்துப் பொங்கி அம்மயப்பபிள்ளையின் கண் மூக்கு முகம் சட்டைகளிலெல்லாம் பாயவே, அவர் பாவம்! திடுக்கிட்டு விழித்து 'இது எந்தப்போக்கிரிப்பையன் பண்ணினவேலை' என்று எழுந்திருக்கப், பையன்களெல்லாம் கொல் என்று சிரித்தார்கள். தென்னாலுராமனோ வாத்தியார் நிலைமையைக் கண்டு பரிதபித்தவன் போல கிட்டச்சென்று 'அடடா, மூக்குமுகம் எல்லாம் மையாய்விட்டதே. அதாவது போகிறது; சட்டையெல்லாம் மையாய்விட்டதே ஸார். (Sir) இது எந்தப்பயல் பண்ணினவேலை. முட்டாள்பயல்கள், இருக்கிற ஒரு சட்டையிலும் மையைக் கொட்டிப்போட்டால் அப்புறம் ஸார் நாளைஎன்னபண்ணுவார் என்று அறியவேண்டாமா. நீங்கள் இங்கிருக்கிறபோதே யார்தான் இப்படிச் செய்யக்கூடும்? நீங்கள் இன்றைக்கு தூங்கக்கூடவில்லையே' என்று சமாதானம்பண்ண, வாத்தியார் 'எந்தப் பயல் செய்தது? மரியாதையாய் உண்மையைச் சொல்லிவிட்டும் மன்னித்துவிடுகிறேன். இல்லாவிடில் ஹெட்மாஸ்டரிடம் சொல்லி பேனாயடிக்கச்சொல்வேன்' என, முத்துஸ்வாமி என்ற பையன் 'நீங்கள் ஹெட்மாஸ்டரிடம் போய் சொல்லுங்கள் சுவாமீ. அதுதான் சரி. இல்லாவிடில் உண்மை வெளிப்படமாட்டாது' என்றான். ராமையா என்ற பயன் 'வாத்தியார் பள்ளிக்கூடத்தில் தூங்கினது உண்மையா?' என்றான். 'நான்ஹெட்மாஸ்டரிடம்போகிறேன்பார்' என்று வாத்தியார்புறப்படவே, கிருஷ்ணஸ்வாமி 'நாங்கள் பார்த்ததுபோதாது. எல்லாரும்பார்க்கவேண்டுமல்லவோ இந்த வேஷத்தை. போங்கள், ஸார்!' என்றான். இலட்சுமணன் 'அங்கேபோனால் வாத்தியாருக்குத்தான் அபராதம் விழும். மை கொட்டின போது நீர் எங்கே போயிருந்தீர்? என்று கேட்டால் தூங்கிப்போய்விட்டேன் என்று சொல்லுவாரோ. சொன்னால் அபராதம் நிச்சயம்.' என்றான். வாத்தியார் ஒன்றும் செய்யத்தோன்றாமல் திரும்பத் தன் இடம் வந்து 'நாளைமுதல் இப்படி செய்யுங்கள் சொல்லுகிறேன் வழி' என்ன, சுப்புக்குட்டி என்ற பையன் 'நாளையும்செய்தால் இன்றைக்குப் பண்ணினமாதிரி பண்ணிவிடுவீர்களோ!' என்றான்.— ஒரு பிராமணன் ஒருவர் வீட்டுக்குப்போய் எனக்கு சாதம் போடுகிறீர்களா அல்லது நேற்று அங்கே பண்ணினதுபோல்பண்ணிவிடட்டுமா? எனவீட்டுக்காரன்மனைவி பயந்து 'அப்படியெல்லாம் ஒன்றும் செய்துவிடாதேயும். நாங்கள் இருக்கிறோம் தெய்வமே என்று: சாதம்போடுகிறேன் சாப்பிட்டுப்போம்' என்று உள்ளே யழைத்துப்போய் சாதம்போட்டாள். வெளியில் வந்தபிறகு 'நேற்று என்ன பண்ணினீர் சொல்லும்' என்று கேட்க, அந்த பிராமணர் 'சொல்லிவிடட்டுமா?' என, அம்மாள் 'சாப்பிட்டாய்விட்டதல்லவோ, சும்மா சொல்லுங்கள்' என, பிராமணர் 'நான் சொல்லியேவிடுவேன்' என்று மறுபடியும் பயமுறுத்தினார். அம்மாள் 'சொல்லுங்கள்' என்று கேட்க, 'நேற்றைக்கா, பட்டினியாகப் படுத்துக்கொண்டுவிட்டேன்' என்றார்.—என்று ஒருகதையுண்டு. அதுபோல் வாத்தியார் கொஞ்சம் பயமுறுத்திப் பார்த்தார். பலிக்கவில்லை. ராமசுப்பன் என்ற பையன் 'இல்லை, இல்லை. நாளை இப்படி பண்ணினால் அழுதுவிடுவார்.' என, தென்னாலுராமன் 'சூ சூ சும்மாயிரடா, அவரை இப்பொழுதே அழுகவைத்து விடுவீர்கள் போலிருக்கிறதே. நாளை அழுகிறதாம்! நாளைமுதல் பள்ளிக்கூடத்தில் தூங்கினால்தானே! அவன் கிடக்கிறான் ஸார், நீங்கள் நாளைமுதல் தூங்காதேயுங்கள் ஸார்.' என்று சொல்லிக்கொண்டு அவர் மேல் படிந்திருக்கும் மையை துடைப்பவன்போல அதை அவர் சட்டை முழுவதும் தேய்த்து அவர் முகத்திலும் கோரமாகத்தடவவே, அவர், பாவம்! அல்லாபண்டிகைக்கு சிங்காரம் செய்துகொண்ட கோமாளிபோல் கண்டோர் நகைக்க நின்றார்.

இவர்பாடு இப்படியிருக்க, அந்த வகுப்புக்கு சமீபத்திலுள்ள சரீரப்பயிற்சி (Gymnastics) செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கொட்டகையில் தங்கள் சொந்தப்பேச்சேபெரிதாக தாழ்ந்த குரலுடன் அம்மயப்பபிள்ளையின் மாணாக்கரும் மெட்ரிகுலேஷன் வகுப்பினருமாகிய ஸ்ரீநிவாசன், சுப்பராயன் என்ற இரண்டு சிறுவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் ஸ்ரீநிவாஸன் என்ற பையனுக்கு பதினாலுவயதிருக்கலாம். அவன்தான் சிறுகுளம் முத்துஸ்வாமி அய்யரிடம் நிச்சயதார்த்தம் பண்ணி வந்த இராமசுவாமி சாஸ்திரிகளுடைய பேரன். அவன் தகப்பனார் நாராயண அய்யர் கலெக்டர் ஆபீசு சிரஸ்ததார். அவனுடைய பூங்கொடிபோல் மெல்லிய சரீரமும், உருக்கியோடவிட்ட தங்கம்போன்ற நிறமும், ரோஜாபுஷ்பம் மலர்ந்ததுபோன்றமுகமும், ஓயாது சலித்துக்கொண்டிருக்கும் கண்களும், நீண்டு கிளியின் மூக்குப்போல சிறிது வளைந்து முனையில் கூர்மையாயுள்ள மூக்கும், குதித்துக் குதித்து நடக்கும் நடையும், மழலைச்சொல் மாறாத வார்த்தையும், அவன் புத்தியும் உற்சாகமும் சாந்தமும் குணமும் அவனை அறிந்தவர் உள்ளத்தை அடிமைப்படுத்தும் தன்மையனவாயிருந்தன. அவனுடன் படிக்கும் கொட்டைமுத்து ராமையா என்ற பையன் அவனை 'லேடி' (ஏ பெண்ணே) என்று கூப்பிடுவான். நொண்டி சுப்பய்யா அவனை 'என் கண்மணியே' என்பான். பெருந்தீனிவைத்தி அவனை 'மாம்பழம், மாம்பழம்' என்று கூப்பிடுவான். தமிழில் கொஞ்சம் தேர்ச்சியடைந்த முத்துச்சாமி என்பவன் அவனைக் காணும்போதெல்லாம் 'அய்யோ இவன் வடிவென்பதோராழியா அழகுடையான்' என்றும்,

"காவியுங்குவளையுங் கடிகொள்காயாவுமொத்
தோவியஞ்சுவைகெடப் பொலிவதோ ருருவொடே
தேவருந்தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந்தென்னவந் தரசன்மாடணுகினான்."

என்றும், பாடத்தொடங்கிவிடுவான். தென்னாலுராமன் அவனைக் காணுந்தோறும் 'என் பொன்னம்மங்காள், என் தங்கமே' என அழைப்பதுமன்றி வாத்தியார் வரச் சற்றுத் தாமதப்பட்டால் ஸ்ரீநிவாசனைப்பார்த்து 'முங்கி முழுகுகிறபெண்ணே' என்றிப்படித் தாளம் போட்டுக்கொண்டு பாட ஆரம்பித்துவிடுவான். இங்கிலீஷ்வாத்தியார் நித்தியானந்தப்பிள்ளைக்கு அந்தப் பள்ளிக்கூடத்திலேயே அவன் ஒருவனைத்தான் தெரியும். 'ஹெட்மாஸ்டர்' திருமலாசாரியார் பாடம் நடத்தும்போது அவன் ஒருவனைத்தான் பார்த்து நடத்துவார். கடு கடு என்று கடுவன் பூனைக்கு நிகராய் கோபிப்பதையே தொழிலாய் உடைய சமஸ்கிருத வாத்தியார் அப்பாசாஸ்திரிகள் கூட இவன் தமிழ்ப் படிப்பவனாயிருந்தாலும் இவனைக்கண்டு ஒருநாளைக்கு ஒரு தடவையாவது பேசாமல் வீட்டுக்குப் போகமாட்டார். புருஷ லட்சணத்தில் தனக்கு மிஞ்சினவன் இல்லையென்று கர்வித்த சேஷாசலத்துக்குமட்டும் இவனிடத்து பொறாமையிருந்தாலும் 'சேஷநடையே நடை. அவனுடன் யாரோடுவார்கள்' என்றிப்படி அடிக்கடி ஸ்ரீநிவாசன் அவனைப்பார்த்துச்சொல்லுவதால் அவனும் இவன்மேல்வைத்த பொறாமையை இவனைக்கொண்டாடும் மற்றவர்கள்மேல் வெறுப்பாக மாற்றிக்கொள்

வான். இப்படி எல்லாருக்கும் சிநேகனுயிருந்த ஸ்ரீநிவாசனுக்கு முக்கிய சிநேகன் சுப்பராயன் என்ற பையன். அவன் மதுரா தாசில் குப்புசாமி அய்யருடைய பிள்ளை. அவனுக்கு வயது இருபதிருக்கும். மூன்றுவருஷ காலமாகத்தான் இருவருக்கும் பழக்கம். ஆனால் அவர்கள் ஒருவரை யொருவர் சந்தித்த முதல்நாளே நெடுநாள் பழகியவர்கள்போல அவர்கள் சிநேகரானார்கள். ஸ்ரீநிவாசன் படித்துக்கொண்டிருந்த வகுப்பில் புதிதாய் வந்து சேர்ந்த சுப்பராயன் அந்த வகுப்பில் அவன்தான் கணக்கு ஒன்று தவிர மற்றப்பாடங்களில் எல்லாம் முதல் பையனுயிருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டு அவன் சிநேகத்தை சம்பாதித்துக் கொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடன் பள்ளிக்கூடம் விட்டவுடன் அவனைத்தேடிக் கொண்டு புறப்பட்டான். அன்று 5 மணியடித்தவுடனேயே ஸ்ரீநிவாசன் அகத்திற்குப் புறப்பட்டு விட்டான். அவன் சில பையன்களுக்கு மத்தியில் போய்க்கொண்டிருந்தபோது வேட்டைநாய் ஒன்று அவர்களை நோக்கி ஓடிவர மற்றப்பையன்கள் எல்லாம்மூலைக்கொருவராய் ஓடிவிட்டார்கள். குழந்தை ஸ்ரீநிவாசன் மாத்திரம் வேகமாய் ஓடக்கூடவில்லை. அந்தக் கொடியநாய் அவனுக்கு வெகு சமீபத்தில் வந்துவிட்டது. அவன் அலறுகிறான். அப்பொழுது திடீரென்று அந்த நாய்தலையில் ஒரு பெரிய சிலேட்டும் அதன்பிறகு ஒரு கல்லும் வந்து விழுந்தது. சீனு திரும்பிப்பார்த்தான். தன் பள்ளிக்கூடத்திற்குப்புதிதாய் வந்து சேர்ந்த சுப்பராயன்தான் தன்னைத் தப்புவித்தது என்று காணுமுன் சுப்பராயன் அவனைத் தூக்கித் தோள்மேல் வைத்துக்கொண்டான். அந்த நாயோ கழுத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஒரே ஓட்டமாய் 'உயிர் தப்பியது தம்பிரான்புண்ணியம்' என்று ஓடிவிட்டது. ஸ்ரீநிவாசன் கீழேயிறங்கிக்கொண்டு சுப்பராயனுடைய கைகளால் தன்கண்ணைப் பொத்திக்கொண்டு கண்ணீர் பெருக்கினுன். சுப்பராயன் அவனை பயப்படாதே என்று தட்டிக் கொடுத்து அவன் புஸ்தகங்களையும் தான் வாங்கிக் கொண்டு நாய்மேல் எறிந்ததால் உடைந்துபோன தன் சிலேட்டையும் எடுத்துக்கொண்டு அவனையும் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் கூழ் மோர் காய்ச்சிக்கொடுத்து அவனுடைய அகத்துக்குக் கூட்டிக் கொண்டுவந்து விட்டுவிட்டு அவன் தாயார் பாட்டியார் முதலியவர்களுடைய ஆசீர்வாதங்களுடனும் அந்தக் குழந்தையின் வந்தனங்களுடனும் வீட்டிற்குச்சென்றான். அன்றுமுதல் அவ்விருவரும் அத்தியந்த சிநேகிதர். அவர்களுக்குள் ஒருவர்க்கொருவர் சொல்லாத ரஹஸியமே கிடையாது. அவர்கள் சேர்ந்துதான் படிப்பு, சேர்ந்துதான் படுக்கை. சுப்பராய னகத்தில் மாடியில் ஒரு அறை இவர்களுடைய ஆதீனம். சிலநாள் ஸ்ரீநிவாசன் தன் வீட்டிற்கு வராமலேகூட இருந்துவிடுவான். அவனை ஒருவரும் பரிகாசம்கூட செய்யக்கூடாது: சுப்பராயன் சண்டைக்கு வந்துவிடுவான். அவன் அழகுக்கு எங்கே திருஷ்டி வந்து விடப்போகிறதோ என்ற பயத்தால் அவன் அழகைக்கண்டு யாராவது புகழ்வதைக் கண்டால் சுப்பராயன் 'ஆ வெகு அழகு! ஒடிந்து விழுகிறாற்போல் இருக்கிறான். ஆயிரக்கலரோய். சிவப்புத் தோல்தான் சமயநல்லூர் புளிப்பு மாம்பழம்போல்' என்று சொல்வான். கலியாணப்பிரஸ்தாபம் வந்தது முதல் அன்றன்று நடக்கிற சமாசாரத்தை ஸ்ரீநிவாசன் சுப்பராயனுக்குச்சொல்லிவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பான். அம்மயப்பபிள்ளைக்கு அல்லாபண்டிகை வேஷம் போட்ட அன்று இவர்கள் இருவரும் தனிமையாய்ப் பேசிக்கொண்டிருந்தது யாதெனில்:

ஸ்ரீநிவாசன்.—இப்படித்தானே உட்காரலாம்; இந்த ஒரு மணியும் விருதா காலட்சேபம். இவ்வளவு பெரியபள்ளிக்கூடத்திற்கு ஒரு நல்ல தமிழ்வாத்தியார் அகப்படவில்லையா?

சுப்பராயன்.—ராமசுவாமி அவர்கள் பள்ளிக்கூடத்திலிருக்கிறாரே ராகவய்யர் அவர் நல்ல வித்வானும்.

ஸ்ரீநிவாசன்.—ஆமாம், எல்லாம் ஒரு கண்க்குத்தான். இவருக்காவது பாட்டுத் தெரியும்; அவருக்கு அதுகூடத்தெரியாது. அதுபோகட்டும். இன்றைக்காலமே சங்கதி கேட்டாயா? நான் என்னைத் தேய்த்துக்கொள்ள வேண்டு மென்று எட்டுமணிக்கே போனேனல்லவோ? அப்பொழுது அகத்திலே ஏதோ புதுக்குரல் கேட்டது; யார் என்று பார்த்தேன். நமது சங்கரனும் அவன் அம்மாளும் வந்திருந்தார்கள்.

சுப்பராயன்.—சங்கரனு?

ஸ்ரீநிவாசன்.—ஆமடா! தெரியாதா, மேலைக்கோபுரத்திற் கடுத்தாற்போல இருக்கிறது அவன் அகம்.

சுப்பராயன்.—ஓஹோ! நம்முடைய 'ஷோக்' சங்கரனு, பலே! பாட்டுப்பாடுவானே அவன்தானே?

ஸ்ரீநிவாசன்.—'ஷோக்' சங்கரன்தான். அப்படிச் சொன்னால்தானே உனக்குத்தெரியும். அவனும் அவனம்மாளும் சிறு குளத்துக்குப் போயிருந்தார்களாம்.

சுப்பராயன்.—உனதுமாமனாருக்கோ?

ஸ்ரீநிவாசன்.—அதற்குள் மாமனார்ஆக்கிவிட்டாயா? கைக்கெட்டினது வாய்க்கெட்டவேணுமே? ப



க்கியையும் கேள் அப்பொழுது அங்கே ஒரு அகத்தில் 'தடிவியம்' போட்டார்களாம். அங்கே ஒரு சிறுபெண் தம்பூர்வைத்துக்கொண்டு பாட்டுப்பாடினுளாம்; கேள். கம்பராமாயணம் என்ன, தாயுமானசுவாமிபாடல் என்ன, தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, கப்பற்பாட்டு, ஜாவளி இப்படி தினுசுக்கு ஐந்தாறு 'ஜமாய்த்து' விட்டாளாம். ஏகக்கூட்டமாம். புருஷர்களும் பெண்டுகளும், அதுவும் கம்பராமாயணம் பாடுகிறபோது—கங்கைப்படலத்து முதற்பாட்டுகள் போல இருக்கிறது—அது பாடுகிறபோது குதிக்காதவர்கள் பாவம்; தாயுமானவர்பாடல் பாடுகிறபோதுஉருகியழுகாதவர்கள் பாவமாம். சொல்லுகிறான் சொல்லுகிறான் அதிக அற்புதமாயிருக்கிறது. சொல்லுகிறதிலேயே, அவனுக்கு ஆனந்தம் பொங்குகிறது. அந்தப்பெண்தான் என்னகமுடையாள்.

சுப்.—ஆ அப்படியா! அவ்வளவு பாட்டா? உன்னகமுடையாளா, பத்துவயதுக் குட்டியல்லவோ?

ஸ்ரீநிவா.—பத்துவயதுக் குட்டியானால்? இன்னும் கேள். தாயார்பிள்ளை இரண்டுபேரும் சொல்லுகிறார்கள். அவள் குணத்தை ஊர்முழுவதும் கொண்டாடுகிறார்களாம். வீண்வம்பு, இரைந்த சொல் கிடையாதாம்.

சுப்.—நீதான் அதிர்ஷ்டசாலிஅப்பா.

ஸ்ரீநிவா.—முத்துஸ்வாமி அய்யர் என்பவர் கொழுத்த பணக்காரராம். அவர்மனைவி நிரம்பப் படித்தவளாம். மகாலெட்சுமி என்றால் அவளுக்கே தகுமாம். இந்தப்பெண்ணுக்குஅவளும் அவருமாய் வெகு அருமையாய்ப்பாட்டும் படிப்பும் சொல்லிக்கொடுத்திருக்கிறார்களாம். கம்பராமாயணம் தலைகீழாகத் தெரியுமாம்.

சுப்.—கம்பராமாயணமா! அவள் சிறுபெண்; எனக்கு எருமைக்கிடாபோல் இருபதுவயதாய் விட்டது. நான் இன்னும் அதில்ஒருபாட்டுக்கூட அறியேன் நீ சொன்னதைத்தவிர.

ஸ்ரீநிவா.—ஆனால் பெண் அவ்வளவு சிவப்பில்லையாம்.

சுப்.—ஆமாம். அதற்கென்ன கறுப்பானால் என்ன. அன்றைக்கு வாத்தியார் சொன்னாரே 'குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்'—அப்புறம் என்ன ? அதற்குள் மறந்துபோய்விட்டது.

ஸ்ரீநிவா.—கறுப்புஎன்றால், அப்படி அதிக கறுப்பு என்றெண்ணிவிட்டாயா? சாதாரணஸ்திரீகளைப்போல இருப்பளாம். ஆனால் அதிகலட்சணமாம். அவள் நடையும் பார்வையும் சாயலும் இப்பொழுதே வெகு அழகாயிருக்கிறதாம்.

சுப்.—நிரம்ப சரியாகப் போய்விட்டது.

ஸ்ரீநிவா.—அவளுக்கு பந்துக்கள் சிலர் பெரியபெரிய உத்தியோகங்களி லிருக்கிறார்களாம். முத்துஸ்வாமி அய்யருடையபெரியதகப்பனார் பிள்ளையோ என்னவோ மஞ்சக்குப்பத்தில் டிப்டி கலெக்டர் உத்தியோகம் பண்ணுகிறாராம்.

சுப்.—மஞ்சக்குப்பமா! நாராயணசாமி அய்யரோ? அடடா அப்படிச்சொல்லு. சரிதான். உன் அகமுடையாளை நான் பார்த்திருக்கிறேன். என்னமாக என்று கேள். போனவருஷம் என்தகப்பனார் அங்கே தாசிலாக இருந்தாரல்லவோ? அப்பொழுது நாராயணசாமி அய்யருடையவீட்டிலே அவர்பெண்ணுக்குக் கலியாணம். அங்கே ஒருசிறுபெண் தம்பூர்வைத்துப்பாடினுள். எல்லாரையும் ஆனந்தபரவசமாக்கிவிட்டாள். அடடா பேஷ்! பேஷ்! அப்படியா ஸ்ரீநிவாசா—உன்னைப்போல் பாக்கியசாலிகிடையாது. உனக்கேற்றவள் அந்தப்பெண்ணே; அவளுக் கேற்றவள் நீயே' என்றுசொல்லிக்கொண்டு சந்தோஷத்தால் அவன்முதுகில் தட்டினுன்.

அதற்குள்அம்மயப்பபிள்ளை அவர்களுடைய திருக்கூத்து நடந்து எல்லாரும்.. இடிஇடிஎன்று சிரித்த இரைச்சல்கேட்டு இருவரும் ஓடிவர அம்மயப்பபிள்ளை யவர்கள் செம்புள்ளி கரும்புள்ளி குத்திக்கொண்டு நின்றதைக் கண்டார்கள். உடனே ஸ்ரீனிவாசன் அவர்நிலைமையைக்கண்டு பரிதபித்து தன்சட்டையுள் ஒன்றைக்கழற்றி அவருக்குக் கொடுத்து தன் கைக்குட்டையால் அவர்முகத்தைத் துடைத்தான். வாத்தியார் இவன்செய்த உபகாரத்துக்காக கண்களில் நீர் ததும்ப இவனுக்கு வந்தனமளித்து 'நீ சீக்கிரம் நல்லபெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு நெடுங்காலம் சுகமாகவாழ்ந்திருப்பாய்' என்று மனப்பூர்வமாய் ஆசீர்வதிக்க, அருகிலிருந்த சுப்பராயன் கலியாணத்திற்கு முகூர்த்தம்வைத்திருக்கிறதென்றுசொன்னுன். வாத்தியார் ஸ்ரீநிவாசன் கையைப் பிடித்துக்கொண்டு எனக்குநீ இந்தசங்கதியைச் சொல்லவேண்டாமா? எங்கே, எப்பொழுது கல்யாணம்? என்றிப்படி விசாரித்ததில் சிறுகுளம்முத்துஸ்வாமி அய்யர் எனவும் அவருக்குவந்த சந்தோஷத்திற்களவில்லை. 'என்தாதா முத்துஸ்வாமிஅய்யரா! அடடா அவர் முதல்வள்ளல் அன்றோ. நான் அவருடைய அடிமையல்லவோ. அந்தமகான்பெண்ணு? உனக்கா நிச்சயமாயிருக்கிறது. உனக்குக் கடவுள்கிருபை பூர்த்தியா யிருக்கிறது. எனக்கும் கடிதம்வரும்.

நானும் வருகிறேன் உன் திருக்கல்யாணத்திற்கு!' என்றார். அம்மயப்பபிள்ளை மொத்தத்திற்குவெகு நல்லவர். அவர் குணாகுணங்கள் பின்னால் வெளிப்படும். அவர் இந்தசரித்திரத்தில் சம்பந்தப்பட்டவர். ஸ்ரீநிவாசனிடம் அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே மணியடித்துவிட்டது. ஸ்ரீநிவாசன் 'மறுகிளாசு'க்குப் போய்விட்டான்.

மறுநாளிரவு ஸ்ரீநிவாசன் சுப்பராயனகத்துக்குப்போனபொழுது விசேஷசங்கதி ஒன்று அவனுக்குச் சொல்ல ஆவல்கொண்டவனா யிருந்தான். ஆனால் சுப்பராயன் அவன்தகப்பனார் முதலானவர்களுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். ஸ்ரீநிவாசன் அவன்வரவை எதிர்பார்த்துக்கொண்டு மாடியில் உலாத்திக்கொண்டிருந்தான். கல்யாணஞாபகம்தவிற அவனுக்கு வேறுஞாபகமே கிடையாது. உலாத்திக்கொண்டே மெதுவாய்பாடி சற்றுநேரம் பாடிவிட்டு அடியில்வருகிறபடி தனக்குள்ளேயே பேசிக்கொண்டான்:—'என்மேலென்ன அவளுக்கு அவ்வளவு பிரியம்? அழகாயிருக்கிறேன் என்றோ? அதற்கு என்னைப்பார்த்ததுகூட இல்லையே. நன்றாய்வாசிக்கிறேனென்றோ. நமக்கென்னடாகுறைவு. அப்பா உத்தியோகம்பண்ணுகிறார். இரண்டுதாத்தாவும் இருக்கிறார்கள். என்மேல் காற்றடிக்க சஹிக்கார்கள் இதைக்காட்டிலும். பாக்கியம் வேறென்ன இருக்கிறது. (கண்களில் நீர்ததும்ப) அவர்கள் அன்பே நமக்குப் பெருஞ்செல்வம். படிப்பு, அழகு, செல்வம், எல்லாம் இருக்கிறது; நமக்கு என்னகுறைவு. எல்லாவகுப்பிலும் நான்தானே முதல்.—சரிவந்துவிட்டதாகர்வம் நமக்கு சமானம் யாரிருக்கிறார்கள் என்று. கழுதைக்கானதுபோல் வயது 14 ஆய்விட்டது; இன்னும் மெட்ரிகுலேஷன் தேறவில்லை. அதற்குள் தலைகால் தெரியவில்லை' என்றிப்படித் தன்னையே புகழ்ந்துகொண்டும்கண்டித்துக்கொண்டும், சிறிதுபேசிவிட்டுப் பிறகு 'கலியாணத்திற்கு சமானமா? வேஷ்டியை பஞ்சகச்சம்வைத்துக் கட்டிக்கொண்டு சந்தனம் பூசிக்கொண்டு வெற்றிலை போட்டுக்கொண்டு 'ஜம்' என்று,—சுவாமீ! இந்த கலியாணம்மட்டும் குறைவில்லாமல் நடத்திக் கொடுக்கவேண்டும்; மீனாட்சி! ஐந்துதேங்காய் வாங்கிஉடைக்கிறேன். இன்னும் பத்துநாளிருக்கிறது. பத்துநாளாவது ஒன்பதுநாள்தான். இன்றைப்போது தான் கழிந்துபோய்விட்டதே' என்று சொல்லிக்கொண்டே உல்லாசமாய் [சா

"நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு."

என்றுபாடிக்கொண்டு உலாத்திக்கொண்டிருந்தான். அப்பொழுது வசந்தகாலம். மிருதுவான தென்றல் வீசிற்று. இளம்பிறைச்சந்திரன் அழகான வெள்ளிக்கோடுபோல் உயரப் பிரகாசித்தது. அதினின்றும் பொழியப்பட்ட அமிர்த வெள்ளம்போன்ற நிலவு குழந்தை ஸ்ரீநிவாசனுக்கு அடங்காத ஆநந்தத்தை உண்டுபண்ணிற்று. 'ஆஹா' என்று தலையசைத்தான். 'என்ன சுகமாயிருக்கிறது' என்றான். அவன் நாவில் இன்னமிர்தம் ஊறிற்று. அவ்வளவு ஆனந்தமாய் 'இனிது, இனிது ஏகாந்தம் இனிது' என்றபடி ஏகாந்தத்தின் இனிமையை அனுபவித்துக் கொண்டிருக்கிறபோதே சுப்பராயன்வந்தான். அவன்வந்ததைக்கூட இவன் பார்க்கவில்லை. சுப்பராயன் 'ஏன்? விளக்கேற்றவில்லையோ?' என, ஸ்ரீநிவாசன் 'ஏற்றலாம் வா, சற்று இங்கே உட்காரு' என்று அவன்மடியில்தலைவைத்துக்கொண்டு மழலைதிருந்தாத தன்மொழியில் 'இங்கேபார் இந்தஇளநிலா எவ்வளவு சுகமாயிருக்கிறது. இந்ததென்றலும் இந்தமரங்களும் இந்தசோலைமலர்களும் ஆஹா, பேஷ்! என்ன ராத்திரி! இந்தவேளைக்கு ஓடிக்குதிக்கவேணும். கழுதைகளை இதோ தெருவிலோட்டிக்கொண் டோடுகிறார்களே இவர்கள்கூட இந்தநிலவாகிய அருமைச்செல்வத்தை அனுப்பிவிக்கிறார்கள். ஆடிப்பாடிக் கூத்தாடவேணும்போல இருக்கிறது. ஆயிரம்மாம்பழம் தின்பதில்கூட இந்தசுகம் கிடையாது. பேஷ்! ஆஹா! அதோ தெருவிலோடுகிற குழந்தைக்குக்கூட என்னசந்தோஷம்! அம்மாள் கூப்பிடுகிறாள் வரமாட்டேன் என்று ஓடுகிறது; இந்த நிலவுபோதும் அதற்கு; தாயார் கூடவேண்டாம். அதோ! பார், பட்சிகள் கத்துகிறது. இந்த வேளைக்குக் காக்கை கத்தினால் கூட பேஷாயிருக்கிறது. பைத்தியகாரக்காக்கைகளா! சண்டைமட்டும் செய்யாதேயுங்கள். வேறு என்னசெய்தாலும் இந்த நிலவிற்கு இன்பமாயிருக்கும். அடடா அந்தத் தெப்பக்குளத்தைப்பார். பாசிபடர்ந்த அந்த பைத்தியக்காரத் தெப்பக்குளத்துக்குக்கூட என்னமகிமை வந்திருக்கிறது பார். சந்திரன் அதிலே தவழ்கிறது, கொஞ்சுகிறது, விளையாடுகிறது; இந்த ராத்திரிக்குக் குதிக்கவேண்டுமென்கிறேன். நீ ஆடு நான் பாடுகிறேன்; இல்லாவிட்டால் நான் ஆடுகிறேன், நீ பாடு. "இரவின் ஜோதியே, இந்துவின் ஒளியே"—பாடு' என்று இப்படி ஸ்ரீநிவாசன் ஆனந்தத்தாண்டவம் செய்தான். சுப்பராயன் 'நிலவு நன்றாயிருக்கிற'தென்று சொல்லிவிட்டு 'உன் கலியாணத்தின் போதும் நல்ல நிலா, கிராமபிரதக்ஷணத்தன்றும் விடியவிடிய நிலவாயிருக்கும்; நீ பல்லக்கின்மேல் உல்லாசமாய் ஏறிக்கொண்டு போகும்போது என் நினைவுகூட உனக்கிராது.'



என்றுசொல்ல, சீனிவாஸன் 'உன்னினைவில்லாமலா? உன்னைவிட்டு எனக்குச் சந்தோஷமுமா? உன்னைவிட எனக்கு இவ்வுலகத்தில் மனதொத்த சிநேகிதர் யார்?' என்று கண்ணில் நீர்ததும்ப மறுமொழி சொன்னான். அதற்குள் சுப்பராயன் 'நான் பரிகாசமாய்ச் சொன்னே'னென்று சொல்ல ஸ்ரீநிவாஸன் 'இன்னொருசங்கதி கேட்டாயா? சிறுகுளத்துக்கு நெல்லிக்குப்பத்துக் காமாக்ஷிஅம்மாள் போயிருந்தாளாம். எனக்கு நிச்சயம்பண்ணியிருக்கிற பெண்ணை அவள் சிற்றம்மை தன் தமயன்பிள்ளைக்குக் கொடுக்கவேண்டுமென்று கட்டாயம்பண்ணினார்களாம். அந்தப் பெண் என்னைத்தவிர வேறொருவரையும் கலியாணம் செய்துகொள்ளமாட்டேன் என்று சொல்லுகிறதாம்.' என, சுப்பராயன் 'இப்பொழுது முதல் என்ன அறிவு! என்ன அன்பு!' என்றுசொல்ல, ஸ்ரீநிவாஸன் சந்தோஷத்துடன் 'இந்தப் பெண் எனக்குக்கிடைக்குமானால் நான் அதிர்ஷ்டசாலிதான்' என்றான்.

ஸ்ரீநிவாஸன் எவ்வளவு புத்திசாலியாக இருந்தாலும் சிறு குழந்தையானதினால் உலகத்தை அறியான். பெண்டாட்டியென்றால் பாக்குக்கொடுத்த பாக்கியவதி, புஷ்பம்கொடுத்த புண்ணியவதி, சந்தனம்கொடுத்த சரஸ்வதி என்ற இவ்வித எண்ணந்தவிர வேறொன்றும் அறிய அவனுக்கு வயதுபோதாது. ஆயினும், "காதலிருவர் கருத்தொத்து ஆதரவுபட்டதே இன்பம்" என்ற சிலஉண்மைகளை அவன் புஸ்தகங்கள்மூலமாய் அறிந்திருந்தான். பாக்கியிருந்தபத்துநாளும் அவனுக்கு பத்துயுகமாகவே இருந்தன. பகல் வந்துவிட்டால் 'பொல்லாப்பகலே, போகாப்பொழுதே' என்று நிந்தித்துக்கொண்டு எப்பொழுது இரவுவருமென்று எதிர்பார்ப்பான். இரவுவந்துவிட்டால் 'செல்லா இரவே, சிறுகா இருளே,' என்று நிந்தித்துக்கொண்டு எப்பொழுது விடியுமென்று ஏக்கமுறுவான். எந்தப் பாடமானாலும் சரி, எந்தக் கணக்கானாலும் சரி, எல்லாம் கலியாணத்துக்குப் பிறகு பார்த்துக்கொள்ளலாமென்று போட்டுவிட்டான். இவனுக்கும் சுப்பராயனுக்கும் ரிப்பன்பாக்கெட் பஞ்சாங்கத்தை வைத்துக்கொண்டு பொருத்தங்கள்பார்ப்பதும் (ஜோதிஷரிடம் கேட்கவெட்கம்) அதிர்ஷ்டசக்கரங்களைச் சோதிப்பதுமே தொழிலாக இருந்தது. இப்படியாக நாள்களும்கழிய முகூர்த்தத்துக்கு இரண்டுநாளைக்குமுன் சிறுகுளம் போவதற்காக சுமார் பதினைந்துவண்டிகள் ஸ்ரீநிவாசன் வீட்டுவாசலில் வந்துநின்றன.

(இன்னும் வரும்.)

பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர். பி. ஏ.

## எஃகு.

எஃகு இக்காலத்தில் எவ்வளவோ உபயோகமான வஸ்துக்கள் கருவிகள் எல்லாம் செய்ய உபயோகப்படுகின்றது. நாம் இக்காலத்தில் தரிக்கும் கைக்கடியாரங்களிலுள்ள மயிரளவான மெல்லிய கம்பிகள் சக்கரங்கள் முதலாக நாம்நித்தியப்படி உபயோகிப்பனவும் அனேக விஷயங்களுக்கு இன்றியமையாதனவுமாகிய கத்திகள், அரங்கள், ரம்பங்கள், வண்டி வில்கள், ஆலைகள், யந்திரங்கள், எழுதும்பேனாக்கள், ஊசிகள் முதலான பெரிதும் சிறிதுமான சாமான்கள் சொல்லிமுடியாதன இந்த எஃகு என்னும் உலோகத்தாலே செய்யப்படுகின்றன. இந்த எஃகின் உபயோகமில்லாவிட்டால் இக்காலத்து நாகரீகமெல்லாம் நிலைதடுமாறி அடியற்று விழுந்துபோம் என்பது திண்ணம். இவ்வளவு உபயோசமானதும் இக்கால நாகரீகவிர்த்திக்கு இன்றியமையாததுமான இந்த எஃகு என்னமாகச் செய்யப்படுகிறதென்று இதை வாசிக்கும் அனேகருக்குத் தெரியாதென்று எண்ணுகிறேன். இது தெரிந்திருக்கவேண்டியது முக்கியமாதலால் இந்த எஃகுசெய்யப்படும் வகையையும் இதைப் பல கருவிகளுக்கு உபயோகமாகும்படி பலவிதமாகப் பதப்படுத்தும் முறையையும் பற்றி இங்கே ஒருவாறு விளங்கச்சொல்லுகிறேன். எஃகைப்பற்றி நான் கீழே சொல்லப்போகிற விஷயங்கள் தெரிந்திருப்பது பின்னால் பலகருவிகள் செய்யும் வகையைப்பற்றிச் சொல்லப்போவதை உணர்ந்துகொள்ளச் சாதகமாயிருக்குமாதலால் பின் வருவதை யாவரும் கவனமாய் வாசித்து மனதில் வைக்கக் கோரப்படுகிறார்கள்.

எஃகு இரும்பிலிருந்து செய்யப்படுகிறதென்பது எல்லாருக்கும் தெரிந்திருக்குமே. இரும்பை எஃகாக மாற்றுவது எப்படி யென்றுதான் அனேகருக்குத் தெரியாது. எஃகு செய்வதற்காக இங்கிலாந்தில் உபயோகிக்கும் இரும்பு ஸ்வீடன், உருஷியா தேசங்களிலிருக்கும் இரும்புக்கனிகளிலிருந்து வெட்டியெடுத்துத் தயார் செய்து வருகின்றது. மேற்கண்ட தேசங்களிலிருந்துவரும் இரும்புதான் தற்காலம் நல்லமாதிரியானதும் முதல்தரமானதுமா யிருக்கின்றது. இத்தேசங்களி லிருந்துவரும் முதல்தரமான இரும்பின் பாளங்களை சுமார் 6-அடி நீளமுள்ளவைகளாக எடுத்து ஒரு பெரிய இரும்புப் பெட்டியில் வைக்கிறார்கள். அவ்விரும்புப்பெட்டியின் அடியில் நிலக்கரிப்பொடி பரப்பியிருக்கும். அதன்மேல் ஒரு வரிசை இரும்புப்பாளங்களைப்பரப்பி, அவ்விரும்புப்பாளவரிசையின்மேல் மறுபடி நிலக்கரிப்பொடியைக் கொட்டிப் பரப்புவார்கள். அதன்மேல் இன்னொரு

வரிசை இரும்புப்பாளங்களை வைத்து அவ்விரும்புப் பாளங்களின்மேல் மறுபடியும் நிலக்கரிப்பொடியைக் கொட்டிப் பரப்புவார்கள். இப்படி அப்பெட்டி நிறைகிறவரையில் இடைக்கிடையே நிலக்கரிப் பொடியைக் கொட்டிப் பரப்பி இரும்புப் பாளங்களை படை படையாக அடுக்கிக்கொண்டு போவார்கள். பெட்டி நிறைந்ததும் அதை நன்றாக இறுக மூடிவிட்டு அவ்வளவையும் அப்படியே தீயிட்டுக்காய்ச்சுவார்கள். தீச்சூடுபட்டு இரும்புப்பெட்டி பாளங்களெல்லாம் சிவக்கக்காய்ந்து அப்புறம் வெளுப்பு நிறம் தோன்றுகிறவரையில் காய்ச்சி அந்த வெண்ணிறம் மாறாதபடி அப்படியே நாலைந்து நாளைக்குச் சூடேற்றி புடம்போட்டு வைத்திருப்பார்கள். அப்புறம் அவைகளை யப்படியே ஆறவிடுவார்கள். ஆறிவிட்டால் அவ்விரும்புப்பெட்டிக்குள் வைக்கப்பட்ட இரும்புப்பாளங்களெல்லாம் எஃகாக மாறி யிருக்கக் காணப்படும். இந்த எஃகு பாளங்கள் இப்பொழுது சொரசொரப்பாய் மேலெல்லாம் கொப்புளம் கண்டாற்போலிருக்கும். இதை யெடுத்து முண்டுமுடிச்சுகளையெல்லாம் பேர்த்தெறிந்துவிட்டு பாளங்களை ஒன்றின்மே லொன்று பொருந்த வைத்து பழுக்கக் காய்ச்சி பெரிய சம்மட்டிகளால் அடித்து ஒன்றுபடச்செய்தபின் யந்திரங்களின் உதவியால் நேர்த்தியான எஃகு கம்பிகளாகவோ தகடுகளாகவோ நீட்டி யுருவாக்கப்படும். இரும்புக்கும் எஃகுக்கு முள்ள வித்தியாசமென்னவென்றால், எஃகில் அதன் அணுக்கள் இரும்பைவிட அதிக நெருக்கமாய்ப்பொருந்தி இரும்பைவிட அது மிகக்கடினமா யிருப்பதோடு அதற்கே விசேஷமான "பதம்" என்கிற உபயோகமான குணமுமுண்டு. அந்த குணத்தினால் சிவக்கக்காய்ச்சின எஃகை அப்படியே திடீரென்று தண்ணீரில் போட்டு குளிரவைத்தால் அது மிகவும் கடினமானதாக ஆய்விடும் சக்தி அதற்கு உண்டு.

இரும்பைப்போல் மிருதுவான எஃகுபாளம் ஒன்றை சிவக்கக்காய்ச்சி அப்படியே திடீரென்று தண்ணீரில் போட்டால் அது மற்ற எல்லா உலோக வடிவையும் விடக் கடினமானதாக ஆய்விடும். அதனால் கண்ணாடியைக் கீறினால் அதில் கோடு கிழிக்கத்தக்க அவ்வளவு கடினமுள்ளதாயிருக்கும். அந்தஸ்திதியில் அது *சக்கிமுக்கிக்கல்லைப்போல் எளிதில் உடையத்தக்கதாகவுமிருக்கும். இந்தப்பாளத்தை மெதுவாய்க்காய்ச்சினால் அதன் மகா கடினகுணம் குறைந்து போகிறது. பளபளப்பும் கனமும் பொருந்திய எஃகு துண்டு ஒன்றை உலை நடுவில் வைத்து சுத்தமான தீயில் காய்ச்சினால் அதன் மேல்புறம் வைக்கோல் நிறமாக மாறும். இப்பொழுது அது இன்னம்கடினமாகவேயிருக்கும். (ஆனால் முன்போல் அவ்வளவு கடினமாயிராது.) இந்த ஸ்திதியில் அது க்ஷௌரக்கத்தி, வைத்தியர்கள் சத்திரம் முதலான சிகிச்சைகள் செய்ய உபயோகிக்கும் ஆயுதவகைகள் இவை செய்யத்தகுதியானதாக உபயோகிக்கப் படுகின்றது. இன்னும் இரண்டொரு நிமிஷம் அதைத்தீயில் பிடித்திருந்தால் அது பிரகாசமான பொன்நிறமுடையதாகத் தோன்றும். இந்தஸ்திதியில் பேனாக்கத்திகள் முதலானவை செய்யத் தகுந்ததாக உபயோகிக்கப்படுகின்றது. இன்னும் கொஞ்சகாலம் தீயிற் பிடித்திருந்தால் அது பிரகாசமான நீலநிறமுள்ளதாக ஆகும். இந்த ஸ்திதியில்அது கடிகாரவில்லுகள் (Watch Springs), பட்டாகத்திகள் முதலியவைபோல் அதிகமான கடினம் வேண்டியிராமல் மிகுந்த நெகிழ்ச்சி வேண்டியிருக்கும் ஆயுதங்கள் செய்ய உபயோகப் படுகின்றது. இன்னும் அதிகமாய்க்காய்ச்சினால் ஒருவிதமான பழுப்பு நிறம் தோன்றும். இந்த ஸ்திதியில் அது ஒருவாறு மிருதுவாயிருக்கும். ஆனால் இரும்பைவிட எவ்வளவோ கடினமானதாயிருக்கும். நெகிழ்ச்சியும் இருக்கும். இந்தப் பதத்திலுள்ள எஃகினால் அரம்பங்கள், வண்டிவில்கள் முதலான வஸ்துக்கள் செய்யப்படுகின்றன. உலையில் வைத்த எஃகு பாளத்தை இன்னுமப்படியே வைத்திருந்து சிவப்புநிற முண்டாகக்காய்ச்சினால் அது முற்றும் மிருதுவாகிவிடும். அதை அப்படியே மெல்ல ஆறவிட்டால் அந்த மிருதுத்தன்மை அப்படியேயிருக்கும். சிவக்கக் காய்ந்தபின் அதை திடீரென்று குளிரவைத்தால் (உதாரணமாக திடீரென்று தண்ணீரில் போட்டால்) அதுமறுபடியும் முன்போலக் கடின பதமுடையதாய் கண்ணாடியையும் கீறத்தக்கதாய்விடும்.

எஃகும் இரும்பைப்போலவே உருக்கி உபயோகிக்கத்தக்கதாகும். உருக்கு எஃகு பலவித சாமான்கள் செய்ய மிகவும் அதிகமாய் உபயோகிக்கப்பட்டுவருகிறது. உருக்கு எஃகு தயார்செய்வது எப்படியென்றால்: இரும்புப்பெட்டியில் வைத்துக்காய்ச்சி எஃகாக மாற்றப்பட்டபின் மேலே சொரசொரப்பாயும் முண்டு முடிச்சாயுமிருக்கக் காணப்பட்ட எஃகு பாளங்களை ஒரு பெரிய மட் குகையிலிட்டு உருக்கி அச்சில் வார்ப்பார்கள். இதற்கு பாளக்கட்டி யென்று பெயர். இந்தப்பாளக்கட்டியை அப்புறம் ஒன்றோடொன்று சேரவைத்து இசைக்கவோ, அல்லது தகடுகளாக அடித்து நீட்டவோ வேண்டியபடி செய்துகொள்ளலாம். எஃகை மயிரிழை நேர்த்தியான மிக மெல்லிய கம்பியாக இழுக்கலாம். அல்லது கைக்கடிகாரங்களின் உறுப்புகள் போன்ற மிகவும் நுட்பமான உறுப்படிகளாகச் செய்யலாம். அது மகா நேர்த்தியும் பிரகாசமுமான மினுக்குள்ள தாகவும் இரும்பைப்போல் எளிதில் துருப்பிடிக்காததும், கறைப்படாததுமாகவு மிருக்கிறது.

C. V. S

* Fint.



## குருவிகளுடைய வழக்கம்.

தாழ்ந்த உயிர்களுக்குக்கூட அறிவு, விரிவாயுண்டென விளக்க வித்வான் ரோமன்ஸ் (G. J. Romanes) துரை ஒரு * நூல் எழுதியிருக்கிறார். அச்சுவடியில் குருவிகளைப்பற்றிக் கண்டசங்கதிகளை ஒருவாறு தொகுத்து கீழே எழுதலானேன்.

தாழ்ந்தஉயிர்களுக்குப் புத்தியில்லையென்று ஐரோப்பியர்சொல்வர். இந்தியாவில் வாழும் நம்மவர் அபிப்பிராயம் அப்படி அல்ல. மனிதப்பிறப்பில் சேர்ந்த நமக்கு உள்ள புத்தியும் யுத்தியும் நேர் ஒழுக்கமும் மற்ற உயிர்களிடத்தில் இல்லாவிடினும் தாழ்ந்த உயிர்களுடைய மனப்போக்கும் புத்திக் கிளர்ச்சியும் வேறுவழியாயிருக்கலாம், அது நமக்கு விளங்காமலிருக்கலாம், தாழ்ந்த உயிர்கள் வெறும் ஜடம் அல்லவென இந்தியாதேசத்து †நூல்வலர் சொல்வர். ஐரோப்பியருடைய அபிப்பிராயம் தப்பாய் இருக்கலாமோஎனக் காட்டத்தான் மேற்படிச்சுவடி எழுதப்பட்டது.

### குருவிகளுக்கு இருக்கும் ஞாபகம்.

குருவிகளுக்கு ஞாபகசக்தி விசேஷமாயுண்டு. ஊர்க்குருவி சீமைவிட்டுச்சீமைபோம்போது ஓரிடத்தில்தங்கிய ஆண்பெண் இரண்டும் திரும்பியும்இன்னொருதரம்வரும்போது அதேயிடத்தில் தங்கும். 18 மாதம்வரையில் பிரிந்திருந்த புறாக்குருவி வளர்த்தவனிடத்தில் திரும்பிவர அவனை அவனுடைய குரலால்தெரிந்துக் கொண்டதாம்.

பாட்டுபாடும் குருவிகளைப்பற்றியும் மனிதனைப்போலப் பேச்சுப்பேசும் குருவிகளைப்பற்றியும் நன்றாய் ஆராய்ச்சிசெய்த வித்வான் சாமியல் வில்க்ஸ் துரை கிளியைப்பற்றி எழுதுகிறதாவது:—'சிறுகுழந்தைகள் எப்படி மொழிகளைக் கற்றுக்கொள்ளுகிறார்களோ அப்படித்தான் கிளிகளும் ஒவ்வொரு மொழியாய், நன்றாய் முதலில் கவனித்து, பிற்பாடு பலமுறை அப்பியாசப்படுத்தி, மொழிகளைக் கற்குமாம். மொழி வழக்கமாகும் முன் பலதரம் தடுமாறுமாம். பேசுவதோ பாடுவதோ ஏதோ ஒருசமயத்தைப்பற்றி நேரிடுமாம். திரும்பியும் அதேசங்கதி நடக்கும்போதெல்லாம் அப்படியே பேசிப் பாடுமாம். மனிதனைவிட உரத்திப்பாடுமாம். மறந்தது ஞாபகப்படும்போது முன்னது விரைவில் நினைவுக்குவர பின்னது நினைவுக்குவரப் பிரயாசப்படுமாம். மனிதர்களுக்கும் அப்படியே, அடிதெரியும் நுனிதெரியாமல் மறக்கும். ஒருவீட்டில் வாயிற்படிக்கதவுக்கு ஒருமணியும்புறக்கடைக்கதவுப்பக்கத்தில் ஒரு மணியும் கட்டியிருந்தது. புறக்கடைக்கதவு திறக்கச்சே ஒருநாய்குலைக்கும். அந்நாயைப்பார்த்து உள்ளேயிருந்த கிளி ஒன்று நாயைப்போலக்குலைக்க வழக்கப்பட்டுப் பிற்பாடு புறக்கடைக்கதவு திறந்தபோது நாயில்லாமற்போனாலும் கிளி நாய்க்குச்சரியாய்க் குலைக்குமாம். (Buffon) பப்பன்துரை வீட்டிலிருந்த கிளி வருகிறவர்களிடத்தில் "கையைக்காட்டு" "கையைக்காட்டு"என்று சொல்லி தன்விரலை நீட்டுமாம். அப்பேச்சுச்சொல்லும்போதெல்லாம் தன்விரலையும் நீட்ட வழக்கமாயிருந்தது. மறந்துபோனதைக்கொஞ்சம் கொஞ்சமாய் ஞாபகப் படுத்திக்கொள்ளும். மொழித்தொகுதி தெரிந்திருந்ததில் ஒருமொழி தெரிந்து அடுத்தமொழி மறதியானால் முதலதைப் பலதரம் சொல்லிப் பின்னதைத் தெரிந்துகொள்ளப் பார்க்குமாம்.

### குருவிகளுக்காசாபாசங்களுண்டு.

நேசமும் உருக்கமும் குருவிகளிடத்தில் பலமாயுண்டு. ஆண்பெண் நேசமும், தாய்க்கவலையும் குருவிகளிடத்தில் விசேஷமாயிருப்பதைக் கவிகள் எடுத்துக்காட்டி மனிதர்களுக்கு உதாரணமாகஉரைப்பர். ஆணிழந்த பெண்குருவியும் குஞ்சிழந்தபெட்டைக்கோழியும் விசனத்தால் உயிர்விட்டதாய்ச் சொல்வது வெறுங்கதையல்ல, நிஜமாய் நடந்தசங்கதி. தீக்கோழி ஒன்று பாரிஸ்நகரத்தில் பெண்இறக்கத்தானும் இறந்தது. தீக்கோழியோ மந்தபுத்தியுள்ளது. புறாப்பறவைக்குத்தாரேஷணைப்பாசம் விசேஷப்பட்டிருப்பதைப் பார்த்தால் மனஉறுதி யிருப்பதாய்த் தெரிகிறதுமன்றி இறந்தகுருவியின் உருவம் கண்ணில் பதிந்திருப்பதாயும் தெரிகிறது.

சீனதேசத்தில் பீல்துரை (M. Beale) பறவைகளைச்சேர்த்து வைத்திருந்த விடத்தில் ஆண்பெண் குள்ளவாத்து இரண்டு இருந்ததில் ஆண் களவுபோனதின்பேரில் பெண்வாத்து ஏங்கி ஆகாரம்துறந்து மூலையில் உறங்கியிருந்தது. பக்கத்திலிருந்து வேறொரு ஆண்வாத்து நெருங்கப்பார்த்ததற்கிடங்கொடுக்கவில்லை. களவுபோன ஆண்வாத்து அகப்படவே ஆண்வருவதைப்பார்த்துப் பெண்வாத்து குலாவினதும் சந்தோஷத்துக்காகக் குதித்ததும் கொஞ்சமல்ல. நடுவேசேரப்பார்த்த ஆண்வாத்தைப்பார்த்தவுடன் தன் பெண்சாதியைக் கெடுக்கப்பார்த்ததே என்று ரோஷத்துடன் மேல்விழுந்துக் கடித்துமோதிற்று.

* Animal Intelligence by Professor G. J. Romanes, International Science Series, No. XLI.

† நூல்வலர்=நூலில்வல்லார்=நூல்களை ஆராய்ந்து தேர்ந்த பெரியோர்.

இங்கிலாண்டில் ஒரு கழனிவெளியில் புருக்கள் பயிரை அழிக்காமல் நிறுத்த குடியானவன் ஒரு ஆண்புருவைச்சுட்டு ஒரு கொம்பில்கட்ட அதனுடன் நேசமாய் வெகுநாள் வாழ்ந்துவந்த பெண்புரு அங்கே கொம்பைச்சுற்றி வளைய வந்துகொண்டே இருந்தது. குடியானவச்சி இரங்கிக் கழனிக்குப் போய்ச் செத்துப்போன ஆண்குருவியை அப்புறப் படுத்தினபிறகே பெண்புரு தன் இடத்துக்குப்போயிற்றும்.

### தாய்க்கவலை அதாவது குஞ்சுகளைப் போஷிப்பதில் அக்கறை.

(Couch) கௌச் வித்வான் செந்துக்களுடைய வழக்கங்களில் பயின்று சொல்வதைக் கவனிப்போம். குஞ்சின்பேரில் அக்கறை உடம்பில் எவ்வளவுகெட்டியாய் ஊறியிருக்கிறது, பார்ப்போம்.

ஒரு தோட்டத்தில் ஒதுப்புறமாய் பெட்டைக்கோழி கூடுகட்டி முட்டையிட்டது. முட்டையிடாத மற்றொரு பலத்தபெட்டை முட்டையிட்ட கோழியை பலவந்தமாய்த்துரத்திவிட்டுத் தன் இறகு சிறிதாயினும் முட்டைகளை அவயங்காத்துவந்தது. முட்டையிட்ட தாய்க்கோழி பல்தரம் மலடிப்பெட்டையை விரட்டப்பார்த்தும் முடியாமற்போயிற்று. மானிடப்பிறப்பில் பெற்றவளைவிட வளர்த்துக்கொண்டவருக்கு அதிகக் கவலையிருப்பதும் உண்டு. மேலேகுறித்த சுவீகாரத் தாய்ப்பெட்டை தன்குஞ்சுகளுடன் பெருமையாய் வளையவந்ததாம்.

கீழே வரும் நடவடிக்கை நிஜமேதவிரத்தப்பல்ல. அதாவது, ஆண்வாத்து ஒன்று ஒருவீட்டுக்கிழவரிடத்தில் வழக்கப்பட்டுப்போச்சுது, அதன்மேல் அக்கிழவர் தூர வரக்கண்டால் வாத்து அவரிடத்தில் ஓடும். மற்றவாத்துக்கள் அதை இனத்தில் சேரவொட்டவில்லை. அவ்வாத்து தன் இனத்தில் சேராமல் ஊர்மனிதர்களிடத்தில் அதிக இணக்கமாயிருந்தது. இப்படிக் கொஞ்சநாளானபிறகு ஒரு கிழப்பெட்டைவந்து அதனிடத்தில்சேர்ந்து இரண்டும் இணக்கம் ஆச்சுது. கிழப்பெட்டையின் தொண்டையைத் தன்மூக்கில் அணைத்துத் தண்ணீருக்கு அழைத்துப்போய் நீந்தவிட்டு நீந்தும்போது பெண்சாதிக்கழுத்தைச் சுமக்கும். பிற்பாடு குஞ்சுகளுண்டாயின. குஞ்சுகளை ஆண் ஆதரித்தது.

மேலே கண்டவரிடத்திலே இன்னொரு வாத்து வளர்ந்தது. இனத்துவாத்துக்களால் ஒதுக்கப்படாமல்போனபோதிலும், அது அக்கிழவரோடேகூட பக்கத்தில் தழுவிக்கொண்டுபோம். அப்படிப்போவதில் அதற்குப் பெருமை. பக்கத்தில் யாராவது வந்தால் எரிச்சல்பட்டு விரட்டும்.

(இன்னும்வரும்.)

டி. ஆர். இராமநாதையர், பி. ஏ., எல். டி.

## கோல்பெர்ட் சரித்திரம்.

### துணிவியாபாரி கடையிலிருந்து முதல்மந்திரி ஸ்தானத்துக்குவந்த ஒருவாலிபன் கதை.

II

சாத்தாணியின் துணிக்கடையிலிருந்து மான்ஷியர் சின்னாணியிருக்கும் ஹோட்டலுக்கு மூச்சுவாங்க ஓடிவந்த பாப்டிஸ்ட், முன் தனக்குக் கதவைத் திறந்த அப்பணவியாபாரியின் கையாளைப்பார்த்து ‘நான் மான்ஷியர் சின்னாணியைப் பார்க்கக்கூடுமா?’ என்று கேட்டான்.

அதற்கு அந்தக் கையாள் “அவர் இன்னும் வெளியேபோகவில்லை; ஆனால் நீர் இப்பொழுது அவரைப் பார்க்க முடியுமென்று எனக்குத் தோற்றவில்லை. எஜமானர் வெளியில்போக உடைதரித்துக்கொள்கிறார்” என்றான்.

பாப்டிஸ்ட் அந்த ஆளைப்பார்த்துப் பறபறப்புள்ளவனாய் “ஐயா, உடனே அவரைப் பார்க்கும்படி அனுமதி கொடுக்கக்கேட்டுக் கொள்ளுகிறேன்; அவரை நான் பார்க்கவேண்டியது தீரா அவசியமாகவிருக்கிறது.” என்றான்.

அதற்கு அந்தக் கையாள் “நான் போய் விசாரிக்கிறேன்” என்றுசொல்லிக் கதவைத்திறந்துகொண்டு உள்ளேபோனான். போகையில், பாப்டிஸ்ட் அவரைப்பார்க்கவேண்டிய அவசரத்தில் அவன்காலடியைத்தொடர்ந்துகொண்டு அவன்பின்னேயே சென்றாலும் அந்தக்கையாள் அவன் தனக்குப் பின்னேவருவதைப் பார்க்கவில்லை.

‘காமாட்டி’ என்னும் பெயருடைய அந்தக்கையாள் உள்ளேசென்றதும் அங்கே நிலைக்கண்ணாடி முன் நின்று அழகுபார்த்து உடைதரித்துக்கொண்டிருந்த அப் பணவியாபாரி நிலைக்கண்ணாடியில் பார்த்துக்கொண்டு நின்றது நின்றவண்ணமாய் தலைதிரும்பாமலே “என்னடாசெய்தி, காமாட்டி?” என்றான்.

“சற்றுமுன் இங்குவந்திருந்த சிறுதுணி வியாபாரி தங்களைப் பார்க்கவேண்டுமென்று வந்திருக்கிறார் சுவாமீ.” என்று காமாட்டி பதில்உரைத்தான். மான்ஷியர் சின்னாணி “இப்பொழுது பார்க்க சரிப்படாது” என்று சொல்லிவிட்டு “காமாட்டி! என் உடைவாள் எடுத்துவா” என்று கம்பீரமாய்ச் சொன்னார்.

அப்பொழுது பாப்டிஸ்ட் கெஞ்சுங்குரலோடு “ஐயா, ஒருவார்த்தைசொல்ல உத்திரவாகவேண்டும்” என்று பிரார்த்தித்துக்கொண்ட சப்தம் அவர் காதில் விழுந்தது.



விழவே, அப்பணவியாபாரி கோபங்கொண்டு அவன்பக்கமாய்த்திரும்பி “நீ இங்கு வந்தகாரணம் என்ன? உனக்கு என்னவேண்டும்? உனக்குத்தான் பணம் கொடுத்தாய்விட்டதே, கொடுக்கவில்லை?” என்று கேட்டுவிட்டு, “நான் வேலையாகவிருக்கிறேன். போ,” என்று அதட்டிச் சொன்னான்.

“இளங்கன்று பயமறியாது” என்று சொல்கிற வசனப்படி அதிபால்யவயதுக்குரிய பயமின்மையோடு, தான் சரியாக நடந்துகொள்கிறதாக அவனுக்குத் தெரிந்திருந்ததனாலுண்டான மனோதிடமும் சேர்ந்துகொள்ள, பாப்டிஸ்ட், அப்பணவியாபாரி அதட்டினதைக்கண்டு பயந்தோடாமல், அவ்வறைக்குள் இன்னும் இரண்டடி முன்வைத்துச் சென்றான். சென்றவன் பேசத் தாமதிக்காமல் “ஐயா,” என்று ஆரம்பிக்கவே, அவனை வெளியில் தள்ளும்படி உத்திரவுசெய்ய வாயெடுத்த பணவியாபாரி அவன் துணிவையும் தைரியத்தையும் பார்த்து அதிசயமுற்று ஒருக்ஷணநேரம் சும்மாவிருக்க, அந்தச்சமயத்தில் பாப்டிஸ்ட் “ஐயா, நான் தெரியாத்தனமாக உங்களை ஏமாற்றிவிட்டேன். ஆனால் அது தெரியாத்தனமாகச் செய்யப்பட்டதால் உங்களுக்கு நான்செய்தகுற்றம் குறைந்துபோகவில்லை.” என்று ஆரம்பித்தான். இவன் இப்படி முன்னுரைகூறியதைக்கேட்டுப் பணவியாபாரி மிகவும் அதிசயமுற்று நின்றான். அவன் அப்படி தயங்கிநின்ற சமயத்தை மேற்கொண்டு பாப்டிஸ்ட் இன்னும் சில அடிகள் முன்சென்று அங்கிருந்த ஒரு மேஜையின்மேல் தன் சொக்காய்ப் பையிலிருந்து பணத்தைக்கொட்டி, “நீங்கள் சற்றுமுன் எனக்குக்கொடுத்த நானூற்றிஐம்பது வராகன்களும் இதோ இருக்கின்றன; உங்கள்பணத்தை யெடுத்துக்கொண்டு, நான்கொடுத்த ரசீதைத் திருப்பிக்கொடுக்கும்படியான தயவுசெய்யவேண்டும். நான் தங்களுக்குக் கொடுத்த துணியின் விலை கஜம் ஒன்றுக்கு 15-வராகனுக்கு பதிலாக எட்டேவராகன் தான் பெறுமானது. 8-வராகன்விகிதம் 30-கஜம் 240-வராகன்தானாகிறது; பாக்கி 210-வராகன் உங்களுக்குத் திருப்பிக்கொடுக்கப்படவேண்டியது. ஐயா, அந்தவராகன்கள் அதோ இருக்கின்றன. தயவுசெய்து சரியாகவிருக்கிறதா எண்ணிப்பார்க்கவேண்டும்.” என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அப்பணவியாபாரி, தன்குரலை மாற்றிக்கொண்டு “அப்பா, நண்பனே, நீ சொல்வது நிச்சயந்தானா தெரியுமா? அதில் பிசகொன்றுமில்லையென்று உனக்கு உறுதியாகத் தெரியுமா?” என்று இதமாகக்கேட்டான்.

“ஐயா, அந்தத்துணி இன்னும் உங்களிடத்தில் தானே யிருக்கிறது; அதில் நெ. 3. குறிக்கப்பட்டிருக்கிறதோ இல்லையோ?” என்றான் பாப்டிஸ்ட்.

காமாட்டி துணியைப்பார்க்கப்போய் “ஆம்” என்று சொன்னான்.

“ஐயா, 3-ம் நெ. துணி 8- வராகன் விலை குறிக்கப்பட்டிருக்கிறது. அதில் பிசகொன்றுமில்லை; ஐயா, உங்கள்வார்த்தையை மீறிக்கொண்டு உங்களிடம் வந்ததற்காக என்னை மன்னிக்கக் கேட்டுக் கொள்கிறேன்; இந்தப்பிழையை எனக்குமுன்னால் நீங்கள் கண்டுபிடித்திருப்பீர்களானால் என்மனது ஒருபோதும் சமாதானப்பட்டிராது. உங்கள் பணத்தை உங்களிடம் கொடுத்துவிட்டேன்; இனி தங்களுக்கு வந்தனஞ்சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன்” என்றுசொல்லி பாப்டிஸ்ட் வெளியேபோகப் புறப்பட்டான்.

அவருக்குத் தலைவணங்கித் திரும்பிப்போகப் புறப்பட்ட பாப்டிஸ்ட்டைப்பார்த்து மான்ஷியர் சின்னாணி “ஒருநிமிஷமிரு, ஒரேநிமிஷம்!” என்று சொல்ல, கதவண்டை சென்ற பாப்டிஸ்ட் இவ்வார்த்தைகளைக்கேட்டு உடனே திரும்பிவந்து அவர்முன் நின்றான். அவனைப்பார்த்து அப்பணவியாபாரி எனக்கு துணிவிஷயங்களில்தராதரம்பார்க்கத் “தெரியாதென்று உனக்குத் தெரியுமா?” என்று கேட்டான்.

அதற்கு பாப்டிஸ்ட் “ஐயா, அந்தத்துணி சஜம் 8-வராகனுக்குமேல் விலைபெறாது என்று நான் உங்களுக்கு உறுதியாய்ச்சொல்ல மாட்டுவேன்” என்றான்.

குதுவினையற்ற அவன் மறுமொழியைக்கண்டு புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு அப்பணவியாபாரி “அப்படியிருக்க, இந்தப்பணத்தை நீ உனக்கே வைத்துக்கொள்வது இலகுவாயிருக்குமே” என்றான்.

அச்சிறுபையன் தந்திரமற்ற வெகுளித்தன்மையோடு “அதைப்பற்றி நான் நினைக்கவேயில்லை, ஐயா.” என்றான்.

“அதைப்பற்றி நினைத்திருந்தால்?” என்று பாரிஸ் நகரத்துச் சிங்காரபுருஷனான அப்பணவியாபாரி அவனை விசாரித்தான்.

“அப்படிப்பட்ட எண்ணம் என்மனதில் உதிப்பது முற்றும் கூடாத விஷயமாயிற்றே. அதைவிட இங்கேயிருக்கும் உம்முடைய சாமான்களையெல்லாம் எடுத்துக்கொண்டுபோக எண்ணினால்? என்று கேட்கலாமே.” என்று பதிலுரைத்தபோதே அவன்

முகத்தில் ஒரு புன்சிரிப்புத்தோன்றி புத்திவிசாலமான அவன் முகவிலாசத்தைப் பிரகாசிக்கச் செய்தது. அப்படிப்பட்ட பைத்திய எண்ணம் ஒருவனுக்கு எப்படி தோன்றக் கூடுமென்று தனக்குள் சிரித்துக்கொண்டவன்போல் காணப்பட்டான்.

“எல்லாரும் அதிசயிக்கத்தக்க விதமாய் அவ்வளவு நேர்மையோடு நீ திருப்பிக்கொடுத்த அந்தத்தொகையை நான் உனக்கு ஒரு வெகுமானமாகக் கொடுத்தேனென்றால் ?” என்று பணவியாபாரி பின்னும் கெட்டதற்கு,

“அதை வாங்கிக்கொள்ள எனக்கு என்ன பாத்தியமிருக்கிறது ? மேலும் அதைநீர் ஏன் எனக்குக் கொடுக்கவேண்டும் ? அப்படியே கொடுத்தாலும் நான் அதைப் பெற்றுக்கொள்ளமாட்டேன்,ஐயா” என்று கொஞ்சம்கூட தயங்காமல் பாப்டிஸ்ட் பதிலுரைத்தான்.

இளம்பிராயமுள்ள அந்தப்பணவியாபாரி பாப்டிஸ்ட் சொன்ன பதிலுரைகளைக்கேட்டு அடங்காமகிழ்ச்சிகொண்டவனாய் அவனைநோக்கிச் சென்று அவன்கையைப் பிடித்துக்கொண்டு “நீ ஒரு நேர்த்தியானபையன்; நல்ல நாணயமான பையன்” என்று ஒரு தரத்தைப்போல் இரண்டுதரம் சொல்லிக் கொண்டாடி “உன்பேர் என்ன?” என்று இனிமையாய்க்கேட்டான். அவன் இப்படி கடாக்ஷித்துப் பேசினதைக்கண்டு பாப்டிஸ்ட் சங்கோசத்தால் முகம்சிவந்து அவன் கேட்ட கேள்விக்கு உத்தரமாக “தங்கள் ஊழியன் ஜீன் பாப்டிஸ்ட் கோல்பெர்ட்” என்றான்.

அதன்மேல் அப்பணவியாபாரி “பாப்டிஸ்ட், உன் வயது என்ன ?” என்றுகேட்டான்.

“பதினைந்து, ஐயா.”என்றான் பாப்டிஸ்ட்.

மான்ஷியர் சின்னணி “கோல்பெர்ட்” என்கிற பெயரைக்கேட்டதும் ஏதோ மறந்துபோனதை ஞாபகப்படுத்திக்கொள்ள யோஜிப்பவன்போல் ‘கோல்பெர்ட், கோல்பெர்ட்’ என்று தானே சொல்லிக்கொண்டு பிறகு அந்தப்பையனைப்பார்த்து நீ ஸ்காத்லாந்துதேசத்துகோல்பேர்ட் குலத்தினரைச்சேர்ந்தவனாயிருக்கலாமோ?” என்று கேட்டான்.

“ஸ்காத்லாந்துதேசத்து கோல்பெர்ட் குலத்தினருக்கும் பிரான்சுதேசத்து கோல்பெர்ட் குலத்தினர்க்கும் “காஸில்ஹில் பிரபுக்கள்” பொதுவான மூதாதைகள், ஐயா ” என்று பாப்டிஸ்ட் பதில்சொல்லவும், பணவியாபாரி “அப்படியானால் அவ்வளவு பேர்போன குலத்திலுதித்த உன் தகப்பனார் துணிவியாபாரியானது எப்படி? ” என்று கேட்டான்.

அதற்கு பாப்டிஸ்ட் “ஐயா, என் தகப்பனார் துணிவியாபாரியல்லர்; ஆனால் அவர் மெத்த ஏழை; ஆதலால், அவருக்குப் பாரமாயிருக்கக் கூடாதென்று நான் எனக்கு நாமகரணமிட்டவரான மான்ஷியர் சாத்தாணியிடம் வேலைக்கிருக்கிறேன் ” என்றான்.

“ஏழைச்சிறுவன்; எவ்வளவு வெகுளித் தனம், எவ்வளவு நிதார்த்தம், எவ்வளவு இனியகுணம், இவையெல்லாவற்றுடன் எவ்வளவு துர்ப்பாக்கியம், பாபம். பரிதாபம் ! பரிதாபம்!!” என்று தனக்குத் தானே அப்பணவியாபாரி சொல்லி மனதுருகிக் கொண்டிருக்கையில்,அவனுடைய கையாள் ‘காமாட்டி’ யென்பவன்வந்து “ஐயா, வண்டிதயாராகிநிற்கிறது” என்று சொன்னான்.

அப்பணவியாபாரி விசனத்தோடு அப்பையன் கையை விட்டுவிட்டு, இன்னும் அங்கேயுள்ள மேஜையின்மேல் அப்படியே கிடந்தபணத்தை அவனுக்குக் கொடுத்து ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேணுமென்கிற விருப்பமும், அதைக் கொடுத்தால் அவன்மனம் புண்பட்டு, அவ்வளவு அழகும், மேன்மையுமான முகத்தைக் கடுக்கச்செய்யுமோ என்கிற பயமும் அவன் மனதுள்ளிருந்து தடுமாற இன்னது செய்வதென்று நிதானிக்கமாட்டாதவனாய்ச் சற்றுநேரம் தயங்கிநின்றான். கடைசியில் அவனுக்கு வருத்தம் உண்டுபண்ணுவோமே என்கிற பயமே மேலிட்டதாகத் தோன்றுகிறது. ஏனென்றால் உடனே அவன் “நாம் மறுபடியும் சந்திப்போம், பாப்டிஸ்ட் ; நாம் மறுபடியும் சந்திப்போம்” என்று சொல்லி பக்ஷமுள்ள பார்வையோடும் மற்ற பிரீதிக்குறிகளோடும் அவனை விடைகொடுத்து அனுப்பிவிட்டான். பாப்டிஸ்ட் அந்த ஹோட்டலின் மாடிப்படிகள் வழியாய் இறங்கியோடிவந்து தெருவில் குதித்ததும் குதிக்காததுமாயிருக்கையில் யாரோ பலமாக பயமுறுத்திக்கொண்டு அவன் கழுத்தில்கை போட்டு அவனை உறுதியாகப் பிடித்துக்கொண்டதாகக் கண்டான். அப்படி பிடித்துக்கொண்டது அவனுடைய எஜமானாகிய கோபாவேசங்கொண்ட துணிவியாபாரி சாத்தாணியே தவிர வேறொருவருமில்லை.

அக்கிழவியாபாரி பாப்டிஸ்ட் தன் கடையைவிட்டுக் குதித்தோடிவந்ததைக் கண்டு மலைத்துநின்றவன் பின்பு அவன்பேரில் கோபாவேசங்கொண்டு “அந்தப் பயலைவிட்டேனா, பார் ! ” என்று அவனைத் தேடிக்கொண்டுவந்தான். ஹோட்டல்வாசலில் பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பிவந்த பாப்டிஸ்ட் அவன்முன் எதிர்ப்படவே, அவன் கோபம் முன்னிலும் அதிகமாகப் பொங்க அவன் அச்சிறுவனைக் கழுத்தில் கைபோட்டுப் பிடித்துக்கொண்டு பைத்தியம்பிடித்தவன்போல அவனை வையத்தொட



ங்கினான். ஏழை பாப்டிஸ்ட் அவன் வைவதுசரியல்லவென்று ஆக்ஷேபித்துச் சமாதானம் சொன்னதொன்றும் பலிக்கவில்லை. சாத்தாணி மொத்தத்தில் அதிக கெட்டவனல்ல ; ஆனால், அவன் மெத்த பேராசையுள்ளவனும் முன்கோபியுமாயிருந்தான். இவ்விரு தீக்குணங்களும் சேர்ந்துகொண்டு அந்த சமயத்தில் அவன்கடமை இன்னதென்று தெரியாமல் மறந்துபோகும்படி செய்துவிட்டன. ஆகவே, பாப்டிஸ்ட் நியாயமாகச் சொன்ன விவரங்களுக்கு மறுமொழியாக அவன் அச்சிறுவனைப் பார்த்து, “என் வேலையை விட்டுவிட்டு என் கண்ணிற்படாமல் போ ; தொலை, நான் உனக்குச் சொல்கிற கடைசி வார்த்தை இதுதான் : அதைக்கேட்டு அந்தப்படி நட. இனிமேல் என் கை அல்லது வாய்க்கெட்டும் தூரத்தில் ஒருபோதும் வராதே. உனக்கு அதுதான் என்னுடைய ஆசீர்வாதம். அதை வாங்கிக்கொண்டு சுகமே போய் வா, போ!” என்று அவனைப்பிடித்து தள்ளினான்.

பாப்டிஸ்ட் அவனுடைய எஜமான் கோபாவேசம் கொண்டு கூத்தாடுவானென்று எதிர்பார்த்தவனாயிருந்தாலும், இப்படி அவன் தன்னை வேலையை விட்டுத் தள்ளுவான் என்று ஒருக்காலும் நினைக்கவேயில்லை. இருந்தாலும், அந்த சந்தர்ப்பத்தில் தான் வேறு செய்யத்தக்கது ஒன்றுமில்லையென்றுணர்ந்து, அவன் தான் நடந்துகொண்டதற்காக மனஸ்தாபப்படாமலிருந்தான். அவன் தனக்கு நாமகரணமிட்டதால் ஒருவிதத்தில் பிதாவென்றுமதித்துவந்த அக்கிழவன் இப்படி அடாதபடியாகத் தன்னை அடித்துத் துரத்தியதற்கு தலைவணங்கி தன் தகப்பனார்வீடு நோக்கி மனங்குழைய மெதுவாய் நடந்துசென்றான்.

(இன்னும் வரும்.)

C. V. S.

## மாதர் பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் ஒருமாது சென்னைத் துறைமுகத்தில் இந்தமாசம் முதலில் வந்திருந்த சண்டைக்கப்பலைப் பார்த்துவந்ததைப் பற்றி எழுதிய கடிதமொன்று கிடைக்கப்பெற்றிருக்கிறோம். ஆனால் அது மிகத்தாமதித்து வந்ததால் இந்தமாசம் பிரசுரிக்கக் கூடவில்லை—அடுத்த சஞ்சிகையில் வரும்—வி. சி. ப.]



## சிறுவர்க்கான ஜாலவிநோதங்கள்.

(61-வது பக்கத்தொடர்ச்சி.)

(11) கிண்ணவடிவம் போன்றதும், இலேசானதும் அகலமானதுமான ஒரு பீங்கானில், கால் அல்லது அரைக்கால்பங்கு ஜலம்வார்த்து கையின்சுட்டுவிரலையாவது நடுவிரலையாவது சற்றுநேரம் ஜலத்தில் ஊறவைத்துப்பின்பு விரல்களின் முனையால் பீங்கான்மேலோரத்தில் மெல்லென அழுத்தி ஓரமுழுதும் விடாது தடவிக்கொண்டேவர சங்குபோல் ஓங்காரத்தொனிகேட்கும். இவ்வேடிக்கையைச் செய்யும்போது நடு நடுவில் விரலின் முனையைக்கற்பூரதிராவகத்தில் (Turpentine) நனைக்க, சப்தம் இன்னம்வெகுதொனியாய்க்கேட்கும். பீங்கான் மேலோரத்தில் ஈரமில்லாதபடி நன்றாய்த்துடைத்து, ரோஜனப்பொடியால் (Resin ) பூசி, பிடீல் வாத்தியக்கருவியின் வில்லால் தடவ மேற்சொன்ன பிரகாரம் ஓசைகேட்கும். சிறுகண்ணாடி மணிகளை ஒரு மெல்லிய சயிற்றிற்கோர்த்து பீங்கானைத்தடவும்போது அவைகளை ஒரு ஓரத்திற்படும்படித் தொங்கவிட, பீங்கான் அதிர்ச்சியால் படபடவென்று மணிகள் அடித்துக்கொள்ளும்.

(12) சுமார் கால்-அங்குலம் அகலமான 8-ஒயின் கிளாஸுகளைச்சேகரித்து ஒருமேசையின்மேல் வரிசையாகவைத்து, முதல்கிளாஸில் கொஞ்சம் ஜலம், இரண்டாம் கிளாஸில் இன்னம்கொஞ்ச சலம் இவ்விதமாகபடிப்படியாய் ஜலம்வார்த்து ஒருகோலால் மெல்லென ஒவ்வொன்றையும் தட்ட முறைமுறையாய் காதுக்கின்பமான சத்தம் கேட்கும்.

(13) செவியோரமாய் கண்ணுக் சருகாமையில் நேத்திரத்தில் படாதபடி ஒருவிளக்கைமேலுங்கீழுமாய் ஆட்டிக்கொண்டு இருட்டுவீட்டில் சற்று தூரத்திலிருக்கும் ஒரு வெண்சுவரைப்பார்த்தால் கண்ணுக்குள்ளிருக்கும் அணுவளவினவான இரத்தக்குழாய்களின் உருவங்கள் சுவற்றின்மேல் அதிகபெரிதாகத் தோன்றும்.

(14) சூரியன் பிரகாசிக்கும் பொழுது, வாய்நிறைய ஜலம் உட்கொண்டு, சூரியன்புறமாக முதுகைத்திருப்பி நின்று, குளம் அல்லது ஏரியில் ஜலம் மிகவும் அலையாமல் சற்று அமரிக்கையாயிருக்கும் பொழுது, வாயிலிருக்கும் நீரை நுட்பமான துளிகளாய் விழும்படி உமிழ்ந்தால், ஜலத்தின்கீழ், வானவில் தோன்றும்.

(15) சாதாரண துணிதைக்க உபயோகிக்கப்படும் ஊசியளவு நிகளமுள்ள ஒரு ஒழுங்கான கார்க் (cork) துண்டை எடுத்து நிகளபக்கமாய் இருமுனை

மத்திக்கு நேராய் ஒரு சிறு எஃகு ஊசியை நுழைத்து, பின்பு இதை ஒரு சமமான மரப்பலகையின்மேல்வைத்த ஒரு அரை அணாவின்மேல் நிற்கச்செய்து தலை அகலமுள்ள ஒருகனத்த சுத்தியால் கார்க்கு துண்டுக்கு நேராக பலமாய் வீசி அடிக்க, கார்க்கானது தூள்தூளாய் சிதைந்துவிடும். ஊசியோவெனில், கனிந்தவாழைப்பழத்தில் ஊசி செல்லுமாப்போல், அவ்வளவு எளிதாய், நாணயத்தின் மத்தியாய்ச்சென்று மரப்பலகையினுள்ளும் பாய்ந்திருக்கும். நாணயத்தை மெல்லென அசைத்து நேராய்த்தூக்கிப்பார்க்க ஊசி அதன் மத்தியில் சொருகிக் கொண்டிருக்கும். இதைப்பிரிப்பது மிகவும்கடினம்.

(16) ஒரு நயப்பான இரும்புத்துண்டை ஒரு குறட்டால்பிடித்து, கொல்லன்பணைமேல்வைத்து ஒரு கனத்த சுத்தியால் ஓயாது விசையாய் அடிக்க குட்டினால் அக்கினிபொருந்தி செந்நிறமாய்விடும். உடனே இரும்பை சக்கிமுக்கிப்பஞ்சில் நுழைக்க பஞ்சு தீப்பற்றிக்கொள்ளும். நெருப்பகப்படாவிடத்தில் இவ்வுபாயம் மிகவும் பிரயோசனமானது.

(17) ஈயத்தை உருக்கி உயரத்திலிருந்து ஒரு சிறு தமர்வழியாய் வார்க்க அது கீழேவிழுமுன் ஆறி உருட்சியான ரவையாகும்.

(18) இரண்டு கண்ணாடிபில்லையை ஒன்றின்மேலொன்றுவைத்து நெருக்கி ஒருகடையில் மாத்திரம் கொஞ்சம் விரித்துப் பிடித்து, ஜலத்தில் சொஞ்சம் ஜலம் கண்ணாடி நெருக்கங்களில் ஏறி உயர்ந்து நிற்கும் ஜலத்தின்மூலமாய் அப்புறத்திலிருக்கும் வஸ்துகளைப் பார்த்தால், அவை தத்தம் நிலையை விட்டுப்பெயர்ந்தும் பஞ்சவர்ணங்களை உடையதாகவும் தோன்றும்.

(19) நீர்க்கட்டியானது ஜலத்தைவிட அதிக பாரமானது என்று அநேகர் எண்ணுகிறார்கள். இது தப்பிதம். அதை ஜலத்தில் போட்டால் மிதக்கும். நீர்கட்டி நீராய் உருகினால் உருகிய நீர் நீர்க்கட்டியைவிட அளவு குறைந்திருக்கும்; நீரை நீர்க்கட்டியாய்ச்செய்தால் கட்டி நீரினளவைவிட அதிகப் பெரிதாயிருக்கும். ஒரு போல் இருப்புக்குண்டில் நிறைய ஜலம்வார்த்து, ஜலம் வெளிவராதபடி நன்றாய் மூடி உள்ளிருக்கும் நீரை யாதாவதொரு உபாயத்தால் உறையச்செய்ய, இருப்புக்குண்டு எவ்வளவு கனமாயிருந்தாலும் வெடித்துவிடும்.

(20) ஒரு ஒயின்கிளாஸின்மேல் ஒரு சிறுகாகித அட்டையையும் அதின்மேல் ஒரு அரை அணாவையும் வைத்து, அட்டையை சட்டென்று தள்ளினால் அணா கிளாஸுக்குள் விழுந்துவிடும்.

(21) ஒருவன் தரையில் நின்றுகொண்டு கையில் மூன்றுபந்துகளைச் செப்படிவித்தைக்காரன்போல் எறிந்தும் பிடித்தும் ஆடுகிறதுபோல, விரைவாய்ச் செல்லும் வண்டிமேலும், கப்பலின்மேலும் அல்லது குதிரையின்மேலும் நின்றுகொண்டு அப்படிச் செய்யலாம். பந்துகள் அவனிடத்திலேயே விழும்.

(22) ஒரு செம்பிலே ஜலம்வார்த்து கயிற்றாலே கட்டி அல்லது கையில் பிடித்துக் கொஞ்சநேரம் முன்னும் பின்னும் ஆட்டி, வரவர அதைச்சுழற்றினால், செம்பு மேலே இருக்கையில் வாய் கீழாக இருந்தும், செம்பின் வாயினிடமாய் ஜலம் விழாமல் பாத்திரத்துக்குள்ளேயே தங்கிநிற்கும்.

(23) களிமண்ணை எடுத்து அதைச்சிறிய உண்டையாக்கி காய்ந்துபோகாததற்குமுன் சற்றுப் பச்சையாயிருக்கையில் ஒரு கோலின் நுனையில் பதிந்த கையினால் கோலின் மற்றொரு முனைபிடித்து ஒருதரம் சுழற்றி ஆகாயத்தை அடிப்பதுபோல் கோலைவீச, கோல்முனையினின்று மண்பந்து பெயர்ந்து வெகுதூரம் சென்றுவிழும். ஒரு நூற்கயிற்றின் முனையில் ஒரு சிறு கல்லைக்கட்டி, நூன்முனையைக் கையில்பிடித்து விசையாய்ச் சுழற்றிவிட்டுவிட, கல்லும் நூலும் வாணம்போல் வெகு தொலைவில் சென்றுவிழும்.

(24) ஒரு துப்பாக்கியில் ரவைபோட்டு ஒரு கண்ணாடிசன்னலுக்கு சற்று தூரத்திலிருந்து, கண்ணாடிபக்கமாய் சுட்டால், கண்ணாடியை உடைக்காமல் இரவை கண்ணாடியில் ஊடுருவிச்செல்லும்.

(25) ஒருவனை மல்லாக்க படுக்கவைத்து அவன் வயிற்றிலே, ஒரு தேங்காயால் ஓங்கியடித்தால் ஒரு வேளை அங்கேயே சாவான். ஆனால் அவன் வயிற்றின்மேல் ஒரு பாரமான பெரியகல்லை ஏற்றிவைத்து அந்தக்கல்லின்மேல் தேங்காயை ஓங்கியடித்தால் தேங்காயினுடைய சலனம் கல்லில்பட்டு அதிலெங்கும்விரிந்து செல்லுவதாலும், வயிறு சற்று சுருங்கவும் விரியவுந்தக்க தன்மை யுள்ளதாலும், ஆளுக்கு யாதொரு சேதமும்நேராது. தேங்காயோ துண்டுதுண்டாய் உடைந்துவிடும்.

(26) ஒருவனுக்கு கயிற்றின்பேரில் நடக்க விருப்பமிருந்தால், இருகடையிலும் பாரமேற்றின சற்று நீளமான கொம்பைக் கையில் பிடித்துக்கொண்டு தான் ஒருபக்கமாய் நேரை விட்டுச்சாயும்பொழுது மறுபக்கத்துக்குத் தன் கையிலிருக்கும் கோலை அதிகமாய், நீட்டிக் கொடுத்துக்கொண்டிருந்தால், கனமத்தியம் (centre of gravity) சரியாய்க் காக்கப்படும். அதினால் அவன் வீழமாட்டான். இதை நன்றாய்ச்செய்வதற்கு கொஞ்சம் அப்பியாசம் வேண்டும்.

மா. நடேசன்.



# சிறுவர்க்கான பக்கம்.

விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## நமது தாதாகடிதம்.

### VI.

பிள்ளைகளே பெண்களே! வாருங்கள். போனமாதம் நல்லமழை பெய்திருந்தால் உங்களை மறுபடியும் ஆற்றுக்கு அழைத்துக்கொண்டு போய் சிலவேடிக்கைகள் காண்பிக்க எண்ணி இருந்தேன். இந்த வருஷம் சூரியன் இராஜாவாம்: அங்காரகன் மந்திரியாம்: அவ்வளவாக அதிகமழை பெய்யாதென்று சில சாஸ்திரிகள் புகைபண்டியில் பேசிக்கொண்டு போனார்கள். நம்முடைய ஊரிலுள்ள புரோகிதரைப் பார்த்தபோது அவர் "ஐயா முதலியாரே! இந்தவருஷம் மழைக்குக் குறைவில்லை. உபாயமாகப்பேயும் ஆனால் வெகுசாய் பிராணச்சேதம் உண்டாகுமென்று அப்பனையங்கார் பஞ்சாங்கம் குணித்திருக்கிறார்." என்றுசொன்னார். நான் கையாண்டுவருவது காலேஜ் பஞ்சாங்கம். மழை இந்தவருஷம் நன்றாகப்பெய்யும் என்றுதான் அதில் கண்டிருக்கிறது. ஆனாலும் இதெல்லாம் ஒற்றை இரட்டை பிடிக்கிற சங்கதியாக இருக்கிறதுபோலத் தோன்றுகிறது. ஏனென்றால் நம்முடைய முன்னோர்களே "மழைவருகிறது மகாதேவருக்குக்கூடத் தெரியாது" என்று ஒரு பழமொழி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தமாசம் காய்கிற வெய்யில் ஊமைவெய்யிலாக இருக்கின்றது. இந்த வெய்யிலைக் குளிர்ந்த கொள்ளியென்று சொன்னாலும் சொல்லலாம். இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமையாய் இப்போது வெயில்வேளையாய் எனக்கும் சாவகாசமாய் இருப்பதனாலே என்னுடைய சிநேகர் ம-ா-ா-ஸ்ரீ அமுதசாகரனுடைய தோட்டத்திற்குப் போகலாம். அங்கே ஒன்றும் வித்தியாசமில்லை. நம்முடைய சொந்த தோட்டமாயிருந்தால் என்னென்ன செய்யலாமோ அந்தப்படி செய்யாவிட்டால் மாத்திரந்தான் என்னுடைய தோழருக்குக் கோபம் வரும். அதுவும் அவரில்லாதவேளையில் அப்படி செய்வதுதான் அவருக்குஅதிக பிரீதியைக்கொடுக்கும். இந்த ஊரில் எனக்குத் தோழராகின்றவர் அவர் ஒருவரே. இன்னும் எத்தனையோபேர் இருக்கிறார்கள். அவர்களைத் தோழர் என்று சொல்வது மரபுவழுவாகும். அவர்களை அறிமுகமானவர்கள் என்பதுபோன்ற சொற்களால் தான் குறிக்கவேண்டும். அவர்களெல்லோரும் சுயகாரிய துரந்தரர்கள். அப்படியென்றால், தங்கள்சொந்தக்காரியங்களை நடத்திக்கொள்வதில் மாத்திரம் அதிக ஊக்கமுடையவர்கள் என்றர்த்தம். மற்றவர்களுக்குத் தங்களால் ஆகக்கூடிய ஒருகாரியத்தைச் செய்வதென்றால் அவர்களுக்கு வேப்பம்பழம் சாப்பிடுவதில் எவ்வளவு ஆசையிருக்குமோ அவ்வளவு ஊக்கந்தானிருக்கும். ஆனாலும் இவர்களும் எனக்கு ஒருவிதத்தில் மகா உபகாரிகள் என்றே சொல்லவேண்டும். இதென்ன அதிசயம்! அவர்கள் மகோபகாரிகள் என்பது பொருந்துமா என்றால், இவர்களோடு நெடுநாள்பழகினதினால் அல்லவோ என்கண்ணுக்குக் கண்ணாகின்ற அமுதசாகரனுடைய சிநேகத்தின் அருமை எனக்கு நன்றாய் தெளிவாயிற்று. அடிநாள் முதற்கொண்டே அருமையான சிநேகம் பண்ணினவர்களுக்கு சிநேகத்தின் பெருமை நன்றாக விளங்காதல்லவா. பசித்தவனுக்குத்தானே பலகாரத்தின்ருசி தெரியும். வெயிலில்திரிந்து களைத்து வந்தவனுக்குத் தானே நிழலின் அருமை நன்றாகத் தெரியும்; இந்த அமுதசாகரருக்கும் எனக்கும் உடல் மாத்திரம் இரண்டே ஒழிய உயிரென்பது ஒன்றென்றே சொல்லவேண்டும். பெண்டு பிள்ளைகளின் நிமித்தமாகவும் வயிறுவளர்க்கும் ஜீவன நிமித்தமாகவும் நாங்கள் இடையிடையே பிரிவதே ஒழிய மற்றைப்படி எங்களுக்கு ஒருவரைவிட்டு ஒருவர் பிரிவதென்றால் அதிக துக்கத்தைக் கொடுக்கும். எங்களை அன்றில் பறவைகளுக்குச் சமானமாகச் சொல்லலாம். ஆனால் அவைகள் ஆணும் பெண்ணுமாகப் பொருந்தி யிருப்பதனால் அந்த உவமானம் பொருந்தாதென்று ஆக்ஷேபிக்க இடமுண்டு. பூவோடுசேர்ந்த நாறும் மணம்பெறுவதுபோல அவருடை சகவாசம் உண்டானபிறகு நான் எவ்வளவோ நல்ல

குணங்களை அடைந்திருக்கிறேன் என்பது என்மனதுக்கு நன்றாய்த் தெரியும். இவருடைய சிநேகம் உண்டானபிறகுதான் திருக்குறளில் பரிமேலழகர் காட்டிய **கோப்பெருஞ்சோழர்க்கும் பிசிராந்தையார்க்கும்** உள்ள சிநேகத்தின் மர்மம் எனக்கு இன்னதென்று தெளிவாயிற்று.——இதோ பார்த்தீர்களா! இதுதான் அவருடையதோட்டம். இந்தத் தோட்டத்தின் வெளிப்புறத்தில் காணப்படும் பசுமையான காட்சி அவருடைய முகவிலாசம்போலே இருக்கின்றது. இந்தத் தோட்டத்தின் உள்ளூறத்தோன்றும் குளிர்ச்சியும் அவருடைய மனத்தின் குளிர்ச்சியும் அபேதமானவை. இந்தத்தோட்டத்தில் உலாவிவருவதே அவரோடு வார்த்தை சொல்வதற்குச் சமானமென்பது எனக்கு அநுபவம். நாமெல்லோரும் மாங்காய் தேங்காய் வாழைப்பழம் அனுசுப்பழம் மாதுளம்பழம் கிச்சிலிப்பழம் முதலானவைகளில் அவரவர்களுக்கு இஷ்டமானதைச் சாப்பிடலாம். உங்களுக்கு இஷ்டமானவரையில் சாப்பிடுங்கள். எவரும் உங்களை ஏனென்று கேட்கமாட்டார்கள்.—எல்லாரும் கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு இந்த அரசமரத்தின் அடியில் உட்காருங்கள். கொஞ்சநேரம் நான்சொல்வதை உற்றுக்கேளுங்கள்.

என்னுடைய சகோதரி எட்டாம் வயதிலே பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்ட சங்கதி முன்னே சொல்லியிருக்கிறேன் அல்லவா. அவள் அங்கே பதினொன்றரை வயதாகிற வரையில் படித்துக்கொண்டிருந்தாள். "வித்தியாசாலை விநோதசாலை" என்கிற பழமொழி அந்த தையனாயகியம்மாளுடைய அதிகாரத்திலிருந்த பாலிகாபாடசாலைக்கே தகும். அந்தப் பாடசாலையின் விர்த்தாந்தங்களை என் தங்கை அப்போதைக்கப்போது சொல்லக்கேட்டிருக்கிறேன். கேட்கும்போதெல்லாம் எனக்கு ஒரு ஏக்கமுண்டாகிறதுண்டு. அதென்னவென்றால், ஐயோ! நானும் பெண்ணாய்ப் பிறந்திருந்தால் இந்தப் பாடசாலையில் சேர்ந்து பலபல விதமான விநோதங்களை அநுபவிக்கலாமே என்பதுதான். அந்தத் தையல்நாயகமாகின்ற தையனாயகியம்மாளுடைய பிள்ளையைப் பார்க்கும்போதும் எனக்கு அதிக பொறாமை உண்டாகிறது வழக்கம். அவனுடைய தம்பியாகப் பிறந்திருந்தால்கூட எனக்கு அதிக திருப்தியாக இருக்கும். இந்த பாலிகாபாடசாலையில் படிக்கிற பெண்கள் தங்கள் வீட்டில் கலியாணங் காக்ஷி நேரிட்டால்கூட அவைகளில் பிரியப்படாமல் எப்படியாகிலும் பள்ளிக்கூடம் போகவேண்டுமென்றே விரும்புவார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு விடுமுறைநாளை வீட்டில் கழிப்பதுதான் அதிக வருத்தத்தைக்கொடுக்கும். இந்தப் பெண்களில் செல்வவான்கள் வீட்டுப் பெண்ணென்றும் எளியவர்கள் வீட்டுப் பெண்ணென்றும் *வேற்றுமையில்லை. ஒருவரையொருவர் கண்டால் பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போலவும் சர்க்கரையோடு சர்க்கரை கலந்தாற்போலவும் அதிகமாக சிநேகவாஞ்சை உடையவர்களாய் உறவாடுவார்கள். இத்தனைக்கும் காரணம் இந்தத் தையனாயகியம்மாள் ஒருவரே என்பதை நினைக்க நினைக்க எனக்கு கட்டுப்படாத மகிழ்ச்சி உண்டாகிறதுண்டு. பள்ளிக்கூடத்தில் இவர் தாயும், பெண்களெல்லாரும் சொந்த புத்திரிகளுமாகக் காணப்படுவதன்றி வேறு தோன்றாது. மற்ற உதவி உவாத்திகளும் இந்த அம்மாளுடைய நடத்தையைப் பின்பற்றி இவருடைய இளையசகோதரிகளென்னும்படியான அந்தஸ்தை அடைந்துவிட்டார்கள். இந்த தையனாயகியம்மாள் புருஷனைப்பறி கொடுத்ததும் அதுகாரணமாக அவர் இந்த மகோபகாரமான உபாத்திமைத் தொழிலைத் தலைகொண்டதும் எங்கள் ஊரினர் செய்த புண்ணியபூஜாபலமென்றே எல்லோரும் எண்ணியிருந்தார்கள். அந்த அம்மாளை போற்றாத புருஷரில்லை, பெருமை பாராட்டாத பெண்களில்லை; வாழ்த்தாத வாயில்லை; கும்பிடாத கையில்லை; வணங்காத தலையில்லை; அவருடைய வாயமுது ஊறாத செவியில்லை. எங்களுக்குப் புதிதாய்க் குடிவந்தவர்கள் அந்தம்மாளுடைய தையனாயகம் என்னும் பெயரைக்கேட்டு, அது காரணவிடுகுறியாக வழங்கிவிட்டதேயோ என்று ஆசங்கிப்பார்கள். நான்மாத்திரம் இந்தம்மாளுக்கு இந்தப்பெயர் அவ்வளவு பொருத்தமான பெயரல்ல, சர்வஜன நாயகம் என்றிருப்பதுதான் தகுதி என்று தர்க்கிப்பேன். இது இருக்கட்டும்.

* வேற்றுமை=வித்தியாசம்.



இவ்வுலகில் எவ்வளவு குணசாலிகளாய் இருப்பவர்களிடத்திலும் சில குற்றங்கள் காணப்படுவதும் எவ்வளவு பாபிகளிடத்திலும் சில நற்குணங்கள் அமைந்திருப்பதும்சகஜம். இந்தத் தையனாயகம் அம்மாளிடத்திலும் சில குற்றங்களுண்டு. பிறருடைய குணங்களையே சிறப்பாகப் பலரறியச் சொல்லவேண்டும்: குற்றங்களைப் பாராட்டலாகாது, என்று அநேக பெரியோர்கள் எனக்குப் பாடஞ்சொல்லி இருக்கிறார்கள். ஆனாலும் என்னுடைய சுயபுத்தி என்னைவிட்டு நீங்குவதில்லை. பெரியவாளுடைய குற்றங்களையும் கேவலமானவர்களுடைய குணங்களையும் பலபல பேர்களறியத் தூற்றுவதில்தான் எனக்கு அத்தியந்தபிரியம். இந்த மகாபதிவிரதா சுசீலையான தையனாயகியம்மாளிடத்திலுள்ள குற்றங்களை எடுத்துத் தூற்றினால் அநேக ஆண்மக்களுக்குக்கூட வெட்கம்உண்டாகும். ஆனாலும் நான் அவைகளைச் சொல்லாமல்விடமாட்டேன்.

(1) இவருடைய வீட்டுக்குச் சமீபத்தில் அநாதப்பெண்களுக்காக ஒரு சத்திரங்கட்டி அதில் அவர்களுக்கு அன்னவஸ்திரம் கொடுத்தும், பாலிகாபாடசாலையில் அவர்களைப் படிக்கச்சொல்லி நிர்ப்பந்தித்து அவர்களுக்குப் புத்தகம் சம்பளம் முதலானவைகளைத் தாமேவாங்கிக்கொடுத்தும், தம்முடைய ஆஸ்திபாஸ்தியில் அரைக்கால்பங்கைக் கரையவைத்துவிட்டார்.

(2) இதுவும்போதாமல், அந்தப் பெண்களுக்கு வயதுவந்த பிறகும் அவர்களைச் சில காலம் ஆதரித்து அவரவர்களுடைய அந்தஸ்துக்கேற்ற அநாதபிள்ளைகளைத் தேடி பத்துப்பத்து வராகன் செலவுசெய்து கலியாணமும் செய்துவைத்து தம்முடைய ஆஸ்திபாஸ்தியில் அரைக்கால்பங்கைக் கரையவைத்துவிட்டார்.

(3) இதுவுமல்லாமல், திக்கில்லாத அநாத கிழவர்களுக்கெல்லாம் இவருடைய வீடு தருமசத்திரம். இவர்களுக்கென்று பிரத்தியேகமாக தமமுடைய ஆஸ்தியில் ஒரு அரைக்கால்பங்கை பாங்கியில் கட்டிவைத்து அதில் வருகிற வட்டியைக்கொண்டு அந்தக் கிழப்பிணங்களுக்குச் சாறுஞ்சோறுமாகப் போட்டு அவைகள் வலித்துக்கொண்டால் ஒவ்வொரு வராகன் செலவுசெய்து தகனசமஸ்காரமும் செய்துதொலைப்பார்.

இதுவுமன்றி, இவர்கையின்கீழ் எப்போதும் ஒரு மருத்துவிச்சியைச் சம்பளங்கொடுத்து வைத்திருந்தார். ஊரில் பிள்ளை பெற்றுக்கொள்கின்ற எளிய ஸ்திரீகளுக்கெல்லாம் தருமத்திற்கு மருத்துவம்பார்க்க ஏற்பாடு.

(4) பரம்பரை பரம்பரையாய் சண்டைபோட்டுப் பிச்சைகேட்கின்ற பண்டாரங்களும் தாசரிகளும் இவர்கள் வீட்டுவாயிலையும் எட்டிப்பார்க்கக்கூடாது.

(5) இந்த அம்மாளைப் பார்க்கவருகின்ற மகாராசிகளை அன்புடன் மரியாதைசெய்து நல்லவார்த்தைகளைப் பேசி காப்பித்தண்ணீர் முதலான உபசாரங்கள் ஒன்றுஞ்செய்யாமல் வெறுந்தாம்பூலம் கொடுத்து வழிவிடுவார்.

(6) நாலுபெண்கள் ஒன்றாயிருக்குமிடத்தில் இந்த அம்மாள் வரும்படியாக நேரிட்டால் அவர்களுடைய சேலைகள் நகைகள்முதலியவற்றை மெய்ச்சிக்கொள்வதில்லை. குழந்தைகுட்டிகளுடைய க்ஷேமத்தை விசாரித்துவிட்டு வேறுவிநோதங்கள் பேசாமல்இருப்பர்.

(7) எவராகிலும் இந்த அம்மாளைக் கடன்கேட்டால் வேறு இதமானவார்த்தைகளைப்பற்றிப் பேசியிருப்பர். தமக்கு என்ன அவசரமாக இருந்தபோதிலும் ஒருவரை இலக்ஷியஞ்செய்து கடன்கேட்டு வாங்கியாகிலும் அந்தக்காரியத்தை நடத்தவேண்டுமே என்கிற சிரத்தையுங்கிடையாது.

(8) தங்கள் அதிகாரத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் நன்றாய் வியாசம்எழுதுகின்ற பெண்களுக்கும், செம்மையாய் நிலாச்சோறு சமைக்கின்ற பெண்களுக்கும் இரவிக்கைசொக்காய் பாவாடைமுதலியவற்றை நன்றாகத் தைக்கின்ற பெண்களுக்கும், வருஷவாரியில் வெகுமானம் கொடுக்கும்படியாகத் தம்முடைய ஆஸ்திபாஸ்தியில் வீசம்பங்கை ஒரு பண்டாக (Fund) ஏற்படுத்திவைத்தார்.

(9) ஊரிலுள்ள வயதானபெண்கள் இரவல் வாங்கிப்படிக்கும்படி தம்முடைய ஆஸ்தியில் கால்பங்கைச் செலவழித்து நான்கு

பீரவுநிறைய தமிழ்ப்புஸ்தகங்களை ஒவ்வொன்றுக்கு ஐந்துபிரதியாக வாங்கி அடுக்கிவைத்திருந்தார்.

(10) இத்தனையும் போதாதென்று வெகு விரயஞ்செய்து கொஞ்சம் வைத்தியமுங் கற்றுக்கொண்டார். இவர் வைத்தியத்தைப்பார்த்த உடனே மாத்திரைகளெல்லாம் யாத்திரையாகிவிட்டன; சிந்துரமெல்லாம் அந்தரமாய்விட்டன; பற்பமெல்லாம் அற்பமாய்விட்டன; எண்ணெயெல்லாம் மண்ணைச்சேர்ந்தன; வீரமும் பூரமும் சாரமற்றன; ரசகந்தமெல்லாம் மசகந்தமாயின; மந்திரவாதிகளெல்லோரும் தந்திரவாதிகளாக எண்ணப்பட்டனர்; சூன்னிய முதலியன சுத்த சூன்னியமாய்விட்டன; பேய்பிசாசுகளெல்லாம் பேசாமல் பறந்தோடிவிட்டன. ஏழைகள் வைத்தியஞ்செய்துகொள்ளவந்தால் அவர்களுக்கு வயிறுநிறையச்சோறுபோட்டு அனுப்புவர். மகாராஜர்கள் வைத்தியத்துக்கு வந்தால் அவர்களுக்கு உபவாசவிரதம் வைத்துக்கொடுப்பார்.

(11) இப்படியாகத் தம்முடைய ஸ்திதியை முக்கால்பங்கு செலவழித்து விட்டுக் கால் பங்கைத் தம்முடைய பிள்ளைக்கும் பெண்ணுக்கும் ஆபத்துக்காலத்தில் உதவும் ஆஸ்தியாக வைத்துவிட்டார்.

இந்தம்மாளிடத்தில் உள்ள சில நடக்கைகளை ஊரார் வெகுவாய் சிலாகித்துப் பேசுவதுண்டு. அவைகளைக்கூட நான் மேலே படித்த ஏட்டில்தான் சேர்ப்பேன். ஏனென்றால் "சுயகாரியத்தைப்பாராதவன் சதையாலொரு புழுப்புழுப்பான்" என்பதே என்னுடைய சித்தாந்தம். ஊரில் எளிய ஸ்திரீகள் நோயால் வாதைப்பட்டு வீட்டைவிட்டு நகரக்கூடாமலிருந்தால் தையனாயகி யம்மாள் வீடுவீடாக நுழைந்து அவர்களுக்குப் பரிகாரஞ்செய்து வேளைச்சோறு வேளைக்கில்லாமல் தம்முடைய சுகத்தைக்கெடுத்துக்கொள்வதுண்டு. "விரதங்கெட்டாலும் சுகம் தக்கவேண்டும்" என்கிற முதுமொழிமாத்திரம் அந்தம்மாளுக்கு நினைவிலிருக்கிறதேயில்லை. தன்வீட்டுக்கதவைப்பிடுங்கி அயல்வீட்டுக்கு வைத்துவிட்டுப் பொழுது விடிகிறமட்டில் நாயோட்டுகிற புண்ணியவதி வேண்டுமானால் இவளைத்தவிர எங்கள் ஊரில் இன்னொருவர் அகப்படுவது அருமையிலும் அருமை.

இந்த அம்மாளிடத்தில் இன்னொரு அக்கிரமம் உண்டு. நல்லபெண்கள் சோலிக்கு அவ்வளவாய்ப் போகிறதில்லை. தண்டுபஜாரிகளை க்ஷேமலாபம் விசாரிப்பதும் அவர்கள் வீட்டுக்கலகங்களை ஒழிப்பதும் அவர்களை அவர்களுடைய புருஷருக்கு அடங்கிநடந்து ஐக்கியமாகும்படி செய்வதும் இவருடைய விரதம். பள்ளிக்கூடத்தில் படிக்காத மட்டிக்கட்டைகளிடத்தில்தான் இந்த உவாத்தியார்க்கு அதிக பிரீதி. அப்படிப்பட்ட அருக்கட்டைகளைத்தான் இவருடைய வீட்டில் அடிக்கடி பார்க்கக்கூடும்.

இந்தப் புண்ணியவதியின்மேல் இன்னும் நான் பலவிதமாகசொன்னால் உங்களுக்குக் கோபமுண்டாகும். ஆனாலும் எனக்கென்ன கொடுமையா. இப்படியாகப் பலவிதத்தில் உழைத்துவரவே அவருடைய உடம்பு இளைத்து ஒரு பிரமாதமான நோய்கண்டது. ஒரு வைத்தியபண்டிதர் இவருக்கு "அம்மா! நீங்கள் ஜனநெருக்கமில்லாமல் ஜல சௌக்கியமுள்ள குளிர்ச்சியான பெங்களூர் முதலான இடத்தில் குறைந்தது மூன்றுமாதகாலமாகிலும் போயிருந்து ஒரு வேலையு மில்லாமல் வேளைபோஜனம் வேளைக்குச் சாப்பிட்டுக்கொண்டு காலைமாலைகளில் காற்று வாட்டமான வெளி இடங்களில் உலாவிக்கொண்டு நிம்மதியாக இருந்தால் உங்களுடைய உடம்பு உரம்பெறும். இன்னும் நெடுநாளைக்கு உங்களுடைய தருமபரிபாலனங்களும் செம்மையாக நடக்கும். இதற்குப் பின்வாங்கினால் மோசம்வரும்.'' என்று உபாயஞ் சொல்லிக்கொடுத்தார். இந்தம்மாளும் பாவம் இத்தனை காரியங்களை விட்டுவிட்டு மூன்றுமாசம் வெளியில்போய் சும்மா இருக்க மனமில்லாவிட்டாலும் நெடுநாளாய் மறந்துபோயிருந்த "விரதங்கெட்டாலுஞ் சுகந்தக்கவேண்டும்" என்கிற முதுமொழியை நினைத்துக்கொண்டு, தங்களுடைய காரியங்களை நடத்தும்படி தகுந்தவர்களை ஏற்படுத்திவிட்டு தம்முடைய குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு பெங்களூருக்குப்போனார்கள்.

கிழவன்.



## கோபம்வந்தால் கோரம்வரும்.

குழந்தைகளே, உங்களுக்கு ஒரு உண்மையான கதைசொல்லுகிறேன், கேளுங்கள்:—

மதுரையில் ஆவணிமூல வீதியில் சுப்பு என்னும் ஒரு பெண் இருந்தாள். அவளுக்குக் கோபம் வந்தால் அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் எதிரே வெடிக்கும். அவளுக்கு அடிக்கடி கோபம் வந்துகொண்டிருந்ததனால் கோபச்சுப்பு என்று பெயர் வைத்தார்கள். அவள் தாயார் கோபத்தைவிட்டு சாந்தமாயிருக்கும்படி அவளுக்கு பலமுறை சொல்லிக்கொண்டு வந்தாள். ஆனால் என்னசொல்லியும் அவள் கேட்கவில்லை.

இப்படியிருக்க ஒருநாள் அவள் கொலுவின்சாமான்களை எடுத்துத் தனக்கு முன்னால் வைத்துக்கொண்டிருந்தாள். அவைகளில் மண்பொம்மை ஒன்று வெகு அழகாயிருந்தது. அதை அவளுடைய சின்னத்தம்பி ஒருவன் ஆசையோடு எடுத்தபோது கைதவறிவிழுந்து உடைந்துபோய்விட்டது. இதைக் கண்டதும் அவளுக்கு அடங்காதகோபம் வந்துவிட்டது. கண்கள் சிவந்து தீப்பொறிபறந்தது. உதடு துடிக்கமுகத்தில் இரத்தம் சுரந்தது. பற்களை நெறுநெறென நெறித்தாள். அப்போது அவள்முகம் பார்வைக்கு வெகு பயமாயிருந்தது.

உடனே பக்கத்தில் இருந்த அவள் தாயார் இது தான்சமயமென்று ஒருகண்ணாடியை எடுத்து அவள் கண்களுக்கு முன்வைத்தாள். கண்ணாடியில்கண்ட உருவம் தனக்கு மிககோரமாகப்பட்டது. படவே அவள் கோபம் போனவழி தெரியாமல் போய்விட்டது.

தான் அதிக கோரமாகக் காணப்பட்டதை நினைத்து வெட்கப்பட்டு துணியால் தன் முகத்தை அவள் மறைத்துக்கொண்டுவிட்டாள்.

அவள் தாயார் தன் மகளைப்பார்த்து, "சுப்பு, பார்த்தையா! உன்முகம் எவ்வளவு கோரமாயிருக்கிறது. இப்படியே நீ கோபிப்பாயானால் உன் முகம் எப்போதும் கோரமாகவே போய்விடும்" என்று சொன்னாள்.

அவள் தாயார்சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அவளைக் கத்தியைக்கொண்டு குத்தினாற்போலிருந்தது. அவள் தலைகுனிந்தபடி அழுதுகொண்டு "இனிமேல் நான் ஒருபொழுதும் கோபித்துக்கொள்ளுகிறதே யில்லை. கோபம் இவ்வளவு கோரமாயிருக்குமென்று எனக்குத்தெரியாது" என்று மகா விசனத்தோடு சொன்னாள். அதுமுதலாக எதற்கும் அவள் கோபிக்கிறதேயில்லை. அதனால் அவளுக்கு கோபச்சுப்பு என்று இருந்தபெயரும் மாறி எல்லாரும் அவளைச் சுப்புலெட்சுமி என்று பெயர்சொல்லி அழைத்துக் கொண்டாடினார்கள்.

சுப்புலெட்சுமி எப்படி தன்கோபத்தை மாற்றினாளோ அப்படியே நாமும் நம்முடைய கெட்ட குணங்களை எல்லாம் மாற்றிக்கொள்ளப் பிரயாசப்படவேண்டும்.

இங்ஙனம்,

உங்கள் செல்ல மாமா.

## அறிவைப் பரவச்செய்யும் சபை உபகாரச் சங்கத்தார்க்கு.

**ஒரு நண்பர் எழுதுகிறார்.**—விவேகசிந்தாமணியைப்போன்ற தமிழ்ப் பத்திரிகைகள் உதித்து நடைபெற்று தமிழ் உலகத்திலெங்கும் மேன்மேலும் பரவிவருவது தமிழ் பாஷாபிவிருத்திக்கு ஒரு பெரும் சாதனமாயிருப்பதுபற்றியே துணிவுடன் இப்போது எடுத்துரைக்கலாயினேன். இதை நமது நண்பர்கள் எல்லாரும் தயவுசெய்துசற்று வாசித்துப்பார்க்கவேண்டும். சமாசார பத்திரிகைகளால் ஒரு நாட்டுக்கு உண்டாகக்கூடிய நன்மைகள் அளவிறந்தன. அவைகளையெல்லாம் இங்கெடுத்துரைத்தால் பெருகும். ஆனால் ஒன்றுமட்டும் சொல்லக்கூடும். அஃது யாதெனில் ஐரோப்பியநாடுகளில் இவ்வித பத்திரிகைகளால் உண்டாகும் அனுகூலங்களை யோசித்துப்பார்க்கும் இடத்தில் அந்நாடுகள் இப்போது அடைந்திருக்கும் நாகரிகமும் ஆதிக்கியமும் செல்வாக்கும் பெரும்பான்மையும் இப்பத்திரிகைகளாலேயே வந்தனவென்று ஐயந்திரிபறச்சொல்லலாம். அம்மாதிரி நம் நாடுகளும் அடையுமென்று நான் நம்புகிறேன். அவைகள் மூலமாகத்தான் சகல மத, சாஸ்திர, ராஜாங்க, வித்தியாபிவிருத்தி சமாசார விஷயங்களும் பொதுஜன நன்மைக்குரிய மற்றெல்லா காரியங்களும் அன்றாடு நடந்துவரும் சங்கதிகளும் எத்தனையோ ஜனதூரமிருப்பவர்களுக்குங்கூட எளிதில் உடனே புலப்படுகின்றன. இப்பத்திரிகை பிறந்து பன்னிரண்டு மாதமாகிறது. இது சென்னை முதலிய அனேகவிடங்களிலுள்ள தனகனவான்களுடைய பொருளுதவி சொல்லுதவியால் நடந்து வருகிறது.

நமது சிந்தாமணியான சிறுகுழந்தை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருவதைப்பற்றி மிகக்களிப்புற்றேன். சென்ற ஏப்பிரல்மாத சஞ்சிகையில் அறிவைப்பரவச்செய்யும் சபைக்கு இடப்பள்ளி, மதுரை, ரங்கூன்முதலிய அனேக விடங்களில் பல நண்பர்கள் வேலைசெய்து வருவதைப்பற்றி அவர்களுக்கு நான் வந்தனமளிக்கின்றேன். சிநேகிதர்களே! கனவான்களே! தனவான்களே இவ்வளவு முக்கியமான பாஷாபிவிருத்தி விஷயமாய் நீங்கள் அங்கங்கு சங்கஞ்சேர்த்து மிக ஊக்கத்துடன் முயற்சிசெய்து வருவீர்களென்று நம்புகிறேன்.

இச்சங்கம் என்றென்றைக்கும் மேன்மேலும் வளர்ச்சியுற்று தமிழ் உலகத்திற்கு விளக்குப்போலிருந்து அறிவும் இன்பமும் பரப்பிநிற்க எல்லாம் வல்ல ஸர்வேசுவரன் அருள்புரியும்படி பிரார்த்திக்கிறேன்.

## விசேஷக்குறிப்புகள்.

**சட்டநிருபண சபை எலெக்ஷன்கள்.** சென்னை சட்டநிருபணசபை மெம்பர் ஸ்தானத்துக்கு சென்னை முனிசிபாலிடியாரும், சேம்பர் ஆவ் காமர்ஸ் என்னும் வியாபார சங்கத்தாரும், சென்னை யூனிவர்ஸிடி சங்கத்தாரும், வெளிஜில்லா வடபிரிவிலுள்ள முனிஸிபாலிடிகள், டிஸ்திரிக்ட்போர்டுகளும், தென்பிரிவிலுள்ள முனிசிபாலிடிகள், டிஸ்ட்ரிக்ட் போர்டுகளும், தனித்தனியாக 7-பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து சிபார்சு செய்யவேண்டுமென்று அதற்காக சென்னை கவர்ன்மெண்டார் தயார்செய்து பிரசுரித்த விதிகளை விவேகசிந்தாமணியில் பிரசுரித்திருந்தோமே.

**சென்னைமுனிஸிபாலிடி பிரதிநிதி.** அவ்விதிகளின்படி சென்னை முனிசிபாலிடியார் இரண்டுதரம் மீட்டிங்குகூடி மூன்றுதரம் எலெக்ஷன்செய்தும் சரியாக ஒருவரைத் தெரிந்தெடுக்க முடியாமல் அவர்கள் நடத்தையைப்பார்த்த ஊரார் சிரிப்பதற்கு இடங்கொடுத்துப் பின்னர் கடைசியாகக்கூடிய மீட்டிங்கில் ம-ா-ா-ஸ்ரீ பி. இரங்கையநாயுடுகாருவை விதிப்படி சட்டநிருபணசபை மெம்பர் ஸ்தானத்துக்குத் தெரிந்தெடுத்துச் சிபார்சுசெய்தார்கள். அவரோடு போட்டிபோட்ட ராய்பஹதூர் பி. அனந்தாசார்லு சொற்பவோட்டுகள் குறைவால் தோல்வியடைந்து போனார். ம-ா-ா-ஸ்ரீ இரங்கைய நாயுடுகாருவை சென்னைநகர் முனிஸிபாலிடியார் சிபார்சுசெய்ததை யங்கீகரித்து கவர்ன்மெண்டாரும் அவரை சட்டநிருபணசபை மெம்பராக நியமித்து அவர் நியமனத்தை கெஜட்டில் பிரசுரஞ் செய்துவிட்டார்கள். இவ்விராஜதானியில் முதல்முதல் சட்ட நிருபண சபைக்கு நியமிக்கப்பட்ட ஜனப்பிரதிநிதி ம-ா-ஸ்ரீ பி. இரங்கையநாயுடுவே. இவர் முன்காலத்துமஹாவூர். ஆனால் இக்காலத்துப் பொதுவிஷயங்களிலெல்லாம் முதலாக நின்று பொதுநன்மைக்குழைத்து வந்தார். இவரை முதல்முதல் ஜனப்பிரதிநிதியாக நியமித்தது எல்லாவற்றிற்கும் ஏற்கையாகவே யிருக்கிறது. இவரைவிட நல்லபிரதிநிதியாக இப்பொழுது நாம் யாரையும் நினைக்கக்கூடவில்லை.

**'சேம்பர்ஆவ் காமர்ஸ்'பிரதிநிதி.** சென்னை முனிஸிபாலிடிக்குப் பின் "சேம்பர்ஆவ் காமர்ஸ்" என்னும் அங்கிலேயவர்த்தகசங்கத்தார் மிஸ்டர் பாய்ஸன் அவர்களை அவருடைய பிரதிநிதியாகத் தெரிந்தெடுத்துச் சிபார்சுசெய்தார்கள். அவரையும் கவர்ன்மெண்டார் அங்கீகரித்து அவர் நியமனத்தை முன்னமே கெஜட்டில்பிரசுரஞ்செய்து விட்டார்கள்.

**வெளிஜில்லா முனிஸிபாலிடிகளின்பிரதிநிதிகள்.** இவ்விராஜதானியின் வெளிஜில்லாக்கள் சட்டநிருபணசபை எலெக்ஷனுக்காக செங்கற்பட்டிலிருந்து அதற்கு வடக்கேயுள்ள ஜில்லாக்கள் வடபிரிவாகவும் தென்னாற்காட்டிலிருந்து அதற்குத் தெற்கேயுள்ள ஜில்லாக்களெல்லாம் தென்பிரிவாகவும் கவர்ன்மெண்டாரால் பிரித்தேற்படுத்தப் பட்டதைப்பற்றிமுன்னமே சொல்லியிருக்கிறோம். வடபிரிவு முனிசிபாலிடிகள் 25-ன் பிரதிநிதிகளும் நாளது ஜூலை 17௳ பெஸ்வாடாவில்கூடி ம-ா-ா-ஸ்ரீ ந. சுப்பராவ் அவர்களை முனிசிபல் பிரதிநிதியாகஇருக்க சட்டநிருபண சபைமெம்பர்ஸ்தானத்துக்குத் தெரிந்தெடுத்துச் சிபார்சு செய்திருக்கிறார்கள். அந்த எலெக்ஷனில் ம-ா-ா-ஸ்ரீ ந. சுப்பராவுக்கு 20 வோட்டுகளும், ம-ா-ா-ஸ்ரீ ஜம்புலிங்க முதலியாருக்கு 5 வோட்டுகளும் கிடைத்தன. ராய்பஹதூர் சபாபதி முதலியார் முனிசிபாலிடிகளுக்கு பிரதிநிதியாக நிற்காமல் கடைசிநிமிஷத்தில் விலகிவிட்டார். தென்பிரிவு முனிசிபாலிடிகள் 30-ன் பிரதிநிதிகளும் அதே தேதியில் திருச்சிறுப்பள்ளியில் கூடினார்கள். முதல் எலெக்ஷன் திர்ப்திகரமாயில்லாமையால் இரண்டாந்தரம் எலெக்ஷன் நடத்தப்பட்டது. அதில் மதுரை ஹைகோர்ட்டு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ ஆர். இராமசுப்பய்யர் அவர்களுக்கு 16 வோட்டுகளும் சேலம் ம-ா-ா-ஸ்ரீ விஜயராகவாசாரியார் அவர்களுக்கு 14 வோட்டுகளும் கிடைத்தன. ம-ா-ா-ஸ்ரீ இராமசுப்பய்யர் தெரிந்தெடுக்கப்பட்டவரானார்.

**டிஸ்திரிக்ட் போர்டுகளின் பிரதிநிதிகள்.** வடபிரிவு டிஸ்திரிகட்போர்டுப் பிரதிநிதிகள் நாளது ஜூலை 18௳ மத்தியானம் பெஸ்வாடாவில் கூடி எலெக்ஷன் செய்ததில் ராய்பஹதூர் சபாபதிமுதலியார் வடபிரிவு டிஸ்திரிக்ட் போர்டுகளின் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டவரானார். தென்பிரிவு டிஸ்திரிகட் போர்டுகளின் பிரதிநிதிகள் அதேதேதியில் திருச்சிறுப்பள்ளியில் கூடி எலெக்ஷன் செய்ததில் தஞ்சாவூர் ஹைகோர்ட்டு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ கலியாணசுந்தரம் ஐயர் அவர்கள் தென்பிரிவு டிஸ்திரிக்ட் போர்டுகளின் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

**யூனிவர்ஸிடி சங்கத்தாரின் பிரதிநிதி.** சென்னை யூனிவர்ஸிடி ஸெனேட்சபையார் அவர்களுடைய பிரதிநிதியாக ஒருவரைத் தெரிந்தெடுத்து சிபார்சு செய்ய நாளது ஜூலை 20௳ மீட்டிங்குகூடினார்கள். அப்பொழுது ராய்பஹதூர் பூண்டி இரங்கநாதமுதலியார் எம். ஏ. அவர்களுக்கு 18-வோட்டுகளும் டாக்டர் மில்லருக்கு 18-வோட்டுகளும் கிடைத்தன. இரண்டாந்தரம் வோட்டெடுத்ததிலும் அப்படியே யிருந்தது. அதன்மேல் அக்கிராசனாதிபதி ஸ்தானத்திலிருந்தவைஸ்சான்ஸெலர் அவருக்குள்ள அதிகப்படி வோட்டை ஒருவருக்குக்கொடுத்து எலெக்ஷனை முடிக்கப்போனார். அப்பொழுது ராய்பஹதூர் இரங்கநாதமுதலியார் அவர்கள் டாக்டர் மில்லர் சட்டநிருபணசபையில் மெம்பராகவிருக்கப் பிரேரேபிக்கப்படுவாரென்று தெரிந்திருந்தால் நான் அவருக்குப் போட்டியாக நின்றிருக்கமாட்டேன் என்றுசொல்லி எலெக்ஷனிலிருந்துதான் நீங்கிப்போவதாகச் சொன்னார். அவர்நீங்கிப்போகவேவைஸ்சான்ஸெலர்டாக்டர்மில்லருக்கு அவருடைய அதிகப்படி வோட்டைக்கொடுத்து அவரே சட்டநிருபணசபை மெம்பர் ஸ்தானத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்டவரானாரென்று தெரிவித்தார்.

Printed by C. Perumal Nadar, at the C. N. Press, Madras.

"கற்றோர்கடாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

# விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். II. 1893ஹு ஆகஸ்டுமீ. இலக்கம். 4

## ஜோதிஸ்.

### 1. சூரிய ஜோதிஸ்.

சூரியன் இருவகைப்படும்.

(1) வாஸ்தவமான சூரியன்.

(2) வாஸ்தவமில்லாத சூரியன்.

அந்தகாரம் நிறைந்த இராத்திரி கொஞ்சம் கொஞ்சம் கடந்து விடியற்காலம் சமீபிக்கும்போது நேர்கிழக்கேயாவது அல்லது அதற்கிருபுறத்திலும் வடகிழக்கேயாவது தென்கிழக்கேயாவது பார்த்தோமானால் ஆரம்பத்திற்கு சற்று வெளுத்துக் காண்கிறது. கொஞ்சங் கழிந்தபிற்பாடு மீண்டும் பார்ப்போமாகில் ரோஜாநிறம்போன்றதும் பொன்னிறம் போன்றதுமான கிரணங்கள் கதிர்போலெழும்பி ஆகாயத்தை நிறப்பி மேகங்கட்கு சுவர்ணமுலாம் பூசி பளபளவென்று பிரகாசிப்பதைக் காண்கிறோம். இன்னும் கொஞ்சம் சென்று பார்க்கும்போது இரத்தவர்ணமும் பொன்னிறமும் கலந்தாற்போல வெகு அழகானதும் சோபிதமுள்ளதுமான ஒரு பெரிய ஜொதிஸ் கோழிமுட்டைவடிவமாக ஆகாயத்தில் மிதந்து காண்கிறது. இப்படி மிதந்துகாணவே மலைகளின் சிகரங்களெல்லாம் பொன்னுடைட் பரப்பி இலைகளும் தளிர்களும் ஒளிவீச கடல்களும் ஏரிகளும் காயல்களும் மற்ற நீர்ப்பரப்புகளும் விடியற்காலத்து இளங்காற்றால் சலனமுற்று இளரவியின் பொன்கிரணத்தைச்சலித்து நின்று வெகு சோபிதமாகவும் ஸ்ரீங்காரமாகவும் காண்கின்றன. இந்த மனோகரமான காக்ஷியெல்லாம் ஆகாயத்தில் மிதந்து காண்கிற கோழிமுட்டைவடிவமாயுள்ள ஜோதிஸ்ஸின் குணமேயல்லாது வேறொன்றில்லை. ஆனால் இப்படி மிதந்து காண்கிற ஜோதிஸ்ஸானது வாஸ்தவமான சூரியன் அல்ல. அதை யெவ்வளவுபார்த்தாலும் கண் கூசுகிறதில்லை. அது வாஸ்தவமான சூரியனுடைய பிரதிபிம்பம். என்ன! எவ்வளவோ வட்டமாகவும் சோபிதமாகவும் விரிந்து காண்கின்ற ஜோதிஸ்ஸானது வாஸ்தவமான சூரியன் அல்லவென்று ஒருவன் சொன்னால் அதை யெப்படி நம்புகிறதென்று ஜனங்கள் ஆச்சரியப்படவும் சந்தேகிக்கவும் கூடும். அப்படி சங்கிப்பதற்கு யாதொரு காரணமுமில்லை. ஒரு பஞ்சபாத்திரத்தில் ஒரு பவுனையிட்டு அதினிறைய ஜலம்வார்த்து நீர்ப்பரப்பானது அமர்ந்திருக்கும் சமயம் பஞ்சபாத்திரத்தைவிட்டு கொஞ்சம் விலகிப்பார்த்தோமானால் நாம் இட்ட பவுனானது ஜலத்தில் மிதந்துகாணும். அப்போது நாம் இட்ட பவுனானது ஜலத்தின் பரப்பிற்கு வந்துவிட்டதாய் சொல்லலாமா? சொல்ல முடியாது. அதுபோல் வாஸ்தவமான சூரியன் கண்ணிற்குத்தட்டாமல் கீழேயிருக்கிற சமயம் பூமியைச்சுற்றிலும் இருக்கும் வாயுவானது சூரி

யன் கிரணங்களை வட்டமாய்த்திரட்டி அங்கே ஒரு ஜோதிஸ்ஸாய்க் காண்பிக்கிறது.

வாஸ்தவமான சூரியன் கிழேயிருக்கும்போது பூமியைச்சுற்றிலும் உள்ள வாயுவானது அதின் கிரணங்களைத்திரட்டி கோழிமுட்டை வடிவமாய்க் காண்பிக்கிற யதார்த்தமில்லாத சூரியமண்டலமும் உண்டென்பதற்கு ஹேதுவாக பின்வருகிற திருஷ்டாந்தத்தை இவ்விடம் எடுத்துக்காட்டலாம். சிலசமயங்களில் உதயத்திலாவது அஸ்தமனத்திலாவது ஒன்றிற்கதிகமான சூரியவட்டங்கள் காண்கிறோம். வாஸ்தவத்தில் இவ்வட்டங்களும் கோழிமுட்டை வடிவங்களாகத்தான் இருக்கின்றன. 1888-ம் வருஷம் 'சித்திரைமாசம் 15-ந்தேதி (அன்றுபுதன்கிழமையென்றுதோன்றுகிறது)சாயங்காலம் 6-மணிசமயம் மேற்சொல்லியபடி வெகு அழகானதும் மகா சோபிதமானதுமான இரண்டு சூரியமண்டலங்கள் கண்டேன். அந்தத் தோற்றமானது அதிகரிக்கப்பட்டால் 15-விநாடி நீடித்திருந்திருக்கும். என்னோடிருந்த யாவர்க்கும் காண்பித்தேன். என்னைப்போலவே அவர்களும் ஆச்சரியப்பட்டார்கள். இப்பேர்ப்பட்ட அபூர்வகாக்ஷிகள் நம்முடைய சாஸ்திர புஸ்தகங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. ஐரோப்பிய சாஸ்திரிகளும் சாத்தியமென்றே இவைகளை ஒப்புக்கொள்ளுகிறார்கள். வராஹசம்ஹிதையில் 47-வது அத்தியாயத்தில் 11-வது வசனத்தில் பின்வருகிற மாதிரி எழுதப்பட்டிருக்கிறது.

"இரண்டு சந்திரன் ஆகாயத்தில் காணப்பட்டால் பிராம்மணன் க்ஷேமம் அடைவார்கள். இரண்டு சூரியன் காணப்பட்டால் க்ஷத்திரியருக்குள் சண்டையுண்டாகும். மூன்று அல்லது நான்கு சூரியன் கண்டால் பூலோகம் முடிந்துபோம்."

இந்த வசனத்தால் நம்முடைய முன்னோர்கள் ஒன்றிற்கதிகம் சூரியமண்டலங்கள் கண்டிருக்கவேண்டுமென்று வெளியாகிறது. கோழிமுட்டைவடிவமாகக்காணப்பட்ட இரண்டு சூரியமண்டலங்களும் தனித்தனியே ஒவ்வொரு வாஸ்தவமான சூரியனாக இருந்தால் அப்போது நமக்கிரண்டு சூரியன் இருக்கவேண்டும். மூன்று நான்கு சூரியமண்டலங்கள் காணப்பட்டால் மூன்று நான்கு சூரியன் நமக்கிருக்கவேண்டும். அப்படியல்லவென்று நமக்கு நன்றாய்த்தெரியும். வாஸ்தவமான ஏக சூரியனுடைய பிரதிபிம்பமென்று தீர்மானித்தாற் பிழைவராது. நாலு புறத்திலும் கண்ணாடிச்சில்லுள்ள லாந்தரில் ஒரு திரியை ஏற்றிவைத்தால் இரண்டு கண்ணாடிச்சில்லில் ஒருவனுக்கு இரண்டு ஜோதிஸ் கதிர்போல் காணும். இடம்பெயர்ந்து பார்த்தால் வேறே இரண்டு கண்ணாடிச்சில்லில் முன் சொன்னபடி கதிர்போலுள்ள ஜோதிஸ் காணும். ஒரு குளக்கரைக்குச்சென்று நாம் அக்குளத்தைச் சுற்றி வரும்போது சுற்றி வரும் இடமெல்லாம் ஒரு சூரியன் காண்கிறது. சூரியபிம்பங்கள் பல இடங்களிற் பிரதிபலித்துக் கண்டாலும் வாஸ்தவத்தில் நமக்குள்ள சூரியன் ஒன்றுதான். இரண்டு கண்ணாடித்துண்டுகளைத் தரையில்வைத்து அவைகள் தரைப்பரப்போடு திரிகோணமாகும்படி இரண்டையும் ஒருகோணமுனையிற் சேரும்படி சாய்த்து நிறுத்துகிறோம். அதற்குள் ஒரு மசிக்குப்பியைவைத்து காலியான இரு புறத்திலும் இரண்டு கண்ணாடித்துண்டுகளை வைத்து அடைக்கிறோம். ஒரு கண்ணாடித் துண்டுவழி பார்த்தோமானால் ஒன்றின்பின் ஒன்றாக அநேக மசிக்குப்பிகள் காணப்படுகின்றன. ஆனால் இந்தத்தோற்றம் லாந்தரிற் காணப்படுகிற ஜோதிபோல் நாலுபக்கத்திலும் காணப்படாமல் ஒரே ரேகையில் ஒன்றின்பின் ஒன்றாய் அநேக மசிக்குப்பிகளாய்க் காணப்படுகின்றது. அதாவது ஒரே ரேகையில் பல பிரதிபிம்பங்கள் காணப்படுகிறதும் நாலுபக்கங்களிலும் பிரதிபிம்பங்கள் காணப்படுகிறதும் பிரதிபிம்பங்கள் காட்டக்கூடிய பதார்த்தநிலைக்குத் தகுந்தபடி இருக்கின்றது. இதைப்பற்றி பின்னொரு சந்தர்ப்பத்தில்விஸ்தாரமாய்ச்சொல்கிறேன். 1888-ம் வருஷம் சித்திரைமாசம் 15-ந்தேதி பார்த்த இரண்டு சூரிய மண்டலங்களும் ஒன்றோடொன்று சரிந்து காணப்பட்டன. இதைப் பின்வருகிற படத்தினாற் காண்பிக்கலாம்.

படம் - க.



இரண்டுமண்டலங்கட்கு மத்தியில் ஒரு பெரிய மயிரிழைபோன்ற கருத்தமேகம் இருந்தது. இதைப்பார்த்தவுடன் எனக்குத்தோன்றினதென்னவென்றால் பின்வருகிற படத்திற்காணப்படுகிறதுபோல் சுற்றிலும் நாலு மண்டலங்கள்காணக்கூடியதோற்றத்தில் இரண்டு மாத்திரம் கண்டாற்போலிருந்தது.

படம் - உ.



அதாவது ஆகாசத்தில் சூரியஜோதிஸ்ஸை 'கோழிமுட்டையாகாரமான மண்டலங்களாகத் திரட்டிக் காண்பிக்கக்கூடிய வாயு ஸ்திதிகள் இருபுறத்தில்மாத்திரம் இருந்தபடியால் இரண்டு மண்டலங்கள் மாத்திரம் காணப்பட்டு மற்ற இரண்டுபக்கங்களிலும் மேற்படி வாயுவாம்சங்கள் இல்லாதபடியால் அங்கே காலியா யிருந்ததென்று சொல்லவேண்டியிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் மேற்கூறிய அம்சங்கள் இருந்து நாலு சூரியமண்டலங்களை ஒரேகாலத்திற் காட்டக்கூடும். இந்தமாதிரியினால் நாம் முந்திச்சொன்ன லாந்தர் திருஷ்டாந்தம் சரியாய் முடிகிறது. மசிக்குப்பி திருஷ்டாந்தமும் 1888-ம் வருஷம் சித்திரைமாசம் 15-ந்தேதி சாயங்காலம் ஒரு மாதிரியாய் நிறைவேறிற்றென்றே சொல்லலாம். 15-விநாடிக்குத்தான் மேற்கூடிய இரட்டை சூரியத்தோற்றம் நீடித்திருந்ததென்று முன்னமே சொன்னேன். இந்தத்தோற்றம் மறைந்தபின்பு அடிவானத்திலிருந்து 10, 15 அம்சத்திற்குயரே வட்டவட்டமாக இரண்டு ஜோதிவட்டங்கள் ஒன்றின்மேலொன்றாய்க் கொஞ்சம் இடைவிட்டு ஒரேரேகையில் காணப்பட்டன. அதற்குமேலும் கொஞ்சம் நசுக்குண்ட வட்டம்போல் ஒன்றோ இரண்டோ வட்டங்கள் காணப்பட்டன.

மேற்கண்ட சங்கதிகளால் வாஸ்தவமில்லாத சூரியமண்டலங்கள் அதாவது சூரிய வட்டம்போல் ஜோதிராகாசங்கள் காணலாமென்று விளங்குகிறது.

வாஸ்தவமான சூரியன் ஒன்றுண்டென்று முன்னமே சொன்னோம். அதற்கு எதார்த்தமான பிரகாச முண்டென்பதற்கு சந்தேகம் இல்லை. கோழிமுட்டை யாகாரமாகக் காணப்படும் பிரிதிபிம்பசூரியன் கண்டதற்குக் கொஞ்சம் பிற்பாடு சூரியன்மேலெழும்பி வரவர இந்த ஜோதிஸ்மறைந்து வாஸ்தவமான சூரியன் தோன்றுகின்றது. தோன்றினஉடனே ஜகமெல்லாம் வெளிச்சம் நிறைந்து காண்கிறது. அப்போது சூரியனைப்பார்த்தால் கண்கூசி மங்குகிறது. இப்படி ஜகஜ்ஜோதியாய்விளங்கிவருகிற சூரியபகவான் தலைக்குமேலெழும்பி வரவர அந்த பகவானுடைய ஜோதியும் கூடிக்கொண்டே வருகிறது. உச்சியில் நின்றும் சாய்ந்து மேற்கே செல்லச்செல்ல ஜோதியும் குறைந்துகொண்டே வருகிறது. பிற்பாடு கடல்வாயிற்புக்கு மறையும்போது மீண்டும் அந்தகாரம்வந்து நிறைகிறது. அமாவாச்யை இருட்டாய்த் தீர்ந்துவிட்டால் சிலசமயங்களில்கைக்குக்கையும் முகத்துக்கு முகமும் தெரியவில்லை. இதனால் நாம் நிச்சயிக்கவேண்டியது சூரியனுக்கு நிஜப்பிரகாசம் இருக்கென்றுதான்.

சூரியனுக்கு வாஸ்தவமான பிரகாசம்உண்டென்று சொன்னோம். சில வானசாஸ்திரிகள் சூரியனுக்கு வாஸ்தவமானபிரகாசம் இல்லையென்றும் வாஸ்தவமான பிரகாசமற்ற சூரியஜடத்தைச் சுற்றிலும் ஒரு ஜோதிராகாசமுண்டென்றும் அதினால சூரியனுக்குப் பிரகாசமுள்ளதுபோல் தோன்றுகிறதென்றும் சொல்கிறார்கள். இதைப்பற்றிக் கொஞ்சம் விஸ்தாரமாகக் கவனிக்கவேண்டும்.

வராஹ சம்ஹிதையில் 3-வது அத்தியாயத்தில் 39-வது வசனத்தில் பின்வருகிறபடி சொல்லியிருக்கிறது.

"சூரியன் கருப்பாகவாவது கருப்பும் மற்ற நிறங்களும்கலந்தநிறமாகவாவதுஇருந்து பக்ஷிகளும்மற்ற ஜீவஜெந்துக்களும் இருட்டுகிறசமயம் மகா கோரமாக ஊளையிட்டதானல் மானிடராசி நாசமாய்ப்போம்."

இப்படிச் சொன்னதற்குக் காரணம் நாம் இங்கே சொல்லத்தொடங்கினல் நாம் உத்தேசித்த விஷயத்திற்கு அப்புறமாகிவிடும். ஆகையால் இங்கே ஆவசியகமுள்ள பாகத்தைமாத்திரம் எடுத்துச்சொல்வோம். சூரியன் கருப்பானல் அதற்கு ஜோதிஸ் எப்படி உண்டென்று சொல்கிறதென்று கேட்கக்கூடும். சூரியன் கருப்பாகக்கூடியது இரண்டு காரணங்களில்,

ஒன்று, சூரியமாசு அல்லது கேது.
இரண்டு, ஜோதியைவெளிவிடாமல்மத்தியில் கிரகித்துத் தடுக்கக்கூடிய தடை.

சூரியனுக்கு மாசுக்கள் அல்லது கேதுக்கள் இருப்பதாய் அங்கிலேய சாஸ்திரங்களில் இருப்பதுமல்லாமல் நம்முடைய சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. வராஹஸம்ஹிதையில் 3-வது அத்தியாயத்தில் 6-முதல் 20-வரையுள்ள ஸ்லோகங்கள் நோக்குக. சூரியனுடைய மாசு சிலசமயங்களில் மகா விஸ்தாரமுள்ளது. அதில் லக்ஷக்கணக்காக இந்த பூமியைப்போலுள்ள அண்டங்கள் புதைக்கலாம். சூரியமாசின் வடிவம், பிரமாணம், விஸ்தீர்ணம் திடீரென்று மாறிவிடுகிறது: அதாவது வாஸ்தவமானசூரியன் கருப்புநிறமுள்ளதாகவும் அதைச் சுற்றிலும் ஒரு ஜோதிராகாசம் இருப்பதாகவும் அது காற்றிற்றங்கிய மேகம்போல் அங்குமிங்கும் சலனமுற்று நிலை மாறும்போது மேற்கூறிய பேதங்கள் உண்டாகிறதாகவும் சூரியனுடைய வாஸ்தவமான இருண்ட பரப்புக்கு நேரே எங்கே ஜோதிராகாசம் விலகிவிடுகிறதோ அங்கே சூரியமாசு காண்கிறதென்றும் வானசாஸ்திரிகள் சொல்லி வருகிறார்கள். ஜோதிராகாச முழுமையும் ஏதோ ஒரு காரணத்தினல் நமக்கு எதிரிற் காணப்படுகிற அர்த்த மண்டலத்திலிருந்து மற்றொரு அர்த்த மண்டலத்திற்கு மாறிவிட்டால் நமக்கு எதிரிலுள்ள அர்த்தமண்டலம் அதாவது நமக்குக் காணப்பட்ட அர்த்தமண்டலம் கருப்பாகத்தோன்றும். கருப்பென்பது இருட்டு; அதற்கு பிரகாசம் இல்லை. ஆகையால் இவ்வாறு கருப்பாய்க் காணப்பட்ட சூரியனுக்கும் பிரகாசமில்லை.

ஜோதிராகாசம் விலகி சூரியமாசு மாத்திரம் காணப்படுங்காலத்தில் சூரியனுக்கு வாஸ்தவமாகவே பிரகாசம் இல்லாமல் ஆய்விடுகிறது. ஆனல் ஏககாலத்தில் நமக்குக் காணப்பட்ட அர்த்தமண்டலத்திலிருந்து ஜோதிராகாசம் முழுமையும் மற்ற அர்த்தமண்டலத்திற்கு மாறினதாக இதுவரையிலும் நாம் கேட்டிருப்பதில்லை. யுகாந்தங்களில் உண்டாகுமோ என்னமோ தெரியாது. அவ்வாறுண்டானல் பூலோகம் நாசமென்பதற்கு சந்தேகமில்லை. சூரிய மாசுகுறைந்த காலத்தில் சுபக்ஷமும், சூரியமாசு அதிகமான காலத்தில் க்ஷாமமும் பூமியில் உண்டாகிறதென்று வெள்ளைக்கார சாஸ்திரிகளே நிதானித்திருக்கிறார்கள்.

சூரியஜடத்தைச் சுற்றிலும் இருக்கும் ஜோதிராகாசம் மாறி மாசுதோன்றி சூரியன் கருப்பாவதைக்காட்டிலும் சூரியனுக்கும் நமக்கும் மத்தியிலுள்ள தடைகளால் சூரியன் கருப்பாவது சஹஜம். 1780-ம் வருஷம் மே-மாசம்19-ம்தேதி அமெரிக்காவில் 'நியூஇங்லாந்து' என்னும் தேசத்தில் பகல் 10-மணி முதல் 11-மணிவரை தென்மேற்குதிசையிலிருந்து அடித்த காற்றோடு வந்த மேகத்தோடு அந்தகாரமும் வந்து நாடெங்கும் அடர்ந்துவிட்டது. சில சமயங்களில் முகத்துக்கு முகந்தெரியாமல் காரிருளாகத் தீர்ந்துவிட்டது. இந்த இருளானது 15-மணிக்கூறு நீடித்தது. அக்காலத்தில் ஜனங்கள் மதிமயங்கி யுகாந்தம் வந்துவிட்டதாய்க் கலங்கினர்கள்.



இருள் அடர்ந்த பகலில்பெய்த மழைஜலம் புகைவாடை கலந்ததாக இருந்தது. அம்மழைஜலத்தைக் காயிதத்தில் ஒரு வித்வான் ஏந்தி உலர்த்தியபோது காயிதமுழுமையும் கனத்திருந்தது. எண்ணெயோ கீலோ பூசினல் எவ்வாறு ஸ்பரிசேந்திரியத்திற்குப் புலப்படுமோ அதுபோல அந்தக் காயிதத்தைத் தொட்டவர்க்கு உணர்வுண்டாயிற்று. 'மெரிமக்கு' நதியில் கீல்போன்ற பதார்த்தம் மிதந்து கண்டது. இந்த ததமஸ்போல் இதுவரையிலும் அமெரிக்காகண்டத்தில் கண்டிருப்பதில்லை. இந்த ததமஸ் உண்டாவதற்கு முந்தின தினங்களில் சூரியன் இரக்தவர்ணமாயிருந்தது. இந்த திருஷ்டாந்தத்தால் புலப்படுவ தென்னவென்றல் ஆகாசத்திலுள்ள பதார்த்த விசேஷங்களால் சூரியரச்மிகள் பூமிக்குவராமல் தடைபட்டு அந்தகாரம் நிறைந்து அக்காலத்தில் காணப்பட்ட சூரியன் நாநவிதமான நிறமாகவும் கறுப்பாகவும் தோன்றக் கூடுமென்றர்த்தமாகிறது. வராஹசம்ஹிதையில் 3 - வது அத்தியாயத்தில் 21-வது சுலோகமுதல் பின்வருகிறபடி எழுதியிருக்கிறது.

"சூரியரச்மிகள் பூமிக்குவராமல் மத்தியில் தடுக்கப்பட்டு சூரியரச்மிகள் ஆகாசத்திற்றனே திரும்பிவிட சூரியன் தாம்பிரநிறமாயிருந்தால் பட்டாளத்தளகர்த்தன் இறப்பான். சூரியன் பச்சையாகவாவது மஞ்சளாகவாவது கண்டால் அரசன்மகன் மரணமடைவான். வெண்மையாயிருந்தால் ராஜகுரு சாவான். சூரியன் பல்வகை நிறமாகக்கண்டால் அல்லது புகைநிறமாகக் கண்டால் உடனே மழையுண்டாகும், இல்லாவிட்டால் கள்ளர்களாலும் ஆயுதங்களாலும் மானுடர்க்குப் பீடையுண்டாகும். சிசிரகாலத்தில் சூரியன் தாம்பிர நிறமாகவாவது இருண்ட சிவப்புநிறமாகவாவது கண்டாலும், வசந்தகாலத்தில் நீலச்செவப்பாகக் கண்டாலும், க்ரீஷ்மகாலத்தில் கிஞ்சித் வெண்மையாகவும் சுவர்ணநிறமாகவும் கண்டாலும், வருஷகாலத்தில் வெண்மையாய்க் கண்டாலும், சரத்காலத்தில் தாமரைப்புஷ்பத்தின் மத்தியிலுள்ள நிறம்போல் கண்டாலும், ஹேமந்த பர்வத்தில் இரக்தவர்ணமாய்க் கண்டாலும் மனிதர் சந்தோஷமாயிருப்பார்கள். வருஷகாலத்தில் கிரணங்கள் கூர்மையாய் இருக்கும்போது சூரியன் வெண்மையாயிருக்குமானல் பிராம்மணரும் இரக்தவர்ணமானல் க்ஷத்திரியாளும், மஞ்சளானல் வைசியர்களும், கறுப்பானல் சூத்திரர்களும் இறப்பார்கள். முன்சொன்ன பிரகாரத்தில் கிரணங்கள் மிருதுவாயிருக்கும் பக்ஷத்தில் மனிதர் சந்தோஷமாயிருப்பார்கள். க்ரீஷ்மத்தில் சூரியன் இரத்தவர்ணமாயிருந்தால் மனிதர் பல்வகை பயங்களால் பீடிக்கப் படுவார்கள்.

"வருஷகாலத்தில் சூரியன் கறுப்பாயிருந்தால்பூமியில் நீர்வற்றிப்போம். புழுக்களாலும் ஊர்வனவைகளாலும் பயமுண்டாகும். சாம்பர் நிறமாயிருந்தால் அந்யராஜாக்கள் மூலம் பயமுண்டாகும். ஒரு துவாரத்தோடுகூடி சூரியன்கண்டால் அக்காலத்தில் சூரியன் எந்த நக்ஷத்திரத்தில் இருக்கிறதோ அந்த நக்ஷத்திரத்தில் ஜெனித்தஅரசன் இறப்பன்."

மேற்கண்ட வாக்கியங்களில் சூசிக்கப்பட்டிருப்ப தென்னவென்றல் சூரியரச்மிகள் பூமிக்குவராமல் தடைபட்டுத்திரும்பும்போது கறுப்புநிற முண்டாவதென்றும் சூரிய ரச்மிகளில் எல்லாகிரணங்களும் தடைபடாமல் சிலமாத்திரம் பூமிக்குவரும்போது அவ்வகை நிறமாத்திரம் நமக்குத் தோன்றுவதென்றுந்தான்.

இவ்வகை சித்தாந்தத்தைப்பின்வரும் திருஷ்டாந்தத்தால் விளக்கலாம். 1883ளுத்தில் பச்சைசூரியன் வந்ததை ஜனங்கள் பார்த்திருக்கலாம். அக்காலத்திற்குக் கொஞ்சம் முன்னதாக ஜாவாதீவில் சற்று பூகம்பம்உண்டாய் அக்னி மலைவழி பூமிக்குள்ளேயிருந்து அக்னி புறப்பட்டு ஆகாசத்தில் தூசிகளையும் பொடிகளையும் சாம்பர்களையும் வாரி யெறிந்தது. அவ்வாறு ஆகாயத்தில் எறியப்பட்ட பொடிகளும் சாம்பர்களும் ஆகாயத்தில் மிதந்துகொண்டிருக்கவே காற்றினல் நானதிசையிலும் பரவப்படுதலால் சூரியனிடத்திலிருந்துவந்த ஜோதியில் பச்சையைத்தவிர மற்ற அறுவகை நிறமுள்ள கிரணங்களையெல்லாம் மேற்சொல்லிய பொடிகளும் சாம்பர்களும் விழுங்கிவிடவே பச்சைநிறமுள்ள கிரணமாத்திரம் வெளியிலே கக்கப்பட்டு நம்முடைய கண்ணை வந்து அடைந்தபோது நமக்கு சூரியன் பச்சையாய்த் தோன்றிற்று.

165411

சூரியனுக்கு எழுவகை ரச்மிகளுண்டென்றும் அவைகள்தான் சூரியனுக்கு ஒரு அச்வமாக (குதிரையாக) பவிக்கிறதென்றும் நமது வேதத்திற் சொல்லியிருக்கிறது.

"ஏகோ அச்வோ வஹதி ஸப்தநாமேதி ச்ருதி ஸித்தஹ:"*

என்று பாரதசம்பு வியாக்கியானத்தில் எடுத்தெழுதி யிருக்கிறது.

அதாவது சூரியனுக்கு எழுநிறமான ரச்மிகளுண்டென்றும் அவைகள் ஒன்றுசேர்ந்தொரு நிறமாவதென்றும் அர்த்தமாகிறது. இதுதான் அங்கிலேயசாஸ்திரிகளின் சித்தாந்தம். இவ்வகை ஏழுநிறங்கள் பின்வருகின்றனவாம்.

1. செவப்பு.
2. கிச்சிலிப்பழமஞ்சள்.
3. மஞ்சள்.
4. பச்சை.
5. நீலம்.
6. அவிரி நீலம்.
7. ஊதா.

மேற்சொல்லிய ஏழு ரச்மிகளும் ஒன்றுசேர்ந்து வரும்போது அப்படி வரப்பட்ட கிரணத்தின் நிறம் வெண்மைநிறம். இதைப் பின்வருகிறபடி பரீக்ஷிக்கலாம். ஒரு தட்டில் மேற்சொல்லிய ஏழுவகை நிறமுள்ள பொடிகளை தனித்தனியே முன்சொன்ன ஒழுங்கில் அடுத்தடுத்துப் பரப்பி அத்தட்டைக் கைவிடாமல் 'கிர்' என்று விரைவாய்ச் சுற்றினால் தட்டிலுள்ள பொடியெல்லாம் வெள்ளையாகத்தோன்றும்.

இவ்வகை ஏழுகிரணங்களும் ஒருங்குசேர்ந்து வெள்ளை ஜோதியாக வருகிறபோது ஜடபதார்த்தங்களால் தட்டுப்பட்டால் சில சமயங்களில் யாதொருகிரணமும் விழுங்குபடாமல் எல்லாம் வெளியேவிடப்பட்டு வெண்மையாகவந்துவிடலாம். சில சமயங்களில் சில கிரணங்கள் விழுங்கப்பட்டு சிலது மாத்திரம் வெளியே வரலாம். அப்போது தப்பிப் பிழைத்துவரும் கிரணங்களின் நிறந்தான் அந்தப் பதார்த்தத்திற்கிருக்கும். சில செடிகளின் இலைகள் ஆரம்பத்தில் வெளுப்பாயிருக்கிறது. அதாவது அப்போது அந்த இலைகள் சூரியஜோதியில் ஒருவித நிறத்தையும் விழுங்குகிற தில்லை. கொஞ்சநாள் கழிந்த பிற்பாடு அதே இலைகள் பச்சையாகின்றன. அதாவது அப்போது இலைகள் சூரியஜோதியில் பச்சைக்கிரணம்போக மற்ற ஆறு கிரணங்களையும் சாப்பிட்டு விடுகின்றன. அதே இலைகள் கொஞ்சகாலம் கழிந்தபின் செவப்பாகவும் மஞ்சளாகவும் மாறிவிடுகின்றன. அப்போது செவப்புகிரணமும்மஞ்சட்கிரணமுமாத்திரம் தப்பிப் பிழைத்துவருகின்றது. கரியின்மேல் சூரியஜோதி விழும்போது கரி சூரியஜோதி முழுமையும் விழுங்கிவிடுகிறது. அதனால் அதற்கு யாதொரு நிறமுமில்லை. கருப்பென்பது பிரத்தியேக நிறமல்ல. நிறமில்லாதது கருப்பு.

சூரியன் கருப்பாவதற்குக் காரணம் இரண்டு வெளியாயிற்று. ஒன்று வாஸ்தவமான இருண்ட சூரியனைச் சுற்றிலும் இருக்கிற ஜோதிராகாசம் நமக்குக்காணப்பட்ட பாகத்தில் இருக்கிறது நமது பாகத்தில் காணப்படாத பாகத்திற்கு நிலைமாறிப்போய்விடல். இவ்வாறு சூரியன் கருப்பாகும்போது வாஸ்தவத்தில் சூரியனுக்கு நிஜப்பிரகாசம் இல்லை. இரண்டாவது, சூரியனுக்கும் நமக்கும் மத்தியிலிருக்கிற பதார்த்த விசேஷங்களில் விழப்பட்ட ரச்மிகள் விழப்பட்டு இப்புறம் நமக்குத் தப்பிப்பிழைத்துவராவிட்டால் அப்போதும் சூரியன் கருப்பாய்த்தோன்றும். இப்படிக் காணும்போது வாஸ்தவத்தில் சூரியனுக்கு ஜோதிஸ் உண்டு.

எஸ். இராமஸ்வாமி அய்யர் பி. ஏ., பி. எல்.

* ఏకో అశ్వో వహతి సప్తనామేతి శ్రుతి సిద్ధః

## குருவிகளுடைய வழக்கம்.

(86-வது பக்கத்தொடர்ச்சி.)

### இரக்கம் பறவைகளுக்குண்டு.

(Rook) 'ரூக்' என்று காக்கையில் ஒருபிரிவு இதனிடத்தில் மேலான குணம் ஒன்று உண்டு. கூட்டமாய் வயலில் மேயும்போது ஒருகுருவி சுடப்பட்டால் சாதாரணமாய்த் துப்பாக்கி நாற்றத்தைக் கண்டே விலகுகிற இந்தகாக்கையினம் சுடப்பட்ட காக்கையைச் சுற்றிவளையவரும்; தங்களையும்சுடலாமே என்று மிரளாது.



(Edward) எட்வர்ட் துரை பார்த்ததாவது கடற்கரை ஓரம்போயிருக்கும்போது கடல் பறவையைச் சுட்டார். ஒருபறவை சுடுபட்டு மாண்டுவிழுந்தது. மிதந்து கரையோரம் ஒதுங்குவதைப் பார்த்து அதை எடுக்க அவர்போனால் பறந்துகொண்டிருந்த இனத்துப்பறவைகள் இரண்டு அதைக்கொத்தி அப்புறம்தள்ளினவாம். அந்தத்துரை திரும்பியும் கரைப்பிதுக்கமாயிருந்த இடத்துக்குச்சென்று சுடுபட்ட பறவையை யெடுக்கப்பார்த்தார். திரும்பியும் இனப்பறவைகள் இரண்டு வந்து முன்னைப்போலவே கொத்தி அப்புறம் தள்ளின.

மெக்ஸிகோ தேசத்துச் சரித்திரம் எழுதியுள்ள (Chavigero) செவிஜிரோ துரை எழுதுவதாவது: 'நீள்மூக்குக் கொக்குகள் இனத்தில்சேர்ந்த ஒன்று கஷ்டப்படுவதைப்பார்த்தால் பொறுக்காமல் வயிறு பதைத்து வாயிலெடுப்பது வழக்கமாதலால் இந்த நுட்பமறிந்த அவ்வூரார் முதலில் ஒரு கொக்கைப் பிடித்து இறக்கையை முறித்து மரத்தில் அதைக் கட்டிவைத்து விலகுவார்களாம். மற்றக்கொக்குகள் மேய்வன அவ்விடம்வந்து தங்கள் இனம் கட்டுண்டிருப்பதைச் சகிக்காமல் வாந்திபண்ணித் தாங்கள் உட்கொண்ட மீன்களைக்கக்க பிற்பாடு ஊரார்போய் உமிழப்பட்ட மீன்களைக் குவித்து எடுப்பார்களாம்.

முன்னேசொன்ன பப்பன் (Buffon) துரையின் கிளி வீட்டிலிருந்த ஒரு பெண்குழந்தையின்பேரில் அன்பு பாராட்டிவந்து பிற்பாடு அந்தப்பெண்ணுக்கு உடம்பு செம்மையில்லாமலிருந்த காலத்தில் அப்பெண் படுக்கையைவிட்டு அப்புறம்போகாமலிருந்ததாம். நோய்தீராமல் இருந்தவரையில் கிளியும் வாடி வேதனைப்பட்டதாம். அப்பெண் உடம்பு தேறத்தேறக் கிளியின் முகமும் மலர்ந்து மனம் தெளிந்ததாம்.

மகா வித்வான் பிராங்க்ளின் (Dr. Franklin) துரையிடத்தில் ஆண்பெண்கிளிகள் இரண்டு இருந்தனவாம். பெண் கிளிக்குக் கால்வீங்கி நோய் நேரிட்டது. கூட்டிலே மேற்கம்பியில் இருந்துக் கீழ்த்தட்டில் இறங்கிப் புசிப்பு எடுக்கத் திராணியில்லாமற்போக ஆண் நான்கு மாதக்காலம் வரையில் அதற்கு உணவுகொண்டுபோய் ஊட்டிப்பணிவிடை செய்தது. கம்பியில் நிற்கத் திராணி இழந்து அப்புறம் கீழ்த்தட்டில் சுருட்டிப் படுத்திருந்தது. படுத்திருந்த காலத்தில் கம்பிமேல் ஏறி நிற்க எழப்பார்த்தபோதெல்லாம் ஆண் பக்கத்திலிருந்து தூக்கிவிடும். சாதாரணமாய் நோயாளிப் புருஷனைக் கட்டிக்கொண்ட பெண்சாதி எவ்வளவு அக்கரையாயும் ஊக்கமாயும் கவலையாயும் பாடுபட்டுப் பார்ப்பளோ அப்படியே இந்த ஆண்கிளி உழைத்துக் கஷ்டப்பட்டு உணவை ஊட்டும், உடம்பைத் தடவும், கட்டி அணைக்கும். பிற்பாடு பெண்கிளி இறந்தபின் ஆண் சகிக்கமாட்டாமல் பதைத்துப்பறந்ததையும் கதறியதையும் தான்சோர்ந்து செத்ததையும் பார்த்தால் லண்டனில் ஒருசிங்கமும் நாயும் சினேகம்பண்ணிப் பின்னர் நாய்சாகச் சிங்கம் தவித்துயிர்விட்டதாய்ச் சொல்வதைப்போ லிருக்கிறது. மனிதர்களிடத்தில் இதையும்விட அங்கலாய்ப்பு அதிகமோ சந்தேகமாயிருக்கிறது.

### பறவைகளிடத்தில் பொருமை எரிச்சலிருப்பது.

பறவைகள் எரிச்சல்படுவது எல்லார்க்குந் தெரிந்தது. மற்றொரு பறவை போட்டியாய் வந்தால் பொறுக்காதது மல்லாமல் போட்டிபோடச்சே ஒன்றை ஒன்று மிஞ்சப்பார்ப்பதும் வழக்கம்.

பாட்டுக்காக வீடுகளில் வெள்ளைக்காரர்கள் வளர்க்கும் சிறு குருவியான கானரி (Canary) க்குருவி நிலைக்கண்ணாடியில் தன்நிழலைப்பார்த்து நிழலுக்குப் போட்டியாய் போகப்போக அதிக உரமாய்ப்பாடுமாம். நேபியர் (Lady Napier) சீமாட்டியினிடத்தில் ஒரு கிளியிருந்ததாம். தன் தகப்பனாரும் அதுவும் போட்டிபோட்டுப் பாடினால் கிளி தன் குரலை உயர்த்திக்கொண்டேபோய் ஒருதரம் எதிரிக்கெட்டாதபடி உரத்திப்பாடி வென்று சந்தோஷத்திற்காகத் தான் கூட்டிலிருந்த கம்பியைச்சுற்றி ஒரு கரணம் போட்டுத் தாவிக் குதித்ததாம். அப்புறம் வாய்விட்டுச் சிரித்ததாம்.

கீழேசொல்வதும் நிஜம் எனச்சொல்லத்தான் வேண்டும். அதாவது ஒருவீட்டில் பூனையும் கிளியும் ஒருமையாய் வாழ்ந்தன. ஒருசமயத்தில் கிளியின் உணவைப் பூனை கீழேதள்ளிக்கொட்டிற்றோ என்னமோ, ஒருநாள் பூனையைக்கிளி ஆசையாய், வா, வா என்று அன்புடன் அழைத்தது; நம்பிவந்த பூனையின்பேரில் கிளிபால் பாத்திரம் ஒன்றைக்கவிழ்த்துப் பாலால் நனைத்துப் பாத்திரத்தைப் போட்டு உடைத்தது. உட்கொண்ட எரிச்சலை மனதில் மறைத்திருந்துச் சமயத்தில் தகுந்தபடி பதில்செய்து உள்ளம் ஆறுவதும் குருவிகளுக்கு உண்டுபோலிருக்கிறது.

நீண்ட கழுத்தும் சுத்த வெள்ளைநிறமாயுமிருக்கும் பெருங்கொக்குக்கு (Stork) நீங்காப்பகை உண்டு. சேனைத்தலைவர் பிரென்னி(Prenn)துரை குறித்திருப்பதாவது:—ஒரு பாடசாலைக் கட்டடத்துக்கடுத்த வீட்டின்மேல் ஒரு கொக்கு கூடுகட்டி அவயங்காத்தபோதுப் பள்ளிச்சிறுவன் துப்பாக்கியால் சுட்டான். அந்தவேட்டால் அக்கொக்குக் காயப்பட்டதுபோலும்; படாவிடின் இரண்டொருவாரம் வெளிப்பட்டாமல் உள்ளேயே இருந்ததே, அப்படியிருந்திருக்க நிமித்தியமில்லை. அப்புறம் வழக்கப்படி அக்கொக்கு வெளியூர் போய்விட்டது. அப்புறம் ஒரு வருஷம் சென்று, திரும்பியும் இளவேனிற்பருவம் பிறந்தவுடன் அக்கொக்கு அப்பள்ளிக்கூட இறப்பில்வந்து அப்பள்ளிக்கூடத்தில் சாதுவாய் வெகுநாளாய்வளர்ந்த கொக்குத்தான் தனக்குச்சென்ற வருஷத்தில் இடஞ்சல்பண்ணினதென நினைத்திருந்தபடியால் அப்பழிதீர்க்க எண்ணிச் சாதுக்கொக்கைப் பலஜாடைகளால் வெளியில்வரக்கூப்பிட்டுப் பார்த்தது. சாதுக்கொக்கு அன்றைக்குச் சும்மாவிருந்துவிட்டது. சிலநாள் பொறுத்து, தூரதேசத்துக் கொக்குத்திரும்பியும் அங்கேவந்து பாடசாலை முற்றத்தில் இறங்கியுட்கார்ந்துச் சாதுவை அழைத்தது. நம்பிவந்ததைப் போடு போடு என அடித்து நொறுக்கிற்று. பக்கத்தில் இருந்தவர்கள் அதைத்துரத்தினார்கள். அந்தச் சமயத்தில் மறுபடியும் பலதரம்வந்து சாதுவைத் தொந்திரவு பண்ணிற்று. அடுத்தவருஷத்தில் அதே இளவேனிற்பருவம் தொடங்கினவுடன் தொலைதூரத்திலிருந்துப் பலவெளிக்கொக்கும் சண்டைக்கொக்குமாய் அங்கே வந்திறங்கிச் சண்டைபோடச் சாதுவுக்கு உதவியாய் அப்பள்ளிக்கூடத்தில் வாழ்ந்த கோழிகள் வாத்துகள் எல்லாங்கூடித் தங்கள் கூட்டாளிக் கொக்கைத் தப்பித்துவிட்டன. அதற்கும் அடுத்த வருஷத்தில் வெளிக்கொக்குகள் 20-30-ஆய்வந்து சண்டைக்கு ஆரம்பித்துப் பக்கத்தில் இருப்போர் ஓடிவருமுன் சாதுக்கொக்கைக் கொன்றன. வீம்பானபகையன்றோ இது.

(Hamburg) ஹாம்புர்க்குப் பட்டணத்துக்கருகாமையில் ஒருபயிரிடுங்குடியிடத்தில் சாதுக்கொக்கு ஒன்று வளர்ந்தது. இன்னொரு கொக்குக்கிடைக்க இரண்டும்சேரட்டும் எனப் புதிதைக் கொண்டுபோய்விட்டால் பழையது புதியதை அடித்துத்துரத்திற்று. நான்கு மாதமானபிறகு மூன்று கூட்டாளிகளுடன்வந்து பழையதை வெளிக்கொக்கு அடித்துக் கொன்றது.

இதைப்படிக்கிறவர்கள் கொக்குக்குப் பகைவீம்பு இருக்க நாமேன் பகைவைக்கலாகாதென்னலாம். பகைப்பது மனிதர்களுக்குக் கொடியபாவமாம். நமக்குத் தீங்குசெய்தவர்களிடத்தில் கஷ்டம்வாங்க நியாயச்சபை ஏற்பட்டிருக்கிறது. நியாயச்சபைக்கு மீறிநடக்கக்கூடாதது மனிதர் சட்டமாச்சே.

பெண்கொக்கு,பெட்டைக்கோழி இவை தெரியாமையால் மற்றொரு இனத்துமுட்டையை அவயங்காக்குமானால் அப்படிப்பட்ட பெண்களை அவற்றின் ஆண்கொன்றதாக சிலர்க்குத் தெரியவந்திருக்கிறது.

### மானிடர்களைப்போலவே தருவிகளுக்கும் புதியதை அறிய ஆசையும், கர்வமும், விளையாட்டும் உண்டு.

புதியபொருள்களை நெருங்கிப்பார்க்கக் குருவிகள் ஆசைப்படுவதை அறிந்து வேடர்கள் அவ்வாசையைக்கொண்டு குருவிகளைப்பிடிக்க வழிதேடுகிறார்கள். புதியபொருள் ஏதாவதொன்றைக் குள்ளவாத்துக்கள் பார்க்கும்படிவைத்து வேடர்கள் ஒதுங்கிநிற்க வாத்துக்கள் அதைப்பார்க்க வந்து வலையில் சிக்கிக்கொள்ளும். மனித நாட்டமில்லாத தீவாந்தரங்களில் மனிதர் யாராவது முதல்முதல் போனால் குருவிகள் கூச்சமின்றி மனிதர்களுக்குக் கிட்ட வருவதுண்டு.

மயில், வான்கோழிகள் இரக்கை விரித்தாடுவதைப்பார்த்தவர்களுக்குக் குருவிகள் பெருமைப்படுவது நன்றாய் விளங்கியிருக்கும். மனிதப்பேச்சு பேசும் குருவிகள் அப்படிப்பேசப்பழகும்போதும் புதுமொழி வாய்க்கு வந்தபோது படுகிறபெருமை இவ்வளவு அவ்வளவு அல்ல.

வேடிக்கை பண்ணுகிறதும் பறவைகளுக்கு வழக்கமே. (New South Wales) புதுத்தெற்கு வேல்ஸ்தேசத்திய பறவைகளைக்குறித்துத் தான் எழுதிய சரித்திரத்தில் கோல்ட் (Gould) துரை எழுதியிருப்பதைப் படித்தால் குருவிகள் சிங்காரக்கூடு கட்டுவதற்கு வேடிக்கைமாத்திரம் காரணம் அல்ல, ஆண்பெண் குலாவிச் சுகிப்பதும் அதற்குக்காரணமாய்த் தோன்றுகிறது. பறவைகளுக்கு அழகின் பேரில் நோக்கமிருப்பது தெரிகிறது. (Bower-birds) பவர்க்குருவி என ஒரு இனம் தென்வேல்ஸில் உண்டு. விநோதக்கூடுகட்டும். கண்ணுக்குப் பகட்டாய்ச் சிலசாமான்களையும் குச்சிகளையும் தொங்கவிட்டுக் கூட்டை அலங்கரிக்கும். இந்த இனத்தில் சிலதைப்பிடித்து (England) இங்கிலாந்து தேசத்துக்குக்கூட்டில் அநுப்பிவித்தாலும் அங்கே சிங்



காரவீடுகளைக்கட்டும். மனிதப்பாட்டுக் கச்சேரிக்குப்போயிருந்த ஆண்குருவி பாட்டுப்பாடிப் பெண்களின்மனதை மோகப்படுத்தும். சில குருவிகளுக்கு மனிதர்பாட்டில் ஆசை உண்டு. சில குருவிகளுக்கு ஏதோ ஒரு ராகம் பாடுவதிலேயே பிரியமிருக்கும். தனக்குவேண்டிய இராகம் முடிந்தபின் அப்புறம் நீங்கும்.

டி. ஆர். இராமநாதையர், பி. ஏ., எல். டி.

## ஆபத்துக்கிடமான அபவாதம்.
அல்லது
## கமலாம்பாள் சரித்திரம்.

VI

முத்துஸ்வாமி அய்யர் பெரிய பணக்காரர் என்று நாம் முன்னமே பலமுறை சொல்லியிருக்கிறோம். பாகஞ்செய்துகொள்ளுங் காலத்தில் அவருக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் ஸ்திதியிருந்தது. சில பெரிய வியாபாரங்களில் அவர் இறங்கி அவைகளை செவ்வையாக நடத்திவந்தபடியால் சிலவருஷங்களுக்குள் அவர் இலக்ஷத்து ஐம்பதினாயிரம் ரூபாய் ஸ்திதிக்கு அதிபதியானார். ஆகையால் அந்தப் பக்கங்களுக்கு அவர் பெரிய பணக்காரரென்று பிரசித்திபெற்றிருந்தார். அதுவும்தவிர நல்ல கொடையாளி என்றும் அனேகவிஷயங்களில் அதிக தேர்ச்சி பெற்றவரென்றும் நல்ல புத்திமான் என்றும் அவர்பெயர் எங்கும் பிரபலமாயிருந்தது. அவர் கையால் சம்மானம் பெறாத தக்கவித்வான்கள் இந்தராஜதானியிலேயே கிடையாது.

சிறுகுளத்தைச் சுற்றியுள்ள எல்லா கிராமங்களிலும் பொழுதுவிடிந்ததுமுதல் அரவம் ஒடுங்கும்வரை முத்துஸ்வாமி அய்யர்வீட்டுக் கலியாணப்பேச்சைத்தவிற வேறுபேச்சுக்கிடையாது. மேலைப்பாளையம் என்ற கிராமத்தில் இராமஸ்வாமிஅய்யர் என்ற ஒரு பிராமணர் சாப்பிட்டுவிட்டு வெற்றிலைபோட்டுக்கொண்டு திண்ணையில் உட்கார்ந்தார். அப்பொழுது சாப்பிட்டுவிட்டு வெற்றிலையைக் கையிலெடுத்துக்கொண்டு யார்வீட்டுத்திண்ணையில் பேசஆளிருக்கிறார்கள் என்று பார்த்துக்கொண்டு தன் மேல்வேஷ்டியை கீழேபோட்டுக்கொண்டு உட்கார சித்தமாய் கையில் எடுத்துக்கொண்டு அப்பய்ய தீட்சதர் என்பவர் வந்தார். இராமசுவாமிஅய்யர் அவரைக் கண்டதும் 'வாருங்கள்' என்றார். தீட்சதரும் கைவேஷ்டியைக் கீழேபோட்டுக்கொண்டு 'அப்பாடா' என்று உட்கார்ந்தார். அய்யர் 'இப்பொழுதுதான் சாப்பாடாச்சுதாக்கும்' என, தீட்சதர் 'இத்தருவாய் ஆயிற்று' என்றார். பிறகு சற்றுநேரம் மௌனம். பிறகு அய்யர்: 'தேதி 13 ஆய்விட்டாற்போலிருக்கிறதே. சிறுகுளத்துக்கு எப்பொழுது பயணம்? நீங்கள் வருகிறீர்கள் அல்லவோ?' தீட்சதர் வெற்றிலைபோட்டு மென்றுகொண்டே 'நான்வருகிறது சந்தேகந்தான். சனியன் ஒருசிராத்தம்வந்து குறுக்கிட்டுக்கொண்டு இழவுகொடுக்கிறது. இல்லாவிட்டால் இங்கே என்னசாதிக்கிறோம். போய் விட்டுவருவதை விடத்தான் என்ன?' என்றார். அதற்கு அய்யர் 'அடடா நீங்கள் அவ்வளவுதான் கொடுத்துவைத்தது. மூவாயிரம்ரூபாய் பிரத்தியேகமாய் எடுத்துக் கட்டிவைத்து விட்டானும் கலியாணத்துக்காக. கீவளூர் கந்தன் மேளமாம்; அவனுக்கு 200 ரூபா பேசியிருக்கிறார்களாமே. பாட்டுக்கு ராகவையர்; பெரிய வைத்தி பெரியயுத்தம் நடக்கும், வேடிக்கை பார்க்கலாம்; இதுபோக இன்னும்வந்து கோவிந்தசாமிராவ் மிருதங்கத்துக்கு; அப்புறம்வந்து பிட்டிலுக்கு நடராஜன்; இதெல்லாம் சாதாரணமாயிருக்கும்; இவ்வளவும் போதாதென்று திருவாரூர் ராஜலெட்சுமி சதிர்', என, தீட்சதர் வெற்றிலையை விழுங்கிக்கொண்டு 'பேஷ் அவனுக்கென்ன மகாராஜன், லெட்சப்பிரபு. ஒரேபெண், அதற்குக் கலியாணம்' என்றார். அய்யர் 'நீங்கள்தான் வரமாட்டேன் என்கிறீர்களே' என, தீட்சதர் 'உன்னைவிட எனக்கு பத்துப்பங்கு ஆசையிருக்கிறது. ஆசையிருந்து என்ன பண்ணுகிறது? இந்த இழவு சிராத்தம் ஒன்று வந்து கழுத்தறுக்கிறது. நல்லநாள் என்றால் அன்றைக்குத்தான் பெண்பெண்டாட்டிகள் தூரம் என்று கொல்லையில் உட்காருவார்கள். அதுபோலவந்திருக்கிறது நமக்கு சனியன்பிடித்த இழவு. இரு, பார்ப்போம். 18உயா முகூர்த்தம்? 18, 19, 20,21,22,ந்தேதி வரைக்கும் கலியாணம். இங்கே 19 ந்தேதி சிராத்தச்சனியன்; அதைத் தொலைத்துக்கொண்டு ஒரேயடியாய் 19ந்தேதி ராத்திரியே புறப்பட்டால் 20ந்தேதி மத்தியானம் அங்கே வந்துவிடலாம். பார்ப்போம்: அப்படித்தான் செய்யவேணும்.' என, இராமசுவாமி அய்யர் 'அதுதான்சரி, அப்படித்தான் செய்யுங்கள். நான் 16-ந்தேதியே புறப்படுகிறேன்' என்றார்.

இங்கே இப்படியிருக்க, தென்கரை என்ற மற்றொரு கிராமத்தில் சுப்பிரமணிய சுவாமிகோயிலில் 'குட்டைப்பெருச்சாளி' என்று பட்டப்பெயர்பெற்ற முத்துவும், 'கல்லுளி' யென்றும் 'கடப்பாரைமுழுங்கி' என்றும் பெயர்பெற்ற சுப்பய்யாவும் காலணா பேஜைவைத்து 'அவுட்' ஆடிக்கொண்டிருந்தார்கள் சுப்பய்யா 'இன்னொரு ஆட்டம் போடடாமகளே

போடு' என, முத்து 'எதப்பா! அவன் சொன்னாற்போலிருக்கிறது. ஒருரூபாய் தோற்றாய்விட்டது. இன்னும் ஆடவா? இன்னும் ஒரு ரூபாயை அவன் சொன்னாற்போல பற்றப் பார்க்கிறாய்! அவன் சொன்னாற்போல உனக்கென்ன' என, கல்லுளி "எவன்சொன்னாற்போல? எத்தனை 'அவன் சொன்னாற்போல'! அந்த அவன்தான் இன்னான் என்று நிரம்பநாளாய் தெரியவில்லை; அவன் போகட்டும். இன்னும் ஒரேஆட்டம்: யோசிக்காதே, அந்த ஒரு ரூபாய்க்கும் சிறுகுளம் முத்துஸ்வாமி அய்யர் அகத்துக் கலியாணத்துக்கு திருவாரூர் ராஜம்வருகிறாள், அவளைவிட்டு உனக்கு சந்தனம் பூசிவிடச்சொல்லுகிறேன். பயப்படாதே ஆடு" என்றான்.

இதுநிற்க வீரபாண்டியம் என்ற இன்னொரு கிராமத்தில் சிலசிறுபிள்ளைகளாகச்சேர்ந்து தாயார் தகப்பனார் வாத்தியார் இவர்களுக்குத் தெரியாமல் சிறுகுளம் கலியாணத்துக்குப்போய் வருவதாகக் கூட்டுக்கள்ளயோசனை செய்துகொண்டு ஒருவரொருவராய் அந்தஊர் காளியம்மன் கோயிலில்வந்து சேர்ந்தார்கள். 'ஒங்காத்திலே கோவிச்சுக்குவா, ஒன்னாலே நடக்கமுடியாது: நீ ஆத்துக்குபோயிடு' என்று அவர்களால் புத்திமதிசொல்லி யனுப்பப்பட்ட காமேஸ்வரன் என்ற ஒருசிறுபையன் சரசரவென்று வாத்தியாராகிய நாகேஸ்வர (Sir) ஸாரிடம் போய் அவர்கள் திருட்டுயோசனையை வெளியிடவே, சாப்பிடுவதற்காக இலையில் உட்காரப்போன 'நாகேஸ்வர ஸார்' சாப்பிடாமல் ஒற்றைவேஷ்டியுடன் காளியம்மன்கோயிலுக்கு வந்துவிட்டார். அவரைக் கண்டதுதான் தாமதம் உடனே பையன்களெல்லாம் சிறுகுளமார்க்கத்தில் ஓடத்துவக்கினார்கள். அதுகண்டு வாத்தியாரும் 'ஏனடா பயல்களா! நிஜந்தானா? ஓடுவீர்களா? மரியாதையாய் வந்துவிடுங்கள், இல்லாவிட்டால் வெளுத்துவிடுவேன். வந்துவிடுங்கள், வந்துவிடுங்கள், வந்தால் அடிக்கவில்லை. ஏனடா ஓடுவீர்களா? நிஜந்தானா நிஜந்தானா?' என்று கூவிக்கொண்டு அவர்கள்பின்னே ஓட அவர்கள் 'ஆமாம்: நிஜந்தான்: நிஜந்தான்.' என்று சொல்லிக்கொண்டும்,

'நெடுமால் திருமுருகா
நித்த நித்தம் இந்த இழவா
வாத்தியார் சாகாரா
வயிற்றெரிச்சல் தீராதா!'

என்று பாடிக்கொண்டும் ஓடினார்கள். இப்படி அரைமைல்தூரம் ஓடவே வாத்தியார் பசியால் களைத்து ஓடமாட்டாமல் ஓடி ஒரு கல்தடுக்கி கீழே விழுந்துவிட்டார். பின்னே திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓடினபையன்கள் வாத்தியார் விழுந்ததைக்கண்டு 'ஹாய்' 'ஹாய்' என்று சிரித்து 'வேணும்' 'வேணும்' என்று சொல்லிக்கொண்டு ஓட்டமோட்டமாய் ஓடி ராத்திரி ஒரு சத்திரத்தில் தங்கி தங்கள் கால் கொப்புளங்களை ஆற்றிக்கொண்டு மறுநாட்பகல் பத்துமணிக்கு சிறுகுளம்போய்ச் சேர்ந்தார்கள். வாத்தியாரோ பாவம் நொண்டி நொண்டிக்கொண்டு பட்டினியாய் ஊர்வந்து தன்காலைப் பார்க்கும்போதெல்லாம் 'அந்தப்பயல்கள்வரட்டும் சொல்லுகிறேன்' என்று பல்லைக்கடித்துக்கொண்டு அவர்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்.

சிறுகுளத்துக்கருகில் கடுகனூர், குள்ளப்புறம், விருதக்கபட்டி, சோரனூர் முதலிய சில பிரபலமான கிராமங்கள் உண்டு. அவற்றின் மகா ஜனங்களுடைய உத்தியோகம் அவிஸ்ரவணம் சொல்லல், பரிசாரகம்செய்தல், சவண்டிதின்னல், பொய்ச்சாட்சி சொல்லல், முதலியனவாம். இவர்களுடைய கீர்த்திக்கு ஒரு அத்தாட்சியாக யாரையாவது இகழ்ச்சியாய் வையவேண்டுமானால் 'என்னடா, சுத்த குள்ளப்புரத்து பிராம்மணனாயிருக்கிறாய்' என்று சொல்வது வழக்கம். முத்துஸ்வாமி அய்யர் பெண்ணின் கலியாணத்தைச் சிறப்பிக்க எண்ணி இந்த பிராமணோத்தமர்கள் தங்கள்தங்கள் வீடுகளில் 'அடியேய் சிறுகுளத்து முத்துஸ்வாமி யாத்திலே கலியாணமாம், வர பதினைந்துநாள் செல்லும்; ஆத்தைப் பாத்துக்கடீ: என்னடி ஆட்டுமா?' என்று தங்கள்மனைவிமாருக்குத்தாக்கீதுகொடுத்துவிட்டு ருத்திராட்சம், விபூதி, 'டெப்பி', ஸ்தாலிச்செம்பு, மடிசஞ்சி, பட்டுக்கயிறு, ஊத்தைவாய் இவ்வித உத்தியோகசின்னங்களுடன் சர்வாபரண பூஷிதர்களாய் சிறுகுளத்தைநோக்கி கலியாணத்திற்கு ஒருவாரத்திற்கு முன்னமேயே தங்களுடைய இஷ்டமித்திர சகபரிவார பந்துக்களுடன் முகூர்த்தத்தை நடப்பிவிக்க நூற்றுக்கணக்காய்ப் புறப்பட்டுவிட்டார்கள்.

இவ்விதமாக சிறுகுளத்தைச்சுற்றியுள்ள பிரதேச முழுவதும் முத்துஸ்வாமி அய்யர்வீட்டுக் கலியாணப் பேச்சே பேச்சாயிருந்ததுமன்றி ஒவ்வொரு ஊரிலுமிருந்து சிறுபையன்கள் முதல் வயதுசென்ற பெரியவர்கள் வரை ஒருவரும் பாக்கியில்லாமல் நாலுவித ஜனங்களும் வந்துகூடினார்கள். ஊர் முழுவதும் சிலநாளைக்கு அல்லோலகல்லோலப்பட்டது. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என நாலா திக்குகளிலிருந்தும் வண்டிகளும் ஜனங்களும் மேலும்மேலும்வந்து நெருங்கவே எங்கேபார்த்தாலும் வண்டிக்காடும் மனிதக்காடுமாக இருந்தது. வீட்டுக்குவீடு நாற்பது ஐம்பது ஜனங்கள் கூடியிருந்தார்கள். இவ்விதமாக 'காற்றெறிகடலின் களிப்பனேங்கினார்' என்றபடி



சிறுகுளம் சிறியகுளமா யிராமல் இராப்பகல் ஓய்வில்லாமல் ஆரவாரித்த பெரியகடலாயிருந்தது.

சம்பந்தி அவர்களுடைய இஷ்டமித்திர பரிவார பந்து பட்டாளம் பாரி பட்டாளமா யிருந்தது. அவர்கள் அமர்த்தின வாடகைவண்டிகள் 15 போக, ராமசுவாமி சாஸ்திரிகளுடைய குமாரர் சிரஸ்த்தார் நாராயணய்யருடைய பெட்டிவண்டி ஒன்று, சாஸ்திரிகள்சம்பந்தி கிருஷ்ணய்யர் அகத்துவண்டி இரண்டு, தாசீல் குப்புசாமியய்யருடைய (சுப்பராயனுடைய தகப்பனார்) பெட்டிவண்டி ஒன்று, டிப்டிகலெக்டர் ராமாராயர் குதிரைவண்டி ஒன்று இவ்விதமாகக்கூடிய இவ்விருபதுவண்டிகளும் விடிந்து 10 நாழிகைக்குப் பயணம் புறப்பட ஆரம்பித்து அஸ்தமிக்கப் பத்துநாழிகைக்கு ஊரைவிட்டுநகர்ந்ததையும், அவைகள் இராத்திரி இருட்டிப் போகும்போது கிருஷ்ணய்யர் 'லாந்தரைக்' கையில் பிடித்துக்கொண்டு யார் என்னசொல்லியும் 'உங்களுக்குத் தெரியாது' என்று சொல்லிவிட்டுசேவகர்களுடன் வண்டிப்பாதையைப் பார்த்துக்கொண்டு போனதையும், நொடிகள்பார்த்து வண்டிக்காரர்களுக்கு எச்சரிக்கை கொடுத்ததையும், கள்ளஊராகிய நகரி என்றகிராமம் சமீபிக்கவே ஓரிருண்ட தோப்பின்வழி போகும்போது வெளிச்சங்களையெல்லாம் மறைத்துக்கொண்டு குழந்தைகள் வாயை முதல் பொத்திக்கொண்டு 'பேசாதே பேசாதே' என்று மெதுவாய் எல்லாரும் பேசியதையும், மரத்துக்கு மரம் கள்ளனிருப்பதாக பயந்து வண்டிக்காரர்கள்கூட மாட்டை இரைந்து அதட்டாமல் வண்டியை வேகமாய் விட்டதையும், அவ்வூர் தாண்டியவுடனே ஜோ என்று மழைபெய்ததுபோல் எல்லாரும் இரைந்துபேசியதையும், வனதேவதைகள் கோவில்தோறும் இறங்கி சேவித்துச்சென்றதையும், மறுநாள் ஒரு பெரிய சோலையில் தங்கி சாப்பாடுசெய்ததையும், ஆகாயமட்டு மளாவிய மரங்களைக்கண்டு ஸ்ரீநிவாசன் ஆச்சரிய மடைந்து அவற்றின்கீழ் ஓடும் நதியில் அவைகளின் இருண்ட நிழல்களைக் கண்டு மயிர்க்கூச்செரிந்து 'இவைகளில் குரங்குகளைப்போல ஏறிப்பாய்ந்து ஓடி சஞ்சரிக்க வேணுமென்று ஆசையாகஇருக்கிறது' என்று அவன் சுப்பராயனிடம் சொன்னதையும், பிறகுஎல்லோரும் புறப்பட்டு பொன்னிறமான மஞ்சள்வெயில் அழகாய்ப்படிந்திருக்கும் தருணத்தில் சிறுகுளத்திற்கு வந்து சேர்ந்ததையும்பற்றி விஸ்தரிப்ப தனாவசியம்.

சம்பந்திகள்வந்து அவர்களுக் கேற்பட்டஜாகையில்இறங்கினவுடனே மாப்பிள்ளையை அழைப்பதற்காக இரட்டைக்குதிரை சாரட்டு வந்து நின்றது. அது ஓர் ஜமீன்தாரிடமிருந்து கலியாணத்திற்காக முத்துஸ்வாமி அய்யரால் வரவழைக்கப்பட்டது. அது சிறுகுளத்தில் அறியப்படாத ஓர் பெரிய அதிசயம். அது முதல்முதல் அவ்வூர்மந்தையில் வந்து சேர்ந்தவன்றைக்கு அவ்வூர்முழுவதும் அதைப் பார்ப்பதற்காக மந்தையில்வந்து கூடிப்போய்விட்டது. அதுவந்து நின்றவுடன் ஸ்ரீநிவாசன் அதன்மேல் ஏறி கம்பீரமாய் உட்கார்ந்துகொண்டு எல்லா ஜனங்களும் தன்னையே பார்க்கிறார்கள் என்பதில் வெகு திர்ப்தி யடைந்தவனாய்ச் சென்று மாளிகைபோன்ற தன் மாமனார் அகத்து வாசலில் இறங்கி தக்கபடி உள்ளே அழைத்துக்கொண்டு போகப் பட்டான். அவனுடன் எல்லாரும் உள்ளே போனார்கள். அவர்களுக்குள் கடைசியாக வந்தவர் காலில் ஏதோ குறுகுறுவென்றிருந்ததைஉணர்ந்து பரபரப்புடன்கீழே பார்க்க ஒருபெரிய கறுத்த நட்டுவாற்காலி (நண்டுவாக் கிளியென்று சாதாரணமாய் சொல்வதுண்டு) ஒன்று வாசற்படிக் கல்லிலிருந்து தன்கால்மேல் ஊர்வதைக் கண்டார். அவர்பதறி தான் காலைசட்டென்று உதறிவிட்டு 'சமாசாரம் வெளியில் தெரிந்தால் அந்தகெட்டசகுனம் நிமித்தமாக கலியாணம் நின்றுவிடும், நாம் ஏன் அதைவெளிப்படுத்த வேண்டும். அவரவர்கள் அதிர்ஷ்டம்போல் இருக்கிறது' என்று தனக்குள் யோசித்துக்கொண்டு சந்தடிசெய்யாமல் ஒரு பெரிய கல்லால் அதைக் கொன்று தூர எறிந்துவிட்டார். சில வருஷங்களுக்குப் பிறகு அந்தக்கலியாணம் இழவாய் முடிந்ததென்று அவர் கேள்விப்பட்டு 'அன்றைக்கே நாம் சொல்லித் தொலைத்தோமா? வேறு யார் அந்த துற்சகுனத்தைக் கண்டிருந்தாலும் சொல்லி யிருப்பார்களே; ஐயோ பாவம் இந்தப் பாவத்தை நாமா கட்டிக்கொள்ளவேண்டும்.' என்றுவயிற்றிலும் வாயிலும் போட்டுக்கொண்டு எல்லாரிடமும் சொல்லிச்சொல்லியழுதார். கலியாணக்கிரஹத்தில் விரத சமாப்தியுமாய் முகூர்த்தமும் முறைப்படி ஆரம்பித்துவிட்டார்கள். காசியாத்திரை போய்விட்டு மாப்பிள்ளையும் பெண்ணுமாய் கன்னி ஊஞ்சல் ஆடும்போது ஒரு சாகுருவி முகூர்த்தக் கால்மேல் வந்து உட்கார்ந்ததை சிலர் கண்டார்கள். ஐயோ பாவம் அவர்களாவது கண்டதை வெளியிட்டார்களா? அந்தக் குருவி இரைந்து கத்தி யிருக்கலாம். அப்படிக் கத்தியிருக்குமானால் அதன் சப்தம் கிவளூர்க்கந்தனுடைய மேளத்திலும் திருவாரூர்த் தேவடியாள் பாட்டிலும் மறைந்துபோயிருக்கவேண்டும். போனதைப்பற்றிப் பேசுவதில் பயனென்ன. எல்லாம் கடவுள் விதித்தபடி தானே நடக்கும். இந்தக் கலியாணம் மூலமாக இரண்டு குடும்பங்களுக்கு மகத்தான ஆபத்து நேரிடவேண்டுமென்று கடவுள் இஷ்டமுடன் ஆஞ்ஞாபித்

திருக்க அந்த ஆஞ்ஞையை மீறி யார் என்ன செய்திருக்கக்கூடும்? இதுநிற்க. வேதவேதியர் தேவகணங்கள் இவர்கள் முன்னிலையில் அக்கினிசாட்சியாகச் செய்யப்படவேண்டியவைகள் எல்லாம் நடந்து 'பம்பம்' என்று கிருஷ்ணபகவான் பாஞ்சசன்னியத்தை துவனம் பண்ணியதுபோல் மேள வாத்தியத்தில் தனக்கு உயர்வொப்பில்லையென்று கீர்த்திபெற்ற கீவஞர் கந்தன்செய்த மங்களவாத்தியத்துடன் மாங்கலியதாரணமும் ஆயிற்று. முகூர்த்தம் ஆனபிறகு ஆசிர்வாதத்திற்கு எத்தனமாய் எல்லாரும் வந்திருக்கும் தருணத்தில் திடீரென்று 'ஐயோ ஐயோ ஐயோ! நீ நாசமாப்போக, உன் கையை முறித்து அடுப்பில்வைக்க; நீ கட்டையிலே போக, நீ கரியாசப்போக, உன் அப்பன் ஆத்தாள் மாமன் மைத்துனன் பிள்ளை பேரன் பேத்தி அத்தான் அம்மஞ்சி (அம்மான்சேய்) எல்லாரும் பூண்டோடு நாசமாகப்போக: ஐயையோ ஐயையோ!' என்றிப்படி ஓர் பெரிய கூக்குரல் உண்டாக, எல்லாரும் திடுக்கிட்டு வெளியேயோடினார்கள். அங்கே 'போடீ அந்தப்பக்கம். எழுந்திருக்கிறாளாபார்! போடடா, அலகில் கையைப் பிடித்திழடா. சரசரவென்று, மொட்டைமுண்டையை குத்தடா, வெட்டடா, அடியடா, தள்ளடா, போகிறாயா மிதிக்கட்டுமாடி, அப்புறம் மிதித்தேவிடுவேன். இன்னும் நாலுமொத்து மொத்திவிடுவேன்' என்றிப்படி ஒவ்வொருவரும் கூவிக்கொண்டு நின்ற ஒரு பெரியகூட்டத்தின் நடுவில் கீழேதள்ளப்பட்டவள்போல் ஒருகை கீழே ஊன்றி தரையைநோக்கி சாய்ந்த உடலும், நீட்டியகாலும், மேல்துணி நீங்கிய கிழட்டுமார்பும், முட்டாக்கு நீங்கிய மொட்டைத்தலையும், பொக்கைவாயுமாய் கையால் மார்பிலும் மண்டையிலும் மாற்றி மாற்றி யடித்துக்கொண்டு மண்ணைவாரித் தூற்றிக்கொண்டு சப்தலோகங்களும் கிடுகிடு என்று நடுங்கச் செய்யத்தக்க பெருங் குரலுடன் 'ஐயோ!' என்று கதறிக்கொண்டு தாடகைபோன்ற கரிய பெரிய உருவத்தையுடைய ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு சுமார் 80 வயது இருக்கலாம். அவ்வூர் வம்பர் மகாசபையின் உத்தியோகஸ்தர்களில் அவள் ஒருத்தி. வம்புவழக்கு விசாரணையில் கணக்கன் நாட்டாண்மைக்காரன்கூட அவளுக்கு நிகரில்லை.

ஒருகாலத்தில் மழை யில்லாமல் சிறுகுள முழுவதும் புயிர்கள் எல்லாம் விளையாமல் சாவியாய்ப்போக அவ்வூர்க் குடிகள் தீர்வையைத் தள்ளிக்கொடுக்கவேண்டுமென்று சர்க்காருக்கு விண்ணப்பம் செய்து கொண்டார்கள். சாவிபார்க்க அனுப்பப்பட்ட தாசில்தார் அவர்கள் விண்ணப்பத்துக்கு விரோதமாக தீர்வையை வசூல்செய்யும்படி உத்திரவுசெய்துவிட்டார். யார் என்னமன்றாடியும் அவர் கேட்கவில்லை. இப்படி யிருக்கையில் ஒருநாள் அவர்மனைவி ஆற்றங்கரைக்கு வந்திருந்தபோது இந்தக்கிழவி அவளிடத்தில்போய் அவள் முகத்தைக் கடித்துவிடுவாள்போல் சமீபத்தில் சென்று கூர்ந்து பார்த்துக்கொண்டு 'நீ யாரம்மா இந்ததாசிலாய் வந்திருக்கிறானே அவன் பெண்டாட்டியா? ஊர்வாயிலெல்லாம் விழுந்திருக்கிறீர்களே: குஞ்சுங் குழந்தையுமாகக்ஷேமமாயிருக்கவேண்டும்.' என, அந்த அம்மாள் பயந்து தன்புருஷனிடம் ஆற்றங்கரையில் நடந்தசங்கதியைச்சொல்லி 'நமக்கு ஏதோ சனியன் பிடித்திருக்கிறது. அவள்வாயில் நச்சுப்பல் நிச்சயமாயிருக்கிறது. இந்த ஊராருக்கு விரோதம்செய்ய வேண்டாம்.' என்று வேண்ட, அவரும் பயந்துபோய் தீர்வை முழுவதையும் தள்ளுபடிசெய்ததுமன்றி அந்த ஊருக்கு ஒருகுளமும் வெட்டிக்கொடுத்துவிட்டுப்போனார். அந்தஊருக்கு இவ்வளவு பெரிய உபகாரம் செய்த கிழவியின்பெயர் நாராயணி. அது நாணியென்று வழக்கத்தில் மருவிவிட்டது. அவளுக்கு 'பாப்பாபட்டி யகத்து வெட்டரிவாள்' என்று பட்டப்பெயர். ஏனெனில் சுமார் இருபதுவருஷங்களுக்கு முன்னே தன் அயல்வீடாகிய பாப்பாபட்டி சங்கரய்யரகத்தில் கொல்லையில் போடப்பட்டிருந்த ஒரு விறகுகட்டையை அவள் இராத்திரியில் திருடிவிட்டு மறுநாட்காலையில் அந்த விறகை வெட்ட அரிவாளுக்கு அவர்கள்வீட்டிற்கே போனாள். அவள்திருட்டு வெளியாய்விட்டது. ஆதலால் அதுமுதல் அவளுக்கு 'பாப்பாபட்டியகத்து வெட்டரிவாள்' என்று பட்டப்பெயர் ஏற்பட்டது. அவள் தெருவழியே போகும்போதெல்லாம் அவ்வூர்ப் பிள்ளைகள் (சிலசமயங்களில் பெரியவர்கள்கூட) அப்பெயர் வைத்துக்கூப்பிட அவளுக்கு அசாத்தியமாய்க்கோபமுண்டாய் அவள் ஏகமாய்த் திட்டுவாள். அப்படிச் செய்யவே பையன்களுக்கு இன்னும் அதிக உற்சாகம். கடைசியாக அப்படிக் கூப்பிடப்படுவதிலும் கோபிப்பதிலும் அவளுக்கே உற்சாகமுண்டாய்விட்டது. பொழுதுபோகாவிட்டால் அவள் வீதிவழிவந்து சும்மா இருப்பவனைப்பார்த்து 'நீ நல்லவன் ஒன்றும் சொல்லமாட்டாய்' என்பாள். அவன் எதிரே 'ஆமாம் பாட்டி' என்று சொல்லிவிட்டு, அவள் கொஞ்சதூரம் போனவுடனே 'பாப்பாப்பட்டி வெட்ட்ரிவாள்' என்று உரக்கக் கூப்பிட்டுவிட்டு ஓடிப்போய்விடுவான். இவளோ, 'ஏனடா கட்டையிலேபோவாய்' என்று தன்னுடைய ராமபாணத்தைத் தொடுத்துவிடுவாள். சேலிக்காரப்பிள்ளைகள் அவளைப்பார்த்து "நான் என்றைக்காவது உன்னை 'பாப்பாபட்டி யகத்து வெட்டரிவாள்' என்று சொல்லியிருக்கிறேனாபாட்டி" என்



றும் "பாட்டி அவன் உன்னை சும்மா சும்மா 'பாப்பாபட்டியகத்து வெட்டரிவாள்' என்று சொல்லுகிறான்." என்றும் சொல்லாததுபோல் சொல்லுவது வழக்கம். இப்பொழுது கலியாணப்பந்தருக்குமுன் அவள்இருந்த நிலைமையை முத்துஸ்வாமிஅய்யர் பார்த்தமாத்திரத்தில் அறிந்துகொண்டு அவளிடம் வரவே இருபுறமும் ஜனங்கள் விலகினார்கள். நடந்த சங்கதி என்னவென்றால், அவள் வழக்கம்போல் கிராமபிரதட்சணம் செய்துகொண்டு வருபவள்போல வரும்போது கலியாணத்திற்கு வந்திருந்தவர்களில் ஒருவன் உள்ளூர்ப்பிள்ளைகளால் தூண்டப்பட்டு அவளை பெயரிட்டழைக்கவே அவள் வழக்கம்போல வைய ஆரம்பித்தாள். அவன் கலியாணப்பந்தலுக்கருகே வையாதே என, அவள் அதுதான் சமயமென்று, 'உன் கலியாணமும் கண்டது இன்னொன்றும்கண்டது: உன்கலியாணத்தில் இழவுவிழ' என்று வையவே, அங்கிருந்தவர்களில் ஒருவனுக்குக்கோபம் வந்து அவளைபோவென்று பிடித்துத் தள்ளினான். அவள் கீழேவிழுந்து மறுபடி யதிகமாய் வையவே கூட்டம்கூடிவிட்டது. சிலர் வைதார்கள்; சிலர்அடித்தார்கள். அவள் என்னபண்ணியும் அவ்விடம் விட்டுப் போகாததால் ஒருவன் அவளை ஓங்கியறைந்தான். அதனால் அவள் பெரிய கூக்குரல்போட்டாள் அதைக் கேட்டுத்தான் உள்ளே இருந்தவர்கள் எல்லாரும் ஓடிவந்தார்கள்.

முத்துஸ்வாமி அய்யர் அவளிடம் சென்று. 'இது என்னபாட்டி இது' என, அவள் 'அப்பா முத்துஸ்வாமி, வந்தாயா, மகாராஜனா யிருப்பாயப்பா. இந்தச் சனியன்களெல்லாம் என்னைப்போட்டு மொத்துகின்றன: (அழுகிறதாக பாவனை பண்ணிக்கொண்டு) இதோபார் இங்கே காயம்,' இங்கே சயாம்' என்று அவர் கையைப்பிடித்துக்கொண்டு அவள் மார்புப்பக்கம் கொண்டுபோக அவர் கையைப் பின்னிழுத்துக்கொண்டு 'அவர்கள் கிடக்கிறார்கள். நீ நல்லவள், புத்திசாலி, எழுந்திரு, நல்ல சமயம் பார்த்துக்கொண்டாய். அகத்துக்குப்போ; நீ என்ன பண்ணுவாய், உன்னைச் சொல்லக் குற்றமில்லை' என்றார். அவள் 'எனக்குத் தொண்ணூறுவயதாய்விட்டது; எனக்கு அடிபடச் சீவனிருக்கிறதாப்பா, முத்துஸ்வாமி, என்தங்கக்குழந்தை, நீ இல்லாவிட்டால்'—என்று சொல்லி முடிப்பதன்முன் அவர் 'சரிதான் போ: எனக்கு நடந்த சங்கதியெல்லாம் தெரியும்போ; சரிதான்போ, அந்தப்பக்கம்.' என்று கோபித்துச்சொல்ல, அவள் எழுந்திருந்துகொண்டு 'நீ என்னடாப்பா அதட்டுகிறாயே! நீ நல்லவனப்பா, உனக்குசமானமா, என்பிள்ளைசொல்லுவான்'—என, அவர்: 'நல்லவனாயிருக்கக்கண்டு தான் இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்கிறது. நீயும் நல்லவள்தான். அப்புறம் பேசிக்கொள்வோம்போ' என, அவள் தன் துணிகளை கட்டிச் சுருட்டிக்கொண்டு போய்விட்டாள். அவள் போகவே முத்துஸ்வாமி அய்யர் திரும்பினார். 'இதென்ன இப்படி சகுனத் தடை நேரிட்ட'தென்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த கிருஷ்ணய்யர், இராமசுவாமி சாஸ்திரிகள் ஆகிய இருவரையும் அவர் பார்த்து அவர்களுடைய யோசனையையறிந்து சிரித்துக்கொண்டு 'ஏன்மாமா, உள்ளே போவோமே, இது ஒரு வேடிக்கை. இவள்மாதிரி இன்னும் இரண்டுமூன்று பைத்தியக்காரிகள் உண்டு இந்தவூரிலே' என்றார். நாணி செய்கை சகுனத்தடையென்று முத்துஸ்வாமி அய்யருக்கும் பட்டது. ஆயினும் அவளும் பொன்னம்மாளும் முந்தின நாள் தனித்துப் பேசிக்கொண்டிருந்ததை அவர் பார்த்ததால் இவளை அந்தப் பொன்னம்மாளே தூண்டிவிட்டிருப்பாள் என்பது அவருடைய எண்ணம். ஆயினும் நல்லவேளையாய் மாங்கலியதாரண சமயத்துக்கே வந்துவிடாமல் நம்மைக் காப்பாற்றினாள் என்று அவருக்கு சந்தோஷம். அவர் அவளை பைத்தியக்காரி என்றவுடன் கிருஷ்ணய்யர் 'அவள் பைத்தியக்காரிபோல் தோன்றவில்லையே' என, முத்துஸ்வாமி அய்யரும் சற்று மனம்கலங்கி, 'அரைப்பைத்தியகாரி, வந்தகாரியம் வேறு. அப்புறம் சொல்லுகிறேன். 'தஞ்சாவூரானுடைய சேஷ்டைஇது' என, இராமசுவாமி சாஸ்திரிகள், 'ஆனாலும் இப்படி செய்வாளோ' என, முத்துசுவாமிஅய்யர் 'அவளா! அவள் எல்லாம்செய்வாள் மாமா'என, கிருஷ்ணய்யர் 'சரிதான் கழுதையைவிட்டுத் தள்ளுங்கள். உள்ளபடி இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மீனாட்சிதான் காப்பாற்றவேணும். அவள்மேலே பாரத்தைப் போடுவோம். உள்ளே வாருங்கள், (உரக்க) எல்லாரும் உள்ளே வரவேண்டும், தயவுபண்ணவேணும்' என்று சொல்லிக்கொண்டு எல்லாரையும் உள்ளே கூட்டிச் சென்றார்.

(இன்னும்வரும்).

**பி. ஆர். சிவசுப்பிரமணிய ஐயர், பி. ஏ.**

## கடிகைமுத்துப்புலவர்.

1. **கடிகைமுத்துப்புலவர்** என்று பெயர்படைத்த இந்த வித்துவான், திருநெல்வேலிச் சில்லாவைச் சேர்ந்த சமஸ்தானமாகிய எட்டியாபுரத்திற் பிறப்பு வாய்ந்தவர். இவர் இருந்தகாலம் 18-ம் நூற்றாண்டென்றே கொள்ளப்படும். அஃதெங்ஙனம் கொள்

ளப்பட்டதெனில், நம்புலவர் அவ்வெட்டியாபுரத்தையரசாண்ட சகவீரராமவெங்கடேசுர எட்டம நாயக்கரது வாசல் வித்துவானாயிருந்தனராதலின் இவர் அந்நூற்றாண்டுப்புலவரென்றும். இவர் அவ்வரசனது வாசல்வித்துவானென்றதற்கு அச்சமஸ்தானத்திலேயே கர்ணபரம்பரையாக யாம் கேள்விப்பட்டதும்,

"கருப்பஞ் சிலையு மோர்கரமே
கண்டே னானுஞ் சுகரமே
காமப் பயனு மூர்க்கரமே
கணையைத் தொடுத்தான் சீக்கரமே
விருத்தம் புரிவா ரநேகரமே
வல்லார் மடவார் நிசகரமே
மாமால் வேங்கடேசு ரெட்டன்
வருவான் வருவானென் றிருந்தேன்
திருத்தும் படிக்கு மனோகரமே
செய்தா னினித் திவாகரமே
தினியில் வருவா யெனக்கரமே
தெரிய வுதித்தான் சக்கரமே
பொருத்தந் தருகண் ணாகரமே
போர்வேட் கிலைவீ ராகரமே
பூவை மாருஞ் சேசரமே
புகழ்ந்தேன் ரத்தி னாகரமே.

என்றகவியும் இதுபோன்ற பிறகவிகளும் ஆதாரங்களாகின்றன.

2. இவருடைய கல்வியறிவினைக்குறித்துச் சொல்லுதற்கு மேற்கூறிய கவியொன்றே தக்க ஆதாரமாம் இவர்செய்த பிரபந்தங்களெல்லாம் விசேஷமாக நரஸ்துதியாகவேயிருக்கின்றன. இவராற் செய்யப்பட்டனவாகச்சொல்லிக்கொள்ளும் பிரபந்தங்களுள் மூன்றுமாத்திரம் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவை சமுத்திரவிலாசமும், திக்குவிசயமும், திருவிடைமருதூரந்தாதியுமாம்.

3. இனிமேற்கூறிய பிரபந்தங்களின் நயங்களைப் பற்றி யெழுதப்புகுவோம். முதலாவதாகிய சமுத்திரவிலாசமென்பது நூறுசெய்யுட்கள் அடங்கியது. இதற்குக் கழிக்கரைப்புலம்பல் என்று மற்றொரு நாமமுண்டு. சமுத்திரக்கரையோரத்திலே இருந்து தலைமகனைப்பிரிந்து ஆற்றாமையால், மன்மதனுடைய பேரிகையாகிய கடலானது உத்கோஷிக்கத் தலைமகள் வருந்தாநிற்றலே யிந்நூலின் விஷயமாகும். இதிலேயிவருடைய கற்பனாசாமர்த்தியமும், சுதந்தரயூகமும் வர்ணனைத்திறனும இனிது விளங்குகின்றன. சிற்சிலகவிகள் சமுத்திரத்திற்கும் அரசனுக்கும் சிலேடையாமாறு அமைக்கப்பட்டிருக்கின்றன. சிலசெய்யுட்கள் காம்பீரம், மடக்கு முதலிய சொல்லணிகளைப்பொருந்தியிருக்கின்றன. தமிழ்நூற்பயிற்சியொன்றுமேயுடையார் இப்பிரபந்தத்தினை மிகவுங்கொண்டாடுவார்கள்.

4. இரண்டாவதாகிய திக்குவிசயம் என்பது திருநெல்வேலிச் சில்லாவைச்சேர்ந்த ஒரு சிறு சமஸ்தானமாகிய சிவகிரிக்கு அரசனாகிய வரகுணராம வன்னியனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு விளங்குகின்றது. இது அவ்வரசனுடைய செல்வம், சிறப்பு, அதிகாரம், பராக்கிரமமுதலியவற்றை விரித்துக்கூறுகின்றது. இதிலே 320 கவிகளுள. இது சற்று எளியநடையிலமைக்கப்பட்டுளது.

5. இனி மூன்றாவதாகிய திருவிடைமருதூரந்தாதி கும்பகோணத்திற் கடுத்த திருவிடைமருதூரிலேயுள்ள சிவபெருமான்மீது பாடப்பட்டது இது அந்தாதியமகத்திற் சற்றேனும் வழுவாது நூறுபாடல்களாலாகியது. இவ்வந்தாதியிலநேகங் கவிகள் துறைப்பொருளமைந்துள்ளன. அந்தாதித்தொடையும் பாட்டுகளின்போக்கும் வெகு நேர்த்தியாயிருக்கின்றன. இவர் இப்பிரபந்தத்தைச் செய்ததினாலே யிவரைச் சைவரென்றுகொள்ளுதற்கு இடமுண்டு. மேலும் இந்நூலொன்றுதான் நம்புலவர் செய்தவற்றுட் கடவுண்மேலது என்று தோன்றுகின்றது.

6. இவர் மேற்கூறிய பிரபந்தங்களைத் தவிர்த்து அநேகந்தனிப்பாக்கள் செய்திருக்கின்றனர். அவை மிகவும் ஆச்சரியகரமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சில மடக்கு என்னும் அலங்காரத்தோடும் சிறந்த சத்தார்த்தங்களோடும் விளங்குகின்றன. இத்தனிச்செய்யுட்களையெல்லாம் ஊ. புஷ்பரதச்செட்டியாரா லச்சிடப்பட்ட தனிப்பாடற்றிரட்டு என்னும் ஓர் அருமையான புஸ்தகத்திற்காணலாம்.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரி, பி. ஏ.

## கோல்பெர்ட் சரித்திரம்.

### துணிவியாபாரி கடையிலிருந்து முதல்மந்திரிஸ்தானத்துக்கு வந்த வாலிபன்கதை.

III

சாயங்காலம் 7-மணிநேரம் இருக்கும். விளக்கு வைத்து இரண்டுநாழிகை ஆய்விட்டது. பாப்டிஸ்டினுடைய தகப்பனார்வீட்டில் மான்ஷியர் கோல்பெர்ட்டும் அவருடைய மனைவியும் அவர்களுடைய இளையபுத்திரனான 6-வயது குழந்தையோடு சாப்பாட்டுக்கு சித்தமாக உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது மூடியிருந்த அவர்களுடைய சாப்பாட்டு அறையின்கதவைத் திறந்துகொண்டு பாப்டிஸ்ட் உள்ளேவந்தான். அவன் வந்தபொழுது அவன்முகம் கலங்கி மனம் குழம்பியிருந்த மாதிரியைப் பார்த்துவிட்டு அவனுடைய தாயார் தகப்பனார் இருவரும் பயந்து பிரமித்துப்போனார்கள். உடனே இருவரும் "என்ன சமாசாரம்? வேலையுள்ளநாளில் ஏன் கடையைவிட்டு வந்துவிட்டாய்? கடைக்கார சாத்தாணிக்கு உடம்பு சரியில்லையோ? அல்லது உனக்குத்தான் உடம்பு சரியில்லையோ, என்ன சமாசாரம்? ஏன் வந்தாய்? சொல்!" என்று கேள்விமேல் கேள்வியாகக் கேட்டார்கள்.

அவர்கள் கேட்ட இந்தக் கேள்விகள் இராமபாணம் தொடுத்தாப்போல் சரசரவென்று ஒன்றின்மேலொன்று வெகுவேகமாய்த் தொடர்ந்துவந்தமையால் அச்சிறுவாலிபன் அவைகளுக்கு பதில்சொல்ல ஒரு நிமிஷம்கூடவின்றித் தயங்கினான்; ஆனால் அவர்கள்சொன்ன கடைசிவார்த்தைக்குப் பின் ஒரு பெருமூச்சுவிடவே, அர்த்தசயத்தை மேற்கொண்டு "மான்ஷியர் சாத்தாணி என்னை வேலையைவிட்டுத் தள்ளிவிட்டார்" என்று சொன்னான் பாப்டிஸ்ட்.

அவனுடைய தகப்பனார் மான்ஷியர் கோல்பெர்ட் என்பவர் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் தன் பிள்ளையின் நடத்தையைச் சோதிக்கும்கண்டிப்பில் ஒரு நிமிஷத்துக்கு தகப்பன் பிள்ளையென்கிற உறவைத் தள்ளிவைத்துவிட்டு "அப்படியானால் நீ ஏதோ திரிசமம்செய்திருக்கவேண்டும்! துரையவர்களுக்கு சரியாக நடந்துகொள்ளக்கூடவில்லையாக்கும்!" என்றார்.

அதற்கு பாப்டிஸ்ட் அதிக தாழ்மையோடு "அப்பா, நான் செய்தது சரியோ தப்பிதமோ அதை நீங்கள் தீர்மானித்துச் சொல்லவேண்டும்." என்றான்.

அதற்குள்மான்ஷியர் கோல்பெர்ட் கோபத்தோடு "என்னடா அது? நீ சொல்வது ஒன்றும் அருத்தமாகவில்லையே!" என்று கேட்டார்.

"என் பிரியதந்தையே, உங்கள் உத்திரவுப்படி, இன்றைக்கு நடந்தவற்றையெல்லாம் நான் தங்களுக்குச் சொல்கிறேன்; அதைக் கேட்டபின் நான் பிசகுசெய்திருந்தால் சொல்லுங்கள். என் புத்திக்கேற்க நான் செய்தது பிசகு என்று தோன்றவில்லை. ஏனெனில், இந்தக் கதியடைந்து தங்கள் முன்வந்து நிற்பது எனக்கு எவ்வளவுதான் மனவருத்தமுண்டுபண்ணுவதாயிருந்தாலும், நடந்தகாரியங்களை மறுபடியும் அடியிலிருந்து தொடங்கிச் செய்யச்சொன்னால் இப்பொழுது எப்படி நடந்துகொண்டேனோ அப்படியே மறுபடியும் நடந்துகொள்வேன்!" என்றான்.

"சரி, மேலேசொல், கேட்போம்" என்றார் அவனுடைய தகப்பனார். அவனுடைய தாயார் அவனைப் பார்த்து தைரியமூட்டினாள். அவன் சிறுதம்பி அம்மாள்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அண்ணாவுக்கு கையைக்காட்டி முத்தம்கொடுத்துக்கொண்டிருந்தான். இதை வாசிப்போர்க்கு ஏற்கனவே தெரிந்துள்ள விஷயங்களையெல்லாம் பாப்டிஸ்ட் விடாதுநடந்தது நடந்தவாறு எடுத்துரைத்தான்.

அவன் சொன்னதில் எவ்வளவு கபடின்மை, எவ்வளவு வெகுளித்தனம்! ஒருவார்த்தை அதிகப்படி இருக்கவேண்டுமே! இல்லை. ஒரு நிந்தைமொழி உபயோகிக்கவேண்டுமே! கிடையாது. சாத்தாணி செய்த கொடுமைகளை எடுத்துரைக்கையில் அந்த இனியபையன் நிந்தைமொழி ஒன்றும் உபயோகிக்காததன்றி, வாஸ்தவத்தில் அக்கிழவியாபாரியின் நடத்தை அவன்மனதுக்கு எவ்வளவு வெறுப்பாகவிருந்தாலும், அவனுடைய நடத்தைக்கு ஏதாவது முகாந்திரங்கள் தேடி அவன்பேரிலுள்ள குற்றத்தைக் குறைக்கப்பார்த்தான். சாத்தாணி அவனைக் குரூரமாய் நடத்தி வேலையைவிட்டுத் தள்ளினசங்கதியைத் தகப்பனாருக்குச்சொன்னதும் அக்கிழவியாபாரியின் குற்றத்தைக்குறைக்குமாறு பின்னும் அவன் சொன்னதைக்கேளுங்கள்: "என் *ஞானத்தகப்பனுக்கு பணத்தின்மேலுள்ள ஆசைக்கு அளவு இல்லை. அவர் துணிவியாபாரியாதலால் ஒருக்கால் என்னுடைய நடத்தை அவருக்குத்தெரியவில்லையாக்கும். பெறுமான விலைக்குமேல் கொஞ்சம் அதிகமாகவிற்கிறதும் ஏராளமாய் அதிகலாபம்வைத்துவிற்கிறதும் இரண்டும் அவருக்கு ஒன்றேபோலும். ஒருவன் கள்ளன் என்றுபேர்வாங்காமலும், கள்ளத்தனத்துக்காக தண்டிக்கப்படாமலும் கஜத்துக்கு 2-அணா லாபம்வைத்து விற்கலாமென்றால் அதேபேர்வழி அவனால் கூடுமானால் கஜத்துக்கு 100 ரூபாய் லாபம் வைத்து ஏன்விற்கலாகாது? அதற்கு என்னசொல்கிறீர்கள், அப்பா? அப்படி நியாயம்பேசுவது மிகவும் விசனிக்கத்தக்கதுதான், ஆனால் விஷயமிருக்கிறது அப்படித்தானே: அதற்கு நாம் என்ன செய்கிறது!" என்றான்.

* கிறிஸ்தவர்களுக்குள் குழந்தைபிறந்தபின் அதற்கு ஞானஸ்நானம் செய்வித்து நாமகரணமிடும் பொழுது கூடவிருந்து பேரிடுவோர்க்கு ஞானத்தகப்பன், அல்லது ஞானத்தாய் என்று சொல்லுகிறது.

தன்மகன் வாயிலிருந்துவந்த இந்தவார்த்தைகளைக் கேட்டு உள்ளுக்குள் அடங்கா மகிழ்ச்சிகொண்ட மான்ஷியர் கோல்பெர்ட் தன்கைகளை நீட்டிக்கொண்டு "இங்கே வாடா மகனே, என்னைக்கட்டிக்கொள்" என்று சொல்ல, பாப்டிஸ்டும் அவர் கரங்களில்வந்து விழுந்தான். தன்கரங்களில்விழுந்த மகனைக் கட்டியணைத்து முத்தம்கொடுத்து "அப்பா, என்மகன் என்றால் நீதான். நீ நன்றாய் நடந்துகொண்டாய்; நீசெய்தது அவ்வளவும் எனக்குப்பூர்ணசம்மதம்." என்று கொண்டாடினார். அதற்குள் பக்கத்திலுள்ள அவன்தாயார் அவள்கைகளை நீட்டிக்கொண்டு "என் கண்ணு பாப்டிஸ்ட் இங்கேவா, நீ உண்மையில் நன்றாய் நடந்துகொண்டாய், நீசெய்தது சரி. இங்கே என் பக்கத்தில் உட்கார்ந்துகொள். அவ்வளவு தூரம் நடந்துவந்தாயே; பசியாகவிருக்கும், சாப்பிடலாம்வா. இனிமேல் நீ அந்தமனிதனிடம் திரும்பிப்போகவிடேன். இது நிச்சயம்" என்றாள்.

பாப்டிஸ்ட் அவனுடைய தாயாருக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, "அங்கே போகாவிட்டாலும், நான் உங்களுக்கு பாரமாக சும்மா இருக்கப்படாது அம்மா." என்றான். "அதைப்பற்றி நாளை யோசிப்போம். இன்றைக்கு அந்தத் துணிவியாபாரி எங்களுக்கு ஒரு விருந்தாளியை அனுப்பவேண்டுமென்று தெய்வாக்கினையிருந்தபடி வந்த நல்ல அதிதியை உபசரித்துக்கொண்டாடும்வகையைப்பற்றிமட்டும் நினைப்போம். வேறுகவலைவேண்டாம்" என்றார் மான்ஷியர் கோல்பெர்ட். இப்படி எல்லாரும் சந்தோஷமாக போஜனத்திற்கு சித்தமாக உட்கார்ந்திருக்கையில் அந்தவீட்டிலுள்ள ஒரே வேலைக்காரியான ஜேன் என்பவள் வந்து "ஐயா, தெருவில்ஒரு கனவான் தபால்வண்டியில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவர் தங்களோடு பேசவேண்டுமென்று சொல்கிறார்." என்றாள்.

"அவருடைய பேர்என்ன ஜேன்?"

"அவரை உங்களுக்குத் தெரியாதாதலால் அவருடைய பேரைச்சொல்வதில் பிரயோஜனமில்லை என்கிறார். ஆனால் அவர் தங்களைப் பார்க்கவேண்டுமென்று அதிகஆவலாயிருக்கிறார்".

"அவர் எனக்குத் தெரியாதவராயிருந்தாலும் அவரைப் பார்க்கமாட்டேன் என்று சொல்ல யாதொரு நிமித்தமுமில்லை. ஆகையால் அவரை உள்ளேவரச்சொல்" என்று சொல்லிவிட்டு வந்தவரை மரியாதைசெய்துபசரிப்பதற்காக அவருடைய நாற்காலியைவிட்டு எழுந்து நின்றார்.

வெளியிலிருந்து உள்ளேவந்த அந்நியர் பாரிஸ்நகரத்திலிருந்து வந்தவரென்று தெரியும்படி பட்டணத்து மாதிரியெல்லாம் அதிகமாக அவர் நடையுடை பாவனைகளில் விளங்க, டம்பமாய் உள்ளே வருகையில் அவரைப்பார்த்ததும் பாப்டிஸ்ட் முகத்தில்அதிகமாக இரத்தம் சுரந்தது.

அந்த அந்நியன் பாப்டிஸ்டினுடைய தகப்பனாருக்கு வணக்கம்செய்து, கோல்பெர்ட் பெருமாட்டி முன்வந்ததும் தலைமட்டும் குனிந்து அந்த அம்மாளுக்கு வணக்கமாய் மரியாதைசெய்துவிட்டு, பின்னும் அவன் தகப்பனாரைப்பார்த்து "ஐயா, நான் இப்படி அவசரமாக உள்ளேவந்ததற்கு ஆயிரந்தரம் மன்னிப்புக்கேட்டுக்கொள்கிறேன். ஆனால் நான் நாளைக்கு ஊருக்குப் போகிறேன்; தங்களோடு பேசவேண்டுமென்று நான்வந்தகாரியம் தாமதிக்கத் தக்கதாகவில்லை. என்பேர் மான்ஷியர் சின்னாணி. பாரிஸ்நகரத்து சின்னாணி அண்ட் மாஜராணி என்னும் பணவியாபார கம்பெனியில் நான் ஒரு முதலாளி." என்றான்.

மான்ஷியர் கோல்பர்ட் வந்தவருக்கு ஒரு நாற்காலிகொடுத்து உட்காரச்சொல்லியுபசரித்து "நான் தங்களுக்கு எந்தவிதத்தில் உதவிபுரியக்கூடும்?" என்று கேட்டார்.

அவர் பாப்டிஸ்டைக்காட்டி "இந்தவாலிபன் தங்களுடையபுத்திரன்தானே, இல்லை?" என,

"ஆம், ஐயா, கடவுள் அனுக்கிரகம்." என்று மான்ஷியர் கோல்பெர்ட் மறுமொழிசொன்னார்.

"கடவுள் கிருபை உங்களுக்கு இருக்கிறதுதான்: இந்தக்குழந்தை இன்று காலமே என்னிடத்தில் நடந்துகொண்ட மாதிரி உண்மையில் மேன்மையாகவேயிருந்தது."

கோல்பெர்ட்பெருமாட்டி தன்பிள்ளை அவன் கடமையைச் செய்ததைப்பற்றி கர்வம் அடைந்துவிடப்போகிறானென்று பயந்து "அவன் நடந்துகொள்ளவேண்டிய கடமைப்படி நடந்துகொண்டானேயன்றி அதில் விசேஷம் ஒன்றுமில்லை" யென்று சுருக்க மறுமொழிசொன்னாள்.

"இல்லை, அவன்நடத்தை மேன்மையாகவேயிருந்தது, அம்மா. உங்களுக்கு சங்கதியெல்லாம் தெரியும்போலிருக்கிறது. ஆனால் இதுசங்கதி நீங்கள் அனேகமாய் உங்கள் பிள்ளை சொல்லிக்கேட்டிருப்பீர்களாதலால் எனக்கு மிகவும் சந்தோஷமுண்டுபண்ணினது எதுவோ அதை அவன் தங்களிடம் சொல்லியிருக்கமாட்டானென்று நினைக்கிறேன். நான் இன்றொருதுணி வாங்கவேண்டி சாத்தாணிகடைக்குப்போனேன். அப்பொழுது அங்கிருந்தவேலைக்காரன் எல்லாவிவரங்களையும் எனக்குச்சொன்னான்.



அம்மா, யாவரும் மெச்சத்தக்க தங்கள் பையன் அந்தத்துணியை என்னிடம் அதிகவிலைக்கு விற்றதால் வந்த அதிகப்படித்தொகையை அவன் எஜமானனோடு பங்கிட்டுக்கொண்டுபோக மறுதலித்துவிட்டான்." என,

"பேஷ், பேஷ்! சரி, சரி, முற்றும்சரி! என்னருமைச்செல்வம்!" என்று தன்புதல்வனைத் தழுவிக்கொண்டுபெருமையும் சந்தோஷமும் பொங்க கோல்பெர்ட் பெருமாட்டி பூரித்துப்போனாள். பாப்டிஸ்ட் நாக்குழற "அப்படிச்செய்தால் அது யோக்கியமாகாது" என்றான்.

மான்ஷியர் கோல்பெர்ட்டும் அந்த வார்த்தைகளைக்கேட்டு மனம்பூரித்துப்போனார்.

உடனே அவர் பணவியாபாரியைப் பார்த்து, "ஐயா, என்மகன் அவனுடைய இந்த நடத்தைக்காக சாத்தாணிகடையில் வேலையாகவிருந்ததிலிருந்து தள்ளிவிடப்பட்ட சங்கதி உங்களுக்குத்தெரிந்திருக்குமே" என,

"அது எனக்குத்தெரியும்; கடைவேலைக்காரன் சொன்னான். அதனாலேதான் இங்கேவந்து, நீங்கள் உங்கள் புத்திரனை ஏற்கனவே வியாபாரத்தொழிலில் பிரவேசிக்க விட்டுவிட்டபடியால் நாணயமும் கண்யமுமுள்ளவனாயிருக்கிற அவனை எங்கள் 'பாங்கியில்' வேலைபார்க்கும்படி அனுப்ப உங்களுக்கு ஏற்குமோவென்று கேட்டுப் போகலாமென்றுவந்தேன். அங்கேயிருந்தால் அவன் நல்லஸ்திதிக்குவர அதிக இடமுண்டு. அம்மா, உங்கள்பையன் மிகவும் மேலானஸ்திதிக்கு வருவானென்பதற்குச் சந்தேகமில்லை; நான் சொல்லுகிறேன், பாருங்கள்" என்றார் அப்பணவியாபாரி.

தன்பிள்ளை நல்ல மேலானஸ்திதிக்கு வருவானென்று சொல்லக்கேட்ட கோல்பெர்ட் பெருமாட்டி மன உருக்கத்தோடு "ஐயா, உம்மைக் கடவுள் ஆசீர்வதிப்பார்." என்று அவரை வாழ்த்தினார்.

இதுவரையில் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்த பாப்டிஸ்ட் இப்பொழுதுதான் மான்ஷியர் சின்னாணியின் நோக்கத்தை அறிய ஆரம்பித்தான். உடனே அவன் அப்பணவியாபாரியைப்பார்த்து: "நான் ஆஸ்திவந்தவனாகும்பொருட்டு என் தாய்தந்தையரைவிட்டுப் பிரியவேண்டுமானால் அப்படிப்பட்ட வேலை எனக்கு வேண்டாமென்று மறுதலிக்க வேண்டியவனாயிருக்கிறேன் ஐயா." என்றான். "ஆனால் அதை நான் உனக்காக மறுக்கவில்லையப்பா? பாப்டிஸ்ட்" என்று அவன்தகப்பனார் பிரீதியோடும் கவலையோடும் சட்டென்று மறுமொழிசொல்லி அவன் வாயை அடக்கிவிட்டுப் பின்னும் சொல்கிறார்: "அப்பா, மகனே, நாம் மிகவும் ஏழைகளாகவிருக்கிறோம். உன்னைப்போலொத்த புத்திசாலியை நாங்கள் இந்த நாட்டுப்புறப் பட்டணத்தில் மனோவிர்த்தி செல்வவிர்த்திக்கு அதிகமான யோக்கற்ற இடத்தில் முடங்கப்போட்டுவைத்துக்கொண்டிருந்தால் அது என்மனதுக்கே குற்றமாகத்தோன்றும். இந்த கனவான் உன்னுடைய குணத்தை மதித்து உன்னைத் தேடிக்கொண்டு இவ்வளவுதூரம் வந்திருக்கிறபடியால் அவர் என் நம்பிக்கைக்கு முற்றும் பாத்திரராயிருக்கிறார். ஐயா, இதோ அவனை உங்களுக்குக்கொடுத்தேன். என்னுடைய குலக்கொழுந்தை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன். நீங்கள் அவனை அழைத்துக்கொண்டுபோக இருக்குமிடம் ஒரு பெரியநகர். அங்கே அவனைப்பாதுகாப்பார் ஒருவருமில்லை. ஆகையால் அப் பெரியநகரில் அவனை—ஒரு தகப்பனைப்போல் என்றுசொல்ல உங்களுக்கு வயதுபோதாது,வெகு பால்யராயிருக்கிறீர்—ஒரு சகோதரனைப்போல் கிட்டவிருந்து பாதுகாத்து வரவேண்டும். அப்பா, பாப்டிஸ்ட், இந்த கனவானோடு கூடப்போ; உன் தொழில்சம்பந்தமான எல்லாவிஷயங்களிலும் அவருடைய புத்திமதியைக் கேட்டு அந்தப்படி நட; ஆனால் யதார்த்தமுறை, கண்யம், சன்மார்க்கம் இவை சம்பந்தப்படும் விஷயங்களில் உன்னுடைய மனதே உனக்குப் புத்திசொல்லும் மந்திரியாக இருக்கட்டும்."

பாப்டிஸ்ட் தன் தகப்பனார் சொன்னவார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேட்கையில் கண்ணீர்விட்டழுதான். ஆனால் அவன் அவர்களைவிட்டுப் பிரிந்துபோகமாட்டேனென்று முன்போல் ஆக்ஷேபிக்கவில்லை. அவனுடைய பெற்றோர்க்குப் பாரமாயிருக்கக்கூடாதென்கிற எண்ணமும், அவனுடைய குடும்பத்துக்கு உதவிபுரிய உபயோகமுள்ளவனாய் இருக்கவேண்டுமென்கிற விருப்பமும் சேர்ந்து சீக்கிரத்தில் அவன் அழுகையை நிறுத்திவிட்டன. ஆனாலும் அவன் ஊருக்குப்போக விடைபெற்றுக்கொண்டது மிகவும் விசனகரமாகவேயிருந்தது.

பாப்டிஸ்ட் இத்தனைவருஷகாலமாகப் பிறந்து வளர்ந்து சீராட்டப்பெற்ற அந்த வீட்டையும் அவன் பெற்றோர்களையும் மற்றவர்களையும் விட்டுப்பிரிந்துபோகவேண்டுமென்று நினைத்தபொழுது அவன் இளமனம் துடித்து உருகிப்போயிற்று. அந்தவீட்டில் அவனுக்கு அருமையாகத்தோன்றாதது ஒன்றில்லை. எதைப்பார்த்தாலும் அவன் மனதுக்கினிமையான பழைய ஞாபகம்வந்து அவ்வளவுசந்தோஷ

மாய் இருந்தவிடத்தை விட்டுப்பிரிந்து போகவேண்டுமேயென்று அவன் மனதைத் துன்பப்படுத்தும். வேலைக்கார ஜேன் என்னும் கிழவியைவிட்டுப் பிரிவதுகூட அவனுக்கு மகா விசனமாகவிருந்தது.

பாப்டிஸ்ட் பாரிஸ் நகருக்குப்போசப் பிரயாணமானதும், அவன் இளம்பிராயத்திற் கியல்பாயுள்ள மனவெழுச்சியாலும், வழியில் விதம்விதமாகத் தோன்றிய நூதன காக்ஷிகளாலும், இடமாறுதலாலும் அவன் விசனமெல்லாம் அவனைவிட்டுப் பறந்தோடிவிட்டது. தன்னைப்போல் இளம்பிராயமும் சந்தோஷ சுபாவமுமுள்ள அந்தப் பணவியாபாரியோடு உட்காரச் சௌக்கியமாயிருந்த பேஷானகுதிரை வண்டியில் அவன் வேகமாய்ச் சவாரிபோகையில், அவன் தனக்குள்ளே இதற்கு முன்னுணராத ஒரு புதிய உற்சாகம் உண்டாகக் கண்டான்.

இதைவாசிக்கும் நண்பர்களே, இனி நாமும் அவனோடு பாரிஸ் நகருக்குப்போய் அங்கே, துணிவியாபாரி கடையிலிருந்த இச்சிறுபையன் படிப்படியாக மேலந்தஸ்துக்கேறிக் கடைசியில் முதல்மந்திரியாகும் பேரந்தஸ்துக்கு வந்தவிதமெப்படி யென்று பார்ப்போம் வாருங்கள்.

(இன்னும்வரும்.)

C. V. S.

## * என்தாய்.

எனதுபசி ஆறத்தன் இன்முலைப்பா லூட்டி
எனதழுகை மாறிடக்கை யேந்தி—இனிதணைத்து
நாரொடுதுயிற்றி என்கண் ணத்துமுத்த மிட்டுவந்த
தியாரெனில்என் றன்நற்றா யே. (க)

[நார் - அன்பு. துயிற்றி - துயிலச்செய்து - தூங்கச்செய்து. முத்தமிட்டுவந்தது யார் - முத்தமிட்டு உவந்தது யார்.]

திறந்தெனது கண்ணுறக்கம் தீர்ந்தால் அழுகை
பறந்தகலத் தாலாட்டுப் பாடிச்—சிறந்தஅன்பால்
ஏரோ டெனைத்தொட்டி லிட்டாட்டித் தூங்குவித்த
தியாரே யெனில் என்தா யே. (உ)

[ஏர் - அழகு.]

யான்வீழ்ந்தால் ஓடிவந்துற் றென்வருத்தம் நீங்கவே
தேன்வீழ் இனியகதை செப்பியதும்—நான்வீழ்ந்த
பாரிடம் பட்டஇடம் பார்த்துமுத்த மிட்டதுவும்
யாரெனில் என்றன்நற் றா யே. (ஙு)

[யான்வீழ்ந்தால் - நான் (கீழே) விழுந்தால்; தேன்வீழ் இனியகதை - தேன் விரும்பும் இனிமையையுடைய கதை - தேனினும் அதிக இனிமையை உடையகதை.]

இவ்வா றெனக்குமிக எற்றமாம் அன்பு செய்தாய்
எவ்வாறெக் காலத்தி லென்னினுமே—ஒவ்வாவ
லாலுன்னை நேசித் தமர்த லொழிந்திருத்தல்
ஏலும்?உரை யாய்என்தா யே. (ச)

[ஒவ்வு (-பொருந்து)+ஆவலால்+உன்னை. அமர்தல் - தங்குதல். ஏலும் - கூடும். உரையாய் - சொல்வாயாக.]

ஆ ஆ! உனக்கன் பகலேன் அவ் வெண்ணமதும்
நோவேஅஃ தாற்றேன் நுவல் இறைவன்-சாவாதே
நான்சிலநாள் வாழவைத்தால் நன்றியறி வோடுகை
றியான்செய்கு வேன்என்தா யே. [ம்மா

[நுவல் இறைவன் - (எல்லாரும் புகழ்ந்து) சொல்லும் கடவுள். வாழ வைத்தால் - (இந்தப்பூமியில்) வாழும்படி வைத்தால். கைம்மாறு - பிரதியுபகாரம்.]

விருத்தவய தால்நரைத்துன் மேனிதளர் காலம்
திரைத்த உன்நற் கைக்கெனது செங்கை-பரித்திடூஉம்
ஊன்றுகோல் போலுதவ உன்வருத்தம் ஆற்றிடு
நன்றளித்த என்றன்தா யே. [வேன்

[திரைத்த - திரையை உடைய - (வயது முதிர்ச்சியால் உண்டாகும்) மடிப்பை உடைய. பரித்திடூஉம் - பரித்திடும் - தாங்கும்.]

தாங்கருநோ வால்உன் தலைநிமிர்ந்து நில்லாதே
தூங்கிடுகால்,யான்,நீ துயில்படுக்கை—நீங்கலின்றி
நின்மெயினைக் காத்தன்பால் நெக்குவிழி நீர்சிந்தல்
என்முறையா கும்என்தா யே. (எ)

[தாங்கருநோவு - சகித்தற்கரிய வியாதி. தூங்கிடு கால் - தொய்க்கும் காலம். துயில் - தூக்கு. நின்மெயினை - உன்னுடம்பை. நெக்கு - (நெஞ்சு) நெகிழ்ந்து (உருகி). என்முறை—நான் குழந்தையாய் இருக்கும்போது வியாதியடைந்த சமயங்களில் நீ என்படுக்கையை நீங்காது என்னைப் பாதுகாத்தது உன்முறையாயிருந்தது போல, உனக்கு வயதுசென்ற காலத்தில் நீ நோயுற்றால் அப்போது உன்னைப் பாதுகாப்பது என் முறையாகும்.]

வே. ப. சு.

*(A Translation.)

## ஊசிகள் செய்யும்வகை.

நாகரீகம் அதிகரித்த இக்காலத்தில் வேலைசெய்யும் மாதிரியும் தொழில்செய்யும் வகையும் விசேஷ மாறுதல்களடைந்திருக்கின்றன. முன்காலத்தில் ஒரு வஸ்துசெய்யும் தொழிலாளி அவ்வஸ்துவை இயற்கைப்பொருளினின்றும் வேண்டிய செயற்கைப்பொருளாக மாற்றுவதற்கான பல வேறுபட்ட செய்கைகளையும் தானே செய்துவந்தான். உதாரணமாக, ஒரு துணிநெய்யவேண்டுமென்றால் பருத்தியைக் கொட்டையெடுத்து நூல்நூற்று நெசவுசெய்து துணியாக்கும் வரையில் ஆகவேண்டிய பல வேறுபட்ட வேலைகளையும் ஒரு தொழிலாளியே ஒன்றின்பின் ஒன்றாகச் செய்துவந்தான். இதனால் அவன் பலவிதத்தில் கைபழகினவனாக இருக்கவேண்டிய கஷ்டத்தோடு ஒரு வேலையைவிட்டு ஒரு வேலைக்கு அவன் மாறவேண்டிய அவசியத்தால் நேரும் காலநஷ்டமும் அவன் துரிதமாகத் துணிகள்செய்து முடிப்பதற்கு இடையூறாக இருந்தது. நாகரீகம் அதிகமாக ஆக செய்முறைகளெல்லாம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொருபிரிவையும் ஒருவன் விடாமற் செய்துவர, இப்படி பல பிரிவுகளையும் பலர் அதே வேலையாகச்செய்து வருவதனால் ஒவ்வொருவனும் அவன் செய்துவரும் ஒரேவேலையில் அதிக கைப்பழக்கமுற்று தொழிலின் அந்தப் பாகத்தை நேர்த்தியாகவும் கைச்சுருக்காகவும் செய்ய வல்லவனாகிறான். இப்படியே ஒவ்வொருவனும் ஒவ்வொரு செய்முறையில் வல்லவனாக இவர்களெல்லாருடைய வேலைப்பாடும் சேருவதால் வேலைமுடிந்த துணியோ வேறு சரக்கோ செய்தாகிறது. இப்படி செய்வதால் ஒரு பண்டம் செய்துமுடிக்க வேண்டுமானால் பல வேலைக்காரர்களுடைய உதவியும் அவர்கள் ஒழுங்காய் வேலைசெய்ய வேண்டிய ரீதியும் இருக்க வேண்டியது. இந்த ஏற்பாட்டின்படி ஒருதுணி வேண்டுமென்றால் அதற்கு ஐந்தாறு தொழிலாளிகளுடைய உதவி வேண்டியதாகும்: அதனால் அந்த ஒருதுணியின் விலை ஒருவனே அந்தத்துணியை நெய்வதற்கான எல்லாவேலைகளையும் செய்தால் எவ்வளவாகுமோ அதைவிட ஐந்தாறுமடங்கு அதிகமாயிருக்கும். ஆனால் ஒரே தொழிலாளி ஒருதுணி நெய்வதற்குப் பிடிக்குங்காலத்தைவிட எவ்வளவோ சொற்பமான காலத்தில் பலர்சேர்ந்து செய்யப்படும் துணி நெய்தாய்விடும். ஒருதொழிலாளி தானே ஒருவனாக ஒருதுணி நெய்துமுடிக்கப் பிடிக்குங் காலமெல்லாம் அந்த ஒருதொழிலைப் பலபிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு வேலைசெய்யுமிவர்கள் வேலைசெய்துவந்தால் இவர்கள் செய்துமுடிக்கும் மொத்தத்துணிகளில் ஒரு துணியின்விலை சராசரியில் அந்த ஒரு துணியின் விலையைவிட எவ்வளவோ மலிவாகவிருக்கக் காணப்படும். சரக்குகள் ஏராளமாகவும் துரிதமாகவும் செய்யவேண்டின் அதற்குத் தொழிற்பிரிவினையென்னும் இவ்வேற்பாட்டால் அதிகலாபமும் சாதகமுமுண்டு. இப்படி ஒருபொருள் செய்யும் தொழில் நுட்பமான பலபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சிறு பிரிவான வேலையும் ஒரு தொழிலாளியால் செய்யப்பட்டுவர, பலபிரிவுகளிலும் வேலைசெய்யும் தொழிலாளிகளின் வேலைகள் மிக அதிசயமான ஒழுங்குபாட்டின்படி ஒற்றுமையாக நடத்தப்பட்டுவருவதால் மொத்தத்தில் ஏராளமாக சரக்குகள்செய்து தள்ளப்படும். இதற்கு ஊசிகள் செய்யும்வகை ஒரு நல்ல உதாரணமாகும். நாம் தெருவிலும் கடையிலும் காசுக்கு ஐந்து, ஆறு என்று வாங்கும் ஊசிகள் இத்தேசத்திலிருந்து 6,000 மைல் தூரமுள்ள சமுத்திரத்துக் கப்பாலிருக்கும் வெள்ளைக்காரர் தேசமாகிய இங்கிலாந்தில் ஒவ்வொன்றும் சுமார் 150 வேலையாள்கள் கைமாறி எவ்வளவோ விலைபெற்ற யந்திரங்களின் உதவியால் செய்யப்பட்டு இத்தேசத்திற்குக் கொண்டுவந்து விற்கப்படுகின்றன. அப்படியிருந்தும் காசுக்கு ஐந்து, ஆறு என்று அவ்வளவு மலிவாகவிருக்கிறது. இவ்விதமான ஊசியொன்று ஒரேவேலைக்காரனால் செய்யவேண்டுமானால் ஒரு வராகன் கொடுத்தாலும் செய்தாகுமோ என்னமோ சந்தேகந்தான். ஆனால் பெரிய கட்டடங்கள் கட்டி, விலைபெற்ற யந்திரங்களை வாங்கியமைத்து, 150-வகையான வேலைக்காரர்களை யமர்த்தி வேலைசெய்துவருவதால், ஒவ்வொருவேலைக்காரனும் ஒரேவேலையையடிக்கடி விடாமல் செய்துவருவதால் அதில்மட்டும் கைபழகி ஒருநொடியில் எவ்வளவோ கருக்காகவும் மிகவும்அதிசயமான சுறுசுறுப்போடும் அந்த வேலையைச் செய்துவருகிறான்: இப்படியே ஒவ்வொரு உட்பிரிவு வேலையும் துரிதமாகநடக்க, மிகவும் அதிசயமான ஒற்றுமையும் ஒழுங்குபாடும் அவ்வேலைச்சாலையில் பரவியிருப்பதால் ஒருநாளில் லட்சம்கோடிக்கணக்கான ஊசிகள் வெகுசுலபமாகச்செய்து தள்ளப்படுகின்றன. இப்படிச்செய்து தள்ளப்படும் ஊசிகளை இவ்வளவு மலிவாக விற்றும் அவ்விற்றுமுதல் மொத்தத்தில் இவ்வூசிகள் செய்வதற்காகப்பிடித்த அபரிமிதமான செலவுகளெல்லாம் கட்டிவந்து, வேலைநடத்திவர முதல்வைத்த வியாபாரிகள் முதலாளிகளுக்கு லாபமும் கிடைக்கத்தக்கதாயிருக்கிறது.

இப்பொழுது, நமக்கு மிக சாதாரணமானதும் சொற்பவிலையினால் மிக அற்பமாகத் தோற்றுவதுமான இந்த ஊசிகள் செய்யப்படும் வகையைப்பற்றிக் கொஞ்சமுரைப்போம்.

ஊசிகள்செய்யும் முறையைப்பற்றிச் சொல்லுமுன் எஃகு செய்யுமுறை கொஞ்சம் தெரிந்திருக்க வேண்டும். அதைப்பற்றி போனமாசத்து விவேகசிந்தாமணியில் சொல்லி யிருக்கிறது. ஊசிகள் செய்ய முதலாவது நல்ல முதல்தரமான எஃகு வேண்டும். அந்த எஃகினால் செய்யப்பட்ட கம்பியை ஊசிசெய்வதற்கு எவ்வளவு மெல்லிதாக வேண்டுமோ அவ்வளவு மெல்லிதாக இழுத்து அதை ஒரு பெரிய உருளையில் சுமார் 50-சுற்றுச் சுற்றுவார்கள். அப்புறம் அந்தக்கம்பியை அப்படியே

நேரெதிராக இரண்டிடத்தில் வெட்டுவார்கள். 50 சுருள்களையும் நேரெதிராக இரண்டிடத்தில் வெட்டுவதினால் சரி நீளமான 100 கம்பிகள் ஆகும். இந்தக்கம்பிகள் அநேக அடிகள் நீளமிருக்கும். இவைகளை நூறுநூறாகக்கட்டி, அந்தக் கட்டுகளை அப்படியே ஒரு பெரிய கத்தரியின் வாயில் கொடுத்து யந்திரத்தி னுதவியால் அக்கட்டுகளை இரண்டூசிகள் நீளமுள்ள துண்டுகளாக வெட்டுவார்கள். இப்படி வெட்டப்பட்ட துண்டுகள் வளைந்திருக்குமாதலால் அவைகளை இனி நேராகச் செய்யவேண்டும். அதற்காக அவைகளை கட்டுகளாகக்கட்டி அக்கட்டைச் சுற்றி இரண்டு இரும்பு வளையங்கள்மாட்டி மேலும் கீழுமாயுள்ள இரண்டு எஃகு தட்டுகளின் நடுவில் வைத்து மிகவும் பலமாயழுத்தி முன்னும்பின்னுமாய் உருட்டுவார்கள். அந்த எஃகு தட்டுகளில், கட்டுகளின்மேல் மாட்டப்பட்ட இரும்பு வளையங்கள் முற்றும் பதியத்தக்கதாக மேலும் கீழும் இரண்டு வாய்க்கால்களிருக்கும். இரும்புத் துண்டுகளின் கட்டை வைத்தழுத்தும்போது அதைச் சுற்றியுள்ள இரும்பு வளையங்கள் எஃகுதட்டுகளிலுள்ள வாய்க்கால்களில் விழுந்துபோக, மேற்படி எஃகு தட்டுகள் அவைகளின் நடுவிலுள்ள ஊசிக்கம்பிகளை நன்றாக அழுத்தும். யந்தரத்தினுதவியால் கம்பித் துண்டுகளை இவ்வாறு எஃகு தட்டுகளால் அழுத்தி முன்னும் பின்னுமாக உருட்டுவதினால் அந்தக்கம்பிகளெல்லாம் கோணல் நீங்கி முற்றும் நேராய்விடுகின்றன. பிறகு அந்தக்கம்பிகளை ஒருதடவைக்கு 10, 20, ஆக எடுத்துக்கொண்டு ஒரு சாணைக்கல்லில் பிடித்து அவைகளின் முனைகளைக் கூராக்குகிறார்கள். அக்கம்பிகளின் முனைகள் ஒரு தோலால் சாணைக்கல்லில் அழுத்தப்படுகின்றன; சாணைக்கல் சுற்றுகையில் கம்பிகளை கட்டைவிரலுக்கும் மற்றவிரல்களுக்கும் நடுவில் பிடித்துச் சுற்றித் திருப்பிக்கொண்டுவந்தால் ஒரு நொடிப்பொழுதில் கூராய்விடுகின்றன. இரண்டு பக்கங்களும் கூராகத்தீட்டப்பட்டபின் ஒரு அளவுகோலால் அந்தக்கம்பிகள் நடுமையத்தில்வெட்டி இரண்டாக்கப்படுகின்றன. பிறகு வெட்டப்பட்ட மழுங்கல் முனைகளை விசிறிபோல் கையில்விரித்து ஒருசிறிய பட்டைக்கல்லில்வைத்து சிறிய சம்மட்டியொன்றால் ஒரு தட்டுத்தட்ட அவை கொஞ்சம் தட்டையாகப்போகின்றன. இப்படி தட்டுவதால் அந்த முனைகள் துளையிடுவதற்குக்கூடாத அவ்வளவு கடினமாக ஆய்விடுகின்றன. ஆகையால் அவைகளைச் சிவக்கக்காய்ச்சி மெல்ல ஆறவிடுவதால் மிருதுவாக்கப்படுகின்றன. (போனமாசத்து விவேகசிந்தாமணியில் எஃகு என்னும் விஷயத்தைப்பார்க்க.) அப்புறம் அவை துளைக்கப்படுகின்றன. இது ஒன்றொன்றாகத்தான் செய்யப்படவேண்டும். இந்தவேலை சிறுகுழந்தைகளால் செய்யப்படுகின்றன. இதற்காக வேலைச்சாலைகளிலுள்ள குழந்தைகள் ஒருமுனை கூராகவும் ஒருமுனை தட்டையாகவும் செய்யப்பட்ட கம்பிகளை ஒன்றொன்றாக எடுத்து ஒரு ஈயக்கட்டையின்மேல் வைத்து ஓர் சிறிய தொளையிடுகருவியும் சுத்தியும் வைத்துக்கொண்டு துளையிடுகிறார்கள். பெரும்பான்மையான வேலைச்சாலைகளில் ஊசிக்கண் தமர்போட்டுத் துளைக்கப்படுகிறது. அப்படியானால் அதற்காக யந்தரத்தால் சுற்றப்படும் ஒரு சிறிய தமர் இருக்கிறது. அதன் முனையில் ஒவ்வொரு ஊசியை ஒரு க்ஷணப்பொழுது பிடித்தால் துளைசெய்தாய்விடும். ஊசிக்கண்ணுக்குப்பக்கத்தில் அதில் நூல்கோர்ப்பதற்கு சாதகமாக வாய்க்கால்மாதிரி ஒரு சிறியபள்ளமிருக்கிறதே, அது செய்ய ஒரு சிறிய அரமுண்டு; அதனால் ராவியாவது அல்லது அதற்காகவுள்ள ஒரு சிறிய யந்திரத்தில்வைத் தழுத்தியாவது இந்த வாய்க்காலுண்டுபண்ணுகிறார்கள். அதற்கப்புறம் ஊசியின் கண்ணுள்ளமுனையைக் கொஞ்சம் தேய்த்து உருண்டையாக்கிவிடுகிறார்கள். சில வேலைச்சாலைகளில் இரண்டூசிநீளமுள்ள கம்பிகளை இரண்டாகத் துண்டிக்குமுன் ஒரு யந்திரத்தில்வைத்து நடுமையத்தில் இரண்டு துளைகளும் வாய்க்கால்களும்செய்து அப்புறம் அதை அவ்விருதுளைகளுக்கு மத்தியில் வெட்டி ஒரு ஊசிக்கு ஒருதுளையாகும்படி செய்கிறார்கள்.

இனி இந்த ஊசிகளையெல்லாம் சரியானபடி பதப்படுத்தவேண்டும். அதற்காக இந்த ஊசிகளை ஆயிரக்கணக்காக ஒரு இரும்புத் தகட்டில்வைத்து அத்தகட்டைச் சிவக்கக் காய்ச்சி, அப்புறம் அந்தஊசிகளையெடுத்து திடீரென்று குளிர்ந்த தண்ணீரில் போடுகிறார்கள். இதனால் அவை மிகவும் கடினமாக ஆய்விடுகின்றன. அவைகளை சரியான பதத்திற்குக் கொண்டுவர அவைகளை மறுபடியும் உபாயமாகக் காய்ச்சவேண்டியிருக்கிறது. அதற்காக அவைகளைக் கொதிக்கும் எண்ணெயில்போட்டு நன்றாய் சூடுகண்டபின் எடுக்கிறார்கள். இப்பொழுது ஊசி அதற்குவேண்டிய கடினமும் பலமுமுடையதாகி சரியான பதத்திற்கு வந்துவிட்டது. இனி அவைகளைத்தேய்த்து மெருகு கொடுக்கவேண்டும். இதுதான் எல்லாவற்றிலும் மிகச்சல்லியமான வேலை.—இதற்காக ஊசிகளை லக்ஷம்லக்ஷமாகப் பிரித்துக்கட்டி அவைகளோடு குருந்தக்கல்பொடியும் (Emery powder) எண்ணெயும் சேர்த்துக்கலந்து அதற்காகவுள்ள ஒரு பலமான பையில்போட்டு, அப்பையை உருட்டும்பொழுது ஊசிகளெல்லாம் நீட்டுப்போக்கில் ஒன்றின்மேலொன்றாக



உறைந்து கொள்ளும்படியாகக் கட்டி, இப்படிக் கட்டப்பட்ட பைகள் பலவற்றை ஒன்றாகவைத்து மேலுங்கீழுமுள்ள மரங்களுக்கு நடுவில் அவைகளை சுறுசுறுப்பாக அநேகந்தடவைகள் முன்னும்பின்னுமாக ஓடும்படி உருட்டுகிறார்கள். இப்படி உருட்டுவதில் உள்ளேயுள்ள ஊசிகளெல்லாம் அவற்றோடு கலந்துள்ள குருந்தக்கல்பொடி எண்ணெய் இவற்றோடு சேர்ந்து ஒன்றின்மேலொன்று பலமாகஉறைந்துகொள்வதால் உண்டாகும் சொரசொரப்பு அவ்வூசிகளின் மேற்புறத்தை வழவழவென்று தேய்த்து பிரகாசமாகத் துலங்கச்செய்கின்றது. கொஞ்சநேரங்கழித்து அவைகளை வெளியிலெடுத்து குருந்தக்கல்பொடியும் எண்ணெயும்சேர்த்து உருட்டினதால் ஊசிகள் தேய்பட்டு உண்டான கருப்புப் பசையைப் போக்க அவைகளை மரத்தூளோடு கலந்து ஒரு பீப்பாய்போன்ற உருளையில் போட்டு கரகரவென்று யந்திரத்தால் சுற்றுகிறார்கள். நன்றாகச் சுற்றியானபின் மரத்தூளையும் மற்ற அழுக்குகளையும் யந்திரத்தால் செய்த துருத்திவாயில்வைத்து ஊதித் தள்ளிவிடுகிறார்கள். பிறகு ஊசிகளையெல்லாம் மறுபடியும் முன்போல் குருந்தக்கல் பொடியோடுசேர்த்து அவை ஒன்றோடொன்று தேய்படும்படி உருட்டுகிறார்கள். இப்படி ஒவ்வொருதடவையும் வரவர அதிக சன்னமான குருந்தக்கல்பொடி உபயோகித்துத் தேய்த்துக் கடைசியில் ஊசிகளெல்லாம் நன்றாகத் தேய்பட்டு அவற்றின் மேற்புரம் வெள்ளையாகி பளபளவென்று பிரகாசிப்பதானபின் முன்போல் அழுக்குகளை நீக்கி ஊசிகளை சவுக்காரமும் தண்ணீரும்போட்டுக் கழுவி மெருகுதோல் (wash-leather) என்று சொல்லும் ஒருவித மலை ஆட்டின்தோலில் போட்டுத்தேய்த்துத் துடைத்தெடுக்கிறார்கள். இப்பொழுது ஊசிகளைப் பார்த்தால் கொஞ்சங்கூட சொரசொரப்பின்றி முற்றும் வழுவழுப்பாகவும் பிரகாசமாகவும் தோன்றும். கடைசியில் ஊசிமுனைகளை சரியாகக் கூராக்குவதற்காக கையினால் ஒன்றொன்றாக எடுத்து ஒரு சாணைக்கல்லில் பிடித்து ஊசியைத் தக்கபடி இரண்டொருதரம் திருப்புகிறார்கள். இது முடிந்தபின் ஊசிசெய்யும்வேலை முடிந்துவிடுகிறது. அப்புறம் ஊசிகளை நூறுநூறாகக் காகிதங்களில்கட்டி விற்பனைக்கனுப்புகிறார்கள். ஊசிகளைக் கட்டுமுன் அவைகளையெல்லாம் கூர் ஒருபுறமும் காது ஒருபுறமுமாக வைத்து அடுக்கவேண்டும். இந்தவேலை விசேஷமாய் குழந்தைகளாலே செய்யப்படுகின்றது. இதற்காக வேலைச்சாலைகளிலுள்ள குழந்தைகள் ஊசிகளையெல்லாம் வரிசையாகப் பரப்பி ஒரு துணியை மடித்துக்கொண்டு ஒருபக்கத்தில் அவைகளின் முனையில்பட அழுத்துகிறார்கள். கூரானமுனை அந்தப்பக்கத்திலுள்ள ஊசிகளெல்லாம் துணியில் ஒட்டிக்கொண்டு வந்து விடுகின்றன. அவைகளை அப்படியே எடுத்து கூரான முனைகளெல்லாம் ஒரு பக்கத்திலிருக்கும்படி திருப்பிவைக்கிறார்கள். இப்படி கூர்முனைகளெல்லாம் ஒரு புறமாக இருக்கும்படி வைத்தானபிறகு நூறுநூறாகவெடுத்துக் காகிதத்தில் வைத்து மடக்குகிறார்கள். இது தையல்ஊசிகள் செய்யும்வகை. பெரிய ஊசிகள் பெரும்பாலும் ஒன்றொன்றாகச் செய்யப்படுகின்றன. ஆனால் அவைதையலூசியைப் போல் அவ்வளவு நேர்த்தியாகச் செய்யப்படுகிறதில்லை. ஊசி செய்யும்வேலைகளில் பல பிரிவுகள் இங்கிலாந்தில் புகையந்திரங்களால் செய்யப்படுகின்றன. ஆயினும் அநேகபிரிவுகள் இன்னும் கைவேலையாகவே நடந்துவருகின்றனவென்று அறிகிறோம்.

C. V. S.

## மாதர்பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் நமது விவேக சிந்தாமணியை வாசிக்கும் மாதர்கள் எழுதும் விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.]

### புகைக் கப்பல்.

என் சிநேகிதிகளே!

விவேகசிந்தாமணியின் சென்ற ஜூன்மாச புஸ்தகத்தில் மாதர்பக்கம் என்று ஒரு புதிதான ஏற்பாட்டைப் பார்த்து இருக்கலாம். அதில் நம்மைப்போலப் பெண்கள் எழுதுகிற ஸமாசாரங்களை தனியே போடவேண்டி இடம் தந்திருக்கிறார்கள்.— இது வேண்டியதுதான்.

ஹிந்து ஜனசார சீர்திருத்த சங்கத்தார் ஏற்பாடு செய்ததும் பெண்கள் புத்தி பிரயோஜனத்திற்கானதும் ஆகிய முதல்கூட்டத்திலே பிரசங்கத்தைக்கேட்டபிறகு அங்கிலேயர் தேசத்துக்குப் பிரயாணம் போவதற்கு முதல் அவசியமான புகைக்கப்பலைப் பார்க்கவேணுமென்கிற ஆசை உண்டாவது வெகு சாதாரணம். அப்படியே போனமீ 2உ இங்கே சென்னைத்துறைமுகத்தில் ஒரு சண்டைப்புகைக்கப்பல் வந்திருக்கிறதாக தெரிய எங்கள் வீட்டுப்புருஷாள் அது பார்க்கும்பொருட்டு இன்னும் பல சிநேகித சிநேகிதிகளுடன் என்னை அழைத்துக்கொண்டுபோனார்கள். இவைகளெல்லாம் புதிய அனுபவங்

களை. நான் பார்த்த விநோதங்களையும் அடைந்த சந்தோஷத்தையும் என் சிநேகிதர்களுக்கு தெரிவிக்கிறதினால் உபயோகமுண்டென்று நம்பி இது எழுதலானேன்.

கடற்கரையிலிருந்து கப்பலைப்பார்த்தால் ஏதோ சிறிய ஒரு மாதிரியான தெப்பம்போல் தெரிந்தது. சிறு தோணிகளில் ஏறித்தான் கப்பலின் சமீபத்தில் போகவேண்டியது. தோணியில் போகிறது முதலில் புதிதாகையால், ஒரு திகிலையும் படபடப்பையும் உண்டாக்கினாலும் தொட்டிலில் ஆடுகிறதுபோல் வேடிக்கையாயிருக்கிறதினால் சந்தோஷமாக இருக்கிறது. தோணியை, துடுப்புகளாம், கையில் பிடிக்கிறபக்கம் உருண்டையாகவும் மற்றொரு நுனி சப்பட்டையாகவும் இருக்கிற நீளமான மரத்துண்டுகளைக்கொண்டு தண்ணீரில் தாக்கிதாக்கித்தள்ளுகிறார்கள். இதில் ஒரு வேடிக்கை. தோணிபோகவேணுமென்றால் தண்ணீரைத் தள்ளுகிறதாம்! ஒரு குதிரைவண்டி வேகமாகப்போகும்போது குதிரையின் அடிகளைக் கவனித்துப் பார்த்தால் குதிரைதன் அடிகளால் பூமியை உதைத்துத் தள்ளிவிடுகிறதுபோல் தான் தோற்றுகிறது.

புகைக்கப்பலின் சமீபம் சேர்ந்தோம். மேலே யேறிப்பார்க்கவும் கடல் ஞாபகமே போய்விட்டது. ஏதோ ஊரிலுள்ள ஒருபெரிய கட்டிடத்தில் இருக்கிறதுபோல் அப்படியே இருந்தது. ஜனங்கள் முழு முழுவென்று இங்கும் அங்கும் திரிந்துகொண்டு இருந்தார்கள். கப்பலின் அடிதளம் வெகு ஆழத்திலிருக்கிறது. அங்கே இருட்டு அதிகம். எதாவது சாமான்களும் யந்திரங்களும் அங்கே இருக்குமாம். கப்பலைபோகச்செய்கிற முக்கிய எந்திரம் அங்கே தான் இருக்கிறதாம். அங்கேபோய்ப்பார்க்கவேண்டுமென்று கேட்டோம். அதற்கு அங்கேபோகிறது அபாயகரமென்று சொல்லிவிட்டார்கள். மேல் மூன்று தளங்கள்தான் புழங்குகிற இடங்கள். மூணு மாடிவைத்துக் கட்டின ஒரு வீடுபோல் இருந்தது. கப்பல் வெள்ளைக்காரர்மயமாக இருந்தது. ஏதோ சில வாத்தியசத்தங்கள் காதில்விழுந்தன. வெகு அன்புடன் அங்கிருந்த வெள்ளைக்காரர்கள் எங்களை அழைத்துக்காட்டினார்கள். நாலுபக்கமும் ஒரே சமுத்திரமும், குளிர்ந்த காற்றும், ஏதோ வித்தியாசமில்லாமல் நம் ஜனங்கள் இருக்கும் இடம்போல் அங்கு இருப்பவர்கள் நடவும், கண்ணில் படுகிறவைகளெல்லாம் நேர்த்தியாகவும் நாகரீகமாகவும் இருந்ததும், நாங்களே ஒரு கூட்டமாகப்போயிருந்ததும் ரொம்ப ஆனந்தகரமாக இருந்தது. அங்கே பார்த்த சில உபயோகமான விசேஷங்கள் சொல்லுகிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலுள்ள மூன்றாம்தட்டுப் படியில் சுக்கான் என்று சொல்லப்படுகிற ஒரு யந்திரம் இருந்தது. அது பித்தளையால்செய்து பார்க்கச் சக்கரமாக இருந்தது. அந்தசக்கரத்துக்கு நடுவில் ஒரு செங்குத்தான பெரிய நீள இரும்புக்கம்பி இருக்கிறதாம். அது எல்லாவற்றிற்கும் அடியிலுள்ள எந்திரத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறதாம். இந்த இரும்புகம்பியைத்திருப்ப இரண்டு பக்கங்களிலும் மூளைபோல் பித்தளைப்பிடிகள் வைத்த சலாகை ஒன்று அதில் பொருந்திருக்கிறது. யந்திரத்தில் நெருப்புப்போட்டு ஆவி உண்டுபண்ணினபிறகு இந்த சுக்கானைப்பிடித்துத் திருப்பினால் உடனே கப்பல் ஓடுமாம். இந்தச் சுக்கான் சக்கிரத்தை இரண்டுபாதிகளாக நினைத்துக்கொள்ளலாமல்லவா; இதின் ஒரு பாதியில் இந்த சலாகையைத்திருப்பினால் முன்பக்கமாகவும், இன்னொருபாதியில்இதைத்திருப்பினால் பின்பக்கமாகவும் கப்பல் ஓடுமாம். இந்த ஒவ்வொருபாதியையும் அநேக பாகங்களாகப்பிரித்து அடையாளம் செய்திருக்கிறார்கள். அதுமேல் இவ்வளவுதூரம் திருப்பினால் மெதுவாகவும் இவ்வளவுதூரம் திருப்பினால் அரைவேகமாகவும், இவ்வளவுதூரம் திருப்பினால் முக்கால்வேகமாகவும், இவ்வளவுதூரம் திருப்பினால் முழுவேகமாகவும் ஓடும் என்றும், இப்படித் திருப்பினால் நின்றுவிடுமென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு பெரியகப்பல் இந்த ஒரு முள்ளைத் திருப்புவதால் சொன்னபடி யாடுமென்றுசொல்லக்கேட்ட நாங்கள் மிகவும் அதிசயப்பட்டோம். இது கப்பல் ஓட்டுகிறவிதம். கப்பலிலுள்ளவர்களுக்கு கப்பல்ஓடுவதிலுள்ள வித்தியாசங்கள் தெரியாதாகையால் அவர்கள் பார்த்து தெரிந்துகொள்வதற்காக கப்பலில் இரண்டாந்தட்டில் பெரியகடிகாரம்போல் ஒன்றுவைக்கப்பட்டிருக்கிறது. அதினுடைய வட்டமான பீங்கான் முகப்புத்தகட்டில் முன்பக்கம் போகிறதையும் பின்பக்கம் போகிறதையும் காட்டியிருக்கும் இரண்டு பாதிகளிலும், 'நிற்கிறது' 'கால்வேகம்' 'அரைவேகம்' 'முக்கால்வேகம்' 'முழுவேகம்' என்று புள்ளிகுறித்து எழுதப்பட்டிருக்கிறது. அதிலே கெடிகாரமுள்ளைப்போல் பெரிதாயிருக்கிற முள்ளானது மேலேயுள்ள சுக்கானைத் திருப்புவதற்குச் சரியாகத்தானும் திரும்புகிறதால் மேலே சுக்கான்முள்ளு முன்பக்கம்போகிற பாதியில் இருக்கிறதும் பின்பக்கம் போகிறபாதியில் இருக்கிறதும் இந்த ஒவ்வொன்றிலும் இன்னவேகத்தில் போகிறதாக வைத்திருக்கிறதும், அல்லது நிற்கிற அடையாளத்திலிருக்கிறதும், அதேமாதிரியாக இதிலும் கடியாரம் மணிகாட்டுவதுபோல் காட்டப்படுகிறது.

இது சண்டைக்கப்பலாகையால் பெரியபீரங்கிகளும் அநேக சிறிய துப்பாக்கிகளும், கத்திகளும் இதில் இருக்கின்றன. இதில் ஒரு புதுமாதிரி பீரங்கியாம். இது சத்துருக்கள் கப்பல்களை உடைத்துவிடுகிறதற்காம். *ஏதோ ஒரு உள்ளே விசைவைத்த இரும்பு அம்மிக்குழவிகள் போன்றதுகளை இந்தப் பெரியவாய்களை ஆவென்று திறந்துகொண்டிருக்கும் பீரங்கிகளில்போட்டு மருந்தும்போட்டு கெட்டித்து தூரத்திலிருக்கும் சத்துருக்கள் கப்பலைப்பார்த்து சுட்டால் இந்த குழவி தண்ணீரினுள்ளாகவே குறிப்பிட்டதூரம்போய் மேலே கிளம்பி எதிரிகப்பலில் தட்டினவுடன் படார் என்று வெடித்து கப்பலை சின்னாபின்னமாக்கிவிடுமாம். இந்த குழவிகளில் போகவேண்டிய மயில்தூரத்துக்குள்ளபடி வேறு வேறு இருக்கின்றன. இந்த பீரங்கியோ வேண்டியபடி எந்தப்பக்கம் வேணுமானாலும் திரும்பும். மேலே, கீழே, வெண்டியபடி சாய்த்துவைத்துக்கொள்ளலாம்.

சத்துருக்கள் கப்பல் பகலில்தான் வெளிச்சத்தில் தெரிந்துவிடுகிறது. இரவில் இருட்டில் எவ்விதமாக இதைத் தெரியப்படுத்தலாம்? என்று கேட்டால், இதற்கு ஒரு ஏற்பாடு இருக்கிறது. இது வெகு அதிசயமானது. இந்நாளில் தந்திபேசுகிறார்களே அதற்கு ஆதாரமாக உள்ள மின்சார வேகத்தைதிராவகங்களால் உண்டாக்கி ஒரு பெரிய விளக்குக்கூட்டினுள் கம்பிகள்வழியாகக் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள். இதைக் கொளுத்தினால் 40, 50-மயில் தூரத்துக்கு வெளிச்சத்தை எறிந்து அவ்வளவுதூரத்துக்கு அப்பால்இருக்கும் சிறுசாமான்களையும் தன்வெளிச்சத்தில் தெரிவிக்குமாம். இதின் வெளிச்சத்தை நாலுபக்கங்களும் விட்டுக்கொண்டே தூரத்துப்பார்வைக் கண்ணாடிக் குழாய்வழியாக அந்தவெளிச்சம் படுமிடங்களில் பார்த்துக்கொண்டுவந்தால் இராவேளையில் நம் ஊர்களில் போலீஸ் ஜவான் தன்கையில் வைத்திருக்கும் 'லாந்தர்' வெளிச்சத்தை தூரத்திலிருக்கும் திருடன்மேல் அடிக்கச்செய்து அவனைக் கண்டுபிடிக்கிறதுபோல இவர்கள் எதிரிகப்பல்களையும் கண்டுபிடித்து விடலாமாம். இந்த †அதிசயவிளக்குக்குஎண்ணெயும்கிடையாது திரியும் கிடையாது. வெகு ஆச்சரியமாக இருந்தது. தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குழாய்வழியாக பார்த்தேன். துறைமுகத்தினுள் நிற்கும் கப்பலிலிருக்கும் எனக்கு சுமார் இரண்டு மைலுக்கப்பாலிருக்கும் சென்னை கோட்டையில் இருக்கும் கோபுரகடியாரத்தில் காட்டப்படும் மணி கைநீளத்துக்கப்பால் தெரிகிறதுபோல் தெரிந்தது. வெகு சுத்தமாக தெரிந்தது.

நடுசமுத்திரத்தில் சூரியசந்திரனில்லாதவேளையில் என்னமாக திக்குதெரியும்? இவை உள்ளபோதும் கூட தெரிகிறது கஷ்டத்திலிருக்கிறதே! நக்ஷத்திரங்களைக்கொண்டு அறியலாம். ஆனால் இவைகள் தெரியாமலிருக்கும் சமயங்கள் அநேகம். இப்படியிருக்க திசையறிய வெகு யுக்தியானமார்க்கம் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு கடுதாசியில் கிழக்கு, மேற்கு முதலியவையும் இதற்கு நடுவிலுள்ள மற்ற திக்குகளையும், குறித்து இதின் நடுவில் ஒரு கெடியார முள்ளைப்போலேயிருக்கும் கம்பியொன்றை நிறுத்தியிருக்கிறார்கள். இது படுக்கையிலிருக்கிறது. கப்பல் எந்தத்திசைபோனாலும் இந்தமுள்ளு வடக்கே தான் பார்த்துகொண்டிருக்குமாம். இதுஒருகட்டுப்பாடா! வடக்குத்தெரிந்ததானால், வடக்குமுகமாகநின்றால் வலதுபக்கம் கிழக்கு அல்லவா, இனி நாலுதிசைகளும் தெரிந்துவிட்டன: வெகு லேசு; கப்பல் தண்ணீரில் ஆடுமாகையால் இந்ததிசையறிவிக்கும் நுட்பமான கருவி சாய்ந்துவிடுமென்றே இதைக் கம்பிகளினால் இலகுவாககட்டித் தொங்கவிட்டிருக்கிறார்கள். இந்தக்கப்பலில் தண்ணீர்க்கஷ்டமில்லை; ஆனால் நாலுபக்கமும் சமுத்திரந்தானே, ஜலம் நிரம்பத்தானென்று இல்லை. குடிக்கிறதற்கு உப்புதண்ணீர் உபயோகமாகுமா? அதற்கு இவர்கள் என்னசெய்கிறார்கள் என்றால், உப்புஜலத்தை நீராவியாகக் காய்ச்சி அந்த நீராவியைக் குளிரச்செய்து தண்ணீராக்கி அதைக் குடிக்கிறார்கள். உடம்புக்கு வெகு நல்லதுதான்: ஆனால் மண் சம்பந்தமில்லாததினால் ருசி இருக்காது.

கப்பலில் ஆஸ்பத்திரி இருக்கிறது; டாக்டர் இருக்கிறார்.

சமையல் இடமெல்லாம் எனக்கு வெகு அசுத்தம்போல் தோற்றிற்று. மாம்சங்கள்தான் முழுமையும்; அப்படியே நெய்யில் பொறித்துவிடுகிறார்கள். பார்க்க வெகுகுரூரமாக இருந்தது. மற்றப்படி அவர்கள் உட்காரும் இடங்கள் படுக்கும் இடங்கள் வெகு சுத்தமாக இருந்தன. அங்கே கப்பல் தலைவன் இருக்கும் அறைதான் வெகு அபூர்வமாக இருந்தது. மேஜைகள், நாற்காலிகள், ஸோபாக்கள், விளக்குகள், வெகு நேர்த்தியாக இருந்தன. ஸாமான்கள் எவ்வளவு அழகாகயிருந்தபோதிலும் அவைகளை வைக்கிற ஏற்பாடு நன்றாயிருந்தால்தான் பார்க்க ரம்மியமாயிருக்கும்; இந்த ஏற்பாடு வெள்ளைக்காரர்களுக்குள்தான் வெகு சீர்திருத்தமடைந்திருக்கிறது. அங்கே படிக்க அநேகபுஸ்தகங்களும் சமாசா

* Terpedo.

† Electric light.

ரப்பத்திரிகைகளும் இருந்தன. கப்பலுக்குள் காத்து வரவேண்டியதற்காக வெளியிலிருந்து குழாய்கள் பெரிய திறந்தவாய்களுடன் காத்துப்பக்கமாய்த் திருப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே யந்திரங்களெல்லாம் வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. எங்களுக்கு இவைகளெல்லாம் காட்டினவர் வெகுநல்லவர்போல காணப்பட்டார். நாங்கள் இச்சங்கதிகளையெல்லாம் அறிகிறதில் வெகு அக்கறைகொண்டவர்போல் இருந்தார்.

இவைகளெல்லாம் பார்க்க சுமார் 1-மணிநேரம் செலவுசெய்தோம். அக்கப்பலை விட்டுவர இஷ்டமில்லாமலே திரும்பிவந்தோம். அக்கப்பலுக்குள் தோணியைவிட்டு ஏறும்போதும் அக்கப்பலைவிட்டு தோணியில் இறங்கும்போதும் நாங்கள் சாக்கிரதையாக ஏறி இறங்குகிறோமா என்று ஒருவர் அக்கறையெடுத்துக்கொண்டு பார்த்துக்கொண்டிருந்தார்.

திரும்பிவரும்போது வழியில் ஒரு வியாபாரக்கப்பல்பார்த்தோம். இதில் சாமான்களையும், ஜனங்களையும் பணத்துக்கு ஏற்றிக்கொண்டு போவார்களாம். இந்தக்கப்பல்முன் பார்த்த சண்டைக்கப்பலைப்போல் அவ்வளவு சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இல்லை. இதில் ஆடு, கோழி, வாத்து, இவைகள் வளர்த்து வருகிறார்கள். கடலில் சாத்து ஜாஸ்தியாக இருக்கிறதா, கம்மியா, புசல் வரும்போல் உள்ளதா, சரியானகாற்றுதானா? என்று அறியும் ஒரு *கருவி இதில் புதிதாகப்பார்த்தோம்.

இவ்வளவுடன் இக்கடிதத்தை நிறுத்துகிறேன்.

இந்தப்படிக்கு

**புகைக்கப்பல் பார்த்த ஒருவள்.**

* Barometer.

## சிறுவர்க்கான ஜாலவிநோதங்கள்.

(83-வது பக்கத்தொடர்ச்சி.)

(27) ஒரு பீப்பாயில்நிறைய தண்ணீர்விட்டு நன்றாக அடைத்து சற்று நீளமான சிறியகுழலை அதில் முடுக்கினபின் அந்தக் குழலில் ஒருபடி ஜலம்விட்டால் உடனே அந்தப் பீப்பாய் வெடித்துப்போகும்.

(28). சுமார் 4-அடி குறுக்களவுள்ள இரண்டுவட்டமான மரப்பலகைகளை எடுத்து ஒன்றுக்கொன்று சுமார் இரண்டடிதூரமாய் இருக்கத்தக்கதாக தோலால்சுற்றிக் கச்சைபோல்மாட்டி துருத்திபோல் தண்ணீரைச் சிந்தாமல்காக்கும்படி பக்குவம்பண்ணி பக்கத்திலே ஒரு குழை புகத்தக்கதாகவும் வகைபண்ணி துருத்தியின் மேற்பலகையில் ஒருவனை நிற்கச்செய்து குழலை நிமிரவைத்து அதற்குள்ளாகத் தண்ணீரைவிட்டால் தண்ணீர் நிரம்பநிரம்ப மனிதனையும் மேற்பலகையோடு தூக்கும்.

(29) ஒரு வெறும்புட்டியை எடுத்துகார்க்கினால் அடைத்து வாயில் கயிறுகட்டி கிணத்திலாவது குளத்திலாவது ஆழத்தில் போகும்படிவிட்டு சற்றுநேரத்திற்குப்பின்பு எடுத்துப்பார்த்தால் கார்க்கு புட்டிக்குள் தள்ளப்பட்டு புட்டியில் தண்ணீர் நிறைந்திருக்கும்'

(30) ஒரு துண்டுஈயத்தைச் சப்பையாகவும் வட்டமாகவும் தட்டி, ஒரு குழையின் வாய்ப்புறத்தில் ஜலம் உள்நுழைய ஏதுவில்லாதபடி பிடித்துத் தண்ணீருக்குள் கொஞ்சம் ஆழத்திற்சேர்ந்தவுடனே, ஈயத்தைப்பிடித்திருந்த கையைநீக்கினால், ஈயத்தகடு கீழே விழுந்துபோகாமல் குழலோடு ஒட்டினதுபோலிருக்கும் ஆனால் வெறும் ஈயத்தகட்டைமாத்திரம் ஜலத்தில்விட்டால் உடனே அமிழ்ந்துபோகும்.

(31) ப என்னும் எழுத்துப்போல் ஒரு குழையைவளைத்து நிமிர்த்துப்பிடித்து, ஒருபக்கம்வாயில் சலம்விட்டால், இருபக்கத்திலும் ஜலம் ஒரேமட்டமாய் நிற்கும். ஆனால் ஒருபக்கத்தில் ஜலமும் மற்றொருபக்கத்தில் எண்ணெயும்விட்டால், எண்ணெய் உயரமாயும், தண்ணீர் அதனிலும் தாழ்வாயுமிருக்கும்.

(32) ஒரு நீண்டகுழலின் முனை. ஒரு பாத்திரத்துள் தங்கும்படியாக நிமிர்த்துப்பிடித்து, பாத்திரத்தில்நிறைய சலம்வார்த்து, குழலின் மேல்வாயை கையால் காற்றுநுழையாதபடி செவ்வையாய்மூடி, குழலை பாத்திரத்தினின்று மேல்தூக்க, ஜலம் கீழ் செல்லாமல், பாத்திரத்துள் நின்றபோது எந்தமட்டில் ஜலம்இருந்ததோ அந்தமட்டில் குழைக்குள் பொருந்திநிற்கும்.

(33) சுவற்பவிலைக்கு குதிரைலாடம்போல் உருவமைந்த காந்தம் விற்கிறது. அதிலொன்றைச் சேகரித்து, அதினருகே ஒரு சிறு இரும்புத்துண்டைப் பிடித்தால் அது தன்னிடம் இழுத்துக்கொள்ளும். அக்காந்தத்தை ஒரு ஊசிமேல் உரசினால் அந்த ஊசியும் மற்ற இரும்புகளைத் தன்னிடமாய்க் கவரும்சத்தை அடைகிறது. எத்தனை ஊசிகளுக்கு இந்த சத்தை ஈந்தபோதிலும், முதற்காந்தத்துக்கு அதின் சத்து குறையாது.



ஒரு சிலேட்டுப்பலகையை சமமாகப் பிடித்து அதின் மேற்புறத்தில் ஐந்தாறு ஊசிகளைத் தூவி சிலேட்டின் அடிபுறத்தில் காந்தத்தைக் காண்பித்துக்கொண்டே அசைக்க மேலிருக்கும் ஊசிகளும் இதின்பிரகாரம் அசையும்.

ஒரு கண்ணாடிப்பில்லைமேல் இரும்புத்தூளைத் தூவி, பில்லையினடியில் காந்தத்தைக் காண்பிக்க, மேலிருக்கும் இருப்புத்தூள் ஓர் அலங்காரமாய் அடுக்கிக்கொள்ளும்.

காந்தம் ஏற்றின ஊசியை மத்தியில் மெல்லியமயிரிழைபோன்ற நூலால்கட்டி, சமமாய்த் தொங்கப்பிடித்து, அதின்போக்கின்படி விட்டால், அதின் ஒருமுனை வடக்குப்பக்கமாகவும், மற்றொரு முனை தெற்குப்பக்கமாகவும் காட்டிநிற்கும். இந்த குணத்தையறிந்து, சாஸ்திரிகள் (Sailor's compass) என்னும் மாலுமிகளுக்குத் திசைகாட்டுங்கருவி ஒன்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இதனால் கப்பல்யாத்திரை பண்ணுகிறவர்களுக்கு மந்தாரத்திலும் காரிருளிலும் திசையறிந்து போவதற்கு அநுகூலமுண்டாயிருக்கிறது. (இதைப்பற்றி மாதர்பக்கத்தில் சொல்லியிருப்பதைப் பாருங்கள்.)

யான் மேற்கூறியதுபோல் இரண்டுஊசிகளைக் கூட்டித்தொங்கவிட்டு ஒன்றின் வடமுனை மற்றொன்றின் வடமுனையையும் அல்லது ஒன்றின் தென்முனை மற்றதின் தென்முனையையும் சமீபிக்கப் பிடித்தால் ஒன்றுக்கொன்று தள்ளுதல்செய்யும். ஆனால் திசைமாற்றிச் சமீபிக்கச்செய்ய, உடனே ஒன்றை ஒன்று நெருங்கிப் பொருந்திக்கொள்ளும்:

ஒரு கார்க்குத்துண்டால் நீந்தும் வாத்துபோல் ஒன்றுசெய்து அதின்மூக்கில் காந்தஊசி ஒன்றின் வடமுனை அதிலுடைய வாயிலே கொஞ்சம் நீண்டிருக்கும்படியாகச் சொருகி தண்ணீரில் மிதக்கவிட்டு கையில்வேறொரு காந்தஊசியை எடுத்து இதின் தென்முனையை பட்சியின் மூக்குக்கருகில் கொண்டுபோனால் இதைக் குத்தவருவதுபோல் வரும். ஆனால் காந்தத்தின் வடமுனையைக் காண்பிக்க, பட்சி விலகிப்போம்.

சுமார் 10 ஊசிகளை எடுத்து ஒன்றின்பின் ஒன்று பொருந்தும்படியாக மேசைமேல் நேராகவைத்து, காந்தத்தை ஒருகடைசிஊசியினருகுகொண்டுபோக ஊசிகளெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாக ஒட்டிக்கொள்ளும், காந்தத்தைத் தூக்க, ஊசிகளெல்லாம் சரம்சரமாய்த் தொங்கும்.

ஒரு காந்தத்தை ஒரு ஊசிமேல் உரசினால், ஊசியும் காந்தகுணத்தை அடைகிறதென்று முன்பு சொன்னேன். அதைச் செய்யுமாறு அங்கு நன்குவிளங்கச் செப்பவில்லை. அதை இங்கு செவ்வெனத் தெரிவிக்கின்றேன்:—ஒரு குதிரைலாடக் காந்தத்தைப்போல் அதே அளவாகவும் அதே வடிவாகவும் எஃகினால் செய்து இதின் இருமுனைகளும் காந்தத்தின் இருமுனைகளும் ஒன்றையொன்று தீண்டும்படியாக நெருக்கமாய் மேசைமேல் வைத்து அழுத்திப் பிடித்துக்கொண்டு, டை காந்தத்தோடு சாதாரணமாய் ஒட்டவைத்திருக்கும் இரும்பை காந்தத்தின்வளை முனையில் சமமாய்வைத்து எஃகுலாடத்தின் மத்திவரையிலும் சற்று அழுத்தித் தேய்த்துக்கொண்டேபோய்ச் சடீரென மேல்தூக்காய் எடுத்து மறுபடியும் ஆரம்பித்தவிடத்தினின்று மேற்கூறியவண்ணம 12 தடவைச்செய்ய எஃகுலாடம் வெகு மும்முறமான காந்தத்தன்மையடையும்.

**மா. நடேசன்.**

## சுகாதார முறைகள்.

### நல்லநித்திரைக் கடுத்தவைகள்.

ஒரு சுத்தமான நல்ல படுக்கையும், களைப்பு உண்டாக்கக் கூடியபோதுமான தேகப்பயிற்சியும், இன்பந்தரும் வேலையும், நல்லகாற்றும், அதிககாங்கையாக இராத அறையும், சுத்த மனச்சாட்சியும், மயக்கம் முதலியவைகளை உண்டாக்கத்தக்க வஸ்துக்களை உடயோகிக்கா திருத்தலும்தான். அதிகவேலைசெய்கிறவர்களும், கண்குழிந்தவர்களும், இராத்திரியில் தூக்கமில்லாதவர்களும் மேற்கூறிய விஷயங்களை கவனிப்பார்களாகில் நன்றாய் நித்திரைசெய்யலாம்; இல்லாவிட்டால், அவர்களின் ஆயுசு மிகவும் குறைந்ததாகவே யிருக்கும். ஒருவன் தனது அறையில் சுகமாய் வசிக்கவிரும்பினால், அவன் அந்தஅறையின் மூலமாய் 1200 கன அடிக்குக் குறையாததும் 2000 கனஅடிக்கு மேற்படாததுமான காற்று ஊடுருவிச் செல்லுகிறதா என்று கவனிக்கவேண்டியது. இன்னொருவன் கூட அந்த அறையில் இருப்பானாகில், அவ்வறையி லிருக்கும்காற்று கெட்டுப்போவதுமன்றி ஒன்றுக்கும் உதவாததுமாகிவிடுகிறது. அது அசௌக்கியமும் அசுசியுமுள்ள காற்றாய் மாறிப்போகிறது. ஒருவன் இன்னொருவன் தனது மூச்சால் வெளியே எறிந்துவிடும் கெட்டகாற்றைத் திரும்ப சுவாஸிக்கிறான்: அது அருவருக்கப்படத்தக்க கெடுதியான காற்று. ஒரு சிறு அறையில் அநேகர் கூடியிருப்பதால் உண்டாகும் கெடுதி அதிகம். போஜனக்கவலையைப் பார்க்கிலும் நமது இளைப்பை ஆற்றும் கவலையே அதிகப் பெரியதாயிருக்கிறது. நாம் அப்படிக் கவலைப்படுவது, அதன் விசேஷத்தைப்பற்றியல்ல, அது அகப்படுவதுகஷ்டமாயிருப்பதினாலேதான். அதிக இளைப்பாறுதல் சுகமான நித்திரையினால் உண்டாகிறது. இதற்கு ஒரு நிதர்சனம்பாருங்கள்: எல்லா விஷயங்களிலும் சமானமான இரண்டு புருஷர்களில் சுகமாய் நித்திரைசெய்பவன் அதிக நல்லொழுக்கமுள்ளவனும், சுகமுள்ளவனும் பலசாலியுமாயிருப்பான். சடுதியில் கோபமுண்டாதல், முறுமுறுப்பு, மனசஞ்சலம் முதலியவற்றை நித்திரை நீக்கிவிடும்; அதிக யோஜனையால் தடுமாறும் புத்திக்கு புது ஊக்கத்தை அது திருப்ப உண்டாக்கும்; களைத்த தேகத்துக்கு பலம் கொடுக்கும்; தலைவலியைச் சொஸ்தமாக்கும்; மெய்யாகவே நித்திரையானது நீக்கிவிடும் வியாதிகள் வெகு ஏராளமாயிருக்கின்றன.

சுகவழிவிரும்புவோன்.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## நமது தாதா கடிதம்.

VII

பாலியர்களே, பாலிகைகளே! வாருங்கள். இந்தமுறை இந்தசமயம் நல்ல சௌக்கியமாக இருக்கின்றது. எங்கும் உபாயமான மழைபெய்து குளிர்ச்சியாக இருக்கின்றது. இப்போது பெரியபெரிய மைதானங்களைப் பார்த்தால் மிக உயர்வான குன்றுகளைக்கண்டால் விசாலமான தோட்டங்களை நோக்கினால் இந்தக்காட்சிகளெல்லாம் பூமிதேவியானவள் தன் வெற்றுடலைக் காண்பிக்க வெட்கங்கொண்டு மகாபெரிய பச்சைக் கம்பளியைப்போர்த்துக்கொண்டிருக்கிறது போலத் தோன்றுகின்றது. நெல்வயல்களில் உழுது விதைக்கின்ற தானியமுளைகள் தாஷ்டீகமாகப் புறப்படுகின்றன. "விளையும்பயிர் முளையிலேதெரியும்" என்பார்களாகையால், இந்த வருஷம் மற்றமாதங்களிலும் இவ்வளவுமழையாகிலும் பெய்துவந்தால், பயிர்பச்சைகள் ஒன்றுக்குப் பதின்மடங்காய் நன்றாகப்பலிதமாகும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. வருஷாதிநூல் முதலிய சாஸ்திரங்களைக் கண்டபாடமாக கெட்டுருப்பண்ணியிருக்கின்ற ஒரு பெரியவர் ஒருவாரத்துக்கு முன்னே ஒரு பாட்டைச்சொன்னார். எனக்கு ஞாபகசக்தி அதிக குறைவானபடியால்அந்தபாட்டு இதற்குள் மறந்துபோய்விட்டது. ஆனாலும் சங்கதிமாத்திரம் நினைவிலிருக்கிறது. ஆடிமாசம் ஐந்தாந்தேதி புதன்கிழமையாக நேரிட்டால் அந்தவருஷத்தில் ஒருபோகமும், ஐந்தாந்தேதி சனிக்கிழமையானால் இரண்டுபோகமும், விளையும் என்பதாம். இந்தவருஷம் இரண்டொன்றுதவிர மற்றப் பஞ்சாங்கங்களில் சனிக்கிழமை முதல்தேதியாக இருந்தது. அதனால் ஐந்தாந்தேதி புதன்கிழமையில் வந்தது. ஆகையால் நெடுங்காலமாக அநுபவத்திற்கு ஒத்துவருகின்ற மேற்படி சாஸ்திரம் பொய்யாமல் ஒருபோகமாகிலும் இந்தவருஷம் விளைந்தால் குடிகளுக்கு க்ஷேமம் உண்டாகும் என்று கோருகிறேன். போனமுறை நீங்கள் இங்கேவந்தபோது இந்தப் பூஞ்செடிகளெல்லாம் என்ன வாய்வாடி வதங்கியிருந்தன. இப்போது பாருங்கள்! அரோகதிடகாத்திரமான தாயின்பாலைக் குடித்து வளர்கின்ற பச்சைப்பாலகர் முகக்களைபோல் பார்க்கப்பார்க்க நேத்திரானந்தமாக இருக்கின்றது. அதோ அந்த கொடிமல்லிகையில் புறப்பட்டிருக்கின்ற மொக்குகள் தந்தச்சிமிழ்களைபோலக் காணப்படுவதைப் பாருங்கள். நீங்கள் திரும்ப வீட்டுக்குப்போகும்போது உங்களுக்கு வேண்டுமான வரையில் இந்த மொக்குகளைப் பறித்துக்கொண்டுபோய்ச் சரமாகக்கட்டித் தலையில் முடித்துக்கொள்ளுங்கள். அதோதெரிகிற மாதுளஞ்செடி பூத்துக்காய்த்துப் பழுத்திருப்பதையும் அதன்மேலிருந்துகொண்டு ஒரு பச்சைக்கிளியானது பழங்களைக் கோதிக்கொந்திக் கொஞ்சுவதையும்பாருங்கள். இப்போது அதுகொஞ்சுவது எப்படி இருக்கிறதென்றால் சிறுவர்களாகிய உங்களைப்பார்த்து "அட பிள்ளைகளே! அடி பெண்களே! இங்கே நான் உயர்ந்த கெம்புக்கல்களை இந்தமாதத்தில் சின்னமுடிச்சுகளாகக் கட்டித்தொங்கவிட்டு வைத்திருக்கிறேன். உங்களுக்கும் வேண்டுமா? வேணுமானால் கிட்டவாருங்கள். பேருக்கு ஒன்று கொடுக்கிறேன். நான் உங்களிடத்தில் சும்மா விளையாடுகிறேனென்று நினைக்காதீர்கள். இதோ இந்த முடிச்சை அவிழ்த்துப்பார்த்தேன். அவிழ்க்கமுடியவில்லை. ஒருபக்கம் கிழிவிட்டேன். கிழியிருக்கிற வெடிப்பின்வழியாகப் பாருங்கள். எப்படிப்பட்ட கெம்புக்கற்களிருக்கின்றன" என்று சொல்வதுபோலிருக்கிறது. நல்லது உள்ளே போகலாம். கூடத்தில் நாற்காலிகளின்மேல் ஆணொருபக்கமும் பெண்ணொருபக்கமுமாக உட்காருங்கள். உற்றுக்கேளுங்கள்.



ஹிந்து பாலிகா பாடசாலையின் தலைமை உபாத்தியாகிய தையல்நாயகியம்மாள் பெங்களூருக்குப் போனவரையில் முன்னே சொல்லியிருக்கிறேனல்லவா. அப்புறம் நடந்த விர்த்தாந்தத்தை இப்போது கொஞ்சஞ்சொல்லுகிறேன். எங்களூரில் பலபலபேர்கள் அந்தம்மாளுக்கு உடம்பு அப்புறம் எப்படியிருக்கிறதென்று தெரிய ஆவலுடையவர்களாய் பேர்க்கொரு கடிதம் எழுதினார்கள். அதற்கத்தனை பேருக்கும் பதில் எழுதுவது கஷ்டமென்று அந்த அம்மாள் எங்களூரில் அப்போது தலையெடுத்திருந்த "காலைத் திவாகரன்" என்னும் பத்திரிகையின் மூலமாய் ஊராருக்கு ஒரு கடிதமெழுதினார்கள். அது பின்வருமாறு :

"என்னுடைய உதவி உபாத்திகளுக்கும் பாடசாலையில்படிக்கின்ற பாலிகைகளுக்கும் சுகயோகக்ஷேமங்கள் நாட்குநாள் பல்குக. என்னுடைய நண்பர்கள் வளர்பிறைச்சந்திரனைப்போல் பெருமையும் பேறும் அடைக. மற்ற பெரியோர்களை அடிபணிந்தேன். விண்ணப்பம்.

இங்கே பெங்களூரில் என்னுடைய குழந்தைகளுடனே நான் சுகமாக இருக்கிறேன். நோய் இலகுவாக இருக்கிறது. வைத்தியர்களுடைய மருந்து தங்கட்குப் பலிக்காது என்பார்களே. அதனால் ஒருபெரிய வைத்தியரிடத்தில் கைகாட்டினேன். அவர் காலையில் ஒரு பஸ்பமும் சாயரக்ஷையில் ஒரு லேகியமும் கொடுத்துவருகிறார். இளைத்திருந்த உடல் கிளைத்துவருகின்றது. இப்போது என்னைப்பார்த்தால் நீங்கள் அடையாளங் கண்டுபிடிப்பது கொஞ்சங் கஷ்டமாகத்தானிருக்கும். கண்ணாடியைப் பார்த்தால் 'நானோ நானல்லனோ' என்று எனக்கே ஒவ்வொருவேளை சந்தேகத்தைக் கொடுக்கின்றது. எனக்கு ஊரினர் நினைவே பெரிதாக இருக்கிறது. ஆனாலும் 'ஆறினபுண்ணிலும் அசடுநிற்கும்' ஆகையால் உடம்பில் உள்ள நோய் பரிஷ்காரமாய் இலகுவாகிய பின்பே போகவேண்டும் என்று வைத்தியர் சொல்லுகின்றார். அநேகருடைய கடிதங்களைக்கண்டு அவர்களென் விஷயத்தில் வைத்திருக்கிற அன்பையறிந்து அகமகிழ்ச்சி யடைந்திருக்கிறேன். இப்போது இந்த அன்பே எனக்கு ஒருபங்கு அமிர்தசஞ்சீவியாக இருக்கிறது. பாடசாலை பாலிகைகள் 'அம்மாள் எப்போது வருவார்கள். அவர்களை யெப்போது பார்க்கப்போகிறோம்' என்பாரும், 'பந்தயம்! வருகிற மாதத்தில் அவசியம் வருவார். வேணுமானால் பாருங்கள்' என்பாரும் 'நம்முடைய கெட்டகாலந்தானோ அம்மாளைப் பிரியநேரிட்டது' என்பாருமாகப் பேசிக்கொள்கின்றனர் என்பது கேட்க எனக்கு ஆநந்தக்கண்ணீர் பெருகுகின்றது. அவர்களை எப்போதுபார்ப்போம் அவர்களைப் பிரியப்பெற்றது என்னுடைய தௌர்பாக்கியந்தானென்றே நானும் எண்ணி வருந்தியிருக்கிறேன். பாலிகைகட்கு மங்களம் உண்டாக.

பெங்களூர்          இங்ஙனம்,<br>
1857ஸ்ரீ ஜூலைமீ 18உ          தையல்நாயகி.

இந்தக்கடிதத்தைச் சிறுவர்கள் ஒருவர் கையிலிருப்பதை ஒருவர் வெடுக்கென்று பிடுங்கியும், பத்திரிகைக்குக் கையொப்பஞ் செய்யாதவர்கள்கூட ஒவ்வொரு அணா கொடுத்து ஒவ்வொரு பிரதிவாங்கியும், படித்து எல்லோரும் போனஉயிர் திரும்பினாற்போலப் பேராநந்தத்தை யடைந்தார்கள்.

அப்புறஞ் சிலமாதகால மாகிறவரையில் தையல்நாயகியம்மாள் இப்படியாகப் பெங்களூரிலிருந்து உடம்பைத் தேற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்கள் ஊரைவந்து சேர்வதற்கு இருபதுநாள் இருக்கும்போது அவர் வரப்போகிறசங்கதி யாவருக்குந்தெரிந்தது. தெரிந்தவுடனே, அவரிடத்தில் படித்துக் கலியாணஞ் செய்துகொண்டு எங்களூரிலும் அண்டை யயல்ஊர்களிலும் வசிக்கின்ற மங்கையர்கள் தங்கள் புருஷரிடத்தில் அனு

மதிபெற்றுக்கொண்டு பாலிகா பாடசாலையில் ஒரு கூட்டங் கூடினார்கள். அப்படி கூடினவர்களில் முக்கியமான சில மங்கைநல்லார் மனோன்மணியம்மாள், வேதவல்லியம்மாள், சேஷம்மாள், ஆண்டாளம்மாள், வள்ளிநாயகியம்மாள் என்பவர்கள் ஒரு கம்மிட்டியாக ஏற்படுத்தப்பட்டு, தையனாயகியம்மாள் ஊரைவந்து சேர்ந்தவுடனே அவருக்கு விருந்திட்டு உபகரிக்கவேண்டிய ஏற்பாடுகளைச்செய்வதென்று முடிவாயிற்று. இந்த கம்மிட்டியில் சண்பகவடிவம்மாள் காரியதரிசியாகநியமிக்கப்பட்டார். இவர்,

“தையனாகியம்மாளுடைய
நல்வரவு கொண்டாட்டம்.”

இந்தவூர்ப் பாலிகாபாடசாலைத் தலைமை உவாத்தியார் ஸ்ரீ. தையனாயகியம்மாள் தேகசௌக்கியத்தின் நிமித்தமாக நம்மைப்பிரிந்து பெங்களூரிற் சிலகாலமாக வாசஞ்செய்து பழையபடி தேகத்தின் ஆரோக்கியத்தையடைந்து மறுபடியும் சிலநாளில் இங்கு வருகின்றனர். வந்தவுடனே அவருக்கு விருந்திட்டு உபசரிக்கும்படியாக அவருடைய பழைய சிஷ்யைகளும் பிறரும் உறுதிசெய்திருப்பதனால் அதற்காகுஞ் செலவுகளை நிர்வகிக்கும்பொருட்டாக அவரவர்கள் தங்கள் தங்களுக்கு இயன்றமட்டில் திரவியசகாயஞ்செய்து எடுத்துக்கொண்ட காரியத்தை இனிது முடிப்பார்களென்று கோருகிறேன்.

இங்ஙனம்
(உத்தரவின்படி)
**சண்பகவடிவம்மாள்**
காரியதரிசி”

என்று ஒரு கையொப்பப்பத்திரிகையச்சிட்டு வெளிப்படுத்தினர். இதைக்கண்ட யாவரும் அதிக சந்தோஷத்துடன் செய்த கையொப்பத்தொகையானது சற்றேறக்குறைய இருநூற்றைம்பதுரூபாயாயிற்று. இந்தத்தொகையில் சாப்பாட்டுசெலவு நூறுரூபாயென்றும், புஷ்பஞ் சந்தனம் பன்னீர் தாம்பூலம் வாத்தியம் முதலியசெலவு ஐம்பதுரூபாயென்றும், தையனாயகியம்மாளுக்குத் தங்களன்பினை எப்போதும் விளக்கும் அறிகுறியாகக்கொடுக்கும் ஒரு நன்கொடைக்காக நூறுரூபாயென்றும் கம்மிட்டியார் வகைப்படுத்தினார்கள். அந்தப்படியே சகலமான சாமான்களுஞ் சித்தஞ்செய்யப்பட்டன. அவருக்குக்கொடுக்கும் நன்கொடையைப்பற்றி யாலோசித்ததில், வெள்ளியால் மைக்கூடு எழுதுகோல் முதலிய முஸ்திப்புடன்

“ஹிந்து பாலிகாபாடசாலையின் சிஷ்யைகள் மனப்பூர்வமாய் தையனாயகி யம்மாளுக்குக் கொடுத்த நன்கொடை”

என்று குறித்தெழுதிய விசித்திரமான மேஜையொன்று செய்து கொடுப்பது எல்லாருக்கும் சம்மதமாக இருந்தது. இப்படியெல்லாம் தயாராக இருக்கையில் ஒருநாள் காலையில் தையனாயகியம்மாளும் வந்துசேர்ந்தனர். அவருடைய சிஷ்யைகள் யாவரும் பாடசாலை உதவிஉவாத்திகளுடனே எதிர்சென்று மேளதாளம் நாகசுரமுதலான வாத்தியகோஷஞ்செய்துகொண்டு அவளைப் பாடசாலைக்கு அழைத்துக்கொண்டுபோயினர். போனவுடனே எல்லோரும் வரிசையாக உட்கார்ந்து பந்திபோஜனஞ் செய்து தாம்பூலந்தரித்துக்கொண்டு பாடசாலையின் மேல்மாடிமண்டபத்தில் ஒருங்குசேர்ந்தனர். சேர்ந்ததும், கம்மிட்டியின் காரியதரிசியாகிய சண்பகவடிவம்மாள் எழுந்திருந்து

“எங்கள் அருமைத்தாயே! அடியோங்கட்கு ஞான ஜநநத்தைக்கொடுத்த மங்கையர்க்கரசே! வாரீர் உங்களை நெடுநாளாகப் பிரியப்பெற்றதனால் வான்மழையின்றி வாடிய பைங்கூழ்போலிருந்தோம். தங்களைக் கண்டவுடனே அதிஷ்டவீனனுக்கு அஷ்டைசுவரியங் கிடைத்தாற்போல உடம்பு பூரித்தோம். இப்பொழுது அடியோங்கள் தங்களைக் காண்கின்ற திருக்கோலத்துடன் தங்கள் திருமேனி குலையாமல் இன்னும் பற்பல்லாண்டு வாழ்ந்திருந்து தாங்கள் மேற்கொண்டிருக்கின்ற சத்கைங்கரியங்களை நடத்தி யருள்வீர்களென்று அநவரதமும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்பெனப்படுவது அந்தக்கரணத்தின் அளவாகவே யன்றி ஐம்புலனால் அறியலாகாதவொன்றாயிருத்தலின், காணுந்தோறுங் காணுந்தோறும் எங்கள் அன்பை நினைவூட்டுவதான அறிகுறியாக இந்நன்கொடையை ஏற்றுக்கொள்ளுங்கள்.”

என்றிப்படியாக உருக்கத்துடன் உரைத்தனர். உடனே தையனாயகி யம்மாள் எழுந்து நின்றுகொண்டு அங்கு கூடியிருந்த எல்லோருடைய முகங்களையும் அருளுடன்பார்த்துப் புன்னகைகொண்ட முகத்தினராய் வாய்மலர்வாராயினர் :

“பெரியோர்களே! என்னருமைப்பெண்களே! என் கண்ணுக்குக் கண்ணான சிறுமியர்களே! உங்களுடைய அன்பெல்லாங் கூடி என்னை ஆநந்த பரவசமாகும்படி செய்துவிட்டபடியால் என்னசொல்லலா மென்பது ஒன்றும் என்மனதில் தோன்றவில்லை. எனக்குநானே பித்தேறினாற்போல் காணப்படுகின்றேன். உங்கட்கு நான் செய்தது ஒன்றுமில்லை. அப்படி ஏதாகிலும் செய்திருந்தால் அது நான்செய்து தீரவேண்டிய கடமையாக இருந்திருக்கவேண்டும். அப்படிப்பட்டவட்கு இந்த விசித்திரமான மேஜையை நன்கொடையாக அளித்தீர்கள். அன்பை சூக்ஷ்மமானதென்பாரறியாதார்: இதோ உங்களன்பையெல்லாம் நான் ஸ்தூலமாகவே பரிசித்துக் கைக்கொள்கின்றேன் கண்டீர்களோ என்னுடைய புத்திரரையும் உங்களையும் அன்றி வேறொன்றையும் நான் அருமை பாராட்டுவதில்லை. ஆயினும் உங்கள் அன்பேயாகிய இந்த விசித்திரமேஜையை உயிர்போலெண்ணி என்னுயுள்பரியந்தம் இதனை அருமை பாராட்டுவேன். நான் எழுதவேண்டிய கடிதங்கள் முதலிய யாவற்றையும் இதுமுதற்கொண்டு இதன்மேலே எழுதுவேன். உங்களன்பிற்குப் பிரதியன்புசெலுத்த வகையறியேன். ஆகையால் செய்நன்றிமறந்த உலோபியர்களில் ஒருத்தியாக எண்ணப்படுவேனோ என்னும் எண்ணம் என் நெஞ்சை வருத்துகின்றது. நான் ஒருவர்க்கும் வசப்படாமல் என் வாழ்நாளைக்கழிக்க எண்ணியிருந்தேன். அதற்கு மோசம்வந்துவிட்டது. நான் முழுமையும் உங்கள் அன்பின் வசப்பட்டுவிட்டேன். நான் பாடசாலையில் செய்ய எண்ணும் பிரதிசெய்கைக்கும் மற்றஉவாத்திகள் உடந்தையாக இருந்து ஒவ்வொருகாரியத்தையும் தங்கள் சொந்தக்காரியம்போலவே எண்ணி நடத்திவராவிட்டால் என் எண்ணங்கள் எட்டுணையும் பலிதப்படமாட்டா. என் எண்ணங்கள் எல்லாம் பலிதமாகும்படி செய்துவருகின்ற என் உதவி உவாத்திகளுக்கு வந்தனமளிக்க இந்த சந்தருப்பமே தகுந்ததாயிருப்பதனால் அவர்களுக்கு மனப்பூர்வமாய் பற்பல வந்தனம் கொடுக்கிறேன். என் எண்ணங்களும் உதவி உவாத்தியார்களுடைய எண்ணங்களும் நீங்கள் உடந்தையாக இருந்து உழைக்காவிட்டால் எல்லாம் விழலுக்கிறைத்ததாய்ப் போய்விடும். அப்படிப் பாழ்ப்படுத்தாமல் பலிதப்படுத்திய உங்கள் அனைவரையும் நோக்கும்போது என் மனத்தில் குதூகலம் பெருகுகின்றது. இது கிடக்கட்டும். நான் வருஷாந்தரம் செய்துவருகின்ற உபந்நியாசத்தில் நீங்கள் பள்ளிக்கூடம் விட்டபிறகு நடந்துகொள்ளவேண்டிய முறைமைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். அப்பொழுது உங்களிற்பலர் குழந்தைகளாயிருந்தமையால் அநேக மர்மங்களைச் சொல்ல இசையாமல் இருந்தது. இப்பொழுது என்னிலும் பெரியோர்களும் சின்னஞ்சிறு சிறுமியர்களும் இங்கு கூடியிருப்பதனால் இந்த சமயமும் பொருந்துவதாகஇல்லை. நான் உங்களைத் தனித்தனியே காண நேரிடும்போது அப்படிப்பட்ட சமயங்கள் அடிக்கடி நேரிடுமென்று கோருகிறேன். அவைகளைப்பற்றி உங்கட்கு அவரவர்களுக் கேற்றபடி சாங்கோபாங்கமாகச் சொல்லுவேன். பெண்கள் கூட்டங்கள் இதுபோன்றது கூடுகின்றசமயத்தில் சந்தருப்பப்பட்டாலும் இவைகளில் சமாசமானவைகளை பொதுப்பட எடுத்துப்பேச எண்ணியிருக்கிறேன். இந்தவிஷயத்தைக் குறிக்க இது சமயமல்லாவிட்டாலும், நெடுநாளாய் உங்களைக் காணாமல் இன்றைக்கு எல்லோரையும் இங்கே ஒருமிக்கக் கண்டதனால் என்

மனதில் குடிகொண்டிருக்கிற அந்த விஷயங்களை உங்களுக்கு அறிவிக்க விருப்பமுண்டென்றாகிலும் இப்போது வெளிப்படுத்தினால் நீங்களும் அதுவிஷயத்தில் அவாவுடையவர்களாய் இருப்பீர்களென்று எண்ணியே இப்போது அதனை வாய்விட்டேன். நாமெல்லோரும் பல்லாண்டு வாழ்க."

அப்புறங்கூட்டம் கலைந்துவிட்டது. நீங்களும் வீட்டுக்குப் போய்வாருங்கோள்.

கிழவன்.

## திருடனைப்பிடித்த சமர்த்தன்கதை.

ஒரு ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். ஒருநாள் காலமே அவன் தன் கொட்டத்தைப் பார்த்தபொழுது தான் அருமையாய் வளர்த்தக் கட்டுக்காளையைக் காணவில்லை. அதைக் கள்ளன் கொண்டுபோய்விட்டானென்று அவன் அறிந்து பலஇடங்களில் தேடிச்சென்றான். அது போனஇடம் தெரியவில்லை. அதனால் 'கெட்டமாடு தேடுமுன்னே எட்டுமாடுவாங்கிவிடலாம்' என்னும் பழமொழிப்படி அவன் புதிதாய் ஒருமாடு வாங்குவதற்கு அடுத்தஜில்லாவில் கூடும் ஒரு பெரிய சந்தைக்குப்போனான். அவன் அங்கேவந்த மாடுகளில் கெட்டுப்போன தன்னுடையமாட்டையும் கண்டான். அதைக் கண்டவுடன் அவன் ஓடிப்போய் அதைப் பிடித்துக்கொண்டு "இது என்மாடு, சிலநாளைக்குமுன் களவுபோயிற்று" என்று உரக்கக் கூவினான். அதை விற்கவந்தவன் "இது என்னுடைய மாடு. ஒருவருஷமாக என்னிடமிருக்கிறது. ஒருவேளை உன்மாடு இதைப்போலிருந்திருக்கலாம். ஆனால் இது அல்லவென்பது நிச்சயம்" என்றான். உடனே அந்தக்குடியானவன் அந்தமாட்டின்கண்களைப் பொத்திக்கொண்டு "ஒருவருஷமாக இது உன்னிடம் இருப்பது மெய்யானால் அதைப்பற்றி உனக்கு நன்றாய்த்தெரிந்திருக்குமே. இதனுடைய 2 கண்களில் எந்தக்கண் குருடு?" என்று கேட்டான். விற்கவந்தவன் சொற்பநாளைக்கு முன்னே தான் திருடினவன் ஆதலால் அதை அவ்வளவு நன்றாய்ப் பரிசோதனை செய்யக்கூடவில்லை. ஆனால் பதில்சொல்லவேண்டியது அவசியமாயிருந்தபடியால் அவன் "இடதுகண்ணில் குருடு" என்று நன்றாய்த் தெரிந்தவன்போல் திடமாய் மறுமொழிசொன்னான். உடனே அந்தக் குடியானவன், "அதன் இடதுகண்குருடல்ல." என்றான். அதற்குள் திருடன் சற்று பதட்டத்துடன் "வலதுகண் என்பதற்கு இடதுகண் என்று பதறிச்சொல்லிவிட்டேன் வலதுகண்தான் குருடு" என்றான். உடனே அந்தக் குடியானவன் அவனைப்பார்த்து "நீ திருடனென்றும் பொய்யனென்றும் இதனாலேயே நன்றாய் வெளியாய்விட்டது நீங்கள் எல்லாரும் பாருங்கள்.: இந்தமாடு குருடேயல்ல, இந்தச் சண்டாளனைப் பரிசோதிக்கத்தான் இந்தக் கேள்விகள் போட்டேன்" என்றான். சுற்றியிருந்தவர்களெல்லாரும் இடிஇடியெனச் சிரித்து கைகளைத் தட்டிக்கொண்டு "திருடன் அகப்பட்டான்: பிடியுங்கள்: கட்டுங்கள்" என்று கூவினார்கள். இந்தச் சத்தத்தைக்கேட்ட போலீசுதாரர்கள் அவனைக் கட்டிச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோனார்கள். அந்த மாடு சொந்தக்காரனிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டதுமன்றி அந்தத் திருடனும் தக்கபடி தண்டிக்கப்பட்டான்.

ஆதலால் பார்த்தீர்களா என சின்னஞ்சிறு நேசர்களே துஷ்டர்கள் தங்கள் குற்றங்களை மறைக்க எவ்வளவு தந்திரங்கள்செய்தாலும் அவைகளையெல்லாம் கடவுள் வெளிப்படுத்திவிடுகிறார்.

உங்கள் செல்ல மாமா.



## விசேஷக்குறிப்புகள்.

**இராஜப்பிரதிநிதி சட்டநிருபணசபை சீர்திருத்தம்.**

இராஜப்பிரதிநிதி சட்ட நிருபணசபைக்குள்ள அதிகப்படி மெம்பர்கள் 16-பேரில் 8-ப்பேர்கள் உத்தியோகஸ்தரல்லாதவர்களாக விருக்கவேண்டியது சட்ட நிபந்தனையின்படி அவசியம். இராஜப்பிரதிநிதியவர்கள் தயைபுரிந்து அவருடைய சட்டநிருபணசபை அதிகப்படி மெம்பர்களில் 10-ப்பேர்கள் உத்தியோகஸ்த ரல்லாதவர்களாக விருக்கவேண்டுமென்று சிபார்சுசெய்ய, இந்தியா மந்திரியவர்கள் அப்படியே யிருக்கும்படி அங்கீகரித்து உத்திரவு பிறப்பிக்க அனுமதிகொடுத்துவிட்டார். இந்தியா மந்திரியவர்கள் அனுமதிகொடுத்தபடி இந்தியா கவர்ன்மெண்டார் பிரசுரித்திருக்கும் விதிகளில் இராஜப்பிரதிநிதியின் சட்டநிருபணசபைக்கு நியமிக்கப்படவேண்டிய உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்கள் 10-ப்பேர்களில் 5-பேர்கள் சென்னை, பம்பாய், பெங்கால், வடமேற்குமாகாணங்கள் ஆகிய இராஜதானிகளிலுள்ள சட்டநிருபணசபைகளிலுள்ள உத்தியோகஸ்தரல்லாத அதிகப்படி மெம்பர்கள் சேர்ந்து சிபார்சுசெய்வதின்படி ஒவ்வொரு இராஜதானிக்கும் ஒரு பிரதிநிதி நியமிக்கவும், 'கல்கத்தா சேம்பர் ஆவ் காமர்ஸ்' என்னும் அங்கிலேயவர்த்தக சங்கத்தார் சிபார்சுப்படி அவர்களுடைய பர்த்தியாக ஒருவரை நியமிக்கவும் ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். இப்படி 5-ஸ்தானங்கள் நிறப்பப்பட்ட பின் பாக்கியுள்ள உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்கள் ஸ்தானங்கள் ஐந்தையும் இராஜப்பிரதிநிதியவர்கள் யுக்தப்படி சட்டநிருபணசபையில்லாத மாகாணங்களுக்குத் தக்க பிரதிநிதியானவரைத் தெரிந்தெடுத்து நியமித்து நிறப்பப்படும். மற்றப்படி அச்சபை சீர்திருத்த விதிகளெல்லாம் இராஜதானி சட்டநிருபணசபைகளின் சீர்திருத்த விதிகள்போலவே இருக்கின்றன.

**ஷை சபைக்கு ஒரு மெம்பர் எலெக்ஷன்.**

மேற்கண்டவிதிப்படி இராஜப்பிரதிநிதியார்களுடைய சட்டநிருபணசபைக்கு இவ்விராஜதானியிலிருந்து ஒருவரைத் தெரிந்தெடுத்துச் சிபார்சுசெய்வதற்காக சென்னை சட்டநிருபணசபையிலுள்ள உத்தியோகஸ்தரல்லாத அதிகப்படி மெம்பர்களெல்லாம் வருகிற செப்டம்பர்மீ 16வ சென்னைக் கோட்டையிலுள்ள கௌன்ஸில் மாளிகையில் ஒரு கூட்டம் கூடுவார்கள். அப்பொழுது சென்னை கவர்ன்மெண்டார் உத்திரவு சட்டநிருபண இலாகா உவவி காரியதரிசி ஆஜராயிருந்து அவர்கள் சபைகூடி நடத்து நடவடிக்கைகளைப் பதிவுசெய்து, அவர்களால் தெரிந்தெடுக்கப்படுகிறவர் பேரை கவர்ன்மெண்டுக்குத் தெரிவிப்பார்.

**பம்பாயில் பிரமாதமான கலகம்.**

இந்தமாசம் நிகழ்ந்த சம்பவங்களில் மிக விசேஷமானது. பம்பாயில் மகம்மதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் நடந்த பெரிய கலகமே. இவ்வளவுபிரமாதமான கலகம் இதற்குமுன் எப்போதும் நடந்ததேயில்லை. இக்கலகம் நாளதுமீ 11வ வெள்ளிக்கிழமையாரம்பித்து மூன்றுநாளைக்கு ஓய்ந்தோய்ந்து கிளம்பி சாதுக்களுக்கும், சமாதானத்தை விரும்பும் ஜனங்களுக்கும் அளவற்ற தீங்கைவிளைத்தது. வெதோ மதவிஷயமாக இருஜாதியாருக்கும் சிலகாலமாக மனக்கசப்பிருந்துவந்தது. மேற்கண்ட வெள்ளிக்கிழமையதினம் மகம்மதியர்கள் அவர்களுடைய பெரிய மசூதியொன்றில் கூடிப்பிரார்த்தனைசெய்து முடிந்தபின் வெளிவருகையில் 'தீன், தீன்' என்று கத்திக்கொண்டு ஹிந்துக்களைத்தாக்கி அவர்கள் கோயில்களையிடித்து, விக்கிரகங்களையுடைத்து இன்னும் பல அக்கிரமங்கள் செய்தார்கள். போலீசார்கலகத்தையடக்க முயற்சித்ததெல்லாம் முற்றும் பலிக்காமற்போக இராணுவ உதவிகோரி பம்பாய்க்கோட்டையிலிருந்த துருப்புகளை வரவழைத்து கலகக்காரர்களையடக்கி இராத்திரி 11-மணிக்கு நகரில் அமைதியுண்டாகச் செய்தார்கள். மறுநாள் சனிக்கிழமை பம்பாயிலுள்ள பஞ்சுயந்திரசாலைகளிலுள்ள ஆயிரக்கணக்காய் வேலையாகவிருக்கும் ஹிந்துவேலையாட்கள், முதநாள் மகம்மதியர்கள் அக்கிரமங்களைக் கேட்டு உக்கிரங்கொண்டு அவர்கள்மேல் பழிவாங்க உத்தேசித்து மத்தியானம் அவர்கள் வேலையை விட்டுவிட்டு வெளிவந்து சுமார் லக்ஷம்பேர்வரையில் ஒன்றுகூடி மகம்மதியர் குடியிருந்த தெருக்களில் நுழைந்து கண்டவர்களைப்புடைத்து அவர்கள் கடைகளைக் கொள்ளையிட்டு, அவர்கள் மசூதிகளையுமிடித்து நாசம் செய்தார்கள். மகம்மதியர்கள் இவர்களையெதிர்த்து ஹிந்துக்கள் கடைகளையும் வீடுகளையும் கொள்ளையிட்டு இந்துக்களைக்கண்டவிடங்களிலெல்லாம் அடித்துப்புடைக்க ஆரம்பித்தார்கள். இப்படியாக இருதரத்தாருக்கும் நகரின் பலபாகங்களில் சண்டைகளுண்டாக, பம்பாயிலிருந்த துருப்புகள் போதாமல் பூனாவுக்குத் தந்தியடித்து அங்கிருந்து உடனே பிரத்தியேகமான ரைல்வண்டிகளில் வந்த பல பட்டாளங்களைக்கொண்டு கலகங்களையெல்லாம் அடக்கி மறுபடியும் அமைதியுண்டுபண்ணினார்கள்.

இந்தக்கலகத்தில் உயிர்ச்சேதமடைந்தவர்கள் 50-க்கு மேலிருக்குமென்று தெரிகிறது. சுமார் 1500-பேர்களுக்குமேல் காயப்படுத்தப்பட்டார்கள். பம்பாய் நகர் வீதிகளெல்லாம் இன்னும் இராணுவ வீரர் வசத்திலேயிருக்கின்றன. 3000த்துக்கு மேற்பட்ட போர்வீரர்கள் அந்நகர்முழுதும் பரவி தெருக்களில் தானே பொங்கித்தின்று படுத்திருந்து கலகமுண்டாகாதபடி காத்துவருகிறார்கள். இது எழுதும் 18-ந் தேதிவரையில் துருப்புகள் தெருக்களிலிருந்து இருப்பிடங்களுக்கு அனுப்பப்படவில்லை. ஆடி௴ 18-ந் தேதி உற்சவம் கழியும்வரையில் அந்நகர் இராணுவ வீரர்களால் பாதுகாக்கப்பட்டு வருமென்று அறிகிறோம். இந்தக்கலகம் நடந்த சமாசாரத்தைக்கேட்டு மாக்ஷிமைதங்கிய மகாராணியவர்கள் மிக விசனித்து இக்கலகங்கள் சீக்கிரத்திலடங்கிப் போகுமென்று எண்ணுவதாகவுரைத்து, அவர் அனுதாபத்தைத்தெரிவித்து பம்பாய் கவர்னருக்கு இங்கிலாந்திலிருந்து ஒரு தந்தியனுப்பினார்கள். பம்பாய் கவர்னர் சென்ற 12௳ சனிக்கிழமைதினம் பூனாவில் அவருடைய சட்டநிரூபணசபை கூடியபொழுது இந்தக் கலக விஷயமாய் அவருக்கு யெட்டிய சமாசாரங்களைத் தெரிவித்து, புத்தியின்றி சண்டைபோட்டு மண்டையையுடைத்துக்கொள்ளும் இந்து மகம்மதியர்களுக்கு அந்த ஜன சமூகத்தில் சிரேஷ்டர்களாயுள்ளவர்கள் புத்திமதிசொல்லி அவர்கள் அகங்காரத்தையும் ஆவேசத்தையும் அடக்க முயலவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார். இப்பொழுது கலகமெல்லாம் அமுங்கியிருக்கிறது.

**3½-வட்டிக்குக் கடன்.**

கவர்ன்மெண்டார் இதற்குமுன் 4-வட்டி, 4½-வட்டி கொடுத்துக் கடன்வாங்கினதையெல்லாம் கொடுத்துவிட்டு இந்த மாசத்தில் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 3½-வட்டி விகிதம் ஜனங்களிடமிருந்து 3½-க்கோடிரூபாய் கடன்வாங்கப்போவதாக போன௴ 14௳ விளம்பரப்படுத்தி யிருந்தார்கள். அதில் கடன்கொடுக்க இஷ்டமானவர்கள் ஆகஸ்டு௴ 15௳க்குள் தர்க்காஸ்துக் கொடுக்கவேண்டுமென்று கண்டிருந்தார்கள். அந்தப்படி 15௳யன்று இதுவிஷயமாய் வந்த தர்க்காஸ்துகளையெல்லாம் உடைத்துப்பார்க்க இந்தியா முழுமையிலும் 4-கோடியே 93-லக்ஷத்து 60-ஆயிரம் ரூபாய் கடன்கொடுக்க சித்தமா யிருக்கிறார்களென்று தெரியவந்தது. 100-க்கு சராசரி 96-சொச்சம் விகிதம் வாங்கிக்கொள்ளத் தீர்மானித்து கவர்ன்மெண்டார் 3-கோடியே 36-லக்ஷத்து 73-ஆயிரத்து 729 ரூபாய் கடன்வாங்க தர்காஸ்துகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சென்னையில் சில முக்கிய பாங்கிகளும்சில இராணுவ உத்தியோகஸ்தர்களும் கொடுத்த தர்க்காஸ்துகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சென்னையிலிருந்து கடன்கொடுப்பதாக தற்காஸ்துக் கொடுத்து ஏற்றுக்கொள்ளப் பட்டவர்களில் 'வி. வரதப்பநாயுடு' ஒருவரே சுதேசி.

**மைசூரில் சிசுவிவாக மறுப்பு.**

மைசூர்இராஜ்ஜியத்தில் சிசுவிவாகங்களை மறுக்க ஒரு சட்டமுண்டுபண்ணத் தீர்மானித்திருக்கிறார்கள். அதற்காகமைசூர் கவர்ன்மெண்டார் தயார்செய்து பிரசுரித்திருக்கும் மசோதாவிலடங்கிய நிபந்தனைகளின்படி 8-வயது பூர்த்தியாகாத பெண்களுக்கும் 14-வயது பூர்த்தியாகாத பிள்ளைகளுக்கும் விவாகம்செய்விக்கும் பெற்றோர் போஷகர்களும் அவ்விவாகங்களுக்கு உடந்தையாகவிருக்கும் மற்றவர்களும் 6-மாசம் காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும்விதித்து தண்டிக்கப்படுவோர்கள். 18-வயது பூர்த்தியான எந்தமனிதனாவது 8-வயது பூர்த்தியாகாதபெண்ணை விவாகம் செய்துகொண்டால் அவனும் மேற்சண்டவாறு தண்டிக்கப்படுவான். 50 வயதான புருஷன் யாராவது 14-வயது பூர்த்தியாகாதபெண்ணை விகாசம்செய்துகொண்டால் அவன் 2-வருஷம்வரையில் கடுங்காவல் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படுவதற்குரியவனாவான். 14 வயது பூர்த்தியாகாத பெண்ணை 50-வயது பூர்த்தியான புருஷனுக்கு விவாகம்செய்துகொடுக்கும் பெற்றோரும் போஷகரும், அவ்விவாகத்துக்கு உடந்தையாக விருக்கும் மற்றவர்களும் 6-மாதக்காவல் தண்டனையாவது அபராதமாவது இரண்டுமாவது விதிக்கப்பெறத் தக்கவராவார்கள். இப்படி சட்ட விரோதமான விவாகம் செய்கிறவர்கள் அல்லது செய்துகொள்கிறவர்கள் தண்டிக்கப்படுவதினால் நடந்தவிவாகம் செல்லாமற்போகாது. இது ஹிந்து சாஸ்திரப்படி யுள்ளதென்று ஜெகத்குரு ஸ்ரீ சிங்கேரி சங்காசாரியார் அவர்களும் மற்ற பண்டிதோத்தமர்களும் சேர்ந்துகூடி ஆலோசித்துச் சொல்லிய அபிப்பிராயப்படி சட்டமாகச் செய்ய மசோதாவாக வரையப்பட்டிருக்கிறது.

**சென்னை ஜனசங்கை ரிபோர்ட்டு.**

சென்ற 1891௵ பிப்ரவரி௴ இவ்விராஜதானியில் ஜனசங்கை யெடுத்ததைப்பற்றிசென்ஸஸ் சுபரின்டெண்டெண்டு மிஸ்டர் எச். எ ஸ்டுவார்ட் எழுதிய ரிபோர்ட்டு ஒன்று கவர்ன்மெண்டாரால்நமக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை நமக்கு அனுப்பியதற்காக கவர்ன்மெண்டாருக்கு நாம் இருதயபூர்வமான வந்தனமளிக்கிறோம். அதன் அடக்கத்தைப் பற்றி அவகாசமாய் வாசித்துப்பார்த்துப் பிந்தி யெழுதுவோம்.

**காலஞ்சென்ற இராஜுபத்தர்.**

சென்னை புதுப்பேட்டையில் "அருளானந்தம் அண்ட் ஸன்ஸ்" என்னும் பேரால் அச்சுயந்திரங்கள் எழுத்துகள் முதலியவற்றில் பெரிய வியாபாரம்செய்து இவ்விராஜதானிமுழுமையும் பிரக்கியாதிபெற்ற கம்பெனியின் தலைவரான ம-ள-ள-ஸ்ரீ இராஜுபத்தர் அவர்கள் நாளது௴ 12௳ காலஞ்சென்றதைக்குறிப்பிட மிக விசனிக்கிறோம்.

PRINTED BY C. PERUMAL NADAR AT THE C. N. PRESS, MADRAS. 21—6—1893.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்வை
யாச்சரிய மோதா னவர்க்கு"

# விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். II. 1893௵ செப்டெம்பர்௴. இலக்கம். 5.

## பொய்த்தோற்றங்கள்.

### I. ஆரோபம்.

இந்தப்பூலோகத்திலே நாம் ஒவ்வொருவரும் அநேகம் பொய்த்தோற்றங்கள் பார்த்திருக்கிறோம். அதாவது சில சில தோற்றங்கள் நமக்குப் பார்க்கும்போது உண்மையாகக் காணப்பட்டபோதிலும் நன்றாய் ஆராய்கையிற் பொய்யென்று தெரியும். இந்தத் தோற்றங்களெல்லாம் பஞ்சேந்திரியங்களுக்கும் புலப்படும். அதாவது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஒவ்வொன்றிற்கும் பொய்த்தோற்றங்களுண்டு. இந்தப்பொய்த்தோற்றங்களிலே இரண்டு விதங்கள் உள. அவற்றுள் ஒன்றினைப் பற்றி இப்பொழுது பேசுவோம்.

'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற ஒரு பழமொழி நமக்குள்ளே வழங்குகின்றது. இந்தப்பழமொழியில் அடங்கிய உண்மையை ஆராய்ந்தறிவதே நாமெடுத்துக்கொண்ட விஷயம். தற்காலத்தில் நாமெல்லோரும் பெரும்பாலும் புகைவண்டிகளிலே பிரயாணம் செய்திருக்கின்றோம். அவ்விதமாகப் பிரயாணஞ் செய்கையில் நம்மவர்களில் அநேகர் ஒருவிஷயம் அறிந்திருக்கலாம். அதாவது வண்டிக்குப்பக்கங்களிலே உள்ள மரங்களும் செடிகளும் ஓடுவனவாகவும் தாங்கள் அசையாது ஒரே இடத்தில் நிலையாயிருப்பவர்களாகவும் அவர்களுக்குத் தோற்றுவது வழக்கம். ஆனால் அவர்கள் நாம் புகைவண்டியிலன்றோ பிரயாணஞ் செய்கிறோமென்று சற்றுச் சிந்திக்கப்புகுவார்களாயின் உண்மை வெளிப்படும். ஆகையினாலே முதலில் அவர்களுக்கு மரங்களுஞ் செடிகளுமோடுவன வாகத் தோற்றிய தோற்றம் பொய்த்தோற்றமாயிற்று.

இனி யொருநாளிராத்திரியில் பயப்படும் பிரகிருதியுள்ள ஒருமனிதன் கால்நடையாக ஓரூரிலிருந்து மற்றோரூருக்குச் செல்லவேண்டுமென்று போய்க்கொண்டிருக்கையில் ஒரு பழுதையானது அவன் போகின்றவழியிலே நெளிந்து கிடந்தது. அப்பொழுது ஆகாசத்திற் சந்திரனானவன் மேகபடலத்தால் மறைப்புண்டு பிரகாசங்குறைந்து விளங்கினான்; நட்சத்திரகணங்களோ மின்னிக்கொண்டிருந்தன. அந்நேரம் அவன் இந்தப்பிரகாசத்தில் நெளிந்து கிடந்த பழுதையைக்கண்டான். கண்டவுடனே அவன் அதைப்பாம்பு படுத்திருக்கின்றதென்று நினைத்துக்கொண்டு பயந்து விலகி, நம்மை யெங்கே பாம்பு தொடர்ந்து வந்துவிடுமோ வென்று ஓடினான். ஓடும் பாதையிற்பிளந்த மாங்கொட்டையொன்று கிடந்தது. பயத்தோடு ஓடுகின்ற அவசரத்தில் இவன் அந்த மாங்கொட்டையை மிதித்து விட்டான். அது பிளந்த மாங்கொட்டையாகையினாலே மிதிக்கப்பட்ட வுடனே அவனுடைய வலதுகாலின் சிறு விரலைக்கவ்விற்று. கவ்வின அளவில், 'ஐயய்யோ! அப்பா! என்னைப்பாம்புகடித்துவிட்டதே!' என்று அல

றிக்கொண்டு போனவன் வழியெல்லாம், நிமி
ஷத்திற்கு இரண்டுதரம் சிவசிவா! சிவசிவா!
என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு
செல்லுகையில், இவனுக்கெதிரே 'லாந்தர்' ஒன்
றை யிடதுகையிற் பிடித்துக்கொண்டு, வலது
கையில் ஒரு தடியோடு இன்னொரு மனிதன்
வந்தான். வந்தவன் இவ்விதமாகக் கதறிக்கொ
ண்டுபோகின்றவனை நிறுத்தி என்னென்று கே
ட்க, ஐயா, என்னைப்பாம்பு இடதுகாற் சிறு
விரலிற் கடித்துவிட்டது என்றான். இதைக்
கேட்டவன் 'லாந்தரை'ப் பிடித்துக்கொண்டு
அவ்வெளிச்சத்தில் அவன் காலைப்பார்த்து'ஒரு
காயத்தையுங்காணோமே, பல்லுப்பட்டிருக்கி
ன்றது என்று சொல்லவும் இடமில்லையே' யெ
ன்று சொல்லி, 'என்னிடத்திலே தடியிருக்கி
றது, கையிலோ விளக்கிருக்கிறது, கடித்த இட
த்தைக்காட்டு பார்ப்போ'மென்று அவனையும்
அழைத்துக்கொண்டு போய்ப்பார்த்தால் அங்
கே பிளந்த மாங்கொட்டை கிடக்கக்கண்டு
'இது தான் உன்னைக்கவ்வியிருக்கும் அதை நீ
பாம்பு கடித்துவிட்டதென்று மயங்கி விட்டா'
யென்றான். அதற்கு அவன் 'இல்லை, நான்
பாம்பு நெளிந்து படுத்திருப்பதைப் பார்த்துத்
தான் ஓடிவந்தேன்'என்றான். இன்னுங் கொஞ்
சதூரஞ் சென்று பார்க்கையில் அங்கே யொரு
பழுதை நெளிந்து கிடப்பதைக் கண்டார்கள்.
உடனே'கண்டது பழுதை கடித்தது மாங்கொ
ட்டை' யென்று தீர்மானித்துப் பொய்ப்பாம்பு
கடிக்கப்பட்டவன் தேற்றப்பட்டு ஊர்போய்ச்
சேர்ந்தான். ஆகையினாலே பழுதையைப் பாம்
பென மயங்கியதும், மாங்கொட்டை கவ்விய
தைப் பாம்பு கடித்ததாக நினைத்ததும் பொய்த்
தோற்றங்களென்று கண்டோம்.

இனி யிவ்விதமான பொய்த்தோற்றங்களை
யெல்லாம் 'ஆரோபம்' என்னும் பெயரிட்ட
ழைப்போம். ஆரோப மென்றாலென்ன? ஆரோ
பமென்பது ஓர்விதப்பொய்த்தோற்றம். அது
ஒருபொருளை மற்றொருபொருளாக அறியும்
பிராந்தியுணர்ச்சியாம். இதை ஆங்கிலபாஷை
யில் 'இல்யூஷன்ஸ்' (Illusions) என்பார்கள்.
இந்த ஆரோப மென்னும் பிராந்தியுணர்ச்சியா
னது எல்லாஜாதியாரிடத்திலுமுள்ள போதி
லும் நம் இந்துக்களிடத்தில் அதிக விசேஷமா
யிருக்கிறது. இந்த ஆரோபத்தில் மூன்று பிரி
வுகளுண்டு. அவை இந்திரியாரோபம், ஞாபகா
ரோபம், நம்பிக்கையாரோபம் என்று சொல்லப்
படும். மெய், வாய், கண், மூக்கு, செவி யெ
ன்று இந்திரியங்கள் ஐந்து உள்ளன. ஆகை
யால் இந்திரியாரோபம் ஐவகைப்படும். கண்
ணுக்கு விஷயமாகும் ஆரோபத்தை ரூபாரோ
பம் என்போம்: திருடர் பயத்தோடு இரவில்
வழிப்பயணம் போவார், சில மொட்டை மரங்
களைக்கண்டு திருடரென மருண்டு சிறிதும்
ஓசைப்படாமல் வாய்புதைத்துச் செல்லுத
லும், புகைவண்டியிற் போகையிற் செடிக
ளோடுவனவாகக் காணப்பட்டதும், வழிநடக்
கையிற் பழுதையைப்பாம்பென மயங்கியதும்
ரூபாரோபங்கள் தான். தற்காலத்திலுள்ள
*ககோளதத்துவசாஸ்திரிகள் சூரியன்ஓரே யிட
த்தில் நிலையா யிருக்கிற தென்றும் பூமியானது
அதைச் சுற்றிவருகிறதென்றும் தீர்மானித்திரு
க்கிறார்கள். ஆகையினாலே சூரியனானவன்
பூமியைச்சுற்றுகிற தென்ற நம்பூர்வீக இந்துக்
களுடைய கொள்கையும் ரூபாரோபத்தின்
சக்தியினால் தான் என்பதற்கு ஆக்ஷேபனை
யில்லை.

செவிக்குப்புலப்படும் ஆரோபத்தைச் சப்தா
ரோபம் என்போம். இதற்கு உதாரணங்கள்
அதிகமாய் அகப்படும். ஒரு பெரிய மனுஷனு
டைய கிருகத்திலே ஒருநாள் அன்றைக்குவிசே
ஷதினமாகையாற் பாட்டுக்கச்சேரி நடந்தது.
அங்கே மகா அழகுள்ள யௌவன ஸ்வரூபியா
கிய ஒரு பெண்ணானவள் பாடிக்கொண்டிருந்
தாள். அவளுடைய பாட்டைக்கேட்டு ஆனந்திக்
கும்படியாக அந்தப்பெரிய மனுஷருடையசிநே
கிதர்களில் அநேகர்வந்திருந்தார்கள். அவள் அ
ழகுக்குத்தக்கபடி குரல் அவ்வளவுநன்றாயிருக்
காது. அவள் சங்கராபரணம் பாடுகையிற் காம்
போதியைக் கலப்பாள், தோடி பாடுகையில்
தன்யாசியைக்கலப்பாள், பைரவிபாடும்போது
முகாரியைக்கலப்பாள், கானடாப்பாடும்போது
சகானாவைக்கலப்பாள். இவ்வளவு நன்றாக அவ
ளுக்கு ராகங்களின் வித்தியாசங்கள் தெரியும்.

* Astronomers.



இப்பேர்ப்பட்டவள் பாடத்தொடங்கியதுமுதல்
முடிக்கிறவரைக்கும் அங்கிருந்தவர்களி லநேகர்
'பேஷ்' என்பவர்களும் 'அச்சா' என்பவர்களும்,
'பலே'என்பவர்களுமாயிருந்தார்கள். இவ்விஷய
த்தில் அவர்களெல்லாரும் பாட்டு இனிமையில்
லாமலும்,குரல்நன்றாயிராமலுமிருக்க, 'பேஷ்'ப்
பட்டங்கொடுக்கும்படி யிருந்தது பொய்த்தோ
ற்றமோ அன்றோ?

ஒருவன் தன்மனைவியானவள் உப்பில்லாமற்
சமைத்தாலும் வெகு ருசியாய்ச் சமைத்திருக்
கிறா ளென்று மெச்சிக்கொள்ளுதல் நம்மவர்
களிற் பெரும்பாலாருக்குத் தெரியும். புரு
ஷன் தன் மனைவியின் பேரில் வைத்திருக்கும்
அன்பினாலே அவளுடைய சமையலையும் நன்றா
யிருக்கிறதாகச் சொல்லுகிறான். இப்படிப் புரு
ஷர்கள் கண்ணை மூடிக்கொண்டு சொல்லுகிற
தைப்பற்றி யவர்களுக்கு முன்னிலையிலேயே
வீட்டிலிருக்குந் தங்கை தமக்கையர்கள் "எப்
படியும் பெண்டாட்டியோ இல்லையோ, அப்பா!
அவள் எப்படிச்சமைத்தாலும் உனக்கு நன்
றாய்த்தானிருக்கும்" என்று சொல்லிக் காட்டு
வதுமுண்டு. 'விழுதிலைத்துவையலும் வேப்பங்
காய்க்குழம்பும், அகமுடையாள் சமைத்தால்
அமிர்தமாயிருக்கும்'என்று நம்முடைய பாட்டி
கள்சொல்லிக்கொள்ளும் பழமொழி இதைவற்
புறுத்தும். இந்த உதாரணம் வாயிற்குப் புலப்
படுதலின் ரசாரோபமாம். மூக்கிற்கு விஷயமா
கும் பொய்த் தோற்றத்தைக் கந்தாரோபம்
என்று சொல்லலாம். துர்நாற்றமுள்ள ஒருத்தி
யினிடத்தில் இச்சைவைத்துத்திரியும் காமு
கன் ஒருவன் அவள் நறுநாற்றமுள்ளவளென்று
சொல்லிக் கொள்ளுதலும், இவைபோல்வன
பிறவும், இவ்வித ஆரோபத்திற்குத் திருஷ்டாந்
தங்களாகும்.

நன்றாய்ப்பாடக்கூடியவளும் சுகந்த பரிமள
திகளைப் பூசிக்கொண்டிருப்பவளுமாகிய ஒரு
ஸ்திரீ அழகில்லாதவளாயும் தீர்க்கமுடியாத
வியாதிகளை யுடையவளாயு மிருக்க, அவளு
டைய பாட்டில் மயங்கியவர்கள் அவள்மேல்
காதல்கொண்டு அவளிடத்திலில்லாத இதர
சுகங்களையும் உள்ளதாக மெச்சிக்கொண்டாடு
தலும், இவைபோல்வனபிறவும் ஸ்பரிசாரோப
மாம். இது மெய்யிற்கு விஷயமாகுதலினாலே
யிப்பெயர் இதற்கு இடப்பட்டது.

இதுவரைக்கும் * இந்திரியாரோபங்களைப்ப
ற்றிப் பேசினோம். இனி யிரண்டாவதாகிய
ஞாபகாரோபத்தைப் பற்றிச் சொல்லப் புகு
வோம். ஞாபகாரோபம் என்பதுயாது? முன்
நடந்தவைகளை நினைவூட்டிக் கொள்ளுங்காலத்
திற் சில பொய்த்தோற்றங்களுண்டாகும். அப்
பொய்த்தோற்றங்களை யெல்லாம் ஞாபகாரோ
பம் என்று அழைக்கலாம். மனிதரியற்கை
யானது எப்பொழுதுஞ் சுகத்தையே நாடுவது
என்பது சுபாவ நியமமாம். ஆகவே அவர்களு
டைய எண்ணங்களும் சுகத்தையே நாடிச்செ
ல்லும் என்பது பெறப்படும். அப்படியே சுகத்
தை நாடுங்கால் துன்பங்களை மறந்து இன்பங்க
ளைப்பற்றியெண்ணுதலியற்கையாம். யாவரேனு
மொருவர்க்குத் தற்காலத்திலேதேனும் ஓர் அற்
பத் துன்பத்தை அநுபவிக்குந் துர்ப்பாக்கியம்
நேரிட்டால் அவர் தாம் இப்பொழுது அடைகிற
சுகத்தைக் காட்டிலும் இளமையில் அதிகமா
கச் சுகமடைந் திருந்தோமென்று எண்ணுகி
றார். இவ்விதமாக எண்ணுவதில், தாம் அதிக
சுகமடைந்ததாக எண்ணுகிற அவ் விளமைப்
பருவத்திலேயே யநுபவித்த துன்பங்களெத்த
னையோ அத்தனை துன்பங்களையும்மறந்து தொலை
த்துவிட்டுக் கேவலம் சுகமாத்திரமடைந்திருந்
ததாக எண்ணுதலைப் பொய்த் தோற்றமாகிய
† ஞாபகாரோப மென்று சொல்லுவதிற்குத்
தடையுமுண்டோ?

இனி மூன்றாவதாகிய நம்பிக்கையாரோபம்
என்பது இன்னதென விளக்குவோம். நாம்
ஆராய்ந்து உண்மையென நம்புகிற அநேகவிஷ
யங்களிலேயே ஆராய்ச்சிக் குறைவினாற் சிற்சில
பொய்த்தோற்றங்களுண்டாய் விடுகின்றன. தன்
னைப்பற்றிய விஷயங்களிலெல்லாம் அதிகப்படு
த்திச் சொல்லிக்கொள்ளுதல் இவ்வகையாரோ
பமாம். அறிவில்லாத ஒருவன் தான் நிரம்பக்
கெட்டிக்காரனென்று நினைத்துக் கொள்ளுத

* இவ்விந்திரியாரோபங்களை 'Illusions of Sense Perceptions' என்பார்கள்.

† இஞ்ஞாபகாரோபமானது 'Illusions of Memory', என்று ஆங்கிலத்திற் சொல்லப்படும்.

லும், மகா கோர ரூபியாயிருக்குமொருத்திதான் மகாலட்சுமிபோல் அழகுள்ளவளாயிருக்கிறதாக எண்ணிக் கொள்ளுதலும், பைத்தியகாரனொருவன் தான் பேசும்போதெல்லாம் வெகு புத்திசாலித்தனமாய்ப் பேசுவதாக நினைத்தலும் § நம்பிக்கையாரோபமாம்.

இந்த நம்பிக்கை யாரோபமானது வேதாந்த சாஸ்திரங்களில் மிகவும் பிரயோகிக்கப்பட்டுளது. இருட்டிற் பழுதையாகிய அசரவஸ்துவைப் பாம்பாகிய சரவஸ்துவாக மருண்டது போல, அஞ்ஞானாந்தகாரத்தில், சடமாகிய சரீரத்தையும், அசத்தாகிய இந்த லோகத்தையும் முறையே சித்துப்பொருளாகவும், சத்தாகவும் மயங்குதலும் இவ்வித ஆரோபமாமென்பர் வேதாந்த நூலார்.

இனி ஆரோபங்களுக் கெல்லாம் காரணமென்ன? இவ்விதப் பொய்த்தோற்றங்களெல்லாம் ஏன் அவ்வாறு காணப்படல் வேண்டும்? இவ்வாரோபங்கள் உற்பத்தியாவதற்குத் தத்துவசாஸ்திர சம்பந்தமான காரணங்களேதேனு முண்டா? இந்த விஷயத்தைக்குறித்து ஆராய்ந்து பார்ப்போம். இப்பொழுது திருஷ்டாந்தமாகச் சிறிது நாளைக்குமுன் ஒருவன் மதுரைக்கடுத்த திருப்பரங்குன்றம் என்னும் ஒரு மலையினுச்சியிலேறி நின்று கீழேயுள்ள சராசரங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தான். பார்த்துக்கொண்டிருந்த சிறிது நேரத்திற்கெல்லாம் கீழே விழுந்து இறந்துபோனான். அவன் வேண்டுமென்று விழவில்லை யென்று அவனோடு கூடப்போயிருந்தவர்களுக் கெல்லாம் வெகு நன்றாகத் தெரியும். அப்படி வேண்டுமென்று விழுவதற்குக் காரணங்களுமில்லை. அவனோடு கூடப்போயிருந்தவர்கள் அவனைத் தள்ளிவிட்டார்களென்று சொல்லுவதற்கோ இடமுமில்லை. ஏனெனில் அவனோடு கூடப்போ யிருந்தவர்களெல்லாம் அவனுடைய பெற்றோரு மனைவியுமேயாவார், அப்படியானால் அவன் விழுவதற்குவேறு காரணமிருக்கவேண்டுமே. அதுஎன்ன? சிற்சில எண்ணங்கள் மனத்திலே உற்பத்தியாகி நிலைபெற்றுநின்று மூளையிலே வியாபகமாகி எவ்வித முயற்சியாலும் நீக்கப்படுதலில்லாமல் உடம்பைத் தன்வசப்படுத்தி நடக்கச்செய்யுங் குணத்தையுடையனவா யிருக்கின்றன. இவ்வித எண்ணங்களுக்கு * 'நிலைத்த வெண்ணம்' என்று இப்போது நாம் பெயரிடுவோமாக. மேற்கூறிய உதாரணத்தில் அந்த மனிதன் மலையினின்றும் உருண்டதற்கு இந் நிலைத்தவெண்ணமே மூலகாரணமாம். அது எப்படி யென்பதை விளக்குவோம். அந்தமனிதன் மலையுச்சியிலிருந்து கீழேயுள்ளனவற்றை நோக்கிக்கொண் டிருக்கும்போதே, எங்கே விழுந்து விடுவோமோ என்ற பயத்தோடு கூடிய ஓரெண்ணமானது உற்பத்தியாகி அவன் மனத்தைக் கைவசப்படுத்திக்கொண்டு அவ்விடத்திலேயே நிலையாய்நின்று அவன் அறிவை, மேகஞ்சந்திரனைமூடுவதுபோல, மறைத்ததினாலே அவ்வறிவின்வழிச்செல்லும் உடம்பானது மேற்கூறிய எண்ணத்தின்படி நடக்கத் தொடங்கவே அவன் மலையுச்சியினின்றும் விழுந்து இறந்துவிட்டான். இவ்வளவு வல்லமையையுடையதாய் விளங்குகின்றது அந்தநிலைத்தஎண்ணம். இன்னுமிதினுடையவல்லமையைப்பற்பல விஷயங்களிற்காணலாம். இது †மானஸதத்துவசாஸ்திரத்திலே மிகவும் உபயோகிக்கப்பட்ட ஓர்வித நியமமாகும். இந்த நிலைத்தவெண்ணமே சகல விதமான பொய்த் தோற்றங்களுக்கும் ஆதிகாரணமாம். மேலே சொல்லிய மூவகையாரோபத்து உதாரணங்களுள் ஒவ்வொன்றையும் இந்த 'நிலைத்த எண்ணம்' என்னும் நியமத்தைக்கொண்டு விளக்கி விடலாம். ஒவ்வோருதாரணத்தையுமெடுத்து விளக்கப் புகுந்தால் அதிகமாய் வளருமாதலாற் கேட்போர்க்குப் பொறுமையிருக்க மாட்டாது. ஆகையினாலே ஏதாவது ஒன்றை மாத்திரம் விளக்குவோம்: திருஷ்டாந்தமாகச் சப்தாரோபத்திற்குக்கூறிய வுதாரணத்தில் அந்தப் பெண்ணினுடைய யௌவனத்தோடு கூடிய அழகில் அங்கிருந்தவர்கள் மயங்கி நின்ற அளவில் நன்றாகப் பாடுவாள் என்ற ஒருவித எண்ணமானது அவர்களுடைய மனத்திலேஜனித்துநிலைக்கவே, அவர்களென்ன செய்வார்கள்! அவ்வெண்ணத்

§ இது ஆங்கில பாஷையில் 'Illusious of belief' என்னப்படும்.

* இது ஆங்கில பாஷையில் "Fixed Ideas" என்று பெயர்பெறும்.

† Psychology.



தின் சக்திக்குட்பட்டு 'பேஷ்' 'அச்சா' 'பலே' என்று சொல்லிவிட்டார்கள். இதேமாதிரியாக மற்றையவுதாரணங்களிலும் நிலைத்தவெண்ணத்தின் அதிகாரத்தை யினிது காணலாம். இனிப் பொய்த்தோற்றங்களின் மற்றொரு விதத்தைக் குறித்து அடுத்தமுறை பேசுவோம்.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரி, பி. ஏ.

## சூரியமண்டலமும் கிரகங்களும்.

தன் கொண்டியாய்த் திரிந்துகொண்டிருந்த ரிஷபம் ஒன்று ஒருநாள் "நாம் இத்தனைநாளாக இந்தக் காட்டில் மேய்ந்துகொண்டு ஈஸ்வரனுடைய வாகனமா லெட்சணமா என்றில்லாமல் உண்பதும் உறங்குவதுமாகச் சிற்றின்பத்திலேயே காலத்தைக் கழித்துக்கொண்டு வருகிறோமே, பூலோகம் என்னவாக இருக்கிறது என்னசெய்தியென்று விசாரிக்க வேண்டாமா" என்று யோசித்துக்கொண்டிருக்கையில், தன் சிநேகிதனாகிய நாயொன்றைக் கண்டு தன்னுடைய சங்கையை யதற்குச் சொல்ல, அந்த நாய் "ஆமாம், என்னுடைய எஜமானன் வீட்டிலே பலரும்கூடி பூமி உருண்டையா தட்டையாவென்று தர்க்கம் செய்துகொண்டிருக்கக் கேட்டிருக்கிறேன்; எனக்குமே விசாரிக்க வேண்டுமென்று ஆசையாகத்தா னிருக்கிறது, என்னசெய்யலாம்?" என்றது. இப்படியிருக்கிறபோதே தவளையொன்று பக்கத்திலிருந்த ஒரு கல்லினடியிலிருந்து வந்து "என்ன அப்பா, ஏது யோசித்துக்கொண் டிருக்கிறாய்?" என்று ரிஷபத்தைக் கேட்க, நாயும் ரிஷபமும் தங்களுடைய சங்கையை அதற்குச்சொல்ல, தவளை, "இவ்வளவுதானா? என்னுடன் வாருங்கள், நான் உலகத்தைக் காண்பிக்கிறேன்" என்று அவைகளைக் கூட்டிக்கொண்டு தத்தித் தத்தி அருகாமையிலுள்ள ஒரு பாசிபிடித்த குளத்தண்டையிற்போய் "பார்த்திர்களா! இதுதான் உலகமெல்லாம்" என்று அதில் குதித்தது. அவ்வாறு, குருடர்கள் யானைகண்ட மாதிரி "நான் பூலோகமெல்லாம் சுற்றியிருக்கிறேன், (அவர்களுக்கு பூலோகமாவது, தவளைக்குக் குளத்தைப்போல வடக்கே காசிவரைக்கும், தெற்கே இராமேசுவரம் வரைக்கும் தான். அப்புறம் பூலோகமாவது!) பூமியாவது உருண்டையாவது, சீச்சீ!" என்பவர் அனேகர். இவர்கள் ஹிமோத் பருவதத்திற் கப்பால் தேசமிருக்கிறதென்றும் சமுத்திரத்திற் கப்பால் இங்கிலாந்து என்பது ஒன்றுண்டென்றும் கூட நம்பமாட்டார்கள். இருந்தாலும் சீமையாளுபவர் ஆங்கிலேயர் என்ற விஷயத்தினாலே நம்பவேண்டியிருக்கிறது. இது மறுக்கக்கூடாத விஷயமே; ஆகையால் நம்புகிறார்கள். விவேகசிந்தாமணியை வாசிப்பவர் அனேகர் 'காம்பஸ்' என்னும் திசையறிகருவியைப் பார்த்திராவிட்டாலும் அதைப்பற்றிக்கேட்டாவதிருப்பார்கள்.* பலர் கடிகாரச்சங்கிலியிலும், இக்காலத்துச்சிறுவர்கள் பலர் தாம் தரித்துக்கொள்ளும் 'பெல்ட்' என்று சொல்லும் இடுப்புப்பட்டை முகப்பிலும் ஒரு சின்ன கடிகாரம்போல் இக்கருவி யமைக்கப்பட்டிருப்பதை அனேகர்பார்த்திருக்கலாம். அதை யூகித்துப்பார்த்தால் அதில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்கிறதிசைகளெழுதி அதன் நடுவேயுள்ள ஒரு முள்ளானது அதை யெப்படித்திருப்பினாலும் வடக்குத்திக்கையே காண்பித்துக்கொண்டு நிற்கும் அதிசயத்தைக் காணலாம். இது திக்குத்திசை தெரியாத அவாந்தரமான சமுத்திரத்தின் நடுவே பிரயாணம் செய்பவர்களுக்கு இன்றியமையாத கருவி. இதைக்கொண்டு கிழக்கேயாவது மேற்கேயாவது ஒரே திசை நோக்கி சமுத்திரத்திற் பிரயாணஞ்செய்தால் சிலகாலஞ்சென்று புறப்பட்ட இடத்துக்கு வந்து விடலாமென்பது மனதாறப்பரீக்ஷித்தறிந்தவிஷயம். பூமிதட்டையாயிருக்குமானால் நாம்புறப்பட்ட இடத்தைவிட்டுப்போகப்போக அவ்விடத்துக்கு எட்டாத் தொலையிலல்லவோ போய்க்கொண்டிருக்க வேண்டும்? அப்படிக்கின்றி யேலே சொன்னபடி புறப்பட்ட இடத்துக்கே வந்து சேருவதெப்படி? ஒரு எலுமிச்சம் பழத்தின்மேல் ஒரு எறும்பானது ஒரே முகம் நோக்கிப்போகுமானால் அது அப்பழத்தைச் சுற்றிக்கொண்டு புறப்பட்ட விடத்துக்கு வந்துவிடும். இத்திருஷ்டாந்தத்தால் பூமி உரு

* போனமாசத்து சஞ்சிகையில் "மாதர்பாக்கம்-புகைக்கப்பல்" என்பதையும், "சிறுவர்க்கான ஜால விநோதங்களை"யும்பார்க்க,

ண்டை வடிவென்பது நமக்குத் தெரிகிறதல்லவா? பூமி உருண்டையென்றால் பூமியைச் சுற்றி ஜலமும் அதைச்சுற்றி ஆகாயமுமிருக்கிறதாக ஏற்படும். வாஸ்தவத்தில் அப்படியே தானிருக்கிறது.

உருண்டை வடிவாயுள்ள இந்த பூமியானது பூகோள சாஸ்திரிகளால் குணகோளார்த்தம் (கிழக்குப்பாதியண்டம்), குடகோளார்த்தம் (மேற்குப்பாதியண்டம்) என்று இருபாதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. குணகோளார்த்தத்தில் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிகா, ஆஸ்திரேலியா, என்னும் நான்கு §கண்டங்களும், குடகோளார்த்தத்தில் அமெரிக்கா என்றொரு கண்டமும் உண்டு. ஐரோப்பியர்களுக்கு அமெரிக்கா உண்டென்பது இன்றைக்கு 401 வருஷங்களுக்கு முன்புதான் தெரியவந்தது. கொலம்பஸ் என்னும் மகாபுருஷன் அதைக்கண்டு பிடித்தார். அங்குள்ள ஜனங்கள் இப்பூசக்கரத்தில் நமதுள்ளங்காலுக்கு எதிர்ப்புறத்திலிருக்கிறார்கள். நாம் இங்கிருந்து அவர்களைப்பார்க்கக்கூடுமானால் அவர்கள் நம் காலுக்கு நேராக பூமியின் எதிர்ப்புறத்தில் கால்வைத்துக்கொண்டு அந்தரத்தில் தலையைத்தொங்கவிட்டுக்கொண்டு நடப்பவர்போலத் தோற்றுவார்கள். ‘இவ்வாறு எப்படி நடக்கமுடியும்? அவர்கள் கீழேவிழுந்துவிடமாட்டார்களா’? என்றால், நாம் விழுந்து விடுகிறோமோ? அவர்களுக்கு நாம் தலைகீழாகஇருக்கிறவர்கள் போலவே தோற்றுவோம். அவர்களும்நம்மைப்போலவே பூமியில் கால்வைத்துத்தான் நடக்கிறார்கள். பூமிக்குள்ள பூமையக் கவர்ச்சியின் வலியால் நாமும் இப்புவியிலுள்ள மற்ற சராசரப் பொருள்களும் பூமியையொட்டியிருக்கிறோமென்றுதெரியுமே. (சென்ற மேமாசத்து விவேகசிந்தாமணி யில் ‘பதார்த்தங்கள் தம்முள் நிகழும் முக்கிய கருஷணங்கள்’ என்னும் விஷயத்தை இன்னொருமுறை ஊகமாகப்படித்துப்பார்க்க.)

நாம் பிரதிதினமும் சூரியன் கிழக்கேயுதித்து மேற்கே அஸ்தமிப்பதைப்பார்த்து பூமியைச் சுற்றி சூரியன் ஓடுவதாக எண்ணுகிறோம். இது மாதிரியே புகை வண்டியில் போகையில் வெளியில் பார்த்தால், பக்கத்திலுள்ள மரஞ்செடி முதலியவையும், கீழ்த்தரையுங்கூட ஓடுகிறதைக் காண்கிறோம். ஆகையால் புகை வண்டியல்ல ஓடுகிறது; மரஞ்செடி முதலியன தான் ஓடுகின்றன என்னலாமா? வாஸ்தவத்தில் புகை வண்டியல்லவோ மரஞ்செடி முதலியன ஓடுவதாகத் தோன்றும் திசைக்கு நேரெதிரான திசையில் ஓடுகிறது. இன்னும் தட்டாமலை ஆடுவதும் ஓர் திர்ஷ்டாந்தம். இது இல்லாமல் பூமிதான் சுற்றுகிறது என்பதற்கு ஒரு நியாயம் கூறலாம். வானத்தில் தத்தம் நிலைமாறாத நக்ஷத்திரக்கூட்டங்கள் சில விருக்கின்றன. அவைகளின்நிலையைச்சிந்திக்குங்கால் பூமியே சுற்றிவரவேண்டுமென்பது நிதர்சனமாகப்படும். நக்ஷத்திரநிலை தெரியாதவர்களுக்கு அது விவரமுணர்த்துவது அரிதாதலால் அதைப்பற்றி விவரிக்காமல் விட்டோம். பூமி தன்னைத்தானே அப்பிரதக்ஷணமாய்ச் சுற்றிக்கொண்டு சூரியனைச்சுற்றி வருகிறதென்பதுபிரத்தியக்ஷப்பிரமாணமாக நிதானிக்கப்பட்டவிஷயம். இதற்கு இரண்டு சொல்ல இடமில்லை.

ஆயிரம் தலையுள்ள ஆதிசேஷனாலும் அஷ்டதிக்கஜங்களாலும் சுமக்கப்பட்டு கண்ணுக்கெட்டாத தூரம் வரை பரவியிருக்கும் இப்பூமாதேவியானவள் பேய்பிடித்த பெண்பிள்ளைபோல் ஓயாது தலைசுற்றியாடி வருகிறாளென்பது பூர்வ நம்பிக்கை படிந்த நம்மவர்களிலனேகர் மனதுக்கு ஒவ்வாது. ஆனால் அதற்கு நாமென்ன செய்யலாம்! நாம் உள்ளதை உரைத்ததன்றி வேறில்லை. ஆனாலும் இவர்களுக்கு ஒரு ஆறுதல் சொல்வோம்:—

“குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்”

என்றார். விதி யாரைத்தான் விட்டது!

நாற்பது வருஷத்துக்கு முன் புகைவண்டி வந்த புதிதில் ஒரு குக்கிராம வாசியான கிழவர் ஏதோ அலுவலாக மதுரைக்குப்போக அம்மயநாயக்கனூரில் கொண்டுவந்து ரயிலில் ஏற்றப்பட்டார். ஏறினவுடன் ரயிலும்புறப்பட்டது. அது அவருக்குத்தெரியவில்லை. “என்னடா முட்டாள்பயகாள், வண்டியேண்டா போகல்லே” என்றுகத்திக்கொண்டேவர மதுரையில்போய்ச் சேர்ந்தார். இப்படித்தான் அறியாதவர்கள் ‘பூமி ஓடினால்நமக்குத்தெரியாதோ?’ என்றுகேட்பார்கள். பூமி இவ்வாறு சுற்றுவதினால் தான் இரவும்பகலும் உண்டாகிறது. ஒரு ஊசியில் ஒரு எலுமிச்சம்பழத்தைச் சொருகி அதை ஒரு விளக்கின் முன்னால் பிடித்தால் ஒரு பாகம் வெளிச்சமாயும் மற்றபாகம் இருட்டாயுமிருக்கும். இப்படி ஊசியை ஊன்றிக்கொண்டு பழத்தைமாத்திரம் சுற்றினால் ஒரு பாதியில் வெளிச்சமும் அதற்கு எதிரான பாதியில் இருட்டுமாகப்பட்டுக்கொண்டேபோகும். இவ்வாறே பூமிக்கு இரவும் பகலும் நேரிடுகிறது.

§ ‘கண்டம்’ என்றால் பூமியின் ஒரு பெரிய பிரிவுக்குச்சொல்லுகிறது.



தன்னைத்தானே சுற்றுவதுமன்றி பூமி சூரியனையும் வருஷத்திற்கு ஒரு முறை சுற்றிவருகிறது. சர்வஜீவராசிகளையும் படைத்து, இரட்சித்து, அழிப்பதாகியமுத்தொழில்களையும் பூண்டு ஒருவாறு ஸ்ரீபரமாத்மாவென்று நம்மவரால் கொண்டாடப்பட்டு, ஒவ்வொரு பிராமணனும் விடியுமுன் ஸ்ரீ சூரிய நமஸ்காரம் செய்துவரும் மகிமையைப்பெற்ற பகவான் சூரியன். சூரியனில்லாவிடில் மேகம்கிடையாது, மழைகிடையாது, “விசும்புற்றுளிவீழ்கி னல்லால் மற்றாங்கே பசும்புற்றலைகாண்பரிது” என்றவாறு புல் பூண்டு முளையா; அவற்றை உண்டு ஜீவிக்கும் ஜீவகோடிகளும் அபாவம். இவ்வாறு சிறப்புற்றோங்கி விளங்கும் சூரியனை சுற்றிச்சுற்றிவருவதே தொழிலாகக்கொண்டு, அவனது ஒளியன்றி வேறு ஒளியில்லாது வானசாரிகளான கிரகங்கள் பூமியல்லது வேறு ஏழு உள்ளன. அவை புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன் என்பவை. இவை ஒவ்வொன்றும் கீழேகாணும் படத்தில் காட்டியபடி சூரியனை மையமாகக்கொண்டு அதை இடதுபக்கமாகச் சுற்றிவருகின்றன.




The Solar System. சூரியமண்டலமும் கிரகங்களும்.

இவையன்றி நூற்றில் ஒரு தடவை, ஆயிரத்தில் ஒரு தடவை என்று தோன்றி நம்மவர்க்கெல்லாம் பீதிஉண்டுபண்ணுவனவான தூமகேது அல்லது வால்நட்சத்திரங்களும் சூரியனைச் சுற்றிவருவனவே. ஆனால் அவைகளுக்குக் கிரகங்கள் எனப்பேரல்ல. கலெக்டரிடம் தாசில்தார் கைகட்டி நிற்பவனானாலும் அவனிடம் கைகட்டி நிற்பவர்களும் இருப்பதுபோல இந்தகிரகங்களையும்சுற்றிவரும் உபகிரகங்களும் பதினெட்டு உள. அவையுள் நமது பூமிக்குச் சந்திரன் ஒன்று, வியாழனுக்கு நான்கு, சனிக்கு எட்டு, யுரேனசுக்கு 4, நெப்டியூனுக்கு 1.

இவ்வாறு சூரியனைச்சுற்றி மற்ற கிரகங்கள் ஓடுகின்றன என்றும் பூமி சுற்றவில்லை யென்றும் ஸ்தாபித்த மகான் கோபர்நிகஸ் என்பவர். அவர் இதை 400 - வருஷங்களுக்குமுன் ஸ்தாபித்தார். பிற்பாடு தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்டுபிடித்து இதை ஸ்தாபித்த காலிலியோ பிரபுவைவிட வேறு சிறந்த மகானும், கிடைக்குமா. இவ்வாறு பூமி சுற்றுவதென்பது "பைபில்"ஆகிய ஏசுநாதர் வேதத்துக்குவிரோதமென்று எண்ணி வேதத்துக்கும் வானசாஸ்திரத்துக்கும் என்னசம்பந்தம் என்று அறியாத அக்காலத்து மூடப்பாதிரிகள் இவரைப்பிடித்து சிறைச்சாலையில் வைத்தனர்கள். பூமி சுற்றவில்லை யென்றால் சிறைமீட்டுவிடுவதாக அவர்கள் சொன்னதைக் கேட்டு, காலிலியோ 'ஆம் சூரியன்தான் சுற்றுகிற'தென்று சொல்லிவிட்டு சிறைச்சாலையைவிட்டு வெளியில் வந்தவுடன், மனதுக்கு சமாதானப்படாமல் பூமியில் காலை உதைத்துக்கொண்டு "என்னஇருந்தாலும் பூமிதான் சுற்றுகிறது" என்றார். உடனே வேட்டை நாய்கள்போன்ற அக்கொடிய பாதிரிகள் இவரைக் கொண்டுபோய் சித்திரவதைசெய்து சிரச்சேதம் செய்துவிட்டார்கள். அந்தோ! இவ்வளவு பெரிய உண்மையை உலகத்துக்கு வெளியிட்ட மகான் கொல்லுக் கொலைபுரிந்த மூர்க்கனைப்போல பாபம் கொல்லப்படலாயிற்றே. மூடபக்தி செய்விக்கும் கொடும்பாவத்தி ஓர் அளவும் உண்டோ? எத்தனை ஆயிரம்பேர்கள் இதனால் கொலையுண்டிருக்கிறார்கள்!

இந்த காலிலியோ மகான் கண்டுபிடித்த தூரதிருஷ்டிக்கண்ணாடியினால் ஆயிரம்மயில் தூரத்திலுள்ளவைகளையும் ஒருமயில் தூரத்திலுள்ளவைபோல் பார்க்கலாம். இவ்வாறு பார்ப்பதினால் கிரகங்கள்எல்லாம் நமது பூமிபோல உலகங்கள் என்றும் அவைகளில் மலைகள், சமுத்திரங்கள் முதலியன உண்டென்றும் நாம் அறிகிறோம். ஆகவே கிரகங்கள் நமது பூமியைப்போல அண்டங்களாய் சூரியனைச்சுற்றி ஒரே பாதையில் சுழல்வன என்பதாயிற்று. நட்சத்திரங்கள் தூரதிருஷ்டிக்கண்ணாடியிலும் பொட்டுப்போலவே தோன்றும். ஆகவே கிரகங்கள் முதலியவைகளை விட நட்சத்திரங்கள் வெகு தொலையில் இருக்கின்றன என்று ஏற்படுகிறது. நமது நவக்கிரகங்களில் சூரியன், சந்திரன், இராகு, கேது இவை கிரகமல்லவென்பதும் விளங்கும்.

பூமிக்கும் சூரியனுக்கும் உள்ளதூரம் மனதினாலும் எண்ணக்கூடாததாயிருக்கிறது. ஒரு ரயில் வண்டி இரவும் பகலும்தங்காது மணிக்கு 40 மயில் வீதம் போனால் சூரியனிடம் போய்ச் சேருமுன் 265 வருஷங்கள் செல்லும். இவ்வாறிருக்க வாயுபுத்திரரான ஹநுமார் பிறந்த உடன் விளையாட்டுக்காக சூரியனை எட்டிப் பிடிக்கப்போனாராம். "மலையை முழுங்கியமகாதேவனுக்கு கதவு ஒருஅப்பளாம்" என்றபடி" கடலைத்தாவினவருக்கு இது ஒரு லட்சியமா?

கிரகங்களின் பரிமாணங்களை ஒத்துப்பார்க்கும்போது பூமி ஒரு பெரியபட்டாணிக் கடலையும், சுக்கிரன் ஒரு சிறு பட்டாணிக்கடலையும் (இரண்டும் ஏகதேசம் ஒன்று) புதன் பாசிப்பயறும், செவ்வாய் மிளகும், வியாழன் பப்பிளிமாசும், சனிநாரத்தையும், யூரேனஸ் ஒருநெல்லிக்கனியும், நெப்டியூன் எலுமிச்சம்பழமும்ஆகும். கிரகங்களுள் மிகவும் பெரியது வியாழன். அது பூமியைவிட 1200 பங்கு பெரியது. ஆனால் அதுவும் சூரியன் முன்பு ஒரு சுண்டைக்காய் அளவாகவே ஒடுங்கும்.

முன்பு படத்தில் காண்பித்திருக்கிறபடியே புதன் சூரியனை சுற்றிவரும் வட்டம், சுக்கிரன் சுற்றிவரும் வட்டத்தைவிடச் சிறியது. இவ்வாறேமற்றவையும். அதுபோலவே அவைசுற்றிவரும் காலமும் சூரியனைச்சுற்றி பூமி 365 நாள்கொண்ட ஒருவருஷத்தில் வருமென்றது நமக்குத் தெரிந்த விஷயமே. புதன் ஒருவருஷத்துக்கு நான்குமுறை சுற்றிவந்துவிடுகிறது. சுக்கிரன் [illegible] நாளிலும் செவ்வாய் இரண்டுவருஷத்திலும், வியாழன் 12 வருஷத்திலும், சனி [illegible] வருஷத்திலும், யூரேனஸ் 84 வருஷத்திலும், நெப்டியூன் 165 வருஷத்திலும் சுற்றிவரும். பின்குறிப்பிட்டவை இரண்டும் வெகு சாவகாசமாய்ச் சுற்றிவருவதினாலும் வெகுதொலையில் இருப்பதினாலும் அநேகநாள் தெரியாமலே போய்விடுமாகையால் இவை நட்சத்திரங்களாகவே எண்ணப்பட்டுவந்தன. சூரியன் பருத்த ஆகிருதி உடையதால் கிரகங்களைத் தன்னைச் சுற்றிச்செய்கிறதாயும் ஒவ்வொரு கிரகமும் மற்றகிரகங்களை ஆகருஷிப்பதாயும் அவ்வாகருஷணங்களை நிருணயித்து அக்கிரகங்களின் மார்க்கங்கள் நிதானிக்கப்படுகின்றதாயும் முன்னம் மேமாசத்திய சஞ்சிகையில் வாசித்திருக்கலாம். அவ்வாறு யூரேனஸ் என்னும் கிரகத்தினது மார்க்கத்தை வானசாஸ்திரிகள் ஒருவாறு நிருணயித்து அது இந்தக்காலத்தில் இங்கே தோன்றவேண்டுமென்று ஊகித்து வைத்தபடி அது தோன்றாது, கொஞ்சம் விலகிக் காணப்பட்டது. புதுகிரகம் ஒன்று இவ்வாறு யூரேனஸைத் தனது மார்க்கம் விட்டு விலகச் செய்திருக்கலாமென்று ஓர் அநுமானம், உதயமாயிற்று. அப்படி ஒரு கிரகம் இருக்குமானால் அது எவ்விடத்திலிருக்கவேண்டுமென்று ஜோதிஷ சாஸ்திரக்கணக்கு பூர்வமாய்த் தீர்மானஞ் செய்துகொண்டு குறிப்பிட்ட இடத்தை தூரதிருஷ்டிக் கண்ணாடியினால் பரிசோதிக்க அவ்விடத்தில் ஒரு கிரகம் புலப்பட்டது. அதற்கு நெப்டியூன் எனப் பேரிட்டார்கள். ஆகாயத்தை ஆராய்ந்துபார்த்து கண்ணுக்குத் தோன்றினபின் நட்சத்திரமோ கிரகமோ என்று நிருணயிக்கப்பட்ட மற்ற கிரகங்கள்போல் அல்லாது கணிதசாஸ்திரத்தின் வல்லமையினால் கண்டுபிடிக்கப்பட்டது அற்புதமல்லவா?

டி. ஆர். கிருஷ்ண அய்யர், பி. ஏ.





# ஆபத்துக்கிடமான அபவாதம்

அல்லது

# கமலாம்பாள் சரித்திரம்.

## VIII

இதுநிற்க, மணவறையிலிருந்த ஸ்ரீநிவாஸன் தனக்குக் கல்யாணம் நடக்கிறதென்பதை நினைத்துத் தன் மனதுக்குள் பெருமைப்பட்டது இவ்வளவு அவ்வளவு என்பதில்லை. தன்னருகில் ஒரு லட்சணமான பெண் தன் மனைவியாக உட்கார்ந்திருந்ததை நினைக்க அவனுக்கு உள்ளம் பூரித்தது. புதிதாய்ப் பட்டாபிஷேகமாகும் ராஜகுமாரனுக்குக்கூட அவ்வளவு சந்தோஷமும் கர்வமும் இருக்காது. அவன் தன் ஆசனத்தில் கம்பீரமாய் கொஞ்சம் கூட முதுகை வளைக்காமல் நிமிர்ந்தபடியே உட்கார்ந்தான்; அங்கவஸ்திரத்தை இழுத்து இழுத்து அடிக்கடி சீர்திருத்திக்கொண்டான்: தன் வலதுகையால் முகவாய்க்கட்டையைப் பலமுறை தடவினான்: அடிக்கடி தொண்டையைத் திருத்திக் கொள்பவனைப்போல் கர்ச்சித்து இருமினான்: சிலவேளை தன் இரண்டு கைகளாலும் முழந்தாளைக்கட்டிக்கொண்டு யானை ஆடுவதுபோல மெதுவாய் ஆடினான்: சிலவேளை தன் விரல்களால் கீழே வெகுவிரைவாய் இங்கிலீஷில் எழுதினான். ஒவ்வொருவேளை தன்முகத்தைத் தன்னருகிலிருந்த சுப்பராயனை நோக்கி அழகாய்த் திருப்பிக்கொண்டு சில சில வார்த்தைகளை இங்கிலீஷில் பேசினான். ஹோமம் செய்யும்போது புகையுடன் பழகாத தன் கண்களில் ஜலம் வர அதை அங்கவஸ்திரத்தால் துடைக்காமல் தன்விரலால் சுண்டி எறிந்து கொண்டு சுப்பராயனைநோக்கி தன் பெண்டாட்டி காதில்பட 'ஆநந்த பாஷ்பம்' என்று சொல்லிக்கொண்டான். ஏதோ புதுமையைக்கண்டவன்போல அடிக்கடி புன்சிரிப்புச்சிரித்தான். நேற்றுவரையில் வேஷ்டிகூடச் செவ்வையாய் உடுத்தத் தெரியாத பையன் இன்று பாராட்டிக்கொண்ட பெருமையைப் பாருங்கள்! ஒருவேளை நாமும் நம்முடைய கல்யாணத்தில் இப்படித்தான் இருந்திருப்போம். மேலும் ஸ்ரீநிவாஸன் குழந்தைதானே.

மகாகனம்பொருந்திய மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீநிவாஸஅய்யர்அவர்கள் தமது ஆசனத்தில் இவ்வாறு வீற்றிருக்க, குழந்தைலட்சுமிஉடல் ஒடுங்கி தலைகுனிந்து அவரிடமிருந்து ஒரு முழத்துக்கப்பால் தங்கத்தில் வார்த்த பிரதிமைபோல் அசைவற்று அமர்ந்திருந்தாள். அவள் அகமுடையானை அவள் இன்னும்செவ்வையாய்ப்பார்க்கவில்லை. அவள்சபைக்குவரும்போது ஸ்ரீநி

வாசன் உட்கார்ந்திருந்தது ஏதோ ஒரு ஜோதிபோல் அவளுக்குத்தோன்றியதைத் தவிர அவனுடைய உருவத்தையும் முகத்தையும் அவள் இன்னும் சரியாய்ப் பார்க்கவில்லை. ஒருவருமறியாமல் கடைக்கண்ணால் அவனைக் கொஞ்சம் பார்த்துவிட இஷ்டந்தான். ஆனால் எல்லாரும் தன்னை கவனித்துக்கொண்டிருந்ததாக அவளுக்குத் தோன்றியதால், அவள் அப்படிச் செய்யக்கூடக் கூசினாள். ஸ்ரீநிவாஸனாவது இவளைப் பார்த்தானா! அதுவுமில்லை. அவனுக்கு ஸ்திரீகளைக் காட்டிலும் பத்துப்பங்கு அதிகநாணம். அவளைப்பார்க்க அவனுக்கு ஆசை பூரணமாயிருந்தது. ஆனால் நீக்கமுடியாத கூச்சம் குறுக்கிட்டது. இவர்கள் நிலைமையிப்படியிருக்க தாடகை நாணியின் கூக்குரல்கேட்டது. உடனே ராமண்ணாவாத்தியாரையும் மற்றும் சிலரையுந்தவிர எல்லாரும் வெளியே போய்விட்டார்கள். ராமண்ணாவாத்தியாரும் வாசல்வரையில்போய் கூக்குரலின் காரணத்தையறிந்து 'இந்த கெட்டமுண்டைக்கு சாங்காலம் வரவில்லையே! முண்டையை கண்டம் கண்டமாக வெட்டிவிட்டால்தான் என்ன,' என்று முணுமுணுத்துக்கொண்டு திரும்பிவிட்டார். குழந்தை லெட்சுமியோ திடீரென்று உண்டான சப்தத்தைக்கேட்டு வேடர்களுடைய கொம்புவாத்தியத்தைக்கேட்ட மான்போலத்திடுக்கிட்டு நடுங்கினாள். இதற்குள் ஸ்ரீநிவாசன் நடக்கும் சங்கதியையறிந்துவர சுப்பராயனையனுப்பிவிட்டு வாத்தியாரைப்பார்த்து கம்பீரமாய், 'தாத்தா அங்கே என்ன விசேஷம்' என்று கேட்டுவிட்டு, 'இந்த அற்பவிஷயந்தவிர வேறொன்றுமில்லையே' என்று வெகு இலக்கணமாய் மறுமொழி சொன்னான். வாத்தியார் மறுமொழியைக்கேட்ட லெட்சுமி மனந்தெளிந்து கூட்டம் நீங்கினதை ஒரு பெரியபாரம் நீங்கினதுபோல் உணர்ந்து பெருமூச்செறிந்து தன் தலையைக் கோதுபவள்போல சற்று நிமிர்ந்தாள். ஸ்ரீநிவாஸன் கூட்டம் திரும்புமுன் தன் மனைவியை எப்படியாவது பார்த்துவிடவேண்டுமென்ற ஆசையுடன் தூணைப்பார்ப்பவன்போலவும் சுவரைப்பார்ப்பவன்போலவும் விட்டங்களைப் பார்ப்பவன்போலவும் கொஞ்சம் கொஞ்சமாய் லெட்சுமியைப்பார்க்கத் துணிந்தான். இப்படி இவன் கள்ளத்தனமாகப் பார்க்கும்போது, தலையைக் கோதுவதுபோல் பாவனைபண்ணிக்கொண்டு இவனுடைய அழகை ஜாடையாய்க்கண்டு அடங்காத ஆநந்தத்துடன் மிருதுவாக மந்தகாசம் செய்துகொண்டு தன் கண்களை இவனுடைய அழகான மேனியினின்றும் பறிக்கமாட்டாமல் லெட்சுமி பார்த்துக்கொண்டிருக்கத் தற்செயலாய் இவ்விருவர் கண்களும் ஒரு இமைப்பொழுது சந்தித்தன. அப்படிச் சந்தித்த உடனே லெட்சுமி தலைகுனிந்துவிட்டாள். அவள் முகம் வியர்த்தது; கைகால் பதறின; உடல் மயிர்க்கூச்செறிந்தது. காலையில் இளஞ்சூரியனைப்பார்த்த கண்களுக்கு எப்படிச் சற்றுநேரத்திற்கு எங்கேபார்த்தாலும் சூரியனாகத்தோன்றுமோ அதுபோல லெட்சுமியின் கண்களுக்கு கொஞ்சநேரத்திற்குத் தன் புருஷனுடைய செந்தாமரைபோல் மலர்ந்த முகமும் அழகிய கம்பீரமான பார்வையுமே எங்கும் தோன்றி விளங்கியது. அவ்வாறு தோன்றுந்தோறும் அவள் சந்தோஷத்தால் உடல்பூரித்தாள். ஸ்ரீநிவாசனுக்கு உண்டான ஆநந்தத்திற்கு அளவு இல்லை. அவனுடையகண்கள் தேனுண்ட வண்டுகள்போலச் சந்தோஷத்தால் சலித்து அவனுடைய மனக்களிப்பை வெளிப்படுத்தின. லெட்சுமியின் இனிமையான முகத்தில் புஷ்பித்த மெல்லிய மந்தகாஸமும், [illegible]சத்தினளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள் என்ற லட்சணத்திற்குப் பொருந்திய அவளுடைய விசாலமான கண்களும் அவன் உள்ளத்தை அடிமைப்படுத்தின. 'என்ன அன்பு! என்ன அன்பு! என்னைப்பார்த்து அவள் சிரித்தசிரிப்பு ஒன்றுபோதாதா? என்று அவன் நினைக்குந்தோறும் அமிர்தம் உண்டவன்போல' அவன் சந்தோஷமடைந்தான். இவ்வாறு இருவரும் பரஸ்பரதரிசனஆநந்தவெள்ளத்தில் மூழ்கித் தங்கள் தங்கள் நிலைமைதெரியாது மயங்கியிருந்தார்கள். இதற்குள் நாணிப்பாட்டியின் திருக்கூத்து முடிந்து எல்லாரும் திரும்பிவிட்டார்கள். ஆதலால் பெண்ணும் மாப்பிள்ளையும் மறுபடி ஒருவரையொருவர் பார்த்து சந்தோஷிக்க சமயம் வாய்க்கவில்லை. ஆனால் லெட்சுமி தன் கழுத்தில் நூதனகாந்தியுடன் விளங்கும் திருமங்கல்யத்தை அடிக்கடி தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அதை ஜாடையாய்க்கண்ட ஸ்ரீநிவாசன் தன்மேலுள்ள அன்பை அவள் அவ்விதம் வெளியிட்டாளென்றும் அதைத் தொடும்போதெல்லாம் அதற்கு மெதுவாய் அவள் ஒரு முத்தம் கொடுத்தாள் என்றும் நினைத்துக்கொண்டான். அது உண்மையோ அல்லவோ என்பது எனக்குத்தெரியாது. ஆனால் அதுமுதல் ஸ்ரீநிவாஸன் தன்னுடைய இரட்டைப்பூணூலையும் பஞ்ச கச்சத்தையும் அடிக்கடி கோதி விட்டுக்கொண்டான் என்பது வாஸ்தவம். அதுவுமன்றி ஆசீர்வாதம்முடிந்து எழுந்திருக்கும் தருணத்தில் முன் ஒருவரிடமிருந்து ஒருவர் ஒரு முழ தூரந்தள்ளியிருந்த தம்பதிகள் இப்பொழுது எப்படியோ ஒருசாண்தூரத்திற்குள்ளாக வந்துவிட்டார்கள். கடைசியாக எழுந்திருந்தபோது ஸ்ரீநிவாசன் தன் அங்கவஸ்திரத்தைச் சரியாகத் தரித்துக்கொள்பவன்போல், வேண்டுமென்றே லெட்சுமியின்மீது



மெதுவாய் வீசியதை, அவ்விருவரையும் சலியாத கவனத்துடனும் அடங்காத சந்தோஷத்துடனும் பார்த்துக்கொண்டிருந்த சுப்பராயன் கண்டான்,

அன்று சாயந்திரம் வழக்கப்படி கூடிய வம்பர் மகாசபையில் சுப்பம்மாள் 'என்ன புள்ளை (பிள்ளை) அணிப்புள்ளை தென்னம்புள்ளை. கொழந்தைகளியுந்தால் முத்துசாமியாத்து மாப்புள்ளையைப் போல இயுக்கவேணும் இல்லாட்டா அதுக்கு பியக்கவே பிடாது' என்று (பாணினியில்கூட இல்லாத *ரயயோரபேதஃ என்ற சூத்திரவிதிப்படி) வெகுகண்டிப்பாய் உத்திரவுசெய்தருளினர். உடனே நாகு 'ஏன், பொண்ணுக்குத்தான் என்ன! பொண் இன்னாப்பிளே நன்னாயில்லையோ' என, வேம்பு 'என்னைக் கேட்டால் மாப்பிள்ளையைவிட பொண்ணு— கல்யாணி (லெட்சுமி) 'மூக்கும் முழியும் அவள் சிரிக்கிறது ஒன்று போதாதா' என்றாள். உடனே சுப்பு ஆவேசம் வந்தவள்போல கைகளைவீசி 'இந்தா அதெல்லாம் எனக்குத்தெயியாது. பொண்ணும்மாப்புள்ளையும் நன்னாப் பொயுந்திக்கையா யியுக்கு. அந்தோ அவாத்திலே பண்ணினாளே பனமயம்போலே மாப்புள்ளையும் மயப்பாச்சிபோல பொண்ணும்' என்றாள்.

எதார்த்தத்திலேயே ஸ்ரீநிவாசனுக்கு லெட்சுமி அழகில் குறைந்தவளில்லை. அவளுடைய அழகாயமைந்த அங்கங்கள் செவ்வையாய் சுருதிகூட்டிய வீணையின் தந்திகள் தனித்தனி தங்கள் நாதத்தை தொனிக்கிறதுமன்றி மற்ற தந்திகளுடைய நாதத்தையும் எப்படி சோபிக்கச்செய்கின்றனவோ அதுபோலத்தனித்தனி தத்தம் அழகால் விளங்கியதுதவிர மற்றுள்ள அங்கங்களின் அழகையும் எடுத்துக்காட்டின. தெய்வீகப்புலவர்களாகிய கம்பர்முதலியோருடைய கவிகளில் எப்படி உள்ளபதத்தை எடுத்து வேறு எந்தப் பதம்போட்டாலும் ரசம் குறைந்து போமோ அதுபோல லெட்சுமியினுடைய அங்கங்களில் எதையும் சிறிது மாற்றினாலும் அழகுக்குக் குறைவேதவிர விர்த்திகிடையாது. 'கழுத்து சிறிது நீண்டிருந்தால்நன்றாயிருக்கும்' 'கால்சிறிது குறுகிக்கை சிறிது பெருத்திருந்தால்,' என்றிப்படி ஆல் உம் என்ற விகுதிப்பிரயோகங்களுக்கு இடம் கிடையாதபடி அவளுடைய அங்கங்களினமைப்பு அவ்வளவு அழகாயிருக்கும். ஸ்ரீநிவாசனுடைய உருவத்தில் சரீர அமைப்பைக்காட்டிலும் மிருதுத்துவமும் பளபளப்புமே முக்கியமாய் விளங்கின. சங்கீதத்தில் தியாகய்யர் கிருதிக்கும் இங்கிலீஷ் நோட்டுக்கும் என்ன வித்தியாசமோ அந்த வித்தியாசந்தான் இவ்விருவருடைய சரீரங்களுக்கும் இருந்தது. அவர்களுடைய முகலட்சணத்திலும் இவ்விதவித்தியாசங்களிருந்தன. ஸ்ரீநிவாசன் பேசும்போது அவன் கண்ணின் ஒளி, பார்ப்பவர்களுக்கு பளீர் பளீர் என்று விட்டுவிட்டுப் பிரகாசிக்கும் மின்னல் ஞாபகத்தை உண்டுபண்ணும். லெட்சுமி பேசும்போது அவளுடைய வார்த்தைகளின் கருத்துக்குத்தக்கபடி அவளுடைய முகக்குறி அடிக்கடி அழகாய் மாறுவது, தகதகவென்று பலவிதமாய்ப் பிரகாசிக்கும் வயிரக்கல்லை ஞாபகப்படுத்தும். அவள் பேசும்போது அவளுடைய கை கால் செய்யும் அபிநயத்தாலும் முகத்தில் உண்டாகும் வேறுபாடாலும் தூரநிற்பவர்கள்கூட அவள்கருத்தை அறியலாம். அவளுடைய உயர்ந்த உதடுகளும் விசாலமான கண்களும் எவ்வளவு துன்பம் வந்தாலும் பாராட்டாது சஹிக்கக்கூடிய திடசித்தத்தையும் பொறுமையையும் காட்டி நின்றன. துள்ளித்துள்ளிவிழும் மீன்கள்போலச் சலிக்கும் அவளுடைய கண்களும் அவளுடைய கன்னங்களில் உண்டாகும் சுழிகளும் அவளுடைய அழகான பல்வரிசையும் அவள் முகத்திற்கு ஓர் அபூர்வமான வசீகரசக்தியை உண்டுபண்ணின. அவளுடைய கண்களின் தோற்றம் வெகு அரிதான குளிர்ச்சியையும் மிருதுத்தன்மையையும் உடையதானாலும் தேவையானகாலத்துக் கண்டோரைக் கலக்கத்தக்க 'உடலினுயிரையு முணர்வையு நடுவுபோயுருவு மதர் விழி' என்ற லட்சணத்திற்குப் பொருந்திய ஒரு கூர்மையான பார்வையும் அவைகளுக்கு உண்டென்றுநினைக்க இடமிருந்தது. ஸ்ரீநிவாசனுடைய முக அழகு வேறுவிதம். அவனது உயர்ந்த மண்டையும் உருண்டைமுகமும் விசாலமான நெற்றியும் அவனுக்கு ஓர்வித கம்பீரமான தோற்றத்தைக் கொடுத்தன. அவனது சற்றுக் கீழ்நோக்கிய கண்களும், சிறிது முன்னே வந்து ஒன்றின்மேல் ஒன்றாய்ப் படிந்திருக்கும் அவன் உதடுகளும் சாந்தத்தையும் சிற்சில சமயங்களில் சோர்வையும் உணர்த்தின. ஆனால் அவனுடைய கூர்மையான மூக்கும் ஓயாது சலிக்கும் கண்களும் அவனுடைய முகத்தில் மந்தமான தோற்றமென்பதே இல்லாமல் நீக்கி, அவனுடைய தீட்சண்யமான புத்தியையும் மனோகரமான சுறுசுறுப்பையும் ஹிருதயபூர்வமான உற்சாகத்தையும் பிரகாசிக்கச்செய்தன.

'ஓங்குமலைக்காட்டி னுள்ளிருந்து தூங்காமல்
தூங்குசப்ர மஞ்சமிசைத் தூங்குநவரசத்தேன்
மொய்த்தமலைக்காட்டு முள்ளு டலையாமல்
மெத்தையின்மே லேறிவிளையாடுந் தோகைமயில்'

என்றிப்படி எவ்விதம்வர்ணித்தாலும் போதாதஅழகுபொருந்திய லெட்சுமியும் அவளுக்காகவே சிருஷ்டிசெய்யப்பட்டவன்போல் தோன்றிய 'சித்திரத்தும்

* ரயயோர் அபேதஃ—ரகாரத்திற்கும் யகாரத்திற்கும் பேதமில்லை.

எழுதொணு வனப்பினுறுகிய' (சித்திரத்தில் கூட எழுதமுடியாத அழகையுடைய) ஸ்ரீநிவாசனும் மணவறையில் உட்கார்ந்திருந்த கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு சந்தோஷியாதவர்கள் கிடையாது. அவர்கள் 'நலங்கு' இட்டதும் தேங்காய் உருட்டிப் 'பூலாச்செண்டு' ஆடியதும் வெகு நேர்த்தியாயிருந்தன. ஸ்திரீகள் எல்லாரும் ஸ்ரீநிவாசனுடன் பேசுவதை ஒருபெரிய ஆனந்தமாய் நினைத்தார்கள். சற்றேறக்குறைய அவன் வயதுள்ள பெண்கள் மனதில் கொஞ்சங்கூடக் களங்கம்இல்லாமல் அவனுடன் பரிகாசம்செய்து விளையாடினார்கள். விசாலாட்சி என்ற ஒருபெண் அவனைப்பார்த்து 'மாப்பிள்ளைக்கு ஆனாலும் இவ்வளவு கர்வம் ஆகாது' என்று சொல்லிவிட்டு இடிஇடிஎன்று சிரித்தாள். சுப்புலெட்சுமிஎன்றபெண் 'அப்படிச்சொல்லாதேயடி, என்னம்மங்காளகமுடையான் நிரம்பசாது: அடித்தால் கூட அழத்தெரியாது' என்றாள். பாகீரதி அவன் முதுகில் அப்பளம் உடைத்தாள். காவேரி அவனுடைய ஜடைசிங்காரத்தைப்பற்றியிழுத்தாள். காமாட்சி'என்னத்தங்காள் அகமுடையானுக்குப்பெண் வேஷம்போட்டால் நன்றாயிருக்கும்' என்றாள். இவ்விதமாக எல்லாப்பெண்களும் எதாவது உறவுகொண்டாடிக்கொண்டு இவனைப் பரிகாசம் செய்தார்கள். முதலில் சுப்பராயன் கூடஇருக்கும்போது கொஞ்சம்கூச்சப்பட்டார்கள். வரவர அவனிருந்தாலும் சட்டைபண்ணுவதில்லை.

மூன்றும்நாள் கலியாணத்தன்று ஸ்ரீநிவாசன் ஒளபாசனம் பண்ணிக்கொண் டிருந்தபொழுது கோதாவரிஎன்ற ஒரு பெண் சந்தடிசெய்யாமல் பின்பக்கம்வந்து ஒரு சுருக்கிட்ட கயிற்றால் அவனுடைய தலைப்பின்னலுக்கும் லெட்சுமி தலைப்பின்னலுக்கும் முடிச்சுப் போட்டுவிட்டாள். ஒளபாசனமானவுடன் நடந்த சேஷ்டையை யறிந்த ஸ்ரீநிவாசன் முடிச்சை அவிழ்க்க எத்தனித்தான். அதற்குள் நாலைந்து பெண்கள் கூடி லெட்சுமி கையைப் பற்றி வீட்டின் உள்பக்கம் இழுக்க, ஸ்ரீநிவாசன் முடிச்சை அவிழ்க்கக் கூடாததுமன்றி அவனும் உள்ளே இழுக்கப்பட்டான். அவன் அதைத் தடுக்க என்னமுயன்றும் முடியவில்லை. அந்த விளையாட்டுப்பெண்கள் சுண்டிசுண்டி இழுக்கும்போது அவன் குழந்தை லெட்சுமிமேல் மெதுவாய்ப் பலமுறை தாக்கநேரிட்டது. இவ்விருவரும் இப்படி ஒருவர் மேல் ஒருவர் படும்போது எல்லாரும் கொல்என்று சிரித்தார்கள். இதற்குள் ஏகக்கூட்டங் கூடிவிட்டது. வந்தபெண்டுகளாவது முடிப்பை அவிழ்த்தார்களா? அதுவும் இல்லை. எல்லாருமாய் 'அப்படித்தான் இழு, இந்தா இந்த உள்ளே இழுத்து இருவரையும் விட்டுக் கதவைச்சாத்திப்போடலாம். இங்கு அகப்பட்டுக்கொண்டாரையா விட்டலபட்டர் அகப்பட்டுக்கொண்டார்' என்றிப்படி கூவினார்கள். சில ஸ்திரீகள் ஸ்ரீநிவாசனைச்சுற்றி 'மாப்பிள்ளை, மாப்பிள்ளை மண்ணுங்கட்டி தோப்பிலே......' என்று குதித்துப் பாடினார்கள். ஒருத்தி பின்புறமாகவந்து அவன்முகத்தை எறிட்டுப் பார்த்து 'மாப்பிள்ளை அழுகாதேயுங்கள்; வேண்டாம், இதற்காக அழுவார்களா' என்றாள். இன்னொருத்தி 'விட்டுவிடுங்கடி பாவம் அழுகிறான், குழந்தை, கோந்தை' என்றாள். மற்றொருத்தி 'சிரி, ஒக்கச்சிரித்தார்க்கு வெட்கமில்லை' பெண்பெண்டாட்டிகளை மீறிக்கொண்டுபோக முடியவில்லை, சிரிப்பு வேறேயா' என்றாள். இன்னொருத்தி 'மாப்பிள்ளை வேஷ்டியைப்பார் அத்தைப்பாட்டி புடவைபோல' என்றாள். இவர்கள் இப்படிப் பரிகாசம் செய்தது ஸ்ரீநிவாசனுக்கு ஸஹிக்கமுடியவில்லை. ஆயினும் அத்தனை அழகான யௌவனபருவமானபெண்கள் இவ்வளவு உல்லாசமாய் அவனுடன் விளையாட அவனுக்குக் கோபம்வருமா? கோபித்துக்கொள்பவன்போல் பலமுறை பாவனைபண்ணினான். அதற்கு அவர்கள் 'கோபித்துக்கொள்ளத் தெரிந்தால் கோபித்துக்கொள்ளவேணும், இல்லாவிடில் சும்மா இருக்கவேண்டும் என்று சொல்லிச் சிரிக்க அவனும் சிரித்துக்கொண்டு அவர்களுக்குச்சரியாக விளையாட ஆரம்பித்தான். நாலாபக்கமும் அந்தப்பெண்களைத் துரத்திக்கொண்டு 'கின்று குத்திக்காளை' போலப் பாய்ந்தான் அவர்களைத் திருப்பி கேலிபண்ணினான். ஒருத்தியைப்பார்த்து 'இரு இரு உன் அகமுடையானிடம் சொல்லுகிறேன் இரு' என்றான். இன்னொருத்தியைப்பார்த்து 'அதோபார் அதோபார் உன்னகத்துக்காரர் வந்துவிட்டார்' என்றான். அவன் வெள்ளிப் பஞ்சபாத்திரத்தைக் கையில் ஓங்கிக்கொண்டு மார்பில் யோகவேஷ்டி தரித்து அரையில் அலங்காரமாய்ப் பஞ்சகச்சம் உடுத்து, குதித்துக் குதித்து ஓடியதும் அந்த அற்புத யௌவன பருவமுள்ள பெண்கள் பாதசரம் குலுங்கக் குலுங்க கலீர் கலீர் என்று மெட்டிகள் சப்திக்க, 'விற்றவழ வாணிமிர மெய்யணிகள் மின்னசிற்றிடை நுடங்கவொளிர் சேரடி பெயர்த்து' அவனைச்சுற்றி ஓடிவிளையாடியதும் ஒரு மின்னரசை பளீர் பளீர் என்று பாயும் அநேககோடிமின்னல் சூழ்ந்ததுபோல் வெகு அழகான நேத்திரோற்சவமாயிருந்தது. இவ்விதம் ஸ்ரீநிவாசன் குழந்தைகிருஷ்ணன் ஆயர்பாடியில் கோபிகாஸ்திரீகளுடன் விளையாடியதுபோல் விளையாடிக் கடைசியாய் 'அந்த உள்ளுக்குத்தானே போகவேணும்என்கிறீர்கள்; நானே போகிறேன், நீங்கள்விட்டுவிடுங்கள்' என்றுசொல்லி லெட்சுமியைப்பார்த்த



உரக்க 'அந்த உள்ளுக்குப் போகலாம்வா' எனவே, எல்லாரும் 'பெண்டாட்டியோடு பேசினான். வெட்கமில்லாமல் பெண்டாட்டியோடு பேசினான்' என்று விழுந்து விழுந்து சிரித்தார்கள். இதற்குள் தற்செயலாய் ராமண்ணுவாத்தியார் வந்தார். வந்தவுடன் ஸ்ரீநிவாசன் அவரைப்பார்த்து முடிச்சை அவிழ்க்கச்சொல்ல அந்தப் பெண்கள் 'அவருக்கு முடிச்சவிழ்க்கத் தெரியாது. (முடிச்சவிழ்க்கி என்றால் திருடனென்றும் அர்த்தம்) தாத்தா அவிழ்த்திரா பார்த்துக்கொள்ளும் தொந்தி பத்திரம்' என்றுசொல்லி அவரை முடுக்கிவிட்டார்கள். (நெடுநாள் சிரமப்பட்டு சம்பாதித்த தொந்தியை இழக்க அவருக்கு இஷ்டமில்லை.) கொஞ்சநேரத்திற்கெல்லாம் முத்துஸ்வாமி அய்யரே வந்துவிட்டார். அவர் வந்தவுடனே நடக்கும்சங்கதியை கிரஹித்துக்கொண்டு ஸ்ரீநிவாசனுடைய குணத்தைக்கண்டு மகிழ்ந்து அவனிடம்வந்து முடிச்சை அவிழ்க்கவே அந்தப் பெண்களெல்லாம் 'அவிழ்க்காதேயுங்கள் மாமா, அவிழ்க்காதேயுங்கள் அப்பா' என்றுசொல்ல அவர் சிரித்துக்கொண்டு 'போல்லாதகுட்டிகள் அம்மா; பொங்கல் சாப்பிடவேண்டாமா, நாழிகையாகவில்லையா? என்ன பலமாபோட்டிருக்கிறாள் முடிச்சை, யாரடிபோட்டது,' என்று சொல்லிக்கொண்டே முடிச்சையவிழ்த்துவிட்டார். உடனே ஸ்ரீநிவாசன் தன் ஜாகைக்குப் புறப்பட்டான். அந்தப்பெண்கள் 'அறுத்துவிட்டதாம் கழுதை எடுத்துவிட்டதாம் ஓட்டம்' என்று சொல்லிக்கொண்டு அவனைவாசல்வரை துரத்திவிட்டு உள்ளே சிரித்துக்கொண்டு ஓடினார்கள்.

அன்று மத்தியானம் சாப்பாடானபிறகு ஸ்ரீநிவாசன் சுப்பராயனுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று ஒரு பெண் ஓடிவந்து 'இந்தா உன் பெண்டாட்டி காகிதங்கொடுத்தாள்' என்று சொல்லி, ஒரு கடிதத்தை அவன்மடியில் போட்டுவிட்டு ஓடிவிட்டாள். அதைஅவன் வெகு ஆவலுடன் எடுத்தான். அது முரட்டுக்காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது. வரிகள் வெகு கோணலாயிருந்ததுமன்றி எழுத்துகள் விகாரமாயும் பிழையாயுமிருந்தன. அதில் அடியில் வருகிறபடி எழுதப்பட்டிருந்தது:—

"நீ இன்னிக்கு வெடிக்காலம் அப்படித்தானா எம்மேலே இடிக்காது. அப்போ இடிச்சது எனக்கு இன்னம் வலிக்கிறது அழுகைகூட வருது பொம்மண்டாட்டி குட்டிகளை துமுரிக்கிண்டு ஓடப்படாட்டன்னை இடிக்கச்சொல்லிருக்கோ இன்னமே அப்படி இடிக்கப்படாது. எல்லா குட்டிகளுக்கும் எதெரக்க எங்கோடு பேசலாமா சீ இதுஎன்னலெட்சைக்கூத்து— "தல்லியாணி" (லெட்சுமியின் மறுபெயர்.)

இந்தக் கடிதத்தை ஸ்ரீநிவாசன் பார்த்தவுடன் அவனுக்குஒன்றும்சொல்லத் தோன்றவில்லை. அவன் கண்கள் கோபத்தால் சிவந்தன: உதடுகள் படபடவென்று துடித்தன: கைகள்பதறின இப்படிச்சிறிதுநேரம் ... பிறகுபெருமூச்சுவிட்டு சுப்பராயனைப்பார்த்து 'இதைப் பார்த்தாயா' என்றுசொல்லி அவன்கையில் கடிதத்தைஎறிந்தான். ஸ்ரீநிவாசன் படிக்கும்போதே கூடப்படித்த சுப்பராயன் மறுபடியும் அதைப்படித்துவிட்டு 'என்ன ஆச்சரியமாயிருக்கிறது, என்னதைரியம்' என்றான் ஸ்ரீநிவாசன் 'தைரியமட்டுமா' 'நீ, யாம் 'நீ' 'நீங்கள்' என்றுகூட எழுதக்கூடவில்லை. வயதுபோதாது. அவள் என்னபண்ணுவாள். ரொம்ப பலமாய் இடித்துவிட்டேன் அவளாயிருக்கக்கண்டு பொறுத்தாள் (கடிதத்தைவாங்கிக்கொண்டு) அழுகைவருகிறதாம். அழு உன்னைக்கல்யாணம் பண்ணியதற்காக உன்னைக்காட்டிலும் எனக்கு அதிகமாய் அழுகைவருகிறது'.

சுப்பராயன்.—அவள்தான் எழுதியிருப்பாள் என்று நினைக்கிறாயா?

ஸ்ரீநிவாசன்.—அவள் எழுதாமல்வேறேயாரோஎழுதவந்தார்களா? என்னதைரியம் நான் அவள் கையைப்பிடிக்குமுன் அவள் என்கையைப் பிடிக்கிறாள். எவ்வளவு துணிவு என்கிறாய்! யாரார் எவ்வளவு கொடுத்துவைத்திருக்கிறார்களோ அவ்வளவுதான் கிடைக்கும். ஆசைப் பட்டால் பிரயோசனமென்ன.

சுப்பராயன்.—சே! அவள் எழுதியிருக்கமாட்டாளடா. கம்பராமாயணம்முதல்வாசித்தவளுடைய எழுத்து இப்படியா இருக்கும். குட்டிகள்யாரோ இந்தசேஷ்டைபண்ணி யிருக்கிறார்கள். நான்சொன்னேன் என்று பாரேன்.

ஸ்ரீநிவாசன்.—நல்லது இருக்கட்டும். லச்சைக்கூத்தா. அப்படியா. என்னைப்பார்த்தால் பொருட்டாய் தோன்றவில்லை.

சுப்பராயன் 'என்ன! நிச்சயமாய் அவள் இதை எழுதவில்லையென்று நான்தான் சொல்லுகிறேனே. அவள் முகத்தைப்பார்த்தாலே தெரியவில்லையா? குட்டிகள் யாரோ எழுதியிருக்கிறார்கள். அப்புறம், தன்னைப்போலதெரியும். நீதான் அவளைக்கேளேன்.' என, ஸ்ரீநிவாசன் 'இன்னும் அவளுடன் பேசிவிடவும் வேண்டுமோ?" என்று கண்ணீர்விட ஆரம்பிக்கவே சுப்பராயன் அவனைத் தேற்றஅவன் தேறியிருந்தான். மறுநாளும் அன்றுபோலவே எல்லாப்பெண்களும் அவனுடன் உல்லாசமாய் விளையாடினார்கள்.

அவன் தூங்கிக்கொண்டிருக்கும்போது அவன் நெற்றியில் சுண்ணும்பையும் விளக்கெண்ணெயையும் குழைத்து நாமம் போட்டுவிட்டு அவன் இலையில் உட்கார்ந்து பரிஷேசனம் செய்யும்வரை வாயை மூடிக்கொண்டிரு[illegible] கொல்லென்று சிரித்துப் பரிகாசஞ்செய்து விளையாடினார்கள். ஆனால் ஒருவராவது காகித சங்கதியைப்பற்றிச் சொல்லவேயில்லை. அது ஸ்ரீநிவாசனுக்கு ஒருவிதத்தில் வருத்தத்தை உண்டுபண்ணினாலும் அவர்களுக்கு அந்த அசந்தர்ப்பமான கடிதம் காட்டப்படவில்லையென்ற எண்ணம் அவனுக்கு சிறிது ஆறுதலைக் கொடுத்தது.

மறுநாள் ஸ்ரீநிவாசன் சாப்பிடும்போது, சிற்சிலர் தவிர ஏறக்குறைய எல்லாப்பெண்களும் ஒருமித்து நின்றாலும் அவனுடன் ஒருவராவது பேசவில்லை. அதில் ஏதோ விசேஷமிருக்கிறதென்று கொஞ்சம் மனதில் பயமிருந்தாலும் விளையாட்டாய்க் கேட்பவன்போல் 'ஏது இன்றைக்கு என்னம்மங்காள் முதலிய எல்லோரும் பேசாமடந்தையாயிருக்கிறது?' என ஒருத்தி 'உன்னுடன் என்ன விளையாட்டு; நாளைப் பொழுதுவிடிந்தால் நீ எங்கேயோ நாங்கள் எங்கேயோ' என்றாள். மற்றொருத்தி பெருமூச்செறிந்து 'நீதான் எங்களையெல்லாம் விட்டுவிட்டு ஊருக்குப்போகிறாயே, உன்னுடன் என்ன பேச்சு வைத்திருக்கிறது' என்றாள். மற்றொருத்தி 'இந்த இரண்டுமூன்று நாளும் எவ்வளவோ சந்தோஷமாய் விளையாடிவிட்டு நாளை எப்படிப் பொழுது போகும் என்று இப்பொழுதே ஏக்கமாயிருக்கிறது. இவ்வளவுதான். எத்தனைநாள்தான் சந்தோஷமாயிருக்கிறது' என்றாள். இப்படி எல்லாரும்தான் ஊருக்குப்போகிற விஷயத்தைக்குறித்து உண்மையான விசனத்தை வெளியிட ஸ்ரீநிவாசனுக்கு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே தன்னறியாமல் கண்களில் ஜலம் வந்துவிட்டது. அடக்கஅடக்க அதிகமாய் விசனம் மேலிட்டது. அவன் கண்ணீர் விட்டதைப்பார்த்து அவனுடன் விளையாடின ஸ்திரீகள் எல்லாரும் விம்மிவிம்மி அழ ஆரம்பித்தார்கள். அங்கிருந்த கிழவிகளில் சிலர் 'நன்றாயிருக்கிறது கல்யாணமும் இதுவுமா அழுகிறதைப்பாரடி, அடி பைத்தியக்காரக் குட்டிகளா' என்று கோபிக்க, அவர்கள் ஒருவர்ஒருவராய் முகத்தில் துணிபோட்ட வண்ணமாய் அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டார்கள். ஸ்ரீநிவாசனும் சாதத்தை அப்படியே வைத்துவிட்டு மூக்கைச் சிந்திப்போட்டு கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளியே சென்றான்.

கல்யாண விமரிசையைப்பற்றி விஸ்தரிப்ப தனாவசியம். ஜனங்கள் காலைமாலை வெளியே போகும்போது வரும்போதெல்லாம் 'இவ்வளவு சிறப்பான கல்யாணம் கண்டதுமில்லை கேட்டதுமில்லையப்பா. அடடா பேஷ், என்ன விமரிசை, என்ன விதரணை,' என்று கொண்டாடிய வண்ணமாய் இருந்தார்கள். அந்தப் பிரபஞ்சமுழுவதும் முத்துஸ்வாமி அய்யருடைய கீர்த்திமயமாயிருந்தது. நாலைந்து டிப்டிகலெக்டர்கள், பத்துபதினைந்து தாசீல்தார்கள், இருபது முப்பது சிரஸ்ததார்கள், நாற்பதைம்பது ஸப்-மாஜிஸ்ட்ரேட்டுகள், நூறு நூற்றைம்பது கோர்ட்டுஉத்தியோகஸ்தர்கள் இருநூறு முந்நூறு குமாஸ்தாக்கள், ஐந்நூறு அறுநூறு வைதீகர்கள் என்றிவ்விதம் ஆயிரக்கணக்காய் நாநாவித ஜனங்களும் கூடியிருந்தார்கள். முன்னமே சொல்லப்பட்ட பெரியவைத்தி' ராகவய்யர்முதலிய வித்வான்கள்தவிர தற்செயலாய் அந்தபிரதேசத்திற்கு வந்திருந்த தஞ்சாவூர் சமஸ்தான வைணீகர் (வீணை வாசிப்பவர்)மகா வித்வான் சல்லகாலி (தென்றற்காற்று) கிருஷ்ணய்யவரவர்களும், ராஜதானி முழுவதும் பிரக்கியாதிபெற்ற ராமதாஸ் விகடகவியும் கல்யாணத்திற்கு வரவழைக்கப்பட்டார்கள். பெரிய வைத்தியும் ராகவய்யரும் போட்டிபோட்டுப் பாட ராஜலெட்சுமி யாட கிருஷ்ணய்யர் வீணைவாசிக்க ராமதாஸ் விகடம்செய்ய முத்துஸ்வாமி அய்யருடைய கல்யாணப்பந்தல் தும்புருநாரதர் பாட ஊர்வசி திலோத்தமையாட ஆனந்தமயமாய் விளங்கும் தேவேந்திரசபைக்கு சமானமாயிருந்தது. அங்கிருந்த ஜனங்களோ 'உடம்பொடு துறக்க நாடுற்றவரையு மொத்தார்' என்றபடி சரீரத்துடன் தேவபோகத்தையடைந்தவர்களை யொத்தார்கள். தங்களுடைய கவலைகளையும் கஷ்டங்களையும் மறந்து 'ஆஹா ஆமாம் ஆமாமாம் அப்படித்தான் அப்படித்தான், நிஜந்தான், அடடா, அப்பப்ப, பேஷ், பேஷ்,' என்றிப்படிச் சொல்லித் தன்னறியாமல் சிரக்கம்பம் கரக்கம்பம் செய்வதே அங்குவந்திருந்த சகலருக்கும் தொழிலாக இருந்தது.

"பரித்த செல்வ மொழியப்படரு நாள்
அருத்தி வேதியர்க் கான்குல மீந்தவர்
கருத்தி னைசைக் கரையின்மை கண்டிறை
சிரித்தசெய்கை நினைந்தழுஞ் செய்கையாள்"

என்றபடி ஸ்ரீராமர் கொடுத்தும் திர்ப்தியடையாத வைதிகர்கள் கூட இந்தக் கல்யாணத்தில் 'உமக்கென்ன தட்சணை, உமக்கென்ன தட்சணை,' என்று ஒருவரைப்பார்த்து ஒருவர் பல்லை இளித்துக்கொண்டு ரஹசியமாய்க்கேட்டு 'நல்ல தட்சணை, நல்ல மனசு, மகாராஜனாயிருக்கவேணும்' என்று ஆசிர்வதித்து சந்துஷ்டியடைந்தார்கள், என்றால் கல்யாணத்தின் சிறப்பு எப்படி இருந்திருக்கவேண்டாம். பாடகர்கள்



பிரமானந்தமாகப் பாட, விகடகவி மகா உல்லாசமாக விகடம்செய்ய, திருவாரூர்த்தேவடியாள் வெகு மனோரஞ்சிதமாய் ஆட, பிராமணோத்தமர்கள் தங்களுடைய நீண்ட கழுகத்தில் ஆறுமாதத்திற்குப் போதுமானஜலத்தை சேகரித்து வைத்துக்கொள்ளும் ஒட்டகங்களைப்போல ஒருவருஷத்திற்குக் காணும்படியான போஜனத்தை சுதாவாக சப்திக்கும்படியான தங்களுடைய கடவாத்தியங்களாகிய தொந்திகளில் சேர்த்துவைத்துக் கொள்பவர்கள்போல போஜனம் செய்தார்கள். அவர்கள் போட்டிபோட்டு, வாயில்லாப் பிராணிகளாகிய வாழைப்பழம் வடை போளிமுதலிய பண்டங்களை பகாசுரன் பீமசேனன் இவர்களைப்போல் துவம்சம் செய்ததையும், அனுமார் யுத்தகளத்தில் ராட்சதர்களைக் கலக்கியது போல போஜனகாலத்தில் கையில் அகப்பட்டதையெல்லாம் கசக்கிச் சின்னாபின்னம்பண்ணிப் போன இடம்தெரியாமல்செய்து அட்டகாசம் செய்பவர்கள் போல, ஏப்பம்விட்டு கர்ச்சித்ததையும், சாப்பிட்ட சிரமந்தீர மணலில் கிடந்துபுரளும் மதயானைகளைப் போலப் புரண்டதையும் முத்துஸ்வாமி அய்யர் இவர்களுடைய வயிறுகளாகிய அக்கினிகுண்டங்களைச் சலியாது சந்தோஷமாய் வளர்த்ததையும் இன்னும் அந்தப் பிரதேசம் முழுவதும் கதைகதையாகச் சொல்லுகிறார்கள். இவ்விதமாக எல்லாவித சனங்களையும் திர்ப்திசெய்த முத்துஸ்வாமிஅய்யர், ராஜசூயயாகம் செய்து கிடைப்பதற்கரிய 'சம்ராட்' என்ற பட்டம் பெற்றுசிறப்புற்றிருந்த தருமபுத்திரமகாராஜாவைப் போல் விளங்கினார். சந்திரனுடைய கிரணங்கள் நாலாபக்கமும் பரந்து ஏழை பணக்காரன் பாலன் விருத்தன் பிராமணன் சூத்திரன் ஸ்திரீ புருஷன் முதலிய எல்லோருடைய உள்ளத்தையும் பட்சபாதமின்றி குளிரச்செய்வதுபோல முத்துஸ்வாமிஅய்யருடைய தர்மமும் கீர்த்தியும் எங்கும்பரந்து எல்லாரையும் சந்தோஷிப்பித்தது.

(இன்னும்வரும்.)

பி. ஆர். சிவசுப்பிரமணிய ஐயர், பி. ஏ.

---

## கனவு.

நமது வாழ்நாளில் ஏறக்குறைய சரிபாதி உறக்கத்தில் செலவழிகிறதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். கடிகாயந்திரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் சீர்படுத்த எப்படி எண்ணெய் தடவுகிறோமோ, அப்படியே பகலில் வேலைசெய்து தவித்த நமது அவயவங்களுக்கு, மறுநாள் வேலை செய்யத்தக்க திறம் கொடுப்பதற்குத் தூக்கமென்னும் தெய்வீகமான தைலம் வேண்டியிருக்கிறது. நாம், அத்தூக்கமென்னும் சாகரத்திலமிழ்ந்தியின்புற்றிருக்கையில், நற்கனவுகள் கண்டுகளிப்பதும், துர்ச்சொப்பனங்கள் கண்டு துயருறுவதும் சகஜமாகையால், அக்கனவுகள் எத்தன்மையவென்ச் சற்றுயோசிப்போம்.

நமது மூளையிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் வெவ்வேறுகாரியங்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றதென்பது சரீரசாஸ்திர விற்பன்னர்களுடைய அபிப்பிராயம். சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்பவைகளையறிய அமைக்கப்பட்டிருக்கிற வெவ்வேறு பாகங்கள் தமக்கேற்றவேலை பகலிலிராவிட்டால், சோர்வடையாமல், இரவில் சுறுசுறுப்புள்ளவைகளாகின்றன. இந்தஸ்திதியில், புலப்படக்கூடிய மிக நுண்ணியனவான சப்தம் முதலிய அறிவுகள் நன்றாயும் மிகத்தெளிவாயும் மூளையில் படுகின்றன. இதற்கு உதாரணமாக கார்பண்டர் (Carpenter) என்னும் வெள்ளைக்காரசாஸ்திரி பின்வரும் கதையைக்கூறுகிறார். "ஒரு இங்கிலீஷ் சேனாபதி தன் மனைவியுடன், யுத்தகளத்தில் சிப்பாய்களடித்திருந்த கூடாரங்களினடுவே யடிக்கப்பட்ட இரண்டு கூடாரங்களில் தாம் ஒன்றிலும் தம்மனைவியொன்றிலுமாகத் துயிலமர்ந்திருந்தார். நடு இரவில் அவர் மனைவி கனவுகண்டு பயந்து கதறினாள். சேனாதிபதி போய் என்னவென்றுகேட்கையில், அவள், தான் உறங்குகையில் அனேக *கவந்தங்கள் வந்து "உன் புருஷன் என்னைக்கொன்றானே இருக்கட்டும் சொல்லுகிறேன்" என்று விகாரமுகத்தோடும் குதித்து ஆடியதாகச்சொன்னாள். சேனாதிபதி இதில் ஏதோ கிருத்திரம மிருக்கவேண்டுமென்று, அவள் படுத்திருந்த இடத்தில் 10, 15, அடி ஆழம் தோண்டச் சொல்லிப்பார்க்கையில் அங்கே சில பிணங்கள் கிடப்பதைக்கண்டார்." இதன் காரணமென்ன? அவ்வளவு ஆழத்திலிருந்த பிரேதக்கட்டைகளுக்கும் இவளுக்கும் என்னசம்பந்தம்? என்பதை மேற்சொன்ன சாஸ்திரி மிகச் சுளுவாய்த்தெளிவிக்கிறார். இரவில், அவள் மூளையின் மணமறியும் பாகம் மிகச் சுறுசுறுப்புள்ளதா யிருந்திருக்கவேண்டும். ஆகையினால் அவ்வளவு ஆழத்திலிருந்த பிணங்களின் மணம் அவள் மூளையில். நன்றாய்ப் பதிந்திருக்கவேண்டும். அதும[illegible] இக்கனவுக்குக்காரணம்" பிரத்தியக்ஷமான இக்காரணத்தையொப்புக்கொள்ள [illegible] க்ஷேபனை என்ன இருக்கிறது? இங்ஙனமே [illegible] பந்தலை சரியான தேக உழைப்பில்லாமலிருந் "ஐயர்மீர்! கலி பாலும் இரவில் கனவுகாண[illegible]கிட்டிவிட்டது; மன[illegible]வர இதுதான் ஏற்றகாலம்,

* குறைத்தலைப்பிணத்தைபேரும் "ஆம், நன்று, நன்று

இல்லாதிருந்தால்இரத்தம் மூளையில் நன்றாய்ப்பரவி அதைச் செழிப்பிக்காமற்போக, மூளையின் உறுப்புகள் மழுங்கிப் பகல்முழுவதும் சோர்ந்துகிடந்து இரவிலும் உறங்காமல் கனவையுண்டாக்கும்.

சிலர் படுக்கையில் முகத்தையும்கூடச் சால்வைகளால் நன்றாய் மூடிக்கொண்டு உறங்குவார்கள்; அவர்கள்விடும் சுவாஸமெல்லாம், அக்காரணத்தால், அந்த மூட்டத்தினுள்ளேயேயடங்கி, மறுபடியும் அவர்கள் மூக்கின்வழியே செல்லுகின்றது. இதனால் அவர்கள் மூளைக்குத் துன்பமுண்டாகிக் கனவுகள் விளைகின்றன. இதுநிற்க, வேறுசிலர் சரீரத்தை மூடாமலே படுத்துறங்குவார்கள். தேகத்தை மூடவில்லையே பூச்சி பொட்டுகள் வந்து கடிக்குமோ என்ற எண்ணம் மனதில் எப்பொழுது உதித்ததோ அப்பொழுதே அவர்கள், தேள், விரியன் முதலிய கொடும்பிராணிகள்வந்து கடிப்பதாகக் கனவுகண்டு புலம்புவார்கள் என்பது திண்ணம். படுக்கையை நன்றாய்த்தட்டி வெயிலிலுலர்த்தாவிடில் உறக்கம் சரியாய்வராது. நடு இரவில் தூக்கம்வராது போனாலும் சரி, அல்லது கனவுகண்டு எழுந்தாலும்சரி, உடனேயெழுந்து சற்றுநேரம் நடந்து உலாத்தியபின், படுக்கை காற்றாடியவுடன் வந்து படுத்துக்கொண்டால் மிகநலம். எழுந்திருந்து நடக்கமுடியாதபடி யலுப்பாயிருந்தால், வேறு படுக்கையில் சற்றுப்படுத்திருந்தபின், பழைய படுக்கைக்குவந்து உறங்கலாம். இப்படிச்செய்கிறதனால் கனவுகள் வராது, தூக்கமாகிய பேரின்பத்தையனுபவிக்கலாம்.

கனவிலுள்ள, முக்கியமான விஷயமென்னவெனில், நாம் முன்னால் ஒருதரமேனும் பார்த்திராத சங்கதிகள் கனவில் தோன்றுவது மிகத் துர்லபம். பரீக்ஷைக்குப்படிக்கும் மாணாக்கர்கள் அதே கருத்தாய்ப் படித்துக்கொள்வதனால், பரீக்ஷையில்போய் எழுதுவதுபோலவும், பரீக்ஷை தேறிவிட்டதுபோலவும் கனவுகண்டு களிப்பது உண்மை. சுவாமிக்குக் கோரிக்கைசெய்துகொண்டவர்கள், அத் தெய்வங்கள், இரவில் பயங்கர உருவத்தோடுவந்து பயமுறுத்துவதுபோல் கனவுகண்டு மருள்வதுண்டு. சுப்பிரமணியசுவாமிக்கு வேண்டிக்கொண்டவர்கள் கனவில் பாம்பு வருவதுபோல் காண்பது இந்நாட்டில் சகஜமாயிருக்கிறது. சுப்பிரமணிய சுவாமியின் தைவ... ங்களில் பாம்பையும் கூடச்சேர்த்திருப்பதத்தை அ... இக்கனவு காண்கிறார்கள் என்பது நிச்
ப்போட்டு கன...
யே சென்றான்.
கல்யாண விமரிசையைப்பூாகிற காரியங்களைப்பற்றி
சியம். ஜனங்கள் காலேமாலே வென்ற ஜனங்களுடை

ய பூரண நம்பிக்கையைப்பற்றி இங்கே எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. என்றாலும்,

“தக்க சகுனமுஞ் சாமுத் திரியமுஞ்சொல்
மிக்கவச ரீரிகளு வென்றைந்தும்—இக்கலியில்
கூடினும்கை கூடிவரும் கூடா விடிலொருகால்
வீடினும் வீடி விடும்.”

என்ற பெரியோர் வாக்கின்படியே கனவில்காணும் சங்கதிகள் ஒருகால் பலித்தாலும்பலிக்கும் இல்லாவிட்டால் பொய்க்கும் என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

**யூ. எஸ். இராமசுவாமி அய்யர்.**

## பொறுமைமனையாள் மாசிலாமணி.

சோழநாட்டில் காவிரியாற்றின் கரையருகேயுள்ள முத்தரசனல்லூரென்பது ஓர் சிற்றரசன் வாழுமூர். அங்கே அரசாண்டவர்களுக்குள் முத்தரசனென்பவன் மேலானவன். முத்தரசன் பருவமடைந்தபின் தன்தந்தையின் நியமனப்படி முடிசூடிஅரசுபுரிந்துவந்தான். அவன் எப்போதும்வேட்டையாடுவதிலும், குடிகளைப் பாதுகாப்பதிலும் அதிக நாட்டமுடையவன். அவன் யாது காரணத்தினாலோ வெகுநாளளவும் மணஞ்செய்துகொள்ளாமலேயிருந்தான். அவன் அறிவாற்சிறந்த பெரியோனாதலால் அவனோடு இதுவிஷயத்தைப்பற்றி யாரும் பேசத்துணியவில்லை. தொன்றுதொட்டு வந்த வம்சம் அவனோடு பாழ்த்துவிடுமேயென்று எல்லோருந் துக்கித்தார்கள். இதை அரசனுக்கு எடுத்துக்காட்டாமல் அப்படியே சும்மாயிருக்கலாகாதென்றெண்ணிக் குடிகளெல்லோரும் ஒன்றுகூடி, “ஐயனே! உமது காலத்துக்குப்பின்பு எங்களை யாள்பவர் யாவர்? நீர் இன்னும் மணம்புரிந்துகொள்ளாதிருப்பதென்னே? எங்களுக்கு அனுமதி கொடுப்பீராயின் உமது மரபிற்கேற்றவண்ணம் உயர்குடியிற்பிறந்த நல்ல பெண்ணைத்தேடி உமக்கு மணஞ்செய்விப்போம். உம்மோடு உமது வம்சம் அற்றுப்போமாயின், எள்ளுந்தண்ணீரும் வார்க்க ஒருவருமின்றி உமது பிதுருக்கள் அதோகதியையடைவார்களன்றோ” எனறு பலவாறாக எடுத்துச்சொன்னார்கள்.

அதற்கு அவ்வரசன், “நண்பரே? நீங்கள் சொன்னவற்றையெல்லாம் நான் அறியாதவனல்லன். ஊசியும் சரடும் ஒருவழிச்செல்வதுபோலக் கணவன் கருத்திற்கிணங்கி நடக்கும் பத்தினிப்பெண் கிடைப்பது எளிதாமோ? தன் குணத்திற்கு ஏலாத குணமுடைய பெண்ணைமணந்து என்னபயன்? இவ்வுலகில் தீப்பெண்டிரை மணந்து உள்ளநாளுள்ளமட்டும் துன்பறுபவர் கோடியின் மிக்கவரன்றோ? நீங்கள் இவற்றையெல்லா மறிந்திருந்தும் இப்படிச் சொல்லுவது தகுமோ? தாய் தந்தையரைப்போலவே மக்களுமிருப்பார்களென்று துணிந்து சொல்லுவதெப்படி? நான் நல்லோன் அல்லது தீயோனென்பதை என்னெஞ்சறியுமேயன்றிப் பிறரால் அறிவது எளிதாமோ?



ஆயினும், நான் மணஞ்செய்துகொள்ளவேண்டுமென்று நீங்கள் மிக்க விருப்பமுற்றிருக்கின்றீர்களாதலால் உங்கள் கருத்திற்கிணங்கி அந்தக்கட்டுக்கு உட்படுகிறேன்; ஆனால் உங்களை நான் வருந்திக் கேட்டுக்கொள்ளுவ தொன்றுண்டு:—பிறராலன்றி நானே பெண்ணைத்தேடி மணந்துகொள்ளும்படி நீங்கள் சம்மதிப்பீர்களாயின் பின்பு அந்தப் பெண்ணினிடத்தில் எக்குற்றமிருப்பினும் அதற்காக உங்கள்மேற் குற்றங்கூற இடமிராது. நான் தேடி மாலையிடுபவள் எக்குடிப்பிறந்தவளாயிருப்பினும் என் மனங் கோணுதபடி அவளை நீங்கள் கௌரவப்படுத்தல் வேண்டுமென்றான்.

அதற்கு அவர்கள், இந்தமட்டுமாவது அரசன் சம்மதித்தானேயென்று பேருவகைகொண்டு “எங்கோவே! எந்தவிதத்தினாலாவது நீர் விவாகஞ்செய்துகொண்டு உமது வம்சம்விளங்கினாற்போதும்” என்றார்கள்.

முத்தரசனல்லூருக்குச் சமீபத்திலுள்ள முருங்கைப்பேட்டைக் குடித்தெருவிலே குடிசைகட்டிக்கொண்டிருந்த வீரண்ணக்கோனான் மகளாகிய மாசிலாமணியென்பவளிடத்தில் பத்தினிக்குண மனைத்தும் ஒருங்கே குடிகொண்டிருக்கிறதென்று அரசனுக்குத் தெரிந்திருந்ததனால் அவன் அவளையே தனக்கு வாழ்க்கைத் துணையாக்கவேண்டுமென்று நிச்சயித்திருந்தான். ஆதலினால் அவன் பெண்தேடுவதற்காக எங்கும்போகாமல் முருங்கைப்பேட்டைக்குச் சென்று அவள் தந்தையையழைத்துத் தன்கருத்தை வெளியிட, அவன் உடனே அதற்கிணங்கி, கன்னிகாதானத்திற்காக அவனுக்கு நிச்சயதாம்பூலங்கொடுத்தனுப்பினான். முத்தரசன் காவிரியாற்றின் கரையோரமாயுள்ள நூறுகிராமங்களுக்குத்தலைவனாதல் பற்றித் தன்கீழ்வாழும் கிராமாதிபதிகள் நூற்றுவரையும், மந்திரிமார், பெரியோர், சுற்றத்தார் முதலானவர்களையும் தன்னூருக்கு வரவழைத்துச் சபைகூட்டி அந்தச்சபையைநோக்கி:—

“அன்பர்களே! நான் மணம்புரிந்துகொள்ளுவதில் உங்களெல்லோர்க்கும் பூர்ணசம்மதமென்று காண்கின்றது; இப்பொழுதும் ஸர்வஜன ஸம்மதமான காரியத்துக்கு வேறாகச்செய்வது நியாயமல்லவென்றெண்ணித்தான் நானும் சம்மதித்தேன்; நானே பெண்தேடுவதில் உங்களுக்குஞ்சம்மதமென்றும் சொன்னீர்கள்; நீங்கள் எனக்கு முன் அவ்வாறு அளித்த வாக்கை மறக்கவொண்ணாது; எனக்கு வாழ்க்கைப்படுகிறபெண் எவ்வளவுதான் இழிந்தகுலத்திற் பிறந்தவளாகவிருப்பினும் அதையெண்ணாமல் அவளை எனக்குப் பட்டத்தரசியாகப்போற்றி அவளுக்கு வந்தனைவழிபாடுகள் செய்யவேண்டும்; என் மனதிற்கேற்ற ஒரு பெண்ணணங்கை மணம்புரிய நிச்சயத்திருக்கிறேன்; அவளுக்காகக் கட்டமுதுகொண்டு காதம் பதின்காதம் பயணம்போகவேண்டுவதில்லை; உங்களுக்கு இஷ்டமிருந்தால் அவளை இன்னுஞ் சிலநாள்களுக்குள் எனது அரண்மனைக்கழைத்துக்கொண்டு வருகிறேன்; ஆதலால் நீங்கள் முன்பே எனக்குச் செய்திருக்கிற வாக்குதத்தத்தை மறவாமலிருக்கும்படிக்கும், அரசர்கள்செய்யும் கலியாணத்திற்குவேண்டிய ஏற்றங்கள் ஒன்றிலும் தாழ்வின்றிக் கலியாணத்தை விமர்சையாய் நடத்தும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறேன்” என்றான்.

இவ்வாறு அரசன்சொல்லக்கேட்ட அத்தனை பேரும் பேரானந்தங்கொண்டு, “அரசர்பெருமானே! நாங்கள் முன்செய்த தவப்பயனாலேதான் இன்றுநீர் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி மணம்புரியச் சம்மதித்தீர்; உமது பெருமைக்கேற்றவண்ணம் ஒன்றாயினுங் குறைவின்றி விவாகத்தை நடத்துவிப்பது எங்களைப்பொறுத்தது; நீர் மணம்புரியக்கருதியிருக்குமவள் எவளாயிருந்தாலும் அவளை நாங்கள் எங்கள் குலதெய்வம்போலெண்ணி ராஜமஹிஷியிலும் பதின்மடங்குமேலாக மதிப்போம்” என்று சொல்லி ஆனந்தபரவசர்களாகிக் கைகொட்டி ஆர்ப்பரித்தார்கள். பின்பு சிலநாளிற்குள்ளே அந்தக்கலியாணத்திற்கு வேண்டிய பந்தல் படிமுதலானவை அழகுபெறச் செய்யப்பட்டன. முத்தரசன் மற்றுமுள்ள அரசர்களுக்கும், தன்சுற்றத்தார், பெரியோர் முதலாயினோர்க்கும் கலியாணவோலை யனுப்பினான். அவ்வரசன் தன் மனைவிக்கேற்றபடி விலையேறப்பெற்ற ஆடையாபரணங்களையெல்லாங் குறைவறச் செய்வித்தான்.

முத்தரசன் கலியாண முகூர்த்தத்தன்று காலையில் அரசர் முதலானோரால் நிறைந்திருந்த பந்தலையடைந்து எல்லோரையும்பார்த்து, ‘ஐயர்மீர்! கலியாணஞ்செய்யும் நல்லோரை கிட்டிவிட்டது; மணமகளை இங்கே அழைத்துவர இதுதான் ஏற்றகாலம்,’ என, அவர்கள் அத்தனைபேரும் “ஆம், நன்று, நன்று

உமக்கு வாழ்க்கைப்படுகிறவளை நீர் இக்கணமே சென்று முகூர்த்தத்திற்குமுன்பே அழைத்துக்கொண்டு எழுந்தருளவேண்டும்" என்று ஒரேவாக்காகச் சொல்லக்கேட்டுத் தனது பரிவாரங்களெல்லாம் தன்னைப் புடைசூழ அந்தப்பெண் வாழுமூராகிய முருங்கைப்பேட்டைக்கு விரைந்துசென்றான். அங்கே அரசன்செல்லும் காட்சியைக் காணுமாறு ஊரிலுள்ளார் எல்லோரும் திரைதிரையாக நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அன்று தான் செய்யவேண்டிய தன் வீட்டுவேலைகளையெல்லாஞ் செய்துவிட்டுக் காவிரிக்குச்சென்று தலையில் தண்ணீர்க்குடத்தோடுவந்த மாசிலாமணியும் அந்தவேடிக்கைபார்க்கும்படி நின்றாள். அரசன் அவளைக்கண்டு, 'மாசிலாமணியே! உன்தந்தை இப்பொழுது எங்கிருக்கிறார்?', என, அவள் நாணி, 'என்னாண்டவனே! வீட்டிலிருக்கிறார்' என்றாள்.

உடனே அரசன் தன்பரிவாரத்தையெல்லாம்அங்கே அழைத்துக்கொண்டுபோய், தான்மட்டும் அவன் குடிசைக்குட்புகுந்து "வீரண்ணக்கோனாரே! உமக்கு ஆண்டவன் அருள்புரிவாராக; உமதுபெண் மாசிலாமணியை எனக்கு நீர் கன்னிகாதானஞ் செய்துகொடுப்பீரா? ஆயினும் முந்தி நான் உமது முன்னிலையில் அவளைக்கேட்டுக் கொள்ளவேண்டிய தொன்றுண்டென, அக்கோபாலன், என்கோவே! இதற்கென்ன தடையென அவன் அவளைநோக்கி "மாசிலாமணியே! நான் உன்னை மணம்புரிந்துகொள்ளுகிற பக்ஷத்தில் நீ நான்சொன்னவண்ணஞ்செய்து பொறுமையாயிருப்பாயோ'வென, அவள் 'என்னையாள்பவனே! உமது திருவாக்குக்கு எதிர்வாக்கு என்று முரையேன்; என்னிடத்தில் சிறிதேனும் வஞ்சனையில்லாமல் கடவுள் எனக்களித்திருக்கும் சக்தி எவ்வளவோ அவ்வளவுமட்டில் கண்ணுங்கருத்துமாக வருந்தியுழைக்கத் துணிவுற்றிருக்கிறேன்' என்றாள்.

அவன் இவ்வாறு மொழிந்த உறுதிமொழியைக் கேட்டு, அவள் கையைப்பிடித்துக் குடிசையினின்றும் அவளை வெளியே யழைத்துவந்து, அவள் உடுத்திருந்த உடையைக் களையச்சொல்லித் தான் கொண்டுவந்திருந்த சித்திரப்பூம் பட்டாடைகளைக்கொடுத்து உடுத்திக்கொள்ளச்சொல்லி முத்துமாலைமுதலிய விலைபெற்ற அணிகளையணிந்து நவரத்தினமயமான முடியைத் தானே தன்கையால் அவள்தலையிற்சூட்டி, *"மாசிலாமதியே! நீ என்னை உன்கொழுநனாக ஏற்றுக்கொள்ளலாமோ" வென, அவள் நாணி முழந்தாளிட்டு நமஸ்கரித்து, 'கருணைக்கடலே! ஏழைமகளாகிய என்மீது உமக்கு இத்தனைகிருபையிருக்கின்றதே; என்னை மணம்புரிய உமக்குச் சம்மதமானால் எனக்கோதடை?' என்ன, அவன் முறுவலித்து அவளுக்கு முத்தந்தந்து, பெண்ணணங்கே! இன்றுமுதல் நீ எனக்குப் பத்தினியானாயென்று துணி' என்றுசொல்லி அவளுக்கென்று கொண்டுவந்திருந்த ரதத்தின்மேல் அவள் கையைப் பிடித்தேற்றி அவளைத் தன் அந்தப்புறத்துக்கு அழைத்துக்கொண்டு போனான்.

அந்தக்கலியாணம் சக்கிரவர்த்தியின் மகளைக்கலியாணம் செய்வதைப்போலச் சிறப்பாகவிருந்தது. மாசிலாமணி நற்குணநற்செய்கைகளை யுடைய உத்தமியாதல்பற்றி அவள் சிறந்த ஆடையாபரணங்களை யணிந்தமாத்திரத்தில் தெய்வமகள்போலிருந்தாளாதலால் அவளைக் கோபாலர் வீட்டுப்பெண்ணென்று நினைப்பதற்கிடமின்றி யாரோ பரம்பரையான பிரபுவின் மகளென்றெண்ண வேண்டியதாயிற்று. இதுவுமன்றி அவள் கணவன் எள்ளென்றால் எண்ணெயாயிருந்தாள். அவளை மணந்ததுமுதல் அவ்வரசன் இம்மைப்பயன்யாவையு மொருங்கேபெற்றுத் தனக்கு இணையாவார் ஒருவருமில்லையென்னும்படி புகழ்பெற்று வாழ்ந்தான்.

அவள் தன்கணவனைத் தன்னுயிரினும் மேலாக எண்ணியதுமன்றி, அவன் கீழ்வாழுங் குடிகள் அனைவோரின் க்ஷேமத்திலும் மிக்க நாட்டமுடையவளாயிருந்தாள். இதனால் அவளது பெருங்குணத்தைக் கண்டு அவள் பூர்ணாயுள்பெற்று வாழ்ந்திருக்கவேண்டுமென்று எல்லோரும் அவளுக்காகக் கடவுளைத் தோத்திரஞ்செய்யத் தலைப்பட்டார்கள். அரசன் தானாகவே மனைவியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்னபோது அதற்காக அவன்மீது குற்றங்கூறினசிலரும் தாம் நினைத்தது தவறென்று கண்டு அவனது பெருந்திறத்திற்காக அவனைக் கொண்டாடத்தலைப்பட்டு, பெரியோர் சிறியோர் ஆவதற்கு முறையே செம்மையும் வறுமையுங் காரணமல்ல; சிறுகுடிசிலுள்ளும் பெரியோரிருப்பர்; பெரிதான எழுநிலைமாடத்தினுள்ளும் சிறுமைக்குணமுடையாரைக் காணலாகுமென்று கண்டுகொண்டார்கள். இவ்வாறாக அவள்புகழ் சிறிதுநாளிற்குள்ளேயே நாடெங்கும் பரந்து, தெய்வபக்தி, கொடை, புரு

* மாசிலாமதி=மாசு+இலா+மதி; இது குற்றமில்லாத அறிவினையுடையவளென்றாயினும், களங்கமற்ற சந்திரனைப்போன்ற முகத்தினை யுடையவளென்றாயினும் பொருள்படுமாதலின் முத்தரசன் தன் ஆசைக்கண்ணாட்டியை மாசிலாமணியென்று அழைப்பதுமட்டும் போதாதென்றெண்ணி இப்படி யவள் பேரைக் கடையிற்சிறிது மாற்றிப் பேராலே அவளது அறிவும் அழகும் இனிது விளங்கும்படி வேறு பெயரிட்டழைத்தான் போலும்.



ஷபக்தி, தயை, சாந்தமுதலிய நற்குணங்களில் மாசிலாமணியை யொப்பவ ரில்லையென்று சொல்லும்படியாயிற்று.

அவள் முதலில் ஒருபெண்ணைப்பெற்று அந்தப் பெண்ணுக்கு நான்கு வயதானபின்பு மறுபடியும் கர்ப்பமாகிப் பத்துமாதஞ்சென்றதும் வமிசம்விளங்கும்படி ஓர் ஆண்மகவைப்பெற்றாள். ஐந்தச்சுந்தன்னைப்போல உருக்கி வார்த்தாற்போன்ற புத்திரனைக்காணவே அரசனுக்குண்டான ஆனந்தத்திற்களவில்லை. அரசன் தனது மனையாளுடன் நன்றாகப்பழகி அவளுடைய உத்தமகுணங்களனைத்தும் அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும், அவளது பொறுமையை இன்னமுஞ் சோதித்தறியவேண்டுமென்றெண்ணி, அவள் மனது புண்படும்படி அவளைத் தன்வாயில்வந்தபடி கூசாமல் வையப்புகுந்தான்; அவளைக்கண்டால் எரிந்துவிழுவான்; இழிகுலத்திற்பிறந்து கல்வியறிவு சிறிதுமில்லாத பெண்ணைக் கொண்டதற்காகத் தன்னையாவரும் இகழ்ந்துபேசுவதாக அவளோடு சொல்லித் துன்புறுவான்; பிச்சையெடுப்பவரிலும் இழிவானவன் வீட்டுப்பெண்ணைக்கொண்டு அவளுக்குப் பெண்ணும் பிறந்துவிட்டது; பிள்ளையும் பிறந்தது; அந்தப்பிள்ளை பட்டத்துக்குவந்துவிட்டால் தங்களுக்கு அதைவிடப்பெரிதான மானக்கேடு வேறென்னவென்று ஊரார் தன்னை வெறுப்பதாகச் சொல்லுவான்; இத்தனையையும், மாசிலாமணிகேட்டும், தாமரைமலர்போன்ற அவள்முகத்தில் சிறிதாயினும் வாட்டங் கொடுக்கவில்லை. அவள் அவனுக்கு வெறுப்புண்டாகும்படி ஒன்றையுஞ்செய்யவுமில்லை. ஒருநாள் அவள் மெள்ள அரசனண்டைசென்று, "மகாபிரபுவே, கருணைமணாளா! உமது கௌரவத்துக்குக் குறைவுவராமலும், பிறர் நிந்தைக்குப் பாத்திரமாகாமலு மிருத்தற்பொருட்டு என்னை நீர் எப்படிச்செய்தாலும் செய்துகொள்ளலாம்; அது எனக்குச்சம்மதமாகவே யிருக்கும்; அதெப்படியென்பீராயின் உமது நாட்டில்வாழும் குடிகளெல்லோரிலும் நான் கடைப்பட்டவளென்பது எனக்குத் தெரியாததன்று; அல்லாமலும் உமது பெருந்தன்மையையும் அடியேனது இழிந்ததன்மையையும் பார்த்தால் மேருவரையோடு அணுவை ஒப்பிடுவதுபோலாகும்" என்றாள்.

அரசன் அவளுடைய உள்ளக்கருத்தை அறிவதற்காக இப்படிச்சொன்னானாதலால் அவள் சொன்ன மதுரமொழியைக்கேட்டு நெஞ்சாரக் களித்து அவனுக்கு முன்னிருந்ததிலும் அவளிடத்தில் அதிக அன்பும் ஆதரவுமுண்டாகித் தன்னுள்ளே அவளைக் கொண்டாடிக்கொண்டு மேலுக்குமட்டும் இன்னமும் கொடியவன்போலவே காட்டினான். பின்பு ஒருநாள் அவளை நேரில் வரவழைத்து, "உனக்குப் பெண்பிறந்திருப்பது எனது நாட்டாருக்குச் சிறிதேனும் சம்மதமில்லையென்றான். அப்புறம் இரண்டொருநாட் கழித்து அவன் அவளண்டை ஒரு ஏவலாளனை அனுப்ப, அவன் ராஜமகிஷியிடஞ்சென்று, "தாயே! எங்கள் ராஜாவின் ஆக்கினையைச் சக்கிரீவாக்கினையென்றெண்ணும்; நான் என்ன செய்வேன்; மாட்டேனென்றால் என் தலைபோய்விடுமென்பது மெய்; உமதுபெண்ணை உம்மிடமிருந்து வாங்கிக்கொண்டுபோய்......" என்றுசொல்லி வேறு வார்த்தை சொல்லமாட்டாமல் நாக்குழறி மனந்தடுமாறி நின்றான். அரசன் இதற்குமுன்பே தன்னோடு நேரில் சொன்னதும், இப்பொழுது நடத்தப்போகிறதும் வேறாகவில்லையென்று கொண்டு, தன் அருமைச் செல்வியை அரசன் ஆணைப்படியே அவன் கொலைபுரிதற்பொருட்டே கொண்டுபோகும்படி வந்திருக்கிறானென்றெண்ணி புளிச்சென்று தொட்டிலண்டைபோய் அதிற் கண்வளர்ந்த தன்குழந்தையையெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்துகடவுளைவாழ்த்தி ஆசிகூறினாள். பெற்றதாயாதலின் அப்பொழுது அவள் மனம் அழலிலிட்ட இழுதுபோலுருகியதென்றாலும் அவள் அதைரியப்படாமல் தன்குழந்தையை அந்த வேலையாளனிடங்கொடுத்து, "நண்பனே! குழந்தையிந்தாபிடி; உனக்கும் எனக்கும் இறைவனாகிய மகாராஜா இட்ட கட்டளைப்படி நீ செய்; ஆனால் அரசன் உன்னோடு சொல்லியிருந்தாலல்லாமல், பறவைகள், விலங்குகள்முதலியன தின்னும்படி கண்டவிடத்திலே போட்டுவிடாதிருத்தல் வேண்டும்" என்றாள்.

அவன் அந்தக்குழந்தையை அவளிடமிருந்து வாய்திறவாமல் வாங்கிக்கொண்டு அரசனிடங்கொடுத்து அவள் சொன்னதையெல்லாம் அவனோடு சொன்னான். அரசனுக்குத் தன்மனைவி சொன்னதைக் கேட்டு அங்கம்பூரித்தது. அவன் அந்தக்குழந்தையை அவன் கையிலேதானே கொடுத்து புதுக்கோட்டையிலிருந்த தன் தமக்கையாரிடம் ஒப்புவித்து, இது இன்னார் குழந்தையென்று உண்மையைவெளியிடாதிருக்கவேண்டுமென்றும், குழந்தையைவளர்த்துப் பாதுகாத்துக் கல்வியறிவைப் புகட்டுவது அவளைப் பொறுத்தகடனென்றும் அவளோடு சொல்லிவிட்டு வரும்படி அனுப்பினான்.

அவன் முன்செய்ததெல்லாம் போதாதென்று இன்னமும் அவள்மனதைச் சோதிக்கவெண்ணங் கொண்டு அவளை இவ்வளவென்று கணக்கில்லாதபடி யேசிக்காட்டி வாயிலே வந்தபடியெல்லாம்வரம் புகடந்து வைது சீறுமாறென்றெரிந்து விழுந்தான்.

பின்பொருநாள் அவளை நோக்கி, 'நீ இவ்வழகிய மகனைப்பெற்றது எனக்குப் பேருவகைதான்; ஆயினும் என் காலத்திற்குப்பின்பு ஏழையிடையன் பேரன் தங்களையாளுவது தங்களுக்கு இழிவென்றெண்ணி என்னைப் பகைக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பகை முற்றுமாயின் அவர்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து என்னை ராஜபதவியினின்று தள்ளிவிடுவார்களாகையால் அதற்கு முன்னேயே நான் இந்தப்பிள்ளையை முன்போலவே செய்துவிட்டு அப்புறம் சிறிது காலங்கழித்து உன்னையும் துறந்துவிட்டு, அவர்களிஷ்டப்படி இன்னொருத்தியை மணம்புரியலாமென்றிருக்கிறேன்' என்றான்.

மாசிலாமணி அவன் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுச் சற்றாயினும் முகக்கோட்டமின்றி, 'மகா பிரபுவே, என் பிராணநாதா! அடியேனுக்காக நீர் ஒன்றும் விசாரப்படவேண்டாம்; நானோ பேதை; நான் தரித்திரன் வீட்டுப்பெண்; என்னிமித்தம் உமது கவுரவத்துக்குக் குறைவுவேண்டாம்; நீர் நன்றாயிருந்தால் அதுதான் எனக்கு இன்பம்' என்றாள்.

பின்பு சற்றுநேரத்திற்குளெல்லாம் அரசன் தான் முன்னே ராஜகுமாரியை அழைத்துவரும்படி அனுப்பிய பணியாளையே ராணியிடம் அனுப்பி, அந்தப்படியே ராஜகுமாரனையும் அழைத்துக்கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அவன் அரசியிடஞ்சென்று, முன்னே பெண்ணைக்கொடுக்கும்படி கேட்டவாறே அந்தப் பிள்ளையையும் தன் கையிற்கொடுக்கும்படி கேட்க, அவளும் முன்போலவே செய்து குழந்தையையெடுத்து அவன் கையில்கொடுத்தாள். அங்கே நடந்ததை அரசன்கேட்டுத் தனக்கு வாய்த்திருக்கின்ற பத்தினியைப்போன்றவள் இப்புவியில் ஒருவருக்கும் இராளென்று கண்டு தன்னுளேமகிழ்ந்து ஒருடம்பு ஈருடம்பானான். தான் அவளை அத்தனை தூரம் கொடுமைப்படுத்தியதைக் கண்டு அவன் அதிக துக்கப்பட்டான். கோடிதவம் செய்தாலும் பெறுதற்கரிய தனது இன்னுயிர் மக்களை அவளிடமிருந்து நீக்கியதைப்பற்றி அவளுக்குச் சொல்லவொண்ணாதுக்கமுண்டு.

அரசன் தன் மக்களைக் கொன்றுவிடச் சொன்னானென்றே எல்லோரும் எண்ணி அவனைக் கொடும்பாவி என்று கூசாமற் சொல்லப்புகுந்தார்கள். அவன் மந்திரி முதலானோர் அருந்ததியைப் போன்ற கற்புடைப் பெண்டிராகிய மாசிலாமணி படும்பாட்டைக்கண்டு பரிதபித்தார்கள். மாசிலாமணி அரசியோவெனின் தன் கொழுநனைத் தனக்குத் தெய்வமாகவெண்ணி, யாருடனும் தன் குறையைச் சொல்லவில்லை. யாரேனும் அவளைக்கண்டு அரசன்செய்த கொடுந்தொழிலைப்பற்றிச் சொல்லத் துணிந்தால் அவள் பொறுமையோடு, "அம்மா! என் மக்களிடத்தில் எனக்குள்ள பற்றிலும் என் கொழுநற்குள்ள பற்று அதிகம்" என்று சொல்லுவாள்.

இப்படிச் சிலகாலம் சென்றபின்பு, புண்ணிலே கோலையிடுவதுபோல அவ்வரசன் தன் மனையாளை இன்னமும் சோதிக்கத்துணிந்து, தன்னருகே இருந்தவர்களைப்பார்த்து, "என் மனைவியை இனிமேல் ஒரு கணநேரமாயினும் என்னோடிருக்க உடன்படேன்; நான் ஆராயாமல் அவளை மணம்புரிந்து பல்லோர்பழிக்குப் பாத்திரமானேன்; சிறுமைப்பருவத்திலே அறியாமல் செய்ததனால் அது இப்படிவிளைந்தது; தர்மசாஸ்திரப்படி இந்த விவாகம் செல்லமாட்டாதென்று எங்கள் குலகுருவாகிய கோடி கன்னிகாதானம் தாத். த. தேசிகாசாரியரும் எனக்கு ஸ்ரீமுகம் அனுப்பியிருக்கிறார்" என்றான். இதைக்கேட்ட அத்தனைபேரும் ஏகோபித்து அவனைக் கடிந்துகொண்டதையும் அவன் கேளாமல் தான் பிடித்தபிடியையே பிடித்தான்.

இவ்வாறு அம்பலத்தில் நடந்ததெல்லாம் மாசிலாமணி செவிக்கெட்டினபோது அதற்காக அவள் சற்றாயினும் மனம் சலிக்கவில்லை; தன் தந்தைவீட்டிற்குத் திரும்பிப்போய், அங்கே தான் பாலியமுதற்செய்து வழக்கப்பட்டிருந்தபடியே மாடுகளுக்குப் புல்லைபோட்டுப் பாலைக்கறந்து காய்ச்சித்தோய்த்துக் கடைந்து வெண்ணெயெடுத்தல் முதலிய பல வேலைகளைச்செய்து, வயதில் முதிர்ந்தவர்களான தன் தாய்தந்தையர்களுக்குத் துணையாகலாமென்று எண்ணினாளேயல்லாமல் தனக்குப் பிராணனுக்குப் பிராணனாகவிருந்த கணவன் இப்படிக்குத் தன்னை இடையே கைவிட்டு நெஞ்சுதுணிந்து மற்றொருத்தியோடு இல்லறம்புரிய விருப்பமுற்றானேயென்று எண்ணி வாட்டங்கொள்ளவில்லை.

பின்பு அரசன் தன் மனையாளைத் தன் சபைக்கு வரவழைத்து, "பெண்ணே! நான் உன்னை விவாகஞ்செய்தது சாஸ்திரப்படி செல்லமாட்டாதென்றும், நான் வேறொருத்தியைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்றும் அறிந்தோர் சொல்லுகிறார்கள்; எனக்குமுன்னே அரசாண்ட எனது மூதாதைகளெல்லோரும் பெரும்புகழ் பெற்றவர்கள்; அவ்வளவு மேன்மையானகுலத்திலே பிறந்த நான் இழிகுடியிற் பிறந்த உன்னை மணம்புரிந்தது எனது பெருமைக்கு முற்றும் பொருந்தாததே; ஆதலினால் நான் நீ கொண்டுவந்த பெரிதான சீதனத்துடன் இன்று உன்னை உன் தந்தைவீட்டிற்கு அனுப்பிவிட்டு, இதற்குமுன்



பே நிச்சயித்திருக்கிற உயர்குடியிற் பிறந்த ஒருத்தியை மணம்புரியப் போகிறேன்" என்றான்.

அரசன் இவ்வாறு மொழிந்ததை அவள் கேட்டமாத்திரத்தில் அவள் துன்பக்கடலில் ஆழ்ந்தவளானாலும் தனது நெஞ்சத்திட்பத்தினால் கண்ணீரைப் பெருக்காமல் அவனைப் பார்த்து, "வேந்தர் பெருமானே! நான் ஒன்றும் பெருமைபாராட்டவில்லை; உமது பெருமைக்கும் அடியேனது சிறுமைக்கும் எவ்வளவோ ஏற்றத்தாழ்வுண்டு; நான் முன்பிறப்பிலே செய்திருந்த தவத்தினால் உம்மை மணந்து இத்தனைகாலமாக இன்புற்று வாழ்ந்திருக்கும் பாக்கியத்தைப் பெற்றேன்; இவ்வளவுமட்டுக்குந்தான் உம்மிடத்தில் வாழக்கொடுத்துவைத்திருந்தேன்; இனிமேல் நான்முன்னிருந்த பழய இருப்பைத் திரும்பிப் பெறவேண்டும்; நீர் என்னை மாலையிட்டு மணந்தகாலத்தில் என்கைவிரலில் அணிந்த கணையாழி இது; இதை நீர்வாங்கிக்கொள்ளும்; நான் கொண்டுவந்த சீதனத்தை என்வீட்டுக்குத் திரும்பிக்கொண்டுபோவென்று சொன்னீர்; நான் சீதனங்கொண்டுவந்திருந்தாலல்லவோ போகையில் கொண்டுபோகவேண்டும்? வேந்தர்பெருமானே! நான் பிறந்தகத்தினின்றுவரும்போது உடுத்திருந்த பிறந்தகத்தாடையையும் களைந்துவிட்டு நீர் கொடுத்தகூரையை உடுத்துவந்ததை என்றும் மறவேன்; இத்தனைகாலமாக உம்முடனிருந்து உம்மிடத்தில் இரண்டுகுழந்தைகளைப் பெற்ற இந்த உடம்பின்மானத்தைக் காக்கவேண்டுமென்று உமக்கு இஷ்டமிருந்தாலன்றி எனக்கு அம்மணத்தோடுபோகவும்சம்மதமே; ஆயினும் இத்தனைகாலமாக வேறொருவன் முகத்தைப் பாராமல் பதிவிருத்தியத்தைக் காத்துவந்த என்பொருட்டு மனமிரங்கி என்னை நீர் நிர்வாணமாக அனுப்பாமல் கலியாணத்தின்போது கொடுத்த மண உடைகளில் கட்டிக்கிழிந்த கந்தை ஒன்றை யுடுத்துக்கொண்டு போகும்படி சம்மதிப்பீராயின் நான் விசாரமின்றிப் புறப்பட்டுப்போவேன்" என்றாள்.

முத்தரசன் தன் ஆருயிர்க்காதலி இவ்வண்ணஞ் சொன்னதைக்கேட்டு வெளிக்குமட்டும் அவள்மீது மிக்க கோபமுடையவன்போலக் காட்டி, "நீ போகலாம்; யாரடாவன், இவளுக்குக் கந்தற்புடவை ஒன்றைமட்டும் கொடுத்து இவளைத் துரத்திவிடு" என்றான். அங்கிருந்தவர்களெல்லாரும் அவளைக் கண்டு பரிதபித்து, "வேந்தே! உமக்கு வாழ்க்கைப்பட்டுப் பதின்மூன்று வருஷகாலம் உம்மைவிட்டு இணைபிரியாமல் தேனும் பாலும்போலிருந்த இந்த உத்தமியை இக்கோலம் காண்பதோ உமது பெருந்தன்மைக்கு அழகு" என்று சொல்லியும் அவன் செவியிற்படவில்லை; அவள் அந்தக் கந்தைத்துணியைக் கட்டிக்கொண்டு வெயிலில் அள்ளுதுள்ளாடும்புழுதியில் கால்கொப்புளிக்க நடந்து தன்பிறந்தகத்தை யடைந்தாள்.

வீரண்ணக்கோனான் தனக்குத் தகாதவிடத்தில் பெண்ணைக் கொடுத்ததுமுதல் அவனுக்கு அதுவே விசாரமாகி அரசன் என்றிருந்தாலும் ஒருநாள் தன் மகளை யோட்டிவிடுவானென்றெண்ணி, மாசிலாமணி புக்ககம்போன அன்று அவள் களைந்துவிட்டுப் போன ஆடையை அவன் எடுத்து பத்திரமாக வைத்திருந்தானாகையால், அவள் வீட்டிற்குவந்தவுடனே அவன் அதையெடுத்து அவள்கையிற்கொடுத்து உடுத்திக்கொள்ளச்சொன்னான். அவளும் தான் முன்செய்த வேலைகளையெல்லாம் முன்போலவே செய்யப்புகுந்து, இடையிலே சிறிதுகாலம் குபேரஸம்பத்தில்மூழ்கி இருந்ததை ஒருவாறு மறந்திருந்தாள்.

முத்தரசன் புதுக்கோட்டை அரசன்மகளைக் கலியாணம் பண்ணிக்கொள்ள நிச்சயித்திருப்பதாகச் சொல்லி எங்கும் பறையறைவித்தான். கலியாணத்தை ஆடம்பரமாகச் செய்தற்பொருட்டுப் பலரை அதற்கென்றே நியமித்தான். அரண்மனையை அலங்கரித்து வந்தவர்களெல்லோரையும் உபசரிப்பதற்கு ஒருத்தருமில்லையென்று முருங்கப்பேட்டைக்கு ஆளனுப்பி மாசிலாமணியை அழைத்துவரச்சொன்னான். அவள்வந்ததும் அவன் அவளைப்பார்த்து, "நான் நிச்சயித்திருக்கிறபெண் இன்னுஞ் சில தினங்களுக்குள்ளே இவ்விடம் வரப்போகிறாள்; அவளை ஏற்றமாக உபசரித்து அவளுக்கு விமர்சையாய் விருந்திடவேண்டுமென்று எண்ணியிருக்கிறேன்; அரண்மனையில் கோலமிட்டுச் சிங்காரித்து வைப்பதற்கு உன்னைத்தவிர்த்துப் பெண்துணை எனக்கு வேறொருவருமில்லையென்பது நீ யறியாததன்று; ஆனதினாற்றான் உன்னை இங்கேநான் வரவழைக்கும்படியாயிற்று; நீ இங்கிருந்து பழகியிருக்கின்றதினால் உனக்கு எல்லாம் நன்றாய்த் தெரியுமென்று இப்படிச் சொன்னேனாதலால் எந்தெந்தப்பண்டங்களை எப்படி எப்படி வைத்து யார்யாருக்கு எப்படி மரியாதை செய்யவேண்டுமோ அப்படிச்செய்வது உன்னைப் பொறுத்த கடன். ஆனதினால், புருஷர்களாயிருந்தாலும் சரியே, பெண்களாயிருந்தாலும்சரியே, யார் யார் கலியாணத்துக்கு வரத்தக்கவர்களென்று நீ எண்ணுகிறாயோ அவர்களெல்லோரையும் அழைப்பது உன்னைச் சேர்ந்தது; அதுவரைக்கும் நீ இந்த வீட்டுக்குச் சீமாட்டியென்றெண்ணிக்கொள்; கலியாணமாகி மஞ்சள்நீர் விளையாட்டானவுடன் நீ மீண்டும் உன்தகப்பனார் வீட்டுக்குப் போகவேண்டும்" என்றான்.

இம்மாற்றத்தைக் கேட்கையில் அவளுக்கு ஊன்தோய்கணை மார்பிற்பட்டு அப்புறஞ் செல்லுவது போலிருந்ததென்றாலும் பொறுமையோடு; "ஐயனே! குலமகட்குத் தெய்வம் கொழுநனாதல்பற்றி எனக்கு எவ்வளவு இடர்வந்துற்றாலும் உமது திருவாணையின்படியே நடப்பேனாக" என்று சொல்லிவிட்டு, தன்தகப்பன்கொடுத்த ஆடையையுடுத்தினபடியே பணிப்பெண்ணைப்போல வீடுவாசல்களெல்லாம் தானாகப்பெருக்கி மெழுகிக்கோலமிட்டு வாழைகமுகுகள் நாட்டுவித்து முகூர்த்தத்துக்கு எல்லோரையும் அழைத்துவிட்டு அந்த உடையோடு அவர்கள் அத்தனைபேரையும் அகமலர்ச்சி முகமலர்ச்சியோடு பந்தலில் உபசரித்துக்கொண்டிருந்தாள்.

முத்தரசன் புதுக்கோட்டைக்குத் தன் சகோதரியினிடம் அனுப்பியிருந்த பெண்ணையும் பிள்ளையையும் அழைத்து வரும்படி முன்னே அவர்களைக்கொண்டுபோய்விட்டவனையே அவ்விடத்திற்கு அனுப்பியிருந்தான். அந்தப்பெண்ணுக்கு இப்பொழுது பன்னிரண்டு பிராயமும், பிள்ளைக்கு ஆறுபிராயமுமாயிற்று; அவர்கள் முகத்தில் பால்வடிந்து அழகு சொட்டியதைக்கண்டு பெண்ணுக்குச் சுந்தரவல்லியென்றும், பிள்ளைக்கு வடிவழகிய நம்பியென்றும் அத்தைவீட்டார் காரணப்பேரிட்டழைத்தார்கள். சுந்தரவல்லியை அரசன் மகளென்று தெரியாதிருத்தற்பொருட்டு, அவள் புதுக்கோட்டை ராஜாவின்மகளென்றும், அவளைத்தான் அரசன் கலியாணஞ்செய்துகொள்ளப் போகிறானென்றும், அந்தச் சிறுவன் அவளோடுகூட வருகிறவர்களின் எவளோ ஒருத்தியின் குழந்தையென்றும் யாருமெண்ணும்படி புதுக்கோட்டையிலிருந்து நேரே உறையூருக்கு அழைத்துக்கொண்டுவந்து வைத்திருக்கச்சொன்னான். முத்தரசன் தனக்குக் குழந்தைப்பருவந்தொட்டே நண்பனும் அடுத்தவூர் அரசனுமாகிய கம்பரசன் முகூர்த்தத்தன்று காலையில் உறையூருக்கு எதிர்கொண்டு சென்று அவர்களை அழைக்கவருவானென்றும் அவனோடு சொல்லியிருந்தான். எல்லாம் ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. கம்பரசன் உறையூருக்குச்சென்று சுந்தரவல்லியையும், அவளோடுவந்தவர்களையும் உபசரித்து கலியாணப்பந்தலுக்குள்ளே அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். மாசிலாமணியோவெனின், மணமகள் பந்தலிற்குள்ளே நுழையும்போதே ஸந்தோஷமாக எதிரேசென்று மஞ்சணீர்சுற்றி அவளைச் சிவிகையினின்றிறக்கி யழைத்துவந்து மனையில் உட்காரச்சொன்னாள். அங்கிருந்த சீமாட்டிகளெல்லோரும் மாசிலாமணியை வீட்டிற்குள்ளே போயிருக்கும்படியாயினும், அவள் பந்தலிலிருக்கவேண்டுமானால் நல்ல ஆடையை உடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் நிர்ப்பந்தித்தார்கள். யாரென்னசொல்லியும் அவள் கேட்கவில்லை. பந்தலிலிருந்தவர்களெல்லாரும் மின்னற் கொடிபோலிருந்த அந்தச் சுந்தரியின் வடிவழகைக்கண்டு, அரசன் நல்ல பெண்ணைத் தேடிக்கொண்டு வந்தானென்று அவனைப் புகழ்ந்தார்கள்; மாசிலாமணி அதிரூபலாவண்ணியமுள்ள அந்தப் பெண்ணின் அழகையும், அவளுக்கருகே உட்கார்ந்திருந்த இளங்குமரனது வடிவழகையுங்கண்டு மனமுவந்தாள். அந்தச்சிறுவனும் சிறுமியும் புதுக்கோட்டையில் அவர்கள் ஒரு வீட்டிலே வளர்ந்தார்களேயாயினும் ஒரு தாய்வயிற்றிற்பிறந்தவர்களென்று அவர்களுக்குங்கூடத் தெரியாமலே வைக்கப்பட்டிருந்தது.

அரசன் பொறுமையில் தன்மனைவி மாசிலாமணியை ஒப்பாவார் ஒருவருமில்லையென்று கண்டு ஆனந்தக்கடலிலாழ்ந்தான். அவன் இனிமேலும் இப்படி அவளைப் பரீக்ஷைசெய்வது கொடுமையாகுமென்றும், தனக்கு அவளிடத்திலுள்ள காதலை எல்லோருமறியும்படி வெளியிடவேண்டுமென்றுமெண்ணி அவளைநோக்கி, "நான் மணம்புரியவேண்டிக்கொண்டு வந்திருக்கிற இந்தப்பெண்ணைப்பற்றி உனக்கென்ன தோற்றுகிறது" என, அவள், "என் இறைவ! இந்தப் பெண்ணைப்பார்க்கையில் எனக்குப் பேரானந்தமுண்டாகிறது; இவள் அழகுக்கேற்றவண்ணம் இவளுக்குக் கல்வியறிவுமிருக்கப்பெற்றால் இவளைக் கலியாணஞ்செய்யப் போகிறவராகிய உம்மைப்போல பாக்கியசாலி இப்புவியில் எங்குமிரார்; இதுவிஷயத்தில் நான் உம்மைப்பணிந்து கேட்டுக்கொள்ளுவதென்னவெனில், நீர் முன்னிருந்த மனைவியை வைததுபோல இவளை வையாதிருக்கவேண்டும்; ஏனெனில், இவளிடத்தில் அவ்வளவு பொறுமையிருக்குமென்று நானெண்ணவில்லை; அன்றியும், இவள் சின்னஞ் சிறுபெண்; கஷ்டநிஷ்டூரங்களை இவளது அருமைத்திருமேனியால் தாங்கமாட்டாளென்றெண்ணுகிறேன்; முன்னிருந்தவள் நாட்டிலே பிறந்து, பிறந்தநாள்முதல் வேலைசெய்தவண்ணமாயிருந்தவள்" என்றாள்.

அரசன் அவளுக்கு இன்னமும் இவள் தன் மகளென்று தெரியவில்லையென்றும், அவளைத் தான் மணஞ்செய்துகொள்ளப்போகிறதாகவுமேயெண்ணியிருந்த மாசிலாமணியைத் தன் அருகே அழைத்து "அன்புடையாளே! நீ பொறுமையில் பூமிக்கு நிகராவாய்; இவ்வளவுகாலமாக உன்விஷயத்தில் என்னைக் கொடியனென்றும் கடுமொழிகூறுவோனென்றும், மரியாதை தெரியாதவனென்றும் சொன்னவர்கள் இனி அப்படி நினைக்கமாட்டார்கள்; ஏனெனில், இவ்வுலகத்திலுள்ளார்க்கு நல்ல மனைவி எப்படியிருத்தல்வேண்டுமென்று காட்டுதற்பொருட்டாகவே இப்படிச்செய்தேன்; நான் உன்னைப்படுத்துவித்த பாட்டுக்கும் ஆட்டுவித்த கூத்துக்கும் அளவுண்டோ? இத்தனைகாலமாக நான் நாடறிய உனக்குச்செய்து வந்த துன்பங்களையெல்லாம் நீ ஒரு கணப்பொழுதிற்குள்ளே மறந்துவிடப்போகிறாய்; உன் கண்ணான குழந்தைகளை உன் கையினின்று பறித்துக் கொண்டுபோய் உன்னைக் கலங்கச்செய்தது பெருங்குற்றமே; எனக்கு வாழ்க்கைப்படும்படியாக இங்கே வந்து நிற்கிற வடிவழகி யாரென்று உனக்குத் தெரிகிறதா? பேதாய்! இவளைக்கட்டியணைத்துக்கொண்டு இவளுக்கு முத்தங்கொடு; இவள்தான் நமது செல்வமகள் பூங்கோதைப்பிராட்டி; இவள் பக்கத்தில் நிற்கிறானே இவன்தான் இவளுக்குப்பின் பிறந்த நமது செல்வச்சிறுமகன் விக்கிரமபாகு; இத்தனைநாளாக இவர்களிருவருங் கொலைசெய்யப் பட்டார்களென்றன்றோ எல்லோரும் சொல்லிக்கொண்டிருந்தார்கள்; பெண்பாவாய்! இப்புவியில் இப்பொழுது உயிரோடிருப்பவர்களுக்குள் என்னைப்போலச் சிறந்த மனைவியையுடையவன் எவனுமிரான்" என்று சொல்லி அவளை இருகைகளாலும் கட்டியணைத்து முத்தமிட்டு ஆனந்தபாஷ்பம் பெருகநின்றான். மாசிலாமணி தனக்கு இத்தனை ஆனந்தமுண்டானதைக் கண்டு அவ்வளவும் கனவோ நினைவோவென்று சங்கித்தாள்; அவர்களிருவரும் அங்கு வந்திருந்த தங்கள் மக்களைக்கட்டியணைத்துக் கண்ணீர்பெருக்கினார்கள்; அங்கேவந்திருந்த ஸ்திரீகள் மாசிலாமணியை அந்தப்புரத்துக்குள்ளே அழைத்துக்கொண்டுபோய் முன்னேயுடுத்திருந்த உடையைக் களையச்சொல்லி அவளுக்கு இழையாயிரம் பொன்பெற்ற சித்திரப் பூம்பட்டாடைகளைத் தாங்களேயுடுத்தி நல்லணிகளைப் பூட்டி பரிமளமலர்களைச் சூட்டினார்கள்.

பின்பு மாசிலாமணியைக் கொலுவுக் கழைத்துவர, முத்தரசன் அவளைத் தன்னோடு சிங்காதனத்தில் உட்காரச்சொன்னான். பூங்கோதைப்பிராட்டி, விக்கிரமபாகு ஆகிய அவர்கள் மக்களிருவரும் மந்திரிமுதலானோர் புடைசூழ்ந்து நிற்க அவர்களண்டை இடப்பட்டிருந்த ஆசனங்களில் உட்கார்ந்தார்கள். அன்று தொட்டு முத்தரசனல்லூர் பலநாளளவும் விருந்தும் வேட்டலுமாக விருந்தது. அதன்பின் அரசனை எல்லோரும் நல்லோனென்றும், அறிவாற்சிறந்த பெரியோனென்றுங் கொண்டாடினார்கள். அவன்செய்த கடினமான பரீக்ஷைகளெல்லாம் அருந்ததிக்குச் சமானமான மாசிலாமணியின் புகழை இவ்வுலகில் நிலைநிறுத்துவதற்கு ஏதுவாயிற்று. சிலநாட்கழித்து, கம்பரசன் தன்மித்திரனாகிய முத்தரசன்மகள் சுந்தரவல்லியைத் தன்மகன் பட்டாபிராமனுக்குப் பாணிக்கிரகணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அந்தக் கலியாணத்தை முத்தரசனல்லூரில் விமர்சையாய் நடத்தினார்கள். அரசன் தன் மாமனாரான வீரக்கோனான் முருங்கப்பேட்டை மந்தையில் இன்னமும் மாடுமேய்ப்பது நன்றாயிருக்கவில்லையென்றுகண்டு அவனுக்கு மிக்கபொருளைக்கொடுத்து, சுகமாக வாழ்ந்திருக்கும்படி ஸ்ரீரங்கத்துக்கு அனுப்பினான்.

இதனால் பொறுமை பெருமைதருமென்றும், கணவன் கருத்தின்படி நடப்பவளே காதல்மனையாளென்றும், மனையாளோடுகூடி வாழ்தலே நல்லறமென்றும், ஒருவன் பலரை மணம்புரிதல் கூடாதென்றும், நல்மனையாள்மட்டும் ஒருவனுக்கு வாய்ப்பாளாயின் அவனுக்கில்லாததொன்றுமில்லையென்றும், நன்மக்கட்பேறு பெரும்பேறென்றும், பதிவிருதாதருமமே பெண்களுக்கு அணிகலமென்றுங் காணலாம்.

"வழிபா டுடையளாய் வாழ்க்கை நடையாய்
முனியாது சொல்லிய செய்தாங்-கெதிருரையா
தேத்திப் பணியுமே லில்லாளை யாண்மகன்
போற்றிப்புனையும் புரிந்து."

"எப்பணியா லின்புறுவர் காதலர் காதலரை
யப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி-யொப்ப
மனங்குழையும் வண்ணம் மகிழ்விப்பதன்றே
கனங்குழையார் தங்கள் கடன்."

அன்பில் - ஸ்ரீவெங்கடாசாரியார்.

## கோல்பெர்ட் சரித்திரம்.

### துணிவியாபாரி கடையிலிருந்து முதல்மந்திரி ஸ்தானத்துக்கு வந்த வாலிபன்கதை.

### IV

'கோல்பெர்ட்' பாரிஸ் நகர்வந்துசேர்ந்ததும் அங்கே எல்லாம் அவனுக்குப் புதிதாக இருக்கக்கண்டான். அந்நகரின் விஸ்தாரமும், அங்கேயுள்ள கட்டடங்களின்பெருமையும், ஜனங்களின் கூட்டமும், எங்கு பார்த்தாலும் ஐசுவரியமும், அந்தஸ்தும், பெருமையும் நிறைந்து கண்ணுக்குநேர்த்தியாய் விளங்கிய காட்சிகள் அவன்மனதைக்கவர்ந்து அவைகளைப்பற்றி எண்ணுந்தோறும் அவன் சந்தோஷத்தால் தேகம் பரவசமாகும்படி செய்தன. அவைகளைக்கண்டு அவன் அடங்காமகிழ்ச்சியடைந்தானாயினும் அவன்

தன்வயதுள்ளவாலிபனைப்போல் அச்சந்தோஷத்தில் மூழ்கித் தலைதெரியாது தடுமாறிப்போகவில்லை. அவனைச்சுற்றியுள்ள சந்தோஷங்களை அவன் அனுபவிக்கவேண்டுமானால் அவனிடத்தில் பிரீதிவைத்த எஜமானன் அவனுக்கென்று குறிப்பிட்டு வைத்தவேலைகளை ஊக்கமுடன் செய்துவரவேண்டியது அவசியமென்பதை அவன் மறக்கவில்லை. ஆகையால் அந்தப்புத்திசாலியான பையன் தன்னைச்சுற்றி நடக்கும் எவற்றையும் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்து வருகையில் 'மெஸ்ஸர்ஸ் சின்ஞணி அண்ட் மாஜராண்' என்னும் பணவியாபாரக் கம்பெனியாருடைய 'பாங்கி' யில் ஒரு 'குமஸ்தா' வாகவுள்ள தனது தொழிலைச்சிறிதும் அலக்ஷியம்செய்யாது அவன் செய்யவேண்டிய கடமைகளையெல்லாம் வெகு நுட்பமாகக் கவனித்துச் செய்துவந்தான். அவன் இப்படி அதிக ஊக்கத்தோடும் சாமர்த்தியத்தோடும் அதன் வேலைகளையெல்லாம் பார்த்துவந்ததால் வெகு சீக்கிரத்தில் அவன் மதிப்பேறப்பெற்றவனானான். எவ்வளவு சிக்குமுக்கான கணக்குகளும் அவன் பரிசோதனைக்குத் தப்புகிறதில்லை. தன்னுடையதொழில் சம்பந்தமான விஷயங்களின் விவரங்களையெல்லாம் அவன் வாலிபதெசையிற்றானே கசடறக்கற்றுத் தேர்ந்தவனானான். அவனுக்குப் புருஷத்துவம் வந்ததும் அவன் பழுதறக்கற்ற அரசிறைக்கணக்கன் என்று பேர்வாங்கத் தக்கவனானான். அவன் கொள்ளல் கொடுத்தல் முதலிய பணவியாபார விஷயங்களையும் அரசிறைமுதலிய இராச்சிய சம்பந்தமான வரவுசெலவு கணக்கு விவரங்களையும் பழுதறப்பார்க்கும் சக்தியுள்ளவனாகவே, அந்தப்'பாங்கி'யில் வரவர அதிகப்பொறுப்புள்ள வேலைகளெல்லாம் அவன் பார்த்துவரும்படி ஒப்புவிக்கப்பட்டன. இப்படி வரவர உன்னதஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டுக் கடைசியில் அவன் அந்தக்'கம்பெனி'யின் வியாபாரத்தை விர்த்திசெய்வதற்காக வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம்செய்துவரும் 'ஏஜெண்டு' ஆக நியமிக்கப்பட்டான். இது மிகவும் பொறுப்புள்ளவேலை. இந்த வேலை தனக்குக் கிடைக்கவேண்டுமென்று அவன் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தபடி அவன் மனோரதமும் பலித்தது.

சிறுவயதுமுதல் கோல்பேர்ட்டுக்குக் கலைக்கியானங்களிலும் சாஸ்திரங்களிலும் பிரீதியுண்டு. அது இப்பொழுது சுற்றுப் பிரயாணியாக ஏற்பட்டபின் அதிக விர்த்தியடைந்து விளங்கியது. 'பிரான்ஸ்' தேசத்திலுள்ள மாகாணங்களையெல்லாம் ஒருமுறை அவர் (இனி நாம் அவரை மரியாதையாகப்பேசவேண்டும்) சுற்றுப்பிரயாணம் செய்துவந்தார். வருகையில் அங்கங்கேயுள்ள தொழில்கள் வித்தைகள் முதலியவற்றை விசாரித்து நோட்டம்செய்துகொண்டு வந்ததோடு வியாபாரத்தை விர்த்திசெய்வது அவர் முக்கியத்தொழிலாக இருந்தமையால் அதற்கேற்ற வழிவகைகளைக்கண்டுபிடித்து வியாபாரம் தழைத்தோங்கச்செய்யச் சூழ்ச்சிசெய்துவந்தார். வியாபாரவிர்த்தியார்த்தம் இந்த யாத்திரைகள் செய்து வருகையிலேதான் அவர் தேசக்ஷேம விர்த்திக்காக அநேக மகத்தான ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று உத்தேசித்தது. இப்பொழுது உத்தேசித்தவைகளையெல்லாம் பிந்தி அவர் முதல்மந்திரியாகவந்தபொழுது செய்வித்து நடத்தியதே அவர் துரைத்தனத்திற்குப்பெருமையும் பூஷணமுமாக இருந்தது. 1648-ம் ஞூ தமக்கு சுமார் 30 வயதாயிருக்கும்பொழுது அவருடைய சமீபபந்துவாகிய 'ஸென்புவேஜ்' என்பவர் அப்பொழுது இராஜாங்க காரியதரிசியாயிருந்த தம்முடைய மைத்துனர் 'லிடெலீர்'என்பவரின்கீழ்'கோல்பெர்ட் அவர்க'ளுக்கு ஒரு வேலை அமர்த்திக்கொடுத்தார். அப்பொழுது 'பிரான்ஸ்' தேசத்துக் கரசனாயிருந்த '14 - வது லூயி' குழந்தைப்பருவ முடையவராயிருந்தார். அவருடைய இளமைப்பருவத்தில் ஆஸ்திரியாதேசத்து ராணி 'அன்'என்பவள் அவருக்காக'பிரான்ஸ்'தேசத்திற்கு அதிபதியாக இருந்து ஆளுகை நடத்திவந்தாள். அந்த ராணிக்கு முதல்மந்திரியாயிருந்து துரைத்தனத்தை நடத்திவந்தவர் 'கார்டினல் மாஜரின்' என்பவர்.'கோல்பெர்ட்'இராஜாங்க காரியதரிசி'லிடெலீர்' என்பவருக்குள் வேலையிலமர்ந்திருக்கையில் அவரால் 'கார்டினல் மாஜரி' னுக்குப் பரிச்சயம்செய்துவைக்கப்பெற்றார். இந்தச்சமயத்தில் 'அன்' ராணி ஆளுகைநடத்திய காலத்திலுண்டாயிருந்த கக்ஷிப்பிரதிகக்ஷிகள் கபடச்செய்கைகளும் தந்திரோபாயங்களும் செய்து ஒருவரையொருவர் கெடுக்க யத்தனித்ததாலுண்டான கலகமதிகரித்திருந்தது. 'கார்டினல்' மாஜரின், மனுஷருடைய மாதிரியை யூகித்தறிவதில் மகாவல்லமைசாலி. அவர் 'கோல்பெர்ட்' அதிக சுருத்தோடு தன் வேலைகளைப்பார்த்துவருவதையுணர்ந்து அவருடைய உத்தமகுணங்களை யூகித்தறிந்து அவரை நன்குமதித்துவந்தார். இந்த சமயத்தில் 'கோல்பெர்ட்' தனக்கு உற்றவிடத்துதவியாகவிருப்பாரென்று யூகித்து அவரைத் தனக்குக் கொடுக்கவேண்டுமென்று 'லிடெலீரை' க்கேட்க, அவரும் அதற்கிணங்கினார். 'கார்டினல் மாஜரின்' 'கோல்பெர்ட்டை' ராஜாலோசனைசபையில் ஒருவராகச்சேர்த்து ராஜாங்கவிஷயங்கள் நடத்துவதில் அவரை எப்போதும் தனக்குத் துணையாக வைத்துக்கொண்டு வந்தார். 1649 - 50 - ம் வருஷங்களில் ஒரு யுத்தம் நேரிட்டது. அந்த யுத்தத்தில் கோல்பெர்ட் அதிக உற்சாகத்தோடு உழைக்கும் சுபாவமுடையவரென்று காட்டினதைக் கண்டுகொண்டு மாஜரின் அவர்பேரில் முழுநம்பிக்கைவைத்து எவ்வித ராஜாங்க ரகசியங்களையும் அவரோடு சொல்லி ஆலோசித்து வந்தார். இத்தருணத்தில் தேசத்தில் உட்பகை மிகுதியால் மாஜரின் பொதுஜன வெறுப்புக்கு ஆளானவராய் தலைநகரைவிட்டு நீங்கி 'கொலோன்' பட்டணத்தில் ஒதுங்கியிருக்க நேரிட்டது. அங்கிருந்து அவர் அதிரகசியமாக அன் ராணியோடு கடிதப் போக்குவரவு வைத்துக்கொண்டு தனக்கு வந்த பொல்லாத திசையைக்கழிக்கவேண்டி வந்தது. அப்பொழுது கோல்பெர்ட் ஒரு பெரிய பிரபுவின் புத்திரியை விவாகஞ்செய்துகொள்ள விருந்தார். அந்த சமயத்தில் மாஜரின் தலைநகரைவிட்டு நீங்கிப்போக நேரிட்டது கண்டு அவரில்லாத சமயத்தில் அவர் வீட்டுக் காரியங்களையெல்லாம் மேன்பார்வை செய்துகொண்டு அவருக்கும் அன் ராணிக்கும் நடந்த இரகசியமான கடிதப் போக்குவரத்துகளுக்கெல்லாம் இவரே காரியகருத்தராகவிருந்தார். இது மிகவும் நுண்மையாக யோசித்துச் செய்யவேண்டியவேலை. எதிலாவது அற்பப்பிசகு நேரிட்டால் தலைபோகும்படியான பிரமாதம் நேர்ந்துவிடும். அப்பேர்ப்பட்ட நுண்மையான விஷயங்களையெல்லாம் அதிக புத்தியுக்தியோடும் சமயோசித சாமர்த்தியத்தோடும் எள்முனை பிசகாமல் எல்லாவற்றையும் இசைவாக நடத்திவந்தார். இந்த ஆபத்து சமயத்தில்தான் இவருடைய யுக்திபுத்தி விசேஷமும், இவருடைய மனத்தின் குணமும் நன்றாகப் பிரகாசித்து விளங்கியது. கார்டினல் மாஜரின் அவருடைய கஷ்டதிசை நீங்கி மறுபடியும் முன்போல செல்வாக்குப் பெற்றவராய் பிரான்ஸ் தேசத்துக்குத் திரும்பி வந்தபொழுது கோல்பெர்ட் செய்த நன்மைகளையும் அவருடைய நற்குணங்களையும் மதித்து அவர் அவருடைய குடும்பத்தாருக்கு உபகாரமாயிருக்கும்படி செய்தார்.

கோல்பெர்ட்டுக்கு இப்படி அதிகாரமும் ஆதரவுமுண்டானபொழுது அவர் அவருடைய தகப்பனரை மறக்கவில்லை. அவரை 'பாரன்' என்கிற பிரபுப்பட்டத்திற்கு உயர்த்தி அவருடைய சக்திக்குத் தக்கபடி அவருக்கேற்ற அந்தஸ்துள்ள வேலையில் அவரை அமர்த்திவைத்தார். அவருடைய தாயாரின் தகப்பனர் ராஜாலோசனை சபையில் ஒருவராகச் செய்யப்பட்டார். இவர் பின்னால் அத்தேசத்து ஸிவில் சட்டங்களையெல்லாம் திரட்டிச் சீர்படுத்தி வைத்தார். அவருடைய சகோதரர் பலருக்கும் அவரவர் திறமைக்குத் தக்கபடி பற்பல உத்தியோகங்கள் பண்ணிவைத்தார். இப்படியாக ராஜசபையில் பேர்பெற்றுப் பெரியமனுஷனாக விளங்கிய கோல்பெர்ட் அவருடைய பந்துக்களை மறக்காமல் ஆதரித்தார். அவர்களும் அவருடைய மதிப்புக் கேற்றவர்களாகவே யிருந்தார்கள். கார்டினல்மாஜரின் இவருக்குச் செய்த உபகாரங்களுக்காக இவர் அவரிடத்தில் மிக்க நன்றிபாராட்டிவந்தார். அவரும் இவருடைய குணவிசேஷங்களையும் திறமையையும் நன்கு மதித்து அவர் மரணக்காலம் வரையில் இவரை ஏற்றிக்கொண்டாடி வந்தார். 'கார்டினல்மாஜரின்'இருக்கும்போதே கோல்பெர்ட் 'மார்குவிஸ்' பட்டத்துக்குயர்த்தப்பெற்று அவர் வசம் ஒப்புவிக்கப்பட்ட வேலைகளையெல்லாம் அபூர்வ திறமையோடும் மனச்சாக்ஷிக்கு ஒப்பிதமாயும் செய்துவந்தார். 'கார்டினல்மாஜரின்' சாகும்பொழுது அவருடைய அரசனாகிய 14-வது லூயியினிடத்து பின் வருகிறபடி சொன்னதொன்று தெரியவருகிறது. "ஐயா, எனது பாக்கியமெல்லாம் உங்களால் வந்தது. அதற்கு கைம்மாறுசெய்ய நான் சக்தியற்றவனானாலும் கோல்பெர்ட்டை உங்களுக்குக் கொடுத்துப்போவதில் என் கடனை ஓரளவு தீர்த்துக்கொள்பவனாக நினைக்கிறேன்." என்றாராம்.

14 - வது லூயி அரசன் கோல்பெர்ட்டினுடைய திறமையை மிக மேலாய் நன்குமதித்து 1661 - ம் வருஷத்தில் அவரை அரசிறை மந்திரி ஸ்தானத்திற்கு உயர்த்தினார். இந்தக் காலத்தில் பிரான்ஸ் தேசத்திற்கு அயல்தேச வியாபாரமென்பதே கிடையாமலிருந்தது. அப்பொழுது அத்தேசத்திலிருந்த வியாபாரமெல்லாம் அதன் தலைநகருக்கும் மற்ற மாகாணங்களுக்கும் நடந்துவந்த சொற்ப வியாபாரம் தான். அது அத்தேசத்திலுண்டான விளைபொருள்களில்மட்டும் தான். வேறு வியாபாரத்திற்கு வழியில்லை. இப்பொழுது இந்தியா இருக்கிறதுபோல் பிரான்ஸ்தேசம் அப்பொழுது அதன் சொந்தவளமிவ்வளவென்றும் அத்தேசத்தார் தொழில்வகையிலுழைப்பதா லுண்டாகக்கூடிய ஐசுவரிய விர்த்தியெவ்வளவாகக்கூடுமென்றும் தெரியாமல் தவித்தது. அத்தேசத்திலிருந்த முக்கியமான சாலைகளெல்லாம் செல்லுவதற் குபயோகமற்றுக் கிடந்தன. கோல்பெர்ட் அவைகளையெல்லாம் மராமத்துசெய்து சீர்திருத்தி பல புதியசாலைகளும் போடுவித்தார். அத்தேசத்தினிருபக்கங்களிலும் அதைச் சூழ்ந்துள்ள இரு கடல்களையும் ஒன்றாயிணைத்தா லுபயோகமா யிருக்குமென்று 13 - வது லூயி அரசன் ஆண்டகாலத்திலே பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அவ்விரு கடல்களையும் இணைக்கக் குறுக்கே ஒரு பெரிய கால்வாய் வெட்டி அவ்வேற்பாட்டை இவர் நிறைவேற்றி வைத்தார். அன்றி உள்நாட்டு வியாபாரத்திற்கு உதவியாகவிருக்க ஒரு பெரிய கால்வாயும் வெட்டுவித்து வியாபாரத்தால் நஷ்டம் வருவோர்க்கு ஈடுகட்டிக் கொடுக்கும் 'இன்யூஷிரென்ஸ் ஆபீஸ்' ஒன்றும் ஏற்படுத்தினார். இன்னும் அவர் வியாபார சங்கமொன்று ஸ்தாபித்து அதில் தேசத்திலுள்ள மகா சாமர்த்திய வியாபாரிகளெல்லாம்சேர்ந்துதேசவளத்தை விர்த்திசெய்யும் வழி வகைகளைப்பற்றித்தர்க்கித்துப்பேசஏற்பாடுசெய்தார். தன்னுடைய சொந்தயுக்திக்குத்தோன்றியதைமட்டும் செய்தால் போதாதென்று ஐரோப்பாவிலுள்ள பலதேச ராஜாங்கங்களுக்கும் கடிதமெழுதி வியாபாரத்தின் பற்பல பிரிவுகளை விர்த்திசெய்ய அவர்கள் என்ன என்ன ஏற்பாடுகள் செய்துவருகிறார்களென்று விசாரித்து விவரந்தெரிந்துகொண்டு அதில் சிரேஷ்டமானதைத் தெரிந்தெடுத்து அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தார். சாமர்த்தியமான ராஜதந்திரோபாயமொன்று செய்து அத்தே

சத்தில் பெருஞ்செல்வம் படைத்த பிரபு குலத்தார் வியாபாரஞ்செய்வது ஈனமென்று எண்ணியிருந்த தப்பெண்ணத்தை மாற்றி, அவர்கள் தங்களுடைய அந்தஸ்திறகுக் குறைவின்றி வியாபாரஞ் செய்யலாமென்று கற்பித்தார். இவருடைய காலத்தில்தான் பிரான்ஸ் தேசத்தார் முதல் முதல் அனேக நாடுகளில் குடியேற யத்தனித்தது. இந்தியாவோடு வியாபாரம் செய்வதற்காக ஏற்பட்ட வர்த்தகசங்கங்கள் உண்டானதும் இவர் காலத்தில்தான். சமுத்திரத்தில் செல்வாக்கிருந்தால்தான் வியாபாரம் வளம்பெற்றோங்குமென்பதை யுணர்ந்து அதுகாறும் கடலில் மேலதிகாரம்பெற்று விளங்கிய இங்கிலீஷ் கப்பற் சைனியங்கள், டட்சு கப்பற் சைனியங்களோடு இவரும் ஒரு கப்பற் சைனியம் உண்டு பண்ணி, அக்காலம் சமுத்திரத்தில் திரிந்துகொண்டு வியாபாரக் கப்பல்களைச் சூறையாடிவந்த கொள்ளைக் கப்பல்களையும் அக்கப்பல்காரர்களையும் பிடித்து அதம் செய்வித்தார். இவருடைய காலத்தில் அனேக கப்பல்கள் கட்டப்பட்டன; அவை கடலில் சென்று வியாபாரம் செய்து வருவதற்கு அனுகூலமான துறைமுகங்கள் அவற்றிற்கு வேண்டிய சாதகங்கள் முதலியன அமைத்துவைத்ததோடு கப்பலோட்டும் வித்தைகற்பிக்கும் பாடசாலைகளும் ஸ்தாபித்தார். பிரான்ஸ் தேசத்தில் சுதேசகைத்தொழிலின்றி அத்தேசத்தார் தங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை மிதமிஞ்சிய பொருள் கொடுத்து அந்நிய தேசங்களிலிருந்து வரவழைத்து உபயோகித்து வந்தார்கள். அப்படிப்பட்ட வஸ்துக்கள் பிரான்ஸிலே செய்யப்படத் தக்கதாக பல தொழிற்சாலைகள் அமைப்பித்தார். அவற்றில் முக்கியமானது கண்ணாடிசெய்யும் தொழில். கண்ணாடிசெய்யும் வேலைச்சாலை முதல்முதல் பிரான்ஸில் ஏற்பட்டது இவருடைய முயற்சியினாலேதான்.

இவையன்றி இன்னும் எத்தனையோ நன்மைகள் செய்வித்தார். வானசாஸ்திரிகள் நோட்டம் செய்வதற்கு வசதியான சோதிடோப்பரிகை யொன்று இவராலேயே கட்டுவிக்கப்பட்டது. அன்றி ஜனங்கள் சௌக்கியத்திற்காகத் தோட்டங்களென்ன, சிங்காரவனங்கள் என்ன, சாலையோரங்களில் அழகாய் நட்ட மாவரிசைகளென்ன, கோட்டை கொத்தளங்களென்ன, 'ஆஸ்பத்திரிகளென்ன, இன்னுமெத்தனையோ தர்ம ஸ்தாபனங்களென்ன இவையெல்லாம் இந்த மகானுடைய முயற்சியால் உண்டாய் இன்றைக்கும் அத்தேசத்தில் சிறப்புற்று விளங்குகின்றன. பாரிஸ்நகரில் இவருடைய முயற்சியால் உண்டுபண்ணப்பட்ட ஸ்தாபனங்கள், வஸ்துக்கள், ஞாபக சின்னங்கள் இவைகளைக் காணுமல் கொஞ்சதூரமாவது போகலாமென்பது துர்லபமென்று அத்தேசத்தைப் பார்த்தறிந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அவர் செய்த நற்காரியங்கள் அத்தேசத்தில் கண்டகண்ட விடங்களிலெல்லாம் பலவிதமாக உருவெடுத்து நின்று அவர் கீர்த்தியை இன்றைக்கும் விளக்கி வருகின்றன. இந்த மகான் தேச க்ஷேமாபிவிர்த்தியை நாடிச் சீர்திருத்தம் செய்யாத இலாகா ஒன்றில்லை. "வரப்புயர நீருயரும்......குடிஉயரக் கோனுயரும்" என்னும் உண்மை வாக்கியத்தை உன்னி வியவசாய விர்த்திக்கடுத்த அனேக சாதகங்கள் செய்வித்தார். கால்நடைகளை விர்த்திசெய்யவும், சாகுபடிசெய்ய சுலபமாக நிலம் கிடைக்கவும் அனுகூலமான ஏற்பாடுகள் செய்தார்.

இத்தனை வேலைகளுக்கு மத்தியில் அவர் நாகரீக வித்தையை விர்த்திசெய்ய மறந்துபோகவில்லை. 1666-ம் வருஷத்தில் படமெழுதல், சிற்பவேலை செய்யல், சித்திரவித்தை முதலிய பல நாகரீக வித்தைகளை அபிவிர்த்தி செய்வதற்கான கல்விச்சாலைகள் பல ஸ்தாபித்தார். சாஸ்திரப் பயிற்சிக்காக ஏற்பட்ட கல்விச்சாலையும் இன்னும்சிலவும் இவருடைய முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டனவே.

இப்படியாக இவர் நெடுங்காலம் நன்மை செய்வதே தொழிலாகக்கொண்டு துரைத்தனம் நடத்தி முதல்மந்திரி ஸ்தானமடைந்து தம் தேசத்திற்கோருபகாரியாய் உலகுக்கோர் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து புத்திரமித்திர களத்திராதிகளோடு சுகஜீவியாய் வாழ்ந்திருந்து 1683 ஞு செப்டம்பர்ம் 6வ அவருடைய 64-வது வயதில் அவர் வாழ்நாளை முடித்தார். இவர்தனக்குப் பின் 9-குழந்தைகளை விட்டுப் போனார்:6-ஆண்பிள்ளைகளும்,3-பெண்பிள்ளைகளும். இவ்வளவு வேலை நெருக்கத்தில் இவர் பிள்ளைகளை வளர்க்கும் கடமையைச் சிறிதும் அலக்ஷியம் செய்தாரில்லை. பிள்ளைகளெல்லாம் நல்ல ஸ்திதியிலிருந்தார்கள். பெண்கள் மூவரும் பிரபுகுலதிலகர்களை மணம்புரிந்து வாழ்ந்திருந்தார்கள். துணிவியாபாரிகடையி லுதவியாகவிருந்து நாணயமும் கண்ணியமுமான ஓர்செய்கையால் முதல் முதல் முன்னுக்குவரத் தலைப்பட்ட கீர்த்திபெற்ற கோல்பெர்ட் மகானுடைய சரித்திரம் இவ்வாறு இனிது முடிந்தது. இதைக் கவனமாய் வாசித்துவந்த ஒவ்வொருவரும் இவருடைய சரித்திரத்தைப் படித்த உற்சாகத்தில் தங்கள் வாழ்நாள்களைக் கழிக்க ஒரு நல்ல நியமம் ஏற்படுத்திக்கொண்டு அதை யொட்டி நடந்துவர முயற்சிப்பார்களானால் இச்சரித்திரத்தை யெழுதியவர் பிரயாசையும் வாசித்தவர் சிரமமும் வீண்போகாதென்பது நிச்சயம். "பெருமையும் சிறுமையும் தான்தரவருமே" யென்பதினுண்மை இதிலினிது விளங்கியதையு முணரலாம்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."—குறள்.

C. V. S.



## பூ விற்றல்.

மல்லிகை நற்கோங்கு மருக்கொழுந்து சண்பகமும்
முல்லைமல ருங்கொணர்ந்தேன் [1]மொய்குழலீர் கொள்ளீரோ
மொய்குழலீ [2]ராம்பல் முளரி குவளைமலர்
கொய்தவுடன் கொணர்ந்தேன் [3]கோல்வளையீர் கொள்ளீரோ.

1மொய்குழல்—நெருங்கியகூந்தல். 2ஆம்பல்—அல்லி; முளரி—தாமரை; குவளை—நீலோத்பலம். 3கோல்—அழகு.

மந்தாரை வெட்சி [1]வகுள மிருவாட்சி
செந்தா மரைகொணர்ந்தேன் [2]தேமொழியீர் கொள்ளீரோ
தேமொழியீ ராத்தி யசோகு திருக்கொன்றை
[3]காமருகா யாகொணர்ந்தேன் கன்னியரே கொள்ளீரோ.

1வகுளம் (=மகிழம்பூ,)+இருவாக்ஷி; 2தேன்மொழி—தித்திப்பானமொழி; 3காமரு (=அழகிய)+காயா (=ஒருவகை புஷ்பம்.)

குங்குமம் புன்னை [1]யாரத்தங் குருக்கத்தி
[2]தங்குமெழிற் சம்பங்கி தையலீர் கொள்ளீரோ
தையலீர் [3]காந்த ளனிச்சநறுந் தாழைமலர்
கொய்து கொணர்ந்தேன் கொடியிடையீர் கொள்ளீரோ.

1ஆரத்தம்+குருக்கத்தி; 2தங்கும்+எழில்=அழகுதங்கிய; 3காந்தள்+அனிச்சம்+நறும் (=வாசனைபொருந்திய)+தாழை.

த. சரவணமுத்துபிள்ளை, பி, ஏ.

## மாதர்பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் நமது விவேகசிந்தாமணியை வாசிக்கும் மாதர்கள் எழுதும் விஷயகள் பிரசுரிக்கப்படும்.]

### புருஷன்மனைவிவாழ்க்கை.

எனது சிநேகிதிகளே,

இந்தக் கடிதத்தில் புருஷன் மனைவி வாழ்க்கையைப்பற்றி எழுத உத்தேசித்து இருக்கிறேன்.

முன்காலத்தில் புருஷன் மனைவி நடக்கிறவிதம் வேறு, இப்போது நடக்கிறவிதம்வேறு. முன்காலத்தில் புருஷன் வாசலில் இருந்தால் மனைவி கொல்லைக் கடைசியில் இருக்கவேணும் என்ற கட்டுப்பாடு ஜாஸ்தி. இப்போது அப்படி ஜாஸ்தியாக இருக்கக் காணோம். முன்காலத்தில் நாகரீகம் வேறு. 10-வருஷத்துக்கு முன் வேறு. இப்போது வேறு. முன்காலத்தில் நாட்டுப்பெண் வேறுவீட்டிலிருந்து வந்திருக்கிறாள் என்று அந்த நாட்டுப் பெண்ணுக்கு மாமியார் நாத்தனார் வயிற்றுக்குக்கூட சோறு போடுகிறது கிடையாது. அதை புருஷனும் கவனிக்கிறது கிடையாது. இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். முன்காலத்தில் ஒரு மாமியார் நாட்டுப்பெண்ணுக்கு சாதம் போட்டுவிட்டு உப்பு பரிமாற எடுத்துக்கொண்டு வருகிறதற்குள் நாட்டுப்பெண் சாப்பிட்டுவிட்டாளாம். நாட்டுப்பெண் நினைத்தது என்னவென்றால், நம்முடைய மாமி உப்பு எடுத்துக்கொண்டு வருகிறதற்குள் சாப்பிட்டால் அப்போ இன்னும்கொஞ்சம் சோறுபோட்டு உப்புபோடமாட்டாளா என்று நினைத்து, உப்புஇல்லாமல் சாப்பிட்டுவிட்டாளாம். மாமியார் கையில் உப்பை வைத்துக்கொண்டே நாட்டுப்பெண் சாப்பிட்டு இருக்கிறதைப் பார்த்துவிட்டு 'ஏண்டி சாப்பிட்டுவிட்டாயா, சரி,' என்று, மனதில் 'நல்லவேளை, உப்பு லாபம்' என்று நினைத்துக்கொண்டு போய்விட்டாளாம். இப்படி மாமி இருந்தால் நாட்டுப்பெண்ணுக்கு நல்ல மாதிரியாவது அல்லது பிறத்தியாருக்கு உபகாரம் செய்யவாவது, 'நம் மாமி' என்ற விசுவாஸமாவது என்னமாக இருக்கும். இப்படியாக இருந்துகொண்டு, புருஷன் மனைவி இருவருக்கும் சந்தோஷம் என்றால் எப்படியிருக்கும் என்றுகூட நினைக்காமல், பூமிக்கு பாரமாக இருந்து கடைசியில் இறந்துவிடுகிறார்கள். 10-வருஷத்துக்குமுன் கொஞ்சம் நல்லமாதிரிக்கு வந்தது. என்னவென்றால், புருஷன் தன் மனைவி தேக சௌகரியத்தையும் அவளுடைய படிப்பையும் கவனிக்காவிட்டாலும் அவளிடத்தில் அவனுக்குவேண்டிய விஷயங்களுக்காகவாவது அவளை சற்று கவனித்துக்கொண்டு வருவான். இந்தக்காலத்தில், படித்து முட்டாளா யிருப்பவர்கள் கால்வாசி; படிக்காத முட்டாளாக இருப்பவர்கள் முக்கால்வாசி: இப்படியாக போட்டியின்பேரில் முட்டாளாக இருப்பவர்கள் ஜாஸ்தியாகத்தான் இருக்கிறார்கள். ஆனால்

மிகவும் நன்றாய்ப்படித்து நாம் படித்து இருக்கிற படிப்பு கொஞ்சம்தான் என்றும் நம்மைக்காட்டிலும் இன்னும் எவ்வளவோ பேர் படித்து இருக்கிறார்கள் என்றும் இன்னும் எவ்வளவோ படிக்கவேண்டியது இருக்கிறதென்றும் நினைத்துக்கொண்டு, தான் படித்த படிப்பின் பிரயோஜனத்தைச் செம்மையாய் அறிகிறதினால் அந்தப் படிப்பு பிறருக்கும் தெரிந்து நலம் அடையவேணும் என்ற நல்ல எண்ணமுடையவர்கள் கொஞ்சம் இருக்கிறார்கள். இவர்கள்தான் இப்பொழுது இந்த புத்தியில்லாத இந்துக்களுக்கு நன்மை என்கிறதை குழந்தைகளுக்கு பால்போட்டுவதுபோல் போட்டவேண்டும். சிலபேர் தான் ரொம்ப கொஞ்சம் படித்து இருந்தால்கூட ரொம்பவும் தான் படித்துவிட்டதாகவும் இனி நமக்குஸமதையாக ஒருவரையும் சொல்லக்கூடாது என்றும் தனக்குத்தானே ஆகந்தம் பெருகி வாத்துகள்போல தலையை வானத்தை நோக்கி நிமிர்த்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள்தான் இந்த இந்துக்களுக்கு தீங்கை கற்பிக்கிறார்கள் என்கிறதற்கு ஐயம் இல்லை. இந்தக்காலத்தில் புத்தியில்லாத சிலபேர் பெண்கள் படித்தால் கள்ளப்புருஷனுக்கு கடிதம் எழுதிவிடுவார்களென்றும் படித்து உத்தியோகம் செய்யப்போகிறார்களோ என்றும் இவ்வாறாகச் சொல்லி படிக்கவைக்காம லிருக்கிறார்கள். ஐயோ, பாவம்! அந்தப் பெண்களுக்கு நல்ல புத்தியுண்டா? வேறு ஊரிலிருக்கிற தன் அன்புடைய கணவனிடத்திலிருந்து அல்லது தன் பிரியமுள்ள சிநேகிதிகளிடத்திலிருந்து கடிதம்வந்தால் பார்க்க முடியுமா? 'அடே, ஸாமி, இந்தக் காகிதத்தை படி, அவர் கிட்டேயிருந்து வந்து இருக்கிறதுபோல் இருக்கிறது, படி' யென்று ஆரோ ஒருவனிடம் சொல்ல, அவன் படிக்கப்பட்ட மாதிரியே இவளுக்குத் துக்கத்தைக் கொடுக்கிறதுபோல் இருக்க தடையென்ன? பிறத்தையார் படித்துக் காண்பிக்கும்படியிருந்தால் இவளுக்கு என்ன சந்தோஷத்தை கொடுக்கப்போகிறது, அல்லது அந்த புருஷன்தான் என்ன எழுதப்போகிறான். நம் மனைவி படித்துப் பார்க்கமாட்டாள் என்று நினைத்து, தன் காதலிமேல் வைத்து இருக்கும் பிரியத்தையும் அவன் மனப்பூர்வமான சந்தோஷத்தையும் எழுத முடியாமல் அன்னியமாக இருக்கிறதுபோல் எழுதுவான். இதுகளுக்கெல்லாம் காரணம் படிப்பு இல்லாதது தானே. பெண்ணைக் கன்னிகாதானம் செய்துகொடுக்க வேணும் என்றும் கொள்ளு தாதா எள்ளு தாதா இவர்களுக்கு வயது ஆய்விட்டது இறந்துவிடுவார்கள் என்றும் அந்த பெண்பிறந்து 3-வருஷம் ஆகிறதற்குள் தாயார் தன் முலைப்பாலூட்டி வளர்த்துகொண்டிருக்கையிலேயே தன் மடப்பாலையும் போட்டிக்கொண்டே ஒன்றும் தெரியாத புத்தியில்லாத தடிபிரமசாரியை அழைத்து கலியாணம் செய்துவிடுகிறது. பெண் 13-வயதுக்கெல்லாம் குழந்தையொன்றை பெற்றுக்கொண்டு திரிகிறது. இப்படியாக மஹா கஷ்டத்தோடு கொஞ்சநாள் இருந்து அந்த குழந்தைக்கு 10-வயது ஆகிறதற்குள் தாய் இறந்துவிடுகிறது. அந்தக்குழந்தையின் தகப்பன் தாயில்லாத பிள்ளையாச்சே என்று இன்னவேளையில் இன்னது கொடுக்கலாம் என்ற புத்தியில்லாமல் குழந்தை அழுகும்போதெல்லாம் அதின்வயற்றைரொப்புகிறது. கடைசியில் குழந்தை வயிற்றுநோவால் இறந்துபோகிறது. இவன், குழந்தையும் போச்சு, மனைவியும் போய் விட்டாள், என்று தன் தேக சௌக்கியத்தை கவனிக்காமல் துக்கமென்ற சாகரத்தில் மூழ்கி கடைசியில் ஒருவருக்கும் பிரயோசன மில்லாமல் இவனும் இறந்துவிடுகிறான். ஐயோ! பாவம், பெண்களுக்குச் சிறுவயதில் கலியாணம் செய்கிறதினால் மூன்று உயிரை தோர்த்து குடும்பம் என்றபேரே இல்லாமல் வீணாகப் போய்விடுகிறது.

இங்கு எனக்குத்தெரிந்த ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. அதைச்சொல்கிறேன் கேளுங்கள். [இடமில்லாமையால் இந்தக் கதையைமட்டும் அடுத்த சஞ்சிகைக்கு வைத்துக்கொண்டோம். இதை வாசிக்கும் மாதர்கள் அதற்காக இந்த பக்கம் பதிப்பிக்கிற நபர்மேல் கோபங்கொள்ளாது சற்றுப் பொறுமை பாராட்டுவார்களென்று கோருகிறோம்.—ப-ர்.]

இப்போது இந்த உலகத்தில் நாம் பிறந்ததுக்குப் பயனாக எல்லோருக்கும் நன்மையைச் செய்துகொண்டு இருக்கவேணும் என்ற எண்ணம் சிலபேர்களுக்குத்தான் இருக்கிறது. சிலபேர் தான்செத்துப் போனால் புண்ணியம் கிடைக்கவேணும் என்று பெண் குழந்தையை கன்னிகாதானம் செய்து தான் சாகிறதற்குள்ளே தன் கண்ணுக்கெதிரவே இந்த மனுஷபெலி வாங்கி திருப்தியடைகிறார்கள். இப்படி இருக்கிற ஜனங்கள் ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறார்கள். சிலபேர் ரொம்ப ஆசாரமாக இருந்துகொண்டு இன்னஜாதி என்றுகூட பாராமல் கண்ட ஸ்திரீகளையெல்லாம் தன் சொந்த மனைவியைப்போல் பாவிக்கிறார்களே அவர்கள்தான் இப்பொழுது இந்த உலகத்து மனுஷாளுக்கு நல்லவர்களாக காணப்படுகிறார்கள். தன்னுடைய சொந்தமனைவிக்கு துரோகம் செய்கிறவன் உலகத்து மனுஷாளுக்கு நன்மை செய்யப் போகிறானா? இப்படி யிருக்கப்பட்டவாள் ரொம்ப ஜாஸ்தி. ஆனதினால் நல்லமாதிரியாக இருக்கப்பட்ட உத்தம ஸ்திரீகளைக்கூட நம்புகிறதில்லை. அதற்கு உதாரணமாக ஒருசிறுகதை சொல்லுகிறேன். என்னவெனில் ஒரு புருஷன் தன் மனைவிமேல் ரொம்ப பிரியமாக இருந்தான். தன் தாயார் தகப்பனார் இருவரையும் தெய்வம்போல் பாவித்து நடத்திவந்தான். ஆனால் அவாள் நம்மை தெய்வம்போல பிள்ளை பாவிக்கிறானே என்று அறியவில்லை. இந்தப் பிள்ளையினுடைய மனைவிக்கு பொறுமை ரொம்ப ஜாஸ்தி. ரொம்ப நல்லமாதிரியும் வணக்கமும் அந்த பெண் இடத்தில் குடிகொண்டிருக்கும். ஆனால் இந்தபிள்ளையின் தாயார் ரொம்ப அவளை கஷ்டப்படுத்துகிறதும் வைகிறதுமாய் தன் பிள்ளையும் நாட்டுப்பெண்ணும் ஒருபோதும் பேசவொட்டாமல் செய்துகொண்டு வந்தாள். இந்தப்பெண் தன் புருஷனிடத்தில் மாமிசெய்த கொடுமையை சொல்லலாம் என்று போனால் மாமியார் பிள்ளைக்குக் காவலாகப் படுத்துக்கொண்டு இருக்கிறாள். மாமியார் தன் பிள்ளையினிடத்தில் வெகு இரகசியமாய் 'அவள்



அசல்வீட்டுக்காரனோடே பேசினாள்: நான் பார்த்தேன்: யாரோ என்று கிட்டப்போனேன் உன்னுடைய ஆம்படையாள்.'—என்றுசொல்லியிருந்தபடியால் அவன் உண்மையை தன் மனைவி மூலமாக விசாரிக்காமல் தன் தாய்பேச்சை நம்பி கொஞ்சம் நாளைக்கு சும்மா இருந்து வரவர உள்ளுக்குள் ஆத்திரம் பொங்கி ஒருநாள் அந்த பெண்ணைக் கொன்றுவிட்டான். பிறகு உண்மையை யறிந்து மகா வருத்தமுற்று அவன் அப்புறம் எப்போதும் அவளை நினைத்து 'மனைவியே என் கண்ணே' என்று புலம்பிக்கொண்டு வேறு கலியாணம் செய்துகொள்ளாமல் இருந்தான். இப்படியிருக்கிறது நல்லதா? தன் மனைவியை அழைத்துக்கேட்டால் இவன் எவ்வளவு சந்தோஷத்துக்கு இடமாகஇருக்கமாட்டான். இதுபோல் இராமல் எல்லோரும் தன் மனைவியுடன் தான்செய்த குற்றத்தையும் தன் மனைவிசெய்த குற்றத்தையும் ஒன்றாய் கொட்டி கலந்து தான் செய்தது தப்பு என்றும் அல்லது தன் மனைவி செய்தது தப்பு என்றும் எடுத்துக்காட்டி ஒருவரையொருவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தான் செய்தது சரி குற்றம் என்றாலும் இல்லாவிட்டாலும் அதோடே தொலைத்துவிட்டு பழையபடிக்கும் தன் அன்புடையகணவன்மேல் விசுவாசமாயும் அன்பாயும் இருந்து நடத்தி அந்த கணவரும் தன் மனைவி செய்கைகளையெல்லாம் சரியானால் ஒத்துக்கொண்டும் தப்பானால் புத்திசொல்லியோ அல்லது கண்டித்தோ ஏதாவது வழியாக மனதில் குறுகுறுப்பு இல்லாமல் அவ்வளவோடே நிறுத்திவிட்டு முன் விசுவாசம் தவறாமலும் இன்னும் மென்மேலும் விசுவாசம் ஜாஸ்தியாகக் கூடியதாயும் நடந்துவந்தால் சிநேகிதத்துக்கு ரொம்ப நல்லதாக இருக்கும்.

நம் இந்துக்களுக்குள் இப்படி யிருக்கிறவர்கள் சொற்பம்தான். நமக்குள் புருஷாள் இருக்கப்பட்ட இடத்துக்குக்கூட பெண்டுகள்போகக்கூடாது என்ற கட்டுப்பாடு ஜாஸ்தி. ஆனால் இது இருக்கவேண்டியதுதான், என்றாலும் இதில் ஒருவித்தியாசம்: என்னவெனில், நல்லமாதிரியாய் இருக்கப்பட்டவர்களுடன் பேசிப் பழகினால் பாதகமில்லை; ஏனெனில் நமக்கும் நல்லமாதிரி வரும், கெட்ட மனதுடையவர்களோடு பேசவே கூடாது. நமக்குள் உபகாரம் என்ற வார்த்தைகூட சிலபேர் பேசுகிறது கிடையாது. உதாரணமாக ஒரு பெண் ஒரு ஊருக்குப் போகவேண்டியிருந்து அவள் கணவன் கூடப்போக சரிப்படாவிட்டால் சிநேகிதனாக இருக்கப்பட்ட கிட்டின உறவினனில்லாத மற்றொருவனுடன் அனுப்ப சம்மதிக்க மாட்டார்கள். அப்படி அனுப்பினபோதிலும் ஜனங்கள் இதைப்பார்த்து உபகாரமென்று நினையாமல் உடனே விகற்பமாக யோஜித்து விடுகிறார்கள். நம் தேசத்தார் இப்படி நினைக்கிறவரைக்கும் ஸ்திரீகள் புருஷாள் முதலிய எல்லோருக்கும் நல்லபுத்தி என்னமாக வரும்? இப்படிப்பட்ட சொல்லுக்கு பயந்து உபகாரம் என்கிறதை விட்டுவிட்டு அபாயம் நேரிடக்கூடிய சமயங்களில்கூட உதவி கிடைக்காமல் போய்விடுகிறது சாதாரணமாக இருக்கிறது. என் சிநேகிதிகளே நம் தேசத்து படித்த புருஷர்கள் தாங்கள் அறிந்து இருக்கிறது தங்கள் படிப்பினால் ஆகையால் அதேமாதிரியாக பெண்களும் அறிவை அடையக்கூடியது படிப்பினால்தான் என்று நம்பி, எரிகிற விளக்கானது தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இருந்தபோதிலும் உலகத்துக்கு வெளிச்சம் தருகிறதுபோல தாங்கள் கொஞ்சம் கஷ்டம் எடுத்துக்கொண்டாவது நமது அறிவைப் பரவச் செய்தார்களானால் எவ்வளவு நன்மையும் சீர்திருத்தமும் விளையும்.

என் தோழிகளே, நம்தேசத்து ஸ்திரீகளுக்கு நன்மையைக் கொடுக்கவேணும். அது எப்படியென்றால், முதலாவது நாம் படிக்கவேணும்; இரண்டாவது நல்லவர்களுடைய சகவாசம் பொறுமை இவைகளெல்லாம் வேணும். இதுகளெல்லாம் படித்தால்தான் கிடைக்கக்கூடிய தாகையால் படிப்பைக் கைவிடாமல் இருக்கவேணும். நமது தேசத்தில் சிலபேர் அயலார் யாராவது இருந்தால் தன் புருஷனோடு தான் பேசக்கூடாது என்றுநினைத்து வீட்டு வேலைக்காரர் மூல்யமாக தன் அன்புடைய கணவருக்கு சங்கதி சொல்லி அனுப்புகிறார்கள். இது மரியாதையா? தானே நேரில் பிறர் இருந்தபோதிலும் தன் கணவனுடன் சொல்லவேண்டியவைகளை தெரியப்படுத்தினால் எவ்வளவு அடக்கமாக இருக்கும். இதெல்லாம் இல்லாம லிருக்கிறது படிப்பு இல்லாததினாலும் நல்ல ஜனங்கள் பழக்கம் இல்லாததினாலும்தான். இந்த விவேகசிந்தாமணி என்கிற புஸ்தகத்தில் எவ்வளவோ புத்தி விர்த்திக்கிடமான விஷயத்தைப் பற்றி யெழுதி இருக்கிறார்களே; இதைப் படிக்கவேணும் என்ற ஆசைமாத்திரம் இருந்தால் போதாது. அதைப் படித்து நல்ல விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு அவைகளை எல்லோருக்கும் வெளியிட்டு கெட்ட மனது உள்ளவர்களை திருத்தவேண்டும். இன்னும் எவ்வளவோ நல்ல புஸ்தகங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் படித்தால் மனதுக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும். புருஷன் வெளியிலிருந்து வந்தவுடன் மனைவி தான்படித்த சங்கதிகளைச் சொன்னால் அவருக்குமனம் எத்தனை சந்தோஷமாக இருக்காது? சிலபேர் பெருமைக்காக புஸ்தகம் வாங்குகிறார்கள்; சிலபேர் வீட்டில் அழகாக அடுக்கி வைக்க வாங்குகிறார்கள். சிலர் இவ்வளவு புஸ்தகம் இருக்கிறது, அவ்வளவு புஸ்தகம் இருக்கிறது என்று கண்கணிசத்துக்கு வாங்குகிறார்கள். இன்னும்சிலர் படித்துபுத்தி அடையவேணும் என்று வாங்குகிறார்கள். இத்தனையில் எது உங்கள் மனதுக்கு பிடித்து இருக்கிறது? எல்லா சந்தோஷத்திற்கும் முக்கியமான காரணம் நல்ல அறிவும், புத்திசாலித்தனமும். இவைகளுக்குக் காரணம் உபயோகமுள்ள படிப்பும் நல்ல சகவாசமும். ஆகையால் இவைகளை கைவிடாமல் விர்த்தி செய்தோமானால் நமக்கும் நம்மை நெருங்கினவர்களுக்கும் கூடுமானால் கொஞ்சம் உலகுக்கும் நம்மை உபயோகமுள்ளவர்களாக செய்துகொள்வதில் தடையில்லையென்று சொல்லுகிறதோடு இக்கடிதத்தை முடிக்கிறேன்.

ஓர் மனைவி.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

சிறுவர்களே, சிறுமிகளே,

சுற்றிப்பாருங்கள். நம்முடைய தேசத்தில் படித்தவர்கள் கொஞ்சந்தான். படியாத ஜனங்களின் மத்தியில் படிக்கக்கற்றது உங்களுடைய பாக்கியந்தான். உங்களுடையபடிப்பிற்கு அனுசரணையாக இவ் "விவேகசிந்தாமணி" வாய்த்ததும் உங்கள் பாக்கியமே. நான் இன்றைக்கு ஒரு கதை உங்களுக்குச் சொல்லவந்தேன். அதைக்கவனமாய்க் கேளுங்கள்

## ஓணான்கதை.

ஒருநாள் காலையில் ரெங்கன் என்னு மொருவன் *வெங்கன் என்னும் தன்சிநேகிதன் தன்னுடைய வீட்டிற்குள் வரக்கண்டு மிக்க நேசங்கொண்டாடி, காலவந்தனங்கள் செய்து, இருவரும் சிற்சில சமாசாரங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். வானங்கறுத்து மேகங்கூடி இடி இடிக்க ஆரம்பித்தது. இருவரும் வெளியேவந்து வானத்தில் வில்லுப்போட்டிருக்கக்கண்டார்கள். "பார்! வில்லின் வர்ணங்களை! என்னநேர்த்தியாயிருக்கிறது? என்று ரெங்கன்கேட்க, வெங்கன் உடனே "உன்னுடன் பேசவேண்டிய சமாசாரம் ஒன்றுண்டு" என்று சொல்லி இருதரும் உள்ளேசென்றார்கள்.

வெங்கன்—"நேற்றுசாயங்கிரம் ஒரு ஓணானைக்கண்டேன். அதைப்பிடித்து வீட்டில்கொண்டுவந்து வேடிக்கை பார்த்தேன். அதின் நிறம் பச்சை;—

ரெங்கன்—இருட்டு வேளையில் பார்த்தாய் போலிருக்கிறது.

வெங்கன்—அதின்நிறம் பச்சை. இப்பொழுது நாம் வில்லில்பார்த்த பச்சைவர்ணத்தைப் பார்க்கிலும் நேர்த்தியாயிருந்தது.

ரெங்கன்—உனக்குக் கண்களிருக்கிறதோ?

வெங்கன்—எனக்குக்கண்களுண்டோ இல்லையோவென்று பார்க்க உன்கண்கள் எங்கே போயின? இதனால் உனக்கு கண்களில்லையென்று நினைக்கிறேன்.

ரெங்கன்—ஓணான் பச்சைநிறமுள்ளதென்று வெளியில் சொல்லாதே, சிரிக்கப்போகிறார்கள். ஓணானின் நிறம் மஞ்சள்.

வெங்கன்—அடே ஓணானின் நிறம் மஞ்சளென்று சொல்ல வெட்கமில்லையா? அல்லது விளையாட்டுக்குச் சொல்லுகிறாயோ? இனிமேல் மஞ்சளென்று சொல்லாதே, ஓணானின் வர்ணம் பச்சையே.

ரெங்கன்—தலைமேலேறுவாய் போலிருக்கிறதே. கொஞ்சநாளுக்கு முன் தான்நானுமொரு ஓணானைக்கண்டேன். அதின்மஞ்சள் வர்ணத்தை நான் என்னவென்று சொல்லுவேன்!

வெங்கன்—எனக்குச்சிரிப்பு வருகிறது. இப்படித்தான் பிடிவாதம் செய்வாயோ? உனக்குத்தெரியாவிட்டால் தெரியாதென்று சொல்லுகிறது தானே, தனக்குத்தெரியாத விஷயங்களை 'தெரியாது' என்று வணக்கமாய்ச்சொல்லிஒப்புக்கொள்வது பெருந்தன்மைக்கு அடையாள மல்லவோ?

இப்படி இருவரும் வாய்ச்சண்டையிலிருந்து கைச்சண்டைக்கு வருவார்கள் போலிருந்தது. இவர்களிப்படி சண்டைபோட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் மழை ஒரு பாட்டம் பெய்து ஓய்ந்தது. ரெங்கனுக்கும் வெங்கனுக்கும் தெரிந்த ஒரு சிநேகிதன் ஏதோ அவசரமாய் ஓடிவந்தான். அவன்பெயர் *சங்கன், அவன்வந்து சேர்ந்ததும், வெங்கன் சங்கனைப்பார்த்து "சங்கா! ரெங்கனுக்கும் எனக்கும் ஒரு பெரிய வாதம், அதை நீதான் தீர்த்துவிடவேண்டும்." என்று கேட்டான்.

சங்கன் 'அதென்ன' வென்று கேட்க, வெங்கன் "நானும், அவனும், வெவ்வேறு நாட்களில் ஒரு ஓணானைப்பார்த்தோம்." என்றான்.

சங்கன்—ஓணானா? நானுமொன்று பார்த்தேன். ஞாபகம்வருகிறது.

ரெங்கன்—நீயும்பார்த்தாயா? மஞ்சள் தானே?

வெங்கன்—சங்கா, கேள், நான் அதன்நிறம் பச்சையென்றேன். அதற்கு ரெஙகன் பச்சையல்ல மஞ்சளேவென்றான். பச்சைதான் என்றேன், மஞ்சள்தான் என்றான். இதுதான் சண்டை. நீயும்ஓணானைப்பார்த்ததாகச் சொன்னது எங்களுக்குச் சந்தோஷந்தான். ஓணானின்நிறம் பச்சையா, மஞ்சளா?

சங்கன்—பச்சையு—

வெங்கன்—பலே! ஜெயம். பச்சை என்றுவிட்டான்.

ரெங்கன்—அட தடபுடலே! முற்றும் கேட்டு விட்டுக்குதி.

சங்கன்—பச்சையுமில்லை, மஞ்சளுமில்லை; ஓணானின்நிறம் சிவப்பு.

ரெங்கன்—நீ சரியாய்ச்சொல்லுவா யென்று நினைத்திருந்தேன், நன்றாய்ச் சிவப்பென்றாய். வெளியில் சொல்லாதே.

சங்கன்—சிவப்புத்தான். நேற்றுக்கூடப்பார்த்தேன். வீட்டிலேயே ஒன்றைப்பிடித்துவைத்திருக்கிறேன். போய்ப்பார்ப்போம் வாருங்கள்.

"அதுவேசரி" என்று இருவரும் சொல்லி சங்கனுடன் புறப்பட்டு அவன் வீட்டுக்கேபோனார்கள். அவ்வோணானைப்பார்க்க, அதன் நிறம் வெள்ளையாயிருக்க ஒவ்வொருவரும் தன்தன் மூக்கில் விரலைவைத்துக்கொண்டு தயங்கினார்கள். மூன்று பேர்கள் சொன்ன நிறங்களில்ஒன்றாவது இராமல் ஓணானின்நிறம் வெள்ளையாயிருந்தது ஆச்சரியமே.

சிறுவர்களே, சிறுமிகளே,

ஏன் மூன்றுபேர்களும் இப்படி தப்பினார்களென்று உங்களுக்குத்தெரியுமா? மூன்றுபேர்களும் ஓணானியற்கையை அறியாதவர்கள். அவர்கள் சொன்ன எல்லா நிறங்களிலும் ஓணான் காணப்படும். பச்சை, மஞ்சள், சிவப்பு, வெள்ளை முதலிய இப்பேர்ப்பட்ட வர்ணங்கள் ஓணானிடத்தில் அடிக்கடி மாறுபடும். இதை அறியாமல் அவர்கள்தான் தான் பார்க்கும்பொழுது ஓணான் எந்த நிறத்திலிருந்திருக்குமோ அந்த நிறமே ஓணானுடைய வாஸ்தவமான நிறம் என்று தீர்மானித்ததினால் மூன்றுபேரும் மோசம் போனார்கள். ஆகையால் ஒரு விஷயத்தை முற்றுமாராயாமல்நமது அபிப்பிராயத்தை வெளியிடக் கூடாது. இந்தக்கதையினால் ஓணானுடைய நிறம் அடிக்கடி மாறுபடும் என்று கற்றுக்கொண்டீர்கள். அப்படி ஏன் மாறுகிறதென்று அறியநீங்கள் ஆசைப்படுவீர்கள். உங்கள் ஆசையை பூர்த்திசெய்ய ஓணான் நிறம் மாறுவதற்குக்காரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஒரு ஓணானைப்பிடித்து அதின் உடம்பினுடையபாதிபாகத்தில் மாத்திரம் சூரியவெளிச்சம் படும்படியாய் வைத்தால், சூரியவெளிச்சம் படாத மறுபாகத்தில் பழுப்புநிறம் கலந்த மங்கலான மஞ்சள் நிறத்தில் அந்த ஓணான் காணப்படும். அது சாதாரணமாயிருக்கும்போது ஊதா, பச்சை முதலான வர்ணங்களில் காணப்படும். ப்லினி (Pliny) யென்னுமொரு துரை "சுற்றி இருக்கும் வஸ்துக்களின் நிறத்தில்ஓணான்காணப்படும்" என்று சொல்லுகிறார். புதிதாய் கண்டு பிடித்த காரணம் என்னவென்றால்:— ஓணானுடைய மேல்தோலில் அநேக வர்ணப்பசையுள்ள சிற்றறைகளிருக்கின்றன. அவைகளை "பிக்மென்ட் ஸெல்ஸ்" (Pigment Cells) என்று இங்கிலீஷில் சொல்லுவார்கள். இந்த சிற்றறைகளில் அநேக வர்ணமுள்ளமெல்லியதோல்கள் (layers) அடுக்கடுக்காயிருக்கின்றன. தேகத்தில் ரத்தம் ஓடிக்கொண்டே இருக்கிறதென்று உங்களுக்கு முன்னமேதெரிந்திருக்கலாம் இந்த ஓணான் தேகத்திலுள்ள ரத்தம்ஓடும்போது சிற்றறைகளிலுள்ள மெல்லியதோல்களின் இருப்பிடம் அடிக்கடி மாறுகின்றன. அநேக வர்ணமுள்ள அந்த மெல்லியதோல்களில் எந்தெந்த வர்ணமுள்ள தோல் மேலாக இருக்கிறதோ அந்தந்த வர்ணத்தில்ஓணான் காணப்படும்.

நேசர்களே, போய்வாருங்கள்;இன்னுமொரு சமயத்தில் இன்னும் ஒரு கதை சொல்லுகிறேன்.

உங்களுடைய பிரியமுள்ள
ராமய்யா.

* 'வெங்கன்' என்று சாதாரணமாய் கூப்பிடுவது. வெங்கடராமன் என்பது சரியான பெயர்.

* சங்கரன் என்னும் பெயரை சங்கன் என்று வழக்கமாய் கூப்பிடுகிறது.



## விசேஷக்குறிப்புகள்.

**பம்பாய்கலகம்.** இந்தவிசை நாம்முதல்முதல் குறிக்கவேண்டிய விசேஷம் என்னவென்றால் சென்ற சஞ்சிகையில் பிரஸ்தாபித்த பம்பாய்கலக முற்றும் ஓய்ந்துபோய் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் ராசியாகப்போன சந்தோஷ சமாசாரமே. இருசமூகத்திலும் நாடோடிகளான தவறுதலைப் பயல்கள் இராணுவ உதவியால் அடக்கப்படவே கலகம் கப்என்று அமுங்கிவிட்டது. கலகமடங்கியபின் ஜனங்களுக்கு மனதில் நம்பிக்கையுண்டாக இருசமூகங்களிலும் ஜனசிரேஷ்டராயுள்ளவர்களும் மற்றவர்களும்கூடி சந்தனதாம்பூலம் பற்றிக்கொண்டு வாத்திய கோஷங்கள் முழங்க ஹிந்துக்களும் மகம்மதியர்களும் கைகோர்த்துக்கொண்டு உல்லாசமாய் வீதிகள் வழியாய் பவனி வந்தார்கள். கனம்பொருந்திய கவர்னர் கலகத்தையடக்கமுயற்சித்த ஜனசிரேஷ்டர்களுக்கெல்லாம்வந்தனங்கூறி அவர்களில் அநேகருக்கு சர்க்காருடைய நன்குமதிப்பைக் காட்டிச் சிற்சில வெகுமதிகளும் அளித்தார். பம்பாய் கலகத்தால் நேர்ந்த சேதங்களைச் செப்பனிட சுமார் 10-லட்சம் ரூபாய் செல்லுமாம்.

**காலஞ் சென்ற காசிநாத் டிரியம் பக் டிலாங்.**

பம்பாய் கலக மடங்கியதோ இல்லையோ இந்தியாமுழுமையுமுள்ள ஜனங்களுக்கு மனக்கலக்க முண்டுபண்ணத்தக்க விசனகரமான சம்பவமொன்று பம்பாயிலே சேர்ந்தது. அது இந்தியாவுக்கே சேர்ந்த ஒரு பெருநஷ்டமாம். அந்நஷ்டத்தை மதிப்பிட்டு முடியாது. அது என்னவெனில் இந்தியா மைந்தர்களில் மேன்மை பெற்று விளங்கியவரும் பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜியும் யூனிவர்ஸிடி சங்கத்துக்கு உபஅக்கிராசனாதிபதியு (வைஸ் சான்செலர்) மாயிருந்தவரான கனம்பொருந்திய காசிநாத் ட்ரியம்பக் டிலாங் அவர்கள் காலஞ்சென்றதுக்கசம்பவமே. இந்தியாவில் அவரைப்போலொத்தவர் நமக்குள் வெகு அபூர்வம். அவர் 1850ஞு ஆகஸ்டுமீ 30உ பிறந்தார். இந்தவருஷம் ஆகஸ்டுமீ 31உ இறந்தார். ஆகவே இப்புவியில் அவர் வாழ்நாள் பெற்றதெல்லாம் சரியாக 43-வருஷம் 2-நாள்தான். இந்த சொற்பகாலத்தில் அவர் தம் ஊக்கம், விடாமுயற்சியாலும் தமது அபூர்வமான புத்தி விசேஷத்தாலும் பெற்ற பேறும்புகழும் அவர் வயதுள்ளவர் வேறு எவரும் பெற்றிரார். சிறுவயதிலேயே புத்திவிசேஷமுள்ளவராய் விளங்கி 17-வது வயதில் பி. ஏ. பரீட்சைகொடுத்துப்பின் ஒருவருஷத்தில் எம். ஏ. பரீக்ஷையிலும் தேறி வித்தியாபோதனை செய்வதிலும் சிறந்தவராக விளங்கினார். 21-வயதில் அட்வோகேட் பரீக்ஷைக்குப்போய் மிகவும் கடுமையான பரீட்சையில் தேறிவந்தார். இதுவரையில் வித்தியாசாலையில் மாணாக்கராகவும், வித்தியா போதகராகவும் பேர் பெற்றதுபோல் ஹைகோர்ட்டிலும் வெகு சீக்கிரத்தில் பேர்பெற்றுச் சிரேஷ்ட ஸ்தானம் பெற்று 40 - வயதாகு முன் ஹைகோர்ட்டு ஜட்ஜி ஸ்தானத்துக்கே வந்துவிட்டார். கல்விக்களஞ்சியம் என்றால் இவருக்கே பொருந்தும். இவர் பெருமையையும், அடக்கத்தையும், சத்குண சீலத்தையும் பற்றிப் புகழ்ந்து பேசாதவரில்லை. கவர்னர், ஜட்ஜி, முதலாக சாமான்ய ஜனங்களீறாக இவர் மரணத்தால் சேர்ந்த நஷ்டத்தைக் குறித்துத் துன்புறாதார் ஒருவருமில்லை. இவர் இங்கிலீஷில் பாண்டித்திய மடைந்திருந்ததோடு சம்ஸ்கிருதத்திலும் மகா பாண்டித்தியம் பெற்று விளங்கினார். இந்த இரண்டு மகாபாஷைகளும் நன்றாகத் தெரியுமேயென்று நம் காலத்துப் படித்தவர்களைப்போல அவர் தம் சுயபாஷையை அலட்சியம்செய்யவில்லை. இவர் பகவத்கீதையை இங்கிலீஷில் மொழி பெயர்த்தார். மஹாராஷ்டிரத்திலும் ஓர்கிரந்த மியற்றியிருக்கிறார். இன்னும் சம்ஸ்கிருதத்திலும் இங்கிலீஷிலும் அநேக கிரந்தங்கள் இயற்றி யிருக்கிறார். மாணாக்கராகவும், வித்தியாபோதகராகவும், சம்ஸ்கிருத பண்டிதராகவும், சட்டத்திற் றேர்ந்த நியாயவாதியாகவும், சட்ட நிருபணசபை மெம்பராகவும், பொதுஜன சிரேஷ்டராகவும், சர்க்கார் உத்தியோகஸ்தராகவும், யாவரும் மதிக்கத்தக்க நியாயாதிபதியாகவும் இவர் இடையூறின்றிமகாபிரக்கியாதிபெற்று விளங்கி, உச்சிரேத்திலுள்ள சூரியன் ஏதோ உற்பாதத்தால் அப்படியே அஸ்தமித்து மறைந்ததுபோல் பேரும் புகழும் பெற்று உச்சி ஸ்தானத்திலிருந்து பிரகாசித்தவர் அப்படியே அகால மிருத்தியுவுக் கிரையாகி மறைந்தார். இவர் ஞாபகத்தை நிலைநிறுத்த வருகிற அக்டோபர்மீ 6உ பம்பாயில்கூடும் சபைக்கு அவ்விராஜதானி கவர்னர் அக்கிராசனாதிபதியாகவிருக்க இசைந்திருக்கிறார். இவரை யிழந்ததில் இந்தியாவுக்குநேர்ந்த நஷ்டத்துக்கு ஈடுதேடுவது துர்லபம். இவருடைய அகால மரணத்தை உன்னிஉன்னி உருகிப்போகும்படி இறந்தவர் தம் வயது சென்ற தாய் தந்தையரையும், தமது மனைவி மக்களையும் பின்னால் விட்டுப் போயிருக்கிறார். இத்துன்பகாலத்தில் இவ்விந்தியாமுழுதும் இவர்களோடு அனுதாபப்பட்டுச் சிந்தையுருகி நிற்கின்றது.

---

**இந்தியா இராஜப் பிரதி நிதி வேலை.**

இப்பொழுது இராஜப் பிரதிநிதியாக விருக்கும் லான்ஸ்டௌன் பிரபு இந்த வருஷம் டிசம்பர் மாசத்தோடு அவருடைய உத்தியோகதவணை கழிந்து சீமைக்குத் திரும்பிப்போக வேண்டியவராயிருக்கிறார். அவருக்குப்பின் இராஜப்பிரதிநிதியாகவர ஒருவரை நியமிக்க அங்கிலேய கவர்ன்மெண்டவர் தக்கவர் அகப்படாமல் தவிக்கிறார்கள். இதற்கு இந்தியாவில் இராணுவ உத்தியோகத்தி லிருந்து இராஜப்பிரதிநிதி மந்திராலோசனை சபையில் ஒருவராயிருக்கும் அந்தஸ்துக்கு வந்து அப்புறம் இந்தியாமந்திரியின் ஆலோசனை சபையில் ஒரு மெம்பராயிருந்து 'ஜெமேய்க்கா' தீவுக்குக் கவர்னராய்ச் சென்று தற்காலம் 'குவின்ஸ்லாண்டு' என்னும் குடியேற்ற நாட்டின் கவர்னராயிருக்கும் ஸர் ஹென்ரி நார்மன் என்பவரை அங்கிலேய முதல்மந்திரி இவ்வேலைக்குத் தெரிந்தெடுத்து நியமித்தார். அவர் முதலில் இவ்வேலையையொப்புக்கொள்ள சம்மதித்துப் பிந்தி யோசித்ததில் அந்திகாலத்தில் அவ்வளவு பொறுப்புள்ள வேலை பார்க்கத் தமக்குஉடம்பில் திராணி யில்லையென்று கண்டு அவ்வேலையை வேண்டாமென்று சொல்லிவிட்டார். இப்பொழுது அங்கிலேய முதல்மந்திரியாகவிருக்கும் மிஸ்டர் கிளாட்ஸ்தன் அவர்கள் இந்தியா இராஜப்பிரதிநிதி ஸ்தானத்திற்கு யாரை நியமிக்கலாமென்று யோசித்து வருகிறார். இந்தவேலைக்கு மாசம் 20,000 ரூபாய் சம்பளமும், இந்தியாவை யாளும் அதிகாரமும் இருந்தாலும், இதை நிறப்பத் தக்கவர் கிடைக்காமல் தற்காலம் இந்த வேலை பிச்சைக்கு நிற்கிறது.

---

**ஐர்லாந்து சுய ஆக்ஷி மசோதா.**

இந்த மசோதா அங்கிலேய நாட்டு பார்லிமெந்து'காமன்ஸ்' சபையில் பாஸாகி 'லார்ட்ஸ்' சபைக்குப்போனதில் அச்சபையாரால் தள்ளிவிடப்பட்டது. மேலென்ன நடக்குமோ வென்று இது விஷயத்தில் உலகெலாம் எதிர்பார்த்த வண்ணமாயிருக்கிறது.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு"


# விவேக சிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். II. 1893ஞு அக்டோபர்மீ இலக்கம். 6.


## ஜோதிஷ்

## II.

### 2-வது சந்திரஜோதிஸ்.

வானத்தில் இரண்டாவது காணப்பட்ட ஜோதிஸ் சந்திரஜோதிஸ். இதைப்பற்றி வராஹமிஹிரர் சம்ஹிதையில் 4-வது அத்தியாயத்தில் பின்வருகிறபடி எழுதப்பட்டிருக்கிறது.

" சந்திரன் சூரியனுக்குக் கீழே எப்போதும் இருக்கிறது. அதாவது பூமிக்குச் சந்திரன் சூரியனைப்பார்க்கிலும் சமீபம். சந்திரன் பந்துபோல் கிரகஷியான வடிவம். அதில் ஒன்று பாதி சூரிய ஜோதிஸ்ஸால் சோபிதமாயிருக்கிறது. மற்றொரு பாதி அதினுடைய நிழலினால் இருண்டிருக்கிறது. அது எதுபோலென்றால் சூரியவெளிச்சத்தில் ஒருபானையை வைத்தால் அதின் ஒருபாகம் பிரகாசமாகவும் மற்றொரு பாகம்இருண்டுமிருக்கிறது. இதுபோற்றான் ஜலம்போலுள்ளச் சந்திரன் மேல்விழப்பட்ட சூரியகிரணங்கள் பூமியில் இராத்திரியிலுண்டாகிற அந்தகாரத்தை, கண்ணாடி ஜோதிஸை பிரதிபலிப்பதுபோல, பிரதிபலித்து நீக்குகிறது. சந்திரனானது சூரியனைவிட்டு வரவர சூரியனுடைய ரச்மியால் கீழேயிருந்து நாளுக்குநாள் சோபிதங்கூடி பூரணச் சந்திரனாகிறது."

இப்படிச் சொல்லியிருப்பதால் வெளிப்படுவதென்னவென்றால் சந்திரனுக்கு சூரியனிடத்திலிருந்து கிடைக்கப்பட்ட ஜோதிஸ் அல்லாமல் நிஜ ஜோதிஸ் அதற்கில்லையென்றும் சூரிய ஜோதிஸ்படாத பாகம் இருட்டாக இருப்பதென்றுந்தான். இவ்வாறே நம்முடைய வேதத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

"சூரியரச்மிச்சந்திரமா:"

ஆனால் அஷ்டமி நவமி தினங்களில் சந்திரனைப் பார்க்கும்போது சூரியனால் பிரகாசிப்பிக்கப்பட்டிருக்கிற பாகம் தெரிகிறதுமல்லாமல் சூரியனால் பிரகாசிப்பிக்கப்படாத மற்றபாகங்களும் கண்ணுக்குத் தோற்றப்பட்டு அவைகட்கும் மங்கலானசோபித மிருக்கிறதாகக் காண்கிறது. பௌர்ணமிதினம் தவிர சந்திரமண்டலம் முழுமையும் சூரிய ஜோதிஸ்ஸால் பிரகாசம் அடைகிறதில்லை. அப்படியிருக்க அஷ்டமி நவமி தினங்களில் சந்திரமண்டல முழுமையும் காணவேண்டிய காரணம் என்ன? இதற்குக் காரணம் சந்திரனுக்கு வாஸ்தவமாய் ஜோதிஸ் இருப்பதால் அல்ல. சூரியனிலிருந்து பூமியின்மேல் விழப்பட்ட ரச்மிகளெல்லாம் பூமியினால் பிரதி பலிக்கப்பட்டு ஆகாயத்தில் செல்லும்போது சூரியனால் பிரகாசிப்பிக்கப்படாத சந்திரமண்டலத்தில் வீழ்ந்து அங்கிருந்து மீண்டும் பூமிக்குத் திரும்பிவரும்போதும் சூரியனால் பிரகாசிப்பிக்கப்படாத சந்திரமண்டலம் நமக்குக் கண்ணுக்குத் தோற்றுகிறது. நக்ஷத்திர வெளிச்சமும் பூமியைத் தவிர மற்ற கிரகங்களின் வெளிச்சமும் கூடி சந்திரனில் வீழ்ந்து அங்கிருந்துவந்து நம்மையடையும்போது அவ்வாறு காணப்படலாம்.

ஆனால் சூரிய ஜோதிஸ்ஸால் அல்லாமல் மற்றெவ்வித ஜோதிஸ்ஸாலும் பிரகாசிப்பிக்கப்படுகிற சந்திரமண்டலத்திற்குப் பிரகாசம் மங்கலாக இருக்குமேயன்றி சோபிதமாக இருக்காது. பூமிமுதலிய கிரகங்களினின்றும் நக்ஷத்திரங்களினின்றும் சந்திரன்மேல் விழப்பட்ட ஜோதிஸ்ஸானது வெகு பலஹீனம். அவ்வாறு பலஹீனமான ஜோதிஸ்ஸானது சந்திரனிடத்திலிருந்து பூமிக்குவரும்போது பிரகாசம் அதிகம் குறைந்து மங்கலடைகிறது.

இன்னும் ஒருகாரணத்தினால் சந்திரனுக்கு ஒருவேளை சுவயமான ஜோதி உண்டோவென்று சந்தேகிக்கக்கூடும். அதாவது சந்திரன் பூரணகிரகணத்தினுள் அகப்பட்டுக்கொண்டாலும் அப்போது அதற்குத் தாம்பிர நிறத்தில் மந்தமான சோபிதம் இருக்கிறது. சந்திர கிரஹணம் உண்டாவது அது பூமியின் நிழலில் அகப்பட்டுப் போவதினாலென்றால் கிரகண சமயத்தில் அதற்கு எப்படி தாம்பிர நிறத்தில் பிரகாசம் கிடைத்ததென்று கேட்கக்கூடும். கிரகணகாலத்தில் சந்திரனுக்குக் கிடைக்கிற தாம்பிர நிறஜோதிஸ் அதற்குசொந்தமாயுள்ளதல்ல. சூரியனிடத்திலிருந்து ஜெகஜ்ஜோதியாய் பூச்சாயை (பூமியின் நிழலை) அடுத்துச் செல்கின்ற ரச்மிகள் ஆகாயத்திலுள்ள தேயுவாம்சங்களால் வளைக்கப்பட்டு பூச்சாயைக்கப்பாற் செல்லாமல் பூச்சாயைக்குள் திரும்பிவிடப்படுகின்றன. இதைப்பற்றி விஸ்தாரமாய் பிற்பாடு சொல்லுகிறேன். கிரகண சமயத்தில் சந்திரனுக்குக் கிடைக்கிற பிரகாசம் சூரியனுடைய பிரகாசந்தான். சூரியனுடைய ஜோதிஸ்ஸல்லாமல் சந்திரனுக்கு ஜோதிஸ் இல்லையென்பது அமாவாசையையன்று நிச்சயமாகும். இதைப்பற்றி இனி விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டிய அவசியமில்லாதபடியால் வேறேஜோதிஸ்த்தோற்றங்களைப் பற்றிச் சொல்வோம்.

### 3-வது நக்ஷத்திர ஜோதிஸ்.

மூன்றாவது ஆகாசத்தில் காணப்பட்ட ஜோதிஸ் நக்ஷத்திர ஜோதிஸ்த்தான். நக்ஷத்திரங்களெல்லாம் தூரத்து சூரியனாகவும் சூரியன் சமீபத்திலுள்ள நக்ஷத்திரமாகவும் விசாரிக்கப்படுகின்றபடியால் சூரிய ஜோதிஸைப்பற்றிய ஒவ்வொரு சங்கதியும் நக்ஷத்திர ஜோதிஸிற்கும் உபயோகப்படும். ஆகையால் அதைப்பற்றி விஸ்தாரப்படுத்தவேண்டிய அவசியமில்லை.

ஆகாசத்தில் ஆகாசகங்கையிருப்பதாய்ஜனங்கள் கேட்டிருக்கலாம். அதற்கு இங்கிலீஷில் "Milky way" என்றுபெயர். அது அரையிற் கட்டும் கச்சைபோல் ஆகாயத்தைச் சுற்றிவருகிறது. நடுவில் இருண்டு இருபுறத்திலும் கரைபோல் வெளிச்சம் திரண்டிருப்பதால் அதற்கு ஆகாச கங்கையென்று பெயர்வந்தது. இதை சாஸ்திரக்ஞானம் இல்லாத சிலர் மேகம் அல்லது மின்னலாக நினைக்கிறார்கள். அது இப்படிக் காணவேண்டியதற்குக் காரணம் அங்கே அநேக நக்ஷத்திரங்கள் செறுங்கி அடர்ந்து ஒன்றின் பின் ஒன்றாய் நிற்றலால் அவைகளின் பிரத்யேகமான ரச்மிகளெல்லாம் கலந்து மொத்தமாய் வெண்ணிறமானதுபோற் காண்கிறது. இதற்கொரு உதாரணம் சொல்லிவிட்டால் சங்கதிவிளங்கிவிடும். கார்த்திகைமாசத்தில் பிராம்மண அக்கிரகாரத்தில் சென்றால் இருட்டானவுடன் குழந்தைகளெல்லாம் கரிப்பொடியும் உமியும் கலந்து துணியிலுருட்டிக்கட்டிய வாணத்தைக் கவட்டையிற்கட்டி அதில் ஒரு கயிற்றை முடிந்து வாணத்தைக்கொளுத்திக் கனிய வைத்து வாணமாடுகிறதைக் காணலாம். வாணத்தை விரைவாகச் சுற்றும்போது பொரிகள் பறந்து அவ்வாறு சுற்றுகிறவனைச் சுற்றிலும் ஜோதிகொண்டு கோட்டை போட்டாற்போல் ஒரே ஜோதிஸ்ஸாய்க் காண்கிறது. இதற்குக் காரணம் ஒவ்வொரு பொரியும் தனித்தனி நேத்திரேந்திரியவழியாய் மனதிற்படுமுன்னே மற்றப் பொரிகளும் அதிசீக்கிரம் தெரிகிறபடியால் அவைகளினுடைய ஜோதிஸ்களெல்லாம் ஒன்றாய்க்கலந்து சந்திரனைச் சுற்றித் தோன்றுகின்ற பரிவேஷம்போல் வாணமாட்டுகிற பையனைச்சுற்றிலும் சோபிதமுள்ள பொரிக்கோட்டை உண்டாகின்றது. அதுபோலவே ஆகாச கங்கையிலுள்ள நக்ஷத்திரங்களின் ரச்மிகளெல்லாம் ஒன்று சேர்ந்து கலப்பாய் நேத்ரேந்திரியத்திற்படுகிறபடியால் அவ்வாறு மொத்தமாய்க் கண்ணுக்குத் தோன்றுகின்றது.

### 4-வது ஜோதிஸ் : கிரகங்களின் ஜோதிஸ்.

ஆகாயத்தில் நாலாவது ஜோதிஸ் காணப்படுவது கிரகங்களின் ஜோதிஸாம். பிரகஸ்



பதிமுதலிய வெளிகிரகங்கட்கு சூரியனிடத்திலிருந்து கிரகிக்கப்பட்ட ஜோதிஸைத் தவிர சுவய ஜோதிஸ் இருப்பதாய் சில வானசாஸ்திரிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இப்படிக்குச் சொல்வதற்குக் காரணம் பூமியைப்போலல்லாமல் *வெளிகிரகங்களில் அக்னிமலை மூலம் உள்ளே இருந்து அக்னிஜவாலை வெகுவாய்க் கக்கிக் கொண்டிருக்கிறபடியால் அதின்வழி ஜோதிஸ் சுவயமாய் உண்டாகிறதென்பதே. மற்ற விஷயத்திலெல்லாம் சந்திரனைப்பற்றிச் சொல்லிய படிதான் *உள்கிரகங்களையும் வெளிகிரகங்களையும்பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறது. ஆனால் சனிபகவானைப்பற்றிக் கொஞ்சம் விசேஷமாய் பிரஸ்தாபிக்கவேண்டியிருக்கிறது. சனிகிரகத்தைச்சுற்றி இரண்டு ஜோதிஸ்வளையம் இருக்கிறது. அதைப் பின்வருகிற மாதிரி காண்பிக்கலாம்.



சனிகிரகமும் அதைச் சுற்றிலுமுள்ள ஜோதிஸ் வளையங்களும்.

இந்த இரண்டு ஜோதிஸ் வளையங்களும் சூரியனுக்கு எதிர்ப்பில் நிற்கும்பொழுது ஒருபக்கத்தில் சூரிய ஜோதிஸை கிரகித்து மற்றொரு பக்கத்திலிருந்து நிழலை சனிக்கிரகத்தின்மேல் வீசுகின்றன. சூரியரச்மிகள் படாத சனிமண்டலமும் மேற்படி ஜோதிர் வளையங்களின் மேல் நிழலைவீசி இருட்டுக் குள்ளாக்குகிறது. இதை உத்தேசிக்கும்போது சூரியனற்றான் இந்த வளையங்கட்கும் பிரகாசம் வருகிறதோ என்று சந்தேகிக்கக்கூடும். இதைப்பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் விஸ்தாரமாய்ச் சொல்கிறேன்.

### 5-வது: தூமகேதுக்களின் ஜோதிஸ்.

ஆகாசத்தில் அஞ்சாவது காணப்பட்ட ஜோதிஸ் தூமகேதுக்களின் ஜோதிஸாம். பலவகை தூமகேதுக்கள் உண்டு. அவைகளைப்பற்றி வேறே ஒரு சந்தர்ப்பத்தில் விஸ்தரிப்பது சரியாகும். தூமகேதுக்கட்கு வாஸ்தவத்தில் நிஜ ஜோதிஸ் அதாவது சொந்தமான ஜோதிஸ் உண்டா இல்லையா ? என்பது கேள்வி. வராஹமிஹிரர் சம்ஹிதையில் 11-வது அத்யாயத்தில் மூன்றாவது ச்லோகத்தில் பதார்த்தங்களை பஸ்மீகரிக்கக்கூடிய சக்தியற்ற நெருப்புப்போன்ற ஜோதிஸ் தோற்றங்களென்று கேதுக்களைச் சொல்லியிருக்கிறார். அதாவது அவைகட்கு ஜோதிஸ் உண்டு. உஷ்ணங்கிடையாதென்று அர்த்தம். இவ்வாறு அபிப்பிராயப்பட்டிருக்கிற வெள்ளைக்காரரும் உண்டு.

தூமகேதுக்கள் சூரியனை யடுத்துவரவர அவைகட்கு பிரகாசம் கூடுகிறது. சூரியனைவிட்டு நீங்க நீங்க பிரகாசம் குறைகிறது. இதனால் தூமகேதுக்கட்கு சொந்த பிரகாசமில்லையென்றும் சூரியனுடைய பிரகாசமே அவைகளினுடைய பிரகாசத்திற்குக் காரணமாய் பலிக்கிறதென்றும் எண்ணக்கூடும். ஆனால் அது அவ்வளவு நிச்சயமாய் ஏற்படக்கூடிய சித்தாந்தமல்ல. தூரத்திற்குப் போகப்போக ஜோதிஸ் குறைந்துகாணும். சமீபிக்க சமீபிக்க ஜோதிஸ் கூடிக்காணும். ஒருவிளக்கின் ஜோதிஸைப்பற்றி உதாஹரணமாய் கவனிப்போம். விளக்கருகில் உட்கார்ந்து சாப்பிடுகிறவர்கட்குத் தெரியப்பட்ட வெளிச்சம் 10 அடி தள்ளி உட்கார்ந்து சாப்பிடுகிறவர்கட்குத் தெரிகிறதில்லை. விளக்கடுத்து சாப்பிடுகிறவன் அதற்கொரு அடிக்கு அப்பால் இருந்தால் அவனுக்கு கிடைக்கிற வெளிச்சத்திலிருந்தும் 100-ல் ஒரு பங்குதான் 10-வது அடியில் இருப்பவனுக்குக் கிடைக்கும். ஆனால் தூரஞ் சமீபத்திற்குத் தகுந்தபடி கூடிக் குறைகின்றதினால் விளக்குக்கு சொந்த பிரகாசமில்லையென்று சொல்ல

* புதன், சுக்கிரன், செவ்வாய் இவைகளுக்கு உள் கிரகங்களென்றும், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன் இவைகளுக்கு வெளிகிரகங்களென்றும் பெயர்.

லாமா? சொல்லக்கூடாது. அதுபோற்றான் தூமகேதுக்கள் விஷயத்திலும்.

தூமகேதுக்கட்கு சொந்த ஜோதிஸில்லையென்று இன்னுமொரு சங்கதியால் தர்க்கிக்கலாம். சில வெள்ளைக்காரர் தூமகேதுக்கள் கிரகங்களிலிருந்து வெடித்துப்போன வானஜெடங்களென்று சொல்கிறார்கள். அதுபோலவே வராஹசம்ஹிதையிலும் இத்தனை இத்தனை தூமகேதுக்கள் இன்ன இன்ன கிரகங்களின் புத்திராள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிரகங்களுக்கு நிஜப்பிரகாசம் இல்லையென்று வந்துவிட்டால் கிரகங்களுடைய பின்னங்களாய கேதுக்களுக்கு எப்படி பிரகாசம் இருப்பதாய்ச் சொல்கிறது.

தூமகேதுகட்கு சொந்தப்பிரகாசம் இருந்தாலும் இருக்கட்டும், இல்லாமற் போனாலும் போகட்டும். சூரிய ஜோதிஸ் அவ் வானஜெடங்களின்மேல் விழுந்து அவ்வாறு அவைகட்குப் பிரகாசம் கிடைப்பதென்பதில் சந்தேகம் இல்லை. உலகங்களைப்பற்றி அதாவது எரிநக்ஷத்திரங்களைப்பற்றிச் சொல்கிறபோது இது நன்றாய் விளங்கும்.

6-வது ஜோதிஸ்: உலகஜோதிஸ்.

ஆறாவது வானத்திற் காணப்பட்ட ஜோதிஸ் உலகங்களின் ஜோதிஸாம். உலகங்கள் ஹிந்து சாஸ்திரப் பிரகாரம் ஐந்துவகைப்படும். வெள்ளைக்கார சாஸ்திரங்களில் நாலுவித உலகங்கள் வியக்தமாய்ச் சொல்லப்பட் டிருக்கின்றன. தூமகேதுக்கள் உடைந்து சின்னபின்னம் ஆகும்போது உலகங்கள் உண்டாகின்றன. உலகங்களினுடைய சலனகதி, கக்ஷி இவைகள் இரண்டும் தூமகேதுக்களின் சலனகதி கக்ஷி இவைகளைப்போலேதான். அநேக உலகங்கள் பூமியில் வீழ்ந்து அவைகளை பரீக்ஷைக்காக சீமையிலுள்ள 'பிரிட்டிஷ் ம்யூஸியம்' முதலிய பொது ஸ்தலங்களில் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதில் கல், மண் இருப்பதோடுகூட செம்பு, இரும்புகளும் காணப்படுகின்றன. உலகங்களுக்கு ஜோதிஸ் கிடைப்பதற்குக் காரணம் என்னவென்றால் அவைகள் பூமியினுடைய ஆகர்ஷண சக்தியால் இழுபடும்போது அதிக விரைவாய் ஆகாசத்திலுள்ள வாயு பதார்த்தங்களும் உலகங்களும் உறைபட்டு சூடுபிடித்து அதனால் உருகி ஜோதிஸ் உண்டாகிறது. இரும்பை நன்றாய்க் காய்ச்சினால் எப்படி அதற்கு செவந்த பிரகாசம் உண்டாகிறதோ அப்படியே உலகங்களுக்குச் சூட்டுப் பெருக்கால் ஜோதிஸ் உண்டாகிறது. ஒன்றோடொன்று உரசினால் எப்படிச் சூடுண்டாகும் என்பவர்கட்கு நம்முடைய முன்னோர்கள் அரணிகடைந்து அக்னி உண்டாக்கின சங்கதியையும் சிக்கிமுக்கிக் கல்லைத் தட்டி நெருப்பைப் பற்றவைத்துவந்த சங்கதியையும் ஞாபகத்திற்கு எடுத்துச் சொல்லலாம். அப்போது சந்தேகம் நிவர்த்தியாகும். கல்விட்டடித்த ரஸ்தாக்களில் சாரட்டுகள் விரைவாய் ஓடும்போது ரோதாக்களும் குதிரைக் குளம்புகளும் பட்டு தீப்பொரி பறக்கிறதைக் காணலாம். இதுவும் ஒரு திருஷ்டாந்தமே.

7-வது ஜோதிஸ்: வானவில்.

ஏழாவது ஆகாசத்தில் காணப்பட்ட ஜோதிஸ் வான வில்லினுடைய பிரகாசம். இது மேகங்கட்குள்ள ஜோதிஸ் அல்ல. வானங்களைப்பற்றி வராஹ மிஹிரர் சொல்வ தென்னவென்றால், சூரியனுடைய பலவித நிறமுள்ள ரச்மிகள் மேகத்துளிகளில் விழுவதால் அங்குற்ற காற்றினாற் பிரிக்கப்பட்டு வானவில் உண்டாகிறதென்றேயாம். மேகங்களாகிற மிதந்துகாண்கிற நீர்த்துளிக்குள் வாய்வு இருக்கிறதோ இல்லையோ என்று கேட்கக்கூடும். அவைகட்குள் வாய்வு இருப்பதாய் சித்தாந்தம். மேகத்தில் நீர், காற்று, பொடியானதூசி, ஜோதிஸ்இவைகள் நாலும் இருப்பதாய்க் காளிதாசருடைய அபிப்பிராயம். இதைப் பின்வரும் வாக்கியத்தாற் காண்க. சுலோகம்:—"தூமஜ்யோதிஸ் ஸலிலமருத்ராம் ஸந்நிபாதஃக்வமேகாஃ."

நாம் ஒரு காட்டாமணக்கின் பாலையெடுத்து ஒரு சிறு நாரை சிறு கண்ணியாகச்செய்து அப்பாலிற் றோய்த்து கண்ணிமுழுவதும் காலியின்றி பால்பற்றிப் பரவிக்கொண்டால் வாய்க்கெதிரே வைத்துக்கொண்டு ஊதுகிறோம். உடனே அந்தப் பாலானது உருண்ட குமிழியாக ஆகாயத்திற் பறந்து செல்கிறது. அந்தக் குமிழிக்குள் காற்றிருப்பதுபோல் ஆகாசத்தில் மிதக்கப்பட்ட ஜலத்துளிக்குள்ளும் வாய்வு



இருக்கிறது. வானவில்லைப்பற்றி பிரத்யேகம் சொல்லும்போது சூரிய ஜோதிஸ் மேகங்களில் விழுகிறசமயம் அந்த ஜோதிஸை பலவித நிறமான ரச்மிகளாகப் பிரித்து வானவில்லாக வளைத்துக் காண்பிக்கிற தொழில் நீர்த்துளிகளைச் சேர்ந்ததா அல்லது அதற்குள்ளேயோ வெளியிலேயோ இருக்கப்பட்ட வாயுவைச் சேர்ந்ததா அல்லது இரண்டையும் சேர்ந்ததாவென்று கவனிப்போம். இப்போது அதைப் பற்றிச்சொன்னால் காலக்ஷேபமுண்டாகும். சரலாந்தலில் தொங்கவிட்டிருக்கிற மூன்று முகஸ்படிகங்கள் எப்படி யெப்படி சூரிய ரச்மிகளை ஏழுநிறமான கிரணங்களாய்ப் பிரிக்கின்றனவோ அதுபோற்றான் மேகத்துளிகளிலே விழப்பட்ட சூரியஜோதிஸ் ஏழுவகை ரச்மிகளாகப் பிரிக்கப்படுகின்றது. சரலாந்தலில் தொங்குகிற த்ரிகோண ஸ்படிகங்களில் ஒன்றைக் கையிலெடுத்து ஒருமுகவழி இருபுறமும் சாய்ந்து பார்த்தோமானால் சூரிய வெளிச்சம் ஏழுவர்ணமான ரச்மிகளாகப் பிரிபடுகின்றன. ஆனால் கோண முனைக்கு நேரே பார்த்தோமானால் வெள்ளை ரச்மிகள்தான் காண்கிறது. அதாவது அந்த முகவழிபிரிந்த ஏழு ரச்மிகளும் அந்த முனையின்வழி ஒன்று சேர்தலால் வெண்மையான வெளிச்சமுண்டாகிறது: அதுபோல சில சமயங்களில்வெண்மையான வானவிற்காணலாம். அது காணும்போது அதினுடைய கால் பூமியின் நீர்ப்பரப்பில் இறங்கிக் காணும். அப்படி நீர்ப்பரப்பு இல்லாத ஸ்தலங்களில் வெள்ளை வானவில் சாதாரணமாய்க் காண்கிறதில்லை.

சூரியனைச் சுற்றியாவது சந்திரனைச் சுற்றியாவது காணப்பட்ட பரிவேஷம் வானவில்லின் ஸ்வபாவம் உடையதுதான். பரிவேஷத்தில் சிலசமயங்களில் ஏழுவித நிறமும் காணாவிடினும் நீலம், பச்சை, மஞ்சள், செவப்பு இப்படி சில நிறங்களாவது பிரிந்து காணும். சந்திரனைச் சுற்றிலும் காணப்படுகிற பரிவேஷத்தில் வானவில்லிற்காண்கிற எல்லாநிறமும் தீர்க்கமாக காணமுடியாது. ஏனென்றால் சூரியனுடைய ரச்மிகள் வாஸ்தவத்தில் சூரியரச்மிகளாயிருந்தாலும் அவைகள் சந்திரனுக்கும் வந்து அங்கே நமக்கு பிரதிபலித்து வருமுன்னே அவைகள் பலஹீனப்பட்டுப்போகின்றன. வானவில்லின் ஸ்வபாவமும் பரிவேஷத்தின் ஸ்வபாவமும் ஒரே மாதிரியாய் இருந்தாலும் கொஞ்சம் வித்தியாசமுண்டு. பரிவேஷத்தைக் காண்பிக்கப்பட்ட நீர்த்துளிகள் உறைந்த பனித்துளிகள் என்று சிலர் சொல்கிறார்கள். சாதாரணமாய் வானவில்லைக் காண்பிக்கப்பட்ட நீர்த்துளிகள் உறையாத நீர்த்துளிகள்தான். பரிவேஷம் பூர்ணவட்டமாய்க் காண்பது சஹஜம். ஆனால்வானவில் அர்த்தவட்டமாகவாவது அல்லது அதின் ஒரு பாகமாகவாவது காண்பது தான் வழக்கம். குற்றாலம் முதலிய அருவிவிழும் ஸ்தலங்களில் நீர்த்துளி எப்போதும் பொதுவாயும் நிரந்தரமாயும் நிறைந்திருப்பதால் அங்கே சூரியரச்மிகள் ஏழுநிறமாகப் பிரிந்து வானவில்போன்ற சோபையோடு பூரணவட்டத்திற்குள் வட்டமாய் நாம் ஸ்பரிசித்துப் பார்க்கக்கூடிய ஸ்திதியில் நமக்குச் சமீபம் வெகு சிங்காரமாகக் காணப்படுகிறது. இதனால் ஊகிக்கவேண்டிய தென்னவென்றால் மேகங்கள் போதுமானமட்டில் கீழ் இறங்கி நின்றால் பூரணவட்டமாகக் காணலாம் என்பதே. ஆனால் ஆகாசமும் பூமியும் தொட்டுக்காண்பதாய் நினைக்கப்படுகிற வட்டத்திற்குக் கீழே உள்ளது நமக்குத்தெரியாது. ஆகையால் வானவில்லின் பூரணவட்டத்தை ஒருவன் பார்த்ததாய் வராது.

எஸ். இராமஸ்வாமி அய்யர், பி.ஏ., பி.எல்.

## மனதும் சரீரமும்.

'சிருஷ்டியில் சிறந்தது மனிதன். மனிதனில் உயர்ந்தது மனம்' * எனச்சொல்லப்பட்டிருக்கிறது. மனிதன் ஆகிருதியில் வெகு மிருகங்களைவிட அற்பன். தேகபலத்திலும் தாழ்ந்தவன். ஆனாலும் மலைபோன்ற யானை அவன்சொற்படி எருதுபோல் சுமைதூக்குகின்றது. மிருகராஜ்னான சிங்கம் பூனைபோல் அவனோடு விளையாடுகிறது. அன்றியும் அவன் பெருமை பூமியில் மாத்திரமல்ல: ஆகாயத்தில் முன்னோர்கள் புஷ்பகமுதலிய விமாநத்திலும், இக்காலத்தில் புகைக்கூண்டிலும் ஏறி பட்சிகள்போல் உலாவுகிறார்கள். ஜலத்திலும் குதிரைகள்போல் அலைமீது ஏறி இக்குதிக்காய் சவாரிசெய்கிறார்கள். இன்னும் வானத்தில்செல்லும் நட்சத்திரம், சூரியன், சந்திரன்முதலிய

* Hamilton's Lectures.

மண்டலங்களையும் ஆற்றின் அக்கரையில்போகிற வழிப்போக்கர்கள்போல் எண்ணி அவைகளின் பருமன், நிறை முதலியவைகளை நிராசில் நிறுத்தாற்போல் தெரிந்து, அவைகள் இன்னகாலத்தில் அழிந்துபோய் விடுமென ஜாதகங்கள் கணித்து எழுதுகிறார்களே. இவை யெல்லாம் புத்தியின் பெருமையல்லவா? "உடல் சிறியார் என்றிருக்கவேண்டாம்" என்னும் வசனம் உண்மையே. கடவுள்விழிக்கொப்பான மின்னல் மேகங்களை விட்டிறங்கி மனிதற்கு பூமியில் † தபால் பிடித்துவருவதை தினம் காண்கிறோம். கந்தர்வர்நாடாகிய ஆகாயத்தில் மனுஷ்யர்கள், அவர்களிலும் பெண்டிர்கள் யதேச்சையாய் சஞ்சரித்ததை நாம் பலதடவை பார்த்தோம்.‡ மகாவிஷ்ணுவுக்கு மாத்திரம் சயநம்தந்த சமுத்திரராஜன் நாட்டில் வலையனும் வீடுகட்டி வாழ்கிறான். இவ்வாறு விண்ணுலகத்தையும் தண்ணுலகத்தையும் மற்றொரு மண்ணுலகமாய் மாற்றினது எண்சாண் உடம்பில் ஒரு சாணுக்குள்பட்ட உத்தமாங்கமென்னும் தலையின் செய்கையே.

மனிதன் அங்கங்களில் மிருகங்களை யொத்தவன். தேகம் அழிந்துபோய்விடும். அவன் புத்தியோ அழிவில்லாததாய் சின்மயமான பரஞ்சோதியை யொத்தது. இவ்வாறு திவ்வியலோகத்துக்கும் பூலோகத்துக்கும் மத்தியில் உள்ள ஒரு பாலம்போல் இருக்கிற மனிதனைவிட வேறு ஆச்சரியமுள்ள வஸ்து உலகத்திலுண்டா? அதிசயங்கள் பார்க்கவென்று அமெரிக்கா ஐரோப்பாவுக்கு பயணம் புறப்பட்டுப் போகிறார்கள்: காட்சிகள் பார்க்க திரைகடலோடுவார்கள்; இவைகளைவிட பதினாயிரம்மடங்கு அதிசயமான அற்புதங்கள் இச்சிறுதலையிலுண்டு. ஆயினும் 'கோவில் நெருங்க தியானம் ஒதுங்கும்' என்ற பழமொழிப்படி தன் தோளின்மேலிருக்கும் தலையினது ஆச்சரியம் இன்னதென்றறிய நினையார்கள்.

அப்பேர்ப்பட்ட மனதைப்பற்றியும் அதற்கும் தேகத்திற்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றியும் சிறிதுவிசாரித்து மனதில் உண்டாகும் அன்பு, பயம், முதலியவைகளினால் சரீரத்தில்விளையும் மாறுதல்களைப்பற்றி கொஞ்சம் எழுதுவோம்.

ஒருநாள் மல்லாபுரம் என்றவூரில் பொழுதுவிடிந்ததும் விடியாததுமா யிருக்கையில் இரண்டு ஸ்திரீகள் கோடையிடிபோல் கர்ஜித்துக்கொண்டு ஒருவர்மேல் ஒருவர் மழைபோல் எச்சிலை உமிழ்ந்து மயிர் பிடித்து இழுத்துக்கொண் டிருந்தார்கள். என்ன என்று தெருவார் கிட்டவந்து பார்க்க, அந்தத் தெருவுக்கு வந்திருந்த வண்டிமாடு ஒருநிலை சாணம் போட்டுவிட்டுப்போனதாகவும் அதை நீ எப்படி எடுப்பாயென்று துன்முகி அம்மாள் குருபாட்சி அம்மாளோடு சண்டைபோடுவதாகவும் அறிந்து அவர்களை விலக்கிவிட்டார்கள். துன்முகி அம்மாள் உடனே ஆத்திரத்தால் உடம்பு பதற வீடுசென்று தொட்டிலில்கிடந்த குழந்தையை எடுத்து பால்கொடுத்தாள். அந்த புண்ணியவதி, மலர்ந்த புஷ்பம்போல் சிரித்துக்கொண்டிருந்த குழந்தையை எடுத்து அணைத்து பால்கொடுத்தவுடன் அது முகம்வாடி சாய்ந்து விழுந்தது. அப்புறம் சிறிதுநேரம் கழித்து மாய்ந்தது.

வைத்தியர்கள் இந்த விஷயத்தில் தாயின்பால் மனதிலிருந்த கலக்கத்தால் குணம்மாறி குழந்தையைக் கொன்றது என்றார்கள். பாலின் குணம் அளவு இவை இரண்டும் மனதின் ஸ்திதியைப் பொறுத்து விசேஷமாய் மாறுபடும். சிடுசிடு என்று இருக்குங்கால் பால்கொடுத்தால் குழந்தைக்கு பால் குறைவதுந் தவிர வயிற்றில் பாதைசெய்து சுவரத்தை உண்டாக்குகிறது. சமீபித்த பந்துயாராவது இறந்துபோனசெய்தி கேட்டதும்உள்ள வருத்தத்தில் பால் குன்றிப்போகும். காற்றிலகப்பட்ட காற்றாடிபோல் மனதின் அவஸ்தைக்குத் தக்கபடி தேகம்ஆடிவரும். அன்றியும் ஞானஸம்பந்தருக்கு பார்வதி அம்மன் பால்ரூபமாக ஞானம் புகட்டினதுபோல் ஸந்துஷ்டி சாந்தம்முதலிய குணம் நிறைந்த மாத்ருசிரோமணிகள் தங்கள் குழந்தைகளுக்கு பால் கொடுக்கும்பொழுதே ஹிருதய கலசத்திலிருந்து சற்குணவெள்ளத்தையும் புகட்டுவார்கள். படிப்பற்ற மற்றும் சிலர், அகங்காரம், பொறாமைபிடித்த மானிடப்பிசாசுகள் போல் தங்கள் குழந்தைக்கு மிருத்யுஆவார்கள். தப்பிப்பிழைத்தால் பாலோடு தங்கள் குணங்களையும் புகட்டுவார்கள்.

நம்மூர்களில் திருட்டுப்போனால் சந்தேகமிருக்கிற பேர்வழிகளைக் கூப்பிட்டு கொஞ்சம் அரிசியைக்கொடுத்து மெல்லச்சொல்லுவது உண்டு. எவன் வாயில் ஜலமூறாமல் அரிசி போட்டபடி யிருக்கிறதோ அவனே திருடனென்று தீர்மானிப்பார்கள். இது ஏனெனில் மனதில் குறுகுறு என்றிருக்கிறவனுக்கு வாயில் ஜலம் ஊறாது. கருமிகள் தன் வயிற்றைமாத்திரம் நிரப்பவேணுமென்று தனிமையாய் தின்ன உட்கார்கிறார்களே, அவர்களுக்கு அன்னம் சுகமாய் ஜீரித்துவருகிறதில்லை. 10 பேர்களோடு சந்தோஷமாய் குலாவிப்பேசி சாப்பிடும் அன்னம் தேகத்துக்கு சுகமாய் எளிதில் ஜீரித்து விடுகிறதென்பது சாதாரணமாய் அறியக்கூடியது. இதுகொண்டே பகவத்கீதையில் 'தனக்குமாத்திரமென்று சமைக்காதே',

† தந்தியல்லது மின்தபால்.

‡ சமீபகாலத்தில் மிஸ் வான் டாஸெல் என்னும் அமெரிக்காதேசத்து மாது ஆகாயரதமேறிய விர்தையைக் குறிக்கிறது.



என்றார். 'மருந்தானாலும் விருந்திட்டுண்' என்பதும் இதுவே. நம்மவர்களில் வைதிக கோஷ்டிகள் வாய்பேசாது சாப்பிடுவது வாடிக்கை. அந்த வாடிக்கை சௌகரியத்துக்கு அடுத்ததில்லை; மனஸுக்கு குதூஹலம் உண்டாக்காது. விருந்துக்கு அழைக்கப்பட்ட வித்வானொருவர் "நாங்கள் இருவர்: அதாவது மனதும், வயிறும். வயிற்றுக்கு நல்லஆகாரமும் மனதுக்குத் தக்க சம்பாஷணையும் தயார்செய்யவேண்டும்" என்றார். இப்படி மனதிற்கு தேகம் ஓர் கண்ணாடிபோல் விளங்கி வருகிறது. உள்ளம் குளிர்ந்தால் முகம்மலர்ந்து தேகம் பூரிக்கும். மனது தபித்தால் தேகம் மூட்டம்போட்ட வானம்போல் ஆய்விடுகிறது. "அடுத்தது காட்டும் பளிங்கேபோல், அகம் கடுத்தது காட்டும் முகம்" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும்.

இதுநிற்க மனதில் எதை வெகுதிடமாய் தியானிக்கிறோமோ அதன்மயமாய் நாம் ஆய்விடுவோம் என்று சுருதிவாக்கியம் சொல்லுகிறது. புழு குளவியை விடாது தியானிக்கிறதினால் குளவியாய் மாறிவிடுகிறதென்று உதாரணமாய்ச் சொல்லுவார்கள். ஆனால் ஐரோப்பிய ஜீவசாஸ்திரிகள் மேற்சொல்லிய திருஷ்டாந்தத்தில் புழு வேறு, குளவிவேறல்ல; பட்சிக்கு முட்டையெப்படியோ, அப்படியே குளவிக்கு 'லார்வா' என்னும் பருவத்திலுள்ள புழு என்று சொல்லுகிறார்கள். இப்படியானால் உதாரணம் தவறுதலாகும். அது எப்படியானாலும் அந்த வாக்கியத்தில் சொன்ன தத்துவம் மீறத்தகாது. நிரம்ப அனுபோகத்தில் தெரிகிறது. அந்த தத்துவத்தை வெவ்வேறு இடங்களில் உதாரணத்தால் காண்பிப்போம்.

ஒருஸ்திரீ தெருவில் போகும்போது தனக்குத் தெரிந்த ஒரு குழந்தை ஒரு இரும்புக் கதவின் வழியாய் வரக் கண்டாள். அந்தக் குழந்தைகதவைத் திறந்துவிட்டு வரவே, அந்தக் கதவு பின்னால் அதன் கணைக்காலில் காயம்பண்ணும்படி திரும்பிவந்தது. நிச்சயம் காயமுண்டாகிவிடும் என்று இந்த அம்மாள் தீர்மானித்து கவலையோடு நின்றாள். ஆனாலும் குழந்தை காயம்படாமல் வெளிவந்துவிட்டது. இந்த அம்மாள் காலெடுத்து வைக்கக்கூடாமல் சிரமப்பட்டாள். குழந்தைக்கு காயம்படுமென்று பயப்பட்ட இடத்திலே இந்த அம்மாளுக்கு பொறுக்கக்கூடாத வலி உண்டாயிற்று. சிறிதுதூரம் வீட்டுக்குப்போய் காலைப்பார்க்க செம்பஞ்சுபோல் சிவந்துஒருவட்டமானது காலில்காணப்பட்டது. மறுநாள் கொப்பளித்து, சொஸ்தமாக 20 நாள் பிடித்தது. வேறொருவருக்கே இப்படியிருக்கையில் தாயென்றால் என்னமாயிராது. ஒரு குழந்தை விளையாட்டில் ஜன்னல்கதவை கையில் தள்ளிவிட்டுக்கொண்டு 3 விரல்களில் காயம்பண்ணிக்கொண்டது. உடனே வைத்தியர்வந்து காயத்துக்கு மருந்துபோடவே சமீபத்திலிருந்த தாய் தனக்கு கைநோகிறதாகச் சொன்னாள். வைத்தியர் விசாரிக்க குழந்தைக்கு எந்தவிரல்களில் காயமோ அதே விரல்களிலேயேவீங்கிப்புண்ணாயிருக்கிறதென்றுகண்டார். இதைக்கேட்க, ஹுமாயூன் என்னும் டில்லி சக்கிரவர்த்தியின் அருமைத்தகப்பனான பெபர் என்பவர் தன்மகன்வியாதியை தனக்கு வரவழைத்துக் கொண்டு இறந்தாரென்று சொல்வது சம்பாவிதமேயென்று விளங்கும். யயாதிராஜன் மூப்பைக்கூட அவர்பிள்ளை பெற்றுக்கொண்டாரென்றும் கதையுண்டு.

இவை இப்படியிருக்க சாதாரணமாய் மனுஷியர்களுக்கு அயலார்துயரம் மலைபோலிருக்குமானால் அணுபோல் படுமென்பது சித்தம். அண்ணனாவது தம்பியாவது அவனவனுக்குப் பசித்தால் சாதத்தை அவனவன் தன்வாயில் போட்டுக்கொள்கிறானோ அல்லது தம்பிவாயில் போடுகிறானோ என்றும் 'தாயும் பிள்ளையுமானாலும் வாயும்வயிறும் வேறு' என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆயினும் அன்பினால் ஒருவஸ்து நம்முள்ளத்தைக் கவர்ந்தால் என்னதான் நேரிடாது! அன்பினாலாவது மற்றெந்தக் காரணத்தினாலாவது நம்மனது முழுதும் ஒன்றில் ஐக்கியமாய் விடுமானால் அது இவ்வித அற்புதத்தைச் செய்யும். பிரியத்தினால் பிறர்துயரத்தைத் தான்படுவதுமன்றி நடவாத காரியங்களையும் சாதிக்கிறார்கள். பஞ்சத்தில், பால் கொடுக்கும் தாயுமிறக்க தகப்பன் ஸ்தனத்தில் பாலுண்டாகி குழந்தைகளைக் காப்பாற்றினான் என்பதும், பெண்டிர்கள் சுபதினங்களில் பகிஷ்டா காலம் நேரிடுமானால் மனோபலத்தால் தள்ளிவைக்கிறார்களென்பதும் ஆச்சரியமல்லவா?

இம்மாதிரியாய் ஒருவிஷயத்தில் முழுமனதுவைத்துப்போவது அன்பினால் மாத்திரமல்ல. பயத்தினாலும் நேரிட்டு முன்சொன்ன தத்துவத்தின்படி பயந்த தீங்கை வரவழைத்துக் கொள்ளுகிறார்கள். "மருண்டவன்கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்."

ஒரு தாயார் தன்தோழியின் குழந்தையொன்று சுவரத்தினால் இறந்ததென்று கவலையுற்று தன் குழந்தையும் அப்படி போய்விடுமோ என்ற சிந்தை தவிர வேறில்லாமல் வருந்தினாள். அவள் குழந்தையும் சீக்கிரம் சுரம்வந்து மாய்ந்தது. நம்தேசத்தில் சூன்யம் வைக்கிறது என்று சொல்லுகிறார்களே, அதுதான் என்ன? மயிரையெடுத்து பானையில் சோற்றோடு கலந்து எதிர்வீட்டு வாசலில் அல்லது கொல்லையில் புதைத்தால் அவனுக்கு தீங்கு சம்பவிக்கும்.—என்கிறார்கள். அவனுக்கு வாஸ்தவமாய் வரும் துன்பம் ஜனங்களுக்கு இப்படி நடந்தால் தீங்குவரும் என்ற பயத்தாலல்லாது வேறொரு சக்தியால்அல்ல. நெருப்பு என்று நினைந்தால் வாய் வெந்துவிடுவதுமுண்டு.

ஒரு ஜமீன்தார் கொஞ்சநாள் ஊரைவிட்டு வெளியே போயிருந்தார். மாம்ஸபிண்டத்தைச் சுற்றிப் பாடும் ஈக்கள்போல் ஜமீன்தாரைச் சுற்றி இச்சகம் பாடி வளைய வந்துகொண்டிருக்கும் அனேகருண்டு. அவர்கள் தாங்கள் ஒரு கூட்டமாய் யஜமானைப் பார்ப்பது கூடாதென்று தனித்தனியாய்ப் பார்த்துப் பேசவேண்டுமெனக் கருதி பிரபு ஊருக்கு வருவதாகக் கேட்டதும் 100 அடிக்கு ஒருவராயிருந்து கைகூப்பி க்ஷேமம் விசாரித்தார்கள். முதலில் ஒருவர் பிரபுவுக்கு உடம்பு வெகு இளைத்துப்போய்விட்டது என்றார். மற்றும் ஒருவர் அப்படியே மரியாதை செய்து இளைத்துப்போனதாகவும் சொல்லி விசனப்பட்டார். பின்னும் மற்றவர்களும் இப்படிச் செய்யவே இவர் வரும்பொழுது இரட்டைச்சித்து பெருத்து இருந்தது உண்மையானாலும் வீடுபோய்ச் சேருமுன் மனமொடிந்து வியாதியாய்ப் படுத்தார். இதுவுமன்றி "பேதியால்பாதி, பீதியால்பாதி" என்பதும் சரியே. பயத்தால் வியாதியை வரவழைத்துக் கொள்ளுகிறார்கள், அடுத்த க்ஷணம் நேரிடும் என்று நம்பி எதிர்பார்த்திருந்தால் அது நடந்ததாகவே தோன்றும். வைத்தியனிடத்தில் சிரங்குக்குச் சத்திரம் செய்துகொள்ளப்போனால் கத்திபடுமுன்னே வலியாயிருக்கிறதாக முகத்தைச் சிணுக்கி கண்ணீர் பெருக்கிவிடுவது நமக்குத்தெரியும்.

பிராஞ்சு தேசத்தில் பாரிஸ் நகரத்தில் ஒருவர்இரத்தம்வடிய விட்டுக்கொள்ள வேண்டுமென்றுஆஸ்பத்திரிக்கு வந்தார். அதற்காக வைத்தியர் வேண்டிய கருவிகளை எடுத்து பிரயோகிப்பதற்கு முன் சும்மா ஒரு துணியை மேலேபோட்டார். வியாதிக்காரர் இரத்தத்தைப் பார்க்கக்கூடாதென்று கண்ணைக் கட்டிவைத்தார்கள். துணிபட்டதும் ஆயுதங்கள் தானென்று நம்பின வியாதிக்காரருக்கு ஆயுதம் படாமலே ரத்தம் முழுதும் வடிந்ததென்றுகேள்விப்படுகிறோம். வைத்தியத்திலும் கொடுக்கிற மருந்து தகுந்ததென்று பார்ப்பது அனேக சந்தர்ப்பங்களில் அவசியமல்ல. வியாதிக்காரர் மனதுக்கு தகுந்ததென்று பட்டால் போதும். ஒரு துணியும் ஆயுதத்தின் வேலை செய்தது. சீனதேசத்தில் வைத்தியர் இன்னின்ன சாமான்மருந்து சாப்பிடவேண்டுமென்று கடிதத்தில் எழுதிவியாதிக்காரர்களை மருந்துக்குப்பதிலாக அந்தக்கடிதத்தை விழுங்கச்சொல்வார்களாம். நம் தேசத்தில் குறத்திகள் பிள்ளைபெற, குறவர்கள் பத்தியமாய் இருந்து வருகிறார்கள் என்பது யாவருக்கும் தெரிந்திருக்கலாம். இவ்வாறு உண்மையில் ஒரு குணமில்லாத கடிதாசும், குறவனது பத்தியமுங்கூட வியாதியுள்ளவர் மனத்தில்வியாதியை நிவிர்த்திக்கக்கூடுமென்றால்நிவிர்த்திக்கும் தான். இதன் உண்மையை நாம் சொல்லுகிற விசித்திரமான சரித்திரம் தெளியக்காட்டும்.

ஒருவர் தன் கழுத்துக்குப் பின்னால் ஒருகண்ணாடி ஒட்டிக்கொண்டிருக்கிறதென்று தலைகுனியக்கூடாதவர்போல் நிமிர்ந்தே இருந்துகொண்டு வெகுவருத்தப் பட்டு வந்தார். அவருக்கு வெகுபேர் வெகுவிதமாய் கண்ணாடி எல்லாம் பிரமைதானென்று சொல்லியும் ஏறவில்லை. ஒரு புத்திசாலி சிநேகிதர் வியாதி தீர்க்கும் மாதிரி இதுவல்லவென்று நினைத்து, ஒரு கண்ணாடியை கழுத்தின் பின்புறத்தில் வைத்து பிறகு உடைத்து தூளைக்காண்பிக்க அவர் சந்தோஷமுற்று வியாதி நீங்கினவராய் வாழ்ந்தார். வியாதி வெறும் பிரமையானாலும் அதைத்தீர்க்க, அந்த பிரமையையுண்மையாகவே பாவித்து அவன் மனத்தில் உள்ளதை தீர்க்கவேண்டும். மாயையான துக்கத்திலிருந்து மாயையான ஸுகத்தைஅடைகிறான். அந்தோ! சிலந்திதன் வயிற்றிலிருந்து நெய்யும் வலையைப் போல் மனிதன் தன்மனப்பேயால் துன்பப்படுகிறான். பிசாசுபிடிக்கிறதென்று நமக்குள் மாந்திரீகனைக்கண்டால் ஆடுவதும் பேசுவதும் அவன் போவென்றால் பிறகுபோய்விடுவதும் முன்சொன்ன சரித்திரத்தை யொத்ததே. பிசாசு மனப்பேய் தான். பேயென்று நினைத்ததும் அதற்கு உள்ள குணங்களை காதில் கேட்டபடி அனுசரிப்பார்கள். ஊரில் நம்புகிறவழிப்படியே தான் அதைப் போக்கவேண்டும். பிசாசு என்று ஒன்றிருந்தாலல்லவோ வரும்; வந்தாலல்லவோ போகும். இருக்கவுமில்லை, வரவுமில்லை, போகவுமில்லை. கழுத்தின் பின் கண்ணாடி யிருக்கென்றால் வைத்தாவது உடைக்கவேண்டியது தான். ஜனங்கள் கஷ்டப்படும் வியாதிகளும் அவர்கள் பயத்தால் உண்டாகின்றன. அவைகளைப் போக்குவதும் அவர்களுக்கிருக்கும் நம்பிக்கையினால்தான். இதைப்பின் வரும் கதை நன்றாய் தெரிவிக்கும். நம்முடைய ஜனங்களுக்கு சர்க்காரென்றால் பூலோகத்தில் அவதாரம் செய்திருக்கும் தெய்வமென்றே ஞாபகம். பனங்காட்டுகுடி என்ற கிராமத்தில் 'துடைநடுக்கிச்சோமு' என்பவன் தபால்காரன். அவன் காட்டாற்றங்கரைதாண்டி தபால் பிடித்துப் போகும்போது கையிலிருந்த கிலுகிலுப்புத்தடி கீழேவிழ கல்லாய் நின்றான். அங்கிருந்த ஒரு பிசாசு அடித்துவிட்டது என்றெண்ணி ஊர்வந்ததும் யஜமானிடம் போய் முறையிட்டு இனி அந்தவழியாய்ப் போகமாட்டேன். வேலை எனக்கு வேண்டாமென்றான். அதைக்கேட்ட துரை இதென்ன மோசம். சர்க்கார் வேலையைத் தடுப்பவனெவனென்று ஆக்கிரகமாய் ஒரு பேனாவையெடுத்து ஒரு உத்திரவு எழுதிமுத்திரைவைத்து அந்த மரத்தில் ஒட்டுவித்தார். "இதனால் அறியவேண்டியதென்னவென்றால், நீ பிசாசானாலென்ன! இனி தபால்காரனை பயமுறுத்துவாயானால் உன்னைச் சித்திரவதை செய்து தூக்குப்போடப்படுமென்று அறியலாம்" என்று எழுதியிருந்தது. அதை ஒட்டவே மறுநாள் பிசாசு போனவிடம் தெரியவில்லை.



ஐரோப்பிய தேசங்களில் பிசாசுகள் இப்போது கிடையா. நம்தேசத்திலும் புருஷர்களண்டை நெருங்குகிறதில்லை. நம்மூர் பெண்டுகளையே பிடிப்பானேன்? *அபலைகளின் சுபாவபயம் அவர்களைப் படிப்பிக்காததினால் வளர்ந்தது. பூமியில் வேறெங்கும் இடமில்லாமல் அலையும் பிசாசுகளுக்கு ஸ்திரீகள் தங்களுடைய மிருதுவான மனதில் குடியிருக்க இடமும் ஆஷாட பூதி மந்திரவாதிகளுக்குப் பிழைப்பும் செய்விக்கிறார்கள்.

நம்மூரில் என்றால் மாந்திரீகன் மந்திரமூலமாய் சூன்யமிட்டுப் போட்டானென்று சொல்லுகிறோம். மற்றதேசங்களிலும் இதுமாதிரி உண்டு. மந்திரத்தினாலல்ல. இத்தலி (Italy) தேசத்தில் ஒருவன் வழியில் போவானை பலக்கப்பிடித்து இழுத்து வெறிக்கப் பார்த்து உரக்கக்கூவி 'ஓய் நீர் இன்னம் 15 நாளில் இறந்து போய்விடுவீ'ரென்று சொல்ல வெகு ஜனங்கள் குறித்தநாளில் இறந்துகிடந்தனராம். இங்கே மந்திரம் ஏது. அவன் சொல்லுவதில் ஒருவேளை அப்படி நடந்துபோமோ வென்று நினைந்து நினைந்து வரவழைத்துக்கொண்டார்கள்.

நமக்குவரும் தீமை மந்திரத்தினாலல்ல. நமக்குள்ள மந்திரத்தினால் அதுபோகும் வழியும் அற்புதமே. "மந்திரத்தினால் மாங்காய்விழுவதுமுண்டு." ஒருபெண்ணுக்கு மேலெல்லாம் பாலுண்ணியாய் இருந்தது. வீட்டுக்குவந்திருந்த ஒரு சிநேகிதர் சும்மா, 'பாலுண்ணிகளை எண்ணியிருக்கிறாயா?' என்றார். 'இல்லை' யென, 'எண்ணினாயானால் நான் இன்னொருதரம் வருமுன் எங்கேயோ போய்விடும் அம்மா' என்று சொல்லிப்போனார். பாலுண்ணிகளும் கூடப்போயின.

நம்தேசத்தில் சில்விஷமென்ற ஒரு குழந்தை வியாதிக்கு மந்திரித்த ஜலம் தவிர வேறொரு மருந்தும் போடுகிறதில்லை. மந்திரஜலத்தினால் அதுசௌக்கியமாய் விடுகிறதென்பது நிச்சயம். இங்கு மந்திரசக்தியும் முன்சொன்ன இடத்தில் வேறு சக்தியுமென்று சொல்லக்கூடும். இரண்டிடத்திலும் மாந்திரீகனாவது, சிநேகிதராவது செய்தது ஒன்றுமில்லை. ஜனங்களுக்குள்ள 'இப்படிசெய்தால் போய்விடும்' என்கிற நம்பிக்கைதான்.

ஐரோப்பிய சாஸ்திரிகளே இந்த ஆச்சரியத்தைபூரணமாய் ஒப்புகொண்டிருக்கிறார்கள். பிராஞ்சுதேசத்தில் ஒரு பெண்ணுக்கு கண் தெரியாது இருந்ததாம். வைத்தியரைக்கேட்க கண்ணை கத்தியினால் சுரண்டி பார்க்கவேணுமென்றார். அடுத்திருந்த ஆண்டிஸ்திரீ ஒருத்தி 'அதுபோகட்டும் நீ வாசலில்புறப்பட்டுவரும் சுவாமியை துதித்து சுவாமியின்பாதத்தைகண்களில் ஒத்திக்கொள்கண்தெரியும்,என்க அப்படியே செய்து அனுகூலப்பட ஆரம்பித்து வைத்தியர்வரவு அனாவசியகமாய்போய்விட்டது. நம்முடையபாம்புகடிக்காகச் செய்யுமந்திரங்களில் கடிபட்டவனைகோடுகள்போட்டுதாண்டச்செய்வதும் வீணல்ல. மந்திரத்தின்சக்தியென்று தனியாகவொன்றிராவிடினும் அதில் பயன்படுகிறதென்பது உண்மை. தீர்த்த யாத்திரை போவதும் திருப்பதி முதலிய சன்னிதிகள்போய் சேவிப்பதும் மருந்தைச் சாப்பிடுவதிலும் அதிக பயனுள்ளதாகக் கூட இருக்கலாம். மருந்து என்றால் நாட்டில் இரண்டுகக்ஷியுண்டாயிருக்கிறது. இங்கிலீஷ், கர்னாடகம் என்ற இரண்டில்,அதிலும்பக்தியுமில்லாமல் இதிலும் ஆசைவிடாமல் பழைதப்பழைதவிட் தீர்த்தங்களும் கோயில்களும் கைகண்டபலன் கொடுக்கும் ஆஸ்பத்திரிகளாக,அகாரணமாய் வெகு வியாதிகளை சம்பாதித்துக் கொள்ளும் பேதைகளான நம்ஜனங்களுக்கு கருணையால் ஏற்பட்டிருக்கின்றன. இதுவும்தவிர பெரியோர்கள் எல்லாக்காலங்களிலும் எல்லா தேசங்களிலும் வியாதிகளை தீர்த்திருக்கின்றனர். வைத்தியத்துக்கு எட்டாதஅற்புதங்களும்செய்திருக்கின்றார்கள். அவர் அனுக்கிரகத்தால்,தரிசனத்தால்,அவராடையைஸ்பர்சிப்பதால் முடவர்கள் எழுந்து, குருடர்கள் விழித்து, ஊமைகள் பேசி, செவிடர்கள் சப்தங்கள் கேட்டு ஆனந்தித்திருக்கிறார்கள். சீதாதேவியை வசிஷ்டமாமுனிவர் 'வீரனை பிரஸவிப்பாய்' என்று அனுக்கிரகிக்க ஸ்ரீராமன் அனுக்கிரகத்துக்கு வந்தனஞ்செய்து 'லௌகீகஜனங்கள் அர்த்தத்தைப்பார்த்துபேசுகிறார்கள். புராதானமான ரிஷிகளோபேசுவதுதான் தாமஸம், அர்த்தம் உடனே பின்தொடரும்'என்று சொல்லியபடி பெரியோராக மதிக்கப்படுவோர்க்கு இது ஒரு அசாத்தியமான காரியமன்று. பக்திக்கு நிகரொன்றுமில்லை. மலையையும் இதழ்போல அசைக்கும். † "மெல்லிய பூமாலை கத்தியாகும், கத்தியும் பூவாய் மாறி அலங்கரிக்கும்"

நம்மூருக் கருகாமையிலே இருப்பதியில் ஒருபெரியவரிருக்கிறாராம். அவரிடத்தில் போகும்வியாதிபிடித்தவர்களைப்பார்த்து 'அப்பா, [illegible] நீ [illegible] விளையாடமாட்டா'யென்று சொல்வதுதான் தாமசம் உடனே வருத்தப்பட்டுக்கொண்டிருந்தவர் மனமகிழ்ந்து வியாதி நீங்கி சௌக்கியமடைவதாக நாம் நேரிலறிந்தவர் சொல்லக்கேட்டோம்.

தஞ்சாவூர் ஜில்லாவில் வெகு பிரசித்தமாய் நெகபுரம்சுவாமி என்றொருவர் தெய்வமாய் வழங்கிவந்தார். அவரைப்பற்றியாவது அவர் குணங்களைப்பற்றியாவது கேட்பது ஆவசியகமன்று. ஜனங்கள் என்ன நினைத்தார்கள் என்பதுமாத்திரம் அறியவேண்டும். தெய்வமாய்க்கொண்டு வெகு வியாதிகள் உண்மை

* அபலைகள் = பலமற்றவர்கள் என்று ஸம்ஸ்கிருதத்தில் ஸ்திரீகளுக்கு ஒருபெயருண்டு.

† காளிதாஸர்.

யில் தீர்த்துக்கொண்டு வந்தனர் என்பது எவரும் சொல்லக்கூடிய விஷயம்.

“பெரியோரைப் பார்ப்பதும் போதும், அவரது புன்சிரிப்பும் விசுவாசமும் வீணாகாது. அவரது கை மேற்படுவது வைத்திய கோடிகளின் சக்தியுள்ளதல்லவென்று சொல்ல திராணியுள்ளவர் யார்” என்று பிராஞ்சு சாஸ்திரி ஒருவர் சொல்லுகிறார்.

பெரியோராயிருப்பதும் அவசியமல்ல. அற்பராயினும் அவர் தனக்கு சக்தியில்லையென்று சத்தியம் பண்ணுவாராயினும் ஜனங்களுக்கு நம்பிக்கை சிரத்தையுண்டானால் போதும். இங்கிலாந்தில் ராஜவியாதி என்றொரு குழந்தைகளைப் பிடிக்கும் பாலபீடை உண்டு. அது ராஜா தொட்டால் போய்விடும்; ஆனதால் ராஜவியாதி என்றுபெயர். சில அரசர்கள் இதென்ன பைத்தியம். நாமாவது வியாதியை போக்கவாவது அந்த பாசாங்கு நாம் செய்யமாட்டோம் என்று கோபித்து இனிமேல் ஜனங்கள் குழந்தைகளை தூக்கிக்கொண்டு தன்னிடம் வரக்கூடாதென்று விளம்பரப்படுத்தினார். அப்படிசெய்யவே ஜனங்கள் அவரை கடுநெஞ்சர் என்று எங்கும் தூற, வைதிகர்கள் எல்லாரும் இப்படி செய்வது அதருமம், வேதத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட சக்திதான்என்று புஸ்தகங்கள் எழுதி சாதிக்கத் துவங்கினார்கள். வைத்திய சாஸ்திரிகளும் இந்த வியாதிக்கு வேறு மருந்திலலையென்று ஒப்புக்கொண்டார்கள். சிலகுழந்தை வியாதிக்கு அக்கி என்றுசொல்லி எழுதுவார். சிவந்த காவித்தண்ணியினால் வரும்பயனைவிட அப்படிசெய்தால் நல்லது என்றநம்பிக்கையே அதனாலுண்டாகும் நன்மைக்கு காரணம்போல் தோற்றுகிறது. இப்படி பயத்தினால் வியாதியும், நம்பிக்கையினால் நிவிருத்தியும் நேரிடுகிறதென்று சொல்லுகின்றோமே, அப்படிப்போல் அன்பினால் நண்பரது உருவத்தை அநவரதம் தியானித்தலால் அவரது உருவத்தைப்போல் நம்முருவமும் மாறலாம்.

ஒருயிர் ஈருடலாய் ஒன்றுகூடி கொஞ்சிவாழும் ஸ்திரீபுமான் இருவர் இருந்தார்கள். அவர்களுடைய அன்பு இத்தன்மையானது: “சுகத்திலும் துக்கத்திலும் ஒன்றாய், எல்லா திசைகளிலும் இனிமையாய் வயதினால் மாறாத உருசியுள்ளதாய், வருத்தமுற்ற மனதுக்கு ஓர் இளைப்பாறும் இடமாய், மேற்சடைகள் உதிர்ந்த கனிபோல் காலத்தில் கபடம் ஒழிந்த அன்போடுகூட”என்று கவிசொல்லியபடி கூடிவாழ்ந்தார்கள். அவர்கள் வயதானபின் இருவர் முகச்சாயலும் ஒன்றாய்மாறி அவர்களை பகுத்தறிவது கடினமாய்விட்டது. இந்த அற்புதத்திற்கு காரணமென்னவென்று சொல்லுவோம். இடைவிடாது அந்த ரூபத்தில் தியானம்தான், தேகம் மனதின் போக்கறிந்து ஒத்து நடக்கும் தாசி அல்லவோ? புழு குளவியானாற்போல்தான். இப்படி மனதுவைத்த ரூபங்களை நாமே அடையாவிட்டாலும் கருப்பத்தில் உண்டாக்கலாம்.

மாடுவளர்ப்பு அறிந்தவர் கிடாரிகள் அனேகமிருந்தாலும் அழகிலும், உயரத்திலும், புஷ்டியிலும் சிறந்ததாய் சிவபெருமான் வாகனம்போன்ற ரிஷபம் ஒன்றே வாங்கிவைப்பார். ரிஷபராஜனை கிடாரியின் எதிரில் நிறுத்தி சற்றுப் பார்த்திருந்தபிறகு கண்ணைக் கட்டிவிடுவார்கள். பிறகு எந்த மாட்டோடு புணர்ந்தாலும் ராஜாக்காளைபோல் கன்றுபோடும். அதின் மனதில் பதிந்த உருவமெதுவோ அதுவே கருப்பத்திலும் பதியும். இந்த உண்மையை மனுஷியர்களும் அறிந்து அனுசரிப்பார்கள். படுக்கை யறைகளில் அற்புத ரூபங்களடங்கிய சித்திரங்களை வைத்திருப்பார்கள். அன்றியும் யதார்த்த சரித்திரம் இதை நன்றாய் விளக்கும். ஒரு புருஷன் தன் உயிர்த்தோழியான நாயகி இறந்துபோக இரண்டாம்தரம் மணம் புரிந்தார். தன்மனதிலே குடிகொண்டு ஸ்வப்நத்திலும், விழித்திருக்கும்போதும் அல்லும்பகலும் பிரியாதிருந்த முதல் மனைவியின் சாயலாய் ஒரு குழந்தை பிறந்தது. குழந்தை தாயைப்போலுமில்லை தகப்பனைப்போலுமில்லை: மற்ற இருதாத்து முன்னோர் எவரைப்போலுமில்லை. ரக்தசம்பந்தம் கொஞ்சமுமில்லாத மூத்ததாயாரின் உருவத்தை அடைந்தது ஆச்சரியந்தான். மனதின் அண்டாத சக்தியால் தகப்பன் நினைத்துக் கருதிய பிம்பம் உண்டானது காலனையும் இகழத்தகுந்த அன்பின் அளவிலாப் பேறே தவிர வேறில்லை. இப்படியாய் உருவம் முதல் தியானத்தினால் மாற்றலாமென்றால் உலகத்தை புண்ய பூமியாக்கியிருக்கும் பெரியோர்களுடைய நடத்தையை மனதில் தியானித்து அவரதுவழியை பின் தொடருவது அசாத்தியமில்லை. அதுவே மனிதன் பெருமை.

இதுவரையில் நாம் சொல்லிவந்ததெல்லாம் மனுஷியன் தன் ஞாபகத்துடன் நடந்துவிடும் என்ற நம்பிக்கையாலும், நடக்கவேண்டியதாக எப்பொழுதும் தியானித்ததாலும் நேரிட்ட தேகவிகாரங்கள்.

பற்பல உபாயத்தால் தன் நினைவு அற்றவனாக செய்து வசீகரணம்செய்து இட்டது செய்யும்படி பண்ணுவதுமுண்டு. ஒருவனை சுவற்றில் ஒருபொட்டை குறிப்பாய் கண்கொட்டாது பார்க்கச்சொல்லுதல், அங்கங்களை மிருதுவாய் தடவிக்கொடுத்தல் முதலிய உபாயங்களால் அவன் சிறிதுநேரம் கழித்து மெய்மறந்து கண்மூடிவிடுவான். அந்த ஸ்திதியில் எதிரிலிருப்பவர் எது சொன்னாலும் ஜாடைகாட்டினாலும் அதின்படி ஆடுவான். அரப்பைக்கொடுத்து



சர்க்கரையென்றால், ‘என்ன, தித்திப்பா யிருக்கிறது, இன்னம்வேண்டு’மென்பான். தூங்கென்றால் தூங்குவான்; சுவர் இருக்கும் இடம்பார்த்து வழியென்றால் அதின் வழியாகப்போக முயல்வான். கையை தூக்க முடியாதென்றால் என்ன பிரயத்தனம் பண்ணினாலும் முடிகிறதில்லை.

இவ்வளவு கூட செய்யாமல் ஒருவனை தெருவில் கண்டமாத்திரத்தில் நீடொன்று ‘நீ என் வீட்டுக்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமை 12 - மணிக்கு வந்துகத வைத்தட்டு’என்றால் அப்படியே மினிட்டுப்பிசகாது வந்து நிற்பான். கொஞ்சநாள்முன் ஸ்காத்லாந்து தேசத்தில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் இருமாணாக்கருக்குள் போட்டிவந்து ஒருவனை இம்மாதிரிகுறித்த காலத்தில் 15மயில் தூரத்திலுள்ள ஊருக்குப்போகும்படி செய்கிறதென்று ஒருவர் சபதங்கூறினார். மற்றவரும் அதை தடுப்போமென்று ஆணவம் பேசினார். அந்த மனுஷியரிடத்தில் எதிரில் கணீரென்று இந்த சமாசாரத்தை உச்சரித்தார். அன்றுமுதல் இவனை எப்படியாவது 15-நாள் எங்கேயாவது அழைத்துப் போவதென்று தீர்மானித்து வெகுதூரம் அழைத்துப்போய் வேறே விஷயங்களைப்பற்றிய பேச்சுப் பேசி குலாவிக்கொண்டிருந்தார்கள். குறித்த நாள் நெருங்கவே அவருக்கும் ஒரு பரபரப்பு உண்டாகி புறப்பட யத்தனித்தார். கைபிடித்து தடுத்த சினேகிதனை அதிகபலத்தோடு சாக்கடையில் வீழ்த்திபுறப்பட்டு குறித்த மினிட்டு தப்பாமல் வீடு வந்து சேர்ந்தார்.—என்று தகுந்த பத்திரிகையொன்றில் படித்தோம்.

இந்த சங்கதியைக்கொண்டு வியாதிகளை உண்டாக்குவதும் நிவிர்த்திப்பதும் சாத்தியமே. பாலில்லாத ஒருஸ்திரீக்கு இம்மாதிரியாய் பிரக்ஞாபங்கம்பண்ணி வலது தனத்தைப் பார்க்கும்படி செய்ய உடனே பாலுமிருந்து குழந்தைக்குக் கொடுத்துவந்தாள்.

பாரிச வாயுமுதலிய வியாதிகளைக்கூட கண்டிக்கும் சக்தி இந்த மாதிரி வைத்தியத்துக்குண்டு. இம்மாதிரி வைத்தியசாலைகளே பிராஞ்சுதேசத்தில் வைத்து செழித்து வருகின்றன. இம்மட்டோ! கொடிய பாதகனையும் நல்ல மாதிரியாயிருப்பாயென்று சொன்னமாத்திரத்தில் சன்மார்க்கத்துக்குக் கொண்டுவந்துவிடலாம். அப்படி யிருக்குமானால் அதினால் உண்டாகும் அற்புதங்கள் இன்னவென்று சொல்லமுடியாது.

உலகமுழுவதும் இவ்வகை வைத்தியசாலையில் போய் பரமதருமிஷ்டர்களாய் திரும்பி வருகிறதென்றால் என்ன அதிசயம். உலகமெல்லாம் ஆட்டுஜாதிபோல் மனுஷியர்கள் துஷ்டகுணங்கள் நீங்கி இருப்பார்கள். ஆனால் ஆட்டை அதின் குணத்திற்காக பூஷிக்கிறோமோ? மரம் நிழல் தருவதற்காக அதின் தழையைத் துதிக்கிறோமோ? வேறுவிதமாய் இருப்பது அவர்களுக்கு அசாத்தியம் ஆகையால் நற்குணம் தீயகுணம் என்ற பதத்திற்கு அர்த்தமேயில்லை. மனுஷியனுக்கு நன்மை தீமை இல்லாமலே போய்விடும். இப்படி யோஜிப்பதற்கு முன் இந்த குணத்தைமாற்றும் அபாரசக்தியை பாபபுத்தியுள்ள அற்பமனிதனுக்கு ஒப்புவித்தால் என்ன பொல்லாங்கு நேரிடாது. எல்லாரும் நல்லதே செய்ய வேண்டுமென்று கருதும்பட்சத்தில் யதேஷ்டம் செய்யும்படியான சக்தி இருப்பது நல்லதாயிருக்கும். இன்னும் இந்த சக்திக்கு ஓர் கரையில்லை.

இராமனை சற்று கைப்பொத்தானை உற்றுப்பார்க்கவிட்டு கண்ணைமூடவே அப்பா நீ இராவணனென்றால் ‘ஆம் நான் இராவணன்தான், சீதாதேவியைப் பிடித்து வந்தேன்’ என்பான். இராமனைப்பற்றிக் கேட்டால் ‘ஓ அவன்மானிடப்பயலே அவனை தலைத்துவிடுவேன்’என்று பேசுவான். தன்னை தெரியுமாவென்று கேட்டதற்கு கேள்விப்பட்டதே இல்லையென்றும், அவன் மூர்க்கனென்றும் இவ்வாறு தன்னைப்பற்றி பேசுவான்” தான் கிறிஸ்து அவதாரம் என்று நம்பின ஒரு பெண்ணுக்கு அவர்போல் சனுக்காலில் சிலுவை அடித்த இடத்திலிருந்து இரத்தம் பீறிவந்தது என்றும் கேள்விப்படுகிறோம். அப்படி மயிர்க்காம்பால் இரத்தம்வருவ துண்டென்று இங்கிலீஷ் சாஸ்திரி ஒருவர் சொல்லுகிறார்.

இப்படி வேறொருவன் என்று நினைக்கும்போது அவன் இறந்தானானால் அவன் ஆத்மா தன்னுதா, அல்லது தானென்று பிரமித்து நம்புகிறானே அவனதா என்று வித்வான்கள் வினவுவார்கள். ஆத்துமா நான் இருக்கிறேன் என்ற ஒன்றாவது ஜகத்தில் உண்மை யென்பார்கள்: அதுவும் நம்பத்தகாததென்றால் வேறென்னதான் கதி?

இவ்விசாரத்தின் முடிவை ஒருவாறு யோஜிப்போம். மந்திரங்களை நகைப்பதும் யோகமுதலியவைகளை தூறுவதும் படித்தவருக்கு அசாத்தியம், படிக்கும் பையனை முதல்மாதக் கடைசியில் என்ன படித்தாயென எல்லாம் அறிந்துவிட்டேனென்றான். மறுமாதம் கேட்க பாதி தெரிந்தது என்றான். மறுமாதம் கால்வாசிதான் தெரிந்ததென்றான். போகப்போக அவன் மௌட்டியத்தை அறிந்துகொண்டான். அதுபோல பால்கடல்போன்ற ஞானஸமுத்திரத்து கரையில் நிற்கும் பூனையாகிய நாம் கர்வம் கொள்ளலாகாது என்த்தெரிகிறது. அன்றியும் நாம் சொன்னதிலிருந்து, மனதுவைத்தால் ஏவனும் தன்னிடத்திலுள்ள தியானத்தின் அற்புத சக்தியால் நற்குண நற்செய்கைகளுள்ளவனாய் ஆகலாமென்பது நன்றாய் விளங்கும்.

ஏ. ஸ்ரீனிவாஸய்யர், பி. ஏ.

---

பிழைதிருத்தம்.—இந்த விஷயத்தில் 167-வது பக்கம் முதல்கலம் 13-வது வரியில் கண்ட “அடுத்தது காட்டும்” என்னும் குறளடிபிசகாய் அச்சிடப்பட்டுப்போனதைப் பின்வருகிறபடி சரியாய்த்திருத்திக்கொள்ளவும்: “அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்.”

## ஆபத்துக்கிடமான அபவாதம்
### அல்லது
### கமலாம்பாள் சரித்திரம்.

### IX.

முத்துஸ்வாமி அய்யருடைய கிரஹத்தில் நடந்த நிச்சயதார்த்தத்துக்குக்கூட அவர்தம்பி சுப்பிரமணியய்யர் போகவில்லையென்று முன்னமேயே நாம் சொல்லியிருக்கிறோமல்லவா? அவர் பாரிசத்தலைவலியுடன் படாதபாடுபடுகிறார்என்று அவரைக்கூட்டிவரப்போன சுப்புளிஎன்பவன்மூலமாக அறிந்த முத்துஸ்வாமிஅய்யர் நிச்சயதார்த்தம் முடிந்த மறுநிமிஷமே அவரைப்பார்த்துவரும்படி அவர்வீட்டிற்குச் சென்றார். அவர்வருவதைக்கண்ட சுப்பிரமணியய்யர் முன்னிலும் பதின்மடங்கு அதிகமாய் அலத்திக்கொண்டு படுக்கையில்கிடந்து அங்குமிங்கும் தலைவிரிகோலமாய்ப் புரளத் தொடங்கினார். அவர் அருமைமனைவியாகிய பொன்னம்மாளோ அவருடைய தலையைக் கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு 'ஐயையோதெய்வமே, என்னசெய்வேன் என்னசெய்வேன்' என்று தேம்பித்தேம்பி கண்ணீர்பெருக்கியவண்ணமாயிருந்தாள். இவர்களுடைய கோலத்தைக்கண்ட முத்துஸ்வாமிஅய்யருக்குத் தன்னையறியாமலே கண்களில் ஜலம்வந்துவிட்டது. அதை அவர் ஜாடையாய்த்துடைத்துக்கொண்டு"'சுப்பிரமணியம், சுரபிப்மணியம்,என்னசெய்கிறதடாஅப்பா? தலைவலியானால் முன்னமேயே எனக்குச் சொல்லிவிடவேண்டாமா' என்றுசொல்லி அவருடைய தேகஸ்திதியை நுட்பமாய் விசாரித்துக்கொண்டு அவருடைய கையைப் பிடித்துப்பார்த்தார். கைநாடி வெகு சரியாக இருந்தது. அதில் யாதொரு வித்தியாசமும்தெரியவில்லை. பிறகு தலையைப்பிடித்துப்பார்த்தார்.அங்கும் ஓர்வித மாறுபாட்டையும் காணோம். இவ்வளவுகொடுமையான தலைவலிகூட கைநாடியில் காட்டப்படாததைக் கண்டு அவர் வெகுஆச்சரியத்துடன் சிறிது தலைநிமிர்ந்தார். நிமிரவே, தான்செய்த தந்திரத்தைத்தன் மைத்துனர்கூடத் தாராளமாய் நம்பியதைக்கண்டு சிரிப்புவர அதைஅடக்கும்படி தன்னால்ஆனமட்டும் சிரமப்பட்டுக்கொண்டிருந்த பொன்னம்மாளுடைய முகம் அவர்கண்களுக்குத் தற்செயலாய்த் தென்பட்டது. அதைக்கண்டவுடன் தலைவலி பொய்யோமெய்யோ என்று சந்தேகப்பட்டுக்கொண்டிருந்த அவருக்குப் பொறுக்கமுடியாதபடி கோபமும் வருத்தமும் பொங்கிற்று. அந்தக்கொடிய சாஹஸிசெய்த மோசத்தையும் அவள்கையில் அநியாயமாய் அகப்பட்டுப் பம்பரம்போல் தவித்துத்தத்தளிக்கும் தன்தம்பியின்நிலைமையையும் தன் நுட்பபுத்தியினால் கண்ட அவருக்கு அப்புறம் அரைநிமிஷமாவது அங்கேஇருக்கச் சஹிக்கவில்லை. உடனே அவர் நான்போய் வைத்தியரை அனுப்புகிறேனென்று சொல்லிவிட்டுக் குபீரென்று எழுந்திருந்து வெளியேபோய்விட்டார். மறுநாள் தன்தம்பியை வரவழைத்து உடம்புஸ்திதியைப்பற்றிச் சற்றுவிசாரித்துவிட்டு,நிரம்ப வருத்தப்பட்டவர்போலச் சிறிதுநேரம் மௌனமாயிருந்து பிறகு அவரைப்பார்த்து 'பைத்தியகாரா, போ,பைத்தியகாரா! பெண்டுகளுக்குள் ஆயிரமிருந்தாலும் அதெல்லாம் நாம்மேலேபோட்டுக்கொள்ளலாமோ'என்று ஜாடையாய்க்கண்டித்துவிட்டு, கல்யாணவிஷயங்களைக்குறித்து அவரை சிலயோசனைகள்கேட்டுப், பிறகு 'ஆயிரம், ஆயிரத்தைந்நூறுரூபாய்க்கு ஜவுளிவாங்கவேண்டும். இப்பொழுதுமுதல் சாமான்களைத் தயார்செய்தால்தான் முகூர்த்தத்துக்குச் சரியாகவரும். நீதான் எல்லாவற்றையும் பொறுப்பாய் பார்க்கவேண்டும்'. என, அவரும் அவைகளை அப்படியே செய்வதாகத் தாராளமாய் ஏற்றுக்கொண்டார். அவர் தன்தமையனிடத்தில் நிரம்ப பயபக்திவிசுவாசமுள்ளவர்; அவரைப் பிதாவுக்குச்சமானமாய்ப் பாவித்துவந்தார். அவரிடத்தில் எதிராகநின்றுகூடப்பேசமாட்டார். கல்யாணத்துக்குவந்திருந்தவர்கள்எல்லோரும்,அவருடைய சகோதரவாஞ்சையையும், மரியாதையையும், விதரணையையும் நிரம்பக் கொண்டாடும்படி கல்யாணக்காரியமுழுவதையும் அவரே பொறுத்துப்பார்த்தார். இவர் எவ்வளவுக்கெவ்வளவு கல்யாணத்தைப் பரிமளிக்கச்செய்தாரோ, அவ்வளவுக்கவ்வளவு அவர் மனைவி பொன்னம்மாள் அதைக்கெடுக்கப் பிரயத்தனப்பட்டாள். கல்யாணத்தைத் தடுத்துவிடக்கூட அவள் சிலமுயற்சிகள்செய்தாள். நல்லவேளையாய் ஒன்றும் பலிக்கவில்லை. பிறகு அதைத் தடுக்காவிட்டாலும் கெடுத்தாவதுவிடுகிறதென்று தீர்மானம்செய்துகொண்டு, சமையலைப் பழித்தாள், சீர்வரிசையைப்பழித்தாள், பெண்ணைப்பழித்தாள், கடைசியில் கமலாம்பாளைப்பற்றி அவளுடைய சம்பந்திகளிடத்திலேயே அவதூறுபேசத்துணிந்தாள். நடந்த சங்கதிமுழுவதையும் தன் நுட்பபுத்தியாலறிந்த கமலாம்பாள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு போனதுமன்றி தங்களைப்போல் ஓர்ப்படிகள் உலகத்தில் கிடையாதென்று கண்டோர் சொல்லும்படி அவளுடன் சிரித்துவிளையாடிப் பரிகாசம்செய்தாள். அவளுடையசுபாவம் பெருந்தன்மையான சுபாவமானதால் முன்னே தன்னைப் பொன்னம்மாள் ஆற்றங்கரையில் வைத வசவுகளெல்லாம் அவளுக்கு ஞாபகங்கூடஇல்லை. இவள் அன்புபாராட்டப்பாராட்டப் பொன்னம்மாளுக்கு இவளிடத்தில் பொறாமை அதிகமாயிற்று. சுப்பிரமணியய்யர் ஓடிஓடிக் காரியம்செய்வதைக் காணும்போதெல்லாம் அவளுக்கு உண்டான கோபத்திற்கும் எரிச்சலுக்கும் அளவு சங்கையில்லை. அவர் கல்யாணத்திற்கு நாலுநாளைக்கு



முன் வீட்டுக்குப்போனவர்தான். அப்புறம் அந்தப் பக்கமே திரும்பவில்லை. கல்யாணம் முடியும்வரைக்கும் அவருக்குவீட்டுக்குப்போகவேண்டிய அவசியமுமில்லை,பொன்னம்மாளுடையதயவும் தேவையில்லை; ஆதலால் அவள் தன்னை வீட்டுக்குவரும்படி என்ன ஜாடைகள்செய்தபோதிலும் அவைகளையெல்லாம் அவர் பாராதவர்போல் சும்மாஇருந்துவிட்டார். அவளும் சற்றுஅவசரமாய் வந்துபோம்படி சுமார் ஆயிரம்பேரிடம் சொல்லியனுப்பினாள். இவர்போகவேயில்லை. ஆனாலும் அவளிடத்தில் பயம்பயந்தான். ஒருதரம் அவள்கையில் அகப்பட்டுவிட்டால் தப்பிக்கிறது அப்புறம் அந்தஜன்மத்திற்கு இல்லையென்று அவருக்கு நன்றாய்த்தெரியும். எங்கே அவள் வந்துவிடப்போகிறாளோஎன்று அவர் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டேயிருப்பார். வருகிறாளென்று தெரிந்ததோ உடனே ஏதோ ஒரு பெரியகாரியம் பார்ப்பவர்போல வெகு அவசரமாகப்போய்விடுவார். அவள் உள்ளே வந்துவிட்டால் இவர் வெளியே போய்விடுவார். அவள் வெளியேவந்துவிட்டால் இவர் உள்ளே போய்விடுவார். அவள்வருகிறாளென்றுதெரிந்தால் இவர் தனியேயிருக்கிறதேயில்லை. (என்னசெய்துவிடுவாளோஎன்றுபயம் பாவம்!) 'அடா ராமசுவாமி, சுப்பண்ணு' என்று ஏதாவது ஒரு பேரைச்சொல்லி யாரையாவது கூப்பிட்டுக்கொண்டு கூட்டத்தின்மத்தியில்போய் ஒளித்துவிடுவார். இவர் இப்படி ஓடி ஒளிவதைக்கண்ட சிலபோக்கிரிப் பையன்கள் பொய்யாவது பொன்னம்மாள் வருகிறாள் என்றுசொல்லி வைக்கிறது. இவர் புலிவருகிறது என்றுகேட்டு ஓடிய ஆட்டிடையன்கதையாக விழுந்தெழுந்து ஓடுகிறது. இப்படி அவள்பெயருக்கே பயந்து ஓடி ஒளித்ததால் அவள் அவரைஎன்னதந்திரமாய் வெருட்டிவெருட்டி வேட்டையாடியும் அவர் அகப்படுவதாயில்லை.அவள் அவரைப்பார்த்துப் பல்லைக்கடித்துக்கொண்டு விரல்களை நெரித்துக்கொண்டு தன்னுடையகண்கள்மூலமாக எவ்வளவுகோபத்தை வெளியிடக்கூடுமோ அவ்வளவையும் காட்டினாள். ஒன்றும் பலிக்கவில்லை. இவ்வளவுதைரியம்இவருக்குஉண்டானது அவளுக்கு வெகுஆச்சரியமாயிருந்தது. அவரை எவ்விதம் தண்டனை பண்ணுவதென்றும் அவளுக்குத் தோன்றவில்லை. அவருடைய தைரியத்தையும் அலட்சியத்தையும் நினைக்கநினைக்க அவளுக்கு ஆச்சரியமாயிருந்ததால் அவள் ராத்திரிமுழுவதும் தூங்காமல் ஓயாத யோசனைகள் எல்லாம்செய்தாள். தன் கோபந்தீர அவரைவைதுதிட்டி அவருக்குப்புத்திகொடுக்கவேண்டுமென்றுகூட ஒருநாள் தீர்மானம்செய்தாள். ஆனால் அப்படிச்செய்வது தனக்கே விரோதமாகும்என்று அவளுக்கு மறுநாள் பட்டது. ஆகையால் அவரை நயவஞ்சகமாய்த் தன்னிடம்வரவழைத்து வசியமருந்துசெய்து அதைப் பாலில்கலந்து அவருக்குக்கொடுத்துவிடுகிறதுஎன்று கடைசியாய்த் தீர்மானம்செய்துகொண்டதுமன்றி துஷ்டப்பெண்கள்கையில் ஒரு கூர்மையான வாளாயுதம்போல்விளங்குகின்ற அந்த வசியமருந்துஎன்னும் விஷமருந்தை இங்கேசொல்லத்தகாத அனேகசரக்குகளைச்சேர்த்து மறுநாளே தயார்செய்துகொண்டு 'எப்போவருவாரோ என்தன் சாமி' என்று வெகுஆவலுடன் தன்புருஷனுடைய வரவை எதிர்பார்த்திருந்தாள்.

கல்யாணம் கழிந்தவுடன், சிறுகுளத்திலுள்ளோரெல்லோரும் மேளதாளத்துடன் இரண்டுமைல் தூரம் வந்து வழியனுப்ப சம்பந்திகள் மதுரைநோக்கிப்புறப்பட்டார்கள். அவர்கள்போன மறுநாள்ராத்திரி சுப்பிரமணியய்யர் தமதுபள்ளியறையில் கல்யாணசிரமந்தீர வெகு பிரமானந்தமாய் நித்திரைசெய்துகொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய உத்தம மனைவியாகிய "பொன்னம்மாள் மலையிலே விளைந்ததானாலும் உரலிலேதானேவந்து மசியவேண்டும்.' இத்தனைநாள் கல்யாணம் கொண்டாடினாலும் இப்பொழுதாவது வீட்டுக்குத்தானே வரவேண்டும். நம்முடையகையில் அகப்பட்டுவிட்டார்; இதுதான் சமயம், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். இதுவிட்டால் இனிக்கிட்டாது. ஆகையால் நன்றாய் அலங்கரித்துக்கொண்டு அவரிடம்சென்று நம்முடையஅழகாலும் பேச்சாலும் அவரைமயக்கி மறக்கடித்து மருந்தைக்கொடுத்துவிடுவோம்"என்று யோசனைசெய்துகொண்டு ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கும் வயிரம் பச்சை கோமேதகம் முதலிய நவரத்னங்களாலிழைத்த தனதுசர்வாபரணங்களையுமணிந்து அழகிய ஜவ்வாதுப்பொட்டிட்டு, அலங்காரமான வெண்பட்டுடுத்து, தாம்பூலந்தரித்த தன்பவளஉதடுகளில் இனியமந்தகாசந்தவழ, பாதசரங்கள் கலீர்கலீர்என்றுசப்திக்க, மெட்டிகள் 'பாராக்கு எச்சரிக்கை, பாராக்குஎச்சரிக்கை' என்றுகட்டியங்கூற, கமகமவென்று காததூரத்துக்கு வாசனைவீச கையில் தாம்பூலத்தட்டு ஏந்தி,பூங்கொடிபோலிடையசைய அன்னம்போலடிபெயர்த்துமதரதிபோற்கைவீசிதன்கணவரிடம்வந்து அவரை இனியவார்த்தைகள்கூறி மெதுவாய்த்தட்டியெழுப்ப, சாதாரணமாகவே அவளுடையஅழகில் மயங்கிக்கிடக்கும் அவளுடையபுருஷர் கண்விழித்துப்பார்த்து வாசனையோடுகூடிய பொன்புஷ்பம் போல்விளங்குகின்ற அவளைக்கண்டு நம்முடையபாக்கியமேபாக்கியம்என்று ஆனந்தபரவசமானார். அவர் விழித்தெழுந்ததைக்கண்ட பொன்னம்மாளோ அவரை 'என் அப்பன், என்குழந்தை, என்தங்கம், என் முத்து என்கண்ணுட்டி' என்றுவர்ணித்து தன்கைகளால் அவரை வாரியெடுத்து அவருடையஇருகன்

னங்களிலும் மாற்றிமாற்றி வாயோயாதுமுத்தமிட்டு அவர்மேல் மெதுவாய்ச் சாய்ந்துகொண்டு கல்யாணமானதுமுதல் அன்றுவரை அவர்அறியாத அவ்வளவு அன்புடன் அவருடன் கேளீவிலாசம்செய்து கொஞ்சிக்குலாவி உரையாடினாள். இவ்வாறுபேசிக்கொண்டிருக்கும்போதே திடீரென்று நினைத்துக்கொண்டவள்போல "ஓஹோ! பாலையெடுத்துக்கொண்டுவர மறந்துவிட்டேன்" என்று அவள்சொல்ல, சுப்பிரமணியஅய்யர் 'இருக்கட்டும்போ இதற்காக நீ மறுபடியும் போகவேண்டாம். இன்றைக்குஒருநாளைக்குப் பாலில்லாவிட்டால்என்ன இப்பொழுது' என, அதற்கவள் 'சே, நன்றாயிருக்கிறது இது ஒரு சிரமமா எனக்கு? கல்யாணத்தில் நிரம்ப சிரமம்: (அவர் உடம்பைத் தொட்டுப்பார்த்துக்கொண்டு) எதுக்கே நிரம்பஉஷ்ணமாயிருக்கிறது. அப்பொழுதே அப்படிஅலைகிறீர்களே உடம்புகெட்டுப்போமேஎன்று எனக்குஇருந்த விசாரம் எனக்குத்தெரியும். இப்படி உங்களுக்காகக் கவலைப்பட்டுக்கொண்டு வேளா வேளைக்குச் சோறில்லாமல் தண்ணில்லாமல் இராப் பகலாய்த் தூக்கமில்லாமல் நான் இங்கேகிடந்து தனியாய்த் தவித்துத்தத்தளிக்கிறது. நீங்கள் எனக்குத்தான் இந்தப்பூலோகத்தில் அதிசயமாய் அண்ணாவாம் இருக்கிறதுஎன்று அங்கேதானேசாப்பாடு அங்கேதானே படுக்கை யெல்லாம் பண்ணிக்கொண்டு நமக்குச்சமானம் நாம்தான்என்று பொழுதுபோக்குகிறது. ஆயிரமிருந்தாலும் உங்கள்முத்தண்ணா, நான் ஒன்றும் சொல்லப்படாது, பொன்னண்ணா. ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கெளிது என்றாற்போல் அவர் ஐயரவாள் கால்மேல் கால்போட்டுக்கொண்டு 'அடே சுப்பிரமணியா இந்தா அந்த வெற்றிலைப்பாக்குத்தட்டை எடுத்துக்கொண்டுவா' என்று அதிகாரம் பண்ணிச் சட்டமிடுகிறது. (அவர்முகத்தில் கையால்இடித்துக்கொண்டு) இது ஏமாளம் பரிசாரகப்பயல் போல அங்கேயும் இங்கேயும் ஓடி ஓடிவேலைசெய்கிறது. கூப்பிட்டாற்கூட தேகம்தெரிகிறதில்லை. நான் என்னசாதிக்கப்போகிறேன், அண்ணாவாவது பணக்காரர்' என்று சொல்லிவிட்டு அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு தன்முகத்தை அவர்முகத்துக்கு சமீபத்தில் வைத்துக்கொண்டு வெகு நளினமானபார்வையுடன் 'அவர் சொத்துமுழுவதும் உங்களுக்குத் தான் கொடுக்கப்போகிறாராமே. அவர்பெண்ணுக்குக்கூட இல்லையாம். எல்லாம் உங்களுக்குத்தானாம்' என்றாள். அந்தராட்சஸியினுடைய வார்த்தை நமக்கு கர்ணகடூரமாயிருந்தாலும் சுப்பிரமணியய்யருக்கு தேவகானம்போலவும் அமிர்தபானம்போலவும் இருந்தது. அவளுடைய நெருப்புமழை ஓய்ந்தவுடன் அவர் நிரம்பச்செல்வமாய் 'அடிபோடிபைத்தியக்காரி நீ என்னத்தைக்கண்டாய், எங்களண்ணாவுக்குச்சமானம் இந்தப்பூலோகத்தில் கிடைக்குமா' என, பொன்னம்மாள் 'ஐயோபோகட்டும், இப்படி யார்சொல்லப் போகிறார்கள். கிடக்கிறது பாலைச்சாப்பிடுங்கள்' என்று சொல்லிவிட்டு 'அண்ணா பயக்கமா இப்படி ஆட்டிவைக்கிறது. வா, வா, இன்றையோடு சரியாகப்போய்விட்டது. இனிமேல் இப்படிச்சொல்லுகிறதைப் பார்ப்போம்' என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டு மருந்துகலந்து தயாராய் வைத்திருந்த பாலை எடுத்துவந்து, கீழேவைத்தால் அவர் நிறம் மாறியிருப்பதைக்கண்டு சந்தேகித்துவிடுவார் என்றுபயந்து தன்கையிலேயேவைத்துக்கொண்டு இடதுகையால் அவரைக்கட்டியணைத்து மார்புமீதுசாத்திக்கொண்டு 'நீதான் கோந்தையாம் (குழந்தையாம்) நான்தான் அம்மாவாம், இங்கேவா பால்குடிச்சவா, என்னப்பனடா, வாடா, கோந்தை' என்றுகொஞ்சி அவருடைய இருகன்னங்களிலும் முத்தமிட்டுவிட்டுத் தானே அவருக்கு அந்தப்பாலைப்புகட்டினாள். அவள் தன்மேல் சந்தேகம் ஏற்பட்டுவிடும்என்று பயந்து இவ்வளவு சரஸம்செய்ய அதையறியாத சுப்பிரமணியஅய்யர் அவளுடைய விசேஷ அன்புக்கு இதை ஓர் அடையாளமாக எண்ணி 'இவ்வுலகத்தில் என்னைப்போல் யார் பாக்கியவந்தர்களிருக்கிறார்கள்' என்று தன்னையே புகழ்ந்துகொண்டு அவள் அழகின் மயக்கத்தால் பாலின் ருசியைக்கூடப்பாராமல் சாப்பிட்டுவிட்டார். சாப்பிட்டுச்சற்றுநேரத்திற்கெல்லாம் (மருந்து மிதமிஞ்சிக் கலக்கப்பட்டிருந்ததால்) 'பால் என்ன, என்னமோபோலிருக்கிறதே' என்றுசொல்லிக்கொண்டே வாந்திபண்ண ஆரம்பித்துவிட்டார். பொன்னம்மாள்சீக்கிரம்போய்பாத்திரத்தைஅலம்பிவைத்துவிட்டுஅவர்தலையைப்பிடித்துக்கொண்டாள். பாலைக்குடித்தபிராமணர்பாவம்இரண்டுநாழிகைவரையில் வாயோயாமல்வாந்திபண்ணிநிரம்பவருத்தப்பட்டார். அவர்மனைவி, வாந்திபண்ணினபோதிலும் அதிகமருந்து வெளியில் வந்துவிடவில்லையென்று கண்டு திருப்தியடைந்து 'பித்தம் அதிகரித்திருக்கிறது பால் கூடச்சேரவில்லை. பிசாசலைகிறாற்போல் அலைந்தால் பித்தமதிகரிக்காமல் என்னபண்ணும். எனக்கு அப்பொழுதேதெரியுமே. இந்தஇழவுகல்யாணம் நல்லதுக்காவந்தது, கல்லெடுப்பு. சுவாமி! இம்மட்டோடாவது போகவேண்டுமே, நான்என்னசெய்வேன்' என்று சொல்லிக்கொண்டே அழுவதாகப் பாவனைபண்ணினாள். சிலஸ்திரீகளுக்குப் பட்டணத்தில் குழாயைத்திருப்பினால் எப்படி ஜலம்வருகிறதோ அதுபோல் கண்ணைக் கசக்கினாற் போதும் பிரவாகம் புறப்பட்டுவிடுகிறது. அப்படி வரிகொடுக்காமல் வேண்டியகண்ணீர் வரவழைத்துக்கொள்ளும்படி வரம் வாங்கிவந்த அதிர்ஷ்டசாலிகள் எல்லாரிலும் பொன்னம்மாள் அதிகவிசேஷமானவள். இப்படி அவள்



அழத்துவக்கவும் சுப்பிரமணியய்யர் தன்வருத்தத்தைக்கூட மறந்து அவளை ஆற்றினார். இப்படியாக ஒருவரையொருவர் தேற்றிக்கொண்டே இருவரும் கண்ணயர்ந்தார்கள். ஆனால் தூங்குமுன், பித்தமதிகரித்திருக்கிறதென்றும் பித்தமதிகரித்ததினால் பால் சேரவில்லையென்றும் பால்சேராததினால் வைத்தியனைக் காலமே கூப்பிடவேண்டுமென்றும் அவர்களுக்குள் ஓர்தீர்மானம் செய்யப்பட்டது. அவர்கள்ஆடிப்பாடியமர வெகுநேரமாய்விட்டபடியால் இருவரும் அயர்ந்து நித்திரைபோய்விட்டார்கள்.

இவர்கள் தூங்கி யிரண்டுநாழிகைக்கெல்லாம் திடீரென்று 'ரணபாதகா, ரணபாதகா, கடன்காரா, ரணபாதகா' என்று ஓர்சப்தம் உண்டாயிற்று. அப்பொழுது முத்துஸ்வாமியய்யரும் கமலாம்பாளும் தங்கள் வீட்டுமொடியில் நெடுநேரம்வரையில் மாப்பிள்ளை, சம்பந்தி, கல்யாணம் முதலியவிஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு பிரமானுபூதிச் செல்வராகிய தாயுமானசுவாமிகளுடைய திருவருட்பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள். அப்பாடல்கள் அவர்களுக்கு ஓர்தெவிட்டாத திவ்யதேஜோமயானந்தத்திருப்பாற்கடலாயிருந்தது. அவற்றை அவர்கள்மெய்ஞ்ஞானக்களஞ்சியம்என்றும் பேரின்பநிமலவூற்றென்றும் போற்றிப் புகழ்வதுவழக்கம். அவர்கள் இன்பமடைந்திருக்குங்காலத்தில் அமிர்தமயமான சந்திரிகை பிரகாசிக்கும்பொழுது ஆநந்தப்பரவசப்படுத்தும் கானரசமும்சேர்ந்தால் எப்படியோ அப்படியும் துன்பம்வந்தகாலத்தில் எரிகின்றகோடைப்பருவத்திற்கு தென்றல்எப்படியோ அப்படியும் உதவிய அப்பாடல்கள் அவ்விருவருக்கும் சிறந்த ஓர் சிற்றுயிர்க்குற்ற துணையாய் விளங்கின. சிற்றின்பத்திற்கும் பேரின்பத்திற்கும் சிறிதுதூரந்தான் என்று காட்டுபவள்போலத் தாயுமானசுவாமிகளுடைய ஆனந்தக்களிப்பைக் கமலாம்பாள் வீணைக்கிசைத்து வீணையின்நாதமும் தன்குரலும் ஒன்றோடொன்று அன்னியோன்னியமாய் வேற்றுமைதெரியாதுத் தழுவிக் கிடக்கும்படி வெகு இனிமையாயும் மிருதுவாயும் பாட முத்துசுவாமிஅய்யர் சிற்சிலசமயங்களில் கூடப்பாடியும் மற்றசமயங்களில் கேட்டுக்கொண்டுமிருந்தார். அங்கே பொன்னம்மாள் தன்புருஷனுக்கு விஷமிட்டுக்கொண்டிருந்தாள், இங்கே கமலாம்பாள் தானும் தன்புருஷனுமாய்ப் பேரின்பப் பாற்கடலில் ஆனந்தக்களிப்புடன் ஆடிப்பாடி விளையாடிக் கொண்டிருந்தாள். இப்படி யிருக்குங்காலத்தில் திடீரென்று அந்த இருண்டராத்திரியில் 'ரணபாதகா, ரணபாதகா, கடன்காரா, ரணபாதகா' என்று மேலே சொல்லியபடி ஓர்கூக்குரல் கேட்கவே இருவரும் திடுக்கிட்டு ஒருவரை யொருவர் பார்த்தார்கள். கமலாம்பாள் நடுங்கிப் போய்விட்டாள். முத்துஸ்வாமி அய்யர் அவளைத் தைரியப்படுத்திவிட்டுக் கீழே இறங்கிவர, சமீபத்தில் ஒருவர் வீட்டில் பலர்கூடிப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்த சப்தம்கேட்டது. அது 'எருமைத்தொண்டை' குப்பாசாஸ்திரிகளுடைய கிரஹம். அவர் சம்சாரம் பகிஷ்டையா யிருந்ததால் கொட்டடத்தில் மாடுகட்டியிருந்த இடத்திற்குச் சமீபத்தில் படுத்துக்கொண்டிருந்தாள். அவள்அரையில் ஒரு கருப்புத்துணி கட்டியிருந்தாள். அந்தவீட்டில் ஒரு நொணாமரமுண்டு. அந்தமரத்தில் ஓர்பிசாசு இருப்பதாக ஊர்முழுவதும் பிரசித்தம். அந்தஅம்மாள் அந்தமரத்துக்கருகில் படுத்துக்கொண்டிருந்தபொழுது இரண்டுதிருடர்கள் மாடுபிடிப்பதற்காக அந்தவீட்டுச்சுவரேறி உள்ளேகுதித்து மாடு பிடித்து வெளியேறும் சமயத்தில் அதைக்கண்ட அந்தம்மாள் 'ரணபாதகா ரணபாதகா' என்று மேலே சொல்லியபடி கூக்குரலிட அந்தத்திருடர்கள் அந்த இருட்டுராத்திரியில் அவளையும் அவளுடைய கருப்புத்துணியையும்பார்த்துவிட்டு 'ஐயையோ நொணாமரத்துப்பிசாசடா' என்று அலறியடித்துக்கொண்டு பிடித்த மாட்டைவிட்டுவிட்டுகீழேகுதித்துவிழுந்தடித்து ஓடிப்போய்விட்டார்கள், முத்துஸ்வாமிஅய்யர்வந்தவுடன்குப்பாசாஸ்திரிகள்நடந்த சமாசாரத்தைச்சொல்ல எல்லாரும் விழுந்துவிழுந்து சிரித்தார்கள். இந்தவேடிக்கையைக் கமலாம்பாளிடம் சொல்ல எண்ணி முத்துசுவாமிஅய்யர் வீட்டைநோக்கித் திரும்புகையில் அவர்தம்பி சுப்பிரமணியய்யர் 'கள்ளன்மாடுநகை, மாடுநகைகள்ளன்' என்று குழறிக்கொண்டு வேகமாய் எதிரே வந்தார். அவரைப்பார்த்து நடந்தசங்கதியைக்கேட்க பொன்னம்மாளுடைய நகைகள், ரூபாயாக 500 ரூபாய், ஜோடிமாடு 5, புதிதாய்வாங்கிய ஜோடிஉருமால் கட்டிக்காளைகள் எல்லாவற்றையும் கள்ளன் கொண்டு போய்விட்டதாகச் சொன்னார். இவர் சொல்லிமுடிக்குமுன் தீ, தீ என்று ஒரு அரவம் கிளம்பிற்று. எல்லாரும் திடுக்கிட்டுத்திரும்ப சுப்பிரமணியய்யருடைய பாரி வைக்கோற்போர்ஒன்று நெருப்புப்பற்றி எரிவதைக் கண்டார்கள். அந்தப்போர் சுமார் நாலுயானையுயரமிருக்கும். பர்வதம்போன்ற அந்தப்போரில் நெருப்புப்பற்றிஎரிந்தது திருவண்ணாமலைக் கார்த்திகைவிளக்குப்போல் நெடுந்தூரம் ஒளிவீசிற்று. இருண்ட இரவுக்கு அந்தவெளிச்சம் பயங்கரமாயும் இருந்தது. அந்தசமயத்திற்கென்று ஓர்விபரீதக்காற்று ஊர்ப்பக்கமாய் வீசிபடித்தது. நெருப்புக்கங்குகள்† ஆகாயத்தி லங்குமிங்கும் சஞ்சரிக்கத் தலைப்பட்டன. அவ்வூர்முழுவதும் அக்கினிபகவானுக்கு அவிர்ப்பாகமாய் விடும்போலிருந்தது. காற்றும் நெருப்பும் ஊரைச்சூறைகொள்ள ஒத்தமாயிருந்தன. பெரியபெரிய நெருப்புக்கற்றைகள் பட்டாளம்பட்டாளமாய் வீடுகள் எங்கேஎங்கேயென்று வெகுஆவலுடன் விசாரித்

† கங்கு=காற்றை.

துக்கொண்டு காலதூதர்களைப்போலக் கிளம்பி நட்சத்திரக்கூட்டங்கள்போல உதிர்ந்தன. ஊர்முழுவதும் ஆண்பெண் அடங்க அலறிக்கொண்டெழுந்து கிழவிகளெல்லாம் 'அடாபாவி, இப்படியுந்தான் உண்டா' என்று கன்னங்களில் விரலைவைத்து ஆச்சரியப்பட்டார்கள்; கிழவர்கள் 'சண்டாளப்பறப்பயல்கள் ஊர்கெட்டுப்போய்விட்டது அனர்த்தம்பிடித்திருக்கிறது' என்று அவலித்தார்கள். பாதித்தூக்கத்தில் எழுப்பப்பட்ட பையன்கள் ஒன்றுந்தோன்றாமல் பிரமித்து நின்றார்கள். ஸ்திரீகள் கங்குகளங்குமிங்கும் பறப்பதைக்கண்டு தாங்களும் அலறிக்கொண்டு அங்குமிங்கும் பறந்தார்கள். புருஷர்களில்சிலர் தலைவிரிகோலமாய்த் தண்ணீர்தூக்கினார்கள்; சிலர் அதைவாங்கி சமீபத்திலுள்ள கூரைவீடுகளுக் கபிஷேகம்செய்தார்கள். சிலர் எதிர்த்துவரும் கங்குகளைத் தடிகளைக்கொண்டு யுத்தஞ்செய்து கொன்றார்கள்; சிலர் 'தடபிடலாய்க்' கூரைகளைப் பிரித்தெரிந்தார்கள். இப்படி ஊர்முழுதும் அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருக்கையில் நல்லவேளையாய்க் காற்றமர்ந்தது; கங்கு அடங்கிற்று; அக்கினி ஜ்வாலைகுறைந்தது; வைக்கோற்போரின்மேற்பாகம் கருகிப்போய்விட்டதாதலால் கங்குகள் பறக்காது தடுக்க ஒரு முக்கிய சாதனமாயிற்று. சுப்பிரமணியய்யர் பணக்காரர்தான், ஆனாலும் ஒருநாளிரவில் 5000 ரூபாய் திடீரென்று கைவிட்டுப்போனால் யார்தான் வருந்தார்கள். அவர்வீட்டிலேயே களவுநடந்து அவர் வைக்கோற்போரிலேயே நெருப்பும் வைக்கப்பட்டிருந்ததால் அவருக்கு விரோதிகள் யாரோ அந்தக்காரியத்தைச் செய்திருக்கவேண்டும்என்று சிலர் அனுமானித்தார்கள். மற்றும்சிலர் திருடர்கள் திருடினை பிற்பாடுயாராவது தூரத்திவருவார்களென்று எண்ணி அதைத் தடுக்கும்படி நெருப்புக் கொளுத்தினதேயன்றி வேறொன்றுமில்லையென்று தீர்மானமாய்ச் சொன்னார்கள். சிலர் உடனே திருடர்களைத் தூரத்தவேண்டும் என்றார்கள். சிலர் அவர்கள்போயிருப்பார்கள் ஐம்பதுமைல் என்றார்கள். சிலர் பேயாண்டித்தேவன்தான் இந்தக்காரியம் செய்திருக்கவேண்டும் என்றார்கள். சிலர் அவன்கூடத் துணியமாட்டான். தெற்குச்சீமைக் கள்ளன்கள்தான் இவ்வளவும் பண்ணியிருக்கிறது என்றார்கள். இப்படிப் பலர் பலவிதம் சொல்லிக்கொண்டிருக்க யாரோ ஆட்கள் ஓடிவருவதாகக் காலடியரவம் கேட்டது. உடனே எல்லாரும் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்க்கவே கூட்டம்இருந்தஇடத்தை நோக்கி இரண்டுபேர்கள் வெகுவேகமாய் ஓடிவருவதைக் கண்டார்கள்.

(இன்னும்வரும்)

பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர், பி. ஏ.

## கொள்ளிவாய்ப்பிசாசு.

### ஓர் கதை.

திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபர்ணி நதிக்கரையில் வீரமாத்தூர் என்று ஒரு கிராமம். ஆற்றுக்கு இருபுரமும் ஊர். ஊருக்கு மேற்கே ஒருபாலம் போடப்பட்டிருக்கிறது. பாலத்துக்கு மேற்கே நாணலும் கோரையும் அடர்ந்த சதுப்புகள் நதிக்கு இருகரையிலும் இருக்கின்றன. அந்தச் சதுப்புக்களில் கொள்ளிவாய்ப்பிசாசு தட்டுப்படுவதாயும், தட்டுப்பட்டால் ஊரில் ஏதாவது கொலை விழுமென்றும் ஒருவதந்தி.

அந்தஊரில் சேஷய்யர் என்றொரு ஸப்-டிவிஷன் ஜமீன்தார். அவர் ஓர்பெரிய லக்ஷாதிபதி. அவர் ஆற்றிற்குத் தென்கரையில் 'பங்களா' கட்டிக்கொண்டு வசித்துவந்தார். அவருக்கு வைத்தியனாதய்யரென்றொரு புத்திரர். அவர் பட்டணத்தில் வாசித்து பி. ஏ. பட்டம்பெற்றவர். அவருக்கும் ஆற்றுக்கு வடகரையில் வசித்துவந்த எழுத்துவாசனைகூட அறியாத சுப்பிரமணியனுக்கும் பாலிய சிநேகம். சுப்பிரமணியனை இவர் படிக்காதவனென்று அடிக்கடி பரிகாசம் செய்வார். இருந்தாலும் சுப்பிரமணியன் காதில் எதுபட்டாலும் உடனே ஓட்டமாய் ஓடிவந்து அதை வைத்தியனாதய்யருக்குச் சொல்லாவிட்டால் அவனுக்கு இராத்திரி தூக்கம்வராது. அவ்வாறு ஒருநாள் யாரோ ஒருவன் கொள்ளிவாய்ப்பிசாசு கண்டதாக அவன் கேள்விப்பட்டதால் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க வைத்தியனாதய்யரிடம் ஓடிவந்து "வைத்தி, வைத்தி, சமாசாரம் கேட்டாயோ? மேலையாத்துச் சுப்பன் நேற்று கைலாசபுரத்திலிருந்து வரும்போது ராத்திரி எட்டுமணிக்கு கொள்ளிவாய்ப்பிசாசைப் பார்த்தானும், பயத்தினால் சுவரத்துடன் படுத்துக்கொண்டிருக்கிறான்" என்றான். (சுவரம் என்பது இவனுடைய கற்பனை. பார்த்தானென்று கேள்விப்பட்டான், சுவரமாகவிருக்கவேண்டுமென்று நம்பிவிட்டான்.) அப்போது வைத்தியனாதய்யர் இரண்டாம் மாடியில் ஓர் அறையில் 'சோபா'வில் சாய்ந்துகொண்டு 'பேபர்' (பத்திரிகை) வாசித்துக்கொண்டிருந்தார். சுப்பிரமணியன் மூச்சுவிடாமல் சொன்னதைக்கேட்டு தலையை நிமிர்ந்துபார்த்து "ஓ! ஆனேரேபில் மணியய்யரவாள், வாருங்கள். உட்காருங்கள்" என்று சொல்லி எழுந்திருப்பவர்போல் நடித்து "கொள்ளியாவது, பிசாசாவது! சுப்பன் கொழுக்கட்டை தின்றான் என்று யாராவது சொல்லியிருப்பார்கள். நீ அதை அரைகுறையாய் காதில் வாங்கிக்கொண்டு பயத்தினால் உளரியடித்துக்கொண்டு வந்தாயாக்கும்" என்றார்.



சுப்பிரமணியன்:—"சுப்பன் சுவரத்தால் படாதபாடுபடுவதை நான் கண்ணால் கண்டேன். (இப்படி சொன்னால்தான் தான் சொல்வது பலப்படுமென்று ஒரு சிறிய பொய்சொன்னான்.) நான் படியாதவனானால் நான் சொல்வதெல்லாம் பொய்தான்" என்று சற்று வருத்தமுடன் சொல்ல,

வைத்தியனாதய்யர்.—"அதற்குச் சொல்லவில்லையடா அப்பா. நான் எத்தனையோதடவை அந்தப் பக்கத்தில் போயிருக்கிறேன். என் கண்ணுக்கு ஒரு நாளும் அது தட்டுப்படவில்லையே" என்றார்.

சுப்.—"உன் பி. ஏ. பட்டத்தைக் கண்டு அது பயப்படுகிறதுபோலும். இருந்தாலும் இன்றைக்கு ராத்திரி அது தட்டுப்படலாம். நீயும் அங்கே 9-மணிக்கு வா, நானும் வருகிறேன்." என்று சொல்லிவிட்டு வீட்டுமுகமாகப் போகையில் "இந்தப்பயல் படித்துவிட்டதாக வெகு கர்வமடைந்திருக்கிறான். எப்படியாவது இவனை மட்டம்தட்டவேண்டுமே, என்னசெய்யலாம்?" என்று யோசித்துக்கொண்டு போகும்போது ஒரு யோசனை தட்டுப்பட்டது. அதை நினைத்து ஆனந்தத்துடன் குதித்துக்கொண்டு போகையில் அவனுடைய தம்பி ராமன் ஒருஎலியை வாலால் கையில் பிடித்துக்கொண்டு ஓடிவரக் கண்டான். "ஏதடா எலி?" என்ன, "அதுதான் அண்ணா அதிசயம். நான் இந்தஎலி தன்வளைக்குள் நுழையும்போது பார்த்தேன். அதன் வளைக்குமுன் ஒரு ஸ்தம்பம்போல் அசையாமல் நின்றால் அது கம்பம் என்று எண்ணி பயமில்லாமல் கிட்டவரும். வந்தால் அடித்துவிடலாமென்று ஒருகல்லையும் கையில் வைத்துக்கொண்டு நின்றேன். அப்படியே எலியும்வந்தது. வந்ததும் ஒரேஅடி: வேலைதீர்ந்தது." என்று சொல்லிக்கொண்டே ஏதோ அரிய மகாவித்தை செய்துவிட்டதாக எண்ணிக்கொண்டு ஒருதடவை எழும்பிக் குதித்தான். சுப்பிரமணியனும், "பலே! ராமா" என்று தட்டிக்கொடுத்துவிட்டு "இங்கே வா, ஒரு வேடிக்கை செய்வோம். அந்தப்பயல் வைத்தியனாதனுக்கு தலைகழுத்தில் நிற்கவில்லை"—என்னு முன் ராமன் "இப்பொழுதாவது தெரிந்ததா. நான் அன்றுமுதல் சொல்லிக்கொண்டு வந்தேனே" என்றான். சுப்பிரமணியன் "அது இருக்கட்டும். நான் சொல்வதைக்கேள்: வைத்தியனாதன் கொள்ளிவாய்ப்பிசாசாவது ஒன்றாவது என்கிறான். அதற்காக நான் இன்று ஒரு உபாயம் செய்யப்போகிறேன். ராத்திரி ஒரு நீண்ட மூங்கில் கொம்பில் நீ ஒருலாந்தலைக்கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு ஆற்றங்கரை நாணல்களோரமாய் வீசி ஆட்டிக்கொண்டே இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிரு. நான்போய் வைத்தியநாதனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன். வந்ததும் லாந்தலைப் பார்த்தவுடனே நான் வெகு பயப்பட்டவன்போல ஓட ஆரம்பிக்கிறேன். அந்தப் பையனும் வியர்த்து விலுவிலுத்துப்போய் ஓடாவிட்டால் என் காதை அறுத்துக்கொள்கிறேன்." என்றான். ராமனும் "பேஷ், பேஷ்" என்று குதித்துக்கொண்டு கூத்தாடினான். உடனே இருவரும் தக்க ஏற்பாடுசெய்ய தங்கள் வீட்டைநோக்கிச் சென்றார்கள்.

இது இவ்வாறிருக்க வைத்தியனாதய்யர் இந்த சுப்பிரமணியன் மூடனாக இருக்கிறான். அவனை இன்று நன்றாகப் பயமுறுத்திவிடவேண்டுமென்று எண்ணி ஓர் உபாயம் செய்தார். இங்கிலீஷ் மருந்துகள் விற்கும் கடைகளின் வாயிலுக்கு இருபுரத்திலும் தகதகவென்று குடத்தில் தழலைப் பெய்துவைத்தாற்போல பிரகாசித்துக்கொண்டிருக்கும் இரண்டு கண்ணாடிக் குடங்கள் வைத்திருக்கப் பார்க்கலாம், அப்படி பிரகாசமாக இருப்பது 'அயோடின் என்று' சொல்லும் ஒரு திராவகம். அது வெகு காந்தியுடையது. வைத்தியனாதய்யர் அதை வாங்கிக் கொண்டுவந்து இந்தப்புறம் அந்தப்புறம் காண்பிக்கும்படி மெல்லிதான ஆட்டுத்தோலால் ஒரு பெரிய பை தைத்து அதில் இந்த 'அயோடின்' திராவகத்தை நிறையப் பெய்து வாயைத்தைத்து அதன்மேலே வரலக்ஷ்மி விரதத்துக்குச் சொம்பின்மேல் கண் மூக்கு முதலியவை கீறிவைப்பதுபோலக் கீறிவைத்து அதின்பின் ஒருவிளக்கை யேற்றி வைத்துவிட்டு தன் அறைக்கதவை மூடிக்கொண்டு தன் நண்பனான சீனிவாசனைக் கூட்டிக்கொண்டு வரவேண்டுமென்று பேசினார். அப்பொழுது சுமார் $6\frac{1}{2}$ மணி யிருக்குமாகையால் அறையில் விளக்கு ஏற்றிவைக்கவேண்டுமென்று வேலைக்காரி கதவைத் திறக்கவே பளீரென்று அந்த பிம்பம் கண்ணில்பட, கதவைப் படீரென்று அடைத்துவிட்டு, பிசாசு, பிசாசு என்று கத்திக்கொண்டு வேலைக்காரிஓடினாள். ஓடினவளை வைத்தியனாதய்யர்தாயார்கண்டு 'என்ன! என்ன!' வென்றுகேட்க, 'பிசாசு, பிசாசு' என்று வேலைக்காரி சொல்ல, 'பிசாசாவது, இன்னொன்றாவது, எங்கடீ பார்ப்போம், என்னுடன் வா' என்ன, வேலைக்காரி 'நான் வரமாட்டேன்; எனக்கு பயமாயிருக்கிறது. சின்ன எஜமான் அறையிலிருக்கிற'தென்று சொல்லிவிட்டு மடமடவென்று கீழே ஓடிவிட்டாள். எஜமானி வைத்தியனாதய்யர் அறைக்கிட்டப்போய்க் கதவைத் திறந்தவுடன் மூக்கும் முழியுமாய் ஒருஜோதி கண்ணில்படவே கொள்ளிவாய்ப் பிசாசுதான் வந்துவிட்டதென்று வெருண்டு, எங்கே கூட ஓடிவந்துவிடுமோவென்று கதவை அடைத்துக்கொண்டு திரும்பிக்கூட பாராமல் ஓடித் தன்னறைக்குள் அடைத்துக்கொண்டுவிட்டாள். சீனிவாசனைக் கூப்பிடப் போன வைத்தியனாதய்யர்வரும்போது வீடுமுழுமையும் பேய், பேய், என்பவரும், தீ, தீ, என்பவரும்

கள்ளன், கள்ளன் என்பவருமாய் வேலைக்காரர்கள் நடந்தது என்னவென்று அறியாமல் இங்குமங்குமாய் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டு 'ஒகோ நாம்செய்த உபாயம்தான் இவ்வளவு அல்லோல கல்லோலத்திற்கும் காரணம்; ஆகவே உபாயம் நல்லதுதான்'என்று மனதுக்குள் சந்தோஷப்பட்டுக்கொண்டு உள்ளே போனார். போகிற வழியில் தன் தாயார் அறைக் கதவைத் தட்ட அவள் "அய்யய்யோ, பிசாசு இங்கும் வந்துவிட்டதே" என்று கூக்குரலிடுவதைக் கேட்டு மூன்றுதடவை *நன் குரலைக்காட்டி அவளைத் திடப்படுத்தித் தன் அறைக்குள் கூட்டிக்கொண்டு போய் சூக்ஷமத்தை அவளுக்கு விளக்கினார். உடனே எல்லாரும் குலுங்கக்குலுங்க நகைத்தார்கள். வீட்டில் இவ்வளவு அமர்க்களப்பட்டு ஓய்ந்தபின் ஒரு நீண்டமூங்கில்கழி நுனியில் அந்தபிம்பத்தைக்கட்டி அதின்பின் ரயில்வே ஸ்டேஷனில் உபயோகிக்கும் உருண்டையான லாந்தல்களில் ஒன்றையும் கட்டி மூடி எடுத்துக்கொண்டு, 'நிலவு நன்றாக இருக்கிறது, சுப்பிரமணியனைப் பார்த்துவிட்டு வருகிறே'னென்று சொல்லிவிட்டு வீட்டுக்கு வெளியேவந்தார். பாலத்துக்குக் கிட்டவந்தவுடன் நான்போய் நாணல்களின் மத்தியில் இதை வீசிக்கொண்டிருக்கிறேன். நீ சுப்பிரமணியனைக் கூட்டிக்கொண்டு வாஎன்று சீனிவாசனை அனுப்பிவிட்டு சதுப்பு ஓரமாக வெகு உல்லாசமாக கிறுகிறென்று வீசிக்கொண்டுபோனார். அந்த சமயத்தில் ராமனும் சுப்பிரமணியனுமாக ஆற்றங் கரைக்கு வந்து, ராமனை லாந்தலை ஆட்டிக்கொண்டிருக்கும்படி சொல்லிவிட்டு சுப்பிரமணியன் வைத்தியநாதய்யரை அழைத்துவரப் பாலத்தை நோக்கிப்போனான். போகும்போதே "அகப்பட்டுக்கொண்டான் தக்கடி அகப்பட்டுக்கொண்டான்," என்று வைத்தியநாதய்யர் பயப்படப்போகிறதை மனதில் நினைத்து ஆனந்தத்துடன் குதித்துக்கொண்டு போனான். பாலத்தின் கிட்டவந்ததும் வைத்தியநாதய்யர் சுற்றிக்கொண்டிருந்த பிம்பம் பளிரென்று தட்டுப்படவே, 'இது ஏதோ ஒரு உருவம் மூக்கும் முழியுமாய் வெகு பிரகாசத்துடன் நாணல்களின் மத்தியில் இங்கும் அங்குமாய் ஓடிக்கொண்டிருக்கிறதே. இதுதான் நேற்று சுப்பன் பயந்துகொண்டு பார்த்த கொள்ளிவாய்ப் பிசாசுபோலிருக்கிறதென்று எண்ணி மார்பு படபடவென்று அடிக்க உடல் நடுங்கிக்கொண்டு வீட்டை நோக்கி ஓட எத்தனித்தான். இதற்குள் இராமனுடைய லாந்தல் வெளிச்சமானது நாணல்களின் மத்தியில் சக்கிரவாணம்போலச் சுழன்றுகொண்டு ஓடிக்கொண்டிருப்பதை வைத்தியநாதய்யர் பார்த்து கொள்ளிவாய்ப் பிசாசுதானோ என்று திடுக்கிட்டுப் பார்த்து, இல்லையென்று மனதைத் திடம்பண்ணிக்கொண்டு சற்றுதூரம் போகையில், 'லாந்தர்' இன்னும்வெகுவிரைவாய் ஆடுவதைப்பார்த்து வெருண்டு, வியர்த்து, விறுவிறுத்து வீட்டைநோக்கி ஓடத் தலைப்பட்டார். படித்தவன் என்ற தைரியமெல்லாம் போய்விட்டது. வீடுபோய்ச் சேர்ந்தால் போதுமென்று ஆயிற்று. வைத்தியநாதய்யர் இந்த அவஸ்தையில் ஓட இவர் கையிலிருந்த பிம்பமாவது வெகு விரைவாய் ஓடுவதை ராமன்கண்டு "ஒகோ விளையாட்டு வினையாய் முடிந்ததே, புலி புலியென்று கூவிய பையன் கதைபோலாயிற்றே" என்று எண்ணிக்கொண்டு உயிருக்குத் தப்பவேண்டுமே என்று தட்டுக்கெட்டு ஓடினான். இவர் இப்படி ஓடவே ஸ்ரீனிவாசன், அவனுடைய 'லாந்தல்' ஓடுவதைக் கண்டு "ஐயய்யோ கொள்ளிவாய்ப்பிசாசு, கொள்ளிவாய்ப்பிசாசு" என்று கதறிக்கொண்டு சேஷய்யர் பங்களாவைநோக்கி ஓடி அப்பொழுதுதான் தீவிட்டிக்காரர்கள் முன்னே ஓடிவர திருநெல்வேலியிலிருந்து குதிரைவண்டியில் வந்திறங்கின சேஷய்யரிடம் வெகு அவசரமாய் சங்கதியைச்சொல்ல அவர் அப்படியே வண்டியைத் திருப்பிக்கொண்டு வந்தார். அதற்குள் மணி பத்தாய் விட்டது. அன்று ஐந்தாம் பிறைச் சந்திரனாகையால் சந்திரனும் அஸ்தமனமாய் எங்கும் இருள் அந்தகாரமாய்ச் சூழ்ந்துகொண்டுவிட்டது. ராமன் வழிதெரியாமல் சேற்றில் இடுப்புவரை அழுந்திவிட்டான். வைத்தியநாதய்யரும் வழி தவறிப்போய் நாணலிலும் 'முள்ளிலும் உடம்பு கிழிபட்டு ஒரு புதரில்போய் சிக்கிக்கொண்டுவிட்டார். சேஷய்யர் வந்ததும் சீனிவாசனை வண்டிமேலேற்றி குதிரையை அமர்த்திக்கொண்டிருக்கச் சொல்லிவிட்டுத் தீவிட்டிக்காரர்களுடன் வைத்தியநாதய்யரைத் தேடப்போனார். அந்த சமயத்தில் சேற்றிலகப்பட்டுக்கொண்ட ராமன் தன் கையிலிருந்த லாந்தலை இதினால்தானே இவ்வளவு சங்கடமும் வந்ததென்று ஆற்றில் சுழற்றி எறிவதை வண்டியில் உடல் நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்த ஸ்ரீனிவாசன் பார்த்து "ஒகோ கொள்ளிவாய்ப்பிசாசு ஆற்றங்கரையைத்தாண்டி நம்மிடம் வருகிறது" என்று எண்ணி வீரிட்டான். அதைக்கேட்டு குதிரை வெருண்டு ஓரோட்டமாய் வீட்டைநோக்கி வண்டியை இழுத்துக்கொண்டு ஓடியது. அது ஓடவே ஸ்ரீனிவாசன் பின்னும் உரத்துக்கூவ, குதிரை பின்னும் வெகு விரைவாய் அடித்துக்கொண்டு ஓடியது. இவ்வாறாக ஓடி 'பங்களா'வண்டை போனதும் குதிரை நிற்க சீனிவாசன் கண்ணைத் துடைத்துக்கொண்டு இறத்து விழித்துப்பார்க்கவே சேஷய்யரும் வைத்தியநாதய்யரும் பங்களாமுன் நின்றுகொண்டு அவனை எதிரழைக்கக் கண்டான். கண்டதும் வண்டியைவிட்டு ஓரே குதியாய்க் குதித்து வைத்தியநாதய்யரைக் கட்டிக்

* மனித உரு எடுத்துக்கொண்டு வரும்பிசாசு இரண்டுதடைவைக்கு மேல் கூப்பிடாது என்பது வழக்கம்.



கொண்டு அழுதான். இவ்வாறிருக்க சுப்பிரமணியன் வீட்டை நோக்கி ஓடினவன் தன் தகப்பனார் முதலியவர்களை எழுப்பிக் கூட்டிக்கொண்டுவந்து ராமனை சேற்றினின்றும் இழுத்துக்கொண்டு போனான். இவ்வாறாக இருவர்களும் "ஆட்டுமயிர் தேடிப் போனவர்கள், தாங்களே மொட்டையாய் வந்தார்களாம்"என்றபடி பிறரை பயமுறுத்தப்போய் தாங்களே பயந்து வீடுவந்தார்கள். திருடனுக்குத் தேள் கொட்டினால் இரண்டாம்பேரோடு சொல்லாதது போல் ஒவ்வொருவரும் தாம்தாம் செய்ததை மற்றவர்களிடம் சொல்லாததால் இன்றைக்கும் இவர்கள் கொள்ளிவாய்ப்பிசாசு கண்ட கதை வீரமாத்தூரில் கிழவர்கள் சொல்லக் கேட்கலாம்.

கரியமலவாயு, பிராணவாயு இவைகள்போல ஒரு வாயுவானது சதுப்புக்களில் உண்டாவதாயும் அது காற்றோடு கலந்து தீப்பற்றி இங்கும்அங்குமாக ஓடுவதாகத் தோற்றுவதாயும் இதைத்தான் சாதாரண ஜனங்கள் கொள்ளிவாய்ப் பிசாசென்று சொல்லுவார்களென்றும் வைத்தியநாதய்யர்புஸ்தகத்தில் படித்திருந்தாலும் மனஉறுதி இல்லாமையால் இவ்வாறு பயப்படலானார். இதுவே நம்மவர்க்குள் ஒரு பெரிய குற்றம். "ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது" என்பது நல்ல பழமொழி. நம்மவர்கள் எவ்வளவு வாசித்தவர்களாயிருந்தாலும் புஸ்தகத்திலுள்ளதை வாசித்து மனப்பாடம்செய்து பரீக்ஷை கொடுத்துவிட்டதினாலேயே உண்மையில் படித்தவர்களாகமாட்டார்கள். "கற்கக்கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்று சொல்லிய திருவள்ளுவர் வாக்கின் சாரத்தை இக்காலத்துப் படிப்பாளிகள் முற்று முணர்ந்து அனுசரிக்கப் பயிலவேண்டும்.

மு. முத்துஸ்வாமிஅய்யர்.

[வீரமாத்தூர்ச் சதுப்பில் கொள்ளிவாய்ப் பிசாசு கண்டதாகச் சொன்னதெல்லாம் இப்படித்தானிருக்குமோவென்று இதை வாசிப்போர் கேட்கலாம். 'கொள்ளிவாய்ப்பிசாசு' என்று சொல்வது உண்டென்று நம்மவர்மட்டுமன்றி பல தேசங்களிலுமுள்ள சாதாரண ஜனங்களும் நம்மவரைப்போல் நம்பி அதைக் கண்டால் பயந்து நடு நடுங்குகிறார்கள். ஆனால் அப்படி பயப்படுகிறவர்களெல்லாம் சாமான்ய ஜனங்களே. 'கொள்ளிவாய்ப்பிசாசு' என்பது முதலில் சரியான பெயரல்ல. ஜனங்கள் பயத்தினாலும் பிரமையினாலும் தங்கள் கண்ணுக்குப் படும் இயல்பான ஒரு தோற்றத்தைத் தீமைசெய்யத்தக்கதாக நம்பி, அவர்கள் நம்பினபடி அதற்கிட்ட கற்பனைப்பெயரே.

முதலில், 'கொள்ளிவாய்ப்பிசாசு' என்று ஜனங்கள் சொல்வது என்ன?

சேறு, சகதிநிறைந்த சதுப்புநிலம், பசும்புற்றரை இவ்விடங்களில் அபூர்வமாய்க் காணப்படும் பிரகாசமான ஒரு தோற்றத்தை சாமான்யஜனங்கள் கொள்ளிவாய்ப்பிசாசு என்று சொல்லுகிறார்கள்.

அந்தப் பிரகாசமான தோற்றம் எப்படி யுண்டாகிறது?

பிராணிகளின் உடல்கள் அல்லது மூலவர்க்கத்தைச்சேர்ந்த வஸ்துக்கள் அழுகிப்போவதனாலுண்டாகும் ஒருவிதகாற்று ஆகாசத்திலெழும்பும்பொழுது சுத்தகாற்றோடு கலந்து தானாகத் தீப்பற்றி பிரகாசமாகத் தோற்றுகின்றது. அழுகிப்போன மீன்களிலிருந்து இந்த காற்று விசேஷமாகக் கிளம்புகிறது. நல்ல இருட்டாயிருக்கையில் சமுத்திரக்கரை யோரத்திலுள்ள ஈரமணலைக்காலால் கிளறினால் கிளறின இடத்தில் பிரகாசமான புள்ளிகள் காணப்படுவதை நேரில் பரீக்ஷித்தறியலாம்.

இந்தக்காற்று எவ்விதமானது? இதற்குப் பெயரென்ன?

இது தீயெரிபாஷாணமும் ஜலவாயுவும் கலந்துள்ள ஒரு காற்று. இதற்கு இங்கிலீஷில் (Pospheric Hydrogen) என்று பெயர்.

(தீயெரிபாஷாணமென்பது நெருப்புக்குச்சிகளின் நுனியில் கந்தகத்தோடு தோய்க்கப்பட்டிருக்கும் வஸ்துவே. நெருப்புக்குச்சியைத் தேய்க்கும் பொழுது பளிச்சென்று தோன்றும் வஸ்து அதுவே.)

இது அபூர்வமாகத் தோற்றப்படுவது ஏன்?

ஏனென்றால் இந்தக்காற்று மிகவும் இலேசானதும் மிகதுரிதமாய்ப் பறக்கத்தக்கதுமான சுபாவமுடையது. ஆகையால் அது உண்டாக உண்டாக மிக இலேசாய்ப்பரவி காற்றோடு கலந்துபோகிறது. இந்தக்காற்றானது எப்போதாவது அதிகமாக உண்டாய் ஆகாசத்திலெழும்பும்போது, இது நல்ல காற்றோடு கூடினதும் தானாய் எரியும் சுபாவமுள்ளதால் பிரகாசமான தோற்றம் காணப்படுகிறது.

கொள்ளிவாய்ப்பிசாசு என்று நாம் கிட்டப்போனால் அது ஓடுவதும், நாம் பயந்து ஓடினால் நம்மைத் தொடர்ந்து ஓடி வருவதுமாயிருப்பது ஏன்?

ஏனென்றால், நாம் கொள்ளிவாய்ப்பிசாசை நோக்கி ஓடும்போது நாமோடுகிற வேகத்தில் நமக்கு முன்னுள்ள காற்றைத்தள்ளிக்கொண்டு போவதால்நமக்கு முன் ஒரு காற்றோட்டமுண்டு பண்ணுகிறோம். கொள்ளிவாய்ப்பிசாசாக நமக்குத்தோன்றும் பிரகாசமானகாற்றானது அதிகலேசானதால்அந்தக்காற்றோட்டத்தில் அது நமக்கு முன்னால் தள்ளப்பட்டு ஓடுகிறது. நாம் அதன் கிட்டவிருந்து ஓடும்பொழுது நாமோடுகிற வேகத்தில் நமக்குப்பின்னுள்ள காற்று நம்மைத் தொடர்ந்து ஓடிவரும்படி செய்கிறோம்

காற்று நம்மைத்தொடர்ந்து ஓடிவருகையில் பிரகாசத்தோற்றமுள்ள காற்றும் லேசானதால் கூடவேயோடிவருகிறது.

இந்தக்காற்றினாலன்றி வேறுவிதமாகவும் கொள்ளிவாய்ப்பிசாசுத் தோற்றம் காணுவதுண்டோ?

சில சமயங்களில் வயல்வெளிகளிலும், பசும்புல் நிறைந்த மைதானங்களிலும் மின்மினிப்பூச்சிகள் போன்ற பிரகாசமுள்ள பூச்சிகள் ஏகமாகக் கூடிக்கொண்டு ஓரே கும்பலாய்ப்பறக்கும் பொழுது அதைக்கண்டு மயங்கினவர்கள் கொள்ளிவாய்ப்பிசாசு ஓடுகிறது என்று சொல்வார்கள். ஆனால் அது கொள்ளிவாய்ப்பிசாசு என்று சொல்லும் காற்றைப்போல் அதை நோக்கி ஓடினால் தூரஓடி, அதன்கிட்டவிருந்து பயந்தோடினால் துரத்திக்கொண்டு ஓடிவராது. அது கொள்ளிவாய்ப்பிசாசு ஆவது மேலே சொன்னகதையில் வைத்தியநாதய்யரும் சுப்பிரமணியனும் கொள்ளிவாய்ப்பிசாசு கண்டதுபோல் தான்.

மேலே சொன்ன சதுப்பு, அல்லது சேற்று நிலம் அல்லது பசும்புற்றரைகளிலன்றி மற்ற இடங்களிலும் இத்தோற்றம் காணப்படுவதுண்டோ?

உண்டு. பிணங்களை அடக்கம் செய்யும் ஸ்மசானங்களில் கீழேபுதைக்கப்பட்ட பிணங்கள் அழுகிப்போய் அவற்றிலிருந்துண்டாகும் துர்நாற்றமுள்ள காற்று சமாதிக்கல்லிடுக்குவழியாக வெளிவந்து அக்கல்லின் உச்சியில் காற்றோடு கலப்பதால் பிரகாசமாய்த்தோற்றும். இதைத்தான் இறந்தவர்கள் ஆத்துமா பிசாசுரூபமெடுத்து கல்லறைமேல் உட்கார்ந்திருந்ததாக ஜனங்கள் சொல்லிக்கொள்வது. கொள்ளிவாய்ப்பிசாசிலுள்ள உண்மை தீயெரிபாஷாணமும் ஜலவாயுவும் கலந்தகாற்று அழுகினவஸ்துக்களிலிருந்துண்டாய் ஆகாயத்திலுள்ள காற்றோடு கலக்கும் பொழுது ஜோதியுண்டாகிறது ஒன்றுதான். இதைப்பற்றிச்சொல்லும் மற்றக்கதைகளெல்லாம் ஜனங்கள் பீதியால் அவர் மனதுக்குத்தோன்றியதைச் சேர்த்துகட்டிவிட்ட கட்டுக்கதைகளன்றி வேறல்ல. வி.சி.ப-ர்.

---

## ஒரு தாதா செய்ததீர்மானம்,
### அல்லது
## தங்கம்மாள் தலைவிதி.

சோழநாட்டிலே காவேரிநதிக்கரையிலே பூவரசநல்லூரென்று ஒருஊர் இருக்கிறது. அந்தஊர் பெரிய அக்ரஹாரத்தெருவிலே கிழக்குப்பார்த்த ஒரு மச்சுவீட்டுத்திண்ணையில் சாய்மணைமேல் சாய்ந்துகொண்டுதன் அங்கவஸ்திரத்தால் முழங்கால்களைச்சேர்த்துக் கட்டிக்கொண்டுசிவப்புத்தோலும்நரைதிரைஉடலும் ஒல்லிய உருவமுமுள்ள ஒருவர் வாடினமுகத்துடன் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது காதில் குண்டலங்கள் தொங்க, கழுத்தில் ருத்ராக்ஷம்அசைய,நெற்றியில் விபூதிஅணிந்து கையில் ஜபமாலைபூண்டு தீர்த்தசெண்டி யேந்தி,கீழேபார்த்து தாண்டித்தாண்டிநடந்துகொண்டு அத்தெருவழியேபோனஅவ்வூர்வைதிக கோஷ்டிகளில் சிரேஷ்டரான அக்னிஹோத்திரம் குப்பாதீக்ஷதர் என்பவர் அவரைப்பார்த்துவிட்டு சுருக்கென்றுஅவர்முகமாய்த்திரும்பி“ஓ,சாமிஅய்யரவாளா, அப்படியா, தரிசனம்கிடைத்து வெகுகாலமாய் விட்டது” என்று சொல்லிக்கொண்டே அவரை நோக்கி விரைவாய்ச் சென்றார்.

அவர் விரைந்து வருவதைக்கண்ட சாமிஅய்யர் சட்டென்று கால்கட்டை அவிழ்த்துக்கொண்டு “ஓ, தீட்சதரவாளா, வரவேணும், நமஸ்காரம்” என்றார்.

குப்பாதீட்சதர்.—அநந்தகோடி நமஸ்காரம். க்ஷேமமா. தங்களை தரிசனம்பண்ணி வெகுநாளாச்சுது.—பரமசிவம்!

சாமிஅய்யர்.—க்ஷேமந்தான். உட்காருங்கள். என்னமோ இருந்துகொண்டு வருகிறேன். எப்போ கைலாசபதிக்கு தயவுவருமோ தெரியவில்லை.

கு. தீ.—உடம்பென்ன ரொம்ப வாட்டமாகஇருக்கிறதே.—சிவ, சிவ, சிவ!

சா. அ.—சரீரத்துக்குக் கேடொன்றுமில்லை; கொஞ்சம் சம்ரக்ஷணைக்குறைவைத்தவிர. மனோவியாதிதான் பிடுங்கித்தின்கிறது.

கு. தீ.—அகத்தில் சம்ஸாரத்திற்கு அஸௌக்கியம் ஏதாகிலும் உண்டோ. இல்லாவிட்டால்எங்கேயாவதுஊருக்குப்போயிருக்கிறாளோ.-நடேசா!

சா. அ.—உங்களுக்கு தெரியாதோ!

கு. தீ.—தெரியாதே. நான் மூன்றுமாஸகாலமாய் ஊரிலில்லை. யாசகார்த்தமாய் வெளியேபோயிருந்தேன். போனவிடங்களில் ஈசுவரனுடைய கிருபையினால் கொஞ்சம்கிடைத்தது. வந்து மூன்றுநாள்தான் ஆச்சு. என்னவிசேஷம்?—பரமேசுவரா!

சா. அ.—அவள் கைலாசம்போய் இன்றைக்கு 15-நாள் ஆய்விட்டது.

கு. தீ.—அப்படியா. அடாஅடா. நீங்கள் பெரியவாள்நாள்முதல் ரொம்ப நல்லவர்கள். உத்தியோகம்பண்ணினபோதிலும், ஸ்நாநம், ஸந்தி, பூஜை, பிராமணவிசுவாஸம் எல்லாம் உங்களுக்கு உண்டு. இந்த அபரவயதில் பத்நிநஷ்டம் உங்களுக்கு வரக்கூடாது:சிவாஞ்ஞை.—ருத்ரமூர்த்தி! உமாபதே!



சா. அ.—கஷ்டமாய்த்தானிருக்கிறது. ஒருத்தி வீட்டில்இல்லாமற் படுகிற துன்பம் அளவு ஸங்கை இல்லை.

கு. தீ.—இப்போது உங்களுக்கு வயசு என்னவிருக்கும்.

சா. அ.—வயசுக்கென்ன.குட்டிச்சுவருக்குஆன பிராயம் ஆய்விட்டது. அவள் போகாமல் இருந்தாளேயாகில், வருகிறமாஸம் ஷஷ்டி அப்தபூர்த்தி செம்மையாய்நடத்தி, பிராமணபோஜனம்செய்து வைத்து,எல்லாருக்கும் சோமன்ஜோடுவாங்கிக் கொடுக்கலாமென்று நினைத்திருந்தேன். என்னபண்ணுகிறது! என் ஜன்மாந்தரபாபம், அவஸ்தைப்படுகிறவேளை! தாறுமாறாய்ப்போய் விட்டது.

கு. தீ.—நாங்கள் கொடுத்துவைக்கவில்லை. கொடுத்துவைத்தமட்டுந்தானே கிடைக்கும். பையன் எங்கே. உள்ளேஇல்லையோ.—சிவ, சிவ.

சா. அ.—பட்டணத்தில் உத்தியோகமாயிருக்கிறான்.

கு. தீ.—அதுகூடத்தெரியாதா? உங்களுடைய யோகக்ஷேமத்தைப்பற்றி எப்பொழுதும் விசாரித்துக்கொண்டு, மங்களாம்பாள் ஸந்நிதியில் நீங்கள் அமோகமாய் இருந்துகொண்டு, என்னைப் போல ஏழைப்பிராமணரை எல்லாம் சம்ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்.—நடேசா, நடேசா.

சா. அ.—பத்துநாள்தான் துரை உத்திரவு கொடுத்தானாம்.சஞ்சயநத்துக்குத்தான் வந்தான். துவாதசக்கிரியைகளையும் முடித்துவிட்டு உடனே ஊருக்குப்போய்விட்டான்.

கு. தீ.—இன்னம் பத்துநாள் இருந்துவிட்டுப்போகச் சொல்லுகிறதுதானே.

சா. அ.—பத்துநாள் உத்திரவுக்கே பிரமப்ரயத்தனம் பண்ணவேண்டியிருந்ததாம்.இன்னம் கூட பத்துநாளா! துரைகேட்டால் நீவீட்டுக்குப்போ என்று அனுப்பிவிடுவானாம்.

கு. தீ.—மாதாபிதா கைங்கரியத்துக்குக்கூட துரை உத்திரவு கொடுக்கமாட்டானோ. வேறொன்றுக்கும் வேண்டாம்.

சா. அ.—வெள்ளைக்காரனுக்கு, தாயேது, தகப்பனேது? திவசமுமில்லை, திங்களுமில்லை. நான் உத்தியோகம்செய்தநாளில் அவாள் நல்லவர்களாய் இருந்தார்கள். கேட்டபோதெல்லாம் ‘லீவு’ கொடுத்துவந்தார்கள். இப்போ வரவர கல்வியும், கர்வமும் அதிகமாய்விட்டது. நெளிவுதெரிந்து போயிற்று. பிராமணனென்றால் ரொம்ப அலட்சியம்.

கு. தீ.—கலி முற்றமுற்ற பிராமணீகத்துக்குக்குறைவுதான். இப்படிஎல்லாம் ஊனுள்வந்து, வர்ணாசிரமதருமங்கள் கெட்டுப்போகிறதற்கு கலிபுருஷன்தான் காரணம். அழியாத ஒருவஸ்து உண்டே அவர்தான் லீலாவிபூதியாய் இருந்துகொண்டு, கலிபுருஷனை லோகத்தை ஆட்டிவைக்கிறார். அவராஞ்ஞைக்கு இரண்டு இல்லை. —திரிபுராந்தகா!......................................மாத்தியான்னிககாலமாய்விட்டது. பொழுது அடிஇறங்கிவிட்டது. போஜனத்துக்குப்போங்கள். விசனப்படுவதினால் பிரயோஜனமில்லை. ஈசுவரனுடைய சங்கல்பத்தின்படி எல்லாம் நடக்கிறது. எழுந்திருங்கள்.—கங்காதரா!

சா. அ.—போஜனமா. இப்போஇல்லை. இனிமேல் ஸ்நானஞ்செய்து, சமைத்து,பூஜைபண்ணி சாப்பிட அஸ்தமனமாகும். சமைக்கிறதென்றால் அலுப்பாயிருக்கிறது.

கு. தீ.—சமைக்கிறதற்கு ஸ்திரீகள் ஒருவரும் உள்ளேஇல்லையோ. நாட்டுப்பெண் எங்கே, பிரஸவகாலமோ.—அகிலாண்டேசுவரா!

சா. அ.—அவளுக்கு பிரஸவமுமில்லை. பேரிழவும் இல்லை. வந்திருந்தாள். பத்துநாளைக்கு இருந்துவிட்டுப்போஎன்று சொன்னேன். வீட்டையும், புருஷனையும் பிரிந்து வீசநாழிகைகூட இருக்கமுடியாதென்று சொன்னாள். பிள்ளையோடுகூடவே உடனே விரட்டிவிட்டேன். மறுபடியும் ரெயில்சார்ஜ்கொடுத்து கொண்டுவிடுகிறதென்றால் லேசாயிருக்கா.

கு. தீ.—மாமியார், மாமனாரைவிட, வீடும், புருஷனும் என்னவிசேஷம். கலியினுடையகூத்தில் எல்லாம் தலைகீழாய்நடக்கிறது.கையினால் சமைத்துச் சாப்பிட்டு அவஸ்தைப்படுகிறதைவிட, நீங்களும் கூடப்போய் குமாரனுடன் பட்டணத்தில் இருக்கலாமே.—ஜடாதரா.

சா. அ.—பையன் வா என்றுகூப்பிட்டான். எனக்கு பட்டணத்தில்வசிக்க இஷ்டமில்லை. கோவில், குளம், காவேரிஸ்நானம், பெரியவாள்தரிசனம், ஸத்சங்கம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அந்திகாலத்தில் அந்த ‘பறப்பட்டணத்தில்’ எப்படி வசிக்கமுடியும்.

கு. தீ.—மனுஷியஸகாயமில்லாதபோது இந்தக்கலிகாலத்தில் அவ்வளவு பார்த்துக்கட்டுமா. பூஜை ஆசாரங்களை சுருக்கிக்கொண்டு, காலதேசவர்த்தமானத்துக்குத் தக்கபடி நடந்துகொள்ளவேணும். மேலும் ஆபத்துக்காலத்துக்கு ஒரு தோஷமுமில்லை. சிவநாமத்தை ஒருதரம் ஸ்ம

ரித்தால், சகலபாபமும் நிவர்த்தியாகிவிடும்.—சச்சிதாநந்தம்!

சா. அ.—அங்கே பட்டணம்போனதில்லையோ.

கு. தீ.—ஸந்தர்ப்ப நேரிடவில்லை. மேலும் அங்கே எனக்குக் காரியமுமில்லை. நம்முடையவர்கள் வெகுபேர் உயர்ந்த லௌகிகத்தில் இருக்கிறார்களென்று கேள்வி.—பார்வதிபதே!

சா. அ.—பேரனுடைய அப்தபூர்த்திக்காக ஒருதரம் போயிருந்தேன். ஒருநாள் அந்தஊரில் கழிப்பது ஒருயுகமாயிருந்தது. அவ்வூரில் எச்சில் தீட்டுக்கிடையாது. பார்த்தும்முடியாது. ஊர் ஜலதாரை குட்டிலோடுகிறது. வீட்டுக்குள்ளேயே ஓர்புறம் சமையற்கட்டு மற்றொருபுரம் 'கக்கூஸ்.' ஸ்நாநபானபூஜைக்கெல்லாம்குழாய்த்தண்ணீர். அதையோ பறையன் பள்ளி பதினெட்டுஜாதியும் தொடுகிறார்கள். அது ஜலதாரையின்பேரிலும், கக்கூஸின்வழியாகவும் ஓடிவருகிறது. அந்த தீர்த்தத்தை தொடக்கூட மனஸு சகிக்கவில்லை. வீட்டுக்குள்ளேதான் இப்படி இருக்கே! வெளியில் புறப்பட்டாலோ கேட்கவேண்டாம். பறையனும், துலுக்கனும், ஒட்டனும், சட்டைக்காரனும் மேலே இடித்துக்கொண்டு போகிறார்கள்.

கு. தீ.—சிவ, சிவ. இவ்வளவுநாள் வைதீகமாய்இருந்துவிட்டு, வயசுகாலத்தில் இந்தநரகத்தில் போய் வஸிப்பது கஷ்டம். வேறே தங்கை தமக்கை சமீப பந்துக்கள் ஒருவருமில்லையா.—ஆபத்பாந்தவா!

சா. அ.—செத்தால் தீட்டுக்காக்கவும், மூழ்கவும் பந்துக்கள் இருக்கிறார்கள். உபகாரத்துக்கு ஒருவருமில்லை. உபத்திரவத்துக்கு வேண்டிய பேர் உண்டு. என்மாதிரிக்கும் அவாள்மாதிரிக்கும் ஒத்துக்கொள்ளாது. கொட்டியழித்து குடித்தனத்தை த்வம்ஸம் பண்ணுவார்கள்.

கு. தீ.—சிவன்சித்தம், ஏதாகிலும் ஓர் வழிபார்த்து ஓர் மனுஷியாளைத்தேடி, பொறுமையாய், எது நேரிட்டாலும் அந்த அநாதரக்ஷகன் பேரில் பாரத்தைப்போட்டுவிட்டு காலங்கழிக்க வேண்டியதுதான். கையினால் சமைத்துசாப்பிடநினைப்பது, இத்தனை வயசுக்குமேல் ரொம்ப சிரமம். மேலும் நீங்கள் எப்பொழுதும் சுகமாய் இருந்தவாள்.—தீனதயாளோ!

சா. அ.—யாராகிலும் வழியாய் அகப்பட்டால் பார்க்கிறேன். இல்லாவிட்டால் இருக்கவேஇருக்கு, ஒரு கட்டையைக்கட்டித் தொலைச்கிறேன்.

கு. தீ.—இந்திரியங்களுக்கெல்லாம் தளர்ச்சியானகாலம். இனிமேல் கலியாணம் பண்ணிக்கொண்டு நிர்வகிக்கிறது அஸாத்தியம். லோகதர்மத்துக்கும் விரோதம். பாபத்துக்கும் ஏதுவாகும்.

சா. அ.—பின்னை பிராணனை விடவேண்டியதுதான். இல்லாவிட்டால் சன்னியாசம் வாங்கிக்கொண்டு சோற்றுக்கு அலையவேணும்.

கு. தீ.—சிவ, சிவ, சிவ, நீங்கள் லௌகிக வைதீகம் எல்லாம் தெரிந்தவர்கள். திரவிய சகாயமுமிருக்கு. எதுவும்ஸாத்தியம். ஆகிலும், எதைச்செய்தாலும் தர்மாதர்மத்தை யோஜித்து அதர்மத்தை விலக்கி தர்மத்தை நடத்தவேணும். கடைசியில் நம்முடைய யத்தினப்படி ஒன்றும் நடக்கப்போகிறதில்லை. எல்லாம் பகவதாஞ்ஞையின் படித்தான் சம்பவிக்கும்.—சங்கரா.

சா. அ.—இது நூற்றுக்கு ஒரு வார்த்தை. எந்த வேளையில் எது சம்பவித்தாலும், ஈசுவரனுடைய திருவுளமென்று அனுபவிக்க ஸித்தமாயிருக்கிறேன்.

கு. தீ.—அப்புரம் சாவகாசமாய் வந்து தரிசனம்பண்ணிக்கொள்ளுகிறேன். உச்சிகாலமாய் விட்டது. அகத்தில் அதிதி ச்ரௌதிகள் ஒருவர் வந்திருக்கிறார். காத்துக்கொண்டிருப்பார். போய் வருகிறேன். உத்திரவு கொடுங்கள்.—சிவசிதம்பரம்!

சா. அ.—எங்கே அபூர்வமாய் தரிசனங்கொடுத்தது. என்னால் ஆக வேண்டிய காரியம் ஏதாகிலும் உண்டோ.

கு. தீ.—ச்ரவண மாசத்தில் இஷ்டி ஒன்று நடக்கிற வழக்கம். தங்களை கொஞ்சம் சகாயம் கேட்க வந்தேன். சமய பேதமாயிருக்கிறது. ஆயினும் தெரிவித்துவிட்டேன். பரமசிவனது அநுக்கிரகப்படி நடக்கிறது.—சாம்பசிவா!

சா. அ.—சக்தியானதை பிறகு கொடுக்கிறேன். நமஸ்காரம், ரொம்பநாழிகை ஆய்விட்டது.

கு. தீ.—அநந்தகோடி நமஸ்காரம், இருங்கள், நான் வருகிறேன்.—கிருபாநிதே! சிவா! நடேசா!

சா. அ.—தீட்சதரவாள், (போனவரைக்கூப்பிட்டு) சுவாமிகளே, சிவராம சாஸ்திரிகளைக்கண்டால் நான் உடனே வரச்சொன்னதாகச் சொல்லவேணும்.

கு. தீ.—நாளைக்கு ருத்ரமூர்த்தி ஜடாவல்லபர், அகத்தில் ஆசீர்வாதம். சாஸ்திரிகளைப்பார்ப்பேன். நீங்கள் வரச்சொன்னதாகஅகத்தியம் நூறுதரஞ்சொல்லுகிறேன்.

சா. அ.—மறந்துபோகக்கூடாது.



## II.

மேலேகண்ட சம்பாஷணை நடந்ததற்குப்பின் நேர்ந்த சுக்கிலபக்ஷத் திரயோதசியில் சனிவாரத்தோடு மஹாபிரதோஷமும் சேர்ந்துகொண்டது. அன்றுசாயந்திரம் பூவரசநல்லூர் கைலாசநாதர் கோயிலில் மஹா பிரதோஷஉற்சவம் மகாவிமரிசையாய்நடந்தது. அந்த புண்யகாலத்தில் அந்தக்கோயிலில் ஸ்வாமிதரிசனத்துக்காக வந்த ஜனங்களின் தொகை அற்பசொற்பமல்ல. அதற்குச்சுற்றிலுமுள்ள ஊர்களுக்கெல்லாம் அதுவே முக்கியமான சிவக்ஷேத்திரமாதலால் எல்லா ஊர்களிலுமிருந்து எண்ணிறந்த ஜனங்கள் ஸ்வாமி தரிசனத்துக்கு வந்தார்கள். பூவரசநல்லூரில் அன்று சாயந்திரம் கண்டகாக்ஷி அபூர்வமானது. அவ்வூர்வீடுகளிலும் மரங்களிலும் அன்று சாயந்திரம் எறித்த மஞ்சள்வெயில் வெயிலாகத்தோன்றவில்லை. ஏதோ அந்த அபூர்வமான மஹாபிரதோஷகாலம் நேர்ந்தபொழுது ஸ்ரீகைலாஸநாதர் திருஅருளால் அவ்வூரெங்கும் பொன்மூலாம்பூசி அலங்கரித்தது போலிருந்தது. சாயங்காலம் தீபாராதனையாகி சுவாமி பிரகாரம் சுற்றிவரப்புறப்படும்பொழுதுசூரியபகவான் அந்தக்காக்ஷியைக்காணும்‌ற் போகமனமற்றவர்போல் ஸ்ரீகைலாஸநாதருடைய கோபுரவாசலின்மேலுள்ள கலசகும்பத்தைத்தொட்டுக்கொண்டு தயங்கினின்றார். அவர் அங்குநின்றதால் கோபுரசிகரம் தொலைதூரத்துக்கு தேஜோமயமாகப்பிரகாசித்து விளங்கியது. அன்று அவ்வூர் அளித்தகாக்ஷி கண்டோர் மனதைக்களிக்கச் செய்வதாயிருந்தது.

அப்பேர்ப்பட்ட ஆனந்தம் விளைக்கும் சாயங்கால வேளையில் கூட சாமி அய்யர் தன் நினைவுகளே நினைவாக மனச்சோர்வுற்று வழக்கம்போல் கால்களைக்கட்டிக்கொண்டு அவர் வீட்டுத் திண்ணையிலுட்கார்ந்திருந்தார். அஸ்தமனமானபின் அவர் அப்படி தனியாக வுட்கார்ந்திருப்பதில் வெறுப்புற்று ஸ்வாமி தெரிசனம் செய்துவரலாமென்று கதவைப்பூட்டிக்கொண்டு புறப்பட்டார். புறப்பட்டு கோயிலுக்குப் போகையில் வழியில் கிழத்தெரு அப்புக்குட்டியென்பவன் எதிரேவந்தான். வந்தவன் சாமி அய்யரைப் பார்த்ததும் அவர் கிட்டவந்து,

"சாமித்தாதா! தட்டித் தள்ளாடிக்கொண்டு எங்கே போகிறீர்." என்றுகேட்டான். அதற்கு

சாமிஅய்யர்.—"மஹாபிரதோஷம். ஸ்வாமி புறப்படுகிறார். வீட்டிலடைந்துகொண்டு சித்தபிரமை பிடித்துப்போகிறது. மெள்ள மெள்ள போய் ஸ்வாமிதரிசனம் பண்ணிக்கொண்டு வரலாமென்று புறப்பட்டேன்." என்று சொல்லுமுன் இருமல் வந்துவிட்டது.

அப்புகுட்டி.—"ஏன் இருமுகிறீர். விர்த்தாப்பியம் வந்துவிட்டதோ." என,

சா. அ.—"சிறுபிள்ளைகளுக்கு இருமல்வருகிறதில்லையோ. ஒருமாஸகாலமாய் ஆத்தில் சௌக்கியமில்லை: வியாதியும் வெக்கையும், இழவும் பேரிழவும், சச்சரவும், சண்டையும், பட்டினியும், பலகாரமும், சரியான தூக்கமில்லாமல் வேளா வேளையில் சாப்பாடில்லாமல் உஷ்ணம் தலை மேற்கொண்டு இருமுகிறது" என்றார்.

அ. கு.—வைத்தியம்பண்ணிக்கொள்ளுகிறதுதானே.

சா. அ.—அம்பட்டன் இராமனுக்கு கையைக்காட்டினேன். உஷ்ணம் அஸ்தியை பிடித்திருக்கிறதாம். ரூபாய் 10 கேட்டான். அந்த அயோக்கியனை போகச்சொல்லிவிட்டேன். இரண்டுநாள் சௌக்கியமாய் இருந்தால் போய்விடும்.

அ. கு.—இருந்தால்போகாது, இறந்தால் தான்போகும். நீர் அரைக்காசு செலவு செய்து வைத்தியம் பண்ணிக்கொள்ள மாட்டீரோ. இந்த உஷ்ணம் இனிமேல் சாம்பலோடேதான் ஆறும்.

சா. அ.—அஸத்துப்பயலே எப்போ பார்த்தாலும் இடும்பும், குறும்பும் தானா! பெரியவாள் சின்னவாளென்றுகிடையாது, சமயாசமயங்கிடையாது, என்னவேளையில் பிறந்தாயோ.

அ. கு.—நான் பிறந்தவேளைக்கென்ன? அதுபோகட்டும்; ஓர்விசேஷம் கேள்விப்பட்டேன், அதென்ன வாஸ்தவந்தானா?

சா. அ.—என்னடா புரளித்தனம் பண்ணுகிறாய்? எப்போதும் விஷமத்தைத் தவிர வேறு வேலை இல்லையா?

அ. கு.—ஏன் என்னிடத்தில் மறைக்கிறீர்! நீர் சொல்லாவிட்டால் எனக்குத்தெரியாமல் போய்விடுமோ? என்னுடைய உதவி இல்லாமல் உம்முடைய காரியமாகுமா? நீர்செத்தாலும் தூக்க அப்புக்குட்டி தான் வரவேணும்.

சா. அ.—என்னடா கேள்விப்பட்டாய்? சொல்லடா!

அ. கு.—நீர் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறீராமே.

சா. அ.—உனக்கு யாரடா சொன்னார்.

அ. கு.—யார் சொன்னால் என்ன! இட்சிணி வந்து சொல்லிற்று. சங்கதி வாஸ்தவமா, இல்லையா?

சா. அ.—போடா இட்சிணியுமாச்சு, பிசாசுமாச்சு, சொல்லடா, எங்கே கேள்விப்பட்டாய்?

அ. கு.—குப்பாதீட்சதர் அகோர ஸ்ரௌதியுடன் பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தார். நீர் சிவராம சாஸ்திரிகளை அகத்தியம் புறப்பட்டுவரச்சொன்னீராம். அவரை வரச்சொன்னது கலியாணவி

ஷயமாகத்தான் இருக்கவேணுமென்று எனக்கு நிச்சயம்.

சா. அ.—அப்படி ஒன்றும் இப்போயோசனையில்லை. ஆனாலும் இருக்கட்டுமே நானேன் கலியாணம் பண்ணிக்கொள்ளக்கூடாது?

அ. கு.—கலியாணம் செய்துகொண்டு என்னபண்ணுகிறது. புருவம் நரைத்துப்போயிற்று, தலையில் வெள்ளைமயிர்கூட உதிர்ந்துபோயிற்று. சதை எல்லாம் தளர்ந்திருக்கிறது. எப்போபார்த்தாலும் இருமலும் அஜீரணமுமாயிருக்கிறது. காடு வா வா என்கிறது: வீடு போ போ என்கிறது. கல்லெடுப்பு காலத்திலே உமக்குக் கலியாண மென்னவந்தது.

சா. அ.—சோறுபொங்கிப்போட மனுஷியாள் இல்லாமல் திண்டாடுகிறேன். வெளியிலே வாசவிலேபோனால் வீட்டைப்பார்த்துக்கொள்ள ஒருவருமில்லை.

அ. கு.—எங்கே யாகிலும் கிழவி விதவையிருந்தால் பார்த்துக் கலியாணம் பண்ணிக்கொள்ளுமே, கிழத்துக்கும் கிழத்துக்கும் ஈடாயிருக்கும்.

சா. அ.—அயோக்கியா! பிராமணன் விதவாவிவாகம் பண்ணலாமாடா?

அ. கு.—கலியாணம் செய்ய வேண்டாம், சும்மாவைத்துக்கொண்டு போது போக்குமே.

சா. அ.—துஷ்டா! அதுபாபமல்லவா? ஊரார் பழிக்கமாட்டார்களா.

அ. கு.—பத்துவயதுப்பெண்ணைக் கலியாணஞ்செய்து அதினுடைய வாலீபத்துக்கும் உம்முடைய விருத்தாப்பியத்துக்கும் ஒவ்வாமல், அதைக்கெடுப்பதைவிட கொலைகூடச்செய்யலாம்.

சா. அ.—புருஷனுக்கு என்னடா! தொண்ணூறு வயதில்கூட கலியாணம் செய்யலாம். சாஸ்திரமிருக்கிறது.

அ. கு—அந்த சாஸ்திரத்தைக்கிழித்து நெருப்பில் போடு. சாஸ்திரப்படிதான் நீர் கிரமமாய் நடக்கிறீரோ. பிரமசாரியாசிரமம், கிரகஸ்தாசிரமம், வானபிரஸ்தாசிரமம், ஔபாஸனம், அக்கினிஹோத்திரம், வேதாத்தியயனம், ஜபம், தபம், எல்லாம் கிரமமாய் அநுஷ்டிக்கிறவர்மாதிரி பேசுகிறீர். போங்காணும் போம் வேலையற்றவரே. சாஸ்திரம்! உமக்கென்ன சாஸ்திரம்?

சா. அ.—எத்தனையோ பேர்கள் எனக்குப் பெரியவாளெல்லாம், கலியாணஞ்செய்து பிள்ளைகுட்டிகளெல்லாம் பெற்று சுகவாழ்வு வாழ்ந்திருக்கிறார்கள். நானேன்செய்யக்கூடாது.

அ. கு.—பிள்ளைகுட்டி பன்னிகூடத்தான் பெறுகிறது. அதற்கென்ன ஸ்திரீகள் எப்படியாகிலும் பெற்றுப்போகிறார்கள். ஸ்திரிபுமான் நேசமாயும் அன்னியோன்னியமாயும் மனமொற்று வாழ்வது அபூர்வமே. எனக்குஓர் கிழத்தியைக்கண்டால் எப்படி இருக்கிறதோ, அப்படித்தானே இருக்கும் சிறு பெண்களுக்குக் கிழவனைக்கண்டால்?

சா. அ.—ஸ்திரீகளுக்கு அப்படியெல்லாம் இருக்கமாட்டாது. நல்லநகையும், புடவையும் அகப்பட்டால் போதும். புருஷன் எப்படி இருந்தாலும் பாதகமில்லை.

அ. கு.—அதெல்லாம் பண்டைய காலத்து சமாசாரம். இந்தக்காலத்துப் பெண்கள் துராசைபிடித்துமோசம்போகிறதில்லை. வெட்டுக்கிளிநெருப்பில் விழுகிறாப்போல், கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு சந்தியில் நிற்க இஷ்டப்படுகிறதில்லை.

சா. அ.—என்னைக் கலியாணம்பண்ணினால் சந்தியில் நிற்பானேன். எதேஷ்டமாய் நகையும் நாணயமுமாய், பணத்தின்மேல் கிடந்து புரளலாம்.

அ. கு.—நீர்தான் ஆற்றில் ஒருகாலும், சேற்றில் ஒருகாலுமா யிருக்கிறீரே. தினமும் ஒருதரம் தாலியைத்தொட்டுப்பார்த்துக்கொண்டே இருக்கவேணும். உமக்குக் காலஞ்சென்றபிறகு நகையை வைத்துக்கொண்டு, செய்கிறதென்ன? பிறகு அறையில் மூடிக்கொண்டு, யாருக்கும் தெரியாமல் மொட்டைத் தலையில் போட்டுக்கொள்ளலாம்.

சா. அ.—வயது சென்றவர்கள் கலியாணஞ்செய்து கொள்ள பெண் அகப்படுகிறதில்லையோ?

அ. கு.—அதற்கென்ன, தாய்தந்தையர்கள் பணத்துக்காக ஆசைப்பட்டுக்கொண்டு ஆட்டைவளர்த்து கசாப்புக்காரனுக்குக் கொடுக்கிறதுபோல், பெண்ணைக்கொணர்ந்து கிழவனுக்குத் தள்ளுகிறார்கள். விவரந்தெரியாத பெண்ணும் வாழ்க்கைப்படுகிறேனென்று சொல்லலாம். ஆனால் வயதானபிறகு மனநிலை மாறிப்போம். கிழவனுக்கும், சிறுபெண்ணுக்கும் அந்தரங்கவிசுவாசமிருக்காது. மனமும் பொருந்தாது. அவளிஷ்டப்படி விட்டாலொழிய உம்மை சுகப்படவொட்டாள்.

சா. அ.—அப்படி எதாகிலும் பிசகு செய்தால் நகைநாணயங்களைப் பிடுங்கிக்கொண்டு துரத்திவிடுவேன்.



அ. கு.—துரத்திவிட்டுச் சோற்றுக்கென்னபண்ணுவீர். கையால்தானே மறுபடியும் சமைத்துச் சாப்பிடவேணும். அவ்வளவுசக்தி உமக்கு இருந்தால் அவள் உமக்கு அடங்கி இருக்கமாட்டாளா? ஏன் பொட்டையுருட்டு உருட்டுகிறீர்? மானத்துக்கு பயந்திரோ, விவாகம்செய்துகொள்ளாதேயும்.

சா. அ.—அடா! அப்புக்குட்டி, உன்கண்முன்னே நான் மணம்புரிந்து, சுகமாய்க் குடித்தனம் பண்ணுகிறேன் பார்!

அ. கு.—முன் சொன்னது ஒருகால் பெண்ணின் துரதிஷ்டத்தினால் நடக்கலாம். பின் சொன்னது நிறைவேறாது. அம்மா திரண்டு உருண்டு வருவதற்குமுன்னே அய்யா புரண்டு உருண்டு போய் விடுவீர். அம்மா கட்டில் ஏறுமுன் அய்யா காட்டில் ஏறிவிடுவீர்.

சா. அ.—அடே பயித்தியக்காரன் மாதிரி உளருகிறாய். உனக்கு ஏன இவ்வள்வு துடுக்குத்தனம்?

அ. கு.—உமக்குக் கலியாணப்பயித்தியம் பிடித்திருக்கிறது. அதினால் காரியந் தெரியவில்லை. உள்ளதைச் சொன்னால் ஏன் உமக்கு இவ்வளவு கோபம்?

சா. அ.—கலியாணம் பண்ணிக்கொள்ளாவிட்டால் ஒருவேளைக்கு யார் சோறுபோடுகிறார்? எங்கே திண்டாடுகிறது?

அ. கு.—செய்து மானங்கெட்டுப் போவதைவிட செய்யாமல்தான் அலையுமே. அதான் ஊர்த்தாலியை யறுத்து உத்தியோகம்செய்து சேர்த்து வைத்திருக்கிறீரே. பிள்ளையும் உத்தியோகத்திலிருக்கிறான். ஒரு பரிசாரகனை வைத்துக் கொள்ளுமே.

சா. அ.—இந்தநாளில் சமையற்காரன் நல்லவனாய் எங்கே அகப்படுகிறான்? குடி, பொடி, கூத்தி இல்லாதவன் அபூர்வம். வீட்டில் தங்கமாட்டான். வேளாவேளையில் பக்குவமாய்ச்சமைத்துப்போடமாட்டான். தலையைக் காலை வலித்தால் வெந்நீர் கஞ்சிவைத்து வழியாய்க் கொடுக்கமாட்டான்.

அ. கு.—பணத்தைத் தாராளமாய்க் கொடும். எல்லாஞ் செய்வான். இறந்தபிறகு ஓர் ஆயிரரூபாய் தருகிறேனென்று உயிலெழுதிவையும், அகமுடையாளைவிட ஆயிரமடங்கு கட்டிக் காத்துக்கொண்டிருப்பான். உமக்கு உயிரோடு காசு கொடுக்க மனம் வராது.

சா. அ.—பரிசாரகன் எத்தனையோபேர்களைப்பார்த்தாய்விட்டது. அந்தப் பயல்களுக்கும் எவ்வளவு கொடுத்தாலும் திருப்தியில்லை. தரிக்கிறதுமில்லை. சமயத்தில் புறப்பட்டு ஓடிப்போகிறான்.

அ. கு.—ஓய், பிள்ளையினிடத்திலாவது கொஞ்சகாலத்துக்குச்சாகிறவரையில் போயிருமே. என் வீட்டில் தனிமையாக அவஸ்தைப்பட்டுக்கொண்டு பிராணனை விடுகிறீர்?

சா. அ.—நாட்டுப்பெண் ஒருவேளைகூட சரிவர அன்னங்காட்டமாட்டாள்.

அ. கு.—உம்முடைய துர்முகித்தனத்தைவிட்டுத்துராமல் சாந்தமாயிருந்தால், எல்லாரும் உம்மிடத்தில் பிரியமாயிருப்பார்கள். இளையாளுக்குப் போட உத்தேசித்திருக்கிற நகையை நாட்டுப்பெண்ணுக்குக் கொடும், சோடச உபசாரத்துடன் உம்மைஆதரிப்பாள். உம்முடைய சுபாவம் எப்பொழுதும் கெட்டது, வேண்டியவர்களுக்கு ஒன்றும் கொடுக்கமாட்டீரே.

சா. அ.—அதற்கெல்லாம் வசப்பட மாட்டாள். வசப்படுகிற ஜாதி அன்று. பிள்ளை எவ்வளவோ நகைசெய்து போட்டிருக்கிறான். அவனுக்கே அடங்கி நடக்கிறதில்லை. நான் சொல்வதையா கேட்கப் போகிறாள்?

அ. கு.—சிறுபிள்ளைகள், உத்தியோகஸ்தர்களே அகப்பட்டுக்கொண்டு விழித்தால், நீர் தாத்தா ஓர் இளையாளிடத்தில் அகப்பட்டுக்கொண்டு என்னபாடு படமாட்டீர்! உமக்கு உடனே பாடைகட்டவேண்டியதுதான். ஓய் அப்புக்குட்டி வார்த்தையைத் தட்டாதேயும். சொல்லுகிறதைக் கேளும். உம்முடைய தம்பிதான் ஏழையாயிருக்கிறான், அவனிடத்தில் ஏதாகிலும் பத்து, ஐந்து கொடுத்து, ஊரோடே வசித்துக்கொண்டு காலந்தள்ளும்.

சா. அ.—பங்காளி வீட்டுக்கா போகச்சொல்லுகிறாய்? நாலுவருஷம் கழித்துப்போகிற உயிரை இப்பொழுதே மாய்த்துவிடுவார்கள். பங்காளியோ சண்டாளியோ!

அ. கு.—வீணில் ஒருபெண்ணை நிர்க்கதியாய் அடிப்பதைவிட, போனால்தான் போமே, உமக்கு என்ன நஷ்டம்? பாலியமுதல் வேண்டியபடி அநுபவித்தாய்விட்டது.

சா. அ.—அப்படியாவது அவதிப்பட்டுச் சாக என் தலைவிதியோ. இவ்வளவுகாலம் சுகமாயிருந்துவிட்டு இப்பொழுதேன் ஒருவன் கையின்கீழ் இருக்கவேணும். கலியாணம்பண்ணிக்கொண்டு வருபவளுடைய தாலி பலத்தினால் உடம்பு தெளிந்து இன்னம் பத்துவருஷம் கூட திடமாய் இருந்தா லாகாதோ?

அ. கு.—பார்வைக்கு கெடு அவ்வளவு எட்டி இருப்பதாகத் தோன்றவில்லை. ஒருவேளைதெய்வபலத்தினால் தப்பினால் உண்டு. அந்திய காலத்தில் ஓர்பெண்ணை கெடுக்காதேயும். பழி உம்மை எந்தலோகம் போனாலும் விடாது.

சா. அ.—நான் ஒருத்தனை எப்படி கெடுக்கமுடியும்? தெய்வ சங்கல்பமில்லாமல் ஒன்றும் நேராது. என்னைக் கேட்டுக்கொண்டா மூத்தாள் இறந்து போனாள்? சகலமும் சங்கல்பாயத்தினம்.

அ. கு.—சங்கல்பாயத்தினமென்று விஷத்தை சாப்பிடுமே. என் துர்க்கட்சி பேசுகிறீர்?

சா. அ.—இல்லாவிட்டால் எல்லாம் நீ நினைத்தபடிதான் முடிகிறதோ? இப்போ நீ ஓர் பிள்ளையைப்பெறு. துர்க்கட்சி பேசுகிறது நானோ நீயோ?

அ. கு.—கலியாணப் பிரஸ்தாபம் வாஸ்தவந்தான். கலியாணத்துக்கு தாத்தா சன்னத்தமா யிருக்கிறார்.

சா. அ.—என்னுடைய சன்னத்தம் என்ன பிரயோஜனம்? பிராப்தி வேண்டாமா? பிராப்தியிருந்தால் நடக்கிறது; இல்லாவிடிற் போகிறது. என்னத்திற்கு விருதாவாதம்! அதுபோகட்டும். நீ பணம் வேணுமென்று கேட்டாயே வேணுமா வேண்டாமா?

அ. கு.—அகத்தியம் பணம் வேணும். போனவருஷம் கலியாணத்தின்போது கைமாற்றாக வாங்கின பணம் இன்னும் கொடுபடவில்லை. கடன்காரன் நெருக்குகிறான். மானம் போய்விடும் போலிருக்கிறது. பிரியாது செய்துவிட்டால் என்ன செய்கிறது? செலவு தொகை கையை விட்டுக் கொடுக்கவேண்டும்.

சா. அ.—வரவேண்டிய தொகை சில்லரையாக வரும். சேர்த்து உன்னிடத்தில் கொடுக்கிறேன்: ஒரு மாசம் பொறு.

அ. கு.—மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினாற்போல, உமது பேச்சை நம்பி ஒன்று செய்யலாமா? சமயத்தில் கைவிட்டுவிடுவீரோ.

சா. அ.—நீ எனக்குரொம்பநாளாய் வேண்டியவன், உன் விஷயத்தில் நான் மோசம்பண்ணமாட்டேன். வேண்டிய வட்டியைப் போட்டுக்கொள்; சௌகரியமான பொழுதுகொடு. உன்னிடத்தில் நான் லாபம் நஷ்டம் பார்க்கிறதில்லை. நின்று காலைக் கடுக்கிறது. ஸ்வாமி உள்ளே போயிருப்பர். இவ்வளவுநாழிகை வீண் சண்டையாய்ப் போய்விட்டது. வீட்டைப்பூட்டிவந்தேன்; வீடு என்னமாயிருக்கிறதோ, நான் வீட்டுக்குப் போகிறேன்.

அ. கு.—நல்லது. அப்புறம்வருகிறேன். ஏதோ நான் சொன்னேனென்று கோபித்துக்கொள்ளாதேயும். லோகநடபடிக்கையையும், எனக்குச் சரியாகத் தோன்றினதையும் சொன்னேன். கேட்டால் கேளும், இல்லாவிடின் இஷ்டப்படி நடந்துகொள்ளும். அன்றைக்கு எழுதின எழுத்துக்கு இரண்டில்லை. நமஸ்காரம்.

சா. அ.—மஹாராஜனாயிரு. பதினாறும்பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்துகொண்டிரு, (தனிமையாக) அப்புக்குட்டியோ கபடமற்றவன். சொல்லுகிறதெல்லாம் வாஸ்தவந்தான். வயதோ அறுபது ஆகிறது. நிற்கக்கூட சக்தியில்லை. கலியாணம் செய்துகொண்டு ஓர் இராத்திரிபோவது ஓர் யுகமாய்த்தான் இருக்கும். பண்ணாவிடில் என்னை யார் ஏனென்று கேட்பார்? தங்கையோ கபடசிகாமணி; நாட்டுப்பெண்ணோ ஜகசண்டி; தம்பி அகமுடையாளோ இராட்சஸி. செய்தால்தான்என்னுடைய சம்ரக்ஷணை அவள் பாரமாய்விடும். இருக்கிறவரையில் சுகமாயிருக்கலாம். இன்னும் எத்தனைவருஷ மிருக்கப்போகிறோமோ, ஆயுசை ஆர்கண்டார்?

ஆர். சக்கிரவர்த்தி அய்யங்கார். பி. ஏ.

---

## பசியும் தாகமும்.

நாம் சற்றுக் கவலையோடு பார்ப்போமானால், உயிர்ப்பிராணிகளின் சரீரமானது நிமிஷந்தோறும் வேறுபாட்டை யடைகிறதென்பது நமக்கு நன்றாய் விளங்கும். நம்முடைய அவயவங்களெல்லாம் நாள்தோறும் தன்படியே செய்வதாயுள்ள சுவாசம் விடுதல் ஹிருதயம் அடித்தல் முதலிய வேலைகளைத்தவிர அவரவர் தொழில்களுக்குரிய எத்தனையோ விதமான எண்ணிறந்த வேலைகளைச் செய்வதால், நிமிஷந்தோறும் குறைவதும், அவயவங்களைச் சேர்ந்த பிராணவாயு, ஜலவாயு, உப்புவாயு (Oxygen, Hydrogen Nitrogen, and carbon) முதலிய அநேக வஸ்துக்கள், மலமூத்திராதிகள் மூலமாய் வெளியேறுவதும், அம்மூலமா யுண்டாகும் க்ஷீணமானது மேலோடவொட்டாமல் இடைக்கிடை ஆகார முதலியவற்றால் நாம் அவயவங்களைத் தத்தம் நிலைமைகளுக்கு மீட்பதும் யாவருக்கும் தெரிந்த விஷயமே.

இவ்வாறு உண்டாகும் க்ஷீணமானது நடக்கும் விரைவையும், பரிமாணத்தையும் யோசிக்குங்கால் அதைத்தடுத்து, அவ்வழிவை அகற்றுதற்குரிய முயற்சியும், சரீரத்தில் தக்க விரைவுடன் நடக்கவேண்டும். நமது பற்பல அவயவங்களி லிருக்கிற வஸ்துக்களே அதிக வேறுபாடில்லாமல், இரத்தத்திலுமிருப்



பதைப் பார்க்கும்பொழுது, அவ்வஸ்துக்கள், அவயவங்களுடன் சேருவதற்காகவோ, அல்லது அவைகளைவிட்டு நீங்கி வெளியேறுவதற்காகவோ, இரத்தக் குழாய்களின் வழியாய்க் கொண்டுபோகப்படுகின்றன வென்பதற்குச் சிறிதேனும் சந்தேகமில்லை. ஆகையால் இப்பொழுது அவ்வுறுப்புக்களுக்கு வேண்டிய வஸ்துக்களும் அவைகளைவிட்டு நீங்கிய வஸ்துக்களும் எப்படி இரத்தக் குழாய்களின் வழியாய்ச் செல்லுகின்றன வென்பதையும், பிறகு அக்குழாய்களினின்றும் வெளியேறி, உறுப்புக்களுடனாவது, அல்லது தேகத்தைவிட்டு வெளியேயாவது எவ்விதமாய்ச் செல்லுகின்றன வென்பதையும் வேறொரு சந்தர்ப்பத்தில் விவரிப்போம்.

போஷணைத் திரவியங்கள் எல்லாம் (Alimentary Principles) இரத்தத்தைவிட்டு அவயவங்களுக்குச் சென்றபின்பு, அத்திரவியங்களில் குறைவாயுள்ள இரத்தத்தைத் திரும்பவும், அத்திரவியங்களால் நிரப்புவது ஆகாரத்தால் தான் என்று யாருக்கும் பொதுவாய்த் தெரியலாம்.

### பசி.

போஷணைத் திரவியங்களை உட்கொள்ளும்படி; நமது சரீரத்தில் நாம் உணரும் உணர்ச்சிக்குப் பசியென்று பெயர். அது இளம்பசியா யிருக்கும்பொழுது உண்டாகும் உணர்ச்சியையும், முதிர்ந்து கடும்பசியாகும்பொழுது விளைவிக்கும் தீமையையும் அச்சமயத்தில் சுவையுள்ள உணவுகளைக் காண்பதினாலும், முகப்பதினாலும், ஸ்மரிப்பதினாலும் உண்டாகும் சங்கடத்தையும், அவ்வேளையில் ஏதாவது உணவை உட்கொண்டபின் உண்டாகும் திருப்தியையும், ஆக்கத்தையும் பற்றிச் சொல்லுவது அனாவசியம். பசியைப் பொறுக்கும் திறமை யாவருக்கும் ஓரே விதமானதன்று. அது வயதையும் அவரவருடைய வழக்கத்தையும், செய்யும் தொழிலையும், சீதோஷ்ண ஸ்திதியையும் பற்றியதா யிருக்கிறது. குழந்தைகளும், விருத்தர்களும், வயதுவந்தவர்களைப்போலப் பசிபொறுக்க மாட்டார்கள், இவ்விஷயமானது 1816 - ம் வருத்தில் முழுகிப்போன மெட்யூசா (Medusa) என்னும் போர்க்கப்பலி லிருந்து தப்பிய ஜனங்களைக்கொண்டு நிர்ணயிக்கப்பட்டு, பிறகு செய்த பரீட்சைகளால் ஸ்தாபிக்கப்பட்டது. அக்கப்பலிலிருந்து தப்பி 13 நாள்வரையில் நிராகாரிகளாய் ஓர் ஸ்தம்பத்தில் மிதந்த 150 மனிதர்களில் 15 பேர் மாத்திரம், 13-வது நாள் பிழைத்திருந்தார்கள். இறந்துபோன 135 பேர்களில் முதலில் மாண்டவர்கள் குழந்தைகளும், கிழவர்களும், சிறுவர்களுமே.

சீதளதேசங்களில் எக்காலத்திலும், மற்றையதேசங்களிலெல்லாம் குளிர்காலத்திலும், ஆகாரம் அதிகமாய் வேண்டியிருப்பதுமல்லாமல், சுவையிலும் சிறிதுபேதம் தோன்றும். அக்காலங்களில் தேகத்தில் உஷ்ணத்தை யுண்டாக்கத்தக்க கொழுப்பு, மாம்சம், முதலியவைகள் நிறைந்த வுணவுகளைச் சாப்பிடவேண்டும்.

தேகப்பயிற்சியும் மனப்பயிற்சியும் களைப்பையுண்டுபண்ணுதபடி மிதமாயிருந்தால், பசியையும் ஜீர்ணசக்தியையு மபிவிர்த்திசெய்யும். சில பூண்டுகளிலிருந்து இறக்கும் திராவகங்களும் சாப்பிடுவதற்குமுன் வழக்கமா யுட்கொண்டால் பசியை யதிகரித்துச் சரீரத்துக்குச் சுகத்தைக்கொடுக்கும். அபின், மது என்னும் திராவகம், முதலிய லாகிரி பதார்த்தங்களும், புகையிலையுபயோகிக்கிறவர்களா யிருந்தால் புகையிலையும், பசியைத்தணிக்குந்தன்மையுடையவை.

பசியுண்டாகும்பொழுது, அதையடக்கத்தக்கவஸ்துக்களால் அதை யாற்றாவிடில் சிறிதுசிறிதாயதிகரித்து முதலில் சொற்பமான வலியாய்த்தோன்றிக் கொஞ்ச நேரத்தில் பிறருக்குச் சொல்லமுடியாத சங்கடமாய் மாறி இன்னும் சற்றுநேரத்துக்கெல்லாம் ஸகிக்கக்கூடாத வேதனையாய்முடியும் வரையில் அனேகமாய் யாவருமறிந்திருக்கலாம்; இதற்கு மேற்பட்டுள்ளது சிலருக்கு மாத்திரமே தெரியும்; இப்பொழுதும் பசியாற்ற மார்க்கமில்லாவிடில், அதியுக்கிரமானதலைவலியும், தேகமெங்கும் ஓர்வித வருத்தமும்மயக்கமும் உண்டாகி, எவ்விதத்திலாவது பசியைத்தணிக்க முயற்சிசெய்வதே ஓர் பெருங்கவலையாய் விடும். இச்சமயத்தில் நரமாம்சபட்சணம் (மனிதர்களைத்தின்பது) கூட மனசுக்கு வெறுப்பாயிராது. இதற்கு உதாரணமாய் எத்தனையோ தடவைகளில், நடுச்சமுத்திரத்தில், ஆகாரமில்லா விருக்கும்பொழுது, மனிதர் ஒருவரை யொருவர் சாப்பிட்டிருப்பதாய்க்கேட்டிருக்கிறோம்.

### பசியின் உற்பத்திஸ்தானம்.

இப்படிப்பட்ட பசியின் குணகுணங்களைப்பற்றிச் சொல்லிய பிறகு, அது எவ்விடத்திலுண்டாகிறது, அதாவது அதினுற்பத்திஸ்தான மெங்கேயிருக்கிறது என்பதைப்பற்றிச் சற்றுவிசாரிப்போம். நாம் ஜனங்கள் "வயிறுபசிக்கிறது" என்று சொல்வதைத்தினந்தோறும் கேட்கிறோம். அவர்கள் சொல்வதுபோல் பசியினுடைய உற்பத்தி ஸ்தானம் வயிற்றில்தானா அல்லது வேறெவ்விடத்திலாவதா? சற்று யோசித்தால் இக்கேள்விக்குப்பதில் நமக்கே தோன்றும். இதற்குமுன் இரண்டொரு சங்கதிகளைப்பற்றி யோசித்து, அவற்றின் முடிவை, மேற்கூறிய சில சங்கதிகளுடன் சேர்த்து ஆலோசிப்போம். நாம், அநேக

நோயாளிகள் வியாதிகளிலிருந்து தெளியும் சமயத்திலும், சிலநாள் பட்டினியாயிருந்தவர்கள் அப்பட்டினியின் முடிவிலும் எவ்வளவு நிரம்பச்சாப்பிட்டபோதிலும், அவர்களுக்கு வயிறு நிறைந்ததாயுள்ள எண்ணமிருந்தும் பசியடங்கிய திருப்தியில்லாததைக் காணலாம். அவர்களதற்குத்தக்கபடிகையிலகப்படும் தின்பண்டங்களை யெல்லாம் தின்பதைப்பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட அதிருப்தியை நாம் "நைப்பாசை"யென்று சொல்லுகிறோம். இந்நைப்பாசை வயிற்றுப்பசியாலல்ல, ஏனெனில் வயிறு நிறைந்து பூர்ணமாயிருக்கிறது. நல்லது வேறொரு விதமாய்ப் பார்ப்போம். சில வயிற்றுநோவுகளினால், ஆகாரம் உட்கொள்ளவும், அதைச்சீரணிக்கவும் சிலர் அசக்தர்களாயிருந்தும், பசியில் சிறிதும் குறைவின்றி யிருப்பதையும், அப்பசியானது, போஷணைப்பதார்த்தங்களை இரத்தக்குழாய்களில் செலுத்தியவுடன் அடங்கிவிடுவதும் வழக்கம். இதை யெல்லாம் பார்க்குங்கால் பசியென்பது சாதாரணமாய்ச்சொல்வதுபோல் வயிற்றிலுண்டாவதில்லை யென்பதும், ஆனால் வயிற்றில் ஆகாரம்போடவேண்டிய வுணர்ச்சியுண்டாகிறதென்பதற்கு "வயிறுபசிக்கிறது" என்கிறார்கள் என்பதும், ஆகாரத்தின் ஸாரமானது இரத்தத்தில் சென்று அவயவங்களோடு ஒருமித்தால் பசியடங்குகிறதென்பதும் தெளிவாய்த்தெரியவருகிறது,

### தாகம்.

ஜலத்தையுட்கொள்ளும்படி யுண்டாகும் ஆவலுக்குத்தாகமென்று பெயர். அத்துடன் தொண்டையிலும், உள்வாயிலும் வரட்சியும் உஷ்ணமும், ஆகாரம் சாப்பிட்ட சமயமாயிருந்தால், தாகம் வயிற்றிலுண்டாவது போலுள்ள ஓர்வகையுணர்ச்சியுமுண்டாவது வழக்கம்.

தாகமும் பசியைப்போல், சீதோஷ்ணஸ்திதி, அப்பியாசம் முதலியவைகளைச் சார்ந்திருக்கிறது. இவற்றுள் முக்கியமானது, சீதோஷ்ணஸ்திதியும் ஆகாயமிருக்கும் நிலைமையுந்தான். ஆகாயமானது அதிக நீராவியற்று உலர்ந்திருக்குமானால் தேகத்திலிருந்து அதிக வேர்வையுண்டாகி உடம்பிலேதண்ணீர்ப்பசை குறைவதினால், தாகமும் அதிகமாயுண்டாகும். அவ்வாறல்லாமல், ஏராளமான நீராவி நிறைந்திருக்குமாகில், அப்பொழுது அதிகமாய்வேர்வையிராது. ஆகையால் தாகமும் மிதமாயிருக்கும்.

வெட்டுக்காயம் முதலியவற்றாலாவது வேறெந்த விதமாயாவதுதேகத்திலுள்ளஇரத்தத்திற்குக்குறைவு வந்தால், தாகம் அபரிமிதமாயுண்டாகும். அதற்குத் திருஷ்டாந்தமாய், இரத்தமதிகமாய் வெளியேறும்படியான ரணவைத்தியம் செய்து முடிந்தபிறகுபிராணிகள் மிக்க ஆவலுடன் நீர் குடிப்பது நமக்குத் தெரியும்.

தாகத்தாலுண்டாகும் துன்பங்கள் மேற் கூறிய துன்பங்களினும் அதிகக்கொடியவை. ஜலம் மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் மனிதன் ஆகாரமும் ஜலமுமில்லாதவனைப் பார்க்கிலும் அதிக நாள் ஜீவிப்பான். ஜலமானது உயிர்க்கு முக்கியமானது. அது, போஷணைப் பதார்த்தங்களைக்கொண்டுபோய் அவயவங்கள் தோறும் கொடுப்பது மாத்திரமல்ல, அவைகளிடத்துண்டாகும் கெட்ட பதார்த்தங்களையும் நீக்கிக்கொண்டுபோய் வெளியேற்றுகிறதென்பதற்கு நமது தேகத்திலிருந்து வெளியேறுகிற வேர்வை முதலிய நீர்களே திருஷ்டாந்தம். அதிகதாகத்தாலுண்டாகும் சில தீங்குகளைச் சற்று எடுத்துச் சொல்லுவோம். மேற்சொல்லியபடி தொண்டையிலும், உள்வாயிலும் வரட்சியும் உஷ்ணமும் அதிகரித்துச்சற்றுநேரத்துக்கெல்லாம் தொண்டையைக்கயிற்றாற் சுருக்கிட்டாற்போல் உணர்ச்சியுமுண்டாகிறது. பிறகு ஓர்விதமான ஜ்வரம்போன்ற சாட்டிய முண்டாவதுடன், இரத்தம் இறுகிக்குறைவதும், நீர்சுவல்பமாயிறங்குவதும், நீர்த்துவாரத்தி லெரிச்சலெடுப்பதும், இன்னுமவயவங்களனைத்தும் வெந்தாற்போல் தோன்றுவதும், பிறகுசில நாளைக்கெல்லாம் ஜன்னியும், கடைசியாய் மரணமுண்டாவதும் வழக்கம்.

### தாகத்தினுற்பத்தி ஸ்தானம்.

மேற்சொல்லிய வரட்சி முதலியவைகள் தோன்றுவதால், சாதாரணமாய்த் தாகமானது தொண்டையிலும், உள்வாயிலுமுண்டாவதாய்ச்சொல்வது வழக்கம். ஆனால் பசியைப்போல் இதுவும் பொதுவாய் தேகத்தில் உற்பத்தியாகிறதென்பதும், ஜலமானது வயிற்றிலாவது வாயிலாவது சென்ற மாத்திரத்தில் அடங்குவதில்லையென்பதும், அதுஇரத்தக்குழாயில் சேர்ந்தால் மாத்திரமே யடங்குமென்பதும், சில வருஷங்களுக்கு முன் (1820) ஒரு பிணியாளியின் பேரிலும், ஒரு நாயின்பேரிலும், செய்த பரீட்சைகளால் தெளிவாய்த்தெரியவந்தன. மேற்சொன்ன நோயாளியானவன் குடம் குடமாய்க்குடித்த ஜலமெல்லாம், அவன் கழுத்திலிருந்த ஒரு காயத்தின் வழியாய் வெளியேறிவிட்டபடியால் எவ்வளவுகுடித்தும் அவனுக்குத்தாமடங்கவில்லை. நாய்க்கோவென்றால் ஜலம் வாயிற்சென்றது மாத்திரமன்றி வயிற்றில் சென்றும் கூட, வயிற்றில் செய்யப்பட்ட ஒரு துவாரத்தின்வழியால் அது வெளியே வந்துவிட்டமையால் குடம் குடமாய்க்குடித்து மதற்கும்தாகம் தீராத்தாகமாகவேயிருந்தது. இவ்விருவருக்கும் துவாரத்தையடைத்து நீர் கொடுத்தபிறகு திருப்தியுண்டாகித் தாகமடங்கிற்று.

பிராணிகள் ஜலமில்லாமல் சற்றேறக்குறைய 5-முதல் 8-நாள் உயிரோடிருக்கும். ஆனால் அதிகக் குளிரடிக்கவொட்டாது காப்பாற்றினால் இதற்கிருமடங்கு வரையிலும் ஜீவிக்கச்செய்யலாம்.

டி. எஸ். சேஷய்யர் பி. ஏ.



### கடவுள் வாழ்த்து.

அன்பே குணமா யறிவே வடிவானாய்
துன்பக் கடலி விறங்கித் துறையறியா
தின்பம் விரும்பி யுழலு மெமக்கிரங்கித்
துன்பம் தவிர்ப்பாய் தொழுதேம் தொழுதேமால் 1

நீதி தவறித் தருமம் நிலைகுலைந்து
சாதி குலம்பிறப்பென் றெண்ணித் தடுமாறும்
பேதையே மெம்பா லிரங்குதியாற் பேரறிவின்
சோதியே நின்னைத் தொழுதேம் தொழுதேமால். 2.

கற்றார்க் கரியையாய்க் கல்லார்க் கெளியையாய்
நிற்ற லதுதா னினக்கே சிறப்பேயோ
பற்றாற் றொழுதே மறியேம் பரம்பொருளே
எற்றோநின் றன்மை யிறையே தொழுதேமால். 3.

த. சரவணமுத்துப்பிள்ளை, பி: ஏ.

---

## மாதர்பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் நமது விவேகசிந்தாமணியை வாசிக்கும் மாதர்கள் எழுதும் விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.]

சென்ற சஞ்சிகையின் மாதர்பக்கத்தில் "ஓர் மனைவி" எழுதிய விஷயத்தில் கடைசியில் ஒரு கதை இடமின்றி நிறுத்திவைக்கவேண்டியதாகத்தெரிவித்திருந்தோமே, அக்கதையை இம்முறை இங்கே பிரசுரிக்கிறோம்.

### பாலவிவாகத்தால் விளைந்தபயன்.

#### ஒருகதை.

ஒரு ஊரில் பெண்ணுக்கு 4 வயதும், பிள்ளைக்கு 5 வயதுமாயிருக்கையில் இருவருக்கும் கலியாணம் செய்தார்கள். பெண்வீட்டுக்காரர்கள் மிகவும் தூரமான தேசத்துக்குப் போய்விட்டார்கள். போய்மிகவும் நாளாய்விட்ட படியால் வயது 18 ஆயி பெண் பெரியமனுஷி ஆகி 6-வருஷம் ஆய்விட்டது. பெண்வீட்டுக்காரருக்கும் பிள்ளைவீட்டுக்காரருக்கும்கடிதப் போக்குவரத்து உண்டு. ஆனால் அது பிள்ளைக்குத் தெரியாது. இந்தப் பிள்ளை வெகு கெட்டிக்காரன். சிறு வயது முதல் பட்டணம் வந்து வாசித்து நல்ல படிப்பு உள்ளவனாய் அவன் குடும்பத்தார் எல்லாருக்கும் நன்மையைக் கொடுக்கத்தக்கவனா யிருந்தான். பெண்வீட்டுக்காரர் குழந்தைபெரியவளாகி ரொம்ப நாளானபடியால் சீக்கிரத்தில் சாந்தி முகூர்த்தத்தைச் செய்து முடித்துவிடவேண்டு மென்று அடிக்கடி பிள்ளை வீட்டாருக்கு எழுதி அவர்களுக்கு எப்போ சௌகரியமோ தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுவந்தார். பிள்ளை வீட்டுக்காரர், எல்லோரும் சீக்கிரம் வந்துசேர வேண்டுமென்று கடிதமெழுதினார்கள். அவர்கள் எல்லாரும் வந்து விட்டார்கள். பிள்ளையும் பள்ளிக்கூட விடுமுறையான படியால் ஊருக்கு வந்து சேர்ந்தான். பையன்வந்திருப்பவர்களைப் பார்த்து,'என் அண்ணா, இந்தப்பெண் எனக்குத்தமக்கையோ, அவள் சிறியதாயாரோ, இவர் சிற்றப்பாவோ' என்றுகேட்டான். தகப்பன்,'அடேமுட்டாள் அந்தப்பெண்தான் உன்பெண்டாட்டி, தூணின் கிட்டஇருக்கிறாரே அவர் தான் உன்மாமனார், அந்தண்டை குதிருக்குப்பக்கத்தில் நிற்கிறாளே அவள் தான் உன் மாமியார்,' என்று சொல்ல, பையன் 'என் அண்ணா பரிகாசம் செய்கிறீர்கள்என்றுவிட்டு,ஐயோ அந்தப்பெண் இரண்டு பிள்ளை பெற்றிருப்பாள், யாருடைய மனைவியோ அது மட்டும் எனக்குத் தெரியாது, ஆனால் அந்தப்பெண்ணை இதுவரையில் நான் பார்த்ததேயில்லை. நான் பிறக்கிறதற்கு முந்தி இந்தப்பெண்பிறந்திருப்பாள்என்பதற்குசந்தேகமில்லை' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு தகப்பனாரையின்னும் உண்மைவிசாரிப்பவன் போல் சந்தேகத்தோடு ஏறிட்டுப்பார்த்தான். தகப்பன்இதற்கென்ன செய்யலாமென்று நினைத்துப்பின்னும் உள்ளதைச் சொன்னார். இவன் ஒன்றுக்கும் நம்பாமலிருந்தான். அந்தப்பெண்ணுக்கு நம்பள் புருஷன் என்ற ஞாபகமாவது நம்பிக்கையாவது கிடையாது. கடைசியில் அந்தப்பையன்யோஜித்ததாவது:—'ஐயோ, அந்தப் பெண் என்ன அழகாயிருக்கிறது, முகத்தில் என்ன களை,' எவ்வளவு புத்திசாலித்தனம்! யாருக்கோ கலியாணம் செய்து விட்டார்களே (இவன் முதலில் சந்தேகித்துக்கடைசியில் அப்படியே நம்பிவிட்டான்.) நம்பஅண்ணா சொல்லும்போல் அந்தப்பெண் நமக்குத்தான் பெண்டாட்டியாக இருக்கக்கூடாதா? அந்தப்பெண்ணுக்குக் கலியாணம் ஆகாமலிருந்தால் நானே கலியாணம் செய்துகொள்வேன். அதுவோ இரண்டு பிள்ளைக்குக்குறையாமல் பெற்றிருக்கும்போல் தோன்றுகிறது. கைம்பெண்ணாக இருந்தாலும் நான் தடையன்னியில் கலியாணம் செய்துகொள்வேன். எவன் கட்டினதாலியோ கழுத்தில் தொங்குகிறதே' என்று இவ்வாறாகயோசித்துக் கடைசியில் பலவித நினைவுகளால் மனங்குழம்பி சஞ்சலமதிகரிக்க மௌனமாயிருந்தான். தகப்பன் எத்தனைதரம் சொல்லியும் பிள்ளை சந்தேகப்பட்டதால் கடைசியில் தகப்பன் ஆத்திரத்தோடு 'அடேபோடா முட்டாள் என் பேச்சை நம்பினால் நம்பு. இல்லாவிட்டால் போ.' என்று சொன்னார். பையன் ஏற்கனவே சஞ்சலமுற்றிருக்கையில் தகப்பனார் கோபத்தோடு பதில் சொன்னதைப் பொறுக்காமல் என்னென்னவோ எண்ணிக்கொண்டு இருந்திருந்தாப்போல் நம்மவர் வழக்கப்படி தேசாந்திரம் போய்விட்டான். மறு

நான் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு 'எனக்கு ஒரே குழந்தையாச்சே, போய்விட்டானே. போய்விட்டானே!' என்று அழுதார். அந்தப்பெண் வீட்டுக்காரர் 'ஆ, தெய்வமே! எங்களுக்கு ஒரே பெண்ணாச்சே, அது இப்படியாபோகவேணும்!' என்று நினைத்து நினைத்து அழுதுகொண்டு வந்தவழியைப் பார்த்துக்கொண்டு போய்விட்டார்கள். இத்தனை கஷ்டமும் விஷத்தெரியாத பாலப்பருவத்தில் கலியாணம்பண்ணினதால் வந்தவில்லங்கமென்பதற்குக் கேட்பானேன். பாலவிவாகத்தால் விளையும் துன்பங்கள் இன்னும் எத்தனையோ உள. இவையெல்லாம் எப்பொழுதுதான் நம் ஹிந்துக்களுக்குப் புத்தியில் படுமோ தெரியவில்லை.

ஓர் மனைவி.

ஹிந்துஸ்திரீகள் வித்தியா காலக்ஷேபார்த்தம் கூடிய இரண்டாவது கூட்டம்.

(விவேகசிந்தாமணிக்காக எழுதப்பட்டது.)

இந்தக்கூட்டம் இரண்டாந்தடவை பட்டணத்திலுள்ள செட்டிப்பெண்கள் பாடசாலையில் கூடியது. அப்பொழுது இல்லாண்மை அல்லதுகுடித்தனமுறை என்னும் விஷயமாக மிஸ். ஷண்முகம் அம்மாளால் ஓர் பிரசங்கம் செய்யப்பட்டது. இந்தப் பிரசங்கத்தின்விஷயம் மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருந்தது. குடித்தனம் செய்கிறவர்களுக்குப் பிரயோஜனமான விஷயங்களில் இது வெகு முக்கியமானது.

புருஷர்கள் வெளியில்சென்று சம்பாதித்து வருவதைச் சேதமாக்காமல் சௌகரியத்துக்குத் தக்கபடி செலவு செய்யவேண்டியது பெண்பிள்ளைகளுடைய பாகம். எந்த தேசத்திலும் புருஷர்கள் கஷ்டப்பட்டுத் தேடிப்போடுவதும் பெண்கள் வீட்டுச் சீர்மையும் குடும்ப சௌக்கியமும் தவறாமல் பார்த்துக்கொண்டு குழந்தைகளைச் சௌக்கியமாயும் நல்லொழுக்கமுள்ளவர்களாயும் வளர்க்கிறதும் மொத்தத்தில் குடித்தனம் விருத்தி யடையக்கூடிய வழியைக் கவனிக்கிறதும் ஆகிய இவைகளில் கஷ்டமெடுத்துக்கொள்கிறதுமாகவே யிருக்கிறார்கள்.

அன்று ஷண்முகம்அம்மாள் செய்த பிரசங்கத்தில் முன் வெகு நாட்களாக இந்த தேசத்தில் வழங்கி வருகிற மனை சாஸ்திரம் வீடுகட்டுகிற சாஸ்திரம் முதலியதுகளைக் குறித்தும், இந்தியாவில் வெள்ளைக்காரர்களுடைய சாஸ்திரங்களால் தெரிகிற மேற்படி சம்பந்தமான கட்டுபாட்டுகளைக் குறித்தும் சொன்னார். வீடுகட்டப்போகிறவர்கள், வீடுவாங்கப் போகிறவர்கள், எல்லாவற்றிற்கும் மேலாகவீடுகுடிப் போகிறவர்கள் இவர்கள் கவனிக்கவேண்டிய பாகங்கள் இந்த பிரசங்கத்தில் வெகுவாயிருந்தது. நல்ல தண்ணீர், நல்ல காற்று இவை அடையக்கூடிய வழிகளும், இவைகளின் இருப்பு, இல்லாமை இவைகளைப்பற்றி அறியக்கூடிய யுக்திகளும், இவை நல்லதாகவே உபயோகப்படுத்துவதில்நம்தேகத்துக்குஇருக்கிற பிரயோசனங்களும் எடுத்துத் தெரிவிக்கப்பட்டன. இந்துக்கள் சாஸ்திரம் பார்க்கிறதில் விஷயங்களின் உண்மையைக் கவனிக்காமல், ஏதோ கண்மூடித்தனமாய் மாமூல்வாரியாகப் போவதிலுள்ள பேதமைத்தனத்தையும், ஆங்கிலேயர்கள் எவ்விஷயத்திலும் அதன் காரணகாரியங்களை உள்ளபடி ஆராய்ந்து நல்லவை தீயவைகளைப் பகுத்தறிந்து வழக்கம்என்பதினால் மாத்திரம்கட்டுப்பட்டுவிடாமல் நடந்துகொள்ளும் மாதிரியும் விஸ்தரிக்கப்பட்டது. இப்படி விஸ்தரித்துப் பேசியதில் நமது வழக்கங்களில் பிரயோஜன முள்ளனவென்றும், சில வீணானவைகளென்றும் காண்பித்ததுபோ விருந்தது. தெளிவாகத் தெரியும்பொருட்டு நடுவில் சிலகதைகளும் உதாரணமாகச் சொன்னார்கள். உலர்ந்த பூமிக்கும் ஈரபூமிக்குமுள்ள வித்தியாஸம் அறிகிற விதத்தைக் கண்முன் காண்பிக்கும்பொருட்டு ஒருசட்டியில் மணலும், ஒரு சட்டியில் களிமண்ணும்போட்டு வைத்திருந்தார்கள். இவைகள் இரண்டிலும் தண்ணீர் வார்த்தபொழுது களிமண்பாத்திரத்தில் தண்ணீர் மேலேயே தங்கியிருந்தது. ஆனால் மற்றொரு பாத்திரத்தில் வார்த்ததண்ணீர் உடனே கீழே உருஞ்சம் பட்டுவிட்டது. இது ஈரம் காக்கக்கூடிய வீட்டுப் பூமிக்கும், உலர்ந்திருக்கிற வீட்டுப் பூமிக்கும் வித்தியாஸம் அறிகிறவிதம். களிமண் தரையானால் ஈரங்காக்கும். மணல் தரையானால் ஈரம் காக்காமல் உலர்ந்திருக்கும். இன்னம் கறுப்புப் பலகையில் அப்போதைக்கப்போது கேட்கிறவர்கள் மனதில் படும்படியானபடி உருவங்கள் எழுதிக்காட்டினார்கள். மனதுக்கு மிகச் சந்தோஷகரமாக விருந்தது. இந்தவிஷயத்தைப்பற்றி மிஸஸ் ப்ராண்டர் அம்மாள் ஒரு புஸ்தகம் பதிப்பித் திருக்கிறார்களாம். இது ஸ்திரீகளுக்கு வெகு உபயோகமான விஷயங்களில் மிக அவசியமானது.



# சிறுவர்க்கானபக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

தோழிகளே! தோழர்களே!

நான் இன்றைக்கு உங்களுக்கு ஒருகதை சொல்லுகிறேன். அது அதிக வேடிக்கையாயிருக்கும். ஆகையினாலே நீங்களெல்லாரும் கட்டாயமாய்க் கவனித்துக் கேட்கவேண்டும்.

ஒரு வாலிபன்கதை.

கொஞ்சநாளைக்கு முன் காஞ்சீபுரத்திலேயொரு பேர்போன வைத்தியர்இருந்தார். அவர் பெயர் அப்பாசாமிபிள்ளை. அவர் கன்னங்கறேலென்று தடித்துப்பெருத்திருந்தார். அவர் வைத்தியம்பண்ணினால் வைத்தியம் பண்ணிக் கொண்டவர்களுக்கு வியாதி வராது, வந்தாலும் அவரிடத்திற்கு மறுபடியும் வைத்தியம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் போகவும் மாட்டார்கள். இப்பேர்ப்பட்ட வைத்தியரிடத்தில் காலமே 8½ மணிக்கு ஒரு சிறு வாலிபன் வயசு பதினாலுள்ளவன் வைத்தியம் பார்த்துக்கொள்ளுவதற்காக வந்தான். வந்தவாலிபனைப் பார்த்து "அடே பையா! உனக்குஎன்னடா உடம்பு?" என்று கேட்டார். அதற்குப் பையன் "எனக்கு வயிற்றுவலிதான். வேறொன்றுமில்லை" யென்று சொன்னான்.

வைத்தியர், "சும்மா இருக்கும்போதே வயிற்றுவலி வந்துவிடுமா? வராதே. அப்படியிருக்க உனக்கு ஏன் வயிற்றுவலி வந்தது? அப்படி வயிற்றுவலி வரும்படியாக என்ன செய்தாய்?" என்றுகேட்க,

வாலிபன்.—"ஐயா! இன்று விடிந்தவுடன், பல்தேய்த்த பிறகு, ஒரு ரொட்டி எழெட்டு நாளைக்கு முன் செய்தது இருந்தது. எங்கள் மாமா பட்டணத்திலிருந்து வந்தபோது சாப்பிடும்பொருட்டு சில ரொட்டிகள் கொண்டுவந்தார். இதிலே யொன்று பாக்கியாயிருந்தது. அதையெடுத்து இன்று பசியாயிருந்ததினாலே தின்றுவிட்டேன். அது வயிற்றிற்குள்ளே என்னவோ செய்கிறது? அரைமணிநேரம் குப்புறவே படுத்துக்கொண்டிருந்தேன். மார்புதான் வலித்ததேயொழிய, வயிற்றுநோவு நின்றவழியில்லை. ஆகையினாலே உங்களிடத்திற்கு வந்தேன்; இந்த வலியை நிறுத்திவிடுவீர்களென்று நம்பி" என்றான்.

வைத்தியர்.—"சரி, நான் ஒரு நல்லமருந்து கலந்து ஐக்கியமாய், அது கொஞ்சம் எரியும். ஆகையினாலே அதை யுனக்குக் கொடுக்க வேண்டுமென்றால், இந்தத் தூணிலே கொஞ்சங்கூட அசையாமல் கட்டின பிறகுதான் தரவேண்டும். ஏனென்றால் நீ யுன் கைகால்களைக் கொண்டு துடைத்து உதறிக் கெடுத்துவிடுவாய், கையிலிருக்கிற மருந்தோ துளிதான். ஆனால் மிகவும் அருமையானது. அப்படி யுனக்கு மருந்து போட்டுக்கொள்ள இஷ்டமானால் போடுகிறேன்." என்றுசொல்ல,

வாலிபன்.—"எனக்கு வயிற்றுவலி நின்றால் போதும், மருந்தைப் போடுங்கள்." என்றான்.

உடனே வைத்தியரெழுந்து அந்தப் பையனை நன்றாகப் பக்கத்திலே யிருந்த தூணிலே பலமாய்க் கட்டி வைத்துவிட்டு, வீட்டுக்குள்ளே சென்று ஒரு சந்தனக் கல்லையும், நாலைந்து மிளகையு மெடுத்துக்கொண்டு வந்து, பையனுக்கு எதிரிலே தண்ணீர்விட்டுத் தேய்க்கத் தொடங்கினார்.

இதைக்கண்ட வாலிபன், "மிளகு என்னத்திற்கு ஐயா?" என்றான். அதற்கு வைத்தியர் "சும்மா இரடா" என்று சொல்லிவிட்டுப் பறபறவென்று தேய்த்து, ஒருவிழுது கையிலெடுத்துக்கொண்டு பையனிடத்திற்கு வந்து அவனுடைய இரண்டு கண்களிலும் அப்பப்போனார். அதற்கு வாலிபன் "ஐயா! ஐயா! எனக்கு வயிற்றிலேதான் வலி. கண்ணிலே நோவில்லை" யென்று உரக்கக் கூவினான்.

அவன் கூவக் கூவ, "எட்டுநாளைக்கு முன் செய்துகாய்ந்துபோன ரொட்டியென்றுதெரிந்திருந்தும், இந்தக் கண்களானவை அதை யுன்னைத்தின்னும்படிவிடவினதினாலே, உனக்குக்கண்ணிலே நோவிருக்க வேண்டும், அதை முந்தி நீக்கிவிட்டு,அப்புறம் வயிற்றுநோவை நீக்குகிறேன்" என்று சொல்லிக்கொண்டு மிளகு விழுதைக் கண்களில் நன்றாய் அப்பப்போகிறவர் போல் போய்ச் சற்றுத்தாக்காட்டி அவன் கட்டைத்தளர்த்திவிட்டு ஏறக்குறைய இரண்டு நாழிகை அவனோடு மல்யுத்தம் செய்து நின்றார். பையனுக்கு முகம் சிவந்து உடம்பு வியர்த்துப் போய்விட்டது. அவன் சாதாரணமாயிருந்தால் ஒருபோதும் அவ்வளவு பலத்தோடும் விடாமுயற்சியோடும் எதிர்த்துநின்று சண்டைபோட மாட்டான். வைத்தியர் அவன் முகமும் உடம்

வியர்த்து விறுவிறுத்ததைக்கண்டு அவ்வளவு முயற்சி செய்தது போதுமென்று அப்புறம் போய் முகத்தில் புன்சிரிப்போடு பையனைப்பார்த்து இன்னும் வயிற்றுவலி யிருக்கிறதா என்று கேட்டார். பையனுக்கு வைத்தியரோடு குஸ்தி பழகினதில் வயிற்றுவலி ஒன்றும் தெரியவில்லை. அவர் கேட்டபின் வயிற்றுவலி யிருக்கிறதோ வென்று நினைத்துப் பார்த்துக்கொண்டு இல்லை யென்றான். உடனே யவர் அவனை அவிழ்த்து விட்டுப்போகச்சொன்னார். சிறுவர்களே! வைத்தியர் ஏன் அப்படிச்செய்தாரென்பதை யுங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள். அவனுடைய வயிற்றுவலிக்குக்காரணம் அஜீரணந்தான். அந்த அஜீரணத்திற்குநல்ல மருந்து வேலைசெய்வதுதான். ஆகையால் அந்தப்பையனை வேலைசெய் என்றால் செய்யமாட்டான். அதற்காக இந்தத்தந்திரம்பண்ணிஅவன்வேலைசெய்வதில் விட அதிகமாக வியர்க்கும்படிசெய்து அஜீரணத்தை நீக்கி வயிற்றுவலியை சொஸ்தப்படுத்தினார்.

இதினாலே நீங்கள் அந்தப்பையனைப்போலக் கையிலே யகப்பட்டதை யெல்லாந் தின்னக்கூடாதென்றும், தின்றால் நோவுவருமென்றும், அப்படி மீறிநடப்பவன் தண்டிக்கப் படுவானென்றும் அறிந்துகொள்ளுங்கள்.

இப்படிக்கு உங்கள் பிரியமுள்ள,
முத்து.

## விசேஷக்குறிப்புகள்.

**பம்பாய் யூனிவர்ஸிடி.** பம்பாய் 'யூனிவர்ஸிடி' என்னும் கல்விச் சங்கத்துக்கு உபஅக்கிரசனாதிபதி ('வைஸ்சான்ஸெலர்') ஆகவிருந்த காலஞ்சென்ற கனம் ஜட்ஜி டிலாங் அவர்களுக்குப் பின் டாக்டர் பந்தர்கர் அவர்கள் அந்த ஸ்தானத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் சம்ஸ்கிருதத்தில் மஹா பாண்டித்திய மடைந்தவர். வித்தியாவிர்த்தி இலாகாவில் அநேக வருஷகாலம் வித்தியா போதகராயிருந்து ஒரு வருஷத்துக்கு முன்தான் உபகாரச்சம்பளம் பெற்றுக்கொண்டு வேலையைவிட்டு நீங்கினார். இந்தியாவின் பூர்வீக ஸ்திதியை ஆராய்ந்தறிவதில் இவர் அதிக சிரமமெடுத் துழைத்துவரும் சாமர்த்தியவான், இவருடைய பெயர் இந்தியாவிலன்றி ஐரோப்பாவிலும் பிரக்கியாதி பெற்றுள்ளது.

**துந்தக்கல் அநியாயம்.** அனந்தப்பூர் ஜில்லாவிலுள்ள குந்தக்கல் ரயில்வே ஸ்டேஷனில் நாளது மீ 4உ சில ஐரோப்பிய இராணுவவீரர்கள் இறங்கி யிருந்தார்கள். அவர்களில் அறுவர் அன்று சாயங்காலம் உலாவுகையில் இரண்டு சூத்திரஸ்திரீகளைக்கண்டு அவர்களைக் கற்பழிக்க எண்ணித் துரத்திச் சென்றார்கள். அந்த ஏழை ஸ்திரீகள் பயந்து நடுங்கி அப்பாதகர் கையிலகப்படாமல் தப்ப வேண்டி ஓடி அங்கிருந்த ரயில்வே வாசற்படி யொன்றின் பக்கத்திலுள்ள காவல்காரன் குடிசைக்குள் நுழைந்து அவனிடத்து அடைக்கலம் புகுந்தார்கள். 25-வயதுள்ள அம்பண்ணா என்னும்பேருடையஅக்காவலாள் இராணுவவீரர்களை யெதிர்த்து அவ்வேழை ஸ்திரீகளைக் காப்பாற்ற முயற்சித்தான். அவன் தைரியத்தோடு தன்குடிசைவாசலில் தடியுங்கையுமாய் நின்று ஐரோப்பிய இராணுவவீரர்களை எதிர்க்க அவர்களில் ஒருவன் அவனைத் துப்பாக்கியால்சுட்டு வீழ்த்திவிட்டு ஓடிவிட்டான். ஏழையும் கீழ்ஜாதியானுமா யிருந்தாலும் மேலான மனதும் தீரமுமுள்ளவனாய் விளங்கிய அவ்வேழை அம்பண்ணா என்பவன் மறுநாள் குத்தி ஆஸ்பத்திரியில் அத்துப்பாக்கிக் குண்டுபாய்ந்த காயத்தினால் இசிவெடுத்து மாண்டான். அவனைக்கொன்ற பாதகன் இன்னும் பிடிபடவில்லை. அப்பட்டாளத்து வீரர்களெல்லாம் ஆஜராயிருந்தும் அவர்களில் இக்கொலை செய்தவன் இன்னானென்று தெரிவது கஷ்டமாயிருக்கிறது. இதைப்பற்றி போலீஸார் விசாரிக்கிறார்கள். கவர்ன்மெண்டார் இக்கொலைபாதகனைக் கண்டுபிடிப்பவர்க்கு 1000-ரூபாய் வெகுமானம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இறந்துபோன தைரியசாலியின் ஞாபகக் குறியாக அவனை அடக்கம் செய்த இடத்தின்மேல் அவன் இறந்த விர்த்தாந்தத்தைக் குறித்து ஒரு கற்சிலை கட்டுவிக்க உத்தேசித்து அதற்காகச் சிலர் கையொப்பம் சேகரித்து வருகிறார்கள், ஒரு அங்கிலேய கனவான் அதற்காக 50-ரூபாய் கொடுத்தார். இன்னும் சிலர் கொடுத்த கையொப்பங்களைச்சேர்த்து இந்தமீ 27உவரையில் ரூபா 122—6அணா ஆகிறது.

**புதிய இராஜப் பிரதிநிதி.** ஸர் ஹென்றி நார்மன் இந்தியா இராஜப்பிரதிநிதி வேலையை ஒப்புக்கொண்டு அப்புறம் அவ்வேலை தனக்கு வேண்டாமென்று விட்டபின் இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் ஒருமாசம் யோஜித்து லார்ட் எல்ஜின் என்பவரை லான்ஸ்டௌன் பிரபுவுக்குப் பின் இந்தியா இராஜப் பிரதிநிதியாக வர நியமித்திருக்கிறார்கள். இவர் முன்னொருகால் இந்தியா கவர்னர்ஜெனரலாயிருந்த லார்ட் எல்ஜினுடைய புத்திரர். இவருடைய தகப்பனார் 1861-ம் வருஷத்தில் இந்தியா கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டு 20-மாசம் வேலைபார்த்தபின் ஹிருதய வியாதியால் இந்தியாவிலே இறந்து காலஞ்சென்றார். இப்பொழுது இராஜப் பிரதிநிதியாக வருகிறவர் மிஸ்டர் கிளாட்ஸ்தன் கக்ஷியைச் சேர்ந்தவர். வயசு 47 இருக்கும். கலியாணமாய் 5-பெண்களையு[illegible] 5-பிள்ளைகளையும் பெற்றிருக்கிறார். இவர் இந்[illegible]க்கு அனுகூலியாக விருப்பாரென்று எண்[illegible]ரதியிருக்கிறது. இவர் ஜனவரிமாசமுதலி[illegible] டைத்வீட்டுப் புறப்பட்டு அந்தமாசம் [illegible]தியா வந்து சேருவார்.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC. 93
MADRAS.

# விவேக சிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். II. 1893ஆம் நவம்பர்மீ இலக்கம். 7.

## ஜோதிஸ்.

### III.

### மின்னல்.

8-வது ஆகாசத்திற் காணக்கூடிய ஜோதிஸ் மின்னலாம். மின்னல் உண்டாவது மேகம் என்கிற நீர்த்துளிகளுள் (Electricity) 'எலக்ட்ரிசிட்டி' என்ற ஒரு சக்தியிருப்பதினால்தான். எலக்டிரிசிட்டி என்ற சக்திக்கு மின்னல் சக்தி என்றே தமிழிற் சொல்லி வருகிறார்கள். மின்னலுண்டாவதற்குக்காரணம் தமிழ் வார்த்தைகளாற் சொல்லும்போது பதார்த்தம் பதார்த்த சக்தியால் உண்டாகிறதென்று சொன்னால் எப்படியோ அப்படியிருக்கும். ஆனால் கொஞ்சம் யோசித்தோமானால் அப்படிக்காணாது. எலக்டிரிசிட்டி என்ற பதத்திற்கு நமக்குத்தமிழில் வார்த்தையில்லை. அதனால் மின்னல் உண்டாகிறதினால் அதற்கு மின்னல் சக்தி என்று சொன்னோம். மின்னல் சக்தி இருவிதப்படும் ஒன்று நேர்சக்தி (positive); மற்றொன்று விபரீதசக்தி (negative). நேர்சக்தியும் நேர்சக்தியும் சந்தித்தால் ஒன்றோடொன்று விலகி ஓடும். விபரீத சக்தியும் விபரீத சக்தியும் ஒன்றோடொன்று சந்தித்தால் அது போலவே விலகி ஓடும். நேர் சக்தியும் விபரீதசக்தியும் சந்தித்தால் இரண்டும் கலந்து ஒன்று சேரும். அதுபோலவே விபரீத சக்தியும் நேர்சக்தியும் சேரும்போது ஐக்கியமுண்டாகும். இவ்வாறு இருவகை சக்திகள் கலந்து ஐக்கியமாகும்போது ஒளிப்பொறிபறக்கின்றது. நேர்சக்தி மேகத்திலிருந்து, பூமி வாண்டிருந்து வெய்யிலடித்ததானால் அதினால் பூமியில் விபரீத சக்தியுண்டாகும். சாதாரணமாய் மேகங்களில் நேர் சக்திதான் உள்ளது. சில சமயங்களில் விபரீத சக்தி புஷ்டியாய் வரும். இந்த சங்கதிகளெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் மின்னல் உண்டாகிற காரணங்களை நன்றாய்த்தெரிந்து கொள்ளலாம்.

மின்னல் நாலுவகைப்படும்.

1. Sheet lightning—பரவு மின்னல்
2. Linear lightning—கொடிமின்னல்
3. Forked or Zigzag—வெட்டு மின்னல் அல்லது கவட்டை மின்னல்
4. Bombs—அதிர்வேட்டு மின்னல்.

இவைகளில் பரவுமின்னல் உண்டாகிறதற்குக் காரணம்மேகத்திலிருக்கிற ஒவ்வொருதுளிகளிலிருந்தும் மின்னல் சக்திபுறப்பட்டு அடுத்திருக்கிற துளிகளின் விபரீத சக்தியோடு கலக்கிறபோது உண்டாகிற பொறிகள், மேகமுழுமையும் ஏறக்குறைய ஓரே காலத்திலுண்டாகிறபடியால்ஒரே வெளிச்சமாய்க்கலந்துஒருபரந்தமின்னலாய்க் காண்கிறது. சில சமயங்களில் ஓரிடத்திலிருந்து ஆரம்பித்து மற்றொரு இடத்தில் படிப்படியாய்ச்சென்றுமுடிகிறது. கொடி மின்னல் மேகத்துக்கு மேகம் வீசும்போது மேற் சொல்லியபடியே இரண்டு மேகங்களிலுமுள்ள மின்னல் சக்திகள் கலக்கின்றன. ஆனால் ஒன்று சேரச்செல்லும்போது வழியிலுள்ள தடையினால் தடையிருக்கிற ஸ்தானத்திற்குத் தகுந்த

படி வளைந்து காண்கிறது. மின்னல் சக்தி எல்லாபதார்த்தங்களிலும் ஒரேமாதிரி செல்லாது. சில பதார்த்தங்களில் தடையில்லாமல் தாராளமாய் ஊடுருவிச் செல்லும். அப்பேர்ப்பட்ட பதார்த்தங்கள் முக்கியமாய் பஞ்சலோக முதலிய லோகங்கள். இவைகள் தடையில்லாமல் மின்னல் சக்தியை பூமிக்குள் செல்லச்செய்யக்கூடிய சுபாவம் இருக்கிறதினாற்றான் பெரிய கட்டிடங்கட்கு மின்னல் விழுந்து மோசம் வராமல் பாதுகாப்பதற்காக மேகங்களிலுள்ள மின்னல் சக்திகளைக்கவர்ந்து பூமிக்குள் செலுத்திவிட இரும்புக்கம்பிகளைக் கூரைக்கு உயரமாய் வைத்து அவைகளை பூமிக்குள் ஒரேதொடர்பாய்ப் புதைத்து வைக்கிறார்கள். இன்னுஞ் சில வஸ்துக்களில் மின்னல் தாராளமாய்ச் செல்லாது. அவைபட்டு, கண்ணாடி இவைகள் போன்ற பதார்த்தங்கள் .மேகத்துக்குமேகம் ஒன்றுசேர்ந்து கலப்பதற்காக ஓடிவரும் மின்னல் சக்திகள் திடீரென்று தடைநேரிட்டால் அதைப் பார்க்கிலும் தாராளமாய் வழிவிடக்கூடிய பதார்த்தங்களைநோக்கித் திரும்புகின்றன. அப்பேர்ப்பட்ட வழிகள் வளைவாகவாவது அல்லது கவட்டை மாதிரியிலாவது ஆகாயத்திலே ஏற்படலாம். அப்போது இருவகை மின்னலும் உண்டாகிறது. ஆகாயத்தில் தடைநேரிட்டால் உடனே பூமியை நோக்கித்திரும்பிச் சரேல் என்று வந்துவிடக்கூடும். அப்போது தாராளமாய் வழிவிடக்கூடிய பதார்த்தங்களிலிருந்து அவைகள் மின்னல் சக்தியை பூமிக்குள்ளோ ஜலத்திலோ விடுத்தால் தான் கெடுதி நேரிடாது. இல்லாவிட்டால் திடீரென்று பாய்ந்து உடலை பஸ்மீகரமாக்கிவிடும். மின்னலும், இடியும் இருக்கிறசமயத்தில் மரத்தடியில் ஒண்டலாகாது. அப்படி ஒண்டினால் வழிவிடுதற்கு கொஞ்சம் தடைசெய்யும் மரத்திலிருந்து மின்னல் ச்க்தி நம்முடைய தேகத்திற் கூர்நோக்கமாய்த் திரும்பி நம்மை அழித்து விடும்,

பூமியிலொருவித மின்னல் சக்தியும் மேகத்தில் மற்றொருவித மின்னல் சக்தியும் வெளிப்பட்டதானால் அப்போது நேரிடுகிற சக்தியும் அபாயந்தான். இது முக்கியமாய்க் கோடைகாலத்திற்றான் நேரிடும். மின்னலும் இடியும் கோடைகாலத்திலிருப்பதுபோல் மழைகாலத்தில் இராவாம். கோடைகாலத்தில் மேகங்கள் பல திசைகளிலும் பலவாறான மின்னல் சக்திகளைச் சுமந்து கொண்டு வரும். அப்போது சந்திப்புண்டாய் மின்னலும் இடியும்காண்கின்றன. அல்லாமலும் மேகந்திரண்டு ஆகாயத்தில் சலனமில்லாமலோ அற்ப சலனத்தோடோ மிதந்து கொண்டிருக்கும்போது அதில் அடங்கியிருக்கிறமின்னல்சக்திக்குவிபரீதமான சக்தி கோடைகாலத்துச் சூரியனால் உலர்ந்து வறண்டு கிடக்கிற தரையிலிருந்து திரண்டெழும்பி மேகத்திலிருக்கும் சக்தியோடு கலக்கும் பொழுது மின்னலும் இடியும்உண்டாகும். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் போனசித்திரைமீ 27உ முதற்கொண்டு வைகாசிமீ 9உ 10உ வரையிருந்த மழைகளில் மின்னலும் இடியும் வெகு ஜாஸ்தியாய் இருந்தது. இடவப்பாதி பிறந்த பிற்பாடு பெய்தமழையில் மின்னலும் இடியும் இல்லை. வைகாசி 10உக்கு முன் பெய்த மழை எல்லாம் கோடைமழை. பிற்பாடு பெய்தமழை வருஷமழை "கோடைகாலத்து மின்னலும் இடியும்போல' என்று பழமொழியுள்ளதேயன்றிக் கார்காலத்து மின்னலென்றும் இடியென்றும் பழமொழியில்லை.

அதிர் வேட்டு மின்னலுண்டாகும்போது மின்னலின் ஒளி கண்ணுக்குத் தட்டுப்படாமல் அதின் பின்வரும் சப்தமாத்திரம் அதிர்வேட்டு விட்டாற் போற்காதிற்கேட்கும். இது வெகு அபூர்வமான தோற்றம். இதைப்பற்றி விசேஷமாய்ச் சொல்வதற்கில்லை. 1½ வருஷத்திற்கு முன் கோதாவரி ஜில்லாவில் இருந்தாற்போலிருந்து ஆகாயத்தில் அதிர்வெடி கேட்டாற்போல் சப்தங்கேட்டதாய் வர்த்தமான பத்திரிகைகளில் பார்த்திருக்கிறோம்.

முன்சொன்ன மின்னல் வர்க்கங்கள் அல்லாமல் உஷ்ண மின்னல் (heat lightning) என்று பெயருள்ள மின்னல் ஒன்றிருக்கிறது. இந்த மின்னலானது பெரும்பாகம் கோடைகாலங்களில் இராத்திரிக் காணப்படுகிறது. அவ்வாறு காணும்போது வெகு சோபையாயிருக்கிறது. ஆனால் அது காணப்படுங்காலங்களில் பூமியும் ஆகாசமும் சந்திப்பதாய்த் தோற்றப்பட்ட வட்டரேகைக்குமேலே (அதாவது நமக்கு காணப்பட்ட பாகத்தில்) மேகங்கள் காணப்படுகிறதில்லை. அவ்வகை மின்னலுண்டாகும்போது சப்தமும் கேட்கிறதில்லை. இது உண்டாவதற்குக் காரணம் பலவிதமாய்ப் பல சாஸ்திரிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவைகளில் அதிகம் சரியாயிருக்கக்கூடிய வியாக்கியானம் என்னவென்றால்:—அதிதூரத்திலிருக்கப்பட்ட மேகங்களிலிருந்து ஊடுதாவப்பட்ட சாதாரண மின் வெட்டு நிமித்தம் உண்டாகிறதென்றும், அதிதூரத்திலிருந்து உற்பவிப்பதால் அதுநிமித்தம் உண்டாகப்பட்ட சப்தமானது நம்முடைய காதில்வந்து எட்டாமல் மத்தியில் அடங்கிப் போகிறதென்றும் சொல்வதுதான். சில மின்வெட்டுகள் அக்கினி கோளங்கள் அதாவது பந்துகள்போல் காணப்படுகின்றன. இவ்வகை மின்வெட்டுகள்சில சமயங்களில்10வினாடிவரை காணக்கூடும் அப்போது மேகங்களில் நின்றும் இந்த உண்டை மின்னலானது வெகு மந்தமாக கீழே இறங்குகிறது. கண்கூட அதினுடைய கதியைப் பின்தொடர்ந்துவரலாம். பூமிக்கு வந்தவுடன் மீண்டும் ஆகாசத்தில் எழும்பிப் போகின்றது. சில சமயங்களில் அவ்வாறு திரும்பாமல் பூமியில் வெடித்து பீரங்கிவாயில் நின்றும் கேட்குஞ் சப்தம்போல் ஒலி உண்டாகிறது. இவ்வகை மின்னலுக்கு உண்டை மின்னல் என்று பெயர்.

தூரம் சமீபத்திற்கு தகுந்தபடி மின்னல் பொறியானது வளைவுரேகையிலும் நேர் ரேகையிலும் அமைகிறது. ஒரு அங்குலம் ஸ்தலத்திற்குள் உண்டாகும் மின்னற்பொறி நேர் இரேகையில் காணும். இரண்டு மூன்று அங்குலத்திற்கு அதிகப்பட்ட ஸ்தலத்தில் காணப்பட்ட மின்னலானது தூரத்தின் அளவுக்குத் தகுந்தபடி கொஞ்சம் வளைந்ததாகவும் அதிகம் வளைந்ததாகவும் வட்டமாகவும் காணப்படும். பரவுமின்னல் உண்டாகும்போது எவ்வளவோ அடுத்தடுத்திருக்கப்பட்ட நீர்த்துளிகளிலிருந்து உற்பவிக்கும் மின்னல்சக்திகள் சந்திப்பதால் அவ்வகை மின்னலானது வளைவில்லாமல் நேர் இரேகையிலே வியாபிக்கிறது. கொடிமின்னல் கவட்டைமின்னல் உண்டாகும்போது தூரத்திலுள்ள மேகங்களிலிருந்து மின்னல் சக்திகள் வெளிப்புறப்படுவதால் கொடிபோல் ஏற்றமிறக்கமாக வளைந்தும் கவட்டைபோல் கூர்முனைப்பட்டும் காண்கிறது.



கப்பல் யாத்திரை செய்பவர்கள் சில சமயங்களில் சமுத்திர நீர்ப்பரப்பிலிருந்து கோளாகிருதியானதும் நீலநிறம் உள்ளதுமான ஜோதிஸ் எழும்பி ஆகாசத்தில் வெடித்துக் கப்பல் பாய்மரங்கள் முதலியவைகளுக்குச் சேதம் விளைவித்திருப்பதாய் எழுதியிருக்கிறார்கள். இவ்வகைத்தோற்றமானது சூரியவெப்பத்தால்சமுத்திரஜலத்தில் நின்றும் மின்னல் சக்தி புஷ்டியாய்த் திரண்டு காற்றில் திரண்டு நிற்கும் மின்னல் சக்தியோடு சந்திப்பதால் உண்டாகின்றது. பூமியைச்சுற்றி நிற்கும் காற்றில் பூமியின் பரப்பில் நின்றும் ஐந்து ஆறு அடிக்குமேல் நேர் மின்னல் சக்தி சாதாரணமாய்க்காணப்படுகிறது, ஆகையால் சமுத்திரப்பரப்பிலிருந்தும் அவ்வளவு அடுத்துச் சமீபத்திலும் கோளாகிருதியான மின்னலுண்டாகக் கூடும். இது அபூர்வமான காட்சிதான். சிலசமயங்ளில் காற்றில்லாமல் அமைதியாய் இருக்குங்காலத்தில்சமுத்திரமானதுகொதிப்பதுபோல்தோன்றிநீராவியைக்கக்குகிறது. அந்நீராவியானது மருந்தரைக்கும் அம்மிக்குழவிபோல்அடிபெருத்தும் நுனிசிறுத்தும் ஆகாசத்தில் எழும்புகிறது. அக்காலத்தில் ஒரு சப்தமும் உண்டாகிறது. அதோடு கூடி மின்னலும் காணப்படுகிறது. இது முக்கியமாய் உண்டாகிறது கோடைகாலத்தில்தான். சிலசமயங்களில் சமுத்திரப்பரப்பில் நின்றும் எவ்விதமாக மின்னல் உண்டாகிறதோ, அதுபோல பூமியின் பரப்பில் நின்றும் வேனிற்காலத்தில் காற்றில்லாதசமயம் பொடிகள் எழும்பி அதோடுகூட, மின்னல் காணப்படுகிறது.

சாதாரணமாய் ஜனங்கள் இடி விழுகிறதென்று சொல்லுகிறார்கள். வாஸ்தவத்தில் விழுவது இடியல்ல, மின்னல்தான். எவ்வளவு சப்தம் உண்டானாலும் ப்தார்த்தங்கள் பஸ்மீகரமாகிறதில்லை. இடி உண்டாகுங்காலத்தில் பதார்த்தங்களில் அதிர்ச்சி உண்டாகி உடைந்து தகர்ந்துபோகவோ நிலை நழுவிக் கீழே விழவோ பிடிப்புக்கெட்டுத்தளர்ச்சிஉண்டாகவோ கூடும். அவ்வளவே அல்லாமல் அக்கினிகொண்டு தகிக்கப்பட்டாற்போல பஸ்மீகர மாகாது. இடி நிமித்தம் சேதம் உண்டானதாய் ஜனங்கள்

சொல்லப்பட்ட திருட்டாந்தங்களில் அக்கினி தகித்ததுபோல் காணப்படுகிறதே அல்லாமல் இடி அதிர்ச்சியால் சிதறுண்டதுபோலக்காணப்படுவதில்லை. சில சமயங்களில் மரங்களின்மீதாவது கூரையின்மீதாவது மின்னல் விழும்போது அக்கினி பற்றியெரிகிறதும் உண்டு.

ஆனால் சில சமயங்களில் மின்னல் நிமித்தம் சூடு உண்டாகி அதுஊடுருவிச் செல்லப்பட்ட காற்றும் அதிலடங்கிய நீர்த்துளிகளும் இலேசுபட்ட காற்றாகவாவது நீராவியாகவாவது மாறி அதிக வியாபக சக்திபெற்றுத் திடீரென்று முட்டி மோதுவதால் சமீபத்திலுள்ள கல்முதலிய பதார்த்தங்களை தகிப்பிக்காமல் சிதறடிக்கக்கூடும். இது இடிநிமித்தம் உண்டானதாய் நினைக்கக்கூடாது. காற்று ஒன்றோடொன்று உரசி மொத்துண்ட காற்றுக் கீழே விழுவதால் இடி உண்டாகிறதென்று வ்ராகசம்ஹிதையில் 39-வது அத்தியாயத்தில் முதலாவது ஸ்லோகத்தில் எழுதிக் காண்கிறது. இந்த அபிப்பிராயம் முற்றிலும் சரியாய் விசாரிப்பதற்கு இடமில்லை. காற்றுகள் இல்லாத சமயத்தில் இடிமுழக்கங்கள்சாதாரணமாய்க்கேட்கப்படுகின்றன. மின்னல் ஊடுருவிச் செல்லும்போது வாயு ஒன்றோடொன்று உரசுவது வாஸ்தவந்தான். ஆனால் அது மின்னல்மூலம் உண்டான சூட்டினால் அல்லாமல் தற்செயலாய் ஒன்றோடொன்று அபிமுகமாய்ச் செல்லும் காற்றுகள் சந்திப்பதாலல்லாமல் சில சமயங்களில் காற்றுகள் சந்திப்பது நிமித்தம் மின்னல் சக்தி ஆகாயத்தில் புஷ்டியாய் உதயமாகி மின்னலும் இடியும் உண்டாகக் கூடும். இவ்விதங்களில் வராகமிஹிருடைய அபிப்பிராயம் சரியாகலாம். ஆனால் இவ்வாறாக கிரகித்து எழுதினர் என்று நினைப்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் காணப்படவில்லை.

9-வது ஆகாசத்திற் காணக்கூடிய ஜோதிஸ் (Aurora Borealis) ஆரோரோபோரியாலிஸ். இதற்கு நாம் த்ருவஜோதிஸ் என்று தமிழிற் பேர் கொடுக்கலாம். இந்த ஜோதிஸ் எல்லா இடங்களிலும் காணக்கூடியதா யிருந்தாலும் முக்கியமாய் துருவமுனைகட்கு சமீபத்திலுள்ள பிரதேசங்களில் வெகுவிஸ்தாரமாகவும் விநோதமாகவும் நீடித்தும் அடிக்கடிகாணப்படுகிறது. துருவமுனைகட்கு அடுத்த பிரதேசங்களில் ஆறுமாதம் பகலும்ஆறுமாதம் இரவுமாயிருப்பதால் அந்த ராஜ்யங்களினுடைய க்ஷேமத்திற்காக ஈசுரவன் இப்பேர்ப்பட்ட ஜோதிஸ்ஸை உண்டுபண்ணினாரென்றே ஊகிக்கவேண்டும். இராத்திரி காலங்களில் இருந்தாற்போலிருந்து திடீரென்று கொடிகள் வீசினாற்போல் கிரணங்கள் வெடித்து நாலுதிசையிலும் பரவி திரைகள் சலித்தாற்போலவும் ஊஞ்சல்கள் அசைந்தாற்போலவும் அங்குமிங்கும் அசைந்து கொடுத்து ஒரு சமயம் எங்கே பார்த்தாலும் பச்சை வெளிச்சமாகவும் மற்றொரு சமயம் இரத்தவர்ணமான வெளிச்சமாகவும் தனித்தனியாகவும் கலந்தும் பிரகாசித்து வெகு அழகாகவும் கண்ணுக்குக் குதூகலமாகவும் இருக்கிறது. இந்த வெளிச்சத்தின் மகிமை நாம் மனக்கண்ணால் நிதானிக்கவேண்டுமேயல்லாமல் நம்முடைய ஜீவகாலத்திற்குள் துருவராஜ்யங்கட்குச் சென்று பார்த்துக் களிப்போமென்று எனக்குத் தோன்றவில்லை. இந்த ஜோதிஸ் முக்கியமாய் துருவராஜ்யங்களிற் காணப்பட்டாலும் அதினுடைய காரணம் பார்க்கும்போது மற்றெல்லா ராஜ்யங்களிலும் காணப்படவேண்டிய ஜோதிதான் என்பதில் சந்தேகமில்லை. 1866-ம் வருஷத்தில் இப்பேர்ப்பட்ட ஜோதிஸ்இந்தத்திருவிதாங்கூரில் கண்டதாக வைதிக சாஸ்திரிகள் சொல்லிக்கேட்டிருக்கிறேன். அல்லாமலும் 4,-5-வருஷங்களுக்குமுன் அப்படி ஒரு ஜோதிஸ் கண்டதாகவும் சொல்லிக் கேட்டிருக்கிறேன். நிரக்ஷரேகைக்கு அடுத்தராஜ்யத்தில்வெகு உன்னதத்தில் இந்தக் காட்சிகண்டாலும் அதிகம் நீடித்திருக்காது. துருவம் நோக்கி வடக்கேயாவது தெற்கேயாவது போகப்போக இந்தப் பிரகாசம் அதிகப்பட்டுக் காணும். இந்தப் பிரகாசத்திற்குக்காரணம் 'எலெக்ட்ரோ-மாக்னெடிஸம்' (Etectro-magnetism) என்று சொல்கிறார்கள். 'எலெக்ட்ரிஸிட்டி' (Electricity) இன்னதென்று முன்னதாகவே ஒருமாதிரி சொல்லிவிட்டோம். 'மாக்னெடிஸம்'(Magnetism) என்பது காந்த சக்தி. மின்னல் சக்தி காந்த சக்தியாகிவிடும். ஒரு பேனாக்கத்தியில் மின்னற் கம்பியைச்சுற்றி அதின்வழி மின்னல்சக்தியை விட்டோமானால் அந்த மின்னல் சக்தி பேனாக்கத்தியைச் சுற்றிச்சுற்றிச் சென்று அதை ஒரு காந்தமாக்கிவிடுகிறது. பூமிமுழுக்க ஒருபெரிய காந்தமாயிருக்கிறது. பின்வருகிற பரீக்ஷையினால் 'எலெக்ட்ரோ-மாக்னெடிஸம்' (Electro-magnetism) என்னும் சக்தியால் மேற்படி வெளிச்சமுண்டாகிறதென்று சொல்லலாம். ஒரு ஸ்படிகதமிளரில் பாதிநிறைய நீர் வார்த்து அதில் கொஞ்சம் உப்பைக்கரைத்து, அப்படிக் கரைத்த உப்பு ஜலத்தை நீர் வார்க்காத மேல் பாதி தமிளரில் உள்வசத்தில் பூசி அது உலருமுன்னதாகவே மின்னல் பெட்டியிலிருந்து ஒரு கம்பியைத் தொடுத்து அந்த ஜலத்திற் போட்டு மற்றொரு கம்பியை அதற்கு மேலே பிடித்தோமானால் நாலுதிசையிலும் ஜோதிஸ் உண்டாகும். மேலேபிடித்திருக்கும் கம்பியை அங்குமிங்கும் தள்ளிக்கொண்டுபோனால் ஜோதிஸும் அங்குமிங்குமாடும். இந்தப்பரீக்ஷையை பள்ளிக்கூடத்திலுள்ளவர்கள் நன்றாய்ச் சோதிக்கலாம். (இன்னும் வரும்.)

எஸ். இராமஸ்வாமி அய்யர், பி.ஏ., பி.எல்.

## பொய்த் தோற்றங்கள்.

### 2-வது வெளித் தோற்றம்.

இப்பொழுது நாம் பேசப்புகுந்தது பொய்த்தோற்றங்களின் இரண்டாவதுவிதத்தைப்பற்றி. அதிவீர ராம பாண்டிய ரியற்றிய நைஷதம் நளன் தூதுப்படலத்திலே நம்மவர்களில் அநேகர் ஒருவிஷயம் படித்திருக்கக்கூடும். அதென்னவென்றால்:—நளன் தமயந்தியைச் சந்திப்பதற்கு முன்பு, தன்னிடத்திற்குத் தூதுவந்த அன்னத்தினால்நளமகாராஜனுடையவனப்பினை வர்ணிக்கக்கேட்டுக் கொண்டிருந்த தமயந்தியானவள் அவன்மீது காதலுற்றுத் தனியாய் வருந்திக்கொண்டிருந்தாள். அங்ஙனம் அவள் நினைந்து வருந்திய சிறிதுநேரத்திற் கெல்லாம், அவளுக்குத்தானிருந்த இடத்தில் நளன் தனக்கெதிர்ப்பட்டான்போலத்தோன்றிற்று. தோன்றினவுடனே, "அம்ம! பழம் நழுவிப்பாலில் விழுந்ததுபோல, நாம் விரும்பிய தலைவன் நம் அந்தப்புரத்திற்கே யெழுந்தருளிவிட்டான்" என்று தனக்குள்ளே அடங்காமகிழ்ச்சியடைந்து, தன்னுடைய முத்துமாலையைக்கழற்றி அவனுடைய கழுத்திலே யணிந்தாள். உடனே அது கீழே விழுவது தெரிந்து, தனக்கெதிரே தோன்றிய நளன் பொய்ந்நளனெனத் தெளிந்து வெட்கமுற்றாள். ஆகவே, நளன் தன்னிடத்திற்குத் தூதுவருமுன், தமயந்தி அவனைக்கண்டதாக நினைத்து மாலையிட்டதுபொய்த்தோற்றத்தினால் என்பதற்கு ஆக்ஷேபனையில்லை.

இன்னும் ஸ்ரீமத்ராமாயண ஆரண்ய காண்டத்திலே மாரீசன் வதைப்படலத்திலே கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார் இவ்விரண்டாவது விதமான பொய்த்தோற்றத்தின் சக்தியைச் சம்பாஷணா ரூபமாக இனிது காட்டியிருக்கின்றனர். அது எப்படியெனில்:—சூர்ப்பணகையால், கூந்தல் மேகத்தையொக்குமென்றும், அம்மேகத்தினின்றும் விழும் மழைத்தாரைகள் கூந்தலின் ரோமத்திற்குச் சமானம் என்றும், அடிகள் பஞ்சின் மென்மையையுடையனவென்றும் விரல்கள் பவளமாகுமென்றும், அநங்கன் உடலிழந்ததும் இவளைக்கண்டு காமுற்று ஆசை பூர்த்தியாகாமல் இறந்ததினாலென்றும்,

"தோளையே சொல்லுகேனோ
சுடர்முகத் துலவுகின்ற
*வாளையே சொல்லுகேனோ
†வல்லவை வழுத்துகேனோ
மீளவுந் திகைப்பதல்லாற்
றனித்தனி விளம்பலாற்றேன்
நாளையே ‡காண்டியன்றே
நானுனக் குரைப்பதென்னோ?"

என்றும் பலவாறாகச் சீதாபிராட்டியாருடைய வடிவத்தின் அழகை வர்ணிக்கக் கேள்வியுற்ற இராவணன் "சிற்றிடைச்சீதையென்பாள்வடிவமுஞ் சிந்தைதானும், உற்றிரண்டொன்றாய் நின்று" காமவிகாரத்தால் வருந்தி யொருபக்கத்திலேயிருந்து அயர்வானாயினன். இவனிப்படியிருக்க, சூர்ப்பணகையோ ஸ்ரீராமபிரானுடைய அழகை நினைந்து நினைந்து உருகி மற்றொருபக்கமிருந்து வாடுகின்றாள். சீதையின் திருமேனியே தியானமாயிருந்த இராவணன் தனக்கு முன்னர்க்காணப்பட்ட பெண்ணுருவத்தைச் நோக்கிச்சூர்ப்பணகை நமக்குப்பலவா

* வாள்-கண் † வல்-ஸ்தனம் ‡ காண்டி-காண்பாய்.

ருக வர்ணித்துச்சொல்லிய பெண்இவளேயாகுமென்று தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு தன் தங்கையாகிய சூர்ப்பணகையை வரவழைத்துப்

"பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள்
புகுந்தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளவனே
குறநோக்கு நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயிலின்
றெனவந்தென் முன்னர்
இந்நின்ற வளாங்கொ *வியம்பிய
சீதை யென்றான்?"

ஸ்ரீராமபிரான் திருவுருவத்தையே நினைத்துக்கொண்டிருந்த சூர்ப்பணகையானவள், தனக்கெதிரே தோன்றிய இராமனுருவத்தை நோக்கிச்,

"செந்தாமரைக்கண்ணொடுஞ் செங்கனிவாயினொடுஞ்
சந்தார் தடந்தோ ளொடுந்தாழ்தடக்கைகளோடும்
$அந்தார கலத்தொடு மஞ்சனக்குன்றமென்ன
வந்தானிவனுகு மவ்வல்வி லிராமனென்றாள்."

இந்தமாதிரியாக், இராவணன் சீதையையும், சூர்ப்பணகை இராமனையுந் தரிசித்தது பொய்த்தோற்றங்களே யென்பது சொல்லாமலேவிளங்கும்.

இனி யிந்தவிதமான பொய்த்தோற்றங்களுக்கெல்லாம் வெளித்தோற்றம் என்னும் பெயர் கொடுப்போம். வெளித்தோற்ற மென்றாலென்ன ? வெளித்தோற்ற மென்பது ஓரிடத்திலொன்றில்லாதிருப்ப அவ்விடத்தில் அதுஉளதென அறியும் பொய்யுணர்ச்சியாம். இது ஆங்கில பாஷையில் 'ஹல்யூசினேஷன்ஸ்' (Hallucinations) என்று சொல்லப்படும். ஆரோபத்திற்கும் இதற்கும் வித்தியாசம் இதைப்படிக்கும் போதே பெரும்பாலார்க்குத்தெரிந்திருக்கலாம். ஆயினும் சிறிது சொல்லுதல் தவறாகாது. ஆரோபமுண்டாவதற்கு ஏதேனும் புறத்திலே சாதனமிருக்க வேண்டும். இன்றேல் ஆரோபம் நிகழாது. வெளித்தோற்றத்திற்கோ அவ்வகையான புறச்சாதனமொன்றும் வேண்டுவதின்று. இந்த வெளித்தோற்றமும் ஆரோபத்தைப்போல மூன்று பிரிவுகளை யுடையதாயினும் மிகவும் முக்கியமாயுள்ளது ஒன்றே. அது *புலன் வெளித்தோற்றம் என்னப்படும். புலன் ஐந்தாகையினாலே புலன் வெளித்தோற்றமும் ஐந்தாம்.

கண்ணுக்குப்புலமாகும் வெளித்தோற்றமானது உருவெளித்தோற்றம் என்று பெயர்பெறும். மேலே கூறியுள்ள உதாரணங்களிலே, தமயந்தி நளனைத்தன்னிடத்திற்கு வருமுன் கண்டதும், இராவணன் சீதையையும், சூர்ப்பணகை இராமனையுங்கண்டதும் உருவெளித்தோற்றங்கள் தான். இவ்வுரு வெளித்தோற்றமானது நம்முடைய தமிழ்ப்பாஷாப்பிரபந்தங்கள் ஒவ்வொன்றிலும் அநேகமாய்க்காணப்படும். உருவெளித்தோற்றமுரையாத நூலு மொருநூலா? என்று கேட்கும் தமிழ்வித்துவான்களு மிருக்கின்றார்கள். இப்பொழுது சாதாரணசனங்களுக்குள் சொல்லிக் கொள்ளப்படும் 'மோகினிப்பிசாசு' என்பதும் இவ்வுருவெளித்தோற்றமேயாம்.

செவிக்கு விஷயப்படும் வெளித்தோற்றத்தை ஓசைவெளித்தோற்றம் என்போம். இவ்வோசை வெளித்தோற்றங்களுக்குத் திருஷ்டாந்தங்கள் ஏராளமாயுண்டு. ஒருநாள் இராத்திரி மதுரை ஜில்லாவில் கஸ்பாமதுரையில் இரண்டு மனிதர்கள், விடியற்காலம் $4\frac{1}{2}$-மணிக்கு மதுரையை விட்டுப் புறப்படும் 'ரயில்'ஏறி வேறோர் ஊருக்குப் போகும்பொருட்டு 'ஸ்டேஷ'னுக்குச் சமீபத்திலுள்ள தெருக்களிலொன்றாகிய தெப்பக்குளத்தெருவில் ஒருவர் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார்கள். வெகுநேரம் வரையிலும் தூக்கம் வாராமையினாலே யொருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பேசிக்கொண்டிருந்த சிறிது நேரத்திற்கெல்லாம் 'ஸ்டேஷ'னிலே மணியடித்தது போல ஒருவர் காதில் பட்டது. உடனே யவர் மற்றவரைப்பார்த்து "இப்பொழுது 'ரயில்' மணியடித்தானல்லவா?" என்று கேட்டார். அதற்கு அவர் "ஆமாம், என் காதிலும் மணிச்சத்தம் பட்டதுபோலிருந்தது" என்றார். உடனே யிருவருந்தங்கள் தங்கள் மூட்டைகளைத்தூக்கிக்கொண்டு 'ஸ்டேஷ'னுக்குப் போய்ப்பார்த்தால் எல்லாருந்தூங்குகிறார்கள். ஒரு சிறு விளக்குமாத்திரம் அவ்விடத்திலிருந்தது. அவ்விளக்குவெளிச்சத்திற் கடிகாரத்தைப் பார்த்தால் மணி ஒன்றுஆயிருந்தது. ஆனால் 'ரயி'லில்மணியடிப்பது நாலு மணிக்குத்தான். ஆகவே யவர்கள் ஒரு மணிக்கு அந்த 'ரயில்' மணிச்சத்தங் கேட்டது பொய்த்தோற்றமாயிற்று. பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணுக்கர்களுக்கு மணியடிப்பதற்கு முன் மணியடித்ததாகக் காதில் படுவதும் ஓசைவெளித்தோற்றந்தான்.

* இயம்பிய - சொன்ன

$ அம் - அழகிய, தார் - மாலையைத்தரித்த, அகலம் - மார்பு.

* இது ஆங்கிலத்தில், Hallucinations of Sense Perceptions என்னப்படும்.



இனி மூக்கிற்குப் புலப்படும் வெளித்தோற்றத்தை நாற்றவெளித்தோற்றம் என்று அழைக்கலாம். இதற்குதாரணமாக எமது ஊரில் நடந்த விஷயமொன்றைக் கூறுவோம். ஒருநாட் காலையில் பத்து மணிக்கு ஒருவர் தாம் கச்சேரிக்குப் போகும்போது தமது மனைவியானவள் "நீங்கள் கச்சேரியிலிருந்து வரும்போது பூக்கடைக்குப்போய் எனக்கு நல்ல செந்தாழம்பூவாய்ப்பார்த்து இரண்டு வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்று வேண்டியவேண்டுகோளுக்கிணங்கி "ஆகட்டும், வாங்கிவருகிறேன்" என்றார். பிறகு கச்சேரியினின்றும் வரும்போது மற்றொரு நணவானோடு வேறு விஷயமாகப் போய்விட்டார். அவர் அவ்விஷயத்தை முடித்துக்கொண்டுவிடுவர இராத்திரிஎட்டுமணியாய் விட்டது. அவர் வீட்டுக்கு வரும் வழியெல்லாம் "ஐயோ! தாழம்பூ வாங்கமறந்துபோய் எங்கேயோ சுற்றிவிட்டு இப்படி வெறுங்கையனாய் வீட்டுக்குப்போகிறேமே! என்ன சொல்லுவாளோ ? தெரியவில்லை" என்று நினைத்துக்கொண்டு வந்தார். வீட்டுக்குச் சமீபமாக வரவும் தாழம்பூவாசனை கம கம வென்று வீசினதுபோல் அவருக்குத்தோன்றின படியால் வெகு தைரியமாய் உள்ளே சென்று தமது மனைவியைப்பார்த்துத் "தாழம்பூக்காரனை வழியிற்கண்டு நம்வீட்டு அடையாளஞ் சொல்லியிங்கே அனுப்பினேனே! அவன் வந்தானு? தாழம்பூ வாங்கினுயா?" என்று தாம் மறந்துபோனதைச் சொல்லாமல் கேட்டார். இவர் வீட்டிற்குள்ளே நுழையும்போது தாழம்பூவே நினைவாயிருந்த அவர் மனைவிக்கும் இவர் நுழைந்த மாத்திரையில் தாழம்பூவாசனை யடிப்பதாகத் தோன்றினதினாலே தன்னுடைய கணவர் தாழம்பூ வாங்கிவந்துவிட்டு இப்படிப்பேசுகிறாரென்பது அவளுடைய எண்ணம். ஆகையால் அவர் கேட்ட கேள்விக்கு அவர் மனைவி "தாழம்பூக்காரன் வரவுமில்லை, நான் வாங்கவுமில்லை" என்று வெகு சாவதானமாய்ப் பதில்சொன்னாள். அப்படி அவள் சொல்லியது உண்மையாயிருந்தும் அவர்மனம் சமாதானப்படாமல் தம்முடைய மனைவி தாழம்பூ வாங்கிவைத்துவிட்டு இல்லையென்று சொல்லுகிறதாக நினைத்துக்கொண்டு "சரி அதெல்லா மிருக்கட்டும். இந்த அறைக்குள் இருக்கிற தாழம்பூவை யெடு. நல்ல தாழம்பூவா? என்று பார்ப்போம்" என்று கேட்டார். அதற்கவள் "மடியிலே பூவை வைத்துக்கொண்டு என் இந்தமாதிரியாக விளையாடுகிறீர்கள்? நாழிகையாய் விட்டபோதிலும் பாதகமில்லை, கொடுங்கள்" என்று கையை நீட்டினாள். ஐயர்இவள்பூவை வாங்கிவைத்துக்கொண்டு நாம் வாங்கிவர மறந்துவிட்டதற்காகக்கேலிபண்ணுகிறாள்என்றுஎண்ணிக்கொண்டு எந்த அறைக்குள் பூ இருக்கிறதாக நினைத்தாரோ அந்த அறையில் போய்ப்பார்த்தார். அங்கு ஒன்றுமில்லையென்று அவர் திரும்பி வருமுன் அவர்மனைவி அவர் வைத்துவிட்டுப் போனவேஷ்டிகளில் தேடிப்பார்த்துப் பூஇல்லாமையைக் குறித்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். அவ்வறையிலிருந்து வந்தவர் வீடுமுழுவதுந் தேடிப்பார்த்தும் பூ அகப்படாமையால் ஒருவேளை அயல் வீடுகளில் வாங்கியிருக்கக்கூடுமென்று விசாரித்தால் அவ்விடங்களிலும் இல்லையென்று தெரிந்தது. நம் ஐயர் மானஸதத்துவ சாஸ்திரங்கற்று வல்லவராதலின் "இதுவரையிலும் வீசியவாசனைபொய்த்தோற்றமா?" என்று பிரமித்து வியந்தனர்.

கள்குடித்துக்களிக்கும் வழக்கமுள்ள ஒருவன் ஒருநாள் குடிப்பதற்குக் கள் அகப்படாமற்போன போதிலும், கள் குடிக்கவேண்டுமென்னும் ஆசையோடு கூடிய எண்ணத்தின் மேலீட்டினால்,தான் கள்ளருந்தியதாக நினைத்துக்கூத்தாடுதலை யநேகம்பேர் கவனித்திருக்கலாம். இது சுவைவெளித்தோற்றமாம். இது வாயிற்கு விஷயமாகுதலின் இதற்கு இப்பெயர்இடப்பட்டது. உடம்பிற்குப்புலமாகும் வெளித்தோற்றத்தை ஊற்றுவெளித்தோற்றம் என்போம்.

ஊறு என்பது ஸ்பரிசவுணர்ச்சி. ஒருவன் ஒருத்தியோடு கூடவேண்டுமென்னு மெண்ணத்தோடிருந்து சிறிது நேரத்திற்கெல்லாந் தான் அவளோடு கூடியதாகத் தோன்றினதைக் கண்டு ஆநந்தித்தல் இவ்வூற்று வெளித்தோற்றத்திற் குதாரணமாம்.

இனி வேதாந்த சித்தாந்த சம்பந்தமாகிய *யோகதத்துவ சாஸ்திரங்களிலே †சோபான முறையிற் கூறப்படும் உண்மைகளினீற்றிலுள்ள அவனே தானாய் நின்று சிந்திக்கும் சிந்தனையின் பயனாகிய ஏகனாகிச் சிவசாயுச்சியம் அடைந்து ஆநந்தித்தலை ஆங்கில பாஷையிலுள்ள தத்துவ சாஸ்திரங்களை யெல்லாம் கற்றேறப்பமிட்டஹக்ஸிலி (Huxley) என்னும் சாஸ்திரி வெளித்தோற்ற மென்றுரைப்பர்.

இனி இவ்விதமான வெளித்தோற்றங்களுக்கெல்லாம் காரணமென்னவென்று ஆராயப் புகுந்தால் ¶முன்னே ஆரோபத்திற்குக்காரணமாகக்கூறிய நிலைத்த வெண்ணமே இதற்குங்காரணமாம் என்று வெளிப்படும். அதெப்படியென்பதை உதாரண முகத்தால்விளக்குவோம். தமயந்தி நளனைக்கண்ட உதாரணத்தில், தமயந்தி நளனுடைய ரூபத்தையே சதா நினைத்துக்கொண்டிருந்ததினாலே இவ்வோரெண்ணமே யவளுடைய மூளையில் வியாபகமாகி அவள் அறிவினை மூடி அவளுடம்பையும் மனத்தையுங் கைவசப்படுத்திக்கொண்டது. ஆகையினாலே அவ்வெண்ணத்தின் வழிச்செல்லும் அவளுடைய மனமே தன்னிடத்துள்ள நளனுருவை வெளிப்படுத்திக் கண்ணிற்குக்காட்டிற்று. இவ்விதமாக மற்றைய உதாரணங்களையும்விளக்கிக் கொள்க.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரி. பி. ஏ.

## இந்து சகங்கள்.

இதுவிஷயமாக நான் பார்த்த புத்தகங்கள்

1. ‡சாஸ்திரிஞ்ஞரான் பர்னல்துரை போட்டிருக்கிறதென் இந்தியாப் பழையசாசன விமசனம் என்னும் புத்தகம்.

2. *இந்து தேசத்துப் பழைய நாகரிகவிளக்கம் என்பதாய் மூன்று சம்புடத்தில் பங்காள தேசத்து ரோமேஷ் சந்தர தட்டுதுரை போட்டிருக்கிற புத்தகம்.

3. ‡வித்வான் ம. ரங்காசாரியார் சதுர்யுகங்களைக் குறித்துக் கிரிஸ்தியன் காலீஜ்மாஸினில் 9-10-வது சம்புடங்களில் எழுதியிருப்பது.

### 1. கலியுக சகம்.

கலியுகாதி சுமார் 3600 வருஷத்துக்கு முன் பின்னாய் வடஇந்தியாவில் ஜோஸியவித்வான்கள் ஆரியபட்டர், வராகமிஹிரர் என இருவர் இருந்தவர்களில் ஆரியப்பட்டர் காலத்துக்கு முன்னே பௌத்தர் பெருமையடைந்து இந்து மதம் மலினமாயிருந்த காலத்தில் உண்டாய் ஆரியபட்டரால் உரை எழுதப்பட்ட ஜோதிடநூலாகிய சூரிய சித்தாந்தநூலில் பிரமன் வயது உத்தியாய் நிர்ணயிக்கப்பட்டுளது.

யுகம் என்றால் சேர்க்கை ஆகாயத்தில் கிரகங்கள் ஒரு ராசியில் சேர்ந்து தோன்றல். ஆதியில் சூரிய சந்திரர்கள் அமாவாசையில் சேர்ந்து அப்புறம் பிரிந்து திரும்பியும் அடுத்த அமாவாசையின்போது சேர்தல் யுகம் என்னப்பட்டுவந்தது. கொஞ்சகாலம் சென்றபின் குரு சூரியனுடன் சேர்ந்து தோன்றப் பிடிக்கும் 5வருஷகாலத்துக்கு யுகம் எனப்பெயர் வழங்கி அப்படி குருச்சுற்று-12-ஆம்காலம் நரவருஷம் 60ஆகக்கணக்காய்ப்பிரகஸ்பதிவருஷக்கணக்கு அறுபதும் அவ்வற்றிற்கு பிரபவமுதலாய்ப் பெயரும் ஏற்பட்டது. கீழே உதகரிக்கும் பெரிய யுகக்கணக்கு ஆதியில் வழங்கவேயில்லை.

வாத்தமான வருஷம் விஜய வருஷம்.
கிறிஸ்துவருஷம் 1893.

இதற்குச் சுமார் 1500 வருஷத்திற்கு முன்னே வடவிந்தியப் பிரதேசங்களில் பௌத்த மதம்தோற்று இந்துமதம் ஓங்கியபோது படிப்பு விசேஷப்பட்டு அப்பொழுதுதான் காளிதாசர்

* Science of intellectual intuition.
† சோபான முறையில் - படிப்படியாய்.
¶ 2-ம் புஸ்தகம் 5-ம் சஞ்சிகையாகிய போன ஸெப்டெம்பர் மாசத்து விவேகசிந்தாமணியைப் பார்க்க.
‡(Dr Burneell's South Indian Palægraphy)

* (Dutt's History of the Ancient Civiliztion 3 Vols)
‡ (Professor M. Ranga Chariar's Articles on the Yugas, in Vols 9 and 10 of the Christian College Magazine.)



முதலிய புலவர் வாழ்ந்தனர். ஆரியபட்டர், வராகமிகிரர் முதலிய சோதிடவலர் காலமும் அப்போதுதான். ஜோதிஷக் கணக்குகள் போடும்போது பூமி நிலையென்றும் சூரியன் முதலிய எழு கிரகங்களும் பெயர்வனவென்றும், அப்படி முதல்முதல் சேர்ந்து பிற்பாடு பிரிந்து திரும்பியும் சேர்வதற்கு வேண்டிய கால அளவைக் கீழே கண்டபடிக்கணக்கிட்டனர்:—

மேஷராசியில் அசுவினி நக்ஷத்திரத்தில் சூரியசந்திரர் ஒருமுறை சேர்ந்து அடுத்தமுறை சேருங்காலம் 366 நாளாம். அதுவே ஒரு நர வருஷமாம்.

ஒரு நரவருஷம்=366 நரருடைய நாள்கொண்டது.

### மகாயுகமாவது

அங்காரகன், புதன், குரு, வெள்ளி, சனி, சூரியன், சந்திரன் இக்கிரகங்கள் மேஷராசியில் அசுவினி நக்ஷத்திரத்தில் இணையுங்காலம்.

மகாயுகம்=43,20,000 நரவருஷங்கொண்டது. சதுர்யுகமெனவும்படும்.

### கல்பம்

மேலேகண்ட கிரகங்களும் மற்றும் கிரகங்களும் கொஞ்சம்கூடக் கோணாது அதாவது சிக்கிரோச்சமாயும் மந்தோச்சமாயும் ஒரு வழிப்பட்டு மேஷராசியில் அசுவனியில் நிற்கவேண்டும் காலம் கல்பம் எனப்படும்.

கல்பம் = 1,000 மகாயுகம்கொண்டது, அதாவது, 432,00,00,000 நரவருஷம் கொண்டது.

### பிரமன்வயது

ஒருகல்பம் பிரமனுக்கு ஒருபகல். இப்படிஒரு பகல் ஒரு இரவாய் 366 நாள் ஒரு வருஷமாய் அப்படி 100வருஷம்கொண்டது பிரமன்வயது.

ஒரு கல்பமானால் பிரமனுக்குப் பகலொன்று, பகலானபிறகு உயிருள்ளனவில்லாதனவெல்லாம் சுழுத்தி அவத்தையில் உறங்குவதால் பிரமன் உறங்கப் பிரளயம் நேரிடும், பிரமனது இரவும் ஒருகல்ப அளவுதான், அப்படி இவ்விரண்டு கல்பம் சேர்ந்து ஒருநாள், 366 பிரமநாள் கொண்டது ஒரு பிரமவருஷம், அப்படி 100 வருஷம் வரையில் ஒரு பிரமன் இருந்திறப்பர், அப்புறம் பராபரப்பொருள் தன் மயமாயிருக்கும் என சாங்கியர்நூற் கொள்கைகளையும் சோதிடவலர் செய்தகணக்கையும் கலந்து விஷ்ணுபுராணம், மற்றும்புராணங்கள் சோதிடநூல்கள் இவற்றில் சில அம்சங்களில் பேதமிருப்பதைத்தவிரப்பொது அம்சங்களில் ஒருவழியாய் உரைக்கப்பட்டிருப்பதை இந்துநாட்டார் வெகு காலமாய்ப் படித்து அப்படியே நம்பிவருகிறார்கள்.

மகாயுகத்தில் அடிமுதல் கோடிவரையில் மனிதர் நன்னடக்கை படிப்படியாய்க் குறையும். அதனில் கலியுகம் நன்னடக்கையில் மூன்று படி கீழ்ப்பட்டதாதலால் அதன் வருஷக்கணக்கை கிருதயுகக்கணக்குக்குக் காற்பங்காக்கினர். இப்படிக் கால்பங்காக்கினதற்கு வழி சரியாய் இருக்கவில்லை. வேதாங்கச் சோதிடப் புத்தகத்தில் ஐந்துவருஷக் குருக்கிரகச் சுற்று ஒன்றின் காலத்துக்கு யுகம் சொல்லப்பட்டிருக்கிறது. வராகமிஹிரர் எழுதிய பஞ்சசித்தாந்திகப் புத்தகத்திலும் அப்படியே சொல்லியிருக்கிறது. ஆரியபட்டர் நான்கு யுகங்களில் ஒவ்வொன்றுக்கும் சரியான அளவுதான் சொல்கிறார். அன்றியும் வேதாங்கச்சோதிடத்தில் மகாயுகம், மந்வந்தரம், கல்பம் இவைகள் குறிக்கப்படவில்லை. வியாசமகாமுனி கலியுகத்தைப் புகழ்ந்துளர். இதற்கு நேரவுரை சொல்லாமல் மாற்றியுரைப்பது நன்றன்று. சுமார் இதற்கு 1500 வருஷத்துக்கு முன்னே அதாவது கலியுகாதி 3,600 வருஷத்துக்குப் பிற்பட்டு கிறிஸ்தவ வருஷக்கணக்குப்படிச் சுமார் 500 ஆயிருந்தகாலத்தில், கலியுகக்கணக்கு அப்போதியக் கிரக நிலையால் கணிக்கப்பட்டது., அப்பேர்ப்பட்ட கிரகச்சேர்க்கையாய் 3,600-ற்றுச் சொச்ச வருஷம் சென்றதாய்த் தெரியவந்தபடியால், அந்த 3,600 வருஷமும் சேர்க்கப்பட்டுக் கணிதம் செய்தவருஷம் 3,600-ற்றுச் சொச்சமாய் உரைக்கப்பட்டது.

மகாபாரத யுத்தம் நடந்தகாலத்தில் கலியுகம் ஆரம்பமானதாய்ப் பல கிரந்தங்களிலும் சொல்வதுண்டு. காஷ்மீர தேசத்துச் சரித்திரமாகிய ராஜதரங்கிணியில் அரசர் பரம்பரை சொல்லியிருப்பதையும் சந்திரகுப்த அசோக

வரசர்கள் வடக்கேயாண்ட காலத்தில் யவனர் என்னும் கிரேக்கர் இந்தியாவுக்கு வந்திருந்த வருஷங்கள் நன்றாய்த் தெரியுமானபடியால் அவற்றையும் பிடித்துக்கொண்டு கலியுகப் பிறப்புக்குச் சுமார் 1,600 வருஷம் பிற்பட்டுத்தான் பாரத யுத்தம் நடந்ததாய் நிதானிக்கவேண்டியிருக்கிறது.

ஆதியில் வடமொழியில் ஏற்பட்ட நான்கு வேதங்களும் அவற்றில் அடங்கிய மற்றைப்பிரிவுகளும் உண்டானதுமுதல் பிற்பாடு கோர்வையாய் வியாசமுனிவரால் திரட்டியெழுதப்பட்டவரையில் உள்ள மொத்தக்கால அளவைத் திரட்டியகாலத்தில் கீழேகண்டபடி நான்கு பங்காக்கி அப்பங்குகளுக்குக் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் எனப்பெயரிட்டிருக்கலாம் என வித்வான் ம. ரங்காசாரியர் ஊகிப்பது சரியாயிருக்கும்போலும்;—

சந்தஸ் உண்டானகாலம்.

கிருதயுகம்.—ஆரியர் சிந்து நதிக்கரையில் குடியிருந்து ஆடுமாடு வைத்துக்கொண்டுச்சாதி வித்தியாசம் மதம் சடங்கு முதலிய ஆடம்பரமின்றி வந்து இறங்கிய தேசங்களை ஜெயித்துச் சுகமாயிருந்த காலம். கிருதயுகம் என்றால் வேலை நடந்தகாலம். இது கலியுகாதி 2,000 வருஷத்துக்கு முன்பின்னாய் இருக்கலாம். இங்கிலீஷில் வர்த்தமான 1893-ம் வருஷத்துக்கு, அதாவது இதற்குச் சுமார் 3,000 வருஷம் முன்னே.

மந்தரங்கள் உண்டானகாலம்.

திரேதாயுகம்.—ஆரியர் மத்திய தேசமாம் கங்கைக்கரை நாடுசேர்ந்து ஊர்களில் அமர்ந்து முச்சாதி முத்தெய்வங்கள் ஏற்பட்டகாலம். திரேதாயுகம் என்றால் மூன்றானகாலம். இது கலியுகாதி 2,200 வருஷத்துக்கு முன்பின்னாய் இருக்கலாம். அதாவது இதற்கு 2,800வருஷம் முன்னே:

பிராமணம் உண்டானகாலம்.

துவாபரயுகம்.—சந்தேகம் உண்டானகாலம். பழைய ஒழுக்கங்களின்பேரில் அவநம்பிக்கையுண்டாய் கௌதமர் கபிலர் புதுக்கொள்கை வெளியிட்டகாலம். வியாசரிருந்து வேதங்களைச் சரிவர வெழுதினகாலம். இது கலியுகாதி 2,400 வருஷத்துக்கு முன்பின்னாய்இருக்கலாம். அதாவது இதற்கு 2,600 வஷருத்துக்கு முன்னே.

சூத்திரங்கள் ஏற்பட்டகாலம்.

கலியுகம்.—கலியென்றால் சண்டை, தர்க்கம், போட்டி எனப்பொருள். துவக்கத்தில் பாரத யுத்தம் நடந்து பாரதயுத்தத்தில் சேதம் உண்டாய் பிற்காலம் கெடுதியாமென மனம்தளர்ந்த காலம். இது கலியுகாதி 2,500 வருஷமிருக்கையில் அதாவது இதற்கு 2,500 வருஷத்துக்கு முன்னே.

II. சாலிவாகன சகாப்தசகத்தின் தோடக்கம் கலியுகாதி-௵3180, கிறிஸ்துவசகம் ௵ 78, அதாவது இதற்கு 1815 - வருஷத்துக்கு முன்னே.

உச்சயினி ராச்சியத்து விக்கிரமார்க்க ஹர்ஷவரசரோ ஆந்தரதேசத்து சாலிவாஹனவரசரோ, இவர்களில் ஒருவர் சகச்சாதியரசனை லாகூருக்கடுத்த கோரூர் (Korur)ச்சண்டையில் வென்றதுமுதல் இந்தச்சகம் ஏற்பட்டதாய் இந்துக்கள் சொல்வதுண்டு. சாலிவாகனனை விக்கிரமார்க்க ஹர்ஷர்வென்றதாயும் இவனை அவர் வென்றதாயும் சொல்வதுமுண்டு. எது எப்படியிருக்கட்டும், இதனால் நன்கு விளங்குவதாவது, விக்கரமார்க்க ஹர்ஷர் சாலிவாஹநர் இவ்விருவரும் ஒருகாலத்தவர்கள் தாம்.

விக்கரமார்க்கப் பெயர் பலவரசர்களுக்குச் சொல்லப்படுவதுண்டு. ஆயினும் மேலேகண்ட விக்கரமார்க்க ஹர்ஷர் யார் என்றால், க்ஷபணகர், அமரசிம்மர், கடகார்ப்பரர், சங்கு, வேதாளபட்டர், காளிதாசர், வராகமிகிரர், வரருசி, தன்வந்தரி, என்னும் நவமணிப்பெரியோரை ஆதரித்தவரசர்.

ஹியூன்ஸாங் என்னும் சீனதேசத்தவர் இந்தியாவில் யாத்திரை செய்தகாலம், கலியுகாதி௵ 3,742, சகாப்த௵-562, கிறிஸ்தவ௵-640. அதற்கு 60 வருஷத்துக்குமுன் இறந்துவிட்டதாய் அவர் சொல்லுகிற சிலாதித்தியவரசர் மரணகாலம், கலியுகாதி௵-3682, சகாப்த௵ 502, கிறிஸ்தவ௵-580. சிலாதித்தியர் 50வருஷம் ஆண்டாராம். சிலாதித்தியர்க்கு முன் அரசாண்டவர் மேலேகண்ட விக்கரமார்க்க ஹர்ஷவரசராம். ஆகவே விக்கரமார்க்க ஹர்ஷர் ஆளுகை முடிவுற்றகாலம், கலியுகாதி௵-3,632, சகாப்த௵-452, கிறிஸ்தவ௵-530. கொஞ்சம் முன்பின்னாயிருக்கலாம்.



இந்தக் கணக்கை இன்னொரு வழியாயும் சோதிக்கலாம். காஷ்மீரதேசத்துக் கல்ஹநப் பண்டிதர் ராஜதரங்கிணி என்னும் காஷ்மீர தேசத்துச் சரித்திரம் எழுதியிருப்பதில் கண்டிருப்பதாவது, காஷ்மீரதேசத்தரசர் துர்லாபவர்த்தனர்காலம், கலியுகாதி௵-3700, சகாப்த௵ 520, கிறிஸ்த௵-598. துர்லாபவர்த்தனர்க்கு முன்னே 6 அரசர் ஆண்டதாயும் ஆறுபேரில் மூத்தவர் மாதிரிகுப்தர் என்றும் ஏற்படுகிறது. இவ்வறுவர்க்கும்சுமார்75-வருஷம்சென்றதாய் வைத்தாலும், மாதிரிகுப்தருடைய காலம் கலியுகாதி௵3625, சகாப்த௵-445, கிறிஸ்தவ௵-523, என ஏற்படுகிறது. மாதிரிகுப்தர்தான் காளிதாசர் என்றும் விக்கரமார்க்க ஹர்ஷரால் காஷ்மீரவரசராக நியமிக்கப்பட்டாரென்றும் பம்பாயைச் சேர்ந்த பௌ. டாஜிபண்டிதர் ஊகிப்பது நம்பிக்கைக்கு யோக்கியமாயிருக்கிறது. காளிதாசருக்கும் விக்கரமார்க்கஹர்ஷருக்கும் இருந்த நெருக்கம் பாணருடைய ஹர்ஷச் சரித்திரத்திலும் வேறு காவியங்களிலும் சொல்லியிருக்கிறது.

இவ்விரண்டு வழியாலும் மற்றும் இரண்டொருவழிகளாலும் விக்கரமார்க்கஹர்ஷர்காலம் சுமார் கலியுகாதி௵-3,625, சகாப்த௵-445, கிறிஸ்த௵-523, என ஏற்படுகிறது.

ஷை விக்கரமார்க்கர் கலியுகாதி௵-3,646, சகாப்த௵-466, கிறிஸ்தவ௵544-ல் மிலேச்சர்களை கோரூர்ச் சண்டையில் வென்றது மெய். அச்சண்டை நேரிட்டகாலத்தில் சகாப்தக்கணக்கு ஏற்பட்டு 466 வருஷமாயிருந்தது.

பூர்வத்தில் காஷ்மீரவரசர் கனிஷ்கர் என ஒருவர் இருந்தார். அவர் பௌத்தசமயத்தினவர். அவர் கலியுகாதி௵-3,180, சகாப்த௵-1, கிறிஸ்தவ௵78-ல் பெருமையடைந்துபௌத்தசமயப் பெரியோர் கூட்டம் ஒன்றுபோட்டுவித்தனர். அவர் பெயர்ப்பட சகாப்தம் எனக் காலக்கணக்கை பௌத்தசமயத்தவர் வழங்கினர். அவர் தொட்டு வழங்கின சகாப்தக்கணக்கை இந்துக்களும் வழங்கிவந்து பிற்பாடு பௌத்தச் சமயம் குறைந்து இந்துச் சமயம் ஓங்கிய காலங்களில் பௌத்தசமயக் கணக்கென்பதை மறந்து விக்கரமார்க்கரோ சாலிவாகனரோ சகச் சாதியாரை வென்ற கதையைச் சேர்த்து நாளதுவரையில் வழங்கிவருகிறார்கள்.

இச்சகக் கணக்குக்குப் பலபெயர் பலசமயங்களில் வழங்கினதாம். 'சகவருஷம்' 'சக சம்வத்ஸரம்', 'சகன்ரிபன்காலம்' என்றும், இராஜாவுக்கு சகராஜா, சகாதிபர், சகதேவர் என்றும் கணக்குக்குச் 'சாலிவாகனசகம்' 'சாலிவாகன சகாப்தம்' என்றும் பெயரிடப்பட்டிருந்தது. ஆதியில் சாலிவாகனக் கணக்குத் திட்டமாய்த் தெரியாமல் பலவிதமாயிருந்தது.

ஜாவாதீவிலேயும் சகாப்தக் கணக்குத் தான் வழங்குகிறது. ஆரம்பம் - கலியுகாதி ௵ 1176-கிறிஸ்தவ௵-74; இந்துக்கள் வழங்கும் சாப்தக் கணக்குக்கு 4௵-வித்தியாசப்படுவது.

திபெத்து, பர்மா, பாலித்தீவுமுதலிய பௌத்தசமய நாடுகளில் இன்னும் வழங்குகிறது இரண்டொருவருஷம்வித்தியாசப்படலாம்.

தெலுங்கு, தமிழ், வடமொழி முதலிய பாஷைகளில் பழையநூல்கள் அநேகம் பௌத்த வித்வான்கள் செய்ததாயிருக்க சகாப்தக்கணக்கு பௌத்தசமயத்தவரதாய் இருந்ததை நாம் நடவடிக்கையில் வைத்துக்கொண்டதில் அவமானம் காணோம். பௌத்தசமயத்தது என்பதை மறந்து சகராஜாவை இந்துராஜா வென்றது முதல் துவக்கமானதென்னும் தப்புக்கதை பரவிற்று. திகம்பரஜயினர் இக்கணக்குக்கு வேறு மூலம் காட்டி அதையே அநுஷ்டித்துவருகிறார்கள்.

வர்த்தமானசகாப்தக்கணக்கு, கலியுகாதி௵ 4995, சகாப்த௵-1815, கிறிஸ்த௵ 1893.

முடிவு.

சாலிவாகனக்கணக்கு ஆதியில் பௌத்த சமயத்தவர்கள் ஏற்படுத்தியது. விக்கரமார்க்க சாலிவாகனர்களுடன் இச்சகக்கணக்கைச் சேர்ப்பது காளாவட்டத்தில் மறதியால் உண்டான வெறுங் கதை. சாலிவாகனச் சகக்கணக்கு முதல் முதல் கலியுக ஆண்டு 3180-இல் ஏற்பட்டு வந்ததை அதற்குப்பின் சுமார் 544 வருஷம் பொறுத்துச் சகச்சாதியினரை விக்கர மரக்கர் வென்றதனுடன் சேர்த்துச் சொல்வது பெருமைக்காக விளம்பரமானதே யொழியநிஜமல்ல.

### III. சம்வத்சகம் அல்லது விக்கிரமார்க்கச்சகம்.

மேலேகண்ட லாகூர்க்கு அடுத்த கோரூர்ச் சண்டையில் மிலேச்சரை வென்ற விக்கரமார்க்க ஹர்ஷவரசர்பேரைப் பிரகாசப்படுத்த சம்வத்சகம் என ஒன்றை ஏற்படுத்தி கோரூர்ச் சண்டைமுதல் கணக்கிட்டால் பௌத்தசமயச் சகாப்தக் கணக்குக்குப் பின்னிட்டுப்போவதால் இந்துமதத்துக்குக் குறைச்சலாயிருக்கப் போகிறதேஎனச் சங்கோஜப்பட்டு 600 வருஷம் ஏற்கனவே கடந்ததாய்ச்சொல்லி கலியுகாதி௵ 3,046-வது முதற்கணக்கிட்டு கோரூர்ச் சண்டைச் சம்வத்சகக் கணக்குப்படி வருஷம் 600-ல் நடந்ததாகப் போட்டனர். ஏற்பட்ட காலம் கலியுகாதி௵ 3646, சகவருஷம்-466, கிறிஸ்த௵-544. கணக்கில் ஆரம்பமானதாய்ச் சொல்லும் காலம்கலியுகாதி௵-3046,சகக்கணக்குக்கு134 வருஷமும் கிறிஸ்தவசகத்துக்கு 56வருஷமும் முந்தியது.

முடிவு.

விக்கரமார்க்க ஹர்ஷர்காலத்தில் ஏற்பட்டது. ஏற்படும் காலத்தில் 600 வருஷம் சென்றுபோனதாய்க் கணக்காக்கப்பட்டது. சுவேதம்பரஜயினர் இதை வழங்குகிறார்கள். இது வட இந்தியாவிலும்பங்காளநாட்டிலும் இந்துக்களால் வழங்கிவருவது.

### IV. பிரகஸ்பதி சக்கரம்—குருக்கிரகச்சுற்று.

இது 60-வருஷத்துக்கு ஒருசுற்று.ஒவ்வொரு வருஷத்துக்கும்வெவ்வேறுபெயருண்டு. அவை பிரபவ,விபவ முதலியன. குருச்சுற்றுஒன்றுக்கு 60 வருஷம் பிடிக்கும். நடவடிக்கை வருஷம் விஜய௵.60 வருஷத்துக்கும் 60 பெயர் உண்டானதற்குப் பாரதத்தில் கதை உண்டு. வெகுநாளாய் இக்கணக்குவழக்கத்திலிருப்பது. கல்வெட்டுகளில் 1,000 வருஷத்துக்குமுன் சாலிவாகனக் கணக்குமுதலிய நீண்டகாலக் கணக்குகள் உதகரிக்கப்படாமல் குருச்சுற்றுக் கணக்குப் பெயர்தான் விசேஷமாய்ச் சொல்லப்படுகிறது. சாதாரணமாய்ப் பிராமணர் சங்கல்பம் பண்ணிவைக்கும்போது குருச்சுற்று வருஷம் சொல்வரேயன்றி சகக்கணக்குகளைச்சொல்வதில்லை.

### V. பசலிக்கணக்கு.

துலுக்கர்களுக்குக் கர்த்தாவாம் மஹமட்டு மெக்காவைவிட்டு மெடிநாவுக்குப்போன காலம் முதல் ஹிஜிரா எனக்காலக் கணக்கு ஒன்று உண்டு. ஹிஜிராத்துவக்கம் கலியுகாதி௵ 3724,சகாப்த௵-544கிறிஸ்தவ௵-622.மொகலாயச் சக்கரவர்த்தி அக்பருடைய மந்திரி தோடர்மல் நிலக்கணக்கு வரிக்கணக்குகளைச் சீர்ப்படுத்தியபோது புதிதாய் வருஷக்கணக்கு உண்டுபண்ணக் கோரினர். அப்பொழுது ஹிஜிராக் கணக்கில் 963-௵ ஆயிருந்தது. அதை பசலி-௵த்தில் 963 ஆக வடஇந்தியாவில் வைத்தனர். அக்பர்க்குப் பேரப்பிள்ளை தாஜ்மஹால் அரண்மனையைக்கட்டின ஷாஜிஹான்தென்இந்தியாவில் கூடப் பசலிக்கணக்கை வழக்கப்படுத்தினர். பிற்பாடு கிறிஸ்தவ-௵1835ல்-பைமாஷ் அளவுசெய்து பைசல் நடந்த காலத்தில் குடிகள் சாகுபடிசெய்து விளைச்சலைக் கைப்பற்றுவதற்கு இனமாய் நிலவரிக்கிஸ்தி சர்க்காரார் வாங்குகிற நிமித்தம் நடவடிக்கையில் இருப்பது. ஜூலை௴ 16 தேதியில் ஆரம்பமாக முன்னே கணக்காய்வந்து பிறகு ஜூலை௴ முதல்தேதியில் பசலிப் பிறப்பாகும்படி உத்தரவாய்க் கொஞ்சநாளாயிற்று.

### VI. கோல்லம் ஆண்டு.

இது மலையாளத்திலும் திருவாழுங்கோட்டிலும் திருநெல்வேலிஜில்லாப் பக்கங்களிலும் வழங்குவது. இதன் சுற்று ஆயிரக்கணக்காம். கிறிஸ்து சகத்துக்கு 125-வருஷத்துக்குமுன் கலியுகாதி-௵2,977-ம் வருஷம்முதல் கணக்காய் வருவது. கொல்லம் என இரண்டு ஊர்கள் உண்டு. வடமலையாளத்தில் கொல்லம் பட்டணத்தில் பெரியகுளம் வெட்டினதுமுதல் கணக்காவது எனக்கேரளோத்பத்தி என்னும் புத்தகத்திலும், திருவாழுங்கோட்டில் கொல்லம் என்னும் ஊரில் உதயமார்த்தாண்டவரசர் கிறிஸ்த்வசக௵-825 கலி-3927-௵த்தில் படித்தோர் கூட்டம்போட்டு அதுமுதல் கணக்காய் வருவதென்று திருவாழுங்கோட்டுச் சரித்திரத்தில் திவான் ஷங்குண்ணி மேனவராலும் சொல்லப்பட்டிருக்கிறது.

மொத்த முடிவு.

சதுர்யுகக்கணக்கே கலியுகம் பிறந்துச்சுமார் 3600௵ சென்றபின் ஆரியபட்டர் முதலிய சோதிடவலரால் கல்பனையாய்ப் போடப்பட்டது. அப்புறமும் சுமார் 500௵ வரையில் பஞ்சாங்கங்களில் கலியுகம் விவரிக்கப்பட்டதேயொழிய நடவடிக்கையில் பத்திரங்களிலாவது கல்வெட்டுகளிலாவது சாஸனங் களிலாவது உரைக்கப்பட்டதல்ல. கிருதயுகம் முதலிய நான்கு யுகமும் கல்பனையாம். வித்து மரமாய் விரிந்து ஒடுங்குவதுபோல ஆதிமூலப்பொருள் பிரபஞ்சமாய் விரிந்து ஒடுங்கும் என்னும்கொள்கையின் பேரில் உண்டான கல்பனை. கலியுகம் பிறக்கவிட்டு நான்கு யுகக்கணக்கு ஏற்பட்டது. ஏற்பட்டகாலத்தில் முன்பின்னாய் நடந்த பாரதயுத்தத்தில் மிகுதியான உயிர்கள் மடிந்துவிட்ட ஏக்கத்தில் கலியுகம் தப்பாய்த்தோன்றி ஏனைய யுகங்களுக்குத் தூய்மை விசேஷமாய்ச் சொல்லப்பட்டது. சோதிடயுகக்கணக்கிற்கண்ட நான்கு யுகங்களும் கலியுகப்பிறப்புக்குப்பின் ஆரியர் நடவடிக்கையின்பேரில் பிரிக்கப்பட்ட நான்கு காலப்பிரிவுகளும் கலந்து பின்னவற்றின் இலக்கணங்கள் பஞ்சாங்கச் சதுர்யுகங்களுக்கு ஆரோபிக்கப்பட்டன. சாலிவாகனச் சகக்கணக்கு பௌத்தரால் போடப்பட்டு இந்துக்கள் தப்பாய் சுமார் 600௵த்துக்குப் பிற்பட்டு நடந்த விக்கரமார்க்கர் கதையைச்சேர்த்துச் சகக்கணக்கை நடவடிக்கையில் வைத்துக் கொண்டனர்.

தி. ஆர். இராமநாத அய்யர், பி.ஏ., எல்.டி.

---

## ஆபத்துக்கிடமான அபவாதம்

### அல்லது

## கமலாம்பாள் சரித்திரம்.

### X.

ஓடிவந்த மனிதர்கள் வந்த வேகத்தால் மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்க இரண்டுநிமிஷம் வரையில் ஒன்றும் பேசக்கூடவில்லை. அவர்கள் வாய்திறந்து வந்த காரியத்தைச் சொல்லும்வரையில் அங்கிருந்தவர்களுடைய பிராணன் அவர்களிடத்திலில்லை. கடைசியாய்ச் சுப்பிரமணியய்யர் வீட்டில் திருடினவன் பேயாண்டித்தேவனே என்றும் அவன் போகும் வழியில் சிறுகுளத்திற்கு ஆறுமைலுக் கப்பாலுள்ள கல்லாபட்டிக் கணக்கன் குப்பாபிள்ளை அவர்மாட்டை அடையாளங்கண்டு ஆட்களைத் திரட்டிக்கொண்டு பேயாண்டித்தேவனை வழிமறித்துக்கொண்டிருக்கிறானென்றும், முத்துஸ்வாமி அய்யனைப் போலிஸ்தாருடன் குப்பாபிள்ளை கூட்டிவரச்சொன்னானென்றும் அனேக உளறல் குழறல் கேள்வி உத்திரம் ஆட்சேபனை சமாதானங்களுக்குப் பிறகு வெளியாயிற்று. உடனே சிலர் 'பேயாண்டித்தேவன்தான், நான்தான் சொன்னேனே. வேறு யார் இவ்வளவு தைரியமாகச் செய்வார்கள்' என்றார்கள். சிலர் பேஷ் பேயாண்டித்தேவன் அகப்பட்டானடாப்பா என்றார்கள்.

'பேயாண்டித்தேவன்' என்பவன் வெகு பிரபலமான திருடன். அந்தப் பிரதேசத்துக் கள்ளர்கள் எல்லோருக்கும் அவன்தான் அதிபதி. அவன் தன் கொம்புவாத்தியத்தை ஊதினானால் அரைநிமிஷத்தில் ஆயிரக்கணக்காய் அவனுக்குப் படைசேரும். அவன் வயதில் சிறியவன் ஆனாலும் அவனுடைய அசையாத சிந்தையும், அழியாத உள்ளமும், புத்தி விசாலமும், பெருந்தன்மையும், பராக்கிரமும் வாக்கு வல்லபமும்,அவனது அளவற்றஊக்கமும்உற்சாகமும்,கம்பீரமான தோற்றமும் காருண்யமான குணமும் அவனைக் காட்டிலும் எத்தனையோ வயதிற்குப் பெரிய திருடர்களைக்கூட அவனுக்கு நாய்போல அடிமைப்படச் செய்ததுமன்றி அவனிடத்தில் அவர்களுக்கு அச்சமும் அன்பும் ஏககாலத்தில் ஜனிக்கச்செய்தன. அவர்களுக்கு அவன் இட்டது சட்டம், அவன் சொன்னது வேதவாக்கியம். அவன் செய்வதோ அற்புதச் செய்கைகள். எதார்த்தத்தில் அவன் ஓர் பெரிய அசகாயசூரன் என்பதற்கு ஆட்சேபனையில்லை. அவனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் ஒருமலைக்கும் எருக்குப்பைக்கும் என்னவித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் உண்டு. அவன் கள்ளர்குலத்திற் பிறவாது வேறு எங்கே பிறந்திருந்தாலும் நம்முடைய தேசத்திற்கு ஓர் பெரிய ஆபரணமாயிருந்திருப்பான் என்பதற்கு ஐயமில்லை. அவன் திருட்டுத்தொழில் செய்யும் தீயர்குலத்தில் பிறந்ததால் ராட்சதர்கள் கையிலகப்பட்ட பிரமாஸ்திரம்போலச் சாதுக்களுக்குவிரோதமானஓர்சாதனமானான். மனிதன்எவ்வளவுஉத்தமமான மனிதனானாலும் பெரும்பான்மை அவன்யோக்கியதைஅவன் இருக்குமிடத்தைப் பொறுத்த தல்லவோ? காட்டிற்கெரித்த நிலவும் விழலுக்கிறைத்த நீரும் கடலிற்கிடக்கும் முத்தும் புதரில் கிடக்கும்பூவும் யாருக்கு என்னபயன்? மாட்சிமைபெற்று விளங்கும் நமது மகாராணி யவர்களின் மகுடத்திற்கு நூதன அழகைத் தந்து பெருமைபெற்ற உலகப் பிரசித்தமான கோஹினூர் என்னும் வயிரமுங்கூட ஒருகாலத்தில் மண்ணிற்புதைந்து மாசுபடிந்து மங்கிக் கிடக்கவில்லையா? சர்ப்பத்தினிடத்திலுள்ள நாகரத்தினம் அதனுடைய துஷ்டச் செய்கைகளுக்குத் தன்னுடையவெளிச்சத்தால் உதவுகிறதேயன்றி அதனால் பிறருக்கு ஏதாவது பயனுண்டோ? பேயாண்டித்தேவன் எவ்வளவு பெருந்தன்மையுள்ளவனானாலும் பிறந்ததுமுதல் அவனுக்குத் திருடுவதே தொழிலாக ஏற்பட்டதால் அத்தொழிலின் இழிவு அவனுக்குப் புலப்படாததுமன்றிப் பகைவரிடத்து இரக்கமின்மையும் அவர்களிடத்துக் கொடிய வைராக்கியமும் அவனுக்குப் பிறவிக்குணமாய்விட்டன. சமுத்திரத்தினின்று ஊறும் ஊற்று உப்புக் கரியாமல் இனிக்குமா? மலத்தையே வழக்கமாய்த் தின்னும் பசுவினது பால்கூடத் தன் இயற்கை ருசியையிழந்துவிடவில்லையா? பேயாண்டித் தேவனுடைய விஸ்தாரமான பட்டப்பெயர் ராஜகாம்பீர வீரமார்த்தண்ட சங்கிலிவீரப்ப பேயாண்டித்தேவ ரவர்கள். கன்னங்கறேலென்று கறுத்துப்பெருத்த அவ

னுடைய உருவமும் ' கல்லைத்திரட்டிச் செய்தாற்
போன்று, இருப்புச்சல்லடக் தரித்த அவனுடைய
தொடையும் யானைத் தும்பிக்கைபோற் றடித்த அவ
ன் கைகளும் பர்வதம்போல் பருத்து வளர்ந்து பரந்த
அவனுடைய மார்பும் ஆட்டுக்கடாவின் கொம்பு
போல் வளைந்து திரண்டு கடையிற்கூரிய அவனு
டைய மீசையும் திடசித்தத்தைத் தெளியத் தெரி
விக்கும் அவனது உள்ளடங்கிய உதடுகளும் அவனு
டைய கூரிய மூக்கும் குறுகிய முகவாய்க் கட்டை
யும் கண்டோரைக் கலக்கும் கம்பீரமான தோற்ற
மும் 'இவன்தான் வீரப்பிரதாபன் இவன்தான் வீரப்
பிரதாபன்' என்று இடைவிடாத மௌனப் பிரசங்
கம் செய்து விளங்கின. அவனுடைய புருவங்களிர
ண்டும் வீரலெட்சுமிக்காக அமைக்கப்பட்டிருக்கும்
வில்வளைவு மண்டபங்கள்போல் விளங்கின. அவ
னுடைய கண்களோ அவன் அதிகத் திருப்தியுடன்
அடிக்கடி அற்புதமாய்ச் சுழற்றுந்தோறும் அவனுட
னிருந்தவர்களுடைய உயிரையும் உணர்வையும்
ஊடுருவிச் சென்றன. ஆனால் அவன் சந்தோஷமா
யிருக்கும் சமயத்தில் புன்சிரிப்புத்தவழ்ந்த அவன்
உதடுகளும் சாந்தசுவரூபமாய் ஜொலிக்கும் அவன்
கண்களும் அவன் முகத்திற்கு பிரதமை தினத்துச்
சந்திரிகையை ஞாபகப்படுத்தத்தக்க ஓர் மிருதுவான
சாயலைக்கொடுத்துதவி அவனுடன் சம்பாஷிப்பவர்க
ளுடைய உள்ளத்தை உருக்கி அதில் தன்னுருவத்
தை வார்த்து வசீகரிக்குந் தன்மை வாய்ந்திருந்தன.
அவன் கிரமமாகக் கல்யாணம்செய்துகொண்ட மனை
விமார் 13பேர். அக்கிரமமாக அனுபவித்த ஸ்திரீகள்
அனந்தம். சிங்கக்குட்டிபோன்ற இச்சிற்றரசன் பே
ரைக்கேட்டால் அந்தப்பிரதேசத்தில் அழுத பிள்ளை
யும் வாய்மூடும்.

சுப்பிரமணியய்யர் வீட்டில் அவன் திருடக்காரண
மென்னவென்றால் சில நாளைக்கு முன் சிறுகுளத்தில்
நடந்த ஜெல்லிக்கட்டில் கோமளநாய்க்கனூர்ஜமீன்
தாருடைய பிரசித்தமான மாட்டைச் சுப்பிரமணியய்
யருடைய ஆட்கள் பிடித்து உருமாலையவிழ்த்து அவ
மானம்செய்து விட்டார்கள். சுப்பிரமணியய்யர் புதி
தாக ஒரு ஜோடிகாளை வாங்கியிருந்தார். அதை ஜமீ
ன்தாருடைய ஆட்கள் என்னபாடுபட்டும் பிடிக்கக்
கூடவில்லை. இந்த அவமானத்துக்குப் பிரதிசெய்ய
ஆவல் கொண்டிருந்த அந்தஜமீன்தார் பேயாண்டித்
தேவனைத் தூண்டிவிட்டு சுப்பிரமணியய்யருடைய
வீட்டில் கொள்ளையிடச்சொன்னான். பேயாண்டித்
தேவனுக்குஅந்தஜமீன்தார்முக்கியசினேகிதன். அவ
னும் அப்படியே செய்வதாகச் சம்மதித்துவந்த சமயத்
தில் சுப்பிரமணியய்யரும் அவர் மனைவியும் ராத்திரி
நெடுநேரம் தூக்கம் விழித்ததால் அயர்ந்து தூங்கிக்
கொண்டிருந்தார்கள். பொன்னம்மாள் புருஷனுக்கு
மருந்திட்டதில் முதல் முதல் கைகண்ட பலன் அவ
ளுக்கு 3000-ரூபாய் நகை பலித்தது. திருடினது பே
யாண்டித்தேவன்தான் என்று கேட்ட முத்துஸாமி
அய்யர் 'நம்மைவிடக் கோமளநாய்க்கனூர்ப்பயல்
அவனுக்குப் பெரிதாய்ப்போய்விட்டானா, இருக்கட்
டும்' என்று சொல்லி சப்மாஜிஸ்திரேட்டு வைத்திய
நாதய்யருக்கு ஆள் அனுப்பினார். பேயாண்டித்தேவ
னைப்பிடிக்க நெடுநாளாய் போலீஸ்காரர்கள் தலைகீ
ழாக நின்று பிரயத்தனம் பண்ணியும் பலிக்கவில்லை.
வைத்தியநாதய்யர் வேலைத்திறமைக்காகப் பிரசித்தி
பெற்றவர். பேயாண்டித்தேவனைப் பிடித்துக்கொ
டுப்பதற்காகவே அவரைச் சர்க்காரில் முக்கியமாய்
அந்தப் பக்கத்துக்கு அனுப்பினார்கள். அவர் வந்து
இரண்டு வருஷமாயும் அவன் அவர் கையில் அகப்
படவில்லை. அவர் 'பேயாண்டித்தேவனைப் பிடித்து
விட்டார்கள்' என்றவுடனே 30 கான்ஸ்டேபிள்களை
யும் கூட்டிக்கொண்டு குதிரை போட்டுக்கொண்டு
ஓடிவந்தார். அவர் வருவதற்குள் முத்துஸ்வாமியய்
யர் வேலைக்காரன் வீரனைக்கூப்பிட்டு வண்டிக்கா
ரனை வண்டிபோடச்செய்யச் சொன்னார். வீரன்
வண்டிக்காரன் மூக்கன் படுத்திருந்த இடத்துக்குப்
போய் 'மூக்கண்ணே, மூக்கண்ணே' என்று சப்தம்
போட்டான். பிறகு 'மூக்கா, மூக்கா' என்று சப்தம்
போட்டான். பிறகு 'அடேமூக்கா அடேமூக்கா'
என்று கூப்பிட்டுப் பார்த்தான்; ஒன்றுக்கும் பதிலைக்
காணோம். அசைத்து எழுப்பிப் பார்த்தான்; அடித்து
எழுப்பிப்பார்த்தான்; உணர்ச்சிவரவில்லை. 'செத்துக்
கித்துப்போயிட்டானோ, மூச்சு தருத்திஊதிறாப்பலே
ஊதாது,குறட்டுதயிர்கடையாதே' என்று சொல்லிக்
கொண்டுமேலேறித்துவைத்தான். இவனுக்குத்தான்
கால்வலித்ததேயொழியஅவ்விடத்தியோகநிஷ்டை
க்கு யாதொருசலனமுமில்லை.'இதேதடா கும்பகர்ண
னாயிருக்கு' என்றுசொல்லிக்கொண்டு அவன் காதில்
போய்காததூரங்கேட்கும்படி கத்திப்பார்த்தான்.வீர
னுடையபிரம்மப் பிரயத்தனத்தைக்காட்டிலும் மூக்
கனுடைய நித்திரை வைராக்கியம் பலமாயிருந்தது.
கடைசியாய் அவனைத்தூக்கி நிறுத்திக்கொண்டு சுவரி
ல் நாலைந்துதடவை பலமாய்மோதினான். நல்லவேளை
யாய் எந்தசுவாமி புண்ணியத்திலோ கொஞ்சம்பிரஞ்
ஞைவந்தது. 'என்னடா பாதித்தூக்கத்லே' என்று
சொல்லிக்கொண்டுதலையைச்சொரிந்து கொண்டு சுவ
ரில்சாய்ந்தவண்ணமே மூக்கன் மறுபடி தூங்கத்துவ
க்கினான்.உடனே வீரன் பளீர் என்றுபேயறைந்தாற்
போல் அறைந்து'ஊரெல்லாம் கொள்ளைபோகுது,உ
னக்கு இன்னம் ஒறக்கம் போகல்லே' என்று சொல்லி
அவனைவெளியில்இழுத்துவந்தான்.இதற்குள்வைத்திய
நாதய்யர்வந்துஒரு நாழிகையாய்விட்டது. பிறகுமூக்
கன்வண்டிதேடி மாடுதேடி பயணத்துக்குத்தயார்செ
ய்ய, ஐந்தாறுவண்டிகளும் ஐம்பது அறுபது ஜனங்க
ளும்நீவட்டிகள் சுழுந்துகள்சஹிதமாய்க்கல்லாயட்டி



மார்க்கமாய்ப் புறப்பட்டார்கள். அங்கே வந்தவுடன்
பேயாண்டித்தேவன் ஐந்தாறுபேரைக்காயப்படுத்தி
விட்டுக்காததூரம்போய்விட்டான் என்று கேள்விப்
பட்டு எல்லாரும் திகைத்து நின்றார்கள். அப்பொ
ழுது சொக்கன் என்ற ஒரு குடியானவன் அவர்களி
டம் வந்து 'நீங்கள் யோசிக்கவேண்டாம், பேயாண்
டியை நான் பிடித்துக்கொடுக்கிறேன்' என்றான். அவ
னே ஜாதியில் கள்ளன் ஆனதால் அவர்கள் அவனி
டத்தில் நம்பிக்கையுடன் அப்படிச் செய்வாயானால்
உனக்கு நல்லவெகுமதி தருகிறோம் என்றார்கள்.
சிறுகுளத்தில் அன்று இரவுமுழுவதும் ஒருவருக்
கும் தூக்கம் கிடையாது. ஜனங்கள் எல்லாரும் தீப்
பிடித்த திருஷ்டாந்தங்களையும் பேயாண்டித்தேவ
னுடையபிரதாபங்களையும்பற்றிப்பேசிக்கொண்டிரு
ந்தார்கள். பாவம் சுப்பிரமணியய்யரோ முத்துஸ்வா
மி அய்யர் அகத்திலே தானே இருக்கும்படி சொல்
லிவிட்டமையால் அங்கேயே இருந்துகொண்டு தன
க்கு நேரிட்ட கஷ்டத்தைக்குறித்து வருத்தப்பட்டுக்
கொண்டிருந்தார். அவருக்கு நகை போனதிலும்
பணம் போனதிலும் கூட அவ்வளவு விசனமில்லை.
பிரியமாய் வாங்கின உருமால் கட்டிக்காளை போன
து அவருடைய பிராணனில் ஒரு பாகம் போய்விட்
டது போலிருந்தது. மகாமேருபோலிருந்த அவர்
வைக்கோற்போரோ அவருடைய நீர் பெருக்கும்
கண்கள் முன்னமேயே கரியாய்ப்போய்க்கொண்டி
ருந்தது.

இரண்டு நாளைக்குப்பிறகு ஒரு கணவாய்க்குஅருகி
லிருந்த ஓர் பெரிய ஆலமரத்தின்கீழ் பேயாண்டித்
தேவன் பத்துப்பேருடன் உட்கார்ந்திருந்தான். அப்
படி உட்கார்ந்திருக்கும்போது பகலில் சுமார் பன்னி
ரண்டு மணிக்கு ஒரு மனிதனும் ஒரு கிழவியும்அவர்
களை நோக்கி வெகு வேகமாய் ஓடிவந்தார்கள். வந்த
வர்கள், அந்தக்கிழவி பஞ்சுப்பொதிபோல் தளர்ந்து
கிடந்த தன் கிழட்டுச்சதையைத் தூக்கிக்கொண்டு
ஓடி வருகிற வேடிக்கையைக்கண்டு சிரித்துக்கொண்
டிருந்த பேயாண்டித்தேவனுடைய காலிலே விழு
ந்து 'எங்கப்பங்கப்பா மகாராசா! நீதான் காப்பாற்ற
வேணும், நீ தான் எங்குலதெய்வம்' என்று கதறினார்
கள். பேயாண்டித்தேவன் 'நீங்கள் யார் என்னசமா
சாரம்'என்றுகேட்க, அந்தக்கிழவி, சாமி 'நானு ஏழை
ப்பட்டவள், ஆயிரங்காலந் தவசுகிடந்து கோவிலுக்
குப்போயி கொளத்துக்குப் போயி மரத்தைச் சுத்தி
மாட்டைச்சுத்தி வரங்கிடந்து தவசுபண்ணிப் பட்டி
னிகடந்துபண்ணாத பூசையெல்லாம்பண்ணிஅப்புறம்
துரோபதைக்குச் சாம்பிராணிகொளுத்திக் கருப்பனு
க்கு மாடுவெட்டி ஆடுவெட்டிக் கோழிவெட்டி, அப்
புறம் தருமம்குடுத்து தானம்குடுத்து பிராமணனுக்கு
அரிசிகுடுத்து அப்புறம் பஞ்சாங்கக்காரனுக்குத் தவ
சம் குடுத்து,' என்று வார்த்தைவார்த்தையாக இழு
த்து இழுத்து சொல்லிக்கொண்டிருக்க பேயாண்டி
த்தேவன் 'ஆமாம் அப்புறம் சாப்பிட்டு அப்புறம் தூ
ங்கி அப்புறம் கைகழுவி ஏ ஏ ஏ' என்று பரிகாசம்
பண்ணிச்சிரிக்க எல்லாரும் இடி இடி என்று சிரித்
தார்கள். பேயாண்டித்தேவன் 'யார் என்று கேட்
டால் இன்னார் என்று சொல்ல ஒரு மாதம் ஆகும்
போலிருக்கிறதே' என, அந்தக்கிழவியுடன்கூடவந்த
மனிதன் 'சாமி அவள்அப்படித்தான் பேசிக்கிட்டே
கிடப்பாள், அவதான் என்னாத்தா, நான்தான் அவம
கன், வந்து அவதான் எங்கப்பனுக்கு மூத்தபொஞ்
சாதி'என, அவள் 'இல்லை இன்னொரு சக்களத்தியி
ருந்துக்கிட்டிருந்தா அவதான் மூத்தது நானு ரெண்
டாவது அவகளுக்கும் அவகளுக்குஞ் சேரலை எந்நே
ரமும் சண்டையுஞ் சல்லியமுஞ் சச்சரவுந்தான், அப்
புறம்அவகள்'என்று சொல்லிக்கொண்டிருக்க அவன்
'நீயிரடி சும்மா' என்று அவளை யிடித்துத் தள்ளிப்
போட்டு 'இவள் வந்து எந்நேரமும் இப்படித்தான்,
சாமி மகாராசாவே என்பேர் சொக்கன்' என்பதற்
குள், அவள் 'ஒரே மகன். பத்துமாதஞ்சுமந்து பெத்
தேன், அவனும் இடிச்சுத்தள்ளரான்'என்று குய்யோ
முறையோவென அழுக ஆரம்பிக்கவே, பேயாண்
டித்தேவன் இவர்கள் ஒன்றுமறியாத ஏழைகள்என்று
நினைத்து எழுந்திருந்து அவர்களை சமாதானம் பண்
ணிச் சமாசாரத்தை சாவகாசமாய் விசாரிக்க, சொக்
கன் என்பவன் தான் ஜாதியில் தெற்குச்சீமைக் கள்
ளன் என்றும் அவன் திருடினதற்காக சிறைச்சாலை
யில் வைக்கப்பட்டதாகவும் அதிலிருந்து தப்புவித்
தோடி வந்துவிட்டதாகவும் போலீஸ்காரருக்குப்
பயந்து பேயாண்டித்தேவனுடைய பிரதாபத்தைக்
கேள்விப்பட்டுஅவனிடம் ஓடிவந்ததாகவும் சொல்லி
அவன் காலில்விழுந்து கண்ணீராறாய்ப் பெருக்கபே
யாண்டித்தேவன் அவனைத்தட்டிக்கொடுத்து 'நீபயப்
படவேண்டாம்,உன்னைக்காப்பாற்றநானாய்விட்டது.
உனக்காக என்னுயிரையும் கொடுப்பேன்' என்று
கையடித்துக் கொடுத்துப் பிறகு 'நான் போகிற இட
மெல்லாம் உன்னைக்கூட்டிப் போகிறேன்; நாளை ராத்
திரி மல்லாபுரத்தில் கொள்ளையடிக்கப் போகிறதாக
இப்பொழுதுதான் பேசிமுடித்தோம். உன்னையும்
கூட்டிப்போகிறேன்;பயப்படாதேகொள்ளைப்பணம்
கிடைக்கும். அங்கேகொள்ளையடித்துவிட்டுத் தோ
ணிமலைக்குகைக்கு வந்து கள்ளுக்கிள்ளு சாப்பிட்டு
படுபோடுபோட்டு விடுவோம் வா' என்றுசொல்லி
'உன் பெயர் என்ன அப்பன்'என்று கேட்க, அவன்
'சொக்கன்' என்றான். முத்துஸ்வாமி அய்யரிடத்தி
லும் வைத்தியநாதய்யரிடத்திலும் பேயாண்டித்தேவ
னைப் பிடித்துக் கொடுத்துவிடுவதாய்ப் பேசிவந்த
சொக்கன் இவனே. அவன் வழியில்போகிற ஒரு கிழ
வியைத் தன் தாயாரென்று கூட்டிவந்து இல்லாத
வேஷமெல்லாம்போட அதையறியாத பேயாண்டித்

தேவன் 'சொக்கன்னே இங்கே வா அண்ணே, உட்காரப்பேன் பயப்படாதே. கள்ளப்பிள்ளை அழுகலாமா: பாட்டி உட்காருபாட்டி. போலீஸ்நாய்கள் வரட்டும் வம்பில் கட்டியடிக்கிறேன்.'' என்று சொல்லி சொக்கனுடைய கண்ணீரைத்தன் துணியால் துடைத்தான். மோசக்காரச் சொக்கன் அன்று சாயந்திரமே அந்தக்கிழவி மூலமாக மல்லாபுரம் கொள்ளையையும் தோணிமலைக்குகை யிருப்பிடத்தையும் பற்றி சிறுகுளத்துக்குச் சொல்லியனுப்பிவிட்டான்.

மறுநாள் மல்லாபுரம் கொள்ளை வெகு மும்முரமாக நடந்தது. ராத்திரி இரண்டுமணிக்கு பேயாண்டித்தேவனும் சொக்கனும் இன்னும் 5-பேர்களுமாய் தோணிமலைக் குகைக்கு வந்துசேர்ந்தார்கள். அந்த மலை ஓர் சரளைக்கற்காட்டு மத்தியிலிருந்தது. அது சுற்றுமுற்றும் மனித வாசனையே கிடைக்கப்பெறாது கொல்லுக் கொலைக்கஞ்சாத குனியக்காரனுடைய மனதுபோல் வெந்து கிடந்தது. அதில் 'தாயைப்போல பிள்ளை'என்றபடி சப்பாத்துக்கள்ளியும் காட்டுக்கள்ளியும் ஏகமாகச் செறிந்து அடக்குவாரில்லாத ராட்சதப்பூண்டுபோல வளர்ந்து கிடந்தன. அந்தச் சப்பாத்துக்கள்ளி மாளிகைகளில் சரசரவென்று சந்தடிசெய்து சஞ்சரித்துக்கொண்டிருந்த பாம்புகள், நரிகள்பாட பேய்கள்ஆட கோட்டான்கள் மிருதங்கம்வாசிக்க ஆந்தைகள் ஆசீர்வதிக்க ஓநாய்கள் உபதேசம்பண்ண புலி கரடிகள் செப்படி வித்தைகள் செய்ய தங்களுடைய சாப்பாடு கல்யாணம் சாந்திமுகூர்த்தம் முதலியவைகளை மங்களகரமாய் முடித்துக்கொண்டு எதேச்சையாய்த் தங்களுடைய நித்திய கர்மானுஷ்டங்களை யாதொரு குறைவுமின்றி நடத்திவந்தன. முட்களும் முட்கள் போலத்தைக்கும் கற்களுமே அந்தச்செழிப்பான பூமியின் முக்கியசெல்வமாயிருந்தன. தலைவிரிகோலமாய் நிறகும் குட்டிப்பேய்கள் போன்ற பாட்டைக்கள்ளிகள் நிறைந்த இச்சுமசான மத்தியில் பெரிய பெரியஜடாமுனிகள் ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டுநின்றாற்போல, வளப்பம் என்ற பெயருமில்லாதுவரண்டு உபயோகமற்ற குட்டிச்செடிகள்நிறைந்து, கொள்ளிக்கட்டை நிறமாகவும்செத்து வெளுத்தபிணத்தின் நிறமாகவும்இருந்த ஐந்தாறு குன்றுகள் ஒன்றுக்கருகில் ஒன்றாய்நின்றன. அவைகள் எல்லாவற்றிற்கும் மத்தியில் நின்றது தோணிமலை. அதுவஞ்சகர்களுடைய நெஞ்சம்போல அளவிறந்த குகைகள் நிரம்பிய குன்று. அவற்றுள் ஒரு பெரிய குகை பேயாண்டித்தேவருடைய இரவு மாளிகை. அது அவன் தொழில்போல இருண்டிருந்தது. அதன் வாசலைச்சுற்றிகஞ்சாச்செடிகள் போடப்பட்டிருந்ததால் தூரத் துட்டார்வைக்கு து. புலப்படுவது வருத்தம். அதில் கற்கள் வைத்து அடுப்புகள் கட்டப்பட்டிருந்ததுமன்றி மனித நீளத்துக்குச் சரியாக அனேக படுக்கைகள் வெட்டப்பட்டிருந்தன. அதில் ஒரு மூலையில் பிள்ளையார் விக்கிரஹமும் மற்றொரு மூலையில் வெட்டரிவாளும் கையுமாய் ஒரு கருப்பணசாமி விக்கிரஹமும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மத்தியில் ஒரு பொந்தில்குடங்குடமாய் கள் வைக்கப்பட்டிருந்தது. பேயாண்டித்தேவன் வரும்போது சந்திரன் உதயமாகிற சமயம். அவனும் அவன் தோழர்களும் வரும்போது சங்கிலிக்கருப்பன் உருவதுபோல் வளைதடிகளைச்சப்தம்செய்து நரிகளை ஓநாய்களை வெருட்டிக்கொண்டு பாம்புகளைத் தடியால் எடுத்துஅலட்சியமாய் வீசியெறிந்துகொண்டுவந்தார்கள். அவர்கள் குகையில் வந்தவுடன் சுவரில் குழிவெட்டி எண்ணெய் வார்த்திருந்த தீபத்தை ஏற்றி தாங்களடித்துவந்த கொள்ளையை கணபதிக்கும் கருப்பனுக்கும் குடம் கொளுத்தி நைவேத்தியம் செய்துவிட்டுப் பிறகு கள்ளெடுத்துக் குடித்துவிட்டுப் பாடஆரம்பித்தார்கள்:—

எதுகுலகாம்போதிராகம்—ஏகதாளம்.

பேயாண்டித்தேவன்.—வீரன் இருளன் காட்டேரி
வெறியன் நொண்டி சாமுண்டி
தொந்திக்கணபதி பெத்தண்ணன்
தொட்டியச்சின்னான் பாவாடை
நம்மதெய்வ நாமிருக்க
ஊரிருக்க மாடிருக்க
உண்ணச்சம்பாச் சோறிருக்க
(எல்லாரும்) இல்லா லேலேலேலோ தன்னானே
கையில் கன்னக் கோலிருக்க
காத்தராயன் துணையிருக்க
குடிக்கக்குடம் கள்ளிருக்க, குடிக்கக் குடம் கள்ளிருக்க
(எல்லாரும் தோள்கொட்டி) நமக்குமுண்டோ குறை நமக்குமுண்டோ குறை.
இரவுதான் நமக்குப் பகல்
நச்சத்திரம் நம்ம தீவட்டி
பேய்பிசாசும் வாயைமூடும்
பேயாண்டித்தேவன் பேர்சொன்னாலே
(மீசையைமுறுக்கிக்கொண்டு எல்லாரும்) இல்லாலே லேலேலேலோ தன்னானே,
பெண்டுவிட்டுப் பிள்ளைவிட்டு
நாடுவிட்டுப் பாடுபட்டு
வாய்க்கால்வெட்டி வரப்புவெட்டி
பலபேராச் சேர்த்த சொத்து
(எல்லாரும்) நமக்காகத்தான் நமக்காகத்தான்
பெண்பிள்ளைக்குத் தாலிப்பிச்சை
நாம் கொடுத்தால் தானேயுண்டு
இந்தப் பூமிக்கு நாமே ராசா
கன்னக்கோலே நம்ம செங்கோல்
(எல்லாரும்) நமக்குமுண்டோநிகர் நமக்குமுண்டோநிகர்.



இப்படி இவர்கள் பாடி 'நமக்குமுண்டோ நிகர்' என்று தோள்தட்டி ஆர்ப்பரிக்கும்போது திடீரென்று பிசாசுகள் வந்தாப்போல் ஹோ என்று ஓரே மொத்தமாய்க் கத்திக்கொண்டு நூறுபேர் துப்பாக்கியும் கையுமாய் ஆகாயத்திலிருந்து குதித்தாற்போலக் குதித்தார்கள். அவர்களைக் கண்டவுடன் பேயாண்டித் தேவன் கூடநடுங்கிப்போய்விட்டான். வந்தவர்கள் ஒரு ஆளுக்கு மூன்று நாலுபேராய் குடிமயக்கத்திலிருந்த பேயாண்டித் தேவனுடையதோழர்களைக் கட்டி விலங்கிட்டுவிட்டார்கள். பேயாண்டித்தேவனுக்குமட்டும் கள்ளின் வெறியிருந்ததேயொழிய மயக்கமுண்டாகவில்லை. மந்தமாய்ப் பிரகாசித்த நிலவில் ஏறிட்டுப் பார்த்தான். முத்துஸ்வாமி அய்யருடைய உருவம் தெரிந்தது. உடனே அவன் அவரிடம் வந்து 'ஐயரவாளா வாருங்கோ அப்படியா சர்க்கார்மனுஷனாப் போயிட்டாற்போ லிருக்கிறதே' என்று சொல்லி அவர் மார்புமீது ஒரு குத்துவைக்க அவர் பாவம் சுருண்டு கீழே விழுந்துவிட்டார். உடனே பேயாண்டித்தேவன் வைத்தியநாதய்யர் குடுமியை ஒரு கையால் பிடித்துக்கொண்டு இன்னும் பத்துப்பேருடைய தலைமயிரை மற்றொருகையில் சேர்த்துப் பிடித்துக்கொண்டு தேங்காய்களை முட்டுக்கு விடுவதுபோல ஒன்றோடொன்றை முட்டுக்கு விடவே வைத்தியநாதய்யர் குடுமி அவன் கையோடு வந்து விட்டது. மற்றப் பத்துப்பேருக்குப் பலமான காயம். அதற்குள் ஐம்பது அறுபது பேராக அவன் மேல் ஹோ என்று கதறிக்கொண்டு பாய்ந்துவிழ அவனும் இருப்புலக்கைகள் போன்ற தன் கைகளை நாலாபக்கமும் வீசி ஹோ ஹோ என்று கர்ச்சனை செய்துகொண்டு சிலரை முகங்களை யுடைத்தும் சிலரைப்பற்களைத்தட்டியும் சிலரை மண்டைகளை நெறித்தும் தன்னாலானமட்டும் நெடுநேரம் கோரயுத்தம் செய்தான். ஆயினும் அவன் நூறுபேருக்கு ஒருவன் ஆனதால்என்னசெய்தும் கடைசியாய் அவர்கள் அவனைக்கட்டிப்பிடித்துக் கைகால்களில் பலமான இரும்பு விலங்குகளை மாட்டிப் பூட்டிவிட்டார்கள். உடனே அவன் 'என்கையிலும் விலங்கா' என்று ஆக்ரோஷத்துடன் பற்களை நறநறவென்று கடித்துக் கண்களில் தீப்பொறி பறக்கக் கைகளைப் பலமாகத் திருகினான். திருகவே இரும்பு விலங்குகள் சில்லுச் சில்லாய் தெரித்து, போன இடம் தெரியாமல் போய்விட்டன. உடனே அவன் கைகளை வீசிக்கொண்டு தோள்களைத் தட்டி அட்டகாசம் செய்துகொண்டு 'வாருங்கடா பயல்களா பத்து இருபதுபேராக வாருங்கடா ஒரு கைபார்ப்போம்' என்று ஆர்ப்பரித்தான். அந்தப் போலீஸ்காரர்களுக்கு பத்து இருபதுபேராக அவனிடத்துப் போகப் பைத்தியமா? வேட்டைநாய்கள் புலிமேல் பாய்வதுபோல் மறுபடியும் எல்லாரும் ஓரே மொத்தமாய் அவன்மேல் பாய, அவன் 'போங்கடா வெறும் முண்டைகளா, இத்தனைபேராகச் சேர்ந்து ஒருத்தனைப்பிடிக்க வந்து விட்டீர்களே, வெட்கம்கெட்ட முண்டைகளா,இப்பொழுது என்ன செய்யவேணுமடா, முண்டைகளா?' என, அவர்கள் 'கச்சேரிக்குவா' என்றார்கள். அவன் 'எனக்குக் காலில் விலங்கு போட்டிருக்கிறது. என்றால் நடக்க முடியாது;வேண்டுமானால் என்னைத்தூக்கிக்கொண்டு போங்கடா பயல்களா' என்று கீழே உட்கார்ந்துகொண்டுவிட்டான். முப்பது நாற்பது பேராகச்சேர்ந்து அவனைத் தூக்கிப் பார்த்தார்கள். முடியவில்லை. பிறகு ஐம்பது அறுபது பேர் சேர்ந்து சிரமப்பட்டு அவனைத்தூக்க, அவன் 'என்னடா பயல்களா நான் என்ன செத்தபிணமா படுத்தபடி தூக்குகிறீர்களே' என்று தனைனைத் தூக்கினவர்களைக் கண்களிலும் தலைகளிலும் அடித்து வெருட்டினான். பிறகு வைத்தியநாதய்யர் தாங்கள் கொண்டுவந்திருந்த வண்டிகளில் ஒன்றை சக்கரத்தைக் கழற்றி வரச்சொல்லி அதற்குள் பேயாண்டித்தேவனை எழுந்தருளச்செய்து அதைச் சுமக்கும்படி சுற்றியிருந்தவர்களுக்குக்கட்டளையிட்டார். பேயாண்டித்தேவனும் இவர்கள் சர்க்காரையும் பார்ப்போம் என்று அந்த வண்டிக்கூட்டில் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்து கொண்டு வெற்றிலை பாக்கை வாயில்போட்டுத் தின்றுகொண்டும், உருவின கத்தியும் கையுமாய் வந்த போலீஸ் வீரர்மேல் வழிதெடுத் துப்பிக்கொண்டும்,தாளம் போட்டுப் பாடிக்கொண்டும் 'தூக்குங்களடா பயல்களா, தூக்குங்கள்' என்று சொல்லிக்கொண்டும் பல்லக்கு சவாரி செய்து கொண்டு போனான்.

(இன்னும் வரும்)

பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர், பி. ஏ.



## ஒரு தாதா செய்த தீர்மானம்,

### அல்லது

## தங்கம்மாள் தலைவிதி.

### III.

காவேரியாற்றின் கிளைநதியாகிய வெட்டாற்றங்கரையின் ஓரத்தில் புத்தூர் என்கிற ஓர் கிராமம். இது புஞ்சை பெருத்தபூமி. நவதானியமும் விளையும். தென்னை, மா, புளி, பிலா முதலிய பலவிருட்சங்கள் நிறைந்த சோலைகளுக்கு மத்தியிலிருந்தது. கொடிய வேட்டைக்காரர்களும், துஷ்டப்பிள்ளைகளும் இல்லாமையினால், பட்சிகள் பயமின்றி மரங்களில் வசித்துக்கொண்டிருந்தன. எப்பொழுதும் பட்சிகளினுடைய சப்தகோஷங்களினால், தோப்புகள் நிறைந்திருக்கும். அத்தோப்பின் மத்தியில் ஓர் பெரிய தடாகம். சில சமயங்களில், பச்சைக்கிளிகளும், குயி

ல்களும் வெகு தூரத்தில் அக்கரையில் கூவும்பொழுது, பிரதி தொனியினால் இக்கரையில் சமீபத்தில் கேட்கும். தடாகத்தைச் சுற்றிலும் நந்தவனங்கள். மல்லிகை, நந்தியாவட்டை, கஸ்தூரி அரளி,ரோஜா, தும்பை, முதலிய பூச்செடிகளும்,செம்பரத்தை,பாரிஜாதை, சம்பகை, விருட்சி, பாதிரி முதலிய புஷ்ப மரங்களும்,நாலு பக்கத்திலும் நெருங்கியிருக்கக்காணலாம். 'நாங்கள் பிறந்து, மலர்ந்து யாருக்கு உபயோகம். எங்களழகைக்கண்டு, மகிழ்ந்து, எடுத்து எங்களை சுவாமியினுடைய திருவடியில் சேர்ப்பாரில்லையே, முடியிலே சூட்டுவாரும் இல்லையே,' என்று நைந்து வாடிய முகத்துடனே சில புஷ்பங்கள் காணப்பட்டன. இன்னும் சில புஷ்பங்கள் 'இவ்வளவு நாழிகை எங்களை யாராகிலும் மணம் புரிவார்களென்று காத்திருந்தோம், எங்கள் மெல்லிய சரீரம் இனிமேல் இந்த வருத்தத்தைத் தாங்கமாட்டாது. நாங்கள் கீழேவிழுந்து பிராணனை விடவேண்டியது தான்' என்று மொழிந்து கொண்டு விழுவதுபோல கீழே சரிந்தன, 'இதோ என்னழகைப்பாருங்கள், இதோ என்னழகைப்பாருங்கள்' என்றழைப்பதுபோல, மரங்கள் புஷ்பபாரம் தாங்கமாட்டாமல்,தலைவளைந்து ஆடிக்கொண்டிருந்தன. கல்யாண காலங்களில், சிறிய பெண்கள் குதித்துப்பாடும்பொழுது, பூக்களினாலும், ஆபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்ட கூந்தல்களை உடைய தலைகளை ஏககாலத்தில் ஒரே புரமாய் சாய்த்து நிமிர்ப்பதுபோல,இளந்தென்றல் வீசும்பொழுது, வரிசையாய் வைக்கப்பட்ட பூக்கள் நிறைந்த செடிகள் ஓர் புரமாய் தலைசாய்ந்து நிமிர்ந்தன.

இந்த நந்தவனத்தில் ஒருநாள்காலமே, சுமார்பத்து வயதுள்ள ஒரு சிறியபெண்ணும், அவளுடைய மூத்த சகோதரன்போல் காணப்பட்ட ஒரு பையனும் நின்றார்கள். பையனுக்குப் பதின்மூன்றுவயதிருக்கலாம். இவர்களுடைய அழகையும், சாந்தமான முகவடிவையும் பார்க்குங்கால், ரிஷி ஆசிரமங்களில் வளர்ந்து வரும் ராஜகுமாரன், இராஜகுமாரத்திபோலத்தோன்றிற்று.

பித்தளையினால் செய்யப்பட்ட பொன்போல் பிரகாசிக்கும் ஓர் குடலையை அந்தப்பெண் தன் கையில் தாங்கி நின்றாள். அந்தப்பையன் ஓர் தூரட்டைத்தோளில் மாட்டிக்கொண்டு முன்னே போனான். அச்சிறுவர்கள் சுவாமி பூஜைக்காக பூக்கொய்ய செடிகளின் ஊடே தலையிட்டு நின்றபொழுது, 'ஓ பைங்கிளியே, ஓ குயில்களே பாருங்கள், புஷ்பங்களின் முகமலர்ச்சி கண்ணுக்கு அதிக இனியதோ, கபடமற்று வளர்ந்து விளையாடிக்கொண்டு வரும் எங்களுடைய முகமலர்ச்சி அதிகஇனிமையுடையதோ,ஒற்றுப்பாருங்கள்'என்று கேட்பவர்போலக் காணப்பட்டார்கள். மல்லிகையும், முல்லையும் 'நாங்கள் தான் சிவபூஜைக்கு அருகர்கள்;பரமேசுவரனுடையசரீரம்போல நாங்கள் வெண்மையாயிருக்கிறோம். எங்களைக்கொய்யுங்கள்'என்று கூவின, 'வெள்ளைக்கும் சிவப்புக்குந்தான் ராசி. வெண்மையின் அழகை சிவப்புத்தான் எடுத்துக்காட்டும். நாங்கள் தான் சிவபூஜைக்குத்தக்கவர்கள் எங்களைக்கொய்து கொண்டுபோங்கள்'என்று செம்பரத்தையும், அரளியும் கூவின. 'யாசகர்கள் பெரியமாளிகை வீடுகளைப்பார்த்துக்கொண்டு படிஏறி சிரமப்பட்டு கொஞ்சம் திரவியம் பெறுகிறாப்போல, நீ ஏன் எங்களைப்பாராமல் ஆகாசம் பார்த்துக்கொண்டு பெரிய மரங்களை நாடிப்போகிறாய்? சிறிய குடிசைகளிலும் சுவாமிக்குத்திருப்தியான குணங்களையும், தர்மங்களையும காணலாம். போகாதே. நில்லு. குனிந்துபார்.' என்று தடுப்பதுபோல, தும்பைச்செடிகள் காலைப்பற்றி இழுத்தன, 'அம்மா, அவன் தான் புருஷன்,மேலேபார்த்துக்கொண்டேபோகிறான். அவன் கண்ணைக் கவருதற்கு எனக்கு அழகுமில்லை, வாசமுமில்லை. அழகில்லாத ஸ்திரீகளை கடினமனதையுடைய புருஷர்கள், என்ன குணம், குலமிருந்தாலும் லட்சியம் செய்யமாட்டார்கள். நீ அப்படியல்ல. நீ ஓர் பெண். எப்பொழுதும் பூமியைப்பார்த்து மெல்ல நடப்பவள். ஏழைக்கெல்லாம் இரங்குகிறவள். புருஷன் எவ்வளவு குரூபியாயிருந்தாலும், பதிவிரதா தருமத்தையே பாராட்டி அவரிடத்தில் பக்திசெய்கின்றவள். நான் புஷ்பிக்காவிட்டாலும், நானும் ஓர் சுவாமி பூஜைக்கு ஏற்றவள். என் தளங்களைக் கொய்து கொண்டுபோ. ஏதோ வெறுமிலை யென்று தள்ளிப் போடாதே' என்று சொல்லி, அந்தப்பெண்ணை துவசிச்செடி வழிமறித்தது. இச்சிறுவர்கள், அருகில் வந்தவுடனே வண்ணாத்திப்பூச்சிகள், பஞ்சவர்ணப் பாவாடை போன்ற இறக்கையை விரித்து செடியை விட்டு செடியில்தாவி, இளம் வெயிலில் பரக்கும்அழகையும், செடிகளினின்றும், புஷ்பங்களின்றும், பனித்துளிகள் வெயிலில் ஜ்வலித்து, முத்துப்போல் சொரிகிற அழகையும் பார்த்து மெச்சிவிளையாடிக் கொண்டிருந்துவிட்டார்கள். "சின்னண்ணா, இதோ எனக்கொரு பழம் அகப்பட்டது. சிவப்பாய் இருக்கிறது. இனிப்பா யிருக்கும்போல்இருக்கிறது' என்று பெண்சொல்ல, பாதிரிமரத்திலேறியிருந்த அந்தப் பையன் "எனக்குக்காட்டு, உனக்கு அது எங்கேஅகப்பட்டது நான் பார்க்கிறேன்" என்றான்.

"கிளி பரந்து போகும்பொழுது கீழேபோட்டது. உனக்குக்காட்டினால்நீ பிடுங்கிக்கொண்டு விடுவாய்."

"நான் பிடுங்கிக்கொள்ளவில்லை. நீ கீழே இருந்தே கையில் வைத்துக்கொண்டு காட்டு."

"இதோ பார்த்தாயா!"

"அது கோவைப்பழம் : கிளிகள் சாப்பிடும். நாம் சாப்பிடக்கூடாது. தூர எறிந்து விடு"என,



விசனத்துடன் எறிந்து விட்டு, அண்ணனைப்பார்த்து, "அண்ணா, எனக்கு இந்தப்பெரிய ரோஜாப் பூவைப் பரித்துக்கொடு" என்றாள்.

"அது அழகாயும், பெரிதாயுமிருக்கு. அப்பாவுக்கு பூஜைக்குக்கொடுத்தால் சந்தோஷப்படுவார். பூஜையான பிறகு நீ எடுத்துக்கொள்ளலாம்."

இப்படி இவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், ஓர் குரல் கேட்டது.

'அடி தங்கம் அடே ராஜா!'.—"எப்போபோனபிள்ளைகள் இன்னம் வீட்டுக்கு வரக்காணோமே. இலையில் சோறுபோட்டு நாலுநாழிகை ஆய்விட்டது, பூனை தின்று விட்டுப்போய்விடுமே,தயிரும் இத்து ஓடிப்போகிறதே. குளத்திலே கிணற்றிலே விழுந்துவிட்டதோ. இல்லாவிட்டால், அகப்பட்ட பத்திரத்தைப் பறித்துக்கொண்டு நேரேவராமல் எங்கேயாகிலும் விளையாடிக்கொண்டு நிற்கிறதுகளோ." "அடிதங்கம், அடே ராஜா!"

"அண்ணா பாட்டி கூப்பிடுகிறாள்: நாழிகை ஆய்விட்டது, வீட்டுக்குப்போவோம் இறங்கி வா." என்று தங்கம் கூப்பிட,

"பாட்டி, என்! இந்த ஒரு புஷ்பத்தை மாத்திரம் பறித்துக்கொண்டு, இதோ வந்து விட்டேன்" என்றான் ராஜா.

இதற்குள், தங்கம்மாள் பாட்டியினிடத்தில் ஓடிப் போய் அவள்காலைக்கட்டிக்கொண்டாள். "கண்ணே, இவ்வளவுநாழிகை ஏது செய்து கொண்டிருந்தாய். இராத்திரிகூட நன்றாய் சாப்பிடாமல் தூங்கிப்போய் விட்டாயே! வயிறு பசிக்கவில்லையா? என் முத்தே இளம்வெயிலில் எத்தனை நாழிகை நிற்கிறது. தலையைச் சுற்றுமே, ராஜா எங்கே?"

"அதோ பாதிரி மரத்தின் மேலே இருக்கிறான். நான் செடிநிழலில் இருந்தேன்: எனக்கு வெயிலே தெரியவில்லை."

"ஏண்டா அவ்வளவு உயர ஏறினாய். அப்படியாவது ஏறி உன்னை ஆர் பூப்பறிக்கச்சொன்னார். சறுக்கி விழுந்து காலை ஒடித்துக்கொண்டால் என்ன பண்ணுகிறது. பூப்பறித்தது போதும். மெள்ள சாவதானமாய் கீழே இறங்கி வா. சூரியன் நடுத்தாழ்வாரத்துக்கு வந்துவிட்டது. * பழையது சாப்பிடவா" என்று அந்தப்பெரியம்மை சொன்னாள்.

அந்த அம்மாள் பேர் மங்களம். ஒற்றைநாடிசரீரம். பாலிய முதலில் குடும்பத்தில் பாடுபட்டு வேலையில் நன்றாய்ப்பயின்றவள். ஸ்திரீகளுக்குரிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்கிற நான்கு குணங்களும் நிறைந்தவள். அவள் கணவர் பெயர் அபிராமய்யன். அவரும் நல்ல சீலர். வந்தவர்களுக்கெல்லாம்அன்னம் போட்டு, சனிக்கிழமைதோறும் சமாராதனை செய்து வந்தார். இந்த அம்மை அவரிருந்த காலத்தில் "குலமகட்கழகுதன் கொழுநனைப்பேணுதல்" என்றபடி அவரிடத்தில் பயபக்தி, விசுவாசத்துடனே, அவர் மனம் கோணாமல் நடந்து வந்தாள். அவருடைய பந்துக்களை தன்னுடைய உறவினர்போல எண்ணி உபசரிப்பாள். எவ்வளவு பேர் வந்தாலும் இராத்திரி என்றும் பகல் என்றும், குளிரென்றும், மழை என்றும் பாராமல், அறுசுவை உண்டிகளுடன் வந்த விருந்தினர்களை ஆதரிப்பாள். உதாரத்துவத்தில்புருஷனுக்கு மேல்பட்டவள். இப்படி புருஷனும் மனைவியும் ஒரு தன்மையாய் உலகத்தில் அமைவது அபூர்வம். பிராமணர்கள் வந்தால், நம்மைத்தேடி இந்த மூலையில் இருக்கிற ஊருக்கு வருவது மிகவும் கஷ்டம், இவ்வளவு தூரம் வந்தது நம்முடைய ஜென்மாந்தர பூஜாபலந்தானென்று அவர்களுக்கு சொர்ண புஷ்ப உபசாரங்களுடனே திருப்தி செய்து அனுப்புவது வழக்கம். யதி பிட்சை இல்லாநாள் விசேஷமாய் இருக்கமாட்டாது. அந்த ஊர் ஏகாந்தமாய் மனுஷிய சந்தடியில்லாமையினால் தோப்பும் தடாகமும், பரிசுத்தமாயிருந்தது. யதிகளினுடைய,பூஜை,ஜபம்,தியானங்களுக்கு யோக்கியமான ஸ்தலம். யாராகிலும் வந்து கொண்டே இருப்பார்கள்.

அபிராமய்யன் இறக்கும்பொழுது, தன் ஒரேகுமாரனாகிய சுப்பய்யனைக் கூப்பிட்டு "பையா, எனக்கு நிர்யாண காலங்கிட்டிவிட்டது. இதோ குடும்பபாரத்தை எல்லாம் ஒப்புக்கொள். எதுபோனாலும் தர்மத்தைமாத்திரம் கைவிடாதே. எல்லாதர்மத்திலும்அன்னதானம் விசேஷம். பசித்து வந்தவர்களை பட்டினியாய் அனுப்பாதே" என்று உபதேசித்து தேகவியோகமடைந்தார். சுப்பய்யரும் அபரச்சடங்குகளைத் தாராளமாய் நடத்தி,கோதானம்,பூதானம்,முதலிய பதினாறு தானங்களையும் குறைவரச் செய்தார். சுப்பய்யருக்கு மூன்று குழந்தைகள். முதல் இரண்டும் ஆண்பிள்ளைகள். கடைசியில் பிறந்தது பெண். இந்தப்பெண்ணை அறையிலே விட்டுவிட்டு தாய்இறந்து விட்டாள். அவளுக்கும், புத்திரக்கிரியை கிடைத்தபடியினாலே, தானதர்மங்களில் குறைவில்லாமல் சடங்குகளை நடத்தினார். மங்களத்தம்மாள் பேத்தியை எடுத்து செல்வமாய் தாயைவிட பதின்மடங்கு பிரியமாய் வளர்த்துவந்தாள். 'குலத்தின் திறமையை குலமகள் காட்டும்' என்கிற பழமொழிப்படி, தங்கம்மாள் எட்டுவயதிலேயே, பொறுமையும், சாந்தமும் அபிமானமும், பூரணமாய்க்கொண்டிருந்தாள். ஒரு நாள் பாட்டியார் பேத்திக்கு தலைவாரி முடித்துக் கொண்டிருக்கையில்,"பாட்டி, நங்கம்மா எங்கே? அவளைப்பார்த்ததில்லையே, எங்கே போயிருக்கிறாள்?" என்று தங்கம்மாள் கேட்டாள். பாட்டியாருக்கு

*'பழையமுது' என்பது வழக்கத்தில் 'பழையது' என்று மருவிற்று.

உடனே துக்கம் பெருகி கண்ணீர்ததும்பி, அழுகை கூட வந்து விட்டது பேத்தி திரும்பிப்பார்த்து,

“பாட்டி! ஏன் அழுகிறாய்?” என்று கேட்டாள். “ஒன்றுமில்லை வயிற்றைக்கொஞ்சம் வலித்தது. அதினாலழுகிறேன்.”

தங்கம்மாள்.—“மருந்துசாப்பிடு. நான் போய் அலமாரியிலிருந்து மருந்து கொண்டு வரட்டுமோ!” என்று எழ எத்தனித்தாள்.

பாட்டியார்.—“சற்று போதுக்கெல்லாம் நின்று போய்விடும். இப்போ மருந்துவேண்டாம். நீ தலையை அசக்காதே. வகுடு கோணிப்போய் விடும்” என்றாள்.

தங்கம்மாள்.—“எங்கள் அம்மா எந்த ஊருக்குப்போயிருக்கிறாள்,எப்போ வருவள், அதைச்சொல்லு. எனக்கு அவளைப்பார்க்க ஆசையாயிருக்கிறது.”

பாட்டி.—“உங்கம்மாவா, பேர்சொல்லாத ஊருக்குப் போயிருக்கிறாள். நாளைக்கு வந்துவிடுவள். இருக்கட்டும்: நலங்குப்பாட்டு நேற்றைக்குச் சொல்லிக்கொடுத்தேனே தெரியுமோ. கற்கண்டு கொடுத்தேனே எங்கே வைத்தாய்?” என்று இவ்விதமாக தங்கம்மாளினுடைய கவலையை மாற்றி விட்டாள்.

தங்கம்மாள் மிகவும் புத்திசாலி. ஒருதரம் ஓர் காரியம் சொன்னால் கூர்மையாய் பிடித்துக்கொள்வாள். தமையனிடத்தில் கொஞ்சம் எழுத்துக்கூட்டி படிக்கக் கற்றுக்கொண்டுவிட்டாள். கலியாண காலங்களுக்கு வேண்டியசோபனம், நலங்குப்பாட்டு, இராமாயண ஓடம் முதலியபாட்டுகளை பாட்டியாருக்குத் தெரிந்தமட்டும் தானும் தெரிந்துக்கொண்டாள். சூது, கபடு, பொய் இவை தெரியாது. பாட்டியாரை விட்டுப் பிரிகிறதே இல்லை. பாட்டியார் குடமெடுத்துக்கொண்டு தண்ணீர்கொண்டு வரப்போனால் தானும் கூடப்போய் சிறிய சொம்பில் தண்ணீர் கொண்டு வருவாள். “என் தாயே, நீ சும்மா வா,” என்றால், “நான்மாத்திரம் பெண்பிறப்பு அன்றோ: நான் ஏன் உன்னைப்போல வேலைசெய்யக் கூடாது?” என்பாள்.

பாட்டியாருக்குத் தள்ளாமைக் காலமென்று அறிந்து அவள் வேண்டாம் வேண்டாமென்றாலும், தான் சுற்றுக்காரியங்களை சில்லரையாகச்செய்து வருவாள். பூஜைக்குப்பாத்திரம் தேய்க்கிறதும், பெருக்கி இலை போகிறதும், வாயிலில் கோலம்போடுகிறதும், சாப்பிடும்பொழுது பாட்டியார் தனிமையாயிருக்கிறாளென்று கூட இருந்து பேசிக்கொண்டிருப்பதும், நெய், கரிமுதலிய பரிமாறுவதுமான சிற்றுதவிகள் செய்து எல்லாருக்கும் பிரியமாய்நடந்து காலங்கழித்துக்கொண்டுவந்தாள். அந்தப்பாட்டியார்,தன் புருஷனையும் நாட்டுப்பெண்ணையும் இழந்த துக்கத்தையும், தனது தள்ளாமையினுடைய வருத்தத்தையும், அழகிலும், குணத்திலும் நாளுக்குநாள் விருத்தியடைந்துகொண்டு வருகிற இந்தப்பெண் முகத்தைப்பார்த்து, மனம்பூரித்து அடியோடே மறந்து விட்டாள். “என்னருமைத்தங்கத் துக்கு,நல்ல அகம்படையானுக்கிடைக்கவேணுமே. எங்கே பிறந்திருக்கிறானோ. சுவாமிதான் கிருபைகூரவேணும்” என்று மனதிற்குள்ளே அடிக்கடி சிந்தனை செய்து கொண்டிருப்பாள்.

சுப்பய்யர் பிதிர்வாக்கியத்தை மறவாமல், தர்மங்களை நடத்திவந்தார். வைதீகர்களும், தங்களுடைய லாபத்தையே நாடி, சுப்பய்யருடைய கஷ்டத்தை யோஜியாமல், எப்பொழுதும் போலவே வந்து கொண்டிருந்தார்கள். அதினால் கடன் அதிகமாகி, நிலத்தை எல்லாம் சுவாமிபோகத்துக்கு அடைத்து விட்டார். சாப்பாட்டுக்கு வேண்டிய நெல்லு மாத்திரம் வந்துகொண்டிருந்தது. மேன்செலவுக்கு நிரம்ப கஷ்டப்பட்டார். ஆகிலும் இதை தன் தாயாகிய மங்களத்தம்மாவுக்குச் சொல்லவில்லை. “தெரிந்தால்அந்த அம்மை வருத்தப்படுவாள். ‘தர்மம் தலைகாக்கும்’” என்று சுவாமியை நம்பி, வீட்டுக்கு சாமான் தட்டாமல், சேகரித்துப்போட்டு வந்தார். ஆயினும் இவர் சிரமதிசை அடைந்து விட்டாரென்று பந்துக்களுக்கெல்லாம் தெரிந்துவிட்டது. அவர்களுக்குள் கொஞ்சப்பணக்காரர்கள் தாங்கள் வருவதையே நிறுத்தி விட்டார்கள். ஏழையாய் இருப்பவர்களும், கொடுப்பது குறைந்து போனதினாலே எப்போவாகிலும் வந்து எட்டிப்பார்ப்பார்கள். ஒருநாள் சுப்பய்யர் தனிமையாய் போஜனமானவுடன் ஊஞ்சலில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார். அப்போ பாட்டியார்,

“சாமி, வெறுமனேயிருக்கையே மூத்தவன் வெங்கிட்டுவுக்கு பதினெட்டு வயதாச்சு. தடிபோல பிரமசாரியாய் நிற்கிறான். இனிமேல் கலியாணத்தை நிறுத்தப்போகாது. சீக்கிரத்தில் செய்து போடவேணும். தங்கத்துக்கும் 10 - வயதாய்விட்டது. அவளுக்கும், அழகாய், பணக்காரனாய் ஓர் பிள்ளையைப்பார்க்கவேணும். நீ ஏதாகிலும் பார்த்தையோ” என்று கேட்டாள்.

சுப்பய்யர்.—இரண்டுவருஷமாய் யோஜனை செய்து கொண்டுதான் இருக்கிறேன். நானாகப்போய் கேட்கிறதாயிருந்தல் அவமானமாயிருக்கிறது. ஒருவரும் வந்து கேட்கக்காணோம்.

மங்களம்.—சின்னப்பா இராமசுவாமி பிள்ளைக்கு தங்கத்தைக்கொடுத்தா லென்ன. பிள்ளைக்கு பதினாலுவயது. கண்ணுக்கும் நன்றாயிருக்கிறான். மாயூரத்தில் 5-வது ‘கிளாஸில்’ படிக்கிறானே.



சுப்பய்யர்.—அந்தப்பையனைத் தான் மனதில் வைத்துக்கொண்டு இது வரையில் சும்மா இருந்துவிட்டேன். போனதடவை மாயூரத்துக்குப்போனபோது கேட்டேன். இராமசுவாமி ஆகாசம் பார்க்கிறான். ரூபாய் ஆயிரம் வேணுமாம்.

மங்களம்.—நம்மாத்தில் சாப்பிட்டு வளர்ந்தவனுக்கு இவ்வளவு வைபவம் வந்துவிட்டதா. இதுவும் காலந்தான், போனால் போகிறது. ஏதாகிலும் கொஞ்சம் நூறு இருநூறு தள்ளிக்கொண்டுபார்க்கிறது தானே.

சுப்பய்யர்.—அதற்கெல்லாம் மசியவில்லை. ஆயிரத்துக்கு ஒரு தம்படி குறைகிறதில்லையாம். பெரிய விடங்களிலிருந்தெல்லாம் பெண் தருகிறேனென்று போட்டிமேல் போட்டியாய் வந்து கேட்கிறார்களாம். என்னை லட்சியம் பண்ணிக்கூட பேசவில்லை,நிமிர்ந்துபதில்சொல்லவில்லை.

மங்களம்.—நம்மாத்தில் சோற்றுத்தண்ணிக்கு நாக்கு சொட்டவிட்டுக்கொண்டிருந்தவனுக்கு இவ்வளவு வாழ்வா!

சுப்பய்யர்.—வக்கீல் பண்ணி பணம் நிரம்ப சம்பாதித்து விட்டான். வண்டி என்ன, மாடென்ன, குதிரை என்ன,வீட்டில் எப்பொழுதும் ஜேஜே என்று கட்சிக்காரர்கள் மயமாயிருக்கிறது.

மங்களம்.—பணமிருந்தால் பழகின மனுஷியாளைக் கூட மறந்து போகவேணுமோ. உங்கப்பா இருந்தபொழுது ஆத்தில் நாலு ஜோடி வண்டிமாடிருந்தது. தாசில்தார், கலெக்டரெல்லாம் நம் மாத்துக்கு வராமல் போகமாட்டார்கள். இவன் வாழ்வு என்ன உச்சிதம்.

சுப்பய்யர்.—அதைச்சொல்லி இப்போ என்ன பிரயோஜனம். காசகையிலிருந்தால் இந்த அற்பனைப்போய் கேட்கவும், அவன் உதாசினமாய் பதில் சொல்லவும் நேரிடுமோ. அப்போ இவனே தானாகக்காலில் வந்து விழுவான்.

மங்களம்.—போனால் போகிறான் போ. எப்படிவாழ்ந்தவர்களெல்லாம் எங்கேயோ போய் விட்டார்கள். இவன் வாழ்வு என்னசாசுவதம். நம்மாத்துப் பெண்ணுக்கு ஓர் பிள்ளை அகப்படாமல் லோகம் அஸ்தமித்துப்போய்விட்டதா! வேறே எங்கேயாகிலும் நல்லகுலத்திலேசோற்றுத்துணிக்குத் தட்டில்லாத இடமாய்ப்பாரேன்.

சுப்பய்யர்.—எங்கேபோய் யாரைக்கேட்கிறது. கொஞ்சம் சோற்றுத் துணிக்கிருந்தால், பிள்ளைக்கு ஆயிரம் இரண்டாயிரம் கேட்கிறான். எல்லாரும் பணம் பணமென்று பணத்தின் பேரில் நிற்கிறார்கள்.

மங்களம்.—அதற்கென்ன செய்கிறது. ஒரு பங்கையாவது விற்று கன்னிகாதானத்தை செம்மையாய் செய்து போடவேணும். ரொம்பபலன் சொல்லி யிருக்கிறது.

சுப்பய்யர்.—யார் வாங்கக்காத்துக்கொண்டிருக்கிறார்கள். இருக்கிறதை விற்றுப்போட்டு நாம் சோற்றுக்கு என்ன பண்ணுகிறது. இப்போ எனக்குக்கஷ்டகாலம், சனியினுடைய கழிவு, எதைத்தொட்டாலும் கைகூடி வருகிறதில்லை.

மங்களம்.—காலம் எப்போதுந் தான் இருக்கு. நாளாய் விடும். ஓர் பிள்ளையை சீக்கிரத்தில் பார்.

இப்படி தாயும் பிள்ளையும் தங்கள்குடும்ப யோகக்ஷேமத்தைப்பற்றிப் பேசிக் கிலேசப்பட்டுக் கொண்டிருக்குங்காலத்தில் ஓர் விருந்தினர் வந்தார். கழுத்தில் ருத்ராக்ஷமும் தலையில் சகலாத்மடிசஞ்சியும்,ஒரு கையில் ஈரவேஷ்டியும் மற்றொரு கையில் பூஜைச் சொம்பும், பஞ்சபாத்திரமும், மாரில் வெளுத்த பூணூலும்,தோளில் யக்ஞோபவீதமாகத் தரித்த உத்ரீயமுமாய்,சிவஸஹஸ்ரநாமத்தைச் சொல்லிக்கொண்டு தலைவணங்காமல், இடுப்பை வளைத்து வாசற்படி தாண்டி உள்ளே வந்தார். சிவந்த ரக்தவரியோடிய கண்களும், புன்னகைச் சிரிப்புலாவிய முகவிலாசமுமுடையவராய் விளங்கிய அவர் வயது நாற்பது சொல்லலாம். உடம்பெலாம் பூசிய விபூதியினால், அவர் கருப்புநிறம் ஒருவாறு மறைந்திருந்தது. இவரைப் பார்த்தவுடன் சுப்பய்யருக்கு திடுக்கென்றது. ‘ஓ, ஓ, சாப்பிட்டுவிட்டோமே. இன்னும்சற்றுநேரம் காத்துக்கொண்டிருந்தோமா. பிசகிப்போய்விட்டேனே !’ என்று மனதுக்குள் வருத்தமுற்று, “சாஸ்திரிகளே வாருங்கள்.” என்றார்.

அதற்குள் ‘யாரோ ஓர்புருஷர் வந்திருக்கிறார். நாமேன் எதிரே நிற்கவேணும். என்ன வயதானாலும் ஸ்திரீ ஜன்மந்தானே’ என்று உமைமறைவில் அந்த உத்தமிதேவி நின்றாள்.

வெயில் அதிகம் உக்கிரமாயிருக்கிறது நிரம்ப சிரமமாயிருக்கும். “அடே ராஜா—”

தங்கம்மாள் : “அப்பா, ராஜாவை ஏன் கூப்பிடுகிறீர். பள்ளிக்கூடத்திலேயிருந்து வந்து குளத்தங்கரைக்கு மாத்தியானம் பண்ணப் போயிருக்கிறான். “குட்டி, நீ போய் காலலம்ப ஜலங் கொண்டுவா.” இதற்குள், விருந்தினரை உபசரிப்பதில் பிரியமுள்ள அந்த பெரிய அம்மை, தீர்த்தங்கொண்டுவந்து, ‘தங்கம் இதைக்கொண்டு கொடு’ என்றாள். தங்கம்மாள் வாங்கிவந்து சாஸ்திரியாரிடத்தில் கொடுத்து அவர் முகத்தைப்பார்த்தாள், சாஸ்திரியார், “அடா, குழந்தையை ஏன் சிரமப்படுத்தவேணும். நான்போய் வாங்கிக்கொள்ளமாட்டேனா. நம்முடைய குழந்தை நல்ல சமர்த்தள்; நல் லதிர்ஷ்டசாலி.”என்றார்.

"எல்லாம் உங்கள் ஆசீர்வாதம். குட்டி விசிறி ஒன்று கொண்டுவா. சற்று விசிறு." என்று சுப்பய்யர் சொல்லுமுன்னமே, எந்த சாமான் எங்கே எங்கே இருக்கு என்று பார்க்க நாலுபுறமும் கண்ணோட்டமாயிருந்த சாஸ்திரி 'குழந்தையை சிரமப்படுத்த வேண்டாம்; இதோ இருக்கு, எடுத்துக்கொள்ளுகிறேன்' என்று எழுந்து இரப்புவாரையிலுள்ள விசிறியை எடுத்துக்கொண்டு, 'இந்த வீட்டுக்கு வந்தால் விசிறியே வேண்டாம். தாங்கள் நிரமபசாது, குளிர்ந்த மனதுடையவாள். அம்மாளும் தங்களைவிடப் பத்துப்பங்கதிகம். வாசற்படி தாண்டினவுடனே என் தாபங்களெல்லாம் போய்விட்டது.' என்றார்.

"பூஜை ஆய்விட்டதா, பூஜைக்காக நைவேத்தியம் முதலியவைகள் கொண்டுவரச் சொல்லட்டுமா. தங்கம், பாட்டி என்னசெய்கிறாள் பார்."

தங்கம் உள்ளேபோய் பாட்டியை அப்பா கூப்பிடுகிறாரென்று கூப்பிட்டாள். அப்பளம் நெயில் பொரித்துவிட்டு, அடுப்பில் பரமான்னத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தாள். 'இதோ வந்துவிட்டேனென்றுசொல்லு' என்று சொல்லியனுப்பினாள்.

சாஸ்திரிகள்.—"பூஜையெல்லாம் புஷ்கரணிக்கரையில் முடித்துவிட்டேன். கிழவியை சிரமப்படுத்த வேண்டாம்" என்றார்.

சுப்பய்யர்.—'நான் சாப்பிட்டாய்விட்டது. வேறே சமையல் செய்யச்சொல்லுகிறேன். சற்றுநேரம் க்ஷமிக்கவேணும். நடந்துவந்தது நிரம்ப களையாயிருக்கும்.

சாஸ்திரிகள்.—எனக்கென்னத்திற்கு வேறே சமையல். நீங்கள் சாப்பிட்ட மிகுதி நான் சாப்பிடலாகாதா. எனக்குக் கிடைக்கவேணுமே.

சுப்பய்யர்.—தங்கம் உள்ளேபோய் சீக்கிரத்தில் இலை போட்டு, எல்லாம் பரிமாறச்சொல்லு.

தங்கம்.—இலைபோட்டு பரிமாறியிருக்கு.

சுப்பய்யர்.—எழுந்திருங்கள், உள்ளே போவோம். போஜனமானபிறகு பேசிக்கொள்வோம்.

சாஸ்திரிகள் எழுந்திருந்து ஆசமன்னியம் செய்து ஸ்தாலிச்சொம்பை எடுத்துக்கொண்டு உள்ளேபோய் பலகையினபேரில் உட்கார்ந்து போஜனம் செய்துகொண்டே சொல்லியதாவது:—

"நானும் அனேக இடங்களுக்குப் போயிருக்கிறேன். சாப்பிட்டுமிருக்கிறேன். உங்களைப்போல சாதுவும், பிராமண விசுவாசமுடையவர்களும் உங்கள் அம்மாவைப்போல, பக்திபூர்வமாய் உபசரிக்கிறவர்களும் எங்கும் கண்டதில்லை. மகாலட்சுமி என்றால் அம்மாளுக்கேதகும். அடுத்த கிராமம் வாண்டையா ரிடத்தில் காரியார்த்தமாய் வந்தேன். வந்தகாரியம் தாமதிக்கும்போலிருக்கிறது. ஊருக்குப் போய்வரலாமென்று புறப்பட்டேன். குளத்தங்கரையில் வந்தவுடனே பசியாய்இருந்தது. நேற்றையதினம் அஷ்டமி, ஒருபோது. குளத்திலேயேஸ்நானம்செய்து பூஜை பண்ணினேன். அகாலமாய்விட்டது. எங்கே போஜனத்துக்குப் போகிறதென்று யோஜித்தேன். உங்கள் கிரகத்துக்கு மூன்று தலைமுறையாய், எப்போ வந்தாலும் அதிதி பூஜைக்கு பாதகமில்லையே; என் முட்டாள்தனமாய் யோஜனை செய்தோமென்று புத்தியைக் கண்டித்துக்கொண்டு, வந்துசேர்ந்தேன். அகாலத்தில் வந்தும் சாப்பாட்டில் ஒன்றும் குறைச்சலில்லை நெய்யில்பொரித்த அப்பளம், டாங்கர் பச்சடி, தேங்காய்ச் சட்டினி, ஸாம்பார், கட்டுரசஸம், பரமான்னம், ஆடைத்தயிர், வெண்ணெய் உருக்கியநெய், எல்லாம் சம்பிரமமாயிருக்கிறது!"

பாட்டியார்.—நீங்கள் வரப்போகிறீர்களென்று தெரியாது. சுப்பய்யா வெளியே போயிருந்தான். பசிக்கிறதென்று சொன்னான். அவனுக்காக அவசரச் சமயல் செய்தேன். உப்பு புளி அதிகமாயிருக்கிறதோ, குறைச்சலா யிருக்கிறதோ. எப்படியிருந்தாலும் பொறுத்துக்கொள்ள வேணும். வேறே சமயல் செய்கிறதற்கு ஆரம்பித்தேன். சுப்பய்யா 'வேண்டாம், சாஸ்திரிகளுக்கு ரொம்ப களையாயிருக்கு, இருக்கிறது போதும்' என்று சொன்னான். ஒருநாளும் வராதவாள்வந்தீர்கள்; வெறும் அன்னத்தைப்போட மனசு வரவில்லை. அடுப்பில் இரண்டுவிறகைச் சொருகி அப்பளத்தையும் பொரித்து, தேங்காய்த் துகையலரைத்து, டாங்கர்ச்சட்டினியும், பரமானமும் செய்தேன்.

சாஸ்திரிகள்.—அம்மா, ஒன்றும் குறைவில்லை. எல்லாம் நளபாகமாயிருக்கு ஒவ்வொன்றும் அமிர்தமாயிருக்கு. நீங்கள் செய்கிற உபசாரத்துக்கு நான் பிரதியுபகாரம் என்ன செய்யப்போகிறேன்.

பாட்டியார்.—எட்டுவாய்க்கால் தாண்டி, எங்களை லட்சியம்பண்ணி, மூன்றுவாசற்படி நுழைந்து உள்ளேவந்து, உங்களைப்போல் பெரியவாள் போஜனம்பண்ணுவதே எங்களுக்குப் பெரிய உபகாரம். உங்களைப்போலொத்த வேதவித்துகளுடைய அனுக்கிரகமே போதுமான வெகுமதி.

சாஸ்திரிகள்.—உங்களுடைய குணத்துக்கும், உங்கள் குமாரருடைய சாதுத்தனத்துக்கும், ஒருநாளும் குறைவு வரமாட்டாது. எப்போதும் அமோகமாயிருக்கும். "குழந்தாய், விசிறியது போதும். கையை வலிக்கும், நிறுத்து. எனக்கு வேர்வையில்லை. சொன்னதைக்கேளு, போய் உட்காரு. உனக்கு நல்ல அகம்படையனாய் வருவான்."

பாட்டியார்.—அகம்படையானுக்குத்தான் வழிவைக்காணோம். இரண்டொரு இடத்தில் சாமி எண்ணிக்கொண்டிருந்தான்; அந்த இடங்கள் சரிப்படவில்லை. வெளியிலே வாசலிலே ஊர் வம்புக்குப் போனதில்லை. ஒரு காரியமும் அதிகமாய்த் தெரியாது. அவனுக்கும் ஏனென்று கேட்பார் ஒருத்தருமில்லை. மாமனா, மச்சானா, தம்பியா, தமையனா, சிற்றப்பனா, பெரியப்பனா ஒருத்தருமில்லை. ஒண்டிக்காரன் என்னபண்ணுகிறது!

சாஸ்திரிகள்.—உங்கள் குமாரர் மகா சாது. தர்மசீலர், அந்தரீகபக்தர். சுவாமி அவரைக் கைவிடமாட்டார். எங்கேயாகிலும் நல்லபிள்ளை நேர்ந்தால் சொல்லுகிறேன்.

பாட்டியார்.—உங்களைப்போல நாலாகாரியமும் தெரிந்தவர்கள் மேலே எடுத்துப்போட்டுக்கொண்டு கலியாணஞ்செய்துவைத்தால் உண்டு. இல்லாவிட்டால் பெண்ணுக்கு கன்னியாமடம் கட்டவேண்டியதுதான்.

சாஸ்திரிகள்.—என்னால்கூடிய பிரயாசையை எடுத்துக் கொள்ளுகிறேன். நீங்கள் கவலைப்படவேண்டாம்.

பாட்டியார்.—அப்படி செய்தால் உங்களுக்கு வெகு சுகிர்தமுண்டு. கலியாணத்தைப்பற்றித் தான் பிள்ளையும் நானும்பேசிக்கொண்டு இருந்தோம். பரமசிவன்மாதிரி நீங்கள் வந்தீர்கள். இனிமேல் பாரமெல்லாம் உங்களதுதான்.

போஜனமானபிறகு சாஸ்திரிகளுக்குத் தங்கமாள் தட்டில் ஏலாதிகளுடனே தாம்பூலங்கொணர்ந்துவைத்தாள். பாட்டியார் "குழந்தாய், தங்கம், சாஸ்திரிகளை நமஸ்காரம் செய்தையோ, இல்லாவிட்டால் இப்போ நமஸ்காரம் செய்" என்று சொல்லுமுன்னே சாஸ்திரிகளுக்கு நமஸ்காரம் செய்தாள். "அம்மா நீ நல்ல அகம்படையானை யடைந்து மகராஜியாய் இருப்பாய்" என்று சாஸ்திரிகள் ஆசீர்வதித்தார். தெற்கே கவுளி அடித்தது. சுப்பய்யர் இதென்ன கலகத்தில் சொல்லுகிறதென்று சற்று பிரமித்து சும்மா இருந்துவிட்டார்.

ஆர். சக்கிரவர்த்தி அய்யங்கார், பி. ஏ.



## பிருந்தாவனம்.

### ஓர் கதை.

யமுனா நதிக் கரையிலிருக்கும் அழகிய மதுராபுரியில் பிருந்தாவநமென்று ஒரு அதிசயமான தோட்டமுண்டு அதிலில்லாதபுஷ்பவகைகள்கிடையா. சோலைமையிருட்டுப்போல்தழைத்திருக்க அமாவாசையிருட்டில்பிரகாசிக்கும் நட்சத்திரங்கள்போல் பற்பல புஷ்பங்கள் விளங்கின. அங்கிருந்த புஷ்பஜாதிகளின் அழகையும் வாசனையும் இவ்வளவு என்று சொல்வது அசாத்தியம். புஷ்பங்களை பாணமாய் தொடுக்கிற மன்மதனுக்கு ஆயுதசாலையோ, நாலுசமுத்திரங்களும் தினமொருதரம் சலியாமல் அலைந்து திரிந்து வாசனைகளைப்பரவச்செய்யும்வாயுபகவானுக்கு முதற்கொள்ளுமிடமோ அல்லது இந்த புஷ்பங்கள்தான் சாபத்தால் பூமியில் அவதரித்திருக்கும் தேவஸ்திரீகளோ, இதுதான் அவர்கள் தபசுசெய்யும் ஆசிரமமோ என்று சந்தேகிக்கத்தக்கதா யிருந்தது.

இந்த அற்புதமான தோட்டம் சர்ப்பத்தின் தலையிலுள்ள இரத்தினம்போல் ஒருலோபிச்செட்டியின் வசத்திலிருந்தது. அவனை 'எரிமூஞ்சி' என்று சொல்வார்கள். அவன் பார்த்தால் பச்சைமரமும் பட்டுப்போம். அவனைக் கண்டமாத்திரத்தில் புறாக்களும், மான்களும், குழந்தைகளும் பயந்து ஓடும். எப்பொழுதும் தணல்போல் கண்களும், சர்ப்பம் சீறுவதுபோல் மூச்சும், போட்ட எள் வெடிக்கும்போல் நெற்றியுமுள்ள இவனைக் கண்டவர் யாரும் கொள்ளிவாய்ப் பிசாசு என்று கூவி திக்குத் திக்காய் ஓடுவார்கள். ஒருநாள் காலையில் 6 அல்லது 7 குழந்தைகள் கைகோர்த்து கீழே கால் பாவாது குதித்துக்கொண்டே தோட்டத்தைப் பார்க்க வந்தனர்கள். களங்கமற்ற சந்திரனைப்போலிருக்கும் அவர்கள் முகத்திலுள்ள பவழ உதடுகளிலிருந்து அமுதத்திற்கு மேலான மழலைச்சொற்கள் பெருக உல்லாசமாய்ப் பேசிவந்தார்கள். லலிதை, லீலாவதி, விமலை என்ற பெண் குழந்தைகளும், அசோகன், ஆநந்தன், பிரஹலாதன் என்ற ஆண் குழந்தைகளுமாக அவர்கள் ஆறுபேர்கள். லலிதை என்பவள் அசோகனைப்பார்த்து, பார்த்தாயா ஆகாசத்தில் என்ன ஓரோ ரோஜாப்பூவாயிருக்கிறது என்றாள். அதைக்கேட்டு அசோகன் இதென்ன உனக்கு தெரியாதா, நம்பராஜா புறப்படுகிறபோதெல்லாம் முன்னால் பூவாரி இறைக்கிறது பார்த்ததில்லையா? சூரியன் புறப்படுகிறார். அதற்காக தேவதைகள் ரோஜாவைஇறைக்கிறார்களாம் என்றான். அந்த க்ஷணமே லீலாவதி தென்னண்டைப் புறத்திலிருந்து சூரியன்புறப்படுமிடத்துக்கு கன்னங்கரேலென்றிருக்கும் மதயானைகள் போன்ற சில மேகங்கள் கூட்டம் கூட்டமாய் சேர்ந்ததைப் பார்த்துகொண்டிருந்தாள்.

உடனே கறுத்திருந்த மேகங்களெல்லாம் பத்தரைமாத்துத்தங்கமாய்மாறின. அதுகண்டு உடனே பிரகலாதனைக் கூவிக்கேட்க, பிரகலாதனும் மகிழ்ந்து, நம்மூர் கிருஷ்ணமூர்த்திசுவாமி வெளியிலே புறப்படுவதானால் யானைகளுக்கு தங்கசேணங்கள் ஆபரணங்கள் பூட்டிப்போவதை மறந்துபோய்விட்டாயா? இவை சூரியன்பயணத்துக்காக வந்திருக்கும் யானைகள் என்றான். இவ்வாறு பேசிக்கொண்டே வழிநடந்தது தெரியாமல், தோட்டம்வந்து சேர்ந்துவிட்டார்கள். விமலையும், ஆநந்தனும்மாத்திரம் சற்றுமுன் வந்துவிட்டார்கள், வந்து மல்லிகைப்பூக்களை குவியலாய் போட்டு இதைத்தான் கலியாணம் செய்துகொள்வேனென்று ஆனந்தனும், இந்தப் பூக்குவியல்தான் எனக்கு அகம்படையானென விமலையும்பேசிச் சந்தோஷித்தார்கள். பன்னீர்பூக்கள் கண்ணில்படவே லீலாவதி எனக்கு ஒன்று என்று அசோகனைக் கேட்க, அவனும் பறிக்க மரம் ஏறினான். ஏறவே குழந்தைகளெல்லாம் எனக்கு எனக்கென்று கேட்க கைநிரம்பப்பறித்து இறங்கினான். 'லீலாவதீ, பார்த்தாயா,வெள்ளிநாயகம்போலிருக்கிறது.' என, 'ஆமா ஆமா சம்பகத்தின் காது குத்துகிறபோது வாசித்தானே அந்த வாத்தியம்போலிருக்கிறது'என்று எல்லாரும் சொல்ல, இந்த வாத்தியத்தை யார் வாசிக்கிறார் என்று லலிதை கேட்டாள். மரத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பிரகலாதன் 'இதோ பார், இந்த வண்டு அந்தப்பூவை வாயில்வைத்து ஊதுகிறது. வாத்தியக்காரனைப் பிடித்துவிட்டேன்' என்று குதித்தான். மற்றக்குழந்தைகளெல்லாம் 'எனக்கு ஒரு பூ' 'எனக்கு ஒரு பூ' என்றுகேட்க, விமலைமாத்திரம் எனக்கு வேண்டாமென்று சொல்லி, 'கிளையிலிருந்து பூவை பறிக்கிறது எரிகிற விளக்கை அணைக்கிறதுபோல். விளக்கை அணைக்கிறது தோஷம்' என்றாள். 'எனக்கும் வேண்டாம்'என்று ஆநந்தனும் சொல்லிவிட்டு, 'அம்மாகூட சொல்லியிருக்கிறாள். சகுந்தலை என்று ஒரு பெண்ணும் அவள் தான் தங்கைபோல் அருமையாய் வளர்த்த பூவில் ஒன்றைக்கூட கிள்ளமாட்டாளாம். அதுவேயில்லை; பூவில் கந்தர்வாள் வந்திருக்கிறதுண்டாம். நாம் பறிக்கக்கூடாது' என்று விமலையும் அவனுமாக ஒரு கதம்பமரத்தண்டைக்குப்போனார்கள். இரத்தினகம்பளம் விரித்தாற்போல் மரத்தடியில் ஒரே சிவப்பாயிருந்ததைக்கண்டு மரத்திலிருக்கும் வண்டுகள்பாட்டையும் கேட்டு இங்கே என்ன பாட்டுக்கச்சேரியோ என்று சொல்லி ஆச்சரியமுற்று சற்று நின்றார்கள். பிறகு விமலை,அதோ தோரணம் தோரணமாய் தொங்குகிறதைப்பார், கல்லிழைத்த இரத்தின மாலைகள்போலிருக்கிறது என்று சொல்லி சுற்றிச்சுற்றி ஓடினாள். இப்படிச் சற்றுநேரம் விளையாடிக்கொண்டிருந்தபின், மற்றவர்களைக்காணோமே என்று தேடி ஓடிவர எல்லாரும் மாமரத்தண்டைவந்து சேர்ந்தார்கள். நானொரு அதிசயம் கொண்டுவந்திருக்கிறேன் என்று ஆநந்தன் சொல்ல நாங்களும் ஒன்று கொண்டுவந்திருக்கிறோமென்று பிரகலாதனும் மறறவர்களும் சொன்னார்கள். ஒரு அந்திமல்லிகைப்பூவையும் மாணிக்கப்பூவையும்காட்டி என்ன அதிசயம் மேல்பூவிலே, உள்ளே பார்த்தாயா? 6 - காம்புகள்போலிருக்கின்றன, 5-சிவப்பு, ஒன்று வெள்ளை; அது இந்த ஐந்துக்கும் மத்தியிலிருக்கிறது; என்ன அழகாயிருக்கிறது பார். பஞ்சபாண்டவாளும் திரௌபதையும் போலிருக்கிறது. நீங்களெல்லாரும் பட்டுப்படுதாப்போலிருக்கிற மேல்பூவைமாத்திரம் பார்த்திருப்பீர்கள். அதில் ஒளிஞ்சுகொண்டிருக்கிற * கள்ளன் கள்ளத்திகளைப் பிடித்துவிட்டேனென்று பெருமை பேசிக்கொண்டான். பிரஹலாதன் நாங்களும் ஒரு பூ கொண்டுவந்திருக்கிறோம். இன்னொன்றும் கொண்டு வந்திருக்கிறோம்; என்றான். 'என்ன, என்ன' என்று எல்லாரும்கேட்க, பிரஹலாதன் ஒரு எருக்கம்பூவையெடுத்து உள்ளேபார், ஒரு 4-கால் மண்டபம், சித்திரவேலையைப்பார் என்று சொல்லிக் காட்டினான். இப்படி யிருக்கவே அசோகன் என்பங்கு சொத்தையா, இதோ பார் ஒரு பாடகர் கொண்டுவந்திருக்கிறேனென்று நாகப்பழம்போல் கருத்த ஒரு வண்டை எடுத்தான். ‡இவர் பூவுக்குப் பூ ஓடி நளனுக்குத் தமையந்திக்கும் ஹம்சம சேதிகொண்டுபோனது போல் சமாசாரம்சொல்லுகிறது. 'எல்லாரும் தேவலைதான். நீ பஞ்சபாண்டவாளைக் கண்டுபிடித்தால் எனக்கு ஒரு கட்டடமகப்பட்டது. அசோகனும் ஒரு ஹம்ஸம்போல் தூதுபோகும் வண்டுபிடித்து வந்திருக்கிறான்' என்றுசொல்ல எல்லாரும் சற்று களைப்பாற புன்னைமரத்தடிக்குப் போனார்கள். எதிரிலிருந்த மாந்துளிரைப் பார்த்து மரத்துக்குக்கூட யாரோ மாமா பட்டுவாங்கிக் கொடுக்கிறார்கள்போலிருக்கிறது. என்று அவர்களில் ஒருவர் சொல்லக்கேட்டு எல்லாரும்விளையாட்டாயிருக்கும் தருணத்தில் பூரணசந்திரன் பிரகாசிக்கையில் அதைவிழுங்க வந்த ராகுபோல் வாசற்படியில் எரிமூஞ்சி வந்து நின்றான்.

குழந்தைகள் உடம்பு பதறி, கல்லிலும் முள்ளிலும் வீழ்ந்து ஓடி, சிதறி, திரும்பிப்பாராமல் வீடு

* பூவின் மடலுக்குள்ளிருக்கும் காம்புகளை கள்ளன் கள்ளத்தியென்று சொல்வதுண்டு. ஸ்திரீ புருஷர்களென்று நினைக்கப்பட்டனவென்று விளங்குகிறது.

‡ இது குழந்தைகள் சந்தோஷப் பேச்சுமாத்திரமல்ல சாஸ்திர ரீதியாயும் வண்டுகள் புஷ்பத்துக்கு புஷ்பம் கலியாணம் இசைத்துவைக்கும் கடகர்களே. அவை யில்லாது பலசெடிகள் காய்க்கா.



போய்ச் சேர்ந்தார்கள். இந்தப் பாவியும் பலே, நம்பதோட்டத்துக்கும் ஆராவது வரலாமா என்று உளம் மகிழ்ந்து உட்சென்றான். அன்று முதல் தோட்டத்தில் பூவும் ஓய்ந்துவிட்டது. மரங்களும் புருஷனை இழந்தகைம்பெண்போல் பட்டாடைகள் உதிர, இலைகள்கூடமாற, மொட்டை மொட்டையாய் நிற்க தலைப்பட்டன. இவன் இதைக்கண்டுவருத்தமுற்று செய்யாதபிரயத்தனமெல்லாம் செய்துபார்த்தான். ஒன்றும் ஆகாதது கண்டு கன்னத்தில் கை வைத்து வீட்டில் கிடந்தான். இப்படி வெகுநாள் செல்ல,குழந்தைகளுக்குப் பயம்மாறி இன்னொருதரம் தோட்டத்துக்குப் போய் விட்டு வரவேண்டுமென்று தீர்மானித்து புறப்பட்டன. எரிந்துகிடந்த தோட்டத்துக்குள் குழந்தைகள் கால்படவே எங்கும் பச்சையாய், மரஙகளில்புஷ்பம் சொரிய,பட்சிகள்பாட, எங்கும் வாசனைவீச, அசோகவநம்போல் ஆய்விட்டது. இந்த அற்புதத்தை ஒளிந்து பார்த்திருந்த எரிமூஞ்சிச் செட்டி, இதென்ன ஆச்சரியம் என்று ஒன்றும்சொல்லத்தோன்றாமல் மூக்கில் கைவைத்துஇன்னம் என்னாகிறது பார்ப்போமென்று நின்றான். குழந்தைகள் முன்போல் அங்குமிங்கும் விளையாடிப் புன்னைமரம் வந்து சேர்ந்தார்கள். உட்காரவே அவர்கள் காதிற்கு ஒருபாட்டுப்பாடுவதுபோல்பட்டது. அதைக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கையில் நல்ல மாம்பழங்களும் உடுக்கப்பட்டாடைகளும் எதிரில்காணப்பட்டன. பழங்களை ஒருவருக்கொருவர்கொடுத்துத்தின்று வஸ்திரங்களை மேற்போட்டு ஆநந்தத்தில் மூழ்கினார்கள். அந்தப்பருவத்தின் ஆனந்தம் குழந்தைகளுக்கும் யோகிகளுக்கு மாத்திரமே கிடைக்கும்.

ஆச்சரியத்துக்கு அளவில்லாமல் திகைத்து நின்ற எரிமூஞ்சி ஐயோ நான் என்ன பாபம் செய்தேன்! இந்தக்குழந்தைகள் என்னைக்கண்டுஓடுகின்றனவே,ஆனாலும் என்கண்குளிர ஒரு தரம்பார்ப்பேனெனவெளியே வந்தான். அவன் கண்ணில் படவே குழந்தைகள முன்போல் மருண்டு ஓடின. அவர்களோடு புஷ்பங்களும, பட்சிகளும் ஓடின,இந்த க்ஷணத்தில் புன்னைமரத்தண்டை ஒரு சோதி உண்டாயிற்று. கோடி சூரியோதயம் போல் பிரகாசமும், ஆநந்தமே வடிவெடுத்தது போலுமிருந்த ஒரு எழுவயதுக்குழந்தை தென்பட்டது. அவன்மார்பில் அபரசூரியன்போன்ற கோஸ்துபமணியும் அந்த பாலசிகாமணியின் வாயில் புல்லாங்குழலும் காணப்பட்டது. இந்த திவ்விய மூர்த்தியும் பின் தொடர்ந்து அந்தர்த்தானமானார். "ஸநகாதிமுனிவர் என்னைக் கண்டுபிடித்தாலும் பிடிக்கலாம் குழந்தைகளே நீங்கள் என் உயிர்த்தோழர்கள் அல்லவோ" என்று ஒரு சப்தம் ஆகாயத்தில் சுழன்று நின்றது. இவர் யாரென்று சொல்லவும் வேணுமோ? குழந்தைகளுக்கு வாத்தியம் வாசித்தவனும் இவனே நந்தன்மாட்டுஇடைப்பையன்களோடு இடைப்பிள்ளையாய் விளையாடித்திரிந்ததும் இவனே.

குழந்தைகளுக்கு பழங்கள் பட்டுக்கொடுத்ததும், பிரஹலாதனென்றகுழந்தைக்கு ஒருதீங்கும் வராமல் காத்ததும் இவனே, மலையிலிருந்து தகப்பன் புரட்டித் தள்ளியபோது விழுமிடமெல்லாம் தலையணை, போல் கைவைத்து காப்பாற்றினதும் இவனே. தகப்பனார் பகைப்பட்ட துருவனென்ற 5வயதுப்பாலனை வளர்த்து, அழியாத பெருமை அவனுக்கு அளித்து அவன் தகப்பனுள்படஉலகமெல்லாம் அழிந்துபோனவிடம் தெரியாதிருக்க அவனுக்கு மாத்திரம் சிரஞ்சீவியாய் சுயம்பிரகாசமாய் *உலகத்தாருக்கு வழிகாட்டும் விளக்காய், மணம்புரிவோருக்கு ஒரு பிரமாணமாய் ‡ஆகாயத்தில் நட்சத்திர ரூபமாய்விளங்கும்படி செய்வித்தது யார்?

எல்லாம் கீதைஎன்ற அமிர்தத்தை அளித்தவரும் பெரியோர்களுக்கு அரியரும்,குழந்தைகளுக்குத்தோழருமான பகவான் தான்.குழந்தைகளுக்குத்தோழன் பகவான் என்பது இதினால் நன்றாய் விளங்கும். தன் வேலை யெல்லாம் விட்டுபகவான் குழந்தை தூங்கும் தொட்டிலில்வந்து தாமரைப்பூவைச் சுற்றிவிளையாடத்தூக்கத்தில் குழந்தைகள்சிரிக்கிறது யாருக்குத்தெரியாது? பகவானுடைய அருமைத்தோழர்களான குழந்தைகளை வெறுக்கும் எரிமூஞ்சிச்செட்டியும் தன்பிசகை இன்னதென்று அறிந்து நற்குணமடைந்தான்.

* துருவ நட்சத்திரம்ஆங்கிலேயர்"போல்ஸ்டார்" என்று சொல்வது தான். அது இருந்த விடம் பேராது வடக்கிலே எப்போதும் இருப்பதால் கப்பல்யாத்திரை செய்வோர்க்கு திசையைக்குறிக்கும் வெளிச்சக்கூண்டாகும். அன்றியும் மனிதர்களுக்குத் தன்னுடைய சரித்திரத்தினால் நல்வழியைக் காட்டுவோனவான்.

‡ கலியாணகாலத்தில் ஸ்திரீ புருஷர்கள் ஒருவருக்கொருவர் உண்மையாய் வாழவேண்டுமென்பதைப் போதிக்க புருஷனை துருவநட்சத்திரத்தைப்பார் என்று சுட்டிக்காட்டி அவா மாதிரியே உன் மனையாளுக்கு உண்மையாயிரு என்று சொல்வார்கள்.

ஏ. ஸ்ரீனிவாஸய்யர், பி. ஏ.

## * பொழிலாடப் போதல்.

பாரா விருளகற்றிப் பால்போல நிலவெறிக்கத்
திராக் களையகற்றித் தென்ற லினிதுழலத்
தென்ற லினிதுழலத் தேனூறு பூம்பொழிலிற்
சென்றுசிறி தாடுதும்யாம் சேடியரோ வாரீரோ.

முல்லை மணங்கமழ மொய்வண் டிசைபாட
மெல்லவிளந் தென்றல்வர வெண்ணிலவெங் குங்கால
வெண்ணிலவெங் குங்கால வெரிகமழ் பூம்பொழிலில்
ஒண்ணுதலீர் சென்றுசிறி தாடுதும்யாம் வாரீரோ.

பூந்தண் சுனைபடிந்து போதின்றுந் தாதளைந்து
காந்தண் மணங்கமழ்ந்து தென்றல் கனிந்துவரத்
தென்றல் கனிந்துவரத் தேனூறு பூம்பொழிலிற்
சென்றுசிறி தாடுதும்யாம் சேடியரோ வாரீரோ.

த. சரவணமுத்துபிள்ளை, பி. ஏ.

* (பொழில்=சோலை, பூந்தோட்டம்) பெண்கள் சோலையில் விளையாடப்போதல்.

## * அணிலும் சிவனும்.

[பின்வரும் பாட்டு 'ஸர் எட்வின் ஆர்னல்ட்' என்னும் பேர்போன ஆங்கிலேய கவிஞர் அணிற்பிள்ளையின் முதுகிலுள்ள கோடுகளுக்குக்காரணமாகச் சொல்லும்கதையை இங்கிலீஷில் இனியபாட்டாகப் பாடியிருந்ததிலிருந்தெடுத்துமொழிபெயர்க்கப்பட்டது. இதில்கண்ட கதை சாதாரணமாகத் தென்னிந்தியாவில் வழங்கும் கதைக்கு வித்தியாசப்படுகிறது. நம்மவர் எல்லாருக்கும் தெரிந்த கதையை அடுத்தமுறை ஒரு பாட்டாகப் பிரசுரிப்போம்.]

(நிலைமண்டிலவாசிரியப்பா.)

யாவையும் படைத்த சிவனொரு மேனாள்
அன்றிற்† கூட்டம் அகலாது உறையும்‡
பனஞ்சோலைதனில் உலாவும் போழ்தில்,
மயிரடர் வாலும் ஒளியுறு கண்ணும்
சாம்பல் நிறமும் வாய்ந்ததோர் அணிலைக்
கண்ணிற் கண்டான் கடற்கரை தன்னில்;
கரைமோது அலைக்குக் கொஞ்சமும் அஞ்சாது
உவர்நீர் ஆழ்ந்து அது மூழ்கி மூழ்கிக்
கரையின் சேர்ந்து உடம்பினீர் சிலிர்த்துப்
பின்னும் மூழ்கிப் பின்னும் சிலிர்த்து
இவ்வா றாகப் பலமுறை செய்யப்
பார்த்துப் பரமன் மிகவும் வியந்து,
'சின்னஞ் சிறிய மூட அணிலே!
என்ன நீ செய்வது எனக்கது இயம்பு
பெருங்கட லலையில் சிறுவால் நனைத்துக்
கருங்கடல் நீரைக் கரையிற் சிலிர்ப்பதேன்?'
எனச்சிவன் கேட்க இவ்வணில் கூறும்:—
"சிறப்புற் றோங்கும் சிவபெரு மானே!
வறட்டக் கருதினன் வாரியை; ஏனெனில்
அகோர மானதோர் அரும்புயல் நேர்ந்து
பருத்த இந்தப் பனையினைச் சாய்த்து
அதில்நான் முடைந்த அருங்கூட் டினையும்
அத்துடன் வீழ்த்தி அல்லல்செய் ததுவால்§
பனைகருங் கடலின் பக்கமாய் வீழ்ந்ததால்
கூட்டில் வசிக்குமென் குஞ்சும் மனைவியும்
அலையினில் அடிபட்டு அதன்மேல் மிதக்கும்
அதனால் யானிங்கு அல்லும் பகலும்
சிறுவால் நனைத்துச் சிதறுவன் அதினீர்.
உறுதியாய் உழைத்தால் ஒருநாள் கடையில்
கடலை வறட்டிக் காக்கக் குஞ்சினை
எண்ணியே இவ்வாறு உழைப்பே னயினன்.
என்வால் அதனால் இற்று லுஞ்சரி.'
என அணில் சொல்லச் சிவன்விடைசொல்வன்:
'அசந்தர்ப்ப மான அணிலே! கேளாய்
உண்மையில் அதுவோர் உதாரண மாகும்
பாரினில் வசிக்கும் பலகுடும் பத்தார்க்கு
எல்லாக் கணவரும் இதுபோல் நன்றியும்
எல்லாத் தந்தையும் இதுபோல் அன்பும்
பூண்டா ராயின் பூமியி லிருக்கும்
மனிதர் யாரும் வாழ்வர் சுகமே,
யான்சிருட் டிக்கும் ஆருயிர் அனைத்தும்
கழிக்கும் இன்பமாய்க் காலம் தனை' யெனச்
சொல்லி மகிழ்ந்து சுவர்க்க நாயகன்
பிரியமாய்க் குனிந்துதன் பெரிய கையினால்
பல்லுயிர் அனைத்தையும் படைத்த கையினால்
திராக்ஷக் குலையினை யாம்பிடிப் பதுபோல்
அண்ட மனைத்தையும் ஆட்டும் கையினால்
தடவினன் முதுகில் தயவுபுரிந்தே
உறுதிப் பாடுடன் உழைக்கும் அணிலை,
மூக்கு முதலதன் வால்நுனி வரைக்கும்
பச்சைக் கோடுகள் படர்ந்தன முதுகில்
நான்கு கோடுகள் நரைத்த முதுகில்
அன்பிற் கொருநல் லடையா ளமதா
தெய்வக் கையினால் செயப்பட் டனவே.
அவன்பின் உயர்த்தியே அந்தக் கையினை
சுருளுங் கடற்குச் சுட்டிக் காட்டினன்
அலறும் கடற்கு ஆட்டிக் காட்டினன்
நாதனை அறியும் நாயினைப் போல
அதனால் அக்கடல் அலையற வடிந்து
கடற்பூண் டினையும் கற்குன் றினையும்
காட்டிக் கொடுத்துக் கர்த்தன் தனக்கே
அவ்வா றாக அப்பனை தன்னையும்
கண்ணிற் காட்டிக் கணத்தில் வடிந்தது.
அப்புறம் அணிற்பிளை அடர்ந்த வாலினை
உயரத் தூக்கி விரையச் சுருட்டி
விரைந்தோடினது வீட்டின் அண்டை;
குலைந்து போனபுற் கூட்டினைக் கிட்டிப்
பெண்டினைக் கண்டு பிள்ளையைக் கண்டு
பிரியமுடன் கீச்சிட் டளவ ளாவி
சாவ தானமாய்க் கரைக்குக் கொணர்ந்தது.
அப்போ தங்கோர் அதிசயம் என்னெனில்
சிவன்தன் கையினாற் செய்த கோடுபோல்
குஞ்சின் முதுகும் கோடிட் டிருந்ததே!

பி. எஸ். வெங்கடசுப்பிரமணியஅய்யர், பி.

* Translated from Sir Edwin Arnold's poem entitled "Shiva and the Squirrel." We are indebted for this special version of the story from Sir Edwin Arnold to Mrs. Brander. This is however quite different from the popular version, which we purpose to give in our next issue.

† அன்றில்=அணிற்பிள்ளை, ‡ உறையும்=வசிக்கும்.
§ வீழ்ந்தது+ஆல் (அசை.)



## சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

சிறுவர்களே, சிறுமிகளே,

எனக்கு வேலையிருந்தபோதிலும், உங்களைக் கண்டு ஒரு கதை சொல்லாமல் போக மனமில்லை. மிகவும் கவனமாய்க் கேளுங்கள்.

### யானை.

பாகீரதி, சரஸ்வதி, கமலாம்பாள் என்ற இம்மூவரும் மதுரைஜில்லாவைச் சேர்ந்த ஒருகிராமத்தில் வசிக்கும் மீனாட்சியம்மாளின் பேர்த்திமார்கள். மீனாட்சியம்மாள் தன் இளம்பிராயத்தில் நன்றாய்ப் படித்துக் கற்றுக்கொண்டமையால் இப்பொழுது தன் பேர்த்திமார்களுக்கு வேடிக்கையாய் புத்திமதி போதிக்க மிகவும் தகுதியானவளானாள். தினந்தோறும் மாலையில் தன் "குஞ்சுகளை" அருகாமையில் வைத்தணைத்து, அவர்களுக்கேற்ற கதைகளைச் சொல்லி, பிரதிதினமும் ஏதாவது புதிதாய் அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதுண்டு. இப்படியிருக்கையில் ஒரு நாள் மாலையில் இம்மூவரும் அக்கிராமத்தி னருகாமையிலுள்ள ஒரு தென்னந்தோப்பில் சில வழிப்போக்கர்கள் தம் வாகனங்களோடு தங்கியிருக்கக் கண்டார்கள். மீனாட்சியம்மாளோ, தன் வேலைகளை முடித்து சாயந்தர வேளையானதால், குஞ்சுகளுடன் குலாவ அவர்களைத் தேடிக்கொண்டு கூடத்திற்கு வந்தாள்; அங்கு ஒருவரு மில்லாததால், அவளுக்கு மனது திகைத்தது. "இதென்னது! குழந்தைகளெங்கே போயிருக்கக்கூடும்? இருட்டும் சமயமாயிற்றே" என்று இப்படிப் பரிதபித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் 'அம்மா' (பேர்த்திகள் மீனாட்சியை அம்மாவென்றுதான் அழைப்பது வழக்கம்.) என்ற சப்தம் அவள் காதில் பட்டது. அது கமலாம்பாள்குரலென்று கண்ட மீனாட்சியம்மாளுக்கு வந்த சந்தோஷம் இவ்வளவவ்வள வல்ல.

கமலாம்பாள்.—எருமைக்கடாக்கள் எவ்வளவு பெரிது!

சரஸ்வதி.—நம்மூர் எருமைக்கடாக்கள் இவைகளுக்குப் பேரன் பேர்த்திகளாகும்.

பாகீரதி.—இவ்வளவு பெரிது நான் கண்டதேயில்லை. இன்னுமொரு வேடிக்கை. இந்த எருமைகளுக்கு இரண்டு வால்களிருக்கின்றன!

என்றிப்படிச்சொல்லிக்கொண்டு விரைக்கவிரைக்க ஓடிவந்த மூவரையும் மீனாட்சியழைத்துக் கட்டித் தழுவி முத்தமிட்டு, பாகீரதியையும் சரஸ்வதியையும் பக்கத்தி லுட்கார்த்தி, கமலாம்பாளைமட்டும் மடியில் உட்கார வைத்துக் கொண்டாள்.

மீனாட்சியம்மாள்.—பக்கத்துத் தோப்பி லிருப்பவைகள் தானே.

பாகீரதி.—ஆமாம். ஆமாம். மறுபடியும் பார்ப்போம் வாருங்கள். இரண்டு வால்களையும் காட்டுகிறேன்.

மீனாட்சியம்மாள்.—பாகீரதி, இரண்டும் வால்களல்ல.

பாகீரதி.—நீங்கள் பார்க்கவில்லை. வாருங்கள்; வாருங்கள். பார்த்தால் தெரியும்.

மீனாட்சியம்மாள்.—நான் அவைகளைப் பார்த்திருக்கிறேன். அம்மிருகங்கள் எருமைகளல்ல. அவைகளை "யானை" யென்றுசொல்லுவார்கள்.

கமலாம்பாள்.—நேற்றைக்குச் சொன்ன கதையிலே அழகாபுரிராஜா யானைமேல் சவாரி செய்தான் என்று சொன்னீர்களே அதுவோ!

மீனாட்சியம்மாள்.—அதுவே. முன் பின் தொங்குகிறவை இரண்டும்வால்களல்ல. பின்னிருப்பது வால். முன்னிருப்பது கை.

பாகீரதி.—நமக்குமட்டும் இரண்டு கைகளிருக்கின்றனவே. அவைகளுக்கு ஒருகை போதுமோ?

மீனாட்சியம்மாள்.—அக்கையினால் யானை தான் நினைத்ததெல்லாம் செய்யும். இரையெடுத்துத் தின்பது அக் கையால்தான். அதினால் தண்ணீர் குடிக்கும். மரங்களை வேருடன் பிடுங்கும். ஒரு சிறு குண்டூசியையும் கீழிருந்து எடுக்கும்.

கமலாம்பாள்.—நல்ல யானையம்மா! இதுவரையிலும் நான் பார்த்ததேயில்லை. யானைக்கைபோல் எனக்கிருந்தால், நானும் 'ஓ'—வென்று கத்தித் தண்ணீர் குடிப்பேன்.

மீனாட்சியம்மாள்.—இன்றைக்கு உங்களுக்குக் கதை சொல்ல நல்லவிஷய மகப்பட்டது. கவனமாய்க்கேளுங்கள். யானைகளைப்பற்றிச்சொல்லுகிறேன்.

யானைகளைக் காட்டில் சுயேச்சையாய்த் திரிவதைக் காணலாம். காட்டிலிருக்கும் மரமட்டைகள், இலைகள், கொடிகள், பழங்கள் முதலானவைகள் தான் அவைகளுக்கு ஆகாரம். அக்காட்டிலுள்ள குளங் குட்டைக்குப்போய்த் தண்ணீர்குடித்து தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும். ஓரிடத்திலிருந்து மறுஇடத்திற்குப்போகவேண்டியிருந்தால், கூட்டங்கூட்டமாய்ப் போவதே வழக்கம். கிழயானைகள் முன்னிலும், நடுவயதுள்ள யானைகள் பின்னிலும், குட்டியானைகள் நடுவிலுமா யிருப்பது வழக்கம். மத்தியானமுழுவதும் காட்டிற்கு வெளியேவரப் பயந்து உள்ளேயே யிருந்து மரமட்டைகளைத் தின்று இரவில் தண்ணீர் குடிக்கக் காட்டிற்கு வெளியேயுள்ள குளத்திற்கு வருவதுண்டு. அப்படி வெளியே வரும்பொழுது முன் சொன்னபடி யானைகள் கூட்டங் கூட்டமாய் வரும். இப்படிக் கூட்டமாய் வருவதில் ஒரு ஆச்சரியம். கவனமாய்க் கேளுங்கள். ஒரு பிரயாணி ஒரு காட்டில் ஒரு குளத்தைக்கண்டு, இவ்விடம் நிச்சயம் யானைகள் தண்ணீர் குடிக்க வரும் என்று நினைத்து, தன் பரிவாரங்களை யெல்லாம் காட்டிற்கு வெளியே கூடாரமடித்து நிறுத்தி, தான்மட்டும் அக் குளத்துக் கருகாமையிலிருக்கும் ஒரு பெரியமரத்தி லேறிக்கொண்டு யானை வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். சூரியன் மறைந்து சந்திரன் பூர்ண காந்தியுடன் உதயமானான். பகல் முழுவதும் நேருக்குநேர் பேசப்பட்ட வார்த்தைகளில் சில, யானைகள் பண்ணுகிற சப்தம், சேஷ்டை முதலானவைகளால், காதுக்குக் கேளாமல் போகும். இப்பொழுதோ யானைகள் இருக்கின்றனவோ இல்லையோவென்று சந்தேகிக்க இடமுண்டாகும்படி காடு முழுவதும் நிசப்தமா யிருந்தது. மணி 8 ஆய்விட்டது. ஒன்றையும் காணோம். கொஞ்சநேரத்திற்குப் பிறகு திடீரென்று கருப்பாக ஒன்று அவர்கண்ணுக்குத்தட்டுப்பட்டது. பிரயாணி அது ஒரு பெரிய கற்பாறையென்று நினைத்துக் குறிப்பாய்ப் பார்க்கையில், அப்பாறை நகர, வியப்படைந்து, என்ன நடக்கிறது பார்ப்போமென்று அதையே இமைகொட்டாமல் நோக்கிக்கொண் டிருந்தார். அக்கரும் பாறை தண்ணீர் குடிக்க எத்தனித்துக் காட்டிற்கு வெளியே வந்த ஒரு பெரும் யானை. அவ்யானை காட்டிற்கு வெளியே வந்து சுமார் 5-நிமிஷம்போல் அசையாமல் நின்றது. பிறகு நாலாபக்கத்திலும் திரும்பித் திரும்பிப் பார்த்து காதைப் புடைத்துக்கொண்டு அடிமேலடிவைத்து மெள்ள மெள்ள நகர ஆரம்பித்தது. இப்படியே குளம்வரைக்கும் வந்து, தண்ணீரைத் தொடாமல் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொஞ்ச நேரமானவுடன், முன்போல் மெள்ள மெள்ள நகர்ந்து மறுபடியும் காடுபோய்ச் சேர்ந்தது.

சரஸ்வதி.—தண்ணீர் குடிக்காமல் ஏன் திரும்பிப்போனது?

பாகீரதி.—தண்ணீர் கலங்கி யிருந்திருக்கும்: அல்லது அப்பொழுது அதற்கு தாகமில்லாம லிருந்திருக்கும்.

கமலாம்பாள்.—அக்கா, தான்மட்டும் தண்ணீர் குடிக்க அதற் கிஷ்டமில்லை. தண்ணீரைக் கண்ட சந்தோஷத்தில் தன் பரிவாரங்களையு மழைத்துவரப் போயிருக்கும்.

மீனாட்சியம்மாள்.—கமலாம்பாள்தான் கெட்டிக்காரி. காரணத்தை ஏறக்குறைய சரியாய்ச் சொன்னாள். பின் நடந்ததைச் சொல்லுகிறேன். கவனமாய்க்கேளுங்கள்,

காட்டிலிருந்துவெளியே வரும்பொழுது முதல் முதல் எந்தவிடத்தில் நின்றதோ அந்தவிடத்திலேயே மறுபடியும் நின்றது. கொஞ்சநேரத்திற்குள் ஐந்துயானைகள் வந்தன. உடனே இத் தலையானை மற்ற ஐந்துகளுடன் குளத்தின் முகமாய் மெள்ள மெள்ள நகர்ந்து ஐந்து யானைகளையும் ஐந்து இடங்களில் பாரா காக்கும்படி செய்து, தான் மறுபடி முன்போல் குளத்திற்குப்போய்த் திரும்பித் திரும்பி நாலா பக்கத்திலும் பார்த்து. 5 பாராக் காப்போர்களுக்கும் ஜாக்கிரதையாயிருங்களென்று ஆஞ்ஞையிட்டு மறுபடியும் காட்டிற்குத்திரும்பிற்று. காட்டிலிருந்து மறுபடியும் வெளியே வந்தபொழுது சுமார் நூறுயானைகள், குஞ்சுகளும் குட்டிகளுமாய் அத்தலை யானையைப்பின்பற்றிவந்தன. ஒரு ஆச்சரியம்! யானைகள் 100-கணக்காயிருந்த போதிலும் சிறிதும் சப்தம்செய்யாமல், பயந்து நடுங்கி ஒடுங்கிப் பதுங்கிச் சென்றன. போகிறவழியில் பாரா யானைகளும் சேர்ந்துகொண்டன. இவ்வானைக் கூட்டங்கள் நிசப்தமாய் நகருவது, தேவேந்திரனுக்குப் பயந்து ஓடுவதற்கு ஆரம்பித்த மலைகள் போலிருந்தன. கடைசியில் சுமார் 11 மணிக்கு யானைக் கூட்டம் குளம் வந்து சேர்



ந்தது. உடனே தலையானை குளத்திற்கு, முன்னே போய், சற்றிருந்து நாலுதிக்குகளையும் திரும்பிப்பார்த்து மற்ற யானைகளுக்கும் வருவதற்கு உத்தரவுகொடுத்தது.

கமலாம்பாள்.—யானைபேசுமோ? எப்படி உத்திரவு கொடுக்கும்?

மீனாட்சியம்மாள்.—தலையானை முன்னே போனது, அரைநாழிகைக் கப்புறம் மற்ற யானைகள் காத்திருந்து வருவது, இவைகளைப் பார்த்தால் உத்திரவு கொடுத்து நடந்ததுபோ லிருந்ததே யொழிய வேறல்ல. யானைகள் பேச அவைகளுக்குள் ஒரு விதமான ஜாடை அல்லது பாஷை யிருக்கும்.

கமலாம்பாள்.—அப்புறம் என்ன நடந்தது?

மீனாட்சி.—உடனே யானைக் கூட்டம் ஜலத்திலிறங்கி தாகந்தீரத் தண்ணீர்குடித்து, தண்ணீரில் மூழ்கி ஜலக்ரீடை செய்ய ஆரம்பித்தன.

இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பிரயாணி மிகவும் ஆச்சரியப்பட்டு இப்பொழுது கொஞ்சம் சப்தம் உண்டுபண்ணிப் பார்க்கவேண்டு மென்று ஆசைப்பட்டுத் தனக்குப் பக்கத்திலிருந்த ஒரு கிளையைப் பிடுங்கிக் கீழே எறிந்தார். யானைகளெல்லாம் லத்தியைப்போட்டு வாலைச்சுருட்டிக்கொண்டு ஓட ஆரம்பித்தன.

கமலாம்பாள்.—நான் அந்த மரத்தில் இருந்திருக்கவில்லையென்று விசனப்படுகிறேன் நல்லவேடிக்கை.

மீனாட்சியம்மாள்.—குட்டி யானைகளெல்லாய்பெரும் யானைகளின் மத்தியில் பதுங்கி அரை க்ஷணத்தில் சகல யானைகளும் காட்டிற்குள் ஓடி மறைந்தன.

யானைக்குக் கண்கள் அதன் உருவத்துக்கு மிகவும் சிறிதாக இருப்பதால் சிறு சப்தத்தைக் கேட்டாலும் ஏதோ பெரிய ஆபத்து வந்துவிட்டதாக பயந்து ஓடுவதுசகஜம் என்று யானையின்சுபாவங்களை நன்றாக அறிந்தவர்கள் பிடித்திருக்கிறார்கள்.

யானை சாந்தகுணமுள்ளது; நன்றியறிவுள்ளது.

ஒரு யானை தன் மாவுத்தனிடத்திலிருந்து தப்பிக் காட்டிலுள்ள மற்ற யானைகளுடன் கூடிக் கொஞ்சகாலமான பின்பு இம்மாவுத்தன் காட்டிற்குச் சென்று ஒரு யானைக் கூட்டத்தைப் பிடித்தான். அதில தப்பியோடின யானையும் தற்செயலா யிருந்தது. மாவுத்தன் அதைக் கண்டு பெயரைச்சொல்லி யழைக்க, அந்த யானை முன்போல் பணிவுடன் அவன் காலில் வந்து விழுந்தது.

யானை தந்திரமுள்ளது.

ஒருநாள் ஒரு ராஜா ஒரு சிறு யானையைப் பிடித்து அதைக் கயிற்றால் கட்டி மிக்க சிரமத்துடன் இழுத்துக்கொண்டு வந்தான். அவ்யானை திடீரென்று செத்ததுபோல் கீழே விழுந்தது. உடனே ராஜா கயிற்றையெல்லாம் அவிழ்த்துச் செத்ததென்றெண்ணித் திரும்பலானான். ராஜா கொஞ்சதூரம் சென்றவுடனே, இக்கள்ள யானை குபீரென் றெழுந்து ஓ—வென்று சத்தமிட்டுக்கொண் டோடிக் காட்டிற்குள்போய்மறைந்தது.

யானை வைராக்கியமுள்ளது.

வெயிற்காலத்தி லொருநாள் இரண்டு யானைகள் (அதிலொன்றுபெரிது: மற்றொன்றுசிறிது) ஒரு கிணற்றண்டை தண்ணீர்குடிக்க வந்தன. சிறுயானை அதன் சௌகரியத்தின் பொருட்டுக் கையிலொரு தொட்டியை யெடுத்துவந்தது; பெரும் யானை, இதைப் பொறுக்காமல், லபக்கென்று அத்தொட்டியைச் சிறுயானையிடத்திலிருந்து பிடுங்கித் தான் தண்ணீர்குடிக்க ஆரம்பித்தது. சிறு யானைக்கோ வந்த கோபம் இவ்வளவவ்வளவல்ல. தண்ணீர் குடிக்கும் யானைக்குத் தெரியாமல் அதன் பின்வந்து திடீரென்று ஒருமுட்டு முட்டி அதைக் கிணற்றில் தள்ளிவிட்டது. பிறகு தள்ளுபட்ட யானை சர்க்காரால் மிகவும் வருத்தத்துடன் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டது.

கமலாம்பாள்.—யானைக் கதை நன்றா யிருக்கிறது.

மீனாட்சி.—இன்று கதை சொன்னதுபோதும். சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள், நாளையதினம் ஆளுக்கொரு கதை எழுதி என்னிடத்தில் காட்டுங்கள்.

கமலாம்பாள்.<br>
சரஸ்வதி. } அப்படியே.<br>
பாகீரதி.

சிறுவர்களே, சிறுமிகளே,

இப்பொழுது உங்களுக்கு யானையைப்பற்றிப் பொதுவாய்ச் சில விஷயங்களும், சில கதைகளும் தெரியும். இதைப்பற்றி விஸ்தாரமாய் அறிந்துகொள்ளுவதற்கு இக்கதைகள் உங்களுக்கு ஆசை மூட்டுமென்று நம்புகிறேன்.

உங்கள் அன்புள்ள,

ராமையா.

## விசேஷக்குறிப்புகள்.

**பம்பாய்ஹைகோர்ட்டு சுதேசஜட்ஜ்.**

பம்பாய்ஹைகோர்ட்டுசுதேச ஜட்ஜாயிருந்து யாவரும் விசனிக்க இளம்பிராயத்தில்காலஞ்சென்ற காசிநாத் ட்ரிம்பக் டிலாங் அவர்களுடைய ஸ்தானத்தில் பூனாவில் ஸ்பெஷல் ஜட்ஜாயிருந்த மஹாதேவ் கோவிந்த ரானடேஅவர்கள் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு இப்பொழுது வயது சுமார் 54-இருக்கும். ஆனால் திடகாத்திர முள்ளவர். ஜஸ்டிஸ் டிலாங் அவர்களைப்போல்இவரும் அட்வோகேட்பரீக்ஷை கொடுத்தார். ஆனால் சட்டாப்பியாஸம் செய்யாமல்சர்க்கார் உத்தியோகத்தில் பிரவேசித்தார். முதலில் வித்தியாபிவிர்த்தி யிலாகாவில் உபாத்தியாயராயிருந்து பிறகு ஜூடிஷியல் இலாகாவில் வேலை பெற்று, ஸப்ஜட்ஜ், ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜ் வேலைகள் பார்த்துக் கடைசியில் பூனாவில் ஸ்பெஷல் ஜட்ஜாக நியமிக்கப்பட்டு வேலைபார்த்துவந்தார். இவர் சட்ட நிரூபண சபை மெம்பராகவும், இந்தியா கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட 'அரிசிறைக்கமிட்டி'யில் ஒருமெம்பராகவுமிருந்து பேர்பெற்றவர். ஜனசாரச்சீர்திருத்த விஷயங்களில் அதிக சிரத்தை யெடுத்துக்கொண்டுழைக்கும் சிரேஷ்டர்களில்இவர்ஒருவர். நிறை கல்வியுடையவர்; ஊக்கமுடையவர்; பொது கலப்பிரியர். இவரை அவ்வேலைக்கு நியமித்தது இந்தியா முழுமையிலுமுள்ளவர்களுக்குத் திர்ப்தியைக் கொடுத்தது. ஹைகோர்ட் ஜட்ஜ் வேலை பெற்றபின் கொஞ்சம்தேக அசௌக்கியமாயிருந்து குணப்பட்டு சுமார் இரண்டு வாரங்களுக்கு முன் தான் அவர் வேலையை ஒப்புக்கொண்டார். இந்தியாவிலுள்ள அரிய பெரிய தேசாபிமானிகளில் இவர் முக்கியமான ஒருவர்.

---

**குந்தக்கல் கொலை.**

குந்தக்கல் 'ரயில் ஸ்டேஷனில்' அம்பண்ணா என்னும் வாசற் காவல்காரனைக் கொன்ற 'ஸோல்ஜர்' பிடிபட்டு அனந்தப்பூர் டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டு முன்விசாரிக்கப்பட்டுச் சென்னை ஹைகோர்ட்டு ஸெஷனில் விசாரணைக்காக அனுப்பட்டிருக்கிறான். அவன் பேர் 'அஷ்போர்ட்' என்று தெரிகிறது. அடுத்த ஹைகோர்ட்டு ஸெஷனில் அவன் கேஸ் விசாரணைக்கு வரும். அதுவரையில் அவனைச் சென்னை ஜெயில் கட்டிடத்தில் காவலில் வைத்திருக்கிறார்கள்.

---

**சென்னை நகர் ஷெரீப்.**

அடுத்த வருஷத்துக்குச் சென்னை நகர் ஷெரிப்பாக விருக்க மிஸ்டர் சௌவாஸ்ஜி எடல்ஜி பாண்டே யென்னும் ஒரு பார்ஸிகனவானைக் கவர்ன்மெண்டார் தெரிந்தெடுத்து நியமித்திருக்கிறார்கள். இவர் சென்னையிலுள்ள ஒரு வியாபாரி.சென்னை முனிசிபாலிடியில் ஒரு கமிஷனராகவுமிருக்கிறார். இவருடைய குடும்பதார் சென்ற 50-வருஷகாலமாகச் சென்னையில் வசித்து வருகிறார்கள்.

**'ஜலஸ்தம்பம்'.**

இந்தமாசம்முதலில்சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜுக்கு எதிரில் சமுத்திரத்தில் 'ஜலஸ்தம்பம்' ஒன்று எழும்பி நடுச்சமுத்திரத்திலிருந்து கரைமட்டும் நகர்ந்து வந்து கலைந்து போய்விட்டது. இந்தக்காட்சியை அனேகர் கண்ணாரப்பார்த்து அதிசயித்தார்கள். அந்த 'ஜலஸ்தம்பம்' எப்படியிருந்ததென்றால், சமுத்திரத்திலிருந்து ஜலம் திரண்டு எழுந்து ஆகாசத்தில் ஒரு பெரிய ஸ்தம்பம்போல் விளங்கிக்காணப்பட்டது. இதற்குக்காரணம் பலபேர் பலவிதமாகச் சொல்வார்கள். ஆனால் வாஸ்தவத்தில்இது உண்டாவது எப்படியென்றால் சமுத்திரத்தில் சுழல் காற்று பலமாயடிக்கும் பொழுது காற்றுச்சுழலும் மையத்தில் காற்றில்லாமல் சுத்த சூன்யமானஇடவெளியுண்டாகிறது. இது காற்றுச்சுழலும் வேகத்துக்குத்தக்கபடி பெரிதாக விருக்கும். நாலாபக்கங்களிலும் சமுத்திர ஜலத்தைக் காற்று அமுக்கிக்கொண்டிருக்க சுழல் மையத்திலுண்டான சுத்த சூன்யமான இடவெளியில் மட்டும் காற்று பாரமில்லாமையால் அவ்விடத்தில், (அடியில்பொத்தலுள்ள ஒரு பாத்திரத்தைத் தண்ணீரில் மிதக்கவிட்டமுக்கினால் அதிலுள்ள துவாரத்தின்வழியாகத் தண்ணீர் மேலெழும் புகிறதுபோல்)தண்ணீர்ஆகாசத்திலெழும்பி அழகிய 'ஜலஸ்தம்பம்' உண்டாகும். சுழல் காற்று சுற்றிக்கொண்டே போகையில் அதின் மையம் நகரும் வழியாக 'ஜலஸ்தம்பமும்' நகர்ந்து கொண்டுபோகும். இப்படிப்பட்ட காற்று சமுத்திரத்திலுண்டானால் ஜலஸ்தம்ப முண்டாகும். நிலத்திலுண்டானால் மண்ணும் மணலும் புழுதியும் மற்றுமுள்ள லேசான சரகுகள் முதலானவையும் சேர்ந்து சுழல் மையத்தில் சுற்றிக்கொண்டு ஆகாசத்திலெழும்புவதைக் காணலாம். மணல் நிறைந்த பாலை வனங்களில் இச்சுழல் காற்று பலமாக நேரிட்டால் மணல் ஸ்தம்பம் எழக்காணலாம்.

---

**மைசூர் ஜனப்பிரதிநிதி சபை.**

மைசூர் மஹாராஜாஅவர்கள் சென்ற 12-வருஷகாலங்களாக வருஷா வருஷம் தசரா பண்டிகைகாலத்தில் அவர் தேசத்திலுள்ள ஜனங்களின் பிரதிநிதிகளை ஒன்று கூட்டி அவர்கள் முன் சென்ற வருஷத்து துரைத்தனரிபோர்ட்டை வாசித்து ஜனங்களின் குறைநிறைகளை அவர்கள் மூலமாகத் தெரிந்து கொண்டுவருகிறவழக்கம் யாருக்கும் தெரியுமே. முதலில் இந்த ஜனப்பிரதிநிதி சபை மெம்பர்கள் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவிருந்தார்கள். பிறகு கொஞ்சகாலமுன் ஜனங்களுக்கே அவர்களைத் தெரிந்தெடுத்து நியமிக்கும் சுதந்திரம் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் எலெக்ஷன் மூலமாக நியமிக்கப்பட ஒரு ஏற்பாடு செய்தார்கள். இது வரையில் அந்தந்த வருஷத்து ஜனப்பிரதிநிதி சபைக்குநியமிக்கப்பட்டவர்களை அந்த வருஷத்து தசராபண்டிகை காலத்தில் சபைகூடிக்கலையுமட்டும்தான்மெம்பர்கள்; அப்புறம் அவர்கள் அடுத்தவருஷம் நியமிக்கப்பட்டால் தானுண்டு. இது மெம்பர்களுக்கு அச்சபையில் நிரந்தரமான சிரத்தையுண்டுபண்ண ஏதுவற்றதாயிருப்பதை யுத்தேசித்து.இனி அச்சபைக்கு நியமிக்கப்படுகிறவர்கள் மூன்று வருஷங்களுக்கு விடாது மெம்பர்களாயிருப்பார்கள் என்று மஹாராஜாஉத்திரவு செய்திருக்கிறார். இது ஒரு நல்ல ஏற்பாடு.இப்பொழுது அச்சபை வருஷத்துக்கு ஒருதரம் தான் கூடி வருகிறது. இனி 6-மாசத்துக்கு ஒரு தரம் கூடிவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், மெம்பர்கள் ஆலோசனைசொல்லித் தங்கள் குறைநிறைகளைத் தெரிவித்துக்கொள்வதோடு தங்கள் முன்வரும் விஷயங்களை வோட்டுக்கொடுத்துத் தீர்மானிக்கச் சுதந்திரம் வேண்டுமென்றும் கேட்கிறார்கள். இப்பொழுது அச்சுதந்திரங்களை மஹாராஜா அவர்கள் அளிக்காவிட்டாலும் காலக்கிரமத்தில் அச்சுதந்திரங்களையும்பெறுவார்களென்று நம்புகிறோம். அந்த சபை வர வர விர்த்தியாகிக் கடைசியில் மைசூருக்கு அது ஒருபார்லிமெந்து சபை ஆகும் என்று தோன்றுகிறது.

---



**சென்னைச் சட்ட நிரூபண சபை மீட்டிங்கு.**

புதிதாய்ச் சீர்திருத்தப்பட்ட சென்னைச் சட்டநிரூபண சபையின் முதல்மீட்டிங்கு நாளதுமீ 14உ சாயங்காலம்சென்னைக்கோட்டையிலுள்ள கௌன்ஸில்மாளிகையில் கூடிற்று. அந்த சபையில் பிரதிநிதி மெம்பர்களாய் உட்கார்ந்த கனம். பி. இரங்கைய நாயுடு ராய்பஹதூர் சபாபதி முதலியார், என். சுப்பராவ் காரு, கே. கலியாணசுந்தரம் அய்யர், ராய்பஹதூர் இராமசுப்பய்யர், ரெவரெண்ட் டாக்டர் மில்லர், மிஸ்டர் ஜே. ஏ. பாய்ஸன் இவர்களைத் தவிர, ரிஜிஸ்திரேஷன் இலாகாத்தலைவர் திவான்பஹதூர் ஸ்ரீனிவாஸராகவய்யங்கார், வித்தியாபிவிர்த்தி யிலாகாத்தலைவர் மிஸ்டர். ஏ. மன்ரோ, ரெவினியூபோர்டு முதல் மெம்பர் மிஸ்டர் ஜெ. குரோஸ், மராமத்திலாகா கவர்ன்மெண்டு செக்ரிடெரி கர்னல் பென்னிகுவிக் ஆகிய இவர்களும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டு அச்சபையில் அதிகப்படி மெம்பர்களாக உட்கார்ந்தார்கள். பிரதிநிதி மெம்பர்கள் அவர்களுக்கு நூதனமாய் அளிக்கப்பட்ட கேள்வி கேட்கும் சுதந்திரத்தை யனுசரித்து ஒவ்வொருவரும் கவர்ன்மெண்டாரைப் பலகேள்விகள் கேட்டார்கள். அவர்கள்கேட்ட கேள்விகளுக்குக் கவர்ன்மெண்டு மெம்பர்கள் விடையளித்தார்கள். சில கேள்விகளுக்குக் கவர்ன்மெண்டு மெம்பர்கள் கொடுத்த விடை மெம்பர்களுக்குத் திர்ப்திகரமாகவில்லை. ஆனாலும் அவர்கள்கேட்ட கேள்விகளால் நன்மையுண்டு என்பதற்குச் சந்தேகமில்லை. கேள்விகள் கேட்டானபிறகு வழக்கம்போல் சபை நடவடிக்கையை நடத்தினார்கள். முதல் முதல் சீர்திருத்தப்பட்டசபையில் நடபடிக்கை நடக்கும்முறைமையைப்பற்றியவிதிகள் முன்னிருந்தனவற்றைச்சீர்திருத்தி அங்கீகரித்துக்கொள்ளப்பட்டன. புதுவிதிப்படி சட்டநிரூபண சபையில் பேசும் மெம்பர்கள் எழுந்து நின்று பேசலாம். சபையில் பேசும்விஷயங்களை எழுதிக்கொண்டுபோய் படிக்கலாமா கூடாதா என்பதைப்பற்றித் தர்க்கம் நேர்ந்ததில் பாதிப்பேர் இப்படியும் பாதிப்பேர் அப்படியும் அபிப்பிராயம்சொன்னார்கள். அக்கிராசனாதிபதியாகிய கனம் பொருந்திய கவர்னர் தமக்குள்ள அதிகப்படி வோட்டினால் எழுதிவந்து வாசிக்கலாமென்று தீர்மானித்தார். பிறகு ரெவினியூபோர்டு ஆபீசில் வேலை நடக்கும் முறைமையைக்குறிப்பிட்டு ஒரு ஒழுங்கேற்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டிருந்த ரெவினியூபோர்டு மசோதா ஆலோசனையி லெடுத்துக்கொண்டு நீண்ட தர்க்கம் நடந்தபின் சட்டமாகப் பாஸ்செய்யப்பட்டது. கனம்கலியாண சுந்தரமய்யர் அம்மசோதாவில் சில முக்கியமான சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று பேசினார். அதாவது (1) ரெவினியூபோர்டு மெம்பர்கள் தாங்கள் கலெக்டராயிருக்கையில் பைஸல்செய்த விஷயம் மறுபடியும்போர்டு மெம்பராயிருக்கையில் அவர்கள் முன் தீர்மானத்துக்கு வந்தால் அதை அவர்கள் தாங்களேபைசல் செய்யாது வேறொரு மெம்பருக்கனுப்ப வேண்டுமென்று சட்டத்தில் ஒரு நிபந்தனை யிருக்கவேண்டுமென்று சொன்னார். இது அனாவசியமானதென்றும் ரெவினியூபோர்டு மெம்பர்கள் அயோக்கியர்களென்று சொல்வதுபோலிருக்கிறதென்றும் கனம் மிஸ்டர் கார்ஸ்டினும், கனம். கவர்னரும் இதை யெதிர்த்துச் சினந்துபேச இச்சீர்திருத்தம் வேண்டாமென்று விட்டுவிட்டார். (2) ரெவினியூபோர்டார் ரெவினியூ வியாஜ்ஜியங்கள், வழக்குகள் தீர்மானத்துக்கு வந்தால் ஸிவில் கோர்ட்டில் நடவடிக்கை நடத்துவதுபோல் போர்டு மெம்பர்கள் கக்ஷிக்காரர்களையாவது அவர்கள் வக்கீல்களையாவது நேரில் கேட்டு அப்புறம் அவ்வழக்குகளைத் தீர்மானிக்க வேண்டுமென்றும், (3) 15-ரூபாய்க்கு மேற்பட்ட சிப்பந்திகளை அபராதம்போடல் வேலையைவிட்டு நீக்குவித்தல் முதலிய தண்டனைவிதிக்கும்படியான பிசகுகளுக்காக விசாரிக்கையிலும், வருஷத்துக்கு 500 ரூபாய் பேரிஜ்கட்டும் நிலம் முதலிய சொத்துக்களை பாதிக்கும் கேஸ்களைத் தீர்மானிப்பதிலும் போர்டார் முன்னால் அக்கேஸில் சம்மந்தப்பட்ட நபர்களையாவது அவர்கள் ஏஜண்டுகளையாவது நேரில் கேட்டு அப்புறம் தீர்மானிக்கவேண்டுமென்றும் நிபந்தனைகளேற்படுத்துவது நலமென்று பேசினார். இந்நிபந்தனைகளேற்படுத்தினால் போர்டாபீஸ் வேலை மிகவளர்ந்துஇப்பொழுதுள்ள மெம்பர்களால் சுத்தமாய்பார்க்கமுடியாமற்போய் விடுமென்று கவர்ன்மெண்டு மெம்பர்கள் இதற்கு விரோதமாகப்பேசி எதிர்த்ததால் இவைகளும் சபையில் ஏறாமற் போய்விட்டன. இது விஷயமாக சபையாரின் அபிப்பிராயம் எடுத்ததில் 6 பேர் கனம். கலியான சுந்தரமய்யர் பேசியதற்கு அனுகூலமாகவும் 12 பேர் விரோதமாகவும் வோட்டுக்கொடுத்தார்கள்.

---

**கௌன்சில் மெம்பர்கள்.**

சென்னை கவர்னருடைய மந்திராலோசனை சபை மெம்பர்களானகனம்ஸர்ஹென்ரிஸ்டோக்ஸ், கனம் மிஸ்டர் கார்ஸ்டின் இவர்களுள் ஸர்ஹென்ரி ஸ்டோக்ஸ்அவர்கள் நாளதுமீ 8உ அவர் வேலையை மிஸ்டர் ப்லிஸ்அவர்களிடம் ஒப்புவித்து விட்டு வேலையை விட்டு நீங்கிச் சீமைக்குப் பிரயாணமாகப்போய்விட்டார். இவர் போகுமுன் நாளதுமீ 4உ சாயந்திரம் கனம் ஸர் டி. முத்துசாமி அய்யர் அவர்கள் இவரைத் தம் வீட்டுக்கழைத்து சந்தோஷக்கச்சேரிவைத்துபசரணை செய்

தனுப்பினார். கௌன்ஸில் மெம்பர் வேலைபார்ப்பவர்கள் சரியாக 5-வருஷகாலம் தான் அவ்வேலையிலிருக்கலாம், அதற்கு மேலிருக்கக்கூடாதென்கிற விதியிருப்பதால், ஸர்ஹென்ரி ஸ்டோக்ஸ் அவர்கள் உத்தியோகத்தவணைகழிந்ததும் அவ்வேலையைவிட்டுப் போய்விட்டார். இப்பொழுது முதல் மெம்பராகவிருக்கும் கனம் மிஸ்டர் கார்ஸ்டின் அவர்களுடைய உத்தியோக காலதவணையும் அடுத்த ஜனவரீ முதலில் கழிந்து போகிறது. அப்பொழுது அவருக்குப்பின் ரெவினியூபோர்டு முதல் மெம்பராயிருக்கும் கனம் மிஸ்டர் குரோஸ் அவர்கள் கௌன்ஸில் மெம்பராகவா நியமிக்கப் பட்டிருக்கிறார். ஹைகோர்ட்டு ஜட்ஜ் கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ்டார்க்கரும், ரெவினியூபோர்டு மெம்பர் மிஸ்டர் ஸி. எஸ். குரோனும் இவ்வேலை தமக்குக் கிடைக்கவேண்டுமென்று பிரம்மப்பிராயத்தினம் செய்து வந்தார்கள். இந்தியா மந்திரியவர்கள் இப்படிப்போட்டிபோட்ட இருவரையும் நியமிக்காமல் மிஸ்டர் குரோஸ் அவர்களை அவ்வேலைக்கு நியமித்திருக்கிறார். இவர் சாந்த குணமும் சுதேசிகளிடத்தனுதாபமுமுள்ளவர். இவரைகௌன்ஸில் மெம்பராக நியமிப்பதில் சுதேசிகளுக்கு அனுகூலமுண்டு.

மழை. இந்த வருஷம் மாரிகாலம் நன்றாக ஆரம்பித்திருக்கிறது. இந்த மாசமுழுதும் நல்லமழை. இந்தவருஷம் போல் மாரிகாலத்து மழைபெய்து ஏழெட்டுவருஷங்களாகின்றன. இராஜதானியெங்கும் நல்லமழை பெய்து ஏரிகள் தடாகங்களெல்லாம் அங்கங்கே பூர்த்தியாக நிறைந்திருக்கின்றன. சில இடங்களில் காட்டாறுகளிலும் ஏரி குளங்களிலும் வெள்ளமுண்டாகி சிற்சில விடங்களில் உடைத்துக்கொண்டு சேதமும் உண்டுபண்ணி யிருக்கிறது. இந்த மாசமுதலிலே பெய்த மழையினால் நேர்ந்த விபத்துகளெல்லாவற்றிலும் நீலகிரிக்குப்போகும் சென்னை ரயில்வேயில் காரமடைக்கு 2-மைல் தூரத்தில் நேர்ந்த ரயில் விபத்துமகாகொடியது. அந்தஇருப்புப்பாதை போகும்வழியில் ஒருகாட்டாறு வெள்ளப்பெருக்கெடுத்து அதன்மேல் கட்டியிருந்த ரயில்வாராவதியின் அடிவாரத்தைப்பறித்துவிட்டுப் போய்விட்டது. 8௳ அன்று காலமே 6½-மணிக்குச்சென்னையை விட்டுப்புறப்பட்டுச் சென்ற ரயில் வண்டி இராத்திரி அப்பாலத்தின் மீது ஓடுகையில் வண்டித்தொடர் முழுவதும் பாலத்தின்மேல் சென்றபின் நடுவில் பாலம் உட்கார்ந்து போய்விட்டது. போகவே நடுவிலிருந்த வண்டிகள் அப்படியே முறிந்து கீழேயுள்ள பள்ளத்தில் விழுந்து அந்தவண்டித்தொடர் முழுவதையும் நாசம் செய்து விட்டது. அதனாலுண்டான உடற்சேதம் உயிர்ச்சேதம் மிகுதி. சுமார் 40 பேர்கள் வரையில் படுகாயம் பட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்கள். சுமார் 30 பிரேதங்கள் வண்டிவிழுந்த குப்பலிலிருந்து தோண்டியெடுத்துக்கோயமுத்தூருக்குக் கொண்டுவரப்பட்டன, சில விபத்துநேர்ந்த இடத்திலேயேபுதைக்கப்பட்டன. இன்னும் அனேகரைக்காணவில்லையென்று ஜனங்கள் கூக்குரலிடுகிறார்கள். இந்த மாதிரி ரயில் விபத்து சென்னையில் ரயிலுண்டானது முதல் நேர்ந்ததேயில்லை. நம்முடைய ஞாபகத்துக்கெட்டியவரையில் இது சென்னை 'பீப்பிள்ஸ் பார்க்கில்' நேர்ந்த விபத்து ஒன்றுக்கே இரண்டாவதாகத்தோன்றுகிறது. இந்த விபத்தால் ரயில்வே கம்பெனியாருக்கு வண்டிச்சேதம் முதலியவற்றால் நேர்ந்த கஷ்டம் 27,000 ரூபாயென்றுமதிப்பிடப்படுகிறது.

காங்கிரேஸ். அடுத்தமாசக் கடைசியில் லாஹோரில் காங்கிரேஸ் சபை கூடஅங்கங்கே தடபுடலாகவேற்பாடுகள்செய்யப்பட்டு வருகின்றன. காங்கிரேஸ் விஷயத்தில் ஆதிமுதல் பாடுபட்டுழைத்து அச்சபையை உருவாக்கிக் கடைத்தேறச்செய்த மிஸ்டர் ஏ. ஓ. ஹியூம் டிசெம்பர்மீ 1௳ சென்னைக்கு வருகிறார். சென்னையிலிருந்து அவர் வெளியில் சில முக்கியஸ்தலங்களை விஜயம் செய்து கொண்டு ஜோலார்ப்பேட்டை மார்க்கமாய் லாஹோருக்குப் போகிறார். டிசெம்பர்மீ 3-ந்தேதி காலை 7-மணிக்கு பார்லிமெந்து சபையில்மெம்பராயிருக்கும் ஓரேசுதேசியும் இந்திய தேசாபிமானசிரோமணியுமாகிய கனம்மிஸ்டர் தாதாபாய்நௌரோஜியவர்கள் சீமையிலிருந்துபம்பாய் வந்திறங்குவார். அவர் நல்வரவைக்கொண்டாடபம்பாயில் பிரமாதமானஏற்பாடுகள்நடந்துவருகின்றன. அவர் காங்கிரேஸ் மஹாசபைக்கு அக்கிராசனாதிபதியாகவிருக்க வருகிறார். அவர் வந்திறங்கும்போது பம்பாயில் காணப்படும் காட்சியை நாமெழுதிக்காட்டி பார்க்கவேண்டுமென்று சொல்லும்படியிருக்குமென்றறிகிறோம். அவர் வரவைக்கேட்டு இந்தியாவில் அவர் பேரைக்கேட்டோரெல்லாம் மனமகிழ்ந்திருக்க அவர் போகுமிடங்களிலெல்லாம் ஜனங்கள் உற்சாகம் பொங்கி அவர் நல்வரவைக்கொண்டாட தமாஷாக்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

சென்னை யூனிவர்ஸிடி ஸெனேட் மெம்பர்கள். சென்ற 25௳ சென்னை யூனிவர்ஸிடி ஸெனேட் சபைக்கு 2 மெம்பர்கள் நியமிக்க எலெக்ஷன் நடந்தது. பி. ஏ., பி. எல்., பி. ஸி. இ. முதலிய பட்டம்பெற்று ௰-வருஷமானவர்களும், எம். ஏ., எம். எல். முதலிய உயர்ந்த பட்டம்பெற்றவர்களும் அந்த எலெக்ஷனில் வோட்டுக்கொடுக்க சுதந்திரம் பெற்றவர்கள். அப்படி சுதந்திரம் பெற்றவர்களில் சென்னையிலுள்ளவர்களெல்லாம் அன்று நேரில் ஸெனேட்மாளிகைக்குச் சென்று வோட்டுக்கொடுக்கவேண்டுமென்றும் வெளிஜில்லாக்களிலுள்ளவர்கள் முன்னதாக வோட்டுச்சீட்டுப்பெற்று ஒரு மாஜிஸ்திரேட்டுமுன் அதில் தாங்கள் மெம்பர்களாக நியமிப்பவரைக்குறித்துக் கையெழுத்திட்டு, தபால் மூலமாக அனுப்பவேண்டுமென்றும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தப்படி வந்த வோட்டுகளை கனம் மிஸ்டர் குரோஸ் ராய்பஹதூர் பூ. இரங்கநாத முதலியார் அவர்களும் வாங்கிப் பார்த்ததில் ராஜமகேந்திரம் காலேஜ் ப்ரொபெசரர் ம-௱-௱-ஸ்ரீ என். வைத்தியநாதய்யர் எம். ஏ. முதலாகவும், வடசர்க்கிள் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ம-௱-௱-ஸ்ரீ ஸி. நாகோஜிராவ், பி. ஏ. இரண்டாவதாகவும் இருந்தார்கள். இவ்விவரும் இவ்வந்தஸ்துக்கு ஏற்றவர்களே.

ஞர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு"

OFFICE OF ... BOOKS, MADRAS. 8 - JAN. 94


# விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். II. 1893௵ டிசம்பர்மீ இலக்கம். 8.


## கிரகணங்கள்.

பூர்வத்தில் தேவர்கள் "தரையே தாழியாக தண்டயிர் நீராகத் தடவரையே மத்தாக" என்றபடி இவ்வகண்ட உலகமே தயிர்க்கலசமாகவும் மந்தரபர்வதமே மத்தாகவும் வாசுகி என்னும் சர்ப்பத்தைக் கயிறாகவுங்கொண்டு அசுரர்கள் உதவியினால் பாற்கடலைக்கடைந்து கிடைத்த அமிர்தத்தை மகாவிஷ்ணுவானவர் பாடு எல்லாம் பட்டவர்களான அசுரர்களுக்கு இல்லாமல் தேவர்களுக்குமாத்திரம் பரிமாறிக்கொண்டிருக்கையில், அவ்வமிர்தத்தை உண்ண ஆசைகொண்ட ராகு என்னும் ஓர் அசுரன் தேவபூஷணம்பூண்டு தேவர்களுடன் தேவனாய் உட்கார்ந்து அமிர்தத்தை சாப்பிட்டுக்கொண்டிருக்க அதை பார்த்து விசாரணை செய்துகொண்டிருந்த சந்திர சூரியர்கள் கண்டு மகாவிஷ்ணுவிடம் சொல்ல அவரும் தன் கையிலிருந்த அகப்பையினால் ராகுவின் பிடரியில் ஓங்கிப்புடைக்க கழுத்து முறிந்தது. அவ்வாறு கழுத்து முறிந்து தலை உடலை விட்டுப்பிரிந்து வேறாகியும், அசுரன் அமிர்தபானம் பண்ணினவனாகையால் சாகாமல் தலைபாகம் ராகுவாகவும் உடல்பாகம் கேதுவாகவும் உருக்கொண்டு கோள் சொல்லித் தன்னை சந்தியில் இழுத்து விட்டவர்களான சந்திர சூரியர்களை சிலகாலங்களில் பிடித்திருக்கிறானென்றும் அதற்குத்தான் கிரகணம் எனப் பெயர் என்றும் நாம் மகாபாரதத்தில் வாசித்திருக்கிறோம்.

2. கிரகணங்கள் இவ்வாறு தான் உண்டாகின்றனவா? அல்லது கிரகணங்கள் உண்டாவதற்கு வேறு காரணம் உண்டா? சற்று விசாரிப்போம். சூரியகிரகணம் அமாவாசையிலும் சந்திரகிரகணம் பௌர்ணமியிலும் வருகிறது என்று பஞ்சாங்கங்களில் சொல்லி யிருப்பதினாலும் நம் அனுபோகத்தினாலும் தெரிந்தவிஷயம். ராகு கேதுக்களினால் சந்திர சூரியர்கள்பிடிக்கப்படுகிறது நிஜமாயிருந்தால் அமாவாசை பௌர்ணமிதினங்கள் தவிர வேறு தினங்களில் ஏன் கிரகணங்கள் வரக்கூடாது? கிரகணங்கள் உண்டாவதற்கு வேறு காரணங்கள் இருக்குமானால் அவைகள் என்ன? கிரகணத்தில் சூரிய சந்திரர்கள் கண்ணுக்குத்தெரியாமல் மறைவதைநாம் பார்க்கிறோம். யாதேனும் ஒரு பொருள் கண்ணுக்குத்தெரியாமல் மறைபடுவதற்கு முகாந்தரம் என்னவென்று யோசித்துப்பார்த்தால் இரண்டு காரணங்கள் உண்டென்று தெரியும். முதலாவது ஒரு வஸ்துவிற்கும் நம்முடைய கண்ணுக்கும் இடையே வேறொரு பொருளை வைப்போமாகில் அது இடையே வைத்த பொருளால் மறைபட்டு நம்பார்வைக்குத்தெரியாது. உதாரணம்: ஒரு விளக்குக்கும் நமக்கும் மத்தியில் ஒரு சுவர் இருக்குமாகில் விளக்கு சுவரால் மறைபட்டுப்போம். இரண்டாவது *தன்னொளியில்லாத ஒரு பொருளை இருட்டில் வைத்தால் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்துபோம். கிரகணங்களில் சூரிய சந்திரர்கள் கண்ணுக்குத்

* அடுத்தபக்கத்தின் அடியில்பார்க்க.

தெரியாமல் மறைவதற்கும் இவைகளையே காரணமாய்ச் சொல்லவேண்டும். ஏனெனில் நம் அனுபோகத்திற்கும் அறிவுக்கும் பொருந்தியிருக்கின்றன.

3. சூரியன் *தன்னொளியுள்ளது. அதாவது விளக்கு, மின்னட்டாம்பூச்சி, நட்சத்திரம் இவைகளைப்போல் தானாய்ப்பிரகாசிக்கும்திறமையுள்ளது. கல் மரம் முதலிய வஸ்துக்களைப் போல் வெளிச்சத்தில் பிரகாசமுள்ளதாயும் இருட்டில் கண்ணுக்குத்தெரியாமல் பிரகாசம் அற்றும் இராமல் சூரியன் தன்னுடைய சொந்த ஒளியினாலேயே பிரகாசமாயிருக்கிறது. இப்பேர்க்கொத்த தன்னொளியுள்ள வஸ்துக்கள் நமது கண்ணுக்கும் அவைகளுக்கும் இடையே வேறொரு வஸ்துவை வைப்பதினால் மாத்திரம் கண்ணுக்குத்தெரியாமல் மறைபடும். சந்திரனுடையஒளிசூரியனுடையதைப்போன்றதல்ல. அதினுடைய ஒளி சூரியனிடம் இருந்து இரவல் வாங்கினது. எப்படி ஒரு இருட்டறையில் உள்ள பொருள்கள் எல்லாம் கண்ணுக்குத்தெரியாமல் பிரகாசமற்று இருந்தும் ஒரு விளக்கை அந்த அறைக்குள் கொண்டுவந்தவுடன் அந்த பொருள்களெல்லாம் பிரகாசத்தோடு விளங்குகின்றனவோ அதேமாதிரியாக சந்திரனும் சூரியனுடைய வெளிச்சத்தால் பிரகாசிக்கிறது. அதற்கு சொந்த ஒளி கிடையாது. சந்திரனைப் போன்ற தன்னொளியில்லாத வஸ்துக்கள் மேலேசொன்ன காரணத்தால் மறைபடுவது தவிர அவைகளின்மேல் ஒளிபடாமல் இருக்கும்படி இருட்டில் வைத்தாலும் பிரகாசம் குன்றி கண்ணுக்குப் புலப்படாமல் போகும்.

4. பூமி சூரியனுடைய கிரகம். அதாவது பூமி சூரியனைச் சுற்றிவருகிறது. அப்படி ஒரு தடவை சூரியனைச் சுற்றிவர 365 நாள் செல்லுகிறது. சந்திரன் பூமியின் உபக்கிரகம். பூமி சூரியனைச்சுற்றுகிறமாதிரி சந்திரன் பூமியை 27 நாளில் ஒரு தரம் சுற்றுகிறது. பூமி சூரியனைச் சுற்றிக்கொண்டிருக்க சந்திரன் பூமியைச் சுற்றுவதினால் சந்திரனுடைய ககனகதியை(ஆகாசத்தில்சஞ்சரிக்கும்வழியை)அறிவது எளிதல்ல. ஆகையால் கிரகணத்தைப்பற்றி விவகரிப்பதில் சூரியனும் பூமியும் அசையாமலிருப்பதாயும் சந்திரன் பூமியைச் சுற்றுவதாயும் மாத்திரம் வைத்துக்கொள்வோம். இப்படி ஒவ்வொரு சுற்றுக்கும் ஒரு தடவை சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலும், ஒரு தடவை பூமி, சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையிலும் வரும். திருஷ்டாந்தமாக ஒரு விளக்கை சூரியனாக பாவித்துக்கொண்டு அதற்கு 40 அடி தூரத்துக்கு அப்பால் நிற்கும் ஒரு பையனைப் பூமியாக நினைத்துக்கொள்வோம். இந்தப்பையனுக்கப்பால் இரண்டடிதூரத்தில் நின்றுகொண்டு அப்பையனை சுற்றுகிற ஒரு சிறுபெண்ணை சந்திரனாக நினைத்துக்கொள்வோமானால் அந்தப் பெண் பையனை ஒரு தடவை சுற்றுகிறதற்குள் பையனுக்கும் விளக்குக்கும் மத்தியில் ஒரு தடவை வருவாள். அப்பொழுது பூமியாகிற பையனுக்கு சந்திரனாகியபெண்ணின்வெளிச்சமானபாகம் தெரியாது. அதற்கு அமாவாசை என்று பெயர். அந்த இடத்திலிருந்துசந்திரன் பூமியைச்சுற்றி பாதி ப்ரதக்ஷிணம் வந்தால் பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் மத்தியில் இருக்கும். விளக்கின் ஒளி பெண்ணின் முகத்தில் பட பெண்ணின் பிரகாசமானபாகம் பூமியாகிய பையனுக்குத்தெரியும். அப்போது தான் பௌர்ணமி. சந்திரனாகிய பெண் விளக்குக்கும் பூமி என்கிற பையனுக்கும் மத்தியில்வரும்பொழுது விளக்கு சந்திரனால் மறைபட்டு பூமிக்குத்தெரியாமல் மறைந்துபோம். இதற்குத்தான் சூரியகிரகணம் என்று பெயர்: பூமிக்கும் சூரியனுக்கும் இடையே சந்திரன் வந்து பூமியில் இருப்போருக்கு சூரியன் கண்ணுக்குத் தெரியாமல் மறையச்செய்வதினால் சூரியகிரகணமுண்டாகிறது. பௌர்ணமியில் அதாவது பூமி என்ற பையன் விளக்குக்கும் சந்திரனாகியபெண்ணுக்கும் மத்தியில் இருக்கும்பொழுது பூமியின்நிழல் சந்திரன் மேல் பட்டு சந்திரன் முகத்தில் விளக்கொளி விழவொட்டாமல் தடுக்கிறது. அத

*தன்னொளியுள்ள (Self-luminous)பொருள்கள்: நெருப்பு, பழுக்கக்காய்ச்சின இரும்பு, சூரியன் நக்ஷத்திரங்கள் முதலியன; தானாய் வேறொரு பொருளின் உதவியில்லாமல் பிரகாசிப்பவைகள். தன்னொளியில்லாத பொருள்கள்: வெளிச்சத்தில் கண்ணுக்குப் புலப்பட்டு இருட்டில் தெரியாமல் போகிறவைகள்: சுவர், கல், சந்திரன், புஸ்தகம் முதலியன.



னால் சந்திரனிடம் இருக்கும் பிரகாசம்போய் மங்கலாய்த் தெரியும். அதற்கு சந்திரகிரகணமென்று பெயர். மேலே காட்டியிருக்கும் உதாரணத்தில் சொன்னதூரம் சரியானதன்று. ‡பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ளதூரம் இரண்டடி.யென்று வைத்துக்கொள்வோமானால் சூரியன் பூமியிலிருந்து 800 அடி அல்லது சுமார் ஒரு பர்லாங்கு தூரமிருக்கும்.




சூ - சூரியன், பூ - பூமி, ச - சந்திரன்.

சந்திரகிரகணம் உண்டாகும் விதம்.

5. மேலே காட்டிய படத்தில் சந்திரன் பூமியினால் உண்டாகும் நிழலின் மத்தியில் அகப்பட்டுகொண்டு பூர்ணசந்திர கிரகணம் உண்டாகும் விதம் காண்பித்திருக்கிறது. கறுப்பாயிருப்பது பூமியினுடைய நிழல். புள்ளிக்கோடிட்டிருக்கும் வட்டம் சந்திரன் பூமியைச்சுற்றியோடும் வழி. சந்திரன் பூமியைச்சுற்றி ஓடுகையில் படத்திலுள்ள ஸ்தானத்திலிருந்து பூமியின் நிழலுக்கு வெளியில் வர கிரகண விமோசனகாலம் வந்துவிடும். சந்திரன் மேலே காட்டிய படத்திலிருக்கும் ஸ்தானத்துக்கு நேரெதிராக வருகையில் அது பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் வந்து அதனுடைய நிழல் பூமியில் படும்படி செய்கிறது. சந்திரன் பூமியைவிட ஆகிருதியில் எவ்வளவோ மடங்கு சிறிதாகவும் சூரியனைவிட பூமிக்கு மிக சமீபத்திலுள்ளதாகவு மிருப்பதால் அதன் நிழல் பூமி முழுமையையும் மறைக்க முடியாமல் அதன் ஒருபாகத்தில் மட்டும் விழுகிறது. அப்படி சந்திரனுடைய நிழல் பூமியில் விழும்போது பூமியின் அந்த பாகத்திலிருப்பவர்களுக்கு சூரியக்கிரகணம் தோன்றும். அந்த நிழலின் மத்தியிலிருப்பவர்களுக்கு அந்த சூரியக்கிரகணம் பூர்ணக்கிரகணமாவாவது கங்கணக்கிரணமாகவாவது தோன்றும். ஓரத்திலிருப்பவர்களுக்கு பார்சுவக்கிரகணமாகத் தோன்றும்.

6. சூரிய கிரகணத்தில் சந்திரனுடைய நிழல் பூமியின் சொற்ப பாகத்தில் மாத்திரம் படுவதினால், அப்பேர்க்கொத்த நிழல் பட்டதான சொற்ப இடத்திற்குமாத்திரம் கிரகணம் தெரியும். ஒரு ஜில்லா முழுவதுக்கும் கூட தெரிவது அருமை. சூரியன் முழுமையும் மறைபடும்பொழுது ‘பூர்ண’கிரகணமென்றும், ஒரு பாகம் மாத்திரம் மறையும்பொழுது “பார்சுவ” கிரகணம் என்றும் பெயர். சிற்சில வேளைகளில் பூர்ணகிரகணமாயிராமல் சந்திரன் சூரியனுடைய மத்தியில் ஒரு சிறுதட்டு மாதிரியாக மறைத்துக்கொள்ள, சூரியன் நடுவில் கறுப்பாயும் சுற்றிலும் பிரகாசமான வளையத்தோடும் விளங்கும். அதற்கு *‘கங்கணக்’ கிரகணம் என்று பெயர். ‘பூர்ண’ சூரியகிரகணம் உண்டாகும் பொழுது சூரியமண்டலத்தைச்சுற்றி பிரகாசமும் அதியற்புதமுமான ஒளிக்கதிர்கள் வெளியிட்டு வீசி கண்ணுக்கு மிகவும் ஆனந்தகரமாயிருக்கும். இந்த ஒளிக்கதிர்கள் சூரியமண்டலத்தில் எப்பொழுதும் இப்படியே ஜ்வலித்துக் கொண்டிருப்பதாயும் சூரியனுடைய அதிக காந்தியினால் பூர்ணகிரகணகாலம் தவிற வேறு சமயங்களில் வெறும் கண்ணுக்கு தெரியாமலிருப்பதாயும் வானசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். சூரியகிரகணம் வரும்பொழுது ஒருபாகத்தில் பூர்ணமாயும் மற்றொருபாகத்துக்கு பார்சுவமாகவும் தெரியும். பூமியில் சந்திரனுடைய நடுநிழலில் இருப்பவர்க்குக்கிரகணம் பூர்ணமாகவாவது அல்லது கங்கணமாகவாவது இருக்கும். பக்கத்து நிழலில் இருப்பவர்ளுக்கு சூரியன் பாதிமாத்திரம் மறைபடுவதாகத் தெரிவதனால் பார்சுவ கிரகணமாய்த் தெரியும். பூமியின் நிழல் சந்திர மண்டலத்தைவிட மிகப் பெரிதாகையால் சந்திரனுக்கு கங்கண கிரகணம் உண்டாகமாட்டாது.

7. சூரியனுக்கு பூர்ண கிரகணம் உண்டாய் நாம் பார்க்கும் காக்ஷி கண்கொள்ளாத காக்ஷி

‡வாஸ்தவமாக சந்திரனுக்கும் பூமிக்குமுள்ள தூரம் 240 ஆயிரம் மைல், பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் சுமார்-9-கோடியே 30 லக்ஷம் மைல்.

* Annular eclipse.

நடுப்பகலில் நம் கண்ணுக்கு புலப்படாத ராக்ஷஸன் ஒருவன் திடீரென்று சூரியனை விழுங்கிவிட்டால் பூமியில் யோக க்ஷேமங்கள் என்னமாயிருக்கும்! அகாலத்தில் சாவுவருவதுபோல் முன்னாடியே தெரிவிக்காமல் சூரியன் மறைந்து திடீரென்று இரவுவர ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் தோன்றி மனதுக்கு வெகுபயங்கரத்தையுண்டுபண்ணும். பட்சிகள் ஆகாரம் தேடுவதைவிட்டு உடனே கூடுவந்து அடையும். மிருகங்களும் காடுகளில் உல்லாசமாய்த் திரிவதைவிட்டு பதைபதைத்து தத்தம் இருப்பிடம் போய்ச் சேரும். பகலில் சூரியனைக்கண்டு சிரிக்கிறதுபோல் இதழ் விரித்து பிரகாசிக்கின்ற தாமரைப்புஷ்பம் நடுப்பகலில் கொள்ளை கொள்பவன்போல் வந்த இருளைக் கண்டு பயந்து கண்மூடும். அவ்வாறே எல்லா விருக்ஷங்களும் இலைமூடி துயில்கொள்ளும். ஆந்தை தானறியாமல் இரவு வெகுவிரைவில் வந்ததைப்பற்றி வியந்து காரணம் ஒன்றும் தெரியாமல் மயங்கி வெளியில் பறந்தோடி கிளைகூட்டும். இராவேளையில் அயலார் புலத்தில் போய் திருட்டுத்தனமாய் மேயும் ஒருகொண்டி மாடு பூர்ணசூரிய கிரகணம் உண்டாய் முடிந்தபொழுது அயலார் புலத்தில் மேய்ந்துகொண்டிருந்ததாக ஒருகதையும் உண்டு. பூர்ண சூரியகிரகணம் இப்படி எல்லா விஷயங்களிலும் இரவை ஒத்திருந்தாலும் எதிர் பாராமல் திடீரென்று உண்டானதால் சகஜமான இரவுபோலிராமல் இருள் ரூபமாய் வந்த யமன்போல் பயங்கரமாயிருக்கும். இந்த வைபவமெல்லாம் நாலைந்து நிமிஷநேரம் தானிருக்கும். கிரகணம் நீங்கி சூரியன் கொஞ்சம் கொஞ்சமாய் கண்ணுக்குப் புலப்பட சூரியனுடைய ஒளி இருளை ஓட்டி ஜீவவிருக்ஷ ராசிகளை மறுபடியும் உயிர்ப்பிப்பதுபோலிருக்கும்.

8. பௌர்ணமியில் சந்திரனுக்கும் சூரியனுக்கும் மத்தியில் பூமி இருக்கிறதாக இருந்தால் ஒவ்வொரு பௌர்ணமியிலும் சந்திரன் பூமியின் நிழலில்தானே இருக்கும். அப்படி நிழலில் இருந்தால் கண்ணுக்கு பிரகாசமாய்த் தெரியாமல் சந்திரகிரகணம் உண்டாகவேண்டும். அப்படிக்கில்லாமல் ஏன் சாதாரணமாய் பௌர்ணமிகளில் சந்திரன் கிரகணமாயிராமல் பூர்ணபிரகாசமாய் விளங்குகிறது என்று சிலர் கேட்கலாம். முன்னமேயே சொல்லியிருக்கிற திருஷ்டாந்தத்தை நாம் நன்றாய் கவனிப்போமானால் அந்த ஆக்ஷேபனைக்கு சமாதானம் தெரியும். பூமியாகிய பையனை சந்திரன் சுற்றுகிறவழியில் பூமிக்கும் விளக்குக்கும் மத்தியில் ஒருபள்ளமும் சந்திரன் பௌர்ணமியில் இருக்கும் இடத்தில் ஒரு மேடும் அமைத்து அந்த மேட்டிலிருந்து பள்ளத்துக்கு இறங்கி வரும்படியான படிகளும் மறுபடி பள்ளத்திலிருந்து சுற்றி மேடுபோய் ஏறுவதற்கான படிகளும் செய்து அப்பேர்ப்பட்ட பாதைவழியாய் இப்பொழுது சந்திரன் பூமியைச்சுற்றுவதாய் நினைத்துக்கொள்வோம். அமாவாசையில் அதாவது பெண், பையனுக்கும் விளக்குக்கும் மத்தியில் இருக்கையில், பையன் இருக்கும் தரையைவிட பெண் பள்ளத்தில் இருப்பதினால் பையனுக்கு விளக்கு பெண்ணால் மறையப்படாமல் நன்றாய்த்தெரியும். பௌர்ணமியில் சந்திரனாகிய பெண் பூமியைவிட மேட்டிலிருப்பதனால் பூமியின் நிழல் பெண்ணின் முகத்தில் பட்டு மறைக்காமல், விளக்கின் வெளிச்சம் பெண்முகத்தில் பட்டு பிரகாசமாயிருக்கும். வாஸ்தவமான சந்திரனும்இதே மாதிரிதான் பூமியின் நிழலில் படாமல் பிரகாசமாய் இருக்கும். இங்கே சொல்லியிருக்கிற திருஷ்டாந்தத்தின் உண்மையை மேற்சொன்னபடி விளக்கின் முன்னின்று எளிதில் அறிந்துகொள்ளலாம். பூமியும் சந்திர சூரியர்களும் அவைகளின் ஆகாச சஞ்சாரங்களில் எப்பொழுதும் ஒரு நேராக இராமல் சிற்சிலகாலங்களில் மாத்திரம் நேராக வருகிறபடியால் கிரகணங்களும் அப்பேர்ப்பட்ட காலங்களில் மாத்திரம் உண்டாகின்றன.

9. ஒவ்வொரு வருஷத்திலும் உண்டாகும் சந்திர கிரகணங்களைவிட சூரிய கிகரணங்கள் அதிகம். ஆனால் நம் அனுபோகத்தில் ஒருகுறிப்பிட்ட தேசத்தில் தெரியும் கிரகணங்களை கவனித்தால் சந்திர கிரகணங்கள் அதிகமாயிருக்கும். சூரிய கிரகணங்கள் அதிகமாயிருப்பது நிஜமானால் ஏன் நமக்குத் தென்படவில்லை? நாம் முன்னமேயே சொல்லியிருக்கிறபிரகாரம்சூரிய கிரகணம் கொஞ்ச இடத்திற்குத்தான் தெரியும்.



சந்திரகிரகணம் பூமியின் பாதி பக்கத்திற்கு ஏககாலத்தில் தெரியும். சூரியகிரகணம் சாதாரணமாய் ஒரு ஜில்லாவுக்குத்தான் தெரியும் என்று சொன்னோம். பூமியின்பாதி சுமார் 1600 ஜில்லாக்கள் கொள்ளும். ஒருவருஷத்தில் 3 சூரியகிரகணமும், 2-சந்திரகிரகணமும் வருவதாகவும், அவற்றில்ஒருசூரியகிரகணம் மதுரை ஜில்லாவிலும் மற்றொன்றுகடப்பையிலும்மூன்றாவது கஞ்சம் ஜில்லாவிலும் தெரிவதாகவும் வைத்துக்கொள்வோம். சந்திர கிரகணங்கள் இரண்டும் ஐரோப்பா ஆசியா ஆப்பிரிக்கா கண்டங்களில் தெரிவதாய் வைத்துக்கொள்வோம், மதுரை கஞ்சம் கடப்பை ஜில்லாக்களில் இருப்பவர்களுக்குத் தவிர மற்ற தேசத்தாருக்கு சந்திரகிரகணங்கள் இரண்டு மாத்திரம் தெரியுமே ஒழிய சூரிய கிரகணம் தெரியாது. மதுரையிலாவது, கஞ்சத்திலாவது, கடப்பையிலாவது இருப்பவர்களுக்குக்கூட ஒரு சூரிய கிரகணம் தான் தெரியும். ஆனால் சந்திர கிரகணங்கள் இரண்டும் தெரியும். ஆகையால் சூரிய கிரகணங்களைவிட சந்திர கிரகணங்கள் ஒருகுறிப்பிட்ட தேசத்தில் அதிகமாயிருப்பதைக் காண்கிறோம். திருக்ஸித்தாந்த பஞ்சாங்கங்களில் ஒவ்வொரு வருஷத்திற்கும் போட்டிருக்கும் கிரகணங்களைப் பார்த்தால் சூரிய கிரகணங்கள் ஜாஸ்தியாய்ப்போட்டும் ஆனால் அவைகளில் பெரும்பான்மை நமக்குத்தெரியாது வேறுதேசங்களில் தெரியும் என்று போட்டிருப்பதை யாரும் பார்க்கலாம்.

10. சூரியகிரகணம் கொஞ்சநிமிஷ நேரந்தானிருக்கும். சந்திரகிரகணமோ வென்றால்சுமார் ஒன்றேமுக்கால் மணிநேரம் வரையிலும் நீடித்திருக்கும். சந்திரகிரகணம் பூர்ணமாயிருக்கும்பொழுது கூட பூராவாக மறைந்துபோகாமல் தாமிரவர்ணத்தோடு பிரகாசிக்கிறதைப் பார்க்கலாம். இதற்குக்காரணம் என்ன? அந்த தாமிரவர்ண பிரகாசம் எங்கிருந்துவருகிறது. சந்திரனுக்கோ சுயமான ஒளிகிடையாது. சூரியனிடமிருந்து ஒளி இரவல்வாங்கி பிரகாசிக்கிற சந்திரன் சூரியகிரகணம்படாதபடி பூமியின் நிழலுக்குள் போயும் புதிதான வர்ணத்தோடு மந்தமாய் பிரகாசிப்பது ஏன்? ஒருவேளை சந்திரனுக்கு சொந்த ஒளியும் உண்டோ? கிடையாது. பூமியைச் சுற்றியிருக்கும் ஆகாச மண்டலத்தின் வழியாய் ஊடுருவிச் செல்லும் சூரியகிரணங்கள் வளைந்து பூமியின் நிழலுக்குள் பாய்ந்து அங்கிருக்கும் சந்திரனுக்கு மந்தமான பிரகாசத்தைக் கொடுக்கின்றன. அப்படியானால் சந்திரனுடைய காந்தி தாமிரவர்ணமாயிருப்பதற்கு என்ன காரணம்? இந்தத் தோற்றம் நமக்கு அபூர்வமானதன்று. உதயத்திலும் அஸ்தமிக்கும்பொழுதும் சூரியன் சிவப்புவர்ணமாயிருப்பதை எல்லாரும்பார்த்திருக்கலாம். அதற்குக் காரணம் என்னவெனில் காலையிலும் மாலையிலும் சூரியகிரகணங்கள் நாம் வசிக்கும் பூமியின் வாயுமண்டலத்தின் அடர்ந்த பாகத்தை ஊடுருவி வருவதினால் வாயுபகவான் சூரியகிரணங்களில் உள்ள ஏழுவர்ணங்களில் சிவப்புவர்ணம் தவிர மற்றவர்ணங்களை விழுங்கிவிடுகிறார் என்றும் அதனால் தான் சூரியன் சிவப்பு நிறமாய்த் தெரிகிறதென்றும் 'ஜடதத்துவ' சாஸ்திரத்தில் (Physics) சொல்லப்பட்டிருக்கிறது. காலை மாலைகளில் சூரியகிரணங்கள் ஊடுருவும் வாயுமண்டலத்தைவிட சந்திரனிடம் போகும் கிரணங்கள் இரண்டுமடங்கு வாயுவை ஊடுருவுகின்றன. ஆகையால் தான் சந்திரகிரகணத்தில் சந்திரன் தாமிரவர்ணமாய் பிரகாசிக்கிறது.

11. சீன தேசத்தார் கிரகணங்கள்வரும்பொழுதெல்லாம் அவைகளை தேசத்திற்கு வரும் கேடுகளுக்கு பெரிய குறிகளாக எண்ணி பயந்து தாள மேள கோஷங்களினால் கிரகணபீடைகளை விலக்கப் பார்க்கிறார்கள். பூர்ண சூரியகிரகணங்களுண்டாகுங்கால் தோற்றும் காந்தியைப்பற்றி விவரித்தபின் சீனர்கள் கிரகணங்களைக்குறித்து பயப்படுவதற்கு காரணம் கேட்கவும் வேண்டுமோ! இப்பேர்ப்பட்ட பயங்கரமான காக்ஷியானது படித்து நாகரீகமடைந்தோர்களுக்கே வியப்பையும் பயத்தையும் உண்டாக்குமாகில் கிரகணங்கள் இன்ன விதமாய் உண்டாகிறது என்று மர்மம் தெரியாத நாகரீகமற்ற ஜனங்கள் பயப்படுவது ஆச்சரியமில்லை.

12. 1894ஹு மார்ச்சுமீ 21உ பௌர்ணமியில் ஒருபார்சுவ சந்திரகிரகணமும் அடுத்த

அமாவாசையாகிய ஏப்ரல்மீ 6௳யில் கங்கணசூரிய கிரகணமும் உண்டாகின்றன. இவற்றில் சந்திரகிரகணம் இத்தேசத்தாருக்குத் தெரியும்; ராத்திரி சுமார் 6¾-மணிக்கு ஆரம்பித்து 8½-மணிவரை நீடித்திருக்கும். மேகசஞ்சாரத்தால் சந்திரன் மறைபடாமல் இருந்தால் கிரகணம் நன்றாய்த் தெரியும். கங்கண கிரகணம் நெல்லூரிலும் மைசூரிலும் நன்றாய்த்தெரியும். கங்கண கிரகணம் கண்ணுக்கு மிகவும் நேர்த்தியாயிருக்கும்.

டி. ஆர். கிருஷ்ணசாமி அய்யர்; பி. ஏ.

---

## ஈனக் ஆர்டன் சரித்திரம்.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்குமுன்னே இங்கிலாந்து தேசத்திலே துறைமுக நகரம் ஒன்றிலே ஈனக் ஆர்டன் என்னும் சிறுவனொருவனிருந்தான். இவனுக்கு இணைபிரியாத் தோழர்களாய், இவனுடன் கூடி விளையாட்டயர்ந்துவந்த ஆனி லீ என்னும் பெண்மணியும், பிலிப் ரே என்னும் மாவரைப்போன் மகனும் ஆக இரண்டு சிறுவர்களிருந்தனர். 'ஆனி லீ' என்னும் பெண்மணி அதிரூபலாவண்ணியமமைந்த சிறுமி.

இம்மூவரும் தினந்தோறும் மாலைவேளைகளில் உல்லாசமாய்க் கடற்கரைக்குச் சென்று, சிற்பிகளுங் கண்டு அதிசயிக்கத்தக்க சிறு வீடுகளமைத்துப் பொழுது போக்காக விளையாட்டயர்ந்து வருவதுவழக்கம். அக்கடற்கரையில் கற்பாறைகள் அபரிமிதமாய்க் கிடந்தபடியால், அப்பாறை வெடிப்பொன்றில் இச்சிறு குழந்தைகள் வேடிக்கையாய் இல்லற நடத்திக்காலங்கழித்து விளையாடிவந்தார்கள். ஆண்மக்களான ஈனக் ஆர்டன், பிலிப் ரே என்னும் இருவருள் ஒருவன் மனையாளனாகவும், ஒருவன் விருந்தினனாகவும் நடித்து, ஆனி லீயை இல்லறத்துணைவியாக நியமித்து விளையாடிவருங்கால், 'ஈனக்'குக்கும் 'பிலிப்'புக்கும் சிலவேளைகளில் சச்சரவு நேரிடுவது உண்டு. அச்சமயங்களில் 'ஆனி லீ' என்னும் பெண்மாது கண்ணீர் சொரிந்து அழுது "நீங்களேன் வீண் வழக்கிட்டு நிற்கின்றீர்கள்? உங்களிருவர்க்குமே நாயகியாக விருக்கின்றேன்" என்று சொல்லி அவர்களுக்குத் தேறுதல் பகர்வாள்.

இவ்வாறு விளையாட்டிலேயே இளமைப்பருவங் கழித்தபின்னர், இம்மூவரும் நல்ல வாலிபதசையையடைந்து, ஈனக்கும் பிலிப்பும் அதிசௌந்தரியமுள்ள பெண்மணியாகிய ஆனிலீயின்மேற் காதல்கொண்டு திரிவாராயினர். ஈனக்குக்கு வயது இருபத்தொன்றானவுடன், தான் வெகு சிக்கனமாய்ச் சேகரித்து வந்த சிறுதொகையைக்கொண்டு, படகொன்றுவாங்கி, ஓர் அழகிய இல்லமமைத்து, ஆனி லீயை மணந்து இல்லறம் நடத்திவரத் தலைப்பட்டான். ஆனிலீயோடு வெகு உல்லாசமாய் ஏழுவருஷங் கழித்தபின்னர் ஈனக்குக்கு ஓர்பெண்மகவு உதயமாயிற்று. குழந்தை பிறந்தவுடன் உளம்பூரித்து,

"கேடில்விழுச்செல்வங் கல்வியொருவற்கு
மாடல்மற்றயவை" என

மேலோர் கூறியபடி, புதல்விக்குக் கல்விகற்பிக்க வேண்டுமேயென்னும் கவலைக்கடலுள் மூழ்கிப் பொருள் வருவாய் தேடவாரம்பித்தான். இவ்வாறு இரண்டுவருஷங் கழிந்தபின்னர், கோடிசூரியனைப் போன்ற புதல்வனொருவன் பிறந்தான். இவ்வாண்மகவு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வெகு அருமை பெருமையோடு வளர்ந்துவருநாளில், "பட்டகாலிலேபடும் கெட்டகுடியேகெடும்" என்னும் முதுமொழிப்படி ஈனக்குக்குப் பேரிடிவிழுந்தாலன்ன வோர் ஆபத்து நேர்ந்தது. ஓர் நாள் வழக்கப்படி மரக்கலத்தின் பாய்மரத்திலேறி வேலைசெய்துகொண்டிருக்கும்போது திடீரெனக் கால்வழுக்கிவிழுந்து ஒருகால் ஊனமாயினான். இதனால் வெகுநாள் படுத்தபடுக்கையாய்க் கிடந்து வேலைசெய்ய முடியாமல் பொருள்வருவாய் குறைந்து நாளுக்குநாள் வறுமைப்பிணி யதிகரித்து, உண்ண உண்டியும் உடுக்க ஆடையும் இன்றித் துன்பசாகரத்தில் மூழ்கி, நடுக்கடலில் திசைதப்பிமயங்கு மாலுமியைப்போல் திகைத்து நிற்கு நாளில் ஆனிலீக்குச் சப்பாணிக் குழந்தையொன்று பிறந்தது.

இத்தகைய இடுக்கணால் பீடிக்கப்பட்டு, அல்லும் பகலும் சர்வேசுவரனைத் தியானித்துக் காலத்தைக் கழித்து வருங்கால், ஓர் நாள் தெய்வசங்கற்பத்தால், சீனதேசத்திற்குப் பிரயாணப்பட்டு அங்குவந்திருந்த ஓர் மரக்கலத்தில் ஓர் வேலை காலியாயிருந்தது. அம்மரக்கலத் தலைவன் ஈனக்கின் வறுமைப் பிணியை உணர்ந்து அவனிடத்திற் சென்று அவ்வேலையை அங்கீகரிக்கச் சம்மதமாவெனவினவ, ஈனக் ஆனந்தக் கடலில் மூழ்கி உளங்குளிர்ந்து உடனே சம்மதித்துவிட்டான். ஆனால் தனது ஆசைநாயகியாகிய ஆனிலீயைவிட்டுப் பிரிய மனமிலாது, தான் விட்டுப்பிரியத் துணிந்தாலும் அவள் சம்மதியாளே எனவருந்தி, பிறகு ஒருவாறு தேறுதல்செய்து அவளிடத்திற்சென்று இனியவார்த்தைகளாற் றன் எண்ணத்தைத் தெரிவித்தான். இவ்வாறு தன் நாயகன் எண்ணியிருப்பதைக்கேட்டுக் கண்ணீர் சொரிந்து பிரியவார்த்தை பகர்ந்து, பல்கால் தன் கணவனை முத்தமிட்டு,



மழலைமொழி பகரும் குழவிகளின் முகத்தைப்பார்த்தாவது அவ்வாசையை விட்டுவிடும்படி அவள் வருந்தியும் கேளாது, கப்பலேறிச்செல்வதே நலமென்று உறுதிப்படுத்திக்கொண்டான். கப்பல் புறப்படச்சில வாரங்கள்தானிருந்தன. அதற்குள் ஆனிலீக்குப்பல விற்பனைப்பொருள் சேகரித்து, தனது வீட்டின் முற்புறத்தில் ஓர் கடை நியமித்து, அவளுக்குப் பலவாறு தேறுதல்கூறி மனங்களிக்கச் செய்தான்.

கப்பல் புறப்படும் தினமும் நெருங்கிற்று. அன்று காலை நித்திரையைவிட் டெழுந்து சர்வவியாபகக் கருணைவள்ளலை ஸ்மரித்து ஆனிலீயைநோக்கி "என துயிரினுஞ்சிறந்த ஆசை நாயகியே! யான் உன்னை விட்டுப்பிரிகிறேனென்று சற்றும் வருத்தமுறவேண்டாம். நான் வருவேனென்று எதிர்பார்ப்பதற்கு முன்னேவந்து சேருகிறேன். இதோ மஞ்சத்திலுறங்கும் அருமை மைந்தனை நன்றாய்ச் சீராட்டிப்பாராட்டு. நான் திரும்புங்கால் அவனை என்மடி மீதிருத்தி நானாவித தேசங்களின் அற்புதங்களைக்கூறி அகமகிழும்படி செய்கிறேன். நீ சற்றும் அஞ்சவேண்டாம்" எனப் பற்பல இனியமொழிகளைக்கூறி, அவளை முகத்தோடு முகம்பொருந்த முத்தமிட்டு, சிறுவர்களுக்கு ஆசிகூறி, பால்மணமணக்கும் பசுங்குழவியின் தலைமயிர்ச்சுருள் ஒன்றினை எடுத்துக்கொண்டு, கப்பலேறிப் புறப்பட்டான்.

ஈனக் கப்பலேறிச்சென்ற சிலநாளில் ஆனி லீயின் வர்த்தகம் சிறிது சிறிதாக க்ஷீணித்து, பிரிவுற்ற நாயகன் வரவைப்பற்றி யாதும்அறியாதவளாய்த் துன்பமதிகரித்து, வறுமைப் பிணியால் வருந்துவாளாயினள். இப்படி யிருக்குநாளில் மூன்றாவது பிறந்த சப்பாணிக்குழந்தை நல்லபோஷணையின்றிப் பிணி மேலிட்டு, கூண்டினின்றும் விடுபட்ட பறவையைப் போல் பொள்ளென உயிர்துறந்தது.

இவ்வாறு ஆனி லீக்குநேர்ந்தவறுமைநோயையுணர்ந்து பழைய நட்பினனாகிய பிலிப் ரே என்பவன் நமக்கு நல்லகாலம் பிறந்ததென நினைத்து, அவள் இல்லத்துக்கேகி, மைந்தனிறந்தமையைக்குறித்து மனமுருகியிருக்கும் ஆனி லீயைப்பார்த்து நாணத்துடன் பின்வருமாறு கூறலுற்றனன்: "ஓ மாதுசிரோமணியே! உன் நாயகன் உன்னைவிட்டுப் பிரிவுற்றது மக்கட்குக் கல்விப் பாலையூட்டு நிமித்தம் திரவியஞ் சேகரித்தற்கன்றோ? அவன் திரும்பிவரும் வரையில் உன் குழவிகள் கல்விவாசனையின்றி, அறுத்துவிட்ட குதிரைகளைப்போலல்லவா ஆடித் திரிந்துகொண்டிருத்தல் வேண்டும்? கல்வியின் பெருமை,

"அறம்பொருளின்பம் வீடுபயக்கும்
புறங்கடை நல்லிசைநாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினூஉங்கில்லை
சிற்றுயிர்க்குற்ற துணை."

என்னும் திருப்பாவினால் இனிது விளங்குமன்றோ? மேலும்,

"நெருப்பினுட் டுஞ்சலுமாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பாடரிது" என நாயனார் கூறியபடி, வறுமைப் பிணிமூண்டு வருத்த முறுகின்றனையே. என்னிடத்தோ தக்கபொருட் செல்வமுளது. யான் யாதோ சொற்பதிரவியஞ் செலவிட்டு அவர்களுக்குக் கல்விபயிற்றுவதனால் எனக்குச் சிறிதும் நஷ்டமில்லை. உனக்குப் பிரியமாயின் ஈனக் வந்தவுடன் அப்பொருளை மீண்டுங் கொடுத்தாலுங் கொடுத்துவிடு" எனப் பலவாறு இனிய மொழிகளைக் கூறி அவளைச் சம்மதிக்கச்செய்து, அவளிடத்தில் விடைபெற்று வீட்டுக்கேகினான்.

பிறகு ஆனிலீயின் மக்களைக் கல்விச்சாலைக்கனுப்பி, நல்லசுபமுகூர்த்தத்தில் வித்தியாரம்பஞ் செய்வித்து, அன்னதானம், சொர்னதானமுதலிய சோடசதானங்களையும் இயற்றி, பிள்ளைகட்குப் புத்தகம், ஆடையாபரணங்கள் வாங்கித் தந்து சுகமாய் ஆதரித்து வந்தான். இன்பமாய்ப் பெற்றோனும், இடர்தனைத் தீர்த்தோனும், அன்புடன் அன்னமளித்து இரக்ஷித்தோனும், ஓதுவித்தோனும், உபதேசித்தோனும் இந்த ஐவரும் பிதாவென்று மனுசாஸ்திரத்திற் கூறியபடி, இப்பிள்ளைகளும் இவனைத் தந்தைபோற் பாவித்து இனிது நேசித்து வந்தனர். ஆனிலீக்கு வறுமை நோய் மூண்டிருப்பதால் அவளுக்கும் அடிக்கடி சிற்றுண்டிகள், பண்டுபலாதிகள், நறுமலர்கள் முதலியவற்றைப்பிள்ளைகள்மூலமாய்அனுப்பி உதவி புரிந்து வந்தான்.

இவ்வாறு சிலநாட் சென்றபின், ஓர்தினம் சூரியன் மேற்றிசைக் கடலில் ஆழுஞ்சமயத்தில், ஆனிலீயும் அவள் மக்களும் உல்லாசமாய் வெளியே சென்றிருந்தனர். அப்போது பிலிப் அவள் பாலேகி "ஓ பெண்கள் நாயகமே! என்னை மணஞ்செய்துகொள்வையாயின் சகல சம்பத்துக்களையும் அனுபவித்து என்றும் சுகித்திருக்கலாமே. கப்பலேறிச் சென்ற கணவனும் இன்னும் திரும்பவில்லையே. இதைப் பற்றித் தீர ஆலோசிப்பாயாக" என இன்மொழி பகர்ந்து சென்றான். ஆனிலீக்கு இவனை மணந்துகொள்ள விருப்பமிருந்தபோதிலும் "ஈனக் வந்தால் யாது செய்வது? ஈனக் வந்தால் யாது செய்வது?" எனப் பயமுற்றவளாகி, பிலிப்புக்குப் போக்குச்சொல்லியே தடுத்து வந்தாள். இவ்வாறு இரண்டுமூன்று வருஷங் கழித்த பின்னர் ஓர் நாள் இரவு "தன் கணவனைச்சொர்க்கலோகத்திற் காண்பதுபோல்" கனாக் கண்டு திடுக்கிட்டு விழித்து ஈனக் இறந்துவிட்டதாகத் துணிந்து சற்று மனந்தேறுதலடைந்தாள். பிறகு ஓர் சுபதினம் நியமித்து பிலிப்பை மணஞ்செய்து, அவனுக்கு இல்லறத்துணைவியாய்ச்சுகமாய் வாழ்ந்து

வருநாளில், பிலிப்புக்கு அழகே வடிவெடுத்தாலன்ன புத்திரனொருவன் உதயமாயினன். புத்திரன் பிறந்ததைக்கண்டு அகமகிழ்ந்து, கற்கண்டு வழங்கி, தொட்டிலிட்டுச் சீராட்டிப் பாராட்டி, ஐந்துவயதில் வித்தியாரம்பஞ்செய்வித்து, கணவனும் மனைவியும் மனமொத்து இல்லறத்தை இனிது நடத்தி, அறுசுவையோடுங்கூடிய உண்டியுண்டு, சகல சம்பத்துக்களுடன் சுகித்துவந்தார்கள்.

இது நிற்க, திரைகடலோடித் திரவியந்தேடச் சென்ற ஈனக்கின் கதி எப்படியாயிற்றென்று பார்ப்போம். "தனலக்ஷ்மி" என்னும் கப்பலின்மேல் சீனதேசத்திற்குச் சென்று, அவ்விடத்தில் தனது மக்களுக்கு விநோதப்பொருள்கள் வாங்கி, மீண்டுங் கப்பலேறித் திரும்புகையில், கப்பல் பாறையில் மோதி உடைபட்டு முழுகிப்போயிற்று. அதிலிருந்த அத்தனை உயிர்களும் மாண்டன. தெய்வகதியால் ஈனக்கும் அவன் தோழரிருவரும் தப்பிப் பிழைத்து, மிதந்த கட்டைகளைத் தொத்திக்கொண்டிருந்து கடைசியில் மனித சஞ்சாரமில்லாத ஓர் தீவிற்போய்ச் சேர்ந்தார்கள். அத்தீவோ குடிவளந் தவிர ஏனைய நீர்வள நிலவளங்களாற் செழிப்புற்றிருந்தது. அத்தீவில் ஓர்சிறு குடிசையமைத்து, ஐந்துவருஷங் கழித்தபிறகு ஈனக்கின் தோழரிருவரும் மாண்டனர். அந்தோ! இப்பொழுது ஈனக்குக்கு உண்டான வருத்தம் இவ்வளவவ்வளவல்ல. பேசத்துணையுமில்லை. சிலவேளை தனது இனிய நாயகியை நினைத்து வருந்துவான். சிலவேளை தனது அருமை மைந்தனை நினைத்துக் கண்ணீர் சொரிவான். சில வேளைகளில் தனது ஊரையும் ஊரிலுள்ள பொருள்களையும் நினைத்து மனமுருகுவான். இவ்வாறு சிலகாலஞ் சென்ற பிறகு ஓர்நாள் தனது ஊரின்கோவில் மணிச்சத்தம் கேட்பதுபோலிருந்தது. இதைக் கேட்டு மனந்திடுக்கிட்டு உடல் நடுங்கி, வாய்குளறி, அன்பர்களுக்கு வேண்டுவனவற்றை வேண்டியவாறு கொடுத்து இரக்ஷிக்க வல்ல கருணைக்கடலைக் கண்களில் ஆநந்தபாஷ்பம் பொழியப் பலவாறு புகழ்ந்து நின்றான். தினந்தோறும் கடற்கரையில் நின்று "அந்தோ! ஓர் கப்பலாவதுவராதா? நமதூருக்குச்சென்று நமது நாயகியின் மதிமுகத்தையாவது பார்த்துக்களிப்படையலாமே. மக்களே நீவிர் எப்படியிருக்கிறீர்களோ?" என்று பலவாறு கூறிக் கண்ணீர்விட்டுத் துக்கிப்பான். இவ்வாறு நாலைந்துவருஷம் கழித்த பிறகு, பேசத் துணைவரின்றி ஊர்ப்பேச்சையும் மறந்து துக்கத்தால் மயிர் நரைத்து உடல்முழுதும் ரோமம் வளர்ந்து, தழைகளையுடுத்தி, முகம்வெளிறி ஓர் வனவாசி போலானான்.

இப்படியிருக்குநாளில், ஓர்கப்பல், புயலடித்துத் திசைவிட்டுத் திசைமாறி, அருந்தத் தண்ணீரின்றி, தெய்வானுக்கிரகத்தால் ஈனக் இறங்கியிருந்த தீவிற்கு வந்துசேர்ந்தது. கப்பலாட்கள் ஓர் மலையருவி வீழ்வதைத் தூரத்தே கண்டு இத்தீவிலிறங்கித் தண்ணீர்க்காகப் பலபக்கமும் சிதறியோடினார்கள். மானிடமுகத்தைக் கண்ட ஈனக் மேருமலையைக் கண்டாற்போல் ஆநந்த பரவசனாகி, உள்ளம் புளகாங்கிதமடைந்து, அவர்களுக்கு இனிய நீரோடைகளைக் காட்டி, அவர்கள் தாகந்தணித்து கப்பலிற்றண்ணீர் நிரப்பிகொண்டபின், அவர்களோடுகப்பலேறித் தனது நாட்டைநோக்கிச் சென்றான். போகும் போது தனது வரலாற்றை யாதியோடந்தமாகக் கூற அவர்கள் மனமுருகி இவன் கப்பற்சத்தத்தைத் தாங்களே கொடுத்து இவனைத்தன் ஊருக்குக் கொண்டுபோய் விட்டார்கள்.

துறைமுகத்திற் கப்பலை விட்டிறங்கி நேரே தன் வீட்டுக்குச் சென்று பார்க்க வீடு சாற்றப்பட்டு விற்பனை விளம்பரம் எழுதித் தொங்கவிட்டிருந்தது.

"ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந்தான் முந்துறும்"

எனத்தேவர் கூறியபடி, இதுவும் நமது ஊழ்வினையே யெனத்துக்கித்து, தனக்கு வெகுநாளாய்ப் பழக்கமாயிருந்த ஓர் கள்ளுக்கடையை நோக்கிச் சென்றான். அக்கடைக்காரன் இறந்துபோய், அவன் மனைவி 'மிரியம்லேன்' என்பவள் அக்கடையை வைத்துச் சொற்பஜீவனஞ் செய்து வந்தாள். அவ்விடத்திலேயே சில நாள் தங்கியிருக்கும்பொழுது, ஓர் நாள் அம் 'மிரியம்லேன்' என்னும் கிழவி ஊர்ச்சங்கதிகளைப் பற்றிப் பேசும்போது, மயிர் நரைத்து உடல் வளைந்து உருமாறி இருந்ததனால் இவன் ஈனக் எனத் தெரியாமல், இவ்வூரில் 'ஈனக்' கென்பவன் ஒருவன் தன் மனைவி மக்களை விட்டுப் பொருள் சம்பாதிக்கும் நிமித்தம் தேசாந்தரம் போய்விட்டான். போய் ஏழு வருஷமாகியும் இன்னும் வரவில்லை. அவன் மனைவியாகிய 'ஆனி லீ'யோ இதுவரையும் அவனுக்காகக் காத்து, கடைசியில் 'பிலிப்' என்பவனை மணந்து அவனுடன் இல்லறம் நடத்திவருகின்றாள். ஈனக்குக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. அவற்றுள் மூன்றாங் குழந்தை அவன்போன சிலநாளைக்குள் இறந்துபோயிற்று. இப்பொழுது பிலிப்புக்கும் குழந்தையொன்று பிறந்திருக்கின்றது. ஐயோ பாவம் ஈனக் பிழைத்திருக்கிறானோ இறந்துவிட்டானோ? மனைவி மக்களை விட்டுப் பிரிந்ததும் அவன் தீவினைப்பயனே" எனப் பலவாறு துக்கித்துக் கூறினாள். இதையெல்லாந் தலைகுனிந்து கேட்டுக்கொண்டிருந்த 'ஈனக்' ஒன்றுந் தெரியாதவன்போல் 'ஐயோ! ஈனக் இறந்துவிட்டானா? பாவம், இதுவும் அவன் தலைவிதியே" எனத்தானும் இரக்கத்துடன் கூறிப் பேசாமலிருந்துவிட்டான்.



இப்படியிருக்குநாளில் ஈனக் "ஐயோ! 'ஆனிலீ'க்கு நாம் உயிர் பிழைத்திருப்பது தெரிந்தால், மனம் பதைத்துத் திடுக்கிட்டு வருந்துவாளே. நாமிருப்பதாகக் காட்டாது உயிர் துறப்பதே நன்று" எனத் தனக்குள் தீர்மானித்து மனத்தையொருவாறு தேறுதல் செய்துகொண்டான். ஆயினும் நெடுநாட்பிரிந்த நாயகியைப் பாராதிருக்க யாருக்குத்தான் சகியும். ஆகையால் ஓர்நாள் "அவளது முகதரிசனத்தைக் கண்டாவது இறக்கலாமே" யென நினைத்து 'பிலிப்' வீட்டை நோக்கிச்சென்று புறக்கடைவழியே நுழைந்து சன்னல் துவாரம் வழியாய் எட்டிப் பார்த்தான். குபேர சம்பத்துக்கள் நிறைந்த அவ்வீட்டில், மேஜையின்மேல் வெள்ளிக்கிண்ணங்கள் பிரகாசிப்பதையும் பிலிப்புத் தன்மடியின்மீது குழந்தையை வைத்துக்கொண்டிருக்கத் தன்புத்திரி அக்குழவிக்கு விளையாட்டுக்காட்டி நகைப்பதையும், தனது புத்திரன் அதற்குப் பலவகையான தீமொழி பகர்ந்து களிக்கச் செய்வதையும் கண்டு, எங்கே தன்னைப் பார்த்துவிடுகிறார்களோ என உடல் நடுங்கி, மயிர் சிலிர்த்து, கால்வலி குன்றி நடக்கத்தள்ளாமல், சுவரைப் பிடித்துத் தட்டித் தடுமாறி அடிமேல் அடிவைத்து, தனது இஷ்டதேவதையைத் தியானித்து "ஓ ஜெகத்ரக்ஷகா, அன்பானுகூலா, ஆபத்சகாயா, பார்க்குமிடமெங்கும் நீக்கமறநிறைந்த பரிபூரணமே, கருணைத்தடங்கடலே, யான் அந்நிர்மானுஷியத் தீவிலேயே இருந்திருக்கலாகாதா? அவளுக்கு என் வரவைத் தெரிவிக்காமற் காக்கக்கடவாய், என் வரவு தெரிந்தால் அவள் இல்லறம் பாழாகுமே. என்னை ஏன் அக்கப்பலாட்கள் இங்கே அழைத்துவந்தார்கள்?" என உள்ளங் கரைந்துருகி வீடுபோய்ச் சேர்ந்தான்.

பிறகுசிலநாள்,

"ஆவிற்கு நீரென்றிரப்பினு நாவிற்
கிரவினிளி வந்ததில்"

எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளியபடியே "ஏற்பதிகழ்ச்சி" யென்பதைக் கடைப்பிடித்து, கப்பல் வேலைசெய்து சீவனஞ் செய்துவந்தான். இவ்வாறிருக்குநாளில் தனக்குப் பிணிமேலிட்டு இறப்பதுண்மையெனத் துணிந்து மிரியம்லேனைக் கூப்பிட்டுப் பின்வருமாறு பகரலாயினான்;—"அம்மணீ! எனக்கு மனக்குறை யொன்றுளது. யான் இறக்கிறவரையில் வெளியிடாமல் காப்பதாக ஆணையிடுவையேல் அக்குறையை வெளியிடுகிறேன்" என அவளிடத்திற் சபதம்வாங்கிப் பிறகு தன் வரலாற்றை ஆதியோடந்தமாய்க் கூறி, தான் தான் 'ஈனக் ஆர்டன்' என மொழிந்தான். பிறகு தான் உயிர்போற் காப்பாற்றி வைத்திருந்த மயிர்ச்சுருளை யெடுத்து அவளிடத்திற் கொடுத்து, "என்பிராணன் போனபின்பு இதை 'ஆனி லீ'யினிடத்திற் கொடுப்பாயாக. பிலிப்புக்கும் என்மைந்தனுக்கும் என் ஆசீர்வாதத்தைத் தெரிவிக்கக் கடவாய். என் ஆசைநாயகி என்னை வந்து பார்க்கவேண்டாம், என் சாமுகத்தைப் பார்த்த பிறகும், அவள் உயிர்வாழச் சகிப்பாளா?" என்று கூறி முடித்தான்.

மூன்றுநாளிரவு ஈனக் முகம்வெளுத்து, கண்பஞ்சடைந்து நிர்ச்சலனமாய்க் கிடந்தான். பிறகு கண்ணை மருளவிழித்து க்கைகளைவிரித்து "இதோ கப்பல்! இதோ கப்பல்!!" எனக்கூறிக்கண்ணைமூடிப் பிராணனை விட்டான். பிறகு உறவினரும் ஏனையோரும் ஆறாத்துயர மேலிட்டவராய்ப் பிரேதத்தை வைபவத்துடன் அடக்கஞ்செய்து ஏனைய கிரியைகளையும் வெகு விமரிசையாய் நடத்தினார்கள்.

சை. சிவசங்கரன்.

## வார்த்தைகளின் உபயோகம்.

ஒரு பெட்டிநிறையப் பணம் வைத்துக்கொண்டு உபயோகித்தலையும் கடவுள் நமக்குக் கொடுத்த அரிய சக்தியாகிய வார்த்தைகளின் பிரயோகத்தையும் உவமையிடலாம். பணத்தைக்காட்டிலும் வார்த்தை சிறந்ததுமத்திரமன்று, மட்டாய் உபயோகிக்கத் தக்கது. ஆனால் பொருளுக்கும் வார்த்தைக்குமுள்ள முக்கியமான வித்தியாசம் என்னவெனில், செலவழித்த பணத்தைத் திரும்ப அடையலாம்; வாயினின்றும் வெளியேறிய வார்த்தையைத் திரும்பஅடைவது ஒருவராலும் ஆகாது. செலவழித்ததனால் வரும் பயனை நாமே அனுபவித்துத் தீரவேண்டும். இவ்வளவு அரிய பொருளைப்பற்றிக் கொஞ்சம் எழுதப்புகுவது வீண் போகாது.

சிலவேளை நாம் சற்றும் யோசியாமல் பேசும் வார்த்தைகள் நல்ல பயன் விளைக்கலாம். போஜனமானபின் வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கையில், சில கெட்டவார்த்தைகள் பேசினாலும் பேசியவனுக்குக் கெடுதி வருவதில்லை. தேவதூஷணம் கோள் முதலிய பெருங் குற்றங்களும் அவ்வேளையில் விளையாட்டாக எண்ணப்படுகின்றன. ஆனால் பெரும்பாலும் கருதாது பேசும் வார்த்தைகள் கெடுதிக்கே காரணமாகின்றன தன் மனதில் தோன்றும் எண்ணங்களைத் தோன்றியவாறே வெளியிடுவதால், அவர்களுக்குப் பெரும்பாலும் துன்பம் உண்டாகிறது. கண்ணைமூடிக்கொண்டு கல்லைவிட்டெறிந்தால், அக்கல் எறிந்தோன் மனதில் கொஞ்சமேனும் நினைத்திராத குறிகளில்போய்த் தாக்குகிறது. அதுபோல, யோசனையின்றிப் பேசும் பேச்சுகள் கேட்போர் மனதைக் களிப்பித்துத் துக்கநிவர்த்தி செய்தாலும் செய்யலாம்; இல்லாவிடில் கேட்

போர் துன்பத்தைப் பெரிதாக்கி மனதைச் சுட்டாலும் சுடலாம். இப்படி நினைத்து ஆராயுங்கால் மனிதர் மனத்துன்பத்துக்கும் இன்பத்துக்கும், சண்டை சமாதானத்துக்கும் வார்த்தைகளே ஆதாரமாகின்றன.

இங்கு கூறிய காரணங்களால் நாம் பேசும் முன்னம் இரண்டுதடவை யோசித்துத்தான் பேசவேண்டும் என்று தெரிகிறது. பேசுங்கால், யோசிக்கவேண்டியது காலம் இடம் என்னும் இரண்டையுமே. யாவரும் துக்கத்திலமிழ்ந்தி யிருக்கையில், பரிகாசமாயாவது, சந்தோஷமா யிருக்கையில், தூஷணமாயாவது யோசித்தன்றியில் பேசக்கூடாது. இதைக்காட்டிலும் முக்கியமாய், நாம் யாருடன் சம்பாஷிக்கிறோமோ அவர்கட்கும் நமக்குமுள்ள தாரதம்மியத்தை யுத்தேசித்துப்பேசவேண்டும். நம்மிலும் அறிவிற்சிறந்தபெரியோர்முன் டம்பமாயும் அற்பமாகவுமாவது, அல்லது, நம்மோடொத்தவருடன் கர்வமாகவாவது, நம்மிற்றாழ்ந்தவரிடம் மரியாதை குறையும்படியாவது, வாயைத்திறப்பது கூடாது.

“கடவுள் நமக்கு இரண்டு செவியும் ஒருவாயும் கொடுத்தது நிறையக்கேட்கவும் குறையப்பேசவும் தான்” என்று சொன்ன சாஸ்திரியைப்பற்றி யாவரும் கேட்டிருக்கலாம். இருந்தாலும் சிலர் எங்கே போனாலும் வாய்சலியாமல் பேசி மற்றோரைப்பேசவிடாதபடி பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுவார்கள். அப்படிப் பேசுவதெல்லாம் கேட்போர்க்கு அறிவு புகட்டுவதற்கன்று. தங்கள் சமர்த்தை வெளியிட்டு யாவரும் தலையசைத்து மெச்சுகிறார்களா வென்று பார்த்துத் திருப்தியடையவோ, அல்லது வேறு யாதாமொருவர் பேசினால் தன்னுடைய மதிப்புக் குறைந்து போகுமோ என்றபயமோ, இவ்விரண்டிலொன்றினால்தான். இப்படிச்செய்வதனால் இரண்டு தீமைகள் விளைகின்றன. தன் மரியாதை குறைவதுமன்றித் தன்னைக் கண்டோர் மனதில் ஒருஅருவருப்புண்டாகும்படி நேரிடுகிறது. மேலும், மற்றோர் மூலமாய்த் தான் கேட்டு அறியும் அறிவையும் இழக்கிறான். உதாரணமாக, இக்காலத்திலும், கற்றோர் சிலர் கர்வங்கொண்டு மற்றோரிடத்தில் தம் பெருந்திறங்களை யெடுத்து வியந்து கொள்வதனால், படிப்பினால் கர்வம் வந்து விடுமென்று ஜனங்கள் நினைக்கிறார்கள். இக்குற்றங்களினின்றும் தப்புவித்துக் கொள்ளவேண்டுமானால், நாலு பேருடன் கூடியிருக்குங்கால், அவர்கள்மனதிலும் வெறுப்புண்டாக்காமல் தானும் பேசாமல், எவ்வளவுதூரம் இருக்கக்கூடுமோ அவ்வளவு தூரம்பேசாமலிருப்பது நலம்.

இன்னதொன்று குறித்துப்பேசாது, பொதுவில் விளையாட்டுக்காகப் பேசுகையிலும் எச்சரிக்கையுடன் பேசவேண்டும். விருந்துண்டபின் விகடகவியைக் கூப்பிட்டுக் களிப்படைவதுண்டல்லவா? அப்படிப்பட்ட வேளையிலும் கெட்டவார்த்தைகள் நழுவவிடப்படாது. இனிய வேளைகளில் சிலர் தேவதூஷணம் மததூஷணம் முதலிய செய்தல் தீங்கல்லவென்று நினைத்தல் பிசகு. பொழுதுபோக்குவதிலும் கூடக் குளிர்ந்தவார்த்தைகள் பேசுவது எவ்வளவோ நன்மையைக் கொடுக்கும்.

வேறொரு மனிதனைப்பற்றிப் பேசுகையில் மிகக் கவனமுடையவர்களா யிருக்கவேண்டு. ஒருவன் நல்லவன் கெட்டவன் என்று சொல்வது இலேசான காரியமல்ல. நாம் எப்படியும் மனிதராய்ப் பிறந்ததனால் ராகத்துவேஷங்களுக்குட்பட்ட அடிமைகளாதலால், மற்றோனைப் புகழ்ந்தோ, இகழ்ந்தோ பேசுவது பெரும்பாலும் தப்பிதமாயிருக்கும். ஒருவரில்லாத இடத்து அவனை யிகழ்ந்துரைப்பது பெரிய குற்றம் ஆகையினால் பிறனைப்பற்றிப் பேசுகையில், அவர் நமக்குச் செய்த உபகார அபகாரங்களை மாத்திரம் மதிப்பிடாமல், பலசந்தர்ப்பங்களையும்யோசித்துச் சொல்லவேண்டும்.

கடைசியாக, இவ்வுபநியாஸம் முழுவதையும் இனியவார்த்தையே பேசவேண்டும்என்னும் ஒரு சொல்லில் அடக்கிவிடலாம். ஏழைகள் வந்து இரக்கும் போது கூட,த் துன்முகனாய்க்கடுஞ் சொற்கூறியனுப்புதல் பேசியவனுக்கும் கேட்பவனுக்கும் இன்பத்தைக் கொடுக்கும். கொடுஞ்சொற் கூறுவதனால் கேட்டவனுக்கும் துன்பத்தைக் கொடுத்து, பிறகு நமக்கும் மனநோயையுண்டாக்குகிறது.

“இன்சொலினிதீன்றல்காண்பானெவன்கொலோ
வன்சொல்வழங்குவது”;—குறள்.

யூ. எஸ். இராமஸ்வாமி அய்யர்.

---

## இரண்டு திருடர் கதை.

“பேராசை பெருங்கேடு.”

இரத்தினபுரி என்னும் பட்டணத்தில் சிவன், மாதவன் என்று இரண்டுதிருடர்கள் இருந்தார்கள். அவர்கள் தங்களுடன் பல திருடர்களைச் சேர்த்துக்கொண்டு நெடுங்காலமாக அவ்வூரிலிருந்த தனவான்கள் யாரையும் திருடிக்கொண்டு வந்தார்கள். ஒருநாள் அவர்கள் இருவரும் தம்முள் ஆலோசித்துப் பின்வருமாறு முடிவு கட்டினார்கள். “இதுவரையில் இந்தப் பட்டணத்தை யாம் முற்றக் கொள்ளையடித்துவிட்டோம். இனிமேல் உச்சயினிப்பட்டணத்தில் போய் வசிப்போம். அங்கே அரசனுக்குக் குருவாகிய சங்கரசுவாமி என்பவர் மிகவும் பணக்காரனாக இருப்பதாகக்கேள்வி. அவருடைய பணத்தை அபகரித்தால் நாம் மாளுவதேசப் பெண்களுடன் சுகமாகவாழலாம். அவரிடத்தில் அளவிறந்ததிரவியம் இருந்தும் அவர்



பிராமணர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்திற் கூடப்பாதியைக் கோபத்துடன் பிடித்து விடுகிறபடியால் பிராமணர்கள் அவரை லோபி என்று தூற்றுகிறார்கள். அந்தப்பிராமணனுக்கு இணையில்லாத அழகையுடைய ஒரு பெண் இருப்பதாகக்கேள்வி. அவருடைய பணத்துடன் அந்தப்பெண்ணையும் அபகரித்து விடவேண்டும்.” இவ்விதமாக முடிபு கட்டிக்கொண்டு, தாம் இருவரும் என்ன வேடம்பூணவேண்டுமென்பதையும் ஏற்பாடுசெய்து கொண்டு சிவன், மாதவன் இருவரும் இரத்தினபுரியை விட்டுப் புறப்பட்டார்கள். இருவரும் உச்சயினியைச்சேர்ந்தபொழுது மாதவன் தனது மனிதருடன் ‘ரசபுத்திரனை’ப் போல வேடம்பூண்டு கொண்டு பட்டணத்துக்கு வெளியே ஒரு கிராமத்திற்றங்கினான். சிவன் என்பவன் ஒரு சன்னியாசிபோல் வேடம் பூண்டுகொண்டு அந்தப் பட்டணத்துக்கு முதலிற் சென்றான். அங்கு சென்று சிப்பிரையாற்றின் கரையில் ஒரு குடிசையிற்றங்கி அங்கே யாவருங்காணும்படியாகக் கழிமண்ணும், தர்ப்பைப்புல்லும், பிட்சையெடுக்குங் கமண்டலமும், ஒரு மான்தோலும் வைத்திருந்தான். காலையிலெழுந்து உடம்பெல்லாங் கழிமண்ணைப்பூசிக்கொள்ளுவான். அதன்மேல் ஆற்றிலிறங்கி நெடுநேரம் தலை கீழாக நிற்பான். ஸ்நானம் முடிந்ததன்மேல் நெடுநேரம் சூரியனைப்பார்த்துக் கொண்டு நிற்பான். அதன்மேல் சுவாமி சந்நிதானத்துக்குச்சென்று, தர்ப்பைதரித்து, பத்மாசன மிட்டிருந்துகொண்டு தோத்திரங்கள் சொல்லுவான். அதன்மேல் வெண்மலர் கொண்டு அர்ச்சனை செய்து பின்னுந் தோத்திரஞ் சொல்லிக்கொண்டிருப்பான். மறுநாள் மான்தோல் தரித்துக்கொண்டு பிட்சைக்குப் புறப்பட்டு வாய்திறந்து பேசாமலே பிராமணன் வீட்டில் மூன்றுபிடியன்னம் வாங்கி அதை பங்காகப்பிரித்து, ஒரு பங்கைக் காக்கைக்கிட்டு, ஒரு பங்கை அதிதிக்கிட்டு, மற்றொரு பங்கைத்தான் உண்பான். அதன்மேல் நெடுநேரம் ஜெபமாலை வைத்துக்கொண்டு ஜெபஞ் செய்வான். இரவில் அக்குடிசையிற்றனியேஇருப்பான். இவ்விதமாக அவன் தினமும் நடந்து வருவதைப்பார்த்து அவ்வூர்ச்சனங்கள் ஆச்சரியப்பட்டு அவன்மேல் பக்தியும் விசுவாசமுங்கொள்ள, ‘சிவனைப்போலப்பெரிய சன்னியாசியை எங்குங்கண்டதில்லை’ என்னுங்கதை யூரெல்லாம் பரம்பிற்று. சிவன் செய்வது யாவற்றையும் தூதர்களால் அறிந்து கொண்டிருந்த மாதவன் அதன்மேல் பட்டணத்தில் வந்து சேர்ந்து தூரத்திலே ஒரு கோவிலிலிறங்கி இருந்தான். மாதவன் தனது கூட்டத்துடன் சிப்பிரா நதிக்குச் சென்று ஸ்நானஞ்செய்து திரும்பும் பொழுது சுவாமி சந்நிதானத்தில் சிவன் நின்றுதோத்திரஞ்செய்வதைக்கண்டு அவன்காலில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, அங்குநின்றயாவருங்கேட்கும்படியாக “இவரைப் போன்ற ஒரு சன்னியாசி உலகத்தில் வேறு கிடையாது. ஒருஸ்தலத்திலிருந்து மற்றொருஸ்தலத்துக்கு இவர் செல்வதை நான் பல முறையுங்கண்டிருக்கிறேன்” என்று சொன்னான். சிவன் மாதவனைக்கண்டும் தலைசிறிதும் வணங்காது முன்னிருந்தபடியே இருந்தான். மாதவனும் தனது இடத்திற்குச் சென்றான். அன்றிரவு இருவரும்ஒன்றாகச்சேர்ந்து உண்டு களித்து அதன்மேல் தாம் செய்யவேண்டியது யாதென ஆலோசித்துக்கொண்டார்கள். விடிய ஒருசாமத்திற்கு முன்னர் சிவன் தனது குடிசைக்குச் சென்றான். காலையில் மாதவன் தனது கூட்டத்தாருள் ஒருவனையழைத்துச்சொன்னான்: “இந்த வஸ்திரமிரண்டையும் எடுத்துக்கொண்டு சென்று அரசனுக்குக் குருவாகிய சங்கரசுவாமி என்பவருக்கு அவற்றைவெகுமதியாகக்கொண்டு அவரிடத்தில் சொல்: “மகாப்பிரபு! தக்காணத்திலிருந்து மாதவன் என்னும் ‘ரசபுத்திரர்’ ஒருவர் தனது பந்துக்களுடன் கோபித்துக் கொண்டு வந்திருக்கிறார். அவரோ மிகுந்த பாக்கியவான். அவரைப்போன்ற ‘ரசபுத்திரர்’ சிலர் அவருடன்கூட வந்திருக்கிறார்கள். அவர் தங்கள் அரசனிடத்தில் வேலையாயமரவேண்டு மென்று விரும்புகிறார். அவர் தங்களைக்காணும்படியாக என்னை யனுப்பிவைத்தார்.”

மாதவனாலனுப்பப்பட்ட திருடன் வெகுமதிகளைக் கொண்டு குருவினிடத்திற்சென்று நல்ல சமயம்பார்த்து அவற்றைக்கொடுத்து மாதவன் சொல்லச்சொல்லியதையுஞ் சொன்னான். அவரும் வெகுமதி பெற்ற சந்தோஷத்தினாலும் பின்னும் வெகுமதி வருமென்னும் எண்ணத்தினாலும் அவன் சொல்லியது யாவற்றையும் நம்பினார். திருடனும் திரும்பிவந்து விட்டான். மறுநாள் மாதவன் தானே குருவைக்காணச் சென்றான். அவன் கூட்டத்தாரும் ‘ரசபுத்திரர்’ போலவேஷந்தரித்து கையில் கதையேந்தினவராய், உத்தியோகம் விரும்பிச் செல்பவர்போல் மாதவனுடன் சென்றார்கள். மாதவன் தான் வந்திருப்பதாக ஒரு தூதனையனுப்பியறிவிக்க குரு மிகுந்த ஆனந்தத்துடன் வந்து எதிர்கொண்டு அழைத்துச்சென்றார். மாதவன் அவருடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து பின் தன் வீட்டுக்குச்சென்றான். மறுநாள் குருவுக்கு இரண்டு வஸ்திரம் வெகுமதியாக அனுப்பிஅவரிடஞ்சென்று “யானோ பணக்காரன் என்னுடன் கூட வந்தவர்களுக்காகவே யான் உத்தியோகம் விரும்புவது. அதற்காகவே யான் உம்மிடம் வந்தேன்” என்றான். அதைக்கேட்ட குரு, அவனிடத்திலிருந்து ஏதாவது பெறலா மென்றெண்ணி, அவனுக்கு உத்தியோகஞ் சம்பாதித்துக் கொடுப்பதாக வாக்குத்தத்தஞ்செய்து, அரசனிடத்துச் சென்று வேண்டிக்

கொள்ள அரசனுங்குருவின் விருப்பப்படி நடக்க இசைந்தான். மறுநாள் அவர் மாதவனையும்அவனைச் சேர்ந்தோரையும் அரசனிடத்தழைத்துச் செல்ல, அவர்களைக்கண்ட அரசன் அவர்கள் 'ரசபுத்திரரோ' என்றெண்ணி அவர்களுக்குச் சம்பளம் ஏற்பாடுசெய்தான். மாதவன் பகலில் சமஸ்தானத்திலிருந்து இரவில் சிவனுடன் கூடிப் பின்செய்வது யாதென்று ஆலோசிப்பான். மாதவனால் லாபமடையலாமென்றெண்ணிக் குரு கேட்டுக்கொண்டார்.

மாதவன் தன்னைச்சேர்ந்தோருடன் குருவின் வீட்டில் போய் வசித்தான். அவன் போலி நகைகளால் நிறைந்தபெட்டியொன்றை குருவின் வீட்டில் ஒரு அறையில்வைத்து அடிக்கடி அதைத்திறந்து அவருக்கு அந்நகைகளைப் பாதிகாட்டியும் பாதிமறைத்தும் அவருக்குப் பேராசை வரும்படி செய்தான். இவ்விதம் நடந்து குரு தன்னை நம்பும்படி செய்துகொண்டதன்மேல், தன்னுணவைக் குறைத்து உடம்பை மெலியச்செய்து நோயாளிபோற்றோற்றினான். சில நாட்கழிந்த பின் குருவைத் தன்னருகிலழைத்து "சுவாமி, நான் மிகவும் நோயாளியாய்விட்டேன். தங்கள் சாதியைச் சேர்ந்தோரில் ஒருவரை அழைத்துவாருங்கள். அவருக்கு என் திரவியமெல்லவற்றையும் யான் தானஞ்செய்து தற்காலத்துக்கும் பிற்காலத்துக்கும் யான் சுகம் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். உயிர் இருப்பது நிச்சயமில்லாதுபொழுது திரவியமிருந்து என்ன பிரயோசனம்" என்றான். குரு உடனே "அப்படியே செய்கிறேன்" என்று சொல்ல மாதவன் அவரை விழுந்து வணங்கினான். பிறகு குரு எந்தப்பிராமணனை யழைத்து வந்தபோதிலும் "இன்னும் பெரியவரா வேணும்" என்றுசொல்லித் தள்ளிக் கொண்டுவந்தான். மாதவனைச் சேர்ந்த திருடரில் ஒருவன் இதைக்கண்டு"சாதாரணபிராம்மணன் அவருக்குச் சரிப்படாது. சிப்பிரா நதிக்கரையிலிருக்கும் சிவன் என்னும் சன்னியாசியை அழைத்து வந்தால் ஒருவேளை சரிப்படலாம்" என்று சொன்னான். அதைக் கேட்ட மாதவன் குருவைநோக்கி சுவாமி தயவுசெய்து அவரை அழைத்து வாரும். அவருக்குச் சரியான பிராமணன் யாருமில்லை" என்றான்.

மாதவன் அப்படிக் கேட்கவே குருவானவர் எழுந்து சிவனிடம் சென்று அவன் அசையாது யோகத்திலிருப்பதைக் கண்டு, அவனைச் சுற்றிப் பிரதட்சணம் வந்து அவனெதிரில் உட்கார சிவனும் மெதுவாகக் கண்ணைத்திறந்தான். உடனே அவர் குனிந்த தலையுடன் "சுவாமி தங்களுக்கு மனஸ்தாபம் வராதிருக்குமேல் தங்களிடத்தில் ஒரு விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறேன். தக்கணத்திலிருந்து மாதவன் என்னும் ஒரு 'ரசபுத்திரர்' இங்கே வந்திருக்கிறார். அவரோ மிகுந்த செல்வர். அவர் சௌக்கியமில்லாதிருப்பதனால் தனது திரவியம்முழுவதையும் யாருக்காவது தானஞ் செய்ய விரும்புகிறார். தாங்கள் பிரியப்படுவீர்களேல் விலையுயர்ந்த இரத்தினாபரணங்களடங்கிய திரவியம் முழுவதையும் தங்களுக்கே தானஞ் செய்வார்" என்றனர். அதைக்கேட்ட சிவன் "ஓ பிராமணா நானோ பிட்சையெடுத்துண்பவன்: நித்தியப் பிரமசாரி: எனக்குத் திரவியம் என்னத்துக்கு" என்றனன். அதைக் கேட்ட குரு சொல்வார்: "சுவாமி அப்படிச் சொல்லவேண்டாம். பிராமணர்க்குரிய சகல ஆச்சிரமங்களும் நங்களுக்குத் தெரியாததல்ல. ஒருவன் ஒருபெண்ணை விவாகஞ் செய்து கிரகஸ்தனாயிருந்து பிதிர்க்கடன் முடித்து, விருந்தினர்க்கன்னமளித்து, கடவுளர்க்குப்பலிகொடுப்பதனால் தர்மார்த்த காமம் என்னும் மூன்றையும் பெறுகிறான். ஆகையால் கிரகஸ்தாச்சிரமமே சிறந்தது." அதற்குச் சிவன்: "நான் எப்படி விவாகஞ்செய்வேன். இழிந்த குலத்துப்பெண்ணை யான் விவாகஞ் செய்யமாட்டேன். அதைக் கேட்ட குரு பேராசைகொண்டு அவனது செல்வம் முற்றையும் தான் அனுபவிக்கலாமென்றெண்ணி, "விநயசுவாமினி என்று எனக்கொருமகள் இருக்கிறாள். அவளோ சிறந்த ரூபவதி. அவளைத்தங்களுக்கு விவாகஞ் செய்து கொடுக்கிறேன். மாதவன் தங்களுக்குத்தானமாக் கொடுக்கும் திரவியம் முற்றையும் யான் வைத்துக் கொள்கிறேன். ஆகையால் கிரகஸ்தாச்சிரமத்தை ஏற்றுக்கொள்ளும்" என்றார். அதைக் கேட்ட சிவன் தனது விருப்பம் நிறைவேறியதைக் கண்டு "பிராமணரோ உமக்கது பிரியமானால் நீர் சொல்கிறபடி யான் செய்கிறேன். ஆனால் நானோ சன்னியாசி; எனக்குப் பொன்னைப்பற்றியும் ஆபரணங்களைப் பற்றியும் ஒன்றும் தெரியாது. நீர் சொல்கிறபடி நான் நடக்கிறேன். உமது விருப்பம்போலச் செய்யும்" என்றான். அதைக் கேட்டு குரு மிகுந்த சந்தோஷமடைந்து, அதற்கிசைந்து சிவனைத் தன் வீட்டுக்கழைத்துக் கொண்டு சென்றார். மாதவனிடத்தில் தான் செய்ததை அவர்சொல்ல அவன் அவரை மிகவும் போற்றினான். உடனே அவர் தான் அருமையாவளர்த்த பெண்ணைச் சிவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தார். விவாகம் முடிந்த மூன்றாம் நாள் தானம்பெறும்பொருட்டுச் சிவனை மாதவனிடத்தில் அழைத்துக் கொண்டுபோனார். மாதவன் உடனே யெழுந்து சிவனது பாதங்களில் விழுந்து 'யாவராலும் அறியக்கூடாத மகிமையையுடையரோ உமக்கு நமஸ்காரம்' என்று சொல்லிக் கிரமப்படியே போலி நகைகள் நிறைந்த பெட்டியை அவனுக்குத் தானஞ் செய்தான். சிவன் அதை வாங்கிக் குருவின் கையிற்கொடுத்து "இதைப்பற்றி எனக்கொன்றுந் தெரியாது; உமக்குத் தெரியும்." என்று சொல்லக், குரு: "இதற்கு யான் முன்னமே இசைந்துகொண்டேன்; நீர் கஷ்டப்படத் தேவையில்லை" என்றார். சிவன் அவர்களை ஆசிர்வதித்து எழுந்து தன் மனைவியிருக்கும் அந்தப்புரத்துக்குச் சென்றான். குருவும் பெட்டியைக் கொண்டுபோய்ச் சாக்கிரதையாவைத்தனர். மாதவன் மறுநாள் சிறிது சௌக்கியமடைந்தவனாகத் தோற்றி, தான் தானங் கொடுத்ததனாற்றான் தனது துன்பம் நீங்கிற்றெனச் சொல்லி குரு தன்னிடத்தில் வந்தபொழுது 'இந்த நன்முயற்சியில் நீர் எனக்குத் துணை நின்றபடியாற்றான் இத்துன்பத்தினின்றும் நான் நீங்கினேன்' என்று சொன்னான். சிவனுடைய மகிமையாற்றான் தன் நோய் நீங்கிற்றெனச் சொல்லிச் சிவனுடன் சிநேகங் கொண்டாடினான். சிலநாட் சென்றபின் சிவன் குருவிடத்தில் "இவ்விதமாக உமது வீட்டில் நான் எத்தனை காலைக்கிருப்பது. அந்த ஆபரணங்களெல்லாவற்றையுமெடுத்துக் கொண்டு எனக்குப் பணங்கொடுத்தாலென்ன? அவை விலையுயர்ந்த ஆபரணங்களானால் நியாயமான விலைபோட்டு எனக்குக் கொடும்" என்றான். குருவும் அதற்குச் சம்மதித்து தன் ஆஸ்தியைப் பார்க்கிலும் அவ்வாபரணங்கள் விலை கூடியனவெனக்கருதி அவ்வாபரணங்களுக்குப் பதிலாகத் தனது ஆஸ்தி முழுவதையுங் கொடுத்து, பணம் பெற்றுக்கொண்டதற்குச் சிவனிடத்திலிருந்து ஒரு பத்திரம் பெற்றுக்கொண்டு, ஆபரணங்களைப் பெற்றுக்கொண்டதற்குத் தானுமொரு பத்திரங்கொடுத்தார். பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு சிவன் வேறுவீட்டுக்குப்போனான். சிவனும் மாதவனும் ஒன்றாகவசித்து குருவின் பணத்தைச் செலவழித்துச் சுகமாகவாழ்ந்தார்கள். சிலநாட் சென்றபின் பணந்தேவையாயிருந்தமையால் குரு அவ்வாபரணங்களில் ஒன்றை விற்கும் பொருட்டுக் கடைக்குப்போனார்.

அங்கிருந்த வியாபாரிகள் அவ்வாபரணத்தைப்பரிசோதித்து "ஆ! இந்த ஆபரணத்தைச் செய்தவன் யாராயிருந்தாலும் மிகவுங்கெட்டிக்காரன். இந்த ஆபரணத்தில் கண்ணாடியும் வர்ணங்கொடுத்த கல்லும் பித்தளையினாற் கட்டப்பட்டிருக்கின்றன. இதிற் பொன்னுமில்லை, இரத்தினமுமில்லை" என்றனர்.

அதைக்கேட்ட குரு திடுக்கிட்டு வீட்டுக்கோடிப் போய் ஆபரணங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வந்து வியாபாரிகளுக்குக் காட்ட அவர்கள் அவையெல்லாம் போலிநகையென்றே கூறினர். அதைக்கேட்ட குரு இடிவிழுந்தவர் போலாகிச் சிவனிடத்தில் ஓடிப்போய் "உனது ஆபரணங்களை யெடுத்துக்கொண்டு எனது பணத்தைக்கொடு" என்றனர். சிவன் அதற்கு மறுமொழியாக "உமது பணம் இது வரைக்கும் என்னிடத்தில் எப்படியிருக்கும்?



எல்லாம் செலவாய்ப்போயிற்று" என்றான். என்று சொல்ல,இருவரும் சண்டைபோட்டுக்கொண்டு அரசனிடத்திற் சென்றார்கள். மாதவனும் அரசனுக்குப் பக்கத்தில் நின்றான். அரசனைநோக்கிக் குரு "சிவன் என் வீட்டில்வைத்திருந்த பொக்கிஷம், கல்லுங்கண்ணாடியும் சேர்த்துப் பித்தளையினாற் கட்டிய ஆபரணங்கள் என்று யான் அறியாதிருந்ததைக்கண்டு, என்னைஏமாற்றிச் சிவன் எனது திரவியமெல்லாவற்றையும் அபகரித்துக்கொண்டான்" என்று முறையிட்டார். உடனே சிவன். "அரசனே யானோ குழந்தை தொடக்கம் சன்னியாசி. இவருடையவேண்டுகோளின்படி ஒரு தானம் வாங்க ஒத்துக்கொண்டேன். அதை யான் பெற்றபொழுது இந்த உலகவிஷயம் ஒன்றும் எனக்குத் தெரியாதாகையால் "இந்த ஆபரண விஷயங்களைப்பற்றி எனக்கொன்றுந்தெரியாது. உம்மை நம்புகிறேன்" என்று சொன்னதற்கு "அதற்கு யான்உத்தரவாதி" என்றார். யான் அந்தத் தானத்தை இவர்கையிற் கொடுத்துவைத்தேன். பிறகு இவர் தானே விலைபோட்டு அந்த ஆபரணங்களெல்லாவற்றையும் வாங்கிக்கொண்டார். அவர் ஆபரணங்களைப்பெற்றுக்கொண்டதற்கும், யான் பணம் பெற்றுக்கொண்டதற்கும் எங்களிடத்தில் பத்திரமிருக்கு. இந்தக் கஷ்டகாலத்தில் தாங்கள் என்னைக்காப்பாற்றவேண்டும்" என்றான். சிவன் பேசிமுடிந்தவுடன் மாதவன் குருவைநோக்கி "நீரோ பெரியமனுஷன். பொய் சொல்லாதேயும், நான் செய்த தவறென்ன? உம்மிடத்திலிருந்தாவது சிவனிடத்திலிருந்தாவது நான் ஒன்றும் பெற்றுக்கொள்ளவில்லை. எனது தகப்பனாரிடத்திலிருந்துவந்த திரவியத்தை நான்நெடுநாளாக ஒரு இடத்தில்வைத்திருந்தேன். பிறகு அதையெடுத்துஒரு பிராமணனுக்குத்தானங்கொடுத்தேன். பொன் நல்லபொன் அல்லாது போனாலும், ஆபரணம் நல்லஆபரணமல்லாது போனாலும் கல்லையுங் கண்ணாடியையும் பித்தளையையுங் கொடுத்து யான் பலனடைந்தேன் என வைத்துக்கொள்வேம். நான் முழுநம்பிக்கையுடன் அவற்றைத் தானங்கொடுத்தேனென்பதற்குத்தானங்கொடுத்தபிறகுஎனது கொடிய நோயினின்றும்நான் நீங்கியதேபோதியஅத்தாட்சி" என்றான். மாதவன் சொன்னதைக்கேட்டு அரசனும் மந்திரிகளும் சிரித்துக்களித்தார்கள். சபையிலிருந்தவர்கள் எல்லாம் சிரித்து "சிவனும் மாதவனும் தவறொன்றுஞ்செய்யவில்லை" என்றார்கள். அதன்மேல் குருதன்திரவியத்தை இழந்தவராய்க் குனிந்ததலையுடன் வெளியே சென்றார். பேராசையினால் வரும் துன்பம் இவ்வளவு அவ்வளவோ! சிவனும் மாதவனும் அரசனுடைய பிரியத்தைச் சம்பாதித்தவர்களாய் அங்குநெடுநாளிருந்தார்கள்.

த. சரவணமுத்துபிள்ளை, பி. ஏ.

## பத்மினி.

இந்தியாவின்மீது படையெடுத்து வந்தவர்களோடெல்லாம் அஞ்சாது எதிர்த்து நின்ற ஆண்சிங்கங்கள் ராஜபுத்திரர்களேயாம். அவர்களுள் உதயபுரத்தில் இந்நாளளவும் செங்கோல் கோடாமல் அரசாளுகின்ற ராணுவம்சம் மிகச் சிறந்தது. இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழாண்ட மகா மோகலாயர் மற்ற க்ஷத்திரிய ராஜாக்களின் வீட்டுப் பெண்களை மணம்புரிந்ததுபோல ராணுவின் மகளை விவாகஞ்செய்து கொள்ளும்படி தங்களா லியன்றமட்டும் பார்த்தார்களென்றாலும் ஒன்றும் பலிக்கவில்லை. அவர்கள் தங்களை சூரியவம்சத்தி லவதரித்த ராமனுடைய சந்ததியார்களென்று புராண வம்சாவளிக் கிரமமாக எடுத்துக் காட்டுகிறார்கள். ஆஜ்மீர் நாட்டிலுள்ள மலைக்கோட்டைகளுளெல்லாம் சித்தூர் பலமானது. அதன் சுற்றளவு நான்குமைலுக் கதிகமுள்ளது. அதன்கீழ் அதைச் சுற்றிலும் அழகிய ஆறு ஓடுகின்றது. அம்மலையினின்றும் ஓர்அருவிஇடைவிடாது பெருகி வெகு உயரத்தினின்றும் அவ்வாற்றில் விழுகின்றது. கோட்டையின் கீழே அதன் நான்குப் பக்கங்களிலும் அம்மலையருவி பாயும் நெல்வயல்கள் சூழ்ந்திருக்கும். எத்தனை பலமான முற்றுகை போடப்பட்டாலும் வெகுகாலமளவும் உறுதியாக நின்று தாங்கத் தக்க சாதனங்களெல்லாம் அங்கேயுண்டு. அது மேலே சமனானபூமியுடைய தாதலாலும், வேண்டிய வளவுக்கு உணவுப் பொருள்களைச் சேர்த்துவைத்துக் கொள்ளக்கூடுமாதலாலும், நல்லஜலத்துக்குக் குறைவில்லை யாதலாலும், குதிரை ராணுவந் தங்கியிருப்பதற்கேற்றது.

இந்தியாவிலுள்ள அரசர்களையெல்லாம் எளிதில் வென்றசக்கரவர்த்திஅலாவுடீன் ஆக்பர்சித்தூர்க்கோட்டையைப்பிடிக்கவேண்டுமென்று நெடுநாளாகமுயற்சிசெய்து கொண்டிருந்தான். அதையாண்ட ராணுவின் மனைவி பத்மினி மிக்க அழகுடையவளென்றும், அவளுக் கிணையாவார் இப்புவியி லெங்குமில்லையென்றுங் கேட்டது முதற்கொண்டு அவன் நினைவெல்லாம் அவள்மீது சென்று, எந்த விதத்தினாலாயினும் அவளைத்தன் வசப்படுத்த வேண்டுமென்று நிச்சயித்தான். அலாவுடீன் சித்தூரை முற்றிக்கைபோடுவதற்கு முன்னே ராணுவினிடம் தூதனுப்பி, தனக்குக் கோட்டையைப் பிடிக்கத்தான் வேண்டுமென்று அத்தனை பேராசை யில்லையென்றும், இவ்வுலகனைத்தையும் தனது புஜபல பராக்கிரமத்தால் ஒரு குடைக்கீழாளுகின்ற தனக்கு மகாசௌந்தரிய வதியாகிய பத்மினியைத் தனக்குக் கொடுத்து விடுவானாயின் வீணே சண்டைசெய்து கோட்டையை யிழந்துபோகாம லிருக்கலாமென்றுஞ் சொல்லியனுப்பினான்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் பகைவன் தன்னிலும் பலமடங்கு பலமுடையவனென்றாலும் சிறிதுங் கலங்காமலும், பிறரோடு யோஜியாமலும் தனது ஆருயிர்க் காதலியோடுமட்டுஞ் சொல்ல, அந்தக் கற்புடைத் தேவி நெஞ்சம் புழுகி "பிராணநாதா! நீயென்னை அந்தக் கொடும்பாவியிட மனுப்புவது கூடுமோ? எவ்வளவு பலமான முற்றுகை போட்டாலும் அவனைக்கோட்டைப் பிடித்துக் கொள்ளாமற் செய்து, அவன் துர்ப்புத்திகொண்டு என்னைப் பெற விரும்பியிருக்கிற ஆசையை அழிக்க வல்ல சாதனங்கள் இந்தச் சித்தூரில் இல்லாமலா போயின? அப்படிக்கின்றித்தாங்கக்கூடாமல்விபத்தின்மேல் விபத்துண்டாகுமாயின் விசனப்படாமல் பிராணனை விட்டுவிடுவது எனக்குப் பெரிதன்று; உமது காலத்துக்குப் பின்னிட்டு நானிருப்பது கூடாதென்ப தொன்றுமட்டுந்தான் நான் கொண்டிருக்கும் முக்கியமான கருத்து." என்று கண்ணுங் கண்ணீருமாய் நின்று சொன்னாள். உடனே அரசன் வெளியேவந்து அந்தத் தூதனோடு, "ஒற்றனே! இட்சுவாகு வம்சத்தின் பெருமையையார்தானறியார்? உன் அரசனைச்சித்தூருக்குப் போகக்கூடாதென்று அவனுக்குப்புத்தி சொல்லிப்பார்; அவன் அதைக்கேளாமல் காமவெறிகொண்டு அறிவிழந்து சண்டை செய்யத்தான்வேண்மென்றால் என்னோடு சண்டைசெய்ய வரலாமென்றும், எனக்கு என் காதலியைக் காப்பதினுஞ் சிறந்தது மற்றொன் றில்லையென்று நான் சொன்னேனென்றும் சொன்னதாகச் சொல்லு" என்றுசொல்லியனுப்பினான். அலாவுடீன் சக்கரவர்த்திக்கு அத்தனை துணிகரமாய் எவரும் உத்தரஞ்சொல்லத் துணிந்ததில்லை.

இந்தச்செய்தியைக் கேட்டது முதல் அலாவுடீன் தூக்கமின்றி அதுவே விசாரமாய், வெற்றியிற்சிறந்த பெருஞ்சேனை வெள்ளத்தோடு சித்தூருக்குச் சென்றான். அவன் அப்படி படையெடுத்து வருவானென்பதை யறிந்தே முற்றுகையைத் தாங்கும்படிவேண்டு முயற்சிகளையெல்லாஞ் செய்திருந்தான். அன்றியும் அவன் அண்டை அரசனிடம் தூதனுப்பி ஓண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துறத்துவதுபோல் நேற்றுவந்த மகமதியர்கள் நம்மவர்களுக்குள் ஒற்றுமையில்லாமையால் நம்மை வெற்றிகொள்ளுவதுமன்றி, மதப்பேய்கொண்டாடி நம்மையுந் தங்கள் மதத்திற் சேர்த்துக்கொள்ள முயல்கிறார்களானதால் இவர்களை இன்னமும் அடக்காமல் அப்படியே விட்டிருந்தால் அதிசீக்கிரத்தில் இந்துராஜாங்க முழுவதுமே அடியோடு அற்றுவிடுமென்றான். சித்தூருக்கருகேயுள்ள ஜம்மால், தத்தா என்னும் நாட்டரசர் இருவர்மட்டும் ஒன்றுசேர்ந்து சித்தூருக்குவந்து ராணுவின்சேனையோடுசேர்ந்து அலாவுடீனோடுசண்டைசெய்ய வந்தார்கள். ஆயினும் அந்தச் சிற்றரசர்களிருவரும் அலாவுடீனுடைய சேனாஸமுத்திரத்திற் முன்னிற்கமாட்டாமல் தப்பியோடித் தங்கள் நாடுகளிலுள்ள அரணான கோட்டைகளிற்குள்ளேபோய்ப் புகுந்துகொண்டு சித்தூரின் முற்றிக்கை எவ்வாறாகுமோவென்று பார்த்துக்கொண்டிருந்தார்கள்.



அலாவுடீன் சித்தூருக்குஅழைத்துக்கொண்டுபோனசேனைவெள்ளத்தைப்போல ஆடம்பரமானது இந்தியாவில் என்று மிருந்ததில்லை. அவன் தனக்குள்ள விபவங்களையெல்லாம் எல்லோருங்கண்டதிசயிக்கும்படி சித்தூரைச்சுற்றிக் கண்ணுக்கெட்டிய மட்டும் கூடாரங்களை யடித்திருந்தான். எங்கேபார்த்தாலும் நால்வகைத் தானையும் ஏராளமாய் நிறைந்திருந்தன. பொன்னும் மணியும் அங்கெங்கும் பிரகாசித்தன. அவ்வாறு சென்றால் தன் பெருமையைக் கண்டு பத்மினி சந்தோஷித்துத் தன்மேல் மோகங்கொண்டு உவியத்தன்னிடம்வந்துவிடுவாளென்றும், அவள்கணவன் சேனாவெள்ளத்தைக் கண்டு நடுநடுங்கித் தானாகவேசித்தூரையும், பத்மினியையும் தன்னிடம் ஒப்புவித்து விடுவானென்று மெண்ணினான். மானமே தனமாகவுடைய பெருங்குலத்திற் பிறந்த வெற்றிவேந்தனாகிய ராணு தன் கோட்டையின்மேல் நின்று அவன்செய்த ஆடம்பரத்தையெல்லாங் கண்டபோது அவன் சிறிதாயினும் அஞ்சவில்லை.

கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கப்பார்ப்பதுபோல பத்மினியை எளிதில் பெறலாமென்றெண்ணி அலாவுடீன் முதலில் அவளுக்கு ஆசைக்கடிதங்களை யெழுதி அவற்றை அம்புகளின் நுனியில்கட்டி எய்தான். பத்மினி அவற்றைக்காணக் கண் கூசினாள். அலாவுடீன் தன் மனோரதம் நிறைவேறாதென்று கண்டு பொங்கியெழுந்து, அந்தக்கோட்டையை அழித்துச் சுட்டெரிக்க எண்ணித் தன் பீரங்கிகளையெல்லாம் நாட்டிச் சுடக் கட்டளையிட்டான். அவ்வாறு சுடப்பட்ட பீரங்கி வெடிகளின் குறி உயரச் செல்லமாட்டாமல் வீணாயிற்று. இவ்வாறு ஆரம்பத்திலே தானே அவர்கள் பின்னடைவதைக்கண்ட ராஜபுத்திர வீரர்கள் கோட்டையினின்று கீழேநோக்கிப் பரிகாசம்பண்ணினார்கள். அதைக்கண்டு அலாவுடீனுக்கு வெட்கமும் துக்கமும் அதிகமாயிற்று. இந்தமுற்றிகை பன்னிரண்டு வருஷகாலமளவும் நீடித்திருந்ததென்று சொல்லப்படினும் ஆறு வருஷத்திற்குக் குறைவில்லை.

இவ்வாறாக விடாமுயற்சியோடு அலாவுடீன்முற்றுகைபோட்டும், ராஜபுத்திரர்ஓரேபிடிவாதமாகச்சௌரியம் பாராட்டி அலாவுடீன் ஆசையை யொழித்து அந்த முற்றுகையை விட்டுத் திரும்பிப்போகும்படி செய்தார்கள். அலாவுடீன் தனது பராக்கிரமத்தால் அவர்களை வெல்ல வழியில்லையென்று நேரில் கண்டறிந்து கொண்டு தந்திரமாக ஸாம உபாயத்தை நாடினான். அலாவுடீன் ராணுவை வஞ்சித்தற்பொருட்டு, அவன் தனது சிறிய சேனையைக்கொண்டு தனது பெருஞ் சேனையோடு அவ்வளவுகாலமாகச் சிறிதாயினும் அச்சமில்லாமல் கோட்டையைக் காத்தது பேராண்மை யுடைத்தென்றும், அவனோடு எவ்வளவு காலந்தான் தான்சண்டை செய்யினும் போரில்அந்த மகாசூரனைத் தன்னால் வெல்ல ஒண்ணாதென்றும், தான் அந்தக்கோட்டையை விட்டு மானமிழந்து போவதற்கு முன்னே தன்மேல் தயைகூர்ந்துதனக்கு இரண்டு வரங்களை ராணு கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டான். அவற்றுள் ஒருவரம் தான் நெடுங்காலமாக விரும்பிய பத்மினியைஒருதரங்கண்ணாலே தரிசித்துவிட்டுப்போதல்; மற்றொன்று அத்தனை வீரியமாய்த்தன்னோடு எதிர்த்துநின்ற அற்புதமான அந்தக்கோட்டையைப் பார்த்துவிட்டுப் போதல். அதற்கு ராணு முதலாவது வேண்டுகோளுக்கிணங்கச்சம்மதியாமல் தன் கோட்டையை மட்டும் பார்த்துவிட்டுப்போவதில்தடையொன்றுமில்லையென்றும், வேண்டுமானால் அவன் ஐம்பது பெயரோடு வரலாமென்றும் அனுமதி கொடுத்தான். அந்தமட்டுமாவது அனுகூலமாக உத்திரவுகிடைத்ததேயென்று அவன் அதற்குங் குறைந்தவர்களோடுசித்தூரைப்பார்க்கப்போனான்.

அலாவுடீனுக்கு ராணு சித்தூரில் அரசர்க்குரியமரியாதைகளனைத்தையுங் குறைவறச்செய்தான். இந்துக்களுக்குள்ள வழக்கத்தின்படியே அரண்மனைக்குள்ளே அலாவுடீனுக்கு விமர்சையாக விருந்து நடந்தது. இரண்டு அரசர்களும் அதிக பிரீதியாக வார்த்தைசொல்லிக்கொண்டார்கள். அலாவுடீன் வார்த்தை சொல்லுவதில் மிக்க வல்லவனாதல்பற்றி ராணு அவன் வார்த்தையைக்கேட்டு மகிழ்ந்தான். அலாவுடீன் அதுதான் நல்லசமயமென்று அவன் பெருமையைப் புகழ்ந்து அதிகமான சிநேகம்பாராட்டி, பத்மினியை ஒரு நொடிப்பொழுது பார்த்து விட்டுப் போகும்படி கிருபைசெய்தாலும்போதுமென்று வருந்தி வேண்டிக்கொள்ள ராணு மகாதயாளுவாதலால் அவளை நேரில்பார்க்க இணங்காமல் பல நிலைக்கண்ணாடிகள் மூலமாக அவள் பிரதிபிம்பத்தைக் காட்டச் சம்மதித்தான். ஆனால் இப்படிச்செய்யவும் பத்மினிக்குச் சம்மதமில்லை. ஆயினும் கணவன் வார்த்தைக்கு வேறு சொல்லுவது தர்ம்மமல்லவென்று தீராப்பொறியாய் ஒன்று முன் ஒன்றாக வைத்திருந்த பல நிலைக்கண்ணாடிகளில் ஒன்றின் முன் பளிச்சென்று மின்னல் கொடிபோல எதிரே வந்து நின்று விட்டுப்போய்விட்டாள். காமுகனாகிய அலாவுடீன் அவள் ரூபத்தைக்கண்டதுமுதல் அவளே தியானமாயிருந்தான். அவன் கபடியாகையால் தனக்குஅவளி

டத்திலுள்ள ஆசையை வெளியேகாட்டாமல் அடக்கிக்கொண்டு, தனக்கு மிக்க நஷ்டத்தை யுண்டுபண்ணின ஓர் கோட்டையை முறுக்கை போட்டுப்பிடித்துக்கொள்ளப்போக வேண்டுமென்று சொன்னான். அதுவுமன்றி, அவன் ராணாவோடு வார்த்தைசொல்லும்போது பத்மினியின்மேல் தனக்கு ஆசையில்லையென்றும், தான் அவளைப்பாராதிருந்ததற்கு முன்னே ஏதோ பிரமையிருந்ததென்று மறைத்துப்பேசினான். அவனுடைய வஞ்சனையைஅறிந்துகொள்ளாமலே அவன் சொல்வதனைத்தும் யதார்த்தமென்றே நம்பி, அவன் தனக்கென்று கொண்டுவந்திருந்தவைகளைப்பெற்றுக்கொண்டு, தானும் அவனுக்குப் பிரதிசம்மானங்கள் செய்தான். நவரத்தனங்களிழைத்த தன் உடைவாளை அலாவுடன் ராணாவுக்குக் கொடுத்தான்; ராணா விலைபெற்ற ஆபரணங்களை அலாவுடனுக்குக் கொடுத்தான். குறித்திருந்த காலமாயிற்று. அலாவுடன் ராணாவிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பிப்போகும்படி தன்னோடு வந்தநாற்பதுபேர்களோடும் சித்தூரின் கோட்டைவாசலண்டைபோனான். நெஞ்சிலொன்றும் நாவிலொன்றுமாகப்பேசின கள்ளவஞ்சகன் மாயவலையிலகப்பட்டு, மரியாதைக்காகச் சிறிதுதூரம் அவனை வழிகொண்டுசென்று அனுப்பிவிட்டு வரவேண்டு மென்றெண்ணி ராணா அவனோடு குளிரவார்த்தை சொல்லிக்கொண்டேபோனான். அப்பொழுது அலாவுடன்விட்டுப்பிரியமனமில்லாமல் தயங்குவதுபோலப் பாவித்துப்புகழ்ந்துபேசினான். இவ்வாறே ராணா அவனோடு கோட்டைவாசல்மட்டுஞ்சென்றான். அந்தவேளையில்அவன் அலாவுடன்மிக்க நண்பனைப்போல நடித்துதான்கையோடுஇதற்கு முன்னேவேண்டுமென்று யோஜித்தேகொண்டுவந்திருந்த நீளமான முத்தாரத்தை அவன் கழுத்தில்போட்டு, அவனும் அவனோடுகூடவந்திருந்தவர்களும் சங்கேதப்படியே அதைப்பற்றி.பிழுத்து எல்லோருமாக ராணாவைக்கோட்டைவிட்டு வெளியே இழுத்துத்தள்ளிக்கொண்டு போவதைக்கண்டு கோட்டையின் மேலிருந்தவர்கள் திடுக்கிட்டு அவர்கள்மேல் துப்பாக்கி வெடிதீர்ந்தார்கள். ஆயினும் அவன் இமைப்பொழுதிற்குள்ளே குதிரையின்மேலேற்றப்பட்டு மோகல் சேனையின் கூடாரத்துக்குக் கொண்டுபோகப்பட்டான்.

இருந்தாற்போலிருந்து கோட்டைவாசலில் நடந்த அமளியைக்கேட்டு சித்தூரெல்லாம் அல்லோல கல்லோலப்பட்டது. பகைவர் சித்தூரைக்கைப்பற்றிக்கொண்டார்களென்று எல்லோரும் அஞ்சினார்கள். இந்த வேளையில் சத்துருக்கள் ஓரே மண்டாய்க்கோட்டையிற்புகுந்து அதைப்பிடித்துக் கொண்டாலுங்கொண்டிருக்கலாம். பகைவர்கோட்டைக்குள்ளே புகுந்தார்களென்றும்,மகாராஜாவைக்காணுமென்றும் பத்மினியிடஞ்சென்று முறையிட்டார்கள். அவள் தானென்று மெதிர்பாராத அந்தப்பிரமாதத்தைக்கேட்டவளவில் சற்றும்மனஞ்சோராமல் குதிரைமேலேறிக்கையிலேவேலாயுதந்தரித்துச் சேனைக்குமுன்னே சென்று, ஒன்று வெற்றிகொள்ளுகிறது, அன்றேல் போரில் மடிகிறது என்று உறுதிசெய்துகொண்டுயுத்தஞ்செய்யப்புறப்பட்டாள். அவள் அந்தக்கோட்டைவாசலண்டைசெல்லும்போதுதான், அலாவுடன்செய்தமோசத்தினால் தன் கணவன் சிறைப்பட்ட செய்தியைக்கேட்டாள். அவன் பிடிபட்டுச்சிறையானதற்குத்தான் காரணமானதைநினைக்கநினைக்க அவளுக்கு ஆற்றவொண்ணாத துக்கமுண்டாயிற்று. அஞ்சாமையைத்தனக்குத் துணையாகக்கொண்டு துக்கத்தைப்பாராட்டாமல் மனவலிமைகொண்டு வீராவேசத்தினால் "அவர் சுவர்க்கமடைந்தார்;நான் அவரிடத்தில்வைத்திருந்த பாழும் ஆசையே என்பிராணநாதனைக்கொன்றுவிட்டது;மானக்கேடான உடன்படிக்கை செய்துகொண்டுஅவரைச்சிறைமீட்பதைவிடப்பிராணன் போகிறமட்டும் பகைவரோடுபோர்புரிவதுதான்நமதுமரபிற்கேற்ற தர்மம்" என்று சொல்லிக் கண்ணீர்பெருக்காமல் கோட்டையின் அலங்கத்தின்மேல் தன் சேனைக்குத்தலைவியாய் அச்சேனையை நடத்தி சண்டைசெய்ய வாரம்பித்தாள். அழகில் அவளுக்கிணையாவார் ஒருவரு மில்லாதிருந்த வண்ணமே போரிலும் அவளை வெல்லவா ரொருவருமில்லை.

அலாவுடன்ராணாவைப்பிடித்துக்கொண்டபின் அந்தக்கோட்டை நாதனற்றதாய் விடுமென்றும், பின்பு தான் அதை எளிதில் கைப்பற்றலாமென்றும் எண்ணி, அந்தக் கோட்டையிலுள்ளவர்கள் அதையும், அதிலுள்ள பத்மினியையும் ஒப்பிவிக்காவிடில் அதிலுள்ளவர்களையெல்லாம் பிடித்து அவர்களுக்குச் சிரஸாக்கினை விதிக்கப்படு மென்றும், அவ்வூர் கொளுத்திச் சாம்பலாக்கப்படுமென்றும், அவர்களுள் ராணாவின் தலைதான் முதலில் வெட்டப்படுமென்றும் அறிவித்தான். அச்செய்தி அந்த வீரபத்னி செவியிற்பட அவள் அஞ்சாமல் ஆண்சிங்கம்போல் நின்று, அப்படிப்பட்ட மோசக்காரன் கையில் தன் பர்த்தா எப்பொழுது அகப்பட்டாரோ அது முதற்கொண்டே அவரைத்தான் இழந்து விட்டதாயும், அவரைப்பிடித்த கொடும்பாவிகளைப்போரில் வெல்லவல்ல அதிசூரர்கள் தன்கோட்டையில் இன்னும் அநேகருண்டென்றும், தனக்குக் கடவுள் அளித்திருக்கும் வலிமையைக்கொண்டு தன் கணவனரிடமிருந்ததிலும் பெரிதான படையை நடத்தி மோகலாயரோடு போர்புரியச் சித்தமாயிருப்பதாயும் அவனுக்கு உத்தரமனுப்பினாள். அவனிட மிருந்தபோர்த்தலைவர்களத்தனைபேரும் தங்கள் பிராணன்போகிறமட்டும் போர்புரிகிறதேயல்லாமல் கோட்டையை



ஒப்புவிக்கமாட்டோ மென்று ஒரு முகமாய்ச்சொன்னார்கள்.

காயம்பட்ட புலிகள் போல,ராஜபுத்திரர்களுக்கு வீராவேசம் வந்துவிட்டால் தங்கள் பிராணனைத் துரும்பாக நினைத்து அகோரயுத்தஞ் செய்வார்களென்பது அலாவுடன் அறியாததன்று. ஆதலினால் அவன் சாமோபாயத்தினால் மட்டுந்தான் அவர்களைவெல்லக்கூடுமென்றும் அப்படிச்செய்வதற்கு அந்த முற்றுக்கையைப் பலப்படுத்த வேண்டுமென்றுந் தீர்மானித்தான். அலாவுடன் விலையில்லா மாணிக்கங்களா லிழைக்கப்பட்ட ஆபரணங்களையும், பொன்னாடையையும், அவற்றோடு தனக்கு அவள்மேலுள்ள ஆசையை விளக்கிக்காட்டி யெழுதிய பத்திரிகைகளையும் தூதன் வழியாக அவளிட மனுப்பினான். 'உத்தமஸ்திரீகள் தங்கள் கணவரிடத்துச் செய்யவேண்டியவற்றுள் பத்மினி ஒன்றாலுங்குறையின்றி ராணாவுக்குச் செய்ததைக்கண்டு தனக்கு மிக்க சந்தோஷமுண்டாயிற்றென்றும், பதிவிருதையானவர்கள் தம் கணவரைமீட்டற்பொருட்டு என்னசெய்தாலுங் குற்றமுடைத்தாகாதென்றும், சக்கரவர்த்தியாகிய தன்னை மணந்துகொள்வதனால் அவள் மண்டலேசுவரியாய் மகிமைபெற்று வாழலாமென்றும்' செய்தியனுப்பினான். தான் அவ்வாறு சொல்லியதை அவள் நம்பும்படியாக அதற்கு ராணாவும் இணங்கியிருப்பதாக அவனிடமிருந்து கடிதங்களையும் அனுப்பினான். அவள் பர்த்தாவை நிர்ப்பந்தித்து அவன் அவ்வாறு கடிதங்களையெழுதச்சொல்லி வாங்கியனுப்பியதே யல்லாது அவர்மனதார எழுதியதல்லவே யல்லவென்று கண்டுகொண்டு எந்த உபாயத்தினாலாயினும் தன் பர்த்தாவைத் தன்னிடங்கொண்டு வந்து சேர்க்கவேணுமென்றதை க்குறியாகக்கொண்டாள். கபடவேஷம் பூண்டு தன் கணவனைச் சிறைக்கொண்டு போன மகாபாதகனுக்கு என்னசெய்தாலுந் தோஷமில்லை யென்று துணிந்து அவன் செய்ததுபோலவே தானுஞ் செய்வதுதான் உபாயமென்று தீர்மானித்தாள். ஆதலினால் அவள் தான் எண்ணியிருந்த எண்ணத்தையெல்லாம் மாற்றிவிட்டதாயும், இந்த ஜன்மத்தில் மீண்டும் ராணாவோடு சேர்ந்திருக்க வழி தனக்கில்லையென்பது நிச்சயமாயிற்றென்றும், தான் தன் தெய்வத்துக்கு முன்னே ராணாவைத்தவிர்த்து அவர் நேரில்வாயினாற் சொன்னாலல்லாமல் வேறு புருஷனை விரும்புகிறதில்லையென்று அவருக்குப்பிரமாணஞ் செய்து கொடுத்திராதபக்ஷத்தில் தான் மோகல் சக்கரவர்த்திக்கு வாழ்க்கைப்பட்டுப் பட்டத்தரசியாகச் சுகமாக வாழ்ந்திருக்கத் தடையிராதென்றும், இது விஷயத்தில் தான் ராணாவின் அனுமதியைப் பெறவேண்டியது ஆவசியமானதால் அலாவுடன் சக்கரவர்த்தியின் இஷ்டப்பிரகாரம் ராணாவைத் தன்னைப்பார்க்கும்படிசித்தூருக்கு அனுப்பினாலும், அல்லது தன்னைத் தன்புருஷன் சிறையிருக்குமிடத்திற்கு அனுப்பினாலும் அவர் அனுமதி பெற்று இருவருஞ்சுகித்துவாழலாமென்று சொல்லியனுப்பினாள். அலாவுடன்இந்தச்செய்தியைக்கேட்டுப்பேரானந்தங்கொண்டு பத்மினி ராணாவை வந்து பார்ப்பதில் ஆக்ஷேபமொன்று மில்லையென்றும், அவ்வாறு வரும்போது தனக்கு வேண்டியவர்களை வழித்துணையாக அழைத்து வரலாமென்றுஞ் சொல்லியனுப்பினான்.

ஆக்ராவுக்கருகேயுள்ள ஓர் 'மலைக்கோட்டையில் ராணா வைக்கப்பட்டிருந்தான். பத்மினியின் பொருட்டு எவ்வளவோ பொருளை யிழந்து, இராப்பகல்தூக்கமில்லாமல் முற்றுகை போட்டு அதைப்பிடிக்கமாட்டாமல் மானமிழந்த அலாவுடன் அவள் தனக்கு எளிதில் வாய்ப்பதைக்கண்டு தன்னுள்ளே மகிழ்ந்து அவள் வரவை எதிர்பார்த்துநின்றான். அவளைச் சீக்கிரம் தன் அரண்மனைக்குள்ளே வரவழைக்க வேண்டுமென்று அவன் பட்டபாட்டிற்களவில்லை. உடனே அவள் பிரயாணப்படவேண்டுமென்றுஉடனுக்குடன் ஆட்களை அனுப்பிக்கொண்டிருந்தான். ஒவ்வொரு நாளும் அவளுக்கு விலைபெற்ற ஆபரணங்களை அனுப்பினான். அவளுக்கென்று தன்தோட்டத்திலிருந்து மதுரமானகனிகளை அனுப்புவான். தான் அவள்மேல் வைத்திருக்கும்வாஞ்சையைக்காட்டும்படியாக விதம்விதமான பரிமள மலர்களால் செண்டுகளைக்கட்டியனுப்புவான். பத்மினி பயணத்துக்கு வேண்டிய சிவிகை முதலியவற்றைச் சித்தப்படுத்தி வைத்திருந்தாள். அரசர்களேறும் பல்லக்குகள் சிறிதாயும், ராணிகளேறும் மூடு பல்லக்குகள் தாராளமாக நான்கு அல்லது ஐந்து பேர் ஏறிச்செல்லும்படி பெரிதாயுமிருப்பது வழக்கம். அந்தப்பல்லக்கைச் சிறிது வேளைகளில் இருபது ஆட்கள் சேர்ந்து சுமப்பதுமுண்டு. பத்மினி அவ்வாறான பல்லக்கு இரண்டையும் தன் அரண்மனைக்குள்ளே கொண்டுவரச்சொல்லி சித்தூரிலுள்ள சூரர்களுக்குள்ளெல்லாஞ் சூரர்களான எட்டு ஆண்சிங்கங்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொன்றிலும் நான்கு பேர்களை உட்காரத்தி, அவர்களோடு இந்த உண்மை ஒருவர்க்காவது தெரியாதிருக்கும்படிவைத்திருக்கவேண்டுமென்றும்,வழியில் யார் வந்து என்னசொன்னாலும் வாயைத்திறக்கப்படாதென்றும் கண்டிப்பான கட்டுப்பாடு செய்திருந்தாள். இது ஒருத்தருக்காவது தெரியாமல் பரமரகசியமாகவைக்கப்பட்டிருந்தபடியால் சித்தூரிலுள்ளவர் தங்கள் தங்கள் பட்டத்தரசி ஆக்ராவுக்குப் பயணப்பட்டாளென்றெண்ணி அந்தப்பல்லக்குகள் வீதியோடுசெல்லுவதைக்கண்டு அந்தப்பட்டணமுழுதுங் கண்ணீர்விட்டுக்கதறியழுததை. பத்மினி தன் அரண்மனையி

விருந்தபடியே ஏகாந்தமாய் ஒளிந்திருந்ததன்னிடத்தில் ஜனங்களுக்கு அத்தனை விசுவாசமிருப்பதைக் கண்டு உளம் பூரித்தாள்.

பத்மினி தன்னிடமிருந்த பேடிகளில் ஒருவனைத் தன்னைப்போல நடித்துப் பேசும்படியாகவும், கேட்டதற்குமட்டும் மெல்ல உத்தரஞ் சொல்லும்படியாகவுங் கற்பித்து அதை வீரர்களேறிச்சென்ற சிவிகையொன்றில் ஏற்றியிருந்ததனால் வெளியே யிருந்தவர்களெல்லாரும் அந்த அண்ணகனைப் பத்மினியென்றே நம்பினார்கள். அந்த அலி பத்மினி சொல்லுவதுபோல், வழியில்யாராவது தன்னைத் தடைசெய்தாலும், அல்லது ஆக்ராவின் வழியாக வில்லாமல் நேரே தன் கணவனிருக்குங் கோட்டைக்குச் செல்லவொட்டாவிட்டாலும், தன் கணவனோடு தான் வார்த்தைசொல்லும்போதுஎவராவது அங்கே வந்தாராயினும், தான்அதற்கென்றே தன்னோடுகொண்டு வந்திருக்கின்றகூரியகத்தியினால்குத்திக்கொண்டுதன் பிராணனைவிடுவது திண்ணமென்றும் கண்டிப்பாய் அலாவுடீனுக்குஎழுதியனுப்பினான். ஆதலினால் அலாவுடீன் அவள்இஷ்டத்திற்குவிரோதமாகவழியில் யாரும் அவளையொன்றுஞ்செய்யக்கூடாதென்று கட்டளையிட்டு, ராணாவைஅவள்நேரில்கண்டுவார்த்தைசொல்லிவிட்டுஅவனிடத்தினின்றும்கடைசியாக விடைபெற்றுக்கொண்டு தன்னிடம் வருவதில் தனக்கு யாதுந்தடையில்லையென்று சொல்லியனுப்பினான்.

பத்மினியின் பல்லக்குகளும் பரிவாரமும் பட்டணத்தைக் கிட்டக்கிட்ட அலாவுடீன் அவளுக்குக்கடிதங்களை யெழுதியனுப்பிய வண்ணமாயிருந்தான். வழியில் ஊர்தோறும் அவனிடமிருந்து கடிதங்களை வைத்துக்கொண்டுசேவகர் காத்திருந்தார்கள். அவன் அந்தக் கடிதங்கள் ஒவ்வொன்றுக்கும் விடாமல் உத்தரமெழுதிக்கொண்டேவந்தான். ஆக்ராவுக்குக்காத வழிக்கப்பால் அலாவுடீன் பத்மினியை உபசரித்துக் கோலாகலத்தோடு தன் அரண்மனைக்கு அழைத்து வருவதற்கென்று போர் யானைகளும் ஒட்டகங்களும் மெய்க்காப்பாளரு மடங்கிய தனது பரிவாரங்களை அனுப்பியிருந்ததை பத்மினியின் பரிவாரங் கண்டது. அதை நடத்திய அண்ணகன் அங்கிருந்து காதவழி தூரத்தில் ராணா சிறைவைக்கப்பட்டிருந்த கோட்டைக்கு அந்தி நேரத்திற் சென்றான். பத்மினி ராணாவைக் கண்டு வார்த்தை சொல்லியானதும் சித்தூரிலிருந்து அவரோடுவந்த பரிவாரமெல்லாம் அப்படியே ராணாவைச் சித்தூருக் கழைத்துக்கொண்டுபோக வேண்டுமென்றும், தான் அனுப்பிய தன் பரிவாரம் பத்மினியைத் தன் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்றும் அலாவுடீன் கட்டளையிட்டிருந்தான்.

அவ்விரண்டு பல்லக்குகளையும், அவற்றின் கூட வந்தபரிவாரங்களிற் சிலரையுமட்டுமே கோட்டைக்குள்ளே விட்டார்கள். அந்தக் கோட்டையின் அதிகாரி அவளைக் காணுதற்பொருட்டு எதிர்கொண்டுவர பல்லக்கிற்குள் ளிருந்த சூரர்கள் தங்கள் உடைக்குள்ளே ஒளித்துவைத்திருந்த ஆயுதங்களை யணிந்து திடீரென்று வெளிக்கிளம்பி அவனைக் கொன்று, அங்கிருந்த சிறு சேனையை மலைத்தோடவடித்துத் தங்களோடு வந்த பரிவாரத்தோடு அந்தக் கோட்டையிலிருந்த ராணாவை விடுவித்து கணப்பொழுதில்அவனை வெளியே அழைத்துக்கொண்டு வந்தார்கள். அவன் அவ்வாறு வெளியே வந்தமாத்திரத்தில் அவன் தன் குதிரைமேலேறித் தன் பரிவாரங்கள் தன்னைப் புடைசூழ சித்தூரைநோக்கி அதிவேகமாகச் சென்றான்.

(இன்னும் வரும்.)

அ. ஸ்ரீ. வெங்கடாசாரியார்.

## ஒருதாதாசெய்த தீர்மானம்
### அல்லது
## தங்கம்மாள் தலைவிதி.

### IV.

பூவரச நல்லூருக்கு வடபுரத்தில் மூன்றுமயில் தூரத்தில் சிறுகுடி என்கிற ஓர் கிராமத்தில் அப்புக்குட்டி அய்யருக்கு பிதிரார்ச்சிதமாய்க் கிடைத்த சொற்ப பூமி உண்டு. ஓர்காலத்தில் இந்த கிராமம் குடிபெருத்து செழித்து வாழ்ந்திருந்தது. கிராமத்து மிராசுதார்களுக்குள் ஐக்கியமின்றி அவர்கள் சர்க்கார் தண்ணீர் மராமத்து உத்தியோகஸ்தர்களுக்கு சரியாய் நடந்துகொள்ளத் தவறிப்போனார்கள். அதினிமித்தம் பாய்வாய்க்கால் தலைப்பு மேடிட்டு பாய்ச்சலில்லாமல் நிலவளங் குன்றி, வாயிதாவுக்கு பணங் கட்டப் போதுமான வரும்படி யில்லாமல் குடிகள் தரித்திரத்தை யடைந்தார்கள். நீரற்றகுளத்துப் பட்சிபோல் குடிகளெல்லாம் ஊரைவிட்டுப் போய்விட்டார்கள். கிராமத்துக்கு மேற்புரத்தில் ஓர் குளம் இருந்தது. அதை வெட்டுவாரில்லாமல் சேறு கொண்டு, அல்லியும், கோரையும் முளைத்து மேடிட்டிருந்தது. அவ்வூர் குடிகளுக்கு அக்குளத்துத் தண்ணீரைத் தவிர குடிக்க வேறு ஜலமில்லை. குடிக்குந் தண்ணீர் நல்லதாயும், சுத்தமாயும் இருக்கவேண்டுமே என்கிற அறிவில்லாமல் குளத்தில் மாடு குளிப்பாட்டியும், மட்டை ஊறப்போட்டும், துணி துவைத்தும் பலவாறாக அசுத்தப்படுத்தினார்கள். ஒரு தடவை விஷபேதி கண்டு இருந்த ஜனத்தில் பாதி அநியாயமாய் மாண்டுபோனார்கள்.



இக்குளக் கரையில் இலுப்பைத் தோப்புக்கு மத்தியில் பெரிய சிவாலயம் ஒன்று உண்டு. ஓர்காலத்தில், பூஜை உற்சவாதிகளினால் நன்றாய் விளங்கியிருந்தது. கிராமத்தா ரெல்லாரும் சேர்ந்து சுவாமி பூஜைக்காக மான்னியம் ஏற்படுத்தி அதை திராவிட மடத்தா ராதீனத்தில் ஒப்புவித்தார்கள். தம்பிரான் மான்னியங்களை எல்லாம் 'நம்முடையதாசிக்கும் வக்கீலுக்கும்வெகுநாளைக்காகு'மென்றுகட்டிக்கொண்டு, குருக்களையுந்துரத்திவிட்டு சுவாமிக்குப்பூஜையில்லாமல்கோவிலைப் பாழாக்கிவிட்டான். திருப்பணிவேலைகள் ஒன்றும்நடத்தாததினால், மதில்இடிந்து, மூடக்கதவில்லாமல்கரையான்தின்று, எங்குந்திறந்து கோவில் வழியாய் நாயும், நரியும் ஓடிக்கொண்டிருந்தன. தர்மம் சாசுவதமென்று முன்னோர்கள் ஏற்படுத்திய தர்மங்களெல்லாம் கேட்பாரில்லாமல், பாழாய்ப்போனால், தற்காலத்தில்மறுபடி தர்மங்கள்செய்ய எப்படி மனம்வரும்? நாம்புதிதாய் தர்மஞ்செய்யசக்தியற்றவர்களாயினும், பெரியோர்களால் வெட்டிவைக்கப்பட்ட குளங்களையும், கட்டிவைக்கப்பட்ட ஆலயங்களையும் சத்திரங்களையும், சாவடிகளையும் அழியாமல் பாதுகாத்தாவது வரலாமே. தர்மங்கெட்டு உலகந் தடுமாடுவதற்கு, மடாதிபதிகளும், தம்பிரான்களும், பெரிய மிராசுதாரர்களும் காரணபூதர்களானார்களே. ஏழைக்குடிகளால் என்னசெய்ய முடியும்? அவர்களுக்கு வயிற்றுப்பாடோ பெரும்பாடாக விருக்கிறது. தெய்வங்களே திண்டாடுங்காலத்தில், திக்கற்ற தீனர்கள் கஷ்டத்துக்குக் கேட்பாரேனென், "சிவசொத்துக் குலநாசம்" என்பதை லட்சியஞ் செய்யாமல் அம்மன் தாலியைக்கூட அபகரிப்பவர்களா கொலை, களவு, சூது, பொய், கள், காமம் முதலிய பஞ்சமகா பாதகங்களுக்கு பயப்படுவார்கள்? ஏழைக் குடிகளுக்கு இரங்குவார்கள்? கோவிலிடிந்து, குளந்தூர்ந்து, வியாதியினால் நொந்து, வயிற்றுக்குச் சோறில்லாமல் மெலிந்து, வருந்தும் குடிகளைப்பார்த்து பரிதவிப்பாரில்லையே! யாழும் உத்தியோகஸ்தர்கள், தீங்கற்ற மிருகங்களைக்கொன்றுதின்னும்வேடர்களைப்போல் பரிக்கவருகிறார்களே யன்றிகுடிகளை ஆதரிக்க ஏற்படுகிறதில்லை. இவர்கள், பாலும் தயிரும் குடித்து, பட்டணத்துப் பசுபோல் கொழுத்திருக்க, அப்பசுவின்முன் வாலும் தோலுமாய் நிற்கும் கன்றுபோல் கிராமத்துக் குடிகள் ஆயினார்கள்.

தகப்பனார் சிராத்தத்துக்குச் செலவுக்காக பணமும், காய் கறி, நெய், தயிர், இலை முதலியனவும் சேகரிக்கும்பொருட்டு, அப்புக்குட்டி அய்யர் சிறுகுடி கிராமத்துக் குடியானத்தெருவில் முதல்நாள் காலமே குடியானவன்வீரமுத்துவீட்டிற்குமுன்னேதோன்றினார். அவ்வூருக்கு வீரமுத்து பெரிய குடியானவன். இரண்டேரு மாடும், இரண்டுபசுவும், பத்தாடும் வைத்திருந்தான்; இவை மூன்றுதரம் குத்தகைபாக்கிக்காக மிராசுதாரர்களால் ஜப்திசெய்து ஏலம்போடப்பட்டபின் அவனுக்கு மிகுந்தசொத்துகள். அவன் வீடு மூப்பது அடி சதுரமுள்ள ஓர் குச்சு. நாலுபுரமும் மண் சுவர்; மேல்புரத்தில்நீண்ட தாழ்வாரமும் கீழ்புரத்தில் மாட்டுத் தொழுவமும்தான் கூரைக்கட்டுக்கோப்பு; பின்புரத்தில்சாணமும், எருவும், போராய் குவிக்கப்பட்டிருந்தன. மருமகள்போல் காணப்பட்ட ஓர் குடியானப்பெண் கம்பு குத்திக்கொண்டிருந்தாள். "வீரமுத்து இருக்கானா?" என்று அப்புக்குட்டிகேட்க, அந்தப்பெண்நாணிக்கொண்டு பதில்பேசாமல், பின்புறத்தில் ஆட்டைக் கறந்துகொண்டிருந்த மாமியினிடத்திற்போய் "அம்மாயி, யாரோ அய்யர் ஏதோ கேழ்க்கிறாங்க" என்றுசொல்லித் திரும்பினாள். "ஏ ராக்கி நீ போவாதே; சற்று இங்கேயே இரு, நான்இந்த ஆட்டைப் பீச்சிக்கிட்டு வாரேன்" என்று காத்தி சொன்னாள்.

அரண்மனைகளில் இராஜகன்னிகைகள் கூடியிருக்கும் அந்தப்புரத்தில்கூட தாராளமாய் தடையின்றி நுழைந்து, இராஜகன்னிகைகளினால் உபசரிக்கப்படும்படியான சீலமும், ஒழுக்கமும், தவமுமுடைத் தாயபிராமணர்கள், இக்காலத்தில்வீட்டுக்குவெளியே நின்று குடியானப் பெண்கள்கூட பேசப் பயப்படும்படியான நிலைமைக்கு வந்துவிட்டால், காலங் கெட்டுப்போயிற்றென்பதற்கு வேறு சாட்சிவேண்டுமோ.

அ. கு.—ஏ காத்தி வீரமுத்து எங்கே போனான்? ஊரிலே இருக்கிறானோ இல்லையோ.

காத்தி.—ஊரிலேதான் இருக்காங்க, எழுந்திரிச்சதும் அரிவாளும், பாளையும் எடுத்துகிட்டு புஞ்சைக்காட்டை நோக்கப்போனாவ.

அ. கு.—நான் வருகிறேன் வீட்டிலேதானே இரு என்று சொல்லியிருந்தேனே: அதற்குள்ளே எங்கே தொலைந்துபோனான், எப்போவருவான்.

காத்தி.—இன்ன நீராரங்கூட குடிக்கலே. பல்லை விளக்கினாரு, அதுக்குள்ளே தலையாரி மூக்கன் ஓடிவந்துவாழைக்கொல்லைவேலியைமுரிச்சுக்கிட்டு, எந்தக்களவாணிப்பயலோ, வாழைத்தாருத் திருடிக்கிட்டுப் போயிட்டானென்று சொன்னான். பாத்துக்கிட்டு சுருக்கென வருவாங்கோ. சற்று தெருத்திண்ணையில் குந்துங்களேன்.

அ. கு.—குந்திக்கொண்டு என்ன செய்கிறது. நாளைக்கு வீட்டிலே ஒருசடங்கு, அலுவலிருக்கு, போகவேணும். நேரமாகிறது. வெயில் ஓர் புறத்தில் கொளுத்துகிறது. யாரையாகிலும்அனுப்பு.

காத்தி.—"இங்கே யாரையும் காணமே; அடியே ராக்கி, வீரி இப்போ இங்கே நின்னுச்சே, எங்கே

ஓடிச்சு? அப்புரம் குத்தலாம், சற்றுபாரேன். அய்யா அவசரப்படராங்க.

ராக்கி.—"கொல்லேயிலே ஆட்டை மேச்சுக்கிட்டுநிக்கிறது"

காத்தி.—"ஏ வீரி! அப்புரம்ஆடுமேக்கலாம்: நீ ஓடிப்போய் வாழக்கொல்லேயிலே அப்பாரு இருப்பாரு; எஜமான் வந்திருக்காக, காத்திருக்காக, கையோடே இட்டுவரச்சொன்னுக என்னு இட்டிட்டு வா, சற்று ஓடு.

வீரி.—"ஆடெல்லாம் ஓடிப்போமே"

காத்தி.—"மரிச்சுவீட்டுக்குள்ளே விரட்டிட்டு,படலேமூடிகிட்டு, சுருக்கென போ, வழியிலே பராக்குப்பாத்துக்கிட்டு நிக்காதே."

*　　　*　　　*

வீரமுத்து.—"சாமி சேவகம், கும்பிடுகிறேன்"

அ. கு.—"மஹாராஜனுயிரு, வீட்டிலேயே இரு என்றேனே, எங்கே போனாய்.?"

வீ. மு.—'என்னய்யா! ஊரிலே களவாணிப்பயலுவ குடியிருக்க விட்டேன்கிறான். மொந்தந்தாரு, ஒவ்வொருகாய் தொடை தொடை மொத்தம், சாமி கேட்டிங்களே என்னு நிறுத்தி வச்சிருந்தேன், எந்தப்பயலோ வேலியைமுறிச்சுக்கிட்டு ரவையிலே லக்குப்பாத்து கொண்டு போய்ட்டானே! வவுத்தெரிச்சலேஎன்னசொல்லுவேன்.'

அ. கு.—"யார் திருடி இருப்பார்கள்"

வீ. மு.—"நான் யாரை என்று சொல்லுவேன் காணுப்பழிசொல்லலாமா. கண்டேனு செருப்பைவாங்கிட்டல்லா அடிப்பேன். திருட்டுப் பொழப்பு ஓர் பொழப்பா? வேறே காய்கூட இல்லேயே."

அ. கு.—" அரைக்காய், முக்கால் காயாகிய தார் வேறொன்றுமில்லேயா?"

வீ. மு.—"உங்களுக்கு வஞ்சனேயா! உங்களுக்குக் கொடுக்காமல் வேறொத்தருக்கு ஒளிச்சா வச்சிருக்கேன்"

அ. கு.—"வாழைக்காயில்லாவிட்டால் போகட்டும்; அவரை கொத்தவரை ஏதாகிலும் இருக்கிறதா?

வீ. மு.—"நீங்கள் கேட்டிங்களே என்னு இரண்டு ஈடு கிள்ளாமல் நிறுத்திவச்சிருந்தேன். இரண்டு மூன்று நாளாய், சத்திரத்திலே, கல்லுப்போட சர்க்கார் உத்தியோகிரத்தா வந்து இறங்கி இருந்தாவ, அவங்களுக்காக மணியாரரும் கணக்குப்பிள்ளேயும் வந்து பிஞ்சைக்கூட திருகிட்டுபோய்ட்டாவ. எஜமான்கோபிச்சுக்கொள்ளுவீங்கஎன்னு சொல்லியும் கேக்கவில்லே.

அ. கு.—உன்னே நம்பிச் சும்மா இருந்து விட்டேன். இப்போ என்னடா பண்ணுகிறது?

வீ. மு.—"நான் என்னபண்ணுகிறது. இவங்களெல்லாம் வருவாங்க, கொல்லே எல்லாம் பாழாக்கிவிடுவாக என்று கண்டேன். ஊரிலேயும் ஒருத்தர் கொல்லேயிலும்பயிர்பச்சையைகாணமே"

அ. கு.—நெய்யாவது அகப்படுமா?

வீ. மு.—நெய்க்கு நான் எங்கே போகிறது இப்போ? நாலு மாடு மூன்றுமாடு கறந்தாக்கொடுக்கலாம். குள்ளப்பசு ஒன்று தான் வேளேக்கு ஒரு சேர் பீச்சுகிறது. மொட்டைப்பசு நல்லாக்கறக்கும்; ஆனல் மறுத்துப்போச்சி.

அ. கு.—நெய்யும் தயிரும் தருகிறேனென்று சொன்னயே?

வீ. மு.—ஆமா சொன்னேன்: சின்னயி மகன் கருப்பன் வூட்டிலே எருமை கறக்கிறது; அய்யா வீட்டிலே திவஷம், நெய்வேணுமென்று சொல்லியிருந்தேன். நாலுநாள் வெண்ணெய்சேர்த்து வச்சிருந்தான். கணக்குப்பிள்ளே அய்யா நேற்றிராவு வந்து கலெக்டருக்கு வேணுமென்று எல்லாத்தையும் வரண்டிக்கிட்டுபோய்ட்டாரு. தினமும் காப்பித்தண்ணிக்கென்று, இரண்டு வேளேயும் சேவகன் மறியிலிருந்து பசுவைக்கறந்துக்கிட்டு போகிறான். வூட்டிலே தாகத்துக்குக்கூட மோரில்லே.

அ. கு.—பொழுது விடிந்தால் சடங்கு: நான் நெய் தயிருக்கு என்ன செய்வேன்?

வீ. மு. .—நான் தான் என்னசெய்வேன். எங்கப்பாரிருந்த நாளிலே படுவையிலேயும், காட்டிலேயும், பில்லு ஆளத்தனேஉசப்புக்கிடக்கும். நல்ல மேச்சலம்படும். நிமிர்ந்து மேஞ்சுவேளேக்குஇரண்டுபடி கறக்கும். நாலுமாடு வைத்திருந்தாரு: எசமான் வூட்டுக்கு நெய்தயிர் தட்டாமல் குடம் குடமாய் கொண்டுவந்து கொடுப்பாங்க; நீங்களெல்லாம் எங்க வீட்டுத்தயிரைக் குடித்து வளர்ந்தவங்கதானே. வரவர காலங்கெட்டுபோச்சு; ஊரிலேயும் மேச்சலில்லே. இரண்டுமாடு கன்னு வைச்சிருந்தால், படுக்காளி பயலுவ, பொருமைப்பட்டுக்கிட்டு, பயிரைக்கடிச்சுது, பாகலே மிதிச்சுது, என்னு,மாட்டை பட்டியில் கொண்டடைக்கிறான். எங்கே பாத்தாலும் காவலும் கட்டுமாய்ப்போச்சு.தினமும் அரைக்கால், கால் தண்டம் அறுக்க வேண்டியிருக்கு:என்றால்கொடுக்கமுடியுதா; முன்போல வயலும் விளேயுதா? அய்யாவுக்குப்பகுதிக்கே கூடி வருதில்லேயே. ஏழை குடியானவன் பிழைக்கட்டுமென்று எசமான் தான் மாடுகேன்னே வாங்கிக்கொடுக்கிறீங்களா.



அ. கு.—என் வீடு அவரைப் பந்தலாயிருக்கிறது. கலியாணம்செய்து கடனுடன்பட்டிருக்கிறேன்; அதைப்பிரித்துக் கூரைபோடுவதற்கே கையில் பணமில்லே. இருந்தமாட்டைக்கூட கடனுக்காக விற்றுப்போட்டேன், உனக்கு நான் எப்படி வாங்கிக்கொடுக்கிறது.

வீ. மு.—ஆமாம்,சாமிக்கும் கட்டந்தான். நிலம்விளேந்தாலல்லவோ நன்றாய்த்திங்கலாம். அதுதான் படுத்துப்போச்சே. வாயுதாவுக்குக்கூட கட்டிவரக்காணேமே. மானம் மோசம்பண்ணுது.இப்படி இன்னொரு வருசமிருந்தால் விட்டிட்டு ஓடவேண்டியது தான்.

அ. கு.—வேறொன்றுந்தானில்லே.பகுதிப்பணத்தில் பாக்கியிருக்கிறதே அதிலே நாலு ரூபாயாவது கொடேன்.

வீ. மு.—"சாமி அந்த வவுத்தெரிச்சலே என்ன சொல்லுவேன். போயிலேச்சரக்கு கொஞ்சம் கையிருப்பாய் இருந்தது. வித்துப்பகுதி செலுத்தலாமென்று எண்ணிக்கிட்டிடிருந்தேன். அதற்கு திடீரென்றல்லோ செலவு வந்திடுச்சு.

அ. கு.—என்ன செலவு நேர்ந்தது?

வீ. மு.—இந்த அன்னியாயத்தை எந்தத்தெய்வத்தினிடத்தே சொல்லுவேன். உழவுகட்டை இரண்டிருக்கல்ல, அதையும், ஆட்டையும் எம்மவ சின்னக்குட்டி-வீரி, கரைவழியாய்ஓட்டிப்போனாளாம். படுவை நாணலே மேஞ்சுதென்னு காவக்காரரு எல்லாத்தையும், பட்டிக்கு ஓட்டி விட்டாரு.

அ. கு.—கரைவழியாப்போகிற மாட்டை பட்டியில் கொண்டு அடைப்பானு, நாணலிலே தான் மேய்ந்திருக்கவேணும்.

வீ. மு.—நான்என்னபொய்யாசொல்லுகிறேன்.சன்மாந்திரத்திலே என்னபாவஞ்செய்தேனோ,இப்போ பிள்ளே குட்டிகளுக்கு வவுத்துக்குச்சோறில்லாமே, கட்டத்துணியில்லாமே துன்பப்படுகிறேனே. அதுவும் உங்களிடத்தில்பொய்சொன்னால் கண்ணல்லோ அவிஞ்சுபோகும். வெட்டியான் கூத்தனும், வன்னி மகன் அருணசலமும் பாத்துக்கொண்டிருந்தாங்க, கேளுங்களேன். நான் கொல்லே கொத்திக்கிட்டிருந்தேன். எம்மவ, அழுதுக்கிட்டு சொல்லிச்சு, மம்மட்டியை விட்டிட்டு ஓட்டமாய் குறுக்கே விழுந்தோடி "சும்மா வழியோடே போனமாட்டை எங்கானும் ஓட்டிரீரு"என்னுமரிச்சேன்.அதனுள்ளே குப்புமவன் கட்டையன் "வீரமுத்தண்ணே காவக்காரரு ஓட்டரமாட்டை மரைக்காதே, உன்னே கட்டையிலடித்து அவதாரம்போடுவாங்க" என்று சொன்னான். விட்டு விட்டு, போகிறமாட்டை பாத்துகிட்டே நின்றேன். ஓடுகிற அவசரத்தில், காலிலே கட்டை அடிச்சு நெகம் கூட பேந்திடுச்சு; மெத்தநோவுது.

அ. கு.—உனக்கும் காவற்காரனுக்கும் ஏதாவது சண்டையுண்டோ.

வீ. மு.—நானொருத்தருடனும் வம்புக்கு சண்டைக்குப்போகிறதில்லே. எனக்குத்தான் ஓயாப்பாடு ஒழியாப்பாடாயிருக்கே.

அ. கு.—உன்னே அவன் ஏதாகிலும் கேட்டு நீ இல்லேயென்று சொன்னதுண்டோ.

வீ. மு.—வருசாவருசம் நாலு மரக்கால் சோளம்கொடுப்பேன். இந்த வருசம் சோளம் ஓடிச்சவுடனே கேட்டாரு. 'அய்யா, சோளம் காணலே. சோற்றுக்கு வேணும்;வரவரசம்சேத்துத்தாரே' இன்னேன். போய்விட்டாரு. போனவெள்ளி தரிச்சு சனிக்கிழமை அணேமணியாரருக்காக வாழைத்தாருவேணுமென்று கேட்டாரு. சாமிக்குவேணும்தொடக் கூடாதென்று சொன்னேன். வேறொன்றும் என்னேக்கேட்டதா கொண்டதா, ஒண்ணேயும் காணமே.

அ. கு.—கோபித்துக்கொண்டு போனுனே சும்மாப் போனுனே.

வீ. மு.—"வீரமுத்து எனக்கும் ஓர் சமயம் வருமென்று" கருவிக்கிட்டுப்போனாரு.

அ. கு.—வாழைத்தாரை காவற்காரன் திருடி இருப்பானே.

வீ. மு.—இருந்தாலு மிருக்கலாம்;காலடியைப்பார்த்தாலவரடிபோலத்தானிருக்கு.

அ. கு.—காவற்காரன் பேரில்திருடினுனென்றுகச்சேரியில் ஒரு பிரியாதுகொடு.

வீ. மு.—'எதுபோனலும் போகட்டும், நான் வியாச்சியத்துக்குப் போகமாட்டேன், சாமி; கிராமத்திலே விறகு விலேக்கு அகப்படுதா,அப்படிவிலேக்குத்தான் வாங்க கையில் துட்டா.நான்ஏழை: மரத்திலே சுள்ளிசெத்தை ஒடிச்சுத்தான் ஆகவேணும். போலீஸ்தாரரும் காவக்காரரும் ஒண்ணு. திருடினான் கொண்டானென்னு பொலீஸ்தரர் இரண்டு சாக்கியைப்போட்டு கச்சேரியில் வைத்து விட்டாஎன்னபண்ணுகிறது.நான்ஒண்டிக்காரன்: மவன்கூட மோர்சுக்கு பெண்டாட்டியை விட்டிட்டு ஓடிட்டான்.பிள்ளேகுட்டிகள் கஞ்சிக்கில்லாமல்சாவுமே. மேலும் வைக்கலொத்தரை வைக்கணும், அவருக்கு பத்து எட்டுஅழணும்,நான் பணத்துக்கு எங்கேபோவேன். இப்போதுதான் பட்டிக்கு இரண்டு ரூபாய் கொண்டுக்கொட்ட வருத்தப்பட்டேனே. உப்புக்குக் கூட காசு இல்லே.

அ. கு.—பட்டிக்கு மாத்திரம் எவ்விதமாய் பணஞ் செலுத்தினாய்.

வீ. மு.—"செலுத்தவரவது, மண்ணுவது" எட்டிடத்திலே கேட்டேன் எங்கேயும் அம்படவில்லை. அன்றிரவுக்கெல்லாம் உரக்க மில்லை. ஆடுமாடெல்லாம் சாவுமேஎன்றுரோசனையாவேருந்திக்கிட்டிருந்தேன்.

அ. கு.—பட்டியில் தான்நீனிபோடுகிறார்களே.பட்டினியாயிருந்து ஆடுமாடு எப்படிசாகும்.

வீ. மு.—நீனிஎங்கே சாமி போடராங்கோ. நீனிப் பணத்தை வாயில் போட்டுக்கிட்டு, இரண்டு கூளத்தை தூவுறான். மாடு அதை மோந்து கூடப் பார்க்காது.

அ. கு.—மாட்டை பிறகு எப்போ வீட்டுக்குக் கொண்டு வந்தாய்.

வீ. மு.—கோழிகூவ எழுந்திருச்சு, போயிலைச்சாக்கை கடையிலே கொண்டு ஒன்றுக்கு முக்காலாய் விற்று, பட்டிகாரனுக்குச் செலுத்தி வீட்டுக்கு வரும்பொழுது சூரியன் இந்தாலே தலைக்குமேலே வந்திடிச்சு.

அ. கு.—புகையிலை விற்றதில் பாக்கி ஒன்றுமில்லையா.

வீ. மு.—மாட்டுக்கே பணம் பத்தாமே உடையாரிடத்திலே கால்ரூபாய் கடன்வாங்கிக் கொடுத்தேனே.

அ. கு.—அக்கம்பக்கத்தில் கடன்வாங்கியாவது கொடுக்கவேணும்.

வீ. மு.—நான் யாரைக் கேழ்ப்பேன். இந்த வருசம் காலத்திலே மழையில்லாமை புஞ்சையெல்லாம் காஞ்சுபோச்சு. அவனவன் தவிக்கிறான். சோறு இல்லாமல் மூணுவேளையும் கூழைக் குடிக்கிறான். வீட்டுக்காரிக்கு சீலைஇல்லை. நான் பணத்துக்கு எங்கேபோவேன். இனிமே கடலை வெட்டி வித்தால்தான் பணம்.

அ. கு.—மணியாரரும், கணக்குப்பிள்ளையும் பால், காய்கறி கொண்டுபோனார்களே அந்தப் பணம் எங்கே.

வீ. மு.—மணியாரர் விலைக்கா வாங்கிட்டுப் போனாங்கோ. அப்படி அவகளும் கொடுக்கமாட்டா, நாங்களும் கையை நீட்டி காசு வாங்கமாட்டோம். கேட்டால் இன்னைக்குக் கொடுத்துவிட்டு, நாளைக்கு அடிச்சான் பிடிச்சானென்று சந்தியிலிழுத்து, நாலு,மூணு அவதாரம் போடுவாக. சர்க்கார் மனிதரை எதித்துகிட்டு ஊரிலே குடியிருக்க முடியுமா. குச்சைக்கொளுத்தி குடியோடச் செய்வாங்களே.

அ. கு.—'வீரமுத்து, உன்னை நம்பி இதுவரையில் சும்மா இருந்தேன். பணங்கொடுத்தால் திவசம் நடக்கும், கொடாவிட்டால் திவசம் நின்றுபோம். பாவம் உன்பேரில்தான்.

வீ. மு.—நான் எளியவன் உங்கள் காலைக் கழுவிக் குடிக்கிறவன். அவ்வளவுக்குத் தாங்கமாட்டேன். ஏ வீரி! உங்காயாளைக் கூப்பிடு.

வீரி.—குளத்துக்குத் தண்ணிக்குப் போயிருக்கு, அதோ வருது.

வீ. மு.—ஏ குட்டி! உன்னிடத்தே, பணங்காசு ஏதாவதிருக்கா, அய்யர்வீட்டில் நாளைக்கு திவசமாம். செலவுக்குத் தாரோனென்று சொல்லியிருந்தேன், நம்பி வந்திட்டாரு, இருந்தால் கொடேன்.நான்பின்னிட்டு உனக்குத்தாரேன்.

காத்தி.—மூன்றுமாசமாய்ச் சீலைஇல்லை. ஒத்தைச் சீலையுடனே நிக்கிறேன். விராட்டி வித்து எருவித்து ஒருரூபாய் இருக்கு. இன்னம் அரைரூபாய் போட்டால் சீலை அம்படும். அய்யரைத்தான் கேழ்க்கவேணுமென்று நினைத்திருக்கேனே.

வீ. மு.—அந்த ரூபாய்யைத்தான் கொடு.

காத்தி.—நான்மாட்டேன் எத்தனைநாளாக ஒத்தைத் துணியுடனே நிப்பேன்.

வீ. மு.—ஏ கழுதே கொடு, என்கிறேன்.

காத்தி, புருஷன் கோபமாயிருக்கிறான், எசமானும் எதிரே நிற்கிறார்; தான் இனி எதிர்த்துப் பேசுவது அழகல்லவென்று, உள்ளேபோய், யாருக்குந் தெரியாமல் ஒரு சின்ன கலையத்தில் போட்டு புதைத்து வைத்திருந்த ரூபாயை எடுத்துவரச் சென்றாள். வர சற்று நேரமாயிற்று. இதற்குள் அப்புக்குட்டி அய்யர் கோழிக்கூண்டைபார்த்து,அதில்குஞ்சுகள் ஒன்றையும் காணாமல் "அடே வீரமுத்து,கோழியெல்லாம் எங்கேபோய்விட்டது. காட்டுப்பூனை குஞ்சுகளைக் கொன்றுபோட்டதோ என்றார்."

வீ. மு.—மனிதருக்குத் தப்பியல்லவா பூனைவாயில் அகப்படவேணும். இன்ஸ்பெட்டர்துரை தீனிக்கு வேணுமென்று மணியாரர் சேவகன் குஞ்சி எல்லாம் கொண்டுபோய்விட்டான். கண்ணிலே பட்டதை சர்க்கார் மனுஷரு விடுகிறாக இல்லை.குஞ்சுகளை எங்கே மறைச்சு வைக்கிறது. வவுத்திலே வச்சாலும் பூறி எடுத்துக்கொள்ளுவாகபோலிருக்கு.

அ. கு.—அடே என் வைக்கோல்போரெங்கடா போச்சு.

வீ. மு.—பேச்சு பிராக்கா யிருந்தேன். எசமானோடே சொல்ல மறந்திட்டேன், துரையும் துரைசானியுமாக பங்களாவில் வந்து இறங்கினாக. குதிரைக்குப் படுக்க கீழே பரப்பவேணுமென்று,நாலு சேவகருக வந்து,போரை நாலு கட்டாகக் கட்டிக்கிட்டு போயிட்டாக. எழவெடுத்தவூரிலே எப்போ பார்த்தாலும் உத்தியோகிரத்தா பிடுங்கலே பிடுங்கலாப்போச்சு. பேரொளவு சத்திரம் ஒன்றிருக்கா, யாராகிலும் வந்துக்கிட்டே இருக்காக மனிதனைக்கூடப் பிடுங்கித் தின்னுவிடுவாகபோலிருக்கு. யார்வந்தாலும் ஏழைக் குடியானவன் எங்க தலையில் வந்து விழுது.

அ. கு.—அடுத்த கிராமத்தில், இலை கறி காய், வாங்கிக்கொடுக்கிறேன். அதை வீட்டுவரையில் வந்துகொடுப்பாயா.

வீ. மு.—அதற்கென்ன வாரேன். மூன்று நாளாய் வேலைவெட்டிக்கு வெளியிலே போக சரிப்படலை. சத்திரத்தில் இறங்கினவங்களுக்கு வேண்டிய சாமான் வாங்கிக்கொடுத்து,அவங்க சொன்னதைக் கேட்டுக்கொண் டிருக்கும்படி மணியாரர் உத்திரவுபண்ணாரு. குருணி பதக்கு அகப்படுகிற கூலியும்போச்சு. ரவைக்கு வூட்டிலே சோறில்லை. நேத்திக்கு உருமத்துக்குச் சாப்பிட்டது. "காத்திருக்காரே இந்தா சாப்பிடு" என்றுஎசமானும்சொல்லுகிறதில்லை. போயிலை வெற்றிலைக்கென்னு காலணா கையில் கொடுக்கிறதில்லை. இன்னைக்காவது சோறு குடிச்சுவிட்டு வேலைக்குப் போகணும். பிள்ளை குட்டி பட்டினியாய் கிடக்கே, நான் எப்படி வருவேன்.

வீரமுத்துவின் கஷ்டத்தைப் பார்த்து மனம் சகிக்காமல் அப்புக்குட்டி அய்யர்தன்னுடைய காரியத்தை தானேஎப்படியாவதுபார்த்துக்கொள்ளத்தீர்மானித்து, அவனைவேலைக்குப்போகும்படியாய்உத்தரவுகொடுத்துவிட்டு, தன் வீட்டைநோக்கி வழியிலே நடந்துகொண்டே யோஜித்ததாவது:—

"இப்படி கஷ்டப்படுகிறவனிடத்தில், பலாத்காரமாய் தண்டி திவசம் பண்ணும்படியாய் சுவாமி என்னை வைத்தாரோ. நானோ வேலைசெய்யாமல் கஷ்டப்படுகிறேன், வீரமுத்துவோ, ஆண்பெண் அடங்கலும் வேலைசெய்தும் கஷ்டப்படுகிறான். எனக்கு சோற்றுக்கு வீட்டில் நெல்லாவது இருக்கு, பசிக்கு சாதமகப்படும்.இவனுக்கு பாதிநாளைக்கு அதுவும் அகப்படுவதில்லையே. இவனோ ஏழை, கபடு சூதற்றவன்; கணக்கு வழக்குத் தெரியாதவன், சமுசாரி; வருகிற உத்தியோகஸ்தர்கள் இவனுக்கு உதவிசெய்வதைவிட்டு இவனிடத்தில் இருப்பதை சேவகன் மூலமாய் பரிக்கிறார்களே, இதென்ன அநியாயம். எளியவன் எங்கேபோய் முறையிடுவான். முறை யிட்டாலும் காதுகொடுத்து கேட்கும் பிரபுக்கள் யார்எங்கேயிருக்கிறார்கள்.பிச்சைக்கூடையில்சனீசுவரபகவான் புகுந்தாற்போல. பிரபுக்களெல்லாம் இவன் தோட்டத்தையும், வீட்டையும் புகுந்து அழிக்கிறார்கள். விறகு கொண்டுவா, வைக்கோல் கொண்டுவா, தயிரைக்கொண்டுவா, தேங்காயைக் கொண்டுவா, பாலைக்கொண்டுவா, பழத்தைக்கொண்டுவாஎன்றுசோளக் கொல்லைக் காகக்களைப்போல், பிடுங்கித் தின்று ஏழையின் இரத்தத்தை உறிஞ்சினால் அவன் எப்படி பிழைக்கிறது, பிள்ளைகுட்டிகளை எப்படி காப்பாற்றுகிறது, பகுதி எப்படி செலுத்துகிறது? நேற்றையதினம் சாப்பிட்டேனென்பதைக் கேட்க என் மனம் பதைக்கிறது. இவ்வளவு தரித்திரத்தில் இவனுக்கு என்ன புஷ்டியான ஆகாரம் கிடைத்திருக்கக்கூடும். இரவில் விலாப்புடைக்க விருந்து தின்று, உறங்கி எழுந்திருந்தவுடனே காலையில் 'காப்பி' இல்லாவிட்டால் பிரபுக்களெல்லாம் களைத்துப் போகிறார்களே. இராச்சோறில்லாமல் இக்குடியானவனுடைய ஆத்துமா என்னபாடு பட்டிராது. தின்கிற அன்னத்தில் கொஞ்சம் குறைத்துக்கொண்டாவது இவனுக்குக் கொஞ்சம் அன்னம் போடலாகாதா? பசியின் வருத்தம் பணமுள்ளோருக்குத் தெரிவதெப்படி. என் போன்ற ஏழைக்கன்றோ தெரியும். ஓ தெய்வமே! என் ஏழைகளைப் பிறப்பித்து பிரபுக்களுடைய உதாசினத்துக்கும், பசிக்கும், துன்பத்துக்கு முள்ளாக்கவேணும். கருணா நிதே! நாங்கள் அனுபவிப்பது முன் ஜென்மத்திலிழைத்த பாபபத்தின் பயனோ: வருகிற ஜன்மத்தி லடையப்போகிற சுகிர்தத்துக்குக் காரணமோ:யாது கருதி எங்களை சிருஷ்டித்தீர்? புலி சுகிக்க, பசுக்கள் வருந்த—துஷ்டர்கள் செழிக்க, சிஷ்டர்கள் க்ஷீணிக்க,—அல்பர்கள் உயர, சிலர்கள் தாழ—தர்மம் தலைகீழாகும்படி உயிர்களை வைத்து ஆட்டுகிறது உம்முடைய காருண்ணியத்துக்குப் பொருந்துமோ? யோஜிக்குங்கால் எல்லாம் உம்முடைய லீலையாகத் தோன்றுகிறது. அதை அறிய, என்னால் முடியுமோ - நானோ புல்லறிவாளன், இவ்வுலகில் சொற்ப நாள்தான் இருக்கப்போகிறேன். ஆண்டவனே, உம்மையே நம்பினேன், நீர் விட்ட வழிவிடும்" என்று பிரலாபித்துக் கொண்டேபோனான். போகும்பொழுது "அப்புக்குட்டி," "அப்புக்குட்டி" என்று கூப்பிட்ட குரல் காதில் விழுந்தது. வேறுகவலையாய் இருந்தமையால், அதைக்கவனிக்கவில்லை. மறுபடியும் "அப்புக்குட்டி" என்று உரத்துக் கூப்பிட்ட சப்தம் சமீபத்தில் கேட்டது. அப்புக்குட்டி திரும்பி பார்த்தான்: அகன்ற மார்பும், குறுகிய இடுப்பும், பரந்த நெற்றியும், குழிந்த கன்னமும், ஆழ்ந்த கண்ணும், கப்பரைக் காதும், காதில் பூணாலும், இடது தோளில் மடிசஞ்சியும் தலையில்

ஒரு பெரிய மூட்டையுமாக எட்டி அடிவைத்து வேகமாய் வருகிற ஒருவனைக்கண்டான். இன்னரென்று தூரத்தில் தெளிவாகத் தெரியவில்லை. கிட்டவந்த பிறகுதான் சிவராமசாஸ்திரி என்று அப்புக்குட்டி அறிந்தான்.

(இன்னும் வரும்.)

ஆர். சக்கரவர்த்தி அய்யங்கார், பி. ஏ.

## “வெனிஸ் வணிகன்”

“வெனிஸ் வணிகன்” என்று தமிழிற் பொருள்படும் “மெர்ச்செண்ட் ஆப் வெனிஸ்” (Merchant of Venice) என்னும் இவ்விங்கிலீஷ் நாடகம் அப்பாஷையில் மிகச்சிறந்த நாடக கவியாகிய “ஷேக்பியர்” என்பவரால் இயற்றப்பட்டு ஐந்து அங்கங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

அவற்றுள்,—

1-வது அங்கத்தின் கதைச்சுருக்கம்:—

‘அன்டோனியோ’ என்பவன் வெனிஸ் நகரத்திலுள்ள இளையனை ஒரு பெரிய வணிகன்; யாரிடத்தும் மிக்க அன்புடையவன்; தக்க செயலுமுடையவன்; பிறர்க்கு உதவிபுரிதலில் ஒருபொழுதும் தளராத மனமுடைய உதாரன்; நாட்டிலுள்ளோருடைய நன்குமதிப்புமுடையவன். இவன் ஒருநாள் அர்நகரத்தில் ஓர் தெருவில், தன் நண்பராகிய ‘ஸாலறீனே’ ‘ஸல்லானியோ’ என்பவரோடு, தனக்குக் காரணமில்லாமலுண்டாகிய மனக்கவலையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், அவனுக்குப் பந்துவும் இன்னுயிர்த் தோழனும் அவ்வூர் உயர்குலத்தவரில் ஒருவனுமான ‘பஸ்ஸானியோ’ என்பவன் ‘க்ரோஷ்யானே’ ‘லொரென்ஜொ’ என்ற இரண்டு நண்பர்களோடு அங்குவந்தான். வந்தபின்னர் ஒருவருக்கொருவர் நல்வரவுகூறி இரண்டு நண்பரும் அளவளாவிப் பேசத்தொடங்குகையில், மற்றை நால்வரும் பின்னர் இரவிற்சந்திப்பதாய்ச் சொல்லி விடைபெற்று அவ்விடம்விட்டு நீங்க, பஸ்ஸானியோ; அன்டோனியோவைநோக்கி “எனது பிதிரார்ச்சிதமாகிய எல்லாமுதலையும் நான் அளவுக்குமிஞ்சிச் செலவிட்டுச் சிறப்புக்காட்டி வாழ்ந்து ஏழையாயினேனென்பதை நீயறிவாயே. இப்பொழுது பெருஞ்செல்வத்திற்குரிய ஒரு குலமாதைக் கலியாணஞ்செய்து முன்போல் முதலாளியாவதற்கு எண்ணியிருக்கிறேன். சொற்பகாலத்துக்கு முன் இறந்துபோன அவளுடைய தந்தை, அவளுக்கு அளவிறந்த செல்வத்தை வைத்திருக்கிறார். நான் அவள் மேல் மிக்க அன்புடையேன். அவளுடைய தந்தையின் காலத்து நான் அடிக்கடி அவ்விடத்திற்கும் போதலுண்டு. அப்பொழுது பேசாமற்பேசும் அவளுடைய அன்புகூர்ந்தபார்வையைப் பெற்றுள்ளேன். இப்பொழுது அச்செல்வச்சீமாட்டியை மணங்கொள்ளக் கேட்பதற்குத் தக்கநிலைமையிற் போவதற்கு வேண்டிய செயலில்லாமையின் உன்னுடைய உதவியை நாடிவந்தேன். நீ எனக்கு இதுவரையில் அன்பாலும் பணத்தாலும் செய்திருக்கும் உதவிக்கு உனக்கு நான் எவ்வளவோசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குமுன் உதவியதுபோல் இப்பொழுது மூவாயிரம் பொன்தந்து உதவிசெய்யவேண்டுகிறேன்” என்ருன். அப்பொழுது அன்டோனியோவிடத்துப் பணமில்லாமையாலும் தூரதேசத்துக்குப் போயிருக்கும் அவனுடைய கப்பல்கள் சரக்கேற்றிக்கொண்டு விரைவில் திரும்பிவிடுமென்று அவன் எதிர்பார்த்தமையாலும், பஸ்ஸானியோவும் அன்டோனியோவும் வட்டிக்குக் கடன் கொடுப்போனாகிய ஷைலாக்கினிடம் போனார்கள். ஷைலாக் என்பவன், வெனிஸ்ஸிலுள்ள ஒரு யூதன்; கிறிஸ்தவ வணிகர்களுக்கு அதிகவட்டிக்குக் கடன் கொடுத்துத் திரண்ட பொருள் சேர்த்த அநியாயவட்டிக்காரன்; அவன் கொடுத்த முதலை வட்டியுடன் திருப்பிவாங்குங்காலத்து நெஞ்சில் ஈரமில்லாமற் கடுமையாயிருப்பவனாதலின் நல்லோர் யாவராலும் வெறுக்கப்பட்டவன்; முக்கியமாய் அன்டோனியோவால் கிரம்ப வெறுக்கப்பட்டவன். அன்டோனியோ இடருற்ருேர் யாருக்கும் வேண்டிய பொருளுதவி செய்து தான் கொடுக்கும் பணத்துக்கு ஒருபொழுதும் வட்டி வாங்காதவனாதலின், இவ்வுதாரவணிகனும் பேராசைக்கார யூதனாகிய ஷைலாக்கும் ஒருவரையொருவர் மிகவும் பகைத்து வந்தனர். வணிகர் கூடும் இடமாகிய ‘ரியால்டோ’ என்னும் ‘உண்டிகைச்’ சாலையில் அன்டோனியோ ஷைலாக்கைச் சந்திக்கும்பொழுதெல்லாம் அவனைக் கடும்வட்டிக்காரனென்றும் நெஞ்சத்து ஈரமில்லா நடையினனென்றும் இகழ்ந்து பழிப்பதுவழக்கம். இப்பொழுது அவனிடத்து அன்டோனியோ வட்டிக்கு மூவாயிரம் பொன் கடன் கொடுக்கவேண்டுமென்றும் அத்தொகையை மூன்று மாசத்தில் திருப்பிக்கொடுக்கக் கூடுமென்றுஞ் சொல்ல, ஷைலாக் “இவன் எப்பொழுதேனும் என் கைப்பிடியில் அகப்படுவானாயின் இவனிடத்து எனக்குள்ள பழைய பகையை என் வருத்தமாறத் தீர்த்துக்கொள்வேன்; எங்கள் யூத சாதியையே இவன் வெறுக்கின்ருன்; வட்டியில்லாக் கடன் கொடுக்கின்ருன்; வணிகர் நடுவில், நான் நல்வழியில் தேடிய பொருளைக் கடும் வட்டிப் பொருளென்று இகழ்ந்து பழிக்கின்ருன். இதற்குப் பழிவாங்கா திருப்பேனாயின் என்குலமே நாசமுறுக” என்று தன்னுள்ளே ஆலோசித்து மறுமொழிசொல்லாமல் இருப்பவனை நோக்கி, அன்டோனியோ “என்ன ஷைலாக், நான் சொல்லியது உன் காதிற்பட்டதோ? நீ பணம் கடன் கொடுக்கிருயோ” என்ருன். அதற்கு ஷைலாக் “ஐயா, அன்டோனியோ, என்னை நீர் ரியால்டோவில் பலமுறையும் என் பணத்தைப்பற்றியும் வட்டியைப்பற்றியும் இகழ்ந்து பேசியிருக்கிறீர்; அவற்றிற்கெல்லாம் நான் வெறுப்பால் தோள் நெரித்ததேயன்றி மறுமொழியொன்றும் சொன்னதில்லை, எதையும் பொறுத்தலே என் சாதிக்குரிய குணமாதலின். என்னை நீர் வேதவிரோதி யென்றும் கொலை செய்யும் நாயென்றும், இட்டியிருக்கிறீர்; என் உடைமேல் துப்பியிருக்கிறீர்; உமது வாயிற் படியினின்றும் வேற்றுநாயை வெறுத்துத்தள்ளுவதுபோல் என்னைக் காலால் உதைத்துத் தள்ளியிருக்கிறீர். இப்பொழுது என் உதவியை நாடிவந்தீர்; என்னிடத்தில்வந்து ‘ஷைலாக்’ பணம் கடன்கொடு என்கிறீர். நாயினிடத்திற் பணமுண்டோ? நாயினிடத்தில் மூவாயிரம் பொன் கடன் வாங்குதலும் சாத்தியமானதோ? நான் வணங்கிப்பணிந்து என் அழகிய ஐயரே, சென்ற புதன்கிழமை என்மேல் துப்பினீர், வேருெருகாலத்து என்னை நாயென்றழைத்தீர், இவ்வுபசாரவார்த்தைகளுக்காக நான் உமக்குப் பணம் கடன் கொடுப்பேன், என்று சொல்லவோ” என்றுகூற, அன்டோனியோ, “இனிமேலும் நான் உன்னை அப்படியே அழைப்பேன், உன்மேல் துப்புவேன், உன்னை உதைத்துத் தள்ளுவேன். நீ இப்பணத்தைக் கடன்கொடுக்க மனமுள்ளாயாயின், அதை நீ உன் நண்பனுக்குக் கொடுப்பதுபோல் கொடுக்கவேண்டியதில்லை; உன் பகைவனுக்குக் கொடுப்பதுபோலவே கொடு; அப்பொழுதுதான் நான் தவறும்பக்ஷத்தில் என்னைத்தண்டமிறுக்கச் செய்தல் உனக்கு மரியாதையாயிருக்கும்.” என்ருன். அதற்கு ஷைலாக் “ஏன் பார்க்கிறீர்? உமக்கேன் இவ்வளவு கோபாவேசம்? உம்மோடு உறவாயிருக்கவும் உமது நேசத்தைப் பெறவும் நான் மிக்க விருப்பமுடையேன்; என்னை நீர் அவமானப்படுத்தியதையெல்லாம் மறந்து இப்பொழுது உமக்குள்ள முட்டுப்பாட்டைத் தீர்ப்பேன்; என் பணத்திற்குக் காற்காசேனும் வட்டி வேண்டேன்” என்று சொல்ல, அங்வெளியன்பைக் கண்டு அன்டோனியோ மிகவும் அதிசயித்தான். ஷைலாக், பின்னும், அன்புடையோன் போலவே பாவனைகாட்டிக் கொண்டு “அன்டோனியோவின் தயைவேண்டுமென்று நான் இத்தனையும் செய்கிறேன்; வட்டியின்றி மூவாயிரம் பொன்னும் கடன் கொடுப்பேன்; அன்டோனியோமாத்திரம் பத்திரம் பதிவிக்கும் அதிகாரியிடத்து வந்து, இன்ன நாளைக்குள் தான் அப்பணத்தைக் கொடுக்கத்தவறினால் தன் தேகத்தினின்றும் எனக்கு விருப்பமுள்ளவிடத்தில் நான் அறுத்தெடுத்துக்கொள்ளும் ஒருபவுண்டு நிறையுள்ள தனது தசையே அதற்கு அபராதமென்று வேடிக்கையாய்ப் பத்திரத்திலெழுதிக் கையெழுத்து வைத்தாற் போதும்” என்று சொல்ல, பஸ்ஸானியோ அன்டோனியாவை நோக்கி “என் முட்டுப்பாடு தீராமல் வருந்தினும் வருந்துவேனேயன்றி இப்படிப்பட்ட பத்திரத்தில் எனக்காக நீ கையெழுத்துவைக்க நான் ஒருபொழுதும் உடன்படேன்” என்ருன். இதற்கு அன்டோனியோ, கையெழுத்துவைப்பேன்; இதிற்பயமேயில்லை; பணம் திருப்பிக்கொடுக்கவேண்டிய காலத்திற்குள் பத்திரத்தொகைக்கு எத்தனையோ மடங்கு அதிக விலையுள்ள பண்டங்கள் நிரப்பப்பெற்று எனது கப்பல்கள் திரும்பிவிடும்” என்ருன். இவ்வாக்குவாதத்தைக் கேட்டு ஷைலாக் “ஆ! தெய்வமே! இக்கிறிஸ்தவர்கள் என்ன ஸந்தேகக்காரர்கள்! இவருடைய கொடிய நடை, பிறரும் தம்மைப்போன்றே கொடியரென்று இவரை எண்ணச்செய்கின்றது. ஐயா, பஸ்ஸானியோ, நீரே சொல்லும்: அவர் குறித்தகாலத்திற் பணங் கொடுக்கத் தவறினால், அவரிடத்திருந்து இத்தண்டமிறுத்தலால் எனக்கு என்னபயன்? ஒரு பவுண்டு நிறையுள்ள மானிடமாமிசம், மாட்டிறைச்சி ஆட்டிறைச்சியைப்போல் விலை யுளதோ, வேறு பிரயோசனந்தான் உள்ளதோ? அவர் தயைவேண்டி நான் இவ்வன்பு பாராட்டுகிறேன். அவரும் அப்படியெண்ணுவாராயின் நன்றே; அன்றெனின் விடைபெற்றுக்கொள்ளுகிறேன்” என்றுகூற, ஷைலாக்கின் அன்புமொழியைப்பற்றி மிக்க ஐயமுறும் பஸ்ஸானியோ, தனக்காகப் பத்திரத்தில் கையெழுத்துவைக்கவேண்டியதில்லையென்று பலவாறு தடுத்தும் அன்டோனியோ கேளாமல், ஷைலாக் வேடிக்கையென்று சொன்னதை உண்மையென்று நம்பிப் பத்திரத்திற் கையெழுத்து வைத்தான். இங்கிது நிற்க.

வெனிஸ்ஸுக்கு அருகில் ‘பெல்மான்ட்’ என்னுமிடத்து, பஸ்ஸானியோ மணஞ்செய்ய விரும்பிய பேரழகுடைய செல்வச் சீமாட்டியாகிய ‘போர்ஷியா’ என்பவள் தனது வேலைக்காரியாகிய ‘நெரிஸ்ஸா’ என்பவளைப் பார்த்து “என் இச்சிற்றுளம்? இப்பேருலகால் வருந்துகின்றது; நான் விரும்புபவனை எனக்குக் கணவனாக வரிக்கவோ, வெறுப்பவனை மறுக்கவோ சுவாதீனமுடையேனல்லேன்; என் தந்தையின் மரணசாஸனம் என்னைத்தவிர்க்கின்றது” என்று வருத்தத்தோடு சொல்ல, நெரிஸ்ஸா, தன் தலைவியை நோக்கி “என்னம்மையே, நீ வருந்தற்க; உனது தந்தை தூயமனத்தராகிய உத்தமராதலின், இப்பொன் வெள்ளி ஈயப்பெட்டிகள் மூன்றனுள் உன்னை மணங்கொள்பவர் இன்னதைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்று அவர் ஏற்படுத்திய சூழ்ச்சியாகிய திருவுளச்சீட்டில், உன்னை அடைவதற்கு உண்மை

யாய்த் தக்கவரெவரோ அவரன்றி மற்ற யாரும் உனது உருவமைந்த படத்தைத் தன்னுள்ளேயுடைய சரியான பெட்டியைத் தெரிந்தெடுக்க வல்லவராகார்'' என்று சொல்லித்தேற்றி ''உன்னை மணங்கொள்ளக் கேட்க வந்தவருள் யாரிடத்து எவ்வளவு அன்புடையாய்'' என்று கேட்க, போர்ஷ்யா தன் உட்கருத்தை அடியில் வருமாறு வெளியிட்டாள்: ''நேபிள்ஸ் தேசத்து இராசகுமாரன், அற்பப்புத்தியையுடைய பயிற்சியில்லாச் சிறுவன்; குறுநில மன்னனோ எப்பொழுதும் கடுத்த முகத்தினன்; 'லி-பான்' என்ற பிரான்ஸ் தேசத்துப் பிரபுவோ மனிதனென்ற பெயருக்கு உரிமையற்றவனெனினும் பலருடைய தீயகுணமும் ஒருங்குசேர்ந்தனவென்று சொல்லும்படி யிருப்பவன்; இங்கிலாண்டு தேசத்து இளம்பிரபுவாகிய பால்கன்பிரிட்ஜ், அழகான ஊமையுருவம்; என் பேச்சை அவனறியான், அவன் பேச்சை நானறியேன். ஸ்காட்லண்டு நாட்டுப் பிரபுவோ கையாலாகாத பெண்மையோன். ஸாக்ஸனி நாட்டரசனது மருமகனை இளம் ஜர்மனோ குடித்து மயங்கும் வெறியன், மிக நல்ல நிலைமையிலும் மனிதனல்லன்; பொல்லா நிலைமையில் விலங்கினுக்கு வேறானவனல்லன். யுத்தவீரரும், பண்டிதருமாகிய வெனிஸ் நகரத்து 'பஸ்ஸானியோ' என்பவர் 'அழகுள்ள மாதுக்கு இயைந்தவர் அவரோ' என்ற உனது புகழ்ச்சிக்குத் தகுதியையுடையவர். மொராக்கோ நாட்டரசனோ வெறுப்பான பேய் முகத்தோன்.''

(இன்னும்வரும்.)

எஸ். நாராயணசாமி அய்யர். பி. ஏ.

---

## உபாத்தியாயர்பக்கம்.

### பிரதம பாடசாலை உபாத்தியாயர்கள் கவனிக்கவேண்டியவைகள்.

BY MRS. I. BRANDER.

பின வருகிற விஷயங்கள் மிகவும் சாதாரணமானவைகள். ஆனபோதிலும் பாலிகா பாடசாலைகளிலுள்ள உபாத்தியாயர்கள் அவைகளை கவனிக்காமலிருப்பதை யடிக்கடி நான் பார்த்திருக்கிறபடியால் இங்கே அவைகளை விவரித்துச் சொல்கிறேன். கவனிக்கவேண்டிய விஷயங்களில் முக்கியமானவை:—

1. பாடம் நடக்கையில் கவனித்தல்,

2. உபாத்தியாயர்கள் கேள்விகேட்க வேண்டிய முறை.

3. கடினமானஅம்சங்களைத்தெளிவாகச்சொல்லல்.

4. விவரித்துச் சொல்லல்.

5. உபமானங்களை யுபயோகித்தல்

6. உபாத்தியாயர் பாடம்போதிக்கத் தயார் செய்யல்

7. மாணக்கர்கள் பாடம் கேட்கத்தயார் செய்யல்

8. வீட்டுப்பாடங்கள்

#### 1. பாடம் நடக்கையில் கவனித்தல்:—

பாடம் நடக்கையில் பிள்ளைகள் கவனித்தாலொழிய அவர்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. போதிக்கும் முறை தெரியாத புது உபாத்தியாயர்கள் பாடம் நடத்துகையில் பிள்ளைகள்தங்கள்மேல் கருத்தாயிருந்து தாங்கள் சொல்வதைக் கவனிக்கும்படிசெய்யத் தவறிப்போகிறார்கள். இதற்கு ஒரு காரணம் என்னவெனில் பாடம் நடத்தும்பொழுது அவர்கள் எல்லாப்பிள்ளைகளையும் கவனித்துப்பார்த்து வராமல் யாரோ ஒரு பிள்ளையைமட்டும் பார்த்துப்பேசுகிறார்கள். அவர்கள் பின் சொல்லப்படுகிற சங்கதிகளைக் கவனிக்கவேண்டியது:—

உபாத்தியாயர்எல்லாப்பிள்ளைகளையும்இலகுவாய்ப் பார்க்கும்படியாய் கறுப்புப்பலகைக்கு இடதுபக்கத்தில் வசதியான இடத்தில் உட்காரவேண்டும்.

கறுப்புப்பலகை,படம்முதலிய உபகரணங்கள் எல்லாப்பிள்ளைகளும் பார்க்கக்கூடிய இடத்திலிருக்கவேண்டும்.

உபாத்தியாயர் இடுகிற கட்டளைகள் சுருக்கமாயும் தெளிவாயு மிருக்கவேண்டியது. அனாவசியமான வார்த்தைகளைப் பேசிக் காலத்தையும் சக்தியையும் வீணாகக்கழிக்க கூடாது.

கட்டளையிட்டவுடனே எல்லாப்பிள்ளைகளும் ஏகமாய் வரவேண்டும்.

இட்ட கட்டளைப்படி யாராவது செய்யாவிடில் உபாத்தியாயர் தாமிருக்குமிடத்தைவிட்டு அவர்களிருக்கு மிடத்துக்குப்போய் அவர்களை கையால் பிடித்திழுத்து உட்காரவோ நிற்கவோ செய்யாமல் சொன்ன வார்த்தையைச் சொன்னபடி அவர்களே தடையின்றிச் செய்யப் பழக்கிவரவேண்டும்.

தெளிவாயும், உறுதியோடும், பிள்ளைகள் பிரீதியோடு உடன்பட்டு நடக்கும் மாதிரியாகவும் கட்டளையிடவேண்டியது. ஒரு கட்டளையை ஓரே முறைக்குமேல் இடக்கூடாது. பாடம் கற்பிக்கும்பொழுது உபாத்தியாயர் பிள்ளைகள் எல்லாரையும் பார்த்துப் பேசவேண்டியது. தான் சொல்வதை எல்லாப் பிள்ளைகளும் கவனிக்கிறார்களா என்பதையும் பார்க்கவேண்டியது.



கறுப்புப் பலகையில் எழுதும்பொழுது பிள்ளைகள் எல்லாரும் அதன்மேல் கவனமாயிருக்கும்படி பார்த்துவரவேண்டும். அதற்காக, சிறுபிள்ளைகளாகவிருந்தால் பலகையில் எழுதுவதை யெழுத்துக் கூட்டவும், பெரிய பிள்ளைகளாயிருந்தால் எழுதுவதைச் சொல்லவும் செய்விக்க வேண்டியது. எழுதினபிறகு எல்லாரையும் வாசிக்கச் செய்யவேண்டியது.

#### கேள்விகேட்கும் முறை.

கேள்விகள் கேட்கும்பொழுது எல்லாப் பிள்ளைகளையும் பார்த்துக் கேட்கவேண்டியது. ஆனால் மறுமொழிமாத்திரம் ஒரு பிள்ளையிடத்திருந்தே வாங்கவேண்டியது.

கேட்கும் கேள்வி ஸ்பஷ்டமாயும் நிச்சியார்த்தமுள்ளதாயு மிருக்கவேண்டும். அதாவது அந்தக் கேள்விக்கு ஓரே மறுமொழி கொடுக்கத்தக்கதா யிருக்கவேண்டும். இந்த ஸங்கதி பின்வரு முதாரணத்தால் தெளிவாகும்.

உத்திரப் பிரதியுத்திரமூலமாய் ஒருநாயின் பாதத்திற்கும் ஒரு பூனையின் பாதத்திற்குமுள்ள பேதத்தைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டி யிருந்தால் 'நாயின்பாதம் எப்படி யிருக்கிறது? பூனையின் பாதம் எப்படி யிருக்கிறது?'' என்று மொத்தமாய் ஓரே கேள்வி கேட்டுவிடக்கூடாது. ஆனால் அனேகர் இந்த மாதிரியாகவே கேட்கிறார்கள். அது மிகவும் தப்பு. ஏனென்றால் மேலே குறித்த கேள்விக்கு ஓரே மறுமொழியின்றி பலவிதமான உத்திரங்கள் சொல்லக்கூடியதாயிருக்கிறது. 'நாயின் பாதத்தில் இத்தனை விரல்கள், பூனையின் பாதத்தில் இத்தனை. இதுதான் வித்தியாஸம்' என்று ஒருபிள்ளை சொல்லலாம். மற்றொருபிள்ளை 'இதில் நகங்கள் கூர்மை; அதில் அவ்வளவு கூர்மையில்லை,' என்று சொல்லலாம். இந்தமாதிரி எதைச் சொன்னாலும் உபாத்தியாயர் ஒப்புக்கொள்ள வேண்டியதாகத்தா னிருக்கும். உபாத்தியாயர் எந்த அம்சத்திலுள்ள வித்தியாசத்தைக் குறித்துக் கேட்டாரென்பது ஸ்பஷ்டமாயில்லாததினால், பிள்ளைகள் அந்த ஜந்துக்களின் பாகத்தைக்குறித்து எதைச்சொன்னாலும் சரி, 'இன்னும்?' என்று கேட்கும்படியாகத்தான் இருக்கும்.

கேள்விகளை அந்தமாதிரி கேட்கக்கூடாது. மேலே குறித்த அம்சத்தை யொட்டி பின்வரும் மாதிரியான கேள்விகள் கேட்பது சரியாயிருக்கும்:—

நாய்க்கு எத்தனை நகங்கள்? பூனைக்கு எத்தனை? இந்த இரண்டில் எதற்கு அதிகம்? இந்த நாயினுடைய நகங்களின் நுனியையும், இந்தப் பூனையினுடைய நகங்களின் நுனியையும் இதோ இங்கேவந்து தொட்டுப்பார். என்னபேதம் தெரிகிறது? நகங்களை தானாக அசைக்கும் அல்லது இழுத்துக்கொள்ளும் சக்தி நாய்க்கு உண்டா?

பூனைக்கு அவ்விதசக்தி உண்டா?

பூனை எம்முகமாகத் தன் கால்நகங்களை யிழுத்துக் கொள்கிறது?

நாயின் உள்ளங்காலையும் பூனையின் உள்ளங்காலையும் கையால் தொட்டுத் தடவிப்பார். எது அதிகமிருதுவாயிருக்கிறது சொல் பார்ப்போம்?

இந்தமாதிரி கேள்வி கேட்டால்தான் பிரயோஜனமுண்டு. ஒவ்வொன்றும் தெளிவாயும்வியக்தமாயுமிருப்பதுடன் ஒவ்வொரு கேள்விக்கும், உபாத்தியாயர் மனதில் எதை யுத்தேசித்துக் கேட்டாரோ அதைத் தவிர வேறு மறுமொழி சொல்வது சரியாயிராது. அன்றி, பிள்ளைகள் அனேக அம்சங்களைத் தாங்களே கவனித்துப்பார்த்துத் தெரிந்துகொள்ளச் செய்வதாயுமிருக்கிறது.

கேட்கிற கேள்வி பிள்ளைகளின் வயதுக்கும் திறமைக்கும் தக்கதாயிருக்கவேண்டும். உதாரணமாக மேலேகுறித்த கேள்விகள் 2-வது ஸ்டாண்டார்ட் பிள்ளைகளைக் கேட்கத்தக்கவை. இந்த வகுப்புப் பிள்ளைகளுக்கு அம்சங்களை தனித்தனியே குறித்துக் காட்டிக் கேள்வி கேட்கவேண்டும்.

இந்த சங்கதியைப்பற்றியே 4-வது ஸ்டாண்டர்ட் பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டியதா யிருந்தால் 2-வது ஸ்டாண்டார்ட் வகுப்பில் ஒவ்வொரு அம்சத்தையும் குறித்துக்காட்டிக் கேள்வி கேட்டதுபோல் கேட்காமல், ''நாயின் பாதம் பூனையின் பாதம் இந்த இரண்டிற்குமுள்ள வித்தியாசங்களில் ஒன்றைச் சொல். இன்னொரு வித்தியாசம் சொல்.'' என்று கேட்கலாம். இந்தக் கேள்விகளுக்கும் முன் கேட்ட கேள்விகளுக்கும் என்ன வித்தியாசமென்றால்,இவைகளுக்கு மறுமொழிசொல்லப் பிள்ளைகள் கொஞ்சம் அதிகமாக யோசிக்கவேண்டியதுடன், அதிக விஸ்தாரமாக பதில் சொல்லவேண்டியதாகவு மிருக்கும்.

ஓரே கேள்வியை பலமுறை யடுத்தடுத்து அல்லது உடனுக்குடனே மாற்றிக் கேட்கிற வாடிக்கை கூடவே கூடாது. முன்னதாக நன்றாய் ஆலோசித்துத் தெளிவானவிதமாய் கேள்வியைக் கேட்டால் பிறகு மாற்றவேண்டிய அவசியம் நேரிடாது. ஆகையால் தீர ஆலோசித்துப் பிறகுதான் கேள்வி போடவேண்டும். கேள்வியை ஓரேமுறை போட்டு அதற்கு மறுமொழி கொடுக்க பிள்ளைகளுக்கு வேண்டிய அவகாசமும் கொடுக்கவேண்டும். பிள்ளைகளும் ஆலோசனைசெய்து பிறகுதான் மறுமொழி கொடுக்க

வேண்டும். வாய்க்கு வந்ததைச் சொல்லிவிடக்கூடாது. பிள்ளைகள் ஏதாவது மறுமொழிசொல்ல ஆரம்பித்தவுடனே உபாத்தியாயர் அதைப் பூர்த்திசெய்யவாவது அல்லது பிள்ளைகள் சொல்ல ஆரம்பிக்கிற சங்கதியை சரி, சரியல்லவென்று அவர்களுக்கு உடனே தெரியும்படியான சூசனைகள் காண்பிக்கவாவது கூடாது. பிள்ளைகள் மறுமொழி முடியச்சொல்லிய பிறகுதான் அவர்கள் சொல்லியது சரி, சரியல்லவென்று காண்பிக்கவேண்டும். ஆரம்பத்திலேயே சூசனைகாண்பித்தால் பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் முகத்தைப் பார்த்துப்பார்த்து உடனுக்குடனே மறுமொழியை மாற்றுகிற கெட்டவாடிக்கை யுண்டாகும். தானே ஆலோசித்து நிச்சயமாய் ஒரு சங்கதியை யறிந்து அதை தெளிவாய்ச் சொல்ல தைரியமும் ஏற்படாது.

பிள்ளைகள் கொடுக்கும் மறுமொழிகள் சரியாயிருந்தால் அதை அங்கீகரிக்கவேண்டியது. உபாத்தியாயர் எதிர்பார்த்தபடி யில்லையென்ற காரணத்தினால் அதை ஒப்புக்கொள்ளா திருக்கக்கூடாது. பிள்ளைகள் கொடுக்கும் மறுமொழி கொஞ்சம் சரியாகவும் கொஞ்சம் பிசகாகவும் இருந்தால் தப்பானபாகத்தை உபாத்தியாயர் தானே திருத்திச் சொல்லிவிடாமல் தகுந்த கேள்விகள்மூலமாய் இன்னது பிசகென்று அதைச் சொன்ன பிள்ளைக்குத் தெரியக் காண்பித்து அப்பிள்ளை தானே யதைத் திருத்தும்படி செய்யவேண்டியது. பிள்ளைகள் சொன்ன மறுமொழிகளை சில உபாத்தியாயர்கள் திருப்பித் திருப்பித் தாமும் சொல்லுகிறார்கள். இது மிகவும் கெட்ட வழக்கம். பிரயோஜனமில்லாமல் அதையே யடிக்கடி சொல்வதனால் பாடத்தில் ரஸமில்லாமல் போகும். ஒரு பையன் ஒரு ஸரியான மறுமொழி சொல்ல ஆரம்பித்து நடுவில்தடுமாறினால் அவனை 'சொல்லு, உறத்திச்சொல்லு' என்று பலவாறாக தைரியமூட்டுகிறார்கள். அதுவும் சுத்தப்பிசகு. அனேகப் பிள்ளைகள் கேட்ட கேள்விக்கு தகுந்த மறுமொழி யாலோசித்துச் சொல்லாமல் வாய்க்குவந்ததைச் சொல்லுகிறார்கள். ஒரு உதாரணம் எடுத்துக்கொள்வோம். உபாத்தியாயர் ஒரு வார்த்தையை அது என்ன சொல் என்று கேட்டதாக வைத்துக்கொள்வோம். பிள்ளை ஸந்தேகத்துடன் பெயர்ச்சொல் என்று சொல்லிக்கொண்டே தான் சொல்லுவது ஒப்புக்கொள்ளப்படும்போலிருக்கிறதா இல்லையாவென்று உபாத்தியாயர் முகத்தைப் பார்க்கிறான். அவருடைய முகக்குறி அநுகூலமாயிருந்தால் தைரியமாய் பெயர்ச்சொல் என்று சொல்கிறான், உபாத்தியாயர் முகக்குறி அநுகூலமாயில்லாவிட்டால் உடனே தன்னை திருத்திக்கொள்ள யெத்தனப்பட்டு 'அது இல்லை வினைச்சொல்' என்கிறான். இதுவும் தப்பென்று அவன் நினைக்கக் காரணமிருந்தால் உரிச்சொல் என்கிறான். இந்தப்படி ஆலோசிக்காமல் சொல்வதும் அடிக்கடி உபாத்தியாயர் முகத்தைப்பார்த்துப் பார்த்துத் திருத்திக்கொள்வதும் உபாத்தியாயர் எச்சரிக்கை செய்கிறதும் ஆகிய இதெல்லாம் கெட்ட வாடிக்கை. இந்தப்படி செய்த பிள்ளைகளுக்கு ஆலோசித்து பதில் சொல்லும் வழக்கம் ஏற்படாது. நன்றாய் ஆலோசித்து மறுமொழி சொல்ல பிள்ளைகளை வழக்கப்படுத்தவேண்டியது. பிள்ளைகள் தங்கள் மறுமொழிகளைச் சொல்லிமுடிக்கும் வரையில் உபாத்தியாயர் அது ஸரி, ஸரியல்லவென்று குறிப்பாயாவது வெளிப்படையாகவாவது தெரிவிக்கக்கூடாது.

கேள்விகளில் 'போதனைக்கு வேண்டிய கேள்விகள்' 'பரீக்ஷைக் கேள்விகள்' என்று வித்தியாசம் உண்டு. இந்தஸங்கதியை கவனத்தில் வைக்கவேண்டும். பிள்ளைகளுக்கு எந்த ஸங்கதி போதிக்கவேணுமென்று உபாத்தியாயாயர் உத்தேசிக்கிறாரோ, அந்தஸங்கதியை பிள்ளைகளுக்கு நாமே நேரில் சொல்லாமல்தானே அவர்கள் தாமே தெரிந்துகொள்ளும்படியான மாதிரியாய் சிறுகச் சிறுகக் கேட்கப்படும் கேள்விகள் போதனைக்குரிய கேள்விகளாம். ஒரு ஸங்கதியை நன்றாய் போதித்த பிறகு, சொல்லிக்கொடுத்த ஸங்கதியை பிள்ளைகள் நன்றாயறிந்து மனதில் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறார்களா என்று தெரிந்துகொள்ளக் கேட்கும் கேள்விகள் பரிக்ஷைக் கேள்விகள். மேலே நாய் பூனை இதுகளின் பாதங்களைப்பற்றி போட்டுக் காண்பித்த கேள்விகள் போதிக்கும் கேள்விகள். நாம் நேரில் இன்ன இன்ன அம்சத்தில் வித்தியாஸம் என்று ஒரேதடவையாய்ச் சொல்லிவிடாமல் உள்ள வித்தியாசங்களை சிறுகச் சிறுக அந்த கேள்விகள் பிள்ளைகளுக்கே வெளிப்படுத்தும். அப்படி கேட்டதால்தான் தாமே நேரில் கவனித்துப்பார்த்துதெரிந்துகொள்ளும்நல்லவழக்கம் பிள்ளைகளிடத்தில் ஏற்படும். போதனைக் கேள்விகள் மூலமாய்பின்வரும்கணிதத்தைகற்பிக்கிறதற்குஇன்ன மாதிரி கேள்விகள் போடவேணுமென்று உதாரணமாக எடுத்துச்சொல்வோம்;

### கணக்கு.

12 மனிதர்கள் ஒரு வேலையை 9-நாள்களில் செய்வார்கள். அப்படியானால் அதே வேலையை அவர்களில் 7 பேர் எத்தனைநாளில் செய்வார்கள்?

### போதனை கேள்விகள்.

இந்த கணக்கில் என்ன கொடுத்திருக்கிறது? நாம் என்ன கண்டுபிடிக்கவேண்டியது ? என்ன கொடுத்திருக்கிறதோ அதை கறுப்புப் பலகையில் எழுதுவோம்.



12 மனிதர்கள் ஒரு வேலையைச் செய்ய 9 நாள் பிடிக்கும்.

1 மனிதனுக்கு எத்தனைநாள் பிடிக்குமென்பதை கண்டுபிடிப்போம்.

12மனிதரைப் பார்க்கிலும் 1 மனிதன் அதிகமா குறைச்சலா? மற்ற 11 பேரும் அவனுடன்கூடவிருந்து வேலை செய்யாமல் தான்மட்டும் ஒன்றியாக இருந்து வேலைசெய்தால் அவனுக்கு ஜாஸ்திநாளாகுமா குறைச்சல் நாளாகுமா? 12 மனிதருக்கு ஆன நாள்களைவிட எவ்வளவுமடங்கு நாள் அதிகம்பிடிக்கும்? 12 மனிதருக்கு ஆனகாலமென்ன? ஆகையால் 1 மனிதனுக்கு எத்தனைநாள் ஆகும்? அதை யெழுதுவோம்.

1-மனிதன் அதேவேலையை செய்ய 9×12 நாள். எத்தனை மனிதருக்கு வேண்டிய காலம் நமக்கு தெரியவேண்டியது?

1-மனிதனுக்கு எத்தனைநாளாச்சுதோ அதைவிட 7-பேருக்கு அதற்கு அதிகமாகுமா குறைச்சலாகுமா.

7-ஆனு 1-ல் எத்தனாவது பாகம்?

ஆகையால் 1-மனிதனுக்கு எத்தனை நாள் பிடித்ததோ அதில் எத்தனாவது பாகமிருந்தால் 7-பேருக்கு போதும்.

இதை பலகையில் எழுதுவோம்.

7-மனிதர்கள் அதேவேலையை $\frac{9\times12}{7}$ அல்லது $15\frac{3}{7}$ நாள்களில் செய்வார்கள்.

போதனைக்கேள்விகள்இந்தமாதிரிபிள்ளைகளை தாங்களே யோஜித்து கேட்டதை கண்டு பிடிக்கும்படி செய்யவேண்டும். இந்தப் பிரகாரம் நாம் சொல்லிக்கொடுத்த கணக்கைபிள்ளைகள்நன்றாய் அறிந்து கொண்டார்களா இல்லையா வென்று தெரிந்துகொள்ள பின்வரும் பரீக்ஷை கேள்விகள் போட வேண்டியது.

இந்த கணக்கு செய்ததில் முதல் முதல்நாம்என்ன கண்டுபிடித்தோம்? முதல் எதை பலகையில் எழுதினோம்? பலகையில் முதலில் எழுதினதைவாசி. அடுத்தாப்போல் என்ன செய்தோம்? இந்த பரிக்ஷை கேள்விகள் ஏற்கனவே சொல்லிக்கொடுத்த அம்சங்கள் ஞாபக மிருக்கிறதாவென்று உபாத்தியாயர் அறிந்துகொள்ள உபயோகமே தவிர எதைச் சொல்லிக்கொடுக்க உத்தேசமோ அதை புலப்படுத்தும்படி கேட்கப்படும் கேள்விகள் அல்ல.

(இன்னும் வரும்.)

## நமது பார்வைக்கு வந்த புஸ்தகங்கள்.

இங்கிலீஷ்தமிழ்அகராதி:—ரெவரெண்ட் பி.பெர்ஸிவல் அவர்கள் தயார்செய்த இங்கிலீஷ் தமிழ் அகராதியின் நூதன பதிப்புப்புஸ்தகம் ஒன்று ஸ்ரீனிவாஸவரதாசாரி கம்பெனியாரால் நமது பார்வைக்கு அனுப்பப்பெற்றோம், இவ்வகராதியில் சாதாரணமாக வழங்கும் எல்லா இங்கிலீஷ் பதங்களுக்கும் தமிழில் சரியான வார்த்தைகளும் அர்த்தங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது அனேக வருஷங்களுக்கு முன் தயார் செய்யப்பட்டு இதற்கு முன் பல பதிப்புகள் வித்தியாபிவிர்த்தியிலாகாத்தலைவர் ஆதரவில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப்பதிப்பு இதற்கு முன் பிரசுரிக்கப் பட்டதைத்திருத்தி வித்தியாபிவிர்த்தி யிலாகாத்தலைவராபீஸில் தக்கவர்கள் மேன்பார்வையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் பதிப்பி லில்லாத அனேக நூதனபதங்கள் இப்பதிப்பில் சேர்த்துப் புஸ்தகம் அதிகமாய் விர்த்திசெய்யப்பட்டிருக்கிறது. இது பள்ளிக்கூடங்களில் உபயோகிக்க மிகவும் உபயோகமான புஸ்தகம். ஒவ்வொரு மாணாக்கரிடத்தும் ஒரு புஸ்தகமிருக்கவேண்டியதவசியம். புஸ்தகத்தின் அச்சுப்பதிப்பு, பயிண்டு, காகிதம் எல்லாம் மிகநேர்த்தியாகவிருக்கின்றன. இதன்விலை ரூபா 1—8—0. சிலமாதங்கள்முன்பலர்இப்புஸ்தகம் வேண்டுமென்று இப்பத்திரிகை பிரசுரிக்கும் அறிவைப்பரவச்செய்யும் ஏஜன்ஸி காரியதரிசிக்கு எழுதிக்கொண்டார்கள். அப்பொழுது இப்புஸ்தகம் விலைக்கு கப்படாமல் அச்சிலிருந்ததால் நாம்வாங்கியனுப்பக்கூடவில்லை. வேண்டியவர்கள் மறுபடியும் நமக்காவது மேற்படி ஸ்ரீனிவாஸாவரதாசாரிகம்பெனியாருக்காவதுஎழுதிக்கொண்டால்'வாலியூபேயேபில்போஸ்டு' மூலமாகப்பெற்றுக்கொள்ளலாம்,

"சென்ற நாற்பது வருஷகாலமாகச் சென்னைஇராஜதானியிலுண்டாயிருக்கும் அபிவிர்த்தி" யைக்குறித்துச்சென்னைக்கவர்னராயிருந்தலார்ட்கன்னிமாரா கோரிக்கைப்படி ரிஜிஸ்திரேஷன் இலாகாத்தலைவர் ம-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் எஸ். ஸ்ரீனிவாஸராகவய்யங்கார் அவர்கள் எழுதிய குறிப்லைப கவர்ன்மெண்டாரால் ஓர் பெரிய புஸ்தகரூபமாக அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதில் ஒரு பிரதி கவர்ன்மெண்டார் நமக்கு அனுப்பப்பட்டதற்காக அவர்களுக்கு வந்தனஞ்சொல்கிறோம். இப்புஸ்தகத்தில் நமது இராஜதானி ஜனங்களில் முற்கால தற்கால ஸ்திதியைப்பற்றித்திவான்பஹதூர் ஸ்ரீனிவாஸராகவய்யங்கார் அவர்கள்விஸ்தாரமாகஎழுதியிருக்கிறார்.

• இப்புஸ்தகத்தி லடங்கிய விஷயங்களில் சிலவற்றைக்குறித்துப் பின்னிட்டு இப்பத்திரிகையில் குறிப்பிட்டெழுதப்படும்.

## ராய்பகதூர் பூண்டி - அரங்கநாத முதலியாரவர்கள் தேகவியோகமானதைக் குறித்துச் சொல்லிய பாடல்கள்.

[1893௵ டிசெம்பர்௴ 10௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4½மணிக்குத் தேகவியோகமானார்.]

(கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம-௱-௱-ஸ்ரீ வே. சாமிநாதைய ரவர்கள் இயற்றியவை.)

நண்பார் தருமரங்க நாதசுகு ணாகரவித்
திண்பார் புகழ்கல்விச் செல்வமுடைச் சிங்கமே
பண்பார் தருமுன்னைப் பார்த்தே பெருமகிழ்வை
உண்பார் வருந்த வொளித்தெங் ககன்றனையே. (க)

தென்னாடு செய்த செழுந்தவமே தென்றொண்டை
நன்னாடு பெற்ற நலமார் மணிவிளக்கே
முன்னாடு சென்னை முளைத்த முழுமதியே
எந்நாடு சென்றாயீ தென்னேயோ வென்னேயோ. (உ)

பொன்னைப் பெறலாம் புகழ்பெறலாம் பூவலயத்
தன்னைப் பெறலாந் தகமுயன்றால் யாவையுமே
பின்னைப் பெறலாம் பிறழா மனவலிசேர்
உன்னைப் பெறுமாறு முண்டோ வுரையாயே. (ங)

பனியார் சிலசொற் பகர்ந்தே யுளங்குழைப்போய்
கனியா ரினிமை கலந்தே சுவைகள்
நனியார் தமிழி னயந்தெரிய வல்லா
ரினியா ருனைப்போ லினியா ரினியாரே. (ச)

என்னே நலமா ரிராமசா மிக்குரிசில்
முன்னே யகன்றான் மொழியுமவ னைத்தொடர்ந்து
பின்னே நடந்தாய் பிரிவாற்றாத் தன்மையினோ
நன்னேய மாரரங்க நாத நயாகரனே. (ரு)

நாவலோர் வாழ்த்தரங்க நாத நயசுகுண
பாவலோர் பெற்றபெரும்பாக்கியமே செந்தமிழின்
ஆவலோ டேனை யருங்குணங்கள் யாவையுமே
மாவலோ யெவ்விடத்து வைத்தகன்றாய் சொல்லாயே. (சு)

வேறு.

உனைப்போல வெவற்றையுமே யொழுங்காகச் செய்துமுடித் துற்றோர் யாரே
உனைப்போலத் தமிழர்தலை சாயாம னிறுத்தவல்லோ ருலகில் யாரே
உனைப்போல வலியார்க்கு மெலியார்க்கு மொப்பநடந் துவந்தோர் யாரே
உனைப்போலப் பலகலையு மெளிதறிந்து கம்பீர முடையோர் யாரே. (எ)

வேறு.

தரங்க வேலை யனைய தாய சபையி டைப்புகுந்துநின்
றுரங்க லந்த வாங்கி லேய ரொருமொ ழிப்ர ஸங்கமங்
கரங்க நாத வள்ளல் போல வவர வர்வி யக்குதஞ்
சிரங்க ரந்து ளக்கு மாறு செப்ப வல்லர் யாவரே. (அ)

வேறு.

எல்லா நலமு மினிதமைந்தோன் பூண்டிநகர்
நல்லான் புகழரங்க நாத முகிலிறந்து
பொல்லாத வோசையிடி போலே தமிழ்க்குயிலை
வல்லாங்கு செய்து வருத்தத் திருத்தியதே. (கூ)



## சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

### *பிறந்தநாட் காணிக்கை.

பாமாதேசத்தில் ஆவாவென்னும் நகரில் முற்காலத்தில் ஓர் இளையராஜகுமாரன் இருந்தான். அவன் பாலியத்தில் மிகவும் செல்வமாக இச்சையானபடி வளர்ந்துவந்தவன். அவனுக்குப் பதினேழாவது வயது வந்ததும், அத்தேசத்து வழக்கப்படி அரசைக்கைக்கொண்டு சிங்காசனம் ஏறலாயினான். அக்காலத்தில், மந்திரி பிரதானி முதலிய உத்யோகஸ்தர்களும், குறுநில மன்னர்களும் மிகவும் விலையுயர்ந்த அநேக ஆடையாபரணங்களை அரசனுக்குக் காணிக்கையாகக் கொணர்ந்து அரசன் திருவடியில் வைத்து வணங்கினார்கள். ஒருவன் கோலகொண்டா ரத்தினங்களில் பொறுக்கியெடுத்த அநேக விலையுயர்ந்த மணிகளடங்கிய ஒரு பொற்பேழையையும், ஏனையொருவன் ஐரோப்பிய சிற்பியினாற் செய்யப்பட்டு மிகவும் வேலைப்பாடு முற்றிய அருமையாகிய ஓர் விநோதமான கடிகாரத்தையும், மற்றொருவன் சீனப்பட்டிற்சிறந்த ஆயிரம் பொன்பெற்ற ஓர் பூம்பட்டாடையையும், மற்றொருவன் எவ்விதமான கொடிய விஷங்களையும் வியாதிகளையும் நீக்கவல்ல மகத்துவந்தங்கிய ஓர் மணிக்கல்லையும், ஏனை யொருவன் அகிற்கட்டையினாற் செய்து உள்ளெல்லாம் ஆணிமுத்துகளாலிழைத்து மணிகள் பதித்த ஒருசிறு பெட்டி நிறையச் சிறந்த வாசனைத் திரவியங்களையும், ஏனையொருவன் மக்காநகரிற் செய்த மகத்தான தயிலம் நிறைந்த ஓர் பொற்சிமிழையும், ஏனை யொருவன் அரபிதேசத்துக் குதிரைகளில் அருமையான புரவியொன்றையும், ஏனை யொருவன் அரம்பை மகளிர் போலும் அழகு சிந்தும் ஓர் அடிமை மகளையும், இவ்வாறாக எல்லோரும் தத்தமக்குக் கிடைத்த அருமையான பல காணிக்கைகளைத் தந்து வணங்கினார்கள்.

கடைசியில், வெகுதூரத்துக் கப்பால் ஓர் மாகாணத்துக் கதிபதியாகிய வயது சென்ற சிற்றரசொருவர், எளியவர்போலப் பஞ்சடை தரித்து, வெண்ணிறத்தாடி மார்பெலாம் புரள வேந்தனுக் கெதிரே வந்து அடிபணிந்து பொற்சரிகை யிட்டபட்டுப்பையொன்றை நீட்டி இவ்வாறு சொல்லலுற்றார்.

"அரசர் பெருமானே! யானன்போடும் அளிக்கும் ஆசீர்வசனத்தையும், என்கையிலேந்திய இச்சிறு காணிக்கையையும் அங்கீகரிப்பீராக. இஃது பார்வைக்குச் சிறிதேயாயினும், உண்மையாகவிலை மதிப்பில் மிகவும் உயர்ந்ததாகும். மற்றவர்கள் கொடுத்தவெல்லாம் உமது உடம்புக்கே பூஷணமாகும்; இதுவோ உமதுள்ளத்துக் கழியா வெழிலைச் சமைப்பதாகும். ஏனையோர் எத்தனையோ சுகந்தங்களளித்தாராயினும் இதுவன்றோ உமது பெயருக் கினிமையையூட்டி நெடுங்காலம் நீடிப்பரிமளிக்கச் செய்வது. ஏனையோரீந்தன கண்ணுக் கழகாகும்; இதுவன்றோ உமது கருத்தில் ஆறாமகிழ்ச்சியை வளர்ப்பது. ஏனையோருதவியன உடலினுற்ற நோய்களைத் தீர்ப்பன; இதுவன்றோ உமது உட்பிணியை நீக்கி உயர் நலம் தருவது. ஏனையோர் உதவியன நிலையில்லாத இம்மண்ணுலகிற் சிறந்தன; நான் தருவதன்றோ அழிவில்லாத பரலோக சம்பத்தை நல்குவது" என்றிவ்வாறு கூறி, அறிவிற்சிறந்த முனிகுலமணியாகிய சாந்தரென்னும் பெரியோர் எழுதிய நீதிகள் நிறைந்தபோத நன்னூலை அப்பையினின்றும் எடுத்து அரசனைநோக்கி—"எம்மிறையே! நீர் இப்புத்தகத்தை ஆதரவோடும் அகலாத்துணையாக் கொள்வீராயின் இதனைப்படிக்குந்தோறும் உமக்கு இன்பமும் இதமும் ஒழியாதுண்டாகும். நீவிர் செய்யற் பாலனவாகிய ராஜ தர்மங்களைச் செவ்வையாக வுணர்த்தும் ஓர் நன்மதி மந்திரி போலாகும். சிற்றின்பத்தே மனஞ் சென்றுழன்றக்கால் அவற்றினின்றும் நீங்கி உய்ய அறிவுறுத்தும் அரியநற்றோழன் போலுமாம். அன்றியும் நும்மை நுமது குடிகளுக்குக் கிடைத்தற்கரிய பெருஞ்சுகிர்தப் பேறுறச் செய்து நும்மைக் கிருதார்த்தராகப்புரியும்.—என்று கூறிப் புத்தகத்தை திரும்பப் பையிலிட்டு அரசனை வணங்கி அவன்கையி லதனை யளித்தனர். அவ்விளைய அரசனும் அதனைக் கொள்ளற்கரிய திரவியமாக உள்ளன்போடு மகிழ்ந்து கைக்கொண்டு மிக்க நற்பயன் பெற்று மனுநெறி கோடாமல் நெடுநாள் செங்கோல் செலுத்தி வந்தான்.

எஸ். முத்துஅய்யர், பி. ஏ.

* From the Evenings at Home.

### விசேஷக்குறிப்பு.

காலஞ்சென்ற ராய் பகதூர் பூண்டி அரங்கநாத முதலியாரவர்கள்.

கல்வி கேள்விகளால் மிக நிறைந்து எங்கும்புகழ் பெற்ற கல்விச்சிங்கமாகிய ராய்பகதூர் பூண்டி அரங்கநாதமுதலியாரவர்கள் எம். ஏ. 1893-௵ டிஸம்பர்௴ 10௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4½-மணிக்கு தேகவியோகமானது யார்க்கும் மிக்க துன்பத்தை யுண்டாக்கியது. இவர் 1844௵ ஜூன்௴ 29௳ பிறந்தார். மரணகாலத்தில் இவர்க்கு வயது 47-ஆயிற்று. இவர் ஆதியில் தமது தந்தையிடம் இங்கிலீஷும் தமிழும் கற்றுவந்தார். பின்பு பச்சயப்ப முதலியார் பாடசாலையில் பயின்று "விளையும் பயிர் முளையிலே" என்றபடி 1862-௵ ஸர்வகலாசாலை பிரவேச பரீக்ஷைகொடுத்து அதில் முதல்வகுப்பில் எல்லோர்க்குந் தலைமையாய் நின்று, எண்ணிலும் எழுத்திலும்வல்லவரென்றுகொண்டாடப்பட்டு, ஸர். மாதவராய ரவர்களின் பரிசுபெற்றார். பின்பு மூன்று வருஷகாலம் பச்சயப்பமுதலியார் தர்ம நன்கொடைபெற்று சென்னைராஜதானி வித்தியாசாலையில் கல்விபயின்று 1865௵ பி. ஏ. பரீக்ஷையிலும் முதல் வகுப்பில் மேலாகத்தேறி அதற்குள்ள பரிசு

களையெல்லாம் பெற்றார். அக்காலத்தில் ஹைகோர்ட் நீதியதிபராயிருந்த ஹாலோவே இவர் வித்துவத்தைக்கண்டு வியந்தார். அந்த வருஷத்தில் இவர் தமது வகுப்பிலுள்ள பரிசுகள் பதினொன்கினுள் ஒன்றையேனும் விடாமற் பெற்றது ஆச்சரியமே. அவர்அப்பொழுதேராஜதானிவித்தியாசாலையில் உதவியுபாத்தியாயரானார். 1867ஹூ அதில் தானே கணிதபண்டிதரானார். 1870-ஹூ கணிதவகுப்பில் எம். ஏ. பட்டம்பெற்றார். பின்பு நியாயம், நீதி இவற்றிற்பண்டிதராக மூன்றுவருஷகாலமிருந்தார். இதானபின்பு,கும்பகோணம் புரோவென்ஷியல்காலேஜில் புகழ்பெற்ற மகாபுருஷனாகிய கோபாலராயரவர்களுக்குப் பதிலாகச்சில மாதகாலமளவும் தலைமை யுபாத்தியாயராயிருந்தார். அதன்பின்பு பல்லாரி ஹைஸ்கூலின் தலைமை யுபாத்தியாயராக நியமிக்கப்பட்டார். 1872ஹூ சென்னை (யூனிவர்ஸிடி) ஸர்வகலாசங்கத்தாரில் ஒருவராகச்சேர்த்துக் கொள்ளப்பட்டார். இவர் கடைசியாக 1873ஹூ சென்னை ஸர்வகலாசாலையில் கணிதபண்டிதவேலைபெற்று தமது மரணகாலமளவும் அதிலேயே அமர்ந்திருந்தார். 1875ஹூ முதல் விடாமல் யூனிவாஸிடி ஸிண்டிகேட் மெம்பராயிருந்தார்.1882ஹூ வித்தியாசாலை கமிஷனில்மெம்பரானார். அதிககீர்த்திபெற்றுராய்பகதூர்பட்டம்பெற்றார். 1885ஹூ முதல் சென்னை முனிசிபாலிடியில் கம்மிஷனராயிருந்துவந்தார். பள்ளிக்கூட சம்பந்தகமிட்டியில் மெம்பரானார். 'கிராடியுவேட் ஸபையை' ஆரம்பத்தில் ஏற்படுத்தி அதற்கு அக்கிராசனாதிபதியா யிருந்தார். சென்ற 12 வருஷகாலமாக இவர் காஸ்மாபாலிடன் க்ளப்பின் காரியதரிசியாக விருந்து ஆவலோடும், விடாமுயற்சியோடும்அதைஆதரித்துவந்தார். 1890ஹூ துரைத்தன தமிழ் டிரான்ஸிலேடராக நியமிக்கப்பட்டார். யூனிவர்ஸிடி பரீக்ஷைகளுக்கு வேண்டும் புஸ்தகங்களைத்தேர்ந்தெடுக்கும் சங்கத்திற் சேர்ந்து அதிகவிமர்சையாய் வேலைபார்த்துவந்தார்.1890-ஹூ யூனிவர்ஸிடி பட்டபரீக்ஷைகளில்தேர்ந்தவர்களுக்கு புத்திமதிசொல்லும்படியானபெருங்கீர்த்தியைப்பெற்றார். 1892ஹூ சென்னை நகருக்கு ஷெரிப்பாக நியமிகப்பட்டார். சென்னை விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடூட்டில் மெம்பராயிருந்தார். சென்னை சுதேசபாஷாபிவிருத்திபுத்தகசங்கத்தில் சேர்ந்துதமிழ்கம்பராமாயணம் சுந்தர காண்ட முதலான சிலவற்றைப்பிழையறச்சோதித்துப்பதிப்பித்தார்.இவர் சிறிதுநோய்கொண்டிருந்தாரென்பது ஒன்று மாத்திரந்தெரியுமே யல்லாது இத்துணை சீக்கிரத்தில் இவ்வாறு உயிர்க்கிறுதியாகவருமென்று ஒருவருமெண்ணவில்லை. இவர் மரணமடைந்தாரென்று கேட்டவே பட்டணமெங்கும் பரிதவித்தது.. இவர் மாணமடைவதற்கு மூன்றுதினங்களன்று எப்பொழுதும்போ லுள்ளபடி பாடசாலைக்குப் போய்விட்டு வந்தார். இரண்டுநாள் அதிக ஜ்வரமடித்து அதனால் ஜன்னிகண்டுஞாபகமில்லாதிருந்தார். நிபுணவயித்தியர்கள் தங்களாலானமட்டும்பார்த்தும்பயன் படாமலேபோயிற்று. இவர் உள்ளநாளுள்ள மட்டும் கல்வியே துணையென்று உறுதியாயிருக்குமாணாக்கனைப்போலப்படித்துஅருங்கலை விநோதப்பிரியராயினார். ஐரோப்பிய வித்துவான்கள் இவரது கல்வித்திறமையையும் பெருந்தன்மையுங்கண்டு இவரோடு கொஞ்சிக்குலாவிய வண்ணமாயிருந்தார்கள். "செங்வனஇருந்தச்செய்"என்றது இவரிடங்குடிகொண்டிருந்தது ... ... ... ...

**சமாசார சங்கிரகம்.** இந்த மாசம்நேர்ந்த விசேஷங்களைப் பற்றி யெழுதிய தனிக்குறிப்புகளைப் பதிப்பிக்க இடமின்மையால் அவைகளை சங்கிரகமாக எடுத்துக்கூற வேண்டியிருக்கிறது. இந்த மாசமுதலில் நேர்ந்த விசேஷம் என்னவெனில் மிஸ்டர் ஹியூம் சென்னைக்கு வந்துபோனதே. பிறகு பார்லிமெந்து சபையில் மெம்பராயிருக்கும் மிஸ்டர் தாதர்பாய் நௌரோஜி இந்தமீ 3-உ பம்பாயில் வந்திறங்கி இந்தியா வெங்கும் கொண்டாடப்பட்டது மற்றொரு விசேஷம். அவர் இப்பொழுது லாஹோரில் கூடிவரும் காங்ரெஸ் சபைக்கு அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்கிறார்.காங்ரெஸ் முடிந்ததும் சென்னைக்கு வருவதாகச் சொன்னார். பிந்திவ்ரசரிப்படவில்லை யென்று தந்தியடித்து விட்டார். இந்தமாசம் இவ்விராஜதானியில் நேர்ந்த மரணங்களில் ராய்பஹதூர் இரங்கநாத முதலியார் இறந்ததினால் இப்பத்திரிகைக்கு உபயமாயிருந்த ஒருவரைநாம் இழந்தோம். கனம் உமயூன்ஜா பஹதூர் இறந்ததினால் இராஜப்பிரதிநிதி சட்டநிருபண சபையில்சென்னைப் பிரதிநிதி மெம்பர்ஸ்தானம் காலியாற்று. அதற்கு மிஸ்டர் எர்ட்லி நார்டன்நியமிக்கப்படுவார் என்று தோன்றுகிறது.எல்லாவற்றிலும் விசேஷம் என்னவெனில்மிஸ்ஸஸ் அன்னிஸெண்ட் என்னும் ஆங்கிலேயமாக வந்து இங்குபட்ட மரம் பால் ஒழுகும்படி ஹிந்து மதத்தை முற்றும் ஆதரித்துப் பிரசங்கித்து வருவதே. அந்த அம்மாள் கிறிஸ்து மதத்திற் பிறந்து வளர்ந்து நாஸ்திக மதக்கோட்பாடுகளையனுசரித்தவராயிருந்து பின்னும் விசாரம் செய்ததில் ஹிந்து மதமே ஜீவன் முக்திக்கேற்ற மதமென்று கண்டு அத்வைத சித்தாந்தத்தையனுசரித்து எவருக்கும் மனதிற்படும்படி அதைப் பற்றி நுட்பமாகப் பிரசங்கித்துப் போதித்து வருகிறார். இவர் தான் முற்றிலும் ஹிந்து வென்று சொன்னதைக் கேட்டு அனேக ஹிந்துக்கள் இவருக்கு ஹிந்து நாமதேயம் ஒன்று இடவேண்டுமென்று சொல்ல தியசாபிகல் சங்கத்தலைவரான கர்னல் ஆல்காட் அந்தப்பட்டி அன்னுபாய் என்று பெயரிட்டிருக்கிறார். இவருக்கு அன்னுபாய் சரஸ்வதி என்கிற பேர் கொடுத்தார் இன்னும் நன்றாய்ப் பொருந்தும்.

### பிழைதிருத்தம்:—

சென்ற சஞ்சிகையில் "அணிலும் சிவனும்"என்ற பாட்டில் அடியில் போட்டிருந்த குறிப்பில் தாறுமாறாகச் சிலபிழைகள் நேர்ந்துவிட்டன. அன்றில் என்பது ஒருவகைப் பக்ஷி. அந்தஜாதிப்பக்ஷி ஆணும் பெண்ணும் அதிகநேசமாயிருப்பதற்குப் பேர்போனது "ஆல்.(அசை)" என்றது 'செய்ததால'என்பதிலுள்ள 'ஆல்.' போன சஞ்சிகையில் நாம் தெரிவித்தபடி "இராமனும் அணிலும்" என்கிற பாட்டுத் தயாராயிருக்கிறது. இடநெருக்கத்தால் இந்த மாசம்போடக்கூடாமற் போய்விட்டது. கமலாம்பாள் சரித்திரத்தொடர்ச்சியும் சில அசந்தர்ப்பங்களால் இச்சஞ்சிகையில் வரக்கூடாமற் போய்விட்டது.

" கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய 'மோதா .னவர்க்கு"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, 10 MAR. 94 MADRAS.

# விவேக சிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம். II. 1894ஹூ ஜனவரிமீ இலக்கம் 9.

## THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION ON THE VIVEKA CHINTAMANI.

The Acting Director of Public Instruction who has in one of his previous proceedings 'noticed with pleasure the satisfactory working of the Diffusion of Knowledge Agency,' has sent us the following Proceedings passed by him on the **Viveka Chintamani**:—

*PROCEEDINGS OF THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION.*

*Dated 13th Decembvr 1893. No* $\frac{B.B.}{1168}$.

*The Acting Director considers that the* **Viveka Chintamani** *judjing from the matter hither to published in it, is a most useful and interesting Magazine and he wishes it every success.*

(Sd.) A. MONRO.
*Ag. Director of Public Instruction.*

## வித்தியாபிவிர்த்தி யிலாகா டைரெக்டரும் விவேகசிந்தாமணியும்.

சென்னை வித்தியாபிவிர்த்தி யிலாகா ஆக்டிங் டைரெக்டர் அவர்கள் முன்னமே ஒரு 'ப்ரொஸீடிங்ஸில்' திருவல்லிக்கேணி அறிவைப் பரவச்செய்யும் சபை (ஏஜன்ஸி) வேலை, சரியாக நடந்து வருவதைப்பற்றிச் சந்தோஷத்துடன் குறிப்பிட்டிருப்பதோடு விவேகசிந்தாமணியைப்பற்றி அவர் செய்த பின்வரும் 'ப்ரொஸீடிங்ஸும்' நமக்கு அனுப்பியிருக்கிறார். அதை யாவருமறியக் கீழே தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரிக்கிறோம்:—

"வித்தியாபிவிர்த்தி யிலாகா ஆக்டிங் டைரெக்டர் அவர்கள் விவேகசிந்தாமணியில் இதுவரையில் வெளியான விஷயங்களைப் பார்வையிட்டபின் அது மகா உபயோகமானதும் இனிமையானதுமான ஓர் பத்திரிகையாயிருக்கிறதென்று எண்ணுகிறார்; அவர் அதற்கு சர்வசித்தியுமுண்டாகக் கோருகிறார்".

## 1891-ம் ஹூத்திய ஜனக்கணக்குப்படி சென்னை இராஜதானியிலுள்ள குடிகளுடைய பிழைப்பு விவரம்.

1891-ம் ஹூத்தில் எடுத்த ஜனக்கணக்கின் மொத்தங்களின்பேரில் (Mr. H. A. Stuart) எச். ஏ. ஸ்டுவர்ட் துரை எழுதிய விருத்தாந்தத்தில் இததேசத்தாருடைய ஜீவனத்தைப்பற்றி எழுதி யிருப்பதைக் காட்டுகிறேன்.

| | ஆண்பாலர். | | பெண்பாலர். | | இருபாலரும் | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டண வாசம். 100-பேர் | நாட்டுப்புற வாசம். 100-பேர் | பட்டண வாசம். 100-பேர் | நாட்டுப்புற வாசம். 100-பேர் | பட்டண வாசம். 100-பேர் | நாட்டுப்புற வாசம். 100-பேர். |
| 1. சர்க்கார் உத்தியோகம், துரைத்தனச் சேவகம், ... ... ... | 6 | 2 | 6 | 2 | 6 | 2. |
| 2. மேய்ச்சலும் பயிர்த்தொழிலும் ... | 20 | 67 | 19 | 65 | 20 | 66. |
| 3. வீட்டுஊழியம், சேவகவேலை ... | 6 | 3 | 6 | 3 | 6 | 3. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4, விளைபொருளை உருவாக்கல், விலையாகச்சரிப்படுத்தல், தட்டார், தச்சர், கருமார், துணிநூல் வேலையார் ... ... | 37 | 16 | 28 | 17 | 37 | 17. |
| 5. பேரம், வியாபாரம், சரக்குப்பிடித்தல் ... ... ... ... | 10 | 2 | 9 | 1 | 10 | 2. |
| 6. கற்றறிதொழில் (வைதீகம், படிப்பித்தல், சிற்பத்தொழில், வைத்தியர், வேட்டை சித்திரவேலை) ... | 7 | 2 | 6 | 1 | 6 | 1. |
| 7. தொழிலற்ற பிழைப்பு, (அதாவது, கூலி, ஈனப்பிழைப்பு, பென்ஷன், சுகப்பிழைப்பு, இவை சேர்ந்தது.) ... ... | 14 | 8 | 16 | 11 | 15 | 9. |

இதனால் விளங்குவதாவது, மதிராஸ் இராஜதானி முழுதுக்கும், 100 சனத்தில், 60 சனம் பயிர்த்தொழில் ஜீவனத்திலும், 20 பேர் விளைபொருள் திருத்தும் பிழைப்பிலும், பத்துப்பேர் கூலி முதலான பொதுப் பிழைப்பிலும், 3 பேர் வீட்டு ஊழியப் பிழைப்பிலும், 2½ப் பேர் சர்க்கார் ஊழியத்திலும், 2½ப்பேர் வியாபாரத்திலும், 2 பேர் கற்றறி தொழிலிலும், அமர்ந்திருப்பதாய்த் தெரியவருகிறது. பயிரிடுகிறது 100-ல் 60 பேருடைய பிழைப்பாகையால் பயிரிடுந் தொழிலைப்பற்றிய படிப்பு பள்ளிக்கூடங்களில் சரியாய் நடவாதது கெடுதலாம். குடிகள் பயிரிடுவதில் தேர்ச்சியடைந்து ஏற்றுமதி செய்யும்படி யாருலே விர்த்திபண்ணப் பார்க்கவேண்டும். இந்தியாவில் பயிரிடுந் தொழிலில் சாமார்த்தியம் போதாது; இங்கிலாண்டில் ஏகரா 1-க்கு 1700 ராத்தல் விளைச்சல் சாதாரணமாயிருக்க இந்தியாவில் 700 ராத்தல்தான் என்று டாக்டர் W. W. ஹண்டர் சொல்கிறார். ஒவ்வொரு பிழைப்பிலும் சேர்ந்தவர்களை 100 பேராக வைத்தால் அவர்கள் பட்டணவாசம் நாட்டுப்புற வாசமாகப் பிரியும் வழியாவது:—

| | பட்டண வாசம். | நாட்டுப்புற வாசம். |
|---|---|---|
| 1. சர்க்கார் உத்தியோகம் 100-பேரில் ... ... | 22 | 78 |
| 2. மேய்ச்சலும் பயிரும் 100 பேரில் ... ... | 3 | 97 |
| 3. வீட்டூழியம், 100 பேரில் | 19 | 81 |
| 4. சரக்குஉருப்படுத்தல் 100 பேரில் ... ... ... | 19 | 81 |
| 5. வியாபாரம் 100-பேரில் | 38 | 62 |
| 6. கற்றறி தொழில் 100 பேரில் ... ... ... | 31 | 69 |
| 7. தொழிலற்ற ஜீவனம் செய்பவர் 100 பேரில் ... | 14 | 86 |

ஆண்பெண்பாலர் தாரதம்மியம்.

ஆண்பாலர் அவ்வவ்வேலையிலிருப்பவர் 1000 என வைத்துக்கொண்டால்:—

பெண்பாலரில் அந்தஜீவனம் செய்வோரையடுத்துப் பிழைப்போர்,

| | பட்டண வாசம். | நாட்டுப்புற வாசம். |
|---|---|---|
| 1. துரைத்தனஉத்தியோகம் | 973 | 872 |
| 2. மேய்ச்சலும் பயிரும் ... | 979 | 986 |
| 3. வீட்டு ஊழியம் ... | 1076 | 1020 |
| 4. சரக்கு உருவாக்கல் ... | 1058 | 1049 |
| 5. வியாபாரம் ... ... | 913 | 865 |
| 6. கற்றறிதொழில் ... | 1004 | 874 |
| 7. தொழிலற்ற ஜீவனம் ... | 1262 | 1348 |

மதிராஸ் முழுவதுக்கும், 100 பேரில் 60 பேர் பயிர்த்தொழில் ஜீவனமா யிருப்பதைக் காட்டினேனே. ஜில்லாவாரியாய் நிற்கும்வகை யாவது:—

ஜில்லா சனத்தொகை 100 என்றால்

பயிர்த்தொழில் ஜீவனம்செய்வோர் கணக்கு என்னவென்றால்,

| | |
|---|---|
| தென் ஆற்காடு | 71 |
| திருச்சிறுப்பள்ளி | 70 |
| வடஆற்காடு | 70 |
| பல்லாரி | 66 |
| மதுரை | 65 |
| கடப்பை | 64 |
| தஞ்சாவூர் | 61 |



| | |
|---|---|
| தென்கன்னடம் | 61 |
| அநந்தபுரம் | 61 |
| கிருஷ்ணை | 60, |
| திருநெல்வேலி | 60 |
| கர்னூல் | 60 |
| கோதாவரி | 59 |
| நீலகிரி | 59 |
| விசாகப்பட்டணம் | 58 |
| கோயம்பத்தூர் | 58 |
| மலையாளம் | 56 |

சராசரி 100 பேருக்கு 61 பேர் பயிர்த்தொழில்ஜீவனமானபடியால் மேலே தோன்றுகிறபடிதென்ஆற்காடுமுதலிய 7 ஜில்லாக்களில், பயிர்த்தொழில் ஜீவனம் சராசரிக்கு மேற்பட்டும் மற்றைய ஜில்லாக்களில் கீழ்ப்பட்டும் நடப்பதாய்த் தெரிகிறது. இந்தப்பிழைப்பில் கடைத்தரம் நெல்லூரும், கஞ்சமும். அவற்றில் 100-க்கு 54 பேர்தான் பயிர்த்தொழில் ஜீவனம் செய்து வருகிறார்கள்.

சரக்கை யுருவாக்கும் பிழைப்பு கோயமுத்தூரில் தோல்வேலை நெசவுவேலை மிகுதியால் அதிகமாய்க் காட்டுகிறது. அப்படியே பருத்தி வேலை சாணாரவேலை மிகுதியால் திருநெல்வேலியிலும் இப்பிழைப்பு மிகுதியாம்.

நீலகிரி, தஞ்சாவூர், கோதாவரி, மதுரை தென் ஆற்காடு ஜில்லாக்களில் 100-க்கு ஒருவர்தான் வியாபாரத்தால்பிழைப்பது. பட்டுவேலை, கடைவைத்துப் பிழைக்கிறது, சுமை தூக்குகிறது, இவை மலையாளத்தில் விசேஷமாகையால், இப்படிப்பட்ட பிழைப்பினர் கணக்கு ஜாஸ்தியாய்க் காட்டுகிறது.

தஞ்சாவூர், மலையாளம் ஜில்லாக்களில் வைதிகம், வைத்தியம் இவற்றின் மிகுதியால் 100-க்கு 4-பேர் கற்றறி ஜீவனத்தில் சேர்ந்தவர்களாகிறார்கள்.

சர்க்கார் உத்தியோகத்தில் 903994 பேர் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களில்,

| | |
|---|---|
| கச்சேரி உத்தியோகம் | 871425 |
| பட்டாளம் | 32029 |
| வெளிச் சமஸ்தானங்களைச் சேர்ந்தவேலை ... | ... 540 |
| ஆ | 903994 |

கச்சேரி உத்தியோகவகுப்பினர் 871425-ல் நேரத்துரைத்தன ஐவேஜிலிருந்து சம்பளம் பெறும் சேவகம், 267542 பேருக்கு. இதனில் முக்கால் பங்கினர் கீழ்த்தரத்து உத்தியோகம், கால்பங்கினர் நடுத்தர மேல்தர உத்தியோகத்தினவர்.

மேய்ச்சல்

மேய்ச்சல், பயிர், இவற்றில் கால் நடையைக் காப்பாற்றும் பிழைப்பினர் கணக்கு கீழ்கண்டவாறு:—

| | | |
|---|---|---|
| 1. கால் நடைப்பிழைப்பு | 716549 | பேருக்கும் |
| 2. குதிரையும் மாடும்பார்ப்பது | 407387 | ,, |
| 3. மற்றும் பளுஇழுக்கும்ஜந்துக்களைக்கொண்டு பிழைப்பது | 921 | ,, |
| 4. ஆடு பார்ப்பது | 302135 | ,, |
| 5. ஷை வேலைகளைச்சேர்ந்த சிறு வேலைகள் ... ... | 6106 | ,, |

5-வயதுக்கு மேற்பட்டு 15-க்கு கீழ்ப்பட்டு 1,84,033 ஆண்பிள்ளைகளும் 27550 பெண்பிள்ளைகளும் இப்பிழைப்பினர். மந்தைவேலை பார்ப்பவர் கோதாவரி ஜில்லாவில் மற்றஜில்லாக்களைவிட ஜாஸ்தி. கோயமுத்தூர், நெல்லூர் ஜில்லாக்களில் பசு, வண்டி எருது, இவை இரண்டையும் சேர்த்து ஒருவிட்டவர்களே பார்ப்பார்கள். மேலே 4-வது இனத்தில் ஆடு, வெள்ளாடு, பன்றி, இவைகளை வளர்ப்போர் விற்போர் பிழைப்பும் சேர்ந்து கணக்காயிருக்கிறது. வடஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களில் பன்றி வளர்ப்பது விசேஷமாயுண்டு. லாடம் தைப்பவர், காயடிப்பவர், முரட்டுத்தனமுள்ள பிராணிகளைப் பழக்குவிப்பவர் இவர்கள் மேலே கண்ட 5-வது இனத்தில் அடங்கியுளர்.

பயிரிடல்.

மதிராஸ் துரைத்தன நாடுகளில் பொதுவாய்ப்பார்த்தால் பயிரிடுவதே பெரும்பாலார்க்குப் பிழைப்பாவதாகத்தேறுகிறது. பயிரிடும் பிழைப்பின் பிரிவுகளும் அவற்றின் ஆள்கணக்கும் தாயாவாரும் கீழேகாண்க:—

| | ஆள்கணக்கு மொத்தம். | இவ்வகுப்பு ஆள் 100 - க்கு கீழ் இனங்களில் சேர்ந்த கணக்கு. |
|---|---|---|
| 1. நிலம் உடையோரே பயிரிடுவோர் ... | 16704223 | 80 |

| | | |
|---|---|---|
| 2. பயிரிடுவதில் கூலிப் பிழைப்பு ... ... | 4109728 | 20 |
| 3. குறித்த சில பயிரே இட்டுப்பிழைப்பவர் | 134162 | நூற்றுக்கணக்குக்கு எட்டாதனர். |
| 4. பயிரிடும் படிப்புச் சொல்லி மேல்விசாரணை | 6906 | ஷை |

எல்லாப்பிழைப்பினர் மொத்தம்-100 பேரானால்:—நிலவரும்படியால் ஜீவனம் செய்பவர் 47.

| | | |
|---|---|---|
| மேலேகண்ட - 47 பேர்க்கு விவரம். | குத்தகைக்கு விட்டிருப்பவர் | 8 |
| | சொந்தப்பயிர் செய்வோர் | 24 |
| | நிலப்பாத்தியமின்றிப் பயிரிட்டுப் பிழைப்போர் ... ... | 1 |
| | ஆ | 47 |

குத்தகைக்கு விடுகிறது மலையாளம் தென்கன்னடம் விசாகபட்டணம் ஜில்லாக்களில் மிகுதியாயும் தென் ஆற்காட்டு ஜில்லாவில் குறைச்சலாயும் இருப்பதாய் ஏற்படுகிறது.

குத்தகைக்கு வாங்கி யிருப்பவர்கள் தாங்கள் பயிரிடாமல் கீழ்க்குத்தகை விடுவதுமுண்டு. இப்படிக்கீழ் குத்தகைதாரர் 77,017-இல் மலையாளத்தில் 44,553 பேரும், கிருஷ்ணாவில் 15,253 பேரும் இப்படி பிழைப்பவர். குத்தகைதாரர் இறந்து பெண்சாதிமார் நேரப்பயிர் வைக்காமல் கீழ்ப் பயிருக்கு விடுவது வழக்கம்.

நிலம் உடையவரொருவரிடத்தில் நிலையாய்ப் பண்ணைவேலைசெய்து அவரிடத்தே வருஷாவருஷம்பிழைப்பவர், அப்போதப்போது கூலிக்குப் பயிர்வேலை செய்வோர், எனப் பயிரிடுவதில் இரண்டு இனக் கூலிகள் உண்டு.

| | | |
|---|---|---|
| பண்ணைப் பிழைப்பு | 934951 | பேருக்கு |
| வெறுங்கூலிப் பிழைப்பு | 2239836 | ,, |

இவ்வகையில் தஞ்சாவூர் மலையாளம் சீமைகள் எதிர்ப்பாடுடையன.

| மலையாளத்தில், | | தஞ்சாவூரில்; |
|---|---|---|
| 244 பேர் | பண்ணை | வெறுங்கூலிக்குப் பண்ணை |
| 624387 பேர் | வெறுங்கூலி | 3-மடங்குள்ளது |

குறித்த சில பயிரே இடுவோர்.

வெற்றிலை, தோட்டப் பயிர், கறிகாய்ப் பயிர், தென்னம் பயிர், எருவாக்குவோர், இவர் போன்றவர்கள் இதில் சேர்ந்தனர். வெற்றிலையும் பாக்கும் தஞ்சாவூர் திருநெல்வேலியில் பயிராகிறது. வட ஆற்காட்டு ஜில்லாவில் பழத்தோட்டங்கள் மிகுதியாயுண்டு. சேலத்தில் சர்க்கார்க் காட்டில் காவலாளர் முதலானவர் அதிகமாயிருக்கிறார்கள்.

தேயிலை, காப்பிக்கொட்டைப் பயிரில் 4932 பேர்க்குப் பிழைப்பு நடக்கிறது. மலையாளம் நீலகிரி ஜில்லாக்களில் தான் இப்பிழைப்பு விசேஷம்.

கறிகாய்ப் பயிர், எருவாக்குவது இவ்விரண்டும் மதுரையில் விசேஷம். ஏலமும் மிளகும் மலையாளத்தில் தான் உண்டு.

பயிர்த்தொழிற் படிப்பும் மேல் விசாரணையும்.

மலையாளத்தில் தார்வாட்டுக்கு மேல் பார்வைக் காரராய் கார்ணவரும், தஞ்சாவூர் நிலக்காரர் வெளியிலிருப்பதால் காரியக்காரரும் இருக்கவேண்டி யிருப்பதால் மேல்விசாரணைப் பிழைப்பு கணக்குக்கு வருகிறது.

பயிர்த்தொழிற்தொழிற் படிப்புசொல்வோர் செங்கற்பட்டில் துரைத்தனத்தார் வைத்திருக்கும் பயிர்த்தொழிற் படிப்பு வேலையில் சேர்ந்தனர்.

மற்றப்பிழைப்புடன் பயிர்த்தொழிற் பிழைப்புமுள்ளவர்.

இப்படிப் பிழைப்பவர் மொத்தம் 962783.

இதில் பேர்பாதியார் விளைபொருளை யுருவாக்கிடுந் தொழிலர், ஆறுபங்கில் ஒருவர் துரைத்தன உத்தியோகப்பிழைப்பினர், வீட்டு ஊழியப்பிழைப்பினர் அரைக்கால்பங்கு.

ஊழியப்பிழைப்பு,

வீட்டுஊழியம், வெளிஊழியம், சுகாதார ஊழியம் என, 3-இனம்.

10,07,422 பேர் இம்மூவினத்திலும் பிழைப்பவர். வண்ணார், அம்பட்டர், வீட்டுக்குள் வேலைசெய்பவர் இந்த வகுப்பில்சேர்ந்துளர்.

| | ஆண்பாலர் | பெண்பாலர். |
|---|---|---|
| வீட்டு ஊழியம் | 39228 | 58309. |

வீட்டுஊழியத்தில் பெண்பாலர் மிகுதியாயிருப்பது சரிதான். வண்ணார் வேலையிலும் பெண்பாலர் ஜாஸ்திதான், அம்பட்டத்தொழிலில் பெண்பாலர்பிழைப்பது குறைச்சலாம். கோயமுத்தூரில் அம்பட்டரும், விசாகபட்டணத்தில் வண்ணாரும், மலையாளத்தில் வீட்டு உள்வேலையினரும் ஜாஸ்தியாவர். சுகாதார ஊழியமாவது தோட்டிவேலையாலும்வீட்டைப்பெருக்குவதாலும் பிழைப்பது. 37,141 பேர்இப்படிப் பிழைப்பவர்கள்.

சரக்கை உருவாக்கும் பிழைப்பு.

இதனில் சேர்ந்த இனமும், மொத்தஜனக் கணக்கு-100 என்றால் ஒவ்வொருஇனத்திலும் பிழைப்பவர் கணக்கும், கீழேகாண்க:—

(மொத்த ஜனத்தொகை 100-ஆகவைத்தால்)

| | |
|---|---|
| 1. உணவைத் திருத்துவது ... | 6. |
| 2. உடை ... ... ... | 5. |
| 3. மரவேலை, பிரம்புவேலை, இலைதைக்கும் வேலை. ... .. ... | 2. |
| 4. தோல், கொம்பு, இலும்பு, கொழுப்புவேலை ... ... ... | 1. |
| 5. எரிகரும்பு, நெருப்பு, வெளிச்ச வேலை ... ... ... ... | 1. |
| 6. தட்டார், கன்னார், கருமார் வேலை ... ... ... ... | 1. |

(கீழ்ப்பட்டஇனங்களை எடுத்துக்காட்டவில்லை.)

| | | |
|---|---|---|
| பல சரக்குக் கடை ... | 460249 | பேர்க்கு |
| கள் இறக்குகிறவர்களும் விற்பவரும் ... .. ... | 441650 | ,, |
| பாக்கு வெற்றிலை விற்பவர்... | 123257 | ,, |
| புகையிலை, தூள் விற்பவர் ... | 67320 | ,, |
| வெல்லம் விற்பவர் ... | 66691 | ,, |
| நாட்டுச் சாராயம் விற்பவர் ... | 43119 | ,, |

பலசரக்கு விற்பனை, மதுரை, கிருஷ்ணா, நெல்லூர், வடஆற்காடு, தஞ்சாவூர், மலையாளம் ஜில்லாக்களில் தரவாரியாய் அதிகம். மலையாளம், திருநெல்வேலி, தென்கன்னடங்களில் கள் பிழைப்பு விசேஷம். வெற்றிலைபாக்கு விற்பது மலையாளம் தஞ்சாவூர்களில் அதிகம். புகையிலை தூள்விற்பனை கோதாவரியில் விசேஷம்.

ஊன் விற்றுப் பிழைப்பிவர் மொத்தம் 442061. மீன்விற்றுப்பிழைப்பவர் 365659.

மீன்பிடிப்பதும் விற்பதும் ஒருவராலே நடக்கும். மீன் பிழைப்பு மிகுதியை தரவாரியாய் எடுத்துக்காட்டினால் மலையாளம், கஞ்சம் கோதாவரி வரிசையாம்.

பால், வெண்ணெய் விற்றுப் பிழைப்பவர் 42861 பேரில் 27000-த்துச் சொச்சம் பெண் சாதியார்.

எரிகரும்பு, வெளிச்சம், நெருப்புவேலை.

இந்தப் பிழைப்பினர் மொத்தம் 448490 பேரில்எண்ணைவாணியரும் புண்ணாக்குவிற்பவரும் 187270 பேராகிறார்கள். எல்லாஜில்லாக்களிலும் இப்பிழைப்பிருப்பதாலும் மலையாளத்தில் தான் விசேஷம்.

| | ஆண்சாதி | பெண்சாதி |
|---|---|---|
| விறகு, புல் பொறுக்கி விற்பவர் .... ... | 79100 | 148111 |
| எரிமுட்டைவிற்பவர் | 1912 | 13197 |

பெண்பிள்ளைகள் அதிகமாய் மேற்கண்ட இனங்களில்பிழைத்து வருவதைக் கவனிக்க.எரிமுட்டைவிற்பனை விசாகப்பட்டணம் செங்கற்பட்டுஜில்லாக்களிலும்,கரிவிற்பனை விசாகப்பட்டணம் சேலம் ஜில்லாக்களிலும் விசேஷமாய் நடப்பதைக்கவனிக்க.

கட்டடப்பிழைப்பு.

355927 பேர் இந்தப் பிழைப்பினர்

| | |
|---|---|
| சுண்ணாம்புக் காளவாய் சுண்ணாம்பு விற்பனை | 64319 |
| செங்கல் ஓட்டுக் காளவாய் ... ... | 15467 |

வீட்டுக்கட்டடவேலை தஞ்சாவூர் மதுரைஜில்லாக்களில் விசேஷமாய் நடக்கிறது. கல் வேலை செய்பவர் 8450. இது திருச்சிராப்பள்ளி,கடப்பை, பல்லாரி ஜில்லாக்களில் விசேஷமாயுண்டு.

கொல்லத்து வேலை 291,608.

வண்டிவேலையொத்த பிழைப்பு.

படகு தோணிவேலையும் இதனில் சேர்ந்தது. இவ்வகையில் 16517 பேர்க்குப்பிழைப்பாம்.

பாத்திரம் சில்லரைசாமான்.

| | |
|---|---|
| காகித வேலை. | 1196 பேரது. செங்கற்பட்டுஜில்லாவில் இந்த வேலை விசேஷம். |
| புஸ்தகவிற்பனைஅச்சுவேலை செய்து. | 15710 பேர் பிழைக்கிறார்கள் சமாசாரப்பத்திரிகை வேலையாய் சென்னப்பட்டண நகரத்தில் 58 பேரும்-தஞ்சாவூர், மதுரை,மலையாள ஜில்லாக்கள்ஒவ்வொன்றில் ஒருவரும் கணக்காயிருக்கிறார்கள். |

| | | |
|---|---|---|
| கடிகார வேலைசெய்து பிழைப்பவர் | 1316 | பேர். |
| பொம்மை வேலை ... ... | 1518 | ,, |

| | | |
|---|---|---|
| நாற்காலி முதலியதட்டுமுட்டுவேலை | 1407 | ,, |
| குதிரைத் தோல் சாமான் வேலை | 680 | ,, |
| இருப்புக் கருவி வேலை ... | 5047 | ,, |
| வெடிகருவி மருந்துவேலை ... | 2135 | ,, |

உடைநெய்கிறவர்.

நெசவு. வேலை16,77,145பேர். மொத்த ஜனக்கணக்கு 100 ஆமானால் 6 பேர் இந்தப்பிழைப்பிலிருப்பவர்.பருத்திநூல் நெசவுதான் முக்கியமானது. கம்பளி, நெசவு வேலையில் 36726 பேர் சேர்ந்துளர். முரட்டுக்கம்பளிநெசவு நாட்டுப்புறங்களிலும், சன்னமான கம்பளித்துணி நெசவு பட்டணவாசங்களிலும் நடப்பன.

பட்டுநெசவு. வேலையால்பிழைப்பவர் 24689 பேர்.பட்டுப்பூச்சி வளர்ப்பது கொயம்பத்தூரில் வெகுகொஞ்சமாய்நடப்பது.

பருத்திநூல் நெசவு ... 1 319 907 பேர்

நெசவுதொழிலர் கணக்கு குறைந்துவருகிறதோவெனின், 1881-ம்வருஷத்தில் எடுத்தகணக்கையும் 1891-ம்வருஷத்தில் எடுத்தகணக்கையும் ஒப்பிட்டால் நெசவுத்தொழில் ஏறிஇருக்கிறதேயொழியக் குறைந்திருக்கக் காணோம். மொத்த ஆள்கணக்கு ஏறுகிற அளவுக்குத்தக்க நெசவு சாமான்கள் ஏற்றம் காணோம்.

சணல்நார், கயிறுபின்னுவோர் 69400 பேர். இதனில் பெண்சாதியார் விசேஷமாய்ப்பிழைக்கிறார்கள்.

தையல்வேலை. 226387 பேர்.

| | |
|---|---|
| பொன், வெள்ளி, கல், வேலை ... | 289337 |
| பித்தளை, ஈயப்பாத்திரவேலை ... | 65591 |
| தகரவேலை ... ... ... | 6906 |
| கருமார்வேலை ... ... ... | 128896. |

கருமார், தட்டார், கன்னர்.

தட்டார் இவ்வகுப்பில்பாதியாகிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் தட்டார்விசேஷம். பவழமுத்துவியாபாரிகள் நெல்லூர் கடப்பை ஜில்லாக்களில் விசேஷம். முத்துக்குளிப்பவர் திருநெல்வேலி மதுரை ஜில்லாக்களில் விசேஷம்.

கோசவர்.

பானைசட்டி, கல்சட்டி, பிங்கான், கண்ணாடி வேலைசெய்து பிழைப்பவர் 217919 பேர்.

மரவேலை.

மரவேலைசெய்யும், தச்சர், 396494.பேர்பிரம்பு, பாய், இலைசம்பந்தமான வேலைசெய்து பிழைப்பவர் 293477. இலை தைப்பவர் பெரும்பாலர் பெண்பிள்ளைகள்.

மூலிகை, பிசின், சாயம்.

இவை சம்பந்தமான வேலைசெய்து பிழைப்பவர் 43432 பேர்.

தோல், கொம்பு, இலுப்பு, கொழுப்பு

இவற்றால் பிழைப்பவர் 492991 பேர்.

சரக்குக்கொள்ளல், சுமத்தல், விற்றல்.

344 590 பேர்க்கு மேலே கண்ட பிழைப்பு

இதனில் கொடுக்கல் வாங்கல் செய்வோர் 84022. நாணயம் மாற்றுகிறவர்களும் நோட்டக்காரரும் 8663 பேர். கொடுக்கல் வாங்கலில் பெண்சாதியார் கணக்கு ஜாஸ்தியாகிறது. ஆயினும் 1881 - ம் வருஷத்துக்குப் பின்னிட்ட பத்துவருஷகாலத்தில் ரொக்க போத்தினர் குறைந்ததாய்த் தெரிகிறது.

தரகர், வர்த்தகத்தில் குமாஸ்தாக்கள், ஒப்பந்தவேலை செய்கிறவர், லாகிரி சரக்குகளை மொத்தத்தில் ஏலம் எடுப்பவர் ஆகிய இவர்கள் 51195 பேராம்.

சுமையெடுத்தல் வேலைசெய்பவர் 529091 பேர்.

| | |
|---|---|
| ரயில் வேலை | 40 550 பேர். |
| ரோட்டு | 213 776 |
| தண்ணீர் வழி வேலை | 82 152 |
| தபால், தந்தி வேலை | 53 435 |
| சரக்குக் கிடங்கு வேலை | 139 178 |

விசாகப்பட்டணம் ரேவுகளில் இறங்கும் சரகை நாகப்பூர் நாட்டுக்குக் கொண்டுபோய்ப் போட பொதிமாடு வைத்திருப்பவர் விசேஷமாயுண்டு. மலையாளம் கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்களில் படகுக்காரர் வேலை மிகுதி. கடலில் முழுகுகிற வேலைக்காரர் மதுரையில் கீழ்க்கரை ஊர்களில் ஏராளமாய்க் குடியிருக்கிறார்கள்.

கற்றறி தொழில், அறிவுவேண்டும் பிழைப்பு.

இப்பிழைப்பில் படிப்பு வேண்டியதாய்ச் சுகம் தருவதான பிழைப் பெனவும், வேட்டை விளையாட்டுப் பிழைப் பெனவும் இரண்டு இனம் உண்டு.



படிப்பு வேண்டியதாய் தருவதான சுகம் பிழைப்பு.

| | |
|---|---|
| 1. வைதிகம் ... ... ... | 279336 |
| 2. படிப்பு சொல்லிக்கொடுக்கும் பிழைப்பு ... ... | 103970 |
| 3. நூல் (புஸ்தகம்) எழுதல் ... | 88448 |
| 4. கோர்ட்டு வக்கில் ... ... | 28031 |
| 5. வைத்தியம் ... ... ... | 74971 |
| 6. இஞ்சினீர் ... ... ... | 10610 |
| 7. மற்றும் கல்வித்தொழில் ... | 16230 |
| 8. சித்திரமெழுதல் பொம்மை செய்யல் | 4563 |
| 9. வேட்டை ... ... ... | 87954 |
| ஆ | 694113 |

ஈனப்பிழைப்பு. 37882 பேர்.

இதனில் கண்ட பெருபாலார், தாசிகளும் குச்சுக்காரிகளும். பலௌரி ஜில்லாவில் இப்பிழைப்பு அதிகப்பட்டிருக்கிறது.

ஊர்ச் சங்கதிகள் ல கணக்கின்பேரில் விருத்தாந்தம எழுதுவதும் அவ்விருத்தாந்தம் பார்த்துச் சிந்திப்பதும் நம்மவர்களுக்கு வாடிக்கையில்லாமையால், பிழைப்புவிஷயமாய் ஸ்டுவர்ட்டுதுரை எழுதியிருப்பதைத் தமிழாக்கினேன்.

டி. ஆர். இராமநாதய்யர் பி.எ., எல்.டி.

---

## * வீண்செலவைப்பற்றி.

“புறதேசத்தாருக்குப் பயங்கரமாயிருக்குமளவு அதிகப்பட்டிருக்கும் ஹிந்துதேச விவாக அமோகச்செலவுகளை நிறுத்தும்படியாகத் தனது தேசத்தாரின் சிந்தைகளைத் திருப்புகிற ஒருவன், ஏழாஜாங்கமும் ஓர் பத்துவருஷகால எல்லையுள் செய்த முடியாதகுணத்தைத் (தன்தேசத்துக்கு) தென்னிந்தியாவுக்குச் செய்பவனாகிறான்” என்பது ஒருவர் வாய்ப்பிறப்பு. அவ்வாய்ப்பிறப்பு ஓர் சாமானிய புருஷரது வார்த்தைகளல்ல; சென்னை கவர்னரவர்களின் வார்த்தைகள். “நமது தேசத்தார் பண்டிதராயிருந்தாலுஞ் சரி, பாமரராயிருந்தாலுஞ் சரி, ஆசாரத்தைப்பாட்டிய அடியந்திரங்கள் நேரும்போது, விவேகமும் சாதாரண தரமதியும் அவர்களைக் கைவிடுகின்றன. சுதேசியானவன் அவ்வேளைகளில் தன் தகுதிக்கு மிஞ்சிச் செலவு செய்து தன்னை ஆபத்துக்காளாக்கிக் கொள்ளுகிறான்' என்று “இந்தியன் மிறர்” என்னும் ஓர் பத்திரிகைகூறிப் பரிதபிக்கின்றது. இன்னுமோர் பத்திரிகை (Oudh Akbhar) “ஔட் ஆக்பர்” என்னும் பெயர்பூண்டது, விவாகங்களில் மகம்மதிய மார்க்கத்தார் செய்யும் அமோகச் செலவுகளைப் பழிகூட்டிப் பிரலாபிக்கின்றது.

நமது தேசத்தில் சவலைப்புத்தியும் குருட்டுமதியும் பட்டறை பட்டறையாயுண்டு. நாம் எவ்வளவு புத்தியீனர்களென்பது நமக்கே தெரியவில்லை. பூர்வாசாரப்பிடி யென்னும் மருட்பாதையில் நாம் நம்மை மறந்து நடக்கிறோம். ஹிந்துதேசவாசிகளின் கைப்பொருளானது சிந்திச்சிதறிச் சிரழிய ஒன்றல்ல வழி; ஒன்றிரண்டல்ல; பதினாயிரத்துப் பத்தொன்பதே முக்காலே மூண்டாணி முக்கால் மாகாணி வழிகளுண்டு; வேண்டுமானால் கூடக் கால்மாகாணியுமுண்டு. நமக்குள் அநேக சடங்காசாரங்கள் மிகுந்த செலவைக் கவர்ந்து நிற்பனவாயிருக்க, அவ்விஷயத்தைச் சிந்தித்து, ஊருக்கொக்கக் கோஷியாதவர்களாய் மட்டுக்குத்தகுதியாய் வாழ்வோரை, வாழ்வுக்குத் தக்கவரையறை வகுத்த மதியூகிகளென்று மதியாமல், மேலிருப்பு ஸ்திதிகளை மேன்மையாயெண்ணிய அவர்களது புத்திநுட்பத்தைக் கெம்பீரஞ்செய்யாமல், மதிப்பீனஞ்செய்து, அக்குத்தொக்கில்லாத ஆண்டிகளாக வெண்ணி அவமானப்படுத்தத் துஜங்கட்டுகிறோம். இவ்விதம், நாம் படுகுழியில் விழுவதல்லாமலும், அவ்விதம் விழாமல் தம்மைக் காத்துக்கொள்வோரை வசைமேல் வசை கூறி வாய்மழை பொழிவோமானால் நமது தேசம் சீர்திருத்தமடையுமா ? நாம் விவேகிகள்தானா ? விவேகிகளல்லவென்பதற்கு வேறு நிதர்சனம் வேண்டுமோ ?

லௌகிகப்பாங்கைச் சரியா யுற்றாய்ந்து பார்த்தால் பொருளில்லார்க்குப் பூவுலகில்லையென்பது ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. “பணமில்லாதவன் பிணம்” என்பதும் “ பணமுண்டானால் மணமுண்டு” என்பதும் “பணம் பந்தலில், குலங்குப்பையில்” என்பதும் அடிக்கடி நமது காதில் விழும் முதுமொழிகளாயிற்றே. லௌகீக தர்மத்தில் பொருளானது அத்தியாவசியமாயிருப்பதையும், அதுசெய்யும் அதிசகாய பலத்தையும், பார்த்தால், பொருளில்லாதவர்களை, இருக்கஆசனமற்றவர்களாய்த் தமதாசனங்களைத் தூக்கிக்கொண்டு திரியும் அகதிகளாயிருக்கிறார்களென்று சொல்லத்தகும். விளைநெல்லுக்கு விளைநெல் எப்படி யாவசியமோ அப்படியே லாபச்சேர்க்கைக்கு முதலிருப்பானது ஆவசியமாயிருக்கின்றது. அவ்வி

---

* இஃது, திருவனந்தபுரம் புத்தன் சந்தையில் (Pensioned Overseer) ம-ா-ா-ஸ்ரீ ரங்கநாதபிள்ளையவர்களது கிரகத்தில் கூடும் சதாசாரத் சங்கத்தின் முன்னிலையில், கோட்டாறு, தமிழ்ப்புலமை, ம-ா-ா-ஸ்ரீ சு. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் புத்திரராகிய (கோட்டிவ ஹைஸ்கூல் தமிழ் முன்ஷி) ம-ா-ஸ்ரீ பால சுப்ரமணிய பிள்ளையவர்களால் விடுக்கப்பட்

தம் இன்றியமையாத அங்குரமாயிருக்குங் கைப்பொருளை நாம் சிந்திச்சிதறிச் சீரழிப்போமானல் நாம் பிழைப்பதெவ்விதம்? பெருகுவதெவ்விதம்? விதைக்களஞ்சியம் வெறுமையாயிருக்க, விளைவுக்களஞ்சியம் எப்படி நிரம்பும்?

கல்விதேர்ந்த கணவானுகியும், விவேகமகுடஞ்சூடிய வேந்தனுகியும், இருக்கும் ஓர் ஹிந்து செய்யும் பரிஷ்கார பிரசங்கங்களும் பராக்கிரமசம்வாதங்களும் பிரசங்கமண்டபத்தில் மாத்திரஞ் செல்லுகின்றனவேயன்றிச் செல்லவேண்டிய அடுக்களையிற் சென்று சீர்திருத்தத்திற்கேற்ற அஸ்திபாரத்தை அங்கேபோடுவதில்லை. அங்கேமடைப்பெண்* மடைப்பெண்‡ணுகவே யிருக்கிருள். வீண்செலவுகள் செய்யும் விபரீதத்துறையை விளக்கிக்காட்டப்புகுவோமென்றல், நாம் செய்யும் ஆக்ஷேபங்களும் பெய்யும் பிரசங்கமாரிகளும் வீட்டுமூலைகளில் குறுகுறுவென்று சூங்கியிருந்துகொண்டு, கூச்சல் போட்டு, “செய்யுங் கட்டுச்செய்யாதிருந்தால் வையக நிந்தையும் வசையும்வராதா? ஆளுக்கொத்த ஆசாரமும் ஊருக்கொத்த உபசாரமும் வேண்டாமா? வீடும் விளக்குமா யிருந்தக்கால் நாடும் நடப்பும் வேண்டாமா?” என்பனபோன்ற வாக்கியங்களை வட்டிவட்டியாய்க் கொட்டும் கிழட்டுப் பெண்களின் முரட்டுப் பிரசங்கங்களுக்கு எதிர்நிற்கத் தத்துவமற்று, ஆதித்தன் முன்பனிபோல மாய்ந்துதேய்ந்து மடிகின்றன. தாய் வயிறு கரிந்து காய்கிறது; தகப்பன் நாக்கு வறண்டு வாடுகிறது; வீடு முழுவதும் வெயிலோடு மழை அரசாட்சி செய்கிறது குமாரரானவர் கலியாணத்திற்குக் கடன்கொள்ளக் கருதுகிருர். அவருக்கு மங்கிலியத்திற்குப் பொன்னுருக்குங் கோஷமாவசியம்; நிச்சயதாம்பூல கோஷமாவசியம்; பட்டணப்பிரவேச கோஷமாவசியம்; பந்தலலங்காரமாவசியம்; தந்தசுத்திக்கு அலங்காரப் பல்லக்கு ஆவசியம்; செய்யும் வரிசைகளாவசியம்; இன்னும் எத்தனையோ அநாவசியங்களெல்லாம் ஆவசியம். கைப்பொருளில்லாத கணவனைக் கடன்காரர் சூழ்ந்திருக்க, “ஆ” வென்றெழுதத் தெரியாத தன் மகனை அதிமடமை சூழ்ந்திருக்க, வீண்செலவு செய்யத் தூண்டும் ஆசைப்பிசாசானது வீட்டுப்பெண்பிள்ளையைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. வாழ்க்கைத்துணைவனுகிய பர்த்தாவுக்குச் சிகிச்சை செய்துவந்த வைத்தியன் கூலிகொடுபடாத காரணத்தால் பின்வாங்கி ஒய்கிருன்; பர்த்தாவும் மரணத்தறுவாயிலாகிருர்; இளைய மகளுக்குச் சீமந்த அறிவு பலகாரமிடுஞ் செலவு பெண்பிள்ளையின் மனதை நெருக்கி நெருக்கிக் காய்ச்சுகின்றது. கும்பி கூழுக்கழுதபோது கொண்டை பூவுக்கழுத கதையும், சடைத்தம்பிரான் சா மோ என்றழுதபோது மொட்டைத்தம்பிரான் மோ ரோஎன்றதட்டினகதையும், நமது அடியந்தரச்செலவுமட்டில் கதைமாத்திரமா யிருக்கவில்லை; கண் கண்ட அநுபவமாயிருக்கின்றது.

“ஐந்து பெண்பெற்ற லரசனும் ஆண்டியாவான்’ என்று நமக்குள் ஓர் பழமொழியுண்டே. இதில் நாப் கவனிக்கத்தக்க பாகமென்ன? பெண்களைப் பெறுப எவனுக்கும் வருத்தம் வரத்தக்கபடி அப்பெண்பேறு கிய பதவியே கேடானதென்று தானே? அப்படியா னுல், ஐந்துபெண் பெறும் ஐரோப்பியர்களும்ஆண்டி களாக வேண்டுமே; ஏனுகின்றர்களில்லை? ஆதலால் அந்தக்கருத்தல்ல நமது சிந்தையைத்தாக்கத்தக்கது பெண்களைப் போற்றிவளர்க்க, ஆபரணஞ் சூட்ட விவாகஞ் செய்தபின் வேண்டிய வரிசைமுறைகள் செய்ய, நமது தேசத்தார் ஏற்படுத்தியிருக்கும் கன மோசமான செலவுகளும் அவற்றை வற்புறுத்தும் ஆசார ஒழுக்கங்களும் நமக்குள் குடிகொண்டிருக்க, நாமவற்றைக் கண்யஞ்செய்து உபசாரஞ்செய்துபத்திரமாய்ப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறேமென்ற கருத்தல்லவா நமது சிந்தையைத் தாக்கத்தக்கது? கல்வியபிவிர்த்தியிலும் கைத்தொழிலபிவிர்த்தியிலும் அந்நியதேசிகள் அதிவல்லமை பெற்றமையாலும், காலமழையில்லாமையாலும், இன்னுஞ் சிற்சில காரணங்களாலும், தரித்திரம் என்னும்மாகாசத்தில் பறக்கும் பூச்சிகளாகிய நம்மை, சடங்குச்செலவு, விவாகச்செலவு, சீமந்தச்செலவு, பிரஸவச்செலவு, பொங்கற்செலவு, ஆடிச்செலவு, ணைச்செலவு, தீபாவலிச்செலவு, இழவுச்செலவு, காடாற்றுச்செலவு, கல்லெடுப்புச்செலவு முதலிய இன்னும் எத்தனையோ சூறவளிகளும் வாட்டி வறட்டி விரட்டியோட்டுமானல், நமக்குத் தங்குதலமெங்கே, தாழ்விலிருந்து வாழ்வுக்கு வருவதெப்படி? வரும்பின் சந்ததிகள் வறுமையால் வாடி வயிறொட்டிகளாய்த் திரிந்து மாண்டுமடியாமல் ஆதரிக்கப்படுவதெப்படி? கஞ்சிப்பாட்டைக் கவனியாமல், கூட்டோடு உயிர்தங்கும் அத்தியாவசிய சாதனங்களைப்பாராமல், ‘ருது சங்கமனம்’ முதல் ‘சமாவர்த்தன’ மீறுகப் திறுறென்று வர்ணபேதங்களுக்குத் தக்கபடிவிதித்திருக்கும் சடங்குவித்தியாசங்களாகிய பாழ்நிலங்களி புல்லும் பூண்டும் மனமுருகத்தக்க விதத்தில் அல்லும்பகலும் அரும்பாடுபட்டுத் தேடிச் சேர்த்த திரவியங்களை ஆடம்பர லகிரி பிடித்தவர்களாய் வாரிவாரியிறைப்போமானல், நம் மதி என்ன மதி? அது சொன்கொடுத்த மதியா? கடன்கொடாத மதியா? அஞ்ஞமதியே யல்லவா? காற்றேடு போகுந் தற்கால ஸ்துதியை நாடி, எந்நாளும் பரிதபிக்கும் தரித்திரக்கடலிலாழ்ந்து தத்தளிக்க மனஞ்சாய்

* சமையல்பெண். ‡ அறிவீனமானபெண்.



வோமானல், சிறியலாபத்தை முன்னிட்டுப் பெரிய படுகுழியில் சாடக் கச்சை கட்டுவோமானல், நமக்கு விவேகக் கண்ணென்பது சற்றேனுமுண்டா? விபரீதக் கண்ணல்லவா முழுவது முள்ளது?

அப்படியே வையகப்புகழ்ச்சியை மதித்து வாரிவாரிச் செலவுசெய்தோமென்று வைத்துக்கொள்வோம்: வரும் புகழ்ச்சி எத்தன்மையது? ‘பெருமாளையர் வீட்டில் வைத்த பிரதமனைப்போல் அதிருசியுள்ள பிரதமன் இப்பூவுலகிலில்லை. வைப்பதற்கும் அவரைப்போலாண்பிள்ளை இல்லவேயில்லை’ என்ற வாக்கியங்களை விரித்து வாயையும் விரிப்பார்கள்; பெருமாளையர் வீட்டில் மறுநாள் கடன்காரர்மோதி பேலப்பறைகேட்டால் கைகொட்டிச் சிரிப்பார்கள்; காறியுந் துப்புவார்கள். ஏனிவ்வித மதிகெட்ட நடபடி? ஒன்று பாதிக்காரணம், காரியாகாரியந்தெரியாத நமது மடத்தனம்; மறுபாதிக்காரணம், அப்படிச்செய்துதீரவேண்டுமென்று கட்டுப்படுத்தும் நமது ஆசாரநிஷ்ரேத்தைச் சிலர், இவ்வடியந்திரங்களில் முன்செலவுசெய்தாலென்ன? பின், வாங்கிக்கொள்ளலாமே, என்று மறுத்துக் கூறலாம். முன் கொடுத்துப் பின்பு வாங்குவதில் யாதொரு மகிமையுமில்லை யென்பது மாத்திரமல்ல; பின்பு வாங்கிக்கொள்ளலாம் என்ற கோரிக்கை ஓர் நிச்சயமான விளைவாயிருக்கின்றது. சிந்திச்சிதற ஊரில் வீட்டுக்கு வீடு கொஞ்சங் கொஞ்சமாய் நாமிறைக்கும் சிறு தொகைகள் கையனுபவமில்லாத முடக்குத்தொகைகள் தானே. அத்தொகைகள் யாவும் ஒருங்கு சேர்ந்திருக்கும்பக்ஷம் பொருளுடையானுக்கு எவ்வளவு லாபங்களைக்காலக்கிரமத்தில் கொடாது? இவ்வித வார்த்தைகளால் செலவு செய்யவேண்டாமென்பதல்ல நமது துணிவு. உலக ஸ்துதியைச் சட்டைசெய்து, உதரப்பசியை அசட்டைசெய்யவா? முந்தியநாள் பட்டணப்பிரவேசமும் பிந்தியநாள் ஜெயில் பிரவேசமுஞ் செய்யவா? தரித்திரத்தைத் தாம்பூலம் வைத்தழைக்கவா? ஆதலால், வீணுசாரப்பற்றுக்களை வேரோடறுத்து, காரியாகாரியங் கவனித்து, மேலிருப்பு ஸ்திதிகளை வேண்டியமட்டும் யோசித்து, எவ்வளவுதூரம் வரையறுக்கும் மதியுடன் செலவுசெய்யலாமோ அவ்வளவுதூரஞ்செலவுசெய்யலாமெனச் சூசிப்பதுமாத்திரமே நமது குறிப்பு. “வரவுக்குத்தக்கபடி செலவை வரையறு” எனப்பெரியோர் கூறியபடி ஒருவனுடைய ஆஸ்தியில் இருபத்தைந்தில் ஒரு பங்கென்றே, மற்றே, விவாகத்தொகையாக ஏற்படுத்திக்கொண்டாலும் போதும்.

மதியீனமென்பது நமது செலவுவிஷயத்தில் மாத்திரமல்ல வெளிப்படுவது; நம்முடைய பற்பல நடவடிகளிலும் அதைக்காணலாம். விவாக அடியந்தரம் நிறைவேற்ற வாசானுன மாத்திரமுள்ள ஓர்வயோதிக வேதியனை வருத்துகிறேம். அவர் மணவறையிலிருந்துகொண்டு என்னென்னவோ சில வாக்கியங்களை முணுமுணுக்க ஆரம்பிக்கிருர்: அவர் சொல்லதன் தாற்பரியம் நாமறிய இடமில்லை: பாஷையோ சம்ஸ்கிருத பாஷை: அவரது மெதுவான சத்தம்நமது காதில் விழுவதில்லை: இடையில், கொட்டுமுழக்கங்களுங் கொண்டாட்டங்களுங்கூட. தக்ஷிணையை வாங்கிக்கொண்டு ‘சபாசு’ என்று செல்லுகிருர். வேதியர், நல்ல கோட்பாடுகளை [illegible]றுத்தவா, வற்புறுத்தநினைக்கவா, அவர் செய்வதில்லை. ஐயாயிரம் பதினுயிரத்தை அள்ளியள்ளி இறைக்கும் விவாக அடியந்தரங்களில், விவாகக்கட்டுப்பாட்டால் ஏற்படும் நிபந்தனைகளை வற்புறுத்தவா, எடுத்துக்கூறவா செய்வதின்றி, “கண்டது காட்சி, கொண்டது கோலம்” என்பதற்கேற்ப நடப்போமானல் நாம் காரியாப்சம் கவனிக்கும் இயல்புடையவர்கள்தானே? அவ்வியல்பில்லாமை ஓர் பெருங் குறையல்லவா? பின் “அம்மிமிதித்துஅருந்ததி பார்க்கும்சடங்கு” நிறைவேற்றத்திற்குப் புறப்படுகின்றர்கள் தம்பதிகள். அம்மிமீது கால்வைத்து அருந்ததி பார்க்கும் சடங்கின் நன்னேக்கம் தம்பதிகளறிய வேண்டியதாயிருக்க, அப்படியறிந்த அறிவால் நல்லொழுக்கம் சித்திப்பதற்காகவே அச்சடங்கு ஏற்பட்டிருப்பதாயிருக்க, தம்பதிகளைப் பந்தல்மூலையில் கொண்டுசென்று நிறுத்தி, வாழையிலையோ தென்னையிலையோ மற்றெதையோ இரண்டொன்றைக் காட்டுகிறர்கள்: பர்த்தாவும் பார்க்கிருர்: பாரியும் பார்க்கிருள்: பக்கத்தில் நிற்கும் யாவரும் பார்க்கிருர்கள்: எட்டியெட்டிப்பார்த்தாலும் வெட்டவெளியல்லாமல் வேறென்றுங் காண்பதில்லை—திரும்புகிருர்கள். நாலாம் நீராகிறது; ஏழாம் நீராகிறது; ‘சட்ரஸம்’ பரிமாற ஆரம்பிக்கிருள் பெண். ‘சட்ரஸம்’ என்ற சடங்கை ஏற்படுத்தியிருக்கும் நோக்கம்இன்னதென அறியாத பெண், அதை யறியும்விஷயத்தில்சிந்தை சாயாதவளாய், எவ்வெவர்களோ பாகஞ்செய்த என்னென்னமோ பதார்த்தங்களைப் புருஷன்முன் கவிழ்ந்த முகத்தோடும் கவ்வுகண்ணேடும் படைக்கிருள். பெண்ணின் குணத்தை உத்தேசித் தேற்படுத்திய அச்சடங்கின் நன்னேக்கந்தான் அவளுக்குத்தெரியாது; அந்த வாக்கின் அர்த்தந்தான்தெரியுமா? அந்த வாக்கின் அர்த்தந்தான் தெரியாது; அந்த வாக்கை உச்சரிக்கத்தான் தெரியுமா? சட்ரஸம் பரிமாறுதல் என்பதைச் சட்டுவம் பரிமாறுதலென்று திருப்பி, ஆறுவகையான ருசியை வேறுவகையான இரும்பாகத் திருப்பி, ஏதோ பர்த்தா செய்த பூஜாபலத்தால் அவன்மேல் சட்டுவங்கொண்டு பரிமாறுமல் புண்ணியங் கட்டுகிருள். அறுசுவை யுண்டி யமைந்தில்லாள் ஊட்டவேண்டியது ஆவசியமாயிற்றே! அறுசுவை இன்னவை என்றறியாத பெண்ணு காலமறிந்து, தேசமறிந்து, அளவறிந்து, கலந்தூட்டிப் பர்த்தாவின்

தேகத்தைப் பரிபாலனஞ்செய்யும் பெண்மணியாகப் போகிருள்? இந்தக் காரியத்தைமாத்திரஞ் சிந்தித்துப் பாரத்தாலுங்கூட ('மற்ரென்று விரித்தலுக்கு' மன்னிப்புக்கேட்டுக்கொள்கிறேன்)அறிவானது ஸ்திரீஜனங்களுக்கு அவசியமென்பதுதோற்றவில்லையா? அறிவாவசியமானல் அதைச்சம்பாதிக்கும் மார்க்கங்களிலொன்றாகிய வாசிப்புத்துறையானது எப்படித் திரஸ்கரிக்கத்தக்கது! 'தந்த சுத்தி' முதலியசடங்குகளை நடத்தும் ஒழுங்குகளைப்பாரத்தால் நாம்ஒழுங்குகெட்டு நடக்கும்இயல்புள்ளவர்கள்தானென்பது நன்கு விளங்கும். காலையில் கொழுந்திஅத்தானிடஞ் சென்று பல்விளக்கும்படி வேண்ட, அவரவ்வாறு பல்விளக்கியபின் இன்னும் பதார்த்தங்களையெல்லாந் தின்று விலாப்புறம் வீங்கி விம்மிக் கொழுத்திருக்க, காலமல்லாத காலத்தில், உச்சிகிரிந்துஒன்றரைமணியுங் கழிந்து, பர்த்தாவானவர் வயிற்றிற் பசியில்லாதிருக்க, வாயிலூத்தையில்லாதிருக்க, தந்தசுத்திக்கென்று அலங்காரப்பல்லக்கில் ஏறுகிருர். நாம் வழக்கமென்னும் பாதையேபாதையாகக்கொண்ட வழக்கப்பூச்சிகளாய், வீண்செலவுகள் செய்யும் விஷயத்தில் பின்னிடாத ஜனங்களென்பதற்கு வேறுகாரணம் வேண்டுமோ?

(இன்னும்வரும்.)

## ஒருதாதாசெய்த தீர்மானம்
### அல்லது
## தங்கம்மாள்தலைவிதி.

### V.

இருவர்களுஞ் சந்தித்த இடத்தில், இருபுறமும் வைக்கப்பட்ட ஆலமரங்களினுல் ஒருமயில் தூரத்திற்கு ஓரே நிழலாயிருந்தது. மிருகங்களுக்குள் யானையும், பர்வதங்களுக்குள் இமயமலையும், ஆறுகளுக்குள் கங்காநதியும், மரங்களுக்குள் ஆலமரமும் மேன்மையான சிருஷ்டிப் பொருள்கள். இவ்விருட்சம், யானையின் துதிக்கைபோற் பருத்த கிளைகளை நாலுபுறமும் நீட்டி, யானையின் காலபோல் பருத்துத் திரண்ட வீழ்துகள் தன்னைத்தாங்க, பாதாளலோகம் வரையில் வேரூன்றி, ஐம்புலன்களை யடக்கி நிலைபெயராமல் தவம்செய்யும் தவசிகளைப்போல, வெயில், மழை, காற்று, இவைகளுக்குச் சலியாமல் நின்று வளர்கிறது. சிவபெருமானின் தண்ணருளைச்சார்ந்தவர்களை நரகத்தீ யண்டாததுபோல, இக்கல்பவிருட்சத்தின் நிழலை யடைந்தவர்களை சூரியவெப்பம், அண்டுகிறதில்லை. கல்லாலின் நிழலினின்று சனகாதி நால்வருக்கும் கடவுள் கைகாட்டியுணர்த்தியது இவ்வுண்மைப் பொருள்தானே? இல்லாவிடின், நுண்ணிய விதையினின்று உற்பத்தியாகி ஆகாயமட்டுமளாவி, பரவி, தன்னிழலில் அனேக பிராணிகளை மனங்குளிரச் செய்வதுபோல, நான் சூட்சுமரூமத்தினின்று, என்னிச்சையினுல், விசுவரூபியாகி, அண்டபகிரண்டங்களெல்லாம் வியாபித்து என் தண்ணருளால் ஆத்மகோடிகளை சந்தோஷிப் பிக்கிறேன்." என்கிற தத்துவந்தானே? திருப்பாற்கடலில் ஹரியானவர், ஏனையமரங்களின் இலைகளையெல்லாம் விட்டு,ஆலிலைமேல் பள்ளிகொண்டாரென்ருல், இவ்விருட்சத்தின் பெருமையை எடுத்துக்காட்டவும் வேண்டுமோ? அருங்கோடையில், பால் பெருகித் தழைத்து, வெப்பத்தை எல்லாம் தான்தாங்கி வழிப்போக்கர்களுக்கு சுகமுண்டாக்குவதுபோல, மாந்தர்கள் கருணைப்பால்கொண்டு, பிறவித் துன்பமெல்லாம் தாங்களே வகித்து அயலார்களை சுகப்படுத்த வேண்டுமென்கிற ஞானத்தை பயிரங்கமாய் வற்புறுத்தும்படியல்லவோ வழிநடப்பின் இருபுறமும் எங்கேபார்த்தாலும் ஆலமரத்தை நம்முன்னேர்கள் நட்டுவளர்த்தார்கள். பேரின்பப்பொருளைக் கற்பிக்கும் வேதம், வேதாந்தம், ஆகமாதிகளை விலக்கி சிற்றின்பத்துக்கேதுவாகிய திரவிய நூல்களை இக்காலத்தில் படிப்பதுபோல, அழகிலும், பெருந்தன்மையிலும், குணத்திலும் மேலான ஆலமரங்களை அழித்து, பணவரும்படிக்கு ஏதுவாகிய, புளியையும், தென்னையையும், காற்ருடி மரத்தையும், ரஸ்தாவின் பக்கத்தில் நடுகிருர்கள். பணத்தைநாடி குணத்தைக் கைவிடுதல் காலசுபாவம்போல் காணப்படுகிறது. ஆயினும் தங்களை நாடிவந்தோர் எக்குணராயினும், தங்கள் குணந்தளராது தயவுசெய்யும் தக்கோர்கள்போல, ஆலமரங்கள், அதிவேகமாய் வெயிலில்நடந்துவந்த சிவராம சாஸ்திரியாரின் களைப்பை யாற்றின. சாஸ்திரியாரும், நெற்றிவியர்வையைத் துடைத்து, நடையைத் தளர்த்தி, ஊக்கமின்றி மெல்ல நடக்கும் தன் பாலியத் தோழனை அப்புக்குட்டியுடன் பின்வருமாறு சம்பாஷிக்கத் தொடங்கினர்:—

சிவ. சா.—நீ எங்கேயிருந்து வருகிருய்?

அ. கு.—நாளைக்கு அப்பாவுக்குசிராத்தம், செலவுக்கு கையில் பணமில்லை. குடியானவனிடத்தில் பகுதி பாக்கி இருந்தது. தண்டப்போனேன்; புரப்பட்டவேளை என்னவேளையோ, ஒன்றும் அகப்படவில்லை. சிராத்தம் என்னமாய்நடக்கப் போகிறதோ தெய்வத்துக்குத் தான்தெரியும்.

சிவ. சா.—நாளைக்கு கிருஷ்ணபட்சம் சஷ்டியல்லவா? ஆமாம் நாளைக்குத்தான் உன்னுடைய அப்பாவுக்கு சிராத்தம். அதற்கடுத்தநாள் முன்சிப் சிவசுவாமிஅய்யர் தாயாருக்காக்கும்.

அ. கு.—பணக்காரன் வீட்டில் நாள் திங்களென்ருல் உனக்கு நன்ருய் ஞாபக மிருக்கும். என்னைப்போல ஏழை வீட்டில் திதிஎன்ருல், யோஜித்துத்தான் தெரியவேணும்.



சிவ. சா.—உலகமே இரண்டு மாயையில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுகிறது: பணமொன்று, ஸ்திரீயொன்று; இவ்விரண்டு மில்லாவிட்டால் யாருக்கு யார் இலட்சியம்.

அ. கு.—பணமில்லாமல் கிரக கிருத்தியம் நடப்பது கஷ்டம். ஸ்திரீ யில்லாவிட்டால் பிரபஞ்சமே விர்த்தியடையாது. ஆகிலும் இவ்விரண்டையும் தர்மமார்க்கத்தினுலடைந்து அனுபவிக்க வேணும். பணத்துக்காக பாபிகளுடன்கூடி ஏழைகளை அவமதிக்கக்கூடாது. வைதீகன் ஏழை பணக்காரன் இருவரையும் நிர்ப்பட்சபாதமாய் நடத்தவேணும்.

சிவ. சா.—நான் அப்படித்தான் நடக்கிறேன். உன்னைவிட பணக்காரன் உயர்த்தியோ.

அ. கு.—பேச்சில் சரியாய்த்தான் இருக்கிறது: காரியத்தில் வந்தால் வித்தியாசந்தான். ஏழைவீட்டில் பிராமணுர்த்தம் என்ருல் எண்ணூயிரம்சாலஜாப் சொல்லுகிருய். பணக்காரர் வீட்டிக்கு கூப்பிடுகிறதற்கு முன்னே தலையிலே எள்ளைப் போட்டுக்கொண்டு தானுகவே முன் நிற்கிருய். நீ பட்டணம் பெரியவாத்தியாயராய்ப்போய்விட்டாய்; என் வீட்டிற்கெல்லாம் வருவாயா.

சிவ. சா.—நீ எப்போது கூப்பிட்டு நான் வரவில்லை. அதற்கு நான் என்னசெய்கிறது. உங்கப்பா சிராத்தத்துக்கு முதல்நாள் ஹைகோர்ட் வக்கீல் சங்கரய்யர் தகப்பனுருக்கு, மறுநாள் முன்சீப் சிவசுவாமி அய்யர் தாயாருக்கு. இரண்டும் பெரியவிடம்: என்னை அகத்தியம் வரிக்கிருர்கள்.

அ. கு.—நீ வராமல் சிராத்தம் நின்றுபோகிறதில்லை. பணக்காரனைப் பத்துப்பேர் சுற்றிக்கொண்டிருந்தால், பிச்சைக்காரனுக்குபதினுயிரம்பேர் இருக்கிருர்கள். ஆண்டிக்கு ஆண்டி பிச்சைபோடுகிருப்போல் எனக்கும் வேண்டிய இரண்டு ஏழை வைதிகன் இருக்கிருன். எப்படியாகிலும் சுவாமி நடப்பிக்கிருர். காலஸ்திதியைச் சொன்னேன். லௌகிகாள் வைதீகாள் எல்லாரும் பணம் பணம் என்று பறக்கிருர்களே. எல்லாரும் பணக்காரனுகப் போகவேண்டும், இரண்டுமாடிவைத்துக் கட்டிக்கொண்டு வாழவேண்டும் என்று பேராசை பிடித்தாடுகிருர்களே. இவ்வளவுபேரும் பணக்காரர்களாவதற்கு வேண்டிய பணம் எங்கே உலகத்தில் இருக்கிறது. பழி பாவத்தைப் பாராமல் பணத்தைத் தேடுவதில் பிரயோஜனமென்ன.

சிவ. சா.—''கையில் காசுஇல்லை சிராத்தம் நடக்க ''வேண்டுமே'' என்று அழுதுகொண்டிருந்தாயே, அப்படி இருக்கும்பொழுது ஏன் பணந்தேடுபவர்களைத் தூஷிக்கிருய்.

அ. கு.—நான் பணந்தேடுபவர்களை தூஷிக்கவில்லை. பிராமணுளாயும், வைதீகர்களாயுமிருந்து பணமே பெரிது என்று அதர்மத்தை மேற்கொண்டலைகிருர்களே அவர்களைப்பற்றி நிந்தித்தேன். அதுபோகட்டும், தலையில் என்ன மூட்டை பலமாயிருக்கு?

சிவ. சா.—ஓரிடத்திலே கலியாணத்துக்குப் போயிருந்தேன். தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை அகப்பட்டது. அதை விடுவானேன் என்று கட்டிக்கொண்டு வந்தேன்.

அ. கு.—உபாத்தியாய மொன்றிருந்தால் போதும்; இவர்களுக்கு ஏதாகிலு மகப்பட்டுக்கொண்டே இருக்கும். வருஷம் முன்னூற்றறுபது நாளில், வரும்படியில்லாத நாள் கிடையாது:

சிவ. சா.—நீ மலைக்கிருய், சும்மா அலைந்து யாதாயாதமாய் அலைகிருமே ஒழிய, தக்கபடி வரும்படியில்லை.

அ. கு.—வக்கீல்பாடும், வைதீகன்பாடும் தான் இக்காலத்தில் கொண்டாட்டம். எந்தக் குடி வாழ்ந்தாலும், அழிந்தாலும், உங்கள்பாட்டுக்குக் குறைவில்லை. 'பீஸ்' இல்லாமல் வக்கீல் பேசுகிறதில்லை, காசு இல்லாமல் வைதீகன் மந்திரம் ஓதுகிறதில்லை. இந்தக் கலிகாலத்துக் கேற்றதுபோல் தர்மத்தைக்கெடுக்க வக்கீல்களும் கர்மத்தைக் கெடுக்க வைதீகர்களும் தலைப்பட்டார்களே.

சிவ. சா.—வீணில் பேச்சுவளரும். அதிருக்கட்டும். பூவரசநல்லூரில் விசேஷமேதாகிலுமுண்டோ?

அ. கு.—பெரியகத்தந் தாதா சாமிஅய்யர் உன்னைத் தேடிக்கொண்டிருந்தாரே. நீ இன்னும் போகவில்லையோ.

சிவ. சா.—குப்பாதீட்சதர் கூட பத்துநாளைக்குமுன்னே சொன்னர். நான் இன்னும் போகவில்லை.

அ. கு.—சாமி அய்யருக்கும் உனக்கும் ஏதாகிலும் மனஸ்தாபமோ.

சிவ. சா.—நான் ஏழைவைதீகன்; திறந்தவீட்டிலெல்லாம் நுழைகிறவன்; பெரிய மனுஷாளோடு மனஸ்தாபம் வைத்துக்கொண்டு கட்டுமா? இரண்டு வருஷகாலமாய் அவர் வீட்டு உபாத்தியாயம் கூட விட்டுப்போயிற்று. கலியாணங் கார்த்திகைக்கு அவர் என்னை அழைக்கிறதில்லை. அவரிடத்தில் எனக்கென்ன காரியம்; மேலும் கலியாண காரியமாய் அலைந்துகொண்டிருந்தேன் வேலையொழியவில்லை. மறுபடியும் சொல்லியனுப்புவித்தால் போகிறதுதான். என்னை

என்னத்திற்காக தேடுகிறார்? உனக்குத் தெரியுமா? காரியமில்லாமல் கூப்பிடமாட்டாரோ.

அ. கு.—சாமிஅய்யர் கலியாணம்பண்ணிக்கொள்ள வேணுமென்று தீர்மானம் செய்துகொண்டிருக்கிறார்.

சிவ. சா.—மூத்தாளிருக்கும்பொழுது இவருக்கு கலியாணமென்னத்திற்கு வேண்டும்? ஒருத்திக்கே சரியாய்ச் சோறுபோட்டுப் புடவை வாங்கிக் கொடுக்கமாட்டாரே.

அ. கு.—மூத்தாள் இறந்துபோய் இன்றைக்கு முப்பது நாளாகிறது.

சிவ. சா.—அப்படியா! அடா அடா! கலியாணமொருக்கத்திலே அலைச்சலதிகம், ஊரில் தரித்திருக்கவில்லை. அதினால் தெரியாமல் போயிற்று. அந்த அம்மாள், பரதேவதை மஹாலட்சுமி, நிரம்ப நல்லவள், என்பேரில் மிகவும் விசுவாசமுண்டு. இந்த கிருபணனிடத்திலகப்பட்டு அதிக அவஸ்தைப் பட்டாள்; மஞ்சளும் குங்குமமாகப் போனது அவளுடைய அதிர்ஷ்டந்தான்.

அ. கு.—உனக்கெல்லாரும் நல்லவர்தான்நுழைந்து கொடுத்துக்கொண்டு அம்மா உனக்குப் பெண் பிறக்கும், அய்யா உமக்குப் பிள்ளை பிறக்குமென்று சமயத்துக்குத்தக்கபடி ஸ்தோத்திரம்பண்ணிவிட்டு அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போகிறவன். உனக்குயார் பொல்லாதவர்கள்.

சிவ. சா.—நான் அந்த மஹாலட்சுமி விஷயத்தில் வீண் ஸ்துத்தியம் பண்ணவில்லை: சொல்லுகிறது வாஸ்தவமே, நான் வாழ்த்தாவிட்டாலும் என் வயிறு வாழ்த்தும். சாப்பிட்டால் அந்த அம்மாள்போட்டு சாப்பிடவேணும்: புத்துருக்கிய நெய்யும், ஆடைத் தயிரும் வேண்டாம் வேண்டாமென்னும்போதே போடுவள். வீட்டில் எனக்கும் சம்சாரத்துக்கும் சண்டையா யிருந்தால் அங்கேதான் சாப்பிடப்போவேன்.

அ. கு.—ஒன்றுவிட்டொருநாள்தான்பிராமணார்த்தம் அகப்பட்டுக்கொண்டே இருக்கிறதே; இதென்ன இடைக்கொள்ளையா? அப்போ உனக்கு எப்போதும் வீட்டில் சண்டைதான். பிறந்தால் வைதீகனாய்ப் பிறக்கவேணும். நாட்டிலே என்ன பஞ்சமாயிருந்தாலும், உங்கள் சாப்பாட்டுக்குக்குறைவில்லை.

சிவ. சா.—மேலும் ஏதாகிலும் விரதமென்று சாக்கிட்டு, புருஷனுக்குத் தெரியாமல், மாஸத்துக்கு இரண்டு மூன்று ரூபாய் கொடுப்பள்.

அ. கு.—அதினாலேதான் உன்னை சாமிஅய்யர் வீட்டுவழி வரவேண்டாமென்று சொல்லியிருப்பர். அவர் வல்லாளகண்டர். வக்கீலிடத்திலும், வைதீகனிடத்திலும் அகப்பட்டுக்கொண்டால் அட்டை உரிஞ்சுவதுபோல் உரிஞ்சிவிடுவார்களே.

சிவ. சா.—உனக்கு எப்பொழுதும்வேடிக்கைதானே கேளடா: நாலுமாஸத்துக்கு முன்னே அந்த அம்மா காவேரிஸ்நானஞ்செய்து நெற்றி நிறைய மஞ்சளும் குங்குமமுமாய், இடுப்பில் தீர்த்தகுடத்துடனே வீட்டுக்குப்போகிறாள். நான் அரசமரத்தைப்பிரதட்சணஞ்செய்து திரும்பினேன். என்னைப் பார்த்தவுடன், 'சாஸ்திரிகளே இப்படி உபேட்சை செய்யலாமா, வீதிவழியாய்ப் போனால் படியில் நின்றுவது க்ஷேமமாவென்று கேட்டாலாகாதா? மறந்துவிட்டீரே' என்றாள்; 'உங்களை மறப்பேனா எப்போதும் கைலாஸபதி சன்னிதியில் உங்கள் க்ஷேமத்தைப்பற்றி பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் எஜமான் என்பேரில் ஏதோ கோபித்துக்கொண்டு, என் உபாத்தியாயம் வேண்டாமென்று நீக்கிப் போட்டார். நானும் வருகிறதை நிறுத்திப்போட்டேன். எப்போ சொல்லியனுப்பிவித்தாலும் வரச்சித்தமாயிருக்கிறேன். நான் சாப்பிடுகிறதெல்லாம் அம்மா உங்களன்னம்'' என்று சொன்னேன் அந்த மகராஜியைப்போல வேறொருவளை எப்போ காணப்போகிறேன். இந்தப் பாபியினிடத்தில் இருந்து வெகுகஷ்டப்பட்டாள். வெறிவந்தால் கொல்லு கொல்லென்று கொல்லுவன். போனது அவளுடைய ஜென்மாந்திர புண்ணியந்தான். சாமிஅய்யன் பாடுதான் திண்டாட்டம்.

அ. கு.—நீ நினைக்கிறாய். அவரப்படி ஒன்றும் நினைக்கவில்லை. மறுபடியும் கலியாணஞ்செய்துகொண்டு, நீடூழிகாலம் வாழலாமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்.

சிவ. சா.—துர்க்குணன் கிருபணன், வயசுமாய் விட்டது, பிள்ளையுமிருக்கிறான், இவனுக்கு யார்பெண்கொடுப்பார்கள். காசைவாரிவிட்டால் ஒருக்காலென்னமோ. அப்போதும் இவனை நம்பி யார் ஏற்பட்டு செய்விப்பார்கள். சமயத்தில் மத்தியஸ்தனைக் கைவிட்டுவிடுவானே.

அ. கு.—என்னால் கூடியமட்டும் கலியாணஞ்செய்துகொள்வது பிசகென்று பச்சைபச்சையாய்ச் சொன்னேன். என் பேச்செல்லாம் எருமையின் முதுகில் மழைபெய்தாப்போல் அவர் காதில் விழுந்தது. எவ்வளவு செலவானாலும் கலியாணஞ்செய்து போடவேண்டுமென்று ஓரோபிடிவாதமாய் நிற்கிறார். எந்தப்பெண்ணை வயிறெரியச் செய்யப்போகிறாரோ!



சிவ. சா.—பணம் இருக்கிறது. யானைஇறந்தாலும்ஆயிரம்பொன் இருந்தாலும் ஆயிரம்பொன். யாராகிலும் பெண்ணைக்கொடுத்துவிடுவார்கள்.

அ. கு.—நீ யொன்றும் பழிபாவத்துக்கு ஏற்பட்டு யாரையாகிலும் கொண்டு மாட்டிவைக்காதே.

சிவ. சா.—நானில்லாவிட்டால் இன்னொருதேவதத்தன் ஏற்படுகிறான். எப்படியும் நடக்கிறது நடந்துவிடும். நான் வேண்டாமென்று தடுத்தாலும் நிற்காது. எனக்கு இரண்டொரு காசுவருமே அதுபோய்விடும்.

அ. கு.—காசுக்கு ஆசைப்பட்டுக்கொண்டு, பொய்யைப்புரளியைச் சொல்லி உன்னை நம்பினவர்களை மோசஞ்செய்யாதே. நாளைக்கு ஏதாகிலும் விபரீதம் நேர்ந்ததோ, அந்தப்பெண்ணைச் சேர்ந்தவர்கள் உன்னைச்சாகிறவரையில் சபித்துக்கொண்டே இருப்பார்கள்.

சிவ. சா.—சாபம் என்னை ஒன்றும்செய்யமாட்டாது.

அ. கு.—அகிருத்தியம் செய்தால், விளங்குமா? அப்படிச்செய்து சம்பாதித்தகாசு விருத்திக்கு வருமா? தர்மந்தான் ஆகுமா?

சிவ. சா.—லோகத்தில், பதினாயிரம், லட்சம், பத்து லட்சமென்று பெரியமனுஷாள் சம்பாதிக்கிறார்களே, இதை எல்லாம் தர்மசாஸ்திரப் பிரகாரந்தான் நடந்து சம்பாதிக்கிறார்களோ? அவர்களுக்கு என்னகேடு? சுகத்துக்கும் பிள்ளைகுட்டிக்கும் என்னகுறைவு?

அ. கு.—அரசன் அன்றுகொல்லும், தெய்வம் நின்றுகொல்லும். இந்த ஜன்மத்திலில்லாவிட்டாலும் இன்னொரு ஜன்மத்திலாகிலும் அவரவர்கள் செய்கிற பாபத்தை அனுபவித்துத்தீரவேணும். செய்கிறபோது வேடிக்கையாயிருக்கும்; பின்னால் அனுபவிக்கிறபோது தெரியும் கஷ்டம்.

சிவ. சா.—வைதீகன் பாபத்தையும் புண்ணியத்தையும்பார்த்தால் ஓர்தம்படிகூட வரமாட்டாது. தானம் வாங்கி, தர்மம் வாங்கி ஊர்பாபத்தை எல்லாம் ஏற்றுக்கொள்ளத்தானே தெய்வம் எங்களைச்சிருஷ்டித்திருக்கிறது.

அ. கு.—பிராமணன்தான் தர்மம் வாங்கலாம்: சம்சார சம்ரக்ஷணையின் பொருட்டு, சபிண்டிகூடச்சாப்பிடலாம். பொய்யைச் சொல்லி மோசஞ்செய்து, பிழைக்கலாகாது. அதற்கு பிராயச்சித்தமே கிடையாது. நிச்சயமாய்பாபத்தை பிற்காலத்திலாவது அனுபவிக்கவேண்டியிருக்கும்.

சிவ. சா.—பிற்காலத்தையும், பாபபுண்ணியத்தையும் யார் கண்டார்? உலோகத்தில் லௌகீகாள் எல்லாம் இவ்விரண்டையும் யோஜித்து நடக்கிறார்களோ?

அ. கு.—அவாள் லௌகீகாள்; கர்மத்தியாகிகள்; நீ அப்படி யல்லவே, வைதீக சந்ததி: பாபபுண்ணியமில்லை என்று சொல்லலாமோ? கிறிஸ்தவன் கூடப்பொய்யையும் மோசத்தையும்சரியென்று சொல்லமாட்டானே.

சிவ. சா. பாபபுண்ணிய மில்லையென்று சொல்லவில்லை, இந்தக்கலிகாலத்தில் பார்த்துக் கட்டாது. பாபமில்லாமல் பணஞ்சேரமாட்டாது. நான்பிள்ளைகுட்டிக்காரன், பணமில்லாமல் ஒரு நாள் கழிப்பது ஓர்யுகமாயிருக்கிறது. நெருப்பு, ஜலங்கூடவிலைக்கு வாங்கவேண்டியதாயிருக்கிறது. என் தலைசாய்ந்தால் பிள்ளைகுட்டிகள் திண்டாடுமே. எந்தப் பிரபுகொடுத்து நடப்பிவிப்பான்.

அ. கு.—பூலோகத்தில் எத்தனையோ ஏழைகள் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் பிள்ளை பெண்கள் இருக்கின்றன. நீ மாத்திரம் என்ன அதிசயம். அவர்களுக்கு தெய்வம் விடுகிற வழி உனக்கும் விடட்டுமே. இழவு, பேரிழவு, திவசம், திங்கள். நாள் கிழமை இதுகளினால் வருகிற வரும்படி போதுமே. குடியைக் கெடுத்தாவது சம்பாதிப்பானேன்? பசுவைக்கொன்று செருப்பு தானம் செய்கிறதா!

சிவ. சா.—அப்படி பணஆசைஒழிகிறதா. வேதாந்தவிரத்தி வருகிறதா. இப்போ மேலே உயர்ந்த உத்தியோகம் செய்கிறார்களே. இவர்கள் எல்லாம் வைதீகர்கள் குலத்துப்பிள்ளைகள்தானே. சுவாமி ஏதோ எனக்கு இரண்டு பிச்சை கொடுத்திருக்கிறார். அதுகளை படிப்பிவிக்க திரவிய சகாயம்நிரம்ப வேண்டியிருக்கிறது. இதுகளும் படித்து முன்னுக்கு வந்தால் ஆகாத பிச்சைக் காசுக்கும் பிணக்காசுக்கும் நான் போகாமலிருக்கலா மல்லவா.

அ. கு.—இப்படி எல்லாரும் லௌகீகத்துக்கு ஆசைப்பட்டால், பிறகு, வைதீகத்தொழில்யார்செய்கிறது. திவசத்துக்கு யாரை வரிக்கிறது.

சிவ. சா.—அதற்கு நான் தானா பாத்தியம். எவ்வளவு பெரிய தீட்சதர், ஜடாவல்லபர், ஸ்ரௌதிகள் குடும்பத்துப் பிள்ளைகளெல்லாம் அவாள் அவாளுடைய குலதர்மத்தை விட்டு, இங்கிலீஸ் வாசித்து, முன் சேவகன், பின் சேவகனோடு, துரைகளைப்போல உடுப்புப் போட்டுக்கொண்டு, கோச்சுவண்டியில் சவாரி செய்யும் பொழுது, என் பிள்ளை மாத்திரம், கந்தல்மடி சஞ்சியும், கழுத்தில் ருத்ராட்சமும், கையில் பில்லுமாக, பெரிய மனுஷாள் தயவுக்குக் காத்துக்கொண்டு,

பல்லைக்காட்டி, வீடு வீடாய் நாயைப்போல் நுழைந்து என் பிச்சை எடுக்கவேணும்.

அ. கு.—கிரமமாய் உத்தியோகம் செய்து சம்பாதிப்பதற்கும் பொய், களவு, மோசம், செய்து சம்பாதிப்பதற்கும் வித்தியாசமில்லையா. வயிறு வளர்ப்பதற்காக பிராமணன் எல்லா விர்த்தியும் அனுஷ்டிக்கலாம்.

சிவ. சா.—இவாளெல்லாம் வயிற்றுக் கில்லாமல் தான் உத்தியோகம் பண்ணுகிறார்களோ. ஸ்நானமில்லை, ஸந்தியில்லை, எச்சிலில்லை, தீட்டில்லை, தானமில்லை, தர்மமில்லை, பிராமணன் என்கிற ஞானங்கூட இல்லையே.

அ. கு.—அவனவன் செய்கிற பாபத்தை அவனவன் அனுபவிக்கிறான். அதற்காக நாம்கூட நம்முடைய குலதர்மத்தை விட்டு விடவேணுமோ. விட்டு விட்டால் சுவாமி தண்டிக்கமாட்டாரா?

சிவ. சா.—இத்தனை பேருக்கு ஆகிற கதி, எனக்குமாகட்டும். ஏழைவைதிகன் வீட்டுப் பிள்ளைகளுக்கு எந்தப் பெண் வாழ்க்கைப் படுகிறேன் என்கிறது. ஊன பாஷை படிக்கக்கூடாது என்று என் தகப்பனார் பயந்து, பயந்து, என்னுடைய கதி இப்படியாய்விட்டது. என்னுடன் கூட தமிழ் பள்ளிக்கூடத்தில் படித்தவர்களெல்லாம் இப்போ, தாசிலும், டெப்புட்டிகலெக்டரும், ஜட்ஜியும், சிரஸ்தாவுமாயிருக்கிறார்கள். நான் போனால் முகங்கொடுத்துப் பேசுகிறதில்லை. எனக்கு அத்தியானம் நாலு காண்டம் பூராய்வரும், தர்மசாஸ்திரம் தலைகீழாய்ச் சொல்லுவேன். யார் என்னை விசாரிக்கிறார்கள்.

அ. கு.—இப்படி பிராமணர்களெல்லாரும் காசாசை பிடித்து, கண்டபடியெல்லாம் செய்யப் புறப்பட்டால், தர்மம் எப்படி நிலை நிற்கும்.

சிவ. சா.—கலிமுற்ற முற்ற தர்மம் தேய்ந்து தான் போகும். அதுநீயும், நானும்செய்கிற வேலையா? ஈசுவரனுடைய திருவுளம் (தலை மூட்டையைப் பிடித்துக்கொண்டு கிழக்கு முகமாய்த் திரும்பி அண்ணாந்து பார்த்து) அடே, அப்புக்குட்டி நாழிகை ஜாமத்துக்கு மேலிருக்கும் போலிருக்கிறது. வைதிக காரியம் ஒன்று அவசரம் சீக்கிரம் போகவேணும். நத்தை ஊருகிறாற்போல ஊருகிறாயே, எட்டி அடிவைத்து நடந்து வாயேன்.

அ. கு.—நான் இராத்திரி கூட சரியாய் சாப்பிடவில்லை. உனக்கென்ன கலியாணச் சாப்பாட்டு வேட்டை உடம்பு திமிராய் இருக்கிறது. இப்போ என்ன தலைபோகிற காரியம். மெள்ளத் தான் நடவேன்.

சிவ. சா.—ஹைகோர்ட்டு வக்கீல் சங்கரய்யர் தகப்பனாருக்கு இன்றைக்கு வருஷாப்திகம். நாளைக்கு கோர்ட்டில்பெரிய "கேசு" இருக்கிறதாம். மத்தியானம் பன்னிரண்டு மணி ரயிலுக்கு அசத்தியம் போகவேணுமாம். அதற்குள்ளே எல்லாமாகவேணும். முன்னால், அய்யாசாமி வாத்தியாரை அனுப்பிச் சித்தமாய் ஏற்பாடு செய்திருக்கும்படி சொல்லியிருக்கிறேன். நான் பத்து மணிக்கு முன்னமே ஆஜராயிருக்கவேணும். காலத்திலே போகாத போனால் பெரிய மனுஷாள் விரோதம் நேரிடும். வருஷத்தில் பத்து ரூபாய் கிடைப்பதில் மண் விழும்.

அ. கு.—பத்து மணிக்கு சிராத்தம் செய்யலாமா? இதென்ன விபரீதமாயிருக்கு.

சிவ. சா.—உன்னுடனே இப்போது வம்பு பேச அவகாசமில்லை. நான் கொஞ்சம் வேகமாய்ப் போகிறேன்.

அ. கு.—சிவராமா அது போகட்டும். இரண்டு ரூபாய் கைமாற்றாய்க் கொடேன். கார் நெல் வந்தவுடனே விற்று, திருப்பிக் கொடுக்கிறேன்.

சிவ. சா.—மத்தியானம் இருபது நாழிகைக்கு வீட்டுக்கு வா தருகிறேன்.

"ஓ ஓ பொழுதாய் விட்டதே. நிழல் சுகமாயிருந்தது. இவனுடன் வார்த்தையிலேயே நேரமாய் விட்டதே. எல்லாரும் காத்துக்கொண்டிருப்பார்களே. இனிமேல் போய் ஸ்நாநம் செய்து, சந்திக்கடன் கழித்து எல்லாம் முடியவேணுமே" என்று கிலடைந்து சிவராம சாஸ்திரிகள் காலடி பூமியில் பாவாமல், ஓட்டமும் நடையுமாய் வெகு தூரம்போய் விட்டார். அப்புக் குட்டி, மெள்ள நகர்ந்து கொண்டே ஏகினார். "கையில் பணமில்லாமல் வீட்டுக்குப்போகவேணுமே. சாமான்களோ ஒன்றாலொன்றில்லையே. அம்மாவும் சம்சாரமும் சாமான் வாங்கி வந்தாயா என்று கேட்டால் என்னசொல்லுகிறது. இந்த ஒரு ரூபாயைக்கொண்டு என்னசெய்யலாம்: தட்சிணைக்குக்கூட போதாதே; தெய்வாதீனம் சிவராம சாஸ்திரி சொன்னபடி கொடுப்பானேயாகில் தற்கால கஷ்டம் சத்தியாக நீங்கி விடும். கேட்டதற்கு இல்லை என்று சொல்லாமல் தருகிறேன் என்றானே. சாஸ்திரியார் நல்லவனே. சாமிஅய்யருக்குத் தெரியாமல் அவர் மனைவியினிடத்தில் பணம் கிரகித்ததாகச் சொல்லுகிறான். இந்தக் காலத்தில் பாபம் புண்ணியம் பார்த்துக் கட்டாது. எப்படியாகிலும் பிராமணன் திரவியம் தேடவேண்டுமென்று கட்சியாடுகிறான். மாத்தியானிக காலம் வருகிறதற்குள் சிராத்தத்தை முடிப்பிவிக்க சித்தனாயிருக்கிறான். இவன் சாமி அய்யருக்கும் எந்தப் பெண்ணையாவது அடாத கிருத்தியஞ் செய்து மடக்க அஞ்சான். வேதமோதி, தர்ம



சாஸ்திரம் கற்றும் ஞான வழி இவனுக்குத் தெரியவில்லையே. எல்லா வைதிகர்களும் இப்படி பார்ப்பாரைப் பார்த்து, காசாசை பிடித்துக் கெட்டுப் போய் விட்டால், வர்ணாசிரம தர்மங்கள் எப்படி நிலைக்கும். இவ்வுலகத்தில் பணமே முக்கியம், அதினால் வரும் சுகமே பேரின்பம் என்று சாதுக்களாகிய பிராமணர்களே நடக்க ஆரம்பித்து விட்டார்களே. தாமதகுணமும் ராஜஸகுணமும் நிரம்பிய ஏனைய வர்ணத்தார்கள் சிற்றின்பக் கருவி[illegible] பொன்னை அடைய யாது தான் செய்யமாட்டார்கள். வேதம், வேதாந்தம், சத்தியம், சுசி, தர்மம், தயை, தாட்சணியம், எல்லாம் ஒழிந்து விடுமே. ஜனங்கள் நிலைபெயர்ந்து, பேராசைகொண்டு, பேய் போலலைவார்களே. சரீரத்தில் பல அவயவங்கள் தன் தன் தொழிலைச் செய்து சரீரத்தைக் காப்பாற்றுவதுபோல், பல வர்ணத்தார் தங்கள் தங்கள் தொழிலைச் செய்து ஜனசமூகத்தைக் காப்பாற்றி, தர்மத்தை நிலைநிறுத்தி உலகம் ஒரு ஸ்திரமான ஏற்பாட்டுக்கு வரும்பொருட்டு பெரியோர்கள் பட்ட பாடுகளும் அவர்களுடைய விர்த்தியும், ஞானமும், தவமும் பஞ்சாய்ப் பறந்து விடும்போலிருக்கிறதே. சத்தியம், தயை, தர்மம் மூன்றும் மறைந்து விட்டால், கிருஷ்ணபகவான் திருக்கண் வளர்ந்த பிறகு அர்ச்சுனன் கைக்காண்டீபம்போல, வேதாகம புஸ்தகங்கள், பண்டிதர்கள் கையில் பயன்படாமற்போய் விடுமே. பாமரஜனங்கள் சுகத்துக்கு குடியும், கூத்தியுமிருக்க, கோவிலும் கல்வியும் என்னத்திற்கென்று கேட்கமாட்டார்களா? காலம்போகிற போக்கையும், ஜனங்களுடைய மன நிலையையும், பாபவிர்த்தியையும் கவனிக்குங்கால், நாடெல்லாம் காடாகி, மனிதரெல்லாம் மிருகமாகி, ஒருவரை ஒருவர் கொத்திக் கொன்று, தின்று, உலகத்தை துன்பக்கடலில் வீழ்த்துவார்கள்போல் காணப்படுகிறதே. மறுபடிபேரின் பக்கரைசேர எவ்வளவு காலம் வேண்டுமோ. இந்தக் காட்சிக்கு அடியேனை ஆளாக்காமல் உன் திருவடியிலேயே ஐக்கியஞ் செய்து கொள்ளக் கிருபைகூரும் கருணாநிதே. என்றுபிரார்த்தித்துக்கொண்டே அப்புக்குட்டி வீடு வந்து சேர்ந்தார்.

இவருடைய வீடுபூவரசநல்லூரின் கீழ வீதியின் தென் கோடியில் இரு புறமும் பாழ்மனையால் சூழப்பட்ட புராதனகட்டடம். முன் பக்கம் ஓட்டினாலும், கூடமும், சமயற்கட்டும் தென்னோலையினாலும்மூடப்பட்டிருந்தது. விசாலமாகிய முற்றத்தின் தென் பக்கத்திலும் கீழ்புறத்திலும் ஆரல்சுவர். சுவரோரமாய் நூதனமாய்க் கீற்று வேயப்பட்ட ஓர் காய்ந்த மாட்டுக்கொட்டில். வீடு முழுவதும் சூரிய சந்திரர்கள்வாசமாயிருந்தார்கள். மழை பெய்தால் நிற்கசேரங்கை அகம் உலர்ந்த இடம் அகப்படுவதுஅருமை யாயிருக்கும். அரையில் சந்திரகாவிப் புடவையும், காதில் பொன்னோலையுமாக, கழுத்தில் நூலில்கட்டிய தாலிதொங்கலாடகளம்போல் மேடு பள்ளமாயிருந்த கூடத்தை மண், ணுஞ் சாணமும் போட்டு ஓர் சுமங்கலி மெழுகிக்கொண்டிருந்தாள். குசேலர் வஸ்திரம்போல தக்கை போட்டு தைக்கப்பட்டிருந்த வெள்ளைப் புடவை கட்டியஓர் வ[illegible] சென்ற அம்மை, நெற்றியிலும், பி[illegible]யிலும் நிரம்பபூ[illegible] வி[illegible]ம், கழுத்தில் ஓர் ருத்ராட்சமும் தரித்து, சிவநாமத்தை விடாமல் உச்சரித்துக்கொண்டு, முன்றிலிலிருந்த அவரைப் பந்தலில்காய் பறித்துக்கொண்டிருந்தாள். சீட்டிப் பாவாடையும், வயிரமணியும், கல்லிழைத்த தோடும். புல்லாக்கும்தரித்த சிறியபெண், பாட்டியின் பக்கத்தில் நின்று காய்கள் இருக்கிற இடங்களைக் காட்டிக்கொண்டிருந்தாள். தாழ்வாரத்தில், கோரைத் தடுக்கில் கால்விரலை வாயில் வைத்து சீப்பிக்கொண்டு குழந்தை ஒன்று படுத்து விளையாடிக்கொண்டிருந்தது. அப்புக் குட்டி முற்றத்தின் ஓட்டுத்திண்ணையில் உட்கார்ந்து, தலையில் கட்டிய உத்தரீயத்தை எடுத்து அதில் முடித்த காசை அவிழ்த்தார். கூடத்தில் வேலைசெய்துகொண்டிருந்த மனைவி, மகாலட்சுமி, புருஷன் வந்தாரென்று புன்னகைகொண்டு, மங்கையுடனே திரும்பி நிமிர்ந்து ஓட்டாயிருந்த மேற்புடவையைத் தளர்த்தி, தொங்கிய தாலியை மறைத்து மூடி, மறுபடியும் தன்வேலையை ஆரம்பித்தாள். பந்தலில் காய் பறிப்பதில் ஞாபகமாயிருந்த இருவர்களும் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை, அப்பொழுது.

அப்புக்குட்டி.—அம்மா, என் அந்த அவரைக்காயைப் பறிக்கிறாய், நான் சிராத்தத்திற்கு வேணுமென்று தொடாமல் வைக்கச்சொன்னேனே.

அம்மை.—அப்பு, இன்றைக்கு ஒருபோதாயிற்றே. சமைக்கிறதற்கு காய்கறி ஒன்றுமில்லையே. இரண்டு அவரைக்காயையாவது சுண்டிவைக்கலாமென்று பறிக்கிறேன். வெறுமன்னத்தை என்னமாய் சாப்பிடுகிறது? நாளைக்குசாப்பிட அஸ்தமனமாகுமே.

அ. கு.—இன்றைக்கு நம்முடைய வயிற்றுக்கு நாம் கொட்டிக்கொண்டுவிட்டால், நாளைக்கு பிராமணாளுக்கு என்ன செய்கிறது. கிராமத்துக்குப் போனவிடத்திலே கூட ஒன்றும் அகப்படவில்லையே.

அம்மை.—வீரமுத்து கொல்லையில், கத்தரி, புடல் கொத்தவரை, வண்டை, கீரத்தண்டு, எல்லாம் வேண்டியது காய்க்கிறதாமே.

அ. கு.—செடிதான் இருக்கு, காயுமில்லை, மண்ணுமில்லை.

அம்மை.—பெரிய அய்யருக்குச்சடங்கு, காய்கறி வேணுமென்று சொல்லியிருந்தேனே. எல்லாவற்றையும் பறித்து விற்றுப்போட்டானே.

அ. கு.—விற்கவுமில்லை, இழவுமில்லை. சர்வே ஆபீஸார் கிராமத்தில் வந்து தங்கி யிருந்தார்களாம். அவாள் சர்பராவுக்காக, கறிவேப்பிலையும், மணியாரனும், தென்னைமரத்துக் குரும்பையைக்கூடத் திருச்சொம்பு போய்விட்டார்களாம். வீரா முத்து அழுகிறான்.

அம்மை.—உத்தியோகஸ்தர்கள் வந்தால் குடியானவன் கழுத்தை ஏன் அறுக்கிறார்கள். ஏழை பாவத்தை ஏன் கொட்டிக்கொள்ளுகிறார்கள். அவாளுக்குச் சம்பளம் ஜாரி ஒன்றுமில்லையோ.

அ. கு.—வருகிற சம்பளத்தைப்பெட்டியில் போட்டுவிட்டு ஊரைச்சுற்றிக் கொள்ளையடித்து சாப்பிடுகிறார்கள். கிராமம் சரபட்சி விழுந்த வயல் மாதிரி சூன்யமாயிருக்கிறது.

அம்மை.—இதற்குக் கேள்வி முறையில்லையோ.

அ. கு.—கேள்வியேது முறையேது! உத்தியோகஸ்தர்களெல்லாம் ஒரே கட்சி. கேள்விமுறையிருந்தால் இப்படி செய்வார்களா? இருந்த மாட்டைக்கூட விற்றுப்போட்டோமே; மறுபடியும் மாடுவாங்கினால் வேணுமேயென்று யாசகம் வாங்கி சின்னவைக்கோல்போர் போட்டிருந்தேன். போரெல்லாம் தொலைந்துபோயிற்று.

அம்மை.—அந்தப்பாவிகளைவாரிக்கொண்டுபோக.

அ. கு.—அவர்களை ஏன் திட்டுகிறாய்? நான் ஓர்கெட்ட எண்ணம் நினைத்தேன். வீட்டிலே போர் இருந்தால் அக்கிரகாரத்தார்கள் பசுமாட்டுக்கு வேணுமென்று கேழ்ப்பார்களே, சில்லரையாகப் போய் விடுமே, கிராமத்திலே பத்திரமாயிருக்கும் என்று யோஜித்து வைத்தேன். சுவாமி நன்றாய் தண்டித்தார். பசுமாட்டுக்குப் போட்டாலும் புண்ணியங் கிடைத்திருக்கும்.

அம்மை.—அதுபோகட்டும். காலாகாலத்திலே சாமான் வாங்கிக் கொடுத்தாலல்லவா முன்னாடியே அரைத்துப் புடைத்து வைத்துக்கொள்ளலாம். அவசரமாக வாங்கிப்போட்டால் அவதிப்படுகிறதுயார்? அவள் குழந்தைக்காரி எனக்குக் கண்ணுந்தெரியவில்லை, கையும்சுவாதீனமில்லை.

அ. கு.—என்ன சாமானிருக்கு? என்ன என்ன வேணும்.

அம்மை.—எல்லாமிருக்கு. உப்புமுதல் வாங்கித்தான் ஆகவேணும். வாங்கிப்போடுகிற உனக்குத் தெரியாதோ.

அ. கு.—இந்த ரூபாயை தட்சணைக்கு வைத்துக்கொள்: சிவராம சாஸ்திரியைக் கடன் கேட்டிருக்கிறேன். மத்தியானம் வரச்சொன்னார். சாப்பிட்டு விட்டுப்போய் சாமான்கள் வாங்கி வருகிறேன்.

அம்மை.—நாங்கள் பெண் பிள்ளைகள். எங்களாலானதைச் செய்து வைக்கிறோம். அடுப்பை மெழுகிப் பாத்திரங்களைத் தேய்த்து வைக்கிறோம். ...ளைக்குப் பிராமணாள் யார்? சிவராம சாஸ்திரி இருக்கிறாரோ?

அ. கு.—அவர் பெருங்கை. முதல்கிளாசு. இரண்டு மூன்று தட்சணை கொடுத்தாலிருப்பர். நமக்கு அவ்வளவுக்கு யோக்கியதையா. மேலும் இன்றைக்கு சங்கரனுத்தில் பிராயணு)த்தமாம் பத்துமணிக்குத் திவசமாக வேணுமாம். விழுந்தடித்து ஓடுகிறான்.

ஆர். சக்கிரவர்த்தி அய்யங்கார் பி. ஏ.

# பத்மினி.

இங்கு இவ்வாறாக, அலாவுடீன் யமுனைக்கரையிலுள்ள தன் அரண்மனைப் பூங்காவனத்தில் காத்திருந்து பத்மினி வரப்போகிறாளென்று அவள் வரவை ஆசையோடெதிர்பார்த்துக்கொண்டிருந்தான். பல்லக்கில் பத்மினி வருகிறாளென்று சொன்னதெல்லாங் கபடவேஷமேயாம். அந்த வேளையில் ஒருதூதன் அவனண்டை யோடிப்போய்க் கைகட்டி வாய்புதைத்து நின்று "மண்டலசுவரா! ராணா சித்தூருக்குஓடிப் போய்விட்டான்; தாங்கள் எண்ணி யிருந்தபடி பத்மினி வரவில்லை; க்ஷத்திரிய வீரர்கள் ஆயுதங்களை மறைத்துப் பல்லக்குகளில் ஒளிந்து வந்திருந்தார்கள்" என்றான். அப்படி நடக்குமென்றுதான் கனவிலும் எண்ணாதிருந்த செய்தியைக் கேட்டுக் கடுங்கோபங்கொண்டு, அந்த ஒற்றன் தலையை வெட்டிவிடும்படியாக ஆக்கியாபித்தான்; ஆயினும் அவனுக்குக் கோபந்தணிந்த பின்பு, அது அவன் குற்றமன்றென்று கண்டானென்றாலும் அவன் ஆயுள்கால முழுவதும் தனக்கெதிரே வரக்கூடாதென்று முன் உத்தரவை மாற்றினான். அலாவுடீன் கோபாவேசங்கொண்டு, அக்கணமே அவனைப் பின்றொடர்ந்து சென்று பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்றான். அவன் அதிவேகமாய் வெகுதூரம் போய்விட்டானென்றும், தொடர்ந்து சென்று பிடித்துவர இனிமேல் வாய்க்கமாட்டாதென்றுஞ் சொன்னார்கள். சித்தூரிலிருந்துவந்த பரிவாரங்களில் அரசன் குதிரையோடு வேகமாய்ச் செல்லமாட்டாதவர்களெல்லாம் அன்றிராத்திரி முழுவதும் வழிநடந்துதங்கள் அரசனுக்கு நண்பனான ஒரு ராஜாவின் எல்லைக்குட்சென்று அவனுடைய துணையால் அங்கிருந்து இளைப்பாறிவிட்டுச் சித்தூருக்குப்போய்விட்டார்கள்.

சித்தூருக்குப் போனவுடன் ராணா அலாவுடீனை நிந்தித்து அவனுக்குக் கடிதங்களை யெழுதியனுப்ப ஆரம்பித்தான். அலாவுடீனை விசுவாச காதகனென்றும், பரதாரகமனப் பிரயனென்றும், ராஜதர்மமாய் யுத்தஞ்செய்யத் தெரியாதவனென்றும், சித்தூரைப் பிடிக்கமாட்டாமல் தோற்றோடிப்போன சூரனென்றும், அவன் சூரனாயிருப்பது உண்மையாயின், தன் பராக்கிரமத்தை யெல்லாம் இழந்து ஒரு பெண்ணின் ஸாமர்த்தியத்தினால் ஏமாந்துபோனது பெரிதன்று, ஆண் சிங்கங்களாகிய சித்தூரார்களின் புஜபல பராக்கிரமத்தைக் காணவேண்டுமென்றும் ஆண்பிள்ளைத் தனமிருந்தால் தன்னால் இயன்றமட்டும் இன்னொரு முறை வந்து பார்க்கலாமென்றும், ராஜபுத்திரர்களெல்லாரும் யுத்தஞ்செய்ய ஆவலோடு காத்திருக்கிறார்களென்றும் பலவாறாக தூஷித்து அவனைத்துரும்பாக நினைத்து அவனுக்குக் கடிதங்களை அனுப்பினான். அன்றியும் ராணா சித்தூர்க் கோட்டையிலுள்ள பெரிய முற்றத்தின் நடுவில் ஒரு கருங்கற் கம்பத்தை நாட்டி அதில்:—"மோகல் ஜாதியாரை ஒரு பொழுதும் நீங்கள் நம்பவேண்டாம்; அவர்கள் செய்யும் விசுவாஸகாதகத்தை நீங்கள் நேரில் அனுபவித்திருக்கிறீர்கள்" என்று எழுத்துகள் வெட்டுவித்தான்.

பத்மினியால் தான் வஞ்சிக்கப்பட்டதையும், ராணா ஓயாமல் தன்னை நிந்திப்பதையுங் கண்டு அலாவுடீனுக்குண்டான துக்கத்திற் களவில்லை. சக்கிரவர்த்தியாகிய தனக்கெதிராக ஓர் சிற்றரசனை சௌரியங் கொண்டாடும்படி விட்டிருப்பது தன் கௌரவத்திற் கேலாதென்றும், என்னபாடுபட்டாவது சித்தூரைச் சுட்டுக் கொட்டை பரப்பவேண்டுமென்றும் அலாவுடீன் நிச்சயித்தான். ஆதலினால் அவன் அதற்கென்று பீரங்கிகளையும், யந்திரங்களையும் புதிதாகச் செய்வித்தான். அதிகமாகப் படைகளைச் சேர்த்தான். இவ்வாறு எல்லாஞ் சேர்ந்த பின்பு முன்சென்றதினும் மிகப் பெரிதான படையோடு சித்தூருக்குச் சென்றான். அவன் இந்த முறை ஜயம் தனக்கேயுண்டாகுமென்று நம்பினான். பீரங்கிகளை நாட்டி நன்றாய் இலக்கு வைத்துச் சுடுதற்பொருட்டு உயரமான மேடைகளை யெழுப்பினான். சித்தூரார் அதனினும் பலமாக முற்றுகையைத் தாக்க முயன்றார்கள். கடைசியில் சண்டைக் காரம்பிக்கவே இரண்டு கக்ஷிக்காரர்களுக்கும் அதிகமான நஷ்டமுண்டாயிற்று. இதற்கு முன்னெல்லாம் அலாவுடீனுக்கு பத்மினியினிடத்துள்ள மையலால் அவளுடைய ஜனங்களுக்குத் தீங்கு விளைப்பது கூடாதென்று, உபாயமாய்த் தன் பெருமையைக் காட்டி அவளைப் பெறவிரும்பிக் கடிதங்களை யெழுதிக்கொண்டிருந்தான். இப்பொழுது அவன் எண்ணம் முற்றும் மாறி ஊரைக் கொளுத்தி அடியோடு இடித்து மாய்த்து விடவேண்டுமென்று நிச்சயித்தான். அலாவுடீன் ஓயாமல் அலைந்து தன் சேனைகளை யெல்லாம் தூண்டி அக்கோட்டையை பலமாக முற்றுகைப் போடும்படி அவர்களை உற்சாகப்படுத்தினான். அரசன் சத்துருக்களை உள்ளே அணுகவொட்டாதபடி கோட்டையின் அலங்கத்தின்மேல் சுற்றிச் சுற்றி வந்து சேனைகளைத் தன் தைரியப்படுத்தி, கோட்டையில் பழுதான விடங்களையெல்லாம் பலப்படுத்தினான்.

இவ்வாறாகச் சிறிதுகாலம் கோட்டை ராணாவினால் பலமாகக் காப்பாற்றப்பட்டது. அவன் என்னபாடுபட்டும் அந்தக்கோட்டையின் அரணுக்குஆதாரமான அதன் தெற்கேயுள்ள ஒரு குன்று அலாவுடீன் கைவசமாகவே சித்தூரார் ஆசைகுலைந்து போயிற்று.

பீமஸிங்கு என்னும் ராணாவும் அவனது கற்புடைப் பெருந்தேவியான பத்மினியும் அலாவுடீன் கோட்டைக்குள்ளே புகுந்து தாங்கள் இவ்வளவு காலமாகப் பெருமையாக வாழ்ந்த வாழ்வை அழித்து மான பங்கப்படுத்துவானே யென்றும், ராஜபுத்திரர் மானம் போய்விடுமே யென்றும் சிந்தை சோர்ந்தார்கள்.

இவ்வாறு துன்பக்கடலில் ஆழ்ந்திருந்த ராணா பீமஸிங்கு, தன்குமாரர்கள் பன்னிருவருள் தன்குலம் விளங்குதற்பொருட்டு ஒருவனையாவது காப்பாற்றுவது முறையென்றும், அதற்கேற்ற உபாயத்தைக் கையாடவேண்டுமென்றும் உறக்கமின்றி அதுவே விசாரமாயிருக்கையில் நடுநிசியில் "எனக்குப் பசிக்கிறது" என்று ஓர்குரல் கேட்டது. அந்தக்குரல் எங்கிருந்து வந்ததென்று அறியும்படி பீமஸிங்கு விழித்துப்பார்க்கையில் அவ்வாறு சொல்லியது சித்தூர் கோட்டைக்கு இஷ்ட தேவதையாகிய மஹாகாளியென்று கண்டு, "தாயே! எனது பந்து வர்க்கத்தில் எண்ணாயிரவரை நீ விழுங்கியும் உன்பசி அடங்கவில்லையோ," என்றான். அதற்கு அந்தத்தேவதை "ஆம், அடங்கவில்லை தான்; முடியுடை மன்னர் பன்னிருவர் சித்தூரைக் காப்பாற்றுதற் பொருட்டுப் போரில் மாண்டு எனக்குப்பலியானாலன்றி இந்தச் சித்தூர் உனது மரபினர்க்குரிய தாகாது" என்று சொல்லிற்று.

பீமஸிங்கு இதைக் கண்ணும் கண்ணீருமாக நின்று தன்காதல் மனையாளோடு சொல்ல, அம்மடமாது அரசனுக்கு அல்லும் பகலுமாயுள்ள பெருங் கவலையினால் இவ்வாறு சித்தப்பிரமமுண்டா யிருப்பினுங்

கூடுமென்று நினைத்து, இதை அமைச்சர் முதலானோரையழைத்து அவர்களோடு சொல்லி அறிந்துகொள்வது நலமென்றான். பீமஸிங்கு பத்மினி சொன்னது நல்லது தான் என்று மந்திரி முதலானோரையழைத்துக் கொண்டு மறுநாள் இரவில் அவ்விடத்திற்குச் செல்ல அந்தமஹாகாளி அன்று அவர்கள் அத்தனை பேருக்கும் எதிரே தோன்றி "ஆயிரக்கணக்கானவர்கள் எனக்கு பலியாகி என்னபயன்; அவர்களெல்லாம் எனக்குப் பதருக்குச் சமானம்; நாளொன்றுக்கு ஒவ்வொரு குமாரனுக்கு முடிசூட்டி அவனுக்கு வெள்ளைவட்டக் குடை, சாமரமுதலிய எல்லா உபசாரங்களையும் செய்து அவன் மூன்றுநாள் அரசனாக இருந்தபின்பு நாலா நாளில் அவனை யுத்தத்திற்கு அனுப்பவேண்டும்; அப்படியே பன்னிரண்டு அரசர்கள் போரில்மாண்ட பின்புதான் என் அடங்காப் பசியாறி சித்தூர் ராச்சியம் உங்களைவிட்டு அகலாது" என்று முன்போலவே மீண்டும் சொல்லியது.

இது சங்கதி உண்மைதான் என்று தெரிந்துகொண்டதின் பின்பு அதிசூரர்களான பத்மினியின் குமாரர்கள் பன்னிருவரும் அக்கணமே அதற்குச் சம்மதித்து "நான்முன்னே நான்முன்னே" என்று வீராவேசங்கொண்டு காளிக்குப் பலியாகி சித்தூர் அரசாங்கத்தை நிலை நிறுத்துதற் பொருட்டு ஒருவரையொருவர் முந்தப் பார்த்தார்கள். அவர்களுள் உருசி என்பவன் முற்பிறந்தவனாதல் பற்றி அவன் விருப்பத்தின்படியே அவனுக்குமுடி சூட்டி; சத்திரசாமர முதலிய அரசர்க்குரிய மரியாதைகளுள் ஒன்றேனுங் குறைவில்லாமல் மூன்றுநாள் அரசிருந்து நான்காவது நாள் ஆயுதபாணியாக அந்தக்கோட்டையினின்று சிங்கம் போல் வெளிப்பட்டுப் பகைவரோடு போர்புரிந்து மாண்டுகாளிக்குப் பலியானான். இவ்வாறேமற்றக் குமாரர்களும் ஜேஷ்டக் கிரமப்படி ஒவ்வொருவராகப் பட்டமாண்டு மாண்டு கொண்டிருந்தார்கள். இவ்வண்ணம் எல்லாருமே மாண்டுபோய்க் கடைப்பிள்ளையாகிய எஜஸ்வி என்பவன் ஒருவன் தான் மிச்சமிருந்தான். அஞ்சாமையையே தனக்கு அணியாகப்பூண்ட பீமஸிங்கு அந்தப்பிள்ளையையும் அனுப்பினால் பின்பு பிதிருக்களுக்கு எள்ளும் தண்ணீரும் வார்க்க ஒருவருமின்றி வங்கிசம் விளங்காமற் போகுமேயென்று சீர்தூக்கிப் பார்த்து அவனுக்காகத்தானே போவது நலமென்று நிச்சயித்தான்.

தங்களுக்கு அபஜயமுண்டாவது நிச்சயமென்று காண்பராயின் ராஜபுத்திரர்கள் உடனே தங்கள் மனைவி முதலானோரையெல்லாம்பெருந்தீயை வளர்த்து அதிற் புகுத்திவிட்டுத் தாங்கள் வெளிக்கிளம்பி ஒருவரேனும்மிச்சமில்லாதபடி பிராணன் போகுமளவும் யுத்தஞ் செய்வார்கள். தாங்கள் மறித்தபின்பு தங்கள் மனைவி முதலானஸ்திரீகள் பகைவர் கையிலகப்பட்டு மானபங்கப்படுவதிலும் பிராணனை விடுவதே நலமென்பது அவர்கள் கொள்கை. இதுவிஷயத்தில் பத்மினி சித்தூரிலுள்ள பெண்களையெல்லாம் நடத்துவதில் முன்னிற்பவளானாள்.

சித்தூர் மலையில் ஓர்பெருங் குகையுண்டு, அதில் கட்டைகளை மலைபோற் கொண்டுவந்து தள்ளித் தீயிட்டார்கள். சித்தூர் வீரர்கள் அத்தனைபேரும் தங்கள் மனைவிமக்களின் கற்புடைமை பகைவர்களால் அழிந்து விடாதிருத்தற் பொருட்டு அவர்களை ஆயிரக்கணக்காக நடத்திக்கொண்டு வந்தார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து ஊர்வலம் வருகையில் பத்தினிக்கடவுளாகிய பத்மினி தேவி அவர்களை நடத்திவந்து அத்தனைபேரும் அந்தக்குகைக்குள்ளே குதிக்குமளவும் காத்திருந்து தனது கீர்த்தியை நிலைநாட்டி காமப்பேய் கொண்டாடிய பாதகனாகிய அலாவுடீன்கில்ஜி ஆசையழியத் தீக் குதித்தாள். அதில் இறங்கிய பெண்களில் ஒருவரேனும் தங்களுக்கு அவ்வாறான கதி நேர்ந்ததை நினைத்துச் சிறிதாயினும் துக்கப்படவில்லை.

மறுநாள் பத்மினியின் கடைசிமகனை பீமஸிங்கும் அவனுடைய வீரர்களும் சில சூரர்களோடு தந்திரமாக அனுப்ப அவர்களோடு அவன் பகைவர் சேனாஸமுத்திரத்தைத் தனக்குச் சிறிதும் ஊறுபாடின்றிக் கடந்து தனக்கு நட்பாயுள்ள ஓர் அரசன் கோட்டைக்குள்ளே சென்று வசித்துக்கொண்டிருந்தான். அவனது சந்ததியார்கள் பின்னிட்ட காலத்தில் மொகலாயரோடு போர்புரிந்து வெற்றி பெற்று அத்தேசத்தைப் பிடித்துக்கொண்டு மஹாகாளி சொன்ன வண்ணம் அவர் வம்சத்தார் இன்றளவும் அதை ஆண்டுவருகிறார்கள். பின்பு ராணா மஞ்சள் ஆடை தரித்து சித்தூரிலுள்ள போர்வீரர்களெல்லாந் தன்னைச்சூழ ஆயுதம் பூண்டு, உயிரைத் துரும்பாக வெண்ணி அந்தக் கோட்டையின் வாசல்களையெல்லாம் திறந்துவிட்டு வீரசிங்கங்கள்போல வெளிக்கிளம்பி பகைவர் அதிகமாக விருந்த இடங்கள்தேடி அவர்களோடு அகோரமாகத் தங்கள் பிராணனுள்ளளவும் யுத்தஞ் செய்தார்கள்.

அலாவுடீன் கோட்டைக்குள்ளே செல்லுகையில், பத்மினி முதலான ஸ்திரீகளைவாய் மடுத்ததீ எரிந்துகொண்டு இருப்பதையும் சித்தூர் வீரர்களில் அளவற்றவர்களின் உடலம் எங்குங்கிடப் பதையும் அங்கே எல்லாம் பாழ்த்திருப்பதையுங் கண்டு, தான் நெடுங்காலமாகக் கொண்டிருந்த ஆசையும், அதற்காக உறக்கமின்றிப்பட்ட பாடும், அளவற்ற பொருட்குவையும், மானமும், போனதைப்பற்றி உள்ளநாளுள்ளமட்டும் பட்ட மனோ விசாரத்திற்களவில்லை.



அந்நாள் முதற்கொண்டு சித்தூரில் இந்தப் பெண்கள் விழுந்து மரித்தகுகையை அதிபரிசுத்தமான விடமென்று இன்னமும் நினைக்கிறார்கள்.

இது வேடிக்கைக்காக எழுதப்பட்ட கட்டுக்கதையன்று. இந்த விருத்தாந்தங்களை யெல்லாம் நேரே கண்ட இந்துக்களும், மகமதியர்களும் நடந்ததை நடந்தவண்ணம் எழுதிவைத்திருக்கிறார்கள். ஐரோப்பிய ஹிதிகாச வித்துவான்களும் இது நடந்தது உண்மையென்று எழுதியிருக்கிறார்கள். இந்தக்கதை பலரால் வெவ்வேறு விதமாகச் சொல்லப்படினும் இறுதியில் விஷயம் ஒன்றாகத்தா னிருக்கும். சித்தூரை மகம்மதியர் பிடித்துக்கொண்டதும், அந்த யுத்தத்தில் அதன் அரசனான ராணா இறந்ததும் நிச்சயமென்பது உலகமெங்கும் அறிந்ததே யாதலால் இந்தக் கதை முற்றும் உண்மையேயாம்.

அ. ஸ்ரீ. வேங்கடாசாரியார்.

## ஆபத்துக்கிடமான அபவாதம்
### அல்லது
## கமலாம்பாள் சரித்திரம்.

### XI.

இவ்வித கோலாகலத்துடன் பேயாண்டித்தேவனைப் பிடித்துவரும்பொழுது எந்த ஊர்ச்சிறைச்சாலையில் அவனை பத்திரப்படுத்துகிறது என்பதைப்பற்றி ஒரு ஆலோசனை நடந்தது. சப்மாஜிஸ்திரேட்டு வைத்தியநாதய்யர் சிறுகுளத்திலேயே அவனை அடைத்துவிடலாமென்று அபிப்பிராயம் சொன்னார். முத்துஸ்வாமி அய்யர் அது அபாயத்துக்கிடமாகும்: அவனைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ராட்சதர்கள்; அவர்கள் அவ்வளவு சமீபத்திலிருக்கும்போது பேயாண்டியை வைத்துக்காப்பாற்றுவது அசாத்தியம் என்று எடுத்துக் காட்டியதின்மேல் மதுரைக்கே அவனை அனுப்புவது என்று தீர்மானமாயிற்று. ஆனால் போகும்பொழுது சிறுகுளம் மார்க்கமாகப்போகவேண்டியிருந்தது. அவ்வூருக்கு ஒரு மைலுக்கப்பால் பேயாண்டித்தேவன் வருகிறான் என்ற அரவம் உண்டானவுடனேயே ஆண் பெண் அடங்கலும் அவனை எதிர்கொள்ளக்கிளம்பிவிட்டது. சுப்பு எப்பொழுதுமே அழுத்தந்திருத்தமாகம் பேசுகிறவளாய்விட்டதே. இப்பொழுது அவசரத்தில் கேட்கவேண்டுமா? "ரேம்பு பேயாயியேவனைப் பியிச்சுக்கிண்டுவய்யா யா, யா, யா," என்றிப்படி 'பேயாண்டித் தேவனைப்பிடித்துக்கொண்டு வருகிறார்கள் வா வா வா' என்பதையெல்லாம் யகரவர்க்கத்திலே தானே பேசித்தீர்த்துவிட்டாள். ஸ்திரீகளுக்கு மாப்பிள்ளை, பெண்வயிற்றுப்பேரன் பேரத்தி என்றால் என்ன பிரியம் இருக்குமோ அவ்வளவு பிரியம் சுப்புவுக்கு 'ய' என்ற சப்தத்தின்மேல். அரிச்சுவடியில் வேறெந்த அட்சரமும் அவளுக்கு லட்சியமில்லை. சுப்பு இப்படிப் பிரசங்கம் செய்யும்போது வேம்பு புடவை உடுத்திக்கொண்டிருந்தவள் உடனே 'கிசம்மாவா! பேயாண்டிதேவனையா!! பிடிச்சுட்டாளா!!! இந்தோ நானும் வந்துவிட்டேன் டீம்மா' என, சுப்பு 'நீ யா (வா) நான் போயேன்' என்று ஓட ஆரம்பித்தாள். அதற்குள் வேம்பு 'அடெயெழவே நானும் வந்துவிட்டேண்டிம்மா இந்தா ஆச்சிரிம்மா (ஆய்விட்டதடியம்மா) ஒரு சித்துசித்திக்கிறதுக்கு எத்தன நாழிசெல்லும்' என்று சொல்லி அவசரத்தில் ரவிக்கைகூடப் போட்டுக்கொள்ள சரிப்படாமல் மேலாடையிருக்கவேண்டிய பக்கம் 'கொசாமும்' கொசாம் இருக்கவேண்டியபக்கத்தில் மேலாடையும் சுற்றிக்கொண்டு புடவையை உடுத்தினதும் உடுத்தாதுமாய் அலங்கோலத்துடன் வெளியே புறப்பட்டுவிட்டாள். அடுத்தகத்து நாகு தன் புருஷனுக்குப் பழையது போட்டுக்கொண்டிருந்தாள். சுப்புவும் வேம்புவும் போய் ஒருகுரல் கூப்பிட்டார்கள். கூப்பிட்டது தான் தாமதம் நாகு தன் அகமுடையானைப் பார்த்து 'மோரு கச்சிட்டியிலிருக்கு குழம்பு அடுப்பிலிருக்கு எடுத்து வாத்துக்கட்டும், நான் போரேன்' என்று சொல்லி சாதக் கற்சட்டியை மூடாமல் அப்படித்தானே வைத்துவிட்டு பத்துக்கையைக் கூட அலம்பாமல் அப்படியே புறப்பட்டு விட்டாள். அவள் புருஷன் 'அடியே போட்டுவிட்டுப் போடி அப்புறம் பார்த்துக்கொள்' என்று அரட்ட, அவள் 'இதுக்கு வர்ர கோபத்தைப்பார் நன்னாருக்கு' என்று மரியாதையாய்ச் சொல்லிவிட்டு (அகமுடையானுக்குப் பயப்பட அதுதானா சமயம்!) ஓரே ஓட்டமாய் ஓடிவிட்டாள். அவள் புருஷனுக்கு வந்தகோபத்துக்கு அளவுசங்கையில்லை. 'மொட்டைமுண்டைவரட்டும் சொல்லுகிறேன்: காலைமுறித்துப் போடுகிறேன். சாதத்தை எறிந்துவிட்டுப் போய்விடுகிறேன் பார்' என்று கோபித்துக்கொண்டான். சாதத்தை எறிந்துவிட்டால் யாருக்குநஷ்டம் என்பது படவில்லை. அப்படி எறியவும் மனதுவரவில்லை. 'வரட்டும் சொல்லுகிறேன்' என்று சொல்லிக்கொண்டே தெய்வமேயென்று ஒருதரம் வைகிறது ஒருபிடி சாப்பிடுகிறது இப்படியாக சாப்பிட்டுவிட்டுப்போய்ச் சேர்ந்தான். இவ்விதமாக ஒவ்வொருவீட்டிலும் போட்டது போட்டபடியே சுப்பு, சேஷி, வேம்பு, நாகு, அம்மாப்பொண்ணு, அலமேலு, மீனாட்சி, நாணி, சிட்டம்மா, எச்சி, பாப்பு (நம்முடைய ஸ்திரீகள் பெயர்கள்தான் எவ்வளவு அழகாயிருக்கின்றன!) முதலிய எல்லாப்பெண்டுகளும் பட்டாளம் பட்டாளமாகப்புறப்பட்டு விட்டார்கள். பாப்பாபட்டியகத்து வெட்டசிவான் என்று பட்டப்பெயர்பெற்ற நாணிப்பாட்டியோ எல்லாருக்கும் முன்னமே முதல்பாலத்துக்கே போய்க்காத்துக்கொண்டிருந்தாள்;

பேயாண்டித்தேவனும் வந்து சேர்ந்தான். அவன் வருகையென்ன திருடனைக் கச்சேரிக்குப் பிடித்துக் கொண்டுபோவது போலவா இருந்தது. சட்டை தொப்பி தரித்த போலீஸ் உத்தியோகஸ்தர்கள் பல்லக்குச்சுமக்க உருவின கத்தியும் கையுமாய் சிப்பாய்கள் முன்னே செல்ல, முத்துஸ்வாமியய்யர் முதலிய மகா ஜனங்கள் பின்னே செல்ல, ஸ்திரீகள் 'கட்டேலே போவான் மூஞ்சியைப்பாரடி, கரியாப்போவான், மீசையும் அவனும்' என்று வழிநெடுகப் பல்லாண்டு பாட இவ்வளவு கோலாகலத்துடன்ராஜகம்பீர வீரியத்தாண்டசங்கிலிவீரப்பபேயாண்டித்தேவர்அவர்கள் (வண்டிக்கூடாகிய) பல்லக்கின்மேல் கம்பீரமாய்உட்கார்ந்துகஞ்சாபுகையிலை முதலியவாசனைதிரவியசஹிதம் தாம்பூலந் தரித்துக்கொண்டும் பவளவர்ணமான தனது திவ்யமங்கள எச்சிலை கத்திபிடித்த யுத்தவீரர்கள்மேல் தாராளமாய் சமர்ப்பித்துக் கொண்டும் ஆடிப்பாடித் தாளம்போட்டு அட்டகாசம் செய்து கொண்டும் அலங்காரமாய்ப் பவனிவர அந்தமகாபுருஷனுடைய திவ்யசேவையை அடையும்பொருட்டு ஆயிரக்கணக்கான ஜனங்கள் மதுரையில் மீனாட்சியம்மனுடைய மூனைக்கொட்டு உற்சவத்தில் பத்தாவது திருநாள் அம்மன் கனகதண்டிகையில் எழுந்தருளி வரும்காட்சியைக்காண ஒருவர்மேல் ஒருவர் விழுவதுபோல் விழுந்து தரிசனம்செய்து கிருதார்த்தர்களானார்கள். இவர்கள் எல்லாரிலும் விசேஷபாக்கியத்தைப்பெற்றவள்குப்பிப்பாட்டியென்றஓர்மொட்டைச்சி. அவள் பேயாண்டித்தேவனைக் காணவேண்டிய ஆசாவேசத்தில் முட்டாக்கு பின்னே விழ மேலாக்கு முன்னேவிழ ஸ்திரீபுருஷன் என்ற பேதத்தை மறந்து பிராமணன்சூத்திரன் என்றபேதத்தை துறந்துகூட்டத்திற்குநடுவேபாய்ந்துபேயாண்டித்தேவனுக்கு சமீபத்தில் போகவே, அவளுடைய அற்புத பக்தியைக்கண்டு ஆச்சரியமடைந்த அத்தேவன் சேகரித்து வைத்திருந்த தனது திருவாயினமிர்தத்தை அவள்மேல் அன்புடன் புரோட்சிக்க வெள்ளிமயமான அவளுடைய சிரரோமங்கள் அனைத்தும் அரைக்கணத்தில் ரத்னமயமாய்ப்பிரகாசித்த அற்புதத்தைக்கண்ட ஆங்குள்ளோர் அனைவரும் அடக்கவொண்ணாது ஆர்ப்பரித்து நகைத்தனர்கள். அதாவது (சாதாரணதமிழில்) திருட்டுப்பேயாண்டி குப்பிப்பாட்டியின் மொட்டைத்தலையில் காவியேறிய தனது எச்சிலை உமிய அத்தலையிலுள்ள வெள்ளைமயிர்கள் எல்லாம் சாயமேறிச் சிவந்த நிறமாயின: இந்த வேடிக்கையைக்கண்டு எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். உடனே குப்பிப் பாட்டி தன்னதிர்ஷ்டத்தைக்கண்டு சந்தோஷிப்பதை விட்டு'கட்டேலேபோவே, நீ நாசமாஅப்போயிட கரியாப்போக' என்றிவ்வாறுகர்ச்சிக்கத்தலைப்பட்டாள். இவ்வித திருக்கூத்துகளுடன் பேயாண்டியை மதுரைக்கு உபசரித்து அழைத்துச்சென்று திரிபுரத்துள் ஒருபுரம்போன்றகற்கோட்டை யொன்றில் காட்டில் திரியுஞ்சிங்கத்தைக்கூட்டிலடைத்தாற்போல அடைத்து அல்லும்பகலும் காலோயாது கண்மூடாது வாய்திறவாது காவல்காக்கும்படி தக்க காவலாளர்களை ஏற்படுத்தினார்கள்.

முத்துஸ்வாமி அய்யர் தானென்றும் தம்பியென்றும்பேதம்பாராமல் தன்கைப்பணத்தையே செலவழித்து தன்பெயராலேயே பிரியாதுகொடுத்து வேண்டிய ஏற்பாடுகளை நடத்திவிட்டு ஊருக்குத்திரும்பினார். நல்லகாரியம் ஒன்றைமுடித்ததில் அவருக்கு உற்சாகம் கொஞ்ச மதிகமாயிருந்தது. வீட்டுவாசலுக்கு வந்தவுடன் கலீர் கலீர் என்று சப்தம்செய்யும் சதங்கையணிந்த பாராசாரிக் காளைகள் கட்டிய தனது பெட்டிவண்டியினின்றும் கீழேயிறங்கினார். தலையில் சரிகையங்கவஸ்திரத்தைக் குசால்கட்டு கட்டிக்கொண்டு கையில் வெள்ளிப்பூண்பிடித்த தடியேந்தி காலில்ஜோடுமாட்டிக்கொண்டு உள்ளேபோக அவர் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்திருந்தசிலர் குபீரென எழுந்து அவரை வந்தனம்செய்தார்கள். இப்படி அவர்வரும்பொழுது பொன்னம்மாள் தன்னகத்து வாசலில்நின்றுகொண்டிருந்தாள். அவர் வந்தவருகையையும் அவருக்கு நடந்த மரியாதையையும் பார்த்து அவளுக்குஉண்டான பொறாமைக்கு அளவில்லை. 'சூள்' கொட்டிக்கொண்டு "இத்தனைவேண்டியிருக்கிறதா, இது எத்தனை நாள் வாழ்வோ, எப்படியோ; ஓஹோ என்று இருந்தவர்கள் எல்லாம் எப்படியோபோய்விட்டார்ப்ள். என்று முணுமுணுத்துக்கொண்டு உள்ளேசென்றாள். அப்போது சுப்பிரமணியய்யர் கூடத்தில் உட்கார்ந்திருந்தார். இவள் முணுமுணுப்பதைப் பார்த்து 'என்னடியம்மா எனக்குச் சொல்லப்படாதா' என்று அவர் செல்வமாய்க்கேட்க, அவள் ஆமா, என்னமோ சொன்னா சொரைக்காய்க்கு உப்பில்லேன்று; அவாள் வந்திருக்கான், அய்யரவாள் ஓங்கண்ணாவாள் முத்தண்ணாவாள் ஆனையோடெ குதிரையோடெ. என்னமோ அற்பங்கள் தலைகீழே விழுகிறதுகள். ஜோடென்ன கொடையென்ன தடியென்ன, ஒன்றும்பார்க்கப்பிடல்லை, நடக்கட்டும், அதிசயமா கள்ளனைப்பிடிச் சுட்டாரில்லையோ" என்றாள். அவளுக்கு பொறாமை மும்முரத்தில் நகைபோன வருத்தம் கூடப்போய்விட்டது.

மேலும் அன்றுகாலமே ஆற்றங்கரையில் கூடிய வம்பர் மகாசபையில் பொன்னம்மாளின் பொறாமையை அதிகரிக்கத்தக்க சில தீர்மானங்கள் செய்யப்பட்டிருந்தன. ஆற்றங்கரையில் கூட அந்தசபை கூடுமோ என்று சிலருக்கு சந்தேகமுண்டாகலாம். நெருப்பும் வைக்கோலும் சேர்ந்தால் தீ பற்றுவதற்கு



யாரைக் கேட்கவேண்டும். அந்த நெருப்பு சந்தர்ப்பமும் முகூர்த்தமும் பார்த்தாபற்றுகிறது. (இவைகளுக்கெல்லாம் தடைவலக்கினம்தான்விதி.) அதுபோல் சுப்பு கூட்டாளி இரண்டுபேர் எங்கேசேர்ந்தாலும்சரி எப்பொழுதுசேர்ந்தாலும்சரி அது வம்பர்மகாசபைதான். ஆற்றங்கரையில் புடவை தோய்த்துக்கொண்டே சுப்பம்மாள் முத்துஸ்வாமியய்யர் பேயாண்டித்தேவனைப்பிடித்த விர்த்தாந்தத்தை சவிஸ்தாரமாய்ச் சொல்லியபிறகு,'நீஆயிய (ர) ந்தாஞ்சொன்னேம்மா என்னன்னாலும் எங்கமுத்துச்சாமிக்குச் சமானம்வயாது.எங்கேதான்போகட்டுமே, அடிடில்லிக்குத்தான்போகட்டுமே,ஜெட்ச்சுக்குண்டுவேந்துடுவேன்.போனகாயியம் இல்லேன்னுவய்ய (வருகிற) வய(ழ)க்கம் கிடையாது. சுப்பியமணியனும் கெட்டிக்காயன்தான்: என்னன்னாலும் அவனுக்கு அவ்வளவு சாமய்(ர்)த்தியம் வயாது' என்று தனது அபிப்பிராயத்தை வெளியிட்டனள். வேம்பு 'சுப்பரமணியன் யார்வழிக்குப் போரான் எவர் வழிக்குப்போரான் அப்பாவி அவனுண்டு பொன்னம்மா உண்டு தெய்வமேன்று இருக்கான்' என்று நீட்டிச்சொன்னாள். பொன்னம்மாள் இவ்வளவுக்கும் அங்கேயே இருக்கிறாள். அவளுடைய பொறாமையைத் தூண்ட வேண்டுமென்று தான் இந்த சம்பாஷணையே ஆரம்பிக்கப்பட்டது. வேம்புபேசி முடித்தவுடன் பொன்னம்மாள் கம்பீரமாய் விழித்துப் பார்த்துக்கொண்டு 'தலையிருக்கவாலாடணுமா. ஒரு ஊருக்கு ரெண்டு பைத்தியாரன் வேணுமான்னுவெறுன்னே இருந்தாக்கா 'சுப்பிரமணியனுக்கு ஒன்றும் தெரியாது அப்பாவி, எல்லாம் அவர் அண்ணாதான் சாதிக்கிறு' என்னு இப்படியெல்லாம் சொல்லச்சொல்லியிருக்கா. அப்படித்தான் இருக்கட்டுமே; அதிலென்ன எளப்பம். என்ன இருந்தாலும் அவாள் ஆணும்பெண்ணும் கெட்டிக்காரர்தான். நாங்கள் ஆமடையான் பெண்டாட்டியும் பைத்தியாரர்தானம்மா" என்று வெகுவெறுப்பாய்ச் சொல்லிவிட்டு, வீட்டுக்குப்போக நேரமாய் விட்டபடியால் கட்டிச்சுருட்டிக்கொண்டு கால்நிமிஷமும் தங்காமல் புறப்பட்டுவிட்டாள். ஊரார் முத்துஸ்வாமியய்யரைக் கொண்டாடக்கொண்டாட அவாளுக்குப் பொறாமை யதிகரித்தது. மேலே சொல்லியபடி அவள் சுப்பிரமணிய அய்யருக்குப்பதில் சொல்லவே அவர் 'வந்துவிட்டாரா இங்கேயேயிரு நான்போய் என்ன சமாசாரம் என்று கேட்டு வருகிறேன்' என்று புறப்படவே, அவள் 'எல்லாம் போய்த்தானிருக்கு; வரவில்லை வரவில்லையென்று ரொம்ப தாபந்தப்படறா! விழுந்தடிச்சுக்குண்டு இப்பவே ஓடவேண்டாம்: எல்லாம் சாங்காலம்போயிக்கலாம், என்றுசொல்லி அவரருகிலிருந்து சல்லாபங்கள் செய்து போகாமல் நிறுத்திவிட்டாள்.

இதற்குள்ளாக முத்துஸ்வாமியய்யரிடம் ஊரார் அனேகர்போய் பேயாண்டித் தேவனுடைய நடத்தை, அவனைச் சிறைப்படுத்தியது முதலியவிஷயங்களைப்பற்றி விசாரிக்க அவரும் சவிஸ்த்தாரமாய்ச்சொல்லிக்கொண்டிருந்தார். சாயங்காலம் பொன்னம்மாளுடைய அனுமதியின்மேல் சுப்பிரமணியய்யர் சாவகாசமாய்வந்தார். முத்துஸ்வாமிஅய்யர் சுபாவத்தில் சர்வ இஷ்டர். ஊரார் வந்துவிசாரிக்கிறபோது தன் தம்பி தன்னை முன்னமேயேவந்து விசாரிக்கவில்லை என்பதைப்பற்றி அவருக்கு அந்தரங்கத்தில் கோபம்; ஆகையால் சுப்பிரமணியய்யர் போனபொழுது அவர் அவரை ஒன்றும்கவனிக்கவில்லை: முகம்கொடுத்துபேசவில்லை. இவராவது சிறிதுமலிந்தாரா? அவருக்கு இவர் தம்பியல்லவோ; சிறிதுநேரம் இருந்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் சட்டென்று அவர்வெளியே போய்விட்டார். அதைச்சமனித்த முத்துஸ்வாமியய்யருக்கு 'இவனுக்காக நாம் இவ்வளவுபாடுபடுகிறது.நம்மை இவன் இவ்வளவு அலட்சியம் பண்ணுகிறதா. இதுவரையில் இப்படிக்காணோமே' என்று மனதில் கோபம் உண்டாயிற்று. சுப்பிரமணியய்யர் வீட்டுக்கு வந்தவுடன் பொன்னம்மாளுடன் நடந்த சங்கதியைச் சொல்ல அவள் 'உங்களுக்கு வேணும், நன்னாவேணும்' என்று சொல்லி முகத்திலிடித்தாள். இந்த அற்ப சங்கதி சகோதரர்களுக்குள் பரஸ்பர அருவருப்புக்குச் சிறிது இடங்கொடுத்தது.

சிலநாளைக்குப்பிறகு சுப்பிரமணியய்யருடைய கிரகத்துக்கு ஒருபையன்வந்தான். அவனுடையநறுக்கு மீசையும் கோரக்குடுமியும் கிருக் சடாவும், அவனுடைய ஷோக் நடையும் அவன்போக்கிரியென்று யாரும்மதிக்கும்படி யிருந்தன. அவன்குணம் அவனுடையநடைஉடை பாவனைகளில் எழுதிக்கிடந்தது. பின்னும் ஏதாவது சந்தேகமிருக்குமாயின் ஐந்துநிமிஷம் அவனுடன்பேசினால் எல்லாம் நீங்கிப்போகும். அவனுக்குத்தான் லெட்சுமியைக் கொடுக்கவேண்டுமென்று பொன்னம்மாளுடையகோரிக்கை. அவன் அவளுக்குத்தமையன்பிள்ளை. அவனுக்கு வயது 19, 20 இருக்கலாம். நாலைந்துவருஷமாக'மெட்ரிகுலேஷன்' பரீட்சைக்குப்போய்க்கொண்டிருந்தான். அவன்பெயர்வைத்திநாதன். அவன்வந்த அன்று மத்தியானம் லெட்சுமி சிற்றம்மையகத்துக்கு ஏதோகாரியமாகப் போனாள். அவளைக்கண்டவுடன் பொன்னம்மாள் வைத்திநாதனைப்பார்த்து 'இவள்தாண்டப்பா ஒன் பொண்டாட்டி; மதுரையான் அடிச்சுக்குண்டுபோயிட்டான்.' என்றாள். 'அவள்இப்பொழுதும்என்பெண்டாட்டிதான்எனக்காகப்பேசினவள் என்பெண்டாட்டிதான்.மதுரைப்பயல்கிடக்கிறான்பான்—என்றான். குழந்தை லெட்சுமிக்கு ஒன்றும் சொல்லத்தேர

ன்றவில்லை, போனகாரியத்தைப் பார்த்துக்கொண்டு திரும்பஎத்தனித்தாள். பொன்னம்மாள், 'என்னடி அவன் எவ்வளவு அருமையாக உன்னை விசாரிக்கிறான், நீ அவனை எப்போவந்தே யின்னுகூட விசாரிக்கப்படாதா! வாய்முத்துஉதிந்துபோகாது: வெறுன்னை கேளு, நானிருக்கேன் பொறக்கித்தா' என, அவள் ஒன்றும்சொல்லாமல் வெட்கிநின்றாள். உடனே பொன்னம்மாள் 'அடிஅதிசயமே சிமைச்சரக்கே என்ன ஓவியம் பண்ணிரோளடி இந்தக்குட்டிதான். எங்களையெல்லாம் லெட்சியம்பண்ணி நீபேசுவாயா, என்றுசொல்ல போக்கிரிவைத்திநாதன் 'பொண்டாட்டியல்லவோநீயிருக்கிறபோதுபேசுவளா? நீஅந்தப்பக்கம்போ பேசுவள்' என்று 'எனடியப்படித்தானே என்தங்கமே' என்று சொல்லிக்கொண்டு அவளைநோக்கி எழுந்து சென்றான். லெட்சுமியோ உடம்புநடுங்கிபயந்து தன்னகத்துக்குஓடிவந்தாள். அங்கே அப்பொழுதுதான் அவள் தகப்பனார் தூங்கி யெழுந்தசமயம், ஓடிவருவதைக்கண்டு அவர்என்னடி யென்றுகேட்க அவள் ஒன்றுமில்லையப்பா என்றாள். மறுபடியும்அவர் 'தேம்பிஅழுகிறாயேசமாச்சாரம்என்னடி' என்று அழுத்திக் கேட்க அவள் நடந்தசங்கதியைச்சொன்னாள். அதற்குள் கமலாம்பாளும் அங்கேவந்தாள். உடனே அவளைப்பார்த்து முத்துஸ்வாமியய்யர் 'உனக்கு ஏதாவது புத்தியிருக்கிறதா அவளைநீ ஏன் அவர்கள்வீட்டுக்குப் போகச்சொன்னாய்?' என்றுகேட்க, அதற்கு கமலாம்பாள் காரியம் அற்பகாரியம்தானே போய்விட்டு ஒரு எட்டில்வந்துவிடுவாள் என்றுபோகச்சொன்னேன். என்மேல்தப்பிதந்தான்: நான்சொல்லியிருக்கப் படாது என்றாள். முத்துஸ்வாமியய்யர்பெண்ணைப்பார்த்து அவள்வீட்டுக்குப்போகிறபோது என்னைக்கேட்டுக்கொண்டாபோனாய்: போ அந்தப்பக்கம், என்னெதிரே அழாதேபோஎன்று அதட்டிச்சொன்னார் அந்தக்குழந்தைபாபம்அழுதுகொண்டுஉள்ளேபோய்விட்டது அப்பொழுது இரண்டாங்கட்டில் பொன்னு என்ற ஒருகைம்பெண் தோசைக்கரைத்துக் கொண்டிருந்தாள். அவள் இந்தசங்கதியையெல்லாம் பொன்னம்மாளிடம் ஒன்றுக்குப்பத்தாய் மூட்டிவிட்டாள்.

அன்றுசாயந்திரம் சுப்பிரமணியய்யரும் வைத்திநாதனும் ஆற்றங்கரைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அப்பொழுது முத்துஸ்வாமியய்யர் எதிரேவந்தார், வந்தவர் வைத்திநாதனை எப்பொழுது வந்தாய் என்றுகேட்கவில்லை. அவனைக்கண்டவுடன் அவன் அயோக்கியன் என்று அவருக்குப்பட்டதுமன்றி மத்தியானம் நடந்தசங்கதியும் ஞாபகத்தில்வந்தது அவர் இவனுடன் என்ன பேச்சென்று போய்விட்டார். உடனேவைத்திநாதன் 'என்னவெகு அசட்டையாய்ப்போகிறாரே' என சுப்பிரமணியய்யர் அவர்கள் எல்லாம் பெரியவாள் நம்மைலட்சியம் செய்வாரா என்றார், வைத்திநாதன் அவ்வளவு பெரியவாளா மண்டையில் பு—ரோ அதற்குப் பெரியவரோ? அவர்கையையும் நம்பகையையும் ஒரு மூச்சுப்பார்ப்போமா, பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா! அத்திரிமாகுஎன்று வீரியம்பேசி ஊருக்குப்போவதற்குள் எதாவது திருவிளையாடல் பண்ணிவிட்டுத்தான் போகவேண்டுமென்று தனக்குள்த்தீர்மானம் செய்துகொண்டான்.

(இன்னும்வரும்)

பி. ஆர். சிவசுப்பிரமணியய்யர். பி. ஏ.

---

## இராமனும் அணிலும்.

நேரிசை யாசிரியப்பா.

அயோர்த்தி ஆண்ட தசரதன் புதல்வன்
இராகவன் அழகுறு ஜனகியை மணந்து
கூனியும் சிற்றனையும் கொடுமை யிழைப்பக்
கோலும் துறந்து கானும் புகுந்து
காதலி தன்னுடன் காலம் கழிக்க
அரக்கர் போக்கிய மாய மானினைக்
காதலி காமுறக் கணவன் தொடர்ந்தனன்:
ஏந்திழை தனிப்ப இயற்றியே மாயம்
தசமுகன்‡ தோன்றித்தையல்முன் தவமொடு[1]
தரையுடன் பெயர்த்துத் தடத்தேர் வைத்து
ஏகினன் விரைந்து இலங்கைக் கவளுடன்.
இம்மா யமதை இராகவன் அறிந்து
விம்மா[2] வெதும்பி வனிதையை மீட்க
வானரத்தலைவனை நட்புக் கொண்டு [சீதையை
குரங்கெலாம் விடுத்தனன் கொணர்கெனச்
குணக்கும்[3] தெற்கும் குடக்கும்[4] வடக்கும்.
அணங்குறை இடமதை அநுமனால் அறிந்து
குரங்கெலாம் கூடியே குமுறுகடல் அணையிட
செவ்விய கொம்புத் தேனினைக் கூட்டொடு
மாந்திக்[5] களித்து வானரக் குழுவெலாம்
வெறியும் வீர வேசமும் உற்று
தோள்தனைக் கொட்டி வாலைமேற் றூக்கிக்
கனைகடல் அடங்கவும் இடியே றடங்கவும்
பிராணிகள் நடுங்கவும் பிரயாணி ஒடுங்கவும்
ஆர்த்துக் குதித்து ஆரவா ரித்துப் [டித்து
பொருப்பொடு[6] பொருப்பைநெருப்பெழப்போ
எட்டுத் திக்கினும் கடுகி ஏகியே
பருத்த பொருப்பினைப் பெயர்த்து வந்து
தசமுகற் கபரக் கிரியையில்[7] நாட்டும்
கற்போற் பொருப்பினைப்போட்டன கடலில்
குரங்கடி வயிற்றினில் அணைத்திடும் குட்டியும்
இரங்கியே இராமனுக் கெடுத்ததோர் குன்றினை
இவ்வா றுகப் பலமலை கொணர்ந்து
கௌவைக்[8] கடலிற் கட்டுங்கால் அணையினை
மயிரடர் வாலும் ஒளியுறு கண்ணும்
சாம்பல் நிறமும் வாய்ந்ததோர் அணிலது
கண்ணிற் கண்டது கடலணை யிடுதலை
குரங்குகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்தே.
இன்னதற் கென்றதனை அறிவதற் கவ்வணில்
நறுமணம் பரப்பும் பொன்னிற மடல்கள்
இன்னிசை பாடும் [9]அளிமது உண்ண
விரியப் பெற்று விளக்கா விளங்கும்
கைதை[10] மரங்கள் கரையிரு மருங்கும்[11]
நெருங்கி ஒழுங்கா நிரைக்கப்பெற்ற
திம்புனல்[12] பாயும் செவ்விய ஓடையில்
புன்னை நீழலிலோர் புதுமணற் பரப்பில்
காதலி யுடனுமோர் காதலன் அமர்ந்து
சிற்றுண் டிதனைச் சிரித்துண் ணுங்கால்
அவ்வுண் டிதனை அவர்கை நின்றும்
தட்டிப் பறித்துத் தானும் புசித்துக்
குட்டிக்கு மூட்டும் குரங்கினைக் கண்டு
கட்டிடும் அணைக்குச் காரணம் யாதென
அணிலது கேட்க: 'இராமன் மனைவியை
'இராவணன் கவர்ந்து இலங்கைக் கேகினன்:
'அணங்கினை மீட்கவே அணையினைக் கட்டுதல்'
எனவிடை பகர்ந்திடக் குரங்கும் பரிந்து
மனதினில் இரங்கியே மயங்கித் தியங்கி
கண்ணீர் அருவியாக் கணத்திற் பெருக்கி
"என்னால் இயன்ற உதவியான் புரிகுவன்
"உடலும் உயிரும் ஒருங்கே அளிப்பன்
"கொடியனைக் கொன்று கொடியினை மீட்டும்
"படியினில்[13] நேர்ந்தவிப் பாதகம் தீர்க்க
"அடியனேன் என்னால் ஆய உதவியைப்
"புரியவென் முன்னோர்புரிந்தார்கொல்நற்றவம்"
என்னத் தன்னெஞ் சொடுசொலி அணிலது
தழைத்த ஆக்கமும் கொழுத்த ஊக்கமும்
பழுத்த கருணையும் செழித்த அன்பும்
பூண்டே உறுதியாய்ப் புருடோத் தமன்பால்
பசியும் துயிலும் பாராது நள்ளிருள்
நிசிவேளையிலும் நடுவெயில் அதனிலும்
நெடுவழி நடந்தும் செடிகொடி கடந்தும்
ஏகிப் பலதிசை இளைப்பது வன்றியே
எடுத்து வந்து சிறுத்த கற்களைக்
குவியல் குவியலாக் குவித்தது கரைதனில்;
தாய்முது கேறிய சிறுவணிற் குஞ்சும்
தன்னாருள் சுரந்து கல்வின தோர்கல்.
கனைகடல் ஒலிக்கும் கலாபொரும் அலைக்கும்
மேலெழு திரைக்கும் கொஞ்சமும் அஞ்சாது
குவித்த கற்களைப் போட்டன கடலில்
குரங்குபோற் றானுமோர் அணைகட் டிடவே
இதனைக் கண்டு வானரக் குழுவெலாம்
இறுமாந் ததனை இகழுமா போல
பற்களைக் காட்டிப் பரிகசித் தனவே:
"புல்லிய அணிலிது புழுவை நிகர்க்கும்
"காக்கைவாய் கல்லின் கனத்தினில் இறக்கும்
"யாக்கையோ சிறிது அவயவம் குறிது
"பல்லிற் கவ்வுமாம் பலகற் கொணருமாம்
"கடலிற் போடுமாம் கட்டுமாம் அணையினை!"
என்றவ் வணிலை இகழும் போழ்து
இராமனும் அவ்விடம் எய்தின னயினன்.
குரங்குகள் எல்லாம் கூட்டம் கூடியே
கைகளைக் கட்டி வாய்தனைப் பொத்தி
அவன்முன் நின்றன களிப்பது பூத்தே.
உவந்தவன் அவைகளை ஆசிர் வதித்தனன்
அணிலினை இகழ்ந்த குரங்குகளை நோக்கி
"அணையிட் டன்பினை காட்டிய அன்பர்காள்
"உருவினைக் கண்டே எள்ளாமை[14] வேண்டும்
"பெருமையும் சிறுமையும் உருவால் இல்லை
"பெருமைக் களவு அன்பொன் றேதான்
"உருவிற் சிறிய அணிலிது வாயினும்
"சிறந்த தொழிலை இயற்றிய" தெனவே,
அணிலின் அன்பினை அகத்தினில் அறிந்து
மிகவும் வியந்து அகமும் உவந்து
"மெய்வருத் தமதைச் சிறிதும் நோக்காது
"மெய்யன் புடனும் உழைத்த அணிலே!

---

‡ பத்துத்தலையையுடைய இராவணன். 1. தவவேஷம் பூண்டு. 2. விம்மி. 3. கிழக்கு. 4. மேற்கு. 5. மாந்தி=குடித்து. 6. பொருப்பு=மலை.

7. சாவுக்குச்செய்யும் சடங்கு. 8. கௌவை=சப்தம். 9. அளி=வண்டு. 10. தாழை. 11. மருங்கு=பக்கம். 12. மதுரமானஜலம். 13. பூமியில்.

14. எள்ளாமை=இகழாமை.

"புல்லிய பிராணிநீ ஆயினும் என்பால்
"பூண்டாய் அன்பினை மாண்டார்[15] போல
"நிலையா யாக்கையால் உதவியைப் புரிந்து
"நிலையாம் புகழை நிறுத்தினை நிலமிசை[16]
"ஆகையால் நீயிப் புவியினில் நெடுநாள்
"சுகமாய் வாழ்வை சுற்றத் தொடு"மென
வாழ்த்தி அதனைப் பின்னர் இராமனும்
உலக மனைத்தையும் ஊட்டும் கையினால்
அண்ட மனைத்தையும் ஆட்டும் கையினால்
தடவினன் முதுகினில்தயவுடன் குனிந்தே
மூக்கு முதலதன் வால்நுனி வரைக்கும்
மூன்று கோடுகள் தோன்றின முதுகில்
வெள்ளைக்கோடுகள் நனைத்த முதுகில்
அந்நாள் தொட்டு அணிலின் முதுகில்
அன்பிற் கோரடை யாளமா
மூன்று கோடுகள் ஊன்றின வாயின.

பி. எஸ். வெங்கடசுப்பிரமணிய அய்யர். பி.ஏ.

## உபாத்தியாயர் பக்கம்.

### பிரதம பாடசாலை உபாத்தியாயர்கள். கவனிக்கவேண்டியவைகள்.

By Mrs. I. Brander.

(போனசஞ்சிகைத்தொடர்ச்சி)

#### விளக்கம், திருஷ்டாந்தம், விவரணம்,

கேள்விகேட்டு அதன்மூலமாகவே எப்பொழுதும் கற்பிப்பது சாத்தியமன்று என்று எல்லாரும்அறிவார்கள். எவ்விதமான கேள்வியினாலும் ஒருபிள்ளை இன்னின்ன பொருள்கள் சேர்ந்தாகியது வாயுவென்று, தெரியவாவது அயல்தேசம் இப்படியிருக்குமென்று பார்க்கவாவது சரித்திரங்களிற் கூறப்பட்டிருக்கிற சங்கதிகளையறியவாவது விளக்கமுடியாது. அப்படிப்பட்ட விஷயங்களைப் போதிக்கவேண்டுமானால்ஒரு பொருளைவிரித்து விளங்கும்படிசொல்லும் விளக்கங்களாலும், (Explanations)அது இன்ன இன்ன தன்மையுடையதென்று அதன்உருவம் குணமுதலியவைகளை விவரிக்கும் விவரணத்தினாலும், அதைப்பற்றிய வரலாற்றை ஆதியோடந்தமாக எடுத்துச்சொல்லுவதாலும், அதுபோன்ற பொருள்களைக்கொண்டும் அதன் வடிவத்தைக்காட்டும் சித்திரங்கள் படங்களைக் கொண்டும் தெரிவிக்கும் திருஷ்டாந்தங்களாலும், போதிக்கவேண்டும்,

விளக்கங்கள்:—(1) வாத்தியார் ஒரு பொருளைப் பிள்ளைகளுக்கு விளக்கிக்காட்ட எத்தனிக்குமுன், அவருக்கே அது நன்றாகத் தெரிந்திருக்கவேண்டியது மிகவும்அவசியமானது. விளக்கிக்காட்டும்முறையை அனைவருடையமனதுள்ளே சிந்தித்து அதில் எங்காயினும் சந்தேகந்தோன்றினால், புஸ்தகங்களை வாசித்தாவது வேறுவகையாகவாவது அச்சந்தேகத்தை நிவர்த்திசெய்துகொள்ளவேண்டும்.

(2) வாத்தியார் பிள்ளைகளுக்கு அர்த்தமாகும்படியான எளியநடையில் விஷயங்களைவிளக்கவேண்டும்

(3) அவர் விளக்கிக்காட்டுவது தெளிவாகத்தெரியும்படி கூடியபோதெல்லாம் பிள்ளைகள் அறியக்கூடிய திருஷ்டாந்தங்களால் விளக்கவேண்டும்.

உதாரணமாக, எப்படி மழை யுண்டாகிறதென்று ஒருவாத்தியார் தம்முடையபிள்ளைகளுக்கு விளக்கிக் காட்ட கருதுவதாக வைத்துக்கொள்வோம். அவர் கேவலமான வாத்தியாரா யிருந்தால், "மழைமேகத்திலிருந்து விழுகிறது" என்றுசொல்வார். அதைக்கேட்ட பிள்ளைகளை "எங்கிருந்துமழைவீழ்கிறது?" என்றால் "மேகத்திலிருந்து" என்று சொல்லுவார்கள். ஆனால் அவர்களுக்குமுன்னிருந்த அறிவினும்அதிக அறிவுஉண்டாகவில்லை. அவர்கள் கேட்டதைப்பற்றி அவர்கள்மனதுக்குப் பயிற்சியாவது விருப்பமாவது நிகழவில்லை. சிறந்தவாத்தியார், பின்வருமாறு தன்னுள்ளே நினைத்துக்கொள்வார். "மழைகாலம் சமீபிக்கப்போகிறது, மழையைப்பற்றி ஒருபாடம்கற்பிப்பது நலமாயிருக்கும். பிள்ளைகள் மழையின்காரணத்தை அறியும்முன், அவர்கள் தண்ணீர் ஆவியாகுவதையும் ஆவியான தண்ணீர் இறுகித் திரும்பத்தண்ணீராகுவதையும்பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்வது அவசியம். நான் அவர்களுக்கு இதைக் கற்பிக்கவேண்டும். இதை அவர்கள் பூரணமாக அறியும்படி வெகுதெளிவானதாக்கவேண்டும்."

முதற்பாடத்தில் சிலபரீக்ஷை (Enperiments) முறைகளும் திருஷ்டாந்தங்களும் காட்டக்கருதிஅந்தவாத்தியார் ஒருஅடுப்பும் கொதிநீர்நிறைந்த பானையும் சவதரித்து வைத்துக்கொள்வார். பின்புஅவர் தம் பிள்ளைகளை இவ்விரண்டையும் பார்க்கச்செய்து அவர்களை கேள்விவழியாக உஷ்ணமே தண்ணீரை முதலில் சூடாக்கிப் பின்பு ஆவியாக மாற்றுகிறதென்று தெரிந்து சொல்லச்செய்து ஆவி இலகுவாயிருக்கிறதென்றும் அதனால் ஆகாயத்தில் கிளம்புகிற தென்றும் கவனித்தறியச்செய்வார். அதன்பின்பு சூரியனது ஏராளமான உஷ்ணம் சமுத்திரங்கள் ஆறுகள் குளங்கள் முதலியவற்றின் மேற்பாகத்தைச் சூடாக்கிஆவியாக மாற்றுகிறதென்றும், அந்தஆவி இலேசாயிருப்பதால் ஆகாயத்தில் கிளம்பி மேகமாகின்றதென்றும் விளங்கச்செய்வார். அப்பால் அவர் குளிர்ச்சியும் மழமழப்புமான ஒரு தட்டையெடுத்து அதைமேலேகூறிய தண்ணீர் கொதித்துக்கொண்டிருக்கிற பானைக்குமேலேபிடித்துப் பிள்ளைகளை அதைப்பார்க்கும்படிசெய்து, அந்தத்தட்டில் முட்டிய ஆவி நீர்த்துளிகளாக மாறுவதைக் கவனித்துப்பார்க்கும்படி செய்து, தட்டின் குளிர்ச்சியே ஆவியைநீர்த்துளிகளாக மாற்றியதென்று தெரியச்செய்வார். கடைசியாக இதுவரைகற்பிக்கப்பட்டதைத் திரட்டிப்பின் வருகிறபடி சொல்வார்:—

'இந்திய சமுத்திரத்தின்மேலும் மற்றச்சமுத்திரங்களின்மேலும் பங்காளக்குடாக்கடல், அராபிகடல், முதலிய கடல்களின்மேலும் கிருஷ்ண கங்கைமுதலியஆறுகளின்மேலும், ஏரிகள் குளங்களின்மேலும், பெரியஉஷ்ணமான சூரியன் பிரகாசிக்கின்றது, அது பிரகாசிக்கின்ற உலக முழுவதிலும் அதன் வெயில், தண்ணீரை ஆவியாக்குகின்றது. அந்த ஆவி கிளம்பி ஆகாயத்தில் மிகுந்த உயரமான இடத்தைச் சேரும் வரை மேலே போய்க்கொண்டிருக்கின்றது. அங்கே அந்தஆவி மேகங்களாகி மிதக்கின்றது. அம்மேகங்களில் சில வெண்மையாய் அழகானவைகளாயும், வேறுசில கறுப்பாய்க் கனத்தவைகளாயும் ஆகின்றன. கரியமேகங்கள் ஒன்றை ஒன்று வரவர அதிகமாகநெருங்கித்திரும்ப(ஆகாயத்தின் உயர்ந்தஇடத்திலுள்ள) குளிர்ச்சியால் தண்ணீராகமாறி மழையாகக்கீழே விழுகின்றன.'

இவ்விதமான பாடத்தைத் தெரிந்தபின்பு பிள்ளைகள் ஆறுகள், குளங்கள், நீராவி, மேகம், மழையாகிய, இவைகளை புதிதும் புத்திபூர்வமுமான விருப்பத்தோடு நோக்குவார்கள். அவர்கள் மனம் இந்தப்பொருள்களைப்பற்றி விசாரிக்கத்துவங்கி இவைகளைப்பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள அவர்கள் ஆவலுள்ளவர்களாவார்கள். இப்படிப்பட்ட பாடம்கற்பிக்க ஏற்றகாலம் தினந்தோறும் மேகங்கள்தோன்றி மழைபெய்கின்ற மழைக்காலஆரம்பந்தான். (அக்டோபர் முதல்மார்ச்சுவரை நிகழ்கின்ற) வடகீழ்த் திசையிலிருந்து மேகங்கள்வந்து வருஷிக்கின்ற காலத்தில் கற்பிக்கக்கூடிய பலபாடங்களில் இதுஒன்று தான்.

உவாத்தியார்கள் பிள்ளைகளுக்கு விளங்கப்போதிக்கும் சத்தியையும் சொல்லக் கருதும்பொருளை வருணிக்கும் (Describle)வல்லமையையும் (தாங்கள்போதிக்கும்போது) அப்பியாசத்தினால் விருத்தி செய்யவேண்டும். அன்றியும், மனிதரையும், இடங்களையும், வர்த்தமானங்களையும் பற்றிய சிறந்த விவரணங்களை வாசிப்பதனாலும் அந்தவல்லமைகளை விருத்திசெய்யவேண்டும். இதுஅல்லாமல் தாங்கள் கற்பிக்கபோகிற படங்களை விளங்கச் செய்வதற்கு உபயோகமான சித்திரப் படங்களையும் (Pictures) சாமான்களையும் சேகரிக்கவேண்டும். பிள்ளைகளுக்கு விளங்குவதுகஷ்டமாயிருப்பதை பரீக்ஷை (Enperiment) செய்து காட்டி விளக்கவேண்டும்.

#### "தயார்" செய்தல் (Preparation)

இப்படிப்பட்டபோதனைக்கு வாத்தியார் முன் கூட்டித் "தயார்" செய்துகொள்ள வேண்டுமென்பது நிச்சயமானது வாத்தியார் முன்கூட்டித் "தயார்" செய்திருந்தாலொழிய அவர்எந்தச் சிலாக்கியமானபாடமாயினும் சொல்லிக்கொடுக்க முடியாதென்பதை அவர்மனதில் அழுந்தும்படி நாம் எத்தனைதடவைசொன்னாலும் போதாது.

உண்மையாக நல்லவாத்தியாராயுள்ளவர் வருஷமுழுவதிலும் சொல்லிக்கொடுக்கவேண்டிய பலவிஷயத்தையும் முதலில்அளவிட்டுத்தெரிந்து ஒவ்வொருவிஷயத்திலும் ஒவ்வொரு மாதத்தில் எவ்வளவெவ்வளவு கற்பிக்க வேண்டுமென்பதைக் கவனத்தோடு கிரமமாகப் பங்குபடுத்திக்கொள்ளவேண்டும். பின்பு, பிள்ளைகள்கற்கும் ஒவ்வொரு விஷயத்தினாலும் எவ்வளவு பூரணமான பிரயோசனம் அடையக்கூடுமோ அவ்வளவு பிரயோசன மடையும்படியான விதமாகக் கற்பிக்கும் அதிசிலாக்கியமான போதனைவகையைச்சிந்தித்துத் தெரிந்து கைப்பற்றவேண்டும். அன்றியும் தான் கற்பிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றிப் பல புஸ்தகங்களையும் பார்த்துப் பூரணமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்பிள்ளைகள் படிக்கும்படிநியமிக்கப்பட்டிருக்கிற புஸ்தகங்களை முன்கூட்டிப் படித்துவைக்க வேண்டுமென்பது சொல்ல வேண்டியதில்லை. அப்புஸ்தகங்களில் சொல்லப்பட்ட பலவிஷயங்களையும்பற்றி அவருடையஅறிவைப் பல புஸ்தகப்படிப்பினால் விசாலப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவையெல்லா மல்லாமல், தினந்தோறும்மறுநாட் கற்பிக்கவேண்டியபாடங்களைத்தாம்"தயார்" செய்வதன்றி அவைகளைவிளக்குவதற் குபயோகமான கருவிகள் சித்திரப்படங்களைச் சித்தஞ்செய்து பரீக்ஷித்துக் காட்டவேண்டியதற்குச் செய்யவேண்டியதை முன்கூட்டிபார்த்து செய்துகொள்வார். வாத்தியார்கள்முன்கூட்டி ஒருவாரம் அல்லது இரண்டுவாரப் பாடங்களைத் "தயார்"செய்து வைத்துக்கொள்ளவேண்டுமென்பது மிக முக்கியமானது. அவர்கள் அப்படிச் செய்யாவிட்டால் அவர்கள் பாடங்கள் "தயார்" செய்வதில் "பாக்கி" சம்பவித்து அந்தப்பாடங்களை மிக "அவசரமாகத்" "தயார்" செய்யவாவது "தயார்" செய்யாமலே விட்டுவிடவாவது நேரிடுவது சகசம்.

15. மாக்ஷிமையுடையார், பெருமையுடையார்.
16. நிலம்+மிசை=நிலத்தினில்.

வாத்தியார்கள் போலவே பிள்ளைகளும் பாடங்களைத் "தயார்" செய்யவேண்டும். ஆனால் வாத்தியார் "தயார்" செய்கிற மாதிரிக்கும் பிள்ளைகள் "தயார்" செய்கிற மாதிரிக்கும் வித்தியாசம் உண்டு, பிள்ளைகள் தாங்களே ஆலோசித்துத் தெரிந்துகொண்டிருக்கவேண்டிய விஷயங்களை வாத்தியார்கள் அவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதில் மிகுந்தநேரம்இப்போது பள்ளிக்கூடங்களில் வீணாகச்செலவிடப்பட்டு வருகிறது. இப்போது சொல்லியதற்கு ஒருதிருஷ்டாந்தமாக நான்நேரில் ஒரு பள்ளிக்கூடத்தில் பார்த்ததைச் சொல்கிறேன். வகுப்பு 3-வது பாரம். பாடம் பூகோளம்; ஆபிரிகாகண்டம். வாத்தியார் கருப்புப்பலகையில் ஆபிரிகாபடத்தை வரைந்து அவர் அந்தப் பாடத்துக்கு ஏற்பட்டிருந்த கால முழுவதையும் மொத்தஎல்லைகளைக் குறிப்பதிலும் நதிகள் மலைகளை வரைவதிலும் அவைகளின் பேர்களை எழுதுவதிலும் செலவிட்டுவிட்டார். அவர் பிள்ளைகளுக்கு அந்த எல்லைகள், நதிகள் மலைகளைப்பற்றி யாதொன்றும்சொல்லிக்கொடுக்கவில்லை. ஒருக்கால் அவருக்கே அவைகளின்பேர்கள் அவையிருக்குமிடம் இவைகளைத்தவிற வேறுசங்கதிகள்தெரியாதிருந்திருக்கலாம், பிள்ளைகள் பலதேசத்துப் படப்புஸ்தகங்கள் வைத்திருக்கிறார்களல்லவா: அந்தப்படப்புஸ்தகத்தில் ஆபிரிக்காக்கண்டத்துப் படத்தைப்பார்த்து அந்தக்கண்டத்து மலைகள்நதிகள் முதலியவற்றின் பேர்களையும் அவைகளிருக்கிற ஸ்தானங்களையும் முதனாள் சாயந்தரம் படிக்கும்படி வாத்தியார்செய்திருக்கவேண்டும். இந்த இடங்களைப்பற்றி வாத்தியாரும் தமக்குள்ள "தயார்" செய்யும்நேரத்தில் படித்திருக்கவேண்டும். அவர்அந்தக்கண்டத்தின் கரைகளைச் சூழ்ந்துள்ள கடல்கள் கொந்தளிப்புடையவைகளா அமைதியுடையவைகளாவென்றும் கப்பல்கள் அந்தக்கடற்கரைகளைச் சமீபிப்பது இலகுவானதா கஷ்டமானதாவென்றும் தற்காலத்தில் எந்தத்திசையிலிருந்து காற்றுகள் அடித்துக்கொண்டிருக்கின்றனவென்றும் பிள்ளைகளுக்குத் தெரிவித் திருக்கக்கூடும். அவர் அந்தக்கண்டத்து மலைகளின் உயரம், சீதோஷ்ண நிலைமை, தோற்றம், (Scenery) தாவரவகைகள் (Vegetation) ஆகிய இவைகளைப் பற்றியும், அதில் வசிக்கும் ஜனங்களைப் பற்றியும், நதிகளின் நீளத்தையும் அவைகளைச்சூழ்ந்திருக்கிற இடங்களையும் அந்தநதிகளில் கப்பல்கள் பிரயாணஞ் செய்யக்கூடுமோ என்பதையும்தெரிவித்து கூடுமானால் கடற்கரைகள்நதிகள் மலைகள் ஆகியஇவைகள் எழுதப்பெற்ற சித்திரப்படங்களையும் காட்டவேண்டும் பாடம் ஆரம்பிக்கும்போது சிலசோதனைக்கேள்விகளினால் பிள்ளைகள் மலைமுதலியவற்றின் பேர்களையும் ஸ்தானங்களையும்கற்றுத் தாங்கள் "தயார்" செய்யவேண்டியதைச்செய்து தங்கள்பாகவேலையைச் செய்திருக்கிறார்களா வென்பதைத்தெரிந்து, அம்மலைமுதலியவற்றைப்பற்றி அவர்களுக்குத்தெரியாத நூதனவிஷயங்களைத்தெரிவித்து வாத்தியார் தம்முடையவேலையாகிய நூதன அறிவு புகட்டுதலையுஞ் செய்திருக்கவேண்டும்.

இந்தமாதிரியாக, எல்லாவகுப்புக்களிலும், முக்கியமாக உயர்ந்த வகுப்புக்களிலும் உள்ள பிள்ளைகள் தங்கள்பாடப் புஸ்தகங்களையும் படங்களையும் பார்த்து, பூகோளசாஸ்திர பாடத்தில் மலை முதலியவற்றின் பெயர்களையும் ஸ்தானங்களையும் தெரிந்தும், கணக்கில் பெருக்கல்வாய்பாடு முதலியவைகளைப்பாடஞ்செய்தும், சரித்திரத்தில் சங்கதிகளையும் தேதிகளையும் மனனஞ்செய்தும், சுகாதாரநூலில் அதைப்பற்றியஉண்மைகளை மனதில்ஆகப்பண்ணியும் முன்கூட்டிப் பாடங்களைத் "தயார்" செய்துகொண்டு பள்ளிக்கூடத்துக்கு வரவேண்டும்.

### வீட்டிற்செய்யவேண்டிய அப்பியாசங்கள். *

மேலே சொல்லியதைத்தவிரப்பிள்ளைகள் எல்லாம் முக்கியமான பாடங்கள்விஷயமாய் வீட்டில் அப்பியாசங்கள் எழுதவேண்டும். அந்த அப்பியாசங்கள் முழுமையும் முன்சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிற பாடங்களையே குறித்தவைகளா யிருக்கவேண்டும். இதற்கு உதாரணம் காட்டுவோம். பூனையைப்பற்றிச்சொல்லிக்கொடுக்கப்பட்ட பாடத்தைக் குறித்த அப்பியாசம் எழுதும் நான்காவதுபாரம்வகுப்புப்பிள்ளைகள் "பூனையின்கண்கள், நகங்கள், பற்கள் ஆகியவைகளைப்பற்றிய விவரணமெழுதி, அவை ஒவ்வொன்றும் அந்தப் பிராணியின் வழக்கங்களுக்கு எப்படி ஏற்றவைகளா யிருக்கின்றன வென்றும் எழுதுக" என்னும் கேள்விக்குத் தங்கள்வீட்டப்பியாசப் புஸ்தகத்தில் விடை யெழுதவேண்டும். வாத்தியார் ஒருகணக்குச் சொல்லிக்கொடுத்தபின் அந்தக்கணக்குப்போன்ற வேறொருகணக்கு எழுதிக்கொடுத்து அதைப் பிள்ளைகள் தீர்ந்து தங்கள் வீட்டப்பியாசப் புஸ்தகங்களில் எழுதிவரும்படி செய்யவேண்டும். அந்தக் கணக்குப்போன்ற கணக்கு ஒன்று ஒவ்வொரு பிள்ளையும் நூதனமாக உண்டுபண்ணி அவரவர்கள் அப்பியாசப் புஸ்தகத்தில் எழுதி வாத்தியாருக்குக் காட்டும்படி செய்யவேண்டும். பூகோள சாஸ்திரப்பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டபின், அவர்கள் ஞாபகத்தைக்கொண்டு தாங்கள்படித்த தேசத்தின் சுற்றெல்லையை வரைந்து, மலைகள் நதிகள் முதலியவைகளின் வடிவங்களையும் பெயர்களையும் குறிக்கவேண்டும். தவிரவும் அவர்கள் அப்பியாசப்புஸ்தகத்தில் ஆபிரிக்காகண்டத்தின் மலைகள் நதிகள் முதலியவைகளைப்பற்றித் தங்கள் ஞாபகத்திலுள்ளவைகளை யெல்லாம் எழுதுக" என்றகேள்விபோன்றகேள்விகளுக்கு மறுமொழிகள் எழுதவேண்டும். இப்படி யெழுதப்பட்ட அப்பியாசங்களைவாத்தியார் சரிபார்த்து அவைகளில் உள்ள குற்றங்களை எடுத்துக்காட்டுதல் மிகவும் முக்கியமானது. அப்பியாசப் புஸ்தகத்தின் ஒவ்வொருபக்கத்திலும் போதுமான ஓரம்விடுவது நல்லஏற்பாடு. வாத்தியார் சகல பிழைகளின்கீழும் அவைகள் பிழைகளென்பதைக் காட்ட வரை(கோடு)கிறவேண்டும். பிள்ளைகள் தாங்களேஅப்படிக் காட்டப்பட்ட பிழைகளைத்திருத்தி இடம்விட்டிருக்கிறஓரத்தில் எழுதவேண்டும். ஒவ்வொருஅப்பியாசத்தின்கீழும் அது எழுதப்பட்ட தேதி குறிக்கப்படவேண்டும்.

* Home Exercise.

இவ்வாறாகப் பிள்ளைகளும் வாத்தியாரும் ஒன்றுசேர்ந்து உழைத்து பாடம்நடக்கும்போது அநுசரிக்கவேண்டிய முறைகளையும் ஒழுங்கையும் அநுசரிப்பதனாலும் முன்கூட்டிப் பாடங்களைத் "தயார்" செய்வதனாலும் இனிமையாகப் போதிப்பதனாலும் சொல்லிக் கொடுக்கப்பட்ட பாடங்களைப்பற்றி யெழுதும் வீட்டப்பியாசங்களினாலும். ஒவ்வொரு பாடத்திலிருந்தும் எவ்வளவு பிரயோசன மடையக்கூடுமோ அவ்வளவு பிரயோசனமும் அடையும்படி முயலவேண்டும்.

## ஆசாரக்கோவை.

சங்கப்புலவர்களுள் ஒருவராகிய பெருவாயன்முள்ளியார் அருளிச்செய்த ஆசாரக்கோவையைப் பழய உரையோடு திருமணம். செல்வக்கேசவராயமுதலியார் கருத்துரையுஞ் சேர்த்து அச்சிட்டனுப்பிய பிரதியொன்று நமது பார்வைக்கு முன்பேவந்தது. இது சங்க மருவிய பதினெண்கீழ்க்கணக்குகளுளொன்று. இதன் உரையைப் பழயதென்று சொல்லக்கூடுமேயல்லாது நச்சினார்க்கினியர் செய்ததென்று சொல்லுவதுகூடாது. "இந்நூலில், உண்ணல், உடுத்தல், உறங்கல், மலசலங்கழித்தல், நீராடுதல், வாய்பூசுதல் முதலிய நித்திய கடன்களைக் கழிக்குமாறும், ஐங்குரவர்பால் ஒழுகுமாறும், வரைவின் மகளிர், சூது, கள், சிற்றின்பம் முதலிய கடியுமாறும், நன்னரைச்சேர்ந் தொழுகுமாறும், இல்வாழ்க்கைச் சித்திபெற்றுச் சிறப்பெய்துமாறும் பத்தழகுடனே பண்புறக்கூறப்பட்டிருக்கின்றன." இதில் பெரும்பான்மையாக ஆசாரங்களையேபற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றதனால் இது ஒருவாறு வடமொழியிலுள்ள ஸ்மிருதிகளை யொத்திருக்கின்றது. இந்நூல் கூறும் ஆசாரங்களுள் சிலவற்றை அறிதல் அரிதாகின்றதனால், நன்றாகத் தெரிந்தவர்களில் கேட்டு யார்க்கும் பொருள் எளிதில் விளங்கும்படி செய்யின் நூற்பொருள் முழுதினையும் அறியலாம். கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, சாமிநாதய்யரவர்கள் பத்துப்பாட்டை அச்சிட்டிருக்குமாறே பதினெண்கீழ்க்கணக்கு முழுவதினையுமே பல பிரதிகளைக்கொண்டு நன்றாகச்சோதித்துப் பிழையறத்தெள்ளியகருத்துரையோடு நல்லச்சில் உயர்ந்த [illegible]த்தில் ஒரே சீராய் நான்குஸம்புடங்களாகப் பதிப்பித்தால் தமிழ் மாணாக்கர் யார்க்கும் நன்றாய்ப்பயன்படுமென்றெண்ணுகிறோம். ஆயினும் "பண்டைத்தமிழ்ப்பனுவலகளைப்பதிப்பிப்பதென்றால் கையிலுள்ள பொருளைக்கொண்டு போய் நட்டாற்றில் வலிய எறிந்துவிட்டு வெறுங்கையை வீசிக்கொண்டு வீடுபோய்ச்சேர்வதே முடிவானபொருள் என்பதுணர்ந்து எச்சரிக்கையாயிருப்பார்க்குஇன்னலொன்றுமில்லை" என்று இதனைப்பதிப்பித்தவர் சொல்லுமாறேயாகிறது முண்டாதலால், பழய நூல்களைப்பதிப்பிப்பதற்கு யாரும் அஞ்சுகிறார்கள். ஆதலினால் அப்படிச்செய்யாவிடினும், ஒரே அளவில் சிறிதுசிறிதாகத் தனித்தனியே அச்சிட்டுப் பிரசுரஞ்செய்து பார்த்து நஷ்ட மில்லாதிருப்பின் இடைசோராது ஒவ்வொன்றாய்ப்பதிப்பித்துக்கொண்டிருத்தலே நன்று. இப்பொழுது அச்சிட்டிருக்கின்ற ஆசாரக்கோவை, பிரம்பூர் 5, வேளாளர் தெருவு, திருமணம் செல்வக்கேசவராய முதலியாரிடத்திலும், இப்பத்திரிகை பிரசுரஞ் செய்யும் அறிவைப்பரவச்செய்யும் சபை ஏஜன்ஸியிலும் விலைக்ககப்படும். விலையணா நான்கே. தபாற்கூலிதனியாக அனுப்பவேண்டும்.

# சிறுவர்க்கானபக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## பொறாமை.

என்னுருயிரின்னதோழன் மீர்,

இந்தத்தடவை உங்களுக்கு சொல்ல வேண்டியகதை ஒன்றிருக்கிறது. அதைக்கீழேபதிப்பிக்கிறேன். கவனமாய் வாசித்துப்பார்த்து பொறாமை எப்படி பெருங்கெடுதி விளைக்குமென்பதைஉணர்ந்து அறிந்து நல்லெண்ணத்தோடு நடவுங்கள். நீங்கள் பிறர்க்கு கெடுதி எண்ணினால் இறுதியில் உங்களுக்கு கெடுதி யுண்டாகும். ஆனதுபற்றியே "கெடுவான் கேடுநினைப்பான்" என்று சோல்லப்பட்டிருக்கிறது.

முன் ஒருகாலத்தில் இராமன், கிருஷ்ணன் கோவிந்தன் எனமூன்றுபேர்கள் தனித்தனியே தெசாந்திரம் போகப்புறப்பட்டார்கள். இம்மூவரும் திடீரென்று தருமக்ஷேத்திர மென்னுமிடத்தில் சந்தித்தார்கள். அதுகாரணமாகவே அம்மூவரும் சிநேகிதர்களாயினர். அங்கிருந்து ஒன்றாய்ச்சேர்ந்து அப்புறம்போகையில் அவர்களுள் மூத்தவனான இராமன் சொல்லுகிறான்:—

"நேசர்களே, நீங்கள் இப்படி தேசாந்திரத்தில் அல்லாடும்படி ஸ்வதேசத்தைவிட்டு வந்ததற்கு யாதுகாரணம்? அதைஎனக்கு விளங்கச் சொலுங்கள்ல்" என்றுகேட்டான்.

அதற்கு கிருஷ்ணன் தந்த விடையாவது: "கொடிய விரோதியைப்பார்த்தது போல அங்கே சிலரிடத்தில் மிகுந்தபகை உண்டாயிற்று. அவர்களைப்பார்க்கவுங்கூட என்மனம் பொறாதிருந்ததினால் நான் என் ஊரைவிட்டு வந்துவிட்டேன். அவர்கள் முதலில் எனக்கு ஒரு கெடுதி செய்து அதனால் இந்தப்பொறாமை எனக்கு உண்டானதல்ல. 'அயல்வாழ்ந்தால் ஐந்துபட்டினி' என்பது எனக்கே தகும். எவனாவது ஒருவன் நல்ல ஸ்திதியிலிருக்கக் கண்டால் உடனே என்மனதில் எரிச்சலுண்டாகும். அந்தக்குணம் என் ஸ்வபாவத்திலேயே தோன்றினது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்பதுபோல அந்தஇயற்கை குணமெப்படிபோகும்? அதைச்சொல்லிக்கொள்ள எனக்கே வெட்கமாயிருக்கிறது. ஆனதுபற்றியே ஒருவரையும் காணாமல் வந்துவிட்டேன்" என்றான்.

அது கேட்டுக்கோவிந்தன்; "சிநேகிதனே! அப்படியாயின் என்னைப்பற்றி இனிநான் சொல்லவேண்டியது அதிகம் ஒன்றுமில்லை. இரண்டொரு மொழிதான். அதே வியாதிதான் என்னையும் தீண்டாடும்படி விட்டது. அல்லும் பகலும் அறுபதுநாழிகையும் அதேபொறாமை நோய் என் மனதை ஹிம்ஸித்துக்கொண்டு இருந்ததினால் ஒருவர் முகத்திலும் விழியாமல் வந்துவிட்டேன்" என்றான். கிருஷ்ணன் கோவிந்தன் இவ்விருவர் சொன்னதையுங்கேட்டு இராமன்: "அப்படியா!—எனதுநண்பர்களே! வாருங்கள் நாம் மூவரும் நன்றாய் ஆலிங்கனம் செய்துக் கொள்வோம். நம்மூவரையும் ஒரே நோய்தான் பிடித்துவதைக்கின்றது என இப்போது தெளிவாயிற்று" என்றான். அதுகாலம்தொட்டு அவர்கள் மூன்றுபேரும் "மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்" என்பதுபோல உடனே சிநேகிதர்களாயினர். எதிலும் ஒற்றுமையிருக்கேவண்டும்: "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்னும் பழமொழியும் உண்டல்லவா? நன்மையோ தீமையோ சவுக்கியமோ கஷ்டமோ பலமோ துர்ப்பலமோ நற்செய்தியோ துர்ச்செய்தியோ இன்பமோ துன்பமோ, இளமையோ முதுமையோ மரணமோ எது நேர்ந்தபோதிலும் எக்காலத்திலும் ஒற்றிருத்தல் நலம்.

அப்படி பொறாமையுள்ள மூவரும் ஒருநாள் ஒரு கணவாய் வழியாகப்போய்க்கொண்டிருக்கும்போது அவர்கள் எதிரில் பைஒன்று காணப்பட்டது அது யாராவது வழிப்போக்கர் போட்டு விட்டுப்போனதாயிருக்ககூடும். அம்மூவரும் தாம் ஏறிச்சென்ற வண்டியைவிட்டிறங்கி அதனருகே சென்று பார்த்து பணப்பை யென்று மூவரும் தெரிந்து இதை பங்கிட்டெடுத்துக்கொண்டு வீட்டிற்குத்திரும்பிப்போய் சுகமாக காலக்ஷேபம் செய்யலா மென்றார்கள். அது அவர்கள் வெளிக்குப்பேசின பேச்சேயன்றி வேறல்ல. மனதில் இம்மூவருக்கும் எண்ணம் வேறாயிருந்தது. ஆகையால் ஒருவரும் அதைத்தொடாமலிருந்தார்கள். "கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றமுடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக் கெடும்" என்பதுபோல, அது தனக்கு இல்லாமல் போனாலும் போகட்டும் அதை வேறொருவர் அனுபவியாதிருந்தால் போதுமென்று மூவரும் கருதியிருந்தனர். ஆயினும் அதை விட்டு அப்புறம்போக ஒருவர்க்கும் மனமில்லை. அதை மற்றிருவருக்கும் பங்கிட்டுக்கொடுப்பது மூவருக்கும் வருத்தமாயிருந்த படியால் என்ன செய்யலாமென்று யோசித்துக்கொண்டு இரவும் பகலுமாய் அங்கேயே நின்றுகொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் தர்மராஜன் என்னும் அத்தேசத்தரசன் வேட்டையாடி விட்டுதன் பரிவாரத்துடன் அவ்விடம் வந்தனன். அவன் இப்படி பொறாமை யடைந்திருப்பவர்களைக்கண்டு "என்னசெய்தி! பையைக்கீழே போட்டு அதை மூன்றுபேராக சுற்றிக்கொண்டிருக்கிறீர்களே?" யென்று வினவினான். அவனைக்கண்டு அவர்கள் திகில்அடைந்தனர். பிறகு உண்மையைச் சொல்லாவிடின் கொடிய தண்டனை சம்பவிக்கும் என்று அவர்கள் அச்சமுற்று நடந்த செய்தியை உள்ளபடி சொல்ல ஆரம்பித்தனர்.

"தர்மராஜனே! எங்கள் மூவரையும் ஒரே பிசாசுபிடித்திருக்கின்றது. அதற்கு பொறாமை யென்றுபெயர். ஆயினும் நாங்கள் மூன்றுபேரும் மாத்திரம் ஒன்றாயிருந்தால் அதற்குச்சம்மதிதான். இக்கொடிய நோயை எவராயினும் நீக்குவார்களாயின் அவர்களுக்கு இவ்வுலகத்தில் நல்ல கீர்த்தியுண்டாகும். "அவ்வித்தழுக்காறுடையானைச் செய்யவள் தவ்வையைக்காட்டி விடும்" என்றபடி. எல்லாதுன்பங்களையும் விளைப்பதிற்கு இந்தவியாதி தான் காரணமென்று எங்களுக்கே நன்றாய்த்தெரிகின்றது. ஆயினும் நாங்கள் என்னசெய்வோம். எங்களால் நீக்கக் கூடவில்லை, மேலும் "பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும்" என்பதை நீங்கள் கேட்டதில்லையா? அதனால்வழியில்கிடந்தஇப்பணப்பையைஒருவரும்எடுக்காமல்மனம்கலங்கிநிற்கிறோம்" என்றார்கள். துஷ்டநிக்கிரஹ சிஷ்டபரிபாலனான தருமராஜன் அதுகேட்டு, "நல்லதுபெரியோர்களே! உங்கள் நோய்க்கு என்னிடத்தில் ஒரு மருந்து உண்டு. அந்தநோய் யார்யாருக்கு தேஹத்தில் எவ்வளவு ஊன்றிப்போயிருக்கிறதோ அதை உள்ளதுஉள்ளபடி ஒளியாமல் தெரிவிப்பீர்களாயின் அதற்குத்தக்க பலமுள்ள ஔஷதத்தைக்கொடுத்து நிவர்த்தி செய்யாமாட்டுவேன்" என்றான்.

அது கேட்டு இராமன்: "அய்யோ! என் பொறாமைநோயை நான் என்ன வென்று சொல்லுவேன்! அது தலைக்கேறிப் போயிருக்கிறது. உலகத்தில் ஒருவர்க்கு நன்மைசெய்து நான் கண்ணாரப்பார்த்து பொறுக்கமாட்டேன்" என்றான்.

அதன் மேல்கிருஷ்ணன்: "அப்படியா. ஆயின் என்னைகாட்டிலும் நீ மிகவும் யோக்கியன் தான் பிறர்க்கு நாம் உதவிசெய்வதை பொறுமலிருப்பது பெரிதல்ல. எவனாவது ஒருவன் மற்றொருவனுக்கு ஒத்தாசைசெய்தால் அதையும் நான் பொறுக்கமாட்டேன்" என்றான்.

கிருஷ்ணனிவ்வாறு கூறியதற்கு கோவிந்தன் "ஆனால் இந்தவிஷயத்தில் நீங்களிருவரும் இன்னும் குழந்தைகளாயிருக்கிறீர்கள். இந்த வியாதி இப்போது தான் உங்களிடத்து ஆரம்பித்திருப்பது போல் தோன்றுகிறது. ஒருவன் மற்றொருவனுக்குதவி புரிவதையும் பொறுக்கமாட்டாதிருப்பது இவ்வளவு மேன்மையல்ல. எனக்கு எவனாவது நான் கேட்காமலிருக்கும் பொழுது உதவிசெய்தாலும் அதையும் பொறுக்கமாட்டேன்." என்றான்.

இவ்வாறு அவர்கள் சொன்னதைக்கேட்டு தருமராஜன் ஆச்சரியப்பட்டு ஒன்றும் மறுமொழிபகரவில்லை, கொஞ்சநேரம் திரத்தெளிய யோசித்து, "நீங்கள் மனிதர்களா? அல்ல, பேய்போலத்தொன்றுகிறீர்கள்! உங்களுக்கு மிக்க கொடிய தண்டனை விதிக்கவேண்டும்" என்றான். பிற்பாடு அரசன்வேலையாட்களை விட்டு அவர்கள் வைத்திருந்த பையைப்பிடுங்கி வரச் சொல்லி அம்மூவருக்கும் தகுந்தபடி பின் வருமாறு சிக்ஷைசெய்தான்:—அயலானுக்கு உதவி

செய்து சகிக்க மாட்டாதவனை உடுக்கத்துணியும் உண்ணச்சோறுமின்றி அரணியத்தில் ஒட்டிவிட்டான், ஒருவர் மற்றொருவருக்கு உதவுவதைக்கூடக்காண மாட்டாதவன் உலகத்திற்கெல்லாம் தீங்கு விளைப்பவனாதலின் உலகத்தில் வசிக்கயோக்கியனல்லன் என்று அவனைச்சிரச்சேதஞ்செய்யக் கட்டளையிட்டான், தனக்கு நன்மைசெய்வதை வெறுக்குந்தன்மையுள்ளபுருஷனால் உலகத்திற்கு யாதொரு தீங்குமில்லை; அவன் தனக்குத்தானே கெடுதிவிளைவித்துக்கொள்ளுகிறானென்று நினைத்து அவனை நடுப்பட்டணத்தில் தானதருமங்கள் மிகுதியாக நடத்துகின்ற ஜனங்கள் அதிகமாய் வாழுமிடத்தில் இருக்கச்செய்தான், அங்கே அவன் அவ்விடத்திலுள்ளவர்கள் தங்களாலியன்றமட்டும் நானாவித செயல்களைச்செய்வதையும் தனக்கு தினந்தோறும் பலவிதமான உபசரணைகள்செய்வதையும் பார்த்துப்பார்த்து மனம் புண்பட்டு சீக்கிரமே உயிரிழந்தான், ஆனதுபற்றியே "அழுக்காறுடையார்க்கது சாலுமொன்னார் வழுக்கியுங்கேடீன்பது' என்றார் பொறாமைப் பட்டுப் பெருமையடைந்த வருமில்லை பொறாமைப் படாதிருந்து சிறுமைப்பட்ட வருமில்லை, ஆகையால்தான் "அழுக்கற்றகன்றாருமில்லையஃதிலார் பெருக்கத்திற்றீர்ந்தாருமில" என்று கூறப்பட்டிருக்கிறது,

இப்படிதான் பொறாமை மிக்ககெடுதியை விளைவிக்கும்,

## விசேஷக்குறிப்புகள்.

**மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி.** சென்றமீ 8-உ சாயங்கிரம் பார்லிமெந்து சபையில் மெம்பராயிருக்கும் நம்தேசத்தவராகிய மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி யவர்கள் பம்பாயில் வந்திறங்கினார். அவருக்கு பம்பாயிலும் பூனாவிலும்,இன்னும் அவர் சென்ற டில்லி, ஆக்ரா முதலிய பட்டணங்களிலும் நடந்த உபசாரங்களும்,மரியாதைகளும்,கொஞ்சநஞ்ச மல்ல. ஜனங்கள் அவர் வரவைக்கண்டு மகிழ்ந்து அவரைக் கொண்டாடிய கொண்டாட்டத்துக்கு அளவில்லை. பம்பாயில் வந்திறங்கின பொழுது பம்பாய் கவர்னர், லார்ட்ஹாரிஸ் அவர்கள் அவருக்கு ஜனங்கள் செய்த சந்தோஷ உபசாரங்களைக்கண்டு மகிழ்ந்தவராய் மிஸ்டர் தாதாபாய் நல்வரவைக்கோரித்தாமும் அவருக்கு உபசாரவார்த்தைகள் சொல்லியழைத்தார். அவர் போனவிடங்களிலெல்லாம் முனிசிபல் சங்கத்தார் அவருக்கு வந்தனோபசாரப் பத்திரம் அளித்துபசரித்தார்கள். பம்பாய் முனிசிபாலிடி முதலில் வழிகாட்ட, பூனாமுனிசிபாலிடி பின்தொடர மற்ற முனிசிபாலிடிகளும் அவ்விரு முனிசிபாலிடிகளின் உதாரணத்தைப் பின்பற்றி அவரை எங்கும் உபசரிக்க முன்வந்தன. மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி சென்ற வருஷக் கடைசியில் லாஹோரில் கூடிய காங்ரெஸ் சபையில் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார். சென்னைவாசிகள் அவரைஇப்பட்டணத்துக்கு விஜயமாக வரவேண்டு மென்றழைத்ததற்கிசைய அவர் முதலில் அகத்தியம், வருவதாகச்சொல்லியும் பிரபு சீக்கிரம் இங்கிலாந்துக்குத் திரும்ப வேண்டிய அசந்தர்ப்பம் நேரிட்டதால் வர சரிப்படாது என்று சொல்லிவிட்டு ஜனவரிமீ 21உ கப்பலேறி இங்கிலாந்துக்குப் போய்விட்டார்.

---

**அலஹபத் ஹை கோர்ட்டு ஜட்ஜ்.** அலஹபாத்ஹைகோர்ட்டில் சுதேச ஜட்ஜாயிருந்து ஒருவருஷ ரஜாவெடுத்துக்கொண்டுசென்ற நவம்பர்மீ 23-உ அவ்வேலையைவிட்டுநீங்கிப்போன மிஸ்டர் ஜஸ்டிஸ் மாமூட் அவர்களுடைய ஸ்தானத்தில் மஹாராணியார் பாபு பிரமாதசாரன் பானர்ஜிஅவர்களைஹைகோர்ட்டுஜட்ஜாகநியமிக்கஅவரும் அவ்வேலையை ஒப்புக்கொண்டு விட்டார். பாபுபிரமாதசாரன் பானர்ஜியவர்கள் கல்கத்தா யூனிவர்ஸிடியில் பி. ஏ., பி. எல். பரீக்ஷைகள் கொடுத்து திறமைக்குப் பேர்போன ஹைகோர்ட்டு வக்கீலாய் விளங்கினபொழுது அவர் அலஹபாத் ஹைகோர்ட்டில் சட்டப்பியாசம்செய்யவந்தார். அப்புறம் டிஸ்திரிக்ட் முனிசீபாக சர்க்கார் உத்தியோகத்திலமர்ந்து சீக்கிரத்தில் ஸப்ஜட்ஜ் வேலைபெற்றுப் பிறகு ஸ்மால்காஸ்கோர்ட்டு ஜட்ஜாகவிருந்து அதன்மேல் ஒரு டிஸ்திரிக்ட் அண்ட் ஸெஷன் ஜட்ஜாக நியமிக்கப்பெற்றார். அந்த ஸ்தானத்திலிருந்து இப்பொழுது ஹைகோர்ட்டுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். அவர் கல்வி, யறிவு, பொறுமை, திறமையெல்லாய் நிறைய வமைந்த சிரேஷ்டர் என்று தெரியவருகிறது. அவரை ஹைகோர்ட்டுக்கு நியமித்ததில் சுதேசிகள் மட்டுமன்றிஅங்கிலேயர்களும்திர்ப்தியாயிருக்கிறார்கள்.

---

**புதுவருஷ கௌரதாப்பட்டங்கள்.** 1894-வது பிறந்ததோடு பலருக்கு கௌரதாப்பட்டங்களும் வந்தன. இந்தவிசை புதுவருஷ கௌரதாப்பட்டம் அளிக்கப்பெற்றவர்களில் அப்கான் அமிருக்கு G. C. B. (ஜி. ஸி. பி.) என்கிறபெரிய பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்றவருஷக் கடைசியில் ஸர் மார்டிமர் டியூராண்ட் என்பவர் அவர் ஊருக்குச்சென்று அவரும் பிரிடிஷ் இந்தியா கவர்ன்மெண்டாரும் எப்போதும் நேசமாயிருந்து ஒருவர்க்கொருவர் உதவிபுரிந்து அந்நிய அரசர்களுக்கு இடங்கொடுக்காது இந்தியாவையும் அப்காணிஸ்தானையும் பாதுகாற்றுவரவேண்டுமென்று ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு வந்தார். இந்த உடன்படிக்கை செய்துகொண்டதால் இந்தியாவின் வடமேற்கு எல்லையில் ருஷியர் பயத்துக்கிடமில்லை யென்று சொல்லப்படுகிறது. இந்த உடன்படிக்கை நிறைவேற அப்கான் அமீரிடம் இஞ்சினீராக விருந்து அவருக்கு அந்தரங்க ஆலோசனை சொல்கிறவரான மிஸ்டர் பைன் என்னும் ஆங்கிலேயருடைய உதவி அதிகச்சாதகமாயிருந்தது. அதுபற்றி அவருக்கு ஸி. எஸ். ஐ. என்கிற பட்ட மளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுடன்படிக்கை செய்வதற்கென்று அமீரிடம் தூதுசென்ற ஸர்ஹென்றி மார்டிமர் டியூராண்ட் அவர்களுக்கு அதைவிட ஒருபடி உயர்ந்த கே. ஸி. எஸ். ஐ. பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் அனேக கௌரதாப்பட்டங்கள் அளிக்கப்பட்டதில் பம்பாயிலுள்ள கனம் பிரோஷ்ஷா மீட்டாவுக்கு ஸி. ஐ. இ. பட்டம் கொடுத்தது ஜனங்களால் எங்கும் கொண்டாடப்படுகிறது. பம்பாய் நகர் போலீஸ் கமிஷனரும், பம்பாயில் நேர்ந்த கலகத்தை யடக்கி கீர்த்தி பெற்றவருமான மிஸ்டர் வின்ஸெண்ட் என்பவருக்கும் இந்த ஸி. ஐ. இ. பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. நமது இராஜதானியில் சென்னை முனிசிபல் ப்ரெஸிடெண்டு கர்னல் ஜி. எம். ஜெ. மூர் அவர்களுக்கு ஸி. ஐ. இ. பட்டம் கிடைத்திருக்கிறது இக்கௌரதாபட்டங்கள் மாக்ஷிமை தங்கிய மஹாராணி யவர்களால் நேரில் அளிக்கப்பட்டன. இந்தியா கவர்ன்மெண்டார் அளிக்கும் கௌரதாப்பட்டங்களில் கும்பகோணம் காலேஜ் ம-ள-ள-ஸ்ரீ சாதுசேஷய்யர், கவர்ன்மெண்டு ஆபீஸ் ம-ள-ள-ஸ்ரீ ஆர். வி. ஸ்ரீனிவாஸய்யர், பெஸ்வாடாவில் பெருத்த ஒரு வியாபாரியும் முனிசிபல் கௌன்ஸிலருமான ம-ள-ள-ஸ்ரீ எம். எதிராஜபிள்ளை ஆகிய இவர்கள் ராவ்பஹதூர் பட்டம் அளிக்கப் பெற்றிருக்கிறார்கள், புதுக்கோட்டை ஜாயிண்ட் மாஜிஸ்திரேட்டு ம-ள-ள-ஸ்ரீ பி. எஸ். கிருஷ்ணசாமி அய்யர் அவர்களுக்கு திவான் பஹதூர் பட்டமும், அந்த சமஸ்தானத்தில் தாசில்தாராயிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ பாலகிஷ்ணய்யருக்கு ராய்பஹதூர் பட்டமும் அளிக்கப்பட்டிருக்கின்றன.



**இராஜப் பிரதிநிதி சட்டநிரூபண சபையில் சென்னைப் பிரதிநிதி மெம்பர் வேலை** இராஜப்பிரதிநிதி சட்டநிரூபணசபையில் சென்னைப் பிரதிநிதி மெம்பராயிருக்கும் வேலைக்கு ஒருவரைத் தெரிந்தெடுப்பதற்காக நாளது ஜனவரி-மீ 5-உ நடந்த எலெக்ஷனில் சென்னை சட்டநிருபண சபையிலுள்ள உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்கள் மிஸ்டர் எர்ட்லிநார்டனையே தெரிந்தெடுத்தார்கள். இந்த எலெக்ஷனில் அதிகப் போட்டியுண்டாகி அதில் மிஸ்டர் நார்டன் ஜெயித்துவந்தது ஒரு பெருங்காரியமாக ஜனங்களால் கொண்டாடப்பட்டது. அவர் பேர் இராஜப்பிரதிநிதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்டு அவர் நியமனம் கெஜட்டில் பிரசுரிக்கப்படவிருக்கையில் இந்த-மீ 31-உ அவர் அந்த மெம்பர் வேலை தனக்கு வேண்டாமென்று ராஜிநாமா கொடுத்து இராஜப்பிரதிநிதிக்குத் தந்திபடித்து விட்டார். இதற்கு காரணம் அவர் பேரில் ஒரு குற்றப்பிராது வந்திருக்கிறதானென்று தோன்றுகிறது. ஜனவரிமீ 30 உ செவ்வாய்க்கிழமை யன்று மிஸ்டர் ஸலிவன் என்னும் ஐரோப்பியர் ஒருவர் எழும்பூர் முதல் ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்திரேட் முன்வந்து அவருடைய மனைவியோடு மிஸ்டர் நார்டன் வியபசாரம் செய்ததாக வாக்குமூலம் எழுதிவைத்து அவர் பேரில் குற்றஞ்காட்டிப் பிரியாது கொடுத்தார். அதன்மேல் மிஸ்டர் நார்டன் பேரில் சம்மன் பிறப்பிக்கப்பட்டு பிப்ரவரிமீ 15-உ அந்தக்கேஸ் விசாரணைக்கு வரும்படி குறிக்கப்பட்டிருக்கிறது.

---

**ஜமீன்கர்ணன்கள் ஆக்ட்.** ஜனவரிமீ 5-உக்குச் ஒத்திவைத்துக்கொள்ளப்பட்டசென்னைசட்டநிரூபணசபை மீட்டிங்கில்ஜமீன் கர்ணன்கள்மசோதா சட்டமாகப் பாஸ் செய்யப்பட்டது கனம். இரங்கையநாயுடுவும் கனம் சபாபதிமுதலியாரும் மட்டும் அம்மசோதா சட்டமாவதற்கு விரோதமாக வோட்டுக்கொடுத்தார்கள். மற்றப்பதினேழு மெம்பர்கள் அது தீர்க்கமாகத் தர்க்கிததுப்பேசி முடிக்கப்பட்டபின் அது சட்டமாவதற்கு அனுகூலமாக வோட்டுக்கொடுத்தார்கள். சென்னை சட்டநிரூபணசபையார் மறுபடியும் பிப்ரவரிமாச மத்தியில் ஒருதரம் கூடுவார்கள். அப்பொழுது சென்னை டிஸ்திரிக்ட் முனிசிப்பாலிடிகள் ஆக்ட்டைச் சீர்திருத்தும் விஷயம் ஆலோசனைக்கு வருமென்று தெரிகிறது.

**கவர்னர் கௌன்சில்.**

ஜமீன் கர்ணன்கள் மசோதா சட்டமானதோடு கனம் மிஸ்டர் காரிஸ்டின் வேலையும் முடிந்தது. அவருடைய 5-வருஷ உத்தியோக காலதவணை ஜனவரி௴ 8உ யோடு கழிந்துபோக மறுநாள் அவர் தம்வேலையை தனக்குப்பின் அவ்வேலைக்குவர நியமிக்கப்பட்ட கனம் மிஸ்டர் குரோஸ் அவர்கள் வசம் ஒப்பிவித்து விட்டு சீமைக்குப் பிரயாணமாகப்போய் விட்டார். இப்பொழுது கவர்னர் கௌன்ஸிலில் மிஸ்டர் ப்ளிஸ் முதல்மெம்பராகவும் மிஸ்டர் குரோஸ் 2 - வது மெம்பராகவுமிருக்கிறார்கள். மிஸ்டர் ப்ளிஸ் நல்ல திறமைசாலி. ஆனால் பதட்டக்காரர் என்று சொல்லப்படுகின்றது. மிஸ்டர் குரோஸ் நீடித்த அனுபோகசாலியாயிருப்பதோடு அதிக பொறுமையும் சாந்தமுமுடையவரெனப் பேர்பெற்றவர். இவரது பொறுமையும் சாந்தகுணமும் முதல் மெம்பருடைய பதட்ட குணத்தை யடக்கி இவ்விராஜதானி கவர்மென்டின் குணநிலையைச் சமதப்படுத்தி ஜனங்களுக்கு நன்மை விளைவிக்குமென்பது பொதுஜனநம்பிக்கை.

---

**காலஞ்சென்ற அரங்கநாதமுதலியார் ஞாபகார்த்த மகா சபை.**

காலஞ்சென்ற ராய்பஹதூர் அரங்கநாதமுதலியார் அவர்கள் ஞாபகத்தை நிலைநிறுத்துமாறு தக்க ஏற்பாடு செய்து அவர் பேரில் ஒரு ஞாபகசின்னமேற்படுத்துவதற்காக இச்சென்னைவாசிகளில் சிரேஷ்டர்களான பலர் கோரிக்கைப்படி இந்நகர் ஷெரிப் அவர்கள் பிப்ரவரி௴ 10உ சாயங்கிரம் $6\frac{1}{2}$-மணிக்கு விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஒரு மகாசபைகூட விளம்பரப்படுத்தி யிருக்கிறார். அப்பொழுது கனம்பொருந்திய கவர்னர் லார்ட் வென்லாக் அவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருப்பார். ராய்பஹதூர் அரங்கநாதமுதலியார் அவர்கள் ஞாபகத்தை நிலைநிறுத்த அவர் பேரில் சென்னை வித்தியாசாலைகளில் படிக்கும் மாணாக்கர்களுக்கெல்லாம் பொதுவில் சாப்பாடுஜாகைக்கும் மற்றும் தேகமனோ விர்த்திக்கும் காரணமாகத் தக்க ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தி அதற்கு வேண்டிய கட்டடம் ஒன்று கட்டுவதுசிதமென்று பிரஸ்தாபித்து வருகிறார்கள். 'விக்டோரியா ஸ்டூடெண்ட்ஸ் ஹோஸ்டல்' என்று சென்னையில் படிக்கும் மாணாக்கர்களெல்லாம் ஓரிடத்தில் சாப்பாடு ஜாகை வைத்துக்கொண்டு தக்க உத்தியோகஸ்தர் ஒருவர் மேன்பார்வைக்குள்பட்டு தேகமனோ விர்த்திக்கேற்ற பயிற்சிகள் செய்வதற்கு அனுகூலமான பெரிய ஸ்தாபனம் ஏற்படுத்த முயற்சியெடுத்துக்கொண்டு அது சம்பந்தமாக ராய்பஹதூர் அரங்கநாத முதலியார் பேரால் ஒரு கட்டடம் கட்டுவித்து மற்றுமுள்ள தர்மிஷ்டர்கள் சமயம்நேர்ந்துழி அதைத்தொட்டுத் தொடர்ந்து விசாலமாகக் கட்டடம் கட்டுவிக்க இடங்கொடுக்கும்படியான ஒரு ஏற்பாடு செய்வது நலமென்று அரங்கநாத முதலியார் ஞாபக சின்னார்த்தம் ஏற்பட்ட பிரதமக் கமிட்டியின் உடன் காரியதரிசி எழுதியிருக்கிறார். இது நூதன ஆலோசனை யன்று. சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜ சம்பந்தமாக இவ்வித ஏற்பாடு செய்ய முன்னமே ஆரம்பித்து அதற்காக 3,000 ரூபாய் கையொப்பமும் சேர்ந்தது. ஆனால் அது அக்காலத்து கவர்மென்டாரின் அனுதாபமின்றி சுதேசஜனசமூகத்தாரின் ஆதாரம்போதாது விழுந்துபோயிற்று. அவ்வேற்பாட்டையே புதிப்பித்து சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜுக்கு மட்டுமென்று பிரத்தியேகமாக ஏற்பட்டதை எல்லா காலேஜ்களுக்கும் பொதுவாக விருக்கும்படி மாற்றி அதை நிறைவேற்ற யத்தனிக்க இது நல்ல சமயமென்று எழுதியிருக்கிறார். இது வாஸ்தவமே. இவ்வேற்பாடு மிகவும் உசிதமாக விருப்பதால் இது விஷயத்தில் தீர யோசித்துத் தக்க ஏற்பாடு ஏதாவது செய்யப்படின் உத்தமமாமென்று எண்ணுகிறோம்.

---

**கவர்ன்மெண்டு தமிழ் துவிபாஷிகர்.**

ராய் பஹதூர் அரங்கநாத முதலியார் காலஞ் சென்றதால் காலியான கவர்ன்மெண்டு தமிழ் துவிபாஷிகர் வேலைக்கு கும்பகோணம் காலேஜ் ராய்பஹதூர் சாது சேஷய்யர் பி. ஏ. அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேகாரணத்தால் சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜில் காலியான கணித சாஸ்திர பண்டிதர் வேலைக்கு ம-ா-ா-ஸ்ரீ பி. சங்கரநாராயண செட்டியார், எம். ஏ. அவர்களை சத்தியாக நியமித்திருக்கிறார்கள். அவர் கொச்சி இராஜகுமாரர்களுக்கு உபாத்தியாயராயிருந்தார். எம். ஏ. பரீக்ஷையில் கணித சாஸ்திரத்தில் முதல்வகுப்பில் தேறியிருக்கிறவர். இவ்விராஜதானியில் அவர் ஒருவரே. வித்தியாபிவிர்த்தியில் சீர்திருத்த ஏற்பாடு ஒன்று இந்தியா மந்திரியவர்களுடைய அங்கீகாரத்துக்குப்போயிருந்தது. அது அவருடைய அங்கீகாரம் பெற்று வந்ததும் அச்சீர்திருத்தம் செய்யும்போது இவ்வேலையை நிறப்பப் புது ஏற்பாடு செய்யப்படும். அதுவரையில் இவர் சத்தியாக அவ்வேலைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

---

H. Ramaswamyaiyah
Manufacturing Confectioner.
Established 1891.
Indian sweets, Coffee, Tea, Cocoa, Cakes, &c of the best quality can be had at
335, Thumbu Chetty Street,
Black Town, Madras.



கோ. அ.—குலமும், கோத்திரமும் இங்கேயாருக்கு வேண்டும், வடமனாயிருந்தாலென்ன, வாத்திமனாயிருந்தாலென்ன? எல்லாம் ஒரேகலப்பாய் போய்விட்டதே. குலஹீனனாயிருந்தாலும் பாதகமில்லை. குடிகாரனாயிருந்தாலும் தோஷமில்லை. பணமிருக்கிறதா? மாப்பிள்ளைக்கு என்னசெய்வான்?

ரா. சா.—பெண்ணுக்கு நகைபோட்டு அலங்காரக் கன்னிகாதானம் செய்யலாம். அவர்மட்டுக்கும் அன்ன வஸ்திரத்துக்கு இருக்கிறது.

கோ. அ.—அவர் பெண்ணுக்கு நகைபோட்டால் போடட்டும், இல்லாவிட்டால் சும்மா இருக்கட்டும், எனக்கு அந்த விசாரமில்லை. பிள்ளைக்கு என்னசெய்வார்.

ரா. சா.—கிரமமாய் உலகத்தில் நடக்கிறபடி நடத்துவார். கடுக்கன், தங்க அரைஞாள், வெள்ளிப் பேலா, தட்டு, பஞ்சபாத்திரம் இவைகளுடனே கன்னிகாதானம் செய்வார்.

கோ. சா.—ஈயமும், பித்தளையும் என்னத்திற்கு இப்போ. மாப்பிள்ளைக்கு சாமர்த்தியமிருந்தால் பறறிக்கொள்ளுகிறான். "ரொக்கம்" கையில் எவ்வளவு கொடுப்பார்.

ரா. சா.—தகுந்த இடங்களில் சம்பந்தஞ் செய்யும்பொழுது ரொக்க ரூபாயைப்பற்றிப் பேசுவது அழகாயிருக்கமாட்டாது. குலம்கோத்திரம் நல்லதா, சொல்லிக்கொள்ளத் தகுந்த விடமா, ஜாதகப்பொருத்த மிருக்கிறதாவென்று இவைகளைப்பற்றி மாத்திரம் யோசிக்கலாம். பெண்ணுக்குத் தகப்பனார் சுப்பய்யரோ, பரமசாது; தயாளமனதை யுடையவர். சரிவர மாப்பிள்ளைக்கு மரியாதை செய்வார். ஒரே பெண்.

கோ. அ.—இக்காலத்தில் பிள்ளைக்குப் பணங் கேட்காவிட்டால், பிள்ளையை பதராக நினைத்துவிடுகிறார்கள். இப்போ பையனுக்கு ஐந்நூறு ரூபாய் கையிலும், இருநூறு ரூபாய் செலவுக்குங் கொடுத்து, கன்னிகாதானம்செய்ய காத்துக்கொண்டிருக்கிறான். இதற்குமேலே வரும்படி கிடைப்பதாயிருந்தால் சொல்லும்.

ரா. சா.—அவ்வளவு கொடுக்க அவருக்குக் கட்டுமோ கட்டாதோ.

கோ. அ.—பெரிய குடித்தனக்காரர் என்று சொன்னீரே. குடித்தனம் எவ்வளவு இருக்கும்.

ரா. சா.—அந்த சங்கதி எனக்குத் தெரியாது.

கோ. அ.—பெண்ணுக்குத் தாய் இருக்கிறாளோ.

ரா. சா.—இல்லை. தாய் அறையிலே விட்டு இறந்து போனாள். ஆனால் பாட்டியாரிருக்கிறாள்.

கோ. அ.—அண்ணன் தம்பிமார்களுண்டோ. அவர்களுக்கு யோக்கியதை என்ன.

ரா. சா.—இரண்டு பேர் தமையன்மார்கள். சாமான்னிய யோக்கியதைதான். சின்னவன் இங்கிலீஷ் வாசிக்கிறான், பெரியவன் குடித்தனம்பார்த்துக்கொண்டிருக்கிறான்.

கோ. அ.—மூத்தவனுக்குக் கலியாணம் எங்கே.

ரா. சா.—இன்னுமாகவில்லை. அவனுக்கும் நேர்ந்தால் பெண் கலியாணத்துடனே நடத்தவேண்டியதுதான்.

கோ. அ.—வயது என்னவிருக்கும்.

ரா. சா.—பதினெட்டு நிரம்பி பத்தொன்பதாவது வயது.

கோ. அ.—இந்தக்காலத்திலே பணக்காரர் வீட்டுப்பிள்ளையை பதினெட்டுவயது வரையிலும், கலியாணமாகாமல் வைக்கமாட்டார்களே—பந்துக்கள் பிடுங்கி போட்டிமேல் போட்டியாய் வந்து வீழ்வார்களே. குடித்தனம் சளைப்பானவேளையோ.

ரா. சா.—அப்படி ஒன்றும் காணப்படவில்லை. நான் கூட சமீபத்தில் போயிருந்தேன். யாதொன்றும் கேள்விப்படவில்லை; தான தர்மம், அதிதி ஆராதனை எல்லாம் எப்பொழுதும்போலவே நடந்துக்கொண்டிருக்கிறது. நீங்களும் பெண்ணைக்கொள்ளப்போகிறீர்களே ஒழிய, கொடுக்கப்போகிறதில்லை. தாயைப்பார்த்து மகளைக்கொள்ளு என்கிற பழமொழிப்படி, நல்ல வம்சமா, பெண்குணசாலியா, லட்சணமா, இவைகளைமாத்திரம் பார்த்தால் போதும்.

கோ. அ.—தாயில்லாப்பெண்ணைக் கட்டிக்கொண்டு யாரழுகிறது? பிரஸவமுதல் எல்லா அவஸ்தையும் நான்தானே படவேணும். தப்பித் தவறி பாட்டியும் போய்விட்டால், எல்லாரும் சோற்றுக்கு என் வீட்டிலேதான்வந்து நிற்பார்கள்.

ரா. சா.—தகப்பனாருக்கு ஒரேபெண். கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்துவருகிறார். அப்படி எல்லாம் சமயாசமயங்களுக்கு விட்டுக்கொடுக்கமாட்டார். உங்கள் குடும்பத்தை முழுவதும் வைத்து ஆதரிக்கக்கூட ஆதரிப்பார். வெகு சாது.

கோ. அ.—அவர் சாதுவாயிருந்தா லெனக்கென்ன, துஷ்டனாயிருந்தா லெனக்கென்ன.

ரா. சா.—அப்படி சொல்லலாமா. துஷ்டனாயிருந்தால், காரியம் ஆகவேண்டியதற்காக, ஏதோ காசை,

---

* இதற்குமுன்பக்கங்கள் பதினாறும் பிசகாக நம்பர் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றை இதற்குச்சரியாகத்திருத்திக்கொள்ளவும்.

பணத்தைக் கொடுத்துவிட்டு, நாளைக்கு மாப்பிளைக்கு, ஆடி, ஆறுவது மாதம், தீபாவலி, முதலிய காலங்களில் மரியாதையைக் குறைத்துவிடுவன். நீங்கள் எதாகிலும் மருமகளுக்கு நகை போட்டால், எடுத்துக்கொண்டுவிட்டு, உங்களை உபத்திரவஞ்செய்வான்.

கோ. அ.—பெண்ணை விரட்டிவிட்டு பிள்ளைக்குவேறே கலியாணஞ் செய்துபோடுவேன்.

ரா. சா.—இரண்டாம் விவாகம் செய்துவைப்பது மிகவும் சிரமம். தகப்பனுடைய சுவ்ஷ்டத்தனத்திற்காக, நாட்டுப்பெண்ணைத் தள்ளிப்போடுவது கிரமமல்ல. வியாச்சியம், வம்பு வந்து மறுபடியும் சேர்த்துக்கொள்ளும்படியாய் நேரிடும். பிரபுக்களாயிருந்தால் இரண்டு மூன்று தாரம் வைத்துக்கொள்ளக் கட்டிவரும். ஏழைகளுக்குக் கட்டிவராது. ஊர்க் கேலிக்கு ஏதுவாகும். குடித்தனம் ரஸமாய் இராது. சம்பந்திகள் நல்லவர்களாயிருந்தால், சுபாசுபங்களுக்குத் தாராளமாய் ஒருவருக்கொருவர் வந்து உபகாரஞ் செய்வார்கள். பெருமையாயும், கௌரவமாயுமிருக்கும். சுப்பய்யரைப்போல சாதுவை நான் எங்கேயும் கண்டதில்லை. வெகு பிரமாணிக்கர், சுலபர், உபகாரி. பிள்ளைகளும் தகப்பனார் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டார்கள். பணம் அநித்தியம். இன்றைக்கு வருகிறுப்போலவரும்: நாளைக்குப போய்விடும். நல்ல மனுஷியர்களாய் சம்பந்திகள் அகப்படுவதுதான் அபூர்வம். பெண் அதிர்ஷ்டம் நல்லதாயிருந்து, உங்கள் பையன் நல்ல ஸ்திதிக்கு வந்துவிட்டால், அப்புறம் உமக்கு யார் லட்சியம். பெண் ஜாதகம் திறமாயிருக்கிறது.

கோ. அ.—ஜாதகம் உம்மிடத்திலிருக்கிறதா. பார்த்து பிறகுசொல்லுகிறேன்.

ரா. சா.—மடிசஞ்சியில் இருக்கு. அதெல்லாம் பார்க்க வேண்டியதேயில்லை. நான் உங்களிடத்தில் பிசகு சொல்லுவேனா.

கோ. அ.—ஜாதகமென்னத்திற்கு. ஜாதகப்படிதான் எல்லாம் நடக்கிறதோ. அதுகிடக்கட்டும், கையில் ஆயிர ரூபாயும்; கலியாணச்செலவுக்காக ரூபாய் முன்னூறும் கொடுப்பதாயிருந்தால் சொல்லும்.

ரா. சா.—மறுபடியும், ஆடி, ஆறுமாசம் முதலியவைகளுக்கு மாப்பிள்ளைக்குத் தகுந்த மரியாதை செய்யவேணும். ஐன்னூறு ரூபாய்க்குக் குறையாமல் ஆகும். பெண்ணுக்கும் நகைபோடவேண்டியிருக்கும். இப்படிக் கேட்டால் என்ன செய்கிறது.

கோ. அ.—அவருக்கு இரண்டுபிள்ளைகளிருக்கிறதே. இந்தச்செலவுக்குமேல் சம்பாதித்து விடலாம்.

ரா. சா.—வாயைத்திறந்து ஒருவரை ஒரு காசு தா என்று சுப்பய்யர் கேட்கமாட்டார். அப்படிக்கெல்லாம், பெண் கொடுப்பவர்களைப் பறித்துப் பிடுங்குகிற சுபாவமில்லை.

கோ. அ.—அவர் எப்படியாகிலும் செய்யட்டும். என் வரும்படியை நான் விடமாட்டேன். நாள்கிழமைக்கு இஷ்டமிருந்தால் மாப்பிள்ளைக்கு செய்யட்டும், இல்லாவிட்டால் வேண்டாம். மாமனார்பாடு, மருமகன்பாடு. கும்பகோணம், தஞ்சாவூர் இப்பேர்ப்பட்ட இடங்களில் பெண்கள் நேர்ந்தாலும், பையன் படிப்புக்கு அனுகூலமாயிருக்கும். பெண்ணைச்சேர்ந்தவர்கள் யாராகிலும் நல்ல உத்தியோகத்திலிருந்தாலும், மாப்பிள்ளையை கைதூக்கிவிடுவார்கள். அப்படிக்கு ஓர்லாபத்தையும் காணேம். பெண்வீடு ஓர் மூலைக் கிராமம். பெண்குடும்பத்தார் மிகவும்நல்லவர்கள். பெண்ணும் லட்சணமாய் அதிர்ஷ்டசாலியாயிருக்கு, சொல்லிக்கொள்ளத்தகுந்த விடமென்று சொல்லுகிறபடியினால், கடைசியாய் ஓர் தீர்மானம் சொல்லுகிறேன். ரொக்க ரூபாய் ஆயிரத்தைன்னூறு கையில் கொடுப்பதாயிருந்தால் சம்மதிப்பேன். நான் பந்து ஜனங்கள் பெருத்தவன். எனக்கு ஐன்னூறுக்குமேல் செலவாகும். பாக்கியை வட்டிக்குப் போட்டால், பையனுக்கு பள்ளிக்கூடத்துச்சம்பளத்துக்குக்கூட வட்டி கிடைக்கமாட்டாது.

ரா சா.—நான் புத்தூருக்குப்போய் ஆலோசித்துக்கொண்டு எப்படியாகிலும் நிச்சயஞ்செய்துகொண்டுவருகிறேன். எனக்கு ஆறுநாள் அவகாசம் கொடுக்கவேணும்.

கோ. அ.—பணமூட்டையை கையில்வைத்துக்கொண்டு பெண்கொடுக்க காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வளவுகாலந் தாங்கமாட்டாது. மூன்று நாள் உத்திரவுகொடுக்கிறேன்.

ரா. சா.—உங்களுடைய இஷ்டப்படியே ஆகட்டும்.

## VII.

மாயூரத்தில் மேட்டுத்தெருவில் வக்கீல் இராமஸ்வாமி அய்யரென்ற ஓர் பெரிய பணக்காரர் இருந்தார். இவர் புத்தூர் சுப்பய்யருக்கு ஓர்வகை உறவினர். அபிராமய்யர் இருந்தகாலத்தில், அவரிடத்தில் ஊழியஞ்செய்து வந்தார். பையன் கெட்டிக்காரனாயிருக்கிறனென்று அவனிடத்தில் அபிராமய்யருக்கு மிகவும் பிரியம். எந்த உத்தியோகஸ்தனைப் பார்க்கப் போனாலும் இராமஸ்வாமியை கூடவே அழைத்துக்கொண்டு போவார். ஓர் நல்ல சமயம் நேர்ந்தபொழுது, சிபார்சுசெய்து, வலங்கிமான் முன்சீப் கோர்ட்டில் ஓர் குமஸ்தாவேலை செய்துவைத்தார். வேலையிலிருந்துக்கொண்டே பரீட்சையில்தேறி, மாயூரம் முன்சீப் கோர்ட்டில் பேச ஸன்னது பெற்றார். இவர் ஜாதகம் யோக ஜாதகமென்பதை நன்றாய் அறிந்த ஓர் தரித்திர ஜோஸியர் பெண்ணைக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். அவள் வீட்டுக்குவந்தது முதல் இவருக்கு அதிர்ஷ்டம் தொடங்கியது. எந்தக் கேசிலும், அய்யரவர்களுக்கு ஓர் சட்சி வகாலத்துண்டு. எந்த முன்சீப் வந்தாலும் அய்யரிடத்தில் வெகு மரியாதை. வரும்படி அதிகமானவுடனே தான் குடியிருந்த வீட்டின்பேரில் கடன் கொடுத்து சுலபமாக அந்தவீட்டை வாங்கிப்போட்டார். பிறகு அதை இடித்து மாடிவீடாகக்கட்ட உத்தேசித்தபொழுது, பக்கத்திலிருந்த இரண்டு மனையையும் சேர்த்துக்கட்டினால் நன்றாயிருக்குமென்று தோன்றிற்று. ஓர் புறத்தில் ஏழை வைதீகப் பிராமணனும், மற்றொரு புறத்தில் முன்சீப் கோர்ட்டு குமஸ்தா ஒருவரும் இருந்தார்கள். பிராமணன் வீட்டு வாயிலில் குதிரையைக்கட்டி, மாட்டைக்கட்டி, கொல்லையில் சாக்கடைத் தண்ணீரை வெட்டிவிட்டு, செய்த உபத்திரவத்தில் சகிக்கமாட்டாமல் பிராமணன் ஆறு மாதத்தில் வீட்டை ஒன்றுக்குப் பாதியாய் சாதனஞ் செய்துவிட்டு வேறே அக்கிரகாரத்துக்குப் போய்விட்டான். குமஸ்தா கிருஷ்ணய்யரைக் கிளப்ப கொஞ்சம் கஷ்டப்பட்டது. அப்பாஜிராயர் முன்சீபாக வந்தவுடனே அவருக்காக கேளிக்கைவைத்து, விருந்துசெய்து, தாசியைக்கொண்டு ராயரவர்களைச் சரிப்படுத்தி கிருஷ்ணய்யர் தலைக்கு இரகசியமாய்ப் பாக்குவைத்தார். கிருஷ்ணய்யர் முன்சீப்தாருடைய நடபடிக்கைகளைப்பற்றி அடிக்கடி தூஷிப்பதும், டிஸ்திரிக்ட் ஜட்ஜிக்கு, யாரையாகிலும்கொண்டு 'கோள் பத்திரிகைகள்' எழுதுவதும், அன்னபூரணி அம்மாள் முயற்சியினால், ராயர் காதில் பட்டது. ஏதோ கோர்ட்டு தஸ்தாவேஜிகளை கிருஷ்ணய்யர் திருடிவிட்டதாக, இவர்பேரில் ஓர் கேசு வந்தது. எது போனாலும் போகட்டும், ஜெயிலுக்குத்தப்பினால்போதுமென்று ஆயிற்று. வக்கீல் இராமஸ்வாமியய்யருக்கு உடனே வீட்டை தானம் பண்ணிவிட்டு, அவரைக்கொண்டு முன்சீப்தாருக்கு சிபார்சுசெய்யச்சொல்லி கிருஷ்ணய்யர் தன்னைக்காப்பாற்றிக்கொண்டார். மூன்று மனையையும் ஒன்றுசேர்த்து, முன்மெத்தை வைத்தால் முனிசிபல்வரி கொடுக்கவேணுமென்று, பயந்து, பின்மெத்தைவைத்து விசாலமான வீடு கட்டினார். வீடுகட்டும் காலத்தில் கூலியாட்களை கோல்கொண்டு ஓட்ட வந்த மைத்துனனார், திரும்பிப்போகவில்லை. உடன் பிறந்தவன்கூட இருந்தால் புக்ககத்தில் பெண்ணுக்கு ஓர் ஆயிரம் யானை பலமல்லவா. ஒரு சத்துரு எதிரே நிற்க முடியுமா. 'ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியை துரத்திவிட்டது' போல இவ்வளவுகாலமாய் இராமஸ்வாமியய்யர் வீட்டிலிருந்த, அவருடைய அண்ணன்மகன், தங்கைமகன், தகப்பன், தாய் எல்லாரும் ஒருவர் ஒருவராய் அப்புறப்படுத்தப்பட்டார்கள். பொன்மாயையிலும், பெண்மயக்கத்திலும் அகப்பட்டவனுக்கு புத்தியேது, பக்தியேது. "ஆகாத்தியக்காரனுக்கு ஐசுவரியம் வரும், பிரமஹத்திகாரனுக்குப் பிள்ளை பிறக்கும்" என்கிறபடி, இராமஸ்வாமியய்யருக்கு பூஸ்திதிசேர்ந்தது. 'ஏகபோகக்கிராமமொன்று கோர்ட் எலத்துக்கு வந்தது.' அதற்கு முன் பாத்தியம், பின்பாத்தியமிருக்கிறதென்று, பிரஸ்தாபத்தை வெளியேவிட்டு, நாதனைக் கொஞ்சம் வசப்படுத்தி சுலபமாய் எலத்தில் தட்டிவிட்டார். உத்தியோகம், பெரியவீடு, தகுந்த மிராசு, கைம்முதல், எல்லாம் பொருந்தியதினால், ஊரில் பெரியமனுஷத்தனமும் வந்தவிட்டது. எந்த நூதன எற்பாடும், தர்மமும் இராமஸ்வாமியய்யரவர்கள் சம்பந்தமில்லாமல் நடக்கிறதில்லை. எதற்கும் முதல்கையொப்பக்காரர் அய்யரவர்கள்தான். ஆனால் கையொப்பத் தொகையை ஒருநாளுங் கொடுத்தவரல்ல: இவர் மூலமாய் வேலைகளெல்லாம் நடத்தப்படுவதினாலே, கையொப்பம் வந்ததா, வரவில்லையா, என்று விசாரிக்க யாரும் துணிகிறதில்லை. எல்லோரும் இவரை அய்யரவர்கள் என்று அழைப்பது வழக்கமாயிற்று.

அய்யரவர்கள் பத்து நாளாய் ஊரிலில்லை. ஓர் அப்பீல் கேசு விஷயமாக, ஹைகோர்ட் பாரிஸ்டருக்கு வகாலத்துக்கொடுத்து, தஸ்தாவேஜிக்கட்டை வாசியாமல் தீர்ப்புச்சொல்லும் சின்ன ஜட்ஜி கோர்ட்டில் அது விசாரணைக்கு வரும்படியாய் எற்பாடு செய்யப் பட்டணம் போயிருந்தார். அன்றைய தினம் சாயங்காலந்தான் வந்தார். ஸ்நாநம் சந்தி முடித்து சாப்பிட்டுவிட்டு, மாடியில் குளிர நீர் தெளித்த முற்றவெளியில், பகல்போல் நிலவுகாய, பெரிய சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டிருக்க, பக்கத்தில், வெள்ளி யீர்க்கில் கோற்ற வெற்றிலையை ஒன்றொன்றாய் மனைவி அன்னபூரணிஅம்மாள் எடுத்துக்கொடுக்க, மாரின்பேரில், தன் குழந்தை குதித்து விளையாட, தென்றல் வீச உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், அவருடைய மைத்துனனு

சேஷஅய்யர், சுங்குமங் தடவிய சுப பத்திரிகை ஒன்று கையில் பிடித்துக்கொண்டு ‘கலியாணக் கடிதம் ஒன்றுவந்து இருக்கிறது’ என்றார்.

இராமஸ்வாமி அய்யர்.—எங்கேயிருந்து.

சேஷ அய்யர்.—புத்தூரிலிருந்து சுடியானவன் கொண்டுவந்தான்.

இரா. சா.—பிரித்துப் படி.

சேஷு அய்யர்.—

‘ஸ்ரீராமஜயம்.’

“சிரஞ்சீவி இராமசுவாமிக்கு ஆசீர்வாதம்.—நாளது ஆனி-மீ ௰௨-உ திங்கட்கிழமை, கடகலக்னத்தில், என் குமாரத்தி சௌ. தங்கம்மாவை மாயவரம் ம-ா-ா-ஸ்ரீ பட்டமங்கலம் கோபால அய்யர் குமாரன் சி. இராமசந்திரனுக்கு கன்னிகாதானம் செய்ய நிச்சயித்திருப்பதினாலே, நீ உன் பந்துஜனங்களுடனேயும், பரிவாரங்களுடனேயும் வந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கவேணும்.

விஷு-ஸு } வேணும் ஆசீர்வாதம்,
வைகாசி-மீ ௯-உ. } (கையெழுத்து) சுப்பய்யர்.”

குறிப்பு.—“எனக்கு வேறே தகுந்தமனுஷிய சகாயமில்லாதபடியினாலும், இதுவரையில் கலியாணஞ்செய்து பார்த்திராததினாலும், நீ என்ன வேலையிருந்தாலும், நிறுத்திப்போட்டு, அகத்தியம் நாலு நாள் முன்னதாகவே வந்திருந்து, சகல பாரத்தையும் வகித்துக்கொண்டு என்னை கௌரவப்படுத்தவேணும், பராமுகமாயிருந்துவிடாதே.

குறிப்பு.—“‘நீவந்தால்தான் கலியாணம் நிறக்கும். அகத்தியம், அகம்படையாளையும், குழந்தைகளையும் அழைத்துக்கொண்டுவந்து கலியாணத்தை நடப்பிக்கவேணும். தங்கம்மாவுக்கு தாயார்கூட கிடையாது. எம்மனுஷியாளாய் பந்தலில் நிற்கவும் ஒருத்தரும் கிடையாது, வந்த மாப்பிள்ளையை சுழற்றிக் கொட்டிப்பாடியழைக்கவும் வேறே சுமங்கிலி வீட்டிலில்லை. நான் இருந்தாலும் “எருமைச்சாணி யஞ்ஞத்துக்கு உதவமாட்டாது” அகத்தியம் அன்னபூரணியை பத்துநாளைக்கு முன்னமேயே அனுப்பவேணுமென்று’ பாட்டி எழுதச்சொன்னாள்.

“மறுபடியும் ஆசீர்வாதம்,
“சுப்பய்யர்.”

இராமசுவாமி அய்யர் கேட்டு யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, சேஷு அய்யர் சொல்லுகிறார்:—நேற்றையதினம் கடைத்தெருவுக்குப் போனவிடத்திலே அபிராமய்யருடைய பழையகாரியஸ்தன் சுப்பிரமணியனைக் கண்டேன். பேசிக்கொண்டிருக்கும்பொழுது, சலியாண பிரஸ்தாபம் வந்தது. விவரமாய்க்கேட்டேன். பிள்ளைக்கு சையில் ரூபாய் 1500-ம் பெண்ணுக்கு ரூபாய் 1000மும் கலியாணச்செலவுக்காக ரூபாய் 1500-ம் திட்டம் போட்டிருக்கிறாராம்.

இராமசுவாமி.—இவ்வளவுக்கும் பணம் எவ்விதமாக சேகரம்பண்ணினார் விஜாரித்தாயா.

சேஷு.—அதை விஜாரிக்காமல் இருப்பேனோ. நிலங்களை எல்லாம், வாண்டையாரிடத்தில் கலியாண முடிந்த உடனே சாஸநஞ்செய்து போடுவதாகப் பேசி, இப்போ பந்தகத்தின்பேரில், பணம் கடன் வாங்கியிருக்கிறாராம். இராம சாஸ்திரி வழியாய் சகல ஏற்பாடும் நடக்கிறதாம். சுப்பிரமணியனுக்குக்கூட நேரே சுப்பய்யர் சொல்லவில்லையாம். வாண்டையார் “ஏஜண்டு” வழியாய் கேள்விப்பட்டானாம்.

இரா. அ.—சுப்பய்யர் என் சுப்பிரமணியய்யருக்குச் சொல்லவில்லை.

சேஷு.—“சுப்பிரமணியன்” யமகாதகன், பழைய பெருச்சாளி, சுப்பய்யர் வீட்டிலே இருந்துகொண்டே, சுரண்டிச் சுரண்டி, நாலுவேலி முதல்தர கிராமம் வாங்கிப்போட்டான். குடித்தனத்து அந்தரம் நன்றாய்த் தெரியுமே—யாரையாகிலும்கொண்டு கடன் கொடுக்கச்சொல்லி, கொஞ்சம் கொஞ்சமாய், குடித்தனத்தை ஒடுக்கிவிட்டான். முன்பாத்தியம் பின்பாத்தியம் ஏதாகிலும் இருக்கிறதா என்று வாண்டையார் இவனைக்கேட்டிருக்கலாம். இவன் “பக்கா” திருடன், தான் எப்படியாகிலும் தலையிட்டுக்கொண்டு, இன்னமும் கொடுத்து, இருப்பதையுங் கட்டிக்கொள்ள ஏற்பட்டிருப்பான்.

இரா. அ.—சுப்பய்யருக்கு அவ்வளவு தூரம் தெரியமாட்டாதே. சுப்பிரமணியனைப்பற்றி யார் கோட்சொல்லியிருக்கலாம்.

சேஷு.—ராம சாஸ்திரிதான் சொல்லியிருக்கவேணும்.

இரா. அ.—ராம சாஸ்திரிக்கு நல்ல அடிதானே.

சேஷு.—அவர் அப்படிக்கெல்லாம் போகிறவரன்று. இந்தப் பெண் கலியாணத்துக்காக நிரம்ப அலைந்து கடைசியில் கோபாலய்யர் பிள்ளைக்கு அவர்தான் நிச்சயஞ்செய்தார். சுப்பய்யர் இஷ்டப்பட்டுக் கொடுத்ததை வாங்கிக்கொள்ளுவர்.

இரா. அ.—சுப்பய்யருக்கென்ன கவலை. பணம் கையிலகப்பட்டால் போதும். அளவில்லாமற்கொடுப்பர். கணக்கு வழக்குப்பார்க்காமல் கொடுத்துத்தானே சுடித்தனமெல்லாம் போய்விட்டது.



சேஷு.—நமக்குக் கூட ஏதோ கொஞ்சம் பணம் வரவேண்டும்போலிருக்கிறதே.

இரா. அ.—ரூபாய் ஆயிரத்தைந்நூறு கொடுக்கவேண்டும். வாங்கி கிட்டத்தட்ட மூன்று வருஷமாய்விட்டது. ஓர் தம்படி வட்டி கொடுக்கவில்லை. கேட்டதற்கு இருக்கிறதை விற்று ஏற்பாடுசெய்துபோடுகிறேனென்கிறார். தாட்சண்ணியப்பட்ட விடம். பாலியத்திலே அவாளாலே நிரம்ப உபகாரம்பெற்றேன். எனக்குமுதல்முதல் சிபார்சு செய்து வேலைபண்ணிவைத்தவர் அபிராமய்யர்தான். கலியாண காலங்களில் நூறு ஐம்பது கொடுத்து உபகாரஞ்செய்திருக்கிறார். அதை எல்லாம் நினைத்துக்கொண்டுதான் சுப்பய்யருக்கு கடன் கொடுத்தேன். எல்லாம் போனதுதான்.

சேஷு.—போவானேன். எனக்கு இப்போ உத்திரவு கொடுங்கள். ஒரு வாரத்தில் வசூல்செய்துவிடுகிறேன்.

இரா. அ.—வியாச்சியஞ் செய்தால் வசூலாகும். ஆனால் கலியாணம் நின்றுபோகும். பெரிய குடும்பம். நான் நேரில் இழுத்தப்பிடித்துக்கொண்டிருந்தால் ஊருக்கு நன்றாயிராது. பணம் போனால் போகட்டும்.

சேஷு.—ரூபாய் ஒன்று இரண்டா விட்டுவிடுவதற்கு. வட்டியும் முதலுமாய் ரூபாய் இரண்டாயிரமாகிறதே. விடுவானேன்.

அன்னபூரணி.—மூன்றும் வருஷம் சேஷு ஸீமந்தத்துக்கு என்று நூறு ரூபாய் கேட்டான். மாசம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒரு ரூபாய் வட்டிபோட்டு சீட்டெழுதி வாங்கிக்கொண்டு, வட்டியும் முதலுமாய் நூற்றைம்பது ரூபாய், ரத்ன ரெட்டியின் பேரில் வியாச்சியஞ்செய்து அவனுக்கு வந்த பணத்தில் எடுத்துக்கொண்டு விட்டீர்கள். இத்தனைக்கும் சேஷுவும், அவனகம்படையாளும் உங்கள்வீட்டில் எருமைக்கிடாவைப்போல உழைக்கிறார்கள். நாங்கள் கஷ்டப்பட்டு சேர்த்து என்னபிரயோஜனம். நாங்கள் ஒன்று ஒன்றாய் சேகரிக்கிறோம், நீங்கள் ஆயிரமாயிரமாய் கொட்டிக்கொடுக்கிறீர்கள்.

இரா. அ.—நான் தெரிந்து கொடுத்தேனல்ல. ஏதோ முதலாவது சுமாராய் வந்து விடுமென்று கொடுத்தேன். வேளைப்பிசகு.

அன்னபூரணி.—“தாட்சணியம் தனநாசனம்.” பண விஷயத்தில் தாட்சணியம் பார்க்கலாமோ.

இரா. அ.—சில சமயங்களில் மனுஷியத்தனத்துக்கு ஆசைப்பட்டால் பார்த்துத்தான் ஆகவேணும். நஷ்டந்தான் அடையவேணும். சுப்பய்யர் பணம் எனக்கு வேண்டாம், போகட்டும்.

அன்னபூரணி.—உங்களுக்குத்தான் வேண்டாமே. பத்திரத்தை சேஷு பேருக்கு “மேடோர்” செய்து எறியுங்கள். அவன், வசூல் செய்து வந்தமட்டும் எடுத்துக்கொள்ளுகிறான். பத்திரம் எங்கே வைத்திருக்கிறீர்கள் சொல்லுங்கள்.

அன்னபூரணி அம்மாளுக்கு நன்றாய் எழுதப்படிக்கத் தெரியும். கட்சிக்காரர்கள் வந்தால் அவர்களிடத்தில் ‘பீசு’ பேசி அவர்களுக்கு விருந்து முதலிய உபசாரங்கள்செய்து, ஒன்றுக்கிரண்டாய் கறந்து யோசட்சேம நாட்டாமை முழுவதும், அம்மாளே நடத்திக்கொண்டு பைசா தானம் செய்ய பர்த்தாவுக்கு சுவாதீனமில்லாமல், அவரைமேய்த்துக்கட்டிக் காலந்தள்ளி வந்தாள். வெற்றிலை ஈர்க்கை எறிந்துபோட்டு, குழந்தை கையிலிருந்த திறவுகோலைப் பிடுங்கிக்கொண்டு, பெட்டியினின்று சுப்பய்யருடைய கடன் பத்திரத்தை எடுத்து வந்து, தன் தம்பி சேஷுபேருக்கு “மேடோர்” செய்யும்படி கட்டாயப்படுத்தினாள். பிதிர்வாக்கை மறுத்தாலும், பத்தினிவாக்கை ஒருநாளும் எதிர்க்காத மஹானுபாவன்—மைத்துனன் பேச்சைக்கேட்டுக்கொண்டு மாதாவை விரட்டிய மஹாத்மா—மற்றொன்றும் பேசாமல், ‘மேடோர்’ செய்துபோட்டார். உழைத்துச்சம்பாதிக்க இவருக்குப் பாத்தியமேயொழிய, செலவு செய்ய பாத்தியமில்லை. ரகஸியமாய் வீட்டுக் காரிக்குத்தெரியாமல் கொடுத்தால்உண்டு. அம்மாளுக்குத்தெரியுமேயாயின், அய்யாவுக்கு ஆபத்துதான். வீடு ரணகளப்படும். இதற்காக எல்லாதர்மத்தையும் நிறுத்திப்போட்டார். பாபம்ஏற ஏற பக்தி விசுவாசமெல்லப் பறந்துவிட்டது. “பணமே பரமபதம், கொண்டபெண்டாட்டி குலதெய்வம்” என்று அவளிட்ட கட்டளைக்கு இரண்டகம் செய்யாமல், கண்ணியத்தைக் காப்பாற்றிவந்தார். அம்மாள் பத்திரத்தை மைத்துனன் கையில்கொடுத்து “அடே சேஷு, வக்கீல் சுப்பராமய்யரிடத்திற் போய், பிரதிவாதி சொத்தையெல்லாம் அப்புறப்படுத்த ஏற்பாடுசெய்கிறான். உடனே பிரியாது செய்து இமர்ஜெண்ட்படி செலுத்தி, வாரண்டு ஜப்தியுடனே ஆளைப்பிடித்தால் பணங்கிடைக்கும், அதற்குத்தகுந்த ஏற்பாடு உடனே செய்யும்படி நான் சொன்னதாகச்சொல்லு” என்றாள்.

சேஷ.—முன்னே ஏதோ இரண்டு நம்பர்களில், பீசும் சில்லறைச் செலவுகளும் சரியாய்வந்துசேரவில்லையாம். நம்முடைய விஷயத்தில் இனிமேல் சுப்பராமய்யர் கையிலேயிருந்து பணத்தைப்போட்டு வியாச்சியம் செய்யமாட்டார்.

அன்னபூரணி.—இந்தக்காலத்தில் ஒருத்தருக்கும் உபகாரம் செய்யவேகூடாது; என்னசெய்தாலும் நன்றிகிடையாது. நம்மாலே சுப்பராமய்யருக்கு ஆதியிலே எவ்வளவு கேசுகள் கிடைத்திருக்கின்றன. அவரைக் கைதூக்கிவிட்டதே நாம்தானே. நூறு ஐம்பது பாக்கியிருந்தால் என்னபாதகம்.

சேஷ அ.—அதெல்லாம் எனக்குத்தெரியாது. வியாச்சியச் செலவுக்குப் பணம் கொடுத்தால் சுப்பிராமய்யரிடத்தில் போகிறேன். இல்லாவிட்டால் மெள்ள ஆகட்டும்.

அன்னபூரணி.—எவ்வளவு பிடிக்கும்.

சேஷ அ.—நீதான் நாலு வக்கீலுக்குச் சரியாயிற்றே. தெரியாததுபோல் என் கேட்கிறாய்.

இரா. அ.—தூக்கம்வருகிறது. சேஷ! படுக்கையைப்போடு.

அ. பூ.—வியாச்சியத்துக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு நித்திரை செய்யப்போங்கள்.

இ. அ.—இரும்புப் பெட்டியில் நோட்டுகள் இருக்கின்றன, வேண்டியதை எடுத்துக்கொள்.

அ. பூ.—அது மொத்தமாயிருக்கிறது. அதைக்கறைப்பானேன். வேறு வரவேண்டியதில்லையோ.

இரா. அ.—அவசரத்துக்கு கைக்கு வரமாட்டாது. பெட்டியிலிருந்துதான் எடுத்துக்கொடு.

அ. பூ.—"'கொழுக்கட்டைதின்ற அம்மையாருக்குக் குருணி மோர் குரு தட்சணையாம்' என்கிறாப்போல சுப்பய்யருக்கு கொட்டிக்கொடுத்தது போதாதென்று, இன்னம் ரூபாய் அழவேண்டியிருக்கிறது. இதுவும் வருகிறதோ, போகிறதோ."

பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்துவந்து "இந்த நூற்றைம்பது ரூபாயை முத்திரைக்கடுதாசுக்கும், பத்து ரூபாயை பீசுக்காகவும் என்று கொடுத்து நாளைக்கே பிரியாது கொடுக்கச்சொல்லு" என்று கொடுத்தாள்.

சேஷ அ.—பீசுக்கு பத்து ரூபாய் போதுமா.

அ. பூ.—எதிர் கட்சியா, விவாதமா, பத்து ரூபாய்க்கு மேலென்னத்திற்கு? சம்மதிக்கமாட்டேனென்றால், வேறே வக்கீலுக்கு வகாலத்துக்கொடுத்துவிடுவேனென்று சொல்லு.

சே. அ.—கட்சிக்காரன் உன்னிடத்தில் வந்தால்மட்டும், நூறு ஐம்பதென்று வாய் கூசாமல் கேட்கிறாயே, எல்லாருக்கும் அப்படிதானே இருக்கும். அயல் வாழ்ந்தால் உனக்கேன் இவ்வளவு அசங்காரம்.

அ. பூ.—நம்மைப்போல கேசுகளில் கவனமாய் சிரமப்பட்டு யார் உழைக்கிறார்கள். நானும் எவ்வளவு பாடுபடுகிறேன். வந்தவர்களுக்குக் காப்பி வைத்து, வெந்நீர்போட்டு, 'டிபன்' செய்துகொடுத்து இராஜோபசாரம் செய்கிறேன். இதற்கே நூறு ஐம்பது கொடுக்கலாமே.

சே. அ.—உபசாரத்தைச்செய்து, உள்ளவன் உயிரை வாங்கி விடுகிறாய்: உன்சாமார்த்தியம் ஒருத்தருக்கும் வரமாட்டாது.

அ. பூ.—நான் இப்படி எல்லாம் பாடு படக்கொண்டுதான் நீயும் உன் அகம்படையானுமாய் ஆறு வருஷமாய் உட்கார்ந்து அறைக்கிறீர்கள். இல்லாவிட்டால் "அன்னத்திற்கு ஆலாய்ப்பறக்கவேணும்."

சேஷ அ.—சும்மா உட்கார்த்திவைத்துச் சோறு போடுகிறாயோ. அம்ஸதூளிகையில் படுத்து தூங்குகிறோமோ. இரண்டுபேரும் செக்குமாடுபோல் ஓய்வில்லாமல் உழைக்கிறோம். பத்தாள் வேலைவாங்குகிறாய்.

அ. பூ.—உனக்கு உபகாரம் செய்து பிரயோஜனமென்ன. வழியில் போகிறவனுக்குப் போட்டாலும் புண்ணியமுண்டு. கூட்டத்தின்வாசி எவ்வளவு செய்தாலும் நன்றியறிவுகிடையாது, திருப்தியுமில்லை.

சே. அ.—ஆம், ஆம், கூட்டத்தினவாசிதான்.

இரா. அ.—உங்களுடைய சண்டையெல்லாம் காலமே ஆகட்டும், நான் போய்ப் படுத்துக்கொள்ளுகிறேன். குழந்தை மாரின்பேரிலேயே படுத்து உறங்கிப்போய் விட்டது. எடுத்துத்தொட்டிலில் விடு.

(இன்னும் வரும்.)

ஆர். சக்கிரவர்த்தி அய்யங்கார், பி. ஏ.

## ஜீவன்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்களின் இயல்பு.

(மஹாபாரதத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

"இப்புவியில் ஒரு பிராமணச் சிறுவன் காந்தாரகிரியென்னும் ஒருபெரிய மலையைநோக்கிப் போனான். அப்படி போனவன் தன்மனத்திலெண்ணிய ஒப்புவழி



விட்டுத் தப்புவழியாகச் சென்று, அடர்ந்து படர்ந்த முட்காடடைந்து பசியால் வாடிப்போம் போது சரபசார்த்தூல முதலாகிய துஷ்ட ஜெந்துக்களினால் அயர்ந்து பிராணபயங்கொண்டு, புலி முதலிய மிருகங் கொன்றுபோடுமே யென்னும் அச்சமானது தன்னுயிரைவாட்ட நாட்டமழுங்கி, காட்டிலுமேட்டிலும் விழுந்து ஓட்டமாய் ஓடினான். அப்படி ஓடிவருகின்ற வழியில் ஒரு ஸ்திரீயானவள் இவன்பேரில் மோகங்கொண்டு கிட்டவந்துகூடி, சோறென்பதைக் கண்ணாற் காண்பதற்கும் அருமையுடையவளாய், எனக்கு ஆகாரம்வேண்டுமென்று நாடினாள். அப்போது வறுமையடைந்து பெருமை குறைந்த அந்தப் பெண்ணினுடைய பொல்லாத முகத்தைப்பார்த்து மிகவும் நடுங்கி, கொஞ்சம் மயங்கி நின்றான்.

இதற்குள் ஒருவேங்கையானது இவனைத் தொடர்ந்து துரத்திக்கொண்டு சமீபத்தில் வந்தது. அதையவன் பார்த்துப்பயந்து, பக்கத்திலுயர்ந்து நீண்டு பணைத்துத் தழைத்து இருக்கின்ற ஒரு ஆலமரத்தைக் கண்டு அம்மரத்தண்டையி லோடி, அதன் மேற்றாவியேறி, உடலஞ்சலித்துத் தள்ளாடி, ஒரு கிளைமேற் சாய்ந்து, அடிவாரத்திற்புலியிருக்க, ஆய்ந்து, கொஞ்சம் வாட்டமாகிய நித்திரைமயக்கத்தா லோய்ந்து, மாய்ந்தவன்போல் மண்ணில் வீழ்வதானான். அப்படி வீழ்கிறவனுடைய கைகளானது நாலுபக்கத்திற்றுழாவும்போது, அக்கைகள் அம்மரத்தின்மேற் சுற்றிப்படர்ந்திருந்த சில பசுங்கொடிகளைப் பிடித்தன. அதுகொஞ்சம் ஆதரவாக இருக்கவே அக்கொடிகளைப் பற்றிச்சென்று சந்தோஷித்தான். உடனே இவன் பிடித்த படர்கொடிகள் சரசரவென்றுவுருவிப் பூமியில் இறங்கிவந்தன. அப்போதவன்: 'ஐயோ! இந்தக்கொடிகளும் நம்மைத்தாங்காமற் கழன்று வருகின்றனவே' யென்று விசனங்கொண்டு, நம்மை யெங்குகொண்டு போகின்றனவோ வென்று தலைகுனிந்து பூமியைப் பார்த்து, 'நல்லகாரியம்: நம்மைப் பூமிக்குக்கொண்டு போகின்றன. ஆனதால் நாம் பூமியிலிறங்கி, அந்தப் பெண்ணினுடன் கூடிப்போய்விடலா'மென்று மகிழ்ச்சியடைந்தான்.

அப்படி பூமியைக்கிட்டியும் இன்னுங் கீழேபோய்க்கொண்டிருப்பதினால், 'இதென்னடா இவ்வளவு ஆழம்!' என்று நிதானித்துப் பார்த்தான். அவ்விடத்தில் அகண்ட ஆழமான ஒரு பாழுங்கிணறிருப்பதைப்பார்த்து, ஆ! ஆ! தெய்வமேயென்று அலறி, கதறிப் பதறிக்கலங்கி, கிணற்றிலாகிலும் இறங்கி அப்பாற் கரையேறுவோமென்று கொஞ்சம் மகிழும்போது, அந்தக் கிணற்றிலுள்ளே ஒருபெருங் கரும்பாம்பானது அழற்கண்விழித்து, அகலமான படத்தை விரித்து, ஓங்கியோங்கி இவனைச் சீறியடிக்கத் தலையெடுத்தது. அதையவன் காணலும் உயிர்குறைந்து பரிதாபமுற்று, கொடிகளாகிய பற்றினால் இருகாலையு முடக்கிக்கொண்டு, ஊசலாடுவதைப்போ லசைந்தாடிச் சுழன்று, அந்தப் பாழுங்கிணற்றின் பக்கத்திற் குதித்துவிடலாமென்று களித்துப் பாயப்போயினான். அப்போது கொல்லத்தக்க கோபமுற்ற ஒரு காட்டானையானது நீட்டமாகிய இருகொம்புகளுடன் ஆறு தலையுடையதாய் பனிரண்டு கால்களைப்பெற்று, மலைக்கல்லைபபோல் உடல் தாங்கி, ஒருபுறங்கறுப்பும் ஒருபுறம் வெளுப்புமாய்க் கிணற்றுப்புறத்தில் நின்று, தும்பிக்கையால் இவனைத் துழாவிப் பிடிப்பதாயது. அதைக் கண்டமாத்திரத்தில் அவன் நடுங்கி நாக்கைத்துழாவி, திடுக்கிட்டிரங்கித்தேம்பி, தான் கைப்பிடித்த கொடிகளை விடாது மேலேயேறிப் போய்விடலாமென்று தைரிய சந்தோஷங்கொண்டு மேல்நோக்கினான்.

அந்தக்கொடிகளின் பேரில் தற்செயலாய் எண்ணிறந்த கால்களுந் தலைகளுஞ் சிறைகளுமுடைய அளவற்ற கோலாகல வண்டுகளும் தும்பிகளும் மொய்த்து, இவனைப்பற்றி விறலிறென்று அடித்து மோதுவதாயின. அம்மோதலினால் வேலாயுதம்பட்டு வீழ்ந்தவனைப்போற் பொருமலடைந்து அயர்ந்து உன்மத்தனானான். அந்த வேளையில் அடுத்தகொடிகளிற் கட்டியிருந்த தேன்கூடுடைந்து, தித்திப்பாகியதேன் தாரையாய் ஒழுகுவதாயது. அப்போது இவ்வளவு கவலையுற்றிருக்கிற இந்தப் பிராமணன் பசியினாலுந் தாகத்தினாலும் வருந்தி வாடியிருப்பவனாதலால், அந்த வண்டுகள் வாயினாற்சேர்த்த தேனைத் தன் வாய்திறந்து பிடித்துக் குடித்து நாவினாற் சுவையறிந்தான்." இப்படியிவன் சுவைத்துக்கொண் டிருக்கும் போது வெள்ளையுங் கறுப்புமாகிய இரண்டு எலிகள் இவன் பிடித்திருந்த கொடிகளை அடியிற்கடிக்க, அதைப்பார்த்து நாவறண்டு நாடி யொடுங்கி நலிந்திருந்தான்."

இப்பிராமணன் அநுபவித்த இன்பமும் துன்பமும் பார்த்தீர்களா! இப்படியே யிருக்கின்றது இச்செகத்திலுள்ள ஜீவர்களனுபவிக்கு மின்பதுன்பங்கள்.

* * * *

மேலேசொல்லிய இந்தஉவமையில்உவமானங்களாக நின்றகாந்தாரவரையென்பது-மெய்மையாகிய மோட்சமென்னும் முத்திஸ்தானம். இவன் நோக்கிப்போன காடென்பது - இந்தப் பிரபஞ்சம். தப்புவழியாகச் சென்றது - தீவினைவழி; ஒப்புவழி நாடியோடியது-நல்வினைவழி. தாறுமாறாகிய காடுகளெல்லாம்-வேறுவேறாகிய பேத உயிர்கள். பலவிதமாகிய மிருகங்களெல்லாம்-அழகை யழிக்கவந்த நோய்வியாதிகள். மானி

டப் பெண்ணாக வந்தவள்-விகுர்தாகிர்தி யென்னு மாயை. உற்பத்தி-சஞ்சரித்தல்-ஓய்ந்தொடுங்கல்-என்னும் இம்மூன்றுங்கூடிய அற்பவுடலானது, ஆலமரம். அம்மரத்திற் படர்ந்திருந்த கொடிகள்-பலவித ஆசைகள். கிணற்றினுள்ளிருந்த கரும்பாம்பென்பது-தென்றிசையிலிருந்தெழுந்து உயிர்களைப் பிடிக்கவருங் கூற்றுவன். எலிகளிரண்டும் - பகலும் இராத்திரியும், யானையானது - ஒருவருடம். முகங்களாறும் - ஆறுரிதுக்கள். அந்த யானையின் நிறமிரண்டும்-உத்தராயனம் தக்ஷணாயனம். கால்கள் பன்னிரண்டும்-பன்னிரண்டு மாதங்கள். ஊழ்வினையின்படிக்கு நேரிடுங் கோரிக்கை - தேன்துளிகளாம். இப்படி அத் தேன்துளிகளை யருந்தி ருசிபார்த்துக் களித்தவை - உயிர் விடையங்கள். பிராமணனென்றது - ஆன்மா. துரத்திவந்த துஷ்டமிருகங்களும், வழியில் வந்த பெண்ணும், கிணற்றிலிருந்த பாம்பும், கரையினின்ற யானையும், மோதியடித்த அளிகளும், கொடியைக் கடித்த இரண்டெலிகளும், காமம்-குரோதம்-லோபம்-மோகம்-மதம்-மாச்சரியம்-என்னுமறுவிதப் பகைகளாம். இந்த ஆறுவகையாகிய பெரும்பகைகளுக் குட்பட்டடங்கி, அச்சமுற்றிருந்து, நேரிட்டொழுகிய தேனைச் சுவைத்தல் இந்த உயிர்க்கடுத்த இயல்புகளாம்.

## காகிதம் செய்யல்.

இவ்விந்தியாவில் பிரசுரமாகிவரும் வர்த்தமானப் பத்திரிகைகளில் சிலவும் கெஜத் (Gazette) என்று சர்க்கார் பிரசுரிக்கும் பத்திரிகைகளும் இத்தேசத்தில் செய்யப்படும் காகிதத்தினாலேயே அச்சிடப்படுகின்றன. அங்கிலேய தேசத்துக் காகிதங்கள் பெரும்பாலும் துணியினால் செய்யப்படுகின்றன. ஆதியில் காகிதம் வேலையாட்களைக்கொண்டு கையினாலே செய்யப்பட்டுவந்தது. இப்பொழுது பெரும்பாலும் யந்திரங்களாலே செய்யப்பட்டுவருகிறது. காகிதம் செய்யும் யந்திரத்தில் பல பிரிவுகள் உண்டு. ஒன்று துணிகளைவெட்டி துண்டுதுண்டுகளாக ஆக்கும்; ஒன்று அதைக் கழுவி சுத்திசெய்யும்; ஒன்று கழுவிய துணியைப் பசைபோலத் திரட்டும். மற்றொன்று காகிதமாக்கும். இங்கிலாந்திலும் இந்தியாவிலும் செய்யப்படும் காகிதத்தின் மூலவஸ்து ஒன்றல்ல, மாறுபடும். மாறுபடினும் இந்தியாவில் காகிதங்களை அதிநேர்த்தியாகச்செய்வது கூடாமலிருப்பது ஏனோ அதன் காரணம் நாம் அறிந்ததல்ல; விடாமுயற்சியின்மை என்றே அனுமானிக்கிறோம். காகிதம் செய்வதற்குவேண்டிய புற்பூண்டுகளும் இந்தியாவில் இல்லாதிருக்கவில்லை.

(Rousa) ரௌசா எனும் பூண்டு இந்தியாவின் பல இடங்களில் அகப்படக்கூடியதே. தென் இந்தியாவில் அது அபரிமிதமாகக் கிடைக்கும். மானிடர் வாழும் இடங்களிலல்ல, மலை, வனம், வனாந்திரங்களில் உண்டு. அங்குள்ள அந்த விதைகளைச் சேகரித்துவந்து கல்கத்தாவிலும் லக்னோவிலும் விதைத்து பயிர்செய்து வருகிறார்கள். ஒரு அணா கிரயத்துக்கு வாங்கிய 24 பவுண்ட் கொண்ட 12 சேர் பூண்டிலிருந்து 60 தஸ்தா காகிதம் செய்யப்படுகின்றது. அந்நாரிலிருந்து காகிதம் செய்வதற்குமுன் ஒருவித எண்ணெய் இறக்கப்படும். [Autearis Saccidira] எனும் ஒருவித மரப்பட்டையினின்றும் மோடா காகிதங்கள் செய்யப்படும். ஆஸ்திரியா [Austria] தேசத்தின் ஓர் இடத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பிரதான காகித யந்திரசாலையில் இலைகளின் சருகினால் பெரும்பாலான காகிதங்கள் செய்யப்படுகின்றன. இது மாத்திரமோ? அல்ல, பின்னும் உண்டு. இலங்கைத் தீவிலுள்ள கூந்தற்பனை ஓலையாலும் காகிதம் செய்கிறார்கள். நேபாளம் [Nepaul], காகேஷியா [Cacasia], சிலஹட்டி [Sylhet] என்னுமிடங்களில் முளைத்து எழும்புகிற காகிதப் பூண்டினின்றும் செய்யப்படும் காகிதம் மிக்க பலமுள்ளதென்றும், நீடிய காலந்தனிலும் வேறுபாடு அடையாததாயிருப்பதாகவும், பூச்சி புழுக்களால் எரிக்க மாளாததா யிருப்பதாகவும் [Dr. Royle] ராயில் பண்டிதர் சாக்ஷி பகருகிறார். அந்தக் காகிதத்தில் ஒரு விசேஷமுண்டு. அது மூன்று மாதிரியான தாள்களாகச் செய்யப்படும். அதில் முதல்தரமுள்ள மேலான காகிதம் ஒரு ரூபாவுக்கு 80 காகிதமும், இரண்டாந்தரம் 100-ம், மூன்றாந்தரம் 160-ம் கிடைக்கும். இதைப்பற்றி (Dr. Royle) ராயில் பண்டிதர் மாத்திரமல்ல, [Cums Bell] கம்ஸ் பெல் பண்டிதரும் விசேஷித்துப் பேசுகிறார். இதைச்செய்யும் விதத்தைக்கண்டறியும்படி நேபாளத்திற்கும் சீனாதேசத்திற்கும் ஒரு பண்டிதரை அனுப்பினதுண்டு.

அதே 'ராயில்' பண்டிதர் ஓர்வித வாழையிலிருந்து மிகநேர்த்தியான காகிதம் உண்டாகிறதென்று கண்டு விசேஷித்துப் பேசுகிறார். அவர் இந்தியாவில் விளையும் மூங்கிலினால் காகிதம் உண்டாகிறதென்றும் எழுதியிருக்கிறார். முக்கியமாய் மூங்கிலினின்றே காகிதம் ஆவதாயிருப்பதினால் சீனாதேசத்தார் மூங்கிலை விருத்திசெய்து வருகிறார்கள். இத்தேசத்தில் அப்படி விருத்திசெய்ய ஏதும் அதிக கஷ்டம் எடுத்துக்கொள்ள



வேண்டுவதில்லை. வேண்டும்பொழுது மூங்கிலை வெட்டி எடுத்துக்கொள்ள வெட்டுண்ட தண்டிலிருந்து ஒன்றுக்குப்பத்தாகப் பெருகிப்பல்கும். மூங்கிலினால் காகிதம்செய்வதெப்படி? எப்படி எனில், மூங்கிற்றண்டுகளை சுண்ணாம்பு ஜலத்தில் குறித்தநாள்மட்டும் நனையவிடுவதினால், அது எதுவாகிப்பலப்படும். பிறகு அதை மேலே சொன்னபடி காகிதம் செய்யவேண்டும். [Rouledge] பண்டிதர் எழுதிய கிரந்தத்தில் மூங்கிலினால் காகிதம் செய்யும் விதத்தைப்பற்றி தீரத் தெளிய எழுதியிருக்கின்றனர். அவர் கூறியபடி ஸவிஸ்தாரமாயிங்கு எடுத்து எழுதினால் மிகப்பெருகும். ஆகையால் சுருக்கமாய் எழுதப்பட்டது. மற்றெந்தப்பூண்டிலிருந்து செய்யக்கூடிய காகிதத்திலும் மூங்கிலிலிருந்து ஆகும் காகிதம் மேன்மையாகவும் நயமாகவுமிருத்தலால் அங்கங்கே உள்ள மூங்கில்களை விருத்திசெய்வது நலம். இந்தியாவிலோ மூங்கில் ஏராளமாயுண்டு. காகிதம் செய்யும் முறைகளைப் பற்றியும், அதற்காக தற்காலம் அமைத்திருக்கும் அதிசயமான யந்திரங்களைப்பற்றியும் விவரித்தெழுதின் எவ்வளவோ விசித்திர விநோதமாயிருக்கும். ஆனால் அந்த யந்திரங்களின் அமைப்பையும் அவை வேலைசெய்யும் அற்புதத்தையும் விளக்கிக்காட்டப் படங்களும் யந்திரங்களின் மாதிரிகளுமின்றி அவைகளைப்பற்றி விவரணங்கூறுவது விளங்காது. ஆகையால் இவ்விஷயத்தைப்பற்றி இந்தமட்டோடு சொல்லி நிறுத்தினோம்.

M. C. K.

## “அன்னி பெஸன்ட்” அம்மாள் சரித்திரம்.

இந்துதேசம் ஒரு காலத்தில் ஸரஸ்வதியின் ஆலயமாயிருந்தது எல்லோருக்கும் தெரியும். †“மயில்கள் ஹோமாக்கினியை அழகிய சிறகால் விசிறிமூட்ட, குரங்குகள் வயது சென்ற கண்ணில்லாத பெரியோர்களை தங்கள் ஆசிரமங்களுக்கு நதிக்கரைகளிலிருந்து அழைத்துப்போக, கிளிகளும் மற்றப் பக்ஷிகளும் வேதங்களை உச்சரித்து, உயர்ந்ததத்துவங்களை உரைக்க, நம்முன்னோர்கள், ஆசிரமங்களில் கவலையற்று நிரம்பக்கற்றும், அன்போடு சிஷ்யகோடிகளுக்குக் கற்பித்தும் வந்தகாலையில்,” ஸ்திரீஜாதியில் சிறந்த வித்துவான்கள் உண்டாயினர். அன்றியும் சமீபகாலங்களில் கூட இங்குமங்கும் சிற்சில பண்டிதர்கள் இருந்தார்கள் எனத் தெரிகிறது. தஞ்சாவூர் சமஸ்தானத்தில் **ரத்தினகேட தீட்சதர்** எனப்பெயர்பெற்ற பண்டிதர் வீட்டுக்கிளிகள் கூட ‡லோகாயத மதம், நாஸ்திக மதம் முதலிய மதங்களைக் கண்டிக்குமென லோகவதந்தியுமன்னியில் அவர் எழுதிய *கிரந்தங்களிலும் காண்கிறோம். இப்படி அறிவற்றதெனக்கொள்ளும் அற்பக்கிளிகள் இவ்வளவு தேர்ச்சியடையுமானால் ||“சிட்சை வேண்டாத வித்துவான்களெனக்” கவிகூறும் ஸ்திரீகள் அறிந்தது அதிசயமா? இனி அறிவது அசாத்தியமா? “பேரீச்சையைப் பார்த்து நின்ற பனையும் பேரீச்சையாய் மாறிவிடுமென்” துருக்கர்களுக்குள் ஓர் பழமொழியுண்டு. படித்தவர்கள் மனைவிகளும், அவர்கள் வீட்டு ஸ்திரீகளும் படித்தவர்களாக வேண்டியது சஹஜம்தான்.

ஜநகமகாராஜசபையில் பிருமவித்தையில் கற்றுணர்ந்தவர்கள் அடிக்கடி ஸம்வாதம் செய்வதுண்டு. ஒருநாள் அந்த சபையில் கார்கி என்ற ஸ்திரீரத்தினம் எழுந்து வேதாந்தத்தில் ஓர் கேள்விகேட்க அதை ஒருவரும் அறியாமல் நிற்க, அந்த தேவி உத்திரம் கொடுத்ததாக ஓர் உபநிஷத்து சொல்லுகிறது.

மற்றொரு உபநிஷத்து ஒரு இருஷிபத்தினி கேட்ட கேள்விக்கு பதில். அது கேள்விகேட்ட பெருமாட்டியின் பேராலேயே விளங்குகிறது. யாஜ்னவல்கி மகாமுனிவர் வயதுகாலத்தில் வானப்பிரஸ்தாசிரமம் சேரவேண்டுமென்று கருதி தன் தருமபத்நி **மைத்திரேயி**யினிடத்தில் விடை பெற்றுக்கொண்டார். “ஏதோ அன்னவஸ்திரத்திற்கு வேண்டியது வைத்திருக்கிறேன் சுகமாய் காலக்ஷேபம்செய், போய்வருகிறேன்” என்றார். அதைக்கேட்ட மனைவி துக்கமடைந்து “இவ்வளவு ஞானமும் கீர்த்தியும் பெற்ற புருஷனோடு இவ்வளவு நாள் வாழ்ந்திருந்தும் இவ்வளவு முட்டாளாகப் போகவேணுமா? காக்கையைப்போல் வயிறு வளர்ப்பது தானோபெரிது? பணமும் காசு மிருந்தால் இனி ஜந்மம் உண்டாகமாட்டாதா? மறுபிறப்பில்லாமலிருக்க என்ன சாதனமோ அதுவே பெரியது. ஞானமேபோதிக்கவேண்டும்” என்று கேட்டுக்கொண்டாள். இப்படி **மைத்திரேயி** உபநிஷத்தில் காணலாம்.

இவ்வாறு ஆதிகாலங்களிலும் போஜராஜன் நாளில் தாழ்ந்த ஜாதி ஸ்திரீகள் கூட ஸம்ஸ்கிருதத்தில் கவனம் செய்ததாகச் சொல்வதுண்டு. காவேரிதீரத்தில் வீட்டு வேலைகள் செய்து கொண்டே கவனம் செய்த வித்துவான் மனைவியும், பற்பல லோகவசனங்களாய் வழங்கும் ஸ்லோகங்களைச் செய்த காசிதேசத்து லெட்சுமிதேவியும் உதாரணங்களாம். தரும சாஸ்திரத்தில் பிரமாணமாய்க் கொள்ளும் **பாலம்பட்டா** தேவியையும், கணித சாஸ்திரத்தில் பெயர்பெற்ற **லீலாவதி** தேவியையும் தமிழ்ப் பாஷைக்கு அலங்காரமான ஔவையையும் பற்றிச் சொல்வது அனாவசியம். இப்படியிருக்க **சீதாதேவியார் ஸ்ரீராமருக்கு** பற்பல இடங்களில் இதிஹாஸங்களோடு சொல்லும் நற்புத்தியை நாம் இங்கு வரைவது அசாத்தியம். ஆயினும், இவை கலிகாலம் முற்றுவதற்கு முன்னல்லவோ? என்று சொல்லலாம். இக்கலிகாலத்திலும் மலையாள தேசத்து ஸ்திரீகளின் படிப்பும், அவர்களால் சில வருஷங்களாக இயற்றப்பட்ட நூல்களும், 20 வருஷமுன் பங்காள தேசத்தில் 17 வயது பூர்த்தியாகுமுன், இங்கிலீஷ், பிராஞ்சு பாஷைகளை செம்மையாய் அப்பியசித்து அவைகளில் ‘தங்கள் பாஷைக்கு இந்திய தேசத்துப் பெண் பெருமை விளைவித்தாளெனச்’ சொல்லும்படியான காவியங்களை இயற்றின **தோருதத்தை** என்னும் இளம்

† Kadambari. ‡ Materialism.
* Rukmani Kalayanam. || Kalidas.

பிராயத்திலிறந்த பெண்ணும், ஸம்ஸ்கிருத பாஷையில் தேர்ந்த மற்றைய இக்கால ஸ்திரீகளும் ‘கலியாணமும் கல்விக்குக் கேடு இல்லை’ யெனப் போதிக்கப் போதும்.

இவை இப்படியிருக்க, ‘பேதைமை என்பது பெண்டிற்கழகு’ என்று,—சீனதேசத்தார் ‘நொண்டி நடப்பது நங்கையர்க்கழகு’ எனக்கொண்டு பெண் குழந்தைகளின் காலை நெருக்கிக் கட்டிவைப்பதுபோல, நாமும், பிள்ளைகளானால் ஐந்து வயதில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி, பெண்ணானால் விளக்குமாறைக் கையில் கொடுத்து கூட்டிப்பெருக்கச் சொல்லுகிறோம்!

இந்த ஸ்திதியிலிருக்கும் பெரும்பான்மையான இந்துக்களுக்குத் தங்கள் தேசத்து ஸ்திரீஜாதியில் சிறந்தோர்களை ஞாபகப்படுத்தவந்தவள்போல் கொஞ்சநாள்முன், கேட்போர்க்கு மயிர்கூச்சலடையும்படி நாஸ்திகமதம்கூடாதெனவும், ஈசுவரபக்தி வேணுமெனவும் உபந்நியாசம் செய்த **அன்னி பெஸன்ட் அம்மாளின்** சரித்திரத்தை எழுத முயல்வோம்.

நம்மூரில் இந்த அம்மாளின் செய்கையையும் பேச்சுத்திறமையையும்கேட்ட ஓர் யதீசுவரர் ‘இந்த அம்மாள் ஒரு உத்தம பிராமணீயாயிருந்திருக்கவேண்டும். ஏதோ தோஷத்தினால் வேறு ஜாதியில் வேறு தேசத்தில் பிறந்தாள். வேதங்களில் கேள்விப்பட்ட **கார்கி, மைத்திரோயி**, விசுவாவரா முதலியவர்களில் ஒருவள் புதிதாய் அவதரித்தது போலவே யிருந்தது.’ என்றார்.

அன்னீ பெஸன்ட் 1847-ம் வருஷம் ஒரு ஐரிஷ் ஜாதியைச்சார்ந்த குடும்பத்தில் பிறந்தாள். பாலியம் முதல் மதவிஷயங்களில் அதிக ஆவலுடையவளாயிருந்தாள். தகப்பனார் அதிகமாய் வேதாந்த விசாரம்செய்தவர். அவருடைய படிக்கும் விதங்களையும், அவர் தன் தாயாருக்கு புஸ்தகங்களிலிருந்து நல்ல கதைகளும் பற்பல விநோத விஷயங்களும் சொல்வதையும் தன் தாயினிடத்திலிருந்து வெகுவாய் இந்தப் பெண் கேட்பாள். அவ்வாறே படித்து எல்லாவற்றையும் அறியவேணுமென்ற ஆசை மனதில் உண்டாயிற்று. வயது செல்லவே ஏதாவது தனக்கு இஷ்டப்பட்ட புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு ஒருமரக்கிளையின்மேல் உட்கார்ந்து பசிதாகம் தெரியாது நாள்முழுவதும் படிப்பாள். அப்படி வாசிக்கும்போது நீலமாக சமுத்திரம்போல் அகண்டமாய் விஸ்தரித்திருக்கும் வானமும் அதிலோடியாடித்திரியும் கப்பல்கள் போன்ற மேகங்களும் தவிர இவளுக்கு இந்த ஜகத்திலொன்றும் இருப்பதாகவே தெரியாது. இவ்வாறு படிப்பினாலும், சுபாவத்தினாலும் அதிக பக்தியுள்ள பெண்ணாய் வளர்ந்து வந்தாள். ஒருகாலத்தில் “ஐயோ சற்றுக் காலம் பிந்தியல்லவோ பிறந்துவிட்டோம். பக்தவிலாஸத்தில் சொல்லியிருக்கும் பெரியோர்களைப்போல் மதத்துக்காக உயிரைக் கொடுக்க இக்காலத்தில் கூடவில்லையே!” என்று விசனப்படுவாள். இத்தோடுங்கூட கௌரவம் கொஞ்சமும் தாழாமல் நடக்கவேணுமென்ற வாடிக்கை அவளுக்கு ஆதிகால முதல் உடம்போடு ஒத்தப்போயிற்று. பட்டினியாகப் பிராணனை விட்டாலும் விடுவோம் ஒரு பொய்சொல்ல மாட்டோம். தன் உடம்பினுள் கொடிய தாபமிருக்கலாம்: மற்றோர் பார்ப்பது முகத்தில் புன் சிரிப்பே தவிர வேறில்லை. இவ்வாறாக வளர்ந்துவந்த இப்பெண்ணுக்கு வரும் தசைகள் அனேக அற்புதமானவைகள்.........

வயது இருபதாயினும் கலியாணம் பண்ணிக்கொள்வதில் திருஷ்டி இல்லை. “மற்றோர்கள் நம்பினாலும் நம்பலாம் இல்லாவிடினும் இல்லை. தனக்கு அந்த வயதுக்குறிய காமதாபங்கள் சிறிதேனும் காணப்படவில்லை” யென அவளே சொல்லியிருக்கிறாள். ஆயினும் வீட்டிலுள்ளார் அவளுக்கு விவாகம் செய்துகொள்ளும் காலமாயிற்றென்று பிரஸ்தாபித்தபோது தான் ஒரு வைதீகரை மணம் புரிந்தால் தன் ‘மனமொத்தபடி கடவுளைச் சேவித்துக் காலம் கழிக்கலாம்’ என்று நினைத்து அதிக யோஜனை செய்யாமல் ஒருவரைக் கலியாணம் பண்ணிக்கொண்டுவிட்டாள்.

ஆனால் அந்தக் கலியாணம் சுகத்தை உண்டுபண்ணவில்லை. தம்பதிகளுக்கு ஸௌஜந்நியமில்லை. அவர் வைதிகராயினும் வீட்டுக்காரியத்தில் அவர் அதிகாரம் தன் கையிலிருக்கவேண்டுமென்று கருதி ஒவ்வோர் அணுவிலும் விசாரித்துக் கண்டிக்கவே, குடும்பகாரியங்களில் செட்டாக இருக்க அறியாதவளானதால் அது இவளுக்கு மனம் ஒவ்வாது போயிற்று. தன் வீட்டு வேலைக்காரிகளைக் கண்டிப்பதென்றால் இந்த அம்மாளுக்கு பிரம்மப் பிரயத்தினம். வெளியில் சபைகளில் பேசுவதானால் கொஞ்சமேனும் பின் தங்காது பேசுவாள். வீடென்றால் ஜலத்தைவிட்டு கரையில் வந்த மீன்போல் சக்தியற்றவளாய் வேலைசெய்யாத வேலைக்காரியை ஏன் செய்யவில்லையென்று கோபிக்க மனந்துணியாமல் நிற்பாள். அதிக உதாரமான சுபாவத்திற்கு ‘சுக்குசெட்டி’ சுபாவம் எப்படி சரிவரும்? நெருப்பும் பனியும்போலத்தானிருக்கும். இதுமாத்திரமல்ல, இன்னுமிருக்கிறது. இது நாடகத்தின் தலைப்புத்தான். இப்படியிருக்க சீக்கிரத்தில் இரண்டு குழந்தைகள் உண்டாயின. ஆணொன்று பெண்ணொன்று. அவையிரண்டும் அதிக வியாதியாய் விழுந்துவிட்டன. இளைய பெண்மாத்திரம் சௌக்கியமடையாது வெகுநாள் துன்பப்பட்டது. குழந்தையின் துன்பத்தைத் தாங்காது கையில் வைத்துக்கொண்டே இராப்பகலாய் விழித்து வெகு மாதங்கள் கழித்தாள். இருமலினால் ஒருபக்கம், பின்னும் வீக்கத்தினால் ஒருபக்கம் அந்த அற்ப தேகம் பதறிநின்றது. கிறிஸ்துவை தெய்வமாகக்கொண்ட இந்த அம்மாளைவிட பக்தியில் சிறந்தவள் யாருமில்லை. அப்படிப்பட்ட பக்த சிரோமணி அந்தக்கரணபூர்வமாய் ஆண்டவனைப் பிரார்த்தித்தும் இவ்வளவு கொடுமையான வியாதி இந்த நிரபராதியான அற்பக் குழந்தையை கொல்லாமல் இடைவிடாது வருத்தி வதைக்கவே அந்த அம்மாளின் பக்தி கலங்கத் தலைப்பட்டது.

அவளுக்குச் சந்தேகம் தலைப்பட்ட மாதிரியை எவ்வாறென்று சொல்லுவோம்! “குழந்தைகளோ பாபமென்பது இன்னதென்று அறியக்கூடியவைகளல்ல. *‘அவைகளுக்கு மனதென்பதே கிடையாது.’ அப்பேர்ப்பட்ட களங்கமில்லாக்குழந்தைகள் இவ்வாறு அளவுசங்கையில்லாத உபத்திரவத்தை அனுபவிப்பதென்றால் தருமம் அதருமம், பாபம் புண்ணியமென்பதற்கு வித்தியாசமேயில்லாமல் போகிறதே! கருணையுடைய கடவுள் ஒருவர் இருந்து நன்மை தீமைக்குப் பலனளப்பாரானால் பாபமற்ற ஸ்படிகம்போன்ற சுத்தமான இச்சிறு பாலனுக்கு மலைபோன்ற வியாதிகளும் துன்பங்களும் வருவானேன்?” என்று சிந்தித்தாள்.

“‘வானம் நழுவிக்கீழேவிழுந்தாலும் விழும், நியாயம் பிறழாது, தருமத்துக்கு அழிவு வராது’ என்ற பெரியோர் வசனம் என்னாயிற்று?” என்று இவ்விதமாகப் பலமுறை சிந்திப்பாள்.

சீதாதேவியைக் காட்டில் காணாது துக்கக்கடலில் ஆழ்ந்து ஸ்ரீராமர் ‘உலகத்தில் தருமமுண்டா? தேவதைகள் உண்டா? தருமத்தைக் காப்பாற்றும் தெய்வம் உண்டா?’ எனப் பலவாறு சந்தேகிக்கத் தலைப்பட்டார் என எல்லோருக்கும் தெரியும்.

இவள் குழந்தைக்கு இப்படி உண்டான பெருந்துன்பத்தையும், உண்மையான பக்தியோடு செய்தும் வீணாகப்போன பிரார்த்தனைகளையும் யோஜிக்க யோஜிக்க உள்ள பக்தி கலைந்து சந்தேகம் முற்றி இந்த மனப்போராட்டத்தின் முடிவாய் தான் நம்பியிருந்த தெய்வத்தையும், தான் மணந்த புருஷனையும் விட்டுப் பிரிந்தாள். இப்படி தன் மதம் நாஸ்திகம் எனத் தெரியுமானால் தன் கணவனுக்கு வைதீகப்பிழைப்பு கெட்டுப்போம்; இல்லையானால் தன் மனதிலுண்டான சந்தேகத்தை ஒளித்து பாசாங்கு செய்யவேணும். பொய் சொல்லுவோமா? நம் சுகத்தையும், மற்றவர்களிடத்திலுள்ள பிரியத்தையும், தாயையும், தந்தையையும், கொண்ட கணவனையும் இழப்போமா? என்று இருபுறமாய் மனது இழுக்கப்பட, முடிவில் உண்மையே பெரிது எனத் தீர்மானித்து தன் மதத்தை வெளியிட்டாள். கணவனையும் விட்டாள். இதோடுமட்டுமன்று. “இனி எனது என நினைக்கும்” நன்னடவடிக்கைக்காக உள்ளபேரும் நஷ்டமாகும், ஜனவாக்கு வெவ்வேறு விதமாகத்தூற்றும், என்னசெய்தாலும் எதை இழந்தாலும் “கட்டுரை இழக்கிலேம்” என்றாள். இதை வாசிப்போர்க்கு,

“பதி இழந்தனம், பாலனை இழந்தனம், படைத்த
நிதி இழந்தனம், இனிநமக் குளதெனநினைக்கும்
கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேம்.”

என்ற சத்தியசந்தனர் வசனம் ஞாபகத்துக்குவரும்.

‘பழுத்த பழத்தையே வண்டுகெடிக்கும்,’ என்றபடி உயர்ந்த மனதுக்கே சந்தேகம் ஜனிக்கும். அவள் தெய்வமில்லை யெனச்சொன்னது, வரம்பற்று நடக்கலாமென்னும் எண்ணத்தினால் அன்று என்று அவள் செய்கையே சொல்லும். அவள் பட்ட மனத்துயரம் அளவிடமுடியாது.

ஆனாலும் தெய்வச்செயலால், இன்னொரு காலத்தில் ‘மனிதன் அகாரணமாய் துயரப்படுவதற்கு உண்மையில்லை; விசாரித்தால் காரணங்கள் காணப்படும். சிறு பாலனும் ஜந்மாந்தரத்தில் செய்த கருமத்தை புஜிக்கிறான்’ எனும் வசனங்கள் இந்த அம்மாளே சொல்லக்கேட்போம்.

கடவுள் கொஞ்சகாலமாத்திரம், மேகத்தில் மறைந்த சந்திரன்போல் காணப்படாதிருந்து, உடனே பூரணமாய் அவள் மனதில் பிரகாசிப்பார். மத்தியில் கிரகணம் விடும்வரையில் தெய்வமில்லையென தானறிந்ததாக நினைத்ததை பகிரங்கமாகச் சொல்லத்தலைப்பட்டாள். ஆனால் சிலகாலம் தெய்வமில்லையென்றாலும் இவள் நடவடிக்கையில் வைதிகர்களுக்குப் பின்தங்கினாளோவென்றால், சிறிதேனுமில்லை; அவர்களுக்கு மேலாகவே நடந்துவந்தாள். ‘வேலை முடிக்க எண்ணம்கொண்ட வேலைக்காரன் தனக்கு துணையிருந்தால் ஒருமடங்கும் துணையில்லாவிட்டால் இருமடங்கும் வேலைசெய்து முடிப்பதுபோல், கருணையுள்ள ஒரு தெய்வமிருந்து நல்லவர்கள் துன்பத்தை நிவர்த்திப்பாரானால் மனிதர்கள் பாரம் குறைவு. இல்லாவிட்டால் நல்லோர்கள் இன்னும் இரட்டிப்பாய் உலகத்திலுள்ள கஷ்டத்தை நீக்க யத்தனிக்கவேணும்’ என நினைத்தாள். இது நல்லோர்களின்வழி.

“சீரியர்கெட்டாலும் சீரியரே.” இப்பேர்ப்பட்ட மனிதர்கள் நாஸ்திகர்களானால் அவர்கள் செய்யும் நன்மை இரண்டு பங்கே யன்றி, அதில் குறைவில்லை. ஆஸ்திகர் என்று பெயர்வைத்துக்கொள்பவர்களைக் காட்டிலும் சில விஷயங்களில் தாழ்விலையென்றும் சொல்லலாம்: தெய்வபக்தியுள்ளவர்கள் நன்மைசெய்தால் தெய்வம் சந்தோஷித்து சுவர்க்காதி போகங்களைக் கொடுப்பார் என்று புண்ணியம் கட்டிக்கொள்ளுவார்கள். இவர்களோவென்றால் யாதொரு பிரயோஜனத்தையும் உத்தேசிக்காது நன்மை செய்கிறார்கள். தெய்வமில்லாதவர்களுக்கு சுவர்க்கமேது, சுகமேது. பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் செய்யும் தருமமே தருமம். “உபகாரம் பண்ணினவனுக்குக் கொடுப்பதும், உபகாரம் இனிப் பண்ணுவானென்று கொடுப்பதும் கொடையல்ல” என்று அர்ஜுனனுக்கு சுவாமி உபதேசிக்கிறார். அவ்வாறே இந்த தேவி ஏழைகளுக்கு எல்லாவிதத்தாலும் ஒத்தாசை செய்து வந்தாள். அவள் தருமத்திலொன்று இங்கு சொல்வோம்: கடைகளில் பெரும்படியாய் வாங்கி சொற்ப விலைக்கு ஏழைகளுக்கு ஆகாரம், கறிமுதலிய விற்பது ஒன்று. அதனால் இவளுக்கு நஷ்டமிராது, அவர்களுக்கு லாபம் மிகுதி. ஏழைகளுக்கு சொற்ப வட்டிக்கு பணம் கொடுப்போர் உபகாரம் உபகாரமே. இலகுவாயிருப்பதால் வெகு பேர்வந்துவாங்கி கொடுப்போர் நஷ்டத்தை நிவர்த்திப்பார்கள். ‘கயத்தூர் சீனிவாசய்யர்செய்யும் லட்சபோசனமும் புண்யந்தான்’—அதற்குப்பாத்திரமற்ற சில சோம்பேரிகளும் சேராத பட்சத்தில்; அந்த தருமத்திற்கு கொஞ்சமும் தாழ்ந்ததன்று நாம் மேலேசொல்லிய தர்மம். இவ்வாறு தருமம்செய்து *“ஜனங்களை சௌக்கியப்படுத்துவது

* Socrates.

* Sanskrit Saying.

தான் ஈசுவரனை நன்று வழிபடுதல்" என்பது நம் பெரியோர்கள் வசனம். அன்றியும் உண்மையே தெய்வமெனக் கொண்டது தெய்வத்தைத் தொழுதலாகும். †பரமாத்மா 'ஸத்தியகாமன்' அல்லவா? "எவ்வாறு எவன் பக்தியாய் யாரைத் தெய்வமெனப் பூசித்தாலும் அவன் என்னையே பூசித்ததாகக்கொள்வேன், அவனைக் காப்பாற்றுவேன்" என்ற பகவான் சொற்படி இவர்கள் துர்க்கதியடையார்கள். "சத்தியமே, தெய்வம், சத்தியமே இவ்வுலகத்தைத் தாங்குகிறது. அதினால் ஆகாயம் உயர நிற்கிறது. அதினால் சமுத்திரம் பிறழாது நிற்கிறது. ஆகாயத்தில் கிரகங்கள், நட்சத்திரங்கள் தங்கள் நெறி தவறாததும் அதனாலேயே" என விஷ்ணு ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க ஒருவள் ஸத்தியத்தையும், பூததயையும் கைக்கொண்டதை அறிந்து நாம் இகழ்வது நமக்கே இகழ்ச்சி. அவளை வெகுவாய் நிந்தித்தவர்கள் அனேக கோடி. "ஸத்தியமே தெய்வம்" என்றதையும் "ஏழைப்பிச்சை ஈசுவரபூஜை" என்றதையும் சிறிதும் அறியாத தகாதவர்களும் அவளை இகழ்ந்தார்கள்.

இப்படியிருக்கும் நாளில் நாஸ்திக மதம் நீங்கும் நாள் சமீபித்தது. ஒருக்கால் ‡பிரம்மஞான சபையைச் சார்ந்த புஸ்தகம் ஒன்று இவள் பார்வைக்குவர நேரிட்டது. அதை வாசிக்கவே தான் இதுவரையில் உண்மையெனக்கொண்ட நாஸ்திகம் தவறு என்று தோன்றிற்று. வரும் பூகம்பத்திற்கு அறிகுறியான அற்ப நடுக்கம்போல் சமுசயம் தோன்றி நாளுக்குநாள் சப்தத்திலும், கோரத்திலும் அதிகரித்து, நம்பின மதத்தை தலைகீழாகக் கவிழ்த்துவிட்டது.

**அப்பர்**, சைவகுருக்களில் வெகு பெரியவராயினும், ஜைநமதத்தில் இருக்கவில்லையா? சைவசிகாமணியான **ஆறுமுகநாவலர்** கிறிஸ்து மதம், மகம்மதிய மதம் இவைகளை அனுசரித்து வந்தது குறையா? குறையானால் அன்னி **பெஸன்ட்** அம்மாள் மதபேதமும் குறைவாகலாம். நாஸ்திகமதம் தகாது என முடித்து இந்த அம்மாள் வெகு பட்டணங்கள்தோறும் சுற்றி 2-மாசமுன் இங்கும், இன்றைக்கும் வட இந்தியாவிலும் பிரசிங்கித்து வருவதை இங்கு ஒருவாறு சொல்ல முயல்வோம். நாஸ்திக மதமென்பது இந்தியா தேசத்துக்குப் புதிதன்று. இங்கு முன்னொருகாலம் 2,000-வருஷங்களுக்கு முன்னிருந்து நசித்த பூண்டு. அவரை முதலிய பூண்டுகள் எப்படி வருஷந்தோறும் குறித்த காலத்தில் பூத்துக் காய்த்து மாண்டு மறுபடியும் அதேகாலம் திரும்பும்பொழுது செடிகள் கிளம்பி, மறுபடியும் முன்போல் தழைத்துப் பூத்துக் காய்க்கிறதோ அம்மாதிரியே அபிப்பிராயங்களும் சிற்சில காலங்களில் வளர்ந்து நசித்து, இருந்தவிடம் தெரியாதுபோய்விடும். மற்றொரு காலத்தில் குறித்த சமயத்தில் மறுபடியும் உண்டாகும். தற்காலத்தில் இங்கிலாந்தில் நாஸ்திக மதம் பிரபலமாய் விளங்குகிறது. அவள் பிரசங்கத்தின் முக்கிய கருத்தை இங்கு விளக்குவோம்: '"தேகமே ஆத்துமா" என்று சொல்வதுதப்பிதம். தேகந்தளர்ந்தால் புத்தி குறைவாகிறது, ஆகாரமில்லாமல் யோசனை ஓடுகிறதில்லை' என்று இப்படிச்சாதிப்பார்கள். தேகம் மெலிந்தும் காலத்தில் ஆகாரமின்றியும் தேகசக்தி குறையக்குறைய புத்தி தீவிரமாயிருக்கிறதென்றால் அவர்கள் பேச்சு என்னாகும். ஆகாரம்குன்றி, நிஷ்பிராணனாயிருக்கும் சிலர் அதிகதூரத்திலுள்ள *வஸ்துக்களைப்பார்ப்பதும், சப்தங்களைக்கேட்பதும் பிரசித்தமாயிருக்கிறது. தேகமன்றியும் மனதுக்கு வியாபாரமிருக்கிறதென்பதற்கு திருஷ்டாந்தமாக இதைச்சொல்லலாம்: தன்பிரியமான சகோதரன் அகாரணமாய் முன்பின் வியாதியில்லாமல் திடீரென 50 மையில் தூரத்தில் இறக்க, மற்ற சகோதரன் வயிற்றில் எரிச்சல்போல் தாபம் கண்டு எது செய்தும் தீராமல் தன் வேலைகளைவிட்டு ஏதோ ஊரில் விபரீதமெனக்கண்டு ஊர்வந்து சேர்ந்தானென அறிந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட விஷயங்களுக்கெல்லாம் எவ்வாறு சமாதானம் கூறுவது? மனது தானடங்கிய தேகத்தைவிட்டும் சஞ்சரிக்குமா என்ற விசாரணை நியாயமெனக் கொள்ளவேணும் என இவ்வாறு சொல்லி, ஆஸ்திக புத்தியைக்கொண்டு பக்தி செல்வதைப் பாராட்டவேணும் எனப்போதித்தாள் †"அங்கிலேயர் முதலில் வேதபுஸ்தகத்தோடு சாந்தமாய் கோபதாபத்தை அடக்கெனப் போதிக்க, அவர்பின் சாமான்களை எடுத்து துணிமணிவிற்க வியாபாரிவர, அவன்பின்னர் கத்தி யேந்திப் பிறர் சொத்தைக் கொள்ளையிடப் போர்வீரர் வர இவ்வாறாக அவர்கள் மதத்தின்பேரைவைத்துக்கொண்டு பணம்முதலியவற்றையேதேடி காலம் கழிக்கிறார்கள். அதுகண்டு மோகிக்காமல், நமக்கு பூர்வீகமாயுள்ள பக்தியும், பரலோகத்துக்கு அனுகுணமான நல்ல நடவடிக்கையும், பூததயையும் கொண்டு கோபதாபமடக்கி வாழவேணு' மென உரைத்தாள். முன்னோர் வழி யனுசரியென்று, வைஷ்ணவனைக் கண்டு சைவன் தூஷிக்கவாவது, இவன் அவனைக்கண்ட மாத்திரத்தில் முழுகவாவது இடங் கொடாள். "உலகம் ஒருகுடும்பம்" என்ற பகவான் வசனப்படி வாழவேணும் என்றாள். விபூதி மாத்திரமணிந்து "வேதாந்தியடா, சொம்பைத்தூக்கி வை" என்று சொல்லும்படியாயிராமல், உண்மையில் துராசைவிட்டு எல்லாஜீவனிடத்திலும் நல்லெண்ணம் வேண்டுமென்றாள்.

அவளும் ஒழிவில்லாமல் நாள்தோறும் வெகு மாதங்காளாக, வெகு ஆயிரம் பேர்களுக்கு உபகாரமாய் உபந்நியசித்துவருகிறாள். சைவர்கள்போல் மாம்சத்தைத் தள்ளிவிட்டாள்.

முன் சொன்னதுபோல, பின்னொருதரம் சொல்லி முடிப்போம். "சத்தியமேதெய்வம், ஏழைப்பிச்சையே தேவபூசை" யென்க.

அந்தப் புண்ணியவதி இந்துதேசத்திலே இருந்து காலங்கழிப்பாளெனத் தோற்றுகிறது. அந்தம்மாள் இந்தியாவில், 'நன்மார்க்கத்தை விட்டு, குடித்தால் எனக்குத்தானே கெடுதல்' என்று சொல்லி இங்கிலீஷ் படித்த சிலர் கெட்டுப்போவதைப்பற்றி நினைத்துப் பேசும்போது கண்ணீர் சொரிவாள். "இந்தியா என்ற உங்கள் தாய் வெகுநாளாய் தூங்கி எழுந்திருக்கும் சமயத்தில் அவள் பிள்ளைகள் அவளுக்கு அநுகூலமாயிராது, கையும் கத்தியுமாயிருக்கிறார்களே" என நினைத்துச் சொல்ல நாவெழாமல், கண்ணீர் விடுவாள்.

ஏ. ஸ்ரீனிவாஸய்யர், பி. ஏ.

† Vedas. ‡ Theosophical Society.

* வசீகரணம் என்ற Hypnotism. *vide* Article on 'Influence of mind' in the Viveka Chintamani for October 1893. சென்ற அக்டோபர் மாசத்து விவேக சிந்தாமணியில் 'மனதும் சரீரமும்' என்னும் விஷயத்தைப் பார்க்க.

† "Life of Gordon."



## உபாத்தியாயர் பக்கம்.

### பிள்ளைகளின் இயற்கை.—I.

(BY A LICENTIATE IN TEACHING.)

அனேக உபாத்தியாயர்கள் தங்கள் வேலையில் பூர்த்தியாய் ஜயமடையாமல் போவதற்குப் பிள்ளைகளின் இயற்கையான குணங்கள் இன்னவென்று தெரிந்து கொள்ளாமலிருப்பதே ஒரு முக்கிய காரணமென்று சொல்லலாம்.

யோசித்துப்பார்க்கும்பொழுது ஒரு சமயல்காரனுக்குக்கூட தான் எந்தப் பதார்த்தங்கள் சேர்த்து பாகம் செய்யப்போகிறானோ அவைகளைப்பற்றி யெல்லாம் தெரியவேண்டியது அவசியமாயிருக்கிறது. தெரியாதவன் அந்தவேலையில் பிரவேசித்தால் அவன் கைபாகம் நன்றாயிராது. இந்த வேலையிலேயே இப்படிப்பட்ட ஞானம் அவசியமாயிருக்கிறது என்றால் சிறு பிள்ளைகளின் மனப்பயிற்சியே முக்கிய வேலையாகக்கொண்ட உபாத்தியாயர்களுக்கு பிள்ளைகளின் லக்ஷணம் தெரிய வேண்டியது முக்கியமென்பதை வற்புறுத்திச்சொல்லவேண்டுமோ.

ஒரு வகுப்பில் 30 பிள்ளைகளிருப்பதாக வைத்துக் கொள்வோம். அவர்களுக்குள் ஒவ்வொரு பையனுடைய லக்ஷணமும் தனித்தனியே உபாத்தியாயருக்குத்தெரிந்திருந்தால்தான் அவரவர்களுக்குத் தக்கபடி ஏற்பாடுசெய்து 30 பிள்ளைகளையும் ஒருங்கு சேர்த்து ஒரே வகுப்பில் கலந்து வித்தியாப்பியாஸம் செய்விக்கத்திறமையுண்டாகும்.

பிள்ளைகளுக்கு இயற்கையாயுள்ள சில லக்ஷணங்களையெடுத்துரைப்பதுடன், அவைகளில் ஒவ்வொன்றையும் உபாத்தியாயர்கள் எவ்விதமாக உபயோகிக்க வேண்டும் என்பதைப்பற்றியும் சற்று சுருக்கமாய் எழுதுவோம்.

1. முதல் முதலாய் பிள்ளைகளுக்குள்ள முக்கியமான ஸ்வபாவகுணம் சுறுசுறுப்புத்தனம். நான்கு நிமிஷங்களாவது சேர்ந்தாற்போல ஒருபையனை ஒரேயிடத்தில் கைகால்களை யசைக்காமல் உட்காரச்சொல்லி கட்டாயப்படுத்தினால் அதைப்பார்க்கிலும் அவனுக்கு வேறுதண்டனை வேண்டியதில்லை. பிள்ளைகள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டும், குதித்து விளையாடிக்கொண்டும், கூச்சல் போட்டுக்கொண்டும், சந்தடியாயிருப்பார்களேதவிற, குழந்தைகள் இருக்கிறவீடு நிசப்தமாயிராது. அப்படிக்கவலையற்று ஓடியாடித்திரிவதே தான் பிள்ளைகளின் ஸ்வபாவம். அதற்கு எதிரிடையாக நாம் என்னவேலை செய்கிறதாயிருந்தாலும் பயன்படாது. பிள்ளைகளின் முக்கியலக்ஷணமிதுவென்றும் அதற்கு அநுகூலமாகப்பிள்ளைகளை நடப்பிக்கவேண்டுமென்றும் அனேக உபாத்தியாயர்களுக்குத் தெரியாது. அப்படிப்பட்ட அஞ்ஞானிகளிடத்தில் பிள்ளைகளை ஒப்புவிப்பதைப்பார்க்கிலும் தப்பு வேறில்லை. மற்ற எந்த வேலைக்கும் உபயோகப்படாதவர்கள் அனேகர் உபாத்திமைத்தொழில் யார்வேண்டுமானாலும் செய்யலாமென்றெண்ணி அந்த வேலையில் புகுகிறார்கள். அவர்கள்தான் வேறு ஜீவனோபாயம் இல்லையென்று இதில் பிறவேசிக்கப் பார்க்கிறார்களென்றால், பிள்ளைகளைப் பெற்று வளர்த்துவந்த தந்தைகளுக்கு அறிவு எங்கேபோயிற்று? ஆயுதங்கள் மரங்கள் இவைகளின் சங்கதியே தெரியாத ஒருவனிடத்தில் ஒருபெட்டி செய்து கொடுக்கும்படி கேட்பார்களா? கைப்பழக்கமில்லாத நாவிதனிடத்தில் தலையைக்காட்ட சம்மதிப்பார்களா? இவைகளிலெல்லாம் எவ்வளவோ ஜாக்கிரதையாயிருக்கிறவர்கள் பிள்ளைகளின் விஷயத்தைப்பற்றி கொஞ்சமேனும் ஆலோசனையில்லாமல் கண்டவர்களிடத்தில் ஒப்புவிப்பதினால் உண்டாகும் தீங்குக்கு அளவில்லை. பிள்ளைகளை ஆடுமாடுகளைப்போல மறித்துப்போட்டிருந்தாற்போது மென்றுமாத்திரம் அனேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். காலை முதல் சாயங்காலம்வரையில் அந்தண்டை இந்தண்டை பார்க்கக் கூடாதென்றும் அயலில் உள்ள பையனிடம் பேசக்கூடாதென்றும், கையாட்டக்கூடாதென்றும் காலாட்டக்கூடாதென்றும் ஆக்ஞாபித்து அதற்குமீறி நடந்தவர்களைபிரம்பால் இரக்கமன்றியடித்தும் முழிமருட்டி பயமுறுத்தியும் நடுங்கச்செய்கிறார்களே அவர்களை கொடும்பாவிகளென்று சொல்வதற்கு என்ன சந்தேகம். இப்படியனேகர் செய்துவருகிறதினால்தான் பிள்ளைகள் பள்ளிக்கூடமென்று நினைக்கும்பொழுதெல்லாம் திகிலடைந்து கண்ணீர் விடுகிறார்கள். உலகத்தில் மானிடப்பிறப்பிற் சிறந்ததில்லை. மானிடர்களுக்கு மனதைக்காட்டிலும் சிறந்தது வேறொன்றில்லை. அந்த மனதைப் பயிற்சி செய்வதாகிய உயர்ந்த வேலை உபாத்தியாயருடைய வேலை. அதற்குப் பிள்ளைகளின் ஸ்வபாவம் இப்படிப்பட்டதென்று அறியாத மூடர்களிடத்தில் குழந்தைகளை யொப்புவித்தால் அவர்கள் உபயோகமற்றவர்களாய்ப் போவதில் ஆச்சரியம் இல்லை.

பிள்ளைகள் சுறுசுறுப்பாயிருப்பதுடன் விளையாட்டுப் புத்தியுள்ளவர்கள். அவர்களால் சும்மாவிருக்க முடியாது. அவர்கள் சரீரத்தில் உள்ள சுறுசுறுப்புத் தனத்தை எந்த விதத்தாலும் வெளிக்காட்டுவார்கள். பொடிபோடுபவர்களுக்குத் தருணத்தில் பொடி கையில் இல்லாமற்போனால் பித்துப்பிடித்தவர்கள்போல் ஒன்றும் தோன்றாமலிருக்கிறார்கள் அல்லவா, அதுபோலவே

பிள்ளைகளை ஓடியாடி இஷ்டப்பிரகாரம் அவர்கள் ஸ்வபாவத்தின்படி விளையாட விடாமல் தடைசெய்தால் அவர்கள் சந்தோஷமற்று வியாகுலமடைந்துபோவார்கள். ஆகையால் பிள்ளைகளுடைய சுறுசுறுப்புத்தனத்திற்கு அனுகூலமானபடி அவர்களுக்கு ஏற்பாடு செய்துவரவேண்டும். சில சமயங்களில் அது விஷமமாயும் முடியும். வகுப்பில் பாடம் நடக்கும்பொழுது ஒரு பையன் அடுத்தவன் காதைக் கிள்ளுதலும் அல்லது புஸ்தகத்திலாவது பலகையிலாவது பென்சிலால் கிறுக்கிக்கொண்டு காலம்போக்குவதும் சகஜமாய் எல்லாரும் அறிந்த சங்கதிகளே.—அடுத்த பையனுக்கு காயம் உண்டுபண்ண வேண்டுமென்றாவது, புஸ்தகத்தை அவலக்ஷணமாக்க வேண்டுமென்றாவது முக்கியமாய் விரும்பி பிள்ளைகள் அந்தக் காரியம் செய்கிறவர்கள் அல்ல; கைகால்கள் துறுதுறுத்து அவைகளுக்குத் தகுந்த வேலை யிடப்படாததினால் ஏதோ ஒருவிதமாக அவர்கள் சுறுசுறுப்புத்தனம் வெளிப்படுகிறது. அவர்கள் சுறுசுறுப்புத்தனம் அப்படிக்கெல்லாம் விஷமமாக வெளிப்படாதபடி அவர்களுக்குத்தக்க வேலையிட்டு அச்சுறுசுறுப்புத்தனத்தை நல்லவழியில் திருப்பி உபயோகப்படுத்துவது உபாத்தியாயரைப் பொறுத்த கடமையாம்.

# சிறுவர்க்கானபக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## கோபாலன் கண்ட கனவு.

மாமா சீதாராமய்யர் பட்டணத்திலிருந்து வந்து இறங்கினதும் கோபாலனைக் கூப்பிட்டு குழந்தைகளுக்கு என்று தான் வாங்கிவந்த மிட்டாயைக்கொடுத்து "இந்தா, நீயும் ருக்மணியுமாகத் தின்னுங்கள்" என்று கொடுத்தார். கோபாலன் குதிப்போடு அதை வாங்கிக்கொண்டு ஓடி ஒருபக்கத்தில் உட்கார்ந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தின்றுகொண்டே இருந்தான். ருக்மணி வர நாழிகை யாயிற்று. பட்சணம் ருசியாய் இருந்தது. ஆதலால் அவள் வருமுன்னமே எல்லாவற்றையும் இவன் தின்றுவிட்டான். அன்று இராத்திரி கோபாலன் படுக்கையில் படுத்துக்கொண்டு தூங்குகையில் ஓர் கனவு கண்டான். அதை நான் சொல்லுகிறேன் கேளுங்கள் :—

"கோபாலன் தூங்குகையில் அவன் கன்னத்தில் ஒரு எறும்பு கடிக்க அது அவனுக்கு யாரோ கன்னத்தில் தட்டி தன்னை எழுப்பினாற்போல் இருந்தது. தன் தாயார்தான் எழுப்புகிறாளாக்கும் என்று ஸ்வப்பனத்தில் அவன் எண்ணி திடீரென்று எழுந்தான். பொழுதுவிடியவில்லைபோலிருக்கிறதே. அம்மா தானா எழுப்புவது என்று விழித்துப்பார்த்தான். மிகவும் இருட்டாயிருந்ததால் கதவாவது சன்னலாவது கண்ணுக்குப்படவில்லை. "பொழுது விடிந்துவிட்டதே. எழுந்திருக்கிறாயா, இன்னொரு கடி கடிக்கட்டுமா, முட்டைகளைக்கொண்டு வெளியில் உலர்த்தவேண்டாமா?" என்று ஒரு குரல் கடுமையாக அவன்காதில் விழுந்தது. "அடே! இதென்ன என்னை முட்டை தூக்கிக்கொண்டு போகச்சொன்னது இதுதானே முதல்தடவை. முட்டையென்றால் என்ன. தின்பதற்கு நன்றாய் இருக்குமோ!" என்று எண்ணிக்கொண்டே கோபாலன் எழுந்து உட்காரப்பார்த்தான்; முடியவில்லை. இராத்திரிக்குள்ளே அவனுக்கு ஸ்வப்பனத்தில் இன்னும் நான்கு கால்கள் அதிகமாய் முளைத்துவிட்டன.

"அடே ஒரு ராத்திரிக்குள்ளே நான் என்ன எறும்பாக மாறிப்போய்விட்டேனே" (இராத்திரி கனவில் நாம் இறந்துபோனதாகவும், நம்மைச்சுற்றி எல்லாரும் அழுவதுபோலவும் தோன்றுவது போன்றகனவுகள் காண்பது சகசமே) என்று கோபாலன் யோசித்துக்கொண்டிருக்கையில் கறுப்பாக சில எறும்புகள் ஆறுகாலோடே பரபரவென்று தன்னைச்சுற்றி ஓடிக்கொண்டிருக்கக்கண்டு குப்பென்று தானும் அவைகளுடன் சுவர் ஓரமாயும், குரட்டோரமாயும் வெகுதூரம் ஊர்ந்து சென்று அப்புறம் என்ன நேரிடுமோ என்று அதிசயித்துக்கொண்டுபோனான்.

"ஆறுகால் இருக்கிறதும் நல்லதுதான். பள்ளிக்கூடத்திலே மற்றப் பையன்களைவிட விறைவாய் ஓடலாம்."* என்று கோபாலனுக்குத் தோன்றியது. மற்ற எறும்புகளோடு தானும் ஒன்றாய் கோபாலன் எறும்புவளைக்குள் சென்றான் அங்கே எல்லாரும் வெகு சுறுசுறுப்பாயிருந்தார்கள். எறும்புப் புற்றைவிட்டு வெளியில் வந்ததும் அங்கே இருந்த அரவத்தைக்கேட்டு கோபாலனுக்குத் தலை கிறுகிறுத்தது. ஒருபக்கத்தில் சில எறும்புகள் முட்டைகளைக்கொண்டு வந்து வெயிலில் உலர்த்திக்கொண்டிருந்தன. மற்றொரு பக்கம் சில எறும்புகள் குஞ்சுகளுக்கு ஊட்டிக்கொண்டிருந்தன. இன்னுமொருபக்கம் சில எறும்புகள் மண்ணை வெட்டி வாயால் உருண்டையாக உருட்டி வெயிலில் உலர்த்தி வந்தன. அந்த மண்ணுருண்டை நமக்கு வீடு கட்டச்செங்கல் உபயோகப்படுவதுபோல் அவைகளுக்கு வீடாகிய எறும்புப்புற்றுக் கட்ட உபயோகப்பட்டு வந்தன.

"ஆமாம், இவ்வளவெல்லாம் உழைக்கிறீர்களே, உங்களுக்கு என்ன சம்பளம்" என்று கேட்டான், சுவயகாரியத்திலே கண்ணுள்ளவனான கோபாலன். அதற்கு

* கோபாலன் கனவில் எறும்பாக மாறியும் இடை இடையே அவன் ஞாபகம் அவனுக்கு வந்ததால், அவன் எறும்பாகவும் பையனாகவும் நினைத்துக்கலந்து பேசுகிறான்.



பக்கத்தில் இருந்த தொழுவத்தில் பசுக்களுக்குத் தீவனம் போட்டுக்கொண்டு இடையன் வேலைபார்த்து வந்த எறும்பு ஒன்று "சம்பளமா! ஒருவர்க்கொருவர் உழைக்க வேண்டியதுதான். நாம் வயிறு வளர்ப்பது நமக்காகத்தானா" என்றது.

கோபாலன் மற்றவர்களைப்பற்றி இதுவரை யோசித்ததேயில்லை யாகையால் பேசாமலிருந்துவிட்டான்.

"கொஞ்சநேரத்துக்கெல்லாம் சண்டை நடக்கப் போகிறதாம். சிவப்பெறும்புகளுக்கு அடிமைகள் வேண்டுமாம். ஆகையால் சண்டைக்கு புறப்பட்டுவிட்டன: நீ பற்களைத்தீட்டிக்கொண்டு சித்தமாயிருக்க வேண்டாமா?" என்று இடையஎறும்பு கேட்க, அது என்னவென்று கோபாலனுக்குத் தெரியவில்லை. இருந்தாலும் மூடத்தனமாய் ஒரு கேள்வியும் போடவேண்டாம், என்ன நடக்கிறது பார்ப்போம் என்று சற்றுப் பேசாமலிருந்து, பின்பு: "தீட்டினால் நல்லதுதான், அதை எப்படிச்செய்வது" என, இடைய எறும்பு "உறுதியான எதிலாவது தேய்" என்று சொல்லிவிட்டுப் பச்சைநிறமாக நின்ற பசுக்களின முதுகிலுள்ள இரண்டுமுலையினின்றும் தன்னுடைய இரண்டுகொம்புகளினால் பால் உருவப்போயிற்று.

கோபாலன் எறும்புகளுக்கும் பசு, தொழுவம், பால் பீச்சுவது இவையெல்லாம் உண்டோஎன்று அதிசயித்துக்கொண்டு நிற்கையில், ஒரு சிறுமூட்டையை ஒரு அதிகாரிஎறும்பு அவன் வாயில் கொடுத்து "இதை பெரிய அறையிலிருக்கும் ராணி எறும்புகளிடம் கொண்டுபோய்க்கொடு" என்றது. கோபாலன் கனவில் எறும்பாக மாறி எறும்போடு எறும்பாக நின்றுகொண்டிருந்ததால் அந்த அதிகாரியெறும்பு சொற்படி நடப்பதே உத்தமமென்று அதை வாங்கிக்கொண்டு ஓடிப் புற்றுக்கு மத்தியில் ஒரு பெரிய அறையில் முட்டைகளைப் பாதுகாத்துப் போஷித்துக்கொண்டிருந்த ராணிமாரிடம் சேர்த்தான். அவன் கொண்டுபோன மூட்டை கொசுக்காலின் ஓர் துண்டம். ராணிகள் அதை வெகு ஆவலாய்த்தின்றுவிட்டு "இன்னும், இன்னும்" என்று கேட்பதைப்பார்த்து கோபாலன் சிரித்துக்கொண்டு, "நான் பையனாக இருக்கும்போது வாயால் கவ்விக்கொண்டுபோ என்றால் கையிருக்க வாயில்கொண்டுபோவானேன் என்பேன்; பச்சைக் கொசுவைத் தின்பதென்றால்—அப்பா, என்னாலே முடியாது. இப்போ எல்லாம் சகஜமாயிருக்கிறது. லோகம் எப்படி மாறிப்போகிறது பார்!" என்று யோசித்துக்கொண்டே நின்றான். நிற்கையில் திடீரென்று கூக்குரல் ஒன்று உண்டாயிற்று. 'செவ்வெறும்புகள் வந்துவிட்டன. புற்றை வளைத்துக்கொண்டன. க்ஷணத்தில் எல்லாரையும் கொன்றுவிடுகிறோம் என்று பயமுறுத்துகின்றன' என்ற சமாசாரம் எங்கும் பரவியது. அபாயம் வந்துவிட்டது என்றதும் எறும்புகளின் நடத்தையைப்பார்க்க கோபாலனுக்கு வெகு சந்தோஷமுண்டாயிற்று. ஒரு எறும்புக்காவது தன்னைப்பற்றிய ஞாபகம்இல்லை. எப்படி வீட்டையும், குஞ்சுகளையும், ராணிகளையும் காப்பாற்றுவது என்ற ஒரே நினைவுதான் எல்லா எறும்புகளுக்கும் இருந்தது. சில எறும்புகள் வெளியே ஓடி முட்டைகளையும் குஞ்சுகளையும் செவ்வெறும்புகள் கொண்டுபோய்விடுமே என்று அவைகளை உள்ளே கொண்டுபோய் பத்திரப்படுத்தின. சில எறும்புகள் உள்ளே வந்து, நாம் பெரிய கற்பாறைகளைக்கொண்டு அபாயகாலத்தில் வாசல்களை மூடுவதுபோல், பெரியமண்ணுருண்டைகளைக்கொண்டு எறும்புவளைகளின் வாய்களை மூடின. புற்றினுள்ளே வேலைசெய்யும் எறும்புகள் பற்களைக் கறகறவென்று தீட்டும் சப்தம் எங்கும் உண்டாயிற்று. இப்பொழுதுதான் கோபாலனுக்கு இடைய எறும்பு சொன்னது இன்னவென்று தெரியவந்தது.

தளகர்த்த எறும்பு உத்திரவுப்படி மற்ற எறும்புகளுடன் கோபாலனும் ஜயிப்பது அல்லது சாவது என்ற உறுதியோடு சண்டைக்கு வெளிப்புறப்பட்டான். அஸ்தமன சமயமாயிற்று. சிவப்பு எறும்புகள் வரிசைக்கு மும்மூன்றாய் அடுக்கடுக்காய் இருபது அடி தூரத்துக்கு நின்றன. சண்டை உக்ரஹமாய் ஆரம்பித்தது. ஒரு எறும்பும் மற்றொரு எறும்பும் கொம்புகளைப் பின்னிக்கொண்டு பின்காலால் எழுந்து நின்று யுத்தம்செய்து ஒன்றோடொன்று கட்டிப்புரள, ஏழெட்டு எறும்புகள் ஒன்றின்பின் ஒன்றாய் நின்று ஒவ்வொரு எறும்பையும் இழுத்துப் பிரிக்க, இவ்வாறாக அகோர யுத்தம் நடந்தது.

இப்படிக் கொஞ்சகாலம் சென்றபின் கறுப்பு எறும்புகள் செவ்வெறும்புகளை விரட்டியடித்துவிட்டன. செவ்வெறும்புகள் சிறைப்பட்ட கறுப்பு எறும்புகளையும் காயப்பட்ட சிவப்பெறும்புகளையும் தூக்கிக்கொண்டு திரும்பிப்போயின. (இந்தக்காட்சி கோடைகாலத்தில் ஒவ்வொரு சாயந்திரமும் மைதானங்களில் காணலாம்.)

சண்டை முடிந்து சிவப்பெறும்புகள் ஓடினதும் "பிழைத்தோம்," "பிழைத்தோம்" என்று துரைசானி எறும்புகளெல்லாம் கூவின. காயப்பட்ட எறும்புகள் வெகு ஜாக்கிரதையாய் போஷிக்கப்பட்டபோதிலும் அவைகளுள் இரண்டு இறந்துபோயின. எறும்புக்கோட்டைக்குக்கொஞ்ச தூரத்தில் இறந்த எறும்புகளை அடக்கம் செய்யவென்று தனியாக ஒரு இடம் ஏற்பட்டிருந்தது; அங்கே அவைகள் புதைக்கப்பட்டன. அந்த தனியிடத்தின் வாசலை இப்படிப்பட்ட சமயங்களில் தவிர மற்றப் பொழுது திறப்பதேயில்லை.

சண்டையில் சிறையெடுக்கப்பட்ட எறும்புகளைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் கோபாலனுக்கு துக்கம் ஆறவில்லை. அவைகளை விடுவிக்க வேண்டுமென்று அவனுக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று. அவைகளுள் அந்த இடைய எறும்பு ஒன்று. அந்த இடைய எறும்பின சுயநயம் பாராட்டாத்தன்மையினால் கோபாலனுக்கு அதன்மேல் அன்பு ஏற்பட்டது. "அவைகளை விடுவிக்கப்போகிறேன்." என்று கோபாலன் அதிகாரியெறும்பிடம் சொன்னான். "என்ன தைரியம்! அப்பா, இருந்தாலும் என்னமாகச்செய்வாய். செவ்வெறும்புகள் 150 அடி தூரத்தில் ஒருகுழியில் இருக்கின்றன. வெயில் பொசுக்கும். பசி தாகம் பொறுக்கமாட்டாய்." என்று அதிகாரி யெறும்பு சொல்லிற்று.

கோ.—"பரவாயில்லை. என் ஆறு கால்களிலும் பல முள்ளமட்டும் அந்த இடையஎறும்பு அடிமையாகவிருக்க, நான் சும்மாவிருக்கமாட்டேன்.

அதிகாரி யெறும்பு.—அப்பா, நீ எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கும் என்பது உனக்குத்தெரியவில்லை. வீட்டில் சாப்பாட்டுக்கு கால்நாழிகை தாமசமானாலும் பொறுக்கமாட்டாயே. அப்படியிருக்க இரண்டு மூன்று நாள் பட்டினியாய் வழி நடந்து போகவேண்டுமே. எப்படிப்போவாய்?

கோ.—இந்த வீட்டுக்கு வந்த பிறகு எனக்கு புத்தி வந்திருக்கிறது. நீர் என்ன சொன்னாலும் என்னைத் தடுக்கமுடியாது.

அதி. எ.—சரிதான். இந்தத் தோல்பையை எடுத்துக்கொள். அதில் ஒரு துளிதேனிருக்கிறது. அது நீ களைத்துப்போகாது தடுக்கும். வயல் வழியாகவேரில்பாசிபடர்ந்த ஒரு மரம்வரைக்கும்போய் இடது பக்கமாய்த்திரும்பு. இருட்டாகிறவரைக்கும் ஒளிந்திருந்து பிறகு மெல்ல ஊர்ந்துசெல். வலது பக்கத்திலிருக்கும் மண்குன்று வரையில் கறுப்பெறும்புகள் காயத்தினால் வருந்தி அழுவது காதில் விழும். கொம்பினால் சுவரில் மெல்லத் தட்டினால் நீவந்திருப்பது அவர்களுக்குத் தெரியும். மேல் நடத்தவேண்டியது என்னவென்று சொல்வார்கள்" என்று அதிகாரி யெறும்பு சொல்லிற்று.

உடனே எறும்புருவமாக மாறியிருந்த கோபாலன் புறப்பட்டு வெகு சிரமத்துடன் செவ்வெறும்புகளிருக்கும் இடம் போய்ச்சேர்ந்தான். கதவைத்தட்டினதும் தன் சிநேகிதன் இருக்கிற இடம் அறிந்து அவைகளுக்குத்தான் இன்னானென்றுசொல்லினன். அவைகள் வெகு சந்தோஷத்துடன் "நாங்கள் எல்லாரும் சௌக்கியமே. இடையனுக்குமட்டும் காலொன்றும் கையொன்றும் போயின. வெளிப்பக்கமிருந்து நீ ஒரு துளைபண்ணு, உள்பக்கமிருந்து நாங்கள் துளைக்கிறோம்." என்று சொல்லின. இரண்டுமணி தேசகாலம் துளைத்து ஒருஎறும்பு நுழைந்து வரும்படியான துவாரம் ஒன்று செய்யப்பட்டது. அவைகளெல்லாம் ஒன்றொன்றாய் வெளியில்வந்து கோபாலன் இடையஎறும்பைத்தோளில் தூக்கிக்கொள்ள எல்லாக் கறுப்பெறும்புகளும் சத்தம்பண்ணாமல் வெகுவிரைவாய் ஓடின. சுவரில் துளைக்கப்பட்ட துவாரத்தைச் சிவப்பெறும்புகள் கண்டு கறுப்பெறும்புகளைத் துரத்திக்கொண்டு ஓடிவந்தன. அதைக்கண்டு இடையஎறும்பு "அவைகள் நம்மைப் பிடித்துக்கொண்டால் நாம் எல்லாரும் சாவது நிச்சயம். என்னைமட்டும் விட்டுவிட்டு நீங்கள் உயிர் பிழைக்க ஓடுங்கள்." எனச்சொல்லிற்று.

கோபாலன் "மாட்டேன். உன்னைவிட்டுப் போகமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டே வெகுவிரைவாக ஓடினான். இக்கறுப்பு எறும்புகள் களைத்ததும் விரோதிகள் தங்களைக் கிட்டியதுமான சமயத்தில் கோபாலனுடைய சிநேகனான அதிகாரியெறும்பு அனுப்பிய கறுப்பு எறும்புப்பட்டாளம்வந்து சந்தித்தது. புதிதாய் வந்து சந்தித்த பட்டாளத்திலுள்ள ஒவ்வொரு பெரிய எறும்பும் களைத்த எறும்பு ஒன்றை வாயில் கவ்விக்கொண்டு ஓட்டமாய் ஓடிவந்து கோட்டை புகுந்தது. அதிகாரி யெறும்பு கோபாலனை அவனது சுயநயம் பாராட்டாத்தன்மைக்காகப் புகழும்பொழுது, அவன் நித்திரை நீங்கி விழித்துக்கொண்டு தான்கண்டது கனாவென்று தெரிந்துகொண்டான். கண்டது கனாவென்றுபட்டாலும் அப்பொழுது அவன் கண்ட காக்ஷியும் பட்ட அனுபவமும் அவன் மனதில் பதிந்து கிடந்தது. அவனும் அவன் தங்கையும் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது கோபாலனுக்கு தன் காரியமே பெரிதென்று எண்ணம்வரும் சமயங்களிலெல்லாம், தான் எறும்புகளுடன் கூடியிருந்தகாலத்தை நினைத்து அங்கே தன் சிநேகிதனான இடைய எறுமபைப்போலவே சுயநயம் பாராட்டாமல் நடந்துகொள்ள விரும்புவான்.

## விசேஷக்குறிப்புகள்.

**புதியவரி.** சென்ற சஞ்சிகை வெளியான பின் நடந்த விசேஷங்களைப்பற்றி விவரித்துக் குறிப்பெழுத இந்த சஞ்சிகையில் இடமின்மையால் நடந்த விசேஷங்களைமட்டும் திரட்டிக்கூறுவோம் சென்ற ஜனவரி மாசக்கடைசியில் புதிய இராஜப் பிரதிநிதி லார்ட் எல்ஜின் வந்து வேலையொப்புக்கொண்ட பிறகு அவர் ஆளுகையில் நடந்த விசேஷமென்னவெனில் இந்த மார்ச்சு-மீ 10-உ யன்று பருத்திநூல் சாமான்களைத் தவிற மற்ற இறக்குமதி சாமான்களுக்கெல்லாம் இறக்குமதி வரிபோட்டு ஒரு சட்டம் செய்திருப்பதே. அதற்கு 'டாரிப் ஆக்ட்' என்று பெயர். 'டாரிப்' என்றால் ஏற்றுமதி இறக்குமதி சாமான்களின் வரி விலாசத்துக்குப் பெயர். அடுத்த ஏப்பிரல்-மீ முதல் தொடங்கும் வருஷத்தில் செலவுக்கு வரவு 3½-க் கோடி குறைந்திருக்கக் காணப்பட்டதால் இந்த வரி விதிக்கப்பட்டது. பருத்திநூல் சாமான்களின்மீது இறக்குமதி வரி விதிக்காதது அநியாயமென்று இந்தியா முழுமையிலுமுள்ள ஆங்கிலேயர் இந்தியர்கள் எல்லாரும் சேர்ந்து கூட்டங்கூடி முறையிட்டு வருகிறார்கள்.

**அங்கிலேய முதல் மந்திரி.** அங்கிலேய நாட்டில் முதல்மந்திரியாக விருந்த மிஸ்டர் கிளாட்ஸ்தன் வயோதிககாலமாகையால் ராஜ்ஜியபாரத்தைப் பொறுக்கசௌகரியப்படவில்லையென்று அவர் வேலையை ராஜிநாமா கொடுத்துவிட்டார். அவருக்கு பதிலாக லார்ட் ரோஸ்பரி முதல் மந்திரியாக வந்திருக்கிறார். இவர் முதல் மந்திரியாக வந்ததினாலுண்டான மாறுதலில் இந்தியா மந்திரி ஸ்தானத்துக்கு மிஸ்டர் எச். எச். பௌலர் அவர்களும், இந்தியா உதவி மந்திரி ஸ்தானத்துக்கு முன் பம்பாய் கவர்னராயிருந்த லார்ட் ரே அவர்களும் வந்திருக்கிறார்கள்.

**இராஜப்பிரதிநிதி சட்ட நிரூபணசபை மேம்பர்.** சென்னை சட்ட நிரூபணசபையிலுள்ள உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்கள், மார்ச்சுமீ 7உ யன்று கூடி எலெக்ஷன் நடத்தியதில் கனம். வி. பாஷ்யம் அய்யங்கார் அவர்களை இராஜப்பிரதிநிதி சட்ட நிரூபண சபை மெம்பர் ஸ்தானத்துக்கு நியமிக்கத் தெரிந்தெடுத்தார்கள்.

"கற்றோர் கடாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழ்வில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

# விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம். II. 1894ஞு பிப்ரவரிமீ இலக்கம் 10.

*PROCEEDINGS OF THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION.*

*Dated 13th December 1893. No.* $\frac{\text{B. B.}}{1158.}$

*The Acting Director considers that the* "**Viveka Chintamani**" *judging from the matter hitherto published in it, is a most useful and interesting Magazine and he wishes it every success."*

(Sd.) A. MONRO,
*Ag. Director of Public Instruction.*

வித்தியாபிவிர்த்தி யிலாகா டைரெக்டர் ப்ரொஸீடிங்ஸ்.

"வித்தியாபிவிர்த்தி யிலாகா ஆக்டிங் டைரெக்டர் அவர்கள் விவேகசிந்தாமணியில் இதுவரையில் வெளியான விஷயங்களைப் பார்வையிட்டபின் அது மகா உபயோகமானதும் இனிமையானதுமான ஓர் பத்திரிகையாயிருக்கிறதென்று எண்ணுகிறார்; அவர் அதற்கு சர்வசித்தியுமுண்டாகக் கோருகிறார்."

## இலங்கை.

இலங்கை இந்தியாவிற்குத் தெற்கேயுள்ள ஒரு தீவு. அது சிங்களத்துவீபம் எனவும், ஈழமண்டலம் எனவும், ஈழநாடு என்வும் பெயர் பெறும். ஈழம் என்பது இலங்கையில் ஆதியில் பேசப்பட்ட பழைய சிங்களப்பாஷையின் பெயர்; ஆகவே ஈழநாடென்பதற்குச் சிங்கள நாடு என்பது பொருள். இராமாயணத்தில் இராவணன் அரசாண்ட நகரமென்றும் சீதையைச் சிறைவைத்த இடமென்றும் சொல்லப்படுவது இதுவே. இலங்கை இந்தியாவிலிருந்து 60 மைல் தூரத்திலுளது; அது இந்தியாவோடு மன்னார்த் தீவினாலும் சேதுவென்னும் ஒரு மணல் மேட்டினாலும் இராமேசுரத்தீவினாலும் ஒருவாறு தொடுக்கப்பட்டிருக்கின்றது. இராமேசுரம் இந்தியாவை அடுத்தும் மன்னார் இலங்கையை அடுத்தும் இருக்கின்றன; இவ்விரண்டிற்கும் இடையிலுள்ளது மணல்மேடு. இம்மூன்றும் சேர்ந்ததே சீதை சிறைமீட்கச் சென்ற இராமர் சுக்கிரீவன் முதலிய வானரவீரர்கள் உதவியைக்கொண்டு கட்டிய சேது என்று சொல்லப்படுவது. இராமேசுரத்தை இந்தியாவினின்றும் பிரிப்பது பாம்பன் கால்வாய். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள தூரம் 60 மைல் என்று சொன்னோமாயினும் இலங்கையின் வடக்கு யாழ்ப்பாணத்தின் தலையிலுள்ள காங்கேயன் துறைக்கும், தென்னிந்தியா தஞ்சாவூர் ஜில்லா வேதாரணியத்திற்குத் தெற்கே

யுள்ள கோடிக்கரைக்கும் இடையிலுள்ள தூரம் ஆக 37 மைல் என்றே உணர்க. நல்ல காற்றுள்ள காலத்தில் கோடிக்கரையிலிருந்து காலை எட்டொன்பது மணிக்குப் புறப்படும் படவு மத்தியந் திரும்பி இரண்டு மூன்று மணிக்குக் காங்கேயன்றுறை ஓடிச்செல்லும்.

இலங்கை சென்னையிலிருந்து 250 மைல் தூரத்திலும், பம்பாயிலிருந்து 900 மைல் தூரத்திலும், கல்கத்தாவிலிருந்து 1000 மைல் தூரத்திலும், இங்கிலாந்திலிருந்து 6000 மைல் தூரத்திலும் இருக்கின்றது. (மைல் என்பது அங்கிலேய நீட்டலளவைப் பெயர்; அது தெருவின் பக்கத்தில் அளவை அறிகுறியாக நாட்டப்படும் கல்லையுங் கட்டையையும் நோக்கிப் பெரும்பான்மை கல் என்றும் சிறுபான்மை கட்டை என்றும் தமிழில் வழங்கப்படும்).

இலங்கை வடிவத்தினுல் மாங்காயை ஒருவாறு ஒத்திருக்கும். அதன் பெருநீளம் வடக்குத் தெற்கு 271 மைல்; பேரகலம் கிழக்கு மேற்கு 137 மைல்; சுற்றளவு 760 மைல்; உட்பரப்பு 25,364 சதுரமைல். இலங்கை தென்னிந்தியாவிலுள்ள மைசூரிராச்சியத்திலும் 2,042 சதுரமைல் குறைவுள்ளது; மைசூரின் உட்பரப்பு 27,406 சதுரமைல்.

இலங்கை ஆதியில் ஆரிய வரசர்களாலும் தமிழவரசர்களாலும் ஆளப்பட்டுவந்தது. அக்காலத்தில் அதனேடு உரோமரும், பாரசீகரும், அரபியரும் வியாபாரஞ்செய்து வந்தார்கள். கி. பி. 1505-ம் வருஷத்திலே போர்த்துக்கீசர் வந்து இலங்கையின் தெற்கிலும் மேற்கிலும் சிலபாகங்களைக் கைக்கொண்டு குடியேறி 1518-ம் வருஷத்திலே கரையோரத்திலுள்ள நாடுகளைத் தம்வசமாக்கினுர்கள். உலாந்தாக்காரர் 1658-ம் வருஷத்திலே போர்த்துக்கீசரை வெற்றிகொண்டு அவர்கள் ஆண்டநாடுகளைத் தம்வசப்படுத்தி அரசு செய்யத்தலைப்பட்டார்கள். இங்கிலீசுகாரர், இலங்கையில் உலாந்தாக்காரர் முதலிய பிறதேயத்தவர்கள் ஆளுகைக்குட்பட்டிருந்தநாடுகளையெல்லாம் 1796-ம் ஆண்டு கைப்பற்றிச் சென்னை இராஜதானியோடு சேர்த்தார்கள். பின்னர் 1798-ம் வருஷத்தில் இலங்கை சென்னை இராஜதானியிலிருந்து பிரிக்கப்பட்டு ஒரு தனி இராச்சியமாகச் செய்யப்பட்டது. அதன்பின் 1815-ம் வருஷத்தில் இங்கிலீசுகாரர், ஸ்ரீவர்த்தனபுரமென்னுங் கண்டிநகரத்திருந்து அரசாண்ட ஸ்ரீவிக்கிரமராசசிங்கன் என்னும் நாயக்க வரசன்மேற் படையெடுத்துச்சென்று அரசனைப் பிடித்துச் சிறைப்படுத்தினுராக இலங்கைமுழுவதும் அவர்கள் கைக்கீழாயது. ஸ்ரீவிக்கிரமராசசிங்கன் வடஆர்க்காட்டிலுள்ள வேலூரிற் கொண்டுவைத்துச் சிறைவைக்கப்பட்டு 1832-ம் ஆண்டு மரணமடைந்தனன். இவ்வமிசத்தார் இப்போதும் வடஆர்க்காடு, தஞ்சாவூர், மதுரை முதலிய இடங்களில் இலங்கை அரசாட்சியாரிடமிருந்து உபகாரசம்பளம் பெற்றுக்கொண்டு வசிக்கின்றுர்கள்.

**அரசியல்.**—இலங்கையின் அரசியல், 1831-ம் ௵ ஏப்பிரல் ௴ அங்கிலேயதேயத்தரசர் கொடுத்த அதிகாரப்பத்திரத்தின்படியும், 1833-ம்௵ மார்ச்சு௴ கொடுத்த கட்டளைப்படியும் அமைந்துள்ளது. இந்த உத்தரவுகளின்படி இலங்கையின் அரசு, அதன் வினை செய்வாராகிய ஐந்து உத்தியோகத்தர்கூடிய ஒரதிகார சபையின் உதவியோடு இங்கிலாந்து மன்னரால் நியமிக்கப்பட்ட ஒரு தேசாதிபதியினுல் நடாத்தப்படுகின்றது. அதிகார சபையிலுள்ளவர்கள் சேனைத்தலைவரும், கலோனியல் செக்கிறிட்டேரியும் (Colonial Secretary), அற்றர்ணி ஜெனறலும் (Attorney General), திரசறரும் (Treasurer), ஆடிற்றர் ஜெனறலும் (Auditor-general). இதுவன்றிச் சட்ட நிரூபணச்சபையும் ஒன்றுளது; அதுமேற்கூறிய அதிகார சபையிலுள்ள ஐவரோடு வேறும் நாலு அரசாட்சி உத்தியோகத்தர்களும் ஜனங்களின் பிரதிநிதிகளாகிய அரசாட்சி உத்தியோகத்தர்களல்லாத எண்மரும் கூடியது. தேசாதிபதிக்கு ஒருவருஷத்தில் 80,000 ரூபாவும் அவர் காரியதரிசிக்கு (Colonial Secretary) 24,000 ரூபாவும் சம்பளம்.

அரசுமுறை நடாத்துவதற்காக இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மாகாணமென்பது தென்னிந்தியாவிலுள்ள ஜில்லாவிற்குச் சரி. ஒவ்வொருமாகாணமும் ஒரு கவர்ன்மென்டேசன்டு (Government Agent) பொறுப்பில் இருக்கின்றது. அவரும் அவருடைய உதவியாளராய அசிஸ்டன்டேசன்டு மாரும் (Assistant Agents) அவர்களுக்குக் கீழ்ப்பட்ட கிராமத்தலைவர்களுமே (Head-men) அரசாட்சியாருக்கும் குடிகளுக்கு மிடையில் சமாசார போக்குவரவிற்கு வாயிலாகவுள்ளவர்கள். முக்கியமாய் ஊர்ச்சுக விசாரணையின் பொருட்டு இலங்கையில் மூன்று முனிசிபாலிட்டியும் பதின்மூன்றுலோக்கல் போட்டும் தாபிக்கப்பட்டுள்ளன.



இலங்கையின் மாகாணங்களின் பெயரும், பிரதானபட்டணமும், உட்பரப்பின் அளவும், குடிஜனத் தொகையும் வருமாறு:—

| மாகாணம். | சதுரமைல். | குடிஜனம் 1891-ம்௵. | சதுரமைல் ஒன்றுக்குக் குடிஜனம். | பிரதானபட்டணம். |
|---|---|---|---|---|
| வடமாகாணம் ... | 3,171 | 3,19,193 | 101 | யாழ்ப்பாணம். |
| தென்மாகாணம் ... | 1,980 | 4,89,761 | 247 | காலி. |
| கீழ்மாகாணம் ... | 3,657 | 1,48,727 | 41 | மட்டக்களப்பு. |
| மேன்மாகாணம் ... | 1,371 | 7,63,187 | 565 | கொழும்பு. |
| வடமேற்குமாகாணம்.... | 3,024 | 3,20,032 | 106 | குருநாக்கல். |
| மத்தியமாகாணம் ... | 2,304 | 4,74,487 | 205 | கண்டி. |
| வடமத்தியமாகாணம் ... | 4,047 | 75,319 | 19 | அநுராதபுரம். |
| ஊவாமாகாணம் ... | 3,725 | 1,59,155 | 43 | வதுளை. |
| சப்பிரகாமமாகாணம் ... | 2,085 | 2,58,605 | 102 | இரத்தினபுரம். |
| | 25,364 | 30,08,466 | 118 | |

மத்திய மாகாணத்திலிருந்து 1886-ம் வருஷத்தில் ஊவாமாகாணமும், மேன்மாகாணத்திலிருந்து 1889-ம் வருஷத்தில் சப்பிரகாம மாகாணமும் பிரித்து வேறு செய்யப்பட்டன.

இலங்கையின் முக்கியமான பட்டணங்களில், 1891-ம் வருஷத்துக் குடிஜனக்கணக்கின்படி, கொழும்பின்குடிஜனத்தொகை, 1,26,926; கண்டி, 20,252; காலி, 33,505; திருக்கோணமலை, 11,411; யாழ்ப்பாணம், 43,092.

மேற்கூறிய குடிசனக் கணக்கின்படி இலங்கையில் 6,068 ஐரோப்பியரும்; 21,231 ஐரோப்பிய வமிசத்தாரும், 20,41,158 சிங்களவரும், 7,23,853 தமிழரும், 2,16,156 மற்றைச்சாதியினரும்—சோனகர், மலயர், வேடர்—இருக்கின்றுர்கள். 6,068 ஐரோப்பியரில் 1885 பேர் ஐரோப்பியசேனையாட்கள்.

இன்னும் மேற்கூறிய கணக்கின்படி, இலங்கையில் 8,45,149 பேருக்குப் பயிர்ச்செய்கையும், 1,02,760 பேருக்குக் கைத்தொழிலும், 1,21,279 பேருக்கு வாணிகமும் முயற்சி.

இலங்கையின் குடிஜனத்தொகை மேற்கண்டபடி 30,08,466; அது சதுரமைல் ஒன்றுக்குச் சராசரி 118 பேர் ஆகின்றது. மேலே உட்பரப்பின் அளவிற்கு ஒருவாறு சமமாக எடுத்துக்காட்டப்பட்ட மைசூரின் குடிஜனத்தொகை 49,43,604; அங்கே சதுரமைல் ஒன்றுக்குக் குடிஜனம் 177.

**நீதிவிசாரணை.**—நீதிவிசாரணை சுப்றீங்கோடு, டிஸ்திறிக்கோடு, பொலீஸ்கோடு, றிக்குவஸ்துக்கோடு என்னுங்கோடுகளினுலே செய்யப்படும்.

சுப்பிறீங்கோட்டில் பெருங்குற்றங்களும் அப்பீல் வழக்குக்களும் விசாரணை செய்யப்படும். பெருங்குற்றங்களெல்லாம் ஜூரிமார் என்னப்படும் மத்தியஸ்தர் பன்னிருவர் முன்னிலையில் விளங்கப்படும். குற்றமேற்றப்பட்டவர்களை ஜூரிமார் குற்றமுடையவர்களென்று கண்டாலன்றித் தண்டனைசெய்யப்படமாட்டாது. மரணதண்டம் விதிப்பதற்குச் சுப்பிறீங் கோட்டு நீதிபதிகளுக்குத்தான் அதிகாரமுளது; அவர் விதித்த தண்டமும் கவர்ணர் கட்டளையின்றி நிறைவேருது. சுப்பிறீங்கோட்டு நீதிபதிகள் மூவர்.

டிஸ்திறிக் கோட்டிலே நிலமுதலியவற்றைப்பற்றிய சிவில் வழக்குக்களும் பெருங்குற்றங்களைப்பற்றிய கிறிமினல் வழக்குக்களும் விசாரணை செய்யப்படும். போலீஸ்கோட்டிலே சிறுகுற்றங்களைப்பற்றிய கிறிமினல் வியாச்சியங்களும், றிக்குவஸ்துக்கோட்டிலே சிறுகடன்வியாச்சியங்களும் விசாரிக்கப்படும். இந்தக்கோட்டுகளின் தீர்ப்புகளுக்கெதிராகச் சுப்பிறீங்கோட்டுக்கு அப்பீல் உண்டு.

**கல்வி.**—வித்தியா விசாரணைக்காக டைறக்டர் அவ் பப்பிளிக் இன்ஸ்றக்ஷன் (Director of Public Instruction) என்னும் ஒருதலைவரை நியமித்து அவருக்குக்கீழ் இன்ஸ்பெக்டர்களையும் ஏற்படுத்திய நாள் முதலாக இலங்கையில் கல்வி வளர்ந்து வருகின்றது. அங்கே 1891-ம் ஆண்டு 4052 பள்ளிக்கூடங்கள் இருந்தன; அவற்றில் 1,53,843 மாணுக்கர்கள் வாசித்துக் கொண்டிருந்தார்கள். இதனுல் 1891-ம் ஆண்டு கணக்

கிட்ட குடிஜனத்தொகையில் நூற்றுக்கு ஐந்துபேர் கல்விகற்பதாகத் தெரிகின்றது.

இந்தப் பள்ளிக்கூடங்களுள் அரசாட்சி வித்தியாசாலை 436; அரசாட்சியாரிடத்து உதவிப் பணம் பெற்று நடத்தப்படும் வித்தியாசாலை 971; உதவிப் பணம்பெறாத வித்தியாசாலை 2,645. இவற்றில் முறையே 41,746; 74,855; 37,242 மாணாக்கர்கள் கல்வி கற்றார்கள். இலங்கை அரசாட்சியார் 1891-ம் ஆண்டு கல்வியின் பொருட்டுச் செலவழித்தபணம் ரூபா 5,08,166. இந்தப்பணம் பெரும்பான்மை சுவபாஷை கற்பிக்கும் பள்ளிக்கூடங்களுக்காகவே செலவழிக்கப்பட்டது. இங்கிலீஷ் வித்தியாசாலைகள் படிப்படியாய் அவற்றின் வருமானத்தைக்கொண்டே நடத்தத் தக்கவைகளாய் வர, சுவபாஷை வித்தியாசாலைகள் வருமானத்தைக்கொண்டே நடை பெறமாட்டாதனவாய் உதவி பெறவேண்டியவைகளாய் விட்டன. கொழும்பிலிருக்கும் ரூயல் கலீஜ் (Royal College) ஒன்றே அரசாட்சி வித்தியாசாலைகளுள் இங்கிலீஷ் உயர்ந்த வகுப்பு வரைக்குங்கற்பிப்பது. உதவிப்பணம் பெறுகின்ற மற்ற வித்தியாசாலைகளுள் இங்கிலீஷ் உயர்ந்த வகுப்பு வரைக்குங் கற்பிப்பன பல உள. அரசாட்சியார் படிப்பில் கெட்டிக்காரனாகிய ஒரு பிள்ளைக்கு இங்கிலாந்தில் போயிருந்து நாலு வருஷம் படிப்பதற்காக வருஷமொன்றுக்கு 150 பவுண் மாணவச்சம்பளம் (Scholarship) கொடுக்கின்றார்கள். இலங்கையிலே கேம்பிறிட்ஜ் யூனிவர்சிற்றியின் பிரவேச பரிக்ஷையும், சென்னை, கல்கத்தா, லண்டன் முதலிய சர்வகலாசாலைப் பரீக்ஷைகளும் நடைபெறுகின்றன. அங்கே விவசாய வித்தியா சாலைகளும் கைத்தொழில் வித்தியாசாலைகளும் உள்ளன.

**வரவுசெலவு.**—இலங்கையின் வருமானம், 1891-ம் வருஷத்தில், ரூபா 1,79,62,710; செலவு ரூபா 1,64,35,079.

**வருமானத்தில் முக்கியமானவை.**—சுங்கம் ரூபா 41,37,542; நிலவரி ரூபா 11,78,738—இதில் அரசுக்குரிய நிலங்களையும் குடியிறைத்தானியங்களையும் விற்பதனால் வரும்பணஞ் சேர்ந்துள்ளது; கள்ளுஞ் சாராயக்குத்தகை ரூபா 19,66,173; முத்திரை ரூபா 12,58,434; அரசாட்சிக்குரிய உப்பும் மரமும் விற்ற பணம் ரூபா 13,28,619; ஆயத்துறைவரி ரூபா 7,32,030. அரசாட்சியார் வைத்தோடும் புகைவண்டியால் 1891-ம் வருஷம் வரவு ரூபா 44,30,534.

**செலவில்முக்கியமானவை.**—சிவில் ஜூடிசியல் உத்தியோகத்தர் செலவு ரூபா 29,64,308; சிவிலும் ஜூடிசியலும் அல்லாத மற்றைய உத்தியோகத்தர் செலவு ரூபா 19,32,894; சேனைச்செலவிற்காகக் கொடுத்தது ரூபா 11,95,182—இதில் வலன்றியர் (Volunteer) சேனையின் செலவும், இங்கிலாந்து அரசாட்சியாருக்குக் கொடுத்த ரூபா 10,83,925-ம் சேர்ந்துள்ளன; உத்தியோகத்தர்களுக்கு உபகாரச் சம்பளம்—“பென்சன்” ரூபா 6,81,577; அரசாட்சியார் வாங்கிய கடனுக்குக் கொடுத்த வட்டி ரூபா 17,20,408. ரோட்டுமுதலிய பொதுவேலைகளுக்காக, 1891-ம் வருஷத்தில் செலவழிக்கப்பட்டது ரூபா 23,78,889. இதில் நீர்ப்பாய்ச்சல் வேலைக்காகச் செலவழிக்கப்பட்டது ரூபா 3,46,623.

இலங்கை யரசாட்சிக்கு 1891-ம் ஆண்டு முடிவில் இருந்த கடன் 25,10,759 பவுனும் 3,35,840 ரூபாவும். இந்தக் கடன் 191 மைல் புகைவண்டி வீதி செய்வதற்கும், கொழும்புத் துறைமுகம் கட்டுவதற்கும், கொழும்பில் தண்ணீர்க்குழாய் வைப்பதற்கும் வாங்கப்பட்டது.

இலங்கையில் 1891-ம் வருஷத்தில் வந்த உள்ளூர் வருமானம் ரூபா 17,70,227.

**விளைபொருள்.**—இலங்கையின் நிலவளவு 1,62,33,000 ஏக்கர். இதில் 26,25,016 ஏக்கர் நிலம் பயிர்செய்யப் படுகின்றது. இதில் 1891-ம் வருஷத்தில் 6,85,839 ஏக்கர் நிலத்தில் நெல்லும் பிறதானியங்களும் பயிரிடப்பட்டன; 55,924 ஏக்கர் நிலம் காப்பித்தோட்டம்; 2,61,179 ஏக்கர் நிலம் தேயிலைத் தோட்டம்; 40,447 ஏக்கர் நிலம் கறுவாத்தோட்டம்—கறுவாவை இந்தியாவில் இலவங்கப்பட்டை என்று வழங்குவார்கள்; 12,127 ஏக்கர் நிலம் சிங்கோனாத் தோட்டம்—சிங்கோனாவின்பட்டையிலிருந்து குயினையின் என்னும் மருந்து செய்யப்படும்; 7,59,605 ஏக்கர் நிலம் தென்னந்தோட்டம்; 9,082 ஏக்கர் நிலம் புகையிலைத் தோட்டம்; 19,471 ஏக்கர் நிலம் கொக்கோத்தோட்டம்.

இலங்கையில் நெல், வரகு, குரக்கன் (=கேழ்வரகு), சோளம், தினை, சாமை, எள்ளு, பயறு, உழுந்துமுதலிய தானியங்கள் விளைகின்றன. குடிகளுக்குப்பலந்தரும் மரங்களில் மா, பலா, புளி, இருப்பை, வேம்புமுதலியவும் வாழை, பனை, தென்னை, தாளிப்பனை, கமுகுமுதலியவும் முக்கியமானவை. எலுமிச்சை, நாரத்தை, கிச்சிலி, மாதுளை, கறுவா, பருத்தி, கொடிமுந்திரி, முதலியனவும் மஞ்சள் இஞ்சி வெண்காயங்களும் அங்கங்கு உண்டாகின்றன. இவைகளெல்லாம் இலங்கைக்கு உரிய பயிர்கள். காப்பி, தேயிலை, சிங்கோனா, கொக்கோ, புகையிலை முதலிய புறத்தேசத்தன. காட்டிலே கருங்காலி, முதிரை



பாலை, சமண்டலை முதலியபெரிய மரங்கள் உள்ளன. இவைகள் வீடுகட்டவும் சாமான்செய்யவும் மிகவும் உபயோகமாகும். சென்னையில் வண்டிசெய்வதற்கு உபயோகமாகும் திருக்கண மரம் என்பது சமண்டலை மரம். அது முதலில் திருக்கோணமலையிலிருந்துவந்தமையால் இழிவழக்கில் திருக்கணமலை மரம் என்று சொல்லப்படும். இங்கிலீசில் அதை Trincomalee wood என்று சொல்லுவார்கள்.

பனைமரம் இலங்கையின் வடபாகத்தில் மிகுதி. அதன் பழம், கிழங்கு, பனாட்டு முதலியவற்றால் வறிய ஜனங்கள் சீவிக்கின்றார்கள். அதன் ஓலை வீடுவேய்வதற்கும் வேலி அடைப்பதற்கும் சுளகு, பெட்டி, பாய் முதலிய முடைவதற்கும் புஸ்தகம் செய்வதற்கும் உபயோகமாகின்றது.

தென்னமரம் கடல்சார்ந்த நிலத்தில் செழித்து வளருகின்றது. இது யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் தென்மேற்குக்கரைகளில் கடற் சார்பு நிலங்களிலும் அதிகமாய் உண்டாகின்றது. தென்னங்களில் தென்மேற்கு மாகாணங்களிலே சாராயம் வடிக்கப்படுகின்றது. தேங்காய் உலர்த்திக் கொப்பறாவாக்கப்பட்டுச் செக்கிலிட்டு எண்ணெயாடப்படுவதோடு பிறதேசங்களுக்கும் அனுப்பப்படுகின்றது. தென்னந்தும்பினால் கயிறும் அந்தக்கயிற்றினால் பாயும் செய்யப்படுகின்றன.

தாளிப்பனை சிங்களவர் வசிக்கும் தென்மேற்கு மத்தியமாகாணங்களில் அதிகம். அதன் ஓலை அகன்று நீண்டு சிறந்திருக்கும். அவ்வோலைகளால் ஒருவித குடைகளும் சாந்தாற்றிகளும் புஸ்தகங்களும் செய்யப்படுகின்றன. தாளிப்பனை என்பது ஸ்ரீதாளம்.

கமுகு உள்நாடுகளில் செழிப்பாய் வளருகின்றது. அதன் பாக்கு மிகவும் உசிதமானது. அது அதிகமாய் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும்.

**மிருகங்கள்.**—இலங்கை யானையாற் சிறந்தது. தமிழரசர் காலத்தில் அவை அதிகம். அவைகளைப் பிடித்து இந்தியாவிலிருந்த அரசர் முதலியவர்களுக்கு விற்றதனால் அவர்களுக்குப் பெருவருமானம் வந்து கொண்டிருந்தது. தற்காலத்தில் அரபித்துலுக்கர் இலங்கையிற்போய்க் கட்டளைப்படி பணங்கட்டி அரசாட்சியார் உத்தரவுபெற்று யானைகளைப்பிடித்துவந்து இந்தியாவில் விற்பனைசெய்கிறார்கள். காட்டு யானையால் நெற்பயிர் முதலியவைகளுக்குச் சேதம்விளைவதுண்டு.

காடுகளில் சிறுத்தைப்புலியும் கரடியும் பன்றி, மான், மரை, குரங்கு முதலியனவும் உள்ளன. நாடுகளில் மாடும் எருமையும் அதிகம்; வடமாகாணத்தில் வெள்ளாடும் செம்மறியாடும் பெருந்தொகையாய் வளர்க்கப்படுகின்றன; நாயும் பூனையும் எங்குமுண்டு. 1891-ம் வருஷத்தில் இலங்கையில், 4,730 குதிரைகளும், 10,64,751 மாடுகளும்—இதில் எருமையுஞ் சேர்ந்துள்ளது, 87,930 செம்மறியாடும், 1,34,162 வெள்ளாடும் இருந்தன.

சிலகாடுகளில் மயில் அநேகமாயுண்டு. கோழி, புறு, கோட்டான்முதலிய எங்குங்காணப்படும். நாடுகளில் குயில், கிளி, நாகணவாய்முதலிய பறவைகள் மிகுதி; கழிக்கரைகளில் கொக்குகள் அதிகம். காகம் இல்லாத இடமில்லை; அதன்கொடுமை எங்கும்மிகுதி.

நாகம், மூக்கன், கருவழலை, புடையன் முதலிய நச்சுப்பாம்புகளும் சாரைமுதலிய நஞ்சில் பாம்புகளும் எங்குங்காணலாம். காடுகளில் மலைப்பாம்பு மிகுதி; அவை இருபதடி நீளம் வளரும். ஆறுகளிலும் குளங்களிலும் முதலைகளும் செதும்பு நிலங்களில் அட்டைகளும் உள்ளன.

இலங்கையைச்சூழ்ந்த கடலில் பலவகை மீன்களும் மன்னார்க்குடாக்கடலிலும் திருக்கோணமலைக்குடாவிலும் முத்துச்சிப்பிகளும் உள்ளன. மன்னாரைச்சார்ந்தசலாபத்துறையில் அகப்படும் முத்து மிகவும் உயர்ந்தது. முத்துச்சலாபத்து வருமானம் 1890-ம் வருஷத்தில் ரூபா 3,10,000; 1891-ம் வருஷத்தில் ரூபா 9,60,000.

ஊவா மாகாணத்தில் நுவரெலி என்னுமிடத்திலுள்ள நீர்நிலைகளில் இங்கிலாந்து தேசத்து மீன்கள் கொண்டுவந்துவிட்டு வளர்க்கப்படுகின்றன.

**வாணிகம்.**—இலங்கையில் 1891-ம்ஆண்டு இறக்குமதிசெய்த பொருள்களின்விலை ரூபா 6,66,35,392; ஏற்றுமதிசெய்தபொருள்களின் விலைரூபா 5,87,99,744.

இலங்கையிலிருந்து 1891-ம் ஆண்டு ஏற்றுமதி செய்த பொருள்களுள் பிரதானமானவை:—காப்பி 57,31,467 ரூபா விலைபெற்றது; தேயிலை 3,04,73,267 ரூபா விலை பெற்றது; சிங்கோனா, 6,69,656 ரூபா விலைபெற்றது; ஈயம் 40,05,401 ரூபா விலைபெற்றது; தேங்காய் 81,77,123 ரூபா விலைபெற்றது; பாக்கு 9,07, 193 ரூபா விலைபெற்றது. இறக்குமதிசெய்யப்பட்ட பொருள்களுள் பிரதானமானவை:—பருத்தி நூற்புடைவை 55,73,387 ரூபா விலைகொண்டது; உப்புமீன் 18,45,334 ரூபாவிலைகொண்டது; அரிசி, நெல்லுமுதலியன 2,59,26,886 ரூபா விலைபெற்றன; நிலக்கரி 68,21,008 ரூபா விலைகொண்டது; குடிவகை 9,71,580 ரூபா விலைபெற்றன.

நோயினாலேசிலவருஷங்களாகக் காப்பிக்கொட்டை விளைவுகுறைந்துவிட்டது. 1879-ம் ஆண்டு ஏற்றுமதி

செய்யப்பட்ட காப்பி 8,24,509 அந்தர்; அது 1884-ம் ஆண்டு 2,99,395 அந்தராயும், 1887-ம் ஆண்டு 1,78,490 அந்தராயும், 1889-ம் ஆண்டு 89,693 அந்தராயும், 1891-ம் ஆண்டு 89,673 அந்தராயும் குறைந்து வந்துவிட்டது. இலங்கையிலிருந்து 1884-ம் வருஷம் ஏற்றுமதிசெய்யப்பட்ட தேயிலை 23,92,975 ராத்தல்; அது 1885-ம் வருஷம் 43,72,721 ராத்தலாயும், 1886-ம் வருஷம் 78,49,888 ராத்தலாயும், 1887-ம் வருஷம் 1,38,34,057 ராத்தலாயும், 1888-ம் வருஷம் 2,38,20,471 ராத்தலாயும், 1889-ம் வருஷம் 3,43,46,432 ராத்தலாயும், 1890-ஆ 4,57,99,518 ராத்தலாயும் ஏறிக்கொண்டுவந்து 1891-ம் வருஷத்தில் 6,77,18,371 ராத்தலாய்விட்டது. இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்ட கொக்கோ 1884-ம் வருஷத்தில் 9,241 அந்தராயிருந்தது; அது 1888-ம் வருஷத்தில் 12,231 அந்தராயும், 1891-ம் வருஷத்தில் 20,615 அந்தராயும் வளர்ந்துகொண்டுவந்துவிட்டது.

இலங்கை வர்த்தகஞ் செய்வது முக்கியமாய் ஐக்கிய ராசாங்கத்தோடும் (United Kingdom) இந்தியாவோடும். இலங்கைக் கணக்கின்படி ஐக்கிய ராசாங்கத்திலிருந்து 1891-ம் வருஷத்தில் கொண்டுவந்து இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விலை 1,93,40,559 ரூபா. இலங்கையிலிருந்து ஐக்கிய ராசாங்கத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் விலை 41,48,824 ரூபா. இந்தியாவிலிருந்து வந்த இறக்குமதிப் பொருளின் விலை 3,94,76,245 ரூபா. இந்தியாவிற்கேற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் விலை 70,42,083 ரூபா.

இலங்கையிலிருந்து ஐக்கியராசாங்கத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் காப்பியும், தேயிலையும், சிங்கோனாவும், கறுவாவும், தேங்காயெண்ணெயும், ஈயமும், கயிறும். ஐக்கிய ராசாங்கத்திலிருந்து வந்து இலங்கையில் இறக்குமதிசெய்யப்படும் பொருள்கள் பருத்தி நூற்புடைவை, இரும்பு, யந்திரம், கரிமுதலியன.

**நாணயம்.**—இலங்கையில் வழங்கும் நாணயம் இந்தியாவின் ரூபாயும் சதமும். இந்தியாவில் வழங்கும் அணவும் பையும் அங்கு இல்லை. சதம் நூறு கொண்டது ஒரு ரூபா. அங்கு வழங்கும் வெள்ளி நாணயம் நாலு:—ரூபாவும் ஐம்பது சதக்காசும், இருபத்தைந்து சதக்காசும் பத்துச்சதக்காசும்; செம்பு நாணயம் நாலு:—ஐந்துசதம், ஒருசதம், அரைச்சதம், காற்சதம்.

தி. த. கனகசுந்தரம்பிள்ளை, பி. ஏ.

## வீண்செலவைப்பற்றி.

(266-வது பக்கத் தொடர்ச்சி.)

விவாக சம்பந்தமாக நாமெடுத்துக்கூறிய இந்தச் சடங்காசாரங்கள் முதலியவை தேச வர்ணபேதங்களுக்குத் தக்கதாய் மாறுபட்டுநின்றாலும், நமது தேசத்தார் யாவரும் மதியீனமென்னும் பொதுக்குற்றத்திற்கு உரிமை பூண்டவராய் வீண்செலவு என்னும் ஒரே படுகுழியில்தான் கால் வைக்கிறார்களாதலால், ஒரு வகுப்பாருக்குச் செய்த எச்சரிக்கையானது மற்றவர்களுக்கும் உரியதாகக் கொள்ளத்தக்கது.

நமது விவாகச்சடங்குகளில், ஊராரை யழைப்பதும், மாங்கல்யதாரணத்தை நடத்துவதும், வந்த ஜனங்களுக்குத் தாம்பூல சந்தன புஷ்பங்கள் கொடுப்பதும், பந்துக்களுக்குப் போஜனமளிப்பதும், விவேகதிடமும் வித்வ திடமும் வாக்குச் சாதுரியமும் ஒருங்கு சேர்ந்திருக்கும் ஓர் யோக்கியரை யழைத்து வைத்து, யாவருங் கூடியிருக்கும் அந்தத்திவ்யமங்கள தருணத்தில், அவர்கள் முன்னிலையில், தம்பதிகளுக்குத் தத்தங்கடமைகளை யெடுத்துக்கூறி, மகிமையான ஒழுங்குகளை வற்புறுத்தி, திவ்ய சரித்திரங்களைச் சிறப்பாயெடுத்து விஸ்தரித்து, அவ்வித ஒழுங்குகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க மனத்துணிவு பூண்டிருக்கும் விபரத்திற்குத் தம்பதிகளின் உறுதிவாக்குப் பெறுவதும், குதிரைகட்டிய வண்டியில் ஊர்க்கோலம் வருவதும் ஆகிய அத்தியாவசிய சடங்குகள்மட்டிலும் விவாக பூர்த்தியென்பது அங்கீகரிக்கப்படுமானால், வாயொறுத்து வயிறொறுத்துத் தேடிய எத்தனை திரவியம் இந்தியாவில் வீண்போகாமல் கையுதவியாகவும் மெய்யுதவியாகவும் மீந்திருக்கும்? எத்தனை யேழைகள் வாய்நிறைய வயிறுநிறைய புசித்துச் சுகிப்பார்கள்? எத்தனைபேர் ஜெயிலில் நின்றும் தப்பிப் பிழைப்பார்கள்? எத்தனைபேர் வாழ்வும் வைபவமும் பெற்று வாழ்வார்கள்? ‘பஞ்சாப்’ (Punjaub) என்ற தேசத்தில் ‘ரோட்டக்’ (Rhotak) என்ற ஸ்தலத்தில் ஓர் இழவு செலவு நடத்தவேண்டுமானால் சராசரி ஐஞ்ஞூறு ரூபாய் செல்லுமாம். அங்கே விவாகஞ்செய்ய விரும்புவோர் நானூறு ரூபாய் கட்டிக்கொடுத்தாலொழிய விவாகத்திற்குப் பெண்கொடுக்க மாட்டார்களாம். ரஜபுத்திரர்கள் விவாகத்தில் நேரும் அமோகச் செலவுகளுக்கஞ்சித் தங்கள் பெண்சிசுக்களைப் பிறந்தவுடன் கொன்றுவிடுவது வழக்கமாம்!! பரிதாபம்! பரிதாபம்! பழமை, பழமை யென்றாலும் பரிதபிக்கத்தக்க பரிதாபம்!!!

இதனால், எடுத்த எடுப்பில் ஒரே ஆரம்பமாய்ச் சடங்காசாரங்களை மறுதலித்து மாற்றித் தீரவேண்டுமென்பதல்ல நோக்கம். அப்படி விவேகிகளெல்லாம் ஒருங்கு சேரும்பக்ஷம் அப்படியே தெய்வக்திப்படி முடியட்டும். அல்லாதபக்ஷம் “பதறாத காரியஞ் சிதறாது முடியும்” என்பதற்கேற்ப, மெல்ல மெல்லக் கால்நீட்டி, மெதுவாய் மெதுவாய் அடியெடுத்து வைத்து, நமது சகவாசத்தி லுட்பட்டவர்களுக்கு, கூடுஞ்சமயத்திலெல்லாம், கூடும்விதத்திலெல்லாம், ஏழைகளுக்சப் பிராண சங்கட நிவிர்த்தியாயிருக்கும் இந்தச் செலவு சுருக்க ஏற்பாட்டின் குணங்களை எடுத்துக்கூறி, பிரயாசையோடும் பொறுமையோடும், மனதில் பலமாயழுத்தி, சித்தங்களைத் திருப்பிவருவோமானால், காலக்கிரமத்தில் இவ்வித மாற்றங்களை நடபடியில் கொண்டுவந்துவிடலாம் என்பது துணிவு. நாகரீக லக்ஷ்மியும் செல்வ லக்ஷ்மியும் கால்வைத்திருக்குஞ் சென்னை முதலிய பட்டணங்களில் பல்லக்கேறுதல் முதலிய அநேக மார்க்கங்களில் பேதகதிகள் வந்திருக்குக்கும் சங்கதி நமக்குத் தெரியாததல்லவே. பழமையான வஸ்திரதரங்கள் மாறிப் புதுமையான வஸ்திரதரங்களுக்கிடங்கொடுத்திருப்பதையும், பழமையான பணித்தரங்கள் மாறிப் புதுமையான பணித்தரங்களுக் கிடங்கொடுத்திருப்பதையும், பழமையான பாஷைகள் மாறிப் புதுமையான பாஷைகளுக்கிடங்கொடுத்திருப்பதையும், பழமையான சாஸ்திரங்கள் மாறிப் புதுமையான சாஸ்திரங்களுக் கிடங்கொடுத்திருப்பதையும், உலகமே சுற்றிச்சுழன்று மாறிப்பெயர்ந்து வருவதையும், கவனிக்கும்போது, பழமையான ஆசாரங்கள் மாறிப் புதுமையான ஆசாரங்களுக் கிடங்கொடுப்பதும் இயல்புதான்; ஓரதிசயமல்ல; “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; காலவகையினானே.” ஆதலால், காலஞ் செல்லச்செல்ல, விவேகம் அதிகரிக்க அதிகரிக்க, பேதகதிகள் (எல்லாவிஷயங்களிலும்) இயல்பாகவே வந்து சேர்கின்றன. அவற்றைத் தடுத்துநிற்க முயலினும், தடுத்துநிற்க முடியாது: ஸ்தலத்திற்குப் பத்துபேர் விவேகிகளாகிய பெரியோர் ஏகீபவிக்கும் பக்ஷம் பேதகதிகள் வருத்துவது அசாத்தியமா? விவாக வீடுகள்தோறும் ஐந்நூறு எழுநூறு என்று அள்ளியள்ளிச் செலவுசெய்து கட்டும் பந்தல்களுக்குப் பதிலாய் ஊரின் பொதுத்தொகையில் ஓர் தக்ககூடாரம் வருத்தி யாவரும் உபயோகிப்பது குணமா? தோஷமா? செலவும் சுருக்கமாயிற்றே; சிரமமுஞ் சிரமமாயிற்றே.

என்னுடைய இஷ்டராகிய ஒரு விவேகி நானிந்தக் கடிதத்தை எழுதித்தீர்த்தபின் என்னோடு இவ்விஷயத்தைப்பற்றிச் சம்பாஷிக்க இடம் வந்தது. அத்தருணத்தில் அவர் தமது யூகமாக ஓர் யூகஞ் சொன்னார். அதை இக்கடிதத்தில் பிரஸ்தாபஞ்செய்து, இதை வாசித்துச் சிந்திக்கும் விவேகிகளாகிய உங்களுடைய அபிப்பிராயங்களை அறியவேண்டுமென்றுங் கோரினார்:—அதாவது, விவாகஞ் செய்வோருக்கு, தம்மை உலகமானது மஞ்சள்* தடவும் விஷயத்தில் வரையறையிட்ட மகாலுத்தன் என்று அபவாதங் கூறுமேயென்னும் பயமிருக்கும்பக்ஷம், விவாகச்செலவுகளை நாம் கூறியபடி சுருக்கத்தில் நிறுத்திவிட்டு, தாம் செலவுசெய்ய ஆசித்திருக்கும் மீதித்தொகையை, ஒரு நன்செய்லோ புன்செயிலோ போட்டுத் தம்பதிகளின் கஞ்சிப்பாட்டிற்கு வழிதேடிக்கொடுப்பது நன்மையாயிராதா என்பதேயாம். கொட்டுக்கும், பட்டுக்கும், கூத்துக்கும், ஊத்துக்கும், இருநூறு மூந்நூறென்று வாரிவாரிச் சொரிவதை மேற்கூறியபடி வரும்படி மார்க்கங்களில் இட்டுக்கொடுப்பது குணமா அல்லது தோஷமா என்று தீர்மானிப்பதை உங்கள் பங்கிற்கு விட்டுவிடுகிறேன். எனக்கு, அவர் கூறிய யோசனை மிகவும் உத்தமமானதென்றே தோற்றுகிறது.

இத்தகைய சீர்திருத்தங்களை நடபடியில் கொண்டுவரவேண்டுமானால் சிறிதுகாலம் பெரியோர் தலைகொடுத்து முன்னிற்க வேண்டியது: “சொல்லிக்காட்டுவதிலும் செய்துகாட்டுதல் விசேஷம்.” ஆங்காங்கு பற்பல கலியாண கர்த்தவிய சங்கங்கள் கூடி, அக்கிராசனாதிபதியென்றும் காரியதர்சியென்றும் அங்கத்தாரென்றும் பற்பல விவேகிகள் சேர்ந்து, ஒருவனது ஆஸ்தியில் இருபத்தைந்தில் ஒருபாகமென்றோ, அல்லது நாமெல்லாம் விவகரித்து விஸ்தரித்து ஸ்திரப்படுத்தும் ஒருத்தேசத் தொகையையோ, விவாகச்செலவாக ஏற்படுத்தி, அவ்வச்சங்கங்களில் சேர்வோரெல்லாம் அந்தத் தொகைக்கதிகஞ் செலவுசெய்யக்கூடாதென்று கட்டுப்பாடிட்டு, அந்நியர்கள் யாராயினும் தமது கலியாணத்தை மேற்கூறிய பரிஷ்கார ரீதியாய் நடப்பிக்கவேண்டுமென்று கோரும்பக்ஷம், அவ்வபேக்ஷையைக் கூடியிருந்து சகாயித்து நிறைவேற்றி, பழியும் நிந்தையும் பங்காகக் கிட்டும்பக்ஷம் அதைத் தமது தேசநன்மையை நாடிய அபிமானத்தில் சந்தோஷ சித்தத்தோடு எதிர்கொண்டேற்பவராய், சிற்சில யோக்கியர்கள் முன்னுக்கு நிற்பார்களானால் ஓர் பத்துவருஷகாலத்தில் நமது தேசத்தில் எவ்வளவு திரவியம் கையிருப்பாக மீந்திருக்கும்? எத்தனைபேர் நற்கதிபெற்று வாழ்வார்கள்? இவ்விவாகாதி அடியந்தரச் செலவுவிஷயத்தில் மானத்துக்கஞ்சியும் வசைக்கஞ்சியுமல்லவா ஒன்றுக்கு முக்காற்பங்குப்பேர்களும் பணப்பையைத் திறப்பது?

* கலியாணம்.

இவ்வித தேசாசாரக் கண்டனைகள் சிலருக்கு ரஸிக்காமலிருந்தாலும் இருக்கலாம். மிகுபலமான அஸ்திபாரமிட்டு மிகுகாலமாக அநுஷ்டிக்கப்பட்டுவரும் பூர்வாசாரங்களை நிஷேதித்துப் பேசியதாக என்னைக் குறைகூற ஆரம்பித்து, "ஏ! ஏ! இவர்தான் தளர்ந்து கிடக்கும் இந்தியாவை எடுத்து நிறுத்தப்போகிறார்," என ஏளனமொழிகள் சொல்லவந்தாலும் வரலாம். அவர்கள் எனது தேசநன்மையைச் சிந்தித்த என் பெருமித சிந்தையை நினைத்து என்னை மன்னிக்க வேண்டியது. பின்னும் சிந்தித்துப்பார்த்து, "நன்மை கடைப்பிடி" என்ற வாக்கியத்தின்படி அவர்கள் நடக்கவேண்டியது; அதுவே எனக்குப் போதுமானதாயிருக்கும். அவ்வாறன்றி, "ஊகமுளதேற் சிறுவருரையுங் கொள்க; ஒழிந்த தயனுரை செயினுந் திரணமொப்ப ஏகவிடுவாய்" என்ற வசிஷ்டபகவானது வாக்கியப்படி சிலராகிலும் விவேகிகள் (சிலரல்ல, பலரிருப்பார்களென்று உறுதியாய் நம்புகிறேன்) என்னைத் திரஸ்கரியாது ஏற்றுக்கொள்வார்களானால், அதற்குத்தக்க கைம்மாறு இல்லையே என்னும் விசனத்தில் அவர்களை வந்தித்து நிற்கிறேன். குணம்சமற்றது அபிமானிக்கத்தக்கதல்ல.

ஆயின், நம்மைப் பிறர் பழிகூறுவார்களென்றஞ்சிச் சத்விஷய முயற்சிகளில் நாம் கைசோரலாகாது. எவ்வித சத்காரியங்களும் ஆரம்பத்தில் ஏளனஞ் செய்யப்படாதிருக்கவில்லை. ஆரம்பவிரோதம் அந்தியஜயத்திற்கு வருவாயிலாதிருக்கின்றது என ஒருவாறு கூறலாம். ஆதலால் யார் செய்யும் பிரசங்கங்களாயினுஞ்சரி, யாரெழுதுஞ் சடிதங்களாயினுஞ்சரி, யார் முயலும் எந்த முயற்சிகளாயினுஞ்சரி, குணம்சந் தங்கியவை என்பது வாஸ்தவமானால், அவற்றால் தூண்டப்படும் நன்மையானது, இக்காலத்தி லில்லாவிட்டால் மேற்காலத்தில், இந்தஜனசமூகத்தி லில்லாவிட்டால், இன்னொரு ஜனசமூகத்தில் நடந்தேறும்; நடந்தேறவே நடந்தேறும். காலகதியும் கடவுளின் கதியும் நன்மையையே நாடிக்கொண்டு நிற்கின்றன. நமது முயற்சியின் நன்முடிவைக் கண்ணாரப்பார்க்கும் பாக்கியமானது சிலவேளை நமக்கு லபியாமற்போயினும், பின்சந்ததிகளாயுற்பவிப்போர், தமதுமூதாதைகளாகிய நாம் அபார குணப்பிராப்தியர்த்தமான அடிவானமிட்டு, தங்களுடைய பின்வாழ்வுக்கு வேண்டிப் பேருதவி செய்து வைத்துவிட்டுப்போனோம் என்ற உபகார ஸ்மரணையில் ஆழும் நெஞ்சினர்களாயிருப்பார்கள். அவ்வித உபகார ஸ்மரணையானது ஒருவேளை லபியாமல் தவறினாலுங்கூட, தேசோபகார முயற்சியில் நாம் சிறிதாயினும் ஒருபங்கெடுத்தோம் என்ற சித்த திருப்தியானது நமக்கு லபிக்கவே லபிக்கும். எவ்விதமான பேறுகளிலும் சித்த திருப்தியின் ஆனந்தமானது பெரும்பேறெனக் கூறத் தேவையில்லையே.

ஆதலால், இந்தச் சிறிய உபந்நியாசத்தை வாசிக்கும், கேட்கும், எவர்களும் தேசநன்மையை நாடிய இவ்வித முயற்சிகளில் ஊக்கசீலராய்ப்பங்கெடுக்கவேண்டியது. பல அணுக்கள் கூடித்தான் ஓரண்டமாகிறது: பல துளிகள் கூடித்தான் பெருவெள்ளமாகிறது: பலபேர் கூடித்தான் ஓர்சங்கமாகிறது: பலபேர் மனந்திரும்புவதற்குத்தான் ஆசார பரிஷ்காரம் என்று பேர். அவ்விதம் சிரமிப்போர்கள், தம்மைமாத்திரமல்ல, தமது பின்சந்ததிகளை மாத்திரமல்ல, தமது ஊரைமாத்திரமல்ல, நாட்டைமாத்திரமல்ல, இந்த சவிஸ்தாரமான ஹிந்துதேசம் முழுவதையும் கைதூக்கிரக்ஷித்த புண்ணியவான்களாய்ப் பொலிந்து வாழ்வார்கள். நமஸ்காரம். விவாகங்களில் செய்யும் ஆபத்காரமான செலவுகளை நிறுத்தி நல்வழிகாட்டச் சிந்தைசாய்ந்தவராய், தெருவுக்குத்தெரு, வீட்டுக்குவீடு, அலைந்து திரிந்து போதனை செய்து, தமது இனத்தாருடைய சித்தங்களை வசீகரித்துத் திருப்பி, இவ்வித ஏற்பாட்டை நடபடியில் கொண்டுவரும்படி பெரும் பிரயாசையெடுத்த **பெரிய லால் முன்ஷி*** யவர்களது பரோபகார சிந்தைக்கு பிரத்தியேக நமஸ்காரம்.

## வெனிஸ் வணிகன் கதை.

2-ம் அங்கத்தின் கதைச்சுருக்கம்:—

(டிசம்பர்மாசத்துச் சஞ்சிகையின் தொடர்ச்சி.)

முற்சொல்லிய 'ஷைலாக்' என்னும் யூதனிடத்து 'லான்ஸ்லெட் காப்போ' என்று ஒரு வேலைக்காரன் இருந்தான். அவனுக்கு ஷைலாக்கினிடமிருந்து பசியாறும்படி உண்ணச் சோறுகிடைக்காமையால் எலும்புகாண உடம்பு மெலிந்து, என்ன செய்யலாமென்று ஒருநாள் தன்னுள்ளே நெடுநேரம் யோசித்துக்கொண்டிருந்து, முடிவில், பேய்க்குணத்தோனும் பரமலோபியுமாகிய இந்த யசமானனை விட்டு நீங்குவதே நலமெனத் துணிந்து தெருவிற் போகையில், தன்னைத் தேடிவரும் தன் தந்தையைக்கண்டு அவனையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு, அடுத்தவரை ஆதரித்து அவர்க்கு நல் உணவும் உடையும் நல்கும் 'பஸ்ஸானியோ' என்னும் குலமகனிடத்துச்சென்று, ஐயா, என்னை உம்மிடத்து வேலைக்கு வைத்துக்கொள்ள

* Munshi Periah Lal.



வேண்டுமென்று கேட்க, 'பஸ்ஸானியோ' உன்னை நான் செவ்வையாய் அறிவேன்; உன்னைப்பற்றி உன் யசமானனாகிய யூதன் என்னிடத்து மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறான். ஆனால் நான் அவனைப்போலப் பணக்காரனல்லேன், என்றான். அதற்கு லான்ஸிலெட் "ஐயா, தெய்வ அருளுக்கு மேற்பட்ட திரவியமில்லை. நீர் தெய்வ அருளுடையீர்; அவன் திரண்ட திரவியமுடையான்" என்று சொல்ல 'பஸ்ஸானியோ' நீ போய் உன் யசமானனுடைய அநுமதிபெற்று வந்துசேர், என்று அவனுக்கு விடைகொடுத்தனுப்பினான். பின்னர் 'பஸ்ஸானியோ' தன் நற்றோழனாகிய அன்டோனியோவின் அன்பால் ஷைலாக்கினிடத்திலிருந்து பெற்ற பணத்தைக்கொண்டு, பெல்மாண்டுக்குத் தக்கநிலைமையிற்போவதற்குவேண்டியவற்றைச்சித்தப்படுத்தித் தன்னுடைய நண்பனாகிய க்ரேஷ்யானோவின் வேண்டுகோளின்படி அவனையும் பெல்மாண்டுக்குத் தன்னுடன் அழைத்துச் செல்லக்கருதி அவனுக்கு உறுதிசொல்லி, அன்றிரவில் தன்னெல்லா நண்பருக்கும் விருந்தளித்துப் பின்னர் பெல்மாண்டுக்குச்செல்லக் கப்பலேறுதற்கு நிச்சயஞ்செய்தான்.

தன் யசமானனிடத்து விடைபெறச் சென்ற லான்ஸிலெட், அந்தயசமானின் புதல்வியாகிய மிக்கரூபலாவண்ணியமுள்ள ஜெஸ்ஸிகாவைக் காணப்போக, அவள் தன் தந்தையின் மனத்துக்கு விரோதமாய், 'அன்டோனியோ' 'பஸ்ஸானியோவின்' நண்பனாகிய 'லொரென்ஜோ' என்ற கிறிஸ்தவன்மேல் மிக்க காதல் பூண்டு அவனை மணங்கொள்ள நிச்சயித்திருந்தமையால், தன் தந்தை அன்றிரவில் பஸ்ஸானியோவின் வீட்டில் விருந்துண்ணப்போயிருக்கும் சமயத்து, வேண்டிய நகை நாணயங்களை யெடுத்துக்கொண்டு ஒரு சிறுவனுடைய வேடம்பூண்டு யாருமறியாமல் வீட்டைவிட்டு வெளிவருவேனென்றும், அப்பொழுது சித்தமாயிருந்து தன்னைப்பத்திரமாய்க் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்றும் லொரென்ஜோவுக்குக் கடிதமெழுதி அக்கடிதத்தை அவனிடத்து யாருமறியாமல் சேர்ப்பிக்கும்படி லான்ஸிலெட்டிடம் கொடுத்தாள். அக்கடிதப்படி லொரென்ஜோ அவளை அழைத்துக்கொண்டுபோய்விட்டான். அன்று இரவு தொடங்கியவுடன் காற்று நல்ல வளமாயிருந்ததால் பஸ்ஸானியோ க்ரேஷ்யானோவைக் கூட்டிக்கொண்டு தக்க பரிவாரங்களுடன் பெல்மாண்டுக்குக் கப்பலிற் புறப்பட்டான். இது நிற்க.

பெல்மாண்டில் மொராக்கோ நாட்டரசன் போர்ஷ்யாவைக் காணவந்து 'என் கறுத்த மேனியைக்கண்டு வெறுப்படையாதே. எனக்கு உன்மேலுள்ள அன்பு மற்றவருக்குள்ளதிலும் சிறிதுங் குறைந்ததன்று. நான் சிங்கத்தையும் பழிக்கும் வீரமுடையேன். எனது மேனி நிறத்தைக்கண்டு என்னை விரும்பாத கன்னியரே என்னாட்டிலில்லை" என்று பெருமைசொல்லிக்கொண்டு தான் மணங்கொள்ள விரும்பியதை அவளிடத்து வெளிப்படுத்த, அவள் 'இக்காரியத்தில் நான் சுவாதந்திரியமுடையேனல்லேன்; என் தந்தை ஏற்படுத்தியிருக்கும் பெட்டிச் சூழ்ச்சியில் என் வடிவமமைந்த படத்தைத் தன்னுள்ளேயுடைய பெட்டியை எடுப்பவனுக்கு யான் மனைவியாகவேண்டும்" என்று கூற, அரசன் "என் அதிர்ஷ்டம்போல வாய்ப்பதைப் பெறுவேன். பாக்கிய பரீக்ஷை செய்வதற்கு பெட்டியிருக்கு மிடத்துக்கு என்னைக்கூட்டிக்கொண்டுபோ" என்றான். அதற்கு போர்ஷ்யா, "அரசனே, பதறாமல் மெல்ல யோசித்துக்கொள். பெட்டியைத் தவறியெடுக்கும்பக்ஷத்தில் கலியாணத்தைப்பற்றி ஒரு பேச்சும் பேசாமல் இன்னவிதமாய்த் தவறினேனென்பதை ஒருவரிடத்தும் சொல்லாமல் நீ சும்மா போகவேண்டும்" என்றாள். இவ்வேற்பாட்டுக்கு உடன்பட்டுப் பெட்டியுள்ளவிடத்து வந்து மூன்று பெட்டிகளையும் பார்த்தான். பொன் பெட்டியின் புறத்து "என்னைத் தெரிந்தெடுப்பவன் பலரும் விரும்புவதையடைவான்" என்றும், வெள்ளிப் பெட்டியின் புறத்து "என்னைத் தெரிந்தெடுப்பவன் தன் தகுதிக்கு ஏற்றதைப் பெறுவான்" என்றும், ஈயப்பெட்டியின் புறத்து "என்னைத் தெரிந்தெடுப்பவன் தனக் குள்ளவற்றை யெல்லாம் பயனறக்கொடுத்து இழக்கத் துணிய வேண்டும்" என்றும் எழுதப்பட்டிருந்தன. இவ்வாக்கியங்களை ஒருமுறை இரண்டுமுறை முன்னும் பின்னுமாய்ப் படித்துப்பார்த்துத் தன்னுள்ளே சிறிதுநேரம் ஆலோசித்த பின்னர் இச்சூடாமணியைப் பொன் பெட்டியிலன்றி வேறு கீழ்த்தரமான பெட்டியில் வைத்திருப்பார்களென்று எண்ணுவதே பெரிய தோஷமெனத் துணிந்து, பொன் பெட்டியை யெடுத்துத் திறவுகோலை வாங்கி அதைத்திறந்தான். திறக்கவே அதனுள் வைக்கப்பட்டிருந்த தசையில்லா மானிடத் தலையோட்டைக்கண்டு துணுக்குற்று அதன் கண்குழியினுளிருந்த காகிதச்சுருளைப் படித்துப் பார்த்தான். அதில் 'மின்னுவவெல்லாம் பொன்னே யாமோ? என் வெளிப்புறத்தைக்கண்டு பலரும் மயங்குகின்றனர். தங்கமிழைத்த சமாதியும் புழு வினைத் தன்னுள்ளேயுடையது. வீரம்போல் விவேகமும், தேகவன்மையும், புத்திகூர்மையும் பெற்றுள்ளாய் என்னின், உன் விடை இச்சுருளாகுமோ? ஐயோ! உன்

மனங்கேட்கை அநாதரவடைந்ததே!" என்றிருந்தது. இதைப்படித்தவுடன் மிகவும் மனம் வருந்தி வாடிய முகத்தினனாய் விரைவில் விடைபெற்றுச் சென்றான்.

பின்னர் 'ஆரகன்' நாட்டரசன் அங்கே வந்து, பெட்டிச்சூழ்ச்சியின் விவரத்தைக் கேட்டு, பெட்டியைத் தெரிந்தெடுப்பதைப்பற்றிய நிபந்தனைகளுக்கு உடன்பட்டுப் பெட்டிகளையும் அவற்றின் புறத்து எழுதப்பட்டிருந்த வாக்கியங்களையும் பார்த்தான். பலமுறையும் அவ்வாக்கியங்களின் பொருள்களை ஆராய்ந்து யோசித்தபின், 'ஈயத்திற்காக எனக்குள்ளவற்றையெல்லாம் இழப்பேனோ? உலகத்துள்ள பலமூடரும் வெளித்தோற்றத்தைக்கண்டு மயங்குவதுபோல் நானும் அம்மூடருள் ஒருவனாய்ப் பொன்னின் புறத்தோற்றத்தைக்கண்டு மயங்குவேனோ? தன் தகுதிக்கேற்றதைப் பெறுபவனன்றோ யாவராலும் மதிக்கப்படுவான்? தக்கயோக்கியதையின்றி அதிர்ஷ்டத்தாலும் பிறருடைய செல்வாக்காலும் ஒருவன் அடையும் பெருமையும் பெருமையாமோ; அதை மானமுடையோர் விரும்புவரோ? ஆதலின் நான் என் தகுதிக்கு ஏற்றதையே பெறுவேன்" என்று சொல்லிக்கொண்டு வெள்ளிப் பெட்டியை எடுத்துத் திறந்தான்; அதனுள் பல்லையிளித்துக்கொண்டும் கண்ணை மூடிமூடித் திறந்துகொண்டுமுள்ள ஒரு பித்தன் படம் ஒரு பட்டோலையோடு இருக்கக்கண்டான். 'மூடன் தலையோ என் தகுதிக்கேற்றது, போர்ஷ்யாவன்றோ!' என்று ஏங்கி வருந்தி அப்பட்டோலையில் "பிரகாசிக்கும் வெண்மையைக்கண்டு மயங்கினாய்: மூடருக்கு வெளிப்பூச்சதிகமுண்டு. நிழலை முத்தமிடுவோர் நிழலோடொத்த நிலையில்லாச் சுகத்தையே நுகர்வார். உனக்கேற்றது இம்மூடன்தலையே. இனிப்போவாயாக; ஐயோ கேடுற்றாய்." என்றிருந்ததைப் படித்து 'ஐயோ! ஒருமூடன் தலையோடு மணங்கேட்க வந்தேன், அப்படிப்பட்ட தலை இரண்டோடு போகின்றேன்" என்று தன் உள்ளக்கொதிப்பைப் பொறுத்தடக்கிக்கொண்டு யாதொன்றும் பேசாமல் வந்த வழியே மீண்டனன்.

பின்னர்ப் போர்ஷ்யா, பஸ்ஸானியோவின் இனிய வரவைத் தன் தாதியாற் கேட்டு இன்புற்றிருந்தாள்.

எஸ். நாராயணசாமி அய்யர், பி. ஏ.

# ஆபத்துக்கிடமான அபவாதம்

அல்லது

# கமலாம்பாள் சரித்திரம்.

## XII.

சில நாளைக்குப் பிறகு கமலாம்பாளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. நெடுநாளாய்ப் புத்திரபாக்கியமற்ற முத்துஸ்வாமி அய்யருக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்ததில் உண்டான சந்தோஷத்துக்கு எல்லையில்லை. திடீரென்று கண்பெற்ற பிறவிக் குருடனுக்குக்கூட அவ்வளவு சந்தோஷமிராது. கல்யாண காலத்திலேயே கமலாம்பாள் கர்ப்பவதியாய் இருந்தாள். ஆனால் அவளுக்குப் பெண்குழந்தைகள் பிறப்பதும் இறப்பதும் சகஜமாயிருந்தனவேயன்றி இதுவரையில் ஒரு ஆண் குழந்தையாவது பிறந்ததுகூட அவள் அறியாள். கன்னிகாதான பலன் கைமேல் சித்தித்ததென்று முத்துஸ்வாமி அய்யர் ஆனந்தித்துக் குழந்தை பிறந்த மறுநாளே சம்பந்தி ராமசுவாமி சாஸ்திரிகளுக்கு இஷ்ட மித்திர சஹபரிவாரபந்து ஜனங்களுடன்வந்து இருந்து புத்திரோற்சவத்தைச் சிறப்பிக்கும்படியாகக் கடிதம் விடுத்தார். அந்தக் கடிதத்தைக் கண்டவுடன் மாப்பிள்ளை ஸ்ரீநிவாசன் ராமசுவாமி சாஸ்திரிகள் கிருஷ்ணய்யர் முதலிய எல்லோரும் சிறுகுளம்வந்து சேர்ந்தார்கள். புண்ணியாகவாசனம் கிரமித்த பிறகு ஸ்ரீநிவாசனைச் சிலநாள் இருந்து வரும்படி சொல்லிவிட்டு மற்றவர்கள் மதுரைக்குப் போய்விட்டார்கள்.

ஸ்ரீநிவாசன் வரப்போகிறான் என்ற செய்தி கேட்டது முதலே பொன்னம்மாள் மருமகன் வைத்தியநாதன் பொறாமையால் பொங்கிக்கொண்டிருந்தான். 'அந்தப் பயல் வரட்டும் உண்டு இல்லை என்று பண்ணிப்போடுகிறேன்' என்று அவன் தனக்குள் பலமுறை பிரதிஞ்ஞை பண்ணிக்கொண்டான். தனக்கு இருந்த துவேஷத்தைத் திருப்தி செய்துகொள்ளுவதற்குச் சீக்கிரத்தில் அவனுக்கு ஒரு நல்ல சமயம்கிடைத்தது. ஒருநாள் சாயுங்காலம் ஆற்றங்கரை மணலில் நாற்பது ஐம்பது பையன்களாக 'பலீன்சடுகுடு' ஆடிக்கொண்டிருந்தார்கள். இங்கிலீஷ்ப் படிப்பு வர வர நம்முடைய விளையாட்டுகளைக்கூட நாம் மறந்துவிட்டோம். சூரியன் பட்டுப்போல் ஒளி வீசி மறைய, இளவரசுபோல் காத்துக்கொண்டிருக்கும் சந்திரன் அரசாட்சி துவக்கிக்காதல் மயமாய் உலகத்தைக்களிப்பிக்க, நட்சத்திரங்கள் பளீர் பளீர் என்று வெடித்து ஆகாயத்தில் நர்த்தனம்செய்யும் அரம்பை மாதர்களைப்போல் ஆனந்தமாய்விளங்க, வெப்பந்தணிந்து, வானம் பசந்து குளிர்ச்சி மிகுந்து, தென்றல் வீச பகவத்பக்தியால் பூரித்த யோகிகள் மனம்போல் சாந்தஸ்வரூபமாய் விளங்கும் அந்திப்பொழுதில், வீசுகின்ற தென்றலைப்போலவும் பாடுகின்ற பக்ஷிகளைப்போலவும் தங்களுடைய கவலைகளை மறந்து பஞ்சுமெத்தைகள் போன்ற மணற் படுக்கைகளின்மீது உல்லாசமாய் ஓடி விளையாடுவதைவிட்டு இக்காலத்திய சிறுவர்கள் பலர் மூளையிலறுத்த முண்டைகள்போல மூலையில் உட்கார்ந்து பாம்பின் வாயிலகப்பட்ட தவளைகளைப்போல் புஸ்தகங்களுடன் கட்டியழுது பொழுது போக்குகிறார்கள். இதுநிற்க, சிறுகுளத்து ஆற்றங்கரையில் அன்று அநேக சிறுவர் கூடி 'பலீன் சடுகுடு' ஆடிக்கொண்டிருந்தார்கள். வைத்தியநாதன் தன்னுடைய மூர்க்கத்தனத்தினால் அவர்களுக்குள் தலைவனானான். அவன் சேர்ந்திருக்கும் விளையாட்டில் ஸ்ரீநிவாசனுக்குச்சேரச் சற்றும் மனமில்லை ஆயினும் அவனுடைய நல்லசினேகிதர்களில் சிலர் அதில் சேர்ந்தமையாலும் அவனையும் சேரும்படி அவர்கள் கட்டாயம் செய்தமையாலும் அவன் அதில் சேர்ந்தான். மேலும் அவனுக்கு அன்றுசாயுந்திரம் விளையாட்டில் விசேஷத்திருப்தியிருந்தது. அன்று பகல் முழுவதும் அவன் நன்றாய்ப் படித்திருந்தான். படிப்பை விட்டு வெளியே வந்தபொழுது மதர்த்துத்திரியும் மான்கன்றைப்போல் அங்குமிங்கும் உல்லாசமாய் ஓடிவிளையாட அவனுக்கு ஆசையாயிருந்தது. அன்று அஸ்தமனம் வெகு அழகாயிருந்தது. கூட்டங்கூட்டமாய் மணிகளைச் சப்தம் செய்துக்கொண்டு மாடுகள் மலையிலிருந்திறங்குவதும் காக்கைகள் கா, கா என்று ஆனந்தக்களிப்புடன் ஆரவாரித்துக்கொண்டு வரிசைக்கிரமமாய் ஆகாயத்தில் பவனிவருவதும் ஹம் என்று அடங்கிய சப்தத்துடன் வண்டுகள் சுருதிபாடுவதும் கிளிகள் ஆற்றங்கரையிலுள்ள அரசமரங்களில் கொஞ்சிக்குலாவுவதும் கண்ட ஸ்ரீநிவாசனுக்குத் தன்னறியாமல் ஆனந்தம் பெருகிற்று. அவன் நிமிர்ந்து பார்த்தான். அப்பொழுது ஆகாயத்தில் ஓர் அழகான ரோஜா வர்ணம் படர்ந்திருந்தது. சற்றுநேரத்திற்கெல்லாம் அந்த வர்ணம் மாறி மிருதுவான நீல நிறம் பரவி மத்தியில் மத்தியில் சிற்சில தீவுகளைப்போல மேகங்கள் தங்கியிருந்தன. ஒரே ஒரு நட்சத்திரமாத்திரம் உதயமாயிருந்தது. அது சிறிது தூரம் சஞ்சரித்துப் பிறகு மேகத்தில் மறைந்து மறுபடி வெளிப்பட்டு வழிநடந்த தோற்றம் அரணியத்தில் மரங்கள்மத்தியில் மறைந்தும் பிறகு வெளிப்பட்டும் அர்ச்சுனனைத்தேடியலைந்த ஊர்வசியைபோல இருந்தது. இவ்வித இந்திரஜால வேடிக்கைகள் நிறைந்த அஸ்தமன மகோற்சவமானது வெகு அழகாயிருக்க அதைக்கண்ட ஸ்ரீநிவாசனுக்கு நதியாய் ஓடவும் இலைகளாய் ஆடவும் பட்சியாய்ப் பறக்கவும் நட்சத்திரமாய் உலாவவும் ஆசையாயிருந்தது. மணலில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களும், ஆனந்த நர்த்தனம் செய்யும் சந்தியாதேவியினுடைய மோகவலையிலகப்பட்டு, சங்கீதத்தால் மயக்கமுற்றுப் படம் விரித்து ஆடும் பாம்புகளைப்போல் ஆடுபவர்களாக அவனுக்குத்தோன்றினார்கள். படமெடுத்தாலும் பாம்பு பாம்பே என்பதை மறந்து இங்கு கூடிய சிறுவர்கள் மானிடக் குரோதங்களை ஒழித்து உயரப்பறக்கும் விஞ்சையர் குழாமென அவன் மதித்து அவர்களுடன் தானும் விளையாட இணங்கினான். விளையாட்டு நடந்தது. ஒவ்வொருவரும் 'பலீன்சடுகுடு' என்றபீஜாட்சரத்தை ஜபித்துக்கொண்டுப் பகைவர் மீது படையெடுத்து முறைப்படி சென்றார்கள். ஸ்ரீநிவாசனுடைய முறையும் வந்தது அவன் 'பல் பல் பலீன் பலீன் சடுகுடு குடு' என்று பாடிக்கொண்டு போகும்போது மூச்சு விட்டுவிட்டான் என்று பொய்யாவது சொல்லி அவன்மேலே கொக்கைப்போலக் குறிவைத்திருந்த வைத்தியநாதன் அவனைப்பிடித்துக் கட்டிக்கீழேதள்ளி மணலிற்றேய்த்து அடித்துக் கிள்ளிக் காயப்படுத்தினான். யார்வந்து விலக்கியும் அந்த முரட்டுப் பயலைத் தடுக்க முடியவில்லை. ஸ்ரீநிவாசன் பாவம் கதறுகிறான். அவனை அந்த மூர்க்கனிடத்திலிருந்து தப்புவித்து வீடுகொண்டுபோய்ச் சேர்ப்பது வெகு கஷ்டமாய்விட்டது. அவனுடைய சரீரம் மிக மிருதுவானதால் எங்கே பார்த்தாலும் கீறலும் காயமுமாக ஆய்விட்டது. நடந்த சங்கதியை அவன் வீட்டில் யாரிடத்திலும் சொல்லவில்லை. ஆனால் முத்துஸ்வாமி அய்யர் இவ்வளவும் நடந்துகொண்டிருந்தபோது ஆற்றங்கரையில் சந்தியாவந்தனம் பண்ணிக்கொண்டிருந்தார் அங்கிருந்த பையன்கள் அவரிடத்துப்போய்ச் சகல சமாசாரத்தையும் விஸ்தாரமாகச் சொல்லிவிட்டார்கள். அதற்குள் தன் எதிரியைப் பங்கம் செய்துவிட்ட கர்வ வெறியுடன் வைத்தியநாதன் வீட்டுக்குத் திரும்பிவந்தான். வரும்போது குழந்தை லெட்சுமி கோயிலுக்கு நெய் விளக்குப் போட்டுவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தாள். அதைப் பார்த்த அந்த முரடன் அவள்மேல் ஒோ மோதாய் மோதிக்கொண்டுபோனான். அவள் உடனே அழுதுகொண்டு அகத்துக்குவந்து அம்மாள் இடம்சொன்னாள். சொல்லிக்கொண்டிருக்கும்போதே முத்துஸ்வாமி அய்யர் வீட்டுக்கு வந்துவிட்டார். வந்தவுடன் ஸ்ரீநிவசானை விளக்குவெளிச்சத்திற்குக் கூப்பிட்டு அவனுடம்பைப் பார்க்க எங்கேபார்த்தாலும் காயமும் கீறலுமாயிருந்

த்து அவருக்கு மனம் சஹிக்கவில்லை. லெட்சுமியினிடத்தில் அந்த வைத்தியநாதன் பயல் செய்த அக்கிரமும் காதுக்குவந்தது. உடனே அவர் கோபாவேசத்துடன் தம்பியகத்துக்குவந்து அடே சுப்பிரமணியா சுப்பிரமணியா என்று கோபமாய்க்கூவினர். அப்பொழுது சுப்பிரமணியய்யரும் வைத்தியநாதனும் கூடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். முத்துஸ்வாமி அய்யர் கூப்பிடவே சுப்பிரமணியய்யர் வெளியேவந்தார். அவரைப்பார்த்து முத்துஸ்வாமியய்யர் 'என்னடாசுத்தஅக்கிரமக்காரப்பயல்களையெல்லாம் வீட்டில் வைத்துக்கொண்டு—இது உனக்கு நன்றாயிருக்கிறதா' என வைத்தியநாதன் குகையிலிருந்து பாயும் சிங்கம்போல் பாய்ந்துகொண்டு வெளியே வந்து 'என்ன அக்கிரமத்தையுங் காணும் வந்து உம்ம நடுவீட்டிலே பண்ணிப்போட்டார்கள். அக்கிரமக்காரப் பையலாம். பேசுகிறகிரமத்தில் பேசும் இல்லையா பல்லு கில்லெல்லாம்போய்விடும்—ராமேஸ்வரத்தைப் பார்க்க, உஷார் என, முத்துஸ்வாமியய்யர் ஏண்டா பயலே என்னடா சொன்னய் என்றார். வைத்தியநாதன் அதிகமாகப் பேசினல் பல்லுடைந்துபோகும் ஆள் எந்தவூர்ப் பேர்வழி யென்றுபார்த்துக்கிட்டீடம்' என முத்துஸ்வாமியய்யருக்கு கோபம் காற்றுச்சேர்ந்த நெருப்புப்போல் எறிகிறது, மேல்மேலும் அவரும் வார்த்தையைவிட்டு விட்டார். சுப்பிரமணியய்யர் வைத்தியநாதனுக்குப் பரிந்துகொண்டு (அவன்மேல் குற்றம் ஒன்றுமில்லாதபோது கோபித்துக்கொண்டால் யார்தான் பொறுப்பார்) எனவே முத்துஸ்வாமியய்யர் ஒரு குற்றமுமில்லையா நல்லது நீ என்ன செய்வாய் என்று அவர்மேல் கோபித்தார். இதற்குள் வைத்தியநாதன் சந்தேகத்துக்காக வைத்திருந்த சொற்பமரியாதையையும் விட்டுவிட்டு ஏக வசனப்பிரயோகத்திலாரம்பித்துச் சரமாரியாய் ஹிந்துஸ்தானிதுலுக்கு வார்த்தைகளுடன் வசவுகளைவாரி வீச ஏக இரைச்சலாய்விட்டது. ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். கூடிய ஜனங்கள் முத்துஸ்மாமியய்யரைச் சமாதானம் செய்து வீட்டுக்கு அழைத்துச்சென்றிராவிட்டால் கலகம் பிரமாதமாய் நடந்திருக்கும். வைத்தியநாதன் பையல் பேசினபேச்சைக் காதாலே கேட்கக்கூடவில்லை. சுப்பிரமணியய்யரும் இவ்வளவு கலகத்துக்கும் அவன் பக்கமாகவே இருந்துபேசினர். முத்துஸ்வாமியய்யருக்கோ தன் ஆயுசுநாளில் அதுவரையில் ஒருநாளும் நடவாதபடி அன்று நடந்ததைப்பற்றியும் ஒருவராவது தன்னிடத்தில் பேசத்துணியாத பேச்சை அந்த வைத்தியநாதன் பேசினதைப்பற்றியும் சுப்பிரமணியய்யர் சகோதர விசுவாசத்தை மறந்து அந்தத் துஷ்டப் பையல் பக்கமாயிருந்ததைப்பற்றியும் நினைக்க நினைக்க ஆறாத துக்கமும் கோபமும் மனவருத்தமும்மேலிட்டது. இவ்வளவு அக்கிரமத்துக்கும் இடங்கொடுத்து நடந்த தன் தம்பியுடன் அன்று முதல் அவர் பேசுவதையும் விட்டுவிட்டார்.

---

## XIII.

மறுநாள் காலமே பேயாண்டித்தேவனுடைய விசாரணைக்காக முத்துஸ்வாமியய்யருக்கும் சுப்பிரமணியய்யருக்கும் 'சம்மன்' வந்தது. அன்றிரவுஅஸ்தமித்து சாமத்துக்கப்பால் சுப்பிரமணியய்யரும் வைத்தியநாதனும் படுக்கைக்குப்போக இருந்த தருணத்தில் அவர்கள் கிருஹத்திற்குள் கன்னங்கறேலென்று கறுத்துப் பெருத்த உருவமும் கறுத்து வளைந்து காதளவோடிய மீசையும் கருப்பணசாமியினுடைய கண்கள்போல் பயங்கரமான பெரியகண்களும் கையில் இருப்புலக்கை போன்ற ஓர் பெரிய தடியும்கொண்டு திடீரென்று ஒரு மனிதன் வந்தான். சுப்பிரமணி யய்யருக்குத் தூக்கமயக்கம் அவர் 'நாராயணு' என்று தன் மனைவி காதில்படும்படி கொட்டாவிவிட்டு வாயை மூடுகிற சமயத்தில் மேற்சொல்லிய உருவம் அவர் கண்ணுக்குத் தென்பட்டது. உடனே யவர் திடுக்கிட்டு ஐயையோ பேயாண்டி என்று உளறிக்கொட்டிக்கொண்டு எழுந்திருக்க அங்குவந்த மனிதன் 'சாமி சும்மா இருங்கள் நான்தான் அடியேன் சுப்பாத்தேவன்' என்றான். சுப்பாத்தேவன் என்பவன் பேயாண்டித்தேவனுடைய சிற்றப்பன் சூரத்தேவனுடைய மகன். அவனும் உருவத்திலும் நிறத்திலும் பேயாண்டித்தேவனைப்போலவே கிட்டத்தட்ட இருப்பான். சுப்பிரமணியய்யர் தூக்கமயக்கத்தில் அவனைப் பேயாண்டி என்று எண்ணி அலறிவிட்டுப் பிறகு சுப்பாத்தேவன்தான் என்று தெளிந்து 'சுப்பாத்தேவா, வா வா' என்று அவனை உபசரித்தார். அத்தருவாயில் அவன் தடியும் கையுமாய் வீட்டுக்குள் வந்ததில் அந்தப் பிராமணர் நடுங்கிப்போய்விட்டார். அவரை பயப்படச்செய்யவேண்டுமென்றேதான் அவனும் அப்படி வந்தான் வந்தவுடன் அவர் அருகில் அவர் சொல்லாமலே உட்கார்ந்து மீசையை இடக்கையால் கோதிக்கொண்டு 'சாமியெல்லாம் இப்பொ சருக்காருச்சாமியாப்போயிருச்சு. இன்னம்மே இந்தக் கள்ளப்பயகளுக்கும் நமக்கும் தீர்ந்துபோயிருச்சு என்றுதானே சாமி இப்படியெல்லாம் பண்ணிக்கிட்டுத் திரிகிறீகள்? செய்கிறதெல்லாம் செய்யுங்கசாமி' என சுப்பிரமணியய்யர் நடுநடுங்கி என்ன சுப்பாத்தேவா 'எப்படியோ ஆரம்பித்து எப்படியோபோய் முடிந்தது. நிசமாக சொல்லுகிறேன் கேளு. சுப்பாத்தேவா, உன்னிடம் சொல்லுவதற்கு என்ன. உங்களப்பனும் நம்முடைய ஐயாவும் இருந்த நேசத்துக்கு என்னமோ அப்பா நாம் நம்மதலைமுறைமட்டுமாவதுகொண்டு செலுத்திவிட்டோமானல் கீழ்க்கடைகள் என்னமும் பண்ணிக்கிறது. நான் என்ன எல்லாமோ எண்ணிக்கொண்டிருந்தேன். நம்முடைய எண்ணப்படி என்னதான் நடக்கிறது' என சுப்பாத்தேவன் 'என் நீங்கள் எண்ணினதற்கு இப்போதான் என்ன குந்தகம் வந்திடிச்சு எல்லாம் நீங்களாப் பண்ணிக்கிட்ட காரியந்தானே என்னமோ சாமி ஒங்க சருக்காரதிகாரத்திலே பேயாண்டித்தேவனை வெண்ணுப்பிடிச்சுவைச்சுப்பிடுரீகள். எங்க குலம் கூட்டம் முழுக்கவைச்சுப்பிட முடியுமா இல்லை பேயாண்டித்தேவன்தான் ஒங்க கைலே என்னென்னிக்கு மிருந்துகிட்டேயிருப்பான் என்று நீங்க சொர்ப்பனத்திலும் நினைக்கிறீகளா இன்னைக்கு அவனை அடைச்சுப்பிட்டால் நாளை அவன் தப்பிச்சு ஓடியாநதிர்ரான் அப்பரம் சுப்பிரமணியய்யர் எங்கே முத்துச்சாமியய்யரெங்கே, பார்ப்பமே. நீங்களும் இருக்கணும் நானும் இருக்கணும்.

சுப்பிர.—சுப்பாத்தேவா சுப்பாத்தேவா கோபித்துப் பேசாதே, சாதாரணமாக சுபாவத்தில் பேசு, அப்பன் நமக்குள்ளே பேசிக்கிறது கோபிக்கப்படுமா. நாங்களாக முதலிலே வம்புக்குப்போனேமா நீயாச்சொல்லு, திடீரென்று நானு வலியச் சண்டைக்கு இழுத்திருந்தேன் என்றால் நீ சொல்லுகிறதெல்லாம் சரிதான்.

சுப்பா.—ஆமாசாமி நான் ஒத்துக்கிட்டேன் திருடாது எங்க ஜாதித்தொழில்தானே, ஒங்க ஐயமாருக்கு வேதமோதரது எப்படியோ அப்படி எங்களுக்குத் திருடரதுதான் ஜாதித்தொழில் அதுக்காக எங்களை சருக்காருக்குக் காட்டிக்கொடுத்து விடரதா.

சுப்பிர.—அப்படியில்லை அப்புன்பேயாண்டிதேவனைப் பிடித்துக்கொடுப்பதில் எங்களுக்கேதாவது லாபமுண்டா எல்லாம் அந்த சப்மாஜிஸ்திரேட்டு வைத்தியநாதய்யர் ஏற்பாடு.

இப்படி நடந்த சம்பாஷணையைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்த வைத்தியநாதன் 'நம்மய்யர் அதற்கெல்லாம் போகவில்லை. அவர்கள் அண்ணன்தான் அதில் எல்லாம்முஷ்கரம் புடித்ததும்அவர்தான். சிறைச்சாலையிலடைத்ததும் அவர்தான். வக்கீல் வம்பு அமர்த்தினதுகூட அவர் கைப்பணம்தான் எல்லாம். இவரை ஒருவார்த்தை மரியாதைக்குக்கூட கேட்கவில்லை, என்றான். சுப்பாத்வேன் (சரி அந்த ஐயருக்கு என்னமோ பிடிச்சுகிட்டு ஆட்டுரது. அவ்வளவுக்கவ்வளவு அவருக்குப்பின்னலே இருக்குது. அவர் போனரு. இப்போ ஒருவார்த்தை சொல்றேன். கேட்டால் உங்களுக்கும் சேமம் நமக்கும் சேமம் இல்லையோ நமக்காச்சு ஒங்களுக்கு ஆச்சுபாத்துக்கிரும்) என, சுப்பிரமணிய அய்யா (சுப்பாத்தேவா என்ன நான் இவ்வளவுதூரம்சொல்லியும் உனக்கு என்மேலே நம்பிக்கையேற்படவில்லையே; சொல்லுகிற சங்கதியை சும்மாசொல்லேன் இத்தனை பீடிகை என்னத்துக்கு அதற்கு.)

சுப்பா.—சொல்றேன் கேளுங்கள் சாமி. விசாரணை நாளை நாயித்துக் கெட்டாநாளுக்குக் கடுத்த திங்கள்கிழமை வரதாம். வக்கீல் அய்யுரு சொல்ருரு ஒங்க சாச்சிதான்அதிலே முக்கியமாம். நீங்கள் சாச்சி சொல்லாமப்போனல் கேசு ஒன்னுமில்லையாம். நீங்கள் ஒன்றும் களவுபோகலையன்று சொல்லிப்பிடுங்கோ, உங்கள் நகை மாடு கிடு எல்லாத்தையும் அப்படியப்படியே குடுத்துடுகிறோம்.

சுப்பிர.—அதற்கென்ன அப்படியே செய்கிறேனே நீ சொல்லி நான்கேட்காமலிருப்பானேன். சுப்பாத்தேவா ஒன்றும் யோசிக்காதேபோ அப்படியே செய்துவிடலாம் போ.

எதார்த்தத்தில் அப்படிச் செய்வதாக அவருக்கு அந்த சமயத்தில் யோசனைகிடையாது எப்படியாவது ராத்திரி வேளையில் அவனுடன் சண்டைபோடாமல் தப்புவித்தால் க்ஷேமம் என்று அவர் நினைத்து அப்படிச் சொல்லிவிட்டார். உடனே சுப்பாத்தேவன் சாமி அப்படிச்செய்தேளோ அடியேன் ஒங்களுக்கு அடிமை கள்ளப்பயல் பொய்சொல்லமாட்டான் ஒங்க சாமான் எல்லாம் ஒரு மணி சிந்தாமல் ஓங்கவிடம் சேர்க்க நானுச்சுது.

சுப்பிர.—சுப்பாத்தேவா அது சரிதான் ஆனல் மாடு கொண்டுபோனது கல்லாபட்டிக் குப்பாபிள்ளை அவர்களெல்லாம் மறித்திருக்கிறார்களே அவர்கள் சாட்சி சொல்லுகிறபோது என்னசெய்கிறது.

சுப்பா.—அதுக்கு ஒசனைபண்ணுதங்கோ சாமி ஏதோ ரெண்டு உறுப்படி மாடு களவுபோச்சுது என்று வேண்ணுச்சொல்லிவையுங்கோ நகைபோனதை எவன் கண்டுகிட்டிருந்தான் அப்படித்தான் வக்கிலையரும் சொன்னரு.

சுப்பிர.—ஆம் அப்பன் அதுவும் ஒரு நல்ல யோசனைதான் அப்பன். அப்படியே செய்துபோடுவோம் போ, நீ ஒன்றுக்கும் யோசிக்காதே, சுவாமி ஒருவர் இருக்கிறார்—என் அப்பன் நீ சாப்பிட்டை

யோ, கொஞ்சம் நம்ம வீட்டிலே சாப்பிடேன். அடியே, யாரடீயங்கே.

சுப்பா.—இல்லே சாமி நான் சாப்பிட்டுக்கிட்டேன். சாப்பிட்டுத்தான் வந்தேன் இல்லாட்டி இந்நேரம் என்ன.

சுப்பிர.—இல்லே யப்பன் கொஞ்சம் ஒரு பிடிசாப்பிடு. குழம்பு கிழம்பு இருக்குது. கொஞ்சம் சாப்பிட்டுப்போ. யாரடீ இலையைப்போடவில்லை இன்னும்.

வைத்தியநாதனும் சுப்பாத்தேவனை உபசரிப்பதில் கூடச் சேர்ந்துகொண்டான். இவர்கள் இவ்வளவு தூரம் அவனை உபசரித்த காரணம் அவனை யெப்படியாவது சாப்பிடும்படி செய்துவிட்டால் அப்புறம் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதில்லை என்ற அவர்களுடைய ஜாதி சத்தியத்தின்படி அவனால் பிறகு ஒரு கேடும் தங்கள் வீட்டுக்கு வராதென்ற எண்ணமே. கடைசியாய் சுப்பாத்தேவனும் சம்மதித்து அங்கேயே கொஞ்சம் சாப்பிட்டான். சுப்பிரமணியய்யர் ஆசார உபசாரம் செய்தார். ஒரு யதி பிட்சைகூட அவ்வளவு சம்பிரமமாக ஆசார உபசாரத்துடன் நடக்காது. பட்சணங்களும் பண்டங்களும் தாராளமாக சுப்பாத்தேவன்கூட 'போதும் போதும்' என்னும்படி பரிமாறி விருந்திட்டார்கள். கடைசியாய் பால்விட்டு சாதம் போட்டார்கள். சுப்பாத்தேவன் பால் சாதம் சாப்பிடும்போது சுப்பிரமணியய்யரும் பொன்னம்மாளும் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் அவன் அந்த சாதத்தில் கொஞ்சம் மண்ணைக் கிள்ளிப்போட்டுகொண்டுவிட்டானானால் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக்கூடாது என்ற சத்தியம் அவனைக் கட்டுப்படுத்தாது. அவன் அந்தவீட்டுக்குத் தாராளமாய்க் கெடுதல் செய்யலாம். இது கள்ளர் சாதியின் நீதிகளில் ஒன்று. சுப்பாத்தேவனார் பிட்சைசெய்து போனபிற்பாடு விளக்கணைத்துவிட்டுப் பொன்னம்மாள் முதலிய எல்லாரும் படுத்து உறங்கினார்கள்.

மறுநாட்காலையில் வைத்தியநாதன் பொன்னம்மாள் சுப்பிரமணியய்யர் இம்மூவருக்கும் ஓர் சம்பாஷணை நடந்தது. அந்த மாந்திராலோசனை சபையில் கடைசியாய்த் தீர்மானிக்கப்பட்டது என்னவென்றால் சுப்பிரமணியய்யர் சுப்பாத்தேவன் சொன்னபடியே நகைகள் ஒன்றும் திருட்டுப் போகவில்லை யென்றும் மாட்டில் இரண்டு உருப்படிதான் களவுபோயிற்று என்றும் வைக்கோற்படைப்பைக் கொளுத்தியது பேயாண்டித் தேவனல்லவென்றும் சாட்சி சொல்லிவிட வேண்டியது என்பதே. சுப்பிரமணியய்யர் அப்படிச் செய்வது தன் தமையனைக்காட்டிக்கொடுப்பதுபோலாகுமே என்று நெடுநேரம் அந்தத்தீர்மானத்துக்கிணங்க மனமற்றவராயிருந்தார். ஆனால் மத்தளத்துக் கிருபக்கமும் இடி என்றபடி வைத்தியநாதனும் பொன்னம்மாளும் தங்களுடைய பிடிவாதத்தினாலும் முரட்டுத்தனத்தினாலும் அவரை இரண்டு பக்கமும் மோத நமது அய்யர் அவர்கள் சொன்னபடி கேட்பதாக ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. வைத்தியநாதனுக்கு இந்த விதத்தில் முத்துஸ்வாமியய்யருக்கு பெரிய தீங்கு பண்ணிவிடலாமென்று வெகு சந்தோஷம்.

பேயாண்டித்தேவனுடைய விசாரணை நடந்தது. சுப்பிரமணியய்யர் சுப்பாதேவனுக்குத்தந்த உறுதியைக் கொஞ்சமும் வழுவாது நிறைவேற்றிவிட்டார். நகை போனதற்கு யாதொரு ருசுவும் ஏற்படவில்லை. மாடுகளில் இரண்டு உருப்படிதான் திருடப்பட்டதென்று ருசுவாயிற்று. வைக்கோற்போரைப் பேயாண்டித்தேவன்தான் கொளுத்தினான் என்பதற்கு யாதொரு முகாந்தரமும் கற்பிக்கப்படவில்லை. கோர்ட்டார் அவனைக் கொடுமையாய்த் தண்டிக்கவேண்டுமென்று நிரம்ப ஆவலுள்ளவர்களாயிருந்தும் ருசுக்குறைவினால் அப்படிசெய்யக்கூடவில்லை. சுப்பிரமணியய்யருடைய வாக்குமூலம் முத்துஸ்வாமி அய்யருக்கு இடிவிழுந்தாற்போல இருந்தது. இவர் இப்படிச் சாட்சி சொல்லுவார் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கின கதையாய் முடிந்ததே என்று விசனப்பட்டுக்கொண்டு தன் தம்பி மீது அடங்காக் கோபத்துடன் கோர்ட்டை விட்டு அவர் வெளியே வரும்போது பேயாண்டித்தேவனை அவனுக்கு விதிக்கப்பட்ட இரண்டு வருஷம் தண்டனைக்கு உட்படுத்தும்பொருட்டு காவற்காரர்கள் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றார்கள். அப்பொழுது அந்தத்தேவன் முத்துஸ்வாமி அய்யரைக் கண்டு பயங்கரமான பார்வையுடன் மீசையை முறுக்கிக்கொண்டு தோள் தட்டிக் கர்ச்சித்துக் கம்பீரமாய் 'ஏ! பாப்பான் இரண்டு வருஷம் எனக்கு இரண்டு நாள் இனி யுன்னைவிடேன் வா' என்று சொல்லி அலட்சியமாய் சிறைச்சாலைக்குச் சென்றான். முத்துஸ்வாமி அய்யர் அவனைக் கப்பலேற்றிக் கடலுக்கப்பால் அனுப்பிவிடலாமென்று ஆசைவைத்திருந்தார். அப்படி அவனைப் பூராவாக ஒழித்துவிடலாமென்ற தைரியமில்லாவிடில் அவனுக்கு விரோதமான ஓர் பிரயத்தனமும் அவர் செய்யத்துணிந்திருக்கமாட்டார். இப்பொழுது வியாபாரம் பாதிக்கிணறு தாண்டினாற்போல் ஆய்விட்டது என்று விசனப்பட்டுக்கொண்டு பேயாண்டித்தேவனால் தனக்கு சீக்கிரம் ஏதாவது



தீங்கு வருவது நிச்சயம் என்ற பயம் மனதைக்கலக்க தன் தம்பியின் நடத்தை அருவருப்பையுண்டாக்க கொஞ்சமும் தன் சித்தம் தன்னிடமில்லாமல் திரும்பி ஊருக்குவந்துசேர்ந்தார். வீட்டுக்கு வந்தவுடன் கமலாம்பாள் மலர்ந்த முகத்துடன் அவரை உபசரித்தும் அவர் அவளுடன் முகங் கொடுத்துப் பேசாமல் 'இதென்ன உலகம்'. சீ இதில் உயிர்வாழ்வதைக் காட்டிலும் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனை விட்டுவிடலாமென்று இவ்விதம் சலித்துக்கொண்டிருந்தார். இப்படி யிருக்கும்போதே கமலாம்பாள் இடுப்பில் இருந்த குழந்தை இவருடைய விசனத்தையும் கோபத்தையும் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் இவரைப்பார்த்துச் சிரிக்க ஆரம்பித்ததுமன்றி இவரிடம் வர அதிக ஆவல்கொண்டு தன் தாயார் இடுப்பில் தரிக்காமல் கையைக்காலை யாட்டிக் கூத்தெல்லாம் பண்ணியது. அதைக் கண்ட முத்துஸ்வாமியய்யர் தன்னையறியாமலே சிரித்துக்கொண்டு 'உலகத்தில் குழந்தைகள்தான் கொஞ்சம் யோக்கியர்கள். இன்னும் வயது வந்தால் நீ என்ன என்ன அக்கிரமங்கள் எல்லாம் பண்ணப்போகிறாயோ' என்று தன் மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டு அதைவாங்குவதற்காகத்தன் கைகளை நீட்டினார். நீட்டினது தான் தாமதம் அந்தக்குழந்தை ஒரே குதியாய்க் குதித்து அவர் தோள்மேலே தவழத்தொடங்கியது. அவர் 'மற்றவர்கள் என்னை வெறுத்துத் தள்ளினாலும் நீயாவது என்னை லெட்சியம்செய்கிறாயே: உனக்கு இந்த ஜனனம் என்னத்துக்கு என்னபாவம் பண்ணியிருக்கிறாயோ' என்று சொல்லிக்கொண்டே அதை மார்போடணைத்து முத்தமிட்டுக் கொஞ்சிக்குலாவி அதன் சந்தோஷத்தில் தன் விசனத்தை மறந்து அதனுடன் விளையாட அந்தச் சிறுகுழந்தை அவருடைய முகத்தைத்தடவி மூக்கைப் பரிசோதனைசெய்து கண்ணைத் துடைத்துக் காதில் ஜொலிக்கும் வஜ்ஜிரக்கடுக்கன்களைஆட்டியாட்டிப்பார்த்துகைகளை (ராராமையா) என்று தாமரைப் பூப்போல் மலர்த்திக்காட்டி கோபாலலீலைகள் எல்லாம் செய்ய முத்துஸ்வாமியய்யரும் கமலாம்பாளும் வினோதகாலட்சேபம் செய்தார்கள். இந்தக்குழந்தைக்கு நடராஜன் எனப்பெயர். அதை அவர்கள் ராஜா, நடராஜா எனச்செல்வப்பெயரிட்டழைப்பார்கள். அது அவர்களுக்கு ஓர் விசேஷ பாக்கியமாயிருந்தது. சாக்ஷாத் கோபாலகிருஷ்ணனே ஆயர்பாடியில் விளையாடினதுபோல அவர்களுடன் விளையாட வந்ததுபோலிருந்தது. இவ்விதம் வளர்பிறைச் சந்திரனைப்போல் நித்தியானந்தத்தைக் கொடுத்துக்கொண்டிருந்த அக்குழந்தை நாளுக்கு நாள் அழகிலும் புத்தியிலும் வளர்ந்துவந்தது. நடராஜன் கொஞ்சம்கூட வேற்று முகம் என்பதில்லாமல் யாரிடத்திலும் பிரியமாய் விளையாடியதால் ஊருக்கெல்லாம் செல்வக் குழந்தையாய் விளங்கினான். அவன் விளையாடிக்கொண்டிருக்கும்போது தெருவில் அவசரமாய்ப் போகிறவர்கள் கூட நின்று பார்த்துவிட்டுப் போவார்கள். நான் நீ என்று பொன்னம்மாளைத் தவிர மற்றப் பெண்டுகளெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு அந்தக் குழந்தையை அவர் அவர்களுடைய கிரஹத்துக்கு எடுத்துப்போய் சிற்றுண்டி கொடுத்துச் செல்வம் பாராட்டினார்கள். இப்படி ஊரார் பெருமை பாராட்டப்பாராட்ட கமலாம்பாளுக்கு எங்கே திருஷ்டி தோஷம் வந்துவிடுமோ என்று குழந்தையை வெளியில் விடப்பயம் அதிகரித்தது. முத்துஸ்வாமி அய்யருக்கு நிரம்ப சந்தோஷமாயிருக்கும் சமயங்களில் இவ்வளவு அருமையான பாக்கியம் நமக்கு நிலைக்கவேண்டுமே என்ற பயம்வந்து விசனத்தையுண்டுபண்ணும். இவ்விதம் காலம் கழிவது தெரியாமல் இரண்டு வருஷம் சென்றது. இப்படியிருக்க ஒருநாள் திடீரென்று செல்வக் குழந்தை நடராஜனைக் காணவில்லை. அன்று ஆருத்திராதரிசனம். முத்துஸ்வாமி அய்யர் காலமே ஸ்நானம்செய்து பட்டு வஸ்திரம் தரித்துச் சுவாமி தரிசனம் செய்யக் கோயிலுக்குச் சென்றார். கமலாம்பாள் குழந்தை லெட்சுமிக்கும் நடராஜனுக்கும் ஸ்நானம்செய்து வைத்து சர்வாபரணங்களையுமணிந்து சிங்காரித்திருந்தாள். முத்துஸ்வாமியய்யர் கோயிலிலிருந்து புஷ்பமும் பிரசாதமும் கையுமாய் வந்தவுடன் குழந்தை எங்கேயென்று கேட்டார். கமலாம்பாள் குழந்தை வாசலில் குட்டிகளோடு விளையாடிக்கொண்டிருக்கும் என்றுசொல்லி வீட்டுக் காரியத்தின்மேல் கவனமாயிருந்தாள். முத்துஸ்வாமியய்யர் வாசலில் வந்து பார்த்தார் குழந்தையைக் காணோம். ராஜா ராஜா என்று அழைத்துப்பார்த்தார். லெட்சுமியைவிட்டுத் தேடச்சொன்னார். தானும் அயலகங்களில்போய்ப் பார்த்தார். நடராஜன் எங்கும் தென்படவில்லை.

(இன்னும் வரும்.)

பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர், பி. ஏ.

## ஒருதாத்தா செய்ததீர்மானம்
### அல்லது
## தங்கம்மாள் தலைவிதி.

### VI.

பட்டணங்களில், "கிளப்பு"களிலும், "ஸொஸைடி"களிலும், இங்கிலீஷ்படித்த பெரியமனிதர்கள் சா

யந்திரவேளைகளில், சேர்ந்து, காபித்தண்ணீர், தேயிலைத்தண்ணீர் முதலியவைகளைக் குடித்து, உளர்வம்பு பேசுவதுபோல, நாட்டுப்புறங்களில், ஆற்றங்கரை மண்டபங்களிலும், புட்கரணிக்கரையிலும், காலை மாலையில் கூடி, உலக வியாபாரங்களைப்பற்றியும், சொந்த சுகதுக்கங்களைப்பற்றியும், ஊரார் பேசுவது வழக்கம். பட்டணங்களில்கூட, ஆலயங்களின் முற்றவெளியும், கோபுரவாயிலும், சாதாரண ஜனங்களுக்கு வம்புக் கச்சேரியாகிக்கொண்டு வருகின்றன. வீட்டில் தரித்திராமல், வெளியிலேயே திரிந்துகொண்டிருக்கும், வீணர்கள், வம்பர்கள், வைதீகர்கள், வியாபகர்கள் முதலியோர்களை மற்றெங்கே பார்க்க முடியாவிட்டாலும் நிச்சயமாய் ஆலயங்களிலும், ஆற்றங்கரைகளிலும் காணலாம். கோவிலிலும், குளக்கரையிலும் அடிபடாத விஷயம் ஒன்றுமில்லை. அசுவிலை, உத்தியோகஸ்தர்கள் மாற்றல், விவாச்சிய விஷயங்கள், கொடுக்கல் வாங்கல், வைத்தியம், நூதன உடை, நகை ஏற்பாடுகள், கலியாணச் சண்டைகள் சகலமும், விவகரிக்கப்படும். வர்த்தமானபத்திரிகையில் வரக்கூடாத விநோதங்களெல்லாம் இவ்விடங்களில் கேள்விப்படலாம். வெள்ளைக்கார ஜட்ஜிகள்கூட "லஞ்சம்" வாங்க ஆரம்பித்துவிட்டதும், தீராவிகூட இல்லாமல் "ரயில் ஓடப்போவதும், தலையில்லாத மனுஷன் பேசுகிறதும், ஆள்வரிபோட்டு சர்க்கார் ஜனங்களை இன்னும் வருத்தப்போவதும், போலீஸ்தார் உபத்திரவமும், உத்தியோகஸ்தர்களுடைய உள்ளூழலும், நோவில்லாமல் பிரஸவிக்க உதவிசெய்யும் புதியமருந்தும், ஆண் பெண் விவஸ்தை இல்லாமல் உலகம் தலைகீழாக நடக்கப்போவதும், இக்காலத்தில் பெண்ணைவைத்துக்கொண்டு, பிள்ளைக்காக ஒவ்வொருவர் படுகிறபாடும், சென்னபட்டணத்தில் பிராமணனுக்கும், பறையனுக்கும் கலியாணம் ஒன்றைத்தவிர மற்றெல்லாம் நடக்கிறதும், உத்தியோகம் சம்பாதிக்கிறதற்காக ஒவ்வொருவன் செய்கிற உமேதிவாரியும், அக்கிரமும், ஏழைப்பிராமணன் படிக்கக்கூடாதென்று சர்க்காரில் பள்ளிக்கூடத்துச் சம்பளத்தை உயர்த்திவிட்டதும், தண்ணீரின்பேரி லேற்றப்பட்ட கைதிகளை அக்கரைச்சீர்மைக்குக் கொண்டுபோகாமல், நடுவழியில் சமுத்திரத்தில் தள்ளுவதும், இனிமேல் தாடிவைத்தவனைத்தவிர பூணூல் போட்டவனுக்கு சர்க்கார் உத்தியோகம் கிடைக்கமாட்டாததும், முதலிய சமாசாரங்களைப்பற்றி இச்சமையங்களிற் பேசப்படும். மாயூரத்தில் ஆற்றுமணலில் ஊற்றங்கரையில் உட்கார்ந்து "பட்டமங்கலம் கோபாலய்யர்" ஜபஞ்செய்துகொண்டிருந்தார். இவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். வருஷம் ஒன்றுக்கு நூறு கலம் கிடைக்கும்படியான பூமியும், அக்கிரகாரத்தில் ஓர் வீடும் இருந்தன. மேற்கு முகமாய்த்திரும்பி, கையை அங்கவஸ்திரத்தில் மூடி நாலுபக்கத்திலும் பார்த்துக்கொண்டு ஜபம்செய்துகொண்டிருக்கையில் இராமா சாஸ்திரி என்ற ஓர் பிராமண வைதீகர் பக்கத்தில் ஜபத்துக்காக உட்கார்ந்து கோபால அய்யரவாள் க்ஷேமமா என்றார்.

கோபால அய்யர்.—பெரியோர்களுடைய ஆசீர்வாதத்தினால் யாதொன்றும் குறையில்லை. க்ஷேமந்தான்.

ராமா சாஸ்திரி.—இந்த வருஷம் பையன் 'மிடில் பரீக்ஷைக்குப்போனானே. பரீக்ஷை தேறிற்றா.

கோ. அ.—தேறினான்.

ரா. சா.—முதலில் தேறினானோ, இரண்டாவதாகத் தேறினானோ.

கோ. அ.—மூன்றாவது கிளாசில் தேறினான்.

ரா. சா.—என் அவ்வளவு குறைந்துபோயிற்று.

கோ. அ.—பையன்பேரில் குற்றமில்லை. இரவும் பகலும் தூக்கமில்லாம தான் படித்தான். வேடிக்கை விளையாட்டுக்குக் கூடப்போகிறதில்லை இரவில் பத்துமணி வரையில் படிப்பான். பிறகு விடிய சாமத்துக்கு நித்திரையினின்றும் எழுப்பிவிடுவேன். அதினாலேயோ, இல்லாவிடின் திருஷ்டியினாலேயோ, பரீக்ஷைகாலத்தில் உடன் புக்கு வந்துவிட்டது. எப்போதுமே கணக்கில் போதாது, பூகோளமும் தெரியாது.

ரா. சா.—பையனுக்கு வயது பதின்மூன்று இருக்குமோ. இந்த வருஷம் விவாகம் செய்ய உத்தேசமுண்டோ.

கோ. அ.—பதினாறு நிரம்பி பதினேழுவயது, கொஞ்சம் நருங்கல். நல்லவிடமாய் நேர்ந்தால் செய்துபோடுகிறது தான்.

ரா. சா.—இந்தவருஷமே நடத்துவது யுக்தம். வயதாகிறது, படிப்பிலும் மெதுவாயிருக்கிறான் இன்னும் இரண்டு வருஷம்போனால் ஒருவேளை சிரமப்படும். மேலும் நல்ல இடமாய் ஒன்று என் கையிலிருக்கிறது.

கோ. அ.—யார் சொல்லுமே.

ரா. சா.—புத்தூர் அபிராமய்யரென்று கேள்விப்பட்டிருக்கலாமே, அவருடைய பேத்தி, குலங் கோத்திரத்துக்கு ஆட்சேபனையில்லை. நல்ல வடமாள், பெண்ணும் ரூபவதியாயும், குணசாலியாயும் இருக்கிறாள், ஜாதகமோ நிரம்ப திறமையிருக்கிறது.

"கற்றோர் கடாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."


# விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம். II. 1894ஞு மார்ச்சுமீ இலக்கம் 11.


## PROCEEDINGS OF THE MADRAS GOVERNMENT.

The following order of the Madras Government has been communicated to us through the proper channel:—

*Local and Municipal Department.*

Read the following paper:—

From the President, District Board, Coimbatore, dated 31st January 1894, Reference on No. $\frac{179}{D.B.}$ requesting sanction for the purchase of a copy of "*Viveka Chintamani*" for each of the Salary Results Schools under the control of the Pollachi Taluq Board.

Order—dated 1st February 1894, No. 274. L. Mis.

Sanctioned.

(True Extract.)

(Signed) LIONEL DAVIDSON,
*Ag. Assistant Secretary.*

## சென்னை கவர்ன்மெண்டார் 'ப்ரொஸீடிங்ஸ்.'

சென்னை கவர்ன்மெண்டார் செய்த பின் வரும் உத்திரவு தக்க அதிகாரிகள் மூலமாக நமக்குத்தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது:—

லோகல் அன்ட் முனிசிபல் டிபார்ட்மெண்டு.

கொயமுத்தூர் டிஸ்திரிக்ட் போர்ட் பிரெஸிடெண்டிடமிருந்து 1894ஞு ஜனவரிமீ 31உயிட்டு $\frac{179}{D.B.}$ நெ போட்டு, பொள்ளாச்சி தாலூகா போர்டாரின் மேன்பார்வையிலுள்ள ஸாலரி ரிஸல்ட் பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் விவேக சிந்தாமணி பத்திரிகையில் ஒரு காபி வாங்கிக்கொடுக்க 'ஸாங்ஷன்' கேட்டுவந்த கடிதம் படிக்கப்பட்டது.

உத்திரவு.

1894ஞு பிப்ரவரிமீ 1உ, நெ. 274, L. Mis.

கேட்ட ஸாங்ஷன் கொடுக்கப்பட்டது.

(சரியான எக்ஸ்திராக்ட்).

(ஒப்பம்). ல்யனல் டேவிட்ஸன்,
ஆக்டிங் அஸிஸ்டெண்ட் செக்ரிடெரி.

## ஜோதிஸ்.

### IV.

* முன்பத்திரிகையில் துருவஜோதிஸைப்பற்றிக் கொஞ்சம் பிரஸ்தாபித்தோம். நம்முடைய சாஸ்திரங்களில் இராத்திரி காலங்களில் சிவப்புவெண்மை, வெள்ளைச்சிவப்பு, நீலம், மஞ்சள் இவ்வகை நிறமுள்ள வானவிற்கள் காணக்கூடுமென்றும், அவைகளின் பலன் இன்னதென்றும் சொல்லியிருக்கிறது. இராத்திரி காலங்களில் கறுப்பு வானவில் காணுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. நாலு திக்குகளிலும் இராத்திரி காலங்களில் வானவிற் காணலாமென்று கூறியிருக்கின்றது. வராகசம்ஹிதையில் ௩௫-ம் அத்தியாயத்தில் ௬௫, ௬௮-ம் சுலோகங்களைப் பிர

* சென்ற நவம்பர் மாசத்துச் சஞ்சிகையைப் பார்க்க.

மார்ணமாக எடுத்துக்காட்டலாம். "ஆகாசமில்லாத இடங்களில் வானவிற்கண்டால் பூமியில் மரணங்கள் உண்டாகும். அது வெள்ளைச்சிவப்பாயிருந்தால் மானிடர் ஆயுதங்களால் வருந்துவார்கள். மஞ்சளாயிருந்தால் அக்கினியாலும், நீலமாயிருந்தால் பட்டினியாலும் ஜனங்கள் வருந்துவார்கள். இராத்திரி காலங்களில் வானவில் கிழக்கே கண்டால் இராஜாக்கள் கஷ்டப்படுவார்கள். தெற்கே கண்டால் தளகர்த்தன் சாவான். மேற்கே கண்டால் உபாத்தியாயர்கள் கஷ்டப்படுவார்கள். வடக்கே கண்டால் மந்திரிகள் துக்கிப்பார்கள்," என்று மேற்சொன்ன சுலோகங்களிற் காண்கிறது. மேற்படி ௩௫-வது அத்தியாயத்தில் பலவகை நிறமுள்ள சூரியரச்மிகள் மேகங்களில் விழுந்து காற்றினால் வளைபடும்போது வானவில் உண்டாகின்றனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. இராத்திரி காலங்களில் சூரியரச்மிகள் காணக்கூடாதாகையாலும், சூரியரச்மிகளின் பலஹீனமான ரூபமாகிய சந்திரிகையால் கிழக்கு அல்லது மேற்கு, இவ்விரண்டு திக்குகள் ஒழிய மற்ற திக்குகளில் வானவிற்காணக்கூடாதாகையாலும், அங்காரகன் முதலிய மற்ற கிரகங்களுடையவும் நக்ஷத்திரங்களுடையவும் ஜோதியால் உண்டாகக்கூடாதாகையாலும், இராத்திரி காலங்களில் காணப்பட்ட வானவில்லானது மின்னல் சக்தி, காந்தசக்தி இவைகளின் பலனாகிய துருவ ஜோதிஷின் ஒரு திருஷ்டாந்தமாகவே இருக்கவேண்டும். ஆனால் இக்காரணத்தால் கறுப்பு வானவில் எவ்வாறு உண்டாகுமென்று தெளியக்காணோம். இவ்வகைக் காக்ஷியானது அபூர்வமானதாலும், அது இதுவரை என் கண்ணுக்குத் தட்டுப்படாமல் இருப்பதாலும் அதின் காரணம் இன்னதென்று என்மனதில் படவில்லை. கறுப்பு என்பது நிறம் இன்மையாதலால் கறுத்த வானவிற் காணப்பட்ட இடத்தில் நிறத்திற்கு ஏதுவாய ரச்மிகளோ, மின்னல், காந்தல் சக்திகளோ இல்லாமல் இருக்கவேண்டும்.

(Zodiacal Light.) ௯-வது காணக்கூடிய ஜோதிஸ் ராசிஜோதிஸாம். இந்த ஜோதிஸானது எல்லா மாதங்களிலும் காணக்கூடியதன்று. தை, மாசி மாதங்களில் மேற்கே அஸ்தமித்த பிற்பாடு ௮, ௯ நாழிகை வரையிலும், அற்பசி, கார்த்திகை மாதங்களில் சூரிய உதயத்திற்கு ௫, ௬ நாழிகைக்கு முன்பு முதற்கொண்டும் காணலாம். இதற்குக் காரணம் சூரியனைச் சுற்றிலும் இருக்கிற ஜோதிராகாசந்தான். சூரியனைச் சுற்றிலும் ஜோதிராகாசம் உள்ளதாய் சூரியனைப்பற்றிய பத்திரிகையில் சொல்லியிருக்கின்றோம். இந்த ஆகாசமானது கோழி முட்டை வடிவமாய் சூரிய மண்டலத்திற்கு இருபுறத்திலும் நீண்டிருக்கிறது.

பூமியானது சூரியனைச் சுற்றி வரும்போது சூரியனுக்கு வால்போலிருக்கும் இந்த ஜோதிராகாசத்திற்கு சமீபித்து வருங்காலத்து சூரிய உதயத்திற்கு முந்தியாவது சூரியாஸ்தமனத்திற்குப் பிற்பாடாவது இவ்வகை ஜோதிஸ் நமக்குக்காணப்படுகிறது. இந்த ஜோதிஸ்ஸின் வடிவம் அடிவானத்தில் விரிந்தும் உயரச்செல்லச் செல்ல விரிவு குறைந்து ஒடுங்கி கூர்மைப்பட்டும் போகிறது. இதனால்தான் அண்டாகாரமாய் ஜோதிஸ் இருக்கவேண்டுமென்று நாம் முன்னமே சொன்னோம். ஆனால் ராசி ஜோதிஸை 'திக்தாஹா' (செவ்வானம்) என்று சொல்லப்பட்ட சந்தியாகாலத்து சோபையோடு குழப்பக்கூடாது. ஏனென்றால் ராசி ஜோதிஸ் காணக்கூடாத மாதங்களில் கூட சந்தியாசோபையைக் காணலாம். 'பிரதிசூரியனும்' அவ்வாறே. 'திக்தாஹா,' 'பிரதிசூரியன்' என்ற தோற்றங்கள் சாக்ஷாத் சூரிய ரச்மிகளின் தோற்றந்தான். பொய் சூரியனைப்பற்றி நாம் *முதலாவது பத்திரிகையில் எடுத்துக்காண்பித்த வியாக்கியானங்கள் 'திக்தாஹா' என்ற தோற்றத்திற்கும் அமையும். ஆனால் 'பிரதி சூரியன்' என்ற தோற்றத்தில் சூரியரச்மிகள் கோளாகிருதியாய் ஆகாசத்திலுள்ள வாயுவாம்சங்களால் திரட்டிக்காண்பிக்கப்படுகின்றன.

'திக்தாஹா' என்ற தோற்றத்தில் மேற்படி ரச்மிகள் பரந்து காண்கின்றன.

சூரியன் என்ற பதார்த்தத்தில் சூரியன்மண்டலத்தைச் சுற்றிய ஜோதிராகாசமும் உள்பட வேண்டியது முறைதான். விருத்தாகாரமாயுள்ள சூரியமண்டலத்திலிருந்து நேர்பட்டு வரப்பட்ட சூரியரச்மிகள் ஆகாசத்தில் விருத்தாகாரமாகவோ, பரவலாகவோ காணும்போது அதற்கு முறையே 'பிரதிசூரிய' னென்றோ, 'திக்தாஹா' (செவ்வானம்) என்றோ பேர் உண்டாகிறது. அந்த மண்டலம் அல்லாத ஜோதிராகாசம் புலப்படும்போது அதற்கு ராசு ஜோதிஸ் என்றுபேர். வாஸ்தவத்தில் இந்த ஜோதிராகாசம் சூரியனிடத்தில் ஜனித்ததுதான்.

ஆகாசத்தில் காணக்கூடிய ௰-வது ஜோதிஸ் காற்றின் பின்னம்சங்களாகிய அக்னிவாயுவின் ஜோதிஸாம். இந்த ஜோதிஸானது பல்வகை நிறமாகக் காணாது ஒருவகை நிறமாகவே காணக்கூடும். ௪-வருஷங்களிற்குமுன் அர்த்த இராத்திரியில் இவ்வகை ஜோதிஸ் நான் கண்டேன். அதைப்பார்த்தபோது புகையில்லாமல் வீடுவீடுகளாய் ஏககாலத்தில் அக்னி பற்றி எரியும் பிரகாசம்போல் தோன்றிற்று. வெயில்

* சென்ற ஆகஸ்டு மாசத்துச் சஞ்சிகையைப் பார்க்க. (Vol. II. No. 4.)



காலத்திற்றான் இவ்வகைத் தோற்றங்கள் அதிகமாய்க் காணக்கூடும். யாதொரு களங்கமில்லாத இராத்திரி காலத்தில் திடீரென்று மின்னல் கண்டதுபோல்கண்டு மறைகிறதுமுண்டு, தீர்க்ககாலம் நிற்பதுமுண்டு. இந்த ஜோதிஸைப்பற்றி வாராகசம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது. 'பாஸ்பரசென்ஸ' (Phosphorescence) என்ற வாயுவின் விசேஷத்தாலும் ஜோதிஸ் தோன்றலாம். இராத்திரி காலங்களில் சமுத்திரத்தின் அலைகளில் காணப்படும் அதி மனோகரமான ஜோதிஸும் உப்புஜலங்களில் தோணிகள் செல்லும்போது காணப்படும் ஜோதிஸும் பெரும்பாலும் இக்காரணத்தால்தான் உண்டாகின்றன. கொள்ளிவாய் பிசாசு என்று சில சமயங்களில் ஜனங்கள் பயப்படுகிற ஜோதியும் இவ்வகை அச்னி வாயுவுகளின் பிரகாச விசேஷமென வெள்ளைக்கார சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இதனால் நான் பிசாசு இல்லை என்று சொல்லவரவில்லை; பிசாசுகள் ஜோதிஸ் வடிவமாய்த்தோன்றக்கூடும். இதைப்பற்றி பிற்பாடு விஸ்தாரமாய் பிரஸ்தாபிக்கிறேன்.

ஆகாசத்தில் ௰௧-வது காணக்கூடிய ஜோதிஸ் பொரிகள்போன்ற ஜோதிஸாம். மின்னற் காந்த சக்தியால் காணப்படும் பொரித் தோற்றங்களை ஒழித்து இவ்வாறு காணப்படுவது கண்குற்றமே அல்லாமல் வாஸ்தவமன்று. அதிக உழைப்பினாலோ வேறு காரணங்களினாலோ கண்ணிலுள்ள நரம்புகள் ஜலத்திரள்கள் இவைகளுக்குக் கேடு உண்டாகி ஆகாசத்தில் வியாபகமாயிருக்கிற சூரியரச்மிகளைப் பொரிபோலவும், விசிரிபோலவும், படல்போலவும் காண்பிக்கக்கூடும். வியாதி உள்ளவன் கண்ணுக்குச் சந்திரன் இரட்டையாகவோ அதற்கு அதிகமாகவோ கண்டால் அவன் சீக்கிரம் சாவானென்று வராகமிஹிரர் சொல்லுகிறார்.

ஆகாசத்தில் ௰௨-வது காணக்கூடிய ஜோதிஸ் வெறுங்கண்ணுக்குத் தோற்றக்கூடியதன்று. தூரதொலைக் கண்ணாடியினால் காணக்கூடியதாம். இந்த ஜோதிஸ்ஸானது நக்ஷத்திர மண்டலங்கட்கப்பாலும் புனர்பூச முதலிய நக்ஷத்திரப்பிரதேசங்களிலும் காணக்கூடும். இதற்கு இங்கிலீஷில் 'நெபுலா' (Nebula) என்று பெயர். தூரதொலைக்கண்ணாடியில் இந்தஜோதிஸ்ஸானது கைவிரல்களில் சங்கரேகைகள் எவ்வாறு வளைந்து சுற்றுக்குள் சுற்றாய்க் காண்கிறதோ அவ்வாறு வளைந்தும் மற்றும் பலவடிவங்களாயும் காண்கிறது. அந்த ஜோதிஸ் வகிக்கும் பதார்த்தங்கட்கு அடர்த்தியில்லை. காலகதியால் இந்த அடர்த்தியில்லாமல் காற்றிலும் இலேசுபட்டிருக்கிற பதார்த்தங்கள் உறைந்து நக்ஷத்திரங்கள், கிரகங்கள், உபகிரகங்கள் முதலிய வானஜடங்கள் உண்டாயிருப்பதாய் வெள்ளைக்கார சாஸ்திரிகளின் சித்தாந்தம். நமது வேதத்திற் சொல்லியபடி ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிரிதுவியும் உண்டாயதாய் நாம் வகித்துவரும் அபிப்பிராயத்திற்கு மேற்கண்ட வெள்ளைக்காரசாஸ்திர சித்தாந்தம் அநுகூலம்.

நானாவித மதபுஸ்தகங்களில் ஈசுவராம்சமான சில ஜோதிர் விசேஷங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு பக்தனுக்காக தேவியானவள் தன் காதிலுள்ள ஒரு தாடங்கத்தையெடுத்து ஆகாசத்திலெறிந்து அதின் தேஜஸ்ஸால் அமாவாஸ்யையை பௌர்ணமியாகச்செய்தாளென்று நம்முடைய உபபுராணங்கள் ஒன்றில் காண்கின்றது. வைதீக மார்க்கத்தை ஸ்திரப்படுத்தவும் அனுசரிக்கவும் திரு அவதாரம் செய்த நமது திருஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள், அநேக அற்புதங்கள் செய்து க்ஷமண மதத்தைப்போக்கி விவாகஞ் செய்துகொண்ட காலத்தில், விவாக முடிந்தவுடன் தாமும் தம்முடைய பத்னியும் கிரகஸ்தாச்ரமத்தில் தீர்க்ககாலமிருந்தால் ஒருவேளை கர்ம்ம பாசமானது தம்மைப் பற்றிக்கொள்ளுமென்று பயந்து பரமசிவனை ஸ்துதித்துத் தியானித்தபோது ஒருபெரிய தேஜஸ் உண்டாயிற்றென்றும் அந்த ஜோதிஸ்ஸில் கலியாணத்திற்கு வந்த ஜனங்களில் யார்யார்க்கு இஷ்டமுண்டோ அவர்கள் திருஞானசம்பந்தமூர்த்தியின் அனுமதிப்படி அதில் பிரவேசிக்க, சாயுஜ்யபதவி பெற்றார்களென்றும், முடிவில் திருஞானசம்பந்தமூர்த்தியும் தம் குடும்ப சகிதம் அந்த தேஜஸ்ஸில் பிரவேசித்து சாயுஜ்யபதவி பெற்றாரென்றும் பெரியபுராணத்திற் காணப்படுகின்றது. அதுபோலவே கிறிஸ்தவ புஸ்தகத்தில் இஸ்ரவேலர் எஜிப்து தேசம்விட்டு யாத்திரை சென்றகாலத்தில் இராக்காலங்களில் அவர்கட்கு வெளிச்சங் காட்டும்பொருட்டு ஆகாசத்தில் ஜோதிஸ்தம்பம் கண்டதாக எழுதப்பட்டிருக்கிறது. ஏசுகிறிஸ்து ஜனித்த சமயத்தில் ஒரு நக்ஷத்திரம் உதித்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறுதித்த நக்ஷத்திரமானது வாஸ்தவமாயிராதென்றும், இருந்தாலும் வாலில்லாதூமகேது வாயிருக்கலாமென்றும் டின்டெல் (Tyndal) என்ற இங்கிலீஷ் சாஸ்திரியெழுதியிருக்கிறார். இராத்திரி காலங்களில் ஸ்தம்பம்போல் ஜோதிஸ் காணலாமென்று நம்முடைய சாஸ்திர புஸ்தகங்களிற் காண்கிறது. ஆகையால் கிறிஸ்தவ புஸ்தகங்களில் சொல்லப்பட்ட திருஷ்டாந்தங்கள் ஈசுவர சங்கற்பத்தால் பிரத்தியேகமாய் விசேஷித்து உண்டானதாய் விசாரிக்க இடமில்லை. என்றும் குறைவில்லாமல் ஒரே ரீதியாய் அதி தேஜஸ்ஸோடு சூரிய பகவானுக்குள்ள ஜோதிஸ்ஸானது சூரியவாசிகளா

கிய மகாத்மாக்களுடைய ஆத்மதேஜஸ்ஸென்றும், அது வேறே எவ்வித காரணத்தாலும் உண்டானதல்லவென்றும், வேறே காரணத்தால் உண்டாயிருந்தால் அதற்கு க்ஷயலயம் இருக்கவேண்டுமென்றும், அவ்வாறு காணப்படாதபடியால் சூரியவாசிகளின் தேஜஸ்ஸாயிருக்கவேண்டுமென்று பல காரணங்கள் கண்டு தான் சொல்லியிருக்கும் சித்தாந்தம் திவ்ய திருஷ்டியுள்ள புராண புருஷர்களாகிய ஆரிய மஹாத்மாக்களுடைய சித்தாந்தத்திற்கு ஒற்றுமையா யிருக்கிறதென்றும், **லூயி பூஜியர்** என்ற பரங்கி சாஸ்திரி யெழுதியிருக்கிறார். சாக்ஷாத் ஈசுவரன் ஜோதிஸ் ரூபியென்று சகல சாஸ்திரங்களிலும் மதங்களிலும் காணப்படுகின்றது. அப்பேர்ப்பட்ட ஈசுவரனவர் ஜோதிஸ்ரூபமாய் பக்தஜனங்கட்கு கடாக்ஷிப்பது அசாத்தியமன்று.

நக்ஷத்திர மண்டலங்களில் கண்ணாடி மூலம் காணப்பட்ட ஜோதிர் மயமான நெபுலக்கூட்டங்களும்,* ஆகாச கெங்கையில் நக்ஷத்திர அடர்த்தியால் மேகம்போல் செறிந்து காண்பதுபோலப், பிரத்தியேகம் பிரத்யேகமான நானாவித நக்ஷத்திரக் கூட்டங்களென்று பரிஷ்காரப்படுத்தப்பட்ட தூரதிருஷ்டிக் கண்ணாடிகளால் காணப்பட்டிருக்கின்றன. ஆகாச முழுமையும் நீலமாய்க் காண்பது ஆகாசத்தில் இயற்கையாயுள்ள பிரகாசத்தால் அல்ல. ஆகாயக்கூண்டுகளில்† (அதாவது புகைக்கூண்டுகளில்) வானத்தில் 3-மயில் 4-மயில் உயரச்சென்று பார்த்தால் ஆகாசமெல்லாம் நீலமாய்க் காணாமல் இருண்டு காணும். உன்னதமான மலைகளிற் சென்று பார்த்தவர்கள் இதற்கொற்றுமையாக எழுதியிருக்கிறார்கள்.

**எஸ். இராமஸ்வாமி அய்யர், பி. ஏ., பி. எல்.**

## ‡ செல்வம்.

செல்வமாவது யாது, அதை எப்படி அடையலாம், எப்படிக் காப்பாற்றுகிறது, என அநேகம் பேர் அடிக்கடிக் கேட்பதும், பேசுவதும் உண்டு. அதற்குச் சரியான மறுமொழி சொல்வது யார்க்கும் அரிது. ஒருவாறு விளக்கப் பார்க்கலாம்.

உயிர்வாழ்க்கைக்குத் தேவையாம் பொருள் இல்லாமலாவது குறைச்சலாயாவது இருப்பது வறுமையாம்; வடமொழியில் தரித்திரம் என்பர். சோம்பலின்றி உழைப்புக்குத் துணிந்துச் சிக்கனமாயிருப்பவர் வறுமையை நீக்கலாம். பிழைப்புக்கு வேண்டிய பொருள்வருவாய் மாத்திரம் உள்ளவர் செல்வரெனப் படமாட்டார்கள்.

### சுகப்பிழைப்புக்கு மிஞ்சிய வருமானம் செல்வமாம்.

ஏதாவது சாமான் வேண்டுமட்டும் கிடைக்கும்படியாயிருப்பது செல்வமல்ல. அந்தச் சாமான் தமக்கும் பிறர்க்கும் பயன்படத் தகுந்ததாயிருக்கவேண்டும். பயன்பட்டு மாறி விலையாவது தனக்கு வேண்டியதற்கும் அதிகமாயிருப்பது செல்வம். தொட்டதெல்லாம் பொன்னாகும் வரம்பெற்ற ஒருவர் கதையுண்டு. தொட்டுப் பொன்னானது காரியத்துக்கு உதவாமல் அவர் வறியராகவே யிருந்தாராம். மலையில் வசிப்பவர்க்குக் கல்லும் விறகும் வேண்டியமட்டும் மலையிலகப்படும், தம்தம் வீட்டுவேலைக்கு உதவுவதுபோக மீதிக்கல்லும் விறகும் விலையாகுமிடத்தில் வந்தால்தான் பொருள்படும். ரொக்கப்பொருள் ரொக்கமாகவே இருந்தால் அது செல்வமாகமாட்டாது. தம்காரியத்துக்கு உதவியதுபோக மிகுதியாம் பொருளால் உடையவர்க்கு யாதொரு நன்மையும் இல்லை. இம்மிகுதிப் பொருள் வேலைமேல் போடப்பட்டு வரும்படிக் காதாரமானால் அவ்வேலையைச் சரியாயும் சாக்கிரதையாயும் நடத்துவதில் புத்திக்குப் பயிற்சி யுண்டாய்ச் சுகமும் உண்டாம்; அவரும் செல்வராவர்.

**ஆகவே, தம்தம் நியாயச் செலவுக்கு மிஞ்சி, நினைக்கும்போது ரொக்கமாகும்படியான உடைமைகளின் மதிப்பே செல்வமாம்.**

### குடிச்செல்வம்.

மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் பிடிக்கும் வாழ்க்கையுடையவர்க்கு ரூபாய் 12 வருமானால் இரண்டு ரூபாய் மிகுக்கும்படியாயிருப்பது செல்வம். இன்னொருவர் வருமானத்தில் மாதம் 1-க்கு 20 ரூபாய் மிகுக்கும்படியாயிருப்பது அவர் செல்வம். மூன்றாவதவர்க்கு மாதம் 1-க்கு ஆயிரக்கணக்காயோ இலக்ஷக்கணக்காயோ மிகுக்கும்படி யிருப்பது அவர்க்குச் செல்வம். அவரவர் நிலைமைக்குத் தக்கபடி மிகுக்கும் தொகை வேறுபட்டாலும் மிகுப்பதால் ஆகும் சந்தோஷம் எல்லார்க்கும் ஒரே அளவுதான். பெருத்த வரும்படியிருந்து மிகுக்கவும் கையாலாகாமல் கடனும் படாமல் தம் வாழ்க்கையை நடத்திப்போகிற திறமை சிலர்க்குண்டு. எவ்வளவு திறமையிருந்தும் தெய்வீகமாய் இடுக்கண் நேரிட்டு எதிர் பார்க்காத செலவு நேரிடலாமாகையால் மிகுக்கவேண்டும் என்கிற ஆசை மனிதர்க்கியல்பாகி

* Nebulæ. † Balloons.

‡ Books consulted.
1. Chambers's Journal, 25th November 1893.
2. The Hon. S. Srinivasa Raghava Iyengar's 'Madras during 40 years.'
3. Mr. Dadabhai Naoroji's Congress Address 1893.



யது. இந்த ஆசை இயல்பாக, மிகுக்கும் தொகை இனிமேல் இடுக்கண் நேரிடக்கூடியகாலத்து வேண்டியதற்கும் மேலாகி ஏராளமாய் மிஞ்சிக்கிடக்கவேண்டும் என்னும் ஆசையும் வழக்கமாயிற்று. மிகுக்கும் தொகை எவ்வளவாயினும் மிகுக்கும்படியான தசையிருப்பதில் எல்லார்க்கும் சந்தோஷம் ஒரே அளவுதான்.

செல்வத்தால் கிடைக்கும் சந்தோஷமிருவகைப்படும்: புதிய பொருள் மேன்மேலும் தேடும் முயற்சிச் சந்தோஷம், தேடிக் கைகூடியதை இருப்பாய் நினைத்து அவ்வளவு இருப்பு உண்டாயிருக்கிறதை நினைக்கும் சந்தோஷம், என இருவகையாம். மேன்மேலும் பொருள் சேர்க்கப்பாடுபடும் சந்தோஷம் எல்லாருக்கும் ஓர் அளவுதான். சேர்ந்தது பலபேரிடத்தில் பல அளவானாலும் அவரவர்களுக்குத் தங்கள் கைப்பொருள் பெரிதாதலால், அதனால் வரும் சந்தோஷம் எந்நிலைமையார்க்கும் ஒரே அளவுதான். மிகுதிப் பணம் தம் காரியங்களுக்கு உதவியில்லாததினால் இருப்பு என்ற நினைப்பினாலாகும் சந்தோஷம் வருவது தவிர, அதிகலாபம் தொகையிருப்பிலில்லை. கையிருப்பையும் வேலையில் போட்டு அதைச்சரிவரப்பார்க்க மனமிருந்தால் இப்படிவேலையில் உழைப்பதால் சந்தோஷம் உண்டாம். நான்கு பேர் வேலைக்காக தமது சொற்படி நடக்கும்படியாயும், தம்மையடுத்துப் பிழைக்கும்படியாயும், தமது கையிருப்பு வளரும்படியாயுமிருப்பதில் சந்தோஷம் உண்டு.

ஏராளச் செல்வ இருப்புக்கு ஒரு வகையில் தோஷம் சொல்லலாம். அத்தனையையும் தாமே சம்பாதித்தவரானால் அதை அவர் நல்லவழியிலாவது கெட்டவழியிலாவது சம்பாதித்திருக்கலாம். கெட்டவழியில் மோசத்தால் சம்பாதித்திருந்தால் அவரால் நஷ்டமடைந்தவர் இருப்பர். அவர்கள் துக்கப்படப் பொருள் அடைந்தவர் வாழ்வது வாழ்வல்ல. நல்வழியால் சம்பாதித்தவரானால் அதற்கு அவரிடத்தில் எவ்வளவோ திறமை இருந்திருக்கும்; அத்திறமையவர் அந்த இருப்பைச் சரியானவழியில் போட்டுப் பெருக்கிப்பார்த்து வருவதில் சந்தோஷப்படுவர். ஏராளச்செல்வம் உண்டானபின் நல்லவர்க்கும் புத்திகெடலாம். பிறர் தேடித் தாம் அடைந்ததானால் புத்தியும் நல்ல தனமும் இல்லாமல் இருப்புமாத்திரம் உண்டாயிருப்பதில் வீண்செலவு நேரிட்டுப்போம். ஏராளச்செல்வத்தைக்காப்பாற்றுவதில் அசாத்திய உழைப்பு வேண்டியிருக்கும், தேகம் அவ்வளவுக்கு இடம் கொடாமல் நிற்கும். கணக்குக்கும் எட்டாத ஏராளச் செல்வமானால் புத்திசாலிகளுக்கும் சரிவர வழங்கத் தெரியாமல் போய்விடும்.

உழைப்பு மிகுதியாய் வேண்டியிருப்பது பொருள் அடைவதிலா, அடைந்த பொருளைக் காப்பாத்துவதிலா என்றால், காப்பாத்துவதிலேயே விசேஷத்திறமை வேண்டியிருக்கும். அநுகூலமாகச்சமயங்கள் நேரிட்டுப் பொருள் எளிதில் சேர்ந்துவிடும்; சேர்ந்ததை நஷ்டப்படாமல் காப்பாற்றுவது சிறந்ததிறமை. ஆனாலும் பாடுபடவேண்டியது நமது கடமையாதலால் பெருத்த இருப்பை வேலையில் விட்டுப் பத்துப்பேர் பிழைக்கும்படிக்கும் இருப்புக்கு அழிவின்றி கையிருப்பு வளரும்படிக்கும் செய்வது புத்திசாலிக்கடையாளம்.

### நாட்டுச்செல்வம்.

இப்படியெல்லாம் பார்ப்பது குடிச் செல்வத்தைக் குறித்தது. தேச மொத்தத்தார்க்குச் செல்வம் எப்படிப்பட்டது என்பதைக்குறித்து இனிமேல் யோசிப்போம்.

யாதாமொரு தேசத்தில் ஒருகுடும்பம்கூட வறுமைப்படாமலிருக்காது. முதல் தரமான நாடானாலும் அவரவர் யுத்திக்குறைவாலும் தெய்வீகத்தாலும் சிலர்க்கு வறுமை எப்படியும் நேரிடும். நாட்டு மொத்தத்துக்கு பெரும்பாலார் வருந்தினால் நாடு வறுமையடைந்ததென்றும், சிறுபாலார்மட்டும் வருந்தினால் நாடு சீர்ப்பட்டதென்றும் சொல்லலாம். ஒரு நாட்டில் பெரும்பான்மையான குடித்தனம் செல்வமாயிருந்து வறிய குடித்தனங்கள் சொற்பமானால் அந்நாடும் செல்வம் உடையதே. எப்படித் தனிக்குடியினர்க்கு வேண்டிய பொருள் மட்டுமிருப்பது செல்வமாகாமல், அவர் கைப்பொருளிருப்பு அவருக்கு வேண்டிய அளவிற்கு மிஞ்சியிருந்து அப்பொருள் மாறும்படியானால் அது செல்வமாகிறதோ, அப்படியே நாட்டின் விளைபொருள் செய்பொருள் நாட்டில் வேண்டிய அளவுக்கு மிஞ்சி மற்ற நாட்டாரிடத்தில் மாறும்படியாயிருப்பது நாட்டு வளப்பமாம். இப்படி நாட்டு வளப்பத்தைச்சேர்ந்த சில சங்கதிகளைக் கீழே சிலநாடுகளுக்கு எடுத்துக்காட்டுகிறேன்.

### அமெரிக்காவில் ஐக்கியமாகாணங்கள் என்று பொருள்படும் 'யூனைடெட்ஸ்டேட்ஸ்' என்னும் நாட்டிலுள்ள குடிகளின் ஆஸ்தி.

(PRIVATE WEALTH IN THE UNITED STATES.)

(1) அந்நாட்டில் 70 குடும்பத்தாரிடத்தில்மட்டும் 540 கோடித் திரவியம் இருக்கிறதாம். அதாவது குடும்பம் ஒன்றுக்கு, 8-க்கோடி ரூபாய் ஆஸ்தியாகிறது. அதனில் ஒரு குடும்பத்தாருக்கு 30 கோடி ரூபாய் ஆஸ்தியாம்.

(2) 50 குடும்பத்தாரிடத்து மொத்தத்தில் 100 கோடி ரூபாய் இருக்கிறதாம்.

(3) பென்ஸில்வேனியா (Pennsylvania) மாகாணத்தில் 63 கோடீஸ்வரர்களிடத்து 60 கோடி ரூபாய் இருப்பு உண்டாம்.

(4) நியுயார்க்கு (New York) பட்டணத்திற்கு அருகாமையில் 60 பேரிடத்தில் 100 கோடித் திரவியம் உண்டாம்.

(5) பாஸ்டன் (Boston) பட்டணத்தில் வருஷத்திற்கு 20 லக்ஷம் வருமானம் வருவதாய் அதன் மேல் வரிகட்டுகிறவர்கள் 50 பேர் உண்டாம்.

(6) மிஸ்டர் தாமஸ் ஜி. ஷியர்மன் (Mr. Thomas G. Shearman) போட்ட கணக்குப்படி ஐக்கிய நாட்டில் முதல்தரப் பணக்காரர் 100 பேருக்கு வருஷத்தில் ஒவ்வொருவருக்கும் 9 லக்ஷம் வரும்படியாம். அந்நாட்டிலுள்ள மற்றவர்களில் 100-க்கு 80 குடும்பத்தவர்களுக்கு வருஷ வரும்படி 1,000 ரூபாய்க்குமேல் இல்லையாம். ஐக்கிய நாட்டுக் குடிகளின் மொத்த திரவியத்திலே பாதி 25,000 பேரிடத்தில் அடங்கமாம். ஆகையால் மேலே கண்ட நாட்டில் சில குடித்தனங்கள் கங்கற்ற பெருவாழ்வும் வெகு குடித்தனங்கள் சாமான்னிய வாழ்வும் உடையவர்களா யிருக்கிறார்களென்று தெரியவருகிறது.

## இங்கிலாந்தில் சிலபேர்ஆஸ்தி.

(PRIVATE WEALTH IN ENGLAND.)

காலஞ்சென்ற ராத்சைல்ட்பிரபு (Baron Rothschild), ஓவர்ஸ்டன் பிரபு (Lord Overstone) இவர்கள் இருவரும் சாகும்போது அவர்களுக்கு தனித்தனி 3½-க்கோடி ரூபா ஆஸ்தியிருந்தது.

டட்லி பிரபுவுக்கு (Lord Dudley) அவர் சாகும்போது 4 கோடி ரூபா ஆஸ்தியிருந்தது.

பக்லோ டியூக்பட்டவர்த்தனர் (Duke of Buccleuch) சாகும்போது அவருக்கு 6 கோடி ரூபா ஆஸ்தியிருந்தது.

உயிரோடு இருக்கும் ஒரு பிரபுவுக்கு 10-க்கோடி ரூபா இருக்கிறது.

இன்னொருவருக்கு 8-க்கோடி ரூபா இருக்கிறது.

1884-ம் வருஷம் கணக்குப்போட்டபோது வருஷத்திற்கு வியாபாரத்தால் 5 லக்ஷம் ரூபா வருமானம் உடையவர்கள், 104 பேர்தான் இருந்தார்களாம்.

1886-ம் வருஷத்தில் 25 லக்ஷம் ரூபா ஆஸ்திக்கு அதிகாரப்பத்திரம் பெற 11 மனுக்கள்தான் தாகல் ஆயிற்றும். அரசிறைமந்திரியாயிருந்த மிஸ்டர் கோஷன் அவர்கள் (Mr. Goschen) வருமான வரிஜாப்தாவைப் பிடித்து 10 வருஷ ஏற்ற வித்தியாசத்தைப் பார்த்தபோது—

(a) 5,000 ரூபா வரும்படிக்காக வரிகட்டினபேருடைய மொத்தம் 10 வருஷத்தில் 100-க்கு 21 ஜாஸ்தி ஆனதாம்;

(b) 10,000 ரூபா வரையில் வரும்படிக்கு வரி செலுத்தினவர்கள் ஏறவே இல்லையாம்.

(c) 10,000 ரூபா முதல் 50,000 ரூபா வரையில் வருமானத்திற்காக வரி செலுத்தினபேர் மொத்தம் 100-க்கு 2 இறங்கிற்றும்.

(d) அப்படியே 50,000 ரூபாவுக்குமேல் வரும்படி உள்ளவர்களுடைய மொத்தமும் 100-க்கு 2 குறைந்ததாம்.

(e) 8,000 கோடி ரூபா சுமார் 70 லக்ஷம் குடும்பங்களில் தங்கியிருந்ததாம்.

ஐக்கிய நாடுகளைப்போல இங்கிலாந்தில் கோடிக் கணக்கான ஆஸ்தியையுடையவரைக்காணோம். கோடீசுவரர் இரண்டொருவர்தான்: ஆனால் மிதந்த வரும்படி பரவிய குடும்பங்கள் ஐக்கிய நாட்டைவிட ஆயிரமடங்கதிகம்.

(இன்னும் வரும்.)

டி. ஆர். இராமநாதய்யர், பி. ஏ., எல். டி.

## வெனிஸ் வணிகன் கதை.

3-ம் அங்கத்தின் கதைச்சுருக்கம்:—

அன்டோனியோவின் நண்பர்களாகிய முற்சொல்லிய 'ஸாலரீனோ' 'ஸல்லானியோ' என்ற இருவரும் அவனுடைய பெரிய கப்பல்களிலொன்று தரைதட்டி விலையுயர்ந்த பண்டங்களோடு சேதப்பட்டதாகக் கேள்வியுற்று மிகவும் மனம்வருந்தி, ஐயோ, ஸர்வஜனமித்திரனான அன்டோனியோவுக்கு இத்துன்பம் நேரவேண்டுமோ? இச்செய்தி பொய்யாய்ப்போகாதோ? அவனுடைய நஷ்டம் இவ்வொரு கப்பலோடாவது முடிவுபெறவேண்டுமேயென்று பேசிக்கொண்டிருக்கையில், அங்கே வரும் ஷைலாக்கைக்கண்டு வணிகருக்குள் என்ன செய்தியென்று கேட்க, பஸ்ஸானியோவின் வீட்டில் விருந்துண்டு திரும்புவதற்குள் தன் மகளாகிய ஜெஸ்ஸிகாவையும் அவளுடன் திரண்ட திரவியத்தையும் பறிகொடுத்த ஷைலாக், இந்நஷ்டத்தையும், உதாரச்செலவால் கைம்முதல் தொலைந்ததாலும் கப்பல் சேதப்பட்டதாலும் மிக்க வறியோனாய் 'ரியால்டோவில்' முகங்காட்ட நாணுறும் அன்டோனியோவுக்குக் கடன்கொடுத்ததாலுண்டான நஷ்டத்தையும்பற்றித் துக்கித்துச்சொல்ல, ஸாலரீனோ, "குறித்தகாலத்தில் அவன் பணங்கொடுக்கத் தவறினால், பத்திரப்படி, அதற்கு அபராதமாக அவன்



தசையைக் கேட்கமாட்டாயென்று நம்புகிறேன். அத்தசையால் உனக்கென்னபயன்," என்றான். அதற்கு ஷைலாக், "அதைக்கொண்டு வேறொன்றும் இல்லாவிடினும், என் வயிற்றெரிச்சலையாவது ஆற்றிக்கொள்வேன். அவன் என்னை எத்தனையோமுறை அவமானப்படுத்தியிருக்கிறான்; எனக்கு அரைக்கோடிப் பொன்வரையில் நஷ்டம் வருவித்திருக்கிறான்; என் நஷ்டத்தைக்கண்டு பலமுறையும் சிரித்திருக்கிறான்; எனக்கு வட்டியால் வரும் இலாபத்தை இகழ்ந்து பழித்திருக்கிறான்; என் நண்பரை என்னிடத்தினின்றும் பிரித்திருக்கிறான்; என் பகைவரை எனக்கு விரோதமாத்தூண்டி எழுப்பியிருக்கிறான். இத்தனையும் எதற்காக? நான் யூதனாயிருப்பதற்காக. ஏன், யூதனுக்குக் கண்ணில்லையோ? கையில்லையோ? கருவிகரணங்களில்லையோ? கோபதாபங்களில்லையோ? கிறிஸ்தவனைப் போல் யூதன் உண்ணவில்லையோ ஒரே கத்தி இருவரையும் புண்படுத்தவில்லையோ? இருவருக்கும் ஒரே வியாதி வருவதில்லையோ? அவ்வியாதி ஒரே மருந்தால் நிவிர்த்தியாவது மில்லையோ? எங்களைக் குத்தினால் எங்களுக்கு இரத்தம்வாராதோ? கூச்சங்காட்டினால் நாங்கள் சிரியோமோ? விஷமுண்டால் இறவோமோ? நீங்கள் துன்பப்படுத்தினால் நாங்கள் பழிவாங்கோமோ? மற்றெல்லாவற்றிலும் உங்களைப்போலிருக்க, இதிலும் ஏன் நாங்கள் உங்களைப்போல் இருக்கக்கூடாது? நீங்கள் கற்பிப்பதையே, நான்செய்வேன்" என்று தன் மனக் கொடுமையை யெல்லாம் வெளியிட்டான். பின்னர் ஸாலரீனோ, ஸல்லானியோ இருவரும், தங்களை அன்டோனியோ அழைக்கின்றானென்றுபோக, அப்பொழுது அங்கேவந்த தன் இனத்தோனாகிய 'ட்யூபால்' என்பவனை தன் மகளின் செய்தி என்ன வென்று ஷைலாக் கேட்க, அவன், தான் அவளைப்பற்றிக் கேள்விப்பட்டுச்சென்ற விடங்களில் ஒன்றிலும் அவளைக் காணவில்லையென்றும், ஆனால் அவள் போகுமிடங்களில் பணத்தை வாரிச்செல விடுகிறாளென்று நான் கேட்டேனென்றும், 'ட்ரிபொலிஸ்' என்னுமிடத்திலிருந்துவந்த அன்டோனியோவின் பெரிய கப்பலொன்று திசை தப்பிப் போயிற்றென்றும், அவனுக்குக் கடன் கொடுத்திருப்பவர்கள் பலரும் வெனிஸ்ஸுக்கு வந்திருக்கிறார்களென்றும் சொன்னான். இதைக்கேட்ட ஷைலாக், "ஐயோ, இரண்டாயிரம் பொன்னை யிழந்தேன்; ஒரு நல்ல வயிரம் போய்விட்டதே. எவ்வளவோ விலைபெற்ற நகைகளையும் அவள் கொண்டு போய்விட்டாளே. இந்நகைகளோடு அவள் என் காலடியில் விழுந்து இறந்தாதான் போனாளா? இப்படிப்பட்ட துக்கம் என் சாதிக்கே வந்ததில்லையே. எனக்கும் இதுவரையில் வந்ததில்லை. வேறொருவருக்கும் இப்படிப்பட்ட துக்கத்தைக்காணேன்! நான் ஒழிய மற்றொருவரும் கண்ணீர் விடும்படியான துக்கம் அநுபவிக்கிறார்களில்லையே. ஆனால், அன்டோனியோ, தன் பொருளையெல்லாம் இழந்து மிடியுற்றானென்ற நற்செய்திகேட்டுச் சந்தோஷிக்கிறேன். அவனையினி வாட்டுவேன். அவன் தவறும் பக்ஷத்தில் அவன் இருதயத்தைப் பறிப்பேன்" என்று கடுஞ்சொற்கூறி, தன்னைப் பின்னர்ச்சந்திக்கும்படி ட்யூபாலுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டுத் தான் வெனிஸ் அரசனிடத்திலிருந்து சிறைச்சாலை யதிகாரிக்கு அன்டோனியோவைப்பிடித்துப் பத்திரப்படுத்தும்படி கட்டளை பிறப்பித்தான். அக்கட்டளைப்படி அன்டோனியோ, சிறைச்சாலை அதிகாரியின் வசமான பின், ஷைலாக்கைப் பலவிதத்திலும் மன்றாடிக்கேட்டுக்கொண்டும் அவன் அன்டோனியோவின் பிரார்த்தனையொன்றுக்கும் செவிகொடாது "பத்திரத்திற் சொல்லிய அபராதத்தை உன்னிடத்திருந்து வாங்காதிரேன். என்னை நாய் என்றாயே; நாயின் பற்கூர்மையைப்பார். உன் பேச்சைக் கேட்கவேண்டேன்; நான் உன் பேச்சுக்கிரங்கும் மடப்புத்தியுடையேனல்லேன். இனியொன்றும் பேசாதே. பத்திரப்படி அபராதத்தையே வாங்குவேன்." என்று புண்படச்சொல்லிப்போனான். பின்னர் அன்டோனியோ, "அவன் என் பிரார்த்தனைக்கு இணங்காததற்குக் காரணமிருக்கிறது. அவனது கடுமையினின்றும் அநேகருக்கு உதவிசெய்து நிவிர்த்தியுண்டாக்கியிருக்கிறேன். நான் என் பத்திரப்படிக்குள்ள அபராதத்தைச் செலுத்துவதில் மரணமடைய வேண்டியவனே. யூதனுடைய கருத்து இதுவே. அரசனுக்கும் இதைத்தவிர்க்க அதிகாரமில்லை. அரசனும் சட்டப்படிதானே நடக்க வேண்டும். அன்றெனின் இராச்சியத்தின் நீதி கெட்டுப்போம். எனது துக்கத்தையும் தேக மெலிவையும் யோசிக்கும்பொழுது நாளைக்கு யூதனுக்குக் கொடுக்க ஒரு பவுண்டு நிறையுள்ள தசை என் தேகத்தில் அகப்படுமோவென்று சந்தேகப்படுகிறேன். ஓ! கடவுளே, நான் பஸ்ஸானியோவின் கடனைக்கொடுப்பதை அவன் வந்து பார்க்கும்படி அருள்புரிவாயாக. பிறிதொன்றும் வேண்டேன்" என்று துயரமுற்ற மனத்தினனாய் சிறைச்சாலையதிகாரியை நோக்கி இனித் தன்னைக் கொண்டுபோகலாமென்றான். இங்கு இது நிற்க.

பெல்மாண்டில், பஸ்ஸானியோவின் வரவு கேட்டு இன்புற்றிருந்த போர்ஷ்யா, அவன் வந்தவுடன் அவனை நோக்கி "இன்னும் இரண்டொருநாள் என்னோடு இருந்தபின், நீ பெட்டியை எடுப்பாயாக. இப்

பொழுதே எடுக்கப்புகுந்து தவறுவாயாயின் உனது
அருகிருத்தலை யிழப்பேனே. ஆதலின், சற்றுப்பொ
றுக்க. என்னுள்ளில் ஏதோ ஒன்று உன்னை நான் இழக்
கமாட்டேனென்று சொல்லுகின்றது. என் உட்கருத்
தை வெளியிட்டுச்சொல்வது கன்னித்தன்மைக்கு அடு
த்ததன்றே. சரியான பெட்டி இன்னதென்று உனக்கு
நான் சொல்லக்கூடும். ஆனால் அப்பொழுது நான்
சத்தியம் தவறினவளாவேன். என்னில் ஒரு பாதி
நீ; மறுபாதியும் நீயே. ஆதலின் நான் உன்னுடை
மையே. ஆ! என்ன கெட்டகாலம்! உடைமைக்கும்
அதை உரியவர்க்கும் இடையில் என்ன இடறுகட்டை
கள்!" என்று இவ்வாறு சொல்லிக்கொண்டு கால
தாமதஞ்செய்ய, பஸ்ஸானியோ 'நான் முள்ளின்மே
லிருப்பதுபோல் இருக்கிறேனே! என்னால் பொறுக்
கவொண்ணாது, பெட்டியை எடுப்பேன்" என்றுபோய்
பொன் வெள்ளி ஈயப்பெட்டிகளைக் கண்ணுற்று "இவ்
வுலகம் வெளியலங்காரத்தைக்கண்டு மயங்குகின்றது.
அநியாயக் கட்சியிற்றான், நயமும் மனம் உருகும்படி
யான வார்த்தையுமுள்ளன. எங்கே துன்மார்க்கமதி
கமோ அங்கேதான் ஸன்மார்க்கத்துக்குரிய அடையா
ளங்கள் புறத்து அதிகமாய்க்காணப்படுகின்றன. கை
யாலாகாத பெண்மையோர் எத்தனைபேர், சூரரைப்
போல் முகரோமமுடையோராய் வீரம் பேசுகிறார்கள்.
எத்தனைபேர் பொய்க்கூந்தலால் தம் தலையழகைக்
காட்டுகிறார்கள். கபடமானது மெய்யின் உருவத்தைத்
தரித்து மெய்போல் தோன்றலால் அதைக்கண்டு
விவேகிகளும் மயங்குகின்றனர். ஆதலின், ஓ! பள
பளக்கும் பொன்னே, நான் உன்னை வேண்டேன்.
வெளிறினதாய வெள்ளியே உன்னையும் வேண்டேன்.
பயமுறுத்தும் ஈயமே உன்னையெடுப்பேன். இன்பம்
இதின்பயன் ஆகுக." என்று ஈயப்பெட்டியைத்திறந்
தான். அதனுள்ளே, அங்குமிங்கும் ஓடுவன போன்
றிருக்குமிருவிழியையும், மணமுள்ள சுவாசத்திற்கு
வழிவிட, பிரியாத இரண்டு நட்பினர் பிரிந்திருந்
தாற்போன்ற இரண்டு உதட்டையும், மனிதருள்ளத்
தைத் தன்னகப்படுத்துவதற்குள்ள வலைக்கண்போ
ன்ற கூந்தலின் பொற்கட்டையும், சித்திரிகன்
இப்படத்தின் ஒருவிழியை எழுதியபின்னர், அத
னொளியால் தன்னிருவிழியின் ஒளியையும் இழ
வாது படத்தின் மறுவிழியை எப்படி யெழுதினனோ
ன்ற செல்லத்தக்க விழியினழகையுமுடைய போர்ஷி
யாவின் வடிவமைந்த படத்தைக்கண்ணுற்றான். தன்
வார்த்தையின் அளவுக்கு அப்படத்தினுருவம் மிக
மேற்பட்டதென்று கண்டான். அவ்வாறே அவளு
டைய மெய்வடிவம் அதன் போலியாகிய படத்தின்
வடிவத்திற்கு மேற்பட்டதென்றும் கண்டான். பின்
னர் அங்கிருந்த காகிதச்சுருளில் "நீ வெறும் தோற்
றத்தைக்கண்டு மயங்கவில்லையாகையால் நல்ல அதிர்
ஷ்டம் பெற்றுச் சரியானதைத்தேர்ந்தாய். உனக்கு
இப்பாக்கியம் வாய்த்ததால் பிறிதொன்றும் கருதாது
அமைதியோடிருக்க. இதனால் உள்ளங்குளிர்ந்து இப்
பாக்கியத்தை உன் பேரின்பமெனக்கருதுவையாயின்,
உனது மணமகளிருக்குமிடத்தை நாடி அன்புகூர்ந்த
முத்தத்தால் அவள் உன்னுடைமையென உரிமைபா
ராட்டுக" என்று எழுதப்பட்டிருந்ததைப் படித்துப்
பார்த்துப் போர்ஷியா விடஞ்சென்று "சீருள்ள குல
மாதே, என் ஆநந்தப்பெருக்கால் நான் மயங்கித்திகைக்
கின்றேன். நான் காண்பது மெய்யோவென்று ஐய
முறுகின்றேன்; நீ உறுதி நல்கினாலன்றி நான் தெளி
யேன்" என்றான். அதற்குப் போர்ஷியா, "பஸ்ஸானி
யோ, என்னதிபனே, நான் நிற்கின்றவிடத்தில் என்
னைக்காண்கிறாயே; இதுதான் எனக்கு எப்பொழுது
முள்ள நிலைமை; உன்பொருட்டு, நான் இதிலும் அறு
பதுமடங்கு மேலான நிலைமையிலிருக்க ஆசைப்படுகின்
றேன். இன்னும் ஆயிரமடங்கு அதிக அழகும் பதி
னாயிரமடங்கு அதிகச்செல்வமும் உடையேனாயினன்
றோ, உனக்கு நான் ஒருவாறு ஏற்றவளாவேன். அழ
கையும் ஆஸ்தியையும் நண்பரையும் கணக்கில்லாம
லுடையேனென்னினும் நான் படிப்பும் பயிற்சியும்
பழக்கமும் இல்லாத சிறுபெண்ணாயிருக்கிறேன். நான்
இன்னும் படிப்புக்குப் பிராயம் தப்பாத நிலைமையி
லிருப்பது எனது பாக்கியமே; படிப்பு வாராத மந்த
வழியில் நான் பயின்றிராதது அதைவிடப் பெரிய
பாக்கியம்; இவையெல்லாவற்றிலும் மேலான பாக்கி
யம் யாதெனின், என்னரசனும், அதிபனும், நாதனு
மாகிய உன்னுளகையின் ஆதீனத்தில் என்னை ஒப்பித்
திருக்கிறேனென்பதுதான. நானும் என்னுடைமை
யும் இப்பொழுது நீயும் உன்னுடைமையுமாய் மாறி
னோம். சற்றுமுன்வரையில், என் இவ்வழகிய அரண்
மனையும், இவ்வேலைக்காரரும், நானும் எனக்கு ஸர்
வசுவதந்திரமுள்ள பொருள்களாயிருந்தோம். என்
நாதனே, அவற்றையெல்லாம் இப்பொழுது இம்மோ
திரத்தோடு உன்னிடம் ஒப்பிக்கின்றேன். இம்மோ
திரம் எவ்விதத்திலேனும் உன்னைவிட்டு நீங்குமாயின்,
அது நமது நேசத்திற்கு இடையூறு என்றறிக; அப்
பொழுது உன்மேல் குறை கூற எனக்குக் காரண
முண்டாம்." என்று இவ்வாறு இனிய மொழிகூறித்
தன் மோதிரத்தை அவன் கையிலிட, பஸ்ஸானி
யோ, "குலமாதே, என்னை வாய்பேசாமற் செய்து
விட்டாயே; தக்க மறுமொழிக்கு ஊற்றம் பெற்றி
லேன். இம்மோதிரம் என்விரலைவிட்டு நீங்கு நாள்,
என் வாழ்நாள் முடியுநாளே" என்றான். பின்னர்



பஸ்ஸானியோவும் போர்ஷியாவும் கலியாணஞ்செய்
துகொள்ளும் பக்ஷத்தில், தாங்களும் கலியாணஞ்
செய்துகொள்வதாக ஏற்பாடு செய்திருந்த க்ரேஷியா
னோவும் நெரிஸ்ஸாவும் அவ்வேற்பாட்டைத் தெரியப்
படுத்தித் தங்களுடைய விவாகத்திற்கும் அநுமதி
பெற்றார்கள்.

இங்ஙனம் யாவரும் இன்புற்றிருக்கும் சமயத்து,
லோரன்ஸோவும், அவன் காதலியாகிய ஜெஸ்ஸிகா
வென்னும் யூதமாதும் அன்டோனியோவின் வேலைக்
காரனான ஸலீறியோவும் அங்கேவர, அவர்கள் நல்
வரவுகூறி உபசரிக்கப்பட்ட பின்னர், ஸலீறியோ,
தனது எஜமானனாகிய அன்டோனியோ, க்ஷேமம்
விசாரித்தார் என்று சொல்லி, பஸ்ஸானியோவிடத்
தில் ஓர் கடிதத்தைக்கொடுத்து அக்கடிதத்தால் சகல
விவரமும் தெரியவருமென்றான். பின்னர், கடிதத்
தைப்படிக்கையில் பஸ்ஸானியோவின் முகம் நிறங்
குறைந்து வாடுவதைக்கண்டு, போர்ஷியா, "கடிதத்
தில் என்ன செய்தியோ? பிராணபதமான நண்ப
னிறந்தானோ? வேறொன்றும், மன உறுதியுடை
யோரை இப்படி மாற்றிக்காட்டாதே! வரவர அதிகக்
கெடுதியாய்த் தோன்றுகின்றதே! பஸ்ஸானியோ,
அநுமதி தந்தருள்வாய்; நான் உன்னிற் பாதியன்றோ?
இக்கடிதம் உனக்குக் கொண்டுவருவதில் பாதி என
க்குமுண்டு" என்றுகூற, பஸ்ஸானியோ "ஓ! இனிய
போர்ஷியாவே, மிக்க மனக்கிலேசமுண்டாக்கும் வார்
த்தைகளிற் சில இதில் எழுதப்பட்டுள்ளன. குல
மாதே, எனக்கு உன்மேலுள்ள அன்பை நான் உனக்கு
முதலில் அறிவித்த காலத்து எனக்குள்ள ஆஸ்தி
யெல்லாம் என் நற்குலமேயொழிய வேறொன்று
மில்லையென்றேன்; அப்பொழுது நான் சொன்னது
உண்மையே. ஆனால், இனிய மாதே, ஒன்றுமில்லே
னென்று சொல்லியகாலத்து, என்நிலைமை, ஒன்று
மில்லா நிலைமையிலும் இழிந்ததென்று நான் சொல்
லத்தவறினேன். எனக்குப்பணங்கொடுத்து உதவுவ
தற்காக, என்நண்பனை அவனுடைய பரமசத்துருவின்
கடனாளி யாக்கினேன்; ஆதலின், என் நண்பனுக்கு
நான் கடன்கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.
மாதே, இக்காகிதத்தை என் நண்பனின் உடம்பாகவும்,
அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் அவ்வுடம்பி
லுள்ள, வாய்பிளந்து இரத்தம் உகுக்கும் புண்ணாகவும்
பாவிக்கின்றேன். ஸலீறியோ, அவனுடைய எல்
லாக்கப்பல்களுக்கும் மோசம் வந்துவிட்டதென்பது
மெய்தானோ? ஒன்றும் சரியாய்ப் போய்வரவில்லையா?
'ட்ரிபொலிஸ்' 'மெக்ஸிகொ' 'இங்கிலாண்டு' 'லிஸ்
பன்' 'பார்பரி' 'இந்தியா' இவ்விடங்களிலிருந்து
வந்த கப்பல்களொன்றேனும் கடலிலுள்ள பாறை
களுக்குத் தப்பவில்லையோ?" என்று மிக்க மனக்
கவலையோடு கேட்க, ஸலீறியோ "என்னாண்டவனே,
ஒன்றுகூடத் தப்பிவரவில்லை. இஃதன்றி, இப்
பொழுது யூதன் பணங்கொடுத்தாலும் வாங்கமாட்
டேனென்கிறான். மானிட உருவத்தில், இவ்வளவு
கொடுமையும், பேராசையுமுள்ள பிராணியையே
நான் இதுவரையிலும் கண்டதில்லை. அவன் இர
வும் பகலும் அரசனிடத்து மன்றாடுகிறான்; தனக்கு
நீதி செய்யாவிடின் இராசாங்கத்திலேயே நடுவு நிலை
யான நெறி யில்லையென்கிறான். அரசனும், எத்
தனையோ வணிகர்களும், பிரபுக்களும் கல்லும்கரை
யும்படியான வார்த்தைகளால் அவன் மனத்தைத்
திருப்பப்பார்த்தார்கள். அவன் ஒன்றுக்கும் அசை
யாது ஒரே பிடியாய் என் பத்திரப்படிக்குள்ள அப
ராதத்தை வாங்கியே விடுவேனென்கிறான்" என்
றான். அதைக்கேட்ட ஜெஸ்ஸிகா, தானும் அவன்
அப்படிச் சபதஞ் செய்யக்கேட்டிருக்கிறேனென்
றும், ஊர்ச்சட்டமும் நியாயமும் அதற்கு இடங்
கொடுக்கும்பக்ஷத்தில் அவன் அப்படிச்செய்யும்
கொடியவனே யென்றும் சொன்னாள். இவற்றை
யெல்லாம் கேட்டிருந்த போர்ஷியா, பஸ்ஸானி
யோவைநோக்கி இவ்வாபத்திலுள்ளவன் உன் நண்
பனோ வென்றாள். அதற்கு பஸ்ஸானியோ 'ஆம்,
எனது பிராணபதமான நண்பன்; யாரிடத்தும் மிக்க
அன்புடையவன்; நல்ல நிலைமையிலுமுள்ளவன்;
இத்தலியிலேயே அவனைப்போல் அவ்வளவு பல
பெருந்தகைமையு முள்ளவரில்லை" என்றான். பின்
னர்ப் போர்ஷியா, அவன், யூதனுக்கு எவ்வளவு
கடன் கொடுக்கவேண்டுமென்று கேட்க, பஸ்ஸானி
யோ, "மூவாயிரம்" என்றவுடன் "இவ்வளவுதானா?
ஆறாயிரமாய்க் கொடுத்துப் பத்திரத்தைக்கிழித்
தெறி. அதையும் இரட்டிக்க; மும்மடங்காக்குக;
நீ சொல்லிய நண்பன் உன்னுடைய குற்றத்தால் ஒரு
ரோமமேனும் இழக்கற்பாலனல்லன். முதலில் கோ
யிலுக்குப்போய் என்னை மனைவியென்றழை; உடனே
வெனிஸ்விலுள்ள உன் நண்பனிடத்துப்போ; உன
க்கு இங்கிருக்க மனங்கொள்ளாது. கடன் தொ
கைக்கு இருபது மடங்கான தொகையைக் கையிற்
கொண்டுபோ. கடனைத் தீர்த்தபின் உன் நண்பனை
இங்கே அழைத்துவா. இப்பொழுது அவனுடைய
கடிதத்தைக்கேட்க விரும்புகிறேன்" என்றாள். அப்
பொழுது பஸ்ஸானியோ, "இனிய பஸ்ஸானியோ,
என் கப்பல்களெல்லாம் தப்பிப்போயின; எனக்குக்
கடன் கொடுத்தவர்கள் மிக்க கடுமை காட்டுகிறார்
கள்; நான் தீனஸ்திதியிலிருக்கிறேன். யூதனுடைய
பத்திரத்திற்குக்காலாவதி ஆய்விட்டது; அதற்கு அப

ரிதம் செலுத்துவதில் நான் பிழைப்பது அசாத்திய மாகையால், என் மரணசமயத்தில் உன்னை நான் பார்க்கும்படி மாத்திரம் நேருமாயின் நமக்குள்ள கடனெல்லாம் தீர்ந்தனவாகும். நான் இப்படி எழுதியபோதிலும் நீ உன் சௌகரியம்போற் செய்க. என்மேல் உனக்குள்ள அன்பு உன்னை இங்கே வரத் தூண்டாதாயின், என் கடிதமும் தூண்டாதொழிக" என்று படிக்கக்கேட்ட போர்ஷ்யா, ஓ! நேசனே, காரியங்களை விரைவில் முடித்து உடனே புறப்பட்டுப்போ" என்று சொல்ல, பஸ்ஸானியோ, "உன் நல்ல அநுமதியோடு போகின்றேன். விரைவில் காரியத்தை முடித்துவருவேன். ஒருபொழுதேனும் அநாவசியமாய்த்தாமதியேன்" என்று வெனிஸ்ஸுக்கு விடைபெற்றுச் சென்றான்.

இதன் பின்னர், போர்ஷ்யா தன்னுள்ளே சிலவற்றை ஆலோசித்துக்கொண்டு லொரென்ஜோவைப் பார்த்து "எனக்கு ஓரிடத்தில் சில பிரார்த்தனை செலுத்தவேண்டும்; என் நாயகர் திருமபிவருவதற்குள் நான் அப்பிரார்த்தனையைச் செலுத்திவருவேன். நேரிஸ்ஸா மாத்திரம் என்னுடன் வந்தாற்போதும். என்னுடைய சகல சொத்தையும் உன்னிடத்தில் ஒப்பித்துப்போவேன். நீயும் உன் மனைவியும் இவற்றிற்கு யஜமானன் யஜமானிகளாய் ஆண்டுவருவீராக" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டாள். பின்னர் தன் வேலைக்காரனை 'பல்தாஸார்' என்பவனை அழைத்துப் போர்ஷ்யா "நீ இக்கடிதத்தைக்கொண்டுபோய் 'பாட்யுவா' என்ற விடத்திலிருக்கும எனது பந்துவும் 'டாக்டர்' என்றகல்வித்தேர்ச்சிப்பட்டம் பெற்றவருமாகிய 'பெல்லேறியோ' என்பவரிடத்துக்கொடுத்து, அவர் கொடுக்கும் உடையையும், சீட்டையும் வாங்கிக்கொண்டு வெனிஸ்ஸுக்குப் போகும் தோணித்துறைக்கு விரைவில் வந்துசேர். ஒரு நிமிஷமும் வீண்பொழுது போக்காதே. நான் உனக்கு முந்தியே அவ்விடம்போய்க் காத்திருப்பேன்" என்றுசொல்லி அவனை அனுப்பிவிட்டு, நெரிஸ்ஸாவைப்பார்த்து "நான் என் மனத்து ஒருபாயம் நிச்சயித்திருக்கிறேன். நமது புருஷர்களை நாம் விரைவிற்காண்போம். அவர் நம்மை அறியாதபடி ஆண்வேஷத்திற் செல்வோம். யௌவன வாலிபரைப்போல் நடிப்போம். எத்தனையோ குலமாதர்கள் நம்மேல் மோகங்கொண்டு வருந்தினார்களென்போம்; இன்னும் வாலிபருக்குள்ள எத்தனையோவிதமான சிறு பொய்களெல்லாம் சொல்வோம். அநேகவித உபாயங்கள் என் மனத்து நான் எண்ணியிருக்கிறேன்; எல்லாவற்றையும் நாம் வண்டியிற் போகும்பொழுது சொல்வேன்." என்று சொல்லி அவளையுங்கூட்டிக்கொண்டு புறப்பட்டாள்.

(இன்னும் வரும்.)

எஸ். நாராயணசாமி அய்யர், பி. ஏ.

## பச்சையப்பமுதலியார் சதாப்த பூர்த்தியும் அவர் சரித்திரமும்.

இவ்விராஜதானியில் அதிக பிரபலம்பெற்று 'புல்லும் பூமியும் கல்லுங் காவேரியுமுள்ளளவும்' தன் பேர் மறக்காதபடி தர்மஞ்செய்து புசழுடம்பெடுத்த பச்சையப்பமுதலியாருடைய தர்மங்கள் ஏற்பட்ட 50-வது வருஷ பூர்த்தி மகோற்சவம் போன வருஷம் மார்ச்சு-மீ இராஜப்பிரதிநிதி அக்கிராசனாதிபதியாகவிருக்கக் கொண்டாடப்பட்டதை யாவருமறிவார்கள். அம்மகோற்சவங் கொண்டாடியதோடு போன வருஷம் அவர் தர்மத்தில் ஏற்பட்ட கலாசாலையில் படித்தபழைய புதிய மாணாக்கர்கள் வருஷத்திற் கொருமுறை கூடி அவர் ஞாபகத்தைக்கொண்டாடத் தீர்மானித்தார்கள். அந்தப்படியே இந்த வருஷமும் அக்காலேஜ் பழைய புதிய மாணாக்கர்கள் யாவரும் நாளது மார்ச்சு-மீ 24-வ சனிக்கிழமையன்று கூட்டங்கூடி அவர் ஞாபகத்தைக்கொண்டாடினார்கள். இந்த தர்மிஷ்டர் இறந்துபோய் இந்த மாசத்தோடு சரியாக நூறு வருஷகாலமாகிறது. இத்தனைகாலமாகியும் மங்காத புகழ்பெற்ற அந்தப்புண்ணியவான் காலஞ்சென்ற சதாப்தபூர்த்தியைக்கொண்டாடக்கொடுத்து வைத்தது நமக்கு எவ்வளவு பெருமை. சென்ற 24-வ அவர் ஞாபகத்தைக்கொண்டாடக்கூடிய பொதுக்கூட்டத்தில் அவர் பிரபாவங்களை யெடுத்துரைத்து அவரால் நம்தேசத்துக்குண்டாய்வரும் நன்மைகளைக்காட்டி நம்மவர்கள் அவருதாரணத்தால் பயன்பெற்று அவர் வழியில் நடக்க நாட்டமுற்று வரவேண்டுமென்று பல பேர் பலவிதமாக வற்புறுத்திப் பேசினார்கள். அவர்களில் ராவ்பஹதூர் வ. கிஷ்ணமாசாரியார் அவர்கள் பழைய பச்சையப்பபையனாக முன்வந்து பேசியது அதி ரசமாக விருந்தது. அவர் விசேஷமாகவற்புறுத்தியது என்னவெனில், சத்குணசிரேஷ்டரான பச்சையப்பமுதலியார் ஞாபகத்தைக்கொண்டாடி அவர் நடத்தையையும் செய்கைகளையும்பற்றி அடிக்கடி நினைத்து அவர் ஜீவ ஒழுக்கத்தை மனதில் தியானித்து வருவதால் அவரைப்போல் நாமும் ஆகவேண்டுமென்கிற அவா ஜனிக்க அதனால் நாமும் நம்



தேசத்துக்குப் பயன்படுவோராவோ மென்பதே. 'பச்சையப்பமுதலியார்' என்கிற பேர் எங்கும் பிரபலமாயினும் அவருடைய பிறப்புவளர்ப்பும் அவர் ஜீவ்ய சரித்திரமும் எல்லாருக்கும் அவ்வளவு நன்றாகத்தெரிந்திராதென்றெண்ணுகிறோம். ம-ா-ா-ஸ்ரீ கிஷ்ணமாசாரியார் சொல்லியபடி அவர் ஞாபகத்தைக்கொண்டாட அவருடைய ஜீவ்ய சரித்திரம் நன்றாகத் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாதலால், அம்மஹானுடைய சரித்திரச் சுருக்கத்தை 9-வருஷங்களுக்குமுன் ம-ா-ா-ஸ்ரீ கிஷ்ணமாசாரியவர்களே திரட்டி யெழுதியபடி அவர் அனுமதியுடன் கீழே பிரசுரிக்கிறோம் :—

### பச்சையப்பமுதலியார் என்னும் தர்மிஷ்டருடைய சரித்திரம்.*

"கல்வி, செல்வம், நாகரீகமுதலியவற்றில் மிகச் சிறப்புற்றோங்கிய தொண்டைநாட்டிலே சித்திரவிசித்திரமான மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், தேவாலயங்களும் நிறைந்து சைவ வைணவ சமயங்கள் நிலைத்து விளங்கப்பெற்ற திவ்யதேசமாகிய காஞ்சீபுரத்தில், அகமுடையர் குலத்தில் விசுவநாதமுதலியார் என்றொருவர் இருந்தார். இவர் பாரியை "பேதைமை யென்பது மாதர்க்கணிகலம்" என்கிறபடி அறிமடமும், அடக்கமும், பொறுமையும், ஆபரணமாகக்கொண்ட பூச்சியம்மாள் என்னும் குணவதி. இவர்கள் தங்கள் வர்ணாசிரமத்துக்குத் தக்கபடி சீவனம் செய்துகொண்டிருக்கையில், இரண்டு குமாரத்திகள் உண்டானார்கள். முதல் குழந்தைக்கு சுப்பம்மாள் என்றும், இரண்டாவது புத்திரிக்கு அச்சம்மாள் என்றும் பெயர். தங்களுக்குப் புத்திரன் பிறக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கையில், பூச்சியம்மாள் கர்ப்பவதியானாள். ஆனால் குழந்தை கர்ப்பத்திலிருக்கையிலேயே பிதா இறந்துபோய்விட்டார். பின்பு புருஷதிக்கின்றி அநாதையான பூச்சியம்மாள், தன் குமாரத்திகள் இருவரையும் அழைத்துக்கொண்டு, காஞ்சீபுரத்துக்குச் சற்று வடகிழக்கில் நாற்காததூரத்திலிருக்கிற பெரியபாளயம் போய், தங்கள் குடும்பத்தாருக்கு இஷ்டராய், ஆற்காட்டு சுபேதாருடைய காரியங்களை நிர்வகித்துவந்த ரெட்டிராயர் எங்கிற மாத்துவபிராமணர் ஆதரணையில் இருக்கையில், இங்கிலீஷ் 1754-ம் வருஷத்துக்குச் சரியான பவ வருஷத்தில் ஓர் சற்புத்திரனைப் பெற்றாள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்."

அக்குழந்தை சிவந்த உருவமும், நீண்டபுருவமும், அகன்ற கண்களுமுடையதாய். நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய், பச்சையப்பனென்று நாமதேயம்பெற்று, அதிரூபலாவண்ணியங்களுடன் வளர்ந்துகொண்டிருந்தது.

உலகத்தில் சுகதுக்கங்கள் தனித்தனி நேரிடத்தொடங்கினால், ஒன்றின்பின்னொன்றாய் அடுத்தடுத்து உண்டாவது அனுபவசித்தமாகையால், பிள்ளைக்கு ஐந்துபருவ மாய்த் தெலுங்குபாஷை அப்பியசித்துக் கொண்டிருக்கையில், இவர்களுக்கு ஓர் பற்றுக்கோடாயிருந்த ரெட்டிராயர் காலஞ்சென்றுவிட்டார்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்."

புருஷனிறந்தபிறகு ஓர் ஆதரவைப்பற்றிப் பிள்ளையை முன்னுக்குக்கொண்டுவரலாமென்று எண்ணியிருக்க, அத்துணையும் நாம் இழந்துவிடும்படியாயிற்றே ; இனி நமக்குள்ள கொஞ்சம் தனத்தை விர்த்திபண்ணவும், ஆதரிக்கவும், ஒருவருமில்லையே. இவ்விளங்குழந்தைகளைக்கொண்டு நாம் எப்படிக் கரையேறுவோமென்று மனம்வெதும்பிப் பூச்சியம்மாள் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கையில், அவ்வூரிலிருந்த ராமுரெட்டி பெண்சாதி வெங்கட்டம்மாளும் மற்றுமுள்ளவர்களும், சென்னப்பட்டணம்போய்ச் சேர்ந்தால் சில பெரியமனிதர்களுடைய சகாயத்தைப்பெற்று, நல்ல நிலைமைக்கு வந்துவிடலாமென்று சொன்னதைக்கேட்டு "அகதிக்கு ஆண்டவனே துணை" என்பதையெண்ணி, தன் குமாரன் பச்சையப்பனையும் மங்கைப்பருவமடைந்த இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டு, பட்டணம்போய்ச் சேர்ந்தாள். அங்கே *ஸெந்துஜார்ஜ் கோட்டைக்கு வடமேற்கு மைதானத்தைச்சார்ந்த ஒற்றவாடையில், சாமிமேஸ்திரி தெருவென்று சொல்லப்படுகிற சிறிய சந்தின் வடபுற மேலண்டைக் கோடியிலோர் வீட்டிற் குடியிருந்துக்கொண்டு, தான் பெண்பிள்ளையாகையால் தன் கையிலுள்ள பணத்தை மோசம் போகாமல் விர்த்திபண்ணிக் குழந்தைகளைக்காப்பாற்றவேண்டுமேயென் றெண்ணங்கொண்டு, நல்ல கண்ணியமும், யோக்கியதையும், நம்பிக்கையும், திக்கற்றவர்களுக்கு உதவிபுரியும் பெருந்தகைமையும், உடையபிரபுக்கள் யாரென்று விசாரிக்கையில், இவர்கள் குடியிருந்த வீட்டிற்குச் சமீபத்திலேயேயிருந்த ஒருவர், தன் யெஜமான் போனி நாராயணபிள்ளையென்பவர் சகல நற்குணங்களும் பொருந்தியவரானதால், அம்மாள் கோரிக்கையை ஈடேற்ற வல்லவரென்று சொன்னார்.

* ஜனவிநோதினியிலிருந்து எடுக்கப்பட்டது.

* Fort St. George.

போனி நாராயணபிள்ளையென்பவர், செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரிதாலூகா நெய்தவாயல் கிராமத்தில், யாதவகுலத்தில் பிறந்தவர். சென்னப்பட்டணத்தில் இந்தியாவின் சரக்குகளை ஐரோப்பாவில் பல இடங்களுக்கு அனுப்புவது, அவ்விடத்துச் சரக்குகளை இங்கே வரவழைப்பது முதலான வர்த்தகத்தொழில் செய்துவந்த மேஸ்தர் போனி என்பவருக்கும், அவருச்குப்பின் அவர் பாரியைக்கும், துபாசியாயிருந்தபடியால், இவரை இது காரணமாக போனி என்கிற அடைமொழி கொடுத்துக் கூப்பிடுகிறது வழக்கம். இவர் இங்கிலீஷ்துரைத்தனத்தாருக்குச் சிநேகிதராயிருந்ததால், சுதேசிகளநேகருக்குத் தகுந்தவேலைகள் செய்வித்துக்கொடுத்து மேம்பாடுள்ளவராயும் இருந்தார். பிறகு செங்கற்பட்டு ஜில்லாவைச்சேர்ந்த, மெதவாயலென்னுங் கிராமத்தை ஆற்காட்டு நபாபுவினிடத்தில் சுரோத்திரியமாகப்பெற்று, அந்தக் கிராமத்தின் வரும்படி அங்கே கட்டின தர்மசத்திரத்துக்கு உபயோகமாகும்படி செய்துவந்தார். இவருடைய தர்மகுணங்களையறிந்து, பூச்சியம்மாள் இவரை நேரிற்கண்டு தன்னெண்ணங்களைத் தெரிவித்தவுடன், அவரும் அந்தம்மாள் இஷ்டப்படியே செய்யச்சம்மதித்து, தனக்கு உடன்பிறந்தாள் என்னும் முறைமைகொண்டாடிக், கொடுத்த பொருளை விர்த்தியாக்கி, பச்சையப்பனுக்கு வித்தியாப்பியாசம் செய்துவந்தார்.

பெண்கள் இருவரில் மூத்தவளாகிய சுப்பம்மாள் புங்கத்தூர் தெய்வநாயகமுதலியாருக்கும், அச்சம்மாள் என்னும் பெயருள்ள இளையவள் கூடலூர் தெய்வநாயக முதலியாருக்கும், பாணிக்கிரஹணம் செய்துகொடுக்கப்பட்டு, சிலகாலம் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். பெரியவளுக்கு ஐயாளம்மாள் என்றொரு குமாரத்தியும், இளையவளுக்கு முத்தையன் என்றொரு குமாரனும் பிறந்தார்கள். இக்குழந்தைகள் வளர்ந்துகொண்டிருக்கையில், கொஞ்சகாலங் கடந்தபின், இப்பெண்கள் மாங்கலியத்தோடு வெகுநாள் வாழ்ந்துகொண்டிருக்கும் பாக்கியமற்றவர்களாய், தங்கள் புருஷர்களிறந்தபின் புக்ககத்தில் தக்க ஆதரணையின்றி, தங்களுக்குள்ள சொத்துக்களையும் எடுத்துக்கொண்டு, தாய்வீடுவந்து சேர்ந்தார்கள்.

பச்சையப்பன் பாலியத்திலேயே புத்திகூர்மையும், யுக்தியுமுடையவனாய், வியாபார தந்திரங்களையெல்லாம்செம்மையாய் அறிந்துகொண்டு, "முயற்சி திருவினையாக்கும்" என்பதை யுணர்ந்து, வெளிதேசத்துச் சரக்குகளை மொத்தமாய் வரவழைக்கும் பெரிய வியாபாரிகளிடத்திலிருந்து, வேண்டியவளவுக்குக் கைவிலைக்குவாங்கிவிற்கும் சிறுவியாபாரிகளிடத்தில் தரவுகாரவேலையிலமர்ந்து, சாமான்களை வாங்கவரும் ஐரோப்பியர்களுக்குச் சுதேசபாஷை தெரியாததலால், அவர்களுக்கு வேண்டியவஸ்து இன்னதென்றும், அதின் விலை முதலானவை இன்னதென்றும் இங்கிலீஷில் தெரியப்படச்சொல்லி, வேண்டியவைகளை வாங்கிக்கொடுத்து, இருதிறத்தாரும் தனித்தனி இஷ்டத்துடன் கொடுக்கும் பொருளைப் பெற்று,

> "தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
> வேளாண்மை செய்தற் பொருட்டு."

என்பதற்கேற்க இரப்போர்க்கும், வித்வான்களுக்கும், தன்னாற் கூடியவளவு பொருளுதவிசெய்து, தெய்வபக்தியுடையவனாய்ச் சந்நிதிகளில் கைங்கர்யங்களுக்குச் சிறிது தனஞ் செலவழித்து, மிகுந்ததைக் குடும்பத்துக்கு உதவியாகத் தன் தாயாரிடத்தில் கொடுத்துக்கொண்டுவந்தான்.

இவ்வாறு சிலநாள் நடத்திக்கொண்டிருக்கையில், தான் செய்துவரும் தொழிலில்வருமானம் நிலையில்லாமலும், தன்மனதுக்கிசைந்தபடி தர்மச் செலவுகள் செய்யப்போதுமான திரவியம் கிடைக்கத்தகுந்ததல்லாமலும் இருப்பதையிட்டு வேறுவேலையில் பிரவேசிக்க எண்ணங்கொண்டிருக்கும்போது, ஒரு ராணுவ உத்தியோகஸ்தரான இங்கிலீஷ்துரை, இவ்விளைஞனுடைய நுட்பபுத்திக்கும், வேலைகளைத் தாழ்வின்றிச் சாக்கிரதையோடும் ஊக்கத்தோடும் செய்யும் திறமைக்கும் வியந்து, தன்னோடுவரும்படி அழைக்க, அன்புடனிசைந்து, தாய்முதலானவர்களுடன் சொன்னாற் போகவொட்டார்களென்று ஒருவர்க்குந் தெரியாமல், பட்டணத்துக்குக் காததூரத்தில் பாலவாயற் சத்திரத்துக்கருகில், ராணுவப்படைகளுடன் இருந்த அந்தத் துரையிடத்தில் வேலையிலமர்ந்தான். இதைக்கேட்டபின் தாயருக்குண்டான துக்கம் இவ்வளவென்று கூறவேண்டுமோ. "பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்' என்பது பொய்யோ?

பிறகு தாயும் தமைக்கைமாரும நாராயணபிள்ளையவர்களும் இதைக் கேள்வியுற்று, தக்கதுணையும் கண்டித்துப் புத்திசொல்வாருமின்றிப் பிள்ளைகளைச் சிறுவயதில் மனம்போனபடி விடுவது, கூடாதகாரியமென்றும், நல்ல கூட்டுறவும் கல்விகேள்வியும் பழக்கமுமில்லாவிடில், சிறுவன் கெடுவானென்றும், "முளையில் வணங்காதது முதிர்ந்தபின் வணங்காது" எனறும், எண்ணிப் பிள்ளையவர்கள் தாமே புறப்பட்டுப்போய்த் தளகர்த்தனைக் கண்டுபேசி, அவனுடைய வுத்தரவின்மேல் திருப்பியழைத்துச்கொண்டுவந்தார். மகாராஜாவாயிருப்பினும், கண்டித்துப் புத்திசொல்வாரில்லாமற்போனால், கெடுப்பவரில்லாதிருந்தாலும் அழிந்துபோவானென்பது நிச்சயமாகையால்; முதிர்ந்த அறிவில்லாமலும், நன்மை தீமைகளைச் செம்மையாய்ப் பகுத்தறியும் பருவம் வராமலும், எக்காரியங்களிலும் தலையிட்டுச் செய்து முடிக்க எத்தனிக்கும் மதர்த்த வாலிப தசையிலிருப்பவர்கள், பெரியோர் சார்படைந்து, அவர்கள் சொல்லும் புத்தியைக்கேட்டு நடவாவிட்டால், கெடுவாரென்பதற்குச் சந்தேகமுளதோ?

> "இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
> கெடுப்பாரி லானுங் கெடும்."

பிறகு பிள்ளையவர்கள், தென்தேசத்தில் இங்கிலீஷ்காரரது அதிகாரம் நடத்திவந்த நிக்கலஸ் துரையிடத்தில், பச்சையப்பனுக்குத் துபாசிவேலை செய்வித்துக்கொடுத்தார். அவ்வேலையிலிருந்துகொண்டு, கொஞ்சம் திரவியம் சம்பாதித்து அதைத் தனக்குப் பிதாமுறையாய் எல்லாக்காரியங்களையும் செய்வித்து நல்வழியில் நடத்திக்கொண்டுவந்த பிள்ளையவர்களிடத்தில் மிகுந்த வணக்கத்தோடு கொடுத்து, அவர் கட்டளைப்படி தன்னுடைய தமக்கை குமாரத்தி ஐயாளம்மாளைக் கலியாணஞ்செய்துகொண்டு, சுகமாகவிருந்தார். அப்போது தெய்வ கைங்கர்யத்தில் விசேஷ ஆவலுடையவராகையால், காஞ்சீபுரத்தில் ஏகாம்பரேசுவரர் கோவிலில் சிவகாமியம்மை, ஸ்ரீபலிநாயகர் என்னும் இரண்டு விக்கிரகங்கள் சிரேஷ்டமான சிற்பிகளைக்கொண்டு வார்ப்பித்து, 1774-ஞ மார்ச்சு-மீ 27-உ கும்பாபிஷேகம் செய்வித்து, பங்குனி மாசம் உத்திர நக்ஷத்திரத்தில், சுவாமி திருக்கலியாணம் பிரதி வருஷமும் நடத்த அனுகூலமான மண்டபங் கட்டுவிக்கத் தீர்மானித்து, அதே தினத்தில் நல்ல முகூர்த்த காலத்தில் அடைக்கால்கோலி அத்திருப்பணியை முற்றுவித்தார்.

இவ்வாறு அப்பன் என்றழைத்தவர்களெல்லாம் ஐயா என்றழைக்கும்படி, பச்சையப்பமுதலியார் ஜகத்பிரசித்தராய்த் துபாசிவேலையை மிகுந்த சாமர்த்தியத்தோடும் கவனத்தோடும் நிர்வகித்து வருகையில், 1776-ம் வருஷத்திலும், அதற்குப் பின்னும், செங்கற்பட்டு ஜில்லாவைச்சார்ந்த பூவிருந்தவல்லி, திருப்பாசூர் முதலிய இடங்களில் இங்கிலீஷ் வர்த்தகக் கூட்டத்தாருக்கு மேல்வாரமாகக் கிடைக்கும் தானியங்களை ஏற்பாட்டின்படி பணமாய்ச் செலுத்துவதாக ஒருடன்படிக்கை செய்துகொண்டு, தர்மராயமுதலியார், புங்கத்தூர்ச் செங்கல்வராயமுதலியார் என்கிற இருவரைத் தமக்குச் சகாயமாக வைத்துக்கொண்டு, இங்கிலீஷ் வியாபாரிகளுக்கும் நபாப் துரைத்தனத்தைச் சார்ந்தவர்களுக்கும், நடுவாய் அநேக இனும், மாதச் சம்பளம் செலுத்துதல், ஒருவருக்குப் பணம் சேர்ப்பித்தல், கடன்பத்திரங்களுக்கு வட்டிகொடுத்தல், முதலான வியாபாரங்களை இருதிறத்தாரும் மிகவும் புகழும்படி நடத்தி, விசேஷ லாபத்தை யடைந்தார்.

முதலியார்காலத்தில் தென்னிந்தியாவில் ஐரோப்பியர் இன்ன நிலைமையி லிருந்தார்களென்பதையும் அவர்களிடத்தில் துபாசிகள் நடந்துகொண்டவிதத்தையும் குறித்துக் கொஞ்சம் சொல்லாவிட்டால், துபாசிகள் சம்பாத்தியம் இன்னதென்று விளங்காது. அப்போது இங்கிலீஷ்காரர் வியாபாரக்கூட்டத்தாராய் இருந்தார்களே யொழிய, தற்காலம் இருப்பதுபோல துரைத்தனம் செய்துவந்தவர்களல்லர். ஆனால் சென்னபட்டணத்தில் தங்கள் சேனைகளை வைத்துக்கொண்டு, ஆற்காட்டு நபாபுடன் சிநேகக்கட்டுப்பாடு செய்திருந்தார்கள். அப்போது பிராஞ்சுக்காரரும் வர்த்தகஞ்செய்யும் கருத்தை நாடினவர்களாய் வந்திருந்தார்கள். இந்தியாவில் அதிபதிகளாயிருந்த ஆற்காட்டு நபாபு, ஐதர், நிஜாம், இவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையுஞ் சச்சரவுஞ் செய்துவந்ததைப் பார்த்திருந்தவர்கள் யாராயினும், தானாய் நேர்ந்த சமயத்தில், தங்களுக்கு நாடுகள் சுலபமாய்க் கிடைக்கத்தக்கதாயிருந்தால் விட்டுவிடுவார்களோ?

> "காலங் கருதி யிருப்பர், கலங்காது
> ஞாலங் கருது பவர்."

இது நல்லதருணமென்று அந்நிய தேசத்தாராகிய இங்கிலீஷ்காரரும் பிராஞ்சுக்காரரும், பகைக்கும் சுதேச அதிகாரிகளில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சமயத்தில் சகாயமாயிருந்து, கொஞ்சம் கொஞ்சமாய் நாடுகளைத் தங்களுக்கு உரிமையாக்கிக்கொண்டே இருந்தார்களென்பது, இந்துதேச சரித்திரம் படித்தவர்களெல்லோருக்கும் தெரிந்த விஷயந்தானே. அந்நிய தேசத்தாருக்கெதிரில், நம்மவர்கள் கட்டுக்குலையாமல் உட்கலகம் எவ்வளவு இருப்பினும் அதை வெறுத்தாழ. ஓர் முடிவுசெய்யும் திடனும், ஒருமைப்பாடு முண்டாயிருந்து, தக்கபலமுள்ளவர்களைச் சகாயமாகப்பெற்றால்,

> "கொல்லையிரும்புனத்துக் குற்றியடைந்தபுல்
> ஒல்காவேயாகு முழவருழுபடைக்கு."

என்பதுபோல, சத்துருவுக்கு இடம் கிடைப்பது கஷ்டசாத்தியமாகும். இவ்வாறு அரசாட்சி மாறிக்

கொண்டிருக்கையில், கிழக்கிந்தியா வர்த்தகக்கூட்டத்தாராகிய இங்கிலீஷ் கம்பெனியாரும், நபாபும் ஒன்ருயிருக்கும்போதும், வேறு பிரிந்திருக்கும்போதும், கடிதங்கள் எழுதவும், பதில் விஷயங்களைத் தெரிவிக்கவும், அனுகூலமாயும் ராச்சிய நடவடிக்கைகளில், ஒவ்வொருவருடைய அபிபிராயங்களையுங் கண்டறிந்த இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்களுக்கு உண்டாயிருந்த வருமானத்தைக் கணக்கிடக்கூடாதென்ருல், அவர்களுக்கு எல்லா விஷயங்களிலும் சாதகமாயிருந்து, அவர்களுக்கு லாபங்கிடைக்கும் வேலைகளில் முக்கிய உதவியாயிருந்தவர்களான துபாசிகளின் சம்பாத்தியத்தைச் சொல்லவேண்டுமோ? ஒவ்வொரு காரியத்திலும் அளவற்ற தனம் கிடைத்துக்கொண்டிருக்கும். இந்த துபாசிகள் இங்கிலீஷ் பாஷை செம்மையாய்க் கற்றுக்கொண்டவர்களல்லர். சிலருக்கு எழுதத்தெரியும்; சிலருக்கு அதுவும் தெரியாது. ஆனல் எல்லோருக்கும் மிதமாய்ப் பேசத்தெரிந்திருந்தது. வெளியில் புறப்படும்போது பச்சைக்கல்முருகு, பெரியகடுக்கன், தோடா, மோதிரம், ரத்தினசாலை முதலான ஆபரணங்கள் பூண்டு தலையில் பாகையும், நெடுஅங்கியும், அதன்மேல் சரிகை நடுக்கட்டும் கட்டி, கையில் சிவப்புப்பட்டுத்துண்டுபிடித்துச், சால்வை போர்த்துக்கொண்டு, பல்லக்கிலாவது பெரியவண்டிகளிலாவது சவாரிசெய்துவந்தார்கள்.

பச்சையப்பமுதலியார், நாளடைவில் உயர்ந்த பேரும் புகழும்பெற்று, இங்கிலீஷ் கம்பெனியாருடைய உத்தியோகத்தில் முதன்மை பெற்றிருந்த ஜோஸப் ஸலிவன் துரையிடத்தில், பெரிய துபாசியானுர். இந்தத் துரையை, நபாபு வாலாஜா என்பவர் ராச்சியதந்திர வியாபாரங்களில் பங்காளத்துக் கவர்ன்மெண்டாரிடத்தில் 1781-ஞ மார்ச்சு மீ அனுப்பி, கர்நாடகதேசத்துக்கு நபாபே அதிபதியானவர் என்றும், இது விஷயத்தில் கம்பெனியார் பிரவேசிக்கிறது தகாததென்றும், 10 பட்டாளங்களை மாத்திரம் இவர் சேவகத்தில் வைக்கவேண்டுமென்றும், அவர்களுடைய செலவைமாத்திரம் பெற்றுக்கொள்ள ஏற்பாடுசெய்யவேண்டுமென்றும், தமக்குப்பின் இளையகுமாரனுக்கு ராச்சியம் கொடுப்பிக்கவேண்டுமென்றும், ஐதரைச் செயித்தபின் ஒருபங்கு தமதுவசத்தில் விடவேண்டுமென்றும், தாம இங்கிலீஷ் கம்பெனியாருக்குக் கொடுக்கவேண்டிய கடனைத் தீர்க்கும் விஷயத்தில் கூடியசகாயம் செய்யவேண்டியதென்றும், இவற்றைக் குறித்துப் பேசி முடிவுசெய்யக் கேட்டுக்கொண்டார். அப்படியே ஸலிவன் துரைபோய்த், தம்மாற் கூடியவரையில் நபாபுக்கு அனுகூலமான முடிவுசெய்துகொண்டும் நபாபு ஆஸ்தானத்திலிருந்து இங்கிலீஷ்காரர் பிரதிநிதியாய் வேலைபார்க்கும்படி நியமனம்பெற்றும் திரும்பினர். தஞ்சாவூர் சீமையை நபாபுக்குக் கொடுப்பிக்கத் தங்களுக்கு அதிகாரமில்லையென்று, பங்காளதுரைத்தனத்தார் சொன்னபோதிலும், கடன் விஷயத்தில் சிலருக்கு முக்கால்பங்கும், சிலருக்கு முழுப்பங்கும், கொடுக்கப் பத்திரங்கள் கொடுத்து, நபாபு தேசத்து வருமானத்தில் தீர்க்கும்படி ஒத்துக்கொண்டும், மற்ற விஷயங்களில் ஸலிவன் துரை கேட்டுக்கொண்டபடியே செயய ஒப்புக்கொண்டார்கள். அந்த ஏற்பாட்டில் ஐதர் யுத்தம்முடிகிறவரையில், நபாபின் குடும்பரக்ஷணைக்கு வேண்டிய தனம் கொடுத்து வருகிறதும் மற்ற தேசவருமானங்களை இங்கிலீஷ்காரர் பற்றிக்கொள்ளுகிறதுமாக, அந்த வேலையை ஸலிவன்துரை பார்த்துவருவதாகவும இருந்தது.

இந்தப் பெரும்பதவியில் ஸலிவன்துரை திருச்சிராப்பள்ளிக்குப் போயிருக்கையில், 1783-ம் வருஷம் இங்கிலீஷ்காரர் கோயம்புத்தூரைப்பிடித்து, திப்புவின் தேசங்களில் பிரவேசிப்பதற்குத் தகுந்த உபாயங்களை ஸலிவன்துரை ஏற்பாடுசெய்து ராணுவ அதிபதிக்குச்சொல்ல, அவர்புகழ்ந்து அந்தப்படிநடத்தி, விசேஷ பலனடைந்தபோதும், மைசூர் அரசனை அடக்கித், திப்பு பிரபலித்திருக்கிருனென்று, ராஜாவுக்கும் ஜனங்களுக்கும் பயமுண்டாகும்படி தூதுகளை அனுப்பும்போதும், ராணுவ தளகர்த்தனுயிருந்த கர்னல் புல்லர்டன்துரை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி முதலான விடங்களில் சேனைகளை விர்த்திசெய்யப்போனகாலத்திலும், சாமக்கிரிகள் சேகரித்துக் கொடுக்கவும், சேனுபதியினிடத்தில் சனங்கள் பிரீதியாய் நடந்துகொள்ளும்படி செய்யவும், முதலியார் முதன்மையாய் நின்று, எல்லாம் சாதகமாகும்படிசெய்து மிகுந்த கீர்த்தி பெற்ருர்.

முதலியார் தஞ்சாவூரிலிருக்கும்போது, அவ்விடத்திய ராஜா இங்கிலீஷ்காரருக்குப் பிரதிவருஷமும் கொடுக்கவேண்டிய பணத்தை ஒரேவிதமாய்க்கொடுக்கச் சரிப்படாமல், சிலவேளை அத்தேசத்து நாணயங்களாகவும் சிலவேளை பூவராகன்களாகவும் சிலவேளை உண்டிகளாகவும் கொடுக்க நேரிட்டதினுலும், அவற்றை மாற்று வட்டத்துக்காக நூற்றுக்குப் பத்து அல்லது இருபது விழுக்காடு லாபம்தள்ளி வாங்கிக்கொண்டு, அவற்றைப் பட்டணத்துக்கு



உண்டிகளாகவும், பூவராகன்களாகவும் அனுப்பிக்கொண்டுவந்ததுமன்றி, சில சமஸ்தானபதிகளாயிருந்த பிரபுக்களுக்கும் பாளையக்காரருக்கும், வேண்டிய காரியங்களை அனுகூலஞ் செய்வித்துத் தமது பேராலும், நாராயணப்பிள்ளைபேராலும், கொடுக்கல் வாங்கல் முதலான நடவடிக்கைகளை நடத்திவந்ததாலும், கிடைத்த அளவிறந்த தனத்தை தபால்மூலமாய் உண்டிகளாகவும், சில சமயங்களில் அவ்விடத்துக் கொல்லர்கள்மேலெடுப்பித்தும், நாராயணப்பிள்ளை யவர்களிடத்தில் சேரும்படி அனுப்பிக்கொண்டு, தஞ்சாவூரில் தமக்கிருந்த பெரிய மெத்தை வீட்டில் வாசமாயிருந்தார்.

தற்காலத்தில் சிலர் விசேஷ தனம் கிடைத்தபின், நல்ல கூட்டுறவின்மையாலோ, சிறுவயதில் நல்ல பழக்கமில்லாமையாலோ, படிப்பின்மையாலோ, அதிக செருக்கடைந்து தாம் முன்னிருந்த நிலைமையை மறந்து, பெரியோரை இகழ்ந்து நற்பதவிக்குத் தன்னைக் கொண்டுவந்த லோககர்த்தாவாகிய ஈசனை மறந்தும், கெட்ட நடவடிக்கைகளில் பிரவேசித்து தனமிழந்து மானமிழந்து மதிகெட்டுப்போனதிசையில் எல்லார்க்கும் தீயராய், மிகவும் இழிந்த நிலைமைக்கு வந்திருப்பதை நாம் கண்டிருக்கிருேமே!

“செல்வம்வந்துற்றகாலைத் தெய்வமும் சிறிதுபேணுர்,
சொல்வனவறிந்துசொல்லார், சுற்றமுந்துணையுநோக்கார்;
வெல்வதேகருமமல்லால், வெம்பகைவலிதென்றெண்ணுர்,
வல்வினைவிளைவுமோரார்; மண்ணின்மேல்வாழுமாந்தர்.”

முதலியாருக்குண்டாயிருந்த நற்குணங்களையும் அவருடைய பரிசுத்த மனதுக்கேற்றபடி என்றும் இறவாதபுகழுடம்பைப்பெற்று விளங்கிக்கொண்டிருப்பதையும் நமது சிறுவர்கள் கண்டுதெளிந்து, அதின் பெருமையை அறிந்து அதின்படி நடக்க முயலும்படிசெய்வது அவர்களுக்கு அளிக்கும் கல்விக்கு ஒரு ஆபரணமாகையால், அவற்றைச்சிறிது இங்கு சொல்லவேண்டியது நியாயமாகத் தோற்றுகிறது.

“மூர்த்திரிமேற்காணி மிகுவதேற்,
கீழ்தன்னை இந்திரனு வெண்ணிவிடும்.”

என்கிறபடி படித்தவர்கள் கீழ்மக்களைப்போல் கர்வங்கொண்டு பெற்றேரையும் பெரியோரையும் இகழாமல், நற்குண நற்செய்கையை யுடையவர்களாய்,

“காக்கபொருளா அடக்கத்தை
ஆக்கமதனி னூங்கில்லையு யிர்க்கு.”

என்றபடி அடக்கத்தையே தாம் பயின்ற கல்விக்குச் சிறந்த ஆபரணமாகக்கொண்டு, தற்காலத்தில் வழங்கும் பரீக்ஷைகளில் தேறினபோதிலும், தாம் படித்தது ஓரணுவளவாகக்கருதி, மேலும் மேலும் விர்த்திசெய்ய முயலவேண்டுமென்பது, பெரியோர்களுடைய கோரிக்கை.

“முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றெளியாற்
கல்லுந்தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தினுல்.”

“கல்வி கரையில, கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல; தெள்ளிதின்,
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.”

முதலியார் தன் தாயாரிடத்திலும், பிதாபோலத் தன்னைப் பாதுகாத்து முன்னுக்குக் கொண்டுவந்த நாராயணபிள்ளையிடத்திலும், மிகுந்த மரியாதையுடன் நடந்துகொள்ளுவர். பெரியோர்களையும், படிப்பிற் சிறந்தவர்களையும் கண்டால், எதிர்கொண்டுபோய் அழைத்துக்கொண்டுவந்து, தக்க ஆசனத்தில் இருத்திப் பிறகு தான் உட்காருவர். அயலாருடைய விர்த்தியை நாடினவர். ஒருவரை வஞ்சனைசெய்தலும், பொய்சொல்லுதலும், புறங் கூறுதலும், பிறர் பொருளிச்சித்தலும், பொருமைப்படுதலும், ஆகிய குணங்கள் தன்னை அணுகவொட்டாமற் காத்தவர். நடுநிலைமையாய்க் காரியங்களை நடத்தியவர், தனக்குக் கெடுதிசெய்தவருக்குப் பிரதி அவர் வெட்கும்படி நன்மைசெய்த குணவான்.

“இன்னு செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.”

பழிக்கும் பாவத்துக்கும் பயந்தவர்; பிறனில் விழையாதவர்; எல்லாரிடத்திலும் இன்சொல் சொல்பவர். ஏழைகளிடத்திலிரக்கமுள்ளவர். தர்மமார்க்கத்தை யநுசரித்து வரும் பொருளன்றித், தகாத வழியில் நுழைந்து, சிறிதும் ஈரமின்றித் பொருள் கவரக் கருதியவரன்று.

“நாரங்கொண்டார், நாடுகவர்ந்தார், நடையல்லா
வாரங்கொண்டார், மற்றொருவர்க்காய் மனைவாழ்ந்
தாரங்கொண்டார், என்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈருங்கண்டாய்; கண்டகருய்ந் தாரெவரையா.”

எவ்வித காரியங்களிருப்பினும், தான் செய்யவேண்டிய நித்தியகருமங்களைத் தவருது செய்துவந்தார். தமக்கு ஒழிவு உண்டானல் சாஸ்திர சம்பிரதாயங்களைப் பெரியோர்கள் முகமாய்த் தெரிந்துகொள்வதும், கவிதாப் பிரசங்கங் கேட்பதும், சங்கீதசாஸ்திரம் விசேஷமாய்ப் பெருகி நிலைத்த இடம் தஞ்சாவூராதலால், அச்சாஸ்திரத்தின் அருமையறிந்து, சிரேஷ்ட வித்வான்களுக்குத்தகுந்த மரியாதை செய்வதுமன்றித், தானும் சிறிது அப்பியசிப்பதும், இவ்விதமாய் நல்வழியில் காலங்கழித்துவந்தார்.

"அறிமின் அறநெறி, அஞ்சுமின்கூற்றம்,
பொறுமின் பிறர்கடுஞ்சொல், போற்றுமின்வஞ்சம்,
வெறுமின் வினைதீயார்கேண்மை, எஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார் வாய்ச்சொல்."

முதலியாருக்கு, இதுவரையிலும் மக்கட்பேறில்லாதிருந்தபடியால், சந்ததி விர்த்தியினிமித்தம் இரண்டாவது கல்யாணம் நடத்திக்கொள்ளலாமென்கிற சாஸ்திர சம்மதப்படி, தாமப்போது வாசமாயிருந்த சோழநாட்டிலே வேதாரணியம் என்னும் திவ்ய தேசத்தில், உயர்குலத்தில் ஒரு சோழிய வேளாளனுடைய பெண் 'பழனியாய்' என்பவளை விவாகம் பண்ணிக்கொண்டார். முதல் மனையாள் உயிரோடிருக்கும்போது, அவள் கருத்துக்கு அனுகூலமானவிடம் நாடி, குலம், தனம், துணை இவற்றில் வேறுபாடின்றி இணக்கமுள்ளதாய் இரண்டாவது பாரியை கொள்ளக்கூடுமெனினும், இரண்டாவது விவாகத்துக்கு முதல் பெண்சாதி சம்மதம் கொடுப்பது கஷ்டம். ஒருவாறு ஒத்துக்கொண்டாலும், பிறகு ஒற்றுமையாய் வெகுநாள் வாழ்ந்துவருகிறதில்லையென்பது அனுபவசித்தம். இவ்வாறிருக்க, முதலியாருடைய பாரியைகள் இருவரில் ஒருத்தி குலத்திலும் மற்றொருத்தி தனத்திலும், உயர்ந்திருந்ததாகச்சொன்னால், ஒற்றுமை என்பது எவ்வாறுண்டாகும். இவர்களால் குடும்பங்களில் உண்டாகும் கஷ்டநிஷ்டூரங்களை விசேஷித்துச் சொல்ல வேண்டுமோ? இவர்களுக்குள் ஒருமைப்பாடு கொஞ்சமுமில்லாதிருந்தபடியால் தனியாயிருந்துக்கொண்டிருந்தார்கள். இளையாளுக்கு ஒரு பெண் குழநதை பிறந்தது.

இவ்வுலகத்தில் பிறந்து வளர்ந்து, சம்சாரமாகிற நடுக்கடலில் ஆழ்ந்து, இன்பதுன்பங்களில் முழுகிக் கிளம்பி, திகைத்து மதி மயங்கும, சீவகோடிகள் உலகப்பற்றொழித்து, ஆதிமூலமான சர்வேசுவரனிடத்தில் சரணாகதி பண்ணினால், அந்த ஆன்மாக்களுக்குப் பகவான் ஓர் மரக்கலமாகிக் கரையேற்றிவிடுவதுமன்றி, அவ்வீஸ்வரகுணாநுபவம் செய்வதே நித்தியாநந்தமென்றும், மற்றது நிலையில்லா இன்பமென்றும் கல்வி கேள்விகளால் செம்மையாய் அறிந்து, முதலியார் சைவசமய தீக்ஷைகள்பெற்று, நாயன்மார்களருளிச்செய்த தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலானவைகளைப் பூசாகாலத்தில் பண்வரிசைக்கிரமத்துடன் ஓதுவதுமன்றி, தம்பிரான்களுடனிருந்து பெரியபுராணம், திருவிளையாடல் முதலான புராண காலக்ஷேபஞ்செய்வதும், சிவனடியார்களை சிவசொரூபமாய் நினைத்து, அவர்களைச் செம்மையாய் ஆதரிப்பதும், அறுபத்துமூன்று நாயன்மார் திருநக்ஷத்திர தினங்களில் சாம்பமூர்த்திக்கு அபிஷேகம்செய் விப்பதும், ராத்திரிகாலத்தில் பதிகங்களை யாழில் அமைத்து வாசிப்பதும், ஸ்தலங்களில் திருப்பணிகள் நிறைவேற்றுவதும், தீர்த்த ஸ்தல யாத்திரை போகுமவர்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்வதுமான சற்கைங்கர்யங்கள் செய்துவந்தார்.

"பிறவிப்பெருங்கடனீந்துவர், நீந்தார்
இறைவனடி சேராதார்."

இவருக்கு அப்போது சிநேகமாயிருந்தவர்களில், மதராசு பிரசிடெண்டுகளான ஆர்ச்சிபல் காம்பெல், றம்போல்ட், லார்ட்டு மகார்டினி, இவர்களுக்கு வர்த்தகம் முதலியவைகளில் துபாசியாயும், அதிக விவேகமும் ஐசுவரியமுமுள்ளவருமான யாதவகுலப்பிரபுவான வாய்லூர்க் குழந்தை வீராப்பெருமாள்பிள்ளை என்பவர் அதிக அந்தரங்க இஷ்டமுள்ளவர். இவர் செங்கற்பட்டு ஜில்லா ஸ்ரீ ஹரிகோட்டையென்னும் கிராமத்தைச் சுரோத்திரியமாகப்பெற்று, அதை அநேகவழிகளில் தம்மாற் கட்டப்பட்ட தர்ம சத்திரங்களுக்கும், தேவஸ்தானங்களுக்கும், உபயோகமாகச் செய்தவர். இவர் சென்னபட்டணத்துக்கடுத்த சிந்தாத்திரிப்பேட்டையில் வசித்துக்கொண்டிருந்தபடியால், தாமும் அவர் சமீபத்தில் வாசஞ்செய்ய எண்ணங்கொண்டு, கோமளேசுவரபுரத்தில் வீடுகட்டிக்கொண்டு, சிலகாலம் இங்கும், சிலகால்ம் தஞ்சாவூரிலுமாய் வசித்துக்கொண்டிருந்தார்.

1788-ஆம்த்தில், அமரசிங்கு மகாராஜா தஞ்சாவூர்ப்பட்டம் வகித்து, சிலநாள் சென்றபின் கவர்னர் ஆர்ச்சிபால்ட் கேமல்துரையவர்கள், பச்சையப்ப முதலியாரை வரவழைத்துத், தஞ்சாவூர் ராஜா இங்கிலீஷ்காரருக்குக் கட்டவேண்டிய திரவியம் குறித்த தவணைப்படி சேராததினால், அத்தேசத்து வருமானங்களைப் பற்றிக்கொண்டு, துரைத்தனத்தாருக்குச் சேரவேண்டிய தொகையைக் கிரமப்படி செலுத்திவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதுமன்றி, ராஜாவும் அப்படியே செய்யவேண்டுமென்று முதலியாருக்கு எழுதினார். தாமே தனியாய் அந்தக்காரியம் பார்த்துவரக் கூடாமையாயிருப்பதைத் தெரிவித்தின்மேல், உவில்லியம் பீட்டிரி துரையைப்போய் வேலைபார்த்துவரும்படி நியமித்தபோது, அவருக்கு உதவியாய் முதலியாரையும், இங்கிலீஷ்கார அதிகாரிகள் அனுப்பினார்கள். அப்போது முதலியாரிடத்தில், ராஜா லக்ஷம்வராகன் கடன்வாங்கிக் கம்பெனியாருக்குக் கட்டினார். பிறகு பணம் செலுத்துவதற்குத்தக்க சில புது ஏற்பாடுகள் செய்வித்துவிட்டு, பீட்டிரிதுரை பட்டணம் வந்துவிட்டபின், முதலியார் அங்கிருந்துகொண்டு கொடுக்கல் வாங்கல் நடத்திவருகையில், அங்கே இருந்த சில ஐரோப்பியர்கள், 'துபாசிகளென்று பேர்கொண்ட பச்சையப்ப முதலி, சுப்பராவு, சின்னையாமுதலியார், முதலான தனிகர்கள் விசேஷ வட்டியும், லாபமும் அடைவதற்காக ராஜாவுக்கு வேண்டிய கடன்கொடுத்துக், கிராமங்களையும் நாட்டில் விளையும் தானியங்களையும், அடாகவைத்துக்கொண்டு சிறிது காலங்கழித்துத், தானியங்களை உயர்ந்த விலைக்கு விற்றுவருவதால், நாட்டுக்குடிகள் மிகவும் மெலிந்துபோவதற்கும், ராஜா வீண்செலவுபண்ணுவதற்கும், இடமாகிறபடியால், துபாசிகளை அப்புறப்படுத்தினால் குடிகளுக்கு க்ஷேமமுண்டாகும்' என்று, செய்துகொண்ட விண்ணப்பத்தை அநுசரித்துத், துரைத்தனத்தார் 1791-ஆம்த்தில் மேஸ்தர் ராம், மேஸ்தர் புல்டன் துரைகளுக்குத், துபாசிகளைப் பட்டணம் அனுப்பிவிட வேண்டுமென்று, கண்டிதமாய் எழுதினார்கள். அதற்கு முதலியார் மிக வெறுப்படைந்து, பட்டணம் வந்து பீட்டிரி துரையினிடத்திற்போய்த், தான் 50,000 வராகன் வரையில் ராஜாவுக்குக் கடன்கொடுத்திருக்க, அது வராததற்குமுன் தஞ்சாவூரை விடச் சொல்லுவது நியாயமல்லவென்றும், தான் விசேஷ வட்டிவாங்கி, குடித்தனக்காரர்களை வருத்தப்படுத்தினதில்லையென்றும், சுப்பராவு, சின்னையாமுதலி முதலானவர்கள்பேரில் குடிகள் முறையிட்டதுபோல், தன்பேரில் எவரும் எப்போதும் முறையிட்டதில்லையென்றும், கவர்னர் கேமல்துரையுடைய வேண்டுகோளின்படி தஞ்சாவூருக்குப்போன என்னைத் திரும்பி வரவழைத்தது, கிரமவிரோதமென்றும், வாதித்ததின் மேல் முதலியார்மேல் யாதொரு குற்றமுமில்லையென்று ஏற்பட்டது. பிறகு தஞ்சாவூர் தமக்கு வாசயோக்கியமாயிருப்பதால், அங்கே போகவேண்டுமென்று கேட்டதற்கு இசைந்து துரைத்தனத்தார் ஆக்ஷேபனையில்லாமல் உத்தரவுகொடுக்கப்பெற்று, 1792-ஆம்த்தில் பாரிசவாயுகண்டு நிவர்த்தியாகும் பொருட்டுத் தஞ்சாவூருக்குப் போனார்.

இதனிடையில், தஞ்சாவூரிலிருந்து பட்டணம் வந்தபின் ஜோஸப் ஸலிவன்துரை குமாரருக்குத் துபாசியாய்க், கொஞ்சகாலம் இருக்கையில், தில்லைத்திருப்பதியில் அநேக திருப்பணிகளும், கட்டளைகளும், நடத்த எத்தனிக்கையில் தீக்ஷிதர்கள் இவருக்கு இணங்காமல் கலகஞ்செய்யவே, உதாரகுணமுடையவராய் விசேஷ தர்மங்கள் நடத்திவந்த மணலி சின்னையாமுதலியார், தீக்ஷிதர்களுடன் கலந்து வார்த்தை சொல்லி, முதலியாருடைய அபிப்பிராயப்படி ஒத்து நடக்கும்படி திட்டம்பண்ண, பின், நடனசபாபதிக்குத் திருத்தேர் செய்வித்து பிரமோச்சவஞ்செய்ய ஆரம்பித்து, 1791-ஆம் ஜுன்-மீ 28-உ துவசாரோகணம் செய்வித்து, ஆனித்திருமஞ்சன உற்சவம் நிறைவேற்றினார்.

மறுபடி தஞ்சாவூருக்குப் போகையில், முதலியார் போனி நாராயணப்பிள்ளை குமாரராயும், சத்தியவாதியுமான ஐயாப்பிள்ளையை ஸலிவன்துரை குமாரருக்குத் துபாசியாக இருக்கும்படி ஏற்படுத்திப்போனார். போனவிடத்தில், மேஸ்தர் ஸட்ரேஞ்சுதுரைக்குப் பிரியமுள்ளவராய் இருந்து, இரண்டுவருஷங்கழித்து வாயு உபத்திரவம் கொஞ்சம் லகுவாய்த், தன் வேலைகளை முன்போலவே பார்த்துவருகையில், மதுமேக ரோகமும், பேதியுங்கண்டு சரீரம் மெலிந்து, மூளைமூல உபாதியும் உண்டானதினால், தகுந்த சிகிச்சை செய்து கொள்வதற்காகக் கும்பகோணத்துக்குப் போய், அங்கே பிரமாதீச-ஆம் மாசி-மீ 29-உக்குச்சரியான, இங்கிலீஷ் 1794-ஆம் மார்ச்சு-மீ 9-உ சேர்ந்து, இதற்குமுன்னே கட்டிவைத்துப் பிராமணர்களுக்குத் தானம்பண்ணின அக்கிரஹாரத்துக்குச் சமீபத்தில், தாம்கட்டத் தொடங்கியிருந்த சத்திரத்துவேலையை நடப்பித்துக்கொண்டிருக்கையில், தேகம் இனி நில்லாதென்று கண்டு, உலகப்பற்று ஒழிந்து சரீராநுபவத்தில் வெறுப்புற்று,

"நாய் நமதென நரிநம தெனப்பிதா
தாய் நமதென நமன்றன தெனப்பிணி
பேய் நமதென மனமதிக்கும் பெற்றிபோ
லாய் நமதெனப்படும் யாக்கையாதே.

விடம்பயி லெயிற்றரவுரியும் வீறழை
குடம்பையுந் தானெனுங் கொள்கைத்தே கொலா
நடம்பயில் கூத்தரினடிக்கு மைவர்வா
ழுடம்பையும் யானென வுரைக்கற்பாலதோ.

நடுத்தயா விலார்தமை நலியத்துன்பநோ
யடுத்தயா வருந்திருவடைய யாக்கையைக்
கொடுத்தயா வறம்புகழ் கொள்வனேயெனி
னெடுத்தயாக் கையின்பயனிதனின் யாவதே."

என்று யாக்கை நிலையாமைகண்டு, தெளிந்து நல்லறிவு முதிர்ச்சியடைந்து, சிவலோகத்தைத் தியானஞ்செய்து, தன்னுடைய சொத்து எல்லாவற்றையும் பகவத்கைங்கர்யத்திற்கும், கச்சித் திருப்பதி முதல் இராமேசுவரம்வரையிலுமுள்ள, சைவ வைஷ்ணவஸ்தலங்களில் என்றும் அழிவில்லாமல் தர்ம கட்டளைகள் நடக்கவேண்டுமென்கிற நல்லமனதுடன் ஈசுவராப்பிதஞ்செய்து, 1794-ஆம் மார்ச்சு மீ

22௳ மரணசாசனம் எழுதிவைத்து, 24௳ கும்ப
கோணத்திலிருந்து கடைசியாகத், தன் கையினலே
யே நாராயணப்பிள்ளைக்குக் கடிதம் எழுதி அனுப்பி
ஞர். அந்தக் கடிதத்தில், முதலியார் தமக்கு நிர்
யாணகாலம் சமீபித்திருப்பதையும், பிறர் சொத்தில்
அணுவளவும் தப்பாமல் திருப்பிவிடவேண்டுமென்
கிற திடமான மனதுடன் கணக்கு, ரொக்கம் முத
லான விஷயங்களை வரையறைசெய்தும் தெரிவித்
தார். பிறகு தஞ்சாவூருக்கு வடமேற்கே கொஞ்ச
தூரத்தில் காவேரிக்கரையில், காசியிற்றுல்லியமாய்
சிவகணங்கள் கொண்டாடும் பஞ்சநத க்ஷேத்திரமெ
ன்னும் திருவையாற்றில், மானிடதேகத்தை ஒழித்து,
சாம்பவமூர்த்தியின் பாதாரவிந்தம் அடையவேண்டு
மென்னும் உட்கருத்துடன் போய்ச்சேர்ந்து, பிர
மாதீச௵ பங்குனி௴ 21௳ திங்கட்கிழமை அமா
வாசைதிதிக்குச் சரியான, இங்கிலீஷ் 1794௵
மார்ச்சு௴ 31௳ பரலோகப்பிராப்தியானர்."

"தோன்றிற் புகழொடு தோன்றுக; வஃதிலார்
தோன்றலிற் றோன்றுமை நன்று."

# ஆபத்துக்கிடமான அபவாதம்

## அல்லது

# கமலாம்பாள் சரித்திரம்.

## XIV.

அதற்குள்ளாக சுவாமி எழுந்தருளுவதற்குக் காலம்
சமீபித்துவிட்டபடியால் 'சரி, இங்கேதான் யாராவது
எடுத்துக்கொண்டுபோயிருப்பார்கள் வேறு எங்கே
போகப்போகிறன் நான் கோயிலுக்குப் போகி
றேன் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு எல்லாம்
எடுத்துவை' என்று கமலாம்பாளுக்கு உத்திரவு கொ
டுத்துவிட்டு முத்துஸ்வாமியய்யர் கோயிலுக்குப்போய்
விட்டார். அன்று ஆருத்திரா தரிசனமானபடியால்
தெருவெல்லாம் சித்திரக்கோலங்களால் நிரம்பியிருந்
தது. வீடுகளெல்லாம் மாவிலைத் தோரணங்களால்
அலங்கரிக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு ஸ்திரீயும்
தான்தான் ரதியென்று பாவனைபண்ணிக்கொண்டு
உல்லாச நடை நடந்தாள். புருஷர்களெல்லாம் ஸ்
நானம்செய்து பட்டுடுத்து விபூதி யணிந்து மன்
மதாகாரமாயிருந்தார்கள். ஆய்விட்டது, சுவாமி எழு
ந்தருளுகிற சமயம். மேளக்கார முத்துக்கருப்பன்
பம் பம் என்று கோஷம்செய்து தன்னிரு கன்னங்
களும் வீங்கத் தந்து அபசுரக்களஞ்சியத்தை வெகு
தாராளமாய்த் தெரு நிறைய வீசத்துவக்கினன்.
தவுல்காரச் சின்னண்ணன் அங்கு இருப்பவர்களு
டைய காதையும் மத்தளத்தின் தோலையும் ஒரேயடி
யாக சல்லடைக்கண் மயமாய்த் தொளைக்க ஆரம்பித்
தான். தாளக்காரச் செம்பகம் இவர்களிரண்டுபேரை
யும் லட்சியம் செய்யாது, இருக்கிறவர்கள் தேவையா
னல் ஈவு வைத்துச்கொள்ளட்டும் என்று உத்தேசம்
செய்து பத்து நிமிஷம் இடைவிடாமல் கதறக்கதற
அடிக்கிறதும் மறுபடி பத்து நிமிஷம் கையைக்கட்டிக்
கொண்டு சும்மா இருக்கிறதுமாய்க் காலம் கடத்தி
னன். இவர்கள் போதாதென்று தாசி பூரணசந்தி
ரோதயமும் கூடப்புறப்பட்டுவிட்டாள். அவள் அழகு
வெகு அற்புதம்; கறுப்பாயிருந்தாலும் சந்திரன் சந்
திரன்தானே. மேலும் அவள் நடக்கிறதே நாட்டிய
மாக இருக்கும். பட்டிக்காட்டு சுவாமிக்குரிய இவ்வித
பரிவாரத்துடன் ஏகாம்பரநாதர் உலாவுக்கு எழுந்தருளி
னர். செவ்வந்திப் பூமாலைகளால் சிங்காரிக்கப்பட்ட
விமானத்தின்மீது இரண்டு பக்கமும் இரண்டுபேர்
சாமரை வீச நாகசுரக்கோஷ்டி முன்னேசெல்ல பாகவ
தக்கோஷ்டி பின்னேவர மான் மழுவேந்திய கையும்
கங்கைதங்கிய சடையும் மதிவதிந்த மௌலியும்
கடுவமர்கண்டமும் உமையமர் உருவமும் நெற்றியிற்
றிகழ்ந்த வொற்றை நாட்டமும் எடுத்த பாதமுந் தடு
த்த செங்கையும் புள்ளியாடையும் ஒள்ளிதின் விள
ங்க; எளியார்க்கெளியனுயுள்ள சாக்ஷாத் கைலாசபதி
யே பிரத்தியக்ஷமாய்வந்து பாவத்தை வென்று மோ
க்ஷத்தைப்பெற்ற ஆத்மாவின் உண்மை நிலையையுணர்
த்தும் உருவகநர்த்தனத்தைப் புரிந்தாற்போற் றோ
ன்ற அந்தக்கரையில்லாக் காட்சியைக்கண்ட அவ்வூ
ரார் அனைவரும் ஆனந்தவாரியில் மூழ்கி மெய்மறந்து
புளகாங்கித்து ஆடிப்பாடி ஓடியுலாவி சம்போ சங்
கரா தயாநிதே என்று போற்றித் துதித்து ஆனந்தத்
தாண்டவம் செய்தார்கள். பாண்டவர் வனவாசகா
லத்து பகவான் கிருஷ்ணன் உண்ண தூர்வாசாதி
முனிவர்களெல்லாம் பசியாறியதுபோல் சிவபெருமா
னது ஆனந்தத்தையே தங்களது சொந்தமாய்ப் பாரா
ட்டிக் களித்தபக்தர் கணத்தின் நிர்மலக்குதூகலத்தை
முத்துஸ்வாமியய்யரும் கமலாம்பாளும் மெய்மறந்து
அனுபவித்தார்கள். ஆயினும் தங்களருகில் அந்த
சமயத்தில் குழந்தையைக்காணுததில் அவர்களுக்கு
உண்டான வருத்தத்துக்களவில்லை. தங்களகத்து நட
ராஜனுக்கு கோயில் நடராஜனைக்காட்டி அவனது
சிறிய அழகிய நிஷ்களங்கமான கண்களின் மூல
மாக அந்த திவ்விய காட்சியைக்கண்டு களிக்க
பாக்கியம் இல்லாமல் போனதைப் பற்றி அவர்க
ளுக்கு நிரம்ப வருத்தம். முத்துஸ்வாமியய்யர் சுவா



மியைப்பார்க்கிறார்; கமலாம்பாள் இடுப்பைப்பார்க்கி
றார்; குழந்தை லெட்சுமியைப்பார்க்கிறார். கமலாம்
பாள் கண்களில் நீர் ததும்புகிறது. முத்துஸ்வாமி
யய்யர் ஏறிட்டுப் பார்த்தார்: அவருக்கும் துக்கம்
வர வெளியில் ததும்பி வந்த கண்ணீரை உள்ளே
இழுத்துக்கொண்டார். குழந்தை லெட்சுமி சுவாமி
யைப்பார்க்க நிமிர்ந்தவுடன் அவளை ஆவலுடன் கவ
னித்துக்கொண்டிருந்த ஸ்ரீநிவாசனுடைய கண்கள்
அவளுடைய கண்களைச்சந்திக்கஇருவரும் பின்வாங்கி
விட்டார்கள். உடனே லெட்சுமி அம்மாளைப்பார்த்து
'அம்பியைக்காணுமே யம்மா' என்று சொல்லி நிமி
ரவே கமலாம்பாளுக்கு அடக்க முடியாமல் கண்ணீர்
பெருகிற்று. லெட்சுமியும் தாரைதாரையாய் நீர்
பெருக்கினள். சுவாமி கோயிலுக்குப்போனவுடனே
குழந்தையைப்பற்றி அங்கும் விசாரிக்கத்தலைப்பட்டா
ர்கள். வீட்டுக்கு வீடு ஆள்விட்டுத் தேடினர்கள். சிறு
குளத்தில் மந்தைக்கு சமீபத்தில் ஓரமாக சில வீடுகள்
உண்டு. அந்த வீடுகளுக்கெல்லாம் கடைசியாய் உள்ள
வீடு முத்துஸ்வாமியய்யருடைய தங்கை சீதாலட்சுமி
அம்மாள் வீடு. அந்த வீட்டுக்கு குழந்தை நடராஜனை யா
ரோ எடுத்துச்சென்றதாக சமாசாரம் வெளியாயிற்று.
அதைப்பற்றிப் பின்னும் விசாரணை செய்ததில் நடரா
ஜனை காலை 7 மணிக்குமுன் அனேகர் நான் பார்த்
தேன் நான் பார்த்தேன் என்று வந்தார்கள். அதுவு
மன்றி மேற்சொல்லிய வீட்டுத்திண்ணையில் சிலகுட்டி
கள் சேர்ந்து புளியம்விரை யாடிக்கொண்டிருந்ததாக
வும் அவ்விடத்தில் ஒரு குட்டி நடராஜனை எடுத்துப்
போயிருந்ததாகவும் தெரியவந்தது. முத்துஸ்வாமி
யய்யர் முதலானவர்கள் இவ்விதம் விசாரித்துக்கொண்
டிருக்கும்போதே சுப்பராய அய்யர் என்ற ஒருவர்
'ஐயோ என் பெண் மீனட்சியையும் காணுமே'
என்று அலறிக்கொண்டுவந்தார். சீதாலட்சுமி அம்
மாள் வீட்டுத் திண்ணையில் விளையாடிக்கொண்டிருந்த
பெண்களுடன் மீனட்சியும் இருந்ததாகத் தெரிந்தது.
நடராஜனையும் அவளையும் காணுததால், அவனை அவள்
தான் எடுத்துக்கொண்டு போயிருக்கவேண்டுமென்று
அங்குள்ளவர்கள் ஊஹித்தார்கள். ஆனல் அவள்
எங்கே எடுத்துக்கொண்டு போயிருக்கக்கூடுமென்று
தெரியவில்லை. அவ்வூர் முழுவதும் குடித்தெருவு கடை
த்தெருவு அக்கிரஹாரம் ஒன்று பாக்கிவிடாமல் எங்கும்
தேடிப்பார்த்தார்கள். எங்கும் காணுமையால் நாலா
பக்கமும் ஆள்விட்டு ஊருக்கு வெளியே பார்த்துவரு
ம்படி அனுப்பினர்கள். ஊருக்கு மேற்கே போனவர்
கள் இரண்டு மைல் போனவுடன் ஒரு சிறு பெண்
அழுத ஓசைகேட்டது. உடனே அவர்கள் அந்த சப்
தம்வந்த இடத்தை நோக்கிச் செல்கையில் ஒருபுதரின்
மத்தியில் கால் கைகளில் எல்லாம் முட்காயம்பட்டு
'ஐயையோ அம்மா அப்பா' என்றழுதுகொண்டிருந்த
ஒரு பெண் குழந்தையைக் கண்டார்கள். அவள்தான்
மீனட்சி. அவர்களைக் கண்டவுடன் அவள் ஓடிவந்து
அவர்களைக் கட்டிக்கொண்டு அழுதாள். கேட்ட
கேள்விக்கொன்றும் பதில் சொல்லக்கூடாமல் விம்மி
விம்மி யழுத அவளை அவர்கள் எடுத்துக்கொண்டு
சமாதானம்பண்ணி தெளியச்செய்து ஊருக்குக்கொ
ண்டுவந்தார்கள். அவள் சோர்ந்து அவர்கள் கையி
லேயே நித்திரைபோய்விட்டாள். வீட்டுக்கு வந்த
வுடன் அவளுக்குக் குளுமோர் காய்ச்சிக்கொடுக்க
அதை வாங்கி சாப்பிட்டுவிட்டு அவள் அப்படியே நித்
திரைபோய்விட்டாள். அவள் எப்பொழுது எழுந்
திருக்கப்போகிறள் என்று முத்துஸ்வாமியய்யர் முத
லிய எல்லோரும் ஆவலுடன் காத்திருந்தார்கள். பகல்
இரண்டு மணிக்கு அவள் சோர்வு தெளிந்து எழுந்
திருந்தவுடன் 'குழந்தை நடராஜனை நீ கண்டாயா
அம்மா' என்று அவளைக்கேட்க அவள் சீதாலட்சுமி
அம்மாளுடைய கிரஹத்தில் நடராஜனை எடுத்து விளை
யாடிக்கொண்டிருந்ததாகவும், யாரோ ஒரு சூத்திரச்சி
அவளை இங்கே வா என்று ஆசைகாட்டி யழைத்த
தாகவும், அவள் நடராஜனையும் எடுத்துக்கொண்டு
கூடவே போனதாகவும், இப்படி நெடுந்தூரம் மதி
மயங்கி கூடவேபோக ஒருகாட்டுக்குப் பின்னல்
யாரோ சில சூத்திரச்சிகள் பயங்கரமான கோரரூபத்
துடன் அவளிடம்வந்து நடராஜனைப் பிடுங்கிக்
குதிரையின்மேல் வைத்துக்கொண்டு ஓடியேபோய்
விட்டதாகவும், தன்னைக்கூட்டிப்போன சூத்திரச்
சியும் அவர்களுடனேயே ஓடிவிட்டதாகவும் தேம்
பித்தேம்பி யழுதுகொண்டு சொன்னள். பிறகு
அவள் வழி தெரியாமல் தவித்து நெஞ்சும் மாரும்
படபட என்று அடிக்க பயந்து அலறிக்கொண்டு
கொஞ்சதூரம் ஓடுவதும் பிறகு பயமிஞ்சி கண்ணை
மூடிக்கொண்டு அழுதுகொண்டு நிற்பதுமாகக் கடை
சியில் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சமாசாரம்
வரைசொல்லி முடிக்க அதைக்கேட்டவர்கள் எல்லா
ரும் அவளை 'இந்தமட்டிலேயாவது வந்து சேர்ந்தாயே
அம்மா' என்று தட்டிக்கொடுத்துத் தேற்றினர்கள்.
பிறகு திருடர்கள் குழந்தையைத் தூக்கிக்கொண்டு
எந்தத்திசை நோக்கிப்போனர்கள் என்று விசாரித்
துக்கொண்டு எல்லாருமாக குழந்தைப்பறி நடந்த
இடத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். சப்மாஜிஸ்
திரேட்டு வைத்தியநாதய்யரும் அவர்களுடன் கூடச்
சென்றார். எல்லாருமாக அந்த இடத்திற்குப்போய்ப்
பார்க்கும்பொழுது அங்கே இரண்டு மூன்று குதிரை
கள் காலடியும் நாலு வித்தியாசமான மனிதர்களு

டைய காலடியும் தென்பட்டன. வைத்தியநாதய்யர்
அந்தமனிதர்களுடைய காலடிகளை செவ்வையாய்
அளக்கச்செய்து குறித்துக்கொண்டார். பிறகு அந்த
அடிகளைத் தொடர்ந்து செல்ல அவை ஒருகாட்டுக்
காளிகோயிலில் கொண்டுவிட்டன. அந்த பத்ரகாளி
யம்மன் கோயில் இரண்டு மலைகளுக்கு மத்தியில்
இருந்தது. அந்த அம்மன் சந்நிதியில் பத்துப் பதி
னைந்து மரங்கள் நெருங்கி வளர்ந்திருந்தன. அவற்
றின் மத்தியில் குதிரைக்குளம்பு அடையாளங்கள்
போயிருந்தமையால் எல்லாரும் அங்கே போனார்கள்.
போகவே ஒருகோரமான தோற்றம் அவர்கள் கண்
ணுக்குத் தென்பட்டது. அதென்னவெனில் மூன்று
கற்கள்வைத்து ஒருஅடுப்பும் அதனருகில் ஒருகுழந்தை
யின் எலும்புகளும் காணப்பட்டன. தரையில் ரத்தம்
சிந்தியிருந்தது, அதைக்கண்டவுடன் முத்துஸ்வாமி
யய்யர் ஐயையோ, 'நடராஜன்,' 'கொலை, பாவி'
யென்று கூக்குரலிட்டார். அங்கே கிடந்த எலும்பு
கள் குழந்தை நடராஜனுடைய எலும்புகளாயிருக்க
லாமென்று அவர்களுக்குப்பட்டது. அந்த அடுப்
பில் சமீபத்தில் நெருப்பு மூட்டப்பட்டிருந்ததாகவும்
நினைக்க இடமிருந்தது. உடனே அந்தக்குரூரமான
துர்க்காதேவிக்கு நரபலி கொடுப்பதற்காக குழந்தை
யைக் கொன்றிருப்பதாக எல்லாரும் ஊஹித்தார்கள்.
குழந்தையை எடுத்துப்போனவர்கள் கள்ளர்களா
யிருந்திருக்கும் பட்சத்தில் மீனாட்சி கழுத்திலிருந்த
நகைகளை அவர்கள் அபகரித்திருப்பார்கள். ஒரு
வேளை பேயாண்டித்தேவன் சிறைச்சாலையிலிருந்து
வெளிப்பட்டு குழந்தையைத் திருடிக்கொண்டுபோ
யிருக்கலாமென்றாலோ அவன் குழந்தையைக்கொன்
று பலியிட்டிருக்கமாட்டான். நரபலி கொடுப்பது
அவர்களுக்குள் வழக்கமில்லை. வேறு யார் இந்தக்
கொரோமான அக்கிரமத்தைச் செய்திருப்பார்கள்
என்று தெரியவில்லை. முத்துஸ்வாமியய்யர் மூர்ச்சை
போட்டு விழுந்துவிட்டார். அவரைத்தூக்கி வண்டி
யில் போட்டுக்கொண்டு எல்லாருமாய் ஊருக்குத்
திரும்பினார்கள். கமலாம்பாள் முதலானவர்கள் சமைத்
ததை மூடிவைத்துவிட்டு குழந்தையைத் தேடிப்போ
னவர்களுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டு
வெகு துக்ககரமாய் உட்கார்ந்திருந்தார்கள். பத்திர
காளிகோயிலில் நடந்த விபரீத விர்த்தாந்தத்தைக்
கேட்டகாலத்தில் அவர்கள் அடைந்த துயரத்தை
என்னென்று சொல்லுவேன். கமலாம்பாள் அலறி
யடித்துக்கொண்டு மூர்ச்சித்து விழுந்தாள். லெட்
சுமி கோவென்று கதறியழுதாள். முத்துஸ்வாமி
யய்யர் புலம்புவதும் அழுவதுமாய் இருந்தார்.
வைத்தியநாதய்யரும் அவர்களுடன் சிறிதுநேரம்
தூக்கித்துப் பிறகு 'அங்கே கிடக்கும் எலும்புகள் உங்
களுடைய குழந்தையினுடையதா யிருக்கவேண்டு
மென்பது என்ன. உங்களுக்கு அவ்வளவு கொடிய
விரோதி—யாரிருக்கிறார்கள். அப்படியே விரோதிகள்
இருந்தாலும்நரபலியிடத்தக்கவர்கள்இங்கு—யாரிருக்
கிறார்கள்' என்று பலவிதமாக ஆட்சேபனைகள்செய்து
அவர்களைத் தேற்றினார். 'பலியிடப்பட்ட குழந்தை
வேறாயிருந்தால் நடராஜனைத் திருடிப்போனவர்க
ளுடைய குதிரைகள் அந்தக்காளி யம்மன் கோயிலுக்
குப்போயிருக்கக் காரணமென்ன' என்று முத்துஸ்
வாமியய்யர் கேட்க வைத்தியநாதய்யர் ஒருவேளை
அந்தத் திருடர்கள் நம்முடைய குழந்தை கொல்லப்
பட்டதாக நாம் எண்ணும்படி வேறு எந்தக் குழந்தை
யினுடைய எலும்புகளையாவது அங்கே கொண்டுவந்து
போட்டுப்போயிருக்கலாம் என்றார். முத்துஸ்வாமி
யய்யர், 'ஏது எனக்குத்தோன்றவில்லை' என்றுசொல்
லவே வைத்தியநாதய்யர் ஆருடக்காரனை வரவழைத்
துக் கேட்போம் என்றுசொல்லி அவ்வூர் வள்ளுவ
னுக்குச்சொல்லியனுப்பினார். அவன் உடுக்கையெடு
த்துக்கொண்டு விரைவில் ஓடிவந்து தூபதீப நைவேத்
தியங்கள் எல்லாம்செய்து உடுக்கையடித்து அவ்வூரி
லிருக்கும் ஒரு மந்திரவாதிதான் நரபலிசெய்தது
என்று முடித்தான். உடனே அந்த மந்திரவாதிக்கு
ஆள்விட்டார்கள். அவர் அவ்வூரைவிட்டு அன்று
காலமேதான் போய்விட்டார் என்று சங்கதி தெரிய
வந்தது. உடனே அவர்தான் அந்தக்கொலைக்குக் கர்
த்தா வென்று அங்குள்ளவர்கள் அனுமானித்தார்கள்.
உண்மையில் அங்கிருந்த வள்ளுவனுக்கும் அந்த மந்
திரவாதிக்கும் விரோதம். அந்த மந்திரவாதியினு
டைய தொழிலைக் கெடுப்பதற்கு இதுதான் நல்ல
சமயமென்று அந்த வள்ளுவன் அவன்மேலே குற்
றத்தைப்போட்டான்.

(இன்னும் வரும்.)

பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர், பி. ஏ.

# ஒருதாத்தா செய்த தீர்மானம்
அல்லது
# தங்கம்மாள் தலைவிதி.

## VIII.

"இதென்ன கஷ்ட காலம். கையினால் எவ்வளவு
நாள் பொங்கிச் சாப்பிடுகிறது. அடுப்பூதி இருக்கிற
கண்ணும் அவிந்துபோகிறது. சமூதை ஜன்மமெடு
த்த ஸ்திரீகளுக்கே சமையல்வேலை தகும். நமக்கெல்



லாம் சரிப்படாது; எனக்கு மேலும் சக்தியில்லை.
ஆஸ்தி முழுவதும் செலவு செய்தாவது கலியாணஞ்
செய்து போடவேண்டியதுதான். ஆனிமாசமோ
பிறந்துவிட்டது. அந்த அயோக்கியன் சிவராம
சாஸ்திரிக்கு நான் பலதடவை சொல்லியனுப்பிவித்
தும் அவன் எட்டிப்பார்க்கவில்லை. வைதீகர்கள்
காசு அகப்படுவதாயிருந்தால், காக்கைகளைப்போல
வந்து கூடுகிறார்கள். மூத்தாள் இருக்கும்பொழுது
எவனாவது எனக்குத் தெரியாமல் அவளிடத்தில்,
பிச்சை முட்டி என்று பிடுங்கித்தின்ன வந்துகொண்
டிருப்பான். அவள் இறந்த பிறகு ஒரு பயல்களையும்
காணோம். அப்புக்குட்டியும் வருகிறதை நிறுத்திப்
போட்டான். என்பேரில் என்னகோபமோ தெரிய
வில்லை. பணம்கொடுத்து சமயத்துக்கு உதவிசெய்ய
வில்லையென்றோ? இல்லாவிட்டால் அவன் புத்தி
யைக் கேட்காமல் கலியாணஞ் செய்யப்போகிறே
னென்றோ. கண்ட பேர்வழிகளிடத்திலெல்லாம்
சொல்லியனுப்பிவிக்க இஷ்டமில்லை. அந்த 'ஹல்கா'
சிவராமனைவிட்டாலும் வேறுகதியில்லை. கோவில்,
குளங்களுக்குப்போனால் அவனைப்பார்க்கலாம். இடுப்
ப் பிடிப்பு ஓர்பக்கத்தில் உபத்திரவம். எழுந்திரு
ந்து உட்காரக் கஷ்டமாயிருக்கிறது. இன்றைய
தினம் இராத்திரி பிராணனைக் கையில்பிடித்துக்
காண்டாவது அவன் வீட்டுக்குப்போய்க் காண
வேண்டியதுதான். வேறே மார்க்கத்தைக்காணோம்"
—என்று தீர்மானித்து, சூரியாஸ்தமனமானவுடன்,
விளக்கேற்றி, நீரில்போட்டிருந்த அன்னத்தை 'பிர
மராக்ஷஸை'ப்போல் தனியே புசித்துவிட்டு, கத
வைப்பூட்டிக்கொண்டு சாஸ்திரியார் வீட்டை நோக்
கித் தாத்தா புறப்பட்டார்.

ஆகாயமானது, விசுவரூபியாகி சர்வலோகங்களி
லும் வியாபித்து ரட்சிக்கும் மகாவிஷ்ணுவினுடைய
திருமேனிபோலவும்; நட்சத்திரங்கள், அத்திரு
மேனியில் பிரகாசிக்கும் வச்சிர வைடூரியங்களைப்
போலவும், சிற்றின்பத்தில் மூழ்கி விஷயம் தெரியா
ல் வாயினாற் பிதற்றி வாதிக்கும் வம்பர்கள் சபை
ல், கற்றடங்கி, மௌனமாய் தூரத்தினின்று கவ
த்திருக்கும் சாதுக்கள்போலவும் விளங்கின. சாமி
ய்யர் அண்ணாந்துபார்த்தார்; ஆனால் ஆகாயத்தின்
கை அனுபவிப்பதற்கன்று; நாழிகை என்னவிரு
மென்று தெரிந்துகொள்ளவேண்டி; அதுவும்
யவில்லை. கண்மங்கலடைந் திருந்தபடியால்
நட்சத்திரம் உச்சமென்று தெளிவாய்த்தெரிய
லை. "நடக்கவோ சக்தியில்லை, கண்ணோ தெரிய
லை, இந்த அபரகாலத்தில் கலியாணம் செய்வது
மகாபாவம்" என்ற ஞானம், பிராமணவடிவங்கொ
ண்ட இந்த பாதகனுக்கு மனதில் உதிக்கவில்லை.
கைத்தீவட்டி கொண்டு இருட்டுவழி நடப்பவனுக்கு,
எட்டிவருகிற மனுஷன் தெரியுமா; வெகுதூரத்தில்
ஆகாயத்தில் ஜனிக்கும் நட்சத்திரங்கள்தான் தெரியு
மா. காமக்குரோதாதிகளைக் கைக்கொண்டு பாபமார்க்
கத்தில் நடக்கும் இந்த சாமி அய்யருக்கு, முன்னே
நிற்கின்ற யமனும் புலப்படவில்லை, மறுலோகத்தில்
புண்ணியாத்மாக்கள் அனுபவிக்கும் மோட்ச சுகங்க
ளும் தோன்றவில்லை. வெறுங்கண்ணுக்குத் தெரி
யாமல், அனேக நட்சத்திரங்கள் ஆகாயத்தில் இருப்ப
தும், ஒவ்வொரு நட்சத்திரமும் ஓர் சூரியனாகி, நவக்
கிரகங்கள் சூரியனைச்சுற்றுவதுபோல, அவைகளையும்
கிரகங்கள் சுற்றுகிறதும், மகா தூரத்தில் இருப்பதி
னால் அவைகள் சிறிதாய்த்தோன்றுவதும், உரக்கத்
தை விட்டு, தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு
ஆகாயத்தைச்சோதிக்கும் வானசாஸ்திரியல்லவோ
அறிவான். குடித்து மயங்கிக் குப்பைத்தொட்டியின்
பக்கத்திற் புரளுங் குடியனறிவானா. பிரமசிருஷ்டி
யின் சிறப்பும், சிருஷ்டியில் நிறைந்திருக்கும் ஆத்ம
கோடிகளின் சுவரூபமும், மனதுக்கெட்டாத நித்தி
யானந்த நிலைமையும், ஞான திருஷ்டியாகிய கண்ணாடி
யைக் கொண்டு பார்ப்பவர்களுக்கல்லவோ புலப்படும்.
சிற்றின்ப மயக்கத்தில் உழலும் சாமி அய்யரின் உள்
ளத்து எவ்வாறு புகும்.

தாத்தா தன் காரியமே நினைவாக, தன்னை ஒரு
வரும் பார்க்காதபடி முட்டாக்குப் போட்டுக்கொ
ண்டு, மெல்ல மெல்ல ஏகி, சாஸ்திரியார் வீட்
டின் வாயில் படிக்கட்டைத் தடவிக்கடந்து நிலை
யண்டை வந்தார். கதவு மூடப்பட்டிருந்தது. கூப்
பிட்டால் அக்கம்பக்கம் தெரிந்துவிடுமென்று யோ
ஜித்து, யாராகிலும் கதவைத்திறந்து வெளியேவந்
தால் கேட்போமென்று திண்ணையில் உட்கார்ந்தார்.
ஆனால் இருப்புக்கொள்ளவில்லை. 'வீட்டினுள் எல்
லாருந் தூங்கிவிட்டார்களோ, விழித்திருக்கிறார்க
ளோ, விழித்திருந்தால் பேச்சுக்குரல் கேட்குமே'
என்று எழுந்து பூட்டின் வாயில் காதை வைத்து
கவனித்துக்கேட்டார். குழந்தையைத் தொட்டிலி
லிட்டுத் தாலாட்டும் குரல்கேட்டது. "நல்ல வேளை,
தெய்வாதீனம்" என்று, மெதுவாய்க்கதவைத் தட்டி
னார். சிவராம சாஸ்திரியார் மனைவி சானகி
யம்மாள் கதவுதட்டுகிற சப்தங்கேட்டு, தொட்டிலாட்
டத்தையும், பாட்டையும் நிறுத்திக் கவனித்தாள்.
தட்டின சப்தம் மறுபடியும் கேட்கவில்லை. பக்கத்து
வீட்டில் கதவை இடித்தார்களோ, இல்லாவிடின்

மன்ப்பேயோ என்ற, மறுபடியும் தொட்டிலாட்டினாள். சானகி அம்மாளுக்கு இரட்டைநாடி சரீரம், சந்தோஷத்தினால் ஏகாண்டமாய்ப் பெருத்துத்தடித்து, கட்டைக் குட்டையாய் இருந்தாள். வைதிகன் மனைவியாய் இருந்தாலும், நல்ல ஓர் ஜோடிப்பு நகை பூண்டிருந்தாள். காதில் நல்ல நீரோட்டமுள்ள சிவப்பு ஓலை, முருகு, வாளி, கழுத்தில் 'டிகாப்'பதக்கத்துடன் கூடிய சரடு, காசுமாலை, இரட்டைமணி, ஆறுகொத்துச் சரடு, கையில் கெட்டிக்காப்பு, தோடா, முதலியவும் ஐந்து வராகனுக்குக் குறையாத சீலையும் தரித்திருந்தாள். அவள் பிறந்தவீடு பணக்காரவீடு. நாலுபிள்ளைகளுக்கு நடுவில் இவள் ஒரே பெண். நல்ல வேதவித்தான குலத்தில் பெண்ணைக் கொடுத்தால், கோடி "யஞ்ஞ" பலனுண்டென்று சாஸ்திரமிருப்பதினால், இவள் தகப்பனார் இவளை வைதீகனுக்கு ஸ்ரீதனத்துடன் கன்னிகாதானம் செய்துகொடுத்தார். பிறந்த வீட்டிலிருந்து வேண்டியபடி சாமான்கள் வருஷாந்தரச் சாப்பாட்டுக்கு வந்துவிடும். புருஷனும் வியாபகமான 'உபாத்தியாயமுடையவரானபடியினால்,' வேஷ்டி, புடைவை, பாத்திரம், அரிசி, தேங்காய், பாக்கு, வெற்றிலை, பழம், கையாள்கள் கட்டும் கப்பம், சுபாசுப சம்பாவனை இவைகள், சர்க்கார் கிஸ்தியைவிட அதிக சுலபமாய் வசூலாகிச் சேர்ந்துகொண்டுவந்தன. மேலும் வேதிக்காமலே மண்ணையும் விற்றுப் பொன்னாக்கும் சக்தி வைதீகர்கள் எல்லோருக்குமுண்டு. விருந்திட்டு வீண்போனவர்களையும், கொடுத்துக் குடி யழிந்தவர்களையும், தினமும் பார்ப்பதினால் அந்த அக்கிரமங்களுக்கு ஏற்படுகிறதில்லை. இவர்கள் சம்பாத்தியமெல்லாம் தர்ம வழியாய்க் கிடைக்கிறபடியினாலே, பணம் ஒன்றுக்கு மூன்றாய்க் குட்டிபோடுகிறது. பக்தர்களுடைய குடும்ப பாரத்தை பகவானே வகிக்கிறார் என்று 'கீதை' வாக்கியமிருப்பதினாலே, அந்த அம்மாளுக்கு செல்வப்பெருக்கம், மகவுப்பெருக்கம், ஆனந்தப்பெருக்கம் எல்லாமுண்டாயிருந்தது. உல்லாசமாய்ப் பாடிக்கொண்டு தொட்டிலாட்டும்பொழுது, மறுபடியும் கதவைத்தட்டும் சப்தங்கேட்டது. குழந்தையும் தூங்கிவிட்டபடியால் தொட்டிலை மெள்ள விட்டு, கதவண்டை வந்து, "யாரங்கே" என்று கேட்டாள்.

சாமி. அ.—"நான் தான், கதவைத்திறவுங்கள்."

சானு.—'நான் தான்' என்றால் எனக்குத் தெரியவில்லை. பேரைச்சொல்லுமே.

சாமி. அ.—சிவராமசாஸ்திரியார் இருக்கிறாரா.

சானு.—என்னத்துக்குக் கேட்கிறீர்கள்.

சாமி. அ.—வேணும், அகத்தியம் ஓர்காரியமாக அவரிடத்தில் வந்தேன்.

சானு.—படுத்துக்கொண்டுவிட்டாப்போலிருக்கிறது.

சாமி. அ.—எழுப்பியாவது நான் வந்திருக்கிறேனென்று சொல்லுங்கள்.

சானு.—மத்தியானமெல்லாம் வெயிலில் அலைந்து தலையை வலிக்கிறதென்று அயர்ந்து தூங்கு பொழுது எப்படி எழுப்புகிறது. காரியத்தை சொன்னால் காலமே சொல்லுகிறேன்.

சாமி. அ.—வேறொருவரிடத்தில் சொல்லச் சரிப்படாது, அவரிடத்திலேதான் சொல்லவேணும்.

சானகியம்மாள் உள்ளேவந்து, படுக்கையின் பக்கத்தில் நின்று, தொட்டு அசக்கி 'யாரோ இரண்டு நாழிகையாகக் கதவை இடிக்கிறார்; உங்களைப் பார்க்க வேணுமாம்: எழுந்திருங்கள், சற்றே எழுந்திருங்கள்' என்று தன் பர்த்தாவை எழுப்பினாள்.

சிவ. சா.—"எவண்டி, இத்தனை நாழிகைக்குமேல் உபத்திரவப்படுத்துகிறான். ஊரிலில்லை என்று சொல்லிப்போடு."

சானு.—இருக்கிறதாகச் சொல்லிப்போட்டேனே.

சிவ. சா.—காலமே வரச்சொல்லு.

சானு.—சொன்னேன், உங்களுடனே பேசிவிட்டு போகவேணுமென்று மறியல் கிடக்கிறார்.

சிவ. சா.—"யாரடி அவன், சண்டி."

சானு.—பேரைக்கேட்டேன். "நான் தான்" என்று சொல்லுகிறாரே ஒழிய, பேர்சொல்லமாட்டாராம்.

சிவ. சா.—இதென்ன இழவாயிருக்கிறது. விளக்கைக்கொண்டுபோய்க் கதவைத்திறந்து உள்ளே வரச்சொல்லு, நான் எழுந்திருந்து போகமாட்டேன்.

சானகி அம்மாள் கதவைத்திறந்து பார்த்து யாரோ விருத்தரென்று கண்டு, அச்சந்தெளிந்து "மெள்ள வாருங்கள்" என்று மொழிந்து, வெளிச்சங்காட்டி, தாழ்வாரத்தில் படுத்திருந்த கணவனிடத்தில் கொண்டுவந்துவிட்டு, தீபத்தை அவர்கள் பக்கத்தில் வைத்து சற்றுத் தயங்கினாள்.

சிவராம சாஸ்திரி சாமி அய்யரென்று அறிந்தவுடன், வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்திருந்து 'யாரடி அங்கே, ரத்தின கம்பளியைக்கொண்டுவா: குத்துவிளக்கை ஏற்றிவை" என்றார். "சாதாரண மனுஷியனென்று நினைத்துப் பேசிவிட்டேனே, யாரோ பெரிய மனுஷியர் போலிருக்கிறதே; இதென்ன வெட்கக்கேடு" என்று சானகி அம்மாள் வருத்தமுற்று, விளக்கையும் ரத்ன கம்பளியையும் கொண்டுவரப் போனாள்.

சிவ. சா.—என்னவிசேஷம்; தாங்கள் பெரியமனுஷாள், ஒருநாளும் ஓரிடத்துக்கும் போகாதவர்கள் இராத்திரியிலே இவ்வளவு நாழிகைக்கு மேலே, தனியே, அடியேன் ஏழை வைதீகன் வீட்டுக்கு வந்தது?

சாமி. அ.—உம்மைப் பார்க்கத்தான் வந்தேன்.

சிவ. சா.—அதற்குத் தாங்கள் வருவானேன். யாரிடத்திலாகிலும் சொல்லி யனுப்பிவிக்கக்கூடாதா. நாயின் கழுத்தில் ஓலை எழுதிக் கட்டிவிட்டாலும் போதுமே; வந்துவிடுவேனே.

சாமி. அ.—அப்புக்குட்டியினிடத்தில் சொல்லியனுப்பினேன். உம்மிடத்தில் சொன்னானோ இல்லையோ.

சா.—மொத்தமாய் தாங்கள் விஜாரித்ததாகச் சொன்னான். வரவேணுமென்று தினமும் நினைத்துக்கொண்டிருக்கிறேன்: தரிசனம் பண்ண சரிப்படவில்லை. கலியாணநாள்: இரண்டுகாசு வரும்படியானகாலம். ஓய்வில்லாத தொந்திரவாயிருக்கிறது. அகத்தியமான காரியமென்று தெரிந்திருந்தால், எந்தவேலையிருந்தாலும், எவ்வளவு வரும்படி போனாலும், விட்டுவிட்டு வந்திருப்பேன்.

அ.—நாழிகையாகிறது, உமக்கும் தூக்கங் கெடுகிறது: ரகஸ்யமாய் ஓர் ஆலோசனை கேட்கவந்தேன். அந்தக்காரியம் உம்மாலே தான் முடியும். உம்மைத் தான் நம்பியிருக்கிறேன்.

சா.—என்னாலே ஆனதை சித்தமாய்ச் செய்கிறேன்; தாங்கள் வேறு, நான் வேறு என்ற எண்ணம் எனக்குக்கிடையாது.

அ.—இன்னம் யாராகிலும் அகத்தில் இருக்கிறார்களோ.

சா.—ஒருத்தருமில்லை, சமுசாரங்கூட உள்ளே போய்விட்டாள்.

அ.—சரி; என் யோகக்ஷேமசமாசாரம், சமீபத்தில் எனக்கு நேரிட்ட கஷ்டம் எல்லாம் உமக்குத்தெரியுமே.

சிவ. சா.—நான் உங்காத்துக்கு வந்து இரண்டு வருஷமாய்விட்டது. சமீபத்தில் எனக்கு ஒன்றுந் தெரியமாட்டாது. நான் எங்கே வம்புக்குப் போகிறேன். என்னை யார் கூப்பிடுகிறார்கள்.

சா. அ.—எனக்கு சமுசாரம் தப்பி இன்றைக்கு அறுபது நாளாகிவிட்டது. வீட்டில் ஒருத்தி இல்லாமல் நான் சோற்றுக்குப்படுகிற துன்பம் கணக்கு வழக்கில்லை. யாரையாகிலும் உதவியாகக்கொண்டு காலந் தள்ள நாலாவிதத்திலும் யோஜித்துப் பார்த்தேன். ஒன்றும் எனக்கு சரிப்படவில்லை. கலியாணம் செய்துகொண்டால் தான் பிழைப்பேன்.

சிவ. சா.—விவாகம் செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறீர்களே, காலஸ்திதி, தேகஸ்திதி, மனோதைரியம், எல்லாவற்றையும் கொண்டு யோஜித்தீர்களா.

சா. அ.—தேகஸ்திதியும், காலஸ்திதியும் எப்போதும் போலத்தான் இருக்கு. தைரியத்துக்கு ஒன்றுங் குறைவில்லை.

சிவ. சா.—இரண்டுபேர்கள் வேண்டிய சிநேகிதர்கள்; தம்பி, குமாரன் இவர்களுடன் கலந்து ஆலோசித்தீர்களா.

சா. அ.—என்வருத்தமறிந்த சிநேகிதனேது. கேட்டால் வேண்டாமென்றுதான் சொல்லுவார்கள். பிள்ளையையும், தம்பியையும் கேட்கவேண்டியதில்லை. ஆஸ்தி செலவாகி அழிந்துபோய் விடுமென்று சம்மதிக்கவே மாட்டார்கள். ஒருத்தருக்கும் தெரியாமல் நடத்திப்போடவேண்டும்.

சிவ. சா.—நான் ஏதோ காசுக்கு ஆசைப்பட்டுக்கொண்டு தங்களைத் தூண்டிவிட்டு கலியாணஞ் செய்துக்கொள்ளச் சொன்னதாக ஊரில் பழி சொல்லுவார்கள். எனக்கு விவாகத்தில் ஏற்பட இஷ்டமில்லை.

சா. அ.—எனக்கு சுயபுத்தியில்லையா. எப்போவாகிலும் யாரையாகிலும் கேட்டு ஒன்று முன்பின் செய்ததுண்டா. பைத்தியக்காரனைத்தவிர மற்றைப்பேர்கள் உம்மேல் பழி சொல்லமாட்டார்கள்.

சிவ. சா.—அதற்குக்கூட நான் பயப்படவில்லை. இஷ்டப்பட்டவன் வேண்டியதைச் சொல்லட்டும்.

கையில் நாலாட்களிருக்கிறார்கள். எவனையாகிலும் முன்னுக்கு வைத்துக்கொண்டு, பின்னுவிருந்து காரியத்தை நடத்தச் சக்தியுண்டு. ஆனால் வேறுகாரணம் ஒன்றிருக்கிறது. அதைத் தங்களிடத்தில் நிரூபில் சொல்ல சங்கோசமாயிருக்கிறது.

சா. அ.—சொல்லும், பாதகமில்லை.

சிவ. சா.—நான் வெகுநாளாய் உங்கள் மனுஷனாய் உங்களை யடுத்திருந்தேன். என்னைக் கைவிட்டுவிட்டீர்கள். அதற்குக் காரணம் பராபரியாய்க் காதில்பட்டது. தங்களுடைய முதல் சமுசாரம் மகா பதிவிருதை, தர்மசீலை, நெருப்புத்துண்டம்; அந்த அம்மாள் 'பெய் என்றால் மழை பெய்யும்' அவளைக்கூட வீண்செலவு செய்துபோடுகிறாளென்றும், அடங்கியிருக்கவில்லை என்றும் ஹிம்சை செய்தீர்கள். தங்கள் கடிசல்தனத்திற்கு முதலாவது, கலியாணமாவதே சிரமம். அப்படி தப்பித்தவறி ஆனாலும், பெண்ணையும் சுகமாக வைக்கமாட்டீர்கள், தாங்களும் சுகப்படமாட்டீர்கள்.

சா. அ.—பழைய கட்டெல்லாம் என் அவிழ்க்கிறீர். போனது போகட்டும். கடிசல்தனம் பண்ணிக் காசுசேர்த்து இந்த கதிக்கு வந்தேனே. இனிமேல் காசுலட்சியம் செய்கிறதில்லை. எனக்குபயோகமில்லாத பணம் என்னத்திற்கிப்போ.

சிவ. சா.—அவ்வளவு தூரத்திற்கு மனதைத் திடப்படுத்திக்கொண்டுவிட்டீர்களோ? இல்லை, வேடிக்கை பண்ணுகிறீர்களோ?

சாமி. அ.—வயிறெரியும் சமயத்தில், எனக்கு வேடிக்கை என்னவந்தது.

சிவ. சா.—கலியாணத்துக்கு எவ்வளவு திட்டம் போட்டிருக்கிறீர்கள்.

சாமி. அ.—ரூபாய் எண்ணாயிரம் வரையில் போக சித்தமாக விருக்கிறேன்.

சிவ. சா.—அதற்குள்ளேயே முடித்துக்கொடுத்தால் எனக்கு என்ன பிரயோஜனம் செய்வீர்கள்.

சாமி. அ.—ரூபாய் ஐந்நூறு தருகிறேன்.

சிவ. சா.—பேச்சு உறுதிதானே.

சாமி. அ.—'சத்————த,' நிச்சயம்.

சிவ. சா.—கலியாணம் ஆய்விட்டது என்றே நினைத்துக்கொள்ளுங்கள். இந்த வார்த்தைகளெல்லாம் நமக்குள்ளேயே இருக்கட்டும்.

சாமி. அ.—நான்போய் வருகிறேன். நாளைக்குத் தங்களைப் பார்க்கலாமல்லவா.

சிவ. சா.—அடியே, தாம்பூலங் கொண்டுவா.

சா. அ.—தாம்பூலம் மெல்லப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

சிவ. சா.—தயவு இருக்கவேணும். வெளிச்சம் வந்திருக்கிறதோ. இல்லாவிட்டால் நான் வீடு வரையிலும் ராந்தல் கொண்டுவரட்டுமோ.

சா. அ.—அதெல்லாம் வேண்டாம், தடிக்கொம்பு ஒன்று மாத்திரம் கொடுத்தால் போதும். வழியில் நாய் பயமில்லாமலிருக்கும். போய்வருகிறேன்.——

"வயிற்றை ஒடுக்கி, ஊரைவஞ்சித்துச் சேர்த்த பணத்துக்குச் சனியன் பிடித்தது. இந்தப்பழிகாரன் கையில் அகப்பட்டுக்கொண்டேன். மனதில் காரம் நிரம்ப இருக்கிறது; அதை எல்லாம் வைத்துக்கொண்டு பணத்தைக் கறந்த விடுவான். போனது போகட்டும், கலியாணம் எப்படியாவது ஆனால் பேதும்" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு சாமி அய்யர் திரும்பி வீடுபோய்ச் சேர்ந்தார்.

(இன்னும் வரும்.)

ஆர். சக்கிரவர்த்தி அய்யங்கார், பி. ஏ.

## மனது என்றால் என்ன?

மனிததேகத்தின் சுரூபத்தைப் பார்த்தால் தலைக்குக் கீழ்ப்பட்ட அங்கங்கள் இத்தன்மையானவென்றும், இத்தொழிலையுடையவென்றும் கண்களுக்கு இலகுவாய்ப் புலப்படுகின்றன. தலையோ அப்படி அறியக்கூடியதாகவில்லை. அது எத்தன்மையானது, மனிதன் செய்யும் வேலையில் எதற்கு ஆதாரமாகிறது, நாம் சாப்பிடும் ஆகார முதலியவைகள் அப்பாகத்திற்குச் செல்லுகின்றனவா? அது எத்தொழிலை எவ்விதமாய்ச் செய்கின்றது? இவைகளை ஒருவாறு விசாரிப்போம்.

பசியென்றால் மனிதன் வயிற்றைப்பிடித்துக் கடுவான்; கண்பார்வை நன்றாகத் தெரியாவிட்டால் கண்ணைத் துடைத்துக்கொள்வான்; தூரத்தில் ஒலிக்கும் நாகசுரம் காதில் படாவிட்டால் தொனிபோல் காதைச்செய்துகொள்வான். குதிரைச் சேனை எதிர்பார்ப்பவர்கள் காதைத் தரையில்வைத்து அடிஓசை அறிந்துகொள்வார்கள். அந்த மரத்தண்டை உளுந்து வறுக்கும் வாசனை அடிக்கிறதென்றால் மூக்கால் அதிக காற்றை உட்கொண்டு முகர்கிறோம். இவை இவ்வாறாகவிருக்க, தலையைப்பற்றி என்னகாரியம் அறிகிறோம். பரீட்சாசாலையில், கேட்ட கேள்விக்கு உத்திரம் உடனே தெரியாவிட்டால் பையன் தலையைச் சொரிகிறான். மணி அடிக்கப்போகிறானென்றால், பரபரப்பாய் ஆள்காட்டி விரலால் பின்னம் தலையை, வைத்துப்பூட்டியிருப்பதை சாவியால் திறந்து எடுப்பவன்போல், சொறிவான். அப்படியும் வராதுபோகுமானால் ஐயோ என்று தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதை பரீட்சை சாலையில் காணாதவர் யார்? ஞாபகம், யோஜனை வேண்டிய காலத்தில் தலையைத் தொடுவதால் அது அவைகளுக்கு உபயோகமாயிருக்குமென்று சங்கிக்க இடமுண்டாகிறது. அது உண்மையிலும் அவ்வாறே. மனதென்று சொல்வதற்கு இருப்பிடம் தலைதான். ஆனாலும், சத்தியமாய்ச் சொல்லென்றும், மனச்சாட்சிக்கு உண்மையாய்ச் சொல்லென்றும் ஜனங்கள் ஹிருதயத்தில் கைவைக்கச் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் நெஞ்சறியச் சொல்லென்பார்கள். நெஞ்சிலும், இருதயத்திலும் படபடவென்று அடிப்பது பிரசித்தமானதால் ஆத்துமாவின் இருப்பிடமென தீர்மானித்தார்கள்போலும். அன்றியும் இவ்விடங்களில் குற்றமுள்ளவர்களுக்கு பயத்தால் அதிகமாய் படபடவென்று அடித்துக்கொள்வது வழக்கம். இப்படி அடிப்பது சாதாரணமாயிருந்தும் மனதிர்சவலையுண்டாகும் காலங்களில் ரத்தம் அதிகமாய் ஓடுவதால் பலமுறை இந்த ஓசைகள்கேட்கலாம். தலைதான் புத்திக்கு இருப்பிடமென்று ரூபிக்க சில பரீட்சைகள் சொல்வோம். மூட்டை தூக்கி வந்தால் அப்பாவென்று முதுகைபிடித்துகொள்ளுகிறான். கொல்லை கொத்தினால் புஜத்துக்கு உபசாரம் செய்கிறான். வெகுநேரம் ஒருவிஷயத்தைப் பற்றி யோஜித்தால், அல்லது பிரசங்கித்தால் உபாத்தியாயர் தலையைப்பிடித்துக்கொள்ளுகிறார். அதிகப்படிப்புள்ளோருக்கு தலைநோவு சகஜமாய் பின்தொடரும்.

2. அன்றியும் ஓர் தவளையின் தலையைக் கிள்ளி எறிந்துவிட்டாலும், அது ஜீவித்திருக்கும். காலைச் சுட்டால் பின்னிழுத்துக்கொள்ளும். அணுவேனும் புத்திவேண்டிய வியாபாரத்திற்கு ஏலாது.

3. மேலும் அற்பப் புழு முதல் பார்த்துவந்தால் புத்தி விருத்தியடைய யடையதலைப் பாகம் வெளிப்பார்வைக்கும், அதிக மேல்தரத்தில் உள்ளின் கனத்திலும் அதிகரித்தே வருகின்றன.

4. வயது ஆக ஆக நியாபகக் குறைவு உண்டாவது எல்லாருக்குந் தெரியும். முதலாவது ஓர் பாஷையின் வார்த்தைகள் மறந்துவிடும். அதைக்கண்டால் நியாபகம் வரக்கூடியவர்கள் பேர் மறந்துபோய்விடும். பின்னும் கிழத்தனத்தில் பேசும் திறமையே குறைந்துவிடும். இந்த அவஸ்தையுள்ளோர் மண்டையினுள் சில குறித்த பாகங்கள் மலினமாய்ப் போயிருப்பதைக் கண்டிருக்கிறார்கள்.

5. மற்றுமின்னொரு வாஸ்தவ சரித்திரம் இதை நன்றாய் விளக்கும் என்று நம்புகிறோம். ஜெர்மானியா தேசத்தில் முன் நடந்த சண்டையில் ஒரு சிப்பாய் தலையில் குண்டுபட்டு மூர்ச்சைவிட்டுக் கிடந்தான். வைத்தியம் செய்யக் காயம் ஆறி எழுந்திருந்தான். எழுந்து தான் இன்னதேசத்திலிருக்கிறானென்றாவது, தன் ஜாதி, குலம், கோத்திரம், பெயராவது தெரியாதவனாய், தன் பெண்டாட்டி பிள்ளையை எல்லாம் மறந்து தாயின் வயிற்றிலிருந்து இந்த க்ஷணத்தில் விழுந்த குழந்தைபோல் பேசத்தெரியாமல், ஒருவரையும் அறியாமல், பேதையாய்விட்டான். நம்தேசத்தில் இம்மாதிரி அதிசயங்கள் நடந்திருக்கின்றன. குண்டுபட்டல்ல; மகாரிஷியின் சாபவலிமையால் தனக்கு நடந்ததை முற்றும் மறந்திருக்கக் கேள்வியுற்றிருக்கிறோம்.

இப்படியிருக்க, தேகவலிமைக்கு யாதும் குறைவில்லாததினால், வயிற்றுப்பசி அவனுக்கு முண்டாகையால், அமெரிக்காதேசம் புறப்பட்டுச்சென்று அங்கு ஜீவனம் செய்துகொண்டு வந்தான்.

அப்படி வருநாளில் முன் குண்டு பட்ட இடத்தில் இன்னொரு முறை வாசற்படி இடிக்க இராமபாதத்தினால் இடிபட்ட கல் பெண்ணாய் எழுந்ததுபோல், பேதையாய் நின்று தன் உறவினர், தான் பேசிய பாஷை முதலியயாவையும் இழந்திருந்த இம்மூப்படைந்த பாலகன் பின்னும் திடீரென்று, தன் அருமைத் தாய்தகப்பனையும், தன்னை மணந்த மனைவியும், தான்பிறந்த நாட்டையும், தன் வீட்டையும் நினைந்து கதறினான்; ஊர் வந்து அவர்களையும் அடைந்தான். இதென்ன ஆச்சரியம்!! தூர்வாச மகாரிஷியின் கோபத்தினால் துஷ்யந்தனுக்கு நேர்ந்த மறதியும், நாராயண பாதத்தின் பிரசாதத்தினால் அகலிகைக்கு விளைந்த விமோசனமும், ஒரு

சடக் குண்டும் விவேகமற்ற வாசற்படியும் செய்து முடித்தன பாருங்கள். இதுவும் கருணாநிதியான கடவுளின் செயலே. அந்த கபாலத்தின் கீழுள்ள அறையில் அல்லவோ நம் புத்தி, நாம் அறிந்த ஞானம், இனி அறியும் சக்தி எல்லாவற்றையும் நீதியாய் வைத்திருக்கிறார். அதை மாற்றி இடம் பேரச் செய்தால் அவைகளிலுள்ளவை மறைந்துபோய்விடும். தன் ஸ்திதியையடைவே பின்பெறும். சிலரின் பைத்தியம்கூட திரவம் கொடுத்து மண்டையோட்டை எடுத்து மூளையைச் சுத்திசெய்தால் போகிறது. இவ்வேலையை எப்படிச் செய்கிறது?

நம் தேகத்திலுள்ள இரத்தத்தில் 5-ல் ஒரு பங்கு 8-ல் ஒரு சாணுள்ள தலைக்குப்போகிறது. இதினால், புத்தி வேலைக்கு அதிக ஆகாரம் தேவையென அறியலாம். உலகத்திலும் பேனா வேலைக்கு மண்வெட்டி வேலையைவிட எத்தனையோ அதிகச் சம்பளம் கொடுக்கிறார்கள்.

மண்டையிலுள்ள பதார்த்தம் சாம்பல் நிறமுள்ளதாயும், வெண்மையாயும் பஞ்சுபோன்ற மிருதுவான தன்மையுடையது. அது இரண்டு கோளமாய்ப் பிரிவுபடும். இவ்விரண்டு பெரிய பிரிவுகளன்றி இன்னும் வெகுவாய் பிரிவு அடைந்திருக்கின்றது. பொடாஷ் என்ற வஸ்துவின் விகாரம்தான் அதனுள் அடங்கி யிருக்கிறது. ஆகையால் அந்த வஸ்து மிகுதியாயுள்ள காய் கறிகளை உண்பது புத்திக்குப் பலமென்பார்கள். வெண்டக்காயை இதுகாரணம் பற்றியே ஓர் ஐரோப்பிய சாஸ்திரி ஏராளமாய் உப்பிட்டுச் சாப்பிடுவாராம். இதென்ன இவ்வளவு சாதாரணமானவஸ்து இந்தஅற்புதத்தை விளைவிக்குமா என்றால் வைரமென்று வழங்குவதும், அடுப்பு நிலக்கறியும், ஒரே வஸ்துவென்று ரூபிக்கலாம். அடுப்பில் போட்டால் அவற்றின் உறவு வெளியாகும். இரண்டும் பிடிகரியாகும்.

ஒன்று அடுப்பில் தவிப்பானேன். மற்றொன்று ராஜாதிராஜர்கள் முடிமேல் நட்சத்திரங்கள்போல் விளங்குவானேன்?

இத்தன்மையான மூளைக்கும் தேகத்தினுருப்புகளுக்கும் என்ன சம்பந்தம்?

அது சொல்லுமுன் இக்கபாலமே நம்முதுகெலும்பின் பரப்பென அறியலாம். நாகத்தின் நுனியில் பரந்து இருக்கிறது. இரண்டு கோளங்கள் முதலில்; அதன்கீழ் ஒரு சிறு மூளை; அதின்கீழ், முதுகு நரம்பின் சிகரத்தில் ஒரு சதுர நரம்பு என இவ்வாறு முக்கியமாய் மூன்று பாகங்களாகச் சொல்லலாம். இவைமூன்றும் தலையிலுள்ள மூன்று தந்தி ஆபிசு எனக்கொள்ளலாம். இவைகளுக்கு வரும் தந்திக்கம்பிகளாவன. தேகம்தோறும் ஆபாதமஸ்தகம் பாதாதிகேசம் அல்லது காலடி முதல் தலை நுனி வரை எங்கும் ஓடும் நரம்புகள்தான். இன்னரம்புகள் வெகு நுட்பமானவை. இவை கடைசியில் முதுகு எலும்போடு சென்று மண்டையின் கீழ்பாகத்தில் சதுர நரம்பில் சேருகின்றன. கைவிரல்களின் நுனியில் ஒரு சிறு ஊசியால் குத்தினால் உடனே நரம்பின் வழியாய் அது செல்ல அதை வலி என்று அறிந்து அதை நிவர்த்திக்கும்படி விரலை நகர்த்தும்படி மற்றொரு நரம்பு சமாசாரம் கொண்டுவரும். முதுகிலடிக்கும் அடியும், கண்ணில் விழும் ஜோதிரலைகளும் காதில் கொள்ளும் சப்த அலைகளும், உள்ளே ஒரு புத்தியில்லாத வரையில், அடி யுண்டாக்காது, ஜோதிரலைகள் வெளுப்பு சிகப்பு எனப் புலப்படாது. கொல்லென் என்ன அடி அடிக்கினும் சப்தமாகத் தெரியாது. ஹெகில் (Hegel) என்னும் மகாவித்துவான் லெப்விக் (Leipzic) என்ற ஊரில், நெபோலியனென்ற கலியுக ராவணனோடு ஐரோப்பிய நாட்டார் சண்டைபோட்டுக்கொண்டிருக்கையில், இந்திரஜித்தைவிட எவ்வளவோகோரமாய் கர்ஜிக்கும் பீரங்கிகள் ஆகாயத்தைத் தகைக்க, அவையொன்றும் அறியாதவராய் அதனண்டையில் மகாகிரந்தத்தை எழுதிக்கொண்டிருந்தார். அதினால் மனதுகவனிக்காவிடின் பீரங்கி வெடி அவருக்குசப்தமாகத்தெரியாது. வேறொன்றை நினைத்துக்கொண்டிருந்தால் எதிரில் வருபவரை அறியார். தன் பெண்டாட்டி இறந்தாளெனக்கேட்ட ஒரு வேதாந்தி அவளிடத்தில் என்னசெய்யலாமென்றுகேட்பேனென்று பிணமிருந்த அறையினுள் சென்றாராம். ஆகையால் காதுகேட்பதென்பதும் கண்பார்க்கிறதென்பதும் உபசாரவார்த்தைதான். மனம் அல்லது ஆத்மாவே பார்க்கிறது, கேட்கிறது என்று சொல்வதே சரி. ஆனாலும் இந் நரம்பை தூக்கத்தில் குத்தினாலும் எழுந்துவிடுவானே. சிலசமயங்களில் வலிதெரியாவிட்டாலும் காலை யெடுத்துவிடுவோம். அது ஏனென்றால் இந்த நரம்புதலையிலிருக்கும் சுரூபத்தையறியும் சக்தியுள்ள கோளங்களுக்குச் செல்லாது முதுகு நரம்புக்கு வந்ததும் பதில் தந்திபோய்விடும். முதுகு நரம்பு தாழ்ந்த ஆபீசு; அதற்கு மேலானது சதுர நரம்பு; அதற்கு மேலானது சிறு மூளை. இவ்விரண்டும் அதிககஷ்டமான வேலைகளுக்கு ஆதாரமாயிருக்கின்றன..........................

..........................................

இப்படி தந்திக் கம்பிகள் மூலமாய்ச் சமாசாரம் வருகிறதென்று சொன்னோம். அது எவ்விதமாய் வருகிறது, எவ்வளவு வேகமாய் வருகிறது? ஒன்றின் மேலொன்றாய் சாய்ந்து இருக்கும் கல்லுகளில் ஒன்றை தட்டினால் மற்ற கற்கள் நகராமலே கடைசிக் கல் வரை கீழே விழுந்துவிடும். அம்மாதிரியே நரம்புகள் மூலமாக சமாசாரம் வருகிறது. வெளியிலிருந்து மூளை ஸ்தானத்துக்கு சமாசாரம் கொண்டுபோகும் நரம்புகளுக்கு 'Sensory nerves' என்று மூளை ஸ்தானத்திலிருந்து உடலின் மற்ற இடங்களுக்கு சமாசாரம் கொண்டுபோகும் நரம்புகளுக்கு 'Motor nerves' என்று இங்கிலீஷில் பேர்வைத்திருக்கிறார்கள். நமக்கு உணர்ச்சியுண்டுபண்ணக் காரணமாக விருப்பவை முற்சொன்ன நரம்புகளாம். நாம் கை, கால், கண் முதலிய உறுப்புகளை அசைப்பதற்குதவியாயிருக்கும் நரம்புகள் பிற் சொன்னவைகளாம். முற் சொன்ன, (Sensory nerves) நரம்பின் வழியாக சமாசாரம் விநாடிக்கு III அடி விகிதமாக ஓடும். பின் சொன்ன (motor nerves) நரம்பின் வழியாகச் சமாசாரம் ஓடுவது விநாடிக்கு 98 முதல் 131 அடிவரையில் வேகமாக ஓடும். இதெல்லாம் தந்தியின் மின்னல் வரும்வேகமாகாது.

ஷேக்ஸ்பியர் முதலிய மகாகவிகள் காவியங்களை மனதில் தியானித்தபோதும், சங்கராசாரியார் முதலிய தெய்வப் பிறப்புள்ளவர்கள் வேதாந்த உண்மைகளை யோஜித்தபோதும், அவர்கள் மண்டையினுள், வெவ்வேறு எண்ணத்துக்குத் தகுந்த நரம்புகளின் சேர்க்கை இருந்துதானிருக்க வேண்டும். எப்படி குறித்த வீணைத்தந்தியை அடித்தால் வெவ்வேறு விதமாய் எவ்வளவோ விதமான மதுர துவனிகள் உண்டாகின்றனவோ அம்மாதிரியே நரம்புகள் சிலவாயினும் மகாகவி, மகாசாஸ்திரிகள் அற்புத எண்ணங்களும் தந்தியிலிருந்து பாட்டுப்போலவே வருகிறது. அவையில்லாமல் இவை வரா. என்ன வித்துவானாலும் வீணைத்தந்தி யறுந்தால் என்ன செய்வார். ஆனால் வெறும் (catgut) நரம்புத்தந்திகளுக்கும் அதிலிருந்து வரும் மதுர துவனிக்கு என்ன சம்பந்தம். அது இதற்கு எப்படிக் காரணமாகும்? என்ன ஆச்சரியம்! கம்பி கண்ணுக்கு தெரியும், அளவிடக்கூடும்; எண்ணங்களோ இந்திரியங்களுக்கு எட்டாது, தேசத்தில் அடங்காது. எப்படி இவை இரண்டும் ஓரிடத்தில் குடியிருக்கின்றனவோ? அன்றியும், "*ஒவ்வொரு சந்தோஷ உணர்ச்சியும், துக்கானுபவமும், அற்ப எண்ணமும், மனதில் தியானமும், வாதத்தில் சொல்லும் ஒவ்வொரு யுக்தியும் உண்டாவதற்கு குறித்த சுத்தவாயும், (oxygen) கரியும், (carbon) மற்றுமுள்ள பௌதிகங்களும் சேர்ந்து தேகத்திலோரிடத்தில் செலவாயிருக்கவேண்டும்." பௌதிகமான காய்கறி இல்லாது சின்மயமான எண்ணம் உண்டாகாது எனத்தெரிகிறது. †சிலர்மாத்திரம் தேகத்துக்கு ஆகாரம் குறைந்தாலும் புத்தியின் வேலைக்குக் குறைவு இல்லாததுமன்றி, தீவிரமும் உண்டாகுமென்று சாதிப்பார்கள். அப்படியானால் தேகமின்றி, மூளைநரம்பன்றி, அதைப்போஷிக்கும் ஆகாரமின்றி மனது வேலை செய்யுமா? அதை ரூபிப்பதற்கு தேகத்தைவிட்டு ஆத்துமா பேச, அல்லது சிந்திப்பதை நாம் பார்த்ததில்லை. பார்ப்பது அசாத்தியமாயிருக்கிறது. ஆனால் கூடும்என்று சொல்வோரும் உளர்.‡ ஆயினும் சுரத்திலும் மரணகாலத்திலும் அபரிமிதமான நுட்பமாய்ப்பேசியிருக்கிறார்களே. ஆகையால் பலம் குன்ற புத்தி அதிகம் அன்றல்லவா? இந்த அபிப்பிராயங்கள் பேதங்களால் இவ்வாறு சொல்வார்கள். மூளை அதாவது தேகமும், சித்தும் மனிததேகம் இருமுகம் படைத்த ஓர் அதிசயம். ஒரு பக்கம் ஆத்துமா, ஒரு பக்கம் ஜடதேகம் அல்லது மூளைநரம்பு. அவை ஒன்றுக்கொன்று சம்பந்தம் சொல்வது அசாத்தியம். மற்றும் சிலர், புத்திக்கு நரம்புதான் காரணம்: பித்தப்பையிலிருந்து பித்தம் ஊறுவது போல் மூளையிலிருந்து புத்தி வரும் என்பார்கள். நம்மவர் வெற்றிலை போட்டால் உண்டாகும் மதம் போன்றது என்பார். நம்முடைய வேதாந்திகள், அர்த்தநாரீசுவரர் போன்றது என்பார். பார்வதியை ஈசுவரன் சிருஷ்டித்து தன்புறம் வைத்ததுபோல், சித்து தேகத்தையும், பரமாத்மா ஜகத்தையும் கற்பித்து தன்னோடு இடைவிடாது வைத்தானென்பார் பின்னும் சிலர்.

ஏ. ஸ்ரீனிவாஸய்யர், பி. ஏ.

* Bain's Practical Essays.
† Huxley's Essays.
‡ Anne Besant.



# உபாத்தியாயர் பக்கம்.

## பிள்ளைகளின் இயற்கை.—II.

(BY A LICENTIATE IN TEACHING.)

பிள்ளைகளின் சுறுசுறுப்புத்தனத்தையும் விளையாட்டுத்தனத்தையும் நல்வழியில் திருப்புவது உபாத்தியாயரின் கடமையென்று முன்சொன்னோம். அது எப்படியென்று ஒருவாறு தெளிய உரைப்போம்.

1. **சுறுசுறுப்புத்தனம்.**—பிள்ளைகளுக்கு இயல்பாயுள்ள சுறுசுறுப்புத்தனம் காரணமாக அவர்கள் வகுப்பில் பாடம் நடக்கும்பொழுது இடை இடையே கை துறுதுறுத்து விஷமங்கள் செய்வது வழக்கமென்று சொன்னோம். எந்தப்பாடம் நடக்கும்பொழுதும் கொஞ்சநேரம் சொல்லிக்கொடுத்த பிறகு சொல்லிக்கொடுத்த அம்சங்களை பலகையிலோ நோட்புத்தகத்திலோ எழுதச்செய்தால் பிள்ளைகளின் துறுதுறுத்தகைகளுக்கு ஒருவேலை யேற்படும். அப்படியெழுதச் செய்வதினால் வகுப்பு முழுவதும் சப்தமின்றியிருப்பதுடன் அம்சங்களமனதில் நன்றாய்ப் படுதல், கையெழுத்துப்படிதல் முதலிய லாபங்களும் ஏற்படும். விஷமமும் பிறருக்குத தீங்கும் விளையாது. எழுதத்தெரியாத சிறியபாலர்கள் (Infants) வகுப்பில் அடிக்கடி 'டிரில்' (Drill) நடத்தவேண்டியது. இன்னம் ஒரு உதாரணம்: ஒரு இலையோ அல்லது புஷ்பமோ ஒன்றைக்காண்பித்து அதை நன்றாய் கவனத்துடன் பார்க்கச்செய்து 'ஸ்கூல் தோட்டத்தில் இந்தமாதிரி இலை யல்லது புஷ்பம்இருக்கிறது; அதை யார்கண்டு பிடித்துப் பறித்து வருகிறீர்கள் பார்ப்போம்' என்று பிள்ளைகளைப்பார்த்து உபாத்தியாயர் சொன்னால், உடனே பிள்ளைகள் ஸ்கூல் தோட்டத்தில் அங்குமிங்கும் ஓடி குறிப்பிட்ட இலையையோ அல்லது புஷ்பத்தையோ பறித்துவரமுயலுவார்

கள். அவர்கள் கொண்டுவராமற்போனாலும், கொண்டுவருவது சரியானதாயில்லாமற்போனாலும், அங்கும் இங்கும் ஓடினதால் கைகால்களின் துறுதுறுத்ததனம் சற்றுநேரம் அடங்கியிருக்கும். பிள்ளைகளுக்கு அது விளையாட்டாகத் தோன்றுமாதலாலும் நாம் முன்னதாய்க் கொண்டுபோகவேண்டும் என்று ஒவ்வொருவரும் ஆவலுடன் ஓடுவதாலும் பிள்ளைகளுக்கு உண்டாகும் ஆநந்தத்திற்கு அளவில்லை. ஓடுவதினால் அவயவங்கள் திடப்படும். இது தவிர ஸரியான இலை, பூவைக்கொண்டுவந்துவிட்டாலோ அவர்களுக்கு ஸ்திரமாய் ஏற்படுகிற லாபம் ஒன்றுண்டு. குறித்த இலை யல்லது புஷ்பம், இதைக்கண்டுபிடிப்பதில் அநேக இலை புஷ்பங்களை யொப்பிட்டுப்பார்த்து சமான மல்லாதவைகளை நீக்கிச் சமானமானவைகளைத்தேர்ந்தெடுக்கும்படியான பகுத்தறிவு உண்டாகும். இந்தலாபங்களெல்லாம் உண்டென்ற சங்கதியை கொஞ்சங்கூட அறியாமல் சிறு குழந்தைகளைக் காலமே முதல் சாயங்காலம் வரையில் மணியொன்றுக்கு ஒரு பாடம் வீதம் 6 மணி நேரம் மறித்துப்போடலாமா? நல்ல பகுத்தறிவுடைய வயது வந்தவர்களாகிய நாம் ஒரு உபந்யாஸம் கேட்டுக்கொண்டிருப்பதாய் வைத்துக்கொள்ளுவோம். அது கேட்க மிக இனிமையாயிருந்தபோதிலும் அதினால் நமக்கு நூதனமும் முக்கியமுமான சங்கதிகள் அநேகம் தெளிவாய் விளங்குவதாயிருந்தாலும், உபந்யாஸம் சொல்லுகிறவர் கொஞ்சம் இளைப்புக்காக நிறுத்தினால், சும்மா உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்த நமக்கு என்ன சிரமம்! இருந்தாலும் அவர் நிறுத்திய அந்த நான்கு நிமிஷங்களுக்குள் எவ்வளவோ சந்தோஷத்துடன் கைகால்களை யசக்கிக்கொடுத்துக் கொண்டும் மூச்சு தீர்க்கமாய் விட்டுக்கொண்டும் இருமி தொண்டையைக் கனைத்துக்கொண்டும் எழுந்திருந்து நின்றும் அந்தப்புறம் இந்தப்புறம் திரும்பியும் நாம் நம்மை சீர்திருத்திக் கொள்ளுகிறோமல்லவா? அதாவது பெரியவர்களுக்குக்கூட கை கால்களை அசைக்காமல் உட்கார்ந்திருப்பது கஷ்டம்தான். எப்பொழுது அந்த நிலைமை மாறி எதேச்சையாய் அவைகளை யாட்டியசைக்கப் போகிறோம் என்ற ஆவல் உண்டாகும். மேலும் நம்முடைய படம் (photo) எடுத்துக்கொள்ள நாம் நிதானமாய் உட்கார்ந்திருக்கவேண்டியது இரண்டு மூன்று விநாடிகள்தானே. அந்தக்காலங்கூட சரியாய் இருக்க முடியாமல் எவ்வளவு பேர்கள் தங்கள் (photo) படங்களைக் கெடுத்து விடுகிறார்கள். சும்மா இருப்பது பெரியவர்களுக்கே இவ்வளவு கஷ்டமான வேலையானால் பிள்ளைகளுக்கு அது எவ்வளவோ மடங்கு அதிக கஷ்டமாயிருக்குமென்பதைச் சொல்லவேண்டியதில்லை.

2. **விளையாட்டுத்தனம்.**—பிள்ளைகளுக்கு இயற்கையான குணங்களில் மற்றொன்று விளையாட்டில் பிரியம். இது முதலில் சொல்லிய குணத்துடன் ஒட்டியதுதான். பிள்ளைகள் எப்பொழுதும் குதூகலத்துடன் விளையாடிக்கொண்டேயிருப்பார்கள். ஆகையால் சிறு பிள்ளைகளின் வகுப்பிற்கு வயது சென்றவர்களையாவது அசௌக்கிய ஸ்திதியில் உள்ளவர்களையாவது உபாத்தியாயர்களாக, ஏற்படுத்தக்கூடாது. இவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஒத்து வரமாட்டாது. வயது சென்றதினாலும் அசௌக்கியத்தினாலும் உபாத்தியாயர்களுக்கு குதூகலமில்லாமலும் எதைக்கண்டாலும் அசூயைப்பட்டுக்கொண்டுமிருப்பார்கள். அடிக்கடி கோபம் வரும், உபாயப்பிழைகளைக்கூடப் பொறுத்துக்கொள்ளக் கூடாதவர்களாய் எடுத்ததெற்கெல்லாம் பிள்ளைகளைத் தண்டிப்பார்கள். இந்த முசுடுகளுக்கும் சதா ஓடியாடிச் சிரித்துமனக்கவலையன்னியில் விளையாடிக்கொண்டிருக்கும் இயற்கையையுடைய சிறுபிள்ளைகளுக்கும் எவ்வளவுக்கெவ்வளவுதூரம்? சிறுபிள்ளைகளுடன் மனதுகலந்து அவர்களுடன் சேர்ந்து விளையாடி இவரும் நம்மில் ஒருவர்தான் என்ற எண்ணம் பிள்ளைகளுக்கு உண்டாக்கக்கூடியவர்தான் அவர்களுக்கு உபாத்தியாயர்களாக ஏற்படத் தகுந்தவர்கள். பிள்ளைகளின் விளையாட்டுத்தனத்துக்கு அநுகூலமாய் உபாத்தியாயர் ஏற்பாடுகள் செய்யவேண்டியது. (Infant) சிறுவர்வகுப்புப்பிள்ளைகளுக்குமற்றவகுப்புப்பிள்ளைகளுக்கு ஏற்படுத்துவபோலப் பாடங்கள் ஏற்படுத்தாமல் விளையாட்டுகள் ஏற்படுத்த வேண்டியது. நமது நாட்டில் சிறுபிள்ளைகளுக்குள் எத்தனையோ விளையாட்டுகள் உண்டு. அவைகளெல்லாம் இப்பொழுது சில கிராமாந்தரங்களில் தவிற வேறு இடங்களில் காணோம். அவை (Infant) சிறுவர் வகுப்பு பிள்ளைகளுக்கு மிகவும் தகுந்தவை. அவைகளேயல்லாமல் போனாலும் பின்வருமாறுவது செய்யலாம். வகுப்பில் உள்ள பிள்ளைகளுள் ஒருவன் கண்ணைக்கட்டிவிட்டு மற்றவர்களில் ஒருவனை அந்த அறையை விட்டு வெளியே போகச்செய்து பிறகு இந்தப்பையன் கண்ணைத்திறந்துவிட்டு இருக்கிற பிள்ளைகளை கவனமாய்ப்பார்த்து வெளியில் போனவன் இன்னானென்று சொல்லச் செய்யலாம். அறையிலுள்ளவர்களில் ஒருவனை எதாவதொன்றை கெட்டியாய்ப் படிக்கச்செய்து வெளியிலுள்ளவனை பேசினது இன்னாரென்று கவனித்துச் சொல்லச் சொல்லலாம். இதுகளெல்லாம் பிள்ளைகளுக்கு விளையாட்டாகத்தானிருக்கும். ஒரு விளையாட்டு ஒருசமயத்தில் பிடிக்காமல் போனால் அவர்கள் இஷ்டப்படியே விட்டுவிட வேண்டியது. இந்த விளையாட்டுகளில் பிள்ளைகள் வேடிக்கையாய் சந்தோஷத்தை யடைவதுடன் கண்ணினால் பார்க்கிற திறமையும் காதினால் கேட்கிற திறமையும் அவர்களுக்கு விர்த்தியாகும். உபாத்தியாயரிடத்தில் பிரியமும் அவருடன் எப்பொழுதும் கலந்திருக்க விருப்பமும் பள்ளிக்கூடத்தை நினைத்தால் சந்தோஷமும் உண்டாகும்.



# சிறுவர்க்கானபக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## சோம்பேறிப் பையல் கதை.*

தர்மபுரம் என்னும் ஒரூரில் "மல்லிகை" என்று ஒரு சிறுவனிருந்தான். அவன் தொட்டால் வாடும் மல்லிகை மலர்போலும் மெல்லியதன்மையுடையோனாய்த், தனக்கெது இலகுவாயும் இதமாயுமிருக்குமோ அதையே செய்து கடினமான காரியங்களை வெறுத்ததனால், அவனுக்கு அப்பெயரிடப்பட்டது. அவனை அவன் தந்தை, வீட்டில் வைத்துக் கொள்ளாமல் "இளமையிற்கல்" என்ற முதுமொழியை அநுசரித்து அதிபாலியத்திலேயே அடுத்த ஊரில் இருந்த "உழைப்பு" என்னும் ஓர் கண்டகரான உபாத்தியாயரிடத்தில் படிக்கவைத்தார்.

அவ்வுபாத்தியாயர் குணத்தை அவருடன் பழகிச் செம்மையாயறிந்தவர்கள். அவர் மிக்கவும் நல்லவரென்றும்; முதியோர் இளையோர் முதலான அனைவர்க்கும் அநேக நன்மைகளைச் செய்திருப்பவரென்றும் சொல்வார்கள். அவர் இவ்வுலகம் தோன்றியது முதல் நெடுநாளாக இருந்துவருதலினால் பல பேருக்குப் பல உபகாரங்களைச் செய்திருக்க வேண்டும்.

அவர் இவ்வளவு நல்லவராயிருந்தும், வேலையென்றால் ஏங்கித்தவிக்கும் சோம்பேறிகளுக்கு அவரைக் கண்டால் மிகவும் வெறுப்பாயிருக்கும். அவர் பள்ளியிற் பிள்ளைகள் தத்தமக்கிட்ட பாடங்களைச் சரியாகக் கவனித்துப்படியாமல் கணப்பொழுதேனும் வீணிற்போக்க இடங்கொடாமல் அவர்களைக்கண்டித்து அல்லும் பகலும் வறுத்தெடுப்பாராதலினால், அவர் சொல்லும் வார்த்தைகளும் அவரது சுபாவமும் **மல்**லிகைக்குச் சற்றும் பிடிக்கவேயில்லை.

ஆதலால், பள்ளிக்கு வந்து ஒருவாரம் ஆவதற்கு முன்னே அவன்—'அப்பா! இந்தப் பிடுங்கல் யாரால் சகிக்க முடியும்? இதனை விட்டொழிந்து ஊர்போய்ச் சேருவதே உத்தமம்; எங்கு சென்றாலும் இத்துர்முகியான உபாத்தியாயர்போலும் கொடியவர் எவரும் இராராதலின் போய்விடுவதே நன்மை'—என்று துணிந்து, மறுநாட்காலையில் கையில் ஒருவேளை உணவும் வழிச்செலவுக்குச்சிறிது பணமுமெடுத்துக் கொண்டு, ஒருவருடனும் சொல்லாமல் புறப்பட்டு ஊர்தோறும் திரியப்போயினன்.

அவன் அவ்வாறு சிறிது தூரம் சென்றதும், வழியில் சிந்தனையுற்ற பார்வையோடு மெல்ல மெல்ல நடந்து செல்லுமொருவரைக்கிட்டி நெருங்க, அவர் இவனைப்பார்த்து கனிவோடும் சிறிது கடுமையோடும்—'அடே பையா! எங்கு நின்று எங்கு போகிறாய்?' என்றுகேட்க, **மல்லிகை** தானொருநாளும் பொய்யுரை சொல்லி அறியானாதலின் சற்றுத்தயங்கி நின்று பின்னர்—'ஐயா! **உழைப்**பென்பவர் பள்ளிக்கூடத்தில் என் தகப்பனார் என்னைப் படிக்கவைத்தார். ஆயினும் அவரது சிடுசிடுப்பும் கடுகடுப்பும் எனக்கு முற்றும் பிடியாததனால் அவரைவிட்டு வேறு எங்காவது அவர் கண் முன் நில்லாமலும் அவர்கடுஞ்சொற் கேளாமலும் தொலைந்து போகலாமென்று போகின்றேன்'—என்று, உள்ளதை உள்ளபடியுரைத்தான்.

அதுகேட்டு அப்பெரியவர்—'நல்லது, நானும் கூட வருகிறேன். உழைப்பில்லாத இடம் ஒன்றுண்டாயின் அதை நானும் சாரவிரும்புவேன்'—என்ன, அவ்வாறே இருவருஞ்சேர்ந்து சற்று தூரம் சென்றதும், அவ்விடத்தில் வழி நடைக்கருகே ஓர் களத்தில் சிலர் போர் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு, **மல்லிகை**மனமகிழ்ந்து—ஆ! ஆ! இந்த இளம் வெயிலில் பக்ஷிகள் மரங்களிலும் செடிகளிலுமிருந்து இனிமையாகப் பாடிக்கொண்டிருக்கக் காதாரக்கேட்டு ஆனந்தித்து, உல்லாசமாய், கமகமவென்று பரிமளிக்கும் புதிய வைக்கோலை வாரிப் போர்போடுவது, **உழைப்பின்** பள்ளியில் ஓயாமல் பாடம்படித்து அவர்பால் அடியும் வசவுமுண்டு வருந்துவதிலும் எவ்வளவு சுகமாயிருக்கும்!—என்று சொல்லிக்கொண்டு கற்சுவர்மேலாக எட்டிப்பார்த்தான். பார்த்ததும் துணுக்குற்றுப் பின்வாங்கி,—அப்பப்பா! ஓடிப்போவோம் இங்கு நின்றாலவர் பிடித்துக்கொள்வார்—என்று தன் வழித்துணைவரைக் கையைப் பிடித்துப் பரபரப்பாயிழுக்க, அவர்—யாருன்னைப்

* "The Truant Boy" translated from Nathaniel Hawthorne.

பிடிப்பவர் என்ன, மல்லிகை—அதோபாரும், உழைப்பென்னும், உபாத்தியாயர் அவர்களுக்கு மத்தியில் வந்து நிற்கிறார்—என்று, அவ்விடத்தில் வேலைக்காரர்களுக் கெஜமானனாய் அவர்களை வேலைவாங்கிக்கொண்டு பரபரவென்று நின்ற ஒருவரைக் குறித்துக்காட்டினான். இதென்ன புதுமை! அவரது முகமும் சாயலும் முற்றும் உழைப்பேபோலிருந்தன!

அது கண்டு வழித்துணைவர் மல்லிகையை நோக்கி 'அப்பா! பயப்படாதே. இவர் உழைப்பென்னும் உபாத்தியாயரல்லர். அவருடைய தம்பிகளிலொருவர். இவர் பெயரும் உழைப்புத்தான். இவர் உழவுத்தொழில் பயின்று வியவசாயம் செய்பவர். அறிந்தவர்கள் இவரை உபாத்தியாயரிலும் கொடியவரென்று சொல்லுகிறார்கள். ஆயினும் நீ இவரிடத்தில் வேலைக்கிருந்தாலன்றி உன்னை வருத்தப்படுத்தமாட்டாராதலின் வருந்தாதே'—என்றார். அது கேட்டு மல்லிகை—'அப்படியாயின் நல்ல வேளைதான்; ஆனாலும் எனக்கு இவ்விடத்தில் கணப்பொழுதேனும் நிற்க இஷ்டமில்லை; அப்பாற் செல்வோம் வாரும்' என்றான்.

அவ்வாறே சற்று தூரம் சென்றதும் பொம் பொம் பொம்மென வாத்திய கோஷம் காதிற் கேட்க, மல்லிகை செவிகொடுத்துக் கவனித்துப் பார்த்து, அது இராணுவ வாத்தியமென்று தெரிந்து, விரைந்து சென்று அதனைப்பார்ப்போமென்று தன்வழித்துணைவரைத் துரிதப்படுத்தி சீக்கிரம் இராணுவம் செல்லுமிடத்துக்கு வந்து, போர்ச்சேவகரது அழகான உடையையும், தலையில் இறகுகளால் அலங்கரிக்கப்பட்ட பாகையையும், கையில் பளபளவென்று பிரகாசிக்கும் துப்பாக்கியையும், அதிமனோஹரமான வாத்திய கோஷத்தையும் கண்டு, அவர் பின் எவ்வளவு தூரமாயினும் தொடர்ந்து போகலாமென்று அளவற்ற ஆசை கொண்டான். உடனே, 'நில்லுங்கள்! துப்பாக்கியைத் தோளில் தாங்குங்கள்! விரைந்து செல்லுங்கள்!' என்று தீரமாயதட்டிப்பேசின வார்த்தைகள் காதிற்படவே, மல்லிகை திடுக்கிட்டுப் பயந்து ஏக்கங்கொண்டான். ஏனெனில் இராணுவ வீரருக்கு அவ்வண்ணம் உத்தரவிட்ட சேனாபதியின் குரல் நாள்தோறும் உழைப்பின் பள்ளியில் உழைப் பின்வாய்ப் பிறந்த தொனிபோலுமிருந்தது. பின்னர் அச்சேனைத்தலைவரின் முகத்தை அவன் பார்க்க அதுவும் அஞ்சச்சும் உழைப்பின் முகம் போலவேயிருந்தது. அவர் உபாத்தியாயரைப்போல் பிரம்பும் கையுமாய் நில்லாமல், தலையில் இறகுகளால் அலங்கரித்த குல்லாவும், தோளில் தங்கத்தாற் செய்த வில்லைகளும், உடம்பில் சரிகைச் சட்டையும், இடுப்பில் செவப்புப்பட்டையும், கையில் நீண்டவாளும் தரித்திருந்தாராயினும், சிறுவன் அவர் உழைப்பென்னும் தனது உபாத்தியாயர் தாமெனக்கருதி,—'நாமிங்கு நின்றோமாயின் நம்மைப்பிடித்துச் சேவகராகச் சேர்த்து விடுவாராதலின் ஓடிப்போவதே நலம் வாரும்'—என்று தன்வழித்துணைவருடன் நாவுளறி நெஞ்சம்பதறிச் சொன்னான். அவர்—'நீ எண்ணியது சரியன்று. இவர் உபாத்தியாயரல்லர். அவரது மற்றொரு சகோதரர்; இராணுவத்திலேயே வெகு நாளாய் உத்தியோகம் செய்துவருகிறார். ஜனங்கள் இவரை அவ்விருவரினும் பொல்லாதவரென்கிறார்கள். ஆயினும் நீயும் யானும் அதுபற்றி அஞ்சவேண்டுவதில்லை' என்று, சாந்தமாகச் சொன்னார். 'நல்லது, ஆயினும் இவர்களைப் பார்த்தது போதும், அப்பாற் போவோம் வாரும்'—என்று மல்லிகை புறப்பட்டான்.

பின்னர் அவ்விருவரும் அங்ஙனம் போகையில், பாட்டையின் ஓரத்தில் ஓர்வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் சில இளைஞரும் அழகிய பெண்களும் சிரித்துக்களித்து உல்லாசமாக நாட்டியமாடிக்கொண்டிருக்க, அவர்களை மல்லிகை கண்டு அது போலுமின்பமான காட்சி ஓரிடத்தும் அதுவரையிற் கண்டதில்லையாதலின், மிகவும் மகிழ்ச்சியுற்றுப் பெரியவரைப் பார்த்து—'நாமிவ்விடத்தே இருந்துவிடுவோம்; உழைப்பென்னு முபாத்தியாயர் இங்கு தலைகாட்டவும் துணியார்' என்றான்.

இங்ஙனம் சொல்லிமுடிக்குமுன், கீதம் வாசிப்பவன் முகம் எதிர்ப்பட அவனைப்பார்த்ததும் அவன் உழைப்பேபோலிருக்கக்கண்டு பயந்து,—'இது என்ன மாயம்! உலகத்தில் உழைப்பொருவரைத்தவிர வேறொருவருமில்லையோ. எங்குசென்றாலும் இந்தப்பாழும் உழைப்புத்தானா? அவருக்கித்தனை நன்றாகக் கீதம் வாசிக்கத்தெரியுமென்று யார்தானெண்ணுவார்கள்?'—என்றான். அதுகேட்டுப்பெரியவர்,—'இவன் உன்னுடைய உபாத்தியாயர் அல்லன். அவரது மற்றொருசகோதரன். இவன் பரதசாஸ்திரம் பயின்று சங்கீதவித்துவானாகித்தன் சகோதரர்களைக்கண்டுவெட்கமடைந்து, தன்பெயரைச் 'சந்தோஷம்' என்று மாற்றிவைத்துக்கொண்டானாயினும், இவன் சொந்தப்பெயர் உழைப்புத்தான். இவன் குணத்தை நன்றாக அறிந்தயர்கள் இவனை எல்லோரினும் பொல்லாதவனென்கிறார்கள்'—என்றார். அது கேட்டுப் பையன்—'எனக்கிங்கிருக்கச் சற்றும் இஷ்டமில்லை, அப்புறம்



போவோம் வாரும்'—என்று, அவரை இட்டுக்கொண்டு அப்பாற் போகையில், அங்கு ஓர் மரத்துநிழலில் சிலர் சோம்பலாய் மறிந்து கிடப்பதைக்கண்டு உளமகிழ்ந்து தன் நண்பரை நோக்கி—'இவ்விடத்தில் நாமும் சற்றே படுத்துக் களைதீர்வோம் வாரும். உழைப்பென்னும் உபாத்தியாயர் இப்படிப்படுத்துறங்குவார்களைப் பார்க்கவும் பொறாராதலினால் இங்கு எட்டியும்பாரார்—என்று சொல்லிக்கொண்டு மல்லிகை அவர்களை நெருங்க, உடனே அவர்கள் யாவரினுமிக்க சோம்பேறியாய் விழுந்து கிடக்கும் ஒருவனைப்பார்த்ததும், அவன் முகம் உழைப்பின் முகம்போலவேயிருக்கக்கண்டு பின்னிட்டு நின்றான். அது கண்டு வழித்துணைவர்—'இந்த 'உழைப்பு' என்பவர்களின் வம்சம் பெரியவம்சம். இவர்கள் அநேக சகோதரர்கள். இவனும் கிழ உபாத்தியாயர் தம்பிகளிலொருவன்தான். இவன் பிறந்தது முதல் தன் ஊரையும் இனத்தையுந்துறந்து, தூரதேசத்தில் வளர்ந்து சோம்பல்தனமெல்லாம் கற்று தன்பெயரை "ஒன்றுஞ்செய்யான்" என மாற்றிவைத்துக்கொண்டு சுகமாகக் காலம் கழிப்பவனைப்போல மேலுக்குக்காட்டுகிறானேயன்றி, உள்ளபடி ஆராயின் இவனே மற்றை யாவரினும் வருத்த முறுவோன்'—என்றார். அது கேட்டு அச்சிறுவன் பொறுக்க முடியாத துக்கமுற்றுப் பொருமியழுது,—'இனி நானுழன்றது போதும். எங்குசென்றாலும் உழைப்பில்லாதவிடம் உலகில் இல்லையாதலின் இனிப்பாடசாலைக்குத் திரும்பிப்போவதே உத்தமம்' என்று—திரும்பிவிட்டான்.

இவ்வாறு ஊரூராய்த்திரிந்துழன்றதனால் மல்லிகைக்கு நல்லபுத்திவந்து அன்றுமுதல் தன்பாடங்களை உழைத்துப்படித்த முயற்சிசெய்தல் வீண்பொழுது போக்குதலினும் துன்பமானதல்லவென்றுகண்டான். அவன் உழைப்புடன் பழகப்பழக அவரது சுபாவம் முன்போல் வெறுப்பாயிராமல் நாளுக்குநாள் அவரிடத்தில் பிரியமுண்டாகி முடிவில், அவர் தன்னை மகிழ்ந்து பார்க்கும்போதெல்லாம் அவர் முகம் தனது அருமைத்தந்தை முகம்போல இனிமையாக இருக்கக்கண்டு, சந்தோஷித்துப் படித்துவந்தான்.

முற்றும்.

எஸ். முத்து அய்யர், பி. ஏ.

---

## விசேஷக்குறிப்புகள்.

**ஷெரிப்மீடிங்கு.** சென்ற மாசத்து சஞ்சிகை வெளியான பிறகு நடந்த முக்கிய விசேஷங்களில் சென்ற மார்ச்சு மீ 20உ சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் சென்னை நகர் ஷெரிப் அவர்கள் விளம்பரப்படி கூடிய பொதுக கூட்டம் விசேஷமானது. அந்த மஹாசபைக்கு இந்நகரிலுள்ள ஐரோப்பியர்களும இந்தியர்களும் வந்திருந்தார்கள். அப்பொழுது இந்தியா கவர்ன்மெண்டார், மார்ச்சு மீ 10உ சட்டமாகச் செய்த 'டாரிப் ஆக்ட்டில்' பருத்திநூல் சரக்குகளுக்கு மட்டும் இறக்குமதி விதிக்காது விலக்கிவைத்தது அநியாயமென்றும், கவர்ன்மெண்டார் அவர்களுடைய செலவு அம்சங்களையும், இராணுவச் செலவு, சீமையில் பிடிக்கும் செலவு இவைகளையும் குறைத்து வரவுக்குச் செலவு சரிக்கட்டிப்போகும்படி செய்துக்கொண்டிருக்கலாமென்றும் அவர்கள் அபிப்பிராயத்தைத்தெரிவித்து ஒரு தீர்மானம் செய்தார்கள். அங்கே பேசினவர்களில், மிஸ்டர் ஜியார்ஜ் ஆர்பத்நட், மிஸ்டர் எர்ட்லி நார்டன், மிஸ்டர் ஆர். ஜி. ஆர். இவர்களும் மற்றவர்களும் கவர்ன்மெண்டார் இத்தேசத்தார் மீது அநியாயமாக அதிகவரி போட்டு வருத்துவதைப்பற்றிக் கண்டித்துப் பேசினார்கள்.

---

**மிஸ்டர் ஹியூம்.** சென்ற 8 - வருஷ காலமாக இந்தியாவுக்கு அனுகூலமாக இந்தியர்களோடுசேர்ந்துஉழைத்த காங்ரெஸ்சபையை முன்னுக்குக் கொண்டுவந்த இந்தியாவின் ஜனோபகாரியாகிய மிஸ்டர் ஏ. ஓ. ஹியூம் அவர்கள் சென்ற மார்ச்சு மீ 19உ பம்பாயைவிட்டுக் கப்பலேறிச் சீமைக்குச்சென்றார். அவர் இனி இந்தியாவுக்கு மறுபடியும் வந்துபோவது அசாத்தியமென்று சொன்னதால் பம்பாய்வாசிகளெல்லாரும் சேர்ந்து அவருக்கு சர்வோபசாரங்களும் செய்து நன்றியறிதல் கூறி வந்தனவழிபாடுகள்செய்து அவரை ஊருக்கனுப்பினார்கள். மிஸ்டர் ஹியூம் இந்தியர்கள் தங்களிடத்துள்ள குறைகளை நிவர்த்தித்துக்கொண்டாலன்றி அவர்கள் ஒருஜாதியாக உருப்பட்டு முன்னுக்கு வருவது கூடாமையென்று சொல்லி, நம்மவர்கள் சீர்திருத்திக்கொள்ளவேண்டிய குற்றங்களில் சிலவற்றை யெடுத்துரைத்துப் புத்திமதிகூறி, யாவரும் மனமுருக விடைபெற்றுக்கொண்டு சீமைக்குச்சென்றார்.

---

**இந்தியா வரவு செலவு கணக்கு.** மார்ச்சு மீ 22உ வியாழக்கிழமைய தினம் கல்கத்தாவிற் கூடிய இராஜப்பிரதிநிதி சட்ட நிரூபண சபை முன் இந்தியா அரசிறை மந்திரியாகிய கனம் மிஸ்டர் வெஸ்ட்லாண்ட் அவர்கள் 1894-95ம் வருஷத்துக்கு இந்தியா வரவு செலவு திட்டக்கணக்கு விவரம்போட்டிருப்பதைப்படித்து வியாக்கியானம்செய்து விளங்கவைத்தார். மார்ச்சு மீ 1உயில் இந்தியா வரவு செலவு திட்டக்கணக்கு விவரம்போட்டுப் பார்த்தபொழுது இந்த வருஷத்துக்கு வரவு தொகை மொத்தத்தை விடச்செலவு தொகை மொத்தம் $3\frac{1}{2}$க் கோடி ரூபாய் அதிகமாக விருக்கக் காணப்பட்டது. மார்ச்சு மீ 10உ 'டாரிப் ஆக்ட்' சட்டமாகச் செய்யப்பட்ட பின் செலவைக் குறைக்க யத்தனித்து, உபயோகமான மராமத்து வேலைகள், ரயில்போடல், கால்வாய் வெட்டல் முதலிய தேச வளப்ப விர்த்திக்கனுகூலமான வேலைகளை நிறுத்தி $3\frac{1}{2}$க் கோடியாகவிருந்த அதிகப்படிச் செலவை 2 கோடியே 92 லக்ஷத்து 31 ஆயிரத்துக்குக் கொண்டுவந்தார். செலவு தலைப்பில்

இப்படி யேறிகின்ற இந்தத்தொகையைச் சேகரிக்க நூதனமாக வழிவகை தேடவேண்டிய தவசியமாயிருந்ததால் அதற்கு மூன்று ஏற்பாடுகள் செய்து அவற்ருல் இந்தியா கவர்ன்மெண்டார் வருமானத்தை ஒருவாறு அதிகப்படுத்திக் கொண்டார்கள். அவை முதலாவது‘ டாரிப் ஆக்ட்’டினுல் விதித்த இறக்குமதி வரி. இதனுல் வரக்கூடிய அதிக வரும்படி கோடியே 20 லக்ஷத்தில் இவ்வரி வசூல் செய்யப்பிடிக்கும் சிப்பந்திச்செலவு ரூபாய் 6 லக்ஷமும் போனல் பாக்கி கோடியே 14 லக்ஷம் மிகுதி. பஞ்ச நிவர்த்திக்காகவும் பஞ்சம் வராதபடி பாதுகாப்பதற்காசவும், ரயில்வேகள் போட்டும் கால்வாய்கள் வெட்டியும் தேச வளப்பத்தை விர்த்திபண்ணத்தக்க வேலைகள் செய்துவர வருஷா வருஷம் 1½க் கோடி ரூபாய் செலவிட்டு வந்தார்கள். இது லார்ட் லிட்டன் காலத்தில் இதற்கென்று பிரத்தியேகமாச விதிக்கப்பட்ட ‘லைஸென்ஸ் வரி’ வசூலிலிருந்து வந்ததொகை. இதில் ஒருபாகம் கவர்ன்மெண்டார் பஞ்ச நிவர்த்திக்காசப் போட்ட ‘பெங்கால்-நாகப்பூர் ரயில்வே,’ ‘இந்தியன் மிட்லாண்ட் ரயில்வே’ இவைகளினுல் கவர்ன்மெண்டுக்கு நேரிடும் நஷ்டத்துக்கு ஈடாகப்போக, பாக்கி கோடியே 7 லக்ஷத்து 62 ஆயிர ரூபாய் இந்த வருஷம் இத்தலைப்பின் கீழ் செலவு செய்யப்பட விருந்தது. இத்தொகையை உபயோகமான ரயில்வேகள் போடல், கால்வாய்கள் வெட்டல் இவைகளுக்கு உபயோகிக்காமல் நிறுத்தி சாதாரண துரைத்தனச் செலவுக்குபயோகப் படுத்திக்கொள்ளத் தீர்மானித்து விட்டார்கள். இவ்விரண்டு வகைகளுமன்றி மூன்ருவதாக அந்தந்த இராஜதானி கவர்ன்மெண்டார் செட்டாகச் செலவுசெய்து துரைத்தன சீர்திருத்த ஏற்பாடுகள் செய்வதற்காகவும் ஜனங்களுக்கு உபயோகமான வேலைகள் செய்வதற்காகவும் மிகுத்து வைத்திருந்த தொகைகளையெல்லாம் அவர்களிடமிருந்து அடித்துப் பறித்து எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தார்கள். இதனுல் ஒரு 40 லக்ஷத்து 50 ஆயிரம் ரூபாய் வந்தது. இப்படி இம்மூன்று விதங்களாலும் வந்த மொத்தத்தொகை 2 கோடியே 62 லக்ஷத்து 12 ஆயிரம் ரூபாய். இது போக பாக்கி 30 லக்ஷத்து 19 ஆயிரம் 4 ரூபாய் இன்னும் குறைவாகவே யிருக்கிறது. இத்தொகையைப்பற்றிப் பின்னுல் பார்த்துக்கொள்வோமென்று விட்டுவிட்டார்கள். இப்படியாக இந்த வருஷம் புது வரிவிதித்தும், ஜன க்ஷேமத்துக்கும் தேச வளப்ப விர்த்திக்கும் அவசியமான வேலைகள் சீர்திருத்தங்கள் இவைகளை நிறுத்தியும் வரவுக்குச்செலவு சரிக்கட்ட முடியாமல் 30 லக்ஷத்துச்சொச்ச ரூபாய் குறைவாகும்படியே கணக்கை விட்டிருக்கிருர்கள். இந்த வருஷமுண்டான அதிகச்செலவுகளில் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் நாணய வட்டத்தால் வரும் நஷ்டத்துக்கு ஈடுகட்டிக் கொடுப்பதாகச் சொல்லி அவர்களுக்கு அதிகச்சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ததில் சுமார் கோடியே 40 லக்ஷ ரூபாய் அதிகச் செலவு நேர்ந்திருக்கிறது. இது ஐரோப்பியர்பக்கமிருந்து பார்ப்பவர்களுக்கு மிகவும் நியாயமாகத் தோன்றினுலும், இந்தியாவில் வரிகொடுக்கும் ஏழை ஜனங்கள் பக்கமாகவிருந்து பார்க்கிறவர்கள் இது மெத்த அநியாயமென்று முறையிடுகிருர்கள். கவர்ன்மெண்டார் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் படும் கஷ்டங்களைப்பார்த்துச் சகிக்க முடியாமலே அவர்களுக்கு இந்த அற்ப சாதகம் செய்யத் துணிந்தோமென்கிருர்கள். குடிகள் பக்ஷமாயிருந்து பேசுகிறவர்கள் ஏழைக்குடிகள் உடலோடுயிர் தங்கியிருக்கப்படும் கஷ்டங்களைப் பார்த்தால் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் படும் கஷ்டமும் ஒருகஷ்டமா என்கிருர்கள். இந்த விஷயம் இப்படி யாக இன்னும் தர்க்கத்திலிருந்து வருகிறது.

---

**யூனிவர்ஸிடி கல்விச்சங்கம்.** சென்னை யூனிவர்ஸிடி கல்விச்சங்கத்தார் அவர்கள் செய்யும் வருஷாந்தரப்பரீக்ஷைகளில் தேறியவர்களுக்கு வித்தியாப் பட்டங்கள் அளிப்பதற்காகக் கூடும் வருஷாந்தரக் கூட்டம் இம்முறை மார்ச்சு ௴ 28 ௳ சாயங்காலம் கூடிற்று. அப்பொழுது வித்தியார்த்திகளுக்கு வழக்கம்போல் வித்தியாபட்டங்களளிக்கும் சடங்கு முடிந்தபின் டாக்டர் மில்லர் அவர்கள் நூதனமாக வித்தியாபட்டம் பெற்றவர்களுக்குப் புத்தி மதி கூறிச் செய்யும் உபந்நியாசம் செய்தார். அவர் 1871-ம் வருஷத்தில் ஒருமுறை இதே மாதிரி உபந்நியாசம் செய்யத் தெரிந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது 38-ப் பேர்கள் வித்தியாபட்டம் பெற்ருர்கள். இந்த வருஷம் வித்தியாபட்டம் பெற்றவர்களின் மொத்தத்தொகை 443. சென்ற 23-வருஷ காலத்தில் வித்தையபிவிர்த்தியாயிருக்கும் அம்சங்களைக்குறித்தும் இனி அபிவிர்த்தியாகவேண்டிய அம்சங்களைக் குறித்தும் அவர் விவரித்துக் கூறி, இந்தியர்களுக்கு உறுதி, மனுேதிடம், எடுத்தது முடிக்குந்திறமை, விடாமுயற்சி முதலிய சிலாக்கிய குணங்களில்லாமையை யெடுத்துக் காட்டி அவைகள் நீங்குவதற்குப் பரிகாரமாக அவருக்குத்தோன்றியவைகள் சிலவற்றை யெடுத்துரைத்துப் பேசினுர்.

---

**புதிய ஸெனேட் மெம்பர்கள்.** இந்த வருஷம் 9 பேர்கள் கவர்ன்மெண்டாரால் யூனிவாஸிடி ஸெனேட்சபை மெம்பர்களாக நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்கள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பெஸ்ட், (2) மிஸ்டர் ஜோன்ஸ் (ப்ரெஸிடென்ஸி காலேஜ்), (3) மிஸ்டர் எம். டி. குவின் (பச்சையப்பன் காலேஜ் தலைவர்), (4) மிஸ்டர் எ. ஏ. ஹால் (டீச்சர்ஸ் காலேஜ் தலைவர்), (5) ஸர்ஜியன் மேஜர் ஜான் மெய்ட்லாண்ட், எம். டி. (6) ரெவரெண்ட் மார்கோஷி (நாஸரெத்), (7) ம-ா-ா-ஸ்ரீ கே. இராமானுஜாசாரியார், எம். ஏ., பி. எல். (விஜயநகரம் மஹாராஜா காலேஜ் தலைவர்), (8) ஸர் சவலை இராமசாமி முதலியார், (9) மிஸ்டர் என். சுப்பிரமணியம் (பாரிஸ்டர் அட்லா.)

“கற்ருேர் கடாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்ருே மெனவுகந்து பின்புகற்பர்—மற்ருேர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு.”


# விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம். II. 1894௵ ஏப்பிரல்௴ இலக்கம் 12.


## மனிதநூல்.

“மனிதன் உணரவேண்டிய விஷயம் மனிதனைப் பற்றியே” என்னுமினிய வசனத்திலுள்ள தத்துவம் ஆராய்ந்து பார்த்தால்மட்டும் விளங்கும். “நாம் யார்? எங்கிருந்துவந்தோம்?” என்ற கேள்விகளை மாத்திரம் கேட்டுவிட்டு அவைகளுக்குச் சரியான விடையை அறியாமலும், அறியவிரும்பாமலுமிருப்பவர்களெத்தனைபேர்? “நாம் யாரோ! எங்கிருந்து வந்தோமோ! அதைப்பற்றி நமக்கென்ன? நமக்குண்டு: நம்முடைய காரியமுண்டு” என்று சொல்லி காலக்ஷேபத்திற்கு வேண்டிய விஷயங்களிலேயே கவனத்தைச்செலுத்தி ஒன்றையுமறியாமலிருப்பவர்களெத்தனைபேர்? தன் ஞாபகங்கூட இல்லாமல் வயிற்றைக் கழுவுவதிலும், நித்திரை செய்வதிலும் காலத்தைத்தள்ளிக் கொழுப்பு ஏறி மதயானைகள்போல் அலைந்து திரிபவர்களெத்தனைபேர்? ஆனுலிவர்களைப் பழிப்பது சரியன்று. குருடர்கள் தமக்குமுன்னே பொருள்கள் இருப்பதை அறியாமல் முட்டிக்கொண்டால் அது அவர்களுக்குக் கண்ணில்லாத தோஷமேயொழிய அவர்களுடைய பிசகில்லை. அதுபோலவே மனிதர்கள் தம்மையறியவேண்டிய சாதனமொன்றில்லாமல் அவர்களிச்சைப்படியிருந்து பிறகு கஷ்டப்பட்டால் அது சாதனமில்லாப் பிசகேயொழிய அவர்களுடைய பிழையன்று. மனிதனுற்பத்தி, மனிதகுணம், மனிதச்சேர்க்கை, மனித நாகரீகம் இவற்றினுடைய சரித்திரத்தை அவர்களறிந்திருந்தால் அப்பொழுது அவர்களிருக்கும் மாதிரி வேறுதானென்பதற்கு ஐயமில்லை. ஒருவன் தன்னுடைய சொருபத்தையும், குணத்தையும், இயற்கையையும் அறிவானுனல், அவனுக்கு உலகத்தினியற்கையை அறிவதுபெரிதன்று: அவனுக்கு மனிதன் செய்கிற தந்திரம், அவன் நினைக்கிற எண்ணம், அவன் செய்கை, பேச்சு, சிரிப்பு, இருப்பு முதலியவற்றைத் தெரிந்துகொள்வது கஷ்டமு மன்று.

ஒருவன் மனிதனியற்கையை அறியவேண்டுமானுல் மனிதனைப் பற்றிப் படித்தல்வேண்டும். மனிதர்கள் தொன்றுதொட்டே (நாமிப்பொழுது பார்க்கிறபடி) நாநாவிதங்களாயிருந்தார்களா அல்லது ஒருவிதத்திலிருந்து படிப்படியாக அநேகவிதமுள்ளவர்களாய் ஆனுர்களா? மனிதர்களுக்கு ஆரம்பத்திலேயே எழுதப்படிக்கத் தெரியுமா? தங்களுடைய எண்ணங்களை வெளிவிடுவதற்கு என்னென்னசெய்தார்கள்? தங்களுணவிற்கு ஆதிகாலத்திலேயே நிலத்தை உழுது பயிர்செய்வதற்கு ஆரம்பித்தார்களா? தங்களைக்காப்பாற்றிக் கொள்ளுவதற்கு உலக ஆரம்பத்திலேயே கத்தி, கேடயம், துப்பாக்கி, குண்டு, பீரங்கி முதலியவற்றை உபயோகித்தார்களா? தாங்கள் வாசம் செய்வதற்குப் பூர்வகாலத்திலேயே மாடவீடு, கோட்டை, அரண்மனை முதலானவைகளைக் கட்டிக்கொண்டார்களா? தாங்கள் தரித்துக்கொள்வதற்குத் தொடக்கத்திலேயே சரிகைவேஷ்டி, மல்வேஷ்டி, அங்கி சட்டை என்பனவற்றை அடைந்திருந்தார்களா? தாங்கள் பிரயாணம்செய்வதற்கு நினைத்தவுடனே, புகைவண்டி புகைக்கப்பல்களினுடைய எண்ணம் தோன்றினதா? மனிதர்கள் ஆதிகாலத்திலேயே ராஜாங்கமென்றும், அதற்கு ஜனங்கள் உட்பட்டிருக்கவேண்டுமென்றும், மீறி நடப்போர்களுக்குத்

தகுந்த சிட்சை விதிக்கப்படுமென்றும் இப்படி நிபந்தனைகள் ஏற்படுத்திக்கொண்டார்களா? இவற்றைக் குறித்துச் சற்று கவனிப்போம். இந்த விஷயங்களைப் பற்றி ஒழுங்குபெற விவரித்து உரைக்கும் நூல் ‘மனிதநூல்’ ஆகும்.

இனி யிது நிற்க, பர்மா தேசத்தில் வெள்ளையானை உண்டென்று நாம் கேட்டறிந்திருக்கிறோம். ஒருவன் இந்தியாதேசத்தில் கறுத்தயானையைப்பார்த்து விட்டு, பர்மா தேசத்திற்குப்போய் அங்கிருக்கும் வெள்ளையானையை, தான் இந்தியாவில் பார்த்தறிந்தபடி, கறுப்பாயிராமல் வெள்ளையாயிருக்கக்கண்டு, அது யானையன்று, கரடி, சிங்கமென்று சந்தேகிப்பானோ? கொச்சி நாயை வளர்த்த ஒருவன் கோம்பை நாயைக்கண்டு, புலியோவென்று மலைப்பானோ? ‘பாராசாரி’ என்றழைக்கப்பட்ட பெரியமாடுகளை வளர்த்த ஒருவன் ‘புலிக்குளத்துக்காளை’ என்று சொல்லப்பட்ட சிறுமாடுகளைக்கண்டு, சிறுத்தையென்று திகைப்பானோ? நிற வித்தியாசம், ஆகிருதி வித்தியாசம், இன்னும் சீதோஷ்ணஸ்திதி விசேஷத்தால் உண்டாகும் தேகவேற்றுமை —இப்பேர்ப்பட்ட காரணங்களைக்கொண்டு ஓர் இனத்தைச்சேர்ந்தனவற்றை வேறு இனங்களில் சேர்ந்தவைகளாக நினைப்பது அசம்பாவிதமான காரியம். பர்மா தேசத்து யானைக்கும், இந்தியாதேசத்து யானைக்கும் நிறவித்தியாசமொன்று தவிர மற்ற அவயவங்களனைத்தும் ஒற்றுமையாயிருக்கின்றன. மேற் கூறிய இருவிதமாடுகளும் ஆகிருதி வித்தியாசமொன்று தவிர மற்றெல்லாவிஷயங்களிலும் ஒற்றுமைப்படுகின்றன. மேற்குறித்த இருவித நாய்களில் ஆகிருதி வித்தியாசமொன்றுண்டு: இன்னும் கொச்சி நாயினுடம்பில் ரோமமிருப்பதுபோல் கோம்பை நாயினுடம்பிலிராது. கொச்சி நாயிருக்கும் இடத்து சீதோஷ்ணஸ்திதி விசேஷத்தால் அதற்கு ரோமமுண்டாகிறது. அப்படியே கோம்பைநாயிருக்கும் இடத்து சீதோஷ்ணஸ்திதிவிசேஷத்தால் அதற்குரோமமுண்டாகவில்லை. ஆகவே, ஒரே இனத்தில் சேர்ந்தவைகள், நிறத்திலும், ஆகிருதியிலும், சீதோஷ்ணஸ்திதி விசேஷத்தால் உண்டாகும் தேகவேற்றுமையிலும், வித்தியாசப்படுமென்றறிந்தோம். இடையே தோன்றிய சிற்சில காரணங்களால் வித்தியாசங்கள் ஏற்பட்டாலும், வித்தியாசப்படுபவைகள் ஒரே இனத்தைச் சேர்ந்தனவென்பதற்கு ஆக்ஷேபனையொன்றுமில்லை. பிராணிகளில் முக்கியமான அவயவங்களிலொற்றுமையிருந்து, வித்தியாசங்கள் என்ன இருந்தபோதிலும், அவைகள் ஒரே இனத்தைச் சேர்ந்தனவேயாம்.

இனத்திற்கு இந்நூலில் “வர்க்கம்” என்று பேர் கொடுப்போம்.

ஒரு வர்க்கத்தைச் சேர்ந்து அதில் வித்தியாசப்படுபவைகளைக் “குலம்” என்று அமைப்போம்.

நாம் நம்முடைய தேசத்திலேயே அநேகவிதமான மனிதர்களைப் பார்த்திருக்கிறோம். அவர்களில் நிற வித்தியாசம், ஆகிருதி வித்தியாசம், புத்தி தீட்சண்ய வித்தியாசம், இன்னும் மற்றெல்லாவித்தியாசங்களுமிருக்கக் கண்டிருக்கிறோம். நிறம், ஆகிருதி, புத்தி தீட்சண்யம் இம் மூன்று விஷயங்களும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளாகிய தம்பி தமையன்மார்களில் வித்தியாசப்படக்காணவில்லையா? தேசத்திற்கு தேசம் மனிதர்கள் வித்தியாசப் படுகிறார்கள். ஐரோப்பியர்கள் நிறம் வெள்ளை. சீனர்கள் நிறம் மஞ்சள். ஆப்பிரிக்காதேசத்து நீக்ரோவர் நிறம் கறுப்பு. ஐரோப்பியர்களுக்குப் புத்தி அதிக கூர்மை. சீனர்களுக்கு கூர்மைபோதாது. நீக்ரோவருக்கோ இதைப் பற்றி கேட்க வேண்டியதில்லை. இம்மூன்று தேசத்தார்களில் விரோதமான வித்தியாசங்களிருந்தபோதிலும், அவர்கள் மனித “வர்க்கத்தைச்” சேர்ந்து அதிலிருந்து பிரிந்த மனித “குலங்களை” யொழிய வேறல்லர்.

இனிப் பிற்கிளையுண்டாக்கும் திறமையைப்பற்றிப் பேசுவோம். குதிரை கழுதை ஆகிய இவற்றினது சம்யோகத்தால் கோவேறுகழுதை உண்டாகிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இக்கோவேறுகழுதைக்கு மறுபடியும் பிற்கிளையுண்டாக்கும் திறமைகிடையாது. ஒரு வியாபாரி தன் கடன்காரனைப் பணம் கொடுக்கும்படி வற்புறுத்தின பொழுது அக்கடன்காரன் நான் கொடுக்கமாட்டேன் என்று சொல்லுவதற்குப்பதிலாக உன் வீட்டுக்கோவேறுகழுதை குட்டிபோடட்டும்: உடனே நான் பணம் தருகிறேன் என்று சொன்னதாக ஒரு கதையுண்டு. கோவேறுகழுதைக்குச் சந்ததி கிடையாது: அதனுடைய பெற்றோர்களாகிய குதிரை கழுதை ஒவ்வொன்றும் வெவ்வேறு வர்க்கத்தைச் சேர்ந்தது. இரண்டுவேறான வர்க்கங்களைச்சேர்ந்த பிராணிகளின் சம்யோகத்தாலுண்டாகும் மூன்றாவது பிராணிக்கு பிற்கிளையுண்டாக்கும் சக்திகிடையாது என்பது மேற்கூறிய உதாரணத்தாற் பெறப்பட்டது. ஆனால் குதிரை வர்க்கத்திலாவது, கழுதை வர்க்கத்திலாவது எவ்வளவு வித்தியாசங்களிருந்தபோதிலும், அந்தந்த வர்க்கப் பிராணிகள் செய்யும் சம்யோகத்தால் சந்ததியுண்டாக்கும் சக்தியுள்ளவைகள் பிறக்கும்.



ஆகவே மேற்குறிக்கப்பட்ட “வர்க்கம்” என்பதற்கு முக்கிய அவயவங்களினொற்றுமையும், பிற்கிளையுண்டாக்கும் திறமையும் இன்றியமையாத குணங்களாம். ஆனால் “குலம்” என்பதோ ஒரே வர்க்கத்தைச் சேர்ந்திருந்தபோதிலும் சில குறிப்பான தன்மைகளால் பிரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

ம. சு. இராமசுவாமி ஐயர்.

## ‘மஹாபலிபுரம்’ என்று வழங்கும் மாமல்லபுரம்.

மஹாபலிபுரம் என்னும் ஊரானது சென்னைக்குத் தெற்கே 32-மைல் தூரத்தில் செங்கற்பட்டு ஜில்லாவில் கோவளம், சதுரங்கப்பட்டணம் இவைகளுக்கு மத்தியில் கடற்கரையிலிருக்கிறது. நமது தென்னிந்தியாவில் நாணயத்திற்கும்ஆச்சரியத்திற்கும்பெயர்பெற்ற சிற்பவேலைகள் எவ்விடமிருக்கின்றனவென்றால் மஹாபலிபுரத்தில்தான். இந்தக்காரணத்திற்காகவே அநேக வெள்ளைக்காரர்கள் ஒவ்வொரு விடுமுறைதோறும் மகாபலிபுரம் போய்ப் பார்த்துவருவது வழக்கம். அன்றியும் மகாபலிபுரத்தைப்பற்றியும் அவ்விடத்திய சிற்பத்தைப்பற்றியும் அநேக புஸ்தகங்களில்அவர்கள் எழுதியிருக்கிறார்கள். நம்மவர்களில் அநேகர் மகாபலிபுரத்தைப் பார்த்தேயிருக்கமாட்டார்கள். செங்கற்பட்டில் அல்லது சென்னையிலிருக்கும் சிலர் மாத்திரம் இந்த ஊரைக்கண்டுகளிக்கும் பாக்கியம் பெற்றிருக்கக்கூடும். அங்கேயுள்ள அபூர்வக்காக்ஷியை எல்லாரும் போய்ப்பார்த்து வியப்பை அடையும்பொருட்டு நாமிந்த சஞ்சிகையில் இந்த ஊரைப்பற்றி எழுத முயலுகிறோம்.

முதல் முதலில் மகாபலிபுரம் என்றபெயரைப்பற்றி சற்று விசாரிப்போம். இந்த ஊரில் மகாபலிசக்கிரவர்த்தி யாண்டதாகவும் அதன் நிமித்தம் இந்த ஊருக்கு ‘மகாபலிபுரம்’ என்று பெயர்வந்ததாகவும் சிலர் சொல்லுவார்கள். மகாபலிசக்கிரவர்த்தி கதை எல்லாருக்கும் தெரிந்தவிஷயமாகையாலதை நாமிங்கு எடுத்துக்கூறுவது அனாவசியம். ஆனால் இந்த ஊரிலிருக்கும் சாஸனங்களில் ஒன்றாவது மகாபலிசக்கிரவர்த்தியைப்பற்றிச் சொல்லாததினால் மகாபலிபுரமென்று இந்த ஊருக்கு வந்த பெயரானது காரணமின்றி ஜனங்களால் சப்தானுஸாரியாய் கொடுக்கப்பட்டதாக ஊகிக்கவேண்டியிருக்கிறது. ‘மகாபலிபுரம் என்பது எந்த சப்தத்தை அனுசரித்து வந்தது? ஆனால் இந்த ஊரின் சரியான பெயர் என்ன?’ என்று கேள்விகள் பிறக்கலாம். சாஸனங்களாலும் சரித்திரத்தாலுமிந்த ஊரின்பெயர் ‘மாமல்லபுரம்’ என்று ஏற்படுகிறது. மல்லான் என்று பல்லவ வம்சத்து அரசர்களின் பட்டப்பெயர். இவர்கள் சோள அரசர்களுக்கு முந்தி தொண்டமண்டலத்திலாண்டுவந்தவர்கள். ‘மா’ என்றால் ‘பெருமை பொருந்திய’ என்பது எல்லாருக்கும் தெரிந்த அருத்தம். பெருமை தங்கிய மல்லவர்களுடைய பட்டணம் என்பது இதன் பொருளாகும். இந்தச் சிறு ஊர் பழைய காலத்திலிருந்தபடியாலிதற்கு ‘மாமல்லபுரம்’ என்று பேருண்டாயிற்று. மாமல்லபுரம் என்ற சப்தங்களுக்கு பிற்காலத்தில் அதிலடங்கிய சரித்திரம் தெரியாமற்போகவே அங்கிருந்த ஜனங்களுக்கு அருத்தம் விளங்கவில்லை. அந்த சப்தங்களை ஒருவாறு மாற்றி மகாபலிபுரம் என்றுவைத்துவிட்டார்கள். இந்த 2-பெயர்களுடனும் இன்னமொருபெயர் இந்த ஊருக்கு உண்டு. அதாவது ‘Seven Pagodas’—ஏழு கோவிற்கள். இந்தப் பெயர் பார்க்கும்பொழுதே இங்கிலீஷ்காரர்களிடமிருந்து உண்டானதாகத் தெரிகிறது. 100,—150-வருஷங்களுக்கு முன் இந்த ஊருக்குச் சமீபத்தில் கப்பல்கள் போகும்போது மாலுமிகள் கரையோரம் 7-கோவில்கள் தங்களுக்கு தோற்றினபடியால் இந்த இடத்திற்குத் “Seven Pagodas” “ஏழு கோவிற்கள்” என்று பெயரிட்டார்கள். இதை ஒரு நிச்சயமாய் வைத்துக்கொண்டு முதல் முதலில் இவ்விடத்தில் 7-கோவிற்களிருந்ததாகவும் அவைகளில் 6-சமுத்திரத்தில் முழுகிப்போயின என்றும் இப்போது ஒன்றுதான் கரையோரம் இருக்கிறதென்றும் ஜனங்கள் சொல்லுகிறார்கள். இது சுத்தப்பிசகு. ஏனெனில் இப்போது மாலுமிகள் மாமல்லபுரம் சமுத்திரத்தின் வழியாகப் போகும்போது கரையோரமிருக்கிற இந்த ஒரு கோவிலைக்கூடக் கண்டுபிடிப்பது முடியாதகாரியம். ஏனெனில் அது வெகு தாழ்ந்திருக்கிறது. ஆனால் உயர்ந்த குன்றுகளையும் அக்குன்றின் சிகரங்களையும் தூர இருந்து பார்க்கலாம். அவைகள் 7-உருவங்களாகக் காணப்படுகிறபடியால் இந்த ஊருக்கு Seven Pagodas என்று அவர்கள் பெயரிட்டுவிட்டார்கள். குன்றின் சிகரத்தில் எப்போதும் ஹிந்துக்கள் கோவில்கட்டியிருக்கிறார்கள் என்பது அவர்களினபிப்பிராயம். அப்படி அவர்களிட்ட பெயர் நாளது வரையில் வழங்கியும் வருகிறது. ஆகையாலிந்த ஊருக்கு மூன்று முக்கியப் பெயர்கள் உண்டு: —மகாபலிபுரம், மாமல்லபுரம், ஏழு கோவிற்கள்.

இவற்றுள் மாமல்லபுரம் என்பதுதான் சரியான பெயர்.

இந்தப் பெயருக்குத் தகுந்தபடி இது முற்காலத்தில் ஒரு பெரிய பல்லவ பட்டணமாயிருந்தது. தற்காலத்தில் பல்லவர்களுடைய விசித்திர மான சிற்பசாஸ்திரவேலைகளைப் பார்க்கவேண்டுமென்ருல் மாமல்லபுரம்போனுல்தான் தெரியும். இந்தப் பட்டணமானது (இப்பொழுது சிறு கிராமம்,) சமுத்திரக்கரையிலிருக்கிறது. பட்டணமிருந்து 'பாப்பாஞ்சாவடி'யிற் போய் படகேறினுல் ஒரு ராத்திரியில் போகலாம். அல்லது சாயந்திரம் தென்னிந்தியா ரயிலேறி செங்கற்பட்டிலிறங்கி திருக்கழுக்குன்றம் மார்க்கமாய் ஒரு ராத்திரியில் மாமல்லபுரம் போய்ச் சேரலாம். தூரத்திலிருந்து பார்க்கும்போது குப்பல், குப்பலாய் சில கற்கள் கண்ணுக்குத் தென்படும். இந்த இடத்திலும் ஆச்சரியமிருக்கிறதா என்று ஜனங்கள் சந்தேகிக்கக்கூடும். குன்றுகளைக் கடந்து ஊருச்குள்வந்து அவைகளின் முன் நின்றுவிட்டால் நேத்திரங்களுக்கு உண்டாகுமானந்தத்திற்கு அளவேயில்லை. அநேக விசித்திரவேலைகள் நாலுபக்கங்களிலும் கண்ணைக்கவரும்போது 'இது என்ன அற்புதக் காக்ஷி' கதைகளில் வர்ணிக்சப்பட்டிருக்கிற இந்திரலோகக்காக்ஷியா, இது என்ன? வென்று சந்தேகிக்கும்படி தோன்றும். இவ்விடத்திய சிற்பவேலைகளின் அற்புதமென்னவென்ருல் அநேகமாய் எல்லாம் ஒரேகல்லில் குடைந்தெடுத்த வேலை. இவ்வேலையை அங்கிலேய சிற்பசாஸ்திரிகள் "Monolithic caves"—ஒருகல்லில் செதுக்கப்பட்ட குகைகள்என்பார்கள். இது தான் இங்கு வெகு விசேஷம். மாமல்லபுரத்தைத் தவிற வேறு ஒரு இடத்திலும் தென்னிந்தியாவில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட குகைகளும் கட்டிடங்களும் கிடையவே கிடையா. பம்பாய்க்கு சமீபத்தில் 'எலிபான்டா' (Elephanta) என்னும் குகைகளும், தக்காணதேசத்தில் 'எல்லோரா' (Ellora) என்னும் இடங்களும் மாமல்லபுரத்தைப்போல ஒரு கல்லில் செதுக்கப்பட்ட குகைகளையுடையவைகள். ஆகையால்தான் இந்த ஊருக்கு இவ்வளவு மகிமை வந்தது. ஒவ்வொரு வேலையும் சிற்ப சாஸ்திரத்தை அனுசரித்து ஒரு வித பழுதுமில்லாமல் கடைசல் பிடித்தாற்போல் தோன்றும்.

முதல் முதலில் மாமல்லபுரத்தில் நமது கண்ணுக்குத்தென்படுவது 90-அடி நீளமும் 30-அடி உயரமுமான ஒரு பெரும்பாறை. இதற்குப்பெயர் 'அர்ச்சுனன் தபசு' என்று சொல்வார்கள். நாம் இதை முதலில் வரைவோம். இது அதிவிசித்திரமானவேலை. இது ஒரு பாறை என்று முன்னமே சொன்னோமே; இதில் 150-200 உருவங்கள், மனுஷன், மிருகம், பக்ஷி, இவை இந்த லோகத்தில் எத்தனை வகைகளுண்டோ அத்தனையும் தன் தன் வடிவத்தில் மேலெடுத்துக் காட்டி கொத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் அழகின் அவதாரமாகத் தென்படுமேயல்லாது அற்பஸ்வற்பமாகக் காணுது. நல்லது, இத்தனை உருவங்களை மேலெடுத்துக்காட்டிக் கொத்திய சிற்பசாஸ்திரிகள் எவ்வளவு கைதேர்ந்தவேலைக்காரர்களாக இருக்கவேணும். ஒரேகல்லில் 150,—200 பிம்பங்கள் வேலைசெய்யப்பட்டிருக்கின்றன. ஒரு பிம்பம் ஊனப்பட்டால் எல்லாம் போயிற்றே; அப்படி வராது என்கிற தைரியமிவர்களுக்கு இருக்க எத்தனை கைப்பழக்கமும் தேர்ச்சியுமிவர்களடைந்திருக்க வேண்டும். ஒவ்வொன்றையும் பார்த்தால் உயிர் ஒன்றொழிய அதே பாவனையாயிருக்குமே யல்லாது வேறு வித்தியாசம் கொஞ்சங்கூட இராது. இந்த வேலைக்கு 'அர்ச்சுனன் தபஸ்' என்ற பெயர் வந்ததற்குக் காரணம் என்னவென்ருல் இந்த சித்திரத்தின் சற்றேறக்குறைய நடுமையத்தில் ஒருவன் ஆனந்தத்தால் கூத்தாட நாம் காண்போம். அவன் தான் அர்ச்சுனன். சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் வாங்க இவன் காட்டிற்கு வந்தான்; இவன் தவத்தில் உட்காரும்போது அந்தக் காட்டிலிருந்த எலி, புலி, காக்கை, கௌதாரி, யானை, கரடி, பூனை, பாம்பு முதலான எல்லா ஜந்துக்களும் இவனுடன் தவத்திற்கு வந்துட்கார்ந்தனவாம். அங்கிருக்கும் பிம்பங்களின் அருத்தம் இதவே. இவன் தவம் பலித்து, ஈசுவரன் கையில் சூலாயுதம் ஏந்தினவரா யிவன் கண்ணிற்குப்பிரசந்நராகவே, இவன் ஆனந்தக் களிப்பால் தாண்டவமாடினுன். அருச்சுனனுக்குப் பக்கத்தில் சூலபாணியாகிய ஈசுவரனை இந்த சித்திரவேலையில் நாம் காணலாம். இந்தத் தபசியாகிய அர்ச்சுனன் அநேக நாளாய் பட்டினி கிடந்து தோலொட்டி எலும்பு தோன்றியிருப்பதையும் அப்படியே நாம் காணலாம். அதல்லவோ சிற்பம். இந்த அற்புத சிற்பத்தைப் பாராக் கண்கள் வீண் கண்கள்.

இதற்குச் சமீபத்தில் **கிருஷ்ணமண்டபம்** என்றொரு மண்டபமிருக்கிறது. இதுவும் ஒரே கல்லில் கொத்தியிருக்கப்பட்டவேலை. இதில் 100-பதுமைகள் மாடும் மனிதனுமாகக் கொத்தப்பட்டிருக்கின்றன. வெகு விசித்திரவேலை. கிருஷ்ணபிரானுடைய கோகுலவாஸம் இதில் பொளியப்பட்டிருக்கிறது. புல்லாங்குழலூதிக்கொண்டு கண்ணன் நிற்க, அவனைச் சுற்றி 50-மாடுகள் மதத்துடன் நிற்பதையும், சிலர் மாடு கறப்பதையும், இடைச்சிகள் தயிர்க்கூடையைத் தலையிற் சுமந்துபோவதையும், குழந்தைகள் இடுப்பிலும் தோளிலும் தொத்திக்கொண்டிருப்பதையும், சில கிழங்கள் தடியை ஊன்றி நடப்பதையும், சில சிறுபெண்கள் உல்லாசமாய் சிரித்துக்கொண்டுபோவதையும், பிள்ளைகள் விளையாடுவதையும், கன்றுக்குட்டிகள் துள்ளுவதையும், தாய்மடியில் ஊட்டுவதையும் இந்தக் கிருஷ்ண மண்டபத்தில் காணலாம். இவ்வளவு வேலையும் ஒரே கல்லில்.



அங்கிருந்து கொஞ்சதூரம் மலை ஏறிச்சென்ருல், **'சேஷசாயிக் குகை'** என்ற ஒரு குகைக்கு நாம் வருவோம். இதுவும் ஒரே கல்லில் செய்யப்பட்டிருக்கும்வேலை. இதில் பிரதானமாய் நடுவில் ஒரு சிவன்கோயிலிருக்கிறது. பார்வதியுடன் பரமசிவன் ஒரு ரிஷபத்தின்மேல் தன் காலைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்க நாம் காண்போம். இடது பக்கத்தில் ஆதிசேஷன்மேல் பெருமாள் பள்ளிகொண்டிருக்கிருர். இந்தக் குகையின் வலது பக்கத்தில் மகிஷாசுரவதம் காட்டப்பட்டிருக்கிறது. இந்த சித்திரவேலைதான் வெகு எடுப்பாய் எடுத்துச்காட்டப்பட்டிருக்கிறது. பார்வதியம்மை தனது வாகனமாகிய சிங்கத்தின் முதுகிலேறிக்கொண்டு தனது பரிவாரங்களுடன் மகிஷாசுரனை எதிர்ப்பதையும் அவனும் தனது பரிவாரங்களுடன் கதையால் அம்மனை அடிக்க வருவதையும் ஒரு யுத்தகளத்தில் இரண்டு சத்துருக்கள் எதிர்த்து நிற்பதை எவ்வளவு பயத்துடன் நாம் பார்ப்போமோ அப்படிப்பார்க்கலாம்.

**வராகக்குகை.**—இதுவும் மற்றவைகளைப்போல ஒரேகல்லில் செய்யப்பட்ட விசித்திரவேலை. அநேக பிம்பங்களிதிலடங்கியிருக்கின்றன. விஷ்ணு வராகாவதாரஞ்செய்து பூமாதேவியை ரக்ஷித்ததையும், அப்புறம் வாமனுவதாரஞ்செய்து ஆகாயத்தை அளந்ததையும் லட்சுமி அம்மை கொலுவிருப்பதையும், அதே லட்சுமி அம்மையை கஜங்கள் தண்ணீர்க்குடங்களால் ஸ்னுஞ்செய்துவைப்பதையும் காணலாம்.

இம்மாதிரி அநேக குகைகள் இருக்கின்றன, இவற்றுள் முக்கியமானவைகளைப்பற்றி வரைந்தோம். இன்னுமனேக குகைகள் பாதி வேலை யாரம்பித்து வேலை முற்றிலும் முடியாமற் சிலவும், வேலை கொஞ்சங்கூட துவக்காமல் சிலவும் கொத்துங்குறையுமாகவிருக்க நாம் பார்க்கலாம். எல்லாம் அழகாகவேயிருக்கும். இனி குகைகளைவிட்டு கோவில்களுக்குப் போவோம்.

கடற்கரையோரமிருக்கும் கற்கோவில் அதியற்புதமானவேலை. கோவிலென்ருல் நாம் பெரும்பாலும் பார்த்திருப்பதுபோல செங்கற்சுண்ணும்பு கட்டடமாக எண்ணவேண்டாம். அடிமுதல் நுனிவரையில் ஒரேகல்லில் செய்யப்பட்டிருக்கிற வேலை. இம்மாதிரி அருகாமையில் இரண்டு கோவில்களிருக்கின்றன. ஒன்று சிவனுக்கும் மற்றொன்று விஷ்ணுவுக்கும் கட்டப்பட்டவைகள். ஒவ்வொன்றிற்கும் கூர்ச்சாய் முடியுங் கோபுரங்கள் இருக்கின்றன. இவைகளில் ஒன்று பெரிய கோபுரம் மற்றொன்று சிறியது. பெரிய கோபுரத்தின் உயரம் 60—65 அடி. இது முழுமையும் ஒரேகல்லால் கட்டப்பட்டிருக்கிறது. இந்த சிற்ப வேலையை ஒருநாள்முடியப் பார்த்திருந்தபோதிலும் கண்ணின் அவா தீராது. ஐயோ காலத்தின் கொடுமை, இப்பொழுது சமுத்திரம் கரையோரம் நெருங்கிவிடவே இந்தக்கோவிலில் அலைகள் மோதுகின்றன. அநேக அற்புதவேலைகள் அழிந்துபோயின. என்னமாயிருந்தாலும் அழகுமட்டில் குறையவேயில்லை. இந்தக் கோவிலைச்சுற்றி 14—15 அடி உயரம் பிராகாரமுமுண்டு. இக்காலத்தில் வெளிக்கோபுரம் பெரியதாகவும் உள்கோபுரம் கர்பகிருகத்தின்மேல் சிறியதாகவும் கட்டுவது வழக்கம். அப்படியல்ல பழையவேலைக் காரர்களுடைய கோட்பாடு. கர்பகிருகத்தின் கோபுரந் தான் உந்நதமாயும் அழகாயுங் கட்டுவது வழக்கம். அந்த வழக்கத்தை மாமல்லபுரத்திலும் தஞ்சாவூர் பிரகதீச்வரஸ்வாமி கோவிலிலுந்தான் காணலாம். இந்த கடற்கரையோரமுள்ள கோவில்களில் லிங்கம், பார்வதி பரமசிவன், இன்னும் மற்ற சில பிரதிமைகள், ஜலசாயியாயிருக்கும் விஷ்ணு, இவைகளைக் காணலாம். அலைகளால் மோதப்பட்டு உவர் நீரில் முழுகியிருக்கிற இந்தக் கோவில் கொஞ்சங்கொஞ்சமாகச் சேதப்பட்டுக்கொண்டு வருகின்றது.

**ரதங்கள்.**—ஊருக்கு 1-மயில் தூரம் தெற்கில் கடற்கரை ஓரமாக 5-ரதங்களிருக்கின்றன. ரதங்கள் என்ருல் ரதங்கள்போல் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு பிரகாசித்துவரும் கோவிற்கள். ஒவ்வொன்றும் தனித்தனிக் கல்லில் குடையப்பட்டு அற்புதமாய் விளங்கி வருகிறது. இவைகளிலொன்று கொஞ்சம் மேற்கே ஒதுங்கி நிற்கிறது. இதின் ஆகிருதி கஜபிருஷ்டாகிருதி என்று ஜனங்கள் *வாஸ்து போதசாஸ்திரப் பிரகாரம் சொல்லுவார்கள். கஜபிரு

* வாஸ்துபோதம் என்பது ஹிந்து சிற்பசாஸ்திர நூல்கள் 32-ல் ஒன்று.

ஷ்டம் என்றால் யானையின் பின்பக்சம். அதைப் போன்ற உருவம் என்பது அருத்தம். அதாவது சோவிலின் ஒருபக்சம் குதிரை லாடம்போல் வளைந்திருக்கும். இந்த ரதத்தின் நீளம் 18-அடி ; அகலம் 11-அடி ; உயரம் 16-அடி ; இந்த ரதம் முற்றும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு அநேக பதுமைகளுடன் விளங்குகிறது. சாஸனங்கள் வெகுவாய் இருக்கின்றன. இந்த ரதத்திற்கு தர்மராஜ ரதம் என்று பெயர் கூறுவார்கள். இதையும் மற்ற ரதங்களையும் 'அத்யந்தகாமன்' என்ற பல்லவன் கட்டிவைத்தான். அவனது காலம் முதலியவைகளைப்பற்றிப் பின்பு விசாரிப்போம். இந்த ரதத்தில் அவன் பிருதுகள் அநேகம் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவைகள், புவனபாஜனன்—இந்த லோகத்திற்கு உடையவன் ; த்ரைலோக்ய வர்த்தனன்—மூன்று லோகங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கப்பட்டவன் ; அத்யந்தகாமன்—அளவற்ற ஆசையுள்ளவன் ; அமேய மாயன்—அளவிட முடியாத தந்திரி ; இவைகள் போன்றவைகள். இந்த ரதத்திற்கே 'அத்யந்தகாமபல்லவேச்வரகிருகம்' என்கிற பெயர் சாசனத்தில் வரையப்பட்டிருக்கிறது. அதாவது இந்தப் பெயருள்ள பல்லவன் சிவனுக்காகக் கட்டிவைத்த கோவில் என்பது அருத்தமாகும்.

மற்ற 4-ரதங்கள் இதற்கு அருகாமையிலிருக்கின்றன. இந்த 4-கோவில்களுக்கும் அர்ச்சுனன் ரதம், பீமன் ரதம், நகுலன் ரதம், சகாதேவன் ரதம் என்று ஜனங்கள் சொல்வார்கள். இவைகள் தர்மராஜன் ரதம்போல அந்தமுள்ளவைகள். அழகாய்த் தோன்றும். ஒவ்வொரு ரதமும் ஒரே கல்லில் துடைத்துவிட்டாற்போல் செதுக்கிவிடப்பட்டிருக்கிறது. இந்த 5-ரதங்கள் மத்தியில் வழக்கப்படி ஒரே கல்லில் ஒரு பெரிய சிங்கமும் யானையும் வெட்டப்பட்டிருக்கின்றன. சிங்கம் 9-அடி உயரம்; அதற்குத் தகுந்த காத்திரம். யானையோ 14-அடி நீளம், 12-அடி உயரம். யானைமட்டில் கொஞ்சம் குறைந்த வேலையிலேயே விட்டுவிடப்பட்டதாகவும் முற்றிலும் முடியவில்லை என்றும் தோற்றுகிறது. இந்த ரதங்களுக்குக் கீழ்ப்பக்கத்தில் ஒரு அழகான நந்தியுமிருக்கிறது. இந்த ரதங்களில் சில சரிவர செதுக்கப்பட்டு முடிவு பெறாமல் அரைகுறையாக விடப்பட்டிருக்கின்றன. அதுவும் ஒரு அழகாகவேயிருக்கிறது. ஐயோ காலத்தின் கொடுமை, சில இடங்களில் இடிவிழுந்து ஒரு ரதம் நடுவில் இரண்டாக பிரிவுபட்டிருக்கிறது. இவைகளின் கோபுரங்கள் பருப்புத்தேங்காய் (Pyramid) போல முடியும். ஒரே கல்லில் ஒன்றின்மேலொன்றாக அநேக அடுக்குகள் குடைந்து மேற்புரம் சிங்காரமாகச்செதுக்கப்பட்டிருக்கிறபடியால் மனதைக் கவரும். இந்த ரதங்களை மாமல்லபுரத்திலிருக்கும் பழைய கல்வேலையாக நாம் போகப்போகக் காட்டுவோம்.

இந்த ஊருக்கு 2-மயில் தூரம் வடக்கில் 'சாலுவன் குப்பம்' அல்லது 'இடையன்புடல்' என்று 2 பெயர்கள் வழங்கிவரும் ஊரில் பல்லவ குகை ஒன்று இருக்கிறது. அதையும் மாமல்லபுரத்து சிற்பவேலையில் சேர்த்து வரைவது வழக்கம். இந்தக்குகைக்கு அருகாமையில் ஒருமண்டபமுண்டு. அதை கோவிலென்றும் சொல்லலாம். மாமல்லபுரத்து வேலையைப்போல இவ்விடத்திலும் சிற்பசாஸ்திரம் அதிக அந்தமாய் விளங்குகிறது. இவ்விடத்தில் அநேக சாஸனங்களும் உண்டு. இடையன்புடலிலிருக்கும் கோவிலில் ஒரு நேர்த்தியான லிங்கமிருக்கிறது.

இவ்வளவு தூரம் நாம் சிற்பத்தின் அழகையும் குகைகளையும்பற்றி எழுதிவந்தோம். மாமல்லபுரம் குன்றுகளுக்கு வடபக்கத்தில் அர்ச்சுனன் தபசுக்கு வடமேற்கில் 'கணேசன்தகை' என்று ஒரு குகை இருக்கிறது. இதுவும் மற்றக்குகைகளைப்போல அழகாயிருப்பதுடன் ஒரே கல்லில் கொஞ்சம் கோபுரம் முதலானவைகளும் செதுக்கப்பட்டதாயிருக்கிறது. சிறியதாயினும் வெகு அந்தம். இந்த கணேசகோவிலில்முக்கியமான ஒரு சிலா சாஸனமிருக்கிறது. அது பல்லவ கிருந்த எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த சாஸனத்தைப்பற்றியும் இந்த மாமல்லபுரம் உண்டான காலமிவைகளைப்பற்றியும் பல்லவ அரசர்களைப்பற்றியும் அடுத்த சஞ்சிகையில் எழுதுவோம்.

ச. ம. நடேச சாஸ்திரி.

## வெனிஸ் வணிகன் கதை.

4-ம் அங்கத்தின் கதைச்சுருக்கம் :—

அன்டோனியோவுக்கும் ஷைலாக்குக்கு முள்ள வழக்கைத் தீர்ப்பதற்குக் குறிக்கப்பட்ட நாளில், அரசனும், அநேகம் பிரபுக்களும், அன்டோனியோ, பஸ்ஸானியோ, க்ரேஷ்யானோ, ஸீலீரியோ முதலியோர்களும் நகரத்து நியாயஸ்தலத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அரசன் தான் கல்லுங் கரையும்படியான எத்தனையோ வார்த்தைகளால் ஷைலாக்கினது வன்கண்மையை மாற்ற முயன்றும் அவன் ஒன்றுக்கும் அசையாத இரக்கமற்ற பாவியாய்த் தன் எல்லாக்கொடுமையையும் கோபத்தையும் அன்டோனியோவிடத்துக்காட்ட நிச்சயித்திருப்பதையும், இனித் தனக்கு மீட்சியில்லையென்று கண்டு இவற்றையெல்லாம் மிக்க பொறுமையோடு சகிக்க மனத்தைத் திடப்படுத்திக்கொண்டுநிற்கும் அன்டோனியோவின் நிலைமையையும் கண்டு இரங்கினவனாய், இவ்வன்கணாளனோடு இன்னுமொருமுறை வார்த்தையாடிப் பார்ப்பேனென்று, ஷைலாக்கை நோக்கி "ஷைலாக்கே, காரியத்துக்குக்காலம் வரும் வரையிற்றான் நீ இம்மாதிரியாக உனது பகையைக்காட்டிக்கொண்டிருப்பாயென்று உலகம் நினைக்கின்றது. நானும் அப்படியே நினைக்கின்றேன். காரியம் வரும்பொழுது நீ மிகவும் இரங்கிக்கருணை காட்டுவாயென்றும், அக்கருணை நீ அது வரையில் வெளிக்குக் காட்டும் கொடுமையிலும் மிகவும் அதிசயிக்கத்தக்கதாயிருக்குமென்றும், உனக்குரிய அபராதமாகிய வணிகனுடைய ஒரு பவுண்டு நிறையுள்ள தசையை நீ உபேக்ஷிப்பதன்றி, ஒன்றுக்குமசையாத வன்னெஞ்சரான துருக்கியர் முதலியோருடைய மனத்தையும் உருக்கத்தக்க பெரிய ஆபத்துக்களால் அவன் இப்பொழுது வருந்துவதற்கிரங்கி, மனிதர்க்குரிய கருணையும் அன்பும் பூண்டு உன் முதலிற்பாதி தள்ளிக்கொடுப்பாயென்றும் நம்புகிறோம்" என்று சொல்ல, ஷைலாக், "என் கருத்தை உமக்கு முன்னரே வெளியிட்டிருக்கிறேன். என் பத்திரத்திற்குரிய அபராதத்தை நான் வாங்காதிரேனென்று மிகக் கடுமையாகிய சபதஞ் செய்திருக்கிறேன். எனக்கு நீர் நியாயஞ் செய்யீராயின், உமது நகரம் கேடுறுக. மூவாயிரம் பொன்னை வேண்டாது, நைந்தழுகிய தசையை ஏன் வேண்டுகிறேனென்று என்னைக்கேளற்க; அதற்கு நான் மறுமொழி சொல்லேன். அஃது என்னுடைய பிரியமென்றெண்ணுக. என் வீட்டில் ஒரு எலி வந்து சங்கடப்படுத்தும்பொழுது அதைக்கொல்வதற்குப் பதினாயிரம் பொன் கொடுக்க நான் இஷ்டப்பட்டால் அதை ஏன் என்று கேட்கிறது யார்? உமக்கு இன்னும் சமாதானம் வேண்டுமோ? சிலர் பன்றித்தலையைக்கண்டு வெறுப்புறுகின்றார்; சிலர் பூனையைக்கண்டு பித்துக்கொள்ளுகின்றார். இவ்வாறே தத்தம் விருப்பு வெறுப்புக்கு ஏற்றபடி பலரும் பலவிதஞ் செய்கின்றார். இவற்றிற்குத் தக்க காரணம் சொல்வது எப்படி? அப்படியே இப்பிரயோசனமில்லா வழக்கை அன்டோனியோவின்மேல் நடத்துவதற்கு அவனிடத்து எனக்கு நெடுநாளாய் நிலைபெற்றுள்ள பகையும் வெறுப்புமன்றி வேறு காரணமில்லை" என்றான். இதைக்கேட்ட பஸ்ஸானியோ, ஓ! இரக்கமற்றவனே, உன் கொடுமைக்கு இது தக்க சமாதானமாகுமோ என்று வினவ, ஷைலாக், "உனக்குத் திருப்தியான சமாதானம் நான் சொல்லவேண்டிய ஆவசியகமில்லை" என்றான். அதற்கு பஸ்ஸானியோ "ஆனால் உலகத்தில் தமக்குப் பிரியமில்லாதனவற்றை ஜனங்கள் சொல்லுகிறார்களோ" என்று கேட்க, ஷைலாக், "தான் கொல்லவிரும்பாததை எவனேனும் வெறுப்பதுண்டோ" என்றான். பின்னும் பஸ்ஸானியோ, அப்பிரியம் உண்டாகும்பொழுதே அது வெறுப்பாய் மாறிவிடுமோ" என்று கேட்க, ஷைலாக், ஒருமுறை கடித்து நமக்குக் கோபமுண்டாக்கிய பாம்பை இரண்டாமுறையும் கடிக்க விடுவாயோ" என்றான். இவ்வாக்கு வார்த்தைக் கேட்ட அன்டோனியோ, பஸ்ஸானியோவைப் பார்த்து "யூதனோடு பேசிப் பயனுண்டோ? இதைக்காட்டிலும், கடற்கரைக்குப்போய் அலையை ஓயும்படி கேட்டுக்கொள்ளலாமே; ஆடு அழும்படியாகக் குட்டியை ஏன் கொல்லுகிறாயென்று ஓநாயைக் கேட்கலாமே; மலைமேலுள்ள சில மரத்தைக் காற்று ஓங்கி வீசுகையில் அசையாமலும் சத்தமிடாமலுமிருக்கும்படி வேண்டலாமே. நீ எவ்வளவு கடினமான காரியத்தில் ஏற்பட்டாலும் இக்காரியத்தில் ஏற்படாதே; யூதனை இரங்கச் செய்தலைப்போன்ற கடினமான காரியமே இல்லை. அது யாராலும் சாத்தியமன்று. ஆதலின், நீ யூதனைச் சமாதானப்படுத்துவதை நிறுத்து. யான் என் தீர்ப்பை பெறுவேன்; யூதன் தன்னிஷ்டத்தைப் பெறுவான்" என்றான். பின்னர், பஸ்ஸானியோ, மூவாயிரம் பொன்னுக்கு ஆறாயிரம் பொன்னாய்த் தருவேனென்று ஷைலாக்கினிடம் சொல்ல, அவன் "நீ ஆறு ஆறாயிரம் கொடுத்தாலும் வேண்டேன்; என்பத்திரத்து அபராதத்தையே கொள்வேன்" என்றான். அப்பொழுது அரசன் "யாரிடத்தும் கருணை காட்டாத உனக்குக் கடவுள் எப்படிக் கருணைபுரிவார்" என்று கேட்க, ஷைலாக் "தப்பொன்றும் செய்யாதயான், கடவுளின் தீர்ப்புக்கு ஏன் பயப்படவேண்டும். உங்களால் விலைகொடுத்து வாங்கப்பட்ட அடிமைகள் எத்தனையோ பேர்கள் உங்களிடத்து இருக்கிறார்கள். 'விலைக்கு வாங்கினோம்' என்ற உரிமையால் அவர்களை நாயும் கழுதையும்போற் பாவித்துப் பல ஈனத்தொழிலிலும் ஏவுகின்றீர். அவர்களைச் சுதந்தரராய் விட்டுவிடலாகாதோ? அவர்களை உங்கள் மக்களுக்குக் கலியாணஞ்செய்து கொள்ளக்கூடாதோ? அவர்கள் ஏன் பாரஞ் சுமந்து மெய்வருந்துகிறார்கள்? அவர்களுடைய படுக்கையும் உங்களுடைய படுக்கையைப்போல் மென்மையாயிருக்க வொண்ணாதோ? அவர்களுக்கு உங்களைப்போல் உருசியுள்ள உணவு

உதவாதோ? என்று நான் கேட்பேனாயின், அதற்கு நீங்கள் "அவர்கள் எங்கள் உடைமை" என்பீர்களன்றோ? அப்படியே நானும் சொல்வேன்; நான் வேண்டுகிற ஒரு பவுண்டு தசை எவ்வளவோ விலைபெற்றது. அஃது என்னுடைமை; நான் அதைப் பெறுவேன். அதை எனக்கு மறுப்பீராயின், உமது சட்டம் சிச்சி என்று இகழப்படுக. இதோ நான்தீர்ப்புக்காக நிற்கின்றேன். எனக்கு அஃதுண்டோ? சொல்லுக." என்றான். அப்பொழுது அரசன் "இவ்வியவகாரத்தைத் தீர ஆராய்ந்து தீர்ப்புச்சொல்ல, சட்டத்தில் வெகு நிபுணராகிய 'டாக்டர்' என்ற கல்வித்தேர்ச்சிப் பட்டம் பெற்ற 'பெலேறியோ' என்பவர், நான் எழுதியனுப்பியபடி, இன்று இங்கே வாராமற்போனால், நான் இந்த விசாரணையை வேறொரு சமயம் வரையில் நிறுத்திவைப்பேன் என்று சொல்ல, ஸாலரீனோ "என்னாண்டவனே, 'பாட்யுவா' என்ற இடத்திலிருந்து இப்பொழுது வந்த ஒரு தூதன் 'டாக்டருடைய' கடிதத்தைக்கொண்டு புறத்து நிற்கின்றான்" என்றான். உடனே அரசனுடைய கட்டளைப்படி கடிதத்தை வாங்கிக்கொண்டு வரவும் தூதனை அழைக்கவும் ஆட்கள் சென்றார்கள். விசாரணை காலத்து அன்டோனியோ உற்சாகங்குறையாமல் தைரியமாயிருக்கவேண்டி, பஸ்ஸானியோ அவனைப்பார்த்து "ஒரு துளி இரத்தமேனும் உன் உடம்பிலிருந்து சிந்தாது நான் காப்பேன். என் தசையையும், இரத்தத்தையும், எலும்பையும், மற்ற எல்லாவற்றையும் யூதனுக்குக் கொடுத்து உன்னைக்காப்பேன். மனந்தளராதே" என்று தேற்ற, அன்டோனியோ, தான் தைரியமாகவே யிருப்பதாகவும், ஆனால் நான் மந்தையில் நோயுற்ற காயடித்த ஆட்டுக்கடாப்போன்றேனாகையால் மரணமடைய மிகவும் தக்கவனென்றும், மிகவும் பலஹீனமான பழம் மரத்தினின்றும் உதிர்வதுபோல் நானும் இவ்வுலகத்தினின்றும் நீங்க வேண்டியவனென்றும், சொன்னான்.

(இன்னும் வரும்.)

எஸ். நாராயணசாமி அய்யர், பி. ஏ.

# ஆபத்துக்கிடமான அபவாதம்
## அல்லது
# கமலாம்பாள் சரித்திரம்.

---

## XV.

அந்த மந்திரவாதி ஊரைவிட்டு திடீரென்றுபோய் விட்டபடியால் அவ்வூரி லுள்ளவர்களெல்லோருக்கும் அவன்மேல் சந்தேகம் பலமாக ஏற்பட்டது. அவனைக் கண்டுபிடிப்பதற்காக சர்க்காரில் பலவிதமான பிரயத்தனம் செய்தும் ஒன்றும் பலிக்கவில்லை. முத்துஸ்வாமியய்யருடைய நிலைமையோ மிகவும் பரிதபிக்கத்தக்கதாயிருந்தது. 'கண்ணிலான் பெற்றிழந்தானென' என்றபடி பிறவிக்குருடனொருவன் கண்கள்பெற்று நூதனமாகக்கிடைத்த அந்தப் பாக்கியத்தின் மூலமாக உலகத்தின் காட்சிகளை ஆவலுடன் கண்டு களிக்குந் தருணத்தில் திடீரென்று அந்தக்கண்கள் பார்வையை இழந்துவிடுமானால் அவனுக்கு என்ன வருத்தம் உண்டாகுமோ அந்தவருத்தத்தை முத்துஸ்வாமியய்யர் முற்றும் அடைந்தார். குழந்தையே பிறவாமலிருந்திருந்தால் ஒரே துன்பமாகப் போய்விடும். குழந்தையைப்பெற்றுப் பிரியம்வைத்து வளர்க்கும் சந்தோஷத்தை அவர் அதிகமாயறிந்திருக்கமாட்டார். நீடித்து நிற்கும் துக்கம் மனிதனுக்கு சகஜமாய்விடும். கையில்லாமல் பிறந்தவனுடைய துன்பத்தைக் காட்டிலும் கை பெற்று இழந்தவனுடைய துன்பம் அதிகமல்லவா? கடவுள் புத்திரபாக்கியத்தைக்காட்டி ஒளித்ததனாலல்லவோ பட்டணத்துப் பிள்ளையும் உலகத்தைவெறுத்து ஞானியானார். முத்துஸ்வாமியய்யர் முன்னமேயே உலக இன்பத்தில் அதிர்ப்தியும் மனிதர் நடத்தையில் அருவருப்புமுள்ளவர் என்பது நமக்குத்தெரியும். இப்பொழுது குழந்தைபோனபிறகு எல்லாவிஷயத்திலும் அவருக்கு அருவருப்பு பலமாக ஏற்பட்டது. 'என்ன பாழுலகம். என்னபாவம் பண்ணினேனோ இந்த ஜன்மம் நமக்குக்கிடைத்தது' என்று அவர் அடிக்கடி சொல்லிக்கொள்ளுவார். சிற்சிலசமயங்களில் 'சுவாமியேது பூதமேது உலகமே ஒருவனை யொருவர் அடித்துத்தின்கிற வியாபாரந்தான்' என்பார். 'வேண்டேன் இம்மாயப் புன்பிறவி வேண்டேனே' என்ற ஸ்ரீராமவாக்கியத்தைப் பலமுறை தன்மனதுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொள்வார். யாராவது சிரித்துவிளையாடிக்கொண்டிருப்பது அவர் கண்ணுக்கு எதிர்ப்பட்டால் தன் பார்வையை விலக்கிக்கொண்டு 'இதென்ன வேண்டியிருக்கிறது



ஐயோ, மூடன் மூடன்' என்று தன்னுள் சொல்லிக்கொள்வார். குழந்தையை நினைத்து விசனப்பட்டுக்கொண்டே நாலைந்துநாள் அன்னபானாதிகள்கூடச் செவ்வையாய்ச் செய்துகொள்ளாமல் வீட்டுக்குள்ளேயே முக்காடிட்டு துக்கித்துக்கொண்டிருப்பார். கமலாம்பாள் தன்னைத்தேற்றிக்கொண்டு அவரைத்தேற்ற உத்தேசித்துச் சில சமயங்களில் வேதாந்தம் பேசுவாள். சில சமயங்களில் பாடுவாள். சில சமயங்களில் ஸரஸஸல்லாபங்கள் செய்வாள். சில சமயங்களில் 'குழந்தை அகப்பட்டாலும் அகப்படலாம்' என்பாள். இப்படி அவரைத்தேற்றி அவர் விசனமாறித் தெளிந்திருக்கும் சமயத்தில் அவளுக்கு அடக்கமுடியாதபடி துக்கம்மேலிட்டு கண்ணீர் கரகரவென்று பெருகும். அப்பொழுது அவரும்கூட அழுதுகொண்டு அழாதேயடி என்று அவளைத் தேற்றுவார். எதைப் பார்த்தாலும் அவர்களுக்கு நடராஜன் ஞாபகம்வந்துவிடும். கொட்டாங்கச்சிகள், கயிறுகள், கொம்புகள் எல்லாம் அவர்களுக்கு அவன் ஞாபகத்தைக்கொடுத்து வருத்தும். அந்தவிதமான துன்பத்தை ஒழிக்க நினைத்து அவர்கள் அவனுடைய பட்டுவஸ்திரங்கள், நகைகள், தொட்டில் பொம்மைகள் எல்லாவற்றையும் பிறருக்குத் தானம்செய்துவிட்டார்கள். அப்படியெல்லாம் செய்தும் திடீரென்று எவ்விதமாகவோ குழந்தை ஞாபகம் அவர்களுக்கு வந்துவிடும். முத்துஸ்வாமியய்யர் பூஜைபண்ணிக்கொண்டேயிருப்பார். உலகவாழ்க்கை எப்படியாவது ஒழிந்துபோகவேண்டுமென்ற வைராக்கிய சித்தத்துடன் அவர் சுவாமியைத் தியானம் பண்ணி பரமபக்தியுடன் மணியோசைசெய்து தீபாராதனை நடத்திக்கொண்டிருக்கும்போதே அந்தத் தீபத்தின் ஒளி கடவுளுடைய தேஜஸை உணர்த்த அந்த உணர்ச்சி கடவுளின் அருள் வெளியை ஞாபகப்படுத்த அது சிதம்பரத்தையும் நடராஜஸ்வாமியையும் நினைவுக்குக் கொண்டுவர அவர் 'ஐயோ நடராஜா' என்று கதறிக்கொண்டு தீபத்தைக் கைநழுவ விட்டுவிட்டு ஹோ என்று வாய்விட்டழுவார். வீதியில் போய்க்கொண்டிருக்கும்போதே யார் குழந்தையாவது எதிரில் தென்பட்டால் துக்கம்பெருக சரசரவென்று வீட்டுக்குள்வந்து ஒருமுறை கண்களைத் துடைத்துக்கொண்டு பிறகு வெளியே போவார்; சில சமயங்களில் தெருவிலேயே நின்று அழுவார். எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துகொண்டிருப்பார்: பாதி ஸ்நானம் ஆய்க்கொண்டிருக்கும்போதே அப்படியே ஐயோ என்று உரக்கக்கதறி யழுவார். கமலாம்பாளும் அப்படியே சமையல்செய்து கொண்டிருக்கும்போதும் ஸ்நானம் செய்துக்கொண்டிருக்கும்போதும் அழத்துவக்கிவிடுவாள். தூக்கம் என்பது அவள் விஷயத்தில் ஆராதித்து அழைக்கப்படவேண்டிய அன்னியனாக இல்லை: அவர்களுடைய குடும்பத்தில் ஐக்கியப்பட்டு இராப்பகல் பேதமில்லாமல் நினைத்தபோது வரப்போக அதிகாரமுடையதாய் காலியாயிருந்த குழந்தை நடராஜனுடைய இடத்தை நிரப்பிக்கொண்டிருந்தது. ஆனால் அவளும் அவள் கணவரும் தங்களுடைய துக்கத்தை மறந்துவிட அனேகவிதமான பிரயத்தனம் செய்தார்கள். உல்லாசமாகப் பேசுவது, சிரித்து விளையாடுவது 'என்னமோ இருக்கிறவரைக்கும் சுகமாக இருந்துவிட்டுப்போகவேணும், ஆய்விட்டது பாதி ஆயுசு; இனிமேல் ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ, இன்றைக்கோ நாளைக்கோ' என்று சொல்லிக்கொள்வது, பாடுவது முதலிய உபாயங்கள் எல்லாவற்றையும் அவர்கள் பிரயோகித்தார்கள். ஒருநாளிராத்திரி நிலவு சுகமாயிருந்தது. அன்றைக்குக் கமலாம்பாளும் அவள் கணவரும் மாடியின்மீது உட்கார்ந்துகொண்டு வேடிக்கையார்த்தமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். பேசிக்கொண்டிருக்கும்போதே கமலாம்பாள், 'இந்தச் சந்திரனைப்பாருங்கள். இவனுக்குத்தான் என்ன கொழுப்பு, ரிஷபம்போல் ஆகாயம் முழுவதும் நம்முடைய ராஜ்யந்தான் என்று உல்லாசமாக நமக்கு நிகரில்லை என்று திரிகிறான்' என்றாள்.

முத்துஸ்வாமியய்யர்.—ஆமாம் அவனுக்கு என்ன? அவன் எல்லாம் ஆகாயவாசி; பூமியில் ஊரும் புழுவாகிய நம்மைப்போலவா? ஒருவனை யொருவன் அடித்துத் தின்றுகொண்டு நாம் இருக்கிறோமே அது போல அவனும் இருக்கவேணுமா.

கமலாம்பாள்.—அப்படியில்லை; அதற்குக்காரணம் உங்களுக்குத் தெரியாமல்போனால் நான் சொல்லித்தருகிறேன் கேளுங்கள். சொல்லிப்போடுவேன் பார்த்துக்கொள்ளுங்கள், சொல்லிப்போட்டுமா.

முத். அ.—சே! அப்படிப்பண்ணிப்போடாதே அம்மா, பயமாயிருக்கிறது, அப்படியெல்லாம் பண்ணிவிடாதே.

கம.—சொல்லியேபோடுவேன், இதோ சொல்லப்போகிறேன்: என்ன தெரியுமா? அம்மாள்தேவி ரோஹிணி அவன் கிட்டவே எப்பொழுதும் இருக்கிறாளல்லவோ அவன் கொழுப்புக்குக் கேட்கவேண்டுமா? தெரிந்ததா? இப்பொழுதாவது தெரிந்ததா? அவர்கள் இரண்டுபேரும் யாரைப்

போல் இருக்கிறார்கள் சொல்லுங்கள், அதாவது தெரிகிறதோ பார்ப்போம்.

முத். அ.—ஆமாம் உன்னையும் என்னையும்போல. மத்தியானமெல்லாம் அழுதது மறந்துபோய்விட்டது. கிடக்கிறது ஏதாவது பாடு பார்ப்போம்.

கம.—பாடட்டுமா. என்பாட்டைக்கேட்டு காற்று சந்திரன் எல்லாம் மயங்கிப் பிரமித்துப்போகும்படி பண்ணிவிடுகிறேன் பாருங்கள். 'பனியால் நனைந்து வெயிலாலுலர்ந்து' சீ என்ன பாட்டு வருகிறது இந்த சமயத்திலே.

கமலாம்பாள் பாட ஆரம்பித்தவுடன் அவள் மனதில் பதிந்துகிடந்த 'பனியால் நனைந்து' என்ற அரிச்சந்திர புராணப்பாட்டு அவள் ஞாபகத்துக்கு வந்தது. அது பாம்பு கடித்து இறந்த குழந்தை லோகிதாட்சனைக் குறித்துச் சந்திரமதி புலம்பி யழுவதைச் சொல்லும் பாடல். தன்னையறியாமல் அந்தப்பாடல் அவள் நாவில் எழ, அவள் அதைவிட்டு 'போபோவே செலியா' என்று வேறுபாட்டைத் துவக்கினாள். முத்துஸ்வாமியய்யர் 'இதுவேண்டாம், 'பனியால் நனைந்து' என்ற பாட்டைத்தான் சொல்லவேண்டும்.' என்று கட்டாயம் பண்ண, கமலாம்பாள் அதைப்பாடினாள். 'தனியே கிடந்து விடநோய் செறிந்து தரைமீது உருண்ட துரையே இனியாரை நம்பி உயிர்வாழ்வம் இறையோனும் யானும் அவனே' என்று பாடும்போது அவளுக்குத் துக்கம் நெஞ்சடைத்தது. முத்துஸ்வாமியய்யரும் அழ ஆரம்பித்துவிட்டார். மீதிப்பொழுதைப் பாவம் அவர்கள் இருவரும் அழுது தீர்த்தார்கள். இவ்வாறு அன்று இரவு சந்தோஷகரமாகத் தொடங்கி விசனகரமாக முடிந்தது.

## XVI.

இவ்விதம் மூன்று வருஷ காலம் சென்றது. சூரிய சந்திர நட்சத்திரங்கள் எல்லாம் தங்கள் தங்களுடைய நித்தியகர்மானுஷ்டானங்களை வழுவாமல் நடத்திவந்தன. கமலாம்பாளும் முத்துஸ்வாமியய்யரும் விசனப்படுகிறார்களென்று அவைகளுக்கு யாதொரு கவலையும் இருப்பதாகக் காணவில்லை. நம்மைவென்ற கமலாம்பாள் மனங்கலங்கி உடல்வாடுகிறாளேயென்று மான் மயில் குயிலினங்கள் விசனப்படவுமில்லை, சந்தோஷப்படவுமில்லை. முத்துஸ்வாமியய்யர் புத்திர சோகத்தால் வருந்துகிறாரேயென்று சற்றும் கவலையில்லாமல் தூர்த்தத்தன்மையையுடைய் காற்று மரங்களுடன் தாராளமாய் ஸல்லாபம் செய்வதும் அவைகளுடைய புஷ்பவர்க்கங்களை யனுபவிப்பதும் அவைகளுடன் மிருதுவாய் முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவி அவற்றினலங்களைக் கொள்ளை கொள்ளுவதும் ஒருசமயம் ஊடிய கணவரைப்போல ஒரு வார்த்தையும் பேசாது ஒதுங்கி மௌனமாய் நிற்பதும் மற்றொரு சமயம் அவைகளுடன் சேர்ந்து ஹோவென்று வெறிக்கூப்பாடிட்டு ஊர்ப்புறங்களை யெல்லாம் சீரழித்து சிந்தைகுலையச் செய்வதுமாகிய ஊடலர்டலின்பங்களைக் கூசாமல் எப்பொழுதும்போல அனுபவித்துக்கொண்டிருந்தது. முத்துஸ்வாமியய்யருடைய இஷ்டமித்திர பந்துக்களில் சிலர் மாத்திரம் அவருடைய துக்கத்தைத் தங்களுடைய துக்கம் என்று பாராட்டி அவகாசமான வேளையில் வேறு யாதொரு காரியமும் செய்வதற்கு இல்லாவிட்டால் அவருடைய குழந்தை காணாமற்போன கதையைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். மற்றப்படி உருண்டுகொண்டேயிருக்கிற இவ்வுலகம் ஒருசணமும் இடைவிடாது உருண்டுகொண்டேயிருந்தது. அம்பட்டன் மாரியப்பன் க்ஷவரம்செய்வதும், வண்ணான் நாகன் வேட்டி துவைப்பதும், குசவன் குட்டையன் பானைசட்டி பண்ணுவதும், வேம்பப்பத்தன் வெள்ளி பொன்களைப் (பிறரிடத்திருந்து) தட்டுவதும், சூத்திரன் மூக்கன் மாடு மேய்ப்பதும், கணக்கு முத்துப்பிள்ளை கள்ளக் கும்பிடுபோடுவதும், சேஷன்செட்டி கற்கண்டு விற்பதும், வைதீக ராமண்ணா பிராமணார்த்தந்தின்பதும், வக்கீல் சேஷய்யன் கோர்ட்டுக்கு முன்னேயே கொள்ளை யடிப்பதும், பிறப்போர் இறப்பதும் இறப்போர் பிறப்பதுமாக நாள்கள் வாரமாய் வாரங்கள் மாதமாய் மாதங்கள் வருஷமாய் கொஞ்சமும் கவலையற்று ஸ்தூலித்துக் கொண்டுவந்தன.

இப்படி புனர் ஜன்மங்கூட இல்லாமல் இறந்துபோய்க்கொண்டிருந்த நாட்களுள் ஒரு நாள் சந்தையிற் கூட்டமாகிய சென்னைமாபுரியில் (சென்னைப்பட்டணத்தில்) தம்புசெட்டி தெருவில் 321 நெ. வீட்டில் மாடிமீது இரண்டு வாலிபர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் பெரியவன் மற்றவனைப்பார்த்து 'தபால்காரன் வருகிறசமயமாய்விட்டது, இன்றைக்கு வருமா காகிதம்' என்றான். 'அவன் என்ன இழவு இன்னும் வரவில்லை யவன் நேற்று இத்தருவாய்க்கு முன்னேயே வந்துவிட்டானே. நானும் அரைமணியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு அறையைவிட்டு தெருவுக்கு நேரான மாடியில்வந்து நின்று தபால் காரன் வருகிற வழியைப்பார்த்தான். தபால்காரனைக்காணோம்; பிறகு உள்ளே வந்து கடிகார யந்திரத்தைப் பார்த்தான். 'இதென்ன சரியான மணியா, நேற்று நீ சாவிகொடுத்தாயா, மணி 9 ஆய்விட்டது இன்னும் வரவில்லை' என்று சொல்லிக்கொண்டு மறுபடி வெளியேபோனான்; மறுபடி உள்ளேவந்து 'இன்றைக்குக் காகிதம் இல்லைதான்போலிருக்கிறது. அதென்ன அப்படி எழுதாமலிருக்கமாட்டாளே. நடுவிலே எங்கேயாவது தாமதப்பட்டுப்போய்விட்டதோ' என்றான். அதற்குள் அறையில் உடுத்திக்கொண்டிருந்த அவனுடைய சினேகிதன் வேஷ்டியை உடுத்திக்கொண்டு 'சரி, போகலாம் வா, சாப்பிட்டுவிட்டு வந்துபார்த்துக்கொள்ளுவோம். இல்லாவிட்டால் சாப்பிட்டுவிட்டுத் தபாலாபீசில்போயாவது விசாரிப்போம். காகிதம் இருந்திருந்தால் வந்திருக்கும்; இத்தனை நாழிகையாயிற்று, இன்றைக்கு இல்லைபோலிருக்கிறது' என்றான். அதற்கவன் 'என்னவோ ஸ்திரீகளை மாத்திரம் நம்பப்படாது. ஏதாவது உடம்பு கிடம்பு சௌக்கியமில்லையோ என்ன இழவோ; இருக்கிறாளோ போய்விட்டாளோ அதைத்தான் யார்கண்டார்கள்' என்று சொல்லிவிட்டு ஒரு பக்கமாகத் திரும்பிக்கொண்டு தன் கண்ணினின்று ததும்பிய நீரைத் துடைத்து, தன் மனதுக்குள் 'அடா போடா பயித்தியகாரா, அவளே உன்னை லட்சியம் செய்யவில்லையாம், உனக்கு என்னடா இப்பொழுது. ஆனாலும் பிறந்தகத்துக்குப்போன பெண்டுகளை நம்பக்கூடாது. கிடக்கிறாளடா விட்டுத்தள்ளு கழுதையை' என்று சொல்லிக்கொண்டு, தன் சினேகிதனைப்பார்த்து 'ஏன் சாப்பிடப்போகலாம் வா' என்று உரக்கச் சொன்னான். பிறகு அவனும் அவனுடைய சினேஹிதனுமாக சாப்பாட்டுக்குப்போனார்கள். அன்றைக்கு அவனுக்கு சாப்பாடு சாப்பாடாகவேயில்லை. காகிதம் வராததற்குக் காரணங்களைப்பற்றித் தன் மனதுக்குள்ளேயே ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்த அவனுக்கு மற்றவர்கள் பேசிக்கொண்டிருந்தது ஒன்றும் கேட்கவில்லை. இன்னசாதம் சாப்பிடுகிறோம் என்ற நினைவுமில்லை. ஒரு க்ஷணம் புன்சிரிப்பும் மறு க்ஷணம் கண்ணீர்த் துளியும் ஒரே க்ஷணத்தில் இரண்டும் உண்டாக அவன் முகம் ஆகாயத்தின் முகம்போல மாறுபட்டுக்கொண்டிருந்தது. இவ்விதமாகச் சாப்பிட்டு அவனும் சினேகிதனுமாகத் திரும்பிவருகையில் தபால்காரன் எதிரேவந்து அவன் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். ஏன் இத்தனை நாழிகையென்று தபால்காரனைக்கேட்டான். அவன் 'இன்றைக்கு மெயிலே இப்போதான்வந்தது' என்று சொன்ன மறுமொழிகூட காதில்படாமல் கடிதத்தை அவன் ஆவலுடன் உடைத்துப்பார்த்தான். அதில் அடியில் வருகிறபடி எழுதியிருந்தது :—

'என் அன்பை அதிகரிக்கின்ற என் பிராண நாயகராகிய சீமாஅய்யர் அவர்களுக்கு அநேக நமஸ்காரம். க்ஷேமம் க்ஷேமத்துக்கு எழுதவும்.'

என் கடிதத்தை கண்டவுடனேயே பதில் எழுதுவதற்கு ஐயரவாளுக்கு சாவகாசப்படவில்லை. நீங்கள் என்னசெய்வீர்கள். என் சக்களத்தியவர்கள் உத்திரவு கொடுத்துத்தானே நீங்கள் பதில் எழுதலாம். இருக்கட்டும், இருக்கட்டும், நான் நேரில் வந்து உங்கள் இரண்டுபேருக்கும் வழி சொல்லுகிறேன். ராத்திரிக்கு ராத்திரியே வந்து ஓசைப்படாமல் என் மனதைத் திருடிக்கொண்டு போகிறது : அப்புறம் கூ கூ என்றாலும் போட்ட காகிதத்துக்குக்கூட பதில் கிடையாது. தைரியமிருந்தால் நேரேவரவேணும்.

என்துரையே நான் என்னவேடிக்கையாக எழுதவேண்டுமென்றாலும் எழுத முடியவில்லையே. தங்களைவிட்டுப் பிரிந்து அனலிலிட்ட மெழுகுபோல உருகி, சோனைமழைபெய்யுமே—ஒருதரம் காற்றுவீசுகிறது உடனே பலபலவென்று மழைபெய்கிறது அதுபோல பெருமூச்சும் கண்ணீருமாய் வழியில்படுத்துக்கொண்டிருக்கும் மலைப்பாம்பைப்போல் ஓடாத இந்தப் பொழுதை ஓட்டி தவித்துக்கொண்டிருக்கிற எனக்கு என்னவேடிக்கை வேண்டியிருக்கிறது. போன ஜன்மத்தில் எந்த நேசமான தம்பதிகளைப் பிரித்தோமோ அந்தப் பாவம் நாம்தான் பிரியும்படி நேர்ந்தது; கடிதமாகிலும் என் விசனத்தை மாற்றிவிடுமென்றால் அதுவும் சரியானபடி வருகிறதில்லை; போகட்டும், இப்பொழுதாவது தயவுபண்ணி எழுதினீர்களே. கொஞ்சம் தாமதப்பட்டால் உடம்பு என்னமோ என்று சந்தேகமாயிருக்கிறது. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணச்சொல்லுகிறது; அப்படி விசனப்பட்டுக்கொண்டிருக்கும்போது தங்கள் கடிதம் வந்தது. தங்கள் தங்கக்கையினால் எழுதின அந்தக் கடிதத்தைக் கட்டிக்கொண்டு முத்தம்கொடுத்தேன். அதைத்திருப்பித் திருப்பி வாசிக்கும்போது தங்களுடன் நேரிலே பேசினாற்போல நினைத்துக்கொண்டேன். அதைக் கட்டிமுத்தமிட்டது தங்களைக்கட்டியணைந்து முத்தமிட்டதுபோல இருந்தது. கணையாழியைக்கண்ட சீதையைப்போல எனக்கு சந்தோஷத்திலே கண்கள் கூடத்தெரியவில்லை. தங்கள்கடிதமென்றால் அவ்வளவு சந்தோஷமுண்டாகும்போது நேரிலே காணப்போகிறோமென்றால் எவ்வளவு சந்தோஷமாய் இராது. நான் அவ்விடத்திற்கு அடுத்த வெள்ளிக்கிழமை அப்பா அம்மாளுடன் தங்களையே

நேரில்காண சட்டாயமாய் வரப்போகிறேன். சகுர்தலையை துஷ்யந்தன்பார்த்து நீ யார் என்று கேட்டானே அந்தமாதிரி என்னையும் கேட்பீர்களோ! கேட்டால் என்ன பதில் சொல்லுகிறேன் என்று வேணுமானால் பாருங்களேன். பார்ப்போமே; பயணம் நிச்சயம். என்னால் தாங்கள் எவ்வளவு துன்பம் அடைந்தீர்கள். நான் பட்டபாடெல்லாம் நீங்களும் பட்டிருப்பீர்களே. என்துரையே, தாங்கள் என்பேரில் வைத்திருக்கிற அன்பை நினைத்தால் எனக்கு வருகிற சந்தோஷம் இவ்வளவு அவ்வளவு இல்லை. இப்பொழுது தங்களை அவ்விடம்காண சமீபித்துவிட்டபடியால் இன்னும் மேல் மேலும் பொங்குகிறது. நந்தன் சிதம்பரம் போகவேணும் என்று எவ்வளவு விசாரத்துடன் இருந்து அதைச்காணவும் எவ்வளவு சந்தோஷமடைந்தான்—அதுபோல நான் தங்களைக் காணவருகிற சந்தோஷத்தை அவ்விடம் வந்து தங்களிடம் ஒரு வார்த்தைச்கு ஒரு முத்தமாகத் தேனும் சர்க்கரையும் கலந்தாற்போல் கலந்து சொல்லி மகிழ்வேன். ஒருநாளும் நம்முடைய அன்பு தவறக்கூடாது. என் பிராண நாயகா தங்களைக்காண தங்கள் அன்பை ஒரு பூஷணமாகப் போட்டுக்கொண்டு தங்கள் சவலையை நீக்கி இருவரும் களிபபடைய அவ்விடம் வருகிறேன். நான் நளவெண்பா முழுவதும் பாடம்பண்ணிவிட்டேன். இங்கிலீஷ் சகண்டு ரீடர் வாங்கிவருவேன். நான் எழுதிய கடிதத்தில் பிசகு அதிகமாயிருக்கும்; தாங்கள் அதைக் கிழியாமல்வைத்திருந்தால் அவ்விடம்வந்து தங்களிடம் பிழையைத் திருத்திக்கொள்வேன். என் உடம்பு சௌக்கியமாயிருக்கிறது; தங்கள் அன்பே எனக்கு ஒரு பூரிப்பைக் கொடுத்திருக்கிறது. நான் அவ்விடம் வருகிறபடியால் கடிதத்தை நிறுத்தி நேரில் காண்போம். அதுவரையில் ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாயிருக்கிறது. தங்களிடம் பட்சியாகப் பறந்து உடனே வந்துவிடவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது.

பிரியநாயகர் பாதத்தில்
தங்கள் இன்னுயிர்த் தோழியாகிய
லெட்சுமி நமஸ்காரம்.”

இந்தக் கடிதம் இன்னாரால் எழுதப்பட்டதென்றும் இன்னாருக்கு எழுதப்பட்டிருக்கிறதென்றும் நாம் சொல்லாமலே இதைப்படிப்போர் அறிந்திருப்பார்கள். ஸ்ரீநிவாசன் இந்தக் கடிதத்தை ஆவலுடன் உடைத்து வாசித்தான்; பிறகு மூடினான் மறுபடி வாசித்தான். தன் சினேகிதன் சுப்பராயனுக்கு வாசித்துக்காட்டினான். மறுபடியும்தானாக வாசித்துக்கொண்டான். கண்களில் ஒற்றிக்கொண்டு முத்தமிட்டான். சந்தோஷத்தில் அவனுக்கு வாய்குழறிற்று. அவன் சினேகிதன் சுப்பராயனும் அதிக சந்தோஷமடைந்து ‘உன் பெண்டாட்டி லெட்சுமியில்லை சரஸ்வதியப்பா’ என்றான். ஸ்ரீநிவாசனுக்கு சாந்திமுகூர்த்தமான சமாசாரத்தை நாம் முன்னமே சொல்லவில்லை. அவனும் லெட்சுமியும் நளனும் தமயந்தியும்போல வெகு அன்னியோன்னியமாய் இருந்தார்கள். ‘காதலிருவர் கருத்தொத்து ஆதரவு பட்டதே இன்பம்’ என்று சொல்லப்பட்ட இன்பத்தை அவர்களைப்போல் இவ்வுலகத்தில் அடைந்தவர்கள் கிடையாது. ‘இசத்துள சுகத்திற்கு அளவுகோலாய் பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்’ என்று வர்ணிக்கப்பட்டிருக்கிற உண்மையான அன்பின் மதுரமான அதிரகசியங்களை அவர்களைப்போல் அறிந்து அனுபவித்தவர்கள் இல்லை.

சாந்திமுகூர்த்தமாகு முன்னேயே அவர்களிருவரும் ஒருவருமறியாமல் பேசிக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். ஸ்ரீநிவாசன் சிறுகுளத்துக்கு வந்திருந்த நாட்களுள் ஒருநாள் கோயிலுக்குப்போய் சுவாமி தரிசனம்பண்ணிக்கொண்டு தன் மாமனாரகத்து வாசற்றிண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவனுக்கு சிலநாளாகத் தன் பெண்டாட்டியுடன் பேசவேண்டுமென்று ஆசை; ஆனால் சமயங் கிடைக்கவில்லை. சமயம் கிடைத்தால் தைரியம் உண்டாகிறதில்லை. அன்றைக்கு லெட்சுமியைப்பற்றியே தியானம் செய்துகொண்டு மேலே சொல்லியபடி அவன் உட்கார்ந்துகொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பிச்சைக்காரன் பிச்சைக்குவந்தான். ஸ்ரீநீவாசன் ‘அவள் வந்தாலும் வருவாள் பிச்சைபோட’ என்று ஆவலுடன் பார்த்தான். லெட்சுமியும் அப்படியே சாதம் எடுத்துக்கொண்டுவந்தாள். இதுதான் சமயம் பேசுவதற்கு என்று ஸ்ரீநிவாசன் யோசனை செய்துகொண்டிருக்கும்போதே நெடுநாளாய் தன் அகமுடையானோடு பேசவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்த லெட்சுமி ‘அவராகப்பேசுகிறவழியாயில்லை. இனி வெட்கப்பட்டு முடியாது, இதுதான் சமயம்’ என்று எண்ணி ஆசை தூண்ட வெட்கம் கண்டிக்க மிகுந்த பயத்துடன் அரை வார்த்தையாக ‘சாப்பிட வாருங்களேன்’ என்று வெகு இனிமையாகச் சொல்லி மெதுவாய்ச் சென்றாள். அதைக் கேட்டவுடன் ஸ்ரீநிவாசன் ஆனந்தத்தால் பரவசனாய் விட்டான். பதில் சொல்லக்கூட அவனுக்கு சுயஞாபகமில்லை. அவன் உள்ளம் வசந்த ருதுவைப்போலக் குளிர்ந்து பூரித்தது. மெதுவாய்ச் சொல்லப்பட்ட தன் பெண்டாட்டியின் வார்த்தைகள் அவன் காதில் வீணாகானம்செய்துகொண்டு நின்றது. அதைத் திருப்பித் திருப்பித்தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு அதிருசியான ஒரு பதார்த்தத்தை உண்டவன் போல் அந்த வார்த்தைகளை ஒவ்வொன்றாய் மெதுவாய் மென்று அனுபவித்து, கோயிலுக்குப்போய் விட்டுவந்தபலன் உடனே பலித்தது என்று மகிழ்ந்தான். இதுதான் அவர்கள் முதல் முதல் பேசின சமயம். பிறகு அவர்கள் அடிக்கடி ஒளிந்து ஒளிந்து பேசிக்கொண்ட ரஹசியங்களை யெல்லாம் பலரறிய இங்கே சொல்வானேன்.



ஸ்ரீநிவாசன் பி.எ., பரீட்சையில் எல்லாருக்கும் முதலாகத் தேறினான்; அதன் பிறகு சட்ட-பரீட்சைக்குப் படிக்கும்போது அவனுக்கு சாந்திமுகூர்த்தம் நடந்தது. குழந்தை நடராஜனை யிழந்த முத்துஸ்வாமியய்யர் லெட்சுமி ஸ்ரீநிவாசன் இவர்களுடைய சந்தோஷத்தில் தன் துக்கத்தை ஒருவாறாக மறந்திருந்தார். அதனால் லெட்சுமியை புக்கஹத்துக்கு அனுப்பும்போது அவர் அழுத அழுகைக்கு அளவில்லை. ‘என் வீடு இனிமேல் பாழ். அடுப்பங்கரையில் எருக்கு முளைக்கட்டும் இனிமேல் எனக்கு என்ன’ என்றும், ‘ஐயோ இதற்காகத்தானே பெண்ணைப் பெற்றுக் கெட்டுப்போகாதே என்று சொல்லுகிறார்க’ ளென்றும் அவர் விசனப்படும்போது, ஸ்ரீநிவாசன் தகப்பனார் லெட்சுமியை கொஞ்சநாள் வைத்திருந்து பிறகு அனுப்பிவிடுவதாகச் சொல்லி ஆற்றினார். ஸ்ரீநிவாசன் பட்டணத்துக்குப்போன பிறகு கமலாம்பாளும் முத்துஸ்வாமியய்யரும் ஒரு தக்க ஜாகை யமர்த்திக்கொண்டு தங்கள் பெண் மாப்பிள்ளையோடு இருக்க உத்தேசித்தார்கள். லெட்சுமியினுடைய கடிதம் வந்து சில நாளைக்கெல்லாம் அப்படியே எல்லாருமாகப் பட்டணம் வந்துசேர்ந்தார்கள். அவர்களைக் கண்ட ஸ்ரீநிவாசன் தாயைக்கண்ட கன்றுபோலவும், பேடைக்கண்ட சக்கரவாகபக்ஷிபோலவும் ஆனந்தித்தான். வசதியான ஒருகிரஹத்தில் அவர்கள் எல்லோரும் வெகுசந்தோஷமாய் வாழ்ந்தார்கள்.

---

## XVII.

ஸ்ரீநிவாசனும் லெட்சுமியும் அடிக்கடி சமுத்திரக் கரைக்குப் போவதுண்டு. குழந்தைகள் தாய்மடியீதேறி ‘மண்டி’ போட்டு நின்று பாய்ந்து விளையாடுவதுபோல் அலைகளாகிய குசலவன் லவனைப்போன்ற குழந்தைக் கூட்டங்கள் தாயாகிய கடலின் மடிமீது ஏறிநின்று ஓடியாடிப் பாய்ந்து கரையின்மீது தவழ்ந்து மணலைவாரி ஜலத்திலும், ஜலத்தைவாரி மணலிலும் போட்டுக் கருமணல் மத்தியில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் எப்படியோ அப்படிச் சிறிய அளவற்ற பொன்மணல்கள் பிரகாசிக்க பற்பல விசித்திரக்கோலங்களை இயற்றி அழித்துப் பின்னும் இயற்றி நுரைத் தொகையையும் முத்தையும் சிந்தி நத்தைகளையும் சங்குகளையும் கட்டைகளையும் உருட்டிப் புரட்டிப் பரப்பிப் புதைத்து ஒருக்கணமும் ஓய் வொழிவில்லாத இவ்வித பாலிய லீலைகளைச்செய்துக்கொண்டிருக்கின்றகடற்கரைக்கு ஒருநாள் அந்திப்பொழுதில் ஸ்ரீநிவாசனும் லெட்சுமியுமாகவந்தார்கள். அன்று அஸ்தமன அழகையான் என்னென்று சொல்வேன். பகல் முழுவதும் காணக்கண்கூசும் காந்தியுடன் ஆகாயம் பூமியாகிய இவ்விரு உலகங்களையும் தனது ஆஞ்ஞைக்குள்ளடக்கித்தனியரசுபுரிந்த காம்பீரச்செல்வனாகிய சூரியன், விருத்தாப்யதசையடைந்து, அஜ ரகு திலீபாதியரசர்களைப்பார்த்துத் தானும் ராஜ்யத்தைவிட்டுத் தவஞ்செய்யக்கருதினான்போல் சாந்தஸ்வரூபமாய் மாறி செந்தாமரைபோல் மலர்ந்த தனது இனிய முகத்தை யாவரும் காணக்காட்டி அர்க்கியாதிகளால் தன்னை வாழ்த்தும் தனது பிரஜைகளிடத்திலிருந்து விடைபெற்று (செவ்வானமாகிய) செஞ்சடைபுனைந்து தனியே செல்ல ‘இதுவும் உனது திருவிளையாடலே’ என்று பிரமிப்படைந்த பக்தகணங்கள் ஆறு, குளம், வீடுகள்தோறும் கைகூப்பிநின்று ‘ஆரே உன் அதிரேகமாயையறிவார்’ என்று கடவுளைப்போற்ற, கடற்கரையிலோ இன்று நம்முத்தியோகம் இத்துடன் ஒழிந்தது என்று தங்களுடைய மீன் நிறைந்த வலைகளுடன் கட்டைமரங்களையும் படகுகளையும் கரையில்சேர்த்துச் செம்படவர்கள் திரைகடலோடித் தாங்கள் தேடிய திரவியத்தை, கூடையும் கையுமாய்த் தங்களை வழிபார்த்து, வந்தவுடன் கைகொட்டி நின்ற தம் பெண்டுகள் பிள்ளைகளுடன் பங்கு பகிர்ந்து நின்றனர் ஒருசார்.

மானினம்வருவபோன்றும் மயிலினந்திரிவபோன்றும்
மீனினமிளிர்வபோன்றும் மின்னினமிடைவபோன்றும்

பொம்மெனப்புகுந்த ஆங்கிலேய மாதர்கள் தோகைபோன்ற உடையும் அன்னம்போன்ற நடையும் கிள்ளைபோன்ற மொழியும்கொண்டு தங்களுடைய (அல்லது பிறருடைய) நாயகர்களோடு கைகோர்த்து உலாயாடி நகையாடினர் ஒருசார். பள்ளிக்கூடத்துப்படிக்கும் பாலர் சிலர் கங்கைக்குப்போன கடாவின் கதையாய் கடற்கரையிலும் புஸ்தகங்களுடன் கட்டியழுதனர் ஒருசார். வாலிபக்கணவர் சிலர் தம் சிறு மனைவிமாரொடு கடல்காணத் துணிந்து கரையை அணுக அங்கு யாரேனும் எதிர்ப்பட்டால் தம் நோக்கு அகற்றித் தலைநாணி ஏதோ குற்றம் செய்

தவர்போல் நெஞ்சும் மார்பும் பதைபதைக்க மணற்புறத்தப் பதுங்கினர் ஒருசார். நாடுகள்தோறும் ஓடியலையும் லாட ஜனங்கள் கடலைத்தொழுது கை கூப்பினர் ஒருசார். அடக்குவாரற்று ஆடியோடும் அலைகளையும் கனிமயக்குற்றுக் கன்றுபோல் துள்ளி கடற்கரையில் நித்தியவசந்தம்செய்து வீசாநின்ற வாலிபக்காற்றையும் கண்டு தாமும் உற்சாகச்செறிவுற்றுத் தனியிடமடைந்து தம்மோசையைக்கடலோசை விழுங்குமென்று துணிவேறிப் பாடத்தெரியாதாரும் பாடினர் ஒருசார். ஏராளமாய் நிறைந்திருந்த மணற்பரப்பின்மீது சிலர் மல்லக யுத்தம்செய்து நின்றனர். சிலர் அங்கு வீசும் தென்றலைப்போல்ஓடி யுலாவி ஓயாது அடிக்கும் அலைகளைப்போல் குதித்து விளையாடினர். சிலர் தனியே உட்கார்ந்து தங்களது குடும்ப ரகசியங்களை அலைகளுடன் சொல்லி யாறினர். இவ்விதம் 'வெறிவெவ்விதாலு' (பயித்தியம் பலவிதம்) என்ற தெலுங்குப் பழமொழிக்கிணங்கப் பற்பல விசித்திரங்கள் நிறைந்த கடற்கரையில் ஸ்ரீநிவாசனும் லெட்சுமியும் ஓர் ஓரப்புறத்தில் (ஒருபடகின் மறைவில்) நட்சத்திரங்களிழைத்த ஆகாயமாகிய முத்துப்பந்தரின்கீழ் சமுத்திரராஜன் பாதகாணிக் கைகொடுத்துப் பாதபூஜைசெய்ய வாயு பகவான் சாமரைவீச அனேக ஆயிரம் அலைகள்கூடி அனவரதம் முயற்சித்து இயற்றிய வெண்மணல் விமானத்தின்மீது தமக்கு நிகர் தாமேயென எழுந்தருளினார்கள். அவர்கள் உட்கார்ந்தவுடன் லெட்சுமி பாடத்தொடங்கினாள். அஞ்சொற்கள் அமுதினின்று மன்னிக்கொண்ட அவள் குயில் குழல் யாழ் இவற்றைப் பழித்த குரலுடன் பாட ஸ்ரீநிவாசனுக்கு பூலோகத்திலிருப்பதாக ஞாபகமேகிடையாது. விபரந்தெரியாத அலைகள்மட்டும சிறிது நேரமாவது சப்தம் செய்யாது இருந்தால் கடலும் காற்றும் அப்படியே பிரமித்து மயங்கி யடிமைப்பட்டிருக்கும் என்று அவன் சொல்ல,

லெட்சுமி.—ஆமாம் சமுத்திரம் இரையாமலிருந்தால் இரையாமலிருக்கும் என்று சொல்லுகிறீர்களாக்கும்; 'நிரம்ப சரி' என்று அவனை தட்டிக்கொடுத்துக் கேலி பண்ணினாள்.

சிறிதுநேரத்திற்கெல்லாம் சந்திரனும் வந்தது. காகரவென்றுஅமிர்த கலசம்போல் எழுந்து 'வெண்டாமரையின் மலர் பூத்த தொத்த தவ்வாழி வெண்திங்கள்' என்றபடி தாமரைப் புஷ்பம்போல் விளங்கும் சந்திரனுடைய மெல்லிய ஒளி கடலில் பரவ,

ஸ்ரீநிவாசன்.—'சந்திரன் வந்துவிட்டானும், சமுத்திரம் முகமலர்ந்து சந்தோஷத்தால் புன் சிரிப்புச்செய்கிறது, ஆஹா பேஷ்' என்றான்.

லெட்சுமி.—ஏன் அதற்கு அவ்வளவு சந்தோஷம் சொல்லுங்கள்?

ஸ்ரீநி.—சந்திரன் விருந்தோ இல்லையோ அதுதான்.

லெ.—அப்படியில்லை 'கலந்தவர்க்கு இனியதோர் கள்ளுமாய்' என்று சொல்லியிருக்கிறதல்லவோ. ஸ்திரீ புருஷர்கள் அன்பாய் இருந்தால் அவர்களுக்கு சந்திரன் அமிர்தபானம்போலே——

ஸ்ரீநி.—யார்புருஷன் யார் பெண்டாட்டி?

லெ.—சொல்லட்டுமா; இருங்கள் சொல்லுகிறேன்; இந்த சமுத்திரந்தான் போய் பெண்டாட்டி. இளந்தென்றல் இருக்கிறதல்லவோ——

ஸ்ரீநி.—ஆமாம் இருக்கிறது அதற்கென்னபண்ண வேண்டுமென்கிறாய். அது அப்படித்தான் இருக்கும்: நீ என்னடி சொல்லுகிறது.

லெ.—போங்கள் போங்கள் நீங்கள் கேலிபண்ணுகிறீர்கள், நான்பேசவில்லைபோங்கள்.

ஸ்ரீநி.—இல்லையடியம்மா சொல்லு; சே, கோபித்துக்கொள்ளாதே.

லெ.—(ஸ்ரீநிவாசனுக்கு ஒருமுத்தம்கொடுத்து) இளந்தென்றல்தான் சீமாவாம் (ஸ்ரீநிவாசனும்) சமுத்திரந்தான் போய் லெட்சுமியாம், அலைகள்தான் குழந்தையாம்.

ஸ்ரீநி.—அப்படியானால் காற்றிற்கு எத்தனை பெண்டாட்டி; அதோ அந்த மரங்கள் எல்லாம் காற்றிலாடுகிறதே அவைகளும் அதற்குப் பெண்டாட்டிதானோ?

லெ.—புருஷர்கள் எப்பொழுதும் பொல்லாதவர்கள் தானே, அவர்களை நம்பப்படாதல்லவோ; ஒவ்வொருவருக்கு எத்தனை ஸ்திரீயோ. அதோ பாருங்கள் காற்று அந்தமரத்தைப்போய் முத்தமிடுகிறது. அந்தமரம் 'நன்றாயிருக்கிறது! எல்லாரும் இருக்கிறபோதுதான் முத்தமிடுகிறதாக்கும்' என்று கொஞ்சம் கசுகசுவென்று சலித்துக்கொள்வதாகப் பாசாங்குபண்ணுகிறது.

ஸ்ரீநி.—ஆமாம் ஸ்திரீகளுக்கு எப்பொழுதும் பாசாங்கு பண்ணுகிறது தானேதொழில். மாமாலக்காரிகள்: 'சேலைகட்டியமாதரை நம்பினால்——'



என்று சொல்லி முடிக்குமுன் குபீரென்று ஒரு அலைசிதறி ஸ்ரீநிவாசன்மேல் ஜலத்தை வாரித்தூவிற்று. உடனே லெட்சுமி தன்வஸ்திரத்தால் அவன் முகத்தைத் துடைத்துவிட்டு,

'இனிமேல் ஸ்திரீகளை வையாதேயுங்கள். வேணும் நன்றாய்வேணும் பெண்டுகளைப் பழிக்கலாச்சா. திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை.' என்றாள்.

ஸ்ரீநி.—போக்கிரி சமுத்திரம் அதிகப்பிரசங்கி சமுத்திரம் புருஷனுக்கு அடங்காத பெண்டாட்டி போல சதா கரையிலே மோதிக்கொண்டிருக்கிறது.

லெ.—ஆனாலும் இந்த சமுத்திரத்துக்கு நிரம்பக் கொழுப்புத்தான். உங்களைப்போல சாதுவாக இருக்கப்படாதா.

ஸ்ரீநி.—அகஸ்தியர் ஒருதட்வை முழுவதையும் ஆசமனீயம்பண்ணித் தீர்த்துவிட்டார். ராமர் ஒரு தடவை வயிற்றெரிச்சல்தீர அவமானம்பண்ணிவிட்டார். அப்படியிருக்கிறதிலேயே இந்தப் பாடாயிருக்கிறது.

லெ.—என் அதற்கு முன்னாலேயே தேவர்களும் ராட்சதர்களுமாக அதினிடம் இருக்கிறதையெல்லாம் கடைந்து எடுத்துவிடவில்லையோ. சந்திரன், லெட்சுமி எல்லாவற்றையும் பறிகொடுத்த இந்தத் தரித்திரக் கடலுக்கு இத்தனை கர்வம் வேண்டியிருக்கிறதா? நீங்கள் வந்திருக்கிறீர்களென்று கொஞ்சமாவது மதிப்பிருக்கிறதா பாருங்கள்.

ஸ்ரீநி.—ஓஹோ! சரிதான், சரிதான்; சமுத்திரத்தைச் சொல்லக் குற்றமென்ன, அதனுடைய லெட்சுமி நீ வந்துவிட்டாயல்லவோ, அந்த சந்தோஷமா அதற்கு? அப்படிச் சொல்லு. இந்த அமர்க்களத்தில் என்னை எங்கே அது லட்சியம் பண்ணப்போகிறது. மேலும் எத்தனையோ பேர்கள் அதில் ஸ்நானம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய பாவமெல்லாம் அதற்குப்போய்ச் சேர்ந்திருக்கிறது. அந்தப் பாவத்தையெல்லாம் போக்குகிறதற்கு பதிவிரதா ஸ்திரீகளுடைய பாததூளிதான் மருந்து. பதிவிரதா சிரோமணி நீ வந்திருக்கிறாய். அதுதான் அதற்கு இன்றைக்கு இவ்வளவு ஆஹ்லாதம்.

லெ.—அதற்கு ஒரு அலையாவது என்கிட்டவந்ததா. என்மேலே ஒரு பொட்டு ஜலம் காட்டுங்கள். நீங்கள் சொல்லுகிறபடியில்லை. பிரகலாதனை இரணியன் சமுத்திரத்திலே தள்ளினபோது சமுத்திரம் அவனைத் தாங்கினதே எதற்காக? அவன் மகாபுண்ணியசாலி அவனை யண்டினால் பாவமெல்லாம் போய்விடும் என்று. அதுபோல தாங்கள் ஐயரவாள் இப்பொழுது விஜயம் பண்ணியிருக்கிறீர்கள். ஏகபத்தினிவிரதர்; போஜராஜாவுக்கு இரண்டாவதாகத் தங்களைத்தான் சொல்லவேண்டும்; அதுதான் தங்களைத் தொடுவதற்கு சமுத்திரம் இவ்வளவு ஆத்திரப்படுகிறது. தொட்டாய்விட்டது. இப்பொழுது அலைகளெல்லாம் 'தேன் குடித்த நரி படுகிறபாடு படுகிறது.'

இப்படி யிவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே ஒருபெரிய அலையானது படையெடுத்து யுத்தத்துக்கு வரும் அரசனைப்போல கோஷித்துக்கொண்டு இவர்களைத் துரத்திவர இவர்கள் ஓடினார்கள். பிறகு அவர்கள் கைகோத்துக்கொண்டு திரும்பி ஜெல்லிக்கட்டில் 'நின்று குத்திக்காளை'யுடன் விளையாடுவது போல அலைகளுடன் அவைகள் துரத்தும்போது ஓடி, ஓடும்போது துரத்தி விளையாடினார்கள். பிறகு ஒரு சிறு கட்டை ஒன்று அகப்பட அதை ஜலத்திலெறிந்து 'எனக்கு வேண்டாம் பூசினிக்காய் எனக்கு வேண்டாம் பூசினிக்காய்' என்ற கதையாய் அலைகள் அதை மேட்டில்போட இவர்கள் அதை மறுபடி ஜலத்தில்போட்டு ஒருவரோடொருவர் போட்டி போட்டு விளையாடினார்கள். இப்படி ஓடிக்களைத்து வீட்டுக்குத் திரும்ப விருக்கும் சமயத்தில் கடலோசை அவர்களுடைய காதில் தீர்க்கமாக நுழைந்தது. இதற்குமுன் தங்களுடைய சொந்த ஆரவாரக கொதிப்பினால் கடலின் ஆரவாரத்தை யவர்கள் முழுதும் கவனித்து அறியவில்லை. இப்பொழுது அவர்கள் ஆடிப் பாடி அமர்ந்திருந்ததனால் அவர்களுடைய அடங்கிய தன்மை இடைவிடாமல் இம்மூட உலகத்துக்கு ஏதோ ஒரு அரிய பெரிய தத்துவார்த்த ரஹஸியத்தை உபதேசித்துக்கொண்டிருக்கிறாற் போன்ற கடலின் ஓசையை கிரஹித்து அதன் அர்த்தத்தையும் அவர்கள் அறியச்செய்தது.

லெட்சுமி 'இருங்கள், இருங்கள், இந்த சமுத்திர ஓசையைக் காதுகொடுத்துக் கேட்போம்' என்று சொல்லி தன் முழுமனதையும் செலுத்திக் கவனித்தாள். ஸ்ரீநிவாசனும் அப்படியே செய்தான். கடலோசை விட புருஷர்களின் விளையாட்டரவமல்ல; வாலிபஸ்திரீகளின் வம்புக்கூப்பாடல்ல: இனிய வீணையாதிகளின் கானம் அல்ல: வெற்றித்தம்பட்

டத்தின் ஓசையுமல்ல. அந்தச் குரலில் களியாட்டத்தொனி கிடையாது: சோகரசம் உண்டு. ஆனால் புத்திரனை யிழந்த பிதாவின் சோகம், புருஷனை யிழந்த மனைவியின் சோகம் முதலிய சோகங்களுக்கும் அதன் சோகத்துக்கும் சம்பந்தமில்லை. புலையன் வயிற்றிற் பிறந்து 'தஸ்மாத் ஜாக்கிரத ஜாக்கிரத, என்று பறை யறைந்த புண்ணிய புருஷருடைய இரக்கங் கலந்த சுய ஞாபகமற்ற சோகத்துக்கும் 'சுகமற்ற இப்பாழுலகத்தில் பந்துக்களையுங் கொன்று சுகமனுபவிக்கக்கருதுவார்களா' என்று சோகித்த அர்ஜ்ஜுனனுடைய சோகத்துக்கும் காம்பீரியத்தன்மை மயமான கடலோசையின் சோகத்துக்கும் நிரம்ப நெருக்கமான சம்பந்தமுண்டு. ஆனால் அவர்களுடைய பறையோசையையும் குரலோசையையும் போன்று சிறுத்திராமல் அழிவற்று ஆகாயமட்டுமளாவி அனேக ஆயிரம் சிரசுகளையுடையதாய் எள்ளருந்திசைகளோடி பரமாத்மாவே மூர்த்திகரித்து நின்றாற்போல் நிற்கும் ஹிமோத்பர்வதமானது திடீரென்று ஒரு நாள் தனது மௌனப்பிரசங்கத்தை நிறுத்திவாய்திறந்து பேசினால் எப்படியோ அப்படிப் பெரிய, காம்பீரமான, பொருள் நிறைந்த, வேத ரஹஸிய தத்துவார்த்தத்திற்குத் தக்கதோர் குரலுடனே கடலானது நம்முடன் இடையறாது வசனிக்கிறது. ஸ்ரீநிவாசனும் லெட்சுமியும் காதுகொடுத்துக் கவனிக்கவே அவர்களுடைய இயற்கைக்குணத்தினாலும் அவர்கள் அப்பொழுது அடைந்திருந்த சமனத்தன்மையின் காரணத்தினாலும் அக்கடலோசையின் ரஹஸியார்த்தம் அவர்கள் இருவருக்கும் ஏககாலத்தில் தொனித்தது. தொனிக்கவே அவர்கள் 'ஐயோ கடவுளின் மகிமையே மகிமை ஆஹா!' என்று வாய்விட்டுச் சொல்லமாட்டாமல் சொல்லி ஆனந்தித்தார்கள். அப்பொழுது லெட்சுமி.—'என்ன கம்பீரம் என்ன விஸ்தீரணம் ஐயோ அதில் எத்தனைகோடி ஜீவஜெந்துக்களிருக்கிறது! அதுவே தனியாக ஒரு உலகம்போலிருக்கிறது. அது ராத்திரிக்கூடத்தூங்காதோ' என, ஸ்ரீநிவாசன்.—'சுவாமிக்குத்தூக்கம் உண்டோ? இதுவும் அவரைப்போலவே (மாயையாகிய காற்றினால் அலைகளை) சிருஷ்டிப்பதும் அழிப்பதுமாயிருக்கிறது. நாம் கடைசியில் ஈசுவரனைப்போய்ச் சேருவதுபோல அலைகளும் சமுத்திரத்தில் கலக்கிறது' என்று அத்வைதம்பேசிப் பிறகு ஸ்ரீநிவாசன் 'இன்னொரு ஆச்சரியம்பார், இந்த அலைகள் பிறப்பதும் குதிப்பதும் சிரிப்பதும் ஓடுவதும் ஒன்றையொன்று அடிப்பதும் முட்டுவதும் மோதுவதும் இறப்பதுமே தொழிலாயிருக்கின்றன. இவைகளுடைய வீராரவாரத்தினால் விளையும் கடைசி யோசையோ இவைகளுடைய சிரிப்பு விளையாட்டுக்கு முற்றும் விரோதமாய் 'ஐயோ ஏன இப்படி வீணாகக் கூப்பாடிட்டுக் கெட்டுப்போகிறீர்கள்' என்று சொல்லுவது போல் சோகத்தொனியை உடைத்தாயிருக்கிறது. இப்படித்தான் உலக வாழ்க்கையும்' என,

லெட்சுமி :—'இப்படித்தான். மனிதனும் பிறந்து சிரித்து அழுது சண்டைபோட்டு ஆடிப்பாடிக்கடைசியில் அமருகிறது. இங்கே ஒரு ஆள் இருந்தானே என்னடா மிச்சம் என்றால், ஒருபிடி சாம்பல்; அதையும் காற்று ஒரு மூச்சில்வாரிக்கொண்டு போய்விடுகிறது. ஏனடா இந்த விருதாச்சண்டை இதில் உனக்கென்ன மிச்சம்: மிஞ்சுவது அவர் ஒருவர் தான்: போய் அவரைத்தேடு, என்றும்,

"நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று."

என்றும் இந்த சமுத்திரம் நமக்குச் சொல்லுகிறாற் போலிருக்கிறது.' என்று சொல்ல, இருவரும் சிறிது நேரம் தியானத்திலிருந்து பிறகு,

ஸ்ரீநிவாசன் 'ஏது பெரிய வேதாந்தியாகப் போய்விட்டாயே' என்று அவளைத் தட்டிக்கொடுக்க தன்னைத்தட்டிக்கொடுத்த கைக்கு அவள் ஒரு முத்தம் கொடுத்தாள். இப்படி விளையாடிக்கொண்டு இவர்கள் வீடுவந்துசேர்ந்தார்கள்.

இவர்கள்போய்ச்சேர்ந்த பின்னடியிலேயே தபால்காரன் முத்துஸ்வாமியய்யர் பெயருக்கு ஒரு அவசரத்தந்தி கொண்டுவந்தான். முத்துஸ்வாமியய்யர் எங்கேயோ வெளியேபோயிருந்தார். தந்தியோ அவசரத்தந்தி; சிறுகுளத்திலிருந்து வந்திருக்கிறது. கமலாம்பாள் 'அது என்னமோ ஏதோ நீங்கள் உடைத்துப்போடுங்களேன்' என்று மாப்பிள்ளையைப்பார்த்துச்சொன்னாள். அதை உடைத்துப் பார்க்கிறவரைக்கும் ஒருவருக்கும் சமாதானம் இல்லை. ஸ்ரீநிவாசன் அது எப்பேர்ப்பட்ட தந்தியோ நாம் உடைக்கலாமோ உடைக்ககூடாதோ என்று நெடுநேரம் ஆலோசனைசெய்தான். அகத்துக்கு உள்ளே தந்தி வந்துவிடுகிறது என்றால் அப்புறம் என்ன பண்ணுகிறது. ஸ்ரீநிவாசனே கடைசியாய் அதை உடைக்க எத்தனித்தான்.

(இன்னும் வரும்.)

பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர், பி. ஏ.



# ஒருதாத்தா செய்த தீர்மானம்
## அல்லது
# தங்கம்மாள் தலைவிதி.

## IX.

சேஷு அய்யர்.—நாதரவாள், இன்றைக்காவது வாரண்டு ஜப்திக்கட்டளை கிளம்பும்படியாய் தயவு செய்யவேணும். தாமதப்பட்டால், பிரதிவாதி எங்கேயாவது ஓடிப்போய்விடுவான்.

நாதர்.—எங்காணும் பறபறவென்று பறக்கிறீர். வரிசைக்கிரமமாய்த்தானே வரவேணும். எனக்கு உம்முடைய வேலை ஒன்றுதானோ.

சேஷு.—நாலு நாளாய் அலைகிறேனே.

நாதர்.—சும்மாத்தானோ! பிரதிவாதியின் குடியைக் கெடுத்துப் பணம் பெறுகிறதற்கு அலைகிறீர்.

சேஷு.—அந்தப் பணத்துக்கும் எனக்குஞ்சம்பந்தமில்லை. வசூலானால் ஒரு தம்படி எனக்குக்கிடைக்கமாட்டாது. பேரிரவல் வியாச்சியம் வாங்கி பழிக்கு பாத்திரமாகி, வீண்பொல்லாப்புப் பெறுகிறேன். வீட்டுக்குப்போனால் அம்மாளும் அய்யாவும், "கட்டளைகிளம்பிற்றா, என் தாமதம், முன்சீப்தாரைக் கேட்டாயா, நாதருடன் நாங்கள் சொன்னதாகச் சொன்னாயா" என்று பிராணனைவதைக்கிறார்கள். நீங்களோ ஆகட்டும் ஆகட்டுமென்று இழுத்தடிக்கிறீர்கள். பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்குமாதிரி விழிக்கிறேன்.

நாதர்.—உங்களய்யரைப்போல் வஞ்சகரை நான் எங்குங்கண்டதில்லை. முன்னொரு ஏலவிஷயமாக நூறு ரூபாய் தருகிறேனென்று சொன்னார்; காரியமுடித்துக்கொடுத்தேன். காரிய மாயிற்று: பிறகு விரலைக்காட்டினார். கண்டால் விநயமாயும், குளிர்மையாயும், பழம் நழுவிப்பாலில் விழுந்தாற்போல் பேசுகிறார். காசுமாத்திரம் கிளம்புகிறதில்லை. எல்லாரும் விஷத்தைக்கொடுத்துக் கொன்றால், அய்யர் வாழைப்பழத்தைக் கொடுத்துக்கொல்லுவார். நான் இந்தக் கோர்ட்டில் இருபது வருஷமாய் உத்தியோகஞ்செய்கிறேன். எவ்வளவோ பேர்களைப் பார்த்திருக்கிறேன். இவருடைய பூர்வீக இருப்பும், இப்போ இருக்கிற ஸ்திதியும் எல்லாம் எனக்கு நன்றாய்த்தெரியும். வேண்டியவன் வேண்டாதவன் எல்லாருக்கும் ஒரேமருந்தா! பார்த்தாலும் பார்த்தேன்: அவள் கெட்டாள் தாசிமுண்டை, அய்யாவுடைய ஏய்ப்புக்கு அவளேய்ப்பு உரைபோடக்காணமாட்டாது.

சேஷு.—என்னுடனே சொல்லி நான் என்னசெய்யக்கூடும். நீங்கள் சொல்லுகிறதை அவாளிடத்தில்சொல்லக்கூடவில்லை. அவர்கள் சொல்லுகிறதை உங்களிடத்தில்சொல்லக்கூடவில்லை. 'உரலுக்கு ஓர்புறம் இடி,' 'மத்தளத்துக்கு இரண்டுபுறமும் அடி' என்றிருக்கிறது என்பாடு. 'பாம்புக்குத்தெரியும், பாம்பின் கால்' உத்தியோகஸ்தர்களுக்குத் தெரியும், பரஸ்பரகுணம். நான் என்ன ஐயா வெறுஞ்சோற்றாள். சொன்னதைக்கேட்டுக்கொண்டு, போட்டதைச் சாப்பிடக்கூட அவகாசமில்லாமல், வாயில் ஈ புகுந்தது தெரியாமல் "லோ லோ" என்று நாய்மாதிரி, அங்குமிங்கும் சந்தன மறைக்கிறவன் கழுத்துத் தாவடமாதிரி திண்டாடுகிறேன். இரண்டாட்டுக்கிடாவுக்கு நடுவில் அகப்பட்டுக்கொண்ட நரி போல அவஸ்தைப்படுகிறேன்.

நாதர்.—நாளைக்காகட்டும். இன்றைக்குச் சரிப்படாது.

சேஷு.—அய்யரவாளிடத்தில் போய் அறிவிக்கட்டுமா.

நாதர்.—போய்ச்சொல்லும், அவருக்கு நான் ஒன்றும் பயந்து கிடக்கவில்லை. நானென்ன குமஸ்தா கிருஷ்ணய்யரைப்போலவோ?

சேஷு அய்யர் ஓடிப்போய் இராமசுவாமி அய்யரிடத்தில் அறிவிக்க, அய்யரவர்கள் பெட்டியைத் திறந்து பதில்கொடுத்தார். அதைக்கொண்டோடி வந்து 'நாதரவாள், அய்யரவாள் தங்களிடத்தில் ஏதோ கடன்வாங்கியிருந்தாராமே: அதற்காக இதை வைத்துக்கொள்ளச் சொன்னார். இன்னும் ஏதாவது பாக்கியிருந்தால் சொல்லி அனுப்பச்சொன்னார்.' என்று கொடுத்தார்.

நாதர்.—சரி, சற்றுவெளியேயிரும். வாரண்டு சம்மன் எழுதி கையெழுத்து வாங்கிக்கொடுக்கிறேன்.

சேஷு.—சேவகனையும், அமீனாவையும் நல்லவர்களாய் பார்த்து அனுப்புங்கள். அயோக்கியர்களாயிருந்தால், பிரதிவாதிக்கு ஆளனுப்பி முன்னாலேயே எச்சரிக்கையாய் இருக்கச்சொல்லுவார்கள்.

நாதர்.—கோர்ட் உத்தியோகஸ்தர்களை தூஷித்து ஒன்றும் பேசாதேயும். உத்தியோகஸ்தர்களெல்லாரும், யோக்கியர்கள் தான்.

சேஷு.—இல்லை, நேற்றையதினம் நான் கோர்ட்டு வாசலில் உட்கார்ந்து இருக்கும்பொழுது நடந்ததைக் கண்ணாலே பார்த்தேன். சேவகனோடு வாதியும்கூட நிற்கிறான். சேவகன் ஜாடை காண்பித்தான். பிரதிவாதி மனுஷன் புறப்பட்டு ஓடினான். ரெயிலொப்பந்தம் ஜாடையினால் எவ்வளவோ காரியம் நடக்கிறது.

நாதர்.—'பைத்தியம்மாதிரி பிதற்றுதேயும். உத்தியோகஸ்தர்களை வீண்வாயுருட்டு உருட்டி, நல் பேசாமல், வாய்க்கட்டை போட்டீரானால் வழியாய் நடப்பார்கள்.'

சேஷு.—நான் அவர்களுக்கு திருப்தியாய் சாப்பாடு போடுகிறேன். தாங்களும் ஒருவார்த்தை சொன்னால்தான் பயப்படுவார்கள்.

நாதர்.—நீர்போய் வெளியேயிரும், கட்டளைக்கு கையெழுத்தானவுடன் அறிவிக்கிறேன்.

சரியாகப் பத்துமணிக்கு கோர்ட்டுக்குவந்த சேஷு அய்யர் மத்தியானம் ஒருமணி நேரம் வரையில் காத்துக்கொண்டிருந்தார். 'கேள்விமுறையைக்காணோம்' என்று எழுந்திருந்து மேல்வெயிலில் மண்டை வெடிக்க, கீழுஷ்ணத்தில் கால் கொப்பளிக்க, வீட்டுக்குப்போய் 'டிபன்' கொண்டுவந்து, வக்கீல் இராமஸ்வாமி அய்யரிடத்தில் கொடுத்து, உடம்பெல்லாம் வியர்வை ஆறுய்ப் பெருக, கண் இருட்ட, தாகம் நாக்கை வரட்ட, வாட்டமுற்று, சோர்ந்து சுவரில் சார்ந்து நிற்கும்பொழுது, 'என் இவ்வளவு நேரம், வேளைக்கு டிபனில்லாவிட்டால் தலைவலி வந்துவிடுமென்று தெரியாதா' என்று இராமசுவாமி அய்யர் கேட்டார்.

சேஷு.—'கட்டளை பிறக்குமென்று காத்திருந்தேன் நாழியாகிவிட்டது. இன்னும் காலமே முதல் சாப்பிடக்கூட இல்லை. 'டிபன்' கொடுத்துவிட்டு மறுபடியும் வீட்டுக்குப்போகவேணும்.'

அய்யரவர்களுக்கு 'தயை' என்பது மறந்துபோயிற்று. வந்த காப்பியிலும், ரவை உப்புமாவிலும், 'சாப்பிடு' என்று வாய் அசைக்கவுமில்லை, கைநீட்டவுமில்லை. பாக்கி யில்லாமல் தின்றுவிட்டு, சேஷுவைப்பார்த்து, "நாதர் இன்னும் பதில் சொல்லவில்லையோ" என்று வினவினார்.

சேஷு.—'ஓரிழவையும் காணோம்; இப்போ கட்டளை கிளம்புகிறதாகத் தோன்றவில்லை.'

இரா. அ.—நான் கொடுத்ததை அவரிடத்தில் சேர்ப்பித்தாயா.

சேஷு.—வாங்கிப்பார்த்து பைக்குள்போட்டுக்கொண்டு, வெளியே காத்துக்கொண்டிருக்கச் சொன்னார்.

இரா. அ.—'நல்லது நான் நாதரை நேரில் பார்க்கிறேன்; நீ வீட்டுக்குப்போய் சாப்பிட்டுவிட்டு சீக்கிரம் வா. எங்கேயாகிலும் வெயிலுக்குப் பயந்து தூங்கிவிடாதே.'

சேஷு.—'எனக்கு தூக்கமே கிடையாது'—'என் ஜன்மத்துக்கு வெயில், மழை இரண்டும் பார்த்துக் கட்டுமா.'

இராமஸ்வாமி அய்யரவர்கள், சேஷு அய்யர் வெற்றிலைக்குச் சுண்ணாம்பு இட்டுக்கொடுக்கப்போட்டுக்கொண்டு, சற்றுநேரம் விசிரச்சொல்லி, பிறகு அவரை அனுப்பிவிட்டு, தலையில் கொட்டடி உருமாலும், காதில் வைரக்கடுக்கனும், பட்டு 'லாங்கோட்டும்,' கைவிரல்களில் பச்சை மோதிரமும், இடுப்பில் ரவை செல்லாவும், காலில் 'பணுத்' ஜோடும் நெற்றியில் சாந்துப்பொட்டும் தரித்தவராய் வெளியே வந்து, கட்சிக்கார பரிவாரங்கள் சூழ்ந்துவர, நாதர் ஆபீசிற்குச் சென்றார்.

நாதர் லட்சுமணராயர், அவர் வருவதைப்பார்த்து மறுபடியும் பார்க்காதவர்போல் எழுதிக்கொண்டிருந்தார். இவர் மாத்துவர்; பெரிய சமுசாரி; பந்து பரிபாலனமும் அதிகம்; எவ்வளவு வந்தாலும் வீட்டுச் செலவுக்குப் போதுகிறதில்லை. இருபத்தைந்து வருஷகாலம் உத்தியோகஞ்செய்தும், கையில் ஒரு காசு கிடையாது. உதாரகுண முடையவர்; அடிக்கடி 'தாசி'க் கச்சேரிவைத்து எல்லாரையும் அழைப்பார்; வேடிக்கை விளையாட்டில் பிரியமுள்ளவர், வயதில் நாற்பத்தைந்திருக்கலாம்; மூக்கில் கண்ணாடியும், முகமெங்கும் பஞ்சமுத்திரையும், கோடை வெயிலுக்காக உடம்பெல்லாம் பூசிய சந்தனமும், காதில் துளசியும், கழுத்தில் துளசிமாலையுமாக, தலைப்பாகு இல்லாமல் உட்கார்ந்திருந்தார்.

இராமஸ்வாமி அய்யர், பிரசன்னமுகத்தில் புன்னகை விளங்க, தாம்பூலத்தினாற் சிவந்த உதடுகள் திறவாமல், இனிய குரலுடன்—'அண்ணா, வேலை கடுமையாயிருக்கிறாப்போ லிருக்கிறது, உங்களுக்கு வெயிலில் வேலைபார்ப்பது சிரமமாயிருக்கும்' என்றார். லட்சுமணராயர், அண்ணாந்துபார்த்து, 'அய்யரவாள் வாருங்கள், வேலைஞாபகத்தில் தாங்கள் உள்ளே வந்ததைப்பார்க்கவில்லை, மன்னிக்கவேணும்.' என்று எழுந்திருந்தார்.

'அண்ணா, பெரியவாள்; எழுந்திருப்பானேன், உட்காருங்கள். ஓர்காரியமாக வந்தேன். அந்தக்கட்டளை கிளம்பிற்றோ. சேஷுவினிடத்தில் கூடச் சொன்னேனே.' 'இதோ தயாராகிவிடும் உங்கள் வேலையை முடித்து, வலங்கிமான் முனிசிப் கோர்ட்டுக்கு இன்றையதினம் தபாலில் அனுப்பிவித்துவிடுகிறேன்.'

'என் சொந்த விஷயத்தைப்பற்றிக் கேட்கவரவில்லை, என் கட்சிக்காரன் ரஹிமான் 309-ம் நம்பர் வியாச்சிய சம்பந்தமாக சாட்சிகளுக்கு சம்மன் கட்டளை போய்விட்டதோ?'

"அதெல்லாம் முந்தாநாளே போய்விட்டது, குமஸ்தா சொல்லவில்லையோ."

"சொன்னதாக ஞாபகமில்லை. நான் தங்களை அப்புறம் சாவகாசமாய் தரிசனம் பண்ணிக்கொள்ளுகிறேன், நமஸ்காரம்."

மறுநாள் இராமசுவாமி அய்யர் சேஷுவைக் கூப்பிட்டு, இராத்திரி ரெயிலில் புறப்பட்டு வலங்கிமான் முன்சீப் கோர்ட்டுக்குப்போய், அங்கே இருந்து கட்டளையைக் கிளப்பிக்கொண்டு பிரதிவாதியின்பேரில் 'சார்வுசெய்து' பணம்கொடுத்தால் வாங்கிக்கொண்டுவா என்றுசொன்னார்.

சேஷு அ.—அந்தக்கோர்ட்டிலேபோயும் இழவு எடுக்கவேண்டுமே. அங்கேயும், குமஸ்தாவுக்கும் சேவகனுக்கும் படைக்கவேணுமே! எத்தனை நாள் காத்திருக்கவேணுமோ! கஷ்டகாலம் வழியாய்ப் பிடித்திருக்கு. பணம் வசூலாகு முன்னமே என் பிராணன் முழுவதும் போய்விடும்போல் இருக்கிறது. துன்பத்தை நன்றாக விலைக்கு வாங்கினேன்................ ...

## X.

வலங்கிமான் முன்சீப் கோர்ட்டில், மூன்றுநாள் காத்திருந்து, அமீனா நாராயணய்யங்காருக்கும், சேவகன் "காசிம்ஸாவுக்கும்" கட்டளைபோட்டிருக்கிறதென்று அறிந்துகொண்டு, அவ்விருவருடைய வீட்டையும் விசாரித்துக்கொண்டு சென்றார். நாராயணய்யங்கார் வைதீக சந்ததி; துவாதசநாமமில்லாமலும், பஞ்சகச்ச வேஷ்டி இல்லாமலும் வெளியே புறப்படுகிறதில்லை. பரான்னமும் சாப்பிடுகிறதில்லை. ஏகாதசி விருத மனுஷ்டிப்பவர். அன்றைக்கு சொஜ்ஜி, சாம்பார், உளுந்துவடை, பரமான்னம், பழம், பால், இப்படி பலவகை ஆகாரம் சாப்பிடுவரே ஒழிய, சாதம் சாப்பிடுகிறதில்லை. பூஜை நைவேதனமில்லாமல், பள்ளி பொங்கித் தின்கிறாப்போல் தின்றாலும், வேறு பிராமணர்கள் வீட்டில் வெற்றிலைக்குச் சுண்ணாம்புகூட வாங்கிப்போடமாட்டார். கூடைபொய்சொன்னாலும், புகையிலைப் பொடி நாற்றம் கிட்ட நாணக்கூடாது. மகாவீர வைஷ்ணவர். அய்யங்கார் மேல்விசாரணையில், விஷ்ணுகோவிலில் தேசாந்திரிகளுக்குக் கட்டளை ஒன்று நடக்கிறது. "அகம்பாவம், திரவிய அபேட்சை, பரநிந்தனை, இல்லாத என்னைவிட தேசாந்திரி பிராமணர்கள் என்ன விசேஷம்? ஓர் வகையில் நானுந் தேசாந்திரிதானே, என்னுடைய ஆத்மாவுக்கு இவ்வுலக வாழ்வு, தேசயாத்திரை அல்லவா, என் குட்சியில் இந்த அன்னம் விழுந்தால், அன்னதான கட்டளை ஏற்படுத்தினவன், மகாசுகிர்தத்தைப் பெற்றுவிடுவான்" என்று அவனிடத்தில் கிருபை மிகுதியால், சுவாமிக்குக் கையைக்காட்டிவிட்டு அன்னத்தை வீட்டுக்குக்கொண்டு வந்துவிடுவார். கோவிலினின்று திரும்பிவர அன்றையதினம் நாழியாயிற்று; வருகிற வரையில் காத்திருந்து, கண்டுபிடித்து, 'அய்யங்காரே. நாளையதினம் ஜப்திக்குப் போகவேணுமே, விடிய ஜாமத்துக்குப் புறப்பட்டால்தான் பலபலவென்று விடியுமுன் புத்தூருக்குப்போய் .பிரதிவாதியைக் கண்டுபிடிக்கலாம். தயவுசெய்யவேணும்' என்றார்.

நா. அ.—விடிந்தால் ஏகாதசி, நான் விருதக்காரன், நாளைக்குவர சரிப்படாது.

சேஷு.—உமக்கு அது நல்லதுதானே; நீரோ அய்யங்கார்; ஓரிடத்திலும் சாப்பிடமாட்டீர். பட்டினியோடு பட்டினியாய் போய்விடும்; சாயந்திரம் திரும்பி வந்துவிடலாம்.

நா. அ.—அப்படியாவது எனக்கு என்ன அவசரம், வெயிலில் நடப்பானேன்.

சேஷு அ.—போகவர வண்டிவைக்கிறேன். தயவு செய்து புறப்படவேணும்.

நா. அ.—வீட்டில் புடவை வாங்கினேன். கையில் பணமில்லை, செட்டியாரை எட்டு மணிக்கெல்லாம் வரச்சொல்லியிருக்கிறேன். செட்டியாருக்குப் பங்கிடுசெய்து போட்டுத்தான் புறப்படவேணும். இல்லாவிட்டால் பேச்சுத் தவறிப்போகும்.

சேஷு அ.—எத்தனை ரூபாய் கொடுக்கவேணும்.

நா. அ.—பதினைந்து ரூபாய் வேண்டும்.

சேஷு. அ.—நான் கொடுக்கிறேன். இப்பொழுதாவது புறப்படலாமோ.

நா. அ.—நான் கையை நீட்டி காசுவாங்கமாட்டேன். உமக்கிஷ்டமிருந்தால் அகம்படையாளிடத்தில் கொடுத்துவிட்டுப்போம்.

சேஷு அய்யர் பிறகு "காசீம்ஸா" வீட்டைத் தேடிக்கொண்டுபோனார். "காசீம்" ஓர் பக்தியுள்ள மகம்மதியர்; அவருக்கு இரண்டு மனைவிகள். ஆண்மையில்மிக்க ஆங்கிலேயர்களில் வெகுபேர்கள் ஒருத்தியைக்கட்டிக்கொண்டு குடித்தனஞ்செய்ய சக்தியில்லாமல், ஒண்டியாய்க் காலந்தள்ளுகிறார்கள். தெரியாமல் கலியாணஞ்செய்துகொண்ட வேறு சிலர், மனைவியை திருப்தி செய்யும்பொருட்டு ஊரைவிட்டு தேசாந்திரம்போய் திரவியந் தேடித் திண்டாடுகிறார்கள். ஆலோசனை யில்லாத ஹிந்துக்கள், அவசரப்பட்டு அகப்பட்டுக்கொண்டு, அவள் கேட்கும் ஆபரணங்களை அளிக்க வகையில்லாமல், அடிமைபோல் உழைத்து, அவதிப்பட்டு, "ஆ, ஆ, சமுசாரம் சாகரம்" என்று ஓலமிடுகிறார்கள். 'எங்கேயடா நெருப்பு? இரண்டு பெண்டாட்டிக்காரன் தலையிலே' என்கிற வசனம் நாமெல்லோருங் கேள்விப்பட்டிருக்கிறோமே. உலகம் இப்படியிருக்க, இந்த மகமதியர்கள் மூன்றுபேர், நான்குபேர் ஸ்திரீகளை விவாகஞ்செய்துகொள்ளுகிறார்களே. இவர்களுக்கு ஐரோப்பியர்களைவிட ஆண்மை அதிகமோ. இந்துக்களைக் காட்டிலும் பொறுமை மிகுதியோ. மகமதிய ஸ்திரீகளுக்கு வாய்தான் இல்லையோ, இல்லாவிடின் புருஷர்களுக்கு கைதான் வலியதோ. "விவாகம் வித்தியா நாஸ்தி ஸர்வம் நாஸ்தி சோபனம்' என்று ஒரு மனைவி கலியாணத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நாலும் கலியாணம் செய்தவனுக்கு, வித்தை எப்படிவரும், பணம் எப்படி போதும். தரித்திரத்துக்கும், வியாதிக்கும், கோபத்துக்கும் காரணம் வேறு தேடவேண்டியதில்லை. 'காசீம்ஸா' வீட்டுக்குமுன் நிறைச்சலடைக்கப்பட்டு, உள்ளே போகும்வழி தட்டியினால் மூடப்பட்டிருந்தது. சேஷு அய்யர் தட்டியைத் தள்ளிக்கொண்டு, கிடு கிடுவென்று உள்ளே நுழைந்து காசீம்ஸா இருக்கிறாரா என்று கேட்டார். இவர் காரிய அவசரத்தில், மகமதிய ஸ்திரீ "கோஷா" என்பது மறந்துபோயிற்று. 'மைனாபாய்' நெருப்பூத, 'காசீம்' ஹுக்காக் குடித்துக்கொண்டிருந்தார். 'காசீம்ஸா' கோபமூண்டு, எழுந்திருந்து, காறித் துப்பிக்கொண்டு அடிக்க வந்துவிட்டார். சேஷு அய்யர் உறத்த ஆள்; நல்லமுண்டர்; ஒரு தட்டுத்தட்டினால் சாயப்பு பாடு மோசம். ஆயினும், சாயப்புவினுடைய, தாடியையும் ஷராயையும் கண்டு பயந்து, வெளியே ஓடிவந்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டு, வந்தகாரியத்தைச் சொன்னார். 'தாடியைப்புல்லென்றிழுத்த' தென்னாலுராமன் வளர்த்த குதிரைமாதிரி, வயிற்றுக்கில்லாமல் காசீம்சாயப்பு, ஏதோவரும்படி வரப்போகிறதென்று கோபந்தணிந்து, "வீட்டிலே கோஷா, தண்ணிபோடக்கூட வேலைக்காரனில்லை; இருட்டுநேரம், நாளைக்குத்தான் வருவேன்; போங்காணும் போம்" என்றார். கோர்ட்டு மனுஷியர்களோடு பழகி அவர்கள் குணந் தெரிந்துகொண்ட சேஷு அய்யர் உடனே மூன்று ரூபாயைக்காட்டி, சாயப்பு பெரியமனது செய்யவேணுமென்று கேட்டார். சாயப்பு புன்சிரிப்புக்கொண்டு நீர் நல்ல மனுஷனாயிருக்கிறீர், உம்மை அந்த அமீனா பாப்பான் பொல்லாதவன், ஏய்த்துப்போடுவான். நான் கூட இருந்து உமக்கு எல்லா சகாயமும் செய்கிறேன். பிறகு உமக்குச் சந்தோஷப்பட்டதைக் கொடும், என்றார். 'என்சாரியம் நிறைவேறிற்றானால் தருகிறேன்' என்று சேஷு அய்யர் வாக்குக்கொடுக்க, காசீம்ஸா, உள்ளேபோய் மனைவிகளை எச்சரித்துவிட்டு, உடுப்பைப்போட்டுக்கொண்டு, சேஷு அய்யருடன் கூடவந்து அமீனா நாராயணய்யங்கார் வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டான். கண்மூடியதும் மூடாததுமாயிருக்கும்பொழுது, ஓர் குடியானவன்வந்து 'அய்யா, அய்யா' வென்று கதவைத் தட்டினான். 'காசீம்ஸா' விழித்துக்கொண்டு 'நீ யாரப்பா' என்றார்; 'நான்தான்சோமு.' 'ஏன் ஐயாவைக்கூப்பிடுகிறாய்?' "'ராவிக்கே புத்தூருக்குப்போகவேணும், காரியம்சுப்பிரமணிய அய்யருக்குக் கடிதாசு கொடுக்கிறேன்' என்று இப்போதான் வீட்டண்டைவந்து சொன்னாக. சோறு குடித்துவிட்டு வர தாமசப்பட்டது. அய்யா உறங்கிவிட்டாங்களோ."

காசீம்ஸா.—'அய்யரே பார்த்தீமா, அய்யங்கார் பாப்பான் செய்யும் மோசத்தை? எப்போதும் இவன் இப்படியே செய்கிறான்; நீர் அவனுக்கு ஏதாவது கொடுத்தீமா.'

சேஷு.—பதினைந்து ரூபாய் அழுதேன்.

காசீம்ஸா.—வாங்கிக்கிட்டா மோசஞ்செய்கிறான். 'அத்—— பா—— சோ——!' என்னோடே சொல்லிவிட்டுக் கொடுக்கக்கூடாதா? லஞ்சம் வாங்கினானென்று நாதரிடத்தில் மனுக்கொடுமே.

சேஷு.—இப்போ விவில் வியாச்சியம் ஒன்றிலகப்பட்டுக்கொண்டு படுகிறதுபோதும். மேஸ்திரேட்டுக்கும் போகவேணுமா. பிறகு ஆள் ஹதம்தான்.

காசீம்ஸா.—நான் சாட்சி சொல்லுகிறேன்காணும்.

சேஷு அ.—கழுதையாயிருந்தாலும் காலைப்பிடித்துக்கொண்டு, அப்பா, அய்யா என்று கெஞ்சி, வந்தகாரியத்தைப் பார்த்துக்கொண்டுபோகிறேன்; வம்புக்கு வீணுக்குப்போகக்கூடாது. கோர்ட்டு உத்தியோகஸ்தர்களெல்லாம் ஒன்று. சாட்சிகளைக் கலைத்துவிட்டு, என்பேரில் திருப்பிக்கொண்டால், என் கதி என்னாகும்.

காசீம்ஸா.—'நீ பயங்குன்றி பார்ப்பான்; சாயப்புமார் நாங்கள் இப்படி ஒருத்தன் செய்தால் குத்திப்போடுவோமே.'

சேஷு அ.—'நான் தப்புத்தண்டாவுக்குப் போகிற மனுஷியனல்ல.'

அய்யங்காரும் சாயப்புவும் ஒன்று. சாயப்பு பேசியதெல்லாம் வாயுருட்டு ஜெம்பம். இரண்டு பேரும் அகப்பட்ட வரையில் பிடுங்கித் தின்பவர்கள் தான். சாயப்பு பசிகாரர்; அவ்வளவு முன்யோசனை, கட்சிக்காரனுடைய குணம் இரண்டுந் தெரியாது நேரே சாசுவாங்குவார். இவர்பேரில், இரண்டொரு மனுக்கொடுபட்டு துலுக்கரென்றோ, இல்லாவிடின், எல்லாரும் மறைவாய் வாங்குகிறதை இவன் பயிரங்கமாய்ச் செய்கிறான் புத்தியில்லாதவனென்றோ, இவரை முன்சீப்தாரர் விட்டுவிட்டார்.

(இன்னும் வரும்.)

ஆர். சக்கிரவர்த்தி அய்யங்கார், பி. ஏ.



## உபாத்தியாயர் பக்கம்.

### பிள்ளைகளின் இயற்கை.—III.

(BY A LICENTIATE IN TEACHING.)

3. **நூதனமான சங்கதிகளைத் தெரிந்துகொள்ள ஆவல் கொண்டிருத்தல்.**—சிறு பிள்ளைகளுக்கு எந்த வஸ்துவும் புதிதாகையால், அவர்கள் பிரபஞ்சத்தில் காணப்படுகிற எல்லா வஸ்துக்களைப்பற்றியும் கொஞ்சம் கொஞ்சமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியதுதானே. அதற்குப் பிறருடைய பிரயத்தனமன்னியில் அவர்களுக்கே தெரிந்து கொள்ளவேண்டுமென்றும் ஆசை ஸ்வபாவத்திலேயே யிருப்பது என்ன ஆச்சரியம்! பிள்ளைகளை 'தர்பீது' பண்ணுவோர்க்கு அது எவ்வளவு ஸாதனம். குழந்தைகளுடன் சற்றுநேரம் நாம் உட்கார்ந்தால் அவர்கள் அதென்னவென்றும், இதென்னவென்றும், அந்தப் புஸ்தகத்தைப் பிரித்துக்காட்டச் சொல்லியும், இந்த மசிக்கூட்டைக்கவிழ்த்துக்காட்டச் சொல்லியும், அல்லது தாமே பெட்டியைத்திறந்தும் புஸ்தகத்தைப் பிரித்துக்கொண்டுமே யிருப்பார்களே யொழிய ஒரு நிமிஷமும் சும்மா இரார்கள். ஏற்கனவே சொல்லிய சுறுசுறுப்புத்தனம் இதற்குக்கொஞ்சம் காரணமேயாயினும், புஸ்தகத்தில் என்ன இருக்கிறது, மசிக்கூட்டைக்கவிழ்த்தால் என்ன ஆகிறது, என்பதைப் பார்த்து அறிந்து கொள்ளவேண்டிய ஆவல் கொண்டே செய்கிறார்களேயொழிய வேறில்லை. மேலும், உற்சவகாலங்களில் கடைத்தெருவுப்பக்கம் குழந்தைகளை யெடுத்துக்கொண்டு போனால், அப்போது அது நம்மைக் கேட்கும் கேள்விகளுக்குக் கணக்குக் கிடையாது. நாம் குழந்தையுடன் கடைத்தெருவுக்குப் போனவிடத்தில் யாருடனாவது சற்றுப்பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் ஏதாவது புதிதான வஸ்து கண்ணுக்குத்தென்பட்டவுடன், நாம் சிநேகிதருடன் பேசிக்கொண்டிருக்கையிலேயே 'அதென்ன, அதென்ன' வென்று கேட்டுத்தொந்திரவு பண்ணியும் நாம் கவனிக்காவிட்டால் நம்முகத்தைத்திருப்பியோ அல்லது முகத்தை அண்ணாந்து பார்த்தோ அதென்னவென்று ஆவலாய்க்கேட்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. பிறக்கும்போது அவர்களுக்குள்ள அக்ஞானத்தைப் போக்கிக்கொள்வதற்கு ஹேதுவாக இந்த ஸாதனம் அவர்களிடத்திலேயே ஸ்வபாவத்தில் ஏற்பட்டிருக்கிற விந்தையைப்பாருங்கள்! பிள்ளைகளுக்கு ஞானபிவிர்த்தியும் மனப்பயிற்சியும் உண்டாகவேண்டுமானால் அவர்கள் ஆவலுடன் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் தகுந்த பதில் சாந்தத்துடனும் தெளிவாயும் சொல்வதுடன், பிள்ளைகள் பின்னும் மேல் கேள்விகள் கேட்கும்படியாகக்கூடச் செய்ய வேண்டியது. அவர்கள் ஆவலுடன் கேட்கும்போது சொல்லிக்கொடுக்காதவர்களா, பிறகு சிரத்தையுடன் சொல்லிக்கொடுக்கப்போகிறார்கள்? சிறுவர்களுக்கு எப்போது ஆசையிருக்கிறதோ அப்போது நாமும் பிரியத்துடன் சங்கதிகளை விளங்கச்செய்தால், அவர்களும் அந்தசமயத்தில் கவனத்துடன் கேட்டுத்தெரிந்து கொள்வார்கள். அந்தத்தருணத்தில் நாம் சொல்லிக்கொடுக்காமற் போனால் அந்த விஷயம் மறக்கப்பட்டுப்போய், அதைப்பற்றி அவர்கள் தெரிந்துகொள்ள சமயம் ஏற்படாமற்போனாலும் போய்விடும். அவர்கள் ஆசைக்குப்பங்கம் வந்தபடியால் வியாகூலப்படுவார்கள். இந்த மாதிரி சிலதடவைகள் நேரிட்டால் பிள்ளைகளுக்குக் குதூஹலமில்லாமல் புத்தி மழுங்கிப்போம். இதுகளையெல்லாம் அறியாத அனேக தந்தைகள், உபாத்தியாயர்கள், பிள்ளைகள்மூச்சுவிடாமல் கேள்விகேட்பதை நச்சாக எண்ணி, அவர்களைபயமுறுத்தி சரியானபதில் சொல்லாமல், அவர்கள்மேல் கோபித்துக்கொண்டோ, அல்லது 'உன

க்கு அதெல்லாம் இப்போ தெரியாது' என்ற வாயடியடித்தோ போய்விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பார்வையிலிருக்கும் பிள்ளைகள் முன்னுக்கு வருவதற்கிடமின்றிப்போகிறார்கள்.

கேள்விகேட்பது மாத்திரமல்ல; தாமே தங்கள் கையில் அகப்பட்டவஸ்துக்களை தங்களிஷ்டப்படி பரிசோதிப்பது பிள்ளைகளின் ஸகஜம். எந்தப் பிள்ளைகளிடத்திலாவது அவர்களுக்கு வாங்கிக்கொடுத்த பொம்மை அல்லது விளையாட்டுச்சாமான் நாலு நாளைக்கு மேல் இருப்பதுண்டா? அந்த நாலு நாளுக்குள் தலை வேறு கால் வேறாக ஆய்விடுமே.—கையில் அகப்பட்ட புஸ்தகம் ஏடேடாகப் போய்விவிடும். கண்ணாடி சீஸா நூறு சுக்கலாக ஆய்விடும், ஒரு பூனைக்குட்டி யகப்பட்டால் அதை தலையைப்பிடித்துத் தூக்கியும், காலைப்பிடித்து தலை கீழாகத் தூக்கியும் வாலைப்பிடித்துத் தூக்கியும், குழந்தைகள் இன்னும் இப்படிப்பட்ட சேஷ்டைகள் செய்வது யாருக்குத்தெரியாது. இந்தச்சேஷ்டைகளின் முக்கியமான காரணத்தையறியாது, பிள்ளைகளை விஷமக்காரர்களென்று திட்டி யடிப்பது அனேகர்களின் கெட்ட வழக்கம். குழந்தைகளின் இந்த சேஷ்டைகளுக்கு உண்மையான காரணமென்ன? அந்த பொம்மைகளையும் பண்டங்களையும் நாசமாக்க வேண்டுமென்கிற எண்ணமேகிடையாது. பொம்மையின் கை, கால், தலை இவை எப்படி சேர்த்து அமைக்கப்பட்டிருக்கின்றன; புஸ்தகத்தின் ஏடுகள் எப்படி கட்டப்பட்டிருக்கின்றன; பூனையை தலைகீழாகத் தொங்கவிட்டால் அது என்னமாகவிருக்கிறது;—என்று அறிந்துகொள்ள வேணுமென்கிற ஆவலே காரணமன்றி வேறல்ல. வாஸ்தவத்திலேயே பொம்மையை உடைத்தெறிய வேண்டுமென்ற எண்ணங்கொண்டவர்களானால், கை, கால், வேறாக எடுபட்ட அந்தக்ஷணத்திலேயே 'ஐயோ!' என்று துக்கித்து தாயாரிடத்திலும் தகப்பனாரிடத்திலும்போய் 'பொம்மை தலை போச்சு' அல்லது 'கால் போச்சு' என்று வியசனக்குரலுடன் ஏன் சொல்லவேண்டும். தலை என்னமாக வைக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்துகொள்ள ஆசையேயொழிய; அது தெரியவரும்போது தலை வேறுபட்டுப்போகுமே யென்ற ஞானம் மாத்திரம் கிடையாது. அதனால்தான் பின்னால் துக்கம்.

ஒருவர்தான் குழந்தையாயிருந்த பொழுது ஒருபக்ஷியைப்பிடித்து அதின் சிறகுகள் எப்படி சரீரத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன வென்பதைத் தெரிந்துகொள்ள ஆவல் கொண்டு அச்சிறகுகளை ஒன்றொன்றாகப்பிடுங்கி யெடுத்ததாகச் சொல்லியிருக்கிறார். அந்தப்பக்ஷியைக் கொல்லவேண்டு மென்கிற உத்தேசமா? இல்லவேயில்லை. சங்கதியைத்தெரிந்துக்கொள்ளவேண்டுமென்ற ஆவல்தான்.

ஆகையால் வீட்டில் தாய் தந்தையர்கள் பிள்ளைகள் அடிக்கடி கேட்கும் கேள்விகளுக்கு அலுக்காமல் பதில் சொல்லவேண்டும்—பிசகிப்போய் தந்தையுடன் தாயையும் எழுதிவிட்டோம்—நம்முடைய ஸ்திரீகளுக்கே வஸ்துக்களைப்பற்றியும், சங்கதிகளைப்பற்றியும் ஏதாவது ஞானமிருந்தாலல்லவோ பிள்ளைகளுக்குச் சொல்லக்கூடும். நம்முடைய ஸ்திரீகளை நன்றாகப் படிப்பித்து அவர்களுக்கு ஞான மென்றைக்குண்டாக்குகிறோமோ அதுவரையில் நம்முடைய பிள்ளைகள் சரியான பிரயோஜனத்துக்கு வருவதில்லை.

தகப்பனாரிடத்தில் பார்க்கிலும் தாயாரிடத்தில் பிள்ளைகளுக்குப்பழக்கம் அதிகம். வெளியில் வேலைக்குப் போகவேண்டிய தகப்பனாருக்கு அவகாசமும் கிடையாது. ஆகையால் குழந்தைகள் ஏதாவது தெரிந்துகொள்ளவேண்டுமானால் தாயினிடத்தில் தான் கேட்க வேண்டியிருக்கிறது. தாயும் பிள்ளை கேட்ட கேள்விக்குத் தக்கபடி மறுமொழிகொடுத்து அதை ஆனந்திக்கச்செய்தால் அதன் புத்தி எவ்வளவு கூர்மைப்பட்டு விளங்கும். ஒன்றும் தெரியாத ஞானசூன்யங்களைக் கட்டிக்கொண்டு என்ன செய்கிறது. ஸ்திரீகள் அக்ஞான நிலையிலிருக்கும் வரையில் பிள்ளைகளுக்கு நல்ல கதி கிடையாது.

நூதனமான சங்கதிகளை நன்றாகத்தெரிந்துகொள்ளவேண்டுமென்று இயற்கையிலேயே பிள்ளைகளுக்குள்ள ஆசையை நாம் பூர்த்தி செய்யவேண்டியது. நம்முடைய பார்வையில் ஒரே ஒரு பையனிருந்தால் அவன் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் ஏதோ ஒரு மாதிரியாக பதில் சொல்லி அவனுக்குப் புதிய விஷயங்களைக்கற்பிக்கலாம். ஒரு வகுப்புப் பிள்ளைகளெல்லார்க்கும் உபாத்தியாயராயிருந்து ஒரேதடவையில் 20, 30 பிள்ளைகளை 'தர்பீது' செய்யவேண்டியவர் என்ன பண்ணுகிறது? மூலைக்கொருத்தராய்க்கேள்வி கேட்பார்களே. அப்பொழுது உபாத்தியாயர் யாருடைய கேள்விக்கென்று பதில் சொல்கிறது. வகுப்பு முழுமையும் ஒரே கூச்சலாய்ப்போய் உபாத்தியாயர் விழிக்கும்படியான ஸ்திதியிலிருப்பாரே—என்ற சந்தேகம் அநேகருக்கு வரலாம். உபாத்தியாயர் சாமர்த்தியசாலியானால் அப்படிப்பட்ட ஆபத்து நேரிடமாட்டாது. எல்லாரும் ஒரேகேள்வியைக் கேட்கும்படியான நிலைமையில் பிள்ளைகளை வைக்கவேண்டியது.



பிள்ளைகளுக்குள்ள ஆசையைத் தீர்ப்பது உத்தேசமாகவே (Infant Standard) குழந்தை வகுப்புப் பிள்ளைகளுக்கு இப்பொழுது (Object Lessons) வஸ்துக்கள், ஜந்துக்களைப்பற்றிய பாடங்கள் போதிக்க ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒருபாடத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு நாம் சொல்லவருவதை விளக்கிக்காட்டுவோம்:—

யானையைப்பற்றிய பாடம் என்று வைத்துக்கொள்வோம். சிறுபிள்ளைகளில் அனேகர், அதிலும் கிராமாந்தர பள்ளிக்கூடங்களிலுள்ளவர்கள் சாதாரணமாய் இதைப்பார்த்திருக்கமாட்டார்கள்.

"யானை மிகவும் பெரிய மிருகம். அது இத்தனையடி உயரம். அதாவது இந்த சுவரண்டை நிறுத்திவைத்தால் அந்த உத்திரம் வரையில் வரும். அதன் கழுத்து குட்டை." என்று சொல்லிக்கொடுத்து "மாட்டின்கழுத்துக்கும் யானையின் கழுத்துக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேள்விகேட்டால், "யானையின் கழுத்து குட்டை, மாட்டின் கழுத்து நீளம்" என்று சொல்வார்கள். "மாட்டின் கழுத்து நீளமாக விருப்பதால் என்ன உபயோகம்?" என்று அடுத்த கேள்வி போடவேண்டியது. மாட்டைப்பற்றிய பாடம் ஏற்கனவே ஆயிருக்குமாகையால், 'கழுத்து நீண்டிருப்பதினால் தான் அதற்கு பூமியின்மேலுள்ள புல்லை யெட்ட முடிகிறது; இல்லாவிட்டால் முடியாது.' என்று சுலபமாய் மறுமொழி சொல்லுவார்கள்.

இதானவுடன் ஒரு நிமிஷம் உபாத்தியாயர் சும்மாவிருக்கும்பக்ஷத்தில் எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே கேள்வி தான் மனதில் தோன்றும். ஒரே சங்கதியைத்தான் தெரிந்துக்கொள்ள எல்லாருக்கும் ஏககாலத்தில் ஆவல் உண்டாகும். 'யானை அத்தனை உயரம் என்று சொன்னீர்களே கழுத்தும் நீளமல்ல குட்டை யென்றீர்களே, நீளமாயிருந்தாலல்லவோ பூமியை யெட்டி ஏதாவது தின்னலாம். யானைக்கு ஆகாரம் எப்படி எட்டும்?' என்ற கேள்வியெல்லாருக்கும் தோன்றும். அப்பொழுது யானைக்கு மற்ற மிருகங்களுக்கு இல்லாத தும்பிக்கையுண்டென்றும் அதினால் பூமியிலுள்ள வஸ்துக்களை யெடுத்து வாயில்போட்டுக்கொள்ளுமென்றும் சொல்லி யானையின் படத்தைக் காட்டி விளங்கச்செய்யவேண்டியது. உபாத்தியாயர் பாடம் நடத்த ஆரம்பிக்கையில் எல்லாப்பிள்ளைகளுக்கும் அதைக்கேட்க வேண்டுமென்கிற சிரத்தையுண்டாகி, ஏதாவது விசித்திரமும் நூதனமுமான சங்கதிகள் நமக்கு இன்றைக்குத் தெரியப்போகின்றவென்ற உற்சாகத்துடன் அவர்கள் பாடம் கேட்க உட்காருவார்கள். பாடம் நடத்தும்பொழுது மேற்சொல்லிய உதாரணங்குறித்தபடி எல்லாப்பிள்ளைகளுக்கும் ஒரே விஷயத்தைத் தெரிந்துகொள்வதில் ஆசையுண்டாகவேண்டியது. சாமார்த்தியமுள்ள உபாத்தியாயருக்கு பிள்ளைகளெல்லாரையும் ஒருங்குசேர்த்து கற்பிக்க முறைகள் எவ்வளவோ தோன்றும். சமயத்துக்குத் தக்கபடி நூதன விஷயங்களைப் பிள்ளைகளுக்கு இனிமையாய்ப் போதித்தால் பிள்ளைகளே யாசைப்பட்டுத் தெரிந்து கொண்ட சங்கதிகளாதலால் மனதில் நன்றாகப் பதிந்து நீடித்து ஞாபகமிருக்கும்.

## செல்வம்.

'நாட்டுச் செல்வம்' என்பது இன்னதென்று வரையறுத்துக்கூறியபோது* "எப்படி தனிக்குடியினர்க்கு வேண்டிய பொருள்மட்டுமிருப்பது செல்வமாகாமல், அவர் கைப்பொருளிருப்பு அவர்வேண்டிய அளவிற்கு மிஞ்சியிருந்து அப்பொருள் மாறும்படியானால் அது செல்வமாகிறதோ, அப்படியே நாட்டின் விளைபொருள், செய்பொருள், நாட்டில் வேண்டிய அளவுக்கு மிஞ்சி மற்ற நாட்டாரிடத்தில் மாறும்படியாயிருப்பது நாட்டு வளப்பமாம்" என்று சொன்னோம். இவ்விதிப்படி ஒரு தேசத்தின் நாட்டு வளப்பத்தை பொதுப்படத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அத்தேசத்தின் வியாபாரம், மொத்த வருமானம், இவைகளைத் தெரிந்துகொண்டு அத்தேசத்து ஜனத்தொகை மொத்தத்தைக்கொண்டு தலைக்கு சராசரி யெவ்வளவாகிறதென்று கண்டு, இப்படிவரும் சராசரிக் கணக்கு ஜனங்கள் வசிப்பதற்குப்பிடிக்கும் சராசரிச் செலவுக்குக் கட்டி மிகுகிறதா குறைகிறதா வென்று பார்க்கவேண்டும். மிகுந்தால் நாட்டு வளப்பம் அந்த அளவுக்கு மிகுந்ததென்றும், குறைந்தால் நாட்டு வளப்பம் குறைந்து தேசம் வறுமைப்பட்டதென்றும் ஏற்படும். [நாட்டுச்செல்வம் ஒரு தேசத்தில் மிகுதியாக விருந்தாலும் அது ஒரு வகுப்பாரிடம் அபரிமிதமாகக் குவிந்து கிடந்து ஜனங்களுக்கு சுலபமாகச் சுற்றிவராவிட்டால் பெரும்பாலாயான சாதாரண ஜனங்கள் வறுமைமேலிட்டு; மாக வருந்துவார்கள்; அல்லது, நாட்டுச்செ ஜனங்களில் பெரும்பாலரிடத்து அதிகமாய் யிருக்கலாம்; அப்பொழுது பெரும்பான்மை தங்கள்மட்டிற்கு வேண்டிய பொருளுடைமே

* சென்ற மாசத்துச் சஞ்சிகையில் 325-ம் பக்கம் பார்

..லது அற்ப சொற்ப செல்வம் படைத்தவர்களாயிருக்கலாம்: அதனுல் அத்தேசத்து சம்பத்து சோபித்துக்காட்டாது. ஒரு தேசத்து ஜனங்கள் க்ஷேமமாகவும் சுகமாகவும் வாழ்வதற்கு நாட்டுச்செல்வம் மட்டு மிருந்தால் போதாது. அத்தோடு அந்தச்செல்வம் நாட்டிலுள்ளார் எல்லாருக்குமுபயோகமாகும்படி சுழன்றுவரல்வேண்டும்.]

போன சஞ்சிகையில் ஐக்கியநாடுகளிலும் இங்கிலாந்திலும் 'குடிச்செல்வம்'மிகுந்த சிலபேர்களுடைய ஆஸ்திகளை யெடுத்துக்காட்டி ஒப்பிட்டுப்பார்த்ததில் ஐக்கியநாடுகளைப்போல் இங்கிலாந்தில் கோடிக் கணக்கான ஆஸ்தியுடையவர்கள் அபூர்வமாகவன்றி யதிகமாயில்லையென்றும் ஆனுல் மிதந்த வரும்படி பரவிய குடும்பங்கள் ஐக்கிய நாட்டைவிட ஆயிரமடங்கு அதிக மென்றும் கண்டோம். ஆங்கிலேய நாட்டு ஜனங்களின் வரும்படியையும் இந்தியாவிலுள்ளவர்களுடைய வரும்படியையும் ஒப்பிட்டுப்பார்த்தால் இங்கிலாந்தைவிட இந்தியாவில் 'செல்வம்' உடையவர்கள் எவ்வளவோ சொற்பமென்பது விளங்கும். அதை ஒருவாறு விளக்கிக்காட்டுவோம்.

## அங்கிலேயநாட்டின் சம்பத்து.

இங்கிலாந்தும் ஸ்காத்லாந்தும் சேர்ந்த அங்கிலேய நாட்டில், சம்பாத்தியமுள்ள ஜனங்களின் மொத்தம் கோடியே 45- லக்ஷம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவர்களில்,

(1) வருமான வரிசெலுத்துவோர் 14 - லக்ஷம் பேர்கள். அந்நாட்டில் வருஷம் 150 பவுனுக்குக் குறைந்த வருமானங்களின்மீது வரியில்லை யாகையால் இவர்களில் வருஷம் ஒன்றுக்கு 150 பவுனுக்கு குறைந்த வருமான முடையவர்களில்லை. இந்த 14-லக்ஷம்பேர்களுடைய மொத்தவருமானம் 57-கோடியே 60-லக்ஷம் பவுன் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது இவ்வகுப்பார் வருமானம் சராசரியில் தலைக்கு வருஷம் 1-க்கு 411 பவுன் ஆகிறது.

(2) வருமானவரிக்குள்படாமல் அதாவது வருஷம் 150 பவுனுக்குக் குறைந்த வரும்படியுள்ளவர்கள் 15-லக்ஷம்பேர்களுடைய மொத்த வருமானம் வருஷத்தில், 10 கோடியே 70 லக்ஷம் பவுனுகிறது. இவ்வகுப்பார் வருமானம் சராசரியில் தலைக்கு 71 - பவுன் ஆகிறது.

(3) மேலேசொன்ன இருவகுப்பார்களன்றி அவர்களுக்குக் கீழ்ப்பட்டு கைவேலைசெய்து பிழைப்பவர்கள் கோடியே 16-லக்ஷம்பேர்கள் சராசரியில் தலைக்கு 44-பவுன் சம்பாத்திய முள்ளவர்களாயிருக்கிருர்கள். இவ்வகுப்பார் வருமானம் மொத்தத்தில் 51½-கோடி பவுன் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

மேலேகாட்டிய மூன்று வகுப்பார்களில், முதல் வகுப்பார் தொகை வருமானமுள்ள ஜனமொத்தமான கோடியே 45-லக்ஷத்தில் சுமார் 100-ல் 10-விகிதமாகிறது.

இரண்டாவது வகுப்பாரும் கிட்டத்தட்ட 100-ல் 10-விகிதமே யாகிருர்கள்.

மூன்ருவது வகுப்பார் 100-ல் 80-விகிதமாகிருர்கள்.

இம்மூன்று வகுப்பாருக்கும் வியவசாயவழியிலும் வேறுவழியிலும் வரும் மொத்தவருமான விவரங்களைக் கீழே கட்டமாதிரியில் போட்டுக் காட்டுகிரேம்.

வருமானம் அல்லது சம்பாத்தியமுள்ள ஜனங்களின் மொத்தமாகிய கோடியே 45-லக்ஷத்தில்,

| —— | தொகை. | வியவசாய வருமானம் பவுன். | வியவசாயமற்ற இதர வருமானங்கள் பவுன். | மொத்த வருமானம் பவுன். | சராசரியில் தலைக்கு வருவது பவுன். |
|---|---|---|---|---|---|
| ..ருமான வரிசெலுத்துவோர் ... | 14 லக்ஷம் ... | 9 கோடி ... | 48 கோ. 60 ல. ... | 57 கோ. 60 ல. ... | 411 |
| ..ருஷம் 150 பவுனுக்குக் குறைந்த வருமானமுடைய 2-வது வகுப்பார். | 15 லக்ஷம் ... | 2 கோ 30 ல. ... | 8 கோ. 40 ல. ... | 10 கோ. 70 ல. ... | 71 |
| ..வேலை செய்து பிழைக்கும் 3-வது வகுப்பார். | 1 கோ 16 ல. ... | 7 கோடி ... | 44 கோ. 50 ல. ... | 51 கோ. 50 ல. ... | 44 |
| மொத்தம் ... | 1 கோ. 45 ல. | 18 கோ. 30 ல. ... | 101 கோ. 50 ல. .. | 119 கோ. 80 ல. .. | —— |



## சென்னை இராஜதானியின் சம்பத்து.

சென்னை இராஜதானிக்கும் இம்மாதிரி சரியான கணக்குப் போட்டுக் காட்டினுல் வித்தியாசம் விளங்கும். ஆனுல் இவ்விராஜதானிக்கு இவ்விதமான விவரங்கள் சரியாகப்போட்டுக் காட்டுவதற்கு அங்கிலேய நாட்டிலுள்ளமாதிரி இங்கே கணக்கு விவரம் கிடையாது. ஆயினும், ஒருவாறு நாமே திட்டமாகக் கணக்குப்போட்டுப்பார்ப்போம். இவ்விராஜதானியின் ஜனத்தொகை மொத்தம் 3½-க் கோடி யென்று கணக்கிட்டுக் கண்டுபிடித்திருக்கிருர்கள். இந்த 3½-க் கோடி ஜனங்களை குடும்பங்களாகக் கணக்கிட்டால் ஒரு குடும்பத்துக்கு சராசரி 5-பேர்கள் விகிதம் 70 லக்ஷம் குடும்பங்களாகின்றன. அதாவது அத்தனை குடும்பத் தலைவர்களிருக்கவேண்டும்.

இவர்களில் வருமானவரிசெலுத்துவோர் அதாவது வியவசாய வழியிலன்றி மற்றப்படி வருஷம் 500 ரூபாய்க்குக்குறையாத வருமானமுடையவர்கள் தொகை, 56,809.

வியவசாயக்குடிகளில் கவர்ன்மெண்டுக்கு வருஷம் 250 ரூபாய் கிஸ்திகட்டுகிறவர்கள்தொகையை யெடுத்துக்கொண்டால் இவர்கள் வருமானம் கிஸ்தித் தொகையைப்போல் இரண்டுமடங்கினதாக விருக்குமாதலால், வியவசாயவழியில் வருஷம் 500 ரூபாய்க்குக் குறையாத வருமானமுடையவர்கள் தொகை கிடைக்கும். இவர்கள் தொகை சர்க்கார் கணக்குப்படி 8,869- என்று தெரியவருகிறது.

ஜமீன்தார்கள், இனும்தார்கள், ஜமீன்தாரிகளில் அதிக பூஸ்திதியுள்ள குடிகள் இவர்கள் மேற்கண்ட கணக்கில் சேர்க்கப்படவில்லை. இவர்களையெல்லாம் சேர்த்துக்கணக்கிட்டாலும் இவ்விராஜதானியில் வியவசாயவழியிலும் இதரவழிகளிலும் வருஷம் 500 ரூபாய்க்குக் குறையாத வருமானமுள்ளவர்கள் தொகை 70 ஆயிரத்துக்கு மேற்போகாது.

இவ்விராஜதானியிலுள்ள 70-லக்ஷங் குடும்பங்களில் 70-ஆயிரம் பேர்களே வருஷம் 500-ரூபாய்க்கு மேற்பட்ட சம்பாத்திய முடையவர்களாக விருக்கிருர்கள். இது 100-க்கு 1-விகிதமாகிறது. அதாவது நூறு குடும்பங்களில் ஒரு குடும்பத்தாருக்கு மட்டும் வருஷத்தில் 500-ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் கிடைப்பதாயிருக்கிறது. அதிலும் ஒரு குடும்பத்தில் சம்பாத்திய முடையவர் ஒருவருக்கு மேலிருக்கிறபடியால் தலைக்கு இவ்வளவென்று கணக்கிட்டுப் பார்க்கப்போனுல் நூற்று விகிதம் ஒன்றிலும் தாழ்வாகக் குறையுமென்று திவான்பஹதூர் ஸ்ரீனிவாஸராகவய்யங்காரவர்கள் அவர் எழுதியிருக்கும் புஸ்தகத்தில் சொல்கிருர்.

## இரண்டுக்குமுள்ள தாரதம்மியம்.

ஆங்கிலேய நாட்டில் சம்பாத்திய முடையோர் கோடியே 45-லக்ஷத்தில் 100-க்கு 10-விகிதமானேர் வருஷம் 150-பவுன் அல்லது (பவுன் 10-ரூ. விகிதம்) 1500-ரூபாய்க்கு மேற்பட்ட வருமானமுள்ளவராகவிருக்க, அங்கிலேய நாட்டைவிட 6-ல் ஒரு பங்கு பெரிதான இவ்விராஜதானியில் 70-லக்ஷம் குடும்பங்களில் 70-ஆயிரம் குடும்பங்கள் அதாவது நூற்றில் ஒரு குடும்பம் மட்டும் (ஒருவர் என்று சொல்வதற்குக்கூட இல்லை) வருஷத்தில் 500-ரூபாய்க்கு மேற்பட்ட வருமான முடையதாக விருக்கக் காண்கிரேம். 'குடிச்செல்வம்' இருதேசத்திலும் எவ்வளவு வித்தியாசப்பட்டுப் பரவியிருக்கிற தென்பதை இது நன்ருகக் காட்டுகிறது.

## சிலதேசங்களின் வருமானமொத்தம்.

சிலதேசங்களின் மொத்தவருமானத்தையும் அந்த மொத்த வருமானத்தை அந்தந்த தேசங்களின் ஜனத்தொகை மொத்தத்துக்குப் பங்கிட்டுக்கொடுத்தால் வரும் சராசரி தொகையையும் கீழே போட்டுக்காட்டுகிரேம் :—

| —— | மொத்தவருமானம். பவுன். | தலைக்குவரும் சராசரி பவுன். |
|---|---|---|
| இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, ஐர்லாந்து சேர்ந்த தேசம். | 124 கோடியே 70 லக்ஷம். | 35·2 |
| பிரான்ஸ்தேசம் ... | 96 கோடியே 50 லக்ஷம். | 25·7 |
| ருஷியதேசம் ... | 84 கோடியே 80 லக்ஷம். | 10·1 |
| ஸ்பெயின்தேசம் ... | 21 கோடியே 80 லக்ஷம். | 11·5 |

இந்தமாதிரி இந்தியாவின் மொத்த வருமானத்தைப்போட்டுக்காட்டச் சரியான கணக்கு விவரங்களில்லை. ஆனுல் லார்ட் ரிப்பன் இராஜப்பிரதிநிதியாக விருந்தகாலத்தில் இந்தியா அரசிறை மந்திரியாகவிருந்த ஸர் எவலின் பேரிங் (அவர் இப்பொழுது லார்ட் குரோமர்) அவர்கள் சில வருஷங்கள் மு.. இந்தியாவின் மொத்த வருமான மெவ்வளவாகி.. தென்று மதிப்பிட்டுப் பார்த்ததில் 54-கோடி பவு.. (10 ரூபாய்) ஆகிறதென்று கணக்குப்போட்டா.. இந்தத்தொகையை மொத்த வருமானமாக வைத்துக்கொண்டு சராசரியில் தலைக்கு எவ்வளவாகிறதென். பார்த்தால் ரூபாய். 27-விகிதமாகிறது.

இப்பொழுது அங்கிலேயநாட்டுப் பார்லி.. சபையில் ஒரு மெம்பராயிருக்கும் நமது தே.. ராகிய மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியவர்க.. தியாவின் வரவு செலவு விஷயங்களைப்பற்றித்.. செய்த பிரபந்தமொன்றில் இத்தேசத்தின் .. னம் தலைக்கு 20 ரூபாய் முதல் 25 - ரூபாய்க்.. லில்லை யென்று சொல்லிக்கணக்கிட்டுக் காட்டி.. ருர்.

திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் அவர்கள் இவ்விராஜதானியின் அபிவிர்த்தியைப்பற்றி யெழுதியிருக்கும் அவருடைய புஸ்தகத்தில் இந்த வருமானம் தலைக்கு 25 - ரூபாய் முதல் 30 - ரூபாய் வரையிலானாலுமாகுமென்று ஒருவகையாக மதிப்பிடுகிறார்.

அவர் மதிப்பிடும் வகையைக் கீழேகாட்டுகிறோம். 1877-ம் வருஷத்துப் பஞ்சத்துக்குப் பிறகு அது விஷயமாக ஏற்படுத்தப்பட்ட கமிஷனர்கள், இவ்விராஜதானியில் வியவசாய உற்பத்தியாலுண்டாகும் மொத்த வருமானம் 5-கோடி பவுனாகுமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இதர வகைகளால் கூடும் வருமானம் அதில் பாதியாக எடுத்துக்கொண்டு கணக்குப் பார்த்தால் தலைக்கு 25-ரூபாய் விகிதமாகிறது. பிரான்ஸ் தேசத்தில் வியவசாய மொழிந்த இதர வழிகளால் கூடும் வருமானமும் வியவசாய வருமானமும் 100-க்கு 122-விகிதமாகவும், ருஷியாவில் அவை 100-க்கு 75-விகிதமாகவும், ஸ்பெயின் தேசத்தில் 100-க்கு 64-விகிதமாகவுமிருக்கிறதாகத் தெரிகிறது. ஆகையால் இந்தியாவில் அதை 100-க்கு 50-விகிதமாக வெடுத்துக்கொண்டது அதிகமில்லை. அன்றியும் நிலத்திலிருந்துண்டாகும் வருமானம்கூட திட்டக்கணக்காகவே யெடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதால் மொத்த வருமானம் தலைக்கு 30-ரூபாய் விகிதமானாலும் ஆகலாம்.—என்று சொல்கிறார்.

### தாரதம்மியம் பார்த்தல்.

அங்கிலேய நாட்டில் தலைக்கு 35-பவுன் வருமானமிருக்க இந்தியாவில் தலைக்கு 25 அல்லது 30-ரூபாய் வருமானம்தான் ஆகிறதென்றால் இந்தியா மிக வறுமையடைந்த தேசமென்றே சொல்லவேண்டும். 35-பவுனுக்கும் 30-ரூபாய்க்குமுள்ள வித்தியாசம் 350-க்கும் 30-க்குமுள்ள வித்தியாசமாகிறது. அதாவது சுமார் 12-ல் ஒருபங்காகிறது. இதனால் இங்கிலாந்து இந்தியாவைவிட 12-மடங்கு அதிகமான ஐசுவரியமிதப்புள்ள தேசமென்றுதோன்றும். ஆனால் இதைக்கொண்டு நாட்டு வளப்பத்தை யறிய யத்தனிக்கையில் இந்த வித்தியாசத்தை மட்டும் எடுத்துக்கொண்டு தீர்மானித்துவிடக்கூடாது: இருதேசத்தார்களுக்கும் முறையே ஜீவிக்கப் பிடிக்கும் செலவு தொகைகளின் வித்தியாசத்தையும் பாராட்டிக் கணக்கிலெடுத்துக்கொள்ளவேண்டும். இந்த வித்தியாசம் திவான் பஹதூர் ஸ்ரீனிவாசராகவய்யங்கார் அவர்கள் அவருடைய புஸ்தகத்தில் போட்டிருக்கும் கணக்குப்படி இந்தியாவில் ஒருவேலையாளுக்கு தினம் 2 அணா சாப்பாட்டுச் செலவானால் இங்கிலாந்தில் ஒருவேலையாளுக்கு 2-ஷில்லிங்கு அல்லது ஒருரூபாய் ஆகிறதென்று காட்டுகிறார். இங்கிலாந்தில் தலைக்கு வருமானம் இந்தியாவில் கிடைக்கிறதைவிட 12 மடங்கதிகமாக விருந்தாலும், அத்தேசத்தில் சாப்பாட்டுச் செலவு இத்தேசத்தில் பிடிக்கிறதைவிட 8 மடங்கு அதிகமாக விருக்கிறதால் அதையும் பாராட்டிக் கழிக்கவேண்டியதோடு இங்கிலாந்தில் குளிர் மிகுதியால் எப்போதும் கணப்புமூட்டி வைத்துக்கொள்ளப் பிடிக்கும் செலவு, குளிருக்கு அடக்கமான உடைதரித்துக்கொள்ளப் பிடிக்கும் அதிகச் செலவு, இவை யெல்லாம்கூட கணக்கிட்டுப் பார்க்கவேண்டுமென்கிறார்.

### சிலதேசங்களின் வியாபார மதிப்பு.

பொதுவில் ஒருதேசத்து நாட்டுவளப்பத்தையறிந்துகொள்ள அத்தேசத்து மொத்தவருமானத்தைப்போல் வியாபார மொத்தத்தையும் கண்டுபிடித்து ஜனத்தொகை மொத்தத்தில் பங்கிட்டுக்கொடுத்து தலைக்கு இவ்வளவாகிறதென்று பார்ப்பதும் ஒரு வழியாம்.

1890-91-ம் வருஷத்தில் இந்தியாவின் பிறதேச வியாபார மதிப்பு மொத்தத்தைப் பங்கிட்டுப் பார்த்ததில் தலைக்கு 6·8 அல்லது 6¾-சொச்சம் ரூபாய் விகிதமாயிற்று.

இது இங்கிலீஷ் நாணயத்தில் 14-ஷில்லிங்காகிறது.

1884-ம் வருஷத்தில் இங்கிலாந்தின் வியாபார மொத்தத்தை அப்படியே கணக்கிட்டுப் பார்த்ததில் தலைக்கு 19-பவுன் விகிதம் ஆயிற்று.

ருஷியாவில் தலைக்கு 1·3 அல்லது 1-பவுன் 6 ஷில்லிங்கு ஆயிற்று.

### தாரதம்மியம்.

வியாபாரத்தில் இங்கிலாந்து இந்தியாவைவிட எவ்வளவோ மேலானதாக விருக்கிறது. இந்தியாவைவிட மட்டுமல்ல, மற்ற எல்லா தேசங்களையும்விட இங்கிலாந்து வியாபாரத்தில் மேலானதாகவே நிற்கும். இதனால் இங்கிலாந்து இந்தியா இவ்விரண்டின் வியாபார வளப்பத்தை ஒத்திட்டுப்பார்த்து இங்கிலாந்து இந்தியாவைவிட 27-மடங்கு அதிகமான வியாபாரமுடையதென்று சொல்வது சரியாகாது. ஏனெனில் பிறதேச வியாபாரத்தோடு அந்தந்த தேசத்தின் விஸ்தீரண அளவையும் கணக்கிலெடுத்துக்கொண்டுபார்க்கவேண்டும். ஐரோப்பாவிலுள்ள தேசங்கள் எல்லாவற்றிலும் உலாந்த (Holland) தேசம் மிகச்சிறியது. அதன் பிறதேச வியாபாரம் தலைக்கு 34-பவுன் விகிதமாகிறது. அதாவது கிட்டத்தட்ட இங்கிலாந்தைப்போல இரண்டு மடங்கு. இதனால் உலாந்த தேசம் இங்கிலாந்தைவிட வியாபாரத்தில் மேலானதென்று சொல்வது சரியாகாது. இந்தியாவின் வியாபாரத்தையும் இங்கிலாந்தின் வியாபாரத்தையும் ஒத்திட்டுப் பார்க்கவேண்டுமானால், இங்கிலாந்தின் விஸ்தீரணத்தையும் இந்தியாவின் விஸ்தீரணத்தையும் அளவிட்டுப் பார்க்கவேண்டும். நமது சென்னை இராஜதானிமட்டும் இங்கிலாந்தைவிட 6-ல் ஒருமடங்கு அதிகவிஸ்தீரண முடையதாயிருக்கிறது இந்தியா முழுமையும் ருஷியா நீங்கலாக ஐரோப்பா கண்டத்திலுள்ள மற்றத்தேசங்கள் எல்லாம் சேர்ந்து எவ்வளவு விஸ்தீரணமோ அவ்வளவு விஸ்தீரணமுடையதாகவிருக்கிறது. ஆகையால் இந்தியாவின் வியாபாரத்தை ஒத்துப்பார்க்க வேண்டுமானால் ருஷியா ஒழிந்த ஐரோப்பா முழுவதுக்கு முள்ள பிறதேச வியாபார மொத்தத்தையெடுத்து அத்தேசங்களின் ஜனத்தொகை மொத்தத்தால் வகுத்து தலைக்கு எவ்வளவு வருகிறதென்று பார்த்து அப்படிவரும் தொகையோடு ஒத்துப்பார்ப்பதே சரியாகும்.

### சென்னை இராஜதானியின் வியாபாரம்.

சென்னை இராஜதானியின் வெளித்தேச வியாபாரமட்டும் (கடல்மார்க்கமாய் நடப்பது) தலைக்கு 18-ஷில்லிங்கு விகிதமாகிறது. இதில் இதர ராஜதானிகளோடு நடக்கும் உள்நாட்டுவியாபாரம் சேர்க்கப்படவில்லை. அதையெல்லாம் சேர்த்தால் இன்னும் அதிகமாகுமென்று திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸராகவய்யங்காரவர்கள சொல்கிறார்.

டி. ஆர். இராமநாதய்யர், பி. ஏ., எல். டி.



## *தன்னொடுகிளத்தல்.

[அலெக்ஸாந்தர் செல்கர்க்" என்பவன், ஸ்காத்லாந்து தேசத்தில் பிறந்து மாலுமிதொழிலிலமர்ந்து கடல்யாத்திரை செய்கையில், கப்பல் தலைவனுக்கும் தனக்கும் உண்டான பகையினால் மனவெறுப்புற்று அக்கப்பலைத் துறந்து, நடுச்சமுத்திரத்தில் காற்றில் அடிபட்டு அலைந்து, கடைசியில் "ஜூவன் வெர்நாண்டிஸ்" என்னும் நிர்மானுஷியமான ஓர் சிறு தீவில் ஒதுக்கப்பட்டு கரையிறங்கி, அத்தீவில் மூன்றுவருஷகாலம் தன்னந்தனியே காலம் கழித்தனன். அவ்வாறு காலம் கழிக்கையில், அவன் தன் நிலைமையை நினைந்து தானே சொல்லித் துக்கித்ததாக, இங்கிலீஷ் கவிசிரோமணியாகிய "கௌபர்" கற்பித்தெழுதியதை யான் ஒருவாறு பின்வருமாறு தமிழில் மொழிபெயர்க்கலானேன்.]

### அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

1. காண்டரும் பொருளுக் கெல்லாங் கருதிய விறைவ னானேன்,
ஈண்டென திறைமைக கென்னோ டிகல்வழக் கிடுவா ரில்லை;
நீண்டவிந் நிலத்துக் கெல்லா நெடுங்கடல் காறு மெங்கும்
ஆண்டவ னானே யானேன் விலங்கொடு புள்ளுக் கம்மா!

2. தனிமையே! நின்கண் ஞானத் தயருளந் தளிர்க்கக் கண்ட
இனிமையா ரெழில்தா னெங்கோ? என்விழிக் கெதிரக் காணேன்;
மனிதரில் வனமா மீங்கு மன்னனாய் வாழ றன்னில்,
துனியிடர் சூழ நின்ற தொல்பதி யிருத்த னன்றே.

3. மாந்தர்தா மெய்த லில்லா வனத்திடை †வதிய லுற்றேன்;
போந்தவென் னாயுண் முற்றுந் தனியினிப் போக்கத் தீர்ந்தேன்;
தேந்தரு மிசையி னின்பந் திகழ்மொழி கேட்டற் கில்லேன்—
ஏய்ந்தவென் மாற்றங் கேட்டுந் திடுக்குற லெய்த லானேன்.

4. வனத்தினீங் குழல்வ வான வல்விலங் கெவையு மென்றும்
மனித்தரைச் சிறிதுங் கண்ணி னறிந்திடா வழக்கந் தன்னால்,
மனத்துணுக் கின்றி யென்றன் வடிவினை வயங்க நோக்கும்;
சினத்தலில் பார்வை யென்னுள் வெறுப்புறச் செய்யு மன்றே.

5. காட்டருங் கடவுள் தூய கருணையா லளித்த வான
கூட்டுற வதுவே, நட்பே, நேசமே! கூறு மும்மைச்,
‡சேட்டிளம் புறவு போலுஞ் சிறையுறப் பெறுவே னாயின்,
ஈட்டுமோர் நொடிக்குட் போந்தாங் கெய்துவே னன்றோ வின்றே?

* From 'Alexander Selkirk's Soliloquy' by Cowper.

† வதியல் = வாழல். ‡ சேடு = அழகு.

6. மேவயான் பெறுவே ஞயின் மெலிவுசெய் துயரம் யாவும்
தாவின்மெய்ச் சமய நீதி நெறியினிற் சமன மாகி,
ஆவலின் முதியோ ரீயு மறிவினுற் றெளிந்து, நாளும்
பூவரு மிளைஞர் சொல்லான் மகிழ்ச்சியுட் பூப்பே னன்றே?

7. சமயமா! அம்ம வந்தத் தனிமொழி தன்னி லாயின்
அமைவுறு நிதியம் யாரா லளக்கலாந் தகைமைத்தாகும்
தமனியம் வெள்ளி தன்னிற் சாற்றுமிப் புவன நல்கும்
நிமிர்தரு பொருளி னெல்லா நிகழ்த்தினஃ துயர்ந்த தாமே.

8. ஆயினு மீங்கணுற்ற வருவிபாய் நிலனுங் குன்றும்
கோயில்கண் டறியா வென்றுங் குறித்திடா பரனை யுள்ளில்—
வீயும்வண் சுற்றங் கண்டு வெய்துயிர்த் திரங்கி மாழ்கா
ஏயுநாட் கிழமை பேராக் களித்ததில் லிதயத் தென்றும்.

9. இளஞ்சிறூர் கையி லாடுங் கருவிபோ லென்னை யிந்த
வளஞ்செறி யாத வெய்ய வனத்திடை விடுத்த காற்றே,
உளஞ்சிறந் திடயா னென்று முறப்பெரு வெனது நாட்டின்
விளைந்திடுஞ் செய்தி யொன்றும் விருப்புற வளித்திடாயோ?

10. அன்புறு நண்ப ரென்பா லாதரங் கூர்ந்தென் றேனும்
இன்புற நினைத்த லுண்டோ வெனக்கிதம் வேண்ட லுண்டோ?
துன்பமுற் றுடைவேன் காணுஞ் சூழ்விலே னெனினு நண்பன்
என்பவ னொருவனுள்ளா னெனவெனக் குணர்த்து வாயே.

11. மனப்பெருங் கடுப்பின் றன்மை வழுத்தலாந் தகைமைத் தாமோ!
நினைப்பதன் கடுப்பின் முன்னர் நெடுங்கதி யூழிக் காற்றும்
பனிப்புற வொளிரு மின்னற் கொடியெனும் பசழி தானும்
தனிப்பெரு வேகந் தீர்ந்து தளர்ந்துபின் னிடைந்து போமால்.

12. என்னதா ரினிய நாட்டை யெண்ணுமுன் கணத்தின் யான்சென்
றன்னமா நாட்டி லாங்கு மேயபோ லறிவிற் றோன்றும்;
இன்னல்சேர் நிலைதான் மாறு தெண்ணரிடை யிருத்த லாலே
துன்னுமென் களிப்பைப் போக்கித் துயரின்மீண் டழுத்து மன்றே.

13. ஆயினு மீங்கு முள்ள தயர்வற முயற்சி நீங்கிப்
போயுறை பொழுது; முந்நீர்ப் புள்ளெலாங் *குடம்பை சார்ந்த;
மேயபல் விலங்குஞ் சென்று விடுதிபுக் குறைந்த; யானும்
ஏயவென் குடிலுக்கிப்பா லேகுறு நின்றேன் மாதோ.

14. எங்கணு மிறைவன் றூய வின்னருள் ததும்பா நிற்கும்;
பொங்குமவ் வருள்தான் மேய விடரெலாம் பொறுக்கத் தந்து,
தங்கிய நிலையி னுள்ளிற் றளர்வொழிந் திருக்க நல்கும்;
இங்கிது கருத்தி னூக்க மெத்துணை விளக்கு மம்மா!

**எஸ். முத்து ஐயர், பி. ஏ.**

* குடம்பை = கூடு.